கடவுள் துணை

தெய்வப்புலமைத்

ஸ்ரீ திருவள்ளுவ நாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

தமிழ்வேதமாகிய

திருக்குறள் மூலமும்

பரிமேலழகர்
இயற்றிய
உரையும்



தெளிவுரை
விளக்கப்
பதவுரையும்

தி. ஸ்ரீநிவாஸராகவாசாரியரவர்களால்
பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

B. இரத்தின நாயகர் & சன்ஸ்

அவர்களாற்றமது

திருமகள்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1924.

Copy-Right.]

[விலை ரூபா. 4


திருவள்ளுவநாயனார்

முகவுரை.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளென்னும் இந்நூலானது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால ஆகபால் ங-ற்கு அதிகாரம் கஙஙு; இவ்வதிகாரங்கள், கஙஙு0-குறள் வெண்பாக்களாற செய்யபபடடு, பாஷையின் உயர்வை விளக்குவதாயும், சொற்பொலிவு பொருட்பொலிவு முதலிய பாகுபாடுடையதாயும், இராஜதந்திர முதலிய பலவகைப் பட்ட நிறங்க நீதிநெறிபை ஓருசேர வன்குணர்த்தத்தக்கதாயும், எல்லாச சமயிகளாலு மினிதேறறுக்கொள்ளப்பட்டதாயு முள்ளது. மேலும் தமிழ்பபாஷையில விருத்தியடைய விரும்புவோர்க்கும், உலகநடையுணர்ந்து அசன்வழிச செல்ல விரும்புவோர்க்கும், முத்தி நெறிபெற்றுய்ய விரும்புவோர்க்கும் எற்ற நூலாகவும், ஏனையோர்க்குப் பொது நூலாகவும் இருத்தலான், இதன் பெருமை குன்றினமேலேற்றிய விளக்குப்போல் விளங்குகின்றது

இந்நூல் வேதசாரமாயிருத்தலால், ஆதியில் உரையாசிரியர்களாகிய நசரினார்க்கினியா முகலியோர் இதற் குரையியற்றினரென்னும், அவற்றுள் பரிமேலழகர் என்பவர் இயற்றிய இலக்கண வுரை சொற்பொலிவும் பொருணயமும் நிறைந்து விளங்கியதால் சான்றோர் இவ்வுரையையே மேலாகக்கொண்டன ரென்றும் வழங்கி வருகின்றது; ஆதலால் தமிழ்வேதமாகிய திருக்குறளும் இதற்குப் பரிமேலழகர் செய்தவுரையும் கற்றோர் யாவராலும் விரும்பத்தக்கனவே. இவ்வுரை அக்காலத்தி லுள்ளோருடைய கல்வித் தேர்ச்சிக்கேற்பச செய்யப்பட்டதாதலால கடினசந்திகளால் செறிந்து விளங்குகின்றது ; தற்கால நிலைமையைக்கருதிப் பண்டிதபாமரர் யாவருக்கும் எளிதில் பயன்படும் பொருட்டுக் கடினசந்திகளை ஒரு

பொருள் விளக்கப் பதவுரையும், பலபிரதிரூபங்களிலிருந்து தேர்ந்
தெடுக்கப்பட்ட மேற்கோட்பாக்களுஞ் சேர்த்து ஒரேபுத்தகமா
யச்சிட்டனம்.

ஆன்மாவிற்கு இயற்கையாக வமைந்துள்ள திரோதானத்
தால் ஏதாகிலும் மாறுபாடு விளைந்திருக்குமேல் முன்பின் ஞாய்ச்சி
யால் முறைப்படுத்தி வாசித்துக்கொள்ளுப்படி சன்மார்க்கரை
வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றனம்.

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்,

புத்தக வியாபாரிகள்,

7-32, கைனியப்ப நாயக்கன் வீதி, பார்க் டவுன்,



திருவள்ளுவர் சரித்திரம்.

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்திலே இமயமலையினுச்சியிலே சிறப்புப்பொருந்தி விளங்கும் திருக்கயிலாயத்திலே உயர்வொப்பில்லாத செம்பொற்றிருக்கோயிலிலே திவ்வியசிங்காசனத்தின்மீது நித்தியாகந்தராய்ச் சிவபெருமான், பிரமாதி முப்பத்துமூக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணுயிரம் இருடிகள், கின்னரர், கிம்புருடர், கருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலானவர்கள் இருபுடையும் சூழ்ந்து வணங்கித் தோத்திரித்து நிற்கவும், பூதர்கள் பலவாத்தியங்களை முழக்கியும், வெண்சாமரை வீசியும், ஆலவட்டம் அசைத்தும் நிற்கவும், ஹரஹர மன்னும் பேரொலி எங்கும் தழைத்தோங்கவும், தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவியார் இடப்பக்கத்தில் வீற்றிருக்கவும், அளவிறந்த பெருங்கருணையோடு திருவோலக்கமா எழுந்தருளியிருந்தனர்.

அப்போது உமாதேவியார் எழுந்து பரமபதியாகிய சிவபிரானைப் பணிந்துநின்று, "சுவாமீ! திரிலோகங்களிலேயும் இல்லறம் வழுவாது நடாத்தி முத்தியடைந்தவர்கள் உண்டோ? அதைத்திருவாய்மலர்ந்தருளல் வேண்டும்" என, சிவபெருமான் அருளிச்செய்கின்றனர். "உமையே! தெய்வலோகத்திலே வசிட்டர் அகத்தியர் அயன் புலஸ்தன் சம்பு என்கிற ஐவர்களும், பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவரும், தென்புலத்தார்கடன் தேவர்கடன் விருந்தோம்பல் சுற்றந்தழுவல் கபிலபூசை செய்தல் முதலியன முடித்துக் கற்பின்வழுவாத நற்குண நற்செய்கைகளையுடைய மனைவி கனோடிருந்து இல்லற தருமம் நாடாத்தி முத்தியடைந்தனர்" என்று திருவாய்மலர்ந்தருள, பார்வதியார் "பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவர் யார்? அவர் சரித்திரத்தைக் கேட்க விரும்புகின்றேன்" என, சிவபிரான், பூர்வத்திலே ஒரு பிரளயம்வர அதைப் பிரமன் முன்னரேயறிந்து வேற்றுருவடைந்து, ஒரு சுரைக்கூட்டிற் புகுந்துநின்று; அவ்வெள்ளத்திலே மிதந்து வந்தனன். நாம் யாதும் அறியாதவன் போலச் சுரைக்கூட்டினருகணைந்து, "இதற்குளிருப்

பவன் யாவன்?" என்று கேட்ப, தான் "வருங்காலமறிந்து நடத்த வல்ல வள்ளுவன்" என்றான். "இப்பிரளயத்தில் நீ எப்படி பிழைத் திருக்கின்றாய்" என்றோம், அப்போது பிரமன் நம்மை அறிந்து கொண்டு பேராநந்தத்தி லழுந்தி, "பரமபதியே! ஜகத்ரக்ஷகனே! உமது திருவருளினாலன்றே பிழைத்திருக்கின்றேன், தேவரீர் திருபைகூர்ந்து இத்தன்பாகிய நீர்ப்பெருக்கைத் தவிர்க்க வேண் டும்" என்றுவேண்ட, அவ்வதிகாரத்தை உமக்கே தந்தோம் என்று சொல்லி முன்போலவே உலகத்தை அவராலேயே படைப்பித் தோம்.

இப்படியிருக்கையில் ஆதிகாலத்தில் பூமியிலே பாண்டிநாட் டிலே மதுரைமா நகரத்திலிருந்த சங்கப்புலவர்கள் நம்மை ஓர்கால் அவமதித்ததின்பொருட்டு அவர்கள் கர்வ பங்கமாகும்படி பிரமனைத் திருவள்ளுவராகவும், மஹாவிஷ்ணுவை இடைக்காடராகவும், சரஸ் வதியை ஔவையாகவும் பூமியில் அவதரிக்கும்படி அனுப்பினோம்.

ஆதியிலே பிரம புத்திரர்களாகிய காசிபர்முதலிய நவப்பிர் மாக்களில் காசிபர் ஊர்வசியைச்சேர்ந்து விசிட்டரைப் பெற்றார். அவர் அருந்ததியைச்சேர்ந்து சக்தியரைப் பெற்றார். அவர் புங்க ஹர்ப் புலிசையைச் சேர்ந்து பராசரரைப் பெற்றார். அவர் மச்சகந் தியைச் சேர்ந்து வியாசரைப் பெற்றார். இவர்கள் நால்வரும் வேதங் களுக் குரியவராஞர்கள்.

பின்பு பிரமாவானவன் மற்றுஞ் சிலபுத்திரரால் வடமொழியை யும் தென்மொழியையும் விளங்கச்செய்ய வேண்டுமென்றெண்ணி வேதவித்திப்படி ஒரு யாகஞ்செய்ய, அதன்கண் வைத்திருந்த கும் பத்தினின்றும் கலீமக ளவதரித்தனள். அவளைப் பிரமன் விவாகஞ் செய்துகொண்டான். பின்பு அகஸ்தியர் குறியவடிவோடு அக்கும் பத் துதித்தனர். அவர் சமுத்திர கன்னிகையை மணந்து சாகரன் என்பவரைப பெற்றார். அவர் திருவாரூர்ப் பிறையச்சேர்ந்து பகவன் என்பவரைப் பெற்று, அவருக்குச் சகல சாஸ்திரங்களையுங் கற்பித்தார். அந்காளில் பிர்ம வம்சத்தில் தவமுனி என்பவர் அருண்மங்கை என்னும் பிராமணமாதைச் சேர்ந்து ஒரு புத்திரியைப் பெற்றுவைத்து விரலிமலையில் தவ ஞ்செய்யச் சென்றனர். அக்குழந்தையை உறையூர்ப் பெரும் பறையன் கண்டெடுத்துச் சிலகாலம் வளர்த்து வருகையில், அந்தச்சேரியில் அகாரணமாய் மண்மாரிபெய்து, மேல் நடக்கப்

போகிற காரணத்தினால் இந்தப் பெண் தவிர மற்றவர்கள் யாவரும் இறந்தனர். பின்பு அந்தப்பெண் எப்படியோ அதற்கடுத்த மேலூர் அகரத்திலே நீதி நையன் வீட்டையடைந்து வளர்ந்து வந்தனள்.

அப்போது பகவனென்பவர் சகலசாஸ்திர பண்டிதராய்க் கண்டவர் யாவரும் மதிக்கும்படி பிராமண கிரத்தியத்தில் வழுவாத வராய்க் காஞ்சிபுரத்திலே கேகரும் மார்க்கத்திலே மேலூர் அகரத்துக் கடுத்த ஒருரத்திரத்திலிறங்கி நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு சமையல செய்துகொண்டிருந்தார். அவ்விடத்தில் அந்தப்பெண் வர, அவளைக் கண்டு "நீ யார்? பிசாசுச்சியோ வலைச்சியோ இங்கே வந்தாய்" என்று அதட்டி மிகுந்த கோபங்கொண்டு சட்டுவத்தால் அவளது தலையிலே ஓரிரஞ்சோர அடித்து ஓட்டினர். அவள் அழுதுகொண்டே தன்னிடத்துக்குப் போய்விட்டாள்.

மறுபடியும் பகவனென்பவர் ஸ்நானஞ்செயது போசனம் பண்ணி அதிசிக்கிரத்தில் வழிக்கொண்டு திலகரின் காஞ்சிஸ்தல மடைந்து கர்காஸ்நானஞ்செய்து பிரயாகையிலிருந்து தீர்த்த மெடுத்துக்கொண்டு வருமபோது முன் தங்கிப்போன சத்திரத்திலேயே வந்திறங்கினர். மேற்சொல்லிய பெண்ணானவள் அப்போது யௌவனமும் பிராமரும் உடையவளாய் அங்கேவந்தாள். பகவனென்பவர் இவளுடைய சௌந்தரியமுதலிய குணங்களைப் பார்த்து மனமருண்டிரிக்க, அசந்திரந்து அதிபாகிய நீதியையர் அக்குறிப்பினைக்கண்டு "என் பெண்ணை நீர் விவாகம் பண்ணிக்கொண்டு இங்கேயே யிருக்கலாம்" என்று சொல்ல, அதற்கவர் "நான் கொண்டு வந்த கங்கையை இராமேசுரத்திற் செலுத்தித் திரும்பிவருவேன்" என்று உறுதிமொழி கூறி செலவு பெற்றுக்கொண்டுபோய், இராமலிங்கத்தக்கு அபிஷேகம்பண்ணித் திரும்பி வந்தார். அப்போது நீதியையர் பந்துமித்திரர்களோடிருந்து குறித்த கன்னிகையை பகவனுருக்குப் பாணிக்கிரகணஞ் செய்துகொடுக்க, நாலுநாளைய சடங்குகள் சந்துஷ்டியாய் நடந்தேறின; ஐந்தாகாள் மங்களஸ்நானஞ் செய்விக்கும்போது பகவனென்பவர் அந்தப்பெண்ணினுடைய தலையில் எண்ணையைப் பெய்யும்படி மயிரைவகிர்ந்தார், அப்போது தான் முன்பு சட்டுவத்தாலடித்த வடுவைக்கண்டு அனுமானித்து, "இந்தப் பெண் யார்" என வரலாறு மூற்றும் விசாரித்து வியசன மடைந்து, "ஆதியாளல்லவா?" என்று சொல்லிவிட்டு ஓடினர். அதனே அவளுக்கு "ஆதி" என்று காரணப்பெயராயிற்று.

அதுகண்டு ஆதி என்பவனும் பின்றொடர்ந்துசென்று, பொழுது போகையில் எதிரேகண்ட பாணர்சேரியில் ஒரு மண்டபத்திலே தங்கிய பகவனென்பவர் அருகிற்சென்று வணங்கிநின்று, "என் பர்த்தாவே! தெய்வச்செயலால் உமக்கும் எனக்கும் இத்தக்காரி யம் நடந்திருக்க, சகலநீதியும் அறிந்த நீர் என்னைவிட்டு நீங்கு தல் தகுமோ? அல்லது தருமமோ?" என்றும், "உம்மை நீங்கி நான் உயிர்தரிப்பேனோ? என்றும் மிகவும் இரக்கத்துடன் சொல்லப், பிராரத்த கர்மவசத்தால் இவர்புத்தியிலும் அதுசரியென்று பட்டுப் "பெண்ணே! என்னிடத்தில் உனக்கு அன்பிருக்குமானால் யான் சொன்னபடி கேட்கவேண்டும். அதாவது உனக்குப் பிள்ளைகள் எங்கெங்கே பிறக்கின்றனவோ அவைகளை அங்கங்கே அப்பொ ழுதே விட்டுவருவையானால் யான் உன்னைக் கூடச சம்மதிப்பேன்" என்றுசொல்ல, அவள் அதற்கு உடன்பட்டு, அன்றிரவில் அம் மண்டபத்திலிருவருங் களித்திருந்தனர்

அப்போது நமது கட்டளைப்படி சரஸ்வதி யாவராலும் புக ழப்பட்ட ஒளவையாகப் பிறந்தனள். உடனே அவ்விருவரும் புறப் பட்டுப்போகையில தொண்டைநாட்டிலுள்ள ஊற்றுக்காட்டில் ஒரு மடத்திற்கூட உப்பையும், சோழதேசத்தில் கருவூரில் ஒரு சோலை யிற்கூட அதிகமானும், காவிரிபபூம் பட்டணத்தில் ஒரு மண்டபத் திற்கூட உருவையும், திருவாரூரில் ஒரு மடத்திற்கூடக் கபிலரும், வேளிர்மலைச சாரலிற்கூட வள்ளியம்மையும், திருமயிலாப்பூரில் இலுப்பைதோப்பிற்கூடத் திருவள்ளுவரும் பிறந்தனர்.

இக் குழந்தைகளை யார் காபபாறறுவாரென்று விட்டு நீங்கத் தாய் வருந்தும்போது, அப்பிள்ளைகள் சொல்லிய தனி வெண் பாக்கள்:—

ஒளவை

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானே - முட்டமுட்டப்
பஞ்சமே யானலும் பாரமவ னுக்கன்னய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

உப்பை

அத்தி முகலெலும்பி முனவுயி ரதுணைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகன் - முற்றவே
கற்பித்தான் போனதேனை காக்கக் கடனிலையோ
வற்பனே வன்ன யான்.

அதிகமான்

கருப்பைக்குண் முட்டைக்குந் கல்லினுட் டேரைக்கும்
விருபபுற் றமுதளிக்கு மெய்ய - னுருப்பெற்ரு
லூட்டி வளர்க்காளே வோகெடுவா யன்னுய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்.

உருவை

சண்டப்பை பக் குள்ளுயிர்தன் முயருந்தக் தானருந்து
மண்டக் துயிர்பிழைப்ப காசசரிய - மண்டி
யலேகின்ற வன்னு யரனுடைய வுண்மை
நிலேகண்டு நீயறிந்து நில்.

சபிலர்

கண்ணுழையாக் காடடிற் கருங்கற் றவலேக்கு
மூண்ணுமை படியறிக் தூட்டுமவர் - கண்ணு
நமக்கும் படியளப்பார் காரியோர் பாகர்
தமக்குக் கொரிலென்ன தால்

வள்ளிபம்மை

அண்ணே வயிற்றி லருத்தி வளர்த்தவன்ரு
னின்னும் வளர்க்காளே வென்முயே - பின்னாவஞ்
சூடும் பெருமான் சுடுகாட்டி னின்றுவினே
யாடும் பெருமா னவன்.

திருவள்ளுவர்

எவ்வுயிருக் காக்கவொரு வீசணுண்டோ வில்லேயோ
அவ்வுயிரில் யாஞெருவ னல்லஞே - வவ்வி
யருகுவது கொண்டிங் கலேகுவதே னன்னே
வருகுவது தானே வரும்.

இதுகேட்டுத் தாய் மனக்துணிக்து நீங்க, அவவிருவருக் தீர்த்த யாத்திராரத்தமாகச் சென்றனர்.

திருமயிலாப்பூரில் விடப்பட்ட குழந்தை அங்குள்ள ஆல யத்தில் ரம்மை ஆத்மார்த்தமாகப் பூசித்துக்கொண்டு, இலுப்பை மரத் தடியிலிருந்து அம்மலரிற்றுளிக்குக் தேனேயுண்டு, பூர்வம் பிர்மாவரதலால் சிகை எக்யோபவீதம் சதுர்வேத புத்தகமுங் தொண்டு வளர்ந்துவருகையில், ஒரு வேளாளன்மனேவி புத்திர

பாக்கியத்தைக்குறித்து மேற்படி ஆலயத்தினோர்புறம் தவஞ்செய் திருந்தனள். அப்போது 'இக்குழந்தையை நீ யெடுத்துக்கொண்டு போய்த் திருவள்ளுவனென்று நாமகரணஞ் செய்' என்று நம்மால் அசரீரி வாக்குண்டானதை அவள் கேட்டு மனமகிழ்ச்சியுடன் அக்குழந்தையை எடுத்தக்கொண்டுபோய்க் கணவன்கையிற் கொடுக்க, அவனும் இருகையேந்தி வாங்கித் தன் மடிமேலிருத்தி உச்சிமோந்து, இருவரும் அருமையாக வளர்த்து வந்தனர். அது கண்ட அவர்கள் சுற்றத்தார் "ஏதோ ஒருபிள்ளையை வளர்க் கிறார்கள்" என்று இகழ்ச்சி செய்ய, அதற் கவர்களஞ்சிப் புறத்தி லுள்ள தொழுவத்தில் தொட்டிகட்டி அதில் அக்குழந்தையைக் கிடத்திப் பண்ணைக்காரரைக் காவல்வைத்து வளர்த்து வந்தார்கள். ஐந்துவயதான பின்பு திருவள்ளுவரும் தம்மை வளர்ப்பவர் சுற்றத்தார்களால் நிந்தைசெய்யப் படுகிறார்களே என்று அவர் களைப்பார்த்து "என்னால் உங்களுக்கு வருத்தம் வேண்டுவ தில்லை, இனி நான் வேறிடத்திலிருந்து நீங்கள் நினைக்கும்போது வந்து வேண்டியதைச் செய்வேன்" என்று சொல்லிப் புறப்பட்டு அவ்வூரில் ஒரு பனைமரத்தினடியில் இருந்தார். அம்மரத்தடி நீழல் அவரைவிட்டு நீங்காதிருந்த, அதைக் கண்டவர்களெல்லாம் "இப்பிள்ளை தேவனே, முனிவனே, இவ்வருக்கொண்டு வந்தது" என்று துதிக்க, நாயனார் அவ்விடம்விட்டுத் திருமூலர், போகர் முதலாகிய சித்தர்கள் வாசஞ்செய்யும் மலைக்கெழுந்தருளினர். அங்கிருந்த திருமூல நிவசைக்கண்டு "வள்ளுவரே! பூர்வத்தில்கந்தி னைக் கனுக்கிரகம் பண்ணினபோது அங்கிருந்தீரே? உலகத்தாருக் குச் சித்திமுத்தி யருளும்படிக்கும், அறம், பொருள், இன்பம் என் னும் முப்பாலியுக் தமிழில் அருளிச்செய்யும்படிக்கும் இங்குவந் தவதரித்தீரோ?" என்று துதிக்க, நாயனர் மகிழ்ந்து அங்குத் தவஞ்செய்வோரில் ஒருவராகத் தாமுமிருந்தனர்.

அக்காலத்தில் தொண்டைமண்டலத்தில் ஒரு வேதாளமானது பயிர்களை அழித்தும், உயிர்களை வதைத்தும், அநேக தின்பங் களைச் செய்து வருகையில், காவேரிப்பாக்கமென்னும் ஊரிலிருக் கும் ஆயிரம் ஏர்வைத்துப் பயிர்த்தொழில் நடாத்தும் மார்க்கசகாய னென்னும் வேளாளன் அதை யடக்கினவருக்கு வேண்டிய திரவிய மும் ஒருரும் தருகிறேனென்று பிரசித்தப்படுத்தியிருந்தான். அதை யடக்க ஒருவராலும் முடியாதிருந்தமையால் அவ் வேளாளன் பெரி யோர்கள் வாசஞ்செய்யும் மலையில்வந்து திருமூலர் முதலானவர்க

ளுடன் சொல்ல, அவர்கள் "அதோயிருக்கும் திருவள்ளுவருடன் சொல்" என்றார்கள். அதையறிந்து சிவகாருண்யராகிய நாயனர் அவ்வேதாளத்தை ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தால் வென்று யாவரையும் காத்தனர்.

அதுகண்டு அவ்வேளாளன் நாயனரைத் துதித்துத் "தான் கொடுக்கும் ஊரையும் திரியங்களையும் பெற்றுக்கொண்டு, வாசுகி யென்னுந் தனபெண்ணையுந் தேவரீர் அங்கீகரித் தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான் நாயனர் உலகதாருக் கில்லறம் நடத்திக் காட்டவேண்டிய காரணத்தை யோசித்து "அந்தப்பெண் நான் கொடுக்கும் மணலை அரனமாக்கி எனக்குப்படைக்குமானால் அப் படியே விவாகஞ்செய்து கொள்ளுவோம்" என்றார். அந்தப் பெண் சம்மதித்து அவர் கொடுத்த மணலைச்சமைத்துப் படைத்தனள். பின்பு நாயனர் வாசுகி என்பாளை விதிப்படி விவாகஞ் செய்து கொண்டு, சிலநாளங்கிருந்து ஒருமயிலேக்கு மனைவியுடன் வந்து ஓர் இல் ஆகக்கொண்டு செய்தொழிலதனில் பாவமில்லாதது செய்து வறுமையிலை எய்ய நோமாகித்து, அவ்வூரிலிருக்கும் ஏலேலசிங்கரென்னும் வர்த்தகரிடத்தில நூல்வாங்கி ஆடைநெய்து அதனல்வருங் கூலியால் காலங்கழித்திருந்தனர்

அக்காலத்தில் திருவாலங்காட்டில் சபாநாயகராக எழுந் தருளியிருக்கும் நாம் மகிடாசுர சங்காரஞ்செய்து கர்வித்திருந்த பத்திரகாளியுடன் பலவிதநடனம புரிகையில காளியும் சோர்வுறும்ல் நடனமிட, அபோது நமது குண்டலம் கழன்றதைக் காதில் சேர்க் கும்படி ஊர்த்துவபாதமாக நடனஞ் செய்தோம், அப்படி பத்திர காளியாட நாணி நின்றாள் அதுகண்டு தேவர்கள் சந்தேகமுற் றுத் தற்செயலாய் ஊர்த்துவ நடனஞ்செய்த காரணந் தெரியாது மயங்க, அப்போது நீங்கள் திருமயிலேயிலிருக்குந் திருவள்ளுவரால் தெரிந்துகொள்ளுகளென்று ஆகாயோபித்தோம் தேவர்களங்கே போய் அவர் மூன்னிலையில, அக்குறிப்பறிந்து நாயனர் சொல்லியது:—

வெண்பா.

பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க - நாவி
லிழைநுக்கி நூனெருடு மேழையறி வேனே
குழைநுக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

என்கிற வாக்கியத்தைக் கேட்டுத் தங்கள் சந்தேகந் தெளிந்தார்கள்.

ஒருநாள் நாயனார் நூல் வாங்கும்பொருட்டு ஏலேலசிங்கர் வீட்டுக்குப்போய்ச் "செட்டியார் எங்கே?" என்றுகேட்க, "சிவபூசைசெய்கிறார்" என, "அவர் சிவபூசை இங்குச்செய்கிறாரோ குப்பத்தில் செய்கிறாரே" என்று சொல்ல, அதை அவர்பத்தினி உள்ளேபோய்ச் செட்டியாருக்குச் சொல்ல, செட்டியார் திடுக்கிட்டுச் சிவபூசைவிட்டு ஓடிவந்து நாயனாடைய உபயசரணங்களை வணங்கி, "சுவாமீ! அடியேனைப் பங்காளாகத்தினின்றும் எடுத்துக் கரையேற்றி யருள்செய்யவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தனர். பின்பு ஓநாள் நாயனார் அவரது பக்குவத்தையும் மற்றுஞ் சில மாணாக்கர் பக்குவதையும் சோதிக்கவெண்ணி அவர்களை யழைத்துக்கொண்டு ஓர் வனத்திற்செல்ல, அங்குப் பெருகிவரும் வெள்ளத்தில் கும்மைப் பின்றொடர மனமிடமற்ற வராய்ச் சில மாணாக்கர்கள் பயந்து நின்றுவிட, ஏலேல சிங்கர் மாத்திரம் தம்மைத் தொடர்ந்துவந்தார், அவ்வெள்ளம் வழி விட்டது. பின்பு நாயனார் ஏலேல சிங்கரைப்பார்த்து ஓர் உயர்ந்த மரத்தினுனியி லேறம்படிசொல்ல, அவர் எறியபின்பு "நின்ற கொம்பையும் பிடித்தகொம்பையும் விட்டுவிடு" என்றுசொல்ல, அப்படியே யோசியாமல் விட்டனர் விட்டும் ஓர் அபாயமு மில்லாம லிருக்கக்கண்டு ஏலேலசிங்கரை நாயனார் தமது மடிமீதுவைத்து ஞானோபதேசஞ் செய்தருளினர் பின்பு திருமயிலை நாட்டுக் கரச னுகிய அரசுகாஞன் ஒருநாள் ஏலேலசிங்கரோடு பேசிக்கொண் டிருக்கையில் "உமக்குப் பரத்திரப்பிரவேசமே, உமது ஞானசாரி யரைக் கேட்டலாகாதா" என்ன, அவர் "கல்லது" என்று போய் நாயனாரைக்கண்டு விண்ணப்பஞ் செய்ய, நாயனர் "சுவாமி கடா கூஷிப்பார்" என்று அனுக்கிரகம் பண்ணினர்.

பின்பு ஒருநாள் ஏலேலசிங்கருடைய அவர் மனைவியும் வழக்கப் படி காலையில் தரிசிக்கும் பசுவின் வாற்புறத்தில் நாம் சிறுகுழவி யாய் இருந் தமுவதைக்கண்டு அவர்கள் எடுத்து உச்சிமோந்து முத்தமிட்டு ஆனந்தசாகரத்தி லமுழ்ந்தி ஞானகுருவாகிய நாயனர் சன்னிதிக்குக்கொண்டுபோய் வைத்து வணங்கினர்கள். அவர் அக் குழந்தைக்கு "அழகானந்தர்" என்று நாமகரணஞ்செய் தனுப் பினர். இச்செய்தியை ஏலேலசிங்கர் அச்சுதராஜனுக்கு கறிஞ்சிக்க, அவன் "அப்படித் தெய்வீகமாய்க் கிடைத்திருந்தால் அது

குழந்தை இங்கு வாலாமே" என்றான். உடனே அரசனது மடியில் குழந்தை வந்திருந்தது. அது கண்டு ஆச்சரியமடைந்து "இது அழகானந்தமோ" என்று ஆனந்தமடைந்து தன் மனைவிகையிற் கொடுக்க, அவளும் ஆனந்தமடைந்து அருமையாக வளர்த்துவந்தனள். பின்பு நாயனர் அதேதருக்கு ஞாலனேபதேசஞ் செய்து கொண்டு அதிகமகிமையோடு வாழ்ந்திருந்தனர்.

மற்றொருதினத்தில் ஏலேலசிங்கரது கப்பல கரைதட்டிப் போக, அதை அரசனுக்குசெல்ல, அவன் "உம்முடைய ஆசிரியருடனே சொல்லும்" என்ன, அதை முன்னமேயறிந்து நாயனர் தமது திருமுன் விண்ணப்பஞ் செய்யவருகின்ற ஏலேலசிங்கரை யழைத்துக்கொண்டு கப்பல நருகிறசென்று தமது திருக்கரங்களால் அதைத்தொட்டு "ஏலோபா வென் றிழுங்கள்" என்று கட்டளையிட்டபடி யிழுக்க வுடனே கப்பல் சரியாக நின்றது.

பின்பொருகாலம் மழையில்லாமல் தானியங் கொள்ளக் கிடையாமல் அதிக நிறத்துபோவதைக் கண்டு சீவகாருண்ய ராகிய நாயனர் தமக்கன்புள்ள ஏலேலசிங்கரைப்பார்த்து "நீர் இந்தப்பஞ்சம் மாறுகிறவரைக்கும் வாங்கினவித்திருக்கும் கெல்லெல்லாம் வாங்கின விலைக்குக் குறைவு பேற்றமாக விற்கக்கடவை" என்றருள, அவ்வாறே குருமொழிதலைமேற் விழுதனர். பொருள் மலைபோற் குவிந்தன. கட்டியிருந்த கெற்கூடோ குறையாமலேயிருந்தது. பின்பு மழைபெய்து உலகம் செழிப்படைந்தது. மறுபடியும் நாயனர் ஏலேலசிங்கரை நோக்கி "குறுணி குறையவில்" என்றார். அவ்விதமாகவே விற்க மறுகாலைக்குள் அவரிடத்திலிருந்த கெல்லெல்லாம் செலவாய்விட்டன.

நாயனர் ஏலேலசிங்கரைப் பார்த்து "நீ கெல்லு விற்று விருத்தியாயிருக்கிற பொருள்களை உருக்கித் திரட்டிக் கடலிற் போட்டுவிடு" என்ன, அவர் அப்படியே செய்தனர். அதை யொருமீன் விழுங்கிற்று. சிலகாள்சென்றபின் அம்மீன் வலைகாரர்கையிலகப்பட, அவர்கள் அதைச் சேதிக்கையில் அதன்வயிற்றில மனிதம்படிந்த வொருதம்ப மிருக்கக்கண்டு அதிசயித்து, அதை ஏலேலசிங்கருக்குக் கொடுத்தார்கள். அவர் கல்லென்று நினைத்து ஸ்தானம்செய்யுமிடத்திற் போடுவித்தார். அதனமேல் கடத்தல்முதலிய பயிற்சியால் மனிதம்நீங்கி அது பிரகாசித்தது. அதில் தமதுபேர் வெட்டியிருக்கக்கண்டு "இது குருவருள்" என்று மகிழ்ச்சியடைந்தார்.

இப்படி அநேக அற்புதங்களைச் செய்துகொண் டிருக்கும் காளிலே, பாண்டிநாட்டிலே மதுரையில் நக்கீரராதியாய சங்கப் புலவர்கள் தாம் அடைந்திருந்த கல்விப்பெருக்கால் கர்வ மடைந்து அங்குப்போந்த வித்துவசிரோண்மணிகளே எல்லாம் அவமதித்து வடப்பதைக் கேள்வியுற்றிருந்த அழகானந்தர் முத லிய பெரியோர்கள் திருவள்ளுவரைப்பார்த்து, கற்றற் கெளிதாக வும் இம்மையாதி மும்மைக்கும் உதவியாகவும், உலோகோபகார மாகவும் உமதுபெயரால் ஒருநூல் செய்யவேண்டுமென்று வேண்ட, நாயனர் வேதாகமசாரங்களைத் திரட்டி அறம், பொருள், இன்பம் என மூப்பாலாக்கி (கஉஉ0) குறள் வெண்பாவால் பாடினார். அழகானந்தர் முதலாயினோர் அதைக்கண்டு சந்தோஷித்து இதைக் கொண்டு சங்கத்தாரை ஜயிக்கலாம் என்று துணிந்து, நாயனருக்குத் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தனர். நாயனர் அடியார் வேண்டுகோளுக்கியைந்து தமது மனைவியை இல்லின்கணிறுத்திப் புறப்பட்டு இடைக்கழிநாட்டின் வழியாகப் போகையில், ஔவை நேர்பட, அவரோடும் இடைக்காடரைக்கண்டு தாஞ் செல்லுங் காரணத்தைத் தெரிவிக்க, இடைக்காடரும் நாயனரை நோக்கி "இடையாலுங் கடையாலு மழியக்கடவதென்று சுவாமி தம்மை நிராகரித்த நக்கீராதி சங்கப்புலவரைச் சபித்திருக்கின்றனர், ஆதலால் என்னாலும் உம்மாலு மசசங்க மழிவுபடப்போகிற தாகையால் நாமும் உம்முடன் வருவோம்" என மூவரும் சென்று மதுரையை அடைந்து வையைநதியில் ஸ்நானஞ்செய்து செபதபங் களே முடித்துக்கொண்டு பிரதக்ஷிணமாக ஆலயத்திற்குட்சென்று அங்கு மீனாக்ஷி சொக்கலிங்க மூர்த்தமாகி அமர்ந்த நம்மைத் தரிசனஞ் செய்தனர். பின்பு மேற்படி சந்நிதானத்தில் பாண்டிய ராஜன் மந்திரி பிரதானி முதலானவர்கள் சூழ, ஔவை இடைக்காடர் மற்றுமுள்ளவர்களுமிருந்து கேட்கும்படி தாமருளிய திருக்குறள் மூப்பாலையும், சங்கத்தார் நெஞ்சில் திகிலேறவும், ஏனையர் நெஞ்சிற் களிப்பேறவும், திருவள்ளுவர் அரங்கேற்றி முடித்தனர். அதனைச் செவியாரக் கேட்ட இராஜன் முதலானவர்களும் மிகுந்த ஆனந்தபரவசராய் நாயனரைப்புகழ்ந்து துதித்தனர்.

அதன்பின்பு நாயனர், இடைக்காடர், ஔவை முதலானவர் கள் தம்மைச் சூழ்ந்துவரப் பொற்றாமரைத் தீர்த்தத்தின்கண்ணே சங்கப்பலகைமீது தமிழ்க்கரசாக வீற்றிருக்கின்றவர்களும், திரு வாதவூரடிகளாகிய மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையார்

ர்னூற்றுக்கும் நூறு குற்றங் கூறினவர்களும், சம தன்பனிய தருமி என்னும் பிராமணனுக்குப் பொற்கிழி கொடுத்தற்பொருட்டு அருளிச்செய்த,

அகவல்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற செறியெயிற் றருவை கூந்தலி
னறியவு முளவோ நீபறியும் பூவே

என்னுந திருமுகப் பாசுரத்திற்குக் குற்றங் கூறினதினால் நாம் ஒரு வித்துவானுக அப்புலவர் சபைக்கேகி நக்கீரணபபார்த்தது,

வெண்பா

அங்காங குலைய வரிவாளி னெய்பூசிப்
பங்கம் படவிரண்டு காலபரப்பிச் - சங்கதனைக்
கீர்கீ ரெனவறுக்குங் கீரனே வென்கவியை
யாராயு முள்ளத் தவன்.

என்று கேட்டபோது, நக்கீரன நம்மை யறிந்துகொண்டு,

வெண்பா

சங்கறபப தெங்கள குலஞ் சங்கரனர்ம் கேதுகுலம்
பங்கமறச சொனனறை பழுதாமே - சஙகை
யரிதணடு வாழுவோ மரனே கினபோல
விரந்துண்டு வாழ்வ திலை

என்று சொலல, நாம் நமது நெறறிகண்ணைகாட்ட, அப்போதும் அஞ்சாமல் நெற்றிக்கண் ணையன்று உடம்பெல்லாங கண்ணைக் காட்டினனுங குறறங் குற்றமே யென்று கூறினவாகளும், மறறப் புலவர் பாடலியெல்லாம கொளளையிட்டவர்களும், பழுதற இலக கண விலக்கிய வாராய்சசி யுள்ளவர்களுமாகிய நகீராதிப புலவர்க ளுடைய தைரியமும் தருக்கும் அறிவுங் கலங்கிச் சோர்வடையும் படி அவர்களிடத்திற் சென்று, அவர்கள் தம்மைவினவின அசதி வினாக்களுக்கெலலாம் செந்தமிழ்ப்பாவா லுத்தரங் கொடுத்தனர். பின்பு சங்கத்தார நாயனரை நீ செந்தலுரென்றார்கள் ; அதற்கவர்,

எந்தலூ ரென்றீ ரிருந்தலூர் நீர்கேளீ
ரந்தலூர் செய்தி யறியீரோ - வந்தலூர்

திருவள்ளுவர் சரித்திரம்

மூப்பாமும் பாழாய் முடிவிலொரு சூனியமா
யப்பாலும் பாழா யறும்

என்பது முதலான ஞானர்த்தமான செய்யுட்களால் அவர் வினவிய வினுக்களுக்கெல்லாம் உத்தரங் கொடுத்தனர். பின்பு சங்கத்தாரை நோக்கி ஔவை கைச்சைகையா "இவை என்ன?" என்று வினவிய வினுக்களுக்கு அவர்கள்,

இவ்வளவு கண்ணினு ளிவ்வளவு சிற்றிடையா
ளிவ்வளவு போன்ற விளமூலையா - ளிவ்வளவாய்க்
காமத் தலைவனையுங் காணுது கன்றினு
ணுமத்தை நாட்டுதுறி நன்கு

என்று விடைகூற, இஃது தகுதியான உத்தரவன்றென்று அக்குறிகளுக்கு ஔவை,

ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமி
னிவ்வளவே னும்மனத்தை யிட்டுண்மின் - றெய்வ
மொருவனே யென்ன வுணரவல் லீரே
லருவினைக ளோந்து மறும்.

என்று மொழிந்ததைக்கேட்டுச் சங்கத்தார் திகிலடைந்து இவரை வெல்லப்படாதென்று துணிந்து, இடைக்காருடனே பேச, அவர்

ஆற்றங் கரையி னருகிருந்த மாமரத்திற்
காக்கை யிருந்து கஃகஃகெனக் - காக்கைதனை
எய்யக்கா லில்லாம லிச்சிச செனவெய்தான்
வையக்கோ ஞர்தம் மகன்.

என்று கூறிய இதுபோன்ற செய்யுட்களுக்கு உத்தரங்கொடுக்கச் சக்தியில்லாமல இவர்களே வெல்வ தரிதென்றறிந்து காணமூற்றுச் சங்கத்தார் நாயனரைப்பார்த்து "நீர்பாடிய குறளை நாங்க ளொப்புக் கொள்ளுவதற்கு ஐயமொன்றுளது அஃதியாதெனின், நாங்களிருக்கு மிந்தப்பலகை தெள்ளிய செந்தமிழ்நூலைக் கண்டால் இடங்கொடுக்கு மாதலால், இது ஒப்புக்கொள்ளுமாகில் எங்களுக்கெல்லாம் சம்மதம்" என்று சொல்ல, அவ்வாறே நாயனர் தாமியற்றிய திருக்குறளை அச்சங்கப்பலகைமீது வைத்தனர். உடனே அப்பலகை தண்ணீடத்திருந்த சங்கத்தார் யாவரும் பொற்றமரையில் விழும்படி, தெய்வத்தன்மை பொருந்திய திருக்குறட் புத்தகத்தினளவாகச்சுருங்கி அதற்குமாத்திரம் இடங்கொடுத்தது. அதைக்கண்டவர் யாவரும் களிகூர்ந்தனர். அவருட்சிலர், இதுவே தமிழ்

வேதமென்றும், ஆகமமென்றும், சாஸ்திரமென்றும், மதனநூலென்றும் பலவாறுகச் சொல்லித் துதித்தனர் பின்பு பொற்றமரையில் விழுந்து தடுமாறி வருந்திய சங்கப்புலவர் காற்பத்தொன்பதின் மருங் கனையேறி நாயனரையும் திருக்குறளையும் புகழ்ந்து காற்பத் தொன்பது வெண்பாப் பாடினர். அஃது திருவள்ளுவ மாலை எனப் பெயர்பெறும்.

மேற்படி சங்கத்தாரும் உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியன் முதலானவர்களும் நாயனரைத் துதித்து "இந்நூலை அகஸ்தியரும் ஒப்புக்கொளில் கல்லது" என, அதற்கு நாயனர் சம்மதித்துப் பொதியமலைப் போய் அகஸ்தியர முகலிய மூனிவர்களைக் கண்டு தாஞ்செய்த நூலைக் காண்பிக்க, அவர்கள் அதை நன்குணர்ந்து அடைந்த சந்தோஷம் அனந்தனுஞ் சொல்லமுடியாது. அவ்விடத்தில் தொங்கனைத்தர் தம்மை வழிபட நாயனர் அவருக் கனுக்கிரஹித்து, அவ்விடமிருந்து மற்ற காமெழுந்தருளிருக்கும் ஸ்தலங்களையெலாஞ் சரிசனஞ்செய்துகொண்டு திருமயிலைக்குச் சமீபமாக வருகையில், அப்பதியாருர் எலேலசிங்கரும் கேள்விப் பட்டு எதிர்கொண்டழைத்துவர, நாயனரும் தம தில்லஞ்சேர்ந்து வாசுகிமாதினுடு களித்திருந்தனர்.

இங்ஙன மிருக்கையில ஒருநர் அரசரிடங்சென்று இல்லறம் பெரிதோ துறவறம்பெரிதோ அடியேனுக் கனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பெருகாள் காத்திருந்த, நாயனர் உத்தரமொன்றுஞ் சொல்லாமல அவரே யறிந்துபோகும்படி, ஒருநாள் தமதுமனையாள் கிணற்றிலசலந்தூக்கிக்கொண்டிருக்கையில் அழைக்கப் பாதிக்கிணற்றளவில் தூக்கின குடத்தை நிற்க விட்டு வந்ததையும், ஒருநாள் அந்த அம்மாள் நாயகருக்குப் பழையது பரிமாறிநிற்கையில், "இதசுடுகின்றது" எனச் சீக்கிரத்தில் விசிறி கொண்டு விசிறியதையும், மற்றொருநாள் பகலில் நாயனர் நெய்யும் போது கையிலிருந்த குழல் தவறி வீழ்ந்ததை யெடுக்க மனையாளைத் "தீபங் கொண்டுவா" எனக் கொண்டுவந்ததையும், வந்திருந்தவர் கண்டு கற்புடைய மனையாள் வாய்க்கில் இல்லறமே பெரிது, இல்லேயேல் துறவறமே பெரிது என் றெண்ணிக்கொண்டு நாயனரை வணங்கிப் போய்விட்டனர்.

இவ்வாறு யாவருங்காண நாயனருந் தம்மனைவியாரும் அருமையாக இல்லற நடாத்திவருங் காலத்தில் வாசுகியம்மாள் முத்தியுண்டையுற்போது நாயனர் திருமுகத்தைப்பார்க்க, நாயனர் "யாது

விரும்புகின்றாய்" என, அம்மைபார், "என்னே மணஞ்செய்தவன்று தொடங்கித் தேவரீருக்கு அன்னம் பரிமாறுகையில் சிறுபாத்திரத்தில் சலமும் ஊசியும் சமீபத்தில் வையென்று கட்டளையிட்டதின் காரணம் இன்று வரையில் அடியேற்குத் தெரியவில்லை" என்று விண்ணப்பஞ்செய்ய, நாயனார் "அன்னம் புறத்திற் சிதறுமாயின் அதையெடுத்துப் பரிசுத்தஞ் செய்வதற்கு" என்று சொல்ல, அதைக் கேட்டு உடனே முத்தியடைந்தனர். அப்போது நாயனார்,

அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் றவறுத பாவா - யடிவருடிப்
பின்றாங்கி முன்னெழுஉம் பேகையே போதியோ
வென்றாங்கு மென்ற னிரா.

என்றுரைத்து அந்த அம்மாள் திருமேனியைச் சமாதிபண்ணினர். பின்பு மகாவற்புதங்களைச் செய்துகொண்டிருந்த ஏலேலசிங்கர் முதலிய சீடர்களுக்குப் பூரணானுக்கிரகஞ் செய்து ஏலேலசிங்கரைப் பார்த்து நமக்குப் பரிபூரணதிசை கேரிட்டிருப்பதால் நமது சரீரத்தைப் புரிகட்டி இழுத் தூர்க்குப் புறத்திற் போட்டுவிடு மென்றுகட்டளையிட்டு நிஷ்டைகூடிப் பரிபூரணமானவர்போலிருக்கக்கண்டு, ஏலேலசிங்கர் பொற்பெட்டியில்வைத் தடக்கஞ்செய்ய வைத்தனித்ததைபறிந்து நாயனர் கண்விழித்துப்பார்த்து, "அப்பா! நான் சொன்னசொல்லைக் கடவாதே" என்று சொல்லி உடனே விதேகமுத்தி யடைந்தனர். ஏலேலசிங்கர் நாயனர் கட்டளையை நிறைவேற்றுகையில் அவரது சரீரப பரிசமடைந்த செந்துக்கள் எல்லாம் பொன்னிறமடைந்து சுவர்க்கம் பெற்றன" என்று உமாதேவியாருக்குப் பாம நிருபாநிதியாகிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினர்.

திருவள்ளுவர் சரித்திரம் முற்றிற்று



திருக்குறள்

பாலியலதிகார அடைவு

க - வது அறத்துப்பால்

அதி காரம்.		பக்கம்.
	பாயிரம்	
க	கடவுள் வாழ்த்து	ங
உ	வான்சிறப்பு	அ
ங	நீத்தார்பெருமை	கஉ
ச	அறன்வலி யுறுத்தல்	கள
	இல்லறவியல்	
ஞ	இல்வாழ்க்கை	உஉ
சு	வாழ்க்கைத் துணை நலம்	உள
எ	புதல்வரைப் பெறுதல்	ஙக
அ	அன்புடைமை	ஙசு
கூ	விருந்தோம்பல்	சஅ
கஅ	இனியவைகூறல்	சஞ
கக	செய்ந்நன்றியறிதல்	சசு
கஉ	நடுவுநிலைமை	ஞச
கங	அடக்கமுடைமை	ஞஅ
கச	ஒழுக்கமுடைமை	சுங
கஞ	பிறனில் விழையாமை	சுள
கசு	பொறையுடைமை	எக
உள	அழுக்காறாமை	எசு
ஙஅ	வெஃகாமை	அ0

அதி காரம்.		பக்கம்.
ககூ	புறங்கூறாமை	அச
உ0	பயனில சொல்லாமை	அகூ
உக	தீவினையச்சம்	கூங
உஉ	ஒப்புரவறிதல்	கூள
உங	ஈகை	க0க
உச	புகழ்	க0சு
	துறவறவியல்	
உஞ	அருளுடைமை	ககக
உசு	புலான்மறுத்தல்	ககசு
உள	தவம்	கஉ0
உ அ	கூடாவொழுக்கம்	கஉஞ
உக	கள்ளாமை	கஙக0
உஉ	வாய்மை	கஙஞ
உங	வெகுளாமை	கச0
உச	இன்னாசெய்யாமை	கசஞ
ஙங	கொல்லாமை	கசசூ
	ஞானம்	
ஙச	நிலையாமை	கஞஞ
ஙஞ	துறவு	கசு0
ஙசு	மெய்யுணர்தல்	கசுஞ
ஙசு	அவாவறுத்தல்	கஎஉ
ஙஅ	ஊழ்	களஅ

திருக்குறள் பாலியலதிகார அடைவு

உ - வது பொருட்பால்

அதி காரம்.	பக்கம்.
	அரசியல்
ங்சு	இறைமாட்சி கஅங
சo	கல்வி கஅசு
சக	கல்லாமை ககசு
சஉ	கேள்வி ககஙக
சஙு	அறிவுடைமை உoங
சச	குற்றங்கடிதல் உoஅ
சடு	பெரியாரைத்துணைக்கோடல் உகங
சசு	சிற்றினஞ் சேராமை உகஅ
சள	தெரிந்துசெயல்வகை உங
சஅ	வலியறிதல் உஉஅ
சசு	காலமறிதல் உஙங
ஙo	இடனறிதல் உங்அ
ஙக	தெரிந்துதெளிதல் உசங
ஙஉ	தெரிந்துவினையாடல் உசஅ
ஙங	சுற்றந்தழால் உடுங
ஙச	பொச்சாவாமை உடுஅ
ஙடு	செங்கோன்மை உசங
ஙசு	கொடுங்கோன்மை உசள
ஙள	வெருவந்தசெய்யாமை உளஉ
ஙஅ	கண்ணோட்டம் உளள
ஙசு	ஒற்றுடல் உஅஉ
சுo	ஊக்கமுடைமை உஅள
சுக	மடியின்மை உசுக
சுஉ	ஆள்வினையுடைமை உசுசு
சுங	இடுக்கணழியாமை ங.oo
	அங்கவியல்
சுச	அமைச்சு ங.oடு
சுடு	சொல்வன்மை ஙக.o
சுசு	வினைத்தூய்மை ஙக.ங
சுள	வினைத்திட்பம் ஙக.உ

அதி காரம்.	பக்கம்.
சுஅ	வினைசெயல்வகை ஙக.உடு
சுசு	தூது ஙக.உசு
எo	மன்னரைச்சேர்ந்தொழுகல் ஙகஙடு
எக	குறிப்பறிதல் ஙகஙசு
எஉ	அவையறிதல் ஙக.சச
எங	அவையஞ்சாமை ஙக.சசு
எச	நாடு ஙகடுங
எடு	அரண் ஙகடுஅ
எசு	பொருள்செயல்வகை ஙக.சுஉ
எள	படைமாட்சி ஙக.சுஅ
எஅ	படைச்செருக்கு ஙக.ளங
எக	நட்பு ஙக.ளஅ
அo	நட்பாராய்தல் ஙக.அங
அக	பழமை ஙக.அள
அஉ	பகைத்திறந்தெரிதல் ஙக.கஉ
அங	கூடாநட்பு ஙக.கசு
அச	பேதைமை சo.க
அடு	புல்லறிவாண்மை சo.டு
அசு	இகல் சக.o
அள	பகைமாட்சி சக.டு
அஅ	பகைத்திறந்தெரிதல் சக.கக
அக	உட்பகை சஉ.ச
கo	பெரியாரைப் பிழையாமை சஉ.அ
கக	பெண்வழிச்சேறல் சங.ஙட
கஉ	வரைவின்மகளிர் சங.அ
கங	கள்ளுண்ணாமை சச.ஙட
கச	சூது சச.அ
கடு	மருந்து சடு.உ
	ஒழிபியல்
கசு	குடிமை சடு.சு
கள	மானம் சசு.ஙட
கஅ	பெருமை சசு.அ

அதி காரம்.		பக்கம்.	அதி காரம்.		பக்கம்.
ங	சான்றாண்மை	ளஎங	கoச	உழவு	சகஙி
ஙo	பண்புடைமை	ளஎள	கoஙி	நல்குரவு	ஙிoo
ஙக	நன்றியில்செல்வம்	ஙஅ	கoசு	இரவு	ஙிoச
ஙஉ	நாணுடைமை	ஙஅசு	கoள	இரவச்சம்	ஙிoசு
ஙங	குடிசெயல்வகை	சகஙக	கoஅ	கயமை	ஙிகச

ந — வது காமத்துப்பால்

	களவியல்				
கoசு	தகையணங்குறுத்தல்	ஙிகசு	கஉக	நினைந்தவர்புலம்பல்	ஙிளசு
ககo	குறிப்பறிதல்	ஙிஉச	கஉஎ	கனவுநிலையுரைத்தல்	ஙிஅச
ககக	புணர்ச்சிமகிழ்தல்	ஙிஉசு	கஎங	பொழுதுகண்டிரங்கல்	ஙிஅசு
ககஉ	நலம்புனைந்துரைத்தல்	ஙிஙிங	கஎச	உறுப்புநலனழிதல்	ஙிசுச
ககஙி	காதற்சிறப்புரைத்தல்	ஙிஙசு	கஉஙி	நெஞ்சொடுகிளத்தல்	ஙிசகசு
ககச	நாணுத்துறவுரைத்தல்	ஙிசஎச	கஉசு	நிறையழிதல்	சுoச
ககஙி	அலரறிவுறுத்தல்	ஙிசகசு	கஉள	அவர்வயின்விதும்பல்	சுoசு
	கற்பியல்		கஉஅ	குறிப்பறிவுறுத்தல்	சுஉச
ககசு	பிரிவாற்றுமை	ஙிஙிச	கஉசு	புணர்ச்சிவிதும்பல்	சுஉகசு
ककள	படாமெலிந்திரங்கல்	ஙிசுo	கஙo	நெஞ்சொடுபுலத்தல்	சுஉச
ककஅ	கண்விதுப்பழிதல்	ஙிசுஙி	கஙக	புலவி	சுஉசு
ककசு	பசப்புறுபருவரல்	ஙிளo	கஙஉ	புலவிதுணுக்கம்	சுஙிங
கஉo	தனிப்படர்மிகுதி	ஙிளஙி	கஙங	ஊடலுவகை	சுஙிசு

உ

கடவுள் துணை.

திருவள்ளுவர் குறள்

மூலமும் - உரையும்.

அறத்துப் பால்.

—⟡—

உரைப்பாயிரம்.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமி வின்ப வீடும் நெறி யறிந்து வீடுதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உ னெடுக்கப்பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்ப பன. அவற்றுள் வீடென்பது சிறைதபு மொழியுஞ் செல்லா தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது வகையான் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன வே யாம்.

அவற்றுள், அறமாவது மநுமுதலிய நூல்களில் விதித்தன விலக்கியன வொழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, கண்டமென வகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் அறங்களில் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே யெனதெனதென் பார் அதுகாரணமாகத் தம்முண் மாறுபட்டு அப்பொருண்மேற் செ அது கடன் கோடன் முதலிய * பதினெட்டுப் பதத்ததாம்.

* பதினெண் விகார பதங்களாவன:—கடன் கோடல், அடைக்கலமா டித்துவைத்த பொருள், உடையனல்லான் விற்றல், கூடி மேம்படல், கல்லியதை — கூலி கொடாமை, கட்டுப்பாடு கடத்தல், விற்றுக்கொண்டு ஒப்பாமை, ஆண்டும் வழக்கு, எல்லே வழக்கு, கருந்தண்டம், கடுஞ்சொல், களவு. வன் செய்கை, பொ வவ்வுதல், மாதராடலர் முறை, தாய பாகம், சூது என்பன.—மனு நூல்—அ, யாயங்கள்,


உரைபபாயிரம

ண்டமாவ தவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயி
அக்நெறி நிறுத்துதற்பொருட்டி * ஒப்பாடி அதற்குத்தக வொறுத்தல்

ுவற்றுள் வழக்குந் தண்டமு முலகநெறி நிறுத்தற் பயத்தவாவதல்லது
ம்போல மக்களுயிர்க் குறுதி பயத்தற் நிறப்பில வாகலானும், அவை
ானேயன்றி யுணர்வு மிகுதியானுந் தேயவியற்கையானு மறியப்
அவற்றையொழித்து, ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவ
புடைய வொழுக்கமே அறமென வெடுத்துக் கொள்ளப்பட்டது

தான் நால்வகை நிலைமைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமை
ான்மையாகிய நிறப்பியல்புகளொழித் தெல்லார்க்கு மொத்தலிற்
ன்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறக் துறவறமென இரு
யாற் கூறப்பட்டது.

ற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற
ணின்று அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடுஞ் செய்
ாகலின், அதனைமுதற்கட் கூறுவான் தொடங்கி, எடுத்துக்கொண்ட
இனிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.



ஸ் மெய்கணட தேவைகாணி, ஞெப்ப நாடிபாச்சக வொறுத்தி " என்பது
று ம.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து—முதல் அதிகாரம்.

அஃதாவது, கவி தான் வழிபடு கடவுளோயாதல் எடுத்துக்கொண்ட பொருட் கேற்புடைக் கடவுளோயாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளே யெனவறிக. என்னே? சத்துவமுதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடுஇயை புண்டாகலான். அம்மூன்று பொருளோயுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்பட்ட கூறினரென வுணர்க.

க. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(பரிமேலழகருரை.) என்பது,—அகரமாகிய முதலெழுத்துடைய எழுத்துக ளெல்லாம்; அதுபோல, ஆதிபகவனாகிய முதலெழுத்துடைத்தாகிய, என்றவாறு.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி காதமாத்திரையான வியல்பாற் பிறத்தலானும், ஆதிபக வற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கை யுணர்வான் முற்று முணர்தலானுங் கொள்க. தமிழெழுத்துக்கேயன்றி வடவெழுத்துக்கு மூத லாதலேக்கி எழுத்தெல்லா மென்றார். ஆதிபகவனென்னு மிருபெயரொட் டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு. உலகென்றது ஈண்டுயிர் கண்மே னின் றது. காணப்பட்ட வுலகாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டு தலின், ஆதிபகவன் முதற்றே யென வுலகின்மேலவைத்துக் கூறினார்; கூறினு மேனும், உலகிற்கு முதல் * ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முற்கடவுள் நுண்மை கூறப் பட்டது.

(தெளிபொருள் விளக்கப் பதவுரை.)—எழுத்து எல்லாம் - எழுத்துகளெல்லாம்; அகரம் முதல-அகரமாகிய முதலெழுத்தையன; (அதுபோல) உலகு - உலகமானது; ஆதி பகவன் முதற்று - ஆதி பகவனாகிய முதலெழுத்தையது.

உ. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

* ஐசுவரியம், வீரியம், புகழ், சிரீ, ஞான, வைராகியம் என்னுமாறுகுணம் பக வென்னும் பெயருண்மையால் பகவனாலாகிய இவையுங் குணங்களே முடையோ னென்பது பொருள்.

(பரி-ரை.) எ-து,—எல்லா நூல்களையுங் கற்றவர்க் கக்கல்வி யறிவாலுய பயன்யாது? மெய்யுணர்வினை யுடையவனது நல்ல தாள்களைத் தொழா ராயின், எ-து.

எவனெனினும் விஞப்பெயர் என்னென்றுய் ஈண் டின்மை சுறித்து நின்றது. கொல் லென்ப தசைநிலே. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின், நற்று னென்ருர். ஆகம அறிவிற்குப் பயன் அவன்ருளைத் தொழுது பிறவி யறுத்த லென்பது இதனுற் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—வால் அறிவன்-மெய்யறிவை உடைய கட வுளது, நல் தாள்-நல்ல பாதங்களே, தொழார் எனின் - வணங்கார் ஆயின், கற்றதனுல் - (நூல்களைக் கற்றவர்க்கு) அக்கல்வியால், ஆய - உண்டாகிய, பயன் - பிரயோசனம், என்-யாது.

கூ. மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(பரி-ரை.) எ-து,—மலரின்கணனே சென்றனனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார் எல்லாவுலகிற்கு மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார், எ-று.

அன்பால் நினேவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினேந்த வடி வொடு விரைந்துசேறலின் எகினனென இறந்தகாலத்தாற் கூறினர். என்னே? *"வாராக்காலத்து நிகழுங்காலத்து, மோராங்கு வரூஉம் வினைசொற்கிளவி, யிறந்தகாலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள வென்மனுர் புல வர்" என்பதோத் தாகலின், இதனைப் "பூமேனடந்தான்" என்பதோர்பெயர் பற்றிப் பிறிது சுடவுட் கேற்றுவாரு முளர். சேர்தல்-இடைவிடாது நினேத் தல்.

(தே-ப-ரை)—மலர்மிசை - (அன்பரது தெஞ்சமாகிய) தாம ரைமலரில், ஏகினுன் - சென்ற சுடவுளது, மாண்அடி - பெருமை பொருந்திய பாதங்களே, சேர்ந்தார் - (இடைவிடாது) சிந்தித்தவர், நிலமிசை - (எல்லா உலகங்களுக்கு) மேலாகிய முத்தியுலகத்தில், நீடுவாழ்வார் - அழிவில்லாமல் வாழ்வார்.

சு. வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

* தொல்காப்பியம் வினையியல் சச.

(பரி-ரை.) எ-து,—ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் அடியையச சேர்ந்தார்க் கெக்காலத்தும் பிறவித்துன்பங்கள் உளவாகா, எ-று.

பிறவித்துன்பங்களாவன,—தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றிவருவனவும், தெய்வதத்தைப்பற்றிவருவனவும் என மூவகையான் வருந்துன்பங்கள். அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டின்மையின், அவை காரணமாக வரு மூவகைத் துன்பங்களும் இலவாயின.

(தே-ப-னை)—வேண்டுதல் - விருப்பும், வேண்டாமை-வெறுப்பும், இலான் - இல்லாத கடவுளது, அடி - பாதங்களை, சேர்ந்தார்க்கு - இடைவிடாது சிந்திப்பவர்க்கு, யாண்டும்-எக்காலத்தும், இடும்பை-பிறவித்துன்பங்கள், இல-உண்டாவனவல்ல.

நி. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(பரி-ரை.) எ-து,—மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினையும் உளவாகா, இறைவனது மெய்ம்மைசேர்ந்த புகழை விரும்பினரிடத்து, எ-று.

இன்ன தன்மைத்தென ஒருவ ராலு கூறப்படாமையின் அவிசசையை இருளென்றும், நல்வினையும பிறதற்கு ஹேதுவாகலான் இருவினையுஞ் சேரா என்றது கூறினர். இறைமைக குணங்கள் இலராயினரை உடைய ரெனக் கருதி அறிவிலா கூறுகின்ற புகழ்கள பொருள் சேரா ஆகலின்.அவை மூற்றவும் உடைய இறைவன் புகழே பொருள்சேர் புகழெனப்பட்டது. புரிதல்-எப்பொழுதுஞ சொல்லுதல்.

(தே-ப-னை)—இறைவன் - கடவுளது, பொருள் சேர்-மெய்ம்மை சேர்ந்த, புகழ்-கீர்த்தியை, புரிந்தார்மாட்டு-விரும்பின வரிடத்து, இருள்சேர் - மயக்கத்தைப்பற்றி வருகின்ற, யும்- (நல்வினை தீவினையென்னும்) இரண்டுவினைகளும், சேரா - டாகாவாம்.

சு. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(பரி-னை.) எ-து,—மெய் வாய் கண மூகுசு செவியென்னும் பொறிகளை வழியாக வுடைய ஐந்துவாவினையும் அறுத்தானது மெய்யான வொழுக்க நெறியின்கண் வழுவாதுநின்றார் பிறப்பின்றி யெக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார், எ-று.

அதி. கடவுள் வாழ்த்து

(பரி-ரை.) எ-து,—எல்லா நூல்களையும் கற்றவர்க் கக்கல்வி யறிவாலுய பயன்யாது? மெய்யுணர்வினே யுடையவனது நல்ல தாள்களைத் தொழா ராயின், எ-று.

எவனென்னும் வினுப்பெயர் என்னென்றுய் ஈண் டின்மை குறித்து நின்றது. கொல் லென்ப தசைகிலே. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின், கற்ரு னென்றுர். ஆகம அறிவிற்குப் பயன் அவன்ருளைத் தொழுது பிறவி யறுத்த லென்பது இதனுற் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—வால் அறிவன்-மெய்யறிவை உடைய கடவு ளது, நல் தாள்-நல்ல பாதங்களே, தொழார் எனின் - வணங்கார் ஆயின், கற்றதனுல் - (நூல்களைக் கற்றவர்க்கு) அக்கல்வியால், ஆய - உண்டாகிய, பயன் - பிரயோசனம், என்-யாது.

---

2. மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(பரி-ரை.) எ-து,—மலரின்கணனே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார் எல்லாவுலகிற்கு மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார், எ-று.

அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடி வொடு விரைந்துசேறலின் எகினனென இறந்தகாலத்தாற் கூறினுர். என்னை? "காராக்காலத்து நிகழுங்காலத்து, மோராவருவும் வினேசொற்கிளவி, யிறந்தகாலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள வென்மனுர் புல வர்" என்பதோத் தாகலின். இதனைப் "பூமேனடந்தான்" என்பதோர்பெயர் பற்றிப் பிறிது சடவுட் கேற்றுவாரு முளர். சேர்தல்-இடைவிடாது நினைத் தல்.

(தே-ப-ரை.)—மலர்மிசை - (அன்பரது தெஞ்சமாகிய) தாம ரைமலரில், ஏகினுன் - சென்ற கடவுளது, மாண்அடி - பெருமை பொருந்திய பாதங்களே, சேர்ந்தார் - (இடைவிடாது) சிந்தித்தவர், நிலமிசை - (எல்லா உலகங்களுக்கு) மேலாகிய முத்தியுலகத்தில், நீடுவாழ்வார் - அழிவில்லாமல் வாழ்வார்.

3. வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்
யாண்டு மிடும்பை யில.

தொல்காப்பியம் விசேடவிடல் சச.

(பரி-ரை.) எ-து,—ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் அடியைச் சேர்ந்தார்க் கெக்காலத்தும் பிறவித்துன்பங்கள் உளவாகா, எ-று.

பிறவித்துன்பங்களாவன,—தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றிவருவனவும், தெய்வத்தைப்பற்றிவருவனவும் என மூவகையான் வருந் துன்பங்கள். அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டுமின்மையின், அவை காரணமாக வரு மூவகைத் துன்பங்களும் இலவாயின.

(தே-ப-னா.)—வேண்டுதல் - விருப்பும், வேண்டாமை-வெறுப்பும், இலான் - இல்லாத கடவுளது, அடி - பாதங்களை, சேர்ந்தார்க்கு - இடைவிடாது சிந்திப்பவர்க்கு, யாண்டும்-எக்காலத்தும், இடும்பை-பிறவித்துன்பங்கள், இல-உண்டாவனவல்ல.

ரு. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(பரி-ரை.) எ-து,—மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை யென்னும் இரண்டுவினையும் உளவாகா, இறைவனது மெய்ம்மைசேர்ந்த புகழை விரும்பினரிடத்து, எ-று.

இன்ன தன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை இருளென்றும், நல்வினையும் பிறந்தற் கேதுவாகலான் இருவினையுஞ் சேரா என்றது கூறினார். இறைமைக் குணங்கள் இலராயினுமை உடைய ரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேரா ஆகலின். அவை முற்றவும் உடைய இறைவன் புகழே பொருள்சேர் புகழெனப்பட்டது. புரிதல்-எப்பொழுதுஞ் சொல்லுதல்.

(தே-ப-னா.)—இறைவன் - கடவுளது, பொருள் சேர்-மெய்ம்மை சேர்ந்த, புகழ்-கீர்த்தியை, புரிந்தார்மாட்டு-விரும்பின வரிடத்து, இருள்சேர் - மயக்கத்தைப்பற்றி வருகின்ற, இருவினையும்- (நல்வினை தீவினையென்னும்) இரண்டுவினைகளும், சேரா - உண்டாகாவாம்.

சு. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(பரி-னா.) எ-து,—மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் பொறிகளே வழியாக வுடைய ஐந்துவாவினையும் அறுத்தானது மெய்யான வொழுக்க நெறியின்கண் வழுவாதுநின்றார் பிறப்பின்றி யெக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார், எ-று.

புலன்கள் ஐந்தாகலான், அவற்றின்கட செல்கின்றஅவாவும்ஐந்தாயிற்று. ஒழுக்கநெறி ஐந்தவித்தானுற் சொல்லப்பட்டமையின் ஆண்டை ஆறனுருபு செய்யுட்கிழமைக்கண் வந்தது "கபிலரது பாட்டு" என்பது போல, இஃது நான்கு பாட்டானும் இறைவனை கீனைத்தலும் வாழ்த்தலும் அவனெறி நிற்ற லுஞ் செய்தார் வீடுபெறுவரென்பது கூறப்பட்டது.

(தெ - ப - னை.)—பொறிவாயில் - ஐம்பொறிகளே வழிக ளாக வுடைய, ஐந்து - ஐந்தாசைகளையும், அவித்தான் - அறுத் தவனது, பொய்தீர் - மெய்ம்மையாகிய, ஒழுக்கநெறி - ஒழுக்க வழியில், நின்றார் - (வழுவாது) நின்றவர், நீடு வாழ்வார் - அழிவில் லாமல் வாழ்வார்.

எ. தனக்குவமை யில்லாதான் ருள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

(பரி-மை.) எ - து,—ஒருவாற்றலுக் தனக்கு நிக ரில்லாதவனது தாளைசேர்ந்தாக் கல்லது, மனத்தின்கண் நிகழுந் துன்பங்களை நீக்குத லுண்டாகாது, எ-று.

* "உறற்பால தீண்டாவிடுதலரிது." என்றாற்போல ஈண்டுஅருமைஇன் மைமேல் நின்றது. தாள் சேராதார் பிறவிக்கேதுவாய காம வெகுளி மயக்கங் களை மாற்றமாட்டாமையின், பிறந்தவற்றுள் ஒருந்துன்பங்களுள் அழுந்துவ ரென்பதாம்.

(தெ-ப-னை)—தனக்கு—, உவமை இல்லாதான் - (ஒருவித்தத் தாலும்) ஒப்பில்லாத கடவுளது, தாள் - அடிகளை, சேர்ந்தார் க்கு - இடைவிடாது சிந்தித்தவர்க்கு, அல்லால்-அல்லாமல், மனம் கவலை-நெஞ்சிலே தோன்றுகின்ற துன்பங்களை, மாற்றல்-நீக்குதல், ஒ-கூடாது.

அ. அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(பரி-மை.) எ-து,—அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது அதனிற் பிறவாகியகடல்களை நீந்தல் அரிது, எ-று.

அறம், பொருள், இன்பம் என உடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத் தை முன்னர்ப் பிரித்தமையான், ஏனைப் பொருளும் இன்பமும் பிற எனப்

* காலடியார் பழமொழி கூ.

பட்டன. பல வேறுவகைப்பட்ட அறவகளெல்லாவற்றையுந் தனக்கு வடி வாக உடையவ ஞகலின், அறவாழியந்தண னென்ருர். அறவாழி யென்பத னைத் தருமசக்கரமாக்கி அதனையுடைய அந்தணனென உரைப்பாரு முளர். அப்புணையைச் சேராதார்கரைகாணுது அவற்றினே அழுந்துவாகலின், நீந்த லரிதென்ருர். இஃதேகதேச வுருவகம்.

(தெ-ப-மா)—அறம் ஆழி அந்தணன் - தருமக்கடலாகிய கடவுளது, தாள் - அடியாகிய (மரக்கலத்தை), சேர்ந்தார்க்கு அல் லால்-சேர்ந்தவர்க்கு அலலாமல், பிறஆழி - (அதனின்) வேறுகிய கடல்களை, நீந்தல் - கடத்தல், அரிது - கூடாது

கூ கோளில் பொறியிற் குணமிலவே யென்குணத்தான்
ருளே வணங்காத் தலை

(பரி-மை) எ-து,—ஈத்தமக் கேற்ற புலன்களைக் கொள்ளையில்லாத பொறிகள்போல் பயன்படுத லுடையவல்ல, எணவகைப்பட்ட குணகளே யுடையானது தாளே வணங்காத தலைகள், எ-று.

எண்குணங்களாவன,—தன் வயத்தனுதல், தூய வுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்றமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங் குதல், பேரரு ளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை, எனஇவை. இவ்வாறு சைவாகமத்திற் கூறப்பட்டது. * அணிமாவை முதலாக வுடையன எனவும், ‡ கடையிலா அறிவை முதலாக வுடையன எனவும் உரைப்பாருமுளர். காணுத கணமுதலியனபோல வணங்காத தலைகள்பயனில எனத் தலைமேல் வைத்துக் கூறினுமேனும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்க ளும் அவ்வாறே பயனில வென்பதாஉங்கொளக. இவை மூன்றுபாட்டானும் அவனே நினைத்தலும் வாழ்த்தலுஞ் செய்யாவழிப் படுங்குற்றங் கூறப்பட்டது.

(தெ-ப-மா)—கோள் இல் - தத்தமக்கேற்ற (புலன்களை) கொள்ளுகையில்லாத, பொறியின் - பொறிகள்போல, எண்குணத் தான்-எண்வகைப்பட்ட குணங்களையுடையவனது, தாளை-அடிகளை, வணங்காத்தலை - தொழாத தலைகள், குணமிலவே - பயன்படுத லில்லாதனவேயாம்

---

* அணிமா முதலிய எண் பெருஞ்சித்திகளாவன —அணிமா, மகிமா, லகிமா, கரிமா பிராத்தி, பிராகாமியம், ஈசித்து, வசித்து எனவிவை.

‡ கடையிலா அறிவு முதலிய எணகுணங்களாவன:—கடையிலா அறிவு, கடையிலா காட்சி, கடையிலா வீரியம், கடையிலாவினபம், நாமமினமை, கோத்திரமின்மை, ஆயு ஸின்மை, அழியாவியலபு எனவிவை. இவ்வாறு ஆருகத மதில் கூறப்பட்டது.

கூ. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
நிறைவ னடிசேரா தார்.

(பரி-ரை.) எ-து,—இறைவ னடியென்னும் புணையைச்சேர்ந்தார் பிறவி யாகிய பெரிய கடலே நீந்துவர்; அதனைச சேராதார் நீந்தமாட்டாராய் அதனு ளழுந்துவர், எ-று.

காரண காரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், பிறவிப்பெரும் கட லென்றார். சேர்ந்தாரென்பது சொல்லெசசம். உலகியல்பை நினையாது இறைவ னடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும், இவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அஃதருமையும் ஆகிய இரண்டும் இதனுல் வியமிக்கப்பட்டன.

(தே-ப-னா)—இறைவன் - தலைவனது, அடி - பாதமாகிய (மாக்கலத்தைச் சேர்ந்தவர்), பிறவிப் பெருங்கடல்-பிறவியாகிய பெரிய கடலை, நீந்துவர் - கடப்பார்: சேராதார் - (அதனைச்) சேராத வர், நீந்தார் - கடக்கமாட்டார்.

உ-ம் அதிகாரம்—வான்சிறப்பு

அஃதாவது அக்கடவுள தாணையான் உலகமும் அதற் குறுதியாகிய அறம்பொரு ளின்பங்களும் நடத்தற் கேதுவாகிய மழையினது சிறப்புக் கூறு தல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

க. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று

(பரி-ரை.) எ-து,—மழை யிடையருது நிற்ப உலகம் நிலைபெற்று வருத லான், அம்மழைதான் உலகத்திற் கமிழ்தமென் றுணரும் பான்மை யுடை த்து, எ-று.

நிற்ப என்பது நின்றெனத் திரிந்து நின்றது. உலகமென்றது ஈண்டியிர் களை. அவை நிலைபெற்றுவருதலாவதுபிறப்பு இடையருமையின் எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தம் உண்டார் சாவாது நிலைபெறுத லின், உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை அமிழ்தமென்றுணர்க என்றார்.

(தே-ப-ரை.)—வான் - மழையானது, நின்று - (நடுவே நீங் காது) நிற்க, உலகம் - உயிர்களானவை, வழங்கிவருதலான்-நிலை பெற்று வருகையினுல், தான்-(அம்மழை) தான், அமிழ்தம்என்று-(உயிர்களுக்கு) அமிர்த மென்று, உணரல் பாற்று - அறியப்படுந் தன்மையை யுடையது.

உ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

(பரி-ரை.) எ-து,—உணபார்க்கு நல்ல உணவுகளே யுளவாக்கி அவற்றை யுண்கின்றார்க்குத் தானுமுணவாய் நிற்பதூஉ மழை, எ-று.

தானும் உணவாதலாவது தண்ணீரா யுணணப்படுதல். சிறப்புடைய வுயர்திணைமேல் வைத்துக் கூறினமையின் அஃறிணைக்கும் இஃதொக்கும். இவ்வா றுயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை வழ ங்கிவருதலுடையவாயின என்பதாம்.

(தே-ப-ரை)— துப்பார்க்கு - உண்பவர்க்கு, துப்பாய-ந்ன்மை யாகிய, துப்பாக்கி - உணவுகளை உண்டாக்கி, துப்பார்க்-(அவ்வு ணவுகளை) உண்பவருக்கு, துப்பாயதும் - (தானும்) உணவாய் நிற் பதும், மழை—.

ங. விண்ணின்று பொய்பபின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி

(பரி-ரை) எ-து,—மழை வேண்டுங காலத்துப் பெய்யாது பொய்க்கு மாயின், கடலாற் சூழப்பட்ட அகன்ற வுலகத்தின்கண் நிலேபெற் றுயிர்களே வருத்தும் பசி, எ-று.

கடலுடைத் தாயிறும் அதனைப் பயனில்லே யென்பார், விரிநீர்விய னுல கத்தென்றார். உணவின்மையின் பசியான் உயிர் கரிதக்கும் என்பதாம்.

(தே-ப-ரை)—விண் - மழைபானது, நின்று - (பெய்யவேண் டுங் காலத்தில்) பெய்யாமல், பொய்ப்பின் - பொய்குமாயின், விரி நீர்-கடலாற் சூழப்பட்ட, வியன் உலகத்துள்-பரந்த உலகத்தில், பசி—, நின்று-நிலேபெற்று. உடற்றும் - (உயிர்களே) வருத்தும்.

ச. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்

(பரி-ரை.) எ-து,—உழவா ஏரா னுழுகலேச் செய்யார் மழையென்னும் வருவாய் தன்பயன் குன்றின், எ-று.

குன்றியக்காலென்பது குறைந்து நின்றது. உணவின்மைக்குக் காரணங் கூறியவாறு.

(தே-ப-ரை)—புயல் என்னும்-மழை என்கின்ற,வாரி-வருவாய், வளம் குன்றியக்கால் - (தன்) பயன் குறையுமாயின், உழவர் - பயிர்செய் மாந்தர், ஏரின்-ஏரினால், உழார் - உழுதலேச் செய்யார்.

நி. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

(பரி-ரை.) எ-து,—பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாதுநின்று கெடுப் பதூஉம், அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப்பெய்து முன்கெடுத்தாற் போல எடுப்பதூஉம் இவை யெல்லாம் வல்லது மழை, எ-று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஆங் கென்பது மறுதலைத்தொழி லுவமத்தின்கண் வந்த உவமஈசொல். கேடும் ஆக்கமும் எய்துதற் குரியார் மக்களாதலின் கெட்டார்க் கென்றார். எல்லாமென்றது அம்மக்கண் முயற்சி வேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல்கள்தாம் பலவாதல் நோக்கி, வல்லதென் பது அவாய்நிலையான் வந்தது. மழையின தாற்றல் கூறியவாறு.

(தே-ப-ரை)—நெடுப்பதும் - (பெய்யாதுநின்று) கெடுப்பதும், கெட்டார்க்கு - (அவ்வாறு) கெட்டவர்க்கு, சார்வாய்- துணையாய்ப் (பெய்து), மற்று அங்கே - முன்கெடுத்ததுபோலவே, எடுப்பதும் - எடுப்பதும், எல்லாம் - (இவை) எல்லாம் (வல்லது), மழை—.

சு. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(பரி-ரை.) எ-து,—மேகத்திற் றுளிவீழிற் காண்பதல்லது, வீழாதாயின் அப்பொழுதே பசும் புல்லினது தலையையுங் காணடலரிது, எ-று.

விசும்பு - ஆகுபெயர். மற்று - வினை மாற்றின்கண் வந்தது. இழிவுசிறப் பும்மை விகாரத்தாற் றொக்கது. ஓரறி வுயிரும் இல்லையென் பதாம்.

(தே-ப-ரை.)—விசும்பின் - மேகத்தினின்றும், துளி - துளி கள், வீழின் அல்லால் - வீழிற்காண்பதல்லது, மற்று அங்கே-வீழா தாயின் அப்பொழுதே, பசும்புல் தலை - பசும்புல்லினது தலையையும், காண்பது அரிது - காணுதல்கூடாது.

எ. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானகால்கா தாகி விடின்.

(பரி-ரை.) எ-து,—அளவில்லாத கடலுந் தன்னியல்பு குறையும். மேகந் தான் அதனைக்குறைத் ததன்கட் பெய்யாது விடுமாயின், எ-று.

உம்மை சிறப்பும்மை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழுயிர்கள் பிற வாமையும் * மணி முதலிய படாமையுமாம். ஈண்டுக் குறைத்தலென்றது முகந்

* மணி, முத்தும் பவளமும். "வைகாசியிலே ஞாயிற்றுச் சோதியின் மழையிலே முத்துக் கரு; ஐப்பசி பூசத்து மழையிலே பவளத்துக்குக் கரு" என்பர்.

தலே; அது ‡ "கடல் குறைபடுத்தநீர்" "கடல் குறைபடவெறிர்து" என்பதனு லும் அறிக. மழைக்கு முதலாய கடற்கு மழைவேண்டும் என்பதாம். இவை யேழுபாட்டானும் உலக நடத்தற் கேதுவாதல் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—எழிலிதான்-மேகந்தான், தடிந்து - அதனிரைக் குறைத்து, கல்காதாகிவிடின் - அருளிடத்துப் பெய்யாதாகிவிடின், நெடுங்கடலும் - பெரிய கடலும், தன் நீர்மை-தன்னியல்பு, குன் றும் - குறையும்

———

அ. சிறப்பொடு பூசனே செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு

(பரி-ரை.) எ-து,—தேவர்கட்கும இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழவும் பூசையும் நடவாது, மழைபெய்யாதாயின். எ-று.

நைமித்தியத்தோடு கூடிய நித்திய மென்றார் ஆகலின், செல்லாதென் றார். நித்தியத்திற் சுருங்கு தீரசு செய்வது நைமித்திய மாதலின் அதனை முற் கூறினர். உம்மை சிறப்பும்மை.

(தே-ப-ரை)—வானம் - மழை, வறக்குமேல்-பெய்யாதாயின், வானோர்க்கும் - தேவர்களுக்கும், ஈண்டு - உவ்வுலகத்தில், சிறப் பொடு - திருவிழாவுடனே, பூசனை-நித்தியபூசை, செல்லாது - நட வாது

———

கூ. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(பரி ரை.) எ-து,—அகன்ற வுலகின்கண் தானமுந் தவமுமாய இரண் டாமும் உளவாகா, மழை பெய்யாதாயின், எ-று.

தானமாவ தறநெறியான் வந்த பொருள்களேத் தக்கார்க் குவகையோடுங் கொடுத்தல். தவமாவது மனம பொறிவழி போகாமல் நிற்றறபொருட்டு விரதகளான் உண்டி சுருக்கல் முதலாயின. பெரும் பான்மைபற்றித் தா னம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின் மேலுமா நின்றன.

(தே-ப-ரை.)—வானம்-மழை, வழங்காதெனின் - பெய்யாதா யின், வியன் உலகம் - பெரிய உலகத்தில், தானம் தவம் இரண்டும்- தானமும் தவமும் ஆகிய இரண்டும், தங்கா - உண்டாகாவாம்.

———

‡ பரிபாடல், உ0. கல். இடையம்.

௩௦. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(பரி ரை.) எ-து,—எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரையன்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையறு தொழுகும் ஒழுக்கமும் வானையின்றி அமையாது, எ-று.

பொருளின்பங்களே உலகிய லென்றார், அவை இம்மைக்கண்ணவாகலின். இடையறு தொழுகல் எக்காலத்தும் எவ்விடத்தும் எனதாதல். நீரின்றமையா துலகென்பது எல்லாராலும் தெளியப்படுதலின், அதுபோல வொழுக்கமும் வானின் றமையாமை தெளியப்படுமென்பார், நீரின் றமையா துலகெனி னென்றார். இதனை நீரையின்றியமையா துலகாயின் எத்திறத்தார்க்கு மழையையின்றி யொழுக நிரம்பாதென வுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் அறம் பொருளின்பங்கள் நடத்தற் கேதுவாதல் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—யார் யார்க்கும்-எவ்வகை மேம்பாட்டோர்க்கும், நீர்—நீரை, இன்றி-இல்லாமல். உலகு - உலகியலானது, அமையாது எனின்-பொருந்தாதாயின், ஒழுக்கு-(அந்நீரினது நடுவே நீங்காத) ஒழுக்கமும். வான்-மழையை, இன்றி-இல்லாமல், அமையாது-பொருந்தாது.

கூ-ம் அதிகாரம்—நீத்தார்பெருமை.

அஃதாவது முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வறமுதற்பொருள்களே உலகிற் குள்ளவா றுணராதுவார் அவர் ஆகலின், இது வான சிறப்பின்பின் வைக்கப் பட்டது.

க. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(பரி-ரை) எ-து,—தமக்குரிய வொழுக்கநெறியின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விரும்பும் நூல்களது துணிவு, எ-று.

தமக்குரிய வொழுக்கத்தின் கணணே நின்று துறந்தவாவது,—தத்தம் குணநெறிதிற்கும் நிலைமைக்கும் உரிய வொழுக்கங்களே வழுவாவொழுக அறம் பெருகும், அறம்வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்த அநித்தவகைகளது வேறுபாட்டினர்வும் அழிதன மாலையவாயிருக்கும் மறுமை யின்பங்களின் உவாப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும், அவைதோன்ற வீட்டின்கண ஆசை யுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனில் மூயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யாகமூயற்சியுண்டாம், அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்ற

கிய எனதென்பதும் அகப்பற்றுகிய யானெனபதும் விடும் ஆகலான், இவ்வி ரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்துவிடுதலெனக்கொள்க. பலவுலெ ணப்பொதுபடக் கூறிய அதனுன், ஒன்றையொன்றுவ்வாதசமய நூல்க ளெல்லாவற்றிற்கும் இஃதொத்த துணிவென்பது பெற்றும். செய்தாரது துணிவு பலவுல் மேலேற்றப்பட்டது.

(தே-ப-ரை)—பலவுல் - நூல்களது, துணிவு - நிச்சயமானது, ஒழுக்கத்து - (தமக்குரிய) ஒழுக்கத்தில் நின்று, நீத்தார்-துறந்தவ ரது, பெருமை-மகிமையை, விழுப்பத்து-மேலான பல பொருள்க ளுள்ளும், வேண்டும்-(இது வேமேலானதென்று) விரும்பும்.

அ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
இறந்தாரை யெண்ணிக் கொண்டற்று.

(பரி-ரை.) எ-து.—இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமையை இவ்வளவென் றெண்ணுதகூறி அறியலுன், அளவு படாமையான், இவ் வுலகத்துப் பிறந் திறந்தாரை யெண்ணி யித்துணையரென அறியலுற்றாற் போலும், எ-று.

மூடியா தென்பதாம். கொண்டா லென்னும் வினையெச்சமுகொண்டெ னத் திரிந்து நின்றது.

(தே-ப-ரை.) துறந்தார் - (அகங்கார மமகாரங்களை) விட்டவ ரது, பெருமை - மகிமையை, துணைக்கூறின் - (எண்ணிக்கையினுல் சொல்லி) அறியப்புகுந்தால், (அளவுபடாமையால்) வையத்து - (இவ்வுலகத்தில்), இறந்தாரை - (பிறந்து) இறந்தவரை, எண்ணிக் காண்டற்று-எண்ணி (இத்தனேபேர்களென்று) அறியப் புகுந்தாற் போலும்.

ஈ. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(பரி-ரை.) எ-து.—பிறப்பு வீடென்னும் இரண்டினது துன்பவின்பத் தன்மைபாடெலோ ஆராய்ந்தறிந்து, அப்பிறப்பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துற வத்தைப் பூண்டாரது பெருமையே உலகின்க ணுயர்ந்தது, எ-று.

* "தெரி மாண்டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப்போல நமை யென்பதின் டெண்ணின்க ணின்றது. பிரிகிலேயேகாரம் விகாரத் தம் நெருக்கது. இதனுல் திகிரியுருட்டி உலகமுழுதாண்ட அரசர் முதலாயி

கூ-ம் அதி. நீத்தார்பெருமை

ஞர் பெருமை பிரிக்கப்பட்டது. இவைமூன்று பாட்டானும் நீத்தாரது பெருமையே எல்லாப் பெருமையினு மிக்கதென்பது கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—இருமை - (பிறப்புவீடென்னும்) இரண்டினது வகை - (துன்பவின்பக்) கூறுபாடுகளை, கெரித்து - ஆராய்ந்து, (அப் பிறப்பை நீக்குதற்கு) ஈண்டு-இப்பிறப்பில், அறம் - துறவறத்தை, பூண்டார் - கொண்டவரது, பெருமை-மகிமையே, உலகு - உலகத்தில், பிறங்கிற்று - உயர்ந்தது.

ச. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னுங் வைப்புக்கோர் வித்து.

(பரி-ரை.) எ-து,--திண்மை யென்னுந் தோட்டியாற் பொறிகளாகிய யானை யைந்தினையும் தத்தம் புலன்கணமேற் செல்லாமற்காப்பான் எல்லா நிலத்தினு மிக்கதென்று சொல்லப்பட்ட வீட்டுலகத்திற் கோர்வித்தாம், எ-று.

இஃது எகதேசவுருவகம் திண்மை யீண்டறிவின்மேற்று. அந்நிலத்திற் சென்று முளைத்தலின் வித்தென்றார்; ஈண்டுப பிறர்திறத்து வருமகன் அல்ல னென்பதாம்.

(தே-ப-ரை)—உரன் எனனும் தோட்டியான்-அறிவெனனும் அங்குசத்தால், ஓர் ஐந்தும்-(பொறிகளாகிய யானைகள்) ஐந்தையும், காப்பான் - (தன்தன் புலன்களின்மேல் செல்லாமல்) காப்பவன், வரன் என்னும் வைப்புக்கு-(எல்லா நிலங்களினும்) மேலானதென்று சொல்லப்படுகிற மோக்ஷ நிலத்திற்கு, ஓர் வித்து-ஒருவித்தாவான்.

ந. ஐந்தவித்தா னூற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(பரி-ரை) எ-து,—புலன்களிற் செல்கின்ற அவாவைத்தானையும் அடக்கி னனது வலிக்கு அகன்ற வானத் துள்ளா ரிறைவனாகிய இந்திரனே அமையுஞ் சான்று, எ-று.

ஐந்து மென்னு முற்றும்மையும் ஆற்றற்கென்னு நான்கனுருபுஞ் செய் யுள்விகாரத்தாற் றொக்கன. தான் ஐந்தவியாது சாபமெய்திநின்ற அவித்தா னது ஆற்ற லுணர்த்தினுன் ஆதலின், இந்திரனே சாலுங்கரி யென்றார்.

(தே-ப-ரை)—ஐந்து அவித்தான்-(புலன்களிற் செல்லுகின்ற) ஐந்தாசைகளையு மொழித்தவனது, ஆற்றல்-வல்லமைக்கு, அகல் விசும்பு உளார்-அகன்ற பொன்னுலகத்துள்ளதேவர்க்கு, கோமான்-தலைவனாகிய, இந்திரனே-தேவேந்திரனே, சாலும் கரி-போதுமான சாக்ஷியாம்.

சு. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்

(பரி-ரை.) எ-து,—ஒத்த பிறப்பினராய மக்களுட் செய்தற்கெளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர், அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச செய்ய மாட்டாதார் சிறியர், எ-று.

செயற் கெளியவாவன மனம் வேண்டியவாறே அதனைப்பொறிவழிகளாற் புலன்களிற் செலுத்துதலும் வெஃகுதலும் வெகுளலு முதலாயின. செயற்கரியவாவன * இயமம் நியமம் முதலாய எண்வகையோக வுறுப்புக்கள். ‡ நீரிற் பலகால் மூழ்கல் முதலாய நாலிருவழக்கிற் ரூபதபக்க மென்பாரு முளர். அவை நியமத்துள்ளேயடங்கலின், நீத்தாரது பெருமைக் கேலாமை யறிக.

(தே-ப-ரை.)—பெரியர்-(ஒத்தபிறப்பினராகிய மனிதர்களிலே) பெரியோர், செயற்கு அரிய - செய்தற் கரியவைகளை, செய்வர்—; சிறியர்-சிறியோர், செயற்கு அரிய-அச்செய்தற் கரியவைகளை, செய்க லாதார் - செய்யமாட்டாதார்.

எ. சுவையொளி யூரோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(பரி-ரை.) எ-து,—சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும நாற்றமுமென்று சொல்லப்பட்ட தன்மாத்திரைகள் ஐந்தனு கூறுபாட்டையும் ஆராய்வான் அறிவின் கண்ணதே உலகம். எ-று.

அவற்றின் கூறுபாடாவன பூதங்கட்கு முலனாகிய அவைதாமைந்தும், அவற்றின்கட்டோன்றிய அப்பூதங்களைந்தும், அவற்றின்கூறுகிய ஞானேந்திரியங்களைந்தும், கருமேந்திரியங்களைந்தும், ஆக விருபதுமாம். வகைதெரிவான் கட்டென வுடம்பொடு புணர்த்ததனுல் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற் கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றும்; தத்துவ மிருபத்தைந்தனுள் தெரிதலாவது மூலப் பகுதியொன்றிற் ரோன்றிய தன்மையிற் பகுதியே யாவதல்லது விகுதியாகாதெனவும், அதன்கட் டோன்றியமாஹும் அதன்கட் டோன்றிய அகங்காரமும் அதன்கட் டோன்றிய தன்மாத்திரைகளு மாகிய ஏழுள் தத்தமக்கு முத

---

* எண்வகை யோகவுறுப்புகளான இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனபன.

‡ நீர் பலகான மூழ்கல் முதலிய வெட்டும் "நீர் பலகான்மூழ்கி நிலந்தலை இத்தோணடையார்ச் சோர்ஸ்டை நாழசுடரோம்பி—பூரடையாரா-வானகத்தகெலாமே கடவுள் விருந் தோம்பல்—வான்ரத துயசகுப வழி" எனனும வெண்பாவானுணர்க. வெண்பாமாலை, நூலைப்படலம், கச.

லாயதனோக்க விருதியாதலும், தன்கட்டோன்று வனவற்றை நோக்கப் பருதியாதலுமுடைய வெனவும், அவற்றின்கட்டோன்றிய மனமும் ஞானேந் திரி யங்களும் கருமேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினெறும் தின்கட் டோன்றுவன வின்மையின் விருதியேயாவதல்லது பருதியாகா வெனவும், புருடன் தானொன்றிற் றோனமையாலுந் தன்கட் டோன்றுவன வின்மை யாலும் இரண்டும் அல்லனெனவுஞ் ‡ சாங்கிய நூலு ளோதியவாற்றான் ஆராய்தல். இவ்விருபத்தைந்து மல்லதுலகெனப் பிறிதொன் றில்லையென வுலகின தோனமையறிதலின், அவனறிவின் கண்ணதாயிற்று. இவை நான்கு பாட்டானும் பெருமைக் கேது ஐந்தவித்தலும் போகப் பயிற்சியுந் தத்துவ வுணர்வுமென்பது கூறப்பட்டது.

(தே-ப-ரை)—உலகு - உலகமானது, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்-சுவையும் ஒளியும் பரிசமும் ஓசையும் நாற்றமும், என்ற-என்றுசொல்லப்பட்ட, ஐந்தின்-பஞ்ச தன்மாத்திரைகளது, வகை-கூறுபாட்டை, தெரிவான்கட்டே - ஆராய்பவனறிவினிடத்தே.

அ நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(பரி-ரை.) எ-து,—நிறைந்த மொழியினை யுடைய தூதர்களது பெருமையை நிலவுலகத்தின்கண அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண் கூடாகக் காட்டும், எ-று.

நிறைமொழி யென்பது அருளிற் கூறினும் வெண்டி கூறிலும் அவ்வுப் பயன்களைப் பயக்தேவிடு மொழி. காட்டுதல் பயனு ளுணர்த்துதல்.

(தே-ப-ரை.)—நிறைமொழி-(பயன்) நிறைந்த சொல்லையுடைய, மாந்தர்-முனிவரது, பெருமை-மகிமையை. நிலத்து-பூலோகத்தில், மறைமொழி-(அவராணையாகச்சொல்லிய) மந்தரங்களே, காட்டி விடும்-(பிரத்தியகூமாகக்) காட்டிவிடும்.

கூ. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது

---

‡ இவற்றைக கபிலருடைய சாங்கியநூலில யருளிசெற கூ, கூக-ஆம் சூத்திரங்களா னறிக. "மஞ்சுபொட்டுனமாமாயை" எனனும் திருமாயமொழியுள (இ-ள-இ) "பொங் கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரிய மைம்பூதம், இவையெ வுயிரோ பிறிருமி மாஞ்சார மனங்களே" எனவரும் அடிகள இங்கு அறியத்தகுகன.

* "நிறைமொழி மாந்தராணையிற் கிளந்த, மறைமொழிதானே மந்திரமென்ப" என்னுர் தொல்காப்பியனுர். (செயுளியல்—கஎஉ)

(பரி-ரை) எ-து,—துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய சற்குண ங்களாகிய குன்றின் முடிவின்கண்ணின்ற முனிவரது வெகுளி தானுள்ள அளவு கணமேயாயினும் வெகுளப்பட்டாரைத் றவித்தலரிது, எ-று.

சலியாமையும் பெருமையும் பற்றிக் குணமகனைக் குன்றாக வருவகஞ் செய்தார். குணம் சாதி யொருமை. அனுதியாய் வருகின்றவா றபற்றி ஒரோ வழி வெகுளி தோன்றிய பொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்கும் ஆகலிற் கணமேயு மென்றும், நிறைமொழிமாந்தராகலிற காத்த லரிதென்றுங் கூறி னார். இவை யிரண்டு பாட்டானும் அவராணை கூறப்பட்டது.

(தே - ப - ரை-)—குணம் என்னும் குன்ற-(துறவு மெய்யறிவு ஆசையில்லாமை முதலான) நற் குணங்களாகிய மலையின் மேல், எறி நின்றார்-ஏறிநின்ற முனிவரது. வெகுளி-கோபமானது, கணமேயும்-(தானுள்ள அளவு) கணப்பொழுதே ஆயினும், காத்தல்-(கோபிக்கப் பட்டவரால்) தடுத்தல், அரிது-அரிதாம்

— ———

கஅ அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்.

(பரி-ரை.) எ-து,—எல்லா வுயிர்க்கண மேலுஞ் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான, அந்தணரென்று சொலலபபவரா துறவறத்தினின் றார், எ-று.

பூணுதல் விரதமாகக் கோடல் அதனை ரென்ப தழகிய தட்பத்தையுடை யாரென எதப் பெயராகலின். அவ்வெவருளுடையார்மேலன்றிச செல்லா தென்பது கருத்து. அவ்வா றுணையுடைய ரயிலும் உயிர்கணமாட்டருளு டைய ரென்ப திதனாற் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—எவ்வுயிர்க்கும்-எல்லா வுயிர்களின்மேலும், செந் தண்மை-செவ்வையான அருளை, பூண்டு-விரதமாகக் கொண்டு, ஒழு கலான்-நடக்கையினால், அந்தணரென்போர்-அந்தணரென்று சொல் லப்படுவோர், அறவோர்-துறவறத்தினின்றவர்.

———

ஈ-ம் அதிகாரம்—அறன்வலியுறுத்தல்.

அஃதாவது அம்முனிவனான் உணரத்தப்பட்ட அம் மூன்றனுள் ஏனைப் பொருளும் இன்பமும் போலாது, அறன் இம்மை மறுமை வீடென்னு மூன்ற னையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத் தென ற கூறுதல். அதிகார மூறைமையும் இதனானேவிளங்கும். "ஈரப்புடை மரபிற்பொருளு மின்பமு மறத்து வழிப்பயனேக் தோற்றம்போல" 1 என்னூர் பிறரும்.

1 புறநானூறு, ஈக,

க. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉக்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(பரி-ரை.) எ-து,—வீடுபேற்றையுந்தரும்; துறக்க முதலிய செல்வத்தை யுந்தரும்; ஆதலான, உயிர்கட் கறத்தின்மிக ஆக்கம் யாது, எ-று.

எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின் வீடு † சிறப்பெனப்பட்டது. ஆக்கத்தருவதனை ஆக்கமென்றார்; அக்கம்-மேன்மேலுயர்தல். ஈண்டுயிரென்றது மக்களுயிரை. சிறப்புஞ் செல்வமும் எய்துதற்குரிய தாதலேயாகலின் இதனுள் அறத்தின் மிக்க வுறுதி யில்லை யென்பது கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—சிறப்பு - மோக்ஷத்தையும், ஈனும்-கொடுக்கும், செல்வமும்-(சுவர்க்கமுதலாகிய) செல்வத்தையும், ஈனும்-கொடுக்கும்; (ஆதலால்) உயிர்க்கு-(மனிதர்) உயிர்க்கு, அறத்தின் ஊங்கு-தருமத்தின்மேற்பட்ட, ஆக்கம்-பெருக்கத்தைத் தருவது, எவனோ? (ஒன்றுமில்லை) என்பது

உ. அறத்தினூஉக் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக் கறஞ்செயதலின் மேற்பட்ட வாக்கமு மில்லை; அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை, எ-று.

அறத்தினூஉ காக்கமு மில்லையென மேற்சொல்லிய வதனையே அநுவதித்தார். அதனும் கேடுவருதல் கூறுதற் பயனெய்தி, இதனாலதுசெய்யாத வழிக் கேடுவருதல் கூறப்பட்டது.

(தே-ப-ரை.) — (ஒருவனுக்கு) அறத்தின் ஊங்கு - தருமஞ் (செய்தலின்) மேற்பட்ட, ஆக்கமும-பெருக்கத்தைத் தருவதும், இல்லை-இலது; அதனை-அத்தருமத்தை, மறத்தலின் ஊங்கு-(மயக்கத்தால்) மறந்து விடுதலின்மேற்பட்ட, கேடு-கேட்டைத்தருவதும், இல்லை-இலது.

ங. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(பரி-ரை.) எ-து,—தத்தமக்கியலுந் நிறத்தான் அமமாகிய நல்வினையை யொழியாதே அஃதெய்து மிடத்தானெல்லாஞ் செய்க, எ-று.

---

† "சிறப்பெனலுரு செமபொருள்" எனபுழியும் (குறள-கடுஅ) வீட்டினைச் சிறப்பு என்றார்; இலையாமே, "சிறந்து பயிறறல" "எனக தொலகாபபியத்தும் (கற்பியல் - ஙக) "சிறேபன்" என உயரிடகத்தும (கட்ட, அச - க, வல்லி - உ, மன் - க, உ) கூறப்பட்டனமகாண்க.

இயலுள் நிறமாவது இல்லறம் பொருளனவிற் கேற்பவும், துறவறம் யாக்கை நிலைக்கேற்பவுஞ் செய்தல். ஏனைமை யிடைவிடாமை. எய்தவிட மாவன மனம் வாக்குக் காய மென்பன. அவற்றாற்செய்யும் அறங்களாவன முறையே நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலுமென இவை. இதனுள் அறஞ் செய்யுமாறு கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—ஒல்லும் வகையான்-(தமக்குத் தமக்குக்) கூடுங் வகைபால், அறவினை-தருமமாகிய நல்வினையை, ஒவாதே-இடை விடாமல், செல்லும் வாய் எல்லாம்-(அது) செல்லுமிடங்களினெல்லாம், செயல்-செய்யக்கடவர்

---

௩. மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஞாலங் கரவாமை

(பரி-ரை.) எ-து,—அவ்வாற்றான் அறஞ்செய்வான் தன்மனத்தின்கட் குற்றமுடையன் அலனாகை; அவனவனே அறனாவது; அ தொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப் படா, ஆ வா றாமையை, எ-று.

குற்றம் தீயனசிந்தித்தல். பிறரறிதல்வேண்டிச செய்கின்றன ஆகலின் ஆரஞர் வெளவுமா. மனத்து மாசுடையனாயவழி அதன் வ யேவாகிய மொழி மெய்களாற் செயவன பயனில வெனப நாடீம கூறப்பட்டது.

(தே-ப-ரை.) மனத்துக கண்-(அபபடி அறஞ் செய்பவன் தனது) நெஞ்சினிடத்து, மாசு இலன ஆதல-குற்றமில்லாதவனாகக் கடவன்; அறன்-தருமமாவது, அஃதித்து-அவ்வளவே; பிற-அது ஒழிந்தசொல்லும் வேடமும், ஆ தலாகா-(அறமெனப்படுவனவல்ல) ஆசாரகுணத்தை யுடையனவாம்.

---

௪. அழுக்கா றவாவெகுளி யின்னாசொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்

(பரி-ரை.) எ-து,—பிறராக்கம் பொறாமையும், புலன்கண்மேற்செல் கின்ற அவாவும், அவையேதுவாகப் பிறர்பால்வரும் வெகுளியும், அதுபற்றி வருங்கடுஞ் சொல்லுமாகிய இந் நான்கினையுங்கடிந் திடையுறாது நடந்த தறமாவது, எ-று.

இதனுள் இவற்றோடு விரவி யியன்ற தறமெனப் படாதென்பதூஉம் கொள்க. இவை இரண்டு பாட்டானும் அறத்தின் இயல்பு கூறப்பட்டது.

(தே-ப-ரை.) — அழுக்காறு-(பிறருயர்ச்சி) பொறுமையும், அவா-(ஐம்புல) ஆசையும், வெகுளி-(அவை காரணமாகப் பிறர்

மேல் உண்டாகிற) சோபமும், இன்னுச்சொல்- (அதுபற்றிவருகிற) கடுஞ்சொல்லும், இ ரண்டும் - ஆகியவிரண்டினையும், இழுக்காகடிந்து, இயன்றது-(ஒழிவில்லாமல்) நடந்தது. அறம்-அறமாவது

ஈ அன்றறிவா ரென்ன தறஞ்செய்த மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை

(பரி-ரை.) எ-து,—பாம இதுபொழு கினையமாகலின் இறககு ஞான்று செய்துமெனக் கருதாது அறத்தினை நாடோறுஞ் செய்க; அவ்வாறுசெயத அறம் இவ்வுடம்பினினறு முயிர்போங காலத தநற கழிவில்லாத துணையாம், எ-று.

மறறென்ப தசைசொல். பொன்றாத துணையென்றார், செய்த வுடம்பழியவு முயிரோ டொன்றியேனை யுடமபினுஞ் சேறலின இதனுன் இவ்வியல் பிற்ருகிய அறத்தினை நிலையாத யாகதை நிலையினபொழுதே செய்கவென்பது கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—(நாம் இப்போது இளமைபபருவ முடையோம் ஆகலின்) அன்று - இறதகுநாளில், அறிவாரா என்னது - செய்வோமென்று நினையாமல், அறம்-தருமததை செய்க - (தினந்தோறும்) செய்யக்கடவர்; அது-அபபடிச செயயபபட்ட தருமமானது, பொன்றுங்கால - உடபபினினறு முயிர போங்காலத்தில், பொன்றாத்துணை-(அவ்வுயிர்ககு) அழிபாத துணையாம

ஏ அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை

(பரி-ரை.) எ-து - ஆராயின் பயனிதுவெனறு யாம் ஆகம அளவை யான் உணர்த்தல் வேண்டா; சிவிகையைக காவுவபபோடு சிலுத்துவானிடைக்காட்சி யளவையானுணரபபடுமெ, எ-று.

பயனை ஆறென்றார், பின்னாகலின். எனவெனனுமசொதத்தாற் சொல்லாகிய ஆகம அளவையும், பொறுத்தானோ டூர்தானிடை யென்றதனுற் காட்சி அளவையும் பெறபபடும். உணரபபடு மென்பது சொல்லெசசம். இத பொன்றாத் துணையாதல் தெளிவிக்கப்பட்டது.

(தெ-ப-ரை)—அறத்து ஆறு - தருமத்தின்பயன், இதுவெனஇதுவென்று, (ஆகம வளவையால அறிவிகக) வேண்டா-வேண்டிய தில்லை; சிவிகை - தண்டிகையை, பொறுத்தானோடு-சுமபபவனோடு, ஊர்ந்தானிடை - செலுத்துவோனிடத்தில் (காட்சி யளவையினாலேயே அறியப்படும்.)

அ. வீழ்நாள் படாஅமை கன்றுற்றி னல்லதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(பரி-ரை.) எ-து,—செய்யாது கழியு நாளுளவாகாமல் ஒருவன் அறத்தைச செய்யுமாயின், அச்செயல் அவன் யாக்கையோடு கூடொள் வரும் வழியை வாராம லடைக்குங கல்லாம், எ-று.

இவ்வகைக் குறளத்தான் வரும் இருவகை வினையு முள்ள துணையும் உயிர் யாக்கையோடும கூடிநின் றவ்வினைகள திருவகைப் பயனையு நுகருமாகலான், அகாண முழுவதும் வாழ்நா ளெனப்பட்ட து. நூறநகள் ஈண்டாவன: அலிசை, அகங்காரம் அவா, விழைவு, வெறுப்பென்பன. இவற்றை வட நூலார் பஞ்சகிலேசமென்ப. வினையிரண்டாவன கலவினை, தீவினையென் பன. பயனிரண்டாவன இன்பக, துனபமென்பன. இதனுள் அறம் வீடு பயக்குமென்பது கூறபபட்டது.

(தெ-ப-ரை)—ஒருவன்—, வீழ்நாள் - (செய்யாமற்) கழியு நாள், படாமை - உண்டாகாமல், நன்று-தருமத்தை, ஆற்றின்-செய் வானாயின், அல்லது-அச்செயலாவது, வாழ்நாள்—(அவன் சரீரத் தோடுகூடி) வாழுநாளாது, வழி-(வரும) வழியை, அடைக்கும் கல்-(வராமல்) அடைக்குங்கலாம்.

கக. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில

(பரி-ரை.) எ-து,—இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம இனபமாயினுந் துன்பத்தி னிடத்தன; அதுவேயன்றிப் புகழு முடைய வல்ல, எ-று.

ஆ ஏருபு ணை டெளரிஃ கெகணை வக் தூ. ச "நூங்குகையா னேங்கு கடையு" என் புழிப்போல, இன்பம காமநகாசி. அதாவது காமத்துப் பாலின் முதற்கட் சொல்லுவது. இன்பத்துப் புறமெனவே துனபமாயிற்று. போவதுதான் வரும பிறரில விழைவுமுதலாயின அகக்கணத்துள் இன்பமாய்த் தோன்றும ஆயினும் பின் துன்பமாய விளைத்தலின் புறத்த வென்றார். அறத் தோடு வாராதனவுகளும் இல வனவே, வருவது புகழுமுடைத்து என்பது பெற்றும். இதனுள் அடங்செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவர் என்பது கூறப்பட்டது.

(தெ-ப-ரை)— அறத்தான் - இல்லறத்தோடு பொருத்தி, வரு வதே-வருமின்பமே, இன்பம்-இன்பமாகும்; மற்று எல்லாம்-அத னோடு பொருந்தாது வருவனவெல்லாம் (இன்பமாயினும்), புறத்த-

ச புறனானூறு, உஉ.

துன்பத்துட் சோர்வனவாம்; (அதுவுமல்லாமல்) புகழும்-புகழையும், இல-உடையனவல்ல

கo. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்குச் செயதற் பாற்றையது நல்வினையே ஒழிதற் பாற்றையது தீவினையே, எ-று.

ஒருமென்பன இரண்டும் அசை தேற்றேகாரம் பின்னும் கூட்டப்பட்டது. பழிக்கப் படுவதனைப பழியென்றார். இதனுற்செயவதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன.

(தே-ப-ரை)—ஒருவற்கு-ஒருவனுக்கு, செயல்பாலது - செய்தலாகிய தன்மையையுடையது, அறமேன-நல்வினையே, உயல்பாலது-ஒழிதலாகிய தன்மையையுடையது, பழி (எ) - தீவினையே

இல்லறவியல்

இம் அத்காரம இல்வாழ்க்கை

அந்தாவது இல்லாளோடுகூடி வாழ்தலினது சிறப்பு. இன்னிலை அறஞ் செய்தற்குரிய இருவகை நிலையுள முதலாதலின், இது தறன்வலி யுறுத்தலின் பின் வைக்கப்பட்டது

க இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

(பரி-ரை) எ-து,—இல்லறத்தோடு கூடி வாழ்வானென்று சொல்லப் படுகான் அற விபல பினையுடைய ஏனை மூவாக்கும அவர்செல்லும் நல் லொழுக்கநெறிகளை ணிலைபெறற துணையாம், எ-று.

இல்லென்ப தாருபெயர் என்பானெனச் செயப்படுபொருள் வினை முதல்போலக் கூறப்பட்டது. எனைய மூவராவார், ஆசாரியனிடத்தினின் றேதலும் விரதங காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தானும், இல்லிலிட்டுத் தீயொடு வளர்தலின்கட்சென்று மனையாள் வழிபடத் தவஞ் செய்யும் ஒழுக்கத் தானும், முற்றத் துறந்தயோக மொழுக்கத்தானும் என இவர். இவருள் முன்னே யிருவரையும் பிரதிமத மேற்கொண்டு கூறினர். இவரிவ்வொழுக்க நெறிகளை முடியச செலலுமளவும் அசசெலவிறகுப் பினோய் குளிர்முதலிய வற்றுள் இடையூறுவராமல் உண்டியும் மருந்தும உறையுளு முதலிய உதவி அவ்வவ நெறிகளின் வழுவாமற் செலுத்துதலான், நல்லாற்றினின்ற துணை யென்றார்.

(தே-ப-ரை)—இல்வாழ்வான் என்பான் இல்லறத்தோடுகூடி வாழ்பவனென்று சொல்லப்படுவோன், இயல்பு உடைய-(துறவறத்) தன்மையையுடைய, மூவர்க்கும்-(மற்றை) மூவர்க்கும், நல்ஆற்றில்-(அவரது) நல் (ஒழுக்க) வழிகளில், நின்ற-நிலைபெற்ற. துணை-துணையாவான்

உ துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு மில்வாழ்வா னென்பான் றுணை.

(பரி-ரை.) எ-து,—கனக னுனவரால் துறக்கப் பட்டார்க்கும் கல்கூர்த் தார்க்கும் ஒருவருமின்றித் தன்பால்வந் திறந்தார்க்கும் இல்வாழ்வானென்று சொல்லப்படுவோன் துணை, எ-று.

துறந்தார்க்குப் பாவம் ஒழிய அவர் கனக னுனயகின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவராக குணவுமுதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து கலலுலகின்கட் செலுத்தலானும் துணையென்றார். இவை யிணையிபாட்டானும் இனநிலை யெல்லா ட பகாரத்திற்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—துறந்தார்க்கும்-(ஆதார மானவராலே) விடப் பட்டோர்க்கும், துவ்வாதவர்க்கும்-வறுமைப்பட்டவர்க்கும், இறந்தார்க்கும்-(ஒரு வருமில்லாமல் வந்து) இறந்தவர்க்கும். இல்வாழ்வான் என்பான்-இல்வாழ்வானென்று சொல்லப்படுவோனே, துணை-துணையாவன்.

ங. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை

(பரி-ரை.) எ-து,—பிதிர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யும் அறனெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம், எ-று.

பிதிரராவார் படைப்புக் காலத் தயனுற் படைக்கப் பட்டதோர் கடவுட் சாதி, அவர்கிடந் தென்றிசை யாகலின் தென்புலத்தா ரென்றார். தெய்வ மென்பது சாதி யொருமை. விருந்தென்பது புதுமை. அஃதீண்டாகுபெயராய்ப் புதியராய் வந்தார்மேல் நின்றது. அவர் இருவகையர், பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதிண்மையிற் குறியாது வந்தாருமென. ஒக்கல்-சுற்றம். எல்லா அறங்களும் தானுளனாய் நின்று செய்யவேண்டுதலின் தனியே யோம்பலும் அறனாயிற்று. என்ற என்பது விகாரமாயிற்று. ஆங்கு அவ்வைவகையும் அறஞ்செய்தற் கிடனாகலின் ஐம்புலமென்றார். அரண

னுக் கிறைப்பொருள் ஆறி லொன்றையிற்று இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலான் என்ப தறிக.

(தெ-ப-ரை)—தென்புலத்தார்-பிதிரரும், தெய்வம்-தேவரும், விருந்து-அதிதியரும், ஒக்கல்-சுற்றத்தாரும், தான்-தானும், என்ற-என்றுசொல்லப்பட்ட, ஐம்புலத்து-ஐங்கிடத்துஞ் செயப்படுகின்ற, ஆறு-(அற) வழியை, ஓம்பல்-வழுவாமற்செயதல். கலி - (இல்வாழ் வானுக்குச) சிறப்புடைய அறமாம்

ச. பழிபஞ்சிப டாத்தா றுடைத்தாயின் வாழ்க்கை வழிபெஞ்ச லெஞ்ஞான்று மில

(பரி-ரை.) எ-து —பொருள செயயுங்காற பாகதரிற் கஞ்சி எட்டி, அப் பொருளே இயலபுடைய மூவா முதலாபினராகும தென்புலத்தா முதலிய நால்வாக்கும பகுதிதுத தானுண்டலே ஒருவனில்வாழ்கை டைத்தாயின், அவன்வழி யுலகத தெஞ்ஞான்றும பிறரால அலலது இறதரலில்லை, எ-று.

பாவத்தான வருக பிறன்பொருளேப பகுத்துண்ணான, அறம் பொரு ளுடையார் மேலும, பாவந்தன்மேலுமாய தினறவி, யெஞ்சுக ஆகலின் பழி யஞ்சி யென்றார வாழ்வான துடைமை வாழகைமே லேற்றபபட்டது.

(தெ-ப-ரை)—(பொருள் சம்பாதிக்க நமபோது) பழி - பாவத் தக்கு, அஞ்சி-பயபபடுச (சம்பாதித்து), பாத்து -(அபபொருளே மூன்சொல்லபபட்ட பதின்மர்களுக்கும) பகுதிட்டு, உண் - (தான், உண்ணுதலே, வாழ்க்கை-(ஒருவனது) இல்வாழ்கையானது, உடை த்து ஆயின்-உடையதாலால, வழி-(அவனது) சந்ததியானது, எஞ் சல்-குறைதல், எஞ்ஞான்றும்-எக்காலத்து, இல்-இலலே

ரு அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை பண்பும பயனு மது

(பரி-ரை) எ-து,—ஒருவன் இல்வாழ்கை தன்துணைவிமேற் செய்யத் தகும் அன்பினையும பிறர்க்கு பகுத்துண்ட லாகிய அறத்தினையும உடைத்தா யின், அவ்வுடைமை அதற்கு பண்பும பயனுமாம், எ-று.

நீரினறை இல்லாட்கும் உணவாகும நெஞ்சொன முகாதவழி இல்லறம் கடைபோகாமையின அனபுடைமை பண்பாயிறறு. அறனூடைமை பயனு யிறறு. இவை மூன்று பாட்டானும் இன்னிலேயி னின்றுன அறஞ்செய்யு மாறு கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—இல்வாழ்க்கை - (ஒருவனது) இல்வாழ்க்கை யானது, அன்பும் (தனமனைவியாளிடத்துச் செய்யத்தகும்) அன்பினை

யும், அறனும்–(பிறர்க்குப் பகுத்தண்ணுதலாகிய) அறத்தினையும், உடைத்தாயின் - உடையதானால், அது - அவ்வுடைமையான, (அவ்வில்வாழ்க்கைக்கு), பண்பும்-குணமும், பயனும்-பிரயோசனமும் ஆம்

கூ. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற புறத்தாற்றிற்
போஒப்ப் பெறுவ தெவன்

(பரி-ரை.) எ-து, ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின்வழியே செலுத்துவனுயின், அவன் அதனாகுப் புறமாகிய தெறியிறபோய்ப் பெறும்பயன் யாது, எ-று.

அறத்தாரென்பது பழிஅஞ்சிப் பகுத்துண்டலும் அன்புடைமையு மென மேற்சொல்லிய ஆறு. புறத்தாறு இல்லே விட்டெனதுசு செல்லுதலே. அக்நிலையின் இது பயனுடைத தென்பா, போய்ப பெறுவ தெவனென்றார்.

(தே-ப-ரை)—(ஒருவன்) இல் வாழ்க்கை-இல வாழ்க்கையை, அறத்து ஆற்றின் - தருமத்தின் வழியில, ஆற்றின் - செலுத்துவானுயின், புறத்து ஆற்றில் - (அவன் அகற்றப்) புறமாகிய வழியிலே, போய்-சென்று, பெறுவது-பெறும்பயன், எவன்-யாது.

எ. இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை

(பரி-ரை.) எ-து, –இல்வாழ்க்கைக்கு னின்ற அதற்குரிய இயல்போடு கூடிவாழ்பவ னென்று சொல்லப்படுவான புலன்களேவிட முயல்வா ரெல்லாருளும் மிக்கவன் எ-று.

மூற்றத் துறக்கவா வீட்டமையின், முயல்வா ரென்றது மூன்றாநிலேயி னின்ருரை; அதனிலேதான் பலவகைப்படுதலின் எல்லாருள்ளுமெனவும் முயலாதவைத்துப் பயனெய்துதலின் தலேயெனவுங் கூறினர்.

(தே-ப-ரை) — இல் வாழ்க்கை - இல்வாழ்க்கையிலே நின்று, இயல்பினுன்- (அதற்குரிய) இயல்போடுகூடி, வாழ்பவன் என்பான்- வாழ்பவனென்று சொல்லப்படுவோன், முயல்வாருள் எல்லாம் -(ஐம் புலங்களேவிட) முயற்சிசெய்வா ரெல்லாருள்ளும், தலே - மேற்பட்டவனுவான்.

அ. ஆற்றினெழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
தோற்பாரி னேன்மை யுடைத்து.

இ-ம் அதி- இல்வாழ்க்கை

(பரி-ரை-) எ-து,—தவஞ் செய்வாரையுங் தத்தனெறியின்கண் ஒழுகப் பண்ணித் தானுந் தன்னறத்திற் றவறாத இல்வாழ்க்கை அத்தவஞ்செய்வார் நிலையிலும் பொறையுடைத்து, எ-று.

பரி முகலிய இடையூறு நீககலின் ஆற்றினெழுக்கி யென்றார். நோற்பா ரென்பதாருபெயர். நோற்பார் நிலேக்கு அவர் தம்மையுற்ற நோயல்லது இல் வாழ்வார் நிலேபோற் பிறரையுற்ற நோயும் பொறுத்தல் இன்மையின் நோற் பாரி னேன்மை யுடைத்தென்றார்.

(தே-ப-ரை)—(தவஞ் செய்வோரையுப்) ஆற்றின் - (தமது) வழியில், ஒழுக்கி-நடத்தி, அறன் - (தானுந்தன்) அறத்தினின்றும், இழுக்கா-தவறாத, இல்வாழ்க்கை - இல்வாழ்க்கையானது, நோற் பாரின் - அத்தவஞ் செய்வாரது நிலேயினும், நோன்மை - பொறு மையை, உடைத்து-உடையதாம்

கூ. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

(பரி-ரை-) எ-து,—இருவகை யறத்தினும் நூல்களான் அற னென்று சிறப்பித்துச சொல்லப்பட்ட தில்வாழ்க்கையே; ஏனைத் துறவறமோ எனின் அதுவும் பிறனுற் பழிகூப் படுவதில்லேயாயின் அவ் வில்வாழ்க்கையோ டொருதன்மைத்தாக நன்று, எ-று.

ஏகாரம் பிரிநிலேக்கண வந்தது. இதனுற் பிரிக்கப்பட்டது துறவறமாக லின், அஃதென்னுஞ் சுட்டுப்பெயர அதன்மேனின்றது. பிறன் பழிப்ப தென்றது கூடா வொழுக்கத்தை. துறவறம மனத்தையும் பொறிகளேயும் ஒறுத்தடக்கவல்ல அருமை யுடைத்தாப வழியே. அவற்றை ஒறுக்கவே டாது ஐம்புல இன்பகை ளாரதுய்க்கு மேன்மை யுடைய இல்வாழ்க்கை யோடு அறமென வொருதலேணைப் படுத்தென்றவா ருயிற்று. இஃ கான்குபாட்டானும் இன்னிலேயே பயனுடைத்தென இதன் சிறப்புப் பட்டது.

(தே-ப-மா)—(இருவகை யறங்களுள்) அறன் எனப்பட்ட (நூல்களால்) அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது, இ வாழ்க்கையே—,(மற்றைத் துறவறமோவென்றால்) அஃதும் - அது வும், பிறன்பழிப்பது - பிறனுற் பழிக்கப்படுவதை, இல் லாயின் - உடைத்தாகாம லிருந்தால், நன்று-(அவ் வில்வாழ்க்கையோடு ஒரு தன்மையதாக) நன்றும்.

கo. வையத்துள் வாழ்வாங்கு வ ாழ்வான் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

(பரி-ரை.) எ-து,—இல்லறத்தோடு கூடிவாழுமியல்பிஞல் வையத்தின் தின் வாழ்பவன் வையத்தானே எனினும் வானின்கண் உறையும் தேவரு ளொருவனை வைத்து நன்கு மதிக்கப்படும், எ-று.

பின்தேவனும் அவ்வுறப்பய னுகர்த லொரு தலையாகலின், தெய்வத்துள் வைக்கப்படும் என்ருர். இதனுன் இன்னிலேபது மறுமைப்பயன் கூறப்பட்டது. இம்மைப்பயன் புகழ், அதனேயிறுதிக்ட் கூறுப.

(தே-ப-ரை.)—வாழ்வு ஆங்கு-இல்லறத்தோடு கூடிவாழுமியல் பிஞல், வையத்துள் - மண்ணுலகத்துள், வாழ்பவன்—,(மண்ணுல கத்தானேயாயினும்), வான் உரையும்-விண்ணுலகத்திலிருக்கின்ற, தெய்வத்துள்-தேவருள், வைக்கப்படும் - (ஒருவனுக) வைத்து மதிக் கப்படுவான்.

சு-ம். அதிகாரம்—வாழ்க்கைத்துணைநலம்.

அஃதாவது அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை அதிகார முறைமையும் இதனுனே விளகும்.

க. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

(பரி-ரை) எ - து,—மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளே புடையளாய்த் தன்னேக் கொண்டவனது வருவாய்க்குத்தக்க வாழ்க்கையை புடையாள் அதற்குத்துணை, எ-ம்.

நற்குணங்களாவன —துறந்தார்ப்பேணுமை, விருந்தயர்தலும், வதியார் மாட்டருளுடைமையு முதலாயின. நற்செய்கைகளாவன:—வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து கடைப்பிடித்தலும், அட்டதறிழில் வன்மையும், ஒப்புரவு செய்தலு முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது—முத லேயறிந் ததற்கியைய வழிததல். இதனுன் இல்விரண்டு நன்மையுஞ் சொன்ன வென்பது கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—மனைத்தக்க - இல்லறத்துக்குத்தக்க, மாண்பு உடையள் ஆகி - நற்குண நற்செய்கைகளே யுடையவளாகி, தன்கொ ண்டான் - தன்னேக்கொண்டவனது, வளம் தக்காள் வாழ்க்கை-வர வுக்குத் தகுந்த வாழ்க்கையை யுடையவள், துணை-(அவ்வில்லாத் திக்குத்) துணையாவாள்.

உ. மனைமாட்சி யில்ஃ பெனின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

உ அ ' சு-ம் அதி. வாழ்க்கைத்துணைநலம்

(பரி ரை.) எ-து,—மனையறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவன் இல்லாளிடத்தில்லையாயின், அவ்வில்வாழ்க்கை செல்வத்தான் எத்தனை மாட்சிமைத்தாயினும் அஃதுடைத்தன்று, எ-று.

இல்லெனின்ரூர், பயன்படாமையின்.

(தெ-ப-ரை)—மனைமாட்சி- இல்லறத்துக்குத் தகுந்த நற்குண நற்செய்கைகள், இல்லாள்கண் - (ஒருவனது) மனையாளிடத்து, இல் ஆயின்-இல்லை ஆயின், வாழ்க்கை-அவ்விலவாழ்க்கையானது, எனை மாட்சித்து ஆயினும் - (செல்வத்தால்) எவ்வளவு பெருமையை உடையதாயினும், இல் - அப்பெருமையை உடையதன்று

ந இல்லதெ னில்ல வண் மாண்பா னுள்ளதெ
னில்லவண் மாணந் கடை

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக இல்லாள் நற்குண நற்செய்கைகள் ஆயினக்கால் இலலாதது யாது? அவள்அனன லலாகக்கால் உளளது யாது?எ-று.

மாணபெனக் குணத்தினபெயர் குறபின்மேனின்றது. இவையிரண்டு பாட்டாலும் இல்வாழ்கைக்கு வேணடுவது இலலாளது மாட்சியே பிறவு ல்ல என்பது கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—(ஒருவனுக்கு) இ ல ா ள் - மனையாள், மாண்பு ஆனல் - நற்குண நற்செய்கை யுள்ளவளாயிருந்தால், இல்லது-இல்லாத பொருள், என்-யாதுஓ இலலாள் - அம் மனையாள், மாணந் கடை - அப்படிப்பட்டவளாகாதிருந்தால், உள்ளது - உள்ளபொருள், என் - யாது?

ச பெண்ணிறை பெருந்தகைய வாயினா நற்பெண்ணும்
திண்மையுண் டாகப பெறின்.

(பரி-ரை) எ-து,— ஒருனெபதும பொருளாகளுள் இலலாளின் மேம்பட்ட பொருள்கள் யாவையுள? அவணமாடங்க ளுபெனனும கலவுகா நிலேமை யுணடாகப் பெறின், எ-று.

கற்புடையாள்போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிறவின்மையின் யாவுளவென்ரூர் இதனுற கற்புநலதது சிறப்புக் கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—கற்பு என்னும் திண்மை-நற்பென்னுங் கலங்கா நிலேமை, உண்டு ஆக பெறின் - உண்டாயிருக்கப்பெற்ரால், பெண்ணின்-மனையாளினும், பெருந்தக்க - உயர்வாகிய பொருள்கள், யாளனவை, உள - இருக்கின்றன

இ. * தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(பரி-ரை) எ-து,—பிறதெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்றசொல்ல மழை பெய்யும், எ-று.

தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவு துயிலெழுங் காலத்தாகலின், தொழுதெழுவாளெனவும். தொழாநின் றென்பது தொழுதென்னுந்திரிந்துநின் றது. தெய்வந்தா னேவலசெய்பு மென்பதாம். இத்தொடர் கற்புடையவனது ஆற்றல் கூறப்பட்டது.

(தே-ப-னை.)—தெய்வம் - (பிற) தெய்வத்தை, தொழாள் - வணங்காளாகி, கொழுநன்-(தன்தெய்வமாகிய) கணவனை, தொழுது வணங்காநின்று, எழுவாள் - (நித்திரைவிட்டு) எழுந்திருப்பவள், பெய் என-பெய்பென்றுசொல்ல, மழை-மழையானது, பெய்யும்.

கூ. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(பரி-ரை) எ-து,—கற்பினின்றும் வழுவாமற் றன்னைகாத்து, தன்னைக் கொண்டவனையும் உண்டிமுதலியவற்றாற் பேண, இருவர்மாட்டி நண்மை யமைந்தபுகழ் நீங்காமற் காத்து, மேறசொல்லிய நற்குண நற்செய்கைகளி னுங் கடைபடியுடையாளே பெண்ணாவாள், எ-று.

தன்மாட்டுப் புகழாவது வாழுமூர் கற்பாற் றன்னைப் புகழ்வது. சோர்வு மறவி. இத்தொடர் றறபதத்தாற் சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-னை) தன்காத்து - (கற்பினின்றும் வழுவாமல்) தன்னைக் காப்பாற்றிக்கொண்டு, தன்கொண்டான்பேணி - தன்னைக் கொண்டவனையும், (உண்டிமுதலானவற்றால்) உபசரித்து, தகை சான்ற - (தம்மிருவரிடத்தும்) நன்மைபமைந்த, சொற்காத்து - புகழை (நீங்காமற்) காப்பாற்றி, சோர்விலாள் - (முன்சொல்லப்பட்ட) நற்குண நற்செய்கைகளிலும் (மறவி) இல்லாதவளே, பெண்-பெண்ணாவாள்.

---

* "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப், பொயயில் புலவன் பொருளுரை தேறிய" என இக்குறள் சீர்தகைச் சான்றோர் எடுத்துப் புகழப்பட்டுளது. (மணிமேகலை-உஉ நிறை செய்காதை, நிகழ்-சு-அடிகள்)

எ. நிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

(பரி-ரை.) எ-து, மகளிரைத் தலைவர் நிறையாற்காக்கு காவலென்ன பயனைசெய்யும்? அவர் தமது நிறையாற் காக்குங் காவலே தலையாயகாவல்,, எ-று.

நிறை—மதிலும் வாயில் காவலு முதலாயின. நிறை—நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல். காவல் இரண்டினும் நிறைக்காவலில்வழி யேனைச் நிறைக்காவலாற் பயனில்லே யென்பார், நிறைக்காக்குங காப்பேதலே யென்றார். ஏகாரம் பிரிநிலேக்கண வந்தது. இதனுற் றற்காத்தற்சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—மகளிர் பெண்களை, சிறை - காவலினுலே, காக்கும்-(தலேவர்) காக்கும், காப்பு-காவலானது, எவன்செய்யும்-என்ன பிரயோசனத்தைச்செய்யும், நிறை-கற்பென்னும் குணத்தினுல், காக்கும்-(அப்பெண்கள்) காக்கும், காப்பே-காவலே. தலை - முதன்மையான காவல்.

அ. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர்ப் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

(பரி-ரை.)-எ-து,—பெண்டிர் தம்மை பெற்றியகணவனே வழிபடுதல் பெறுவராயின, புததேளிர் வாழும உலகின்கண் அவராற் பெருஞ் சிறப்பினைப் பெறுவர். எ-று.

வழபடுதலென்பது சொல்லெசம். இதனுற் றற்கொண்டாற் பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவரென்பது கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—பெண்டிர் - மனேவியர், பெற்றாள் - (தம்மைத்) கொண்டகணவனே, பெறின்-(பூசித்தல்) பெறவராயின், புத்தேளிர்-தேவர், வாழும் - வாழ்தற்கிடமாகிய, உலகு - உலகத்தில், பெருஞ் சிறப்பு-(அவரால செய்யபபடும்) பெரியசிறப்பினை, பெறுவர்—.

கூ. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

(பரி-ரை.) எ-து,—புகழை விரும்பிய இல்லாளே யில்லாதார்க் கில்லை, தம்மை யிகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சினகவேறுபோ னடக்கும் பெரு மிதநடை, எ-று.

புரிந்தவென்னும் பெயரெசசத் தகரம் விகாரத்தாற் றொக்கது. பெருமித மூடையாணுகுசு சினகவேறு நடையா னுவமமாகலின், ஏறுபோலென்றார் இதனுற் றகைசான்ற சொற்காவாவழிப் படுகுற்றங் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—புகழ்-கீர்த்தியை, புரிந்த-விரும்பிய, இல்-மனையாளே, இலாளாக்கு-இல்லாதவர்க்கு, இகழ்வார்மூன்-(தம்மை) பிகழ்ந்துபேசும் பகைவர்முன், ஏறுபோல்-ஆண்சிங்கம் போலும், பீடு நடை-பெருமிதநடை, இல்லை-இலது.

கo. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல னன்மக்கட் பேறு

(பரி-ரை.) எ-து,—ஒருவர்க்கு நன்மையென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளே; அவை தமக்கு நல்ல அணிகலமென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலே, எ-று.

அறிந்தோரென்பது எஞ்சிநின்றது. மற்று-அசைநிலை. இதனுல் வாழ்க்கைத்துணைக் காவதோர் அணிநலங்கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

(தே-ப-ரை.)—மனை-மனையாளது, மாட்சி-நற்குண நற்செய்கைகளே, மங்கலம்-(ஒருவனுக்கு) நன்மை (ஆம்), என்ப-என்று சொல்லுவர்; நல்மக்கள்பேறு-நல்லபுதல்வரைப் பெறுதலே, அதன்-அவற்றிற்கு; நல் கலன்-நல்ல ஆபரணம், (என்ப)-என்று சொல்லுவர்.

எ-ம் அதிகாரம்—புதல்வரைப்பெறுதல்.

அஃதாவது இருபிறப்பாளர் மூவாரனும், * இயல்பாக இறக்கப்படுகின்ற கடன்மூன்றனுள் முனிவர் கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறக்கப்படாமையின், அக்கடனிறுத்தற்பொருட்டு நன்மக்களைப்பெறுதல். அதிகாரமுறைமை மேலே பெறப்பட்டது.

க. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற

(பரி-ரை.) எ-து,—ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப்பெறுதல் அல்லது பிறபேறுகளே யாமதிப்பதில்லை, எ-று.

---

* இருபிறப்பாளரெனினும் திவிசரெனினும் ஒக்கும். இருபிறப்பாளர் மூவரென்றது பயாபதித்திற்கு முன்னொரு பிறப்பும் பின்னொரு பிறப்புமாகிய இருபிறப்புடையராயுள்ள ரந்தணர், அரசர், வணிக ரென்னும் மூதினமூன்று வருணத்தாரை.

அறிவதென்பது அறிதலேச்செய்வதென அத்தொழின்மே னின்றது. காரணமாகிய உரிமை காரியமாகிய அறிதலேப்பயன்றே விடுமாதலான், அத் தணிவுபற்றி அறிந்தவென இறந்தகாலத்தாற் கூறினர். அறிவறிந்த என்ற வதனுன் மக்களென்னும்பெயர் பெண் ணெழுத்துரின்றது. இதனுற் புதல் வர்ப்பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—பெறும்அவற்றுள்-(ஒருவன்) பெறும் பேறுக ளுள் அறிவு அறிந்த-அறியவேண்டுமவைகளே அறிதற்குரிய, மக்கள் பேறுஅல்லது - புதல்வரைப் பெறுதலே அல்லது, பிற—மற்றைப் பேறுகளேயாம்-நாம், அறியாது இல்லே-மதிப்பதில்லே

———

உ. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

(பரி-ரை.) எ-து—வினேவயத்தாற் பிறக்கும் பிறப் பேழின்கண்ணும் ஒரு வினேத் தன்பங்கள் சென்றடையா. பிறராற பழிக்கப்படாத நற்குணங்களே யுடைய புதல்வரைப் பெறுவனுயின். எ-று.

அவன் தீவினே வளராது தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளேசெய் யும் புதல்வரைப் பெறுவனுயின் என்றவாறுமிற்று. பிறப்பேழாவன "ஊர்வ பதினெஞ்ரு மொன்பது மாணுடரீர்பறவை நாற்காலோரா பப்பத்தாஞ்-சீரிய, பன்மாண் தேவர் பதினுலயன்படைத்த, வந்தமில்சீர்த் தாவரநா லேந்து" தன் தை தாயர்தீவினே தேய்தற்பொருட் டவறைநோக்கிப் புதல்வர்செய்யுந் தான தருமமகட் கவர் நற்குணங் காரணமாகலின், பண்பென்னுய காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது.

(தே-ப-ரை.)—பழிபிறங்கா-(பிறரால்) பழிக்கப்படாத, பண்பு உடைய-நற்குணங்களேயுடைய, மக்கள்பெறின்-புதல்வரைப் பெறு வானுயின், எழுபிறப்பும்-(வினேவசத்தினுல் உண்டாகிற) எழுவகைப் பட்ட பிறப்பிலும், தீயவை-துன்பங்கள், தீண்டா-அடையாவாம்.

———

ஊ. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினேயான் வரும்.

(பரி-ரை.) எ-து,—தம்புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர் அறி ந்தோர்; அப்புதல்வர் செய்தபொருள் தம்மைநோக்கி அவர் செய்யு நல்வினே யானே தம்பால்வரும் ஆதலான், எ-று.

தந்தம் வினேயென்புழித் தொக்குநின்ற ஆறும் வேற்றுமை "முருகனது குறிஞ்சிநிலம்" என் புழிப்போல, உரிமைப்பொருட்கண்வந்தது. பொருள் செய்தமக்களேப் பொருளென உபசரித்தார். இவை யிரண்டொட்டாலும் நன்மக்களேப் பெற்றுர் பெறு மறுமைப்பயன் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—தம்மக்கள் - தம்முடைய புதல்வரை, தம் பொருள் - தம்முடைய பொருள்கள், என்ப - என்று சொல்லுவார், (அறிந்தோர்); அவர்பொருள் - அப்புதல்வர் சம்பாதித்த பொருள்கள், தம்தம் வினையான் - தம்மைக்குறித்து அவர்செய்யும் வேலை, வரும் உண்டாகும், (ஆதலால்)

சு. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

(பரி - ரை.) எ-து,—சுவையான் அமிழ்தத்தினு மிகவினிமை யுடைத்து தம்மக்களது சிறுகையான் அளாவப்பட்ட சோறு, எ-று.

சிறுகையான் அளாவலாவது "இட்டுக் தொட்டுங் கவ்வியுக் குழந்து, வெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்தல்."

(தே-ப-ரை).—தம்மக்கள் - தம்முடைய மக்களது, சிறுகை-றியகைகளால், அளாவிய - அளாவப்பட்ட, கூழ் - சோறுனது, அமிழ்தினும்-(சுவையினுல் மிகுந்த) அமிர்தத்தினும், ஆற்றஇனிது-கவும் இனிமையையுடையதாம்.

நி. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் மெய்க்கின்பமாவது மக்களது மெய்யைத் ண்டுதல்; செவிக்கின்பமாவது அவரது சொல்லைகேட்டால், எ-று.

மற்று-வினைமாற்று. மக்களது மழலைச் சொல்லே அன்றி அவர் கற்றறி டையராய்ச சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் சொல் வன்றார். தீண்டல் கேட்டலென்னுங் காரணப் பெயர்கள் எண்ணுக் காரி க்களின்மே னின்றன.

(தே-ப-ரை)—உடற்கு (ஒருவனது) உடம்புக்கு, இன்பம் - ன்பமாவது, மக்கள் - மக்களது, மெய் - உடம்பை, தீண்டல் - ாடுதல்; செவிக்கு - (அவனது) காதுக்கு, இன்பம் - இன்பமா து, அவர் - அவரது, சொல் - சொற்களை, கேட்டல்-கேட்குதல்.

சு. குழலினிதி யாழினி தென்ப தம்மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

(பரி-ரை.) எ-து,—குழலிசை யினிது யாழிசை யினிதென்று சொல்லு தம்புதல்வருடைய குதலைச் சொற்களைக் கேளாதவர், எ-று.

குழல் யாழ் என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றினு மழலைச்சொல் இனி தென்பரென்பது குறிப்பெச்சம். இனிமை மிகுதிபற்றி மழலைச்சொல் லைச் சிறப்புவகையானுங் கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் இம்மைப் பயன் கூறப்பட்டது.

(தெ-ப-னா.)—தம்மக்கள் - தம்முடைய புதல்வரது மழலைச் சொல் - குதலைச்சொற்களை, கேளாதவர் - கேளாதவர்கள், குழல் - புள்ளாங் குழலினிசை, இனிது - இன்பந்தருவது, யாழ் - வீணையினிசை, இனிது - இன்பந்தருவது, என்ப - என்றுசொல்லுவர்.

எ. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

(பரி-ரை.) எ-து,—தந்தை புதல்வனுக்குச் செய்யு நன்மையாவது கற்றோர் அவையத்தின்கண் அவரினு மிக்கிருக்குமாறு கல்வியுடையனாக்குதல், எ-று.

பொருளுடையனாக்குதன் முதலியன துன்பம் பயத்தலின், நன்மையாகவென்பது கருத்து. இதனுட் தந்தை கடன் கூறப்பட்டது.

(தெ-ப-னா).—தந்தை - தகப்பனாவன், மகற்கு - புதல்வனுக்கு, ஆற்றும் - செய்யத்தகும், நன்றி - நன்மையாவது, அவையத்து-(கற்றவரது) சபையில், முந்தி இருப்ப - அவரினு மேற்பட்டிருக்க, செயல்-(கல்வியை யுடையவன்) ஆக்குதலாம்.

———

அ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது

(பரி-ரை.) எ-து,—தம்மக்களது அறிவுடைமை பெரியநிலத்து மன்னுநின்ற வுயிர்கட்கெல்லாந் தம்மினும் இனிதாம், எ-று.

ஈண்டறிவென்றது இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வியறிவு. மன்னுயிரென்றது ஈண்டறிவுடையார்மே னின்றது; அறிவுடைமைகண்டின் புறுதற்குரியவர் அவராகலின். இதனுந் தந்தையினும் அவையத்தார் உவப்பரென்பது கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—தம்மக்கள் - தம்மக்களது, அறிவு உடைமை - அறிவுடையராயிருக்கையானது, மாநிலத்து - பெரியநிலத்தில், மன்-நிலைபெற்ற. உயிர்க்கு எல்லாம்-மக்களுயிர்க் கெல்லாம், தம்மின்-தமக் கின்பந்தருவதினும், இனிது-இனிதாயிருக்கும்.

———

கூ. ஈன்ற பொழுதிற் பெரிதவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(பரி-ரை.) எ-து,—தான் பெற்றபொழுதை மகிழ்சசியினு மிகமகிழும், தன்மகனைக் கல்விகேள்விகளால் நிறைந்தானென் றறிவுடையார் சொல்லக் கேட்டதாய், எ-று.

கவானின்கட்கண்ட போது வுவகையினும் சால்புடையனெனக் கேட்ட நிறப்புவகை பெரிதாகலின் பெரிதவக்கு மென ம், பெணணியல்பாற் ருஞ்ச அறியாமையின் கேட்ட தாயெனவு ங கூறினுர். அறிவுடையா ரென்பது வரு விக்கப்பட்டது, சான்றோ னென்றற் குரியவர் அவராகலின் . தாயுவகைக் களவையின்மையின் அஃதிதனுற் பிரித்துக் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—ஈன் மகனை-தன்புதல்வனை, சான்றோன் என-(கல்விகேள்விகளினல்) நிறைந்தானென்று (அறிவுடையோர்) சொல்ல, கேட்ட தாய் - (அதனைக்) கேட்ட தாயானவள், ஈன்றபொழு தின்-பெற்றகாலத்தினும், பெரிது உவக்கும்-மிகமகிழ்வாள்.

கூ. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

(பரி-ரை.) எ-து,—கல்வியுடைய னுக்கிய தந்தைக்கு மகன் செய்யுங் கைம்மாருவது தன்னறிவும் ஒழுக்கமுங் கண்டார் இவன்றந்தை இவனைப் பெறுதற் கென்ன தவஞ்செய்தான்கொல்லோ என்று சொல்லுஞ் சொல்லே கிழ்த்துதல், எ-று.

சொல்லென்பது நிகழ்த்துதலாகிய தன்காரணக் தோன்ற நின்றது. கிழ்த்துதல்-அங்ஙனஞ் சொல்ல ருகுதல். இதனுற் புதல்வன் கடன் கூறப் ட்டது.

(தே-ப-ரை.)—தந்தைக்கு-(தன்னைக் கல்வி யுடையவனுக்கிய) கப்பனுக்கு, மகன்-புதல்வன், ஆற்றும்-செய்யும், உதவி-எதிர் ன்றி ானது, (தன்னறிவையும் ஒழுக்கத்தையும் கண்டவர்) இவன்-இவ ஈது, தந்தை-தகப்பன், (இவனைப் பெறுதற்கு) என்-என்னதவத் தது, நோற்றான்கொல் - செய்தானோ, என்னும் - என்கிற, சொல்-சொல்லி, (உண்டாக்குதலாம்)

அடம் அதிகாரம்—அன்புடைமை.

அஃதாவது அவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர் புடையார்கட் காதல் உடையனுதல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங் கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள்பிறத்தலும் அன் பின்பயனுகலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத் துணைமேல் அன்பில் வழி இல்லறம் இனிது நடவாமை, * "அறவோர்க் களித்தலு மந்தண ரோம்ப லுந், துறவோர்க் கெதிர்கலுந்தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலு மிழ்ந்த வென்னே" என்பதனுனும், அதனுலருள் பிறத்தல், † "அருளென்னு மன்பீன்குழவி" என்பதனுனும் அறிக.

க. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழாவலா
புன்கணீர் பூசல் தரும்.

(பரி-ரை.) எ-து,—அன்பிற்கும் பிறரறியாம லடைத்துவைக்குந் தாழு னதோ? தம்மா லன்புசெய்யப் பட்டாரது துன்பங்கண்டெழி அன்புடையார் கண்பொழிகின்ற புல்லியகண்ணீரே உணர்ன்ற அன்பினை யெல்லாரும் அறி யத்தூற்றும் ஆதலான், எ-று.

உம்மை சிறப்பின்கண் வந்த து. ஆர்வலரது புன்மை கண்ணீர்மேலேற் றப்பட்டது. காட்சியளவைக் கெய்காதாயினும் அனுமான அளவையான் வெளிப்படு மென்பதாம். இதனுல் அன்பினதுண்மை உணர்த்தப்பட்டது.

(தே-ப-ரை)—ஆர்வலர் - அன்புடையாரது, புல்கண் நீர்-புல் லிய கண்ணீரே, பூசல்தரும் - (அன்பை யாரும் அறியத்) தூற் றும்; (ஆதலால்), அன்பிற்கும்-அன்பினுக்கும், அடைக்கும்-(பிறர் அறியாமல்) அடைத்துவைக்கும், தாழ்-தாழ்ப்பாள், உண்டோ-உளதோ.

உ. அன்பிலா ரெலாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

(பரி-ரை.) எ-து,—அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல் லாப் பொருளானும் தமக்கே உரியர். அன்புடையார் அவற்றுனே அன்றித் தம்மூடம்பானும் பிறர்க்குரியர், எ-று.

ஆனுருபுகளும் பிரிநிலே ஏகாரமும் விகாரத்தாற் றொக்கன. என்பு - ஆகு பெயர். என்புமுரியராதல் தன்னகம் புக்க குறுகடைப்புறவின் றகுதிகண்டஞ் சித் தூலேபுக்கோன் முதலாயினுர்கட் காண்க.

(தே-ப-ரை.)—அன்பு இலார்-(உயிர்களிடத்து) அன்பு இல்லா தார், (பிறர்க்குப்பயன்படாமையால்) எல்லாம் - எல்லாப்பொருள்

---

* மெய்ப்பதிற்றைம்பது, கொல்லாமைகாதலுரைக - எசு - ஆம் அடிகள்.

† திருக்குறள் - எடுஎ.

களாலும், தமக்கு-தமக்கே, உரியர்-உரியவராவார்; அன்பு உடை யார்-அன்புடையவர், (அவைகளாலே மாத்திரமல்லாமல்) என்பும்-தம் உடம்பாலும், பிறர்க்கு-மற்றவர்களுக்கு, உரியர்-உரிய வராவார்.

கூ. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(பரி-ரை.) எ-து,--பெறுதற்கரிய மக்களுயிர்க் குடம்போ டொன்றாகிய தொடர்ச்சியினை அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர், எ-று.

பிறப்பின தருமை பிறந்த வுயிர்கண்மேல் ஏற்றப்பட்டது. இயைந்த வென்ப துபசார வழக்கு. வழக்கு-ஆகுபெயர். உடம்போ டியைக்தல்லது அன்புசெய்ய லாகாமையின், அது செய்தற் பொருட் டித்தொடர்ச்சி யுளதாயி ற்றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப்பயன் அன்புடைமை யென்ரு யிற்று.

(தே-ப-ரை.)—ஓர் உயிர்க்கு - பெறுதற்கரிய மனிதருயிர்க்கு, என்போடு-உடம்போடு,இயைந்த-உண்டாகிய, தொடர்பு-சம்பந்தத் தை, அன்போடு - அன்புடன், இயைந்த – பொருந்துதற்கு வந்த, வழக்கு-வழியின்பயனுகும், என்ப—என்று(அறிந்தோர்)சொல்லுவர்.

ச. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்குத்தொடர்புடையார்மாட்டுச் செய்தஅன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் விருப்ப முடைமையைத்தரும்; அவ்விருப்ப முடைமைதான் இவற்றுப் பகையும் நோதலும் இல்லையாய் யாவரு நண் பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத்தரும், எ-று.

உடைமை-உடையனுந் தன்மை. யாவரு நண்பாதல் எல்லாப் பொருளு மெய்துதற் கேதுவாகலின், அதனை நாடாச் சிறப்பென்றார்.

(தே-ப-ரை.)—அன்பு - (மனிஷமக்கள் முதலியோரிடத்துச் செய்யும்) அன்பானது, ஆர்வ உடைமை - (பிறரிடத்தே) ஆசையை உடையவனு யிருக்கையை, ஈனும்-(ஒருவனுக்குத்) தரும்; அது-அவ் விருக்கையானது, நண்புஎன்னும்- (இவனுக்கு யாவரும்) நட்பின ரென்று சொல்லப்படுகிற, நாடாச்சிறப்பு - அளவிறந்த சிறப்பை, னும் - தரும்.

இ. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று மெய்துஞ் சிறப்பு.

(பரி-ரை.) எ-து,—அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின்பயனென்று சொல்லுவர் அறிந்தோர், இவ்வுலகத்து இல்வாழ்க்கைக் கணின்று இன்பனுகர்த்து அதன்மேற் முறக்கத்துச் சென்றெய்தும் பேரின்பத்தினை, எ-று.

வழக்கு-ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கணின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங்கூடி யின்புற்றார். தாஞ்செய்த வேள்வித்தொழிலாற் றேவராய் ஆண்டும் இன்புறுவராகலின், இன்புற்று மெய்துஞ் சிறப்பென்றார். தவத்தாற் றன்புற் றெய்துந் துறக்க இன்பத்தினை ஈண்டும் இன்புறுதெய்துதல் அன்பானேஅன்றி இல்லையென்பதாம்.

(தே-ப-ரை.)—வையகத்து - இவ்வுலகத்தில், இன்பு உற்றார்-(இல்வாழ்க்கையில்) இன்பத்தை அனுபவித்தவராகி, எய்தும் - (பின்பு விண்ணுலகத்திற்சென்று) அடையும், சிறப்பு-பேரின்பத்தை, அன்பு-அன்பை, உற்றூடையராகி, அமர்ந்த- (இல்லறத்தோடு) பொருந்திய, வழக்கு - வழியின்பயன், என்ப - என்றுசொல்லுவர் (அறிந்தோர்.)

சு. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(பரி-ரை.) எ-து,—அன்பு துணையாவது அறத்திற்கே யென்று சொல்லுவர் சிலரறியார்; எனைமறத்திற்கும் அவ்வனபே துணையாவது, எ-று.

ஒருவன்செய்த பகைமைபற்றி உள்ளத்து மறங்கிழ்ந்தழி அவனை நட்பாக்கருதி அவன்மே லன்புசெய்ய அதுநீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குந் துணையாமென்பார், மறத்திற்கு மஃதே துணையென்றார். "தன்பத்திற்கியாரே துணையாவார்" என்புழிப்போல. இவ்வைந்து பாட்டானும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—அறியார் - அறியாதவர் (சிலர்), அன்பு-அன்பானது, அறத்திற்கே-தருமத்துக்கே, சார்பு-துணையாவது, என்ப என்றுசொல்லுவார்; மறத்திற்கும்-பாவத்தை நீக்குதற்கும், அஃதே-

எ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

(பரி-ரை.) எ-து,—என்பில்லாத வுடம்பை வெயில்காய்ந்தாற்போலக் காயும், அன்பில்லாத வுயிரை அறக்கடவுள், எ-று.

என்பில தென்பதனுன் உடம்பென்பதூஉம், அன்பில தென்பதனுன் உயிரென்பதூஉம் பெற்றும். வெறுப்பின்றி எங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின்மன் எலும்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறுபோல, அத் தன்மைத்தாகிய அறத்தின்மூன் அன்பில்லது தன்னியல்பாற் கெடுமென்ன தாம். அதனைக் காயுமென வெயி லறங்களின்மே லேற்றினர், அவற்றிற்கும் அவ்வியல் புண்மையின். இவ்வாறு * "அல்லவை செய்தார்க் கறங்கூற்றம்" எனப் பிறருங் கூறினர்.

(தே-ப-ரை.)—என்பு இலதனை - எலும்பில்லாத வுடம்பை, வெயில்போல-வெயில் (சுடுதல்) போல, அன்பு இலதனை - அன்பில்லாத வுயிரை, அறம் - அறக்கடவுள், காயும் - சுடுவான்.

அ. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற் ‡
வற்றல் மரந்தளிர்த் தற்று.

(பரி-ரை.) எ-து,—மனத்தின்கண் அன்பில்லாத வுயிர் இல்லறத்தோடு கூடிவாழ்தல் வன்பாலின்கண் வற்றலாகியமரந தளிர்த்தாறபோலும், எ-று.

கூடா தென்பதாம். வன்பால்-வன்னிலம்,வற்றலென்பது பால்விளங்கா அஃறிணைப் படர்க்கைப்பெயர்.

(தே-ப-ரை.)—அன்பு அகத்து இல்லா உயிர் - மனதி லன்பில்லாத வுயிரானது, வாழ்க்கை - (இல்லறத்தோடுகூடி) வாழ்தலானது, வல் பாற் கண் - கடினமாகிய நிலத்தில், வற்றல்மரம் - உலர்ந்த மரமானது, தளிர்த்து அற்று - தளிர்த்தாற்போலும்.

கூ. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(பரி-ரை.) எ-து,—யாக்கை யகத்தின்கணின்று இல்லறத்திற் குறுப்பாகிய அன்புடையர் அல்லாதார்க்கு ஏனைப் புறத்தின்கணின்று உறுப்பாவன எல்லாம் அவ்வறஞ் செய்தற்கண் என்னவதவியைச் செய்யும், எ-று.

புறத்துறுப்பாவன:—இடனும் பொருளும் எவல்செய்வாரு முதலாயினவிணையோடு கூடாதவழி அவற்றுரற் பயனின்மையின், எவன் செய்யுமென்றார். உறுப்புப்போறலின் உறுப்பெனப் பட்டன. யாக்கையிற் கண் முதலிய வுறுப்புக்களெல்லாம் என்னபயனைச்செய்யும் மனத்தின்கண் உறுப்பாகிய

* நான்மணிக்கடிகை—அடி ‡ "வன்பால்" எனவும் பாடம்

வேலாயுதம் பதிப்பகம்

அன்பில்லாதார்க்கென்று உரைப்பாருமுளர். அதற்கில்லறத்தோடியாதும் இயையாமை அறிக.

(தே-ப-ரை)—யாக்கை அகத்து - உடம்பி னகத்திலே நின்று, உறுப்பு - (இல்லறத்துக்கு) அங்கமாகிய, அன்பு இலவர்க்கு - அன்பில்லாதவர்க்கு, புறத்து - மற்றைப் புறத்திலேநின்று, உறுப்பு எல்லாம் - அங்கமாவனவெல்லாம், எவன்-(அவ்வறஞ் செய்தலிலே) என்ன வுதவியை, செய்யும்—.

கo. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(பரி-மை.) எ-து,—அன்புமுதலாக அதன்வழிநின்ற வுடம்பே உயிர் நின்ற வுடம்பாவது; அவ்வன்பில்லாதார்க் குளவான வுடம்புகள் என்பினைத் தோலாற் போர்த்தனவாம், உயிர் நின்றனவாகா, எ-று.

இல்லறம் பயவாமையின் அன்னவாயின. இவை நான்கு பாட்டானும் அன்பில் வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—அன்பின் வழியது - அன்புமுதலாக அதன் வழிநின்ற உடம்பே, உயிர்நிலை - உயிர்நின்ற வுடம்பாகும்; அஃது இலார்க்கு - அவ்வன்பில்லாதார்க்குள், உடம்பு - உடம்புகளா னவை, என்பு - எலும்பை, தோல் - தோலினால், போர்த்த - போர்க்கப்பட்டனவாம் [உயிர்நின்றவுடம்பாகா.]

கூம். அதிகாரம்—விருந்தோம்பல்.

அஃதாவது இருவகை விருந்தினரையும் புறந்தருதல். ஈதன்புலத்தார் முதலிய ஐம்புலத்தும் முன்னைய இரண்டுங் கட்புலனுகாதாரை நினைத்து செய்வன வாகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கீ தலின்மையானும், இடை நின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறமகட்கு முதலாயிற்று. வேறு காத அன்புடை யிருவர்கூடி அல்லது செய்யப்படாமையின், இஃதன்புடை மையின் பின்வைக்கப்பட்டது.

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(பரி-மை.) எ-து,—மனைவியோடும் வனத்திற்செல்லாது இல்லின்க ணிருந்து பொருள்களைப் போற்றிவாழுஞ் செய்கையெல்லாம் விருந்தினரைப் பேணி அவர்க் குபகாரஞ் செய்தற்பொருட்டு, எ-று.

எனவே, வேளாண்மைசெய்யாவழி இல்லின்கணிருத்தலும் பொருள் செய்தலுங் காரணமாக வருந் துன்பச செய்கைகட்கெல்லாம் பயனில்லை என்பதாம்.

(தே - ப - ரை)—(மனைவியோடும் காட்டினிடத்தே செல்லாமல்) இல்-இல்லினிடத்தில், இருத்தலை—, ஒம்பி - (பொருள்களைக்) காப்பாற்றி, வாழ்வது எல்லாம-வாழுஞ் செய்கையெல்லாம், விருந்து - விருந்தினரை, ஒம்பி - உபசரித்து, வேளாண்மை - உபகாரத்தை, செய்தல் பொருட்டு - (அவருக்குச்) செய்தற் பொருட்டாம்.

2 விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

(பரி-ரை.) எ-து,—உணணப்படும் பொருள் அமிர்தமே யெனினும் தன்னைநோக்கி வந்த விருந்து தன் இல்லின் புறத்ததாகத் தானே உண்டல் விரும்புதன் முறைமை உடைத்தன்று, எ-று.

சாவாமருந்து-சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந்தின்றியே ஒருகாற் றானுண்டலைச சாவா மருந்தென்பார் உளராயினும், அதனை ஒழிக வென்றுரைப்பிலும் அமையும். இவையிரண்டுபொட்டானும் விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—(உண்ணப்படும் பொருள்) சாவாமருந்து எனினும் - அமிர்தமாயினும், விருந்து - (தன்னை நோக்கிவந்த) விருந்தினர், புறத்தது ஆக - (தம்வீட்டின்) புறத்திருக்க, தான் உண்டல்-தானே யுண்ணுதல், வேண்டல்பாற்றன்று அன்று - விரும்பப்படு முறைமையை யுடையதன்றும்.

கூ. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

(பரி-ரை.) எ-து,—தன்னைநோக்கி வந்தவிருந்தை நாடோறும் புறந்தரு வானது இல்வாழ்க்கை கல்குரவான் வருந்திக் கெடுதலில்லை, எ-று.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனுற்பொருள் தொலையாதுமேன் மேற் இலக்குமென்பதாம்.

(தே-ப-ரை)—வரு விருந்து-(தன்னைநோக்கி) வந்த விருந்தை, வைகலும் - நாள்தோறும், ஓம்புவான் - உபசரிப்பவனது, வாழ்க்கை - இல்வாழ்க்கையானது, பருவந்து - (வறுமையால்) வருந்தி, பாழ்படுதல் இன்று - கெடுதலே யடைவதில்லை.

ச. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

(பரி-ரை.) எ-து,—திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும், முகம் இனியனுய்த் தக்கவிருந்தினரைப் பேணுவானது இல்லின்கண், எ-று.

மனமகிழ்தற்குக் காரணம் தன்செல்வம் நல்வழிப்படுதல். தகுதி ஞான வொழுக்கங்களான் உயர்தல். பொருள்கிளைத்தற்குக் காரணங் கூறிய வாறு.

(தே-ப-ரை.)—முகன் அமர்ந்து-முகம் இனியனுய்,நல்விருந்து-தகுந்த விருந்தினரை, ஓம்புவான்-காப்பவனது, இல் - வீட்டில், செய்யாள்-திருமகள், அகன் அமர்ந்து - மனமகிழ்ந்து, உறையும் - வாழ்ந்துகொண்டிருப்பாள்.

நி. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

(பரி-ரை.) எ-து,—முன்னே விருந்தினரை மிஞ்சுவித்துப் பின் மிக்க தனைத் தான் மிசைவானது விளைபுலத்திற்கு விதைத்தலும் வேண்டுமோ, வேண்டா, எ-று.

கொல்லென்பது அசைநிலை. தானே விளையுமென்பது குறிப்பெச்சம். இவைமூன்று பாட்டானும் விருந்தோம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—விருந்தோம்பி - (முன்னே) விருந்தினரையுண் பித்து; மிச்சில் - மிகுதியை, மிசைவான் - (பின்) உண்பவனது, புலம் - விளைநிலத்துக்கு, வித்தும் - விதையும், இடல் - இடுதலும், வேண்டுங்கொல் - வேண்டுமோ.

சு. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

(பரி-ரை.) எ-து,—தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக் கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனேடு உண்ணஇருப்பான் மறுபிறப் பிற் றேவனுய் வானினுள்ளார்க்கு நல்விருந்தாம், எ-று.

வருவிருந்தென்பது இடவழுவமைதி. நல்விருந்து-எய்தாவிருந்து. இதனுன் மறுமைக்கணெய்தும் பயன் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—செல்விருந்து-(தன்னிடத்திலே)வந்தவிருந்தை, ஓம்பி - உபசரித்து, வருவிருந்து - (பின்) வரும்விருந்தை, பார்த்து-

எதிர்கோக்கி, இருப்பான் - (தான் அதனேடுண்ண) இருப்பவன், (மறுபிறப்பிலே தேவனுப்) வானத்தவர்க்கு - வானிலுள்ளவருக்கு, நல்விருந்து-நல்லவிருந்தாவான்.

எ. இனைத்துணைத தெனபபதான
றுணைத்துணை வேள்விப் பயன்.

(பரி-ரை.) எ-து,—விருந்தோம்பலாகிய வேள்வியின்பயன். இன்னவள விற்றென்பதா ரளாடைத்தன்று; அதற்கு அவ்விருந்தின் றகுதியளவே அளவு; எ-று.

* ஐம்பெருவேள்வியி னொன்றாகலின் வேள்வியென்றும், பொருளளவு ‡ "தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" ஆகலின், இனைத்துணைத்தென்ப தொன்றில்லையென்றுங் கூறினர். இதனுன் இருமையும் பயத்தற்குக் காரணங் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—வேள்விப்பயன் - விருந்தினரை யுபசரித்தலா கிய) வேள்வியினதுபயன், இனைத்துணைத்து என்பது-இன்ன அள வினையுடைய தென்பதாகிய, ஒன்று இல்லை - ஓரளவினையுடைய தன்று; விருந்தின்-அவ்விருந்தினது, துணை- தகுதி, அளவு, துணை- (அதற்கு) அளவாம்.

அ பரிக்தோம்பிப் பற்றற்றே மென்பார் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

(பரி-ரை.) எ-து,—நிலையாப்பொருளை வருந்திக்காத்துப் பின் அதனே யிழந்து இதுபொழுது யாம் பற்றுக்கோடில மாயினேம் என்றிரங்குவர் அப் பொருளான் விருந்தினரையோம்பி வேள்விப்பயனையெய்தும் பொறியிலா தார், எ-று.

‖ "ஈட்டிய வொண்பொருளைக், காத்தலு மாங்கே கடிந்தன்பம்" ஆக வின், பரிந்தோம்பியென்றார். வேள்வி-ஆகுபெயர்.

(தே-ப-ரை.)—விருந்து - விருந்தினரை; ஓம்பி - (நிலையாப்பொ ருளைக்கொண்டு) உபசரித்து, வேள்வி-அவ்வேள்விப்பயனை, தலைப்

---

* ஐம்பெருவேள்வி—பிரமயாகம் :—வேதமோதுதல்; தேவயாகம் :—ஓமம்வளர்த்தல்; மானுடயாகம் :— விருந்தோம்பல்; பிதிரியாகம் :—நீர்கடனாற்றல், பூசையாகம் :— பலியீதல்.

‡ காலடியார், அறன்வலியுறுத்தல்-அ.

படாதார்-அடையும் அறிவிலாதவர், பரிந்து ஓம்பி-(அப்பொருளை வருந்திக்காத்து, (பின்பு அதனையிழந்து) பற்று அற்றேம் - (இ போது) பற்றுக்கோ டில்லாதவராயிருப்பினும், என்பர்-என்றிரங்குவா

கூ உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு

(பரி-ரை) எ-து,—உடைமைக்காலத்து இன்மையாவது விருந்தோ பலே இகழும் பேதைமை, அஃதறிந்தார்மாட்டு உளதாகாது பேதையர் மாட்டேயுளதாம், எ-று

உடைமை-பொருளுடையனாந்தன்மை. பொருளாறகொள்ளும் பயனி இழப்பித்தது உடைமையை இன்மையாகவின மடமையை இனமையாக உ சரித்தார். பேதைமையான் விருந்தோம்பலே யிகழ்ன, பொருள் நின்றவழியு அத்தொற் பயனில்லையென்பத ம. இவைபிரண்டு பாட்டானும் விருந்தோம்ப வழிப் படுக்குற்றக கூறப்பட்டது.

(தே-ப-ரை)—உடைமையுள்-(பொருள்) உடையராயிருக்கு காலத்து, இனமை-வறுமைபாவது, விருந்தோம்பல்-விருந்தினை யுபசரித்தலை, ஓம்பா-இகழுமை, மடமை-பேதைமைபாகும்; (அ அறிந்தோரிடத் திராது) மடவார்கண் - அறிவிலாதவரிடத்த உண்டு - உளது.

கo. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(பரி-மை.) எ-து,— அனிசப்பூ மோந்துழியன்றிக குழையாது; விருந் னர் முகம் வேறுபட்டு நோகக் குழையா, எ-று.

அனிசசம்-ஆகுபெயர். சேயமைகட்கணுறி இன்மூகமும் அதுபற்ற ணணியவழி இன்சொல்லும், அதுபறறி டன்பட்டவழி நன்முறறமும் எ விருந்தோம்புவாகாகு இன்றியமையாத மூன்றனுள், முதலாய இன்முகம்இ வழிச சேய்மைக்கணணே வாடி நீங்குகலின், நீணடியவழி அல்லது வாடா அனிசப்பூவினும விருந்தினா மெலலியரென்பதாம் இதனுண் விருந்தோம்ப வார்க்கு முதறகண இனமுகம் வேணடுமன்பது கூறபபட்டது.

(தே-ப-ரை)—அனிசசம் - அனிச்சப் பூவானது, மோப்ப மோந்தவிடத்தே, குழையும் - வாடும்; விருந்து-விருந்தினரானவர் முகம் திரிந்து-முகம்வேறுபட்டு,நோக்க-பார்க்க, குழையும்-வாடுவர்

80-ம் அதிகாரம்—இனியவைகூறல்.

அஃதாவது மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல். இதுவும், விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின்பின் வைக்கப்பட்டது.

க. இன்சொலா லீரமீளஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச சொல்.

(பரி-ரை) எ-து,—இன்சொலாவன அன்போடு கலந்து வஞ்சனையில வாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார்வாயிற் சொற்கள், எ-று.

ஆல் - அசைநிலை. அன்போடுகலத்தல் - அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை-வாய்மை. மெய்யுணர்ந்தார் செஞ்சுற்கெல்லாஞ் செம்மையுடைத்தாய்ப தோனறலின், செம்பொருளெனப்பட்டது. இலவாஞ் சொல்லென இயையும். வாயென வேண்டாது கூறினார், தீயசொற்பயிலா என்ப தறிவித்தற்கு. இதனுன் இனசொற்கிலக்கணங கூறப்பட்டது.

(தே-ப-ரை)—இன சொல் - இனிய சொற்களாவன, ஈரம் அளைஇ - அன்போடு கலந்து. படிறு இல ஆம் - வஞ்சனை யில்லன வாயிருக்கின்ற, செம்பொருள் - அறத்தின், கண்டார - அறிந்தவரது, வாய்சசொல் - வாயசசொறகளாகும்

உ. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
கின்சொல னைப் பெறின்.

(பரி-ரை.) எ-து,—நெஞ்சுவந்து ஒருவற்கு வேண்டிய தொருபொருளைக் கொடுத்தலினும் நன்று, கண்டபொழுதே முகம்இனியனுய் அதனேடு இனியசொலலையு முடையனுகப் பெறின், எ-று.

இன்முகத்தோடு கூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வயத்த தன்றித் தனவயத்தாயினும், அற நெஞ்சுடையாராக்கல்லது இயல்பாக இன்மையின், அதனினும் அரிதென்றுங்கருதான், இன்சொலனைப் பெறினென்றார.

(தே-ப-ரை.)—முகன் அமர்ந்து - (கண்டபொழுதே) முக மலர்ந்து, இன்சொலன் ஆக - (அதனேடு) இன்சொல்லையும் உடையவனுக, பெறின் - பெற்றால், (அது) அகன் அமர்ந்து - மனமகிழ்ந்து, ஈதலின் - (ஒருவனுக்கு வேண்டியதொருபொருளைக்) கொடுப்பதைவிடவும், நன்றே - நல்லதேயாம்

ங. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு
மின்சொ லினதே யறம்.

(பரி-ரை.) எ-து,—கண்டபொழுதே முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி, பின் நண்ணியவழி மனத்துடனுகிய இனியசொற்களேச் சொல்லுதலின் கண்ணதே அறம், எ-று.

நோக்கியென்னும் வினையெச்சம் இன்சொலென அடையடுத்து நின்ற முதனிலேத் தொழிற்பெயர் கொண்டது. ஈதலின்கண்ணது அன்றென்ற வாறு. இவையிரண்டு பாட்டானும் இன் முகததோடு கூடிய இன்சொல் முன்னரே பிணித்துக்காடலின், விருந்தோம்புதற்கட் சிறந்ததென்பது கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—அறம் - தருமமானது; முகத்தான் அமர்ந்து-(கண்டபோதே) முகத்தால் விருப்பி, இனிது நோக்கி - இனிதாகப்பார்த்து, (பின்சேர்ந்தவிடத்து) அகத்தான் ஆம் - மனத்துடனுகிய, இன்சொலினதே-இனிய சொற்களேச் சொல்லுதலினிடத்ததே.

ச. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு

(பரி-ரை.) எ-து,—எல்லார்மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லே யுடையாாக்குத் துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லேயாம், எ-று.

நாமுரலியபொறிகள் சுவை முதலிய புலன்களே நுகராமை உடைமையின், துவ்வாமையென்றார். யார்மாட்டும் இன்புறூஉ மின்சொலவர்க்குப் பகையும் கொதமலுமின்றி உள்ளது நண்பேயாம். ஆகவே, அவர் எல்லாச் செல்வமும் எய்துவரென்பது கருத்து.

(தே-ப-ரை.)—யார்மாட்டும் - எல்லாரிடத்தும், இன்பு உறும் - இன்பத்தை மிகுவிக்கும், இன்சொ லவர்க்கு - இனிய சொற்களே யுடையவர்க்கு, துன்புஉறும் - துன்பத்தை மிகுவிக்கும், துவ்வாமை - வறுமையானது, இல்லாகும் - இல்லே.

நி. பணிவுடைய னின்சொல னுதலொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

"இன்சொலினஃதே" என்னும் பிரதிபேதம்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்கணியாவது தன்னுற் சூழப்படுவோர்கண் தாழ்ச்சியுடையனும் எல்லார்கணணும் இனியசொல்லையும் உடையனதல்; இவையிரண்டுமென்றி மெய்க்கணியும் பிறவணிகள் அணியாகா, எ-று.

இன்சொலனதற் கினமாகலின், பணிவுடைமையும் உடன் கூறினர். மற்று-அசைநிலை. வேற்றுமையுடைமையாற் பிறவெனவும், இவை போலப் பேரழகு செய்யாமையின் அல்லவென ,, கூறினர். இவையிரண்டு பாட்டானும் இனியவை கூறுவார்க்கு இம்மைப்பன் கூறப்பட்டது.

(தே-ப-ரை)— ஒருவற்கு - ஒருவனுக்கு, அணி - ஆபாணமாவது, பணிவு உடையன் - பெரியோரிடத்தே) வணக்கமுடையவனாகி, இன்சொலன் ஆதல் - (எல்லாரிடத்தும்) இனிய சொல்லையுடையவனயிருக்கையாம்; பிற - இவ்விரண்டு மல்லாமல் உடம்பில் அணியும்) மற்றை ஆபரணங்கள், அல்ல - ஆபரணங்களாகா.

சு அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்

(பரி-ரை) எ-து,—பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ்சொற்களே மனத்தான் ஆராய்ந்து இனியவாக ஒருவன் சொல்லுமாயின், அவனுக்குப் பாவங்கள் தேய அறம் வளரும், எ-று.

தேய்தல் - தன்பகையாகிய அறம் வளர்தலின் தனக்குநிலையின்றி மெலிதல். "தவநிற்மூன் னில்லாதாம் பாவம்" * என்பதூஉம் இப்பொருட்டு. நல்லவை நாடிச சொல்லுங்காலுங கடியவாகச்சொல்லின், அறனுகாதென்பதாம். இதனுன் மருமைப்பயன கூறப்பட்டது.

(தே-ப-ரை)—நல்லவை - (பொருளினலே பிறர்க்கு) நன்மையைத் தருஞ்சொற்களே, நாடி - (மனத்தால்) ஆராய்ந்து, இனிய-இனிமை யுள்ளனவாக, சொலின்-(ஒருவன்) சொல்லுவானுயின், (அவனுக்கு) அல்லவை - பாவங்கள், தேய-குறைய, அறம் - தருமமானது, பெருகும் - வளரும்.

எ. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்கு இம்மைக்கு நீதிபையும் உண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும், பொருளாற் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப்பண்பி னீங்காத சொல், எ-று.

* நாலடியார் துறவு. ச.

நீதி-உலகத்தோடு பொருந்துதல். பண்பென்பது ஈண்டதிகாரத்தான் இனிமை மேனின்றது. தலைப்பிரிதல் ஒருசொன்னீர்மைத்து.

(தே-ப-ரை.)—பயன் ஈன்று - (பொருளினுலே பிறருக்கு) நன்மையைக்கொடுத்து, பண்பின்-இனிமைக் குணத்தினின்றும், தலைப் பிரியா - நீங்காத, சொல் - சொற்களானவை, (ஒருவனுக்கு) நயன் ஈன்று - (இம்மைக்கு) நீதியையும் உண்டாக்கி, நன்றிபயக்கும்-(மறு மைக்கு) அறத்தையும் தரும்.

அ. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

(பரி-ரை.) எ-து,—பொருளாற் பிறர்க்கு நோய்செய்யாத இனிய சொல், ஒருவனுக்கு இருமையினும் இனபத்தைப் பயக்கும், எ-று.

மருமையின்பம் பெரிதாகலின், முற்கூறப்பட்டது. இம்மையின்பமா யது உலகம் தன்வயத்ததாகலான் கல்லனஎய்தி இன்புறுதல். இவையிரண்டு மாட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்துதல் வலியுறுத்தப்பட்டது.

(தே-ப-ரை.)—சிறுமையுள் நீங்கிய - (பொருளினுலே பிறர்க் குத்) தீன்பஞ்செய்வதில் நீங்கிய, இன்சொல் - இனியசொற்களா ரவை, (ஒருவனுக்கு) மறுமையும் இம்மையும் - வருபிறப்பிலும்)ப்பிறப்பிலும், இன்பம் - இன்பத்தை, தரும் - தொடுக்கும்.

கூ. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

(பரி-ரை.) எ-து,—பிறர் கூறிய இன்சொல் தனக்கின்பம் பயத்தலை னுபவித்தறிகின்றவன், அதுபற்றப் பிறர்மாட்டு வன்சொல்லைச் சொல்வது ன்னபயன் கருதி எ-று.

இனிதென்றது வினைகுறிப்புப்பெயர். கடுஞ்சொற் பிறர்க்கும் இன்னு காலின், அது கூலாகாதென்பது கருத்து.

(தே-ப-ரை.)—இன்சொல் - (பிறருடைய) இனிய சொற்களா வை, இனிது ஈன்றல் - (தனக்கு) இன்பந்தருதலை, காண்பான்- னுபவித்தறிகின்றவன், (அதுநிற்க), வல்சொல் - கடுஞ்சொற்களை, ழங்குவது - (பிறரிடத்தே) சொல்லுவது, எவன்கொலோ - யாது பன்குறித்தோ.

கo. இனிய வுளவாக வின்ன தகூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(பரி-ரை) எ-தி,—அறம் பயக்கும் இனிய சொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறுது, பாவம் பயகரும் இன்னதுசொற்களே ஒருவன் கூறுதல், இனிய கனிகளும் தன்கைகணை உளவாயிருக்க அவற்றைநுகராது இன்னதகாய்களே நுகர்ந்ததனே டொக்கும், எ-று.

கூறலென்பதனுற் சொற்களென்பது பெற்றும். பொருளே விசேடித்து நின்ற பண்புகள் உவமைகணணுஞ்சென்றன. இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனி * போல அமிழ்தாவனவற்றை. இன்னத காய்களென்றது காஞ்சிரங்காய் போல நஞ்சாவனவற்றை. கடிஞ்சொற்சொல்லுதல் முடிவிற்றனக்கே யின்னதென்பதாம். இவையிரண்டுபாட்டானும் இன்னத கூறலின் குற்றங் கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—இனிய - (அறமுண்டாகும்) இன்சொற்களும், உளஆக-(தன்னிடத்தே) உண்டாயிருக்க, (அவற்றைச் சொல்லாமல்), இன்னத-(பாவமுண்டாகும்) கடிஞ்சொற்களே, கூறல்-(ஒருவன்) சொல்லுதல், கனி-(இனிய) கனிகளும், இருப்ப-(தன்னிடத்தே) உண்டாயிருக்க, (அவற்றைத் தின்னாமல்), காய்-(இனிமையில்லாத) காய்களே, கவர்ந்த தஅற்று-தின்பதனேடொக்கும்.

ககம் அதிகாரம்—செய்ந்நன்றியறிதல்.

—ஐஎ—

அஃதாவது தனக்குப் பிறாசெய்த நன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம்வழுவாதார்க்கு உய்தியில் குறறம் செய்ந்நன்றி கோறலேயாகலின், அதனேப் பாதுகாத்துக கடிதற்பொருட்டு, இஃதினியவை கூறலின் பின் வைக்கப்பட்டது.

க. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது

---

* ஔவை அதிகமா னெடுமானுக்கு நெல்லிகனியொன்று பெற்றதனே, "தொன்னிலைப்-பெருமலே விடாகத தருமிசைக்கொண்ட நிறியிலை நெலிதீங்கனிகுறியாதானினைத்தடகைசாதனீகை யெமகீயுதலே" என இவரே பாடிய புறனானூற்று-கo-ஆம் செயயுளானும் "நால்வரைக-கமழபுஞ்சாறற சவினிய நெல்லி-யமிழ்தங்விளே நீள்கனியெனவைக் கோக-வரவுச்சினகனலு மொளிதிகழ நெடுவேல-வரவக்கடற்றுணே யிகலுவும்" என்னும் நெறபாரூறறுபபடை. கூக கo-ஆம் அடிகளானும் உணாக,

(பரி-ரை.) எ-து,—தனக்கு முன்னே ருதவிசெய்யாதிருக்க ஒருவன் பிற னுக்குச் செய்தவுதவிக்கு, மண்ணுலகும் விண்ணுலகுங கைம்மாறுகக் கொடுத் தாலும் ஒத்தலாகாது, எ-று.

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையவாகலின், காரணமில்லாத உத விக்கு ஆற்றுவாயின. செய்யாமைச செய்தவுதவியென்று பாடமோதி, மறி த்துரைத்தவாட்டாமை யுள்ளவிடத்துச செய்தவுதவியென் றுரைப்பாரு முளர்.

(தெ-ப-ரை.)—செய்யாமல் - (தனக்குமுன்னேருதவியும்) செய் யாதிருக்க, செய்த-(ஒருவன்பிறனுக்குச்) செய்த, உதவிக்கு—, வையகமும்-மண்ணுலகத்தையும், வானகமும்-விண்ணுலகத்தையும், (ஈடாகக்கொடுத்தாலும்), ஆற்றல்-அரிது-ஒத்தல் அரிது.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக் கிதுதிவக்கு எல்லேக்கண் ஒருவன் செய்த உபகாரம், தன்னே நோக்கச சிறிதாயிருக் குதாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினு மிகப்பெரிது, எ-று.

அக்காலநோக்குவதல்லது பொருணோக்க லாகாதென்பதாம். காலத்தினு லென்பது வேற்றுமை மயக்கம்.

(தெ-ப-ரை.)—காலத்தினால்-(ஒருவனுக்கு) ஆபத்துவந்த கால த்தில், செய்த-(ஒருவன்) செய்த, நன்றி-உபகாரம், சிறிது எனி னும் - (தன்னே நோக்கச் சிறிதாயிருந்தபோதினும், (அக்காலத்தை நோக்க) ஞாலத்தின்-நில உலகத்தினும், மாணப்பெரிது-மிகப்பெரி தாம்.

உபயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

(பரி-ரை.) எ-து,—இவர்க் கிதுசெய்தால் இன்னது பயக்குமென்று ஆராய்தல் இலராய்சசெய்த வுதவியாகிய நயமுடைமையை ஆராயின், அத னன்மை கடலினும் பெரிதாம், எ-று.

இவை மூன்றுபாட்டானும் மூறையே காரணமின்றிச் செய்ததூஉம் கால த்தினுற் செய்ததூஉம், பயன்றூக்காராய்ச் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப் பட்டது.

(தெ-ப-ரை.)—பயன்-பயனை, தூக்கார்-ஆராய்தல் இலராய் செய்த—, உதவி - உதவியாகிய, நயன் - நயத்தை, தூக்கின் -

ஆரயின், நன்மை - (அதன்) நன்மையானது, கடலின் - கடலினும், பெரிது—.

ச. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

(பரி-ரை.) எ-து,—தமக்குத் தினையளவிற்ருய உபகாரத்தை ஒருவன் செய்தானுயினும், அதனை அவ்வளவிற்ருகக் கருதாது பனையளவிற்ருகக்கருதுவர் அக்கருத்தின் பயன் தெரிவார், எ-று.

தினை பனையென்பன தொழிலெருமைபெருமைகட்குக் காட்டிவன சில அளவை. அக்கருத்தின்பயனுவது அங்ஙனங் கருதுவார்க்கு வரும் பயன்.

(தே-ப-ரை)—தினைத்துணைநன்றி - (தாக்குத்) தினையளவாகிய உபகாரத்தை, செயினும் - (ஒருவர்) செய்தானுயினும், (அதனை அவ்வளவாகநினையாமல்), பனைத்துணை ஆக - பனையளவதாக, கொள்வர் - நினைபவர், பயன் - (அந்நினைப்பின்) பயனை, தெரிவார் - அறிபவர்.

நி. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(பரி-ரை.) எ-து,—கைம்மாருன உதவி காணத்தானும் பொருளானுங் காலத்தானும் ஆகிய மூவகையானும் முன்செய்த உதவியளவிற்றன்று; அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம அமைதியளவிற்று, எ-று.

சால்பு எவ்வளவு பெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாமென்பார், சால்பின் வரைத்தென்ருர். இவை யிணைபெட்டானும் மூன்றுமல்லாத உதவிமாத்திரமும் அறிவார்க்குச செய்தவழிப் பெரிதாமென்பதுகூறப்பட்டது.

(தே-ப-ரை)—உதவி - எதிர்செய்யும் உதவியானது, உதவி வரைத்து அன்று - (முன்செய்த) உதவியளவினதன்று, உதவி செயப்பட்டார் - அவ்வுதவி செய்யப்பெற்றுக்கொண்டவரது, சால்பின் வரைத்து - தகுதியளவினதாம்.

கூ. மறவற்க மாசற்ருர் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

(பரி-ரை.) எ - து,—துன்பக்காலத்துத் தனக்குப் பற்றுக்கோடாயினு ரது நட்பை விடாதொழிக; அறிவொழுக்கங்களிற் குற்றமற்றாரது கேண் மையை மறவாதொழிக, எ-று.

கேண்மை-கேளாந்தன்மை. இம்மைக் குறுதிகூறுவார் மறுமைக் குறுதி யும் உடன்கூறினார்.

(தே-ப-ரை)—துனபத்துள் - துன்பம்வந்த காலத்தில்; துப்பு ஆயார் - (தனக்கு) உவமியானவரது, நட்பு - சிநேகத்தை, துற வற்க - விடாதிருக்கக்கடவன்; மாசு அற்றார் - (அறிவொழுக்கங் களில்) குற்றமற்றவரது, கேண்மை - உறவாந்தன்மையை, மறவற்க - மறவாதிருக்கக்கடவன்

எ எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

(பரி-ரை.) எ-து,—தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட் பினை, எழுமையினையுடைய தம்மெழுவகைப்பிறப்பினும் நினைப்பர் நல் லோர், எ-று.

எழுமையென்றது வினைப்பயன்தொடரும் எழுபிறப்பினை, அது வினை யால் பதியுட்கணடது. எழுவகைப்பிறப்பு மேலே உரைத்தாம். * விரைவுதோ ன்றத் துடைத்தவ ரன்றோ. நினைத்தலாவது துன்பத்துடைத்தலான் அவர் மாட்டெளதாகிய அன்பு பிறப்புதோறுந் தொடர்ந்து அன்புடையராதல். இவை யிரண்டுபோட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது.

(தே-ப-ரை)—தங்கண் - தம்மிடத்து (உண்டாகிய), விழு மம்-துன்பத்தை, துடைத்தவர்-நீங்கினவரது, நட்பு - சிநேகத்தை, எழுமை - (வினைப்பயன்தொடரும்) எழுமையினையுடைய, எழு பிறப்பும் - (தம்) எழுவகைப்பிறப்பிலும், உள்ளுவர் - (நல்லோர்) நினைப்பார்

அ நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒரு வற்கு அறனன்று; அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன், எ-று.

இரண்டும் ஒருவனுச்செய்யப்பட்ட வழி. மறப்பதும் மறவாததும் வருக் துக் கூறியவாறு.

(தே-ப-ரை)—நன்றி - (ஒருவன்முன்செய்த) நன்மையை, மறப்பது - மறந்துவிடுதல், நன்றுஅன்று - (ஒருவனுக்கு) அற னல்ல; நன்றுஅல்லது - (அவன்செய்த) தீமையை, அன்றே-செய்த பொழுதே, மறப்பது-மறந்துவிடுதல், நன்று-அறமாம்.

கூ. கொன்றன்ன வின்னு செயினு மவர்செப்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—தமக்கு முன்னெரு நன்மைசெய்தவர் பின் கொன்ற லொத்த இன்னுதவற்றைச செய்தாராயினும், அவையெல்லாம அவர்செய்த நன்மையொன்றனையும் நினைக்க இல்லையாம், எ-று.

நினைத்துணை பினைத்துணையாகக் கொள்ளப்படுதலின், அவ்வொன்றுமே அவற்றையெல்லாம கெடுக்குமென்பதாம். இதனுன் நன்றல்லது அன்றே மறக்குந்திறங் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—(தமக்கு முன்னெரு நன்மை செய்தவர்) கொன்றுஅன்ன - (பின்) கொன்றற்போலும், இன்ன - வெறுக்கப் படுமவைகளை, செயினும்-செய்தாராயினும், அவர்செய்த - அவர் கள் செய்த, ஒன்றுநன்று - அந்நன்மையொன்றையும், உள்ள-நினை க்க, கெடும் - (அவையெல்லாம்) இல்லையாம்

கo. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

(பரி-ரை.) எ-து —பெரிய அறங்களைச சிதைத்தார்க்கும் பாவத்தினின் நீங் கும் வாயில் உண்டாம்; ஒருவன் செய்த நன்றியைச சிதைத்த மகனுக்கு அஃ தில்லை, எ-று

பெரிய அறங்களைச சிதைத்தலாவது— * ஆன்முலையறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தபுத்தலும் முதலிய பாதகங்களைச செய் தல். இதனுற் செய்ந்நன்றிகோதலின் கொடுமை கூறப்பட்டது.

(தே-ப-ரை)—எ நன்றி - எந்த அறங்களை [பெரியவறங்களை யென்றபடி], கொன்றார்க்கும் - கெடுத்தவர்க்கும், உய்வு-பாவத்தில்

* ஆன்முலை யறுத்த லறனி லோர்கு - மாணிழை மகளிர் கருச்சிதைத்த தோர்கும்-குரவர்த் தப்பிய கொடுமை யோர்கும்-பருவாய மருங்கிற கழுவாய் முளவே-நிலம்புடை பெயர்வ தாயினுமொருவன செய்தி கொன்றார்க்கு நிய்லென் றறப்பாடின்றே யாயிழை கணவ-புறநானூறு, கூச, கழுவாய பிராயசித்தம.

கஉ-ம் அதி. நடுவுநிலைமை

நீங்கும்வழி, உண்டாம்-உளதாம்; செய்நன்றி-(ஒருவன்) செய்த வுப காரத்தை, கொன்றமகற்கு - கெடுத்த மனிதனுக்கு, உய்வு - அப்பா வத்தில்நீங்கும்வழி, இல்லை-இலது.

கஉ-ம் அதிகாரம்—நடுவுநிலைமை.

அஃதாவது பகை நொதுமல் நண்பென்னும் மூன்றுபகுதியினும் அறத் தின்வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை. இது, நன்றிசெய்தார்மாட்டு அந்நன்றி யினை நினைத்தவழிச் சிதையும்அன்றே, அவ்விடத்துஞ் சிதையலாகாதென் றற்கு, செய்நன்றியறிதலின்பின் வைக்கப்பட்டது.

க. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

(பரி-ரை.) எ-து,—நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஓரதுமே நன்று, பகை நொதுமல் நணபென்னும் பகுதிகளாறும் தன்முறைமையை விடாதொழுகப்பெறின், எ-று.

தகுதியுடையதனைத் தகுதியென்றார். "ஊராளுநர் தேவுகுலம்" என்பது போலப் பகுதியானென்பது ஆனுருபு தோறுமென்பதன் பொருட்டாய் நின் றது. பெறினென்பது அவ்வொழுக்கத் தருமைதோன்ற நின்றது. இதனுன் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—பகுதியால் - (பகைவர் அயலார் சினேகர் என் னும்):பிரிவுதோறும், பாற்பட்டு - (தன்) முறைமைபைவிடாது, ஒழுகப்பெறின் - நடக்கப்பெற்றால், தகுதி எனை ஒன்றே - நடுவு நிலைமையென்று சொல்லப்படும் ஓரறமே, நன்று - நலமுடையது.

உ. செப்ப முடையவ னுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமப் புடைத்து.

(பரி-ரை.) எ-து,—நடுவுநிலைமையை உடையவனது செல்வம் பிறர் செல்வம்போல் அழிவின்றி அவன் வழியினுள்ளார்க்கும் வலியாதலை-உடை த்து, எ-று.

விகாரத்தாற்றெருக்க எச்சவும்மையான், இறக்குந்துணையும் அவன்றனக் கும் ஏமாப்புடைத்தென்பது பெற்றம். அறத்தோடு வருதலின், அன்ன தாயிற்று. தான் இறந்துழி எஞ்சிநிற்பதாகலின், எச்சமென்றார்.

(தே-ப-ரை.)—செப்பம் உடையவன் - நடுவுநிலைமையை யுடை யவனது; ஆக்கம் - செல்வமானது, சிதைவுஇன்றி - (பிறர்செல்வம்

போல்) அழிதலின்றி, எச்சத்திற்கும் - (அவன்) சந்ததியார்க்கும், ஏமாப்பு - உறுதியாதலை, உடைத்து - உடையதாம்

டீ. நன்றே தரினு நடுநிகந்தா மாக்கத்தை
யன்றே பொழிய விடல்.

(பரி-ரை.) எ-து,—நீடுநன்றி நன்மையே பயந்ததாயினும், நடுவு நிற தலே ஒழிதலான் உண்டாகின்ற ஆக்க மதை அப்பொழுதே ஒழிய விடுக, எ-று.

நன்மைபயவாமையின், நன்றே தரினு மென்றார். இதத்தலா னென்பது இகந்தெனத் திரிந்துநின்றது இவை யிரண்டுபாட்டானும் முறையே நடுவு நிலைமையான் வந்த செல்வம் நன்மைபயந்ததலும், னினைசெல்வம் தீமை பயத் தலுங கூறப்பட்டன.

(தெ-ப-ரை.)—நன்றேதரினும்-(தீங்கன்றி) நன்மையேதரினும், நடுவு இகந்த-நடுவு நிலைமைநீங்கலால், ஆம் - உண்டாகின்ற, ஆக் கத்தை - செல்வததை, அன்றே - அப்போதே, ஒழியவிடல்-விடக் கடவன்.

சு. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப படும்

(பரி-ரை.) எ-து,—இவ நடுவுநிலைமையுடையர் இவர் நடுவுநிலைமை இலரென்னும் விசேடம், அவரருடைய நன்மக்களது உண்மையானும் இன் மையானும் அறியப்படும, எ-று.

தக்காரக்கு எசசமுண்டாதலும் தகவிலாாக்கு இல்லையாதலும் ஒருதலை ஆகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின. இதனால் தக் காரையுக் தகவிலாரையும அறியுமாறு கூறப்பட்டது.

(தெ-ப-ரை.) — தக்கார்- இவர், நடுவுநிலைமையை யுடையவர், தகவு இலர்-(இவர், நடுவுநிலைமையை யிலாதவர், என்பது-என் னும் விசேஷம், அவர்அவர்-அவரவருடைய, எசசத்தால்-கல்லபுதல் வசது இருப்பினுலும் இல்லாமையாலும், காணப்படும்-அறியப்படும்.

நி கேடும் பெருக்கமு மில்லல்ல செஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(பரி-ரை.) எ-து,—தீவினையாற்கேடும் கல்வினையாற்பெருக்கமும் யாவர் க்கும் முன்னே அமைந்து கிடந்தன; அவ்வாற்றையறிந்து அவை காரண

மாக மனத்தின்கட் கோடாமையே அறிவான் அமைந்தார்க்கு அழகாவது, எ-று.

அவை காரணமாகக் கோடுதலாவது - அவை இப்பொழுது வருவனவாகக் கருதிக் கேடுவாராமையைக்குறித்தும், பெருக்கம் வருதலைக்குறித்தும் ஒருதலைக்கணிற்றல். அவற்றிற்குக் காரணம் பழவினையே கோடுதலென்று உண்மையுணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை அழகுசெய்தலின், சான்றோர்க் கணியென்றார்.

(தே-ப-ரை)—கேடும் - (தீவினையினாலே) கெடுதலும், பெருக்கமும் - (நல்வினையினாலே) பெருகுதலும், இல்அல்ல-(யாவருக்கும்) இல்லாதவையல்ல [முன்னமே அமைந்து கிடந்தனவென்றபடி]; (அவ்வழியை அறிந்து) நெஞ்சத்து-மனத்திலே, கோடாமை-(அவை காரணமாகச்) சாய்தலில்லாமையே, சான்றோர்க்கு - (அறிவால்) நிறைந்தோர்க்கு, அணி-அழகாம்.

சு. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் தன்னெஞ்சம் நடுவுநிற்றலை ஒழிந்து நடுவல்லவற்றைச செய்ய நினைக்குமாயின், அந்நினைவை யான் கெடக்கடவே னென்றுணரும் உற்பாதமாக அறிக, எ-று.

நினைத்தலும் செய்தலோடொக்குமாகலின், செயினென்றார்.

(தே-ப-ரை.)—தன்நெஞ்சம்-(ஒருவன்) தனதுமனம், நடுவு-நடுவுநிலைமையிலிருந்து, ஒரீஇ - நீங்கி, அல்ல - பகுபாதங்களை, செயின்-செய்ய நினைக்குமாயின், (அந்நினைவை) யான்—நான், கெடுவல்-கெடக்கடவேன், என்பதின்-என்றுணருமுற்பாதமாக, அறிகயெக்கடவன்.

எ. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

(பரி-ரை.) எ-து,—நடுவாக நின்று அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை, வறுமையென்று கருதார் உயர்ந்தோர், எ-று.

கெடுவென்பது - மூதினிலத்தொழிற்பெயர். செல்வமென்று கொள்ளுவரென்பது குறிப்பெச்சம். இவை மூன்றுபாட்டானும் முறையே கேடும் பெருக்கமும கோடுதலான் வாரா என்பதூஉம், கோடுதல் கேட்டிற் கேது வாம் என்பதூஉம், கோடாதவன்தாழ்வு கேடன்றென்பதூஉம், கூறப்பட்டன.

(தே-ப-ரை.)—உலகம்-உயர்ந்தோர், நடுஆக-நடுவாக (நின்று) நன்றிக்கண்-அறத்தின்கண்ணே, தங்கியான்-தங்கினவனது, தாழ்வு-வறுமையை, கெடுஆக-வறுமையாக, வையாது-வையார் [நிஜீயா ரென்றபடி]

அ. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

(பரி-ரை.) எ-து,-முன்னே தான் சமனுக நின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்குந் தூலாம்போல, இலக்கணங்களான் அமைந் ரு ஒருபக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம், எ-று.

உவமைஅடையாகிய சமன்செய்ததூம் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும ஒருபாற்கோடாமையும் உவமைக் கண்ணும், கூட்டிச சான்றோர் சீர்தூக்கலாவது * தொடைவிடைகளாற் கேட்டவற்றை ‡ ஊழான் உள்ளவாறுணர்தலாக ம், ஒருபாற்கோடாமையாவது அவ்வுள்ள வாற்றை மறையாது பகை தொதுமல் நட்பென்னும் மூன்று திறத்தார்க்கும் ஒப்பக்கூறுதலாகவும், உரைக்க. இலக்கணங்களான் அமைதல் இருவழியும் ஏற்பனகொள்க.

(தே-ப-ரை)—சமன்செய்து - (முன்னே தன்னைச்) சமனுகச் செய்து, சீர்தூக்கும்-(பின்னே தன்னிடத்து வைக்கப்பட்ட பார த்தை) அளவுசெய்வதாகிய, கோல்போல் - தூலாக்கோல்போல, அமைந்து - (இலக்கணங்களாலே) நிறைந்து, ஒருபால்-ஒருபக்கத் திலே, கோடாமை - சாயாமையான்து, சான்றோர்க்கு-(அறிவால்) நிறைந்தோருக்கு, அணி-அழகாம்.

கூ. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

(பரி-ரை.) எ - து,—நடுவுநிலைமையாவது சொல்லின்கட் கோடுதலில் லாததாம், அஃதன்னதாவது மனத்தின்கட் கோட்டமின்மையைத் தின்னி தாகப் பெறின், எ-று.

சொல் - ஊழான் அறுத்துச சொல்லுஞ்சொல். காரணம்பற்றி ஒருபாற் கோடாத மனத்தோடு கூடுமாயின், அறநெறிபிறழ்வாறு சொல்லுதல் நடுவு

---

* தொடை-விஞ.

‡ ஊழ்-முறைமை. "தொடைவிடையூழாந் தொடைவிடைதன்னி"—யென்பதனாலே, வாகைப்படலம், அலையமூல்லே, கக.

கஉ-ம் அதி. அடக்கமுடைமை

நிலைமையாம் எனவே, அதனைக் கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவு நிலைமை அன்றென்பது பெறப்பட்டது.

(தே - ப - ரை.)—செப்பம் - நடுவுநிலைமையாவது, சொல் - சொல்லி னிடத்தே, கோட்டம் இல்லது - கோணுத லில்லாத தாகும், (அது அப்படியாவது), உள் - மனத்தினிடத்தே, கோட் டம் இன்மை - கோணுத லில்லாமையை, ஒருதலையா - உறுதி யாக, பெறின் - பெற்றால்

கூ. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

(பரி - ரை.) எ-து,—பிறர்பொருளையும் தம்பொருள்போலப் பேணிச் செய்யின், வாணிகஞ்செய்வார்க்கு நன்றாய வாணிகமாம். எ-று.

பிறவுந் தமபோற் செய்தலாவது - கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்பநாடிச செய்தல். இப்பாட்டிலுள்ள, முன்னைய இரண்டும் அவையத்தாரை நோக்கின, எனையது வாணிகரைநோக்கிற்று, அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறுசெயிறந்தமையின்.

(தெ-ப-ரை)—பிறவும் - பிறர்பொருளையும், தமபோல் - தம் பொருள்போல, பேணி - காத்து, செயின் - செய்வாராயின், (அச் செய்கையானது) வாணிகஞ் செய்வார்க்கு - வர்த்தகஞ் செய் வோர்க்கு, வாணிகம் - நல்ல வாணிகமாம்.

கஉ-ம் அதிகாரம்—அடக்கமுடைமை.

அஃதாவது மெய், மொழி, மனங்கள் தீநெறிக்கட்செல்லாது அடங் குத்லுடையனாதல். அஃது எதிலார்குற்றம்போற் றன்குற்றமுங் காணும் நடுவுநிலைமை யுடையார்காதலின், இது நடுவுநிலைமையின் பின் வைக்கப் பட்டது.

க. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனை அடக்கமாகிய அறம் பின்தேவருலகத் துய்க்கும்; அடங்காமையாகிய பாவம் தன்குதற்கரிய இருளின்கட்செலுத்தும், எ-று.

இருளென்பது ஓர் நரகவிசேடம். *"எல்லாம் பொருளித் பிறந்துவிடும்" என்றதுபோல உய்த்துவிடுமென்பது ஒருசொல்லாய் நின்றது.

(தே - ப - ரை)—அடக்கம் - (ஒருவனை) அடக்கமாகிய அற மானது, அமரருள் - தேவருலகத்தில், உய்க்கும் - கொண்டுபோய் விடும், அடங்காமை - அடங்காமையாகிய பாவமானது, ஆர் இருள் பொறுத்தற்கரிய நரகத்தில், உய்த்துவிடும் - செலுத்திவிடும்.

உ. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு.

(பரி-ரை.) எ-து,—உயிர்கட்கு அடக்கத்தினை மிக்க செல்வமில்லை; ஆக லான், அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு அழியாமற்காக்க, எ-று.

உயிரென்பது யாதியொருமை. அஃது ஈண்டு மக்களுயிர்மேனின்றது, அறிந்தடங்கிப் பயன்கொள்வது அதுவேயாகலின்.

(தே - ப - ரை.)—அடக்கத்தை - அடங்கியிருத்தலே, பொருள் ஆக-(உறுதிப) பொருளாக, காக்க - காத்தற்கடவன், உயிர்க்கு—, அதனின் ஊங்கு - அதனின்மேற்பட்ட, ஆக்கம் - செல்வமானது, இல் - இல்லை, (ஆதலால்).

ஙூ. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

(பரி-ரை.) எ-து,—அடங்குதலே நமக்கு அறிவாவதென்று அறிந்து நெறியானே ஒருவன் அடங்கப்பெறின், அவ்வடக்கம் கல்லோரான் அறியப் பட்டு அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக்கும், எ-று.

இல்வாழ்வானுக்கு அடங்குதெறியாவது மெய்ம்முதன் மூன்றும் தன் யத்தவாதல்.

(தே-ப-ரை)—அறிவு அறிந்து - (அடங்குதலேநமக்கு) அறி வாவதென்று அறிந்து, ஆற்றின்-நல்லவழியால், அடங்கப்பெறின்-ஒருவன்) அடங்கப்பெறுவானைனில், செறிவு - அவ்வடக்கமானது, அறிந்து - (உயர்ந்தோரால்) அறியப்பட்டு, சீர்மை - மேம்பாட்டை, யக்கும் - (அவனுக்குத்) தரும்.

---

*. கல்லிற் பிறகுங் கசாணி கா லி - செல்லிற் பிறக்கு முபயமு - மெல்ல - வரு ம் பிறக்கு மதநெறி யெல்லாம்—பொருளிற பிறாதுவிடும்—மான்மணிகடிகை, எ.

ச. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது

(பரி-ரை.) எ-து,—இல்வாழ்க்கையாகிய தன்னெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி மலையினுயர்ச்சியினும் மிகப்பெரிது, எ-று.

திரியாதடங்குதல் - பொறிகளாற் புலன்களே நுகராநின்றே அடங்குதல். மலை-ஆகுபெயர்.

(தே - ப - ரை.)—நிலையின் - (இல்வாழ்க்கையாகிய தன்) வழியில், திரியாது - (வேறுபடாது நின்று), அடங்கியான் - அடங்கினவனது, தோற்றம்-உயர்ச்சியானது, மலையினும் - மலையுயர்ச்சியினும், மாணப்பெரிது-மிகப்பெரிதாம்.

ஞ. எல்லார்க்கு நன்றும் பணிதலவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வக் தகைத்து.

(பரி-ரை.) எ-து,—பெருமிதம் இன்றி அடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றேயெனினும், அவ்வெல்லாருள்ளும் செல்வமுடையார்க்கே வேறொரு செல்வமாஞ் சிறப்பினை உடைத்து, எ-று.

பெருமிதத்தினைச் செய்யுங்கல்வியுங் குடிப்பிறப்பும் உடையார் அஃ தின்றி அவைதம்மானே அடங்கியவழி அவ்வடக்கம் சிறந்து காட்டாதாகலின், செல்வர்க்கே செல்வக் தகைத்தென்றார். செல்வத்தகைதென்பது மெலிந்துநின்றது. பொதுவென்பானையும் உடம்பட்டெ சிறப்பாதல் கூறியவாறு. இவையெய்துபாட்டானும் பொதுவகையான் அடக்கத்து சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை. —பணிதல் - (பெருமைப்பாடில்லாது) அடங்குதல், எல்லார்க்கும்-பாவருக்கும், நன்று ஆம்-(பொதுப்பட) நன்றாகும், (ஆயினும்), அவருள்ளும்-அவ்வெல்லாருள்ளும், செல்வர்க்கே-செல்வர்களுக்கே, செல்வம் தகைத்து – வேறொரு செல்வமாய்த் தோன்றுஞ் சிறப்பினையுடையதாம்.

ட. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

(பரி-ரை.) எ-து,—ஆமைபோல ஒருவன் ஒருபிறப்பின்கண் ஐம்பொறிகளையும் அடக்கவல்லனாயின், அவ்வன்மை அவனுக்கு எழுபிறப்பின்கண்ணும் அரணுத்லை உடைத்து, எ-று.

ுமை ஐந்துறப்பினையும் இடர்புகுதாமல் அடக்குமாறுபோல, இவ னும் ஐம்பொறிகளையும் பாவம்புகுதாமல் அடக்கவேண்டுமென்பார், ஆமை போலென்றார். ஒருமைக்கட்செய்த வினையின்பயன் எழுமையுந் தொடரு மென்பது இதனுன் அறிக. இதனுன் மெய்யடக்கங்கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—ஒருமையுள்-(ஒருவன்) ஒருபிறப்பின் கண்ணே, ஆமைபோல்-ஆமைபோல, ஐந்து-ஐம்பொறிகளையும், அடக்கல் ஆற்றின்-அடக்கவல்லவனுகில், (அவ்வல்லமை அவனுக்கு), எழு மையும்-ஏழுபிறப்பின்கண்ணும், ஏமாப்பு உடைத்து-காவலாதலை யுடையது.

எ. யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

(பரி-ரை.) எ-து,—தம்மாற் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்க மாட்டாராயினும் நாவொன்றனையுங்காக்க; அதனைக்காவாராயின் சொற் குற்றத்தின்கட்பட்டுத் தாமே துன்புறுவர், எ-று.

யாவென்பது-அஃறிணைப்பன்மைவினுப்பெயர். அஃது ஈண்டு எஞ் ஞாமை உணர்ந்தது. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. சொற்குற்றம்-சொல்லின்கட்டோன்றுகுற்றம். அல்லாப்பர், செம்மாப்பர், என்பன போலச் சோகாப்பரென்பது ஒருசொல்.

(தெ-ப-ரை.)—யா-(காக்கவேண்டுவன) யாவையும், காவார் யினும்-காக்கமாட்டாராயினும், நா-நாவொன்றையும், காக்க-ாக்கக்கடவர்; காவாக்கால்-(அதனைக்) காக்கமாட்டாராயின், சொல்லிழுக்குப்பட்டு-சொற்குற்றத்திலே அகப்பட்டு, சோகாப் பர்-(தாமே) துன்பப்படுவர்.

அ. ஒன்றனுங் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றகா தாகி விடும்.

(பரி-ரை.) எ-து,—தீயவாகிய சொற்களின்பொருள்களாற் பிறர்க்கு ருந்துன்பம் ஒன்றுயினும் ஒருவன் பக்கல் உண்டாவதாயின், அவனுக்குப் றவற்றுலான் உண்டான நன்மை தீதாய்விடும், எ-று.

தீயசொல்லாவன—தீங்குபயக்கும் பொய், குறளை, கடுஞ்சொல்லென் ன. ஒருவன் நல்லவாகச்சொல்லுஞ் சொற்களின்கண்ணே ஒன்றுயினும் தீச்சொற்படும் பொருளினது பயன் பிறர்க்குண்டாவதாயின் என்றுரைப் ாரும் உளர்.

(தே-ப-ரை.)—தீச்சொல் - தீபசொற்களது, பொருள்பயன் - பொருள்களாலே (பிறருக்கு வரும்) பயனைது, ஒன்று ஆனும் - ஒன்றாயினும், உண்டாயின் - (ஒருவனிடத்திலே) உண்டாவ தாயின், கன்று - (அவனுக்குப்பிறவறங்களாலுண்டாகிய) கன்மை யானது, ஆகாதாகிவிடும்-தீதாய்.

ஈ. தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறுதே
ரவினாற் சுட்ட வடு.

(பரி-ரை.) எ-து,—ஒருவனை ஒருவன் தியினாற் சுட்டபுண் மெய்க்கட் கிடப்பினும் மனத்தின்கண் அப்பொழுதேஆறும்; அவ்வாறன்றி வெவ்வுரை யுடையராவினாற் சுட்டவடு அதன்கண்ணும் எஞ்ஞான்றும் ஆறாது, எ-று.

ஆறிப்போதலால் தீயினாற்சுட்டதனைப் புண்ணென்றும், ஆறாதுகிடத்த லால் நாவினாற் சுட்டதனை வடுவென்றுங் கூறினர். தீயும் வெவ்வுரையுஞ் சுடுதற்றொழிலான் ஒக்குமாயினும். ஆறுமையாற் றீயினும் வெவ்வுரைகொடி தென்பது போதரலின், இது குறிப்பான்வந்த வேற்றுமையலங்காரம். இவை மூன்றுபாட்டானும் மொழியடக்கங்கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—தீயினால் - (ஒருவனை பொருவன்) நெருப்பால் சுட்ட புண் - சுட்டபுண்ணானது, (உடம்பினிடத்தே யிருந்தாலும்), உள்-மனத்தினிடத்தே, ஆறும் - (அப்போதே) ஆறும், (அப்படியல் லாமல்) நாவினால் - (தீயசொற்களையுடைய) நாவினாலே, சுட்டவடு - சுட்டவடுவானது, ஆறாது - (அம்மனத்தினிடத்தும்) ஆறாது.

கo. கதங்காத்துங் கற்றடங்க லாற்றுவா ன்செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(பரி-ரை.) எ-து,—மனத்தின்கண் வெகுளிதோன்றுமற் காத்துக் கல்வி உடையனும் அடங்குதலே வல்லவனது செவ்வியை, அறக்கடவுள் பாராநிற் கும், அவனையடையும் நெறியின்கட் சென்று, எ-று.

அடங்குதல்—மனம புறத்துப் பயவாது அறத்தினுள்ளேயே நிற்றல். செவ்வி—தனகுறை கூறுதற்கேற்ற மன மொழி முகங்கள் இனியனுங் காலம். இப்பெற்றியானை அறக் தானே சென்றடையும் என்பதாம். இதனால் மன வடக்கங் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—கதம்-ஏகாபத்தை, காத்து-மனத்திலே தோன் றுமல் காத்து, கற்று - கல்வியுடையவனாகி, அடங்கல் - அடங்கு தலே, ஆற்றுவான் - செய்பவனது, செவ்வி - சமயத்தை, அறம் -

அறக்கடவுளானவன், ஆற்றில் - (அவனைச்சேரும்) வழியில், நுழைந்து - புகுந்து, பார்க்கும்-பாராதிற்பான்.

கசஂம் அதிகாரம்—ஒழுக்கமுடைமை.

அஃதாவது கத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஏதுப்பட்ட ஒழுக்கத்தினை புடையராதல். இது, மெய்ம்மறதலிய அடங்கினர்க்கல்லது முடியாதாகலின், அடக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

ஒத்தம் விழுப்பந் தரலா
லுயிரினு மோம்பப் படும்.

(பரி-ரை.) எ-து,—ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப்பினைத் தருதலான், அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும், எ-று.

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருகலின், பொதுப் படக்கூறினர். சுட்டி வருவிக்கப்பட்டது, அதனுல் அநுஷ்டானம் விழுப்பந்தருவ தாயது ஒழுக்கமென்பது பெற்றாம். ஈண்டு எல்லாப்பொருளினுஞ் சிறந்த தாயினும் ஒழுக்கம்போல விழுப்பந் தராமையின், உயிரினு மோம்பப்படு மென்றார்.

(தே-ப-ரை.)—ஒழுக்கம்-ஆசாரமான தரு, விழுப்பம் - (எல்லாரு ஞ்) சிறப்பை, தரலான் - கொடுத்தலால், ஒழுக்கம் - அவ்வாசார ம், உயிரினும் - உயிரைப்பார்க்கினும் (அதில மேன்மையாக), ஓம் ப்படும் - பாதுகாக்கப்படும்.

உ. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

(பரி-ரை.) எ-து,—ஒழுக்கத்தினை ஒன்றானும் அழிவுபடாமற்பேணி ருந்தியுமாகாக; அறங்கள்பலவற்றையும் ஆராய்ந்து இவற்றுள் இருமைக்குந் ணையாவது யாதென்று மனத்தை ஒருங்கித் தேர்ந்தாலும் துணையாய் முடி து அவ்வொழுக்கமே யாகலான், எ-று.

பரிந்துமென்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. இரையிரண்டோட் ானும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—தெரிந்து-(பலவறங்களையும்) ஆராய்ந்து, (இவற் ள் இருமைக்குந் துணையாவது எதுவென்று) ஓம்பி - (மனத்தை) டக்கி, தேரினும் - அறிந்தாலும், துணை - துணையாய் முடிவது

அஃதை - அவ்வாசாரமே; (ஆதலால்), ஒழுக்கம் - ஆசாரத்தை, ஓம்பி - (ஒன்றாலும் அழிவுபடாமற்) காத்து; பரிந்து - வருந்தியும், காக்க - காவல்செய்யக்கடவன்.

ஈ. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

(பரி-ரை.) எ-து,—எல்லார்க்கும் தத்தம்வருணத்திற்கேற்ற ஒழுக்கம் உடைமை குலனுடைமையாம்; அவ்வொழுக்கத்திற்றவறுதல் அவ்வருணத்திற் றாழ்ந்த வருணமாய்விடும், எ-று.

பிறந்த வருணத்துள் இழிந்தகுலத்தாராயினும் ஒழுக்கம் உடையராக உயர்குலத்தாராவர்; ஆகலின் குடிமையாமென்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறுதற் றாழ்ந்த வருணத்தாராவர் ஆகலின் இழிந்த பிறப்பாய் விடுமென்றுங் கூறினர். உள்வழிப்படுங் குணத்தினும் இல்வழிப்படுங்குற்றம் பெரிதென்றவாறு. பயன் இடையீடின்றி எய்துதலின், அவ்வினைவுபற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனெனவோதப்பட்டன.

(தெ-ப-ரை.)—ஒழுக்கம் உடைமை-(எல்லார்க்கும் தத்தம் வருணத்துக்கு ஏற்ற) ஆசாரமுடைமையானது, குடிமை-குலமுடைமையாம்; இழுக்கம்-(அவ்வாசாரத்தினின்றும்) தவறுதலானது, இழிந்தபிறப்பாய்விடும்-தாழ்ந்த வருணமாய்விடும்

உ. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—கற்ற வேதத்தினை மறந்தானுயினும் அவ்வருணங் கெடாமையின் பின்னும் அஃதோதிக்கொளலாம்; அந்தணனது உயர்ந்தவருணம் தன்னொழுக்கங் குன்றக் கெடும், எ-று.

மறந்தவழி இழிகுலத்தனும் ஆகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான், மறப்பினுமென்றார். பிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின் இஃது ஏனைவருணங்கட்குங் கொள்ளப்படும்.

(தெ-ப-ரை.)—ஒத்து-(கற்ற) வேதத்தை, மறப்பினும்-மறந்தானுயினும், கொளல்ஆகும்-(வருணங் கெடாமையினாலே பின்னும்) ஓதிக்கொள்ளலாம்; பார்ப்பான்-பிராமணனது, பிறப்பு-உயர்ந்தவருணமானது, ஒழுக்கம்குன்ற-(தன்) ஆசாரங்குறைய, கெடும்-கெட்டுப்போம்.

நி அழுக்கா றுடையான்க ணொக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு

(பரி-ரை.) எ ற,—அழுக்கா றுடையான்மாட்டு ஆக்கமில்லாதாற்போல, ழுக்கமில்லாதவன்மாட்டும் உயர்ச்சி யில்லை, எ-று.

வமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லையென் து பெற்றும்; என்னை? * 'கொடுப்பதழுக்காறுப்பான் சுற்றமும்'' ல்லுர்த் னின். உயர்வு-உயர்குலமாதல்.

(தே-ப-ரை)—அழுக்காறு உடையான்கண்-பொறாமையுடை யனிடத்தே, ஆக்கம்போன்று-செல்வமில்லாமைபோல, ஒழுக்கம் லான்கண்-ஆசார மிலனாயனிடத்தே, உயர்வு-உயர்ச்சியானது,

சு ஒழுக்கத்தி னெய்தி யுயர்வோர் மிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து

(பரி-ரை.) எ-து,—செயத்தக்கதுமைதோக்கி ஒழுக்கத்திற் சுருங்காதமன யலியுடையராய; அவ்விழுக்கத்தால் தமக்கிழிகுலமாகிய குறைம் உண்டாம் ழ்மை அறிந்து, எ-று.

ஒழுக்கத்திற்சுருக்கம் அதனையுடையாரைமே லெற்றப்பட்டது. கொண்ட பிரதம் விடாமைபற்றி, உயர்வென்றார்.

(தே-ப-ரை)—இழுக்கத்தின் - (ஆசாரத்தினின்றும்) தவறு தலால், ஏதம்-(இழிகுலம் ஆதலாகிய குற்றம், படுபாக்கு-உண்டா தலை, அறிந்து-தெரிந்து, உரவோர்-மனவலியை யுடையோர், ஒழுக் கத்தி ன்-ஆசாரத்தி ல், ஒல்கார்-தருங்கார்.

எ ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்து பெய்தாப பழி

(பரி-ரை.) எ-து,-எல்லாரும் ஒழுகுதலானே மேம்பாட்டையெய்துவர்; அதனினின்றிழுக்குதலானே தாம எய்துதற்குரிதாதல்லாத பழியை யெய்து வர், எ-று.

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுகுதம்பற்றி உலகம் அடுக்குமென்றுதொள்ளும்ஆகலின், எய்தாப்பழி யெய்துவரென்றார். இவை யைந்து பாட்டானும் ஒழுகம் உள்வழிப்படுங ணமும் இல்வழிப்படுங குற் ழுமை கூறப்பட்டன.

---

* திருக்குறள், ரூசுரு.

(தே-ப-ரை.)—ஒழுக்கத்தின் - (எல்லாரும்) ஆசாரத்தினால்; மேன்மை-மேம்பாட்டை, எய்துவர் - அடைவார்; இழுக்கத்தின்-அதிலிருந்து தவறுதலாலே, எய்தாப்பழி-(தாம்) அடைதற்கு உரித்தல்லாதபழியை, எய்துவர்-அடைவர்.

அஃகன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மெஞ்ற மிடும்பை தரும்.

(பரி-ரை.).) எ-து,--ஒருவனுக்கு நல்லவொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்; தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும், எ-று.

சுன்றிக்கு வித்தாகுமென்றதனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், இடும்பை தருமென்றதனால் நல்லொழுக்கம் இன்பந் தருதலும் பெற்றாம், ஒன்றுரின்றே எனுமதை முடிக்குமாகலின். இதனுற் பின் வீனவு கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—நல் ஒழுக்கம்-ஒருவனுக்கு நல்ல ஆசாரமானது, சுன்றிக்கு-அறத்துக்கு, வித்து ஆகும்-காரணமாய் (இருமைகளிலும்) இன்பத்தைத்தரும், தீஒழுக்கம்-தீயஆசாரமானது, (பாவத்திற்குக் காரணமாய்), என்றும்-இருமைகளிலும், இடும்பை-துன்பத்தை, தரும்-கொடுக்கும்.

கூ. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

(பரி-ரை.) எ-து,—மறந்தும் தீயசொற்களைத் தம்வாயாற் சொல்லுந் தொழில்கள் ஒழுக்கமுடையவர்க்கு முடியா, எ-று.

தீயசொற்களாவன—பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய்முதலியனவும், வருணத்திற்கு உரியஅல்லனவுமாம். அவற்றது பன்மையால் சொல்லுதற் றொழில் பலவாயின. சொல்-சாதியொருமை. சொல்லெனவே அமைந்திருக்க வாயாலென வேண்டாது கூறினர், நல்ல சொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாற்பரியமென்ப.

(தே-ப-ரை.)—வழுக்கியும் - மறந்தும், தீய - தீயசொற்களை, வாயால் சொலல் - தம்வாயினுற் சொல்லுதல், ஒழுக்கம் உடையவர்க்கு- ஆசாரமுடையவர்க்கு, ஒல்லா - முடியாவாம்.

கo. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

(பரி-ரை.) எ-து,—உலகத்தோடு பொருந்த வொழுகுதலைக் கல்லாதார் பலநூல்களையுங் கற்றாராயினும், அறிவிலாதார், எ-று.

உலகத்தோடு பொருந்த வொழுகுதலாவது—உயர்ந்தோர் பலரும் ஒழுகிய ஆற்றான் ஒழுகுதல். அதநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு எலாதன வொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான் அவையும் அடங்க உலகத்தோ டொட்ட என்றும், கல்விக் கப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆகலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்றும் அறிவிலாதாரென்றல கூறினர். ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல். இவை யிரண்டுபோட்டானும் சொல்லானுஞ் செயலானும் வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவாற்றா லொருதுதுக கூறப்பட்டன.

(தே-ப-ரை)—உலகத்தோடு-உயர்ந்தோரோடு, ஒட்ட-பொருந்த, ஒழுகல்-நடத்தலை, கல்லார்-அறியாதார், பல-பலநூல்களையும், கற்றும்-கற்றாராயினும், அறிவிலாதார்-அறிவில்லாதாராவர்.

கடி-ம் அதிகாரம்—பிறனில்விழையாமை

அஃதாவது காம மயக்கத்தால் பிறனுடைய நுல்லாளை விரும்பாமை. இஃது, ஒழுக்கமுடையார் மாட்டே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

க பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

(பரி-ரை.) எ-து,—பிறனுக்குப்பொருளாந் தன்மையுடையாளைக் காதலித்தொழுகுகின்ற அறியாமை, ஞாலத்தின்கண அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந்தறிந்தார்மாட் டில்லை, எ-று.

பிறன்பொருள்-பிறனுடைமை. அறம் பொருளென்பன ஆகுபெயர். செவ்வெண்ணின்தொகை தொக்குநின்றது. இன்பம் ஒன்றையே நோக்கும் இன்ப நூலுடையார இத்தீயொழுக்கத்தையும் * பராயியமென்று கூறவாராகலின், அறம் பொருள் கண்டார்கணில்லென்றார்; எனவே, அப்பேதைமையுடையார்மாட்டு அறமும் பொருளும் இல்லையென்பது பெறப்பட்டது.

(தே-ப-ரை)—பிறன்-பிறனுக்கு, பொருளாள்-உடைமையாற் தன்மையவளை, பெட்டு-இச்சித்து, ஒழுகும்-நடக்கின்ற, பேதை

* பராயியம் - பிறரதுரியது.

மை-அறியாமையானது, ஞாலத்து-பூமியின் கண், அறம்-அறநூலே யும், பொருள்-பொருள்நூலேயும், கண்டார்கண்-ஆராய்ந்தறிந்தவரி டத்தே, இல்-இல்லே.

உ. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(பரி-ரை.) எ-து,—காமம் காரணமாகப் பாவத்தின்கண் நின்றாரெல் லாருள்ளும் பிறனில்லாளைக் காதலித்து அவன் வாயிற்கட்சென்று நின்றார் போலப் பேதையாரில்லே, எ-று.

அறத்தினீக்கப்பட்டமையின், அறன்கடையென்றார். அறன்கடைநின்ற பெண்வழிச்செல்வாரும், வரைவின் மகளிரோடும் இழிகுல மகளிரோடுகூடி இன்ப நுகர்வாரும்போல, அறமும் பொருளும் இழத்தலே யன்றிப் பிறன் கடை நின்றார் அச்சத்தால் தாங்கருதிய இன்பமும் இழக்கின்றாராக லின், பேதையாரில்லென்றார்; எனவே, இன்பமும் இல்லேயென்பது பெறப் பட்டது.

(தே - ப - ரை.)—அறன்கடை - (காமங்காரணமாகப்) பாவத் தில், நின்றாருள் எல்லாம் - நின்றவரெல்லாருள்ளும், பிறன்கடை - பிறனது வாயிலினிடத்தே, நின்றாரின் - (அவன் மனையாளேயிச் சித்து) நின்றவர்போல, பேதையார் - மூடர், இல் - இலர்.

உ. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
தீமை புரிந்தொழுகு வார்.

(பரி-ரை.) எ-து,—தம்மை ஐயுறுதார் இல்லாள்கண்ணே பாவஞ்செய் தலே விரும்பி ஒழுகுவார் உயிருடையரேனும், இறந்தாரேயாவர், எ-று.

அறம் பொருளின்பங்களாகிய பயன் உயிரெய்தானமையின், விளிந்தா ரின் வேறல்லரென்றும், அவர் தீமை புரிந்தொழுகுவது இல்லுடையவரது தெளிவுபற்றியாகலின் தெளிந்தாரில்லென்றும் கூறினர்.

(தே - ப - ரை.)—மன்ற - நிச்சயமாக, தெளிந்தார் - (தம்மை ஐயுறவில்லவரென்று) தெளிந்தவரது, இல் - மனையாளிடத்தே, தீமை - பாவஞ்செய்தலே, புரிந்து - விரும்பி, ஒழுகுவார் - நடப்பவர், (உயி ருடையவரா யிருந்தாலும்) விளிந்தாரின் - செத்தவரில் நின்றும், வேறல்லர் - வேறுகார்.

ச. எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

(பரி-ரை.) எ-து,—எத்துணைப்பெருமை உடையராயினும் ஒருவர்க்கு ாதாய் முடியும், காமமபக்கத்தால் தினையளவுந்தம்பிழையை ஓராது பிற டையை இல்லின்கட்புகுதல், எ-று.

இந்திரன்போல எல்லாப்பெருமையும் இழந்து சிறுமையெய்தல் காக்கி, என்ருமென்றார். * "என்னீ ரறியாதீர்போல விலைகூறி—னின்னீர ல்ல தெங்கைகாய்" என்புழிப்போல உயர்த்தற்கட் பன்மை யொருமை யங்கிற்று. தேரான் பிறனென்பதனைத் தம்மை ஐயுருத் பிறனென்றுரைப் ாருமுளர்.

(தே - ப - ரை.)—தினைத்துணையும் - (காம ாயக்கத்தினுலே) ினையளவும் [சிறிதாயினுமென்றபடி], தேரான் - (தம்பிழையை) னையாமல், பிறன் இல் - பிறனுடைய மனையாளிடத்தே, புகல் - ல்லுதல், எனைத்துணையர் ஆயினும் - எவ்வளவு பெருமையை டையவராயிருந்தும், எள்ளாம் - (அவருக்கு) யாதாய் முடியும்.

நி. எளிதென வில்லிறப்பா னெய்து மெஞ்ஞான்றும்
விளியாது நிற்குந் பழி.

(பரி-ரை.) எ-து.—எய்துதல் எளிதென்று கருதிப் பின்வேறு கரு ாது பிறனில்லின்கண் இறப்பான், மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலைநிற்குங பழிப்பழியினையெய்தும், எ-று.

இல்லின்கண் இறத்தல் - இல்லாள்க ஈ நெறிகடந்து சேறல்.

(தே-ப-ரை.)—எளிது என - இவளைச்சேர்தல்) எளிதென்று னைத்து, இல் - (பிறன்) மனையிடத்தே, இறப்பான் - செல்லு வான், விளியாது - அழியாமல், எ ஞான்றும் - எக்காலமும், நிற் ும் - நிலைநிற்பதாகிய, பழி - (குடிப்) பழியை, எய்தும் - அடை

கூ. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(பரி-ரை.) எ-து,—பிறன் இல்லாள்கண் நெறிகடந்து செல்வானிடத் ப் பகையும் பாவமும் அசசமும் குடிப்பழியும் என்னும் இந்நான்கு குற்ற மும் ஒருகாலும் நீங்காவாம், எ-று.

எனவே, இருமையும் இழத்தல் பெற்றும். இவையாறுபாட்டானும் பிற னில்விழைவான்கட் குற்றம் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—இல் - (பிறன்) மனைவியினிடத்தே, இறப்பான் கண் - செலவுவானிடத்து, பகை பாவம் அச்சம் பழியென நான் கும் - பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியும் என்னும் இந் நான்கு குற்றங்களையும், இகவாஅ - (ஒருபோதும்) நீங்காவாம்.

ஈ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்

(பரி-ரை.) எ-து,—அறனுடைய இயல்போடு கூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவான், பிறனுக்குரிமை பூண்டு அவனுடைய இயலபின்கண்ணே நிற்பாளது பெண்தன்மையை விரும்பாதவன், எ-று.

ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இல்லறஞ் செய்வானெனப் படுவான் அவனே யென்பதாம்.

(தே-ப-ரை.)—அறன் இயலான்-அறமாகிய இயல்போடுகூடி, இல்வாழ்வான் என்பான் - இல்வாழ்வானென்று சொல்லப்படு வான், பிறன்இயலான் - பிறனுடைய வியல்பினை (அவனுக்கு உரி மைபூண்டு) நிறபவளது, பெண்மை - பெண்தன்மையை, நயவாத வன் - விரும்பாதவன்.

அ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனெனறே யான்ற வொழுக்கு.

(பரி-ரை.) எ-து,—பிறன்மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண் தகைமை சால்புடையாருக்கு அறனுமாம், நிரம்பிய வொழுக்கமுமாம், எ-று.

புறப்பகைகளை அடக்கும் ஆணமையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கருமையின். அதனையடக்கிய ஆணமையைப் பேராண்மை யென்றார். ஒன்றேவென்பது எண்ணிடைசொல். செய்தற்கரிய அறனும் ஒழுக்கமும் இதனைச செய்யாமையே பயகுமென்பதாம்.

(தே-ப-ரை.)—பிறன்மனை - பிறனதுமனையாளை நோக்காத உட்கொள்ளாத, பேர்ஆண்மை - பெரிய ஆண்தன்மையான தது, சான் றோர்க்கு - (அறிவால்) நிறைந்தோர்க்கு; அறன் ஒன்றே-தருமம் மாவதொன்றே, ஆன்றவொழுக்கு - நிறைந்தவொழுக்கமுமாம்.

கூ. நலக்குரியார் யாரெனி * னுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

(பரி-ரை.) எ-து,—அச்சந் தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்து எல்லா ன்மைகளும் எய்துதற்குரியா யாவரெனின், பிறனெருவனுக்கு உரிமையா நுடைய தோளைச சேராதா, எ-று.

அகலம், ஆழம், பொருளுடைமை முதலியவற்றுன் அளவிடப்படாமை பின் நாம நீரென்ருர். நலத்திற்கென்பது நலகெனக் குறைத்து நின்றது. ரிசமொல்லீறு திரிந்து நின்றது. இருமையிடமும் நன்மையெய்துவ ரென்ப ரம்.

(தெ-ப-ரை. —நாமநீர் - அச்சந்தருங் கடலாற் சூழப்பட்ட, வைப்பில - பூமியில், நலத்திற்கு - (எல்லா) நன்மைகளையும் பெறு தற்கு, உரியார்-உரிமையையுடையார், யார்எனின் - யாவர்எனின், பிறற்கு - பிறனுக்கு, உரியார் - உரிமையாளவளது, தோள் - தோள்களை. தோயாதார் - சேராதவர்.

கஅ. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

(பரி-ரை) எ-து,—ஒருவன் அறத்தைத் தனக்குரித்தாகச் செய்யாது பாதகங்களைச செய்யுமாயினும், அவனுக்குப் பிறனெல்லைக்கண் நிற்பாளது பெண்மையை விரும்பாமையுடையாயின், அது நன்று எ-று.

இக்குணமே மேறபட்டுத் தோன்றுமென்பதாம. இவைகான்கு பாட்டா லும் பிறனில் விழையாதான்கட் குணங்கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—அறன் - (ஒருவன் அறத்தை, வரையான்-(தன க்கு உரியதாக்) கொள்ளாதவனுகி, அல்ல - பாவங்களை, செயி னும் - செய்தாலும், (அவனுக்குப்) பிறன்வரையாள் - பிறனெல்லை யிலே நிற்பவளது, பெண்மை - பெண்மையை, நயவாமை - விரும் ாமை (உண்டாயின்), நன்று - (அது) நல்லது

கசு-ம் அதிகாரம்—பொறையுடைமை.

அறிவாவது காரணம் பற்றியாதல் மடமையானுதல் ஒருவன் தமக்கு கைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய்யாது பொறுத்தலையுடைய

நாம் என்றது நாம எனத் திரிந்து நின்றது.

ராதல். நெறிஞீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டு மென்றற்கு, இது பிறனில்விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

க. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

(பரி-ரை.) எ-து,—தன்னை அகழ்வாரை வீழாமற்றாங்கும் நிலம்போல, தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாயஅறம், எ-று.

இகழ்தல்—மிகையாயின செய்தலும் சொல்லுதலும். (தே-ப-ரை.)—அகழ்வாரை - (தன்னைத்) தோண்டுவோரை, தாங்கும் - (வீழாமற்) சுமக்கின்ற, நிலம்போல - பூமிபோல, தம்மை - தங்களை, இகழ்வார் - நிந்திப்பவரை, பொறுத்தல் - பொறுத்திருத்தல், தலை - முதன்மையாகிய அறமாம்

உ பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறந்த லதனினு நன்று

(பரி-ரை.) எ-து,—பொறை நன்குகலால், தாமொறுத்தற்கு இயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப் பொறுக்க; அதனை உட்கொள்ளாது அப் பொழுதே மறத்தல் பெறின், அப்பொறையினும் நன்று எ-று.

மிகையென்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப்படுதலின், மறத்தலே அதனினும் நன்றென்றார்.

(தே-ப-ரை.)—இறப்பினை - (ஒருவன்செய்த) மிகையை, என்றும் - தன்னிலொறுத்தற்குக் கூடியகாலத்திலேயும், பொறுத்தல் - பொறுக்கக்கடவன்; மறத்தல் - (அதனைநினையாமல் அப்பொழுதே) மறத்தல் (பெறின்), அதனினும் - அப்பொறுமையினும், நன்று - மிகநல்லது.

ஙு. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்கு வறுமையுள் வைத்து வறுமையாவது விருந்தினரை யேற்றுக்கொள்ளாது நீங்குதல்; அதுபோல, வன்மையுள் வைத்து வன்மையாவது அறிவின்மையான் மிகைசெய்தாரைப் பொறுத்தல், எ-று.

இஃது எதுத்துக்காட்டுவமை. அறனல்லாத விருந்தொரால் பொருளுடைமை ஆகாதவாறுபோல, மடவார்ப்பொறையும் மென்மை ஆகாதே வன்மையாமென்பது கருத்து.

(தே-ப-ரை.)—இன்மையுள் இன்மை - (ஒருவனுக்கு) வறுமை புள் வறுமையாவது, யீ நந்து ஓரால்-விருந்தினரை (ஏற்றுக்கொள் ளாமல்) நீக்குதலாம்; (அதுபோல) வன்மையுள்வன்மை - வல்லமை புள் வல்லமையாவது, மடவார் - அறியாமையினாலே தீங்கு செய்த வரை, பொறை - பொறுத்தல்

ச. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப் படும்.

(பரி-ரை.) எ-து.—ஒருவன் சால்புடைமை தன்கணின்று நீங்காமையை வேண்டுவனாயின், அவனுற் பொறையுடைமை தன்கண அழியாமற் காத் தொழுகப்படும், எ-று.

பொறையுடையாற்கல்லது சால்பில்லையென்பதாயிற்று. இவை கான்கு பாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—நிறைஉடைமை - (ஒருவன்) நிறைவையுடைய னாயிருக்கை, நீங்காமை - (தன்னைவிட்டு) நீங்காமையை, வேண்டின்-வேண்டுவானாயின், (அவனுல்) பொறைஉடைமை - பொறுமை யுடையனாயிருக்கை, போற்றி - அழிபாமற் காத்து, ஒழுகப்படும் - நடக்கப்படும்

ரு. ஒறுத்தாரை பொன்றுக வையாதே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(பரி-ரை.) எ-து,—பிறன் தமக்குத் தீங்குசெய்தவழிப் பொறாது அவனை ஒறுத்தாரை அறிவுடையார் ஒருபொருளாக மனத்துக்கொள்ளார்; அதனைப் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து கொள்வர், எ-று

ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செய்தவனே டொத்தலின், ஒன்றுகவையா ரென்றார். பொதிந்துவைத்தல் - சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத் தல்.

(தே - ப - ரை.)—ஒறுத்தாரை-(பிறன்தமக்குக் தீங்குசெய்த விடத்துப் பொறுமல் அவனைத்) தண்டித்தவரை, ஒன்றுஆக - (அறிவுடையோர்) ஒருபொருளாக, வையார்-மனத்துட்கொள்ளார்; பொறுத்தாரை-(அதனைப்) பொறுத்தவரை; பொன்போல்-பொன் னைப்போல், பொதிந்து-இடைவிடாது, வைப்பர்-மனத்துட்கொள் வார்.

சு. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

(பரி-ரை.) எ-து.—தமக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளையின்பமே; அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியுமளவும் புகழுண்டாம், எ-று.

ஒருநாளையின்பம்—அந்நாளொன்றிலும் கருதியது முடித்தேமெனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், எற்புடை உலகென்னுஞ்சொல் வருவித்துரைக்கப்பட்டது.

(தே-ப-ரை.)—ஒறுத்தார்க்கு - (தமக்குத் தீங்குசெய்தவனைத்) தண்டித்தவர்க்கு (உண்டாவது), ஒருநாளை இன்பம் - அவ்வொரு நாளையின்பமே; பொறுத்தார்க்கு - (அதனைப்) பொறுத்தவர்க்கு, பொன்றுந்துணையும் - உலகம் அழியுமளவும், புகழ் - புகழ் (உண்டாம்.)

ஏ. திறனல்ல தற்பிறர் செய்யினு நோகொரீஇத்
தானல்ல செய்யாமை நன்று.

(பரி-ரை.) எ-து,—செய்யத்தகாத கொடியவற்றைத் தன்கட்பிறர்செய்தாராயினும், அவர்க்கு அதனால வருந்தின்பத்திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று, எ-று.

உம்மை சிறப்பும்மை. தின்பத்திற்கு நோதலாவது-* "உம்மை--யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்" என்றுபரிதல்

(தே-ப-ரை.)—திறன்அல்ல-செய்யத்தகாத கொடியவைகளை, தன்-தன்னிடத்து, பிறர்-மற்றவர், செய்யினும்-செய்தாலும், நோ-(அவருக்கு அதனால்வருவதாகிய) தின்பத்துக்காக, கொந்து-வருந்தி, அறன்அல்ல-அறமல்லாதசெயல்களை, செய்யாமை-செய்யாதிருத்தல், நன்று-(ஒருவனுக்கு) நல்லதாம்.

அ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

(பரி-ரை.) எ-து,—மனச்செருக்கால் தங்கண் தீயவற்றைச்செய்தாரைத் தாம் தம்மூடைய பொறையான் வென்றுவிடுக, எ-று.

---

*தம்மை யிகழ்ந்தசமை ரோம் பொறுப்பதன்றி மற் - றெம்மை யிகழ்ந்த வினைப் பயந்தா - னும்மை - யெரிவாய நிரயத்து வீழ்வ மெலென்று - பரிவதூஉஞ் சான்றோர் கடன் - காமடியார், துறவு.

கசு-ம் அதி. பொறையுடைமை

தாமும் அவர்கண் தீயவற்றைச் செய்து தோலாது பொறையான் அவரின் மேம்பட்டு வெல்கவென்பதாம். இவ்வாறான்குபாட்டானும் பிறர்செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது.

(தெ-ப-ரை.) –மிகுதியால் - மனச்செருக்கினாலே, மிக்கவை - (தம்மிடத்துத்) தீயவைகளை, செய்தாரை-செய்தவரை, தாம்-தாங்கள், தம் தகுதியால் - தமதுபொறுமையினாலே, வென்றுவிடல்-வென்றுவிடக்கடவர்.

கூ. துறந்தாரிற் றூய்மை யுடைய நிறந்தார்வா
யின்னுஞ்சொ னோற்கிற் பவர்.

(பரி-ரை.) எ-து,—இல்வாழ்க்கைக்கண் நின்றேயும் துறந்தார்போலத் தூய்மையுடையார், நெறியைக்கடந்தாவாய் இன்னுஞ்சொல்லைப் பொறுப்பவர், எ-று.

தூய்மை-மனமாசின்மை. வாயென வேண்டாது கூறினார், தீயசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன் இழிபு முடித்தற்கு.

(தெ-ப-ரை.)—இறந்தார்-(நல்வழியைக்) கடந்தவராது, வாய்-வாயிலுண்டாகும், இன்னுஞ்சொல் - வெறுக்கப்படுஞ் சொற்களை, நோற்கிற்பவர் - பொறுப்பவர், துறந்தாரின்- இல்வாழ்க்கையிலேயிருந்தும்) துறந்தார்போல, தூய்மை-பரிசுத்த குணத்தை, உடையர்-உடையவராவார்.

கூ. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னுஞ்சொ னோற்பாரிற் பின்.

(பரி-ரை.) எ-து,—விரதங்களான் ஊணைத்தவிர்ந்து உற்ற நோயைப் பொறுப்பார் எல்லாரினும் பெரியர்; அவர் பெரியராவது தம்மைப் பிறர் சொல்லும் இன்னுஞ்சொல்லைப் பொறுப்பாரிற்பின், எ-று.

பிறர்-அறிவிலாதார். நோலாமைக்கேதுவாகிய இருவகைப்பற்றையும் நின்றே நோற்றலின், இன்னுஞ்சொ னோற்பாரிற்பின்னென்றார். இவையிரண்டுபாட்டானும் பிறர் மிகைக்கச்சொல்லிய பொறுத்தல் கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—உண்ணாது-விரதங்களினாலே) உணவை விட்டு, நோற்பார் - (தம்மைஅடைந்தநோயைப்) பொறுப்பவர், பெரியர்-(எல்லாரினும்) பெரியவராவார்; (அவர் பெரியவராவது) பிறர்-மற்றவர், சொல்லும்-(தம்மைச்) சொல்லும், இன்னுஞ் சொல்-வெறுக்கப்படுஞ்சொற்களை, நோற்பாரின்பின்-பொறுப்பவரிற்பின்.

கஅஅம் அதிகாரம்—அழுக்காறுமை.

இதனுள் அழுக்காறென்பது ஒருசொல். அதற்குப் பொருள் * மேலே உரைத்தாம். அச்சொல் பின் அழுக்காற்றைச செய்யாமையென்னும் பொருள் பட எதிர்மறை ஆகாரமும் மகரஒகாரவிகுதியும் பெற்று அழுக்காறுமையென நின்றது. இப்பொருமையும் பொறைக்கு மறுதலையாகலின், இதனை விலக்கு தற்கு இது பொறையுடைமைபின்பின் வைக்கப்பட்டது.

க. ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் தன்னெஞ்சத்தின்கண் அழுக்கா றுற்றமில்லாத இயல்பினைத் தனக்கோதிய ஒழுக்கநெறியாகக் கொள்க, எ-று.

இயல்பு-அறிவோ டுகூடிய தன்மை. அத்தன்மையும் நன்மைபயத்தலின் ஒழுக்கநெறிபோல உயிரினுமோம்புக என்பதாம்.

(தெ-ப-ரை)—ஒருவன்தன்னெஞ்சத்து - ஒருவன்தன் மனத்தின்கண், அழுக்காறு-பொறுமையாகிய குற்றம், இலாத-இல்லாத, இயல்பு-தன்மையை, ஒழுக்கு-(தனக்குச் சொல்லப்பட்ட) ஒழுக்கத்தினது, ஆறுஆக-வழியாக, கொள்க-கொள்ளக்கடவன்.

உ. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்

(பரி-ரை.) எ-து,—யாவாமாட்டும் அழுகுகாற்றினை றுநீங்குலே ஒருவன் பெறுமாயின், மற்றவன் பெறுஞ் சீரியபேறகளுள் அப்பேற்றினை ஒப்பதில்லை, எ-று.

அழுக்காறு பகைவர் மாட்டும் ஒழியப்பாற் றென்பார், யார்மாட்டும் என்றார். அன்மை - வேறுதல். இவையிரண்டொட்டானும் அழுக்கா றின்மையது குணம் கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—யார்மாட்டும் - யாவரிடத்தும், அழுக்காற்றின்-பொறுமையில்கின்றும், அன்மை - வேறுதலை. பெறின் - (ஒருவன்) பெறுவானாயின், விழுப்பேற்றினை - (மற்றவன்பெறும்) மேலான பேறுகளுள், அஃதை-அப்பேறதனை, ஒப்பது - ஒத்தபேறு, இல்லை-

ங. அறனெக்கம் வேண்டாதா னென்பான் பிறனெக்கம்
பேணுகமுக் கறுப் பான்.

நக்குறள்,

(பரி-ரை.) எ-து,—மறுமைக்கும் இம்மைக்கும் அறமும் செல்வமும் ஆகிய உறுப்புகளைத் தனக்கு வேண்டாதானென்று சொல்லப்படுவான் பிறன் செல்வம் கண்டவழி அதற்கு உவவாது அழுக்காற்றைச் செய்வான், எ-று.

அழுக்கறுத்த லெனினும் அழுக்கா றெனினும் ஒக்கும். அழுக்காறுசெய் யின் தனக்கே எதமாம் என்பதாம்.

(தெ-பரை)—அறன் - (மறுமைக்கு) அறத்தையும், ஆக்கம்- (இம்மைக்குச்) செல்வத்தையும், வேண்டாதான்என்பான் - (தன க்கு) விரும்பாதவனென்று சொல்லப்படுவோன், பிறன் - பிறனது, ஆக்கம் - செல்வத்தை, பேணுது - (கண்டவிடத்து) மகிழாமல், அழுக்கறுப்பான் - பொறுமைப்படுவான்.

சு. அழுக்காற்றி னல்லவை செய்பா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து

(பரி-ரை.) எ-து,—அழுக்காறு எதுவாக அறனல்லவற்றைச் செய்யார் அறிவுடையார்; அத்தீநெறியால் தமக்கிருமையினும் துன்பம் வருகலே அறி ந்து, எ-று.

அறனல்லவையாவன—செல்வம், கல்வி முதலியன உடையார்கண் தீங்கு நினைதலும், சொல்லுதலும், செய்தலுமாம்.

(தெ-ப-ரை)—இழுக்குஆற்றின்-(பொறுமைப்படுவதாகிய) தீய வழியால், ஏதம் - துன்பம், படுபாக்கு - உண்டாதலை, அறிந்து - தெரிந்து, அழுக்காற்றின்-பொறுமையால், அல்லவை-அறம் அல்லா தவைகளை, செய்யார் - (அறிவுடையார்) செய்யார்கள்.

நி. அழுக்கா றுடைபார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

(பரி-ரை.) எ-து,—அழுக்காறு பகைவரை ஒழிந்துங் கேடு பயப்பது ஒன்றுகலின், அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடுபெயத் தற்கு அதுதானே அமையும், எ-று.

அதுவேயென்னும பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது.

(தெ-ப-ரை.)—அழுக்காறு - பொறுமையானது, ஒன்னர்-பகை வரினின்று, வழுக்கியும் - ஒழிக்திருந்தும், கேடீன்பது - கேட் டைத்தருவது, (ஆதலால்); உடையார்க்கு - (அப்பொறுமையை) உடையவர்க்கு, (கேட்டைத்தருதற்குப் பகைவர் வேண்டுவதில்லை) அது - அப்பொறுமையே, சாலும் - போதும்.

சு. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடிப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம் உடுக்கப்படுவதும் உண்ணப்படுவது மின்றிக் கெடும், எ-று.

கொடுப்பதன்கண் அழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள்களைப் பற்றிப் பொறுமைசெய்தல். சுற்றங்கெடுமெனவே, அவன்கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர்பேறு பொறுமை தன்பேற்றையே அன்றித் தன்சுற்றத்தின் பேற்றினையும் இழப்பிக்கு மென்பதாம்.

(தே-ப-ரை)—கொடுப்பது - (ஒருவனால்) பிறர்க்குக்கொடுக்கப்படும் பொருளைக்குறித்து, அழுக்கறுப்பான் - பொறுமைப்படாமலனது, சுற்றம் - உறவானது, உடுப்பதும் - உடுக்கும் உடையும், உண்பதும் - உண்ணும்உணவும், இன்றி - இல்லாமல், கெடும்-அழியும்.

எ. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

(பரி-ரை.) எ-து,—பிறராக்கங் கண்டவழிப் பொறுமையுடையானைத் திருமகள் தானும் பொறுது தன்தவ்வைக்குக் காட்டி நீங்கும், எ-று.

தவ்வை-மூத்தவள்; தவ்வையைக்காட்டியென்பது * "அறிவுடையத்தனவளைக் காட்டென்றலே" என்பதுபோல உருபுமயக்கம். மனத்தைக்கோடித்து அழுக்காறுடையனாயினை யென்றுரைப்பாரும் உளர்.

(தே-ப-ரை.)—அழுக்காறு உடையானை - (பிறர்செல்வங்கண்டவிடத்தில்) பொறுமையுடையவனை, செய்யவள் - திருமகள், அவ்வித்து - (தானும்) பொறுமைப்பட்டு, தவ்வையை - (தன்) தமக்கைக்கு, காட்டி விடும் - காட்டிக்கொடுத்து நீங்குவாள்.

அ. அழுக்கே றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(பரி-ரை.) எ-து,—அழுக்காறென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி தன்னை உடையானை இம்மைக்கண் செல்வத்தைக்கெடுத்து, மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும், எ-று.

---

* கலித்தொகை, மருதம்.—எ.

பண்பிற்குப் பண்பி இல்லேயேனும், தன்னேயாக்கினனே இருமையுங் கெடுத்தற் கொடுமைபற்றி, அழுக்காற்றினேப் பாவியென்றார், கொடியானேப் பாவியென்னும் வழக்குண்மையின். இவையாறுபாட்டானும் அழுக்காறுடைமையது குற்றங கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—அழுக்காறுஎன ஒருபாவி - பொருமையென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவியாளவன், திருச்செற்று-(தன்னே யுடையவனே இம்மையில் அவனது) செல்வத்தைக் கெடுத்து, தீஉழி உய்த்துவிடும் - (மறுமையில்) நரகத்திற் செலுத்திவிடுவான்.

கூ. அவ்வியஞ் செஞ்சுத் தானக்கமுஞ் செவ்வியான்
கேடு நினேக்கப் படும்.

(பரி-ரை.) எ-து,—கோட்டத்தினேப் பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கமும் எனேச செம்மையுடையவனது கேடும் உளவாயின், அவை ஆராயப்படும், எ-று.

கோட்டம்—ரண்டி அழுக்காறு. உளவாயினென்பது எஞ்சிநின்றது. ஆக்கக்கேடுகள் கோட்டமுஞ் செம்மையும் எதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையரால் இதற்கேதுவாகிய பழவினேயாதென்று ஆராயப்படுதலின், நினேக்கப்படுமென்றார்: ✻ "இம்மைசெய்தன யானறி கல்வினே—யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்—திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போக்கது" என நினேக்கப்பட்ட வாறறிக.

(தெ-ப-ரை)—அவ்வியம் கெஞ்சத்தான் - பொருமையுள்ள மனத்தையுடையவனது, ஆக்கமும் - செல்வமும், செவ்வியான் - பொருமையில்லாத மனத்தையுடையவனது, கேடும் - வறுமையும், (உண்டாஞல்) நினேக்கப்படும் - (அவை) ஆராயப்படும்.

கo. அழுக்கற் றகன்றாரு மில்லே யஃதிலார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

(பரி-ரை.) எ-து,—அழுக்காற்றைச செய்து பெரியராயினரும் இல்லே; அச்செயலிலாதார் பெருக்கத்தினின்றினரும் இல்லே, எ-று.

இவை யிரண்டுபோட்டானும் கேடும் ஆக்கமும் வருதற் கேது ஒருங்கு கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—அழுக்கற்று - பொருமைப்பட்டு, அகன்றாரும்- பெருகினவரும், இல்லே - இலர்; அஃதி இலார் - அச்செயலில்லாத வரும், பெருக்கத்தின் - பெருக்கத்திலிருந்து, தீர்ந்தாரும் - நீங்கின வரும், இல் - இலர்.

✻ மெய்ப்பிகாரம், அடைக்கலச்சாதை, கூ—கூக.

கசம் அதிகாரம்—வெஃகாமை.

அஃதாவது பிறர்க்குரிய பொருளை வௌவக் கருதாமை. பிறருடைமை கண்டவழிப் பொறுமையே அன்றி அதனைத் தான் வௌவக் கருதுதலும் குற்றமென்றற்கு, இஃது அழுக்காறாமையின் பின் வைக்கப்பட்டது.

க. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(பரி-ரை.) எ-து,—பிறர்க்குரியன கோடல் நமக்கு அறன் அன்றென்னும் நடுவுநிலைமை இன்றி அவர் நன்பொருளை ஒருவன் வெஃகுமாயின், அவ் வெஃகுதல் அவன்குடியைக் கெடச்செய்து, பலகுற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும், எ-று.

குடியை வளரச்செய்து பலநன்மையும் பயக்கும் இயல்புபற்றி, வெஃகினென்பார், நன்பொருள் வெஃகினென்றார். பொன்றுவென்பது பொன்றியெனத் திரிந்து நின்றது; செய்தென்பது சொல்லெசசம்.

(தெ-ப-ரை.)—நடுவு இன்றி-(பிறர்க்குரிய பொருளைக் கொள்ளுதல் நமக்கு அறமல்லவென்னும்) நடுவுநிலைமை யில்லாமல், நல் பொருள் - (அவரது) நல்லபொருளை, வெஃகின் - (அபகரித்தற்கு) விரும்பின், (அவ் விருப்பு) குடிபொன்றி - (அவன்) குடியைக் கெடித்து, குற்றமும் - பலகுற்றங்களையும், ஆங்கே - அப்போதே, தரும் – (அவனுக்குக்) கொடுக்கும்.

உ. படுபயன் வெஃகிப் பழிப்படிவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

(பரி-ரை.) எ-து,—பிறர்பொருளை வௌவிஞல் தமக்கு வரும் பயனை விரும்பி, அது வௌவுதற்குப் பழியின்கண்ணே படுஞ்செயல்களைச் செய்யார், நடுவுநிலைமையன்மையை அஞ்சுபவர், எ-று.

நடுவு-ஒருவன்பொருட்குப் பிறன் உரியன் அல்லனென்னும் நடுவு.

(தெ-ப-ரை.)—நடுவு இன்மை-(ஒருவன் பொருளுக்கு பிறன் உரியவன் அல்லனென்னும்) நடுவுநிலையல்லாமைக்கு, நாணுபவர்-அஞ்சுவோர், (பிறர்பொருளை அபகரிப்பதினாலே), படுபயன்-(தம

* குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும், குடிமடிந்து குற்றம் பெருகும், ; யின்பம் பயக்கும் எனபுழிப் பொன்றுவிதை, மடிவிதை, நீக்குவிந்து எனற்பாலன பிறவினைப் பொருளுணர்த்தும் விவ்விகுதி தொக்கு, பொன்றி, மடிந்து, நீங்கி என நின்றனவெனக் கொண்டார் தொல்காப்பியச் சூத்திரவிருத்திகாரர். இங்ஙனம் யாவரை னாரும் அக்கூற்ப்பாவிதனிச்சென்பர்.

ஞ) வரும்பயனே, வெஃகி-விரும்பி, பழிபடவ-பழியினிடத்தே பொருந்துஞ்செயல்களே, செய்யார்-செய்யார்கள்.

ங. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(பரி - ரை.) எ-து.—பிறர்பால் வெளவிய பொருளால் தாம் எய்தும் லையில்லாத இன்பத்தை விரும்பி, அவர்மாட்டு அறனல்லாத செயல்களேச் செய்யார், அறத்தான் வரும் நிலையுடைய இன்பத்தைக் காகலிப்பவர், எ-று.

பாவத்தான் வருகலின் அப்பொழுதே அழியுமென்பார், சிற்றின்பமென் ார். மற்றையின்பமென்பது மற்றின்பமென கின்றது.

(தே-ப-ரை)—மற்றை இன்பம்-நிலையுடைய பேரின்பத்தை, வேண்டுபவர்-இச்சிப்பவர், சிறு இன்பம்-(பிறரிடத்தே அபகரிக் ப்பட்ட பொருளினுலே தாம் அடைவதாகிய நிலையில்லாத) அற்ப ரின்பத்தை, வெஃகி-விரும்பி, அறன்அல்ல-அறமல்லாத செயல்களே, செய்யார்-(அவரிடத்தே) செய்யார்கள்.

ச. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(பரி-ரை.) எ-து,—யாம் வறிய மென்று கருதி அது தீர்தற்பொருட் ப் பிறர்பொருளே விரும்புதல்செய்யார். ஐம்புலன்களேயும் வென்ற குற்ற ில்லாத காட்சியினேயுடையார், எ-று.

வெல்லுதல்-பாவநெறிகட் செல்ல விடாமை. புலன்வென்ற புன்மை ில் காட்சியவர்க்கு வறுமையின்மையின், வெஃகுதலும இல்லையாயிற்று. புன் மையில் காட்சி-பொருள்களேத் திரிபின்றியுணர்தல்.

(தே-ப ரை)—புலம்வென்ற - ஐம்புலன்களேயும் வென்ற, புன் மையில்-குற்றமில்லாத, காட்சியவர் - அறிவையுடையவர், இலம் ன்று-வறியேம் என்று நினேத்து, வெஃகுதல்செய்யார்- அதுதீர் ற்பொருட்டுப் பிறர்பொருளே விரும்புதல் செய்யார்.

ஞ. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

(பரி-ரை.) எ-து,—நுண்ணிதாய் எல்லாநூல்களினும் சென்ற தம்மறிவு ன்னபயத்ததாம், பொருளே விரும்பி யாவர்மாட்டும் அறிவோடொடாத சயல்களே அறிவுடையார் செவ்வாயின், எ-று.

யார்மாட்டும் வெறிய செய்தலாவது தக்கார்மாட்டும் தகாதார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமையாகலின், அறிவென்னு மென்றார்.

(தே-ப-ரை.)—வெஃகி-(பொருளை) விரும்பி, யார் மாட்டும்-யாவரிடத்தும், வெறிய - அறிவோடு பொருந்தாத செயல்களை, செயின் - (அறிவுடையோர்) செய்வாராயின், அஃகி - நுட்பமான தாகி, அகன்ற-எல்லா (நூல்களிலும் சென்று) விரிந்த, அறிவு-அறிவானது, என்னாம்-என்னபயனை யுடையதாம்.

சு. அருள்வெஃகி யாற்றின்க ணின்றன் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்

(பரி-ரை.) எ-து,—அருளாகிய அறத்தை விரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்கண் நின்றவன் பிறர் பொருளை அவாவி அதனை வருவிக்கும் குற்றநெறிகளை எண்ணக் கெடும், எ-று.

இல்லறநெறியால் அறிவு முதிர்ந்து முழுதில்லது துறக்கப்படாமையின், அதனைத் துறவறத்திற்கு ஆறென்றார். கெடுதல்-இரண்டாறமுஞ் சேரவிழத்தல். சூழ்ந்த தீமையானே கெடுமெனவே, செய்தாற்கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது.

(தே-ப-ரை.)—அருள்வெஃகி-அருளாகிய அறத்தை விரும்பி, ஆற்றின்கண் - இல்லறமாகிய) அதன்வழியிலே, நின்றன்-தங்கினவன், பொருள்வெஃகி-பிறர்பொருளைவிரும்பி, பொல்லாத-(அதனை வருவிக்கும்) குற்றவழிகளை, சூழ-எண்ண, கெடும்-கெடுவான்.

எ. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

(பரி-ரை.) எ-து,—பிறர்பொருளை அவாவிக்கொண்டு அதனாலாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக, பின் அதுபவிக்குங்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றுதவில்லை ஆகலான், எ-று.

விளையென்பது முகனிலைத்தொழிற்பெயர். இவையேழுபாட்டானும் வெஃகுதலின் குற்றம் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—வெஃகி - (பிறர்பொருளை) விரும்பிக்கொண்டு, ஆம் - (அதனால்) உண்டாகின்ற, ஆக்கம் - பெருக்கத்தை, வேண்டற்க - வேண்டாதிருக்கக்கடவன், விளையின் - (பின்) அனுபவிக்

கப்படும்போது; பயன் - (அப்பெருக்கத்தின்) பயன், மாண்டற்கு அரிது ஆம்-என்றுகுதலில்லை, (ஆதலால்).

அ. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(பரி-ரை.) எ-து —சுருங்கல் மாலுத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக்காரணம் யாதென்று ஒருவன் ஆராயின், அது பிறன்வேணடுங் கைப் பொருளைத் தான வேண்டாமையாம், எ-று.

அஃகாமை - ஆருபெயர். வெஃகாதான் செல்வம் அஃகாதென்பதா

(தெ-ப-ரை.)—செல்வத்திற்கு - குறைந்து போகாத் தன்மையையுடைய) செல்வத்துக்கு, அஃகாமை - குறையாதிருத்தற்குக் காரணம், யாதுஎனின் - எதுவென்று (ஒருவன்) ஆராயின், (அது) பிறன் - மற்றையான், வேண்டும் - விரும்புவர்; கைபயொருள்-கைப் பொருளை, வெஃகாமை - (தான்) வேண்டாமையாம்.

கூ. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு

(பரி-ரை.) எ-து,—இது அறனென்றறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தான் அடைதற்காகக் கூற்றினை அறிந்து அக்கூற்றினே சென்றடையும், எ-று.

அடைதற்காககூறு—காலமும், இடனும், செவ்வியும் முதலாயின. இவை யிரண்டுபோட்டாலும வெஃகாமையின் குணங்க கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—அறன்அறிந்து - (இது) அறனென்றறிந்து, வெஃகா-(பிறர்பொருளை) விரும்பாத, அறிவுடையார்-அறிவுடையாரை திரு - திருமகள், திறன்அறிந்து - (தான் சேர்தற்காம்) திறத்தை அறிந்து, ஆங்கே - அத்திறத்தினாலே, சேரும்-சேர்வாள்.

கo. இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

(பரி-ரை.) எ-து,—பின் விளைவதறியாது ஒருவன் பிறன்பொருளை வௌவக் கருதின், அக்கருத்து அவனுக்கு இறுதியைப் பயக்கும்; அப்பொருளே வேண்டாமையென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும், எ-று.

பகையும் பாவமும் பெருக்கலின் இறலீனுமென்றும், அப்பொருளே வேண்டி உழல்வோர் யாவரையுங் கீழ்ப்படுத்தலின் விறலீனுமென்றும் கூறினர். செருக்கு-ஆகுபெயர். இதனால் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

(தெ-ப-ரை.)—எண்ணுது - (ஒருவன் பின்விளைவதை) எண்ணுமல், வெஃகின் - (பிறன்பொருளை) விரும்புவானாயின், (அவ்விருப்பம்) இறல் - அழிவை, ஈனும் - (அவனுக்குத்) தரும், வேண்டாமைஎன்னும் செருக்கு - (அப்பொருளை) விரும்பாமையென்னுஞ் செல்வமானது, விறல் - வெற்றியை, ஈனும் - தரும்.

கக-ம் அதிகாரம்—புறங்கூறுமை.

அஃதாவது காணுதவழிப் பிறரை இகழ்ந்துரையாமை. மொழிக்குற்றம் மனக்குற்றம் அடியாக வருதலான், இஃது அழுக்காறுமை வெஃகாமைகளின் பின் வைக்கப்பட்டது.

க. அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் அறமென்று சொல்லுவதுஞ் செய்யாத பாவங்களைச் செய்யுமாயினும், பிறனைப் புறங்கூறுனென்று உலகத்தாரால் சொல்லப்படுதல் நன்று, எ-று.

புறங்கூறுமை அக்குற்றங்களான் இழிக்கப்படாது மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—ஒருவன் அறம் கூறுன் - ஒருவன் அறமென்று சொல்லுவதுஞ் செய்யானாகி, அல்ல - அறனல்லாதவைகளை [பாவங்களை], செயினும் - செய்தாலும், புறங்கூறுன் - (பிறனைக் காணுதவிடத்தில்) இகழ்ந்துபேசான், என்றல் - என்று (உலகத்தோரால்) சொல்லப்படுதல், இனிது - நல்லது.

உ. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

(பரி-ரை.) எ-து,—அறனென்பது ஒன்றில்லையென அழித்துச்சொல்லி அதன்மேற் பாவங்களைச் செய்தலினும் தீமையுடைத்து. ஒருவனைக் காணுதவழி இகழ்ந்துரையால் அழித்துச்சொல்லிக் கண்டவழி அவனோடு பொய்த்து நகுதல், எ-று.

உறழ்ச்சி நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல்-ஒளியைக்கோறல்.

(ப - ரை.)—புறன் அழீஇ - ஒருவனைக் காணுதவிடத் திகழ்ந்துபேசி, பொய்த்துநகை-(கண்டவிடத்தவனெடு) பொய்த்து மகிழ்தல், அறன் அழீஇ-அறனென்பதொன்றில்லையென அழித்துப் பேசி, அல்லவைசெய்தலின் - (அதன்மேல்) பாவங்களைச் செய்தலி னும், தீதே-தீமையுடையதே.

கூ. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

(பரி-ரை.) எ-து,—பிறனைக் காணுதவழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி அவற்கினியனாகப் பொய்த்து ஒருவன் உயிர் வாழ்தலின், அது செய்யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும், எ-று.

பின்புறங்கூறிப் பொய்த்தலொழிதலின், சாதல் ஆக்கந்தருமென்றார். ஆக்கம்-அஃதொழிந்தார் மறுமைக்கண் எய்தும் பயன். அறம்-ஆகுபெயர். * தருமென்பது இடவழுவமைதி.

(தே-ப-ரை.)—புறங்கூறி-பிறனைக்காணுதவிடத்தே இகழ்ந்து பேசி, பொய்த்து-கண்டவிடத்தே அவனைப் புகழ்ந்து, உயிர்வாழ் தலின் - (ஒருவன்) உயிர்வாழ்தலினும், சாதல் - (அதுசெய்யாமல்) உயிர்விடுதல், (அவனுக்கு) அறங்கூறும் - தருமநூல்களினாலே சொல்லப்பட்ட, ஆக்கம் தரும்-பயனைத்தரும்.

ச. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
மூன்னின்று பின்னோக்காச் சொல்

(பரி-ரை.) எ-து,—ஒருவன் எதிரேநின்று கண்ணோட்டமறச் சொன் னனாயினும், அவனெதிர் இன்றிப் பின்வருவதற்றத்தை நோக்காத சொல் லைச் சொல்லாதொழிக, எ-று.

பின்-ஆகுபெயர். ‡ சொல்வான்தொழில் சொன்மேலேற்றப்பட்டது. இவை மூன்றுபாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது.

---

* தொல்காப்பியத்துக இனியாகத,தில், "அவற்றுள், தருசொல் லருசொல்லாயிரு னெவியுள்—தன்மை முன்னிலை யாயிரிடத்த" என்னுஞ் சூத்திரத்திற்கு மாருக ஈண்டுப் படர்க்கையிடத்திற்கு வந்தமையின், இடவழுவமைதியாயிற்று.

‡ முன்னின்று பின்னோக்காச்சொல். இது ஒரு பொருளின்வினை மற்றொரு பொரு ளின் வினையானது. பிரயோக விவேகம், நிங்ஙப்படலம், 'மருளறு சுரணம்" என்னும் சூத்-ம் பாட்டிற் காண்க.

(தே-ப-ரை)--கண்ணின்று - (ஒருவனை) எதிரே நின்று, கண் அறத் - தாட்சிணிய மில்லாமல், சொல்லினும் - சொன்னாலும், முன் னின்று - (அவன்) எதிரே இல்லாமல், பின் நோக்காச்சொல் - பின் பிருந் குற்றத்தை நோக்காத சொல்லை, சொல்லற்க-சொல்லாதிருக் க்கடவன்.

நே. - அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும் புன்மையாற் காணப்படும்.

(பரி-ரை.) எ-து,—புறஞ்சொல்லுவான் ஒருவன் அறனே நன்றென்று சொல்லினும், அது தன் மனத்தானுய்ச சொல்லுகின்றானல்ல னென்பது வன் புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையானே அறியப் டும், எ-று.

மனக்கோகலின். அச்சொற்கொள்ளப்படாதென்பதாம்.

(தே-ப-ரை.)—புறங்கூறுவானெருவன் அறம் நன்றென்று ாயினுலேசொல்லினும்) அறஞ்சொல்லும் - அறத்தை அப்படிச் சால்லுதற்கு ஏற்ற, நெஞ்சத்தான் அன்மை - மனத்தையுடையவ ல்லாதவனு யிருக்கையானது, புறஞ்சொல்லும்-அப்புறங்கூறுதற் க் காரணமாகிய, புன்மையால் - (மனப்) புன்மையாலே, காணப் டும் - (அறிவுடையோரால்) அறியப்படும்.

கூ. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந் திறன்தெரிந்து கூறப் படும்

(பரி-ரை.) எ-து,—பிறனெருவன் பழியை அவன்புறத்துக் கூறுமவன், ன்பழி பலவுந் தன்னும் உளையுந்திறமுடையவற்றைத் தெரிந்து அவனுற் றப்படும், எ-று.

புறத்தென்பது அதிகாரத்தாற்பெற்றும். இது வருகின்றவற்றிற்கும் ்கும். திறன்-ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான் அக்கூறி ாற்கு அவ்வளவன்றி அவனிறந்து பட்டு உளையுந்திறத்தனவாகிய பழிகளே டி எதிரே கூறுமாகலின், திறன்தெரிந்து கூறப்படுமென்றார்.

(தே-ப-ரை)—பிறன்பழி-பிறனெருவனதுபழியை, கூறுவான்- வனைக்காணுதவிடத்தே) சொல்லுவோன், தன் பழியுள்ளும்- னது (பல) பழிகளுள்ளும், திறன்-(வருந்தும்) விதமுடையவை

* அறஞ்சொல்லு நெஞ்சதான என்பதனை நெஞ்சோடறஞ் சொல்லானென விகுதி த்துக் கூட்டியும் பிரயோகவிவேகமுளார்.

களோ, தெரிந்து-ஆராய்ந்து, கூறப்படும் - (அவனுலே) சொல்லப்படுவான்.

எ. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்ரு தவர்.

(பரி-ரை.) எ-து,—தம்மை விட்டு நீங்கும்ஆற்ருற் புறங்கூறித் தகுகேளிரையும் பிரியப்பண்ணுவர், கூடி மகிழுமாறு இனியசொற்களோச சொல்லி அயலாரோடு நட்பாடலே அறியாதார், எ-று.

சிறப்பும்மை விகாரத்தாற்ருெக்கது. கேளிரையும் பிரிப்பரென்றதகருத்தான், அயலாரோடுமென்பது வருவிக்துரைக்கப்பட்டது. அறிதல்-தமக்குறுதியென்றறிதல். ‘‘கடியுமிடங்தேற்ருள் சோர்ந்தனள்ளை’’ என்புழிப்போலத் தேற்ருமை தன்வினேயாய் நின்றது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து.

(தெ-ப-ரை.)—நகச்சொல்லி-(கூடி) மகிழும்படி (இனிய சொற்களேச்) சொல்லி, நட்புஆடல்-(அயலாரோடு) சிநேகஞ் செய்தலே, தேற்ருதவர்-(தமக்குஉறுதியென்று) அறியாதவர், பகச்சொல்லி-(தம்மைவிட்டு) நீங்கும்படி புறங்கூறி, கேளிர்-(தமது) சுற்றத்தாரையும், பிரிப்பர்-பிரியப்பண்ணுவர்.

அ. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினு
ரென்னுகொ லேதிலா மாட்டு.

(பரி-ரை.) எ-து,—தம்மொடு செறிந்தாரது குற்றத்தையும் அவர் புறத்துத் தூற்றும் இயல்பினேயுடையார், அயலார்மாட்டுச செய்வது யாது கொல்லோ! எ-று.

தூற்றுதல்-பலரும் அரியப் பரப்புதல். அதனிற் கொடியது பிறிதொன்று காணுமையின், என்னுகொலென்ருர். செய்வதென்பது சொல்லெச்சம். என்னர்கொலென்று பாடமோதி, எவ்வியல்பினரோவென்றுரைப்பாருமுளர்.

(தெ-ப-ரை.)—துன்னியார்-(தம்மோடு) நெருங்கினவரது, குற்றமும்-குற்றத்தையும், தூற்றும்-(அவரைக் காணுத விடத்தே) பரப்புகின்ற, மரபினர்-இயல்பை யுடையவர். ஏதிலார்மாட்டு-அயலாரிடத்து, என்னுகொல்-யாதுதான் செய்யார்

கூ. அறனெக்கி யாற்றுங்கொல் வையம் புறனெஞ்சிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

(பரி-ரை.) எ-து,—பிறர் நீங்கினவளவு பார்த்து அவர்பழித்துரையை உரைப்பானது உடற்பாரத்தை, நிலம் இக்கொடியது பொறுத்தலே எனக்கற மாவதெனக் கருதிப் பொறுக்கின்றதுபோலும், எ-று.

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற்கரி தென்னுங் கருத்தால், அறனேக்கியாற்றுகொ லென்றார். இவை ஐந்துபாட் டானும் புறங்கூறுவார்க் கெய்துங் குற்றங கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—புறன்நோக்கி-பிறர் நீங்கின இடம்பார்த்து, புல் சொல்-(அவரது) பழிப்புச்சொல்லை, உரைப்பான் - சொல்லுவோ னது, பொறை-(உடற்) பாரத்தை, வையப்-பூமியானது, அறன் நோக்கி-(இக்கொடியதைச் சுமந்தமை என னக்கு) அறமாவதென்று , ஆற்றுங்கொல்-சுமக்கின்ற தபோலும்.

கo. எதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

(பரி-ரை.) எ-து,—எதிலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர்குற்றங் ணுமாறுபோலப் புறங்கூறலாகிய தங்குற்றத்தையுங் காணவல்லராயின், வர் நிலேபேறுடைய வுயிர்க்கு வருவதொரு தின்பமுண்டோ, எ-று.

நவேநின்று ஒப்பக்காண்ட லருமைநோக்கிக் காண்கிற்பினென்றும்; ன்டவழியொழிதலிற் பாவம் இன்றும், ஆகவே வரும் பிறவிகளினுந் தின் இல்லே யென்பது நோக்கி உயிர்க்குத் தீதுண்டோ வென்றார. தனுற் புறங்கூற்றொழிதற்கு உபாயங கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—எதிலார்குற்றம்போல்-அயலாரது குற்றத்தைக் ண்பதுபோல், தங்குற்றம்-(அப்புறங்கூறுதலாகிய) தமது குற் றத்தையும், காண்கிற்பின்-காணமாட்டுவாராயின், மன்னும்உயிர்க்கு- வரது) நிலேபெற்ற உயிர்க்கு, தீது - (வருவதொரு) தின்பம், ன்டோ-இல்லே.

உ0-ம் அதிகாரம்—பயனிலசொல்லாமை.

அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல், என வாக்கின்கண் நிகழும் பாவங்களுள், பொய்தீர்த்தார்க்கல்லது ஒருதலையாகக் கடியலாகாமையின், அஃதொழித்து, இல்வாழ்வாரால் கடியப்படும் ஏனைமூன்றனுள், கடுஞ்சொல் இனியவைகூறலாலும், குறளை புறங்கூறுமையாலும், விலக்கி, நின்ற பயனில்சொல் இதனை விலக்குகின்றாராகலின், இது புறங்கூறுமையின்பின் வைக்கப்பட்டது.

க. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(பரி-ரை.) எ-து,—அறிவுடையார் பலருங் கேட்டு வெறுப்பப் பயனில வாகிய சொற்களைச் சொல்லுவான் எல்லாராலும் இகழப்படும், எ-று.

அறிவுடையார் பலரும் வெறுப்பவே ஒழிந்தாரானும் இகழப்படுதலின், எல்லாரு மெள்ளப்படுமென்றார். மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது.

(தே-ப-ரை.)—பல்லார் - (அறிவுடையோர்) பலரும், முனிய - (கேட்டு) வெறுக்க, பயன்இல - பயனில்லாத சொற்களை, சொல்லுவான் - சொல்லுவோன்; எல்லாரும் - எல்லாராலும், எள்ளப்படும் - இகழப்படுவான்.

உ. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

(பரி-ரை.) எ-து,—பயனிலவாகிய சொற்களை அறிவுடையார் பலர் முன்பே ஒருவன் சொல்லுதல் விருப்பமிலவாகிய செயல்களைத் தன்னட்டார் மாட்டுச் செய்தலினும் தீது, எ-று.

விருப்பமில் - வெறுப்பன. இச்சொல் அசசெயலினும் மிகவிகழற்பாற் பயக்குமென்பதாம்.

(தே-ப-ரை)—பல்லார்முன்-(அறிவுடையோர்) பலர்முன்னே பயன்இல - பயனில்லாத சொற்களை; சொல்லல் - (ஒருவன்) சொல்லுதலானது, நட்டார்கண் - (தன்) சுற்றத்தாரிடத்து, பயன்இல - விருப்பமில்லாத செயல்களை, செய்தலின் - செய்தலினும், தீது -

ங. பயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு மூரை.

(பரி-ரை.) எ-து,—பயனிலவாகிய பொருள்களே ஒருவன் விரித்துரைக்கு முரைதானே இவன் நீதியிலனென்பதனை உரைக்கும், எ-று.

உரையால் இவன் நயனிலனென்பது பியலாமென்பார், அதனை உரைமே லேற்றி உரைசொல்லுமென்றார்.

(தெ-ப-ரை.)—பயன் இல - பயனில்லாத பொருள்களை, பாரித்து - விரித்து, உரைக்கும்உரை - (ஒருவன்) சொல்லும் சொல்லானது, நயன்இலன்என்பது - (இவன்) நீதியில்லாதவனென்பதனை, சொல்லும் - அறிவிக்கும்.

ச. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

(பரி-ரை.) எ-து,—பயனெடுபடாப் பண்பில் சொற்களை ஒருவன் பல ரிடைச சொல்லுமாயின், அவை அவர்மாட்டு நீதியோடுபடாவாய், அவனை நற் குணங்களி னீக்கு மெ-ற்.

பண்பு-இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற்குணங்கள். சொல் லுமாபி னென்பதும், அவாமாட்டென்பதும், எசமாக ஒருவிக்கப்பட்டன.

(தெ-ப-ரை.)—பயன்சாரா - பயனெடு பொருந்தாத, பண் பில்சொல் - குணமில்லாத சொற்களை, பல்லார்அகத்து - பலரிட த்தே, (ஒருவன் சொல்லுவானாயின் அவை அவரிடத்தே) நயன் சாரா - நீதியோடு பொருந்தாதவையாகி, நன்மையின் - நற்குணங் களி லிருந்து, நீக்கும் - (அவனை) நீக்கும்

ஞ. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(பரி-ரை.) எ-து,—பயனிலவாகிய சொற்களே இனிய நீர்மையுடையார் சொல்லுவாராயின், அவரது விழுப்பமும் அதனால் வரும் நன்குமதிக்கற் பாடும் உடனே நீங்கும், எ-று.

நீர்மை-நீரின்றான்மை, சொலினென்பது சொல்லாமையை விளக்கிற்று.

(தெ-ப-ரை.)—பயன் இல - பயன் இல்லாதசொற்களை, நீர்மை உடையார் - குலத்தன்மையையுடையவர், சொலின் - சொல்லு வாராயின், சீர்மை - (அவரது) மேம்பாடானது, சிறப்பொடு - (அதனால் வரும்) நன்குமதிக்கப்படுதலுடனே, நீங்கும் - (அவரிடத்திருந்து) நீங்கும்.

கூ. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

(பரி-ரை.) எ-து,—பயனில்லாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லு வானை மகனென்று சொல்லற்க; மக்களுட் பதரென்று சொல்லுக, எ-று.

அல் விகுதி வியங்கோள், முன் எதிர்மறையினும், பின் உடம்பாட்டி னும் வந்தது. அறிவென்னும் உள்ளீடின்மையின், மக்கட்பதடியென்றார். இவை ஆறுபாட்டானும் பயனில்லாதசொற்களைச் சொல்லுதலின் குற்றங் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—பயன் இல்சொல் - பயனில்லாத சொற்களை, பாராட்டுவானை - (பலதரமும்) சொல்லுவானை, மகன்எனல் - மகனென்று சொல்லாதே, மக்கள்பதடி எனல் - மனிதருக்குள்ளே பதரென்று சொல்லக்கடவாய்.

— —

எ. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

(பரி-ரை.) எ-து,—நீதியோடு படாதசொற்களைச் சான்றோர் சொன் னாராயினும், அஃதமையும்; அவர் பயனிலவற்றைச் சொல்லாமைபெறின், அது நன்று, எ-று.

சொல்லினுமென்னவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றி னும் பயனில தீய வன்பதாம்.

(தே-ப-ரை.)—சான்றோர் - அறிவுடையோர்; நயன்இல - நீதியோடு பொருந்தாதசொற்களை, சொல்லினும் - சொன்னாலும், சொல்லுக - சொல்லக்கடவர்; பயன்இல - பயனில்லாத சொற் களை, சொல்லாமை - சொல்லாமை (பெறின்), நன்று - (அது) நன்று.

அ. அரும்பய னுய்க்கு மறிவினோர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

(பரி-ரை.) எ-து,—அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினையு டையார் மிக்க பயனுடையவல்லாத சொற்களைச் சொல்லார், எ-று.

அறிதற்கரிய பயன்களாவன—வீடுபேறும், மேற்கதிச்செலவும் முத லாயின. பெரும்பயனில்லாதவென்னவே, பயன் சிறிதுடையனவும் ஒழிக் கப்பட்டன.

(தே-ப-ரை.)—அரு பயன்-அறிதற்கரிய பயன்களை, ஆயும் - ஆராயவல்ல, அறிஞர் - அறிவுடையார், பெரு பயன் இல் லாதசொல் - மிகுந்த பயனில்லாதசொற்களை, சொல்லார் - சொல் லார்கள்.

கூ. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்

(பரி-ரை.) எ-து,—பயனில் நீங்கிய சொற்களை மறந்துஞ்சொல்லார், மயக்கத்தில் நீங்கிய தூய அறிவினையுடையார். எ-று

தூயவறிவு - மெய்யறிவு. மருடீர்ந்தவென்னும் பெயரெச்சம் காட்சிய வரென்னுஞ குறிப்புப்பெயர்கொண்டது. இவை மூன்றுபாட்டானும் பய னிலசொல்லாமையின் குணங்கூறப்பட்ட

(தே-ப-ரை.)—மருள் தீர்ந்த - மயக்கத்தில் நீங்கிய, மாசு அறு - குற்றமற்ற [பரிசுத்தமாகிபவென்றபடி], காட்சியவர் - அறி வினையுடையோர், பொருள் தீர்ந்த - பயனிலநீங்கிய சொற்களை, பொச்சாந்தும் - மறந்தும், சொல்லார் - சொல்லார்கள்.

கo. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

(பரி-ரை.) எ-து,—சொற்களிற் பயனுடைய சொற்களேச சொல் லுக; சொற்களிற் பயனில்லாத சொற்களேச சொலலாதொழிக, எ-று.

சொல்லினென்பது இருவழியும் மிகையாயினும், சொறபொருட்பின் வரு நிலையென்னும் அணேநோக்கி வந்தது, * "வைகலும் வைகல் வரக்கண டும்" என்பதுபோல, இதனுற சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக் கப்பட்டன.

(தே-ப-ரை.)—சொல்லில் - சொற்களிலே, பயன்உடையர்- பிரயோசனமுடைய சொற்களை, சொல்லுக - சொல்லக்கடவர்; சொல்லில் - சொற்களிலே, பயன் இலாச்சொல் - பிரயோசனமில் லாதசொற்களை, சொல்லற்க - சொல்லாதிருக்கக்கடவர்.

வைகலும வைகல வரகணடு பல்துணரார் - வைகலும வைகல் புறுவர் - வைகலும் வைகறறம் வாழுகாண்மேல வைகுதல் - வைகலே வைகுதுணராதார் - நாலடியார், அறன வலியுறுத்தல.

உக-ம் அதிகாரம்—தீவினையச்சம்.

அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனுள் மெய்யின் கண் நிகழும் பாவங்களெல்லாந் தொகுத்து விலக்குகின்ற ராகலின், இது பயனில் சொல்லாமையின் பின் வைக்கப்பட்டது.

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யெனனுஞ் செருக்கு.

(பரி-ரை.) எ-து,—தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை முன் செய்த தீவினையுடையார் அஞ்சார்; அஃதிலராகிய சீரியர் அஞ்சுவர், எ-று.

தீவினையென்னுஞ் செருக்கெனக * காரியம் காரணமாக உபசரிக்கப் பட்டது. மேற்றொட்டுச் செய்து கைவந்தமையான் அஞ்சாரென்றும், செய் தறியாமையான் அஞ்சுவரென்றும் கூறினர்.

(தெ-ப-ரை.)—தீவினையென்னும் செருக்கு - தீவினையென்று சொல்லப்படுமயக்கத்தை, தீவினையார் - (முன்செய்த) தீவினையுடை யோர், அஞ்சார் - பயப்படார்; விழுமியார் - (அதுஇல்லாத) மேலோர், அஞ்சுவர் - பயப்படுவர்

உ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்

(பரி-ரை.) எ-து,—தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யுந் தீவினை கள் பின் அவ்வினைத்தொழத்தும் துன்பமே பயத்தலான், அத்தன்மைய வாகிய தீவினைகள் ஒருவனுக்குத் தீயினுமஞ்சப்படும், எ-று.

பிறிதொரு காலத்தும் பிறிதொரு தேயத்தும் பிறிதோருடம்பினுஞ் சென்று சுடுதல தீக்கின்மையின், தீயினுமஞ்சப்படுவதாயிற்று.

(தெ-ப-ரை.)—தீயவை - (இன்பத்தின் பொருட்டுச்செய்யும்) தீவினைகள், தீய - (பின்பு) துன்பங்களை, பயத்தலால் - தருதலால், தீயவை - (அப்படிப்பட்ட) தீவினைகள், தீயினும் - தீயினும் அதிக மாக, அஞ்சப்படும் - (ஒருவனால்) அஞ்சப்படும்.

ஊ. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யாவிடல்.

(பரி-ரை.) எ - து,—தமக்குறுதி நாடும் அறிவுகளெல்லாவற்றுள்ளும் தலையாய அறிவென்று சொல்லுவர் நல்லோர், தம்மைச் செறுவார்மாட்டும் தீவினைகளைச் செய்யாது விடுதலை, எ-று.

---

* காரணங் காரியமாதற்கும் காரியங் காரணமாதற்கும் விதிபியோக விவேகம், நிங்குப்படலம், "மருவாறு காரணம்" எனனும் சூசுடம் பாட்டிற் காண்க.

வினைத்தூய்மை - வினைத்தூய்மை என்பது வினைத்தூய்மை என்பது வினைத்தூய்மை என்பது

தன்மை * "உளனு வெண்ணுயினையண்டு" என்பதனுணுமறிக. மற்று-அசை நிலே. இலமென்று பாட மோதுவாரு முளர். பொருளான் வறியனெனக் கருதித் தீயவாவு செய்யாதே; சய்யின், அப்பொருளானேயன்றி நற்குணநற் செய்கைகளானும் வறியனுமென் றுரைப்பாருமுளர்.

(தே-ப-ரை)—இறன் எல்லு-(யார்க்) வறுமை யெ யுடையே னென்று நினேத்து, தீய வை-(அது தீர்தற்பொருட்டுத்) தீவினைகளே, செய்யற்க-(ஒருவன் பிறர்க்கு செய்யா திருக்கக்கடவர், செய் யின் - செய்வானுயின், பெயர்த்து - பின்னர், இறன் ஆகும்-வறு மையை யுடையனுவான்

கூ. தீப்பால நண்பிறர்கட் செய்யற்க சேய்ப்பால
தாய்ப்பட வேண்டா தான.

(பரி-ரை.) எ-து —துன்புசெயயுங் கூறவாகிய பாவங்கள் தன்னேப் பின்வந்து வருத்துதலே மேண்டா வன், தீமைகூற்றவாகிய வினைகளேத் தான பிறாமாடிச் செய்யாதொழிக, எ-று.

செயயின் அப்பாவங்கள் அதிகல ருருகலேயென்பதாம்.

(தே-ப-ரை)—தேய்பபால் - நன்பஞ் செய்யுஞ் பகுதியை யுடைய பாவங்கள், தாயினை அடையவேண்டாதான்-தண்னேப் பின் வந்து வருத்துதலே பிரும் பாதவை, தீப்பால-தீமையாகிய பகுதி யையுடைய வினைகளே, தான் பிறர்கண்-தான் பிறரிடத்தே, செய் யற்க-செய்பாதிருக்கக் கடவன்

எ னேப்பகை யுற்றாரு முய்வர் வினேப்பகை
வீயாது பின்சென் றடும்.

(பரி-ரை.) எ-து —எதனேப் பெரியபகை யுடையாரும் அதனே ஒரு வாற்றுற் றப்புவர்: அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப் புக்குக் கொல்லும், எ-று.

‡ "வீ ரா-துடம்பொடு நின்ற வுயிரு மில்லே" என்பதியும் வீயாமை. நீங்காமைக்கணவந்தது.

(தே-ப-ரை)—எனேப்பகைஉற்றாரும் - எவ்வளவு பெரிய பகை யையுடையவரும், உய்வர்-(அதனேஒருவழியினால்) தப்புவார்; (அப்

கலித்தொகை, குறிஞ்சி—உ உ.
புறநானூறு, ரூரூ.

படியல்லாமல்) வினைப்பகை-தினினைபாகிய பகையானது, வீயாது-நீங்காமல், பின்சென்று-பின்தொடர்ந்து, அடும்-கொல்லும்

அ. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா கடியுறைந் தற்று.

(பரி-ரை.) எ-து,—பிறர்க்குத தீவி னைசெய்தார் தாங்கெடுதல் எத் தன்மைத்தெனின், ஒருவன் நிழல் கெடி நகப்போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கண் தங்கிய தன்மைத்து, எ று.

இவ்வுவமையைத் தன்காலம் வருந்தினையும் புலனுகாது உயிரைப் பற்றி நின்று, அது வந்துழி உருப்பதாய தீவினையைச் செய்தார் பின் அதனைக் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாருமுளர். அஃ தாவது அன்றென்பதற்கு அடியுறைந்த நிழல் தன்னை யீயாதென்னுது வீயாதடி யுறைந்தற் றென்ற பாடமே கரியாயிறறு. மேல் வீயாது பின் சென்றடு மென்றார், ஈண்டு அதனை உவமையான் விளகினார.

(தெ-ப-ரை.)—தீயவை-தீவினைகளை, செய்தார் - (பிறருக்குச்) செய்தவர், கெடுதல்-நாம்) கெடுதல், (எத்தன்மைத் தென்றால்) நிழல-(ஒருவனது) நிழலானது, (கெடுந்தூரம்போயினும்), தன்னை - அவனை, வீயாது-விடாது வந்து, அடி-அடியினிடத்தே, உறைந்தது அற்று-

கூ. தன்னைத்தான் காதல ஞயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்

(பரி-ரை.) எ-து,—ஒருவன், தன்னைத்தான் காதல் செய்தல் உடைய ஞயின், தீவினையாகிய பகுதி எத்துணையுஞ் சிறிதொன்றுயினும் பிறர்மாட் டெ செய்யா தொழிக, எ-று.

கல்வினை, தீவினையென வினைப்பகுதி இரண்டாகலின், தீவினைப்பா லென்றார். பிறர்மாட்டுசெய்த தீவினை தன்மாட்டுத் தீம்பம் பயத்தல் விள க்கினுராகலின், தன்னைத்தான் காதலஞயினென்றார். இவையாறு பாட்டா னும் பிறர்க்குத் தீவினைசெய்யின் தாமதெவெனறென்பது கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—தன்னைதான் காதலன் ஆயின்-(ஒருவன்) தன் னைத்தான் விரும்புத லுடையவனுனால், தீவினைப்பால்-தீவினையாகிய பிரிவினுள், எனைத்து ஒன்றும்-எவ்வளவு சிறிய தொன்றை யாயி னும், துன்னற்க-(பிறரிடத்தே) செய்யாதிருக்கக்கடவன்.

கo. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்

(பரி-ரை.) எ-து,—ஒருவன் செங்நெறிக்கட் செல்லாது கொடுநெறிக் கட்சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச செய்யான்ஆயின், அவனை அரிதா கிய கேட்டையுடைய னென்பதறிக. எ-று.

அருமை-இன்மை. * அருங்கேடனென்பதனை ‡ "சென்று சேர் கல்லாப் புள்ள புள்ளி லென்றூழ் வியன்குளம்" என்பதுபோலக்கொள்க. ஓடி என்னும் வினையெச்சம் செய்யானென்னும் எதிர்மறைவினையுட் செய்தலோடு முடிந்தது. இதனால் தீவினைசெயயாதவன் கேடிலனென்பது கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—மருங்குஓடி - (ஓநவள்) நலல வழிபிற்போகா மல் கெட்ட வழியிற்போய், தீவினை-தீவினைகளை, செய்யான்எனின்- (பிரமிடத்தே) செய்யாளையின், அருங்கேடன் என்பது - (அவன்) கேட்டை அருமையாக வுடையவ னென்பதை[கேட்டை யுடையவ னல்லன் என்றபடி], அறிக - அறியக்கடவர்.

உஉ-ம் அதிகாரம்—ஒப்புரவறிதல்.

அஃதாவது உலகநடையினை யறிந்து செய்தல். உலக நடை வேதநடை போல அறநூல்களுள் கூறப்படுவதன்றித்தாமேஅறிந்து செய்யுந்தன்மைத் தாகலின், ஒப்புரவறிதலென்றார். மேல் மன மொழி மெய்களால் தவிரத்தகு வன கூறினார, இனிச்செய்யத் தகுவனவற்றுள் எஞ்சின்றன கூறுகின்றா ராகலின், இது தீவினையசசதின்பின் வைக்கப்பட்டது.

க. வானம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னுறுங் கொல்லோ வுலகு

(பரி-ரை.) எ-து,—நமக்கு நீர் உதவுகின்ற மேகங்களினிடத்து உயிர் கள் என்னகைம்மாறு செய்யாகின்றன. ஆகலான், அம்மேகங்கள்போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் அம்மாறு நோக்குவனஅல்ல, எ-று.

என்னுற்றுமென்ற வினா யாதும் ஆற்று என்பது தோன்ற நிற்றலின், அது வருவித்துரைக்கப்படும். தவிருந்தன்மைய அல்ல என்பது கடப்பா டென்னும் பெயராலே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவன மேலேற்றினர்.

அ காணாழி, சுஉ.

‡ அருங்கே ன் என்பதனைக் கேடரியனென விகுதி பிரித்துக ட்டியோ பிரயோக விவேகநூலார.

(தே-ப-ரை.)—உலகு - உயிர்களானவை, மாரிமாட்டு - (தடக்கு நீருகவுகின்ற) மேகங்களிடத்து, என்-என்ன பிரதியுபகாரத்தை ஆற்றும் - செய்தவருகின்றன [ஒன்றும் செய்கின்றனவில்லையென்ற படி;] (ஆதலால்) கடப்பாடு -(அம்மேகங்கள் போல்வார்செய்யும்) உபகாரங்களும், கைம்மாறு - பிரதியுபகாரங்களும், வேண்டாவிரும் புவனவல்ல

உ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(பரி-ரை.) எ-து —தகுதியை யுடையார்க்காயின் மூபதலேசஞ்செய்து ஈட்டிய பொருள் முழுதும் ஒப்புரவுசெயதற் பயத்தவாம், எ-று.

பிறாக்குபகாரர் போலத் தாமே உண்டற்பொருட்டும் வைத்திழத்தற் பொருட்டுமன்றென்பது கருத்து.

(தே-ப-ரை —தக்கார்க்கு - தகுதியுடையவர்க்கு ஆபின், தாள் ஆற்றி - முயற்சி செய்து, தந்த - சம்பாதிக்கப்பட்ட, பொருள் எல்லாம் - பொருள் முழுவதும், வேளாண்மை-உபகாரத்தை, செய்தல் நட்டு - செய்தலாகிய பயனுடையனவாம்

உ. புத்தேள் ஞாலத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற

(பரி-ரை) எ-து,—தேவருலகத்தும் இவ்வுலகத்தும் ஒப்புரவுபோல நல்லன பிறசெய்கோப் பெறுதலரிது, எ-று.

ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒருதன்மைய ராதலின் புத்தேளுலகத்து அரிதாயிற்று: யாவர்க்கும் ஒப்பது இதுபோற் பிறிதொன்று இன்மையின், இவ்வுலகத்து அரிதாயிற்று. பெறற்கரிதென்று பாடமோதிப் பெறுதற்குக் காரண மறிதென் றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது

(தே-ப-ரை.)—புத்தேள் உலகத்தும் - தேவருலகத்திலும், ஈண்டும் - இவ்வுலகத்திலும், ஒப்புரவின் - உபகாரம்போல, நல்ல - நல்லவையாகிய, பிற - வேறுசெயல்களை, பெறல் - பெறுதல், அரிது அரிதாம்

ச. ஒத்த குறிவா ளுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

உஉ-ம் அதி. ஒப்புரவறிதல்

(பரி-ரை.) எ-து,—உயிரோடு கூடிவாழ்வானுவான் உலக நடையினை அறிந்து செய்வான; அஃதறிந்து செய்யாதவன் உயிருடையவனே ஆயினும், செத்தாருள் ஒருவனுக்குக் கருதப்படும், எ-று.

உயிரின் அறிவுஞ் செயலுங் காணுமையின், செத்தாருள் வைக்கப்படு மென்றார். இதனால் உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறன் உடைத்தன்றென்பது கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—ஒக்கதகஅறிவான - உலகநடையை அறிந்து செய்பவன், உயிரவாழ்வான் - உயிரோடுகூடி வாழுபவனுவான், மற்றையான் - க்து செய்யாதவன், உயிருடையவனு யிருந்தாலும்) செத்தாருள் - இறந்தவர்களில், வைக்கப்படும்-(ஒருவ னுக) வைக்கப்படுவான் [இனைக்கப்படுவா னென்றபடி.]

நி. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு

(பரி-ரை.) எ-து,—உலகநடையை விருமபிச் செய்யும் பெரிய அறிவினை புடையவனது செல்வம், பிறின்வாழ்வார் தண ணீருணனுங குளம் நீர்நிறைந் தாற்போலும், எ-று.

நிறைதலென்னும இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மே லேற்றப்பட்டது. பாழ்போகாது மெடிதுநின்று எல்லார்க்கும் வேணடுவன தப்பாது உதவு மென்பதாம்.

(தே ப-ரை.)—உல கு - உலகநடையை, அவாம் - விரும்பிச் செய்யும், பேர்அறிவு ஆளன்-பெரிய அறிவினையுடையவன்து, திரு-செல்வம், ஊருணி-ஊரில் வாழ்வார் நீருண்ணுங் குளமான்து, நீர் நிறைந்தது அற்று-நீரினால் நிறைந்ததுபோலும்.

சு. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்

(பரி-ரை) எ-து,—செல்வம் ஒப்புரவுசெய்வான் கண்ணே படுமாயின், அது பயன்படுமரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும், எ-று.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே நயனென் றார்; எல்லார்க்குஞ் எளிதிற் பயன்கொடுக்குமென்பதாம்.

(தெ-ப-ரை.)—செல்வம்டு செல்வமான்து, நயன் உடையான் கண்உபகாரஞ் செய்பவனிடத்தே, படின்-உண்டாகுமாஞல் (அவ்

வுண்டாதல்), ஊர்உள்-ஊர்கடோறும், மரம்-மரத்தினிடத்தே, பயன்-பழமானது, பழுத்தஅற்று-பழுத்தாற்போலும்.

எ. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(பரி-ரை.) எ-து,—செல்வம் ஒப்புரவுசெய்யும் பெரியதகைமையையுடை யாண்கண்ணே படுமாயின், அஃது எல்லாவுறப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை ஒக்கும், எ-று.

தப்புலாவது கோடற்கு அரிய இடங்களில் நின்றுதல், மறைந்து நின்று தல், காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை. தன்குறை நோக்காது எல்லார் வருத்தமும் தீர்க்குமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் கடப் பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—செல்வம் - செல்வமான து, பெருந்தகையான் கண்-(உபகாரஞ்செய்யும்) பெரியதகைமையை யுடையவனிடத்தே, படின்-உண்டாகுமானால், (அச்செல்வமானது) மருந்தாகி - (சகலமூம் வியாதிகளுக்கு மருந்தாய், தப்பா-தப்பாத, மரத்தினஅற்று-மரத்தைஒக்கும்.

அ. இடனில் பருவத்து மொப்புரலிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(பரி-ரை.) எ-து,—செல்வம சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார், தாம்செய்யத தகுவனவற்றை அறிந்த இயற்கை அறிவுடையார், எ-று.

பிறவெல்லாம் ஒழியினும, இஃதொழியாரென்பதாம்.

(தே-ப-ரை.)—கடன்-(தாம்செய்யத்தகுவனவாகிய) முறைமை களை, அறி - அறிந்த, காட்சிவர் - இயற்கை யறிவையுடையவர், இடன் இல் பருவத்தும்-செல்வஞ்சுருங்கிய காலத்திலும், ஒப்புரவிற்கு-உபகாரஞ்செய்வதற்கு, ஒல்கார் - தளரார்.

கூ. நயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

(பரி-ரை.) எ-து,—ஒப்புரவு செய்தலையுடையான் நல்கூர்ந்தானுதலா லது, தவிராது செய்யும் நீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செய்யப் பெறாது வருந்துகின்ற இயல்பாம், எ-று.

தான் நுகர்வன நுகரப்பெறுமை அன்றென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் வறுமையான் ஒப்புரவொழித்தற் பாற்று அன்றென்பது கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—நயன் உடையான்-உபகாரஞ் செய்தலையுடையவன், நல்கூர்ந்தான் ஆதல்-வறுமைப்பட்டவனாகுதலாவது, செய்யும்-(ஒழியாமற்) செய்யும், நீர-தன்மையை யுடைய அவ்வுபகாரங்களை செய்யாத-செய்யப்பெறாமல். அமைகலா ஆறு-வருந்துகின்ற இயல்

60. ஒப்புரவி னல்வரும் கேடெனி னஞ்தொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

(பரி-ரை) எ-து,—ஒப்புரவுசெய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பா ருளராயின், அக்கேடு தன்னை விற்றாயினு கொள்ளுந் தகுதியை யுடைத்து, எ-று.

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொருபொருள் இல்லையன்றே இஃதா யின் அதனுஞ் செய்யப்படுமென்றது, புகழ்பயத்தல்நோக்கி. இதனால் ஒப்புர வினுற் கெடுவது கேடு அன்றென்பது கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—ஒப்புரவினால்-உபகாரஞ் செய்தலினாலே, கேடு வரும்எனின் - (ஒருவனுக்குப்பொருட்) கேடுவருமென்பவருண்டா யின், அஃது-அக்கேடானது, ஒருவன் விற்று-ஒருவன்-(தன்னை)விற் றாயினும், கொள்ளத்தக்கதுடைத்து-வாங்குந்தகுதியை யுடையதாம்.

உரை-ம் அதிகாரம்—ஈகை.

அஃதாவது வறியராய் எதிரூர்க்கு மாற்றுதுகொடுத்தல். இது மறுமை நோக்கியதாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

க. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(பரி-ரை.) எ-து,—ஒருபொருளும் இல்லாதார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது, அஃதொழிந்த எல் லாக்கொடையும் குறியெதிர்ப்பை கொடுக்கும் நீர்மையையுடைத்து, எ-று.

ஒழிந்த கொடைகளாவன வறியர் அல்லாதார்க்கு ஒருபயனோக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்துவாங்கி அவ்வாங்கிய வாதேனதிர்கொடுப்பது. நீரது என்புழி அதுவென்பதுபகுதிப்பொருள் விகுதி. பின்னுந் தன்பால் வருதலின், குறியெதிர்ப்பை கொடுக்கு நீரதுடைத்தென் றார். இதனுள் ஈகைய நிலக்கணங் கூறப்பட்டது.

(தேபரை)—வறியார்க்கு - ஒருபொருளு மில்லாதவர்க்கு, ஒன்று-(அவர்வேண்டியது) ஒன்றை, ஈவதே-கொடுத்தலே, ஈகை-(பிறர்க்குக்) கொடுத்தலாகும், மற்று எல்லார்-(அது) மேற்கலாகிய) எல்லார்க்கொடையும், குறிஎதிர்ப்பை-குறிக்கப்பட்ட பின்வரும்பய னெடுகூடிய, ஈரது - தன்மையை, உடைத்து-உடையதாம்.

உ. நலனா றெனினுங் கொளலீது மோவுல
மிலலெனினு மீதலே நன்று.

(பரி-ரை.) எ-து,—ஏதுதல் வீட்டிலகிறக நல்லதெறியென்பார் உளராயி னும், அதுதீது; ஈதுதானகு அவ்வுலகெய்துதல இல்லையென்பா உளராயி னும் ஈதலே நன்று, எ-று.

எனினுமென்பது இருவழியும் அங்ஙனங கூறுவார இன்மை விளக்கி நின்றது. பிரிக்லே ஏகாரத்தால் பிறவறங்களின் ஈதல் சிறந்ததென்பது பெற் றும். நல்லது கூறுவார் நீயதும் உடன்கூறினர.

(தே-பரை.)—நலனல்-இரத்தல், நல்லூறுமெனினும் - (மேலுல கத்துக்கு) நல்லவழி யென்பவர் உளராயினும், தீது-(அது) தீயது; மேல் உலகம்-(கொடுத்தவர்க்கு) அம்மேலுலகத்தை (அடைகல்), இல்லெனினும்-இல்லையென்பவர உளராயினும். ஈதலே-கொடுத்தலே, நன்று-நலமுடையது.

உ. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள

(பரி-ரை.) எ-து,—யான் வறியனெனறு இரப்பான் சொல்லும் இளி வரவைத் தான் பிறர்கட்சொல்லாமையும், அதனைத் தன்கட் சொன்னா ர்க்கு மாறறாது ஈதலும் இவை யிரணடும உளவாவன குடிப்பிறந்தான் கண்ணே, எ-று.

மேல் தீதென்றது ஒழிதற்கும், நன்றென்றது செய்தற்கும் உரியவனை உணர்த்தியவாறு. இனி இலனெனனு மெவ்வமுரையாமை யீதலென்பதற்கு அவ்விளிவரவை ஒருவன் தனகுச சொலவதற்கு முன்னே அவன் குறிப்பறி ந்து கொடுத்தலெனவும், அதனைப் பின்னும் பிறனெருவன்பாற்சென்று அவ னுரையாவகையாற் கொடுத்தலெனவும், யான் இதுபொழுது பொருளுடை யேன் அல்லேனெனக கப்பார்சொல்லும் இளிவரவைசசொல்லாது கொடு த்தலெனவும், உரைப்பாருமுளர். அவர் ஈதலென்பதனைப் பொருட்பன்மை பற்றி வந்த பன்மையாக வுரைப்ப.

(தே - ப - ரை.)—இலன் என்னும்-(யான்) வறியேனென்று (இரப்பவன்) சொல்லும், எவ்வம்-இழிவை, உரையாமை-(பிறரிடத்தே) சொல்லாமையும், (அதனைத் தன்னிடத்தே சென்றவர்க்கு) ஈதல்-(இல்லையென்னுமற்) கொடுத்தலும், (ஆகிய இரண்டும்), குலனுடையான்கண்ணே-நல்லகுடியிற் பிறந்தவனிடத்தே, உள-உண்டு.

ச. இன்னு திரக்கப் படுத லீரந்தவ
ரின்முகங் காணு மளவு.

(பரி - ரை.) எ-து —இரக்கலேயன்றி இரக்கப்படுதலும் இனிதன்று, ஒருபொருளைபிரந்தவர் அது பெற்றதனால் இனிதாகிய அவர் முகங்காணு மளவும், எ-று

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. இரக்கப்படுதல்-இரப்பார்க்கு சவலென்றிருத்தல். அஃதே இன்னுசென்றது *"எல்லாமிரப்பார்க்கொன் றீயாமை" கூடுகொல்லோ என்னும் அசசநோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல்வேண்டுமென்பது பெறப்பட்டது.

(தே-ப-ரை)—இரந்தவர் - (ஒருபொருளை) யாசித்தவர், இன்முகம் - (அதுபெற்றதனால்) இனிதாகிய (அவர்) முகத்தை, காணும் அளவு-பார்க்குமளவும், இரக்கப்படுதல்-(இரத்தலில அன்றி) இரக்கப்படுதலும், இன்னுது-இனிதாகாது

நி. ஆற்றுவா ராற்றல் பணியாற்ற லப்பணியை
மாற்றுவா ராற்றலிற் பின்

(பரி-ரை) எ-து,—ஈவக்தான் வலியார்க்கு வலியாவது, தம்மை உற்ற பணியைப் பொறுத்தல்; அவ்வலிதான் ஆகாயனம் பொறுத்தற்கரிய பணியை ஈகையான் ஒழிப்பாரது வலிக்குப்பின், எ-று.

தாமும் பணித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதார் ஆற்றலின் தாமும் பணியாது பிறரையும் அது தீர்ப்பார் ஆற்றல் நன்றென்பதாம்.

(தே-ப-ரை)—ஆற்றுவார் - (தவத்தால்) வல்லவராவோருக்கு, ஆற்றல்-வல்லமைபாவது, பணிஆற்றல்-(தம்மை அடைந்த) பணியைப் பொறுத்தலாம்; (அவ்வல்லமை தான்), அப்பணியை-அப்படிபொறுத்

---

* கல்லாமை யச்சங் கபடா கொழிசசுஞ்—சொல்லாமை யுள்ளுமோ சோர்வுச்ச-மெல்லா—மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மதநாரிம்—மாணாக்குடிப்பிறாவா—கோடி. யார். குடிப்பிறப்பு.

தற்கரியபசியை, மாற்றுவார் - (கொடையினால்) நீக்குவோரது, ஆற்றலின்பின்-வல்லமைக்குப் பிற்பட்டது.

கூ. அற்ற ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றுன் பொருள்வைப் புழி

(பரி-ரை.) எ-து,—வறியாரது மிக்க பசியை அறநோக்கித் தீர்க்க, பொருள்பெற்று ஞெருவன் அதனைத் தனக்கு உதவ வைக்கும் இடம் அவ் வற மாகலான், எ-று.

எல்லா ரன்மைகளும் அழிய வருவலின், அழி பசியென்றார். அறனேக்கி யென்பது எஞ்சிற்றன்றது. அற்றாரழிபசி தீரத் பொருள் பின்தனக்கேவந்து உதவுமென்பதாம்.

(தெ-ப-ரை.)—அற்றார்-வறியவரது; அழிபசி-மிகுந்த பசியை, ஈதல்-(அறனேக்கித்) தீர்க்கக்கடவன், அஃது-அவ்வறம், ஒருவன் - (ஒபொருள்பெற்றான்) ஒருவன், வைப்புழி - (அப்பொருளைத் தனக்குதவ) வைக்குமிடம், (ஆதலால்).

எ. பாத்தூண் மரீஇ யவினைப் பசியென்னுங்
தீப்பிணி தீண்ட லரிது

(பரி-ரை.) எ-து,—எஞ்ஞான்றும் பகுத்துண்டல் பயின்றவனைப் பசி யென்று சொல்லப்படுந் தீயதோய் தீண்டுதல் இல்லை, எ-று.

இவ்வுடம்பினின்று ஞானவொழுகுகளை அழித்து, அதனால் வரும் உடம்புகட்கும் துன்பஞ் செய்தலின், தீப்பிணியெனப்பட்டது. தனக்கு மருத்துவன் தானுகலின், பசிப்பினி நணுகாதென்பதாம். இவையாறுபாட்டானும் ஈதலின்சிறப்புக் கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—பாத்து - (எங்ஙனும்) பகுத்து, ஊண்-உண்ணுதல். மரீஇயவினை-பழகியவினை, பசியென்னும்-பசியெனப்படும், தீப் பிணி-தீயநோய், தீண்டல்அரிது-தீண்டுதலிலை.

அ. ஈத்தவக்கு மின்ப மறியார்கொ முமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(பரி-ரை.) எ-து,—தாமுடைய பொருளை ஈயாது வைத்துப் பின் இழந்தபோம் அருளிலாதார், வறியாக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர் உவத்தலான் அருளுடையார் எய்தும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ, எ-று.

உவக்குமென்பது காரணத்தின்கண் வந்த பெயரெச்சம்; அஃது இன்ப மென்னுங் காரியப்பெயர் கொண்டது. அறிஞராயின், காமும் அவ்வின் பத்தை எய்துவதல்லது வைத்திழிவாரென்பது கருத்து.

(தே-ப-ரை)—தாம் உடைமை - தங்களுக்குள்ள பொருளை வைத்தா-(கொடாதே) வைத்து, இறக்கும்-(பின்னே) இழக்துவிடும், வன்கணவர்-அருளிலாதவர், ஈந்து-(வறியர்க்கு வேண்டிய பொருள் களைக்) கொடுத்து உயக்கும்-(அவர் படிற்கு கலிஞல் அருளுடையார்) அடையார், இன்பம்-மகிழ்ச்சியை, அறிபவர்கொல்-கண்டறியாரோ.

கூ. இரந்தவி னில்லை மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(பரி-ரை.) எ-து,—பொருட்குறை நிரப்பவேண்டி வறியார்க்கு ஈயாது தாமே தனித்துண்டல், ஒருவர்க்குப் பிறர்பாற்சென்று இரத்தலினும் இன்னாது ஒருதலையாக, எ-று.

பொருட்குறை நிரப்பலாவது ஒரோ எண்களைக் குறித்து அத்துணை ஈட்டுதுமென எட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல். தனித்தல்-பிறரையொழி தல். இரத்தற்குள்ளது அப்பொழுதை யிளிவரவே, பின் னல் குரவில்லை. தமியருண்டற்கு அவை யிரண்டு மூளவாம் ஆகலின், இரத்தலி னின்னாதென்றார். நிரப்பிய வென்பதற்குப் பேடியு வுணவுகளை யென்றுரைப் பாருமுளர்.

(தே-ப-ரை)—நிரப்ப - (பொருளின் குறைவை) நிறைக்க, (வேண்டி), தாமே-தாங்களே, தமியர் - (இரந்தவர்க்குக்கொடாமல்) தனித்தவராகி, உணல் - உண்ணுதலானது, மன்ற - (ஒருவருக்கு) நிச்சயமாக, இரத்தலின் - (பிறரிடத்திற்போய்) இரத்தலை, னன்னாது - தனாபஞ்செய்யாதாம்

கூ. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீதல் லிலையாயக் கடை.

(பரி-ரை.) எ-து,—ஒருவற்குச் சாதல்போல இன்னாதது ஒன்றில்லை; அத்தன்மைத்தாகிய சாதலும், வறியார்க்கொன்றீதல் முடியாதவழி இனிது, எ-று.

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீக்குதலான், இனிதென்றார். இதை மூன்றுபாட்டானும் ஈயாமையின் குற்றம கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—சாதலின் - (ஒருவனுக்கு) இறத்தல் போல, இன்னாதது - துன்பஞ் செய்வதொன்று, இல்லை - இலதே; அது

வும் - அப்படிப்பட்ட இறத்தலும், ஈதல் - (வறியவர்க்குக்) கொடுத்தல், இயையாக்கடை - முடியாத விடத்தில், இனிது - இன்பஞ் செய்வதாம்.

உசும் அதிகாரம்—புகழ்.

அஃதாவது இல்வாழ்க்கைமூலம் ஈகையிறுதிச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதாக்கு இம்மைப்பயனுங்கி இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன் பின்வைக்கப்பட்டது.

க. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்ச்சு.

(பரி-ரை.) எ-து,—வறியார்க்கீக; அதனற்புகழுண்டாகவாழ்க, அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை ஆகலான், எ-று.

இசைபட வாழ்தற்குக் கல்வி, ஆண்மை முதலிய பிற காரணங்களும் உளவேனும், * "உணவின் பண்ட முண்டி முதற்றே" ஆகலின், ஈதல் நிறைந்தென்பதற்கு ஞாபகமாக ஈதலென்றார். உயிர்க்கென்பது, பொதுப்படக் கூறினுமேனும் விலங்குயிர்கட் கேலாமையின், மக்களுயிர்மேனின்றது.

(தே-ப-ரை)—ஈதல்-(வறியவருக்குக்)கொடுக்கப்படவர்; இசைபட - (அதனால்) புகழுண்டாக, வாழ்தல் - வாழக்கடவர்; அது அல்லதை-அப்புகழல்லாமல், உயிர்க்கு - (மக்கள்) உயிர்க்கு, ஊதியம் இல்லை - வேறுபயன் இல்லை, (ஆதலால்)

உ. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.

(பரி-ரை.) எ-து,—உலகத்து ஒன்றரைப்பார் உரைப்பன வெல்லாம் வறுமைமான் இரப்பார்க்கு அவர் வேண்டியதொன்றை ஈவார்கண் நிற்கும் புகழாம், எ-று.

‡ புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும். அவற்றுள், உரைப் பாருரைப்பவையென எல்லார்க்கும் உரிய வழக்கினையே எடுத்தா ராயினும் இனம்பற்றிப் புலவர்க்கே உரிய செய்யுளுங் கொள்ளப்படும்; படவே, பாடுவார் பாவனவெல்லாம் புகழாமென்பதூஉம் பெற்றும். ஈதற்காரணஞ் நிறைத்தமை இதனுள்ளுங் காண்க. இதனைப் பிறர்மேலும் நிற்குமென்பார்தா மெல்

---

* புறநானூறு கஅ. † புறநானூறு, உள.

லாஞ் சொல்லுக. புகழ் ஈவார் மேனிற்குமென் றுரைப்பாருமுளர். அது புகழது சிறப்புநோக்காமையறிக.

(தெ-ப-ரை.)—உரைப்பார்-(உலகத்திலே ஒன்றைச்) சொல் பவரால், உரைபபவைஎல்லாம் - சொலலப்படுமவைக ளெல்லாம், இரப்பார்க்கு - (வறுமையால்) இரப்பவர்க்கு, ஒன்று - (அவர் வேண்டியது) ஒன்றை, ஈவார்மேல - கொடுப்பவரிடத்தே, நிற்கும் புகழ் - நிலைபெற்ற கீர்த்தியாம்

கூ. ஒன்றுவுலகத் தியல்ந்த புகழல்லாற்
பொன்றுது நிற்பதொன் றில்.

(பரி-ரை.) எ-து.—தனகது இணையின்றுக வோஙகிய புகழல்லது உல கத்து இயலாதுநிற்பது பிறிதொனறில்லை, எ-று.

இணையின்றுக வோகுவலாவது கொடுத்தற்கரிய உயிர் உறுப்புப்பொ ருள்களைக் கொடுத்தமைபறறி வருதலால் தன்னெடொப்பதின்றித தானே உயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே (செயயபபடுவதென்பதாம்.) இனி ஒன்றுவென்பதற்கு ஒரு வாத்தையாகச சொல்லினெனவுமை, ஒருத்தியா கப் பொன்றுதுந்றப வெனவும் உரைப்பாருமுளர். இவைமூன்று பாட்டா னும் புகழது சிறப்புக் கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—ஒனறு ஆக - தனக்கு இணையில்லையாக, உயர்ந்த-ஓங்கிய, புகழ அலலால - கீர்த்தியலலாமல், உலகத்து - உலகத்தில, பொனறுது - அழியாமல, நிறபது - நிலைபபது, ஒன்று - வேறொன்று, இல் - இலலை.

கூ. நிலவரை நீள்புக ழாற்றிற புலவரைப
போற்றுது புத்தே ளுலகு.

(பரி-ரை.) எ-து —ஒருவன் நிலவெல்லைக்கணணே பொன்றுது நிற் கும் புகழைச் செய்யுமாயின், புத்தேளுலகம் அவனையல்லது தனணே யெய்தி நின்ற ஞானிகளைப்பேணுது, எ-று.

புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே யெய்தாமையின், புலவரைப்போற்றுதென்றார். அவன் இரண்டிலகும் ஒருங் செய்துதல் * "புலவர்பாடும் புகழுடையோர் வீசும்பின், வலவ னேவா வான வூர்தி, யெய்துப வெண்பதஞ் செய்வினை முடித்து" எனப் பிறாலுஞ் சொல்லப்பட்டது.

---

* புறநானூறு, உஎ.

(தே - ப - ரை)—நிலவுலகை - (ஒருவன்) பூமியின் எல்லையில், நீள்புகழ் - அழியாது நிற்கும்புகழை, ஆற்றின் - செய்வானுயின்; புத்தேள்உலகு - தெய்வலோக மானது (அவனையல்லாமல்), புல வரை - (தன்னை அடைந்திருக்கிற) ஞானிகளை, போற்றுது - பே

நி. நத்தம்போற் கேடு முளதா குஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்ல லரிது.

(பரி-ரை.) எ-து,—புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும் புகழுடம்பு உளதாகும் சாக்காடும சதுரப்பாடுடையாராக கலலது இல்லை, எ-று.

நத்தென்னும் தொழிற்பெயர் விகாதத்தால் நதென்றாய், பின் அம் ஈற்றும் பகுதிபொருள் விகுதிபெற்று, நதமென்றாயிற்று போலென் பது ஈறுமே உரையசை. ஆகுமென்பதனை மூன்றுங்கூட்டி, அரிதென்பதனைத் தனித்தனி கூட்டி உரைக்க. ஆக்கமாகுங்கேடாவது புகழுடம்பு செல்வ மெய்தப் பூதவுடம்பு கல்கூர்தல. உளதாகுஞ்சாக்காடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவாதலில் நிலையின எய்துவார் வித்தகராகலின், விகுகாககல்லாலிதென்றார். இவை யிரண்டுபொட்டானும் புகழுடையார். எய்தும் மேன்மை கூறப்பட்டது.

(தே-ப-ரை)—வித்தகர்க்கு அல்லால - திறமையை உடைய வர்க்கு அல்லாமல், (மற்றவர்க்கு) நத்தம் (ஆகும்) - (புகழுடம் பிற்கும்) பொருக்கமாகும, கேடும் - வறமையும், அரிது - இல்லை; உளதாகும் - (அப்புகழுடம்பு) நிலைபெறுவதாகும், சாக்காடும் - மரணமும், (அரிது - இல்லை).

கூ. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(பரி-ரை.) எ-து —மகளாயப் பிறகின் புகழுக்கேதுவாகிய குணத் தோடு பிறக்க; அகுணம் அல்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங் காய்ப்பிறத்தல் நன்று, எ-று.

புகழ்—ஈண்டு ஆகுபெயர். அஃதிலாரென்றமையின் மக்களாயென்பது உம், மக்களாய்ப் பிறவாமையென்ற அருத்தாபத்தியான் விலகாய்ப்பிறத்த லென்பதுமம், பெற்றும். இகழ்வார் இன்மையின், நன்றென்றார்.

(தே - ப - ரை)—தோன்றின் - (மனிதராய்ப்) பிறந்தால், புக ழொடு - புகழுக்கு ஏதுவாகியகுணத்தோடு, தோன்றுக - பிறக்

கக்கடவர்; அஃது இலார் - அக்குணமிலாதவர், தோன்றலின் - (மனிதராய்ப்) பிறத்தலினும், தோன்றுமை - பிறவாமையான து [விலங்காய்ப்பிறத்தலென்றபடி], நன்று - நலமுடையது

எ. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்

(பரி-ரை.) எ-து,—தமக்குப் புகழுண்டாக வாழமாட்டாதார் அதுபற்றிப் பிறர் இகழ்ந்தவழி இவ்விகழ்ச்சி நம் மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே தம்மை யிகழ்வாரை நோவது என் கருதி, எ-று.

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறரிகழ்தல் ஒருதலையாகலின், இகழ்வாரையென்றார்.

(தே-ப-ரை)—புகழ்பட - (தமக்குப) புகழுண்டாக, வாழாதார் - வாழமாட்டாதவர, (அதுபற்றி பிறரிகழ்ந்தவிடத்தே) தம் நோவார் - (இவ்விகழ்ச்சி நாமதுமாட்டாமையால வந்ததென்று) தம்மைநோவாதவராகி, தம்மை - தங்களை, இகழ்வாரை - நிந்திப்பவரை, நோவது - பெறப்பது, எவன் - யாது

அ வரையென்பா வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெசசம் பொறுஅ ரிடின்

(பரி-ரை.) எ-து,—புவியென்னும் எசசம் பெறலாயிருக்க அது பெரு தொழிவாராயின், வையகத்தோரகெலலாம் அதுதானே வசையென்று சொல்லுவர் நல்லோர், எ-று.

எசசமென்றார், செயதகாதநதுபோகத் தான் இறவாது நிற்றலின். இகழப்படுதற்குப் பிறிதொருகுறறம வேணடாவென்பது கருத்து.

(தே-ப-ரை.)—இசையென்னும் எசசம் - புகழென்னும் எச்சத்தை (பெறவேண்டியிருக்க), பொறுவிடின் - (அதனைப்) பெறாதுவிடுவாராயின், வையத் தார்க்கு எல்லாம் - பூமியிலுள்ளசார்க்கெல்லாம், வசை - னை) வரையாரும், என்ப - என்றுவர் (நல்லோர்).

கூ. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(பரி-ரை.) எதி-,—புகழில்லாத உடம்பைச சுமந்த நிலம் பழிப்பில்லாத வளப்பத்தையுடைய விளைபுள் குன்றும், எ-று.

உயிருண்டாயினும் அதனற்பயன் கொள்ளாமையின் யாக்கையெனவும், அது நிலத்திற்குப் பொறையாகலின் பொறுத்த வெனவுங்கூறினர். வினையுள் குன்றுதற்கே பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. குன்றுமென இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேனின்றது. இவை நான்கு பாட்டானும் புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—இசைஇலா-புகழில்லாத, யாக்கை-உடம்பை, பொறுத்த - சுமந்த, நிலம் - நிலத்தில், வசைஇலா - பழிப்பில்லாத வள் பயன் - வளப்பத்தையுடைய விளைவு, குன்றும் - குறையும்.

கo. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

(பரி-ரை.) எ-து,—தம்மாட்டு வசையுண்டாகாமல் வாழ்வாரே உயிர் வாழ்வாரவார்; புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தாராவார், எ-று.

வசை ஒழிதலாவது இசையென்னும் எசசம் பெறுதலாயினமையின், இசை ஒழிதலாவது வசைபெறுதலாயிற்று; மேல் இசையிலாயாக்கை யென்ற தனை விளக்கியவாறு. இதனால இவ்விரண்டும் ஒடன கூறபபட்டன. மறுமைப் பயன் * "வானுறையுந் தெய்வத்துள வைக்கப்படும்" என மேலேகூறப் பட்டது; படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற்புகழும், தேவருலகிற்போகமும் பயனென்பது பெற்றும். இனி மனுமுதலிய அதநூல்களால பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங்கும்: அஃதறிந்து அடக்கிக்கொள்க; யாம் உரைப்பிற் பெருகும்.

(தெ-ப-ரை.)—வசைஒழிய - (தம்மிடத்து) நிந்தையுண்டாகா மல் [புகழுண்டாக வென்றபடி]; வாழ்வாரே வாழ்வார்-வாழ்பவரே (உயிர்) வாழ்வோராவார், இசைஒழிய - புகழுண்டாகாமல் [நிந்தை யுண்டாக வென்றபடி]; வாழ்வாரே - வாழ்பவரே, வாழாதவர் - இறந்தோராவார்.

இல்லறவியல் முற்றிற்று.

* திருக்குறள், ஙிo.

துறவறவியல்.

இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினார். துறவறமாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையாராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின்பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான், வினைமாசுதீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற்காக்கப் படும் விரதங்களும், அவற்றுள் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும். அவற்றுள் விரதங்களாவன:—இன்ன அறஞ் செய்வ லென்றும், இன்னபாவம் ஒழிவலெனவும், தம்மாற்றலுக்கு ஏற்ப வரைந்து கொள்வன. அவைதாம் வாம்பிலவாகலின் பெருகுமென்றஞ்சி, அவைதம் மூன்னே பலவற்றையும் அகப்படுத்து நிற்குஞ் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான் தொடங்கி, மூத்தகண அருளுடைமை கூறுகின்றார்.

உரும் அதிகாரம்—அருளுடைமை.

அஃதாவது தொடர்புபற்றுது இயல்பாக எல்லாவுயிர்கண மேலும் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல, இது துறவறத்திற் குச சிறந்ததபின் முற்கூறப்பட்டது.

க. அருட்செல்வஞ்செலவத்துட் செல்வம்பொருட்செல்வம்
பூரியார் கண் ணுள. (பரி)

(பரி-ரை.) எ-து,—செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப் பட்ட செல்வமாவது அருளான் வருஞ்செல்வம், அஃதொழிந்த பொருளான் வருஞ் செல்வங்கள் இழிந்தார்கண்ணும் உளவாம் ஆகலான், எ-று.

அருளான் வருஞ் செல்வமாவது உயிர்களை ஒம்பி அவ்வறத்தான் மேம் படுதல். உயர்ந்தார்கணலை அல்லது இல்லாத அருட்செல்வமே சிறப் புடைய செல்வம், ஏனை நீசர்கண்ணது முளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பில வென்பதாம்.

(தெ-ப-ரை)—பொருள்செல்வம் - பொருளால்வருஞ்செல்வங் கள், பூரியர்கண்ணும்-இழிந்தவரிடத்தும், உள-இருக்கின்றன(ஆத லால்), செல்வத்துள் - செல்வங்கள் பலவற்றுள்ளும், செல்வம்-(ஆராய்ந்து எடுக்கப்பட்ட) செல்வமாவது, அருள்செல்வம்-அருளால்வருஞ் செல்வமாம்.

கல்லாற்று னுடி யருளாள்க பல்லாற்றுந்
நிலு மஃதே துணை.

(பரி-ரை.) எ-ற,—அளவைகளானும் பொருத்தமாற்றானும் நன்றான நெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறம் யாதென்று ஆராய்ந்து, அருளுடையராக; ஒன்றையொன்றெவ்வாத சமயநெறிகள் எல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே, பிறிதில்லை, எ-று.

அளவைகளாவன:—பொறிகளாற் காணுங்காட்சியும். குறிகளான் உய்த்துணரும் அனுமானமும், கருத்தாபொருட்டாகிய ஆகமமும் என மூன்று. ஒப்புப்பற்றி உணரும் உவமையும், இங்ஙனம அன்றுபின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்குமாறான இன்மையும் என, இவற்றையுங் கூட்டி ஆறென்பாருமுளர். இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருத்தமாற்றாவது இது கூடும் இதுகூடாதெனத் தன்கண்ணே தோன்றுவது இன்னவடநூலார் யுத்தியென்ப. ஆற்றுனென்பது வேற்றுமைமயக்கம். ஒன்றையொன் றெவ்வாமையாவது மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் எம்முள் மாறுகோடல்; அன்னவாயினும் அருள் தீங்கு செய்யாதென்பதாம். உயிரை வீட்டி நீங்காது இருமையினும் உதவலின், துணையென்றார். இவை யிரண்டுபோட்டானும் அருளின் பிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—கல்லாற்றல்-நல்ல வழியிலே நிற்றல், நாடி-(அளவைகளாலும் யுத்திபாற்றும் நமக்குத் துணையாகும் அறம்யாதென்று) ஆராய்ந்து, அருள் ஆள்க-அருளுடையராகக் கடவர்; பல்லாற்றல்-(ஒன்றுக்கு ஒன்று ஒத்திராத) பலசமயவழிகளால், தேரினும்-ஆராய்ந்தாலும், துணை-துணையாவது; அஃதே-அவ்வருளே [வேறொன்றில்லையென்றபடி.]

கூ. அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை யிருள்சேர்ந்த
விப்பிறவு லகம் புகல

(பரி-ரை.) எ-து,—இருள் செறிந்த துன்பவுலகத்துட்சென்று புகுதல் அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கில்லை, எ-று.

இருள்செறிந்த துன்பவுலகமென்றது நினைத்த இருளே யுடைத்தாய்த் தன்கட்புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் காரணம், அதுதானுலகத்துள் ஓரிடமாகலின், உலகமெனப்பட்டது.

(தே-ப-ரை.) —இருள்சேர்ந்த-இருள்தங்கிய, இன்னுலகம்-துன்பவுலகத்தில், புகல்-(போய்ப்) புகுதல், அருள்சேர்ந்த-அருள் தங்கிய, நெஞ்சினர்க்கு-மனத்தை யுடையவர்க்கு, இல்லை-இல்லை.

ச. மன்னுயி ரோம்பி யருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை,

(பரி-ரை.) எ-து,—நிலேபேறுடைய உயிர்களேப்பேணி அவற்றின்கண் அருளுடைய ஞானுக்குத் தன்னுயிர் அஞ்சுதற்கேதுவாகிய தீவினைகள் உளவாகா என்று சொல்லுவர் அறிந்தோர், எ-று.

உயிர்களெல்லாம் நித்தமாகலின் மன்னுயிரென்றார். அஞ்சுதல்—துன்ப நோக்கி அஞ்சுதல். அன்ன அறத்தினேனே கொலேமுதலிய பாவங்கள் செய்யானெனவே, மறுமைக்கண் நரகம் புகாமைக்கேது கூறியவாருயிற்று.

(தே - ப - ரை)—மன்உயிர்-நிலேபேறுடைய உயிர்களே,ஓம்பி-காப்பாற்றி, அருள்ஆள்வார்த-(அவைகளிடத்தே) அருளுடைய ஞரிருப்பவனுக்கு; தன்உயிர்-தன உயிர், அஞ்சும்-அஞ்சுதற்கு ஏது வாகிய, வினே-பாவங்களானவை, இல்-உண்டாகா, என்ப-என்று சொல்லுவர் (அறிந்தோர்)

நி. அல்ல லருளாள்வார்க் கில்லே வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி

(பரி-ரை.) எ-து,—அருளுடையார்க்கு இம்மையினும் ஒரு துன்பம்உண்டாகாது; அதற்குக்காற்று இயங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று, எ-று.

சான்றுவார் தாங்கண்டு தேர்ந்த பொருளே காணுதார்க்குத் தேற்றுதற்கு உரியவர். அருளாள்வார்க்கு அல்லல் உண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒரு வருங்கண்டறிவார் இன்மையின், இன்மை தத்தான் ஞாலத்தார் யாவருஞ் சான்றென்பார் வளிவழங்கு மல்லன் மாஞாலங் கரியென்றார்: எனவே, இம்மைக்கணெனபது பெறும். ஞாலம்-ஆகுபெயர். இவை மூன்றுபாட்டானும் அத்தினேயுடைபார்க்கு இருமையினும் துன்பமில்லாமை கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—அருள் ஆள்வார்க்கு - அருளுடையவருக்கு, அல்லல் - (இம்மையினும்) ஒருதுன்பம், இல்லே - உண்டாகாது, (அதற்கு), வளிவழங்குந் - காற்றுலாவுகின்ற, மல்லல் - வளப்பத்தையுடைய, மா-பெரிய, ஞாலம் - பூமியில் வாழ்வோர், கரி - சாகூியா

கூ. பொருளீங்கிப் பொச்சாந்தா ரென்பா ரருளீங்கி
யல்லவை செய்தொழு தவர்.

(பரி-ரை.) எ-து,—உயிர்கண்மாட்டுச் செய்யப்படும் அருளேத்தவிர்த்து, தவிரப்படுங் கொலேமுதலாச செய்தொழுகுவாரை முன்னும் உறுதிப்பொருளுச் செய்யாது தாம் துன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் நல்லோர், எ-று.

உறுதிப்பொருள் - அறம். தன்புறுதல் - * பிறவித்துன்ப மூன்றினையும் அனுபவித்தல். மறந்திலராயின், அவ்வாறெழுகாரென்பது கருத்து.

தே-ப-ரை.—அருள் நீங்கி - (உயிர்களிடத்துச் செய்யவேண்டும்) அருளைவிட்டு, அல்லவை-செய்யவேண்டாத கொடுமைகளை, செய்து ஒழுகுவார் - செய்துகடப்பாரை, பொருள் நீங்கி - (மூன்றிறப்பிலேயும்) உறுதிப்பொருளைத் தேடாமல், பொச்சாந்தார்-(தாம்தன்பப் படுகின்றமையை) மறந்தவர், என்ப - என்று சொல்லுவர், (நல்லோர்).

எ. அருளிலார்க் கவ்வுலக மில்லாம் பொருளிலார்க்
இவ்வுலக மில்லா தியாங்கு

(பரி-ரை.) எ-து,—* பிர்கணமேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பம் இல்லை, பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாயினும்போல, எ-று.

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத்தின்பங்கட்குப் பொருள் காரணமானும்போல, அவ்வுலகத்தின்பங்கட்கு அருள் காரணமென்பதாயிற்று.

(தே-ப-ரை.)—பொருள் இலார்க்கு - பொருளில்லாதவர்க்கு, இவ்வுலகம் - இவ்வுலகத்தின்பம், இல்லாதியாங்கு-இல்லாமைபோல, அருள் இலார்க்கு - (உயிர்களின்மேல்) அருளில்லாதவர்க்கு, அவ்வுலகம் - அவ்வுலகத்தின்பம், இலை - இலது

அ. பொருளற்றூர் பூப்பர் மறுமை யருளற்றூர்
மற்றூர்மற் றூதலரி தது.

(பரி-ரை.) எ-து,— ழான் வறியாயினும் அதை நீங்கிப் பின் ஒருகாலத்துச் செல்வத்தாற்பொலிவர்; அவ்வாறன்றி, அருளிலாதார் பாவமுமையின் அழிந்தாரே, பினனெருகாலத்தும் ஆகலிலரே, எ-று.

மற்று - வினைமாற்றின்கணவந்தது. மேற்பொருளின்மையோடு ஒருவாற்றான் ஒப்புமை கூறினாகலின், அதுமறுத்து, பிறவாற்றான் அதனினுங் கொடிதென்பது கூறியவாறு.

(தே-ப-ரை.)—பொருள் அற்றூர் - (ஊழினாலே) பொருளில்லாதவர், ஒருகால் - ஒருகாலத்தில், பூப்பர் - செலவமுடையவராவர்; அருள் அற்றூர் - அருளில்லாதவர், அற்றூர்-(பாவம் நீங்காமையால்)

* பிறவித்துன்பம் மூன்றும் மேலே சான்றோர் சூறுணர்வையிற் கூறப்பட்டது.

அழிக்தவரே; மற்று - பின்னொருகாலத்திலும், ஆதல் அரிது-ஆகுத லில்லை.

கூ தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றுற்
னருளாதான் செய்யு மறம்

(பரி-ரை.) எ-து —உயிர்க்கணமாட்டி அருள்செய்பாதவன் செய்யும் அற த்தை ஆராயின், ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்க்தாற் போலும், எ-று

மெய்ப்பொருள் - மெய்நூலிற் சொல்லும்பொருள். நிலைபெற்றஞான மில்லாதவன இடையே மெய்ப்பொருளை உணர்ந்தால், அதனைத் தன்ஞானம் இன்மையால் தானே அழித்துவிடும். அதுபோல, அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளாமையால் தானே அழித்து விடுமென் பதாயிற்று; ஆகவே, பிறவறங்கட்கெல்லாம அருளுடைமை மூலமென்பது பெற்றும். இவை நான்கு பாட்டாலும் அத்திணையிலாதாக்கு வருங்குற்றங கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—அருளாதான்-(உயிர்களிடத்தில்) அருள் செய் யாதவன், செய்யும்-செய்கின்ற, அறம் - அறத்தை, தேரின் - ஆரா யின், தெருளாதான் - ஞானமில்லாதவர், மெய்ப்பொருள் - மெய்ந் நூலிற் சொல்லப்பட்ட பொருளை, கண்டு அற்று - (ஒருகால்) கண் டதுபோலும்.

--

கo. வலியார்முற் றன்னை நினைக்கதன் றவனின்
மெலியார்மே லுய்த்து செல்லு மிடத்து.

(பரி-ரை.) எ-து.—தன்னின்வலியார் தன்னை நலிய வரும்பொழுது அவர் மூன் தானஞ்சி நிற்கும் நிலையினை நினைக்க, அருளில்லாதவன் தன் னின் எளியார்மேல் தான் நலியச்செல்லும்பொழுது. எ-று.

மெலியரெனச சிறப்புடைய உயாதிணைமேற் கூறினராயினும், எனை அஃறிணையுங் கொள்ளப்படும். அதனை நினைக்கவே, இவ்வுயிர்க்கும் அவ் வாறே அசசமாமென்றாிந்து, அதன்மேல் அருளுடையனு மென்பது கருத்து. இதனால் அருள் பிறத்தற்கு உபாயங கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—தன்னின் மெலியார்மேல் - (அருளில்லாதவன்) தன்னின் எளியார்மேல், தான செல்லும் இடத்து-தான் (வருத்து தற்குப்) போம்போது, வலியார்-(தன்னின்) வலியவர், மூன்-(தன்னை வருத்துதற்கு வரும்போது அவர்) மூன், தன்னை-(அஞ்சிநிற்கும்) தனது நிலையை, நினைக்க-நினைக்கக்கடவன்.

உசும் அதிகாரம்—புலான்மறுத்தல்.

அஃதாவது ஊனுண்டலே யொழிதல். கொலைப்பாவத்தைப் பின்னும் உளதாக்கலின் அதற்குக் காரணமாதலேயும், முன்னும் அதனுன் வருதலின் அதன் காரியமாதலேயும், ஒருங்குடைத்தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்றுகலின், அதனை விலக்குதற்கு, இஃது அருடைமையின் பின் வைக்கப் பட்டது.

க. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

(பரி-ரை.) எ-து,—தன்னுடம்பை வீக்குதற்பொருட்டுத் தான் பிறிதோருயிரின் உடம்பைத் தின்பவன் எவ்வகையான் நடத்தும் அருளினை, எ-று.

பயனிலாத ஊன் பெருகுதலைப் பயனெனக்கருதி இக்கொடுமை செய்வானை அறிவிலாத கொடியோன் என்றவாருயிற்று. எங்ஙன மாளுமருளென்பது, ஆளானென்பது பயப்பதின்றி இகழ்ச்சிக்குறிப்பு.

(தே-ப-ரை.)—தன்னூன் - தன்னுடம்பை, பெருக்கற்கு-வளர்த்தற்பொருட்டு, தான் பிறிது ஊனுன்-தான் பற்றுருருயிரினுடம்பை, உண்பான்-தின்பவன், எங்ஙனம் - எவ்வகையால், அருள் - அருளை, ஆளும்-ஆள்வான்.

உ. பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு

(பரி-ரை.) எ-து,—பொருளாற் பயன்கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கில்லை, அதுபோல, அருளாற் பயன்கோடல் ஊன்றின் பார்க்கில்லை, எ-று.

பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமை போல, அருட்பயன் இழத்தற்கு ஊன் றினல் காரண மென்பதாயிற்று. ஊன் றின்றாயினும் உயிர்கட்கு ஒரு தீங்கு நினையாதார்க்கு அருளாடற்கு இழுக்கில்லை யென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவை யிரண்டு பாட்டானும் கூறப் பட்டது.

(தே-ப-ரை.)—பொருள் ஆட்சி - பொருளாற் பயன்கொள்ளுதல், போற்றுதார்க்கு இல்லை - (அதனைக்) காப்பாற்றுதவருக்கில்லை, ஆங்கு-அதுபோல, அருள் ஆட்சி-அருளாற் பயன் கொள்ளுதல், ஊன் தின்பவர்க்கு இல்லை-புலால் உண்பவர்க்கில்லை.

ங. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றுக்கா தென்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

(பரி - ரை.) எ-து,—கொலைக் கருவியைத் தங்கையில் கொண்டவர் மனம் அகனுர் செய்யுங் கொலையையே நோக்குவதல்லது அருளே நோக்காதவாறுபோல, பிறிதோருயிரின் உடலைச சுவைபட வுண்டவர் மனம் அவ்வூனையே நோக்குவதல்லது அருளே நோக்காது, எ-று.

சுவைபடவுண்டல் - காயங்களான் இனிய சுவைத்தாகவுண்டல். இதனுல் ஊன் தின்னுர் மனம் இங்கு நினைத்தல் உவம அளவையாற் சாதித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

(தே-ப-ரை.)—ஒன்றன் - பிறிதோருயிரினது, உடல் - உடலை, சுவைஉண்டார் - சுவை படியுண்டவரது, மனம்-மனமானது, படை கொண்டார் - கொலைக்கருவியைத் (தங்கையிலே) கொண்டவரது, கெஞசம்போல்-மனம்போல, நன்று உறக்காது-(கொலையை நோக்குவதல்லது) அருளேநோக்காது

— ———

ச. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல
பொருளல்ல தவ்வூன் றினல்.

(பரி-ரை.) எ-து,—அருள் யாதெனின், கொல்லாமை; அருளல்லது யாதெனிற் கோறல்; ஆகலான், அக்கோறலான் வந்த ஊனைத்தின்கை பாவம், எ-று.

பசுபாவவழக்கால் கொல்லாமை, கோறலாகிய காரியங்களே அருள் அல்லதெனக் காரணகாரியமும், ஊன் தின்கையாகிய காரணத்தைப பாவமெனக் காரியமாகவுங கூறினர். அருளல்லது - கொடுமை. சிறப்புப் பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் பொருளல்லதெனப்பட்டது. கோறலென முன்னின்றமையின், அவ்வூனென்றர். இனி இதனை இவ்வாறன்றி அருளல்லதென்பதனை ஒன்றுக்கி, கொல்லாமை கோறலென்பதற்குக் கொல்லாமையெனலும் விரித்தலை அறிந்து லென்றுரைப்பாரும் உளர்.

(தே - ப - ரை)—அருள் - அருளானது, யாதெனின் - எதுவென்றால், கொல்லாமை - கொல்லாதிருத்தல்; அல்லது - அவ்வருளல்லாதது, யாது எனின் - எதுவென்றால், கோறல் - கொல்லுதல்; (ஆதலால்), அவ்வூன் - அக்கொல்லுதலால்வந்தவூனை, தினல் - தின்னுதல், பொருள் அல்லது-அறனல்லாததாம் [பாவமாம்].

நி. உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ணு
வண்ணுத்தல் செய்யா தளறு.

(பரி-ரை.) எ-து,—ஒருசாருயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊனுண் மையென்கின்ற அறத்தின்கண்ணது; ஆகலான், அந்நிலை குலைய ஒரு அதனையுண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது, எ-று.

உண்ணப்படும் விலங்குகள் ுல தேய்ந்து நிலவாக, ஏனைய பல வாய் வருதலின், உண்ணுமையுளன துயிர்நிலையென்றார். உண்ணினென் பது உணண வெனத் திரிந்து நின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் செய்காலம் நிரயத்துள் அழுந்துமென்பதாம். கொலைப்பாவம் கொன்றார் மேல் நிற்றலின் பின் ஊனபாக்கப் பாவமில்லை யென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவ்விரணடுபாட்டானுங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—உயிர் - (நிலவுகை) உயிர்கள், நிலை - (உடம் புகளிலே) நிற்கை, ஊன் - ஊனை, உண்ணாமையுள்ளது - உண் ணுமையென்னும் அறத்தினிடத்தது, (ஆதலால்), உண்ண - (அந் நிலைகுலைய ஒருவன் அதனை) உண்பானுயின், அளறு - (அவனை விழுங்கிய) நரகமானது, அண்ணத்தல்செய்யாது - (பின் உமிழ் தற்கு) வாய்திறவாது.

ங. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
வினைப்பொருட்டா லுன்றருவா ரில்.

(பரி-ரை.) எ-து,—மீபதைமை காரணமாக அல்லது ஊன் தின்கை காரணமாக உலகு கொல்லாதாயின், பொருள் காரணமாக ஊன் விற் பார் யாவரும் இல்லை, எ-று.

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேனின்றது. பின்நிகழும் தின்கை முன்நிகழும் கொலைக்குக் காரணம் ஆகாமையின், தின்பார்க்குக் காரணத் தான் வரும் பாவம் இல்லையென்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தி அள வையாற் காரணமாதல் சாத்தலின், இதனுன் மேலது வலியுறுத்தப் பட்டது.

(தே - ப - ரை.)—தினல்பொருட்டால் - தின்னுதல் காரண மாக, உலகு - உலகத்தார், கொல்லாது எனின் - கொலைசெய்யா ராயின், வினைப்பொருட்டால் - வினைப்பொருள் காரணமாக, தருவார் - ஊனைவிற்பவர், யாரும் - எவரும், இல் - இலர்.

எ. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணாறு மாலார்வார்ப் பெறின்.

(பரி - ரை.) எ-து,—புலாலாவது பிறிதோருடம்பின் புண்; அது ரய்து அன்மை அறிவாரைப் பெறின், அதனே உண்ணுதொழியல் வேண்ம், எ-று.

அஃதென்னல் வேண்டும் ஆப்தம் விகாரத்தாற் றெரிக்கது. அம் மய்ம்மை உணராமையின், அதனே ண்கின்றெ ன்பதாம். * பொருத்த ாற்றலும், புலாலுணடல் இழிக்கென்பது இதனுற் கூறப்பட்டது.

(தே - ப - ரை — புலால - புலாலாமை, பிறிது ஒன்றன் - வ்வோருடம்பினது, புண்-புண்ணுதல்; அது-அப்புலால் (அசுத்த ாயிருக்கையை), உணர்வார - அறிவோரை, பெறின் - பெற்றால் ண்ணுமை வேண்டும் - அப்புலாலை உண்ணு தொழியவேண்டும்,

அ செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் புலைபிரிந்த வூன்.

(பரி - ரை) எ-து,—மயக்கமாகிய குற்றத்தினின்றகிய அறிவினையுடை ார் தெருயின்னகிவந்த ஊனை ணணுர், எ-று.

தலைப்பிரிவென்பது ஒருசொல். பிணமென ாவினின்மெய்ம்மை தாமே ணர்தலின், உணணுவென்றார.

(தே - ப - ரை — செயிரி ன - (மயக்கமாகிய) குற்றத்தினின் யம், தலைப்பிரிந்த - நீங்கிய, காட்சியார் - அறிவினை யுடையார், யிரின் - ஒருயிரினின்றும், தலைபிரிந்த - நீங்கியதன, ஊன் - ஊனை, உண்ணுர் - தின்னுர்

அ அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிரெ குத் துண்ணுமை நன்று.

(பரி-ரை) எ-து,—தீயின்கண நெய் முதலிய அவிகளைச சொரிந்து ஆயி ம்வேள்வி வேட்டலினும், ஒரு விலங்கின உயிரைப்போக்கி அது நின்ற ஊனை உணணுமை நனறு. எ-று.

அவ்வேள்விகளான் வரும பயனினும், இவ்விரதத்தான் வரும் பயனே)பரிதென்பதாம்.

(தே-ப-ரை)—அவி - (நெய் முதலாகிய) அவிகளை, சொரிந்து- தீயில்) பெய்து, ஆயிரம் வேட்டலின் - ஆயிரம்யாகஞ் செய்தலினும், ன்றன் - ஒருவிலங்கினது, உயிர் - உயிரை, செகுத்து - போக்கி, ண்ணுமை - (அவ்வுயிரினின்று வரூஉ) உண்ணுமை, நன்று - நல்லது.

* பொருத்தமாறு—ய

கo. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(பரி-ரை.) எ-து,—தூயிரையுங் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணாதவனை எல்லாவுயிருங் கைகுவித்துத் தொழும், எ-று.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றேயுடையார்க்கு அதனற் பயனில்லையாகலின், கொல்லாமையும் உடன்கூறினர். இப்பேருள் உடையான் மறமைக்கண் தேவரின் மிக்கானெனன அப்பயனது பெருமை கூறியவாறு. இவை மூன்றுபட்டானும் உண்ணாமையது உயர்ச்சி கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—கொல்லான் - (ஓருயிரையுங்) கொல்லாதவனுமாய், புலாலைமறுத்தானை-புலாலையுமுண்ணாதவனை, எல்லா வுயிரும்-எல்லாவுயிர்களும், கைகூப்பி-கைகுவித்து, தொழும்-வணங்கும்.

உளம் அதிகாரம்—தவம்.

அஃதாவது மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண வெயில்நிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றாற் தம் முயிர்க்குவரு தன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களை யோம்புதல். புலான் மறுத்த வுயிர்களைமேல் அருண் முதிர்ந்துழிச செய்யப்படுவதாகலின், இது புலான் மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

க. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு

(பரி-ரை.) எ-து,—தவத்தின்வடிவு உண்டிசுருக்கல்முதலியவற்றால் தம் முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையும் ஆகிய அவ்வளவிற்று, எ-று.

மற்றள்ளனவெல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், அற்றேயெனத் தேற்றேகாரங் கொடுத்தார். தவத்திற்கு உருஅற்றே என்பது "யாரையது கோகூரிதென்பதனே யானைக்குக் கோடு கூரிது" என்றாற்போல ஆராய்வதன் பொருட்கண் நான்காவது வந்த மயக்கம். இதனால் தவத்தது இலக்கணங் கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—தவத்திற்கு - தவத்தினுக்கு, உரு - வடிவ மானது, உற்றநோய் - (உண்டிசுருக்குதல் முதலானவைகளால் தம் முயிர்க்கு) வரும்துன்பங்களை, நோன்றல் - பொறுத்தலும், உயிர்

க்கு-பிறவுயிர்க்கு, உறுகண்செய்யாமை - (தாம்) துன்பஞ் செய்யாமையும் ஆகிய, அற்றே - அவ்வளவினதே.

உ. தவமுந் தவமுடையார்க் காகு மவாதஃ தி
லஃதிலார் மேற்கொள் வது

(பரி-ரை.) எ-து,—பயனேயன்றித் தவக்காலும் உண்டாவது முற்றவ முடையார்க்கே; ஆகலான், அதுதவத்தை அம்முற்றவுமில்லாதார் முயல்வது பயனின் முயற்சியாம், எ-று.

பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவுபோக்கலின் தவ முடையார்க் காகுமென்றும் அஃதிலாதார்க்கு அவையின்மையின் முடிவு போகாமையின் அவமாமென்றுங் கூறினார்.

(தெ-ப-ரை) —தவமும் - (பயனையல்லாமல்) தவம் உண்டாவதும், தவம் உடையார்க்கு ஆகும் - (முன்னைத்) தவத்தை உடையவர்க்கே ஆகும், (ஆதலால்) அதனை - அத்தவத்தை, அஃது இலார் - அம்முன்னைத் தவமில்லாதவர், மேற்கொள்வது - செய்யத் தொடங்குவது, அவம் - வீணாம்

ஊ. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

(பரி-ரை.) எ-து,—இல்லறத்தையே பற்றி நிற்பார் துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலே விரும்பித் தாந் தவஞ்செய்தலே மறந்தார்போலும், எ-று.

துப்புரவு-அனுபவிக்கப்படுவன. "வேண்டிய வேண்டியாங் செய்தற்" பயத்தராகலின் யாவராஞ் செய்யப்படுவதாய தவத்தைத் தாஞ்செய்யுந் தானத்தின்மேல் விருப்பமிகுதியான் மறந்தார்போலு மெனவே, தானத்திற் றவம் மிக்கதென்பது பெற்றாம்.

(தெ-ப-ரை)—மற்றையவர்கள்-இல்லறத்தையே பற்றிநிற்பவர்கள், துறந்தார்க்கு-(இருவகைப்பற்றும்) விட்டவர்க்கு, துப்புரவு-உண்டியும் மருந்தும் இருப்பிடமும், வேண்டி-(உகவுதலே) விரும்பி, தவம்-(தாம்) தவஞ்செய்தலை, மறந்தார்கொல்-மறந்தார்போலும்.

எ. ஒன்னுர்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

(பரி-ரை.) எ-து.—தம்மறத்திற்குப் பகையாய் அழிவுசெய்தாரைச் செறித்தலும் அதனை உவந்தாரை உயர்த்தலும் ஆகிய இவ்விரண்டையும் தவஞ் செய்வார் நினைப்பராயின், அவர் தவவலியான் அவை அவர்க்குளவாம், எ-று.

மூற்றுணர்ந்தார்க்கு ஒன்னரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், தவத்திற்கேற்றி யுரைக்கப்பட்டது. என்னினென்றதனுள், அவர்க்கு அவை யெண்ணுமை இயல்பென்பது பெற்றும். ஒன்னர் பெரியராயினும் உவந்தார் சிறியராயினும், கேடும் ஆக்கமும் நினைந்து துன்னியாரே வந்து நிற்குமெனத் தவஞ்செய்வார்மேலிட்டுத் தவத்தினது ஆற்றல் கூறியவாறு.

(தே-ப-மா)—ஒன்னார்-(தமது அறத்திற்கு இடையூறுசெய்த) பகைவரை, தெறலும் - கெடச்செய்தலேயும், உவந்தாரை-(அந்நனை) விரும்பினவரை, ஆக்கமும்-உயரச்செய்தலேயும், எண்ணினர்-(தவஞ் செய்வோர்) நினைப்பராயின், தவந்தான்-(அவர்க்கு) தவவலிமையி னால், ஆம்-(அவை அவருக்கு) உண்டாகும்.

நூ வேண்டிய வேண்டியாங் கெய்த லான்செய்
தவமே முயலப் படும்.

(பரி-ரை.) எ-து,—முயன்றால் மறுமைக்கண் தாம் வேண்டிய பயன் கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால், செய்யப்படுவதாய தவம் இம்மைக் கண் அறிவுடையோரான் முயலப்படும், எ-று.

ஈண்டென்பதனுள் மறுமைக்கணென்பது பெற்றும். மேற்கதி, வீடு பேறுகள் தவத்தானன்றி எய்தப்படாவென்பதாம். இவை கான்குபாட்டாலும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-மா)—வேண்டிய-(முயன்றால்) பெறவேண்டிய பயன் களை, வேண்டியாங்கு-வேண்டியபடியே, எய்தலால் - (மறுமையிலே தாம்) பெறலாம் ஆகலால், செய்தவம்-செய்யத் தகுவதாகிய தவமா னது, ஈண்டு-இம்மையில், முயலப்படும்-(அறிவுடையோராலே) செய் யப்படும்.

சூ தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

(பரி-ரை) எ-து,—தங்கருமஞ் செய்வாராவார் துறக்கத் தவத்தைச் செய் வார்; அவரையொழித்த பொருளின்பங்களேசை செய்வார் அவற்றின்கண் ஆசை யாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார், எ-று.

அந்தமாய் மூவகைத் துன்ப தாய் உயிரின்வேரூய உடற்கு வருத்தம் வருமென் றெழியாது தவத்தினைசெய்ய, பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்கு

ஞான் அநாதியாகத் துன்பமெய்திவருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடு பெறுமாகலின், தவஞ்செய்வாரைத் தலைகருமஞ் செய்வாரென்றும், கணத்தில் அழிவதாய சிற்றின்பத்தின்பொருட்டுப் பல பிறவியுந் துன்புறுதற்கு ஏதுவாஞ் செய்துகோடலின், அல்லாதாரை அவஞ்செய்வாரென்றும், கூறினார்.மற்று—வினைமாற்றின் கண்வந்தது.

(தெ-ப-ரை)—தவம்செய்வார்-தவஞ்செய்பவர். தம் கருமம் செய்வார்-தமதுதலைமைக்கு ஏதுவாகாதவார். மறு அல்லார்-மற்றைப் பொருளின் பங்கை உடையார். ஆசையுள்பட்டு-(அவைகளின்) ஆசையாகிய வலையில் அகப்பட்டு. அவர்செய்வார்-(தமக்குத்) தீங்குசெய்பவர்.

மா. சுடரசுட நாம பொன்போல வொளிவிடுந தோன்றல
சுடச்சுட நீகாத் தெற வாய்ச்சு

(பரி-ரை.) எ-து,—தீயின்கண்ணுமெ பொன்னுக்கு அது சுடசுடதன்னொடு கலந்த குற்றமெல்லி ஒளிவிடுமாறுபோல, தவஞ்செயலவலாகாது அதனன் வருந்தினபம வருந்த வருந்தத் தம்மொடு கலந்த பாவமெல்லி ஞானமிகும், எ-று.

சுடசுடரும் பொன்போலென்ற உவமையும், கருத்துதோன்றி இவ்வாறு வகைக்கப்பட்டது. ஒளிவிடுபோலப் பொருளதனை விளக்கலின் ஒளியென்றார்.

(தெ-ப-ரை)—சுடச்சுட நாம்-(படத்தியானது) சுடசுட ஒளிவிடும், பொன்போல்-பொன்னைபோல, நீகாத்திற்பவர்க்கு-தவஞ்செய்ய வல்ல பார்க்கு. தோற்றம்-(அதனால் வரும்) நன்பம், சுடச்சுட-வருந்த வருந்த, ஒளிவிடுதல்-ஞானமெழுமிகும்

அ. தன்னுயிர் தானடை பெற்றானை யீன்றளை
மன்னுயிர் ரெல்லாந் தொழும்

(பரி-ரை) எ-து,—தன்னுயிரை தான் தனக்குரிமைகாகப் பெற்றவனைப் பெறுதனவாகிய மன்னுயிர்களெல்லாந தொழும், எ-று.

தனக்குரிமைதாதல்—தவமாகிய தன்கருமஞ்செயதல். அதனினாலுப் பெறுதற்கரியது இன்மையின், பெறுனையென்றார். அது பெறுதனவென்றது ஆசையுட்பட்டு அவஞ்செய்யு மூயிர்களை. சாபமும் அருளுமாகிய இரண்டாற்றலு மூடைமையின், தொழுமென்றார்.

(தெ-ப-ரை)—தன்னுயிர்-தானுயிரை, தான்அற-தனக்கு உரித்தாக, பெற்றானை-பெற்றவனை, யீன்ற-அது பெறுதனவாகிய

மன்உயிர்எல்லாம்-கிலேபேறுடைய உயிர்களெல்லாம், தொழும்-கை கூப்பி வணங்கும்.

கூ. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு.

(பரி-ரை.) எ-து,—கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம், தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு, எ-று.

சிறப்பும்மை அது கூடாமை விளக்கிற்று; மன்றுயிரெல்லாந் தொழுதலே யன்றி இதுவுங் கைகூடுமென எச்சவும்மையாக வுரைப்பினும் அமையும். ஆற்றல் - சாபவருள்கள். இவை நான்குபாட்டானும் தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—நோற்றலின்-தவஞ்செய்தலால், ஆற்றல்-(வருவ தாகிய) வல்லமையில், தலைப்பட்டவர்க்கு-மேற்பட்டவர்க்கு, கூற்றம்-யமனை, குதித்தலும்-கடந்தலும், கைகூடும்-உண்டாகும்.

கo. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(பரி-ரை.) எ-து,—உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலரா தற்குக் காரணம் யாதெனின், அது தவஞ்செய்வார் சிலராக அது செய்யா தார் பலராதல், எ-று.

செல்வம் நல்குரவென்பன—ஈண்டு அறிவினது உண்மை யின்மைகளே யுங்குறித்து நின்றன. என்னே?*"நுண்ணிணர் வின்மை வதுமை யஃதுடைமை —பண்ணப்பயனெத்த பெருஞ்செல்வம்" என்றாராகலின். நோற்பார் சில ரெனக் காரணங் கூறினமையான், காரியம் வருவித்துரைக்கப்பட்டது. தவஞ் செய்யாதார்க்கு இம்மையின்பமும் இல்லையென இதனால் அவர்து தாழ்வு கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—இலர்-(உலகத்திற்செல்வர் சிலராக) வறியவர், பலர் ஆகிய காரணம் - பலராதற்குக்காரணம் (யாதென்றால்); (அது) நோற்பார்-தவஞ்செய்வோர், சிலர்-சிலராக, நோலாதவர்-தவஞ்செய் யாதவர், பலர்-பலராதல்ஆம்.

* நுண்ணிணர் வின்மை வதுமை யஃதுடைமை-பண்ணப் பயனெத்த பெருஞ் செல்வ —மெண்ணிலங்கிளவிற்—பெண்ணையாயாணிழாஅ, பேடியணியாலோ—கண்ணவாக் தக்க தலம்—நாலடியார், அறிவின்மை.

உஅ-ம் அதிகாரம்—கூடாவொழுக்கம்.

அஃதாவது தாம் விட்ட காமவின்பத்தை உளனின்மையின் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாத தாய தீயவொழுக்கம். அது விலக்குதற்கு, இது தவத்தின்பின் வைக்கப் பட்டது.

க. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்

(பரி-ரை.) எ-து —வஞ்சம் பொருந்திய மனத்தை யுடையவனது மறைந்த வொழுக்கத்தை, உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்க ளைந்தும் கண்டு, தம்முள்ளே நகும், எ-று.

காமம் தன்கணணே தோன்றி சலியாநிற்கவும் அதனது இன்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் வஞ்சமனமென்றும், அங்ஙனிவ் பொறுக்கமாட்டா தொழுகுங களவொழுக்கத்தைப் படிற்றொழுக்கமென்றும், உலகத்துக் கள வுடையார் பிறரறியாமற் செய்வனவறிந்து முபெரும்பூதங்கள் சான்றாக லின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்ற ஆற்றையுமறிந்து அவ னறியாமற் றம்முள்ளே நகுதலின், அதனைநகுமென்றுங கூறினர். செய்த குற்றம் மறையாதாகலின், அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து.

(தெ - ப - ரை.) —வஞ்சமனத்தான் - வஞ்சனைபொருந்திய மனத்தை யுடையவனது, படிறு ஒழுக்கம்-மறைந்த ஒழுக்கத்தை, பூதங்களைந்தும்-(உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற) பஞ்ச பூதங்களும் (கண்டு), அகத்தே-தம் உள்ளே, நகும்-சிரிக்கும்.

உ வானுயர் தோற்றம் பெயினுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்கு வான்போலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச செய்யும், தான் குற்றமென றறிந்த அதன்கணணே தன்னெஞ்சு தாமுமாயின், எ-று.

வானுயர்தோற்றமென்பது *"வான்றோய்குடி" என்றாற்போல இலக் கணவழக்கு. அரியாது செய்தகுற்றமல்லது அறிந்துவைத்துச செய்த குற்றங் கழுவப்படாமையின், நெஞ்சு குறுகத் தாமேவிடுமே; விடவே, நின்ற வேட மாத்திரத்திற்குப் புறத்தாரை வெருட்டுதலே யல்லது வேறுபயனில்லை யென் பதாம்.

(தெ-ப-ரை.)—தான் அறி-தான் அறிந்த குற்றம் குற்றத்திலே, தன்நெஞ்சம் - தன்மனம், படின் - தாழுமாயின், (ஒருவனுக்கும்)

வான்உயர் - வான்போலுயர்ந்த, தோற்றம் - தவவேடமானது, எவன் செய்யும் - என்ன பயனைச் செய்யும்.

ச. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்து மமைந்தற்று.

(பரி-ரை.) எ-து;—மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலிமையில்லாத இயல்பினையுடையான் வலியுடையார் வேடத்தைக்கொண்டு தான அதன் வழிப்படுதல் பசுக்காவலர் கடியாமல புலியின்தோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும்; எ-று.

இப்பொருளுவமை. வலிமினிலைமையானென்றது, மனவுரனாலும், மேய்ந்தற்றென்னுந் தொழிலுவமையானும், வல்லுருவத்தோடு மனவுரப் படுதலென்பது பெற்றமும். காவலர் கடியாமை—புலி புல்தின்னு தென்பதனாலும், அச்சத்தானு மாம்; ஆகவே, வல்லுருவங கோடற்குப் பயன் அன்ன காரணங்களான் உலகத்தார் அபிராமையாயிற்று. இவ்வாறு மனவுரனுகுரிய இல்லாமையுந் தோற்று வலியுடின்றிப் பிறர் அபிராத வல்லுருவமுங்கொண்டு நின்றவன் மனவுரப் படுதலாவது தன் மனமோடியவழியே ஓடி மறைந்து பிறர்குரிய மகளிரை விழைதலாம. அவ்வாறுதல், பெற்றம் தனக்குரிய புல்லே மீட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற்போலுமென்ற உவமையான், அறிக.

(தே-ப-ரை.)—வலி இல் - (மனத்தை அடக்கும்) வல்லமை இல்லாத, நிலைமையான் - இயல்புடைபவன்; வல்உருவம் - அவ் வல்லமையை யுடையவரது தவவேடத்தைக்கொண்டு (மனம்போனவழி போதுதல்), பெற்றம் - பசுவானது, (காவற்காரர்தூரத்தாதிருக்கும்படி) புலியின்தோல் - புலியினது தோலை, போர்த்து - போர்த்திக்கொண்டு, மேய்ந்தது அற்று - பயிரைமேய்ந்ததையொக்கும்.

ரு. தவமறைந் தல்லவை செய்தல புதல்மறைந் தூ
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(பரி-ரை.) எ-து —அல் வலியினிலைமையான் தவவேடத்தின்கண்ணே மறைந்திருந்து தவமல்லவற்றைச் செய்தல் வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்திருந்து புட்களைப் பிணித்தாற்போலும், எ-று.

தவம்-ஆகுபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்தாக்குதல். இதுவும் இத்தொழிலுவமையான் அறிக.

ச இல்பொருளுவமை—அபூதவுவமை.

(தே ப-ரை.)—தவம் - (அவ்வல்லலமையில்லாத நிலைமையான்) தவச்சாலையில், மறைந்து - மறைந்திருந்து, அல்லவைசெய்தல் - தவமல்லாதனவகளைச்செய்தல், வேட்டுவன் - வேடன், புதல் - புதலிலே, மறைந்து - ஒளித்திருந்து, புள் - பறவைகளை, சிமிழ்த்தது அற்று - பிடித்தாற்போலும்.

நி. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றென்னை
றேதந் பலவுந் தரும்.

(பரி-ரை.) எ-து—தம்மைப் பிறர் தன்கு மதித்தற்பொருட்டு யாம் பற்றற்றேமென்று சொல்வாரது மறைவொழுக்கம் அப்பொழுது இனிதாகோன்றுமாயினும், பின் ஒன்று செய்யும் என்செய்தேமென்று தாமேயிரங்கும் வகை, அவர்க்குப் பலதுன்பங்களையுங் கொடுக்கும், எ-று.

சொல்லலவல்லது பற்றுரையின், பற்றற்றே மென்பாரென்றும் சிறிதாய்க் கணக்குள்ளே அழிவுபாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்காலம் நரகபாதனபாவத்தைச் செய்வார் அதன்வினைகள் * "அந்தோ வினையே யென்றழுவ" ராகலின், எற்றெற்றென்று கூறினர். இவையைந் தும்பாட்டானும் கூடாவொழுக்கத்தின் இழுக்கம் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—பற்று அற்றே மென்பார் - (பிறர் தம்மைதன்கு மதித்தற்பொருட்டு) பற்றற்றேமென்று சொல்லுவாரது, படிறு ஒழுக்கம்-மறைந்த நெறியொழுக்கமானது, அப்பொழுது இனிதுபோல் தோன்றுமாயினும்) எற்றென்றென்று - (பின்) என்செய்தோம் என்செய்தோமென்று (தாமே இரங்கும்படி), எதம் பலவும் - பல துன்பங்களையும், தரும் - (அவருக்குக்) கொடுக்கும்.

கூ. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணரில்

(பரி-ரை.) எ-து—நெஞ்சாற் பற்றாது வைத்து பற்றற்றார்போன்று தானஞ்செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல வன்கண்மையையுடையார் உலகத்தில்லை, எ-று.

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறமைக்கண் தேவராதற் பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னது ஈதுமென்று அறியாது ஈந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல் அவர் இழிபிறப்பினராதல் ‡ "அடக்க

---

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம். உஎ.

‡ சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், உசச.

வர்க் கீக்த தானப்பயத்தினுலறு மூக்கீர்த்-தடங்கட னடியுட் டீவுபலவுள வவற்றுட் டோன்றி—புடமபொடி மூகங்க ளொவ்வா சூழ்கணி மாந்தி வாழ் வர்—மடங்கலஞ் சீறறத துப்பின் மானவேன் மன்ன ரேறே." என்பதனு னறிக. தமகசு ஆவண செய்தாக்கு ஆகாதன வீளைதலின், வன்கணரில் லென்றார.

(தெ-ப-ரை.)—கொஞ்சின் - மாகதிலை, தூறவார் - (பற்றுக் கோ) வீடாராகி, தூறகதாபோல - தூறகவாபோல, வஞ்சிகத - (தானஞசெய்வாரை) வஞ்சித்து, யாழ்வரின்-யாழுமவர்போல வன் கணர் - இரக்கமிலலாதவர், இல - இலர்

எ புறங்குன்றி கண்டனைய ரேனுமகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைதது

(பதி-ரை) எ-து,—குன்றிபின்புறமபோல வேடத்தாற செமமையுடைய ராயினும் அதன்மூகருப்போல மனம் இருணடிருப்பாரை உடைத்து உல கம், எ-று.

குன்றி - ஆருபெயர. செமமை கருமையென்பன * பொருளின்கண் நிறததைவிட்டுச செப்பததினும அறியாமைபினுஞ் சென்றனவாயினும, பண் பால் ஒததலின், இவை பணபுவமை ! "கூழின் மலிமனம போன்றிருளா கின்ற கோகிலமே" என்பதுமது.

(தெ-ப-ரை)—புறம் - மேமேல, குன்றி - குன்றிமணியானது, கண்டி அனையா ஏனும் - காணப்படுதலபோற் காணப்படுகிற செம் மையை யுடையவராயினும், அகம் - உள்ளே, குன்றி மூக்கின்- அக்குன்றிமணியின் மூக்குப்போல, கரியார் - கறுதிருப்பவரை, உடைத்து - (உலகம்) உடையது.

அ மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(பரி-ரை.) எ-து,—மாசு தம்மனதினகணணதாகப் பிறாக்குத தவத் தான் மாட்சிமையுடையாராய நீரின்மூழ்கிகாட்டி, தாம் அதன்கணணே மறை ந்து செல்லுமமாந்தர் உலகத்துப் பலர, எ-று.

பெ ருள—உ, பரேயப

‡ வாழுமப படிபொனறிங கணடிமை வாழியி பாமபொழிறறேன—சூழு முகசசுற றும் பறறின வாறசிருணடையுங கனிவ —யாழின மொழிமஙகை பஙகன றிறறம்பல மாதரியாக- கூழின மலிமனம போனறிருளா னின்ற கோகிலமே-சிருசசிறறம்பலக் கோவையாரா,

மாசு-காம வெகுளி மயக்கங்கள். அவை போகற்கன்றி மாண்டாரென்ற பிறர் கருதுதற்கு நீராடுதலான், அத்தொழிலை அவர் மறைதற்கு இடனுக்கினர். இனி மாண்டார் நீராடியென்பதற்கு மாட்சிமைப்பட்டாரது நீர்மையையுடையராயென் றுரைப்பாருமுளர். இவையூன் றுபாட்டானும் அவ்வொழுக்கமுடையாரது குற்றமும் அவரையறிந்து நீக்கல்வேண்டுமென்பதும் கூறப்பட்டன.

(தெ-ப-ரை)—மாசு-அழுக்கானது, மனத்கதுஆக-(தம்) மனத்தினுள்ளதாக, மாண்டார் - (பிறர்க்குத் தவத்தால்) மாட்சிமையுடையவராக, நீர் ஆடி-நீரிலே முழுகிற்நாட்டி). மறைந்து-(தாம் அதனிடத்தே) மறைந்து, ஒழுகும் - நடந்தும். மாந்தர் - மனிதர், பலர்-(உலகத்தில்) பலர்.

கூ. கணிகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வீணபடு பாலாற் கொளல்.

(பரி-னை.) எ-து,—அம்பு வடிவாற்செவ்விதாயினும். செயலாற் கொடிது; யாழ் கோட்டால் வளைத்தாயினும், செயலாற் செவ்வியது; அவ்வகையே தவஞ்செய்வோரையும கொடியர் செவ்வியரென்பர், வடிவாற்கொள்ளாது, அவர் செயல்பட்ட கூற்றானே அறிந்துகொள்க, எ-று.

கணைக்குச்செயல் கொலை. யாழுக்குச்செயல் இசையாலின்பம் பயத்தல். அவ்வகையே செயல பாவமாயிற் கொடியரெனவும், அறமாயிற் செவ்வியரெனவும் கொள்கவென்பகாம். இதனுன் அவரையறியுமாறு கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—கணை-அம்பானது, (வடிவினாலே செவ்விதாயிருந்தாலும்) கொடிது - (செயலினாலே) கொடியதாயிருக்கின்றது, யாழ்-வீணையானது, கோடு-(வடிவினாலே) வளைவினதாயிருந்தாலும், செவ்விது-(செயலினாலே) செவ்விதாயிருக்கின்றது, ஆதகு-அவ்வகையே, அன்ன-தவஞ்செய்வார் கொடியர் செவ்வியராயிருக்கைகளை, (அவரதுவடிவினாலே கொள்ளாமல்), வீணைபடுபாலால்-(அவரது) செயல்பட்ட பகுப்பினாலே, கொளல்-அறிந்துகொள்ளக் கடவர்.

கூ. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

(பரி-ரை.) எ-து,—தவஞ்செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா, உயர்ந்தோர் தவத்திற்காகாதென்று தம்மாலுமுலகிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின், எ-று.

பறித்தலும மழித்தலுள் அடங்கும். மழித்தலெண்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூரராயினர். இதனுற் கூடாவொழுக்க மில்லாதார்க்கு வேடமும் வேண்டாவென அவரது சிறப்புக் கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—உலகம் - உயர்ச்சிதரால், பழித்தது - (தவத்திற்குஆகாதென்று) குற்றஞ்சொல்லப்பட்ட ஒழுக்கத்தை, ஒழித்தவிடம் - நீக்கினவிவராயின், மழித்தலும் - (தவஞ்செய்வோர்க்குத் தலைமயிரை) முண்டிதஞ்செய்தலும், நீட்டலும்-அதனை) சடையாக்கலும் (அல்லதுவளர்த்தலும்), வேண்டா-வேண்டுவன அல்ல.

ஆம் அதிகாரம்—கள்ளாமை.

ஆதாவது பிறருடைமையாயிருப்பு நியாதொருபொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாமை. கருதலும் செய்தலோடொத்தலின், கள்ளாமையெனமுர். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டு வகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களே அகுணமாகொள்ளினும் அமையும்; துறவறத்தார்க்காயின் அதனைக் கருதியவழியும் பெரியதோரிழுக்காம் ஆகலின், இது துறவறமாயிற்று. புறத்துப்போகாது மடங்கி ஒரு தலைப்பட்டு யிரையே நோக்கறபாலதாய அவர்மனம் அஃதொழிந்து புறத்தே போந்து பரிலைப்பட்டு உடம்பின் பொருட்டுப் பொருளே நோக்குலேபன்றி, அதுதன்னையும் வஞ்சித்துக்கொள்ளக் கருதுதல் அவர்க்குப் பெரியதோரிழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மையுடைமைக்கு கொல்லாமையீறாய நான்கதிகாரத்திற்கு மொக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம்பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

க. எள்ளாமை வேண்டுவா னெஞ்ஞா னெஞ்ஞான்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(பரி-ரை.) எ-து,— வீட்டினியகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்குமதிக்கப்படுவான் யாதொருபொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாவகை தன்னெஞ்சினைக்காக்க, எ-று.

எள்ளாதென்னும் எதிர்மறைவினையெச்சம் எள்ளாமையெனத் திரிந்து நின்றது. வீட்டினை யிகழ்தலாவது காட்சியே அளவையாவதென்றும், நிலம், நீர், தீ, வளியெனப் பூதம் நான்கேயென்றும், அவற்றது புணர்ச்சிவிசேடத்தாற் றோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு மதுவின்கட் களிப்புப்போல வெளிப்பட் டழியுமென்றும், இறக்தவுயிர் பின்பிறவாதென்றும், இனபமும் பொருளும் ஒருவனுற் செய்யப்படுவதென்றுஞ் சொல்லும் உலோகாயதமுதலிய மயக்கநூல்களைத் தெளிர்து, அவற்றிற்கேறய ஒழுகுதல். ஞானத்திற்கேதுவாய மெய்ந்நூற்பொருளேயேனும் ஆசிரியனே வழிப்பட்

ன்றி அவனவஞ்சித்துக் கொள்ளின், அதுவுங் களவாமாகலின், எனைத் தொன்றுமென்னூர். நெஞ்சு கள்ளாமற் காக்கவெனவே, துறந்தார்க்கு விலக் கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதலென்பது பெற்றும்.

(தே-ப-ரை.)—எள்ளாமை - (முந்திலை) இகழாமல், வேண் டுவான்என்பான் - விரும்புபவோன் இவனென்று (கவுத்தோராலே) நன்றாகமதிக்கப்படுவோன், யாஞ்சொல்லும் - யாதொருபொரு ளையும், கள்ளாமை - பிறரைவஞ்சித்துக்கொள்ளாதினைபாதபடி, தன் நெஞ்சு - தனதுநெஞ்சை, காக்க - காக்கக்கடவன்.

உ. உள்ளத்தா லுள்ள லுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்ளா மெனல்.

(பரி-ரை.) எ-து,—குற்றவஞ்சகங் கண்ணெஞ்சாற் கருதுதலும் துறந் தார்க்குப் பாவம்; ஆதலால், பிறனொருவன்பொருளை அவன் அறியாவகை யால் வஞ்சித்துக்கொள்ளாமென்று கருதற்க, எ-று.

உள்ளத்தாலென வேண்டாது கூறினர், அவருள்ளம் ஏனையாருள்ளம் போலாதுசிறப்புடைத்தென்பது முடித்தற்கு. உள்ளலுமென்பது இழிசிறப் பும்மை. அல் விகுதி வியங்கோளெனிர்மறைகண வந்தது. இவை யிரண்டு பாட்டானும் இங்கடைக்குக் களவாவது இதுவென்பதூஉம் அது கடியப்படுவ தென்பதூஉங் கூறப்பட்டன.

(தே-ப-ரை)—உள்ளத்தால்-(குற்றங்களைத்தாது) நெஞ்சி னாலே, உள்ளலும்-நினைத்தலும், தீதே-(துறந்தார்க்குப்) பாவ மேயாம் (ஆதலால்), பிறன்பொருளை-பிறனதுபொருளை, கள்ளத் தால்-அவனறியாதவகையினால், கள்ளாம்-வஞ்சித்துக்கொள் வோம், எனல்-என்று நினையாதிருக்கக்கடவர்.

கூ. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—களவினுளதாகிய பொருள் வளர்வதுபோலத் தோ றித் தன்னெல்லையைக் கடந்துகெடும், எ-று.

ஆக்கத்திற்கேதுவாகலின், அக்கமெனப்பட்டது. எல்லையைக் கடந்து கெடுதலாவது தான் போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்தஅறத்தையும் உடன்கொண்டுபோதல். அளவறிந்தென்று பாடமோதி அவர் பயன்கொள்ளு மளவறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடுமென்றுரைப் பாரு முளர்.

(தே-ப-ரை.)—களவினால் - (பிறரை) வஞ்சித்தலால், ஆகிய உண்டாகிய, ஆக்கம்-பொருளானது, ஆவதுபோல - வளர்வதுபோலவே(தோன்றி), அளவு இறந்து-(தனது) எல்லையைக் கடந்து, கெடும்-அழியும்.

ச. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(பரி-ரை.) எ-து,—பிறர்பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும் பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும், எ-று.

கன்றுதலான் வஞ்ஞான்றும் அகளவையே பயில்வித்து அகஞற் பாவமும் பழியும் பயந்தேவிடுமென்பான், வீயாவிழுமந்தருமென்றார். இவை யிரண்டு பாட்டானும் அது கடியப்படுதற்குக் காரணங்கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—களவின்கண்-(பிறர்பொருளை) வஞ்சித்துக் கொள்ளுதலில், கன்றிய-மிகுந்த, காதல்-ஆசையானது, (அப்போது இனிதுபோல் தோன்றி), வீயாவிழுமம்-தொலையாத துன்பத்தை, தரும்-கொடுக்கும்.

நி. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்

(பரி-ரை.) எ-து,—அருளினது உயர்ச்சியையறிந்து அதன்மேல் அன்புடையராய் ஒழுகுதல் பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பார்மாட்டு உண்டாகாது, எ-று.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்து போந்தவர் பின் பிறர்க்குரிய பொருளை நன்குமதியாது அதனை வஞ்சித்துக்கோடற்கு அவரது சோர்வுபார்க்கும் மருட்சியானுல், அவர்மாட்டு, உயிர்கணமேலருள் செய்தல் நமக்குறுதியென்றறிந்து அவ்வருளின் வழுவாதொழுகுக் தெருட்சி கூடாதென்பதாம்.

(தே-ப-ரை.)—அருள் - அருளினது உயர்ச்சியை, கருதி-அறிந்து, அன்புடையர்ஆதல்-(அதன்மேல்) அன்புடையராய் நடத்தல், பொருள் - (பிறர்) பொருளை, கருதி – (வஞ்சித்துக்கொள்ள) நினைத்து, பொச்சாப்பு-(அவரது) சோர்வை, பார்ப்பார் கண்-பார்ப்போரிடத்து, இல்-உண்டாகாது.

கூ. அளவின்க ணின்றுழுக லாற்றுர் களவின்கட்
கன்றிய காத லவர்.

(பரி-ரை.) எ-து,—உயிர் முதலியவற்றை அளத்தலாகிய நெறியின்கணின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார் களவின்கண்ணே மிக்க வேட்கையையுடையார், எ-று.

உயிர்முதலியவற்றை அளத்தலாவது காட்சி முதலாகச சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற கல்வினை தீவினைக்கு உற்றவிளைவுகளையும், அவற்றுன் அது காற்கதியுட் பிறந்திறந்து வருதலையும், அ ஃதெய்யாமல் அவற்றைக் கெடுத்தற்குபாயமாகிய யோக ஞானங்களையும், அவற்றுன் அஃதெய்தும் வீட்டினையும், அளந்து உள்ளவாறறிதல். இதனை ஆருகதர் தருமத்தியான மென்ப. அதற்கேற்ப ஒழுதலாவது அவ்வளக்கப்பட்டனவற்றுள தியனவற்றினீங்கி நல்லன வற்றின்

(தெ-ப-ரை.)—களவின் கண்-களவினிடத்தே, கன்றிய-மிகுந்த, காதலவர்-ஆசையையுடையவர்; அளவின்கண்நின்று - (உயிர்முதலானவைகளை) அளவுசெய்தலாகிய வழியில் நின்று, ஒழுகல்ஆற்றார்-(அதற்கு ஏற்ப) நடக்கமாட்டார்.

எ. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

(பரி-ரை.) எ-து;—களவென்று சொல்லப்படுகின்ற இருண்டஅறிவினையுடையராதல் உயிர முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினர்கண் இல்லை. எ-று.

இருள்-மயக்கம். காரிபத்தைக் காரணமாக வுபசரித்துக் களவென்னுங் காரறிவாண்மையென்றும், காரணத்தைக் காரியமாக்கி அளவென்னுமாற்றலென்னுங கூறினர். களவுந்துறவும் இருளுமொளியும்போலத் தம்முண் மாறுகலின், ஒருங்கு நில்லாவென்பதி இவை மூன்றுபாட்டானுங் கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—களவுஎன்னும் – களவென்று சொல்லப்படும், காரி - இருண்ட, அறிவுஆண்மை - அறிவினையுடையராயிருக்கை, அளவு என்னும் - (உயிர்முதலானவைகளை) அளத்தலென்று சொல்லப்படும், ஆற்றல் - பெருமையை, புரிந்தார்கண் - விரும்பினவரிடத்து; இல் - இல்லை.

அ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு

(பரி-ரை.) எ-து,—அவ்வளத்தலேயே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலைபெற்றாற்போல நிலைபெறும், களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை, எ-று.

உயிர்முதலியவற்றை அளந்தறிந்தாக்குக தறவதஞ்சலியாது நிற்கு மென்பது அவ்வுமையாற் பெற்றாம். களவோடு மாறின்றி நிற்பது இதனாற் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—களவுஅறிந்தார் - களவைஅறிந்தவரது, நெஞ்சில்-மனத்தில், கரவு - வஞ்சனையானது, அளவறிந்தார் - அவ்வளத்தலே அறிந்தவரது, நெஞ்சத்து - நெஞ்சில், அறம்போல - அறம் நிலை பெறுவதுபோல, நிற்கும் - நிலைபெறும்.

கூ அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றாத வர்

(பரி-ரை.) எ-து.—அவ்வளவல்லாத தீயநினைவுகளை நினைத்து அப்பொழுதே கெடுவர், களவல்லாத பிறவற்றை அறியாதவர். எ-று

தீயநினைவுகளாவன பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனையால் அது கொள்ளுமாறும், கொண்டவஞ்ஞல் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. நினைத்த ஞ் செய்தலாகலிற் செய்தென்றும், அஃது உள்ள வாறுகளைப் போகவிட்ட சொற்செயல்களைப் புகுவித்தது அப்பொழுதே கெடுக்குமாகலின் ஆங்கே வீவரென்றும் கூறினார். மற்றைய வாவன துறந்தார்க்கு உணவாக வோதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும், இல் வாழ்வார் செய்யுந் தானங்களுமாம். தேற்றாமை - அவற்றையே நுகர்ந்து அவ்வளவால் நிறைந்திருத்தலே அறியாமை. இதனாற் கள்ளார் கெடுமாறு கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—களவுஅல்ல - களவல்லாத, மற்றைய - மற்ற வைகளை, தேற்றாதவர் - அறியாதவர் [களவொன்றையே அறிந்தவரென்றபடி], அளவுஅல்ல - அவ்வளவல்லாத தீயநினைவுகளை, செய்து - நினைத்து, ஆங்கே - அப்போதே, வீவர் - கெடுவர்.

கo. கள்ளார்க்குத் தள்ளா முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(பரி-ரை.) எ-து,—களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்புந் தவறும்; அது செய்யாதார்க்கு நெடுஞ்சேணதாகிய புத்தே ளுலகுந் தவருது, எ-று.

உயிர் நிற்றற்கிடனுகலின், உயிர்நிலையெனப்பட்டது. சிறப்பும்மைகள் இரண்டும் விகாரத்தாற்றொக்கன. இம்மையினும அரசனுல் ஒறுக்கப்படுதலின் உயிர்நிலையுந் தள்ளுமென்றும், மறுமையிலுந் தேவராதல் கூடுதலின் புத்தே ளுலகுந் தள்ளாதெனறு கூறினுர். ※ "மற்றது — தள்ளினுந் தள்ளாமை நீத்தது" என்புழியும் தளளுதல இப்பொருட்டாதலறிக. இதற்குப் பிறவாறுரைப்பாருமுளர். இ-னுல் இருவாபயனும் ஒருவகு கூறப்பட்டது.

(தெ-ப-ரை)--களவார்க்கு-களவிலே பழகுவார்க்கு, உயிர் நிலை - (தம்மின்வேறலலாத உடம்பும், தள்ளும்-தவறும்; கள்ளார்க்கு - களவிலேபழகாதவர்க்கு, புத்தேள்உலகு - (நெடுந்தூரமாகிய) தேவருலகமும், தள்ளாது-தவருது.

கூ0-ம் அதிகாரம்—வாய்மை.

அஃதாவது மெய்யினது தன்மை. பெரும்பான்மையுங காமமும பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கங் களளாமைகளினபின வைகுகபபட்டது.

கூ வாயமை யெனபபடுவ தியாதெனின் யாதொனறுந்
தீமை யிலாத சொலல்.

(பரி-ரை.) எ-து,—மெய்ம்மையென்று சிறப்பித்துச சொல்லப்படுவது யாதென்று வினவின், அது பிறிதோருயிர்க்குந் தீங்கு சிறிதும பயவாதசொற் களோச சொல்லுதல், எ-று.

தீமை யாதொன்றும் இலாதவென இயையும். எனப்படுவதென்பது "ஊரெனப்படுவ துறையூர்" என்றுரைபோல நின்றது. இச்சூனன் நிகழ்ந்தது கூறலென்பது நீக்கப்பட்டது. அதுதானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பித் பொய்ம்மையாமென்பது கருத்து.

(தெ-ப-ரை)—வாய்மைஎனப்படுவது-மெய்ம்மையென்று சிறப்பித்துச்சொல்லப்படுவது, யாதுஎனின் - யாதென்று வினவினுல்- (அது பிறிதோருயிர்க்கு), யாதுஒன்றும் - சிறிதாயினும், தீமை இலாத - தீமையைத்தராத சொற்களை, சொலல் - சொல்லுதல்.

வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் அவ்விருவகைப்பயனையுந் தானே தருமென்பார், எய்யாமை யெல்லாவறமுந் தருமென்றார்.

(தே - ப - ரை)—பொய்யாமை அன்ன - (ஒருவனுக்கு) பொய் பேசாமைக்கு ஒப்பாகிய, புகழ் - புகழ்நாரணம், இல்லை - (இம் மைக்கு) இல்லை, (அது அவனுக்கு), எய்யாமை - (உடம்பு) வருந் தாமல், எல்லா அறமும் - எல்லா வறங்களையும், தரும் - (மநமைக் குந்தானே) கொடுக்கும்

எ பொய்யாமை பொய்யாமை யாற்றி னறப்பிற
பொய்யாமை பொய்யாமை நன்று

(பரி-ரை.) எ - று,—ஒருவன் பொய்யா மையைப் பொய்யாமையையே செய்ய வல்லனாயின், அவன் பிறவறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று, எ-று.

அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று, எனையது துணி வின்மேற்று. பலவறங்களையும் மேற்கொண்டு செய்தற்கருமையால் சிலவ றிற் குற்றப்படலின், அவையெல்லாவற்றின் பயனையுந் தானே தவற்றாது இதனையே மேற்கொண்டு தவறுமற் செய்தல் நன்றென்பார், செய்யாமை செய்யாமை நன்றென்றார். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய் யாமற்செய்தி பிறவறஞ்செய்கை நன்றெனப் பொருட்பாகப் பொய்கூறிற் பிறவறஞ்செய்கை நன்றாகுமென்பது அ னுந் போந்த பொருளாக்கி உரைப் பாருமுளர். பிறவறங்களெல்லாங் தரும் பயனைத் தானே தரும் ஆற்றலுடைத் தென மறுமைப்பயனது மிகுதி இவை மூன்றுபாட்டானும் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—பொய்யாமை பொய்யாமை - (ஒருவன்) பொய்பேசாமையையே பொய்பேசாமையையே, ஆற்றின் - செய்ய வல்லவனுயின், அறப்பிற - பிறவறங்களோ, செய்யாமை செய்யாமை- (அவன்) செய்யாமையே செய்யாமையே, நன்று - நல்லது.

அ புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(பரி-ரை.) எ- ,—ஒருவனுக்கு உடம்பு தூய்தாந்தன்மை நீரானே யுண்டாம்; இ ுபோல மனந்தூய்தாந்தன்மை வாய்மையாலுண்டாம், எ-று.

காணப்படுவது ள்ளதாகலின், உண்டாமென்றுரைக்கப்பட்டது. உட ம்பு தூய்தாதல் - வாலாமை நீகுதல். மநந்தூய்தாதல் - மெய்யுணர்தல். புறத்தூய்மைக்கு நீரல்லது காரணமில்லாதாற்போல, அகத்தூய்மைக்கு

வாய்மையல்லது காரணமில்லை யென்றவாறுயிற்று. இதனானே தூநீத்தார்க்கு இரண்டேதாய்மையும் வேண்டுமென்பதூஉம் பெற்றாம்

(தே - ப - ரை)—புறம் - (ஒருவனுக்கு) உடம்பு, தூய்மை - பரிசுத்தமாகுந்தன்மை, நீரான்-நீரினால், அமையும்-உண்டாகும், அது போல, அகம்-மனது. தூய்மை-பரிசுத்தமாகுந்தன்மை, வாய்மையான்-உண்மையால், காணப்படும்-உண்டாகும்.

கூ எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

(பரி-ரை.) ஈ-து,—புறத்திருள் கெடியும் உலகத்தார் விளக்குகள் எல்லாம் விளக்குகளாகா; தூரவான் அறமாகாத விளக்காலும் மனத்திருள் கெடியும் பொய்யாமையாகிய விளக்கே விளக்காவது, உ-ம்.

உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீயென்பன. இவைதமக்குப் போகாத இருள் போகலின், பொய்யாவிளக்கே விளக்கென்றார். அவ்விருளாவது அறியாமை. பொய்யாத விளக்கென்பது குறைத்து நின்றது; பொய்கூறாமையாகிய விளக்கென்றவாறு இனி இதற்குக் கல்வி முதலிய வற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல, அவைதார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே விளக்கமென் றுரைப்பாரு முளர்.

(தே - ப - ரை)—சான்றோர்க்கு-(குறைவிஞரே) நிறைந்தோருக்கு, எல்லாவிளக்குஞ்-(புறத்திருளை நீக்குகிற உலகத்தோரது) விளக்குகளெல்லாம், விளக்கல்ல - விளக்குகளாவனவல்ல, பொய்யா விளக்கே - (அகத்திருளை நீக்குகிற) பொய்யாமையாகிய விளக்கே, விளக்கு - விளக்காம்

கூ0. யாமெய்ப்பாம் கண்ட பிறவறனிலே யெஞ்ஞான்றுந்தான்றும்
வாய்மையி னல்ல பிற

(பரி - ரை.) எ-து.—யாம் மெய்த்நூல்களாகக் கண்ட நூல்களுள் யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறகளில்லை, எ-று.

மெய்யுணர்த்துவனவற்றை மெய்யெனபார். அவையாவன தகுதண்மயக்கம் இன்மையின் பொருள்களோ யுள்ளவா றுணரவல்லராய்க் காமவெகுளிகள் இன்மையின் அவற்றையுணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய், இறைவன் அருளான் உலகத்தார் உறுதி யெய்துதற்பொருட்டுக் கூறிய ஆகமங்கள். அவையெல்லாவற்றினும் இஃதாப்ப முடித்துரைப்பதாம். இவை மூன்றுபாட்டானும் இவ்வறத்தினது நிலைமை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—யாம்-எம்மால, மெய்ஞ்ஞக-மெய்க்நூல்களாக, கண்டவற்றுள் - காணப்பட்ட நூல்களுள், எனைத்துஒன்றும்-யாதொருதன்மையாலும், வாய்மையின் - உண்மையில், கல்ல - மேற்பட்டவையாகிய, பிற - பிறவறங்கள், இல்லை - இல.

நக-ம் அதிகாரம்—வெகுளாமை.

அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவனமாட் டெதாய விடத்தும் அதனைச் செய்யாமை. இது பாயம்மைபற்றி கிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

க. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

(பரி-ரை.) எ-து,—தன்னினம பலிக்குமிடத்து அதனை யெழாமற்தடுப் பானே அருளாற் றடுப்பானுவான்; எனைப்பலியாதவிடத்து அதனைத்தடுத்தா லென் தடாதொழிந்தாலென ! எ-று.

செல்லிடம் அல்லிடமென்றது தவத்தாற் றன்னின் மேலியாரையும் வலி யாரையும். வலியார்மேற் காவாவழியும் அதனுன் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையிற் காத்தவழியும் அதனில்லை யென்பார், காக்கினென் காவாக் காலென் னெனருர். இதனுன் வெகுளாமைக் கிடங கூறப்பட்டது.

(தே - ப - ரை)—சினம் - (தன்) கோபத்தை, செல்இடத்து (அது) பலிக்குமிடத்தி, காப்பான் - (உண்டாகாமல்) தடுப்பவனை, காப்பான் - (அருளினுலே) தடுப்பவனுவான்; அல்இடத்து - மற்றைப்பலியாதவிடத்து, காக்கின் - அதனைத் தடுத்தால், என் - என்ன, காவாக்கால - தடுக்காவிட்டால் என் - என்ன.

உ. செல்லா விடத்துச் சினந்தீயது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் வெகுளி தன்னின் வலியார்மே லெழின் தனக்கே தீதாம்; மற்றை யெளியாரிமே லெழினும் அதனிற் றீயன பிற இல்லை, எ-று.

செல்லாவிடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான் வரும்எதமை, எனையது இம்மைக்கட்பழியும் மறுமைக்கட்பாவமும் பயத்தலின், அதனிற் றீயன பிறவில்லை யெனருர். ஒரிடத்தும் ஆகாதென்பதாம்.

(தே - ப - ரை.)—சினம்-(ஒருவனது) கோபமானது, செல்லா இடத்து - தன்னின் வலியவர் மேல் (உண்டாயின்), தீது-(தனக்கே) தீதாம்; செல்இடத்தும் - தன்னினெலியவர் மேல் (உண்டாயினும்), அதனின் - அக்கோபத்தினும், தீயபிற - தீமையுடையவை வேறே, இல் -

கூ. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்

(பரி-ரை.) எ-து —யார்மாட்டும் வெகுளியை ஒழிக, ஒருவற்குத்தீயன வெல்லா முளவாய்விடுதலான் அதனான் வருமே ஆகலான், எ-று.

வலியார், ஒப்பார், எளியரென்னும் மூவர் மாட்டும் ஆகாமையின் யார் மாட்டு மென்றும்.மனத்தாற் றுறத்தற்கு ஏகாதனவாகிய தீச்சிந்தைக ளெல்லாவற்றையும் பிறப்பித்தலின் தீயபிறத்த லிதனான் வருமென்றும் கூறினர்.

(தே - ப - ரை.)—யார்மாட்டும்-பாவரிடத்திலும், வெகுளியை கோபத்தை, மறந்தல் - மறக்கக்கடவர், (ஒருவருக்கு), தீய - தீமையுடையவையெல்லாம், பிறத்தல்-உண்டாதலால், அதனான்வரும்-அக்கோபத்தினாலே வரும், (ஆதலால்).

ச. நகையு முவகையுங் கொல்லுஞ் சினந்திற்
பகையு முளவோ பிற.

(பரி-ரை.) எ-து,—துறந்தார்க்கு அருளான் ஒளவாய முகத்தின்கண் நகையையும் மனத்தின்கண் உவகையையுங் கொன்று கொண்டுகெடுகின்ற சினமே அல்லது அதனிற் பிறவாய பகைகளும் உளவோ இல்லை, எ-று.

உறவாற் புறபகை யிலராயினும் ஊட்பகையார் நின்று அருணமுதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமும் எய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின்மிக்க பகையில்லையாயிற்று. இவை மூன்றபாட்டானும்வெகுளியது தீங்கு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—நகையும் - (துறந்தார்க்கு அருளினாலே (உண்டாகிய முகத்திலிடத்து) மலர்ச்சியையும், உவகையும் - (மனத்தினிடத்து) மகிழ்ச்சியையும், கொல்லும் - கெடுத்து எழுகின்ற, சினத்தின் - கோபத்தின், பிற - வேறாகிய, பகையும் - பகைகளும், உளவோ - உண்டோ [இல்லை].

ஞ. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவார்க்காற்
றன்னைச்சி கொல்லுஞ் சினம்.

(பரி-ரை.) எ-து —தன்னேத்தான் தன்பமெய்தாமற் காக்க நினேத்தாளு யின், தன்மனத்துச் சினம் வராமற்காக்க; காவாளுயின், அச்சினஞ் தன் னேயே கெடுக்குங் கடுந்துன்பங்களே யெய்துவிக்கும், எ-று.

* "வேண்டிய வேணடியாங் கெய்துதற்" பயத்தாய தவத்தைப் பிறர் மேற்சாபம் விடுத்தற்காக இழந்து ... வதுதன்பத்தோடு பழைய பிறவித் துன்பமும் ஒருங்கெய்துதலின், தன்னேயே கொல்லுமென்றார். ‡ "கொல்லச் சுரப்பதாகீழ்" என்புழிபோலக் கொலேசுசொல் ... ணடித் துன்பமிகுதி யுணர்த்தி நின்றது.

(தே - ப - ரை.)—தன்னேத்தான் காக்கின்-(துன்பம் அடை யாமல்) தன்னேத்தான்காக்கநினேத்தாளுகில், சினம்-(தன்மனத்திலே) கோபம் (வராமல்), காக்க - நம்மக்கட்டவன்; காவாக்கால்-காவாளு யின், சினம்-அக்கோபமானது, தன்னே வீ-டியினீய, கொல்லும்-கெடுக்குங் கடுந்துன்பங்களே அடைவிக்கும்.

கூ. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு மேமப் புணேயைச் சுடும்

(பரி-ரை) எ-து,—சினமென்றும் பெருப்புத் தனக்கு இடமானவரையே யன்றி அவர்க்கு இணமாகிய எமப்புணேயையுஞ் சுடும், எ-று.

சேர்ந்தாரைக்கொல்லியென்பது எதுப்பெயர்; தான் சேர்ந்த விடத்தைக் கொல்லுங்தெருப்பு லது என்றவாறு. சேர்ந்தாரை யென வேயமைந்தினேப் பன்மை மேல் வைத்து ஏனேரன்குபமாலும் தழகருதுதோடுகூடிய பொருளாற்றலாற் கொண்டார்; ஈணடி உருவகஞ்செயகின்றது துறக்தார் சினத்தைப்யாகலின். சினமென்னு நெருப்பென்ற விதப்பு, உலகத்து நெருப்புசுடுவது தான்சேர் ந்த விடத்தையே இந்நெருப்பு சேராத விடத்தையுஞ் சுடுமென்னும் வேற் றுமை தோன்ற, நின்றது. ஈணடி இனமென்றது முற்றத்துறந்த தவஞா னங்களாற் பெரியரய்க் கேட்டார்க்கு உறுதி மொழிகளே இனியவாகச சொல் லுவாரை. உருவகமேற்கொண்ட சுடுமென்னுங் குறளில் கொடுத்தாராயினும், அகற்றமென்பது பொருளாகக்கொள்க. எமப்புணே-எமதூதை யுபதேசிக்கும் புணே. இனமென்னும் எமப்புணேயென்ற எகதேச வுருவகத்தாற் பிறவிக்கட லுள் அழுந்தாமல் வீடென்னுங் கரையேற்றுகின்ற வென வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. தன்னேயும் வீழ்ந்தது எடுப்பாரையும் அக ற்றமென் பதாம்.

திருக்குறள்—உசுடு.

‡ இதலர் கன்றுக வீயாரா வாச—விதிற் சுரப்பதாம் வண்மை-விதின்றி-வல்லவ ருன்ற வழியாடோல் வயமை,துட பெல்லாச் சுரப்ப தகிழ்ந் தாலழியா, வயமை.

(தெ - ப - ரை)—இனம்எனனும் - கோபமாகிய, தீச்சார்தாரைக் கொல்லி - கெடுப்பானது, (தனக்கு இடமானவரை மாத்திரமல்லாமல்), இனம்என்னும்-(அவருக்கு) இனமாகிய, ஏமம்-இதோபதேசஞ்செய்கிற, புணையை-மரக்கலத்தையும், சுடும்—,

எ. இனத்தைப் பொருளொன்று கொண்டவர் கேடு
நினைத்தக்கதாம் கைவிழைபாற்றன்று.

(பதி-ரை.) எ-து,—இனத்தைத் தன்னுறுதல் உளர்தாதுவதோர் குணமென்று தனக்கொண்டவன் அவ்வாறுநிலைமுதல், நிலத்தின்கண் அறைந்த வன்கை அங்ஙனம் யுறுதல் தப்பாவது போலுமத்தப்பாது, எ-று.

வைடூரிகாபொருள், பணபு, பொன்புல், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறுவகைப்பொருளொன்றுபோல, ரணஜித் சூளாமம் பொருளெனப்பட்டது. பிழையாதவரென்பது சூளாரத்தின்றது இவை மூன்றுபாட்டானும் வெகுளாரார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—இனத்தை - தீநாபத்தை, பொருளென்று-(தனது வல்லமையைநாட்டுகிற) ஒருகுணமென்று, கொண்டவன்-(தன்னிடத்தே) கொண்டபோது, கேடு - அவ்வல்லமை பிழைப்புறுதலுற்று - பூமியிலிடந்து, அறைந்தான் - அறைந்தவனது, கைவைபாதது, நினைபதுஅற்று - (அந்நிலத்திலேபதிதல்) தப்பாதுவிதம் போல் தப்பாது

அ. இணரெரி தோய்வன்ன வின்னாசெயினும்
புணரின் வெகுளாமை நன்று

(பதி-ரை.) எ-து,—பலசுடரை யுடைத்தாய பேரொளித்து தோய்ந்தால் ஒத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும், அவனை வெகுளாமை ஒருவறகுக் கூடுமாயின், அது நன்று, எ-று.

இன்னாமையின் மிகுதி தோன்ற இணரெரியென்றும், அதனைமேன்மேலுஞ்செய்தல் தோன்ற இன்னாவென்றும், அசசெயல் முனிவரையும் வெகுள்விக்குமென்பது தோன்றப் புணரினென்றும் கூறினார். இதனால் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—இணர் - பலசுடர்களையுடைய, எரி - பெருவெருப்பானது, தோய்வு அன்ன-(வந்து) தழுவினாற்போலும், இன்னாதன்பந்தருமவைகளை, செயினும்-(ஒருவன்) செய்தானாயினும், வெகு

ளாமை-(அவன்மேல்) கோபஞ் செய்யாமை, புணரின்-கூடுமாயின், நன்று-(அது) நன்று.

கூ. உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்

(பரி-ரை.) எ-து;—தவஞ்செய்யுமவன், தன்மனத்தால் வெகுளியை ஒரு காலும் நினையானாயின், தான்கருதிய பேறெல்லாம் ஒருங்கேபெறும், எ-று.

உள்ளத்தாலென வேண்டாது கூறியதனால், அருளுடை உள்ளமென்பது முடிந்தது அதனால் உள்ளாமையாவது அவ்வருளாகிய பகையையவர்த்து அதனை முற்றக் கடிதல். இம்மை மறுமை வீடென்ன வேறுவேறு திறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றனே யெய்துமென்பார், உள்ளிய வெல்லாமுடனெய்து மென்றார். இதனால் வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—உள்ளத்தால் - (தவஞ்செய்வோன்) தன் மனத்தால், வெகுளி - கோபத்தை, உள்ளான்எனின் - (ஒருபோதும்) நினையானாயின், உள்ளியவெல்லாம் - நினைக்கப்பட்டபேறெல்லாம், உடன் - ஒருமிக்க, எய்தும் - பெறுவான்

கo. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைச்
துறந்தார் துறந்தார் துணை.

(பரி-ரை.) எ-து;—சினத்தின்கண்ணே மிக்கார், உயிருடையராயினும், செத்தாரோடொப்பர்; சினத்தைத் துறந்தார், சாகற்றன்மையராயினும், அத்தினையொழிந்தாரளவினர், எ-று.

மிக்க சினத்தை உடையார்க்கு ஞானமெய்துதற் குரிய உயிர் நின்றதாயினும் கலக்கத்தான் அம்மெய்தாமை ஒருதலையாகலின், அவரை இறந்தாரினையென்றும், சினத்தை விட்டார்க்கு சாக்காடெய்துதற்குரிய யாக்கை நின்றதாயினும், ஞானத்தான் வீடுபெறுதல் ஒருதலையாகலின், அவரை வீடுபெற்றாரோடொப்பவென்றும் கூறினார். இதனால் அவ்விருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—இறந்தார்-(கோபத்தில்) மிகுந்தவர், (உயிருடையவராயிருக்கினும்), இறந்தார் அனையர் - செத்தாரோடு ஒப்பாவார்; சினத்தை - அக்கோபத்தை, துறந்தார்-ஒழித்தவர், (சாகுந்தன்மையை யுடையவராயிருப்கினும்) துறந்தார்துணை - அச்சாவை யொழிந்தாரோடு ஒப்பாவார்.

ஈஉ-ம் அதிகாரம்—இன்னாசெய்யாமை.

அஃதாவது தனக்கு ஒருபய னேக்கியாதல், செற்றம்பற்றியாதல், சோர்வானுதல் ஒருபிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை. இன்னாசெய்தல் வெகுளியொழியும் நிகழுமென்பது அறிவிக்கற்கு, இது வெகுளாமையின் பின் வைக்கப்பட்டது.

க. சிறபபீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(பரி-ரை.) எ-து,—யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கின்னா செய்து பெறலாமாயினும், அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாற்றான் மனத்துயாது துணிவு, எ-று.

உம்மை பெருமைமேற்று. சிறப்புயகினைச் சிறப்பென்றும், அதன் பயிற்சியான் வாயுவை வென்றெப்படுலின் எட்டுச் சித்திகளையுஞ் சிறப் பீனுஞ் செல்வமென்றும், காமம், வெகுளி, மயக்கமென்னுங் குற்றங்கள் அற் றமையான் மாசற்றாரென்றும் கூறினார். இதனால் தமக்கொரு பயனேக்கிச் செய்தல் விலக்கப்பட்டது.

(தே - ப - ரை)—சிறப்பு - யோகமாகிய சிறப்பினால், ஈனும் - தரப்படுவனவாகிய, செல்வம் - அணிமாமுதலாகிய செல்வங்களை, பெறினும் - பெறலாமாயினும், பிறர்க்கு - மற்றுயிர்களுக்கு, இன்னா-தன்பந்தருமவைகளை, செய்யாமை - செய்யாதிருத்தல், மாசு அற்றார் - (ஆகம வழியினால்) குற்றமற்றோர் (யாவருக்கும்), கோள் -

உ. கறுத்தின்னா செய்தவக் கண்ணுமற் றன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(பரி-ரை.) எ-து —தம்மேற்செற்றங்கொண்டு ஒருவன் இன்னாதவற் றைச் செய்தவிடத்தும், மீண்டுந் தாம் அவனுக்கின்னாதவற்றைச் செய்யாமை யும் அவரது துணிவு, எ-று.

இதுந்தழீஇய எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவ்வின்னாத வற்றை யுட்கொள்ளாதுவிடுதல் செயற்பாலதென்பதாம்.

(தே - ப - ரை)—கறுத்து - ஒருவன் (தம்மேல்) வைரங் கொண்டு, இன்னா - துன்பந்தருமவைகளை, செய்த அக்கண்ணும் - செய்தவிடத்தும், மறுத்து - மீண்டு, இன்னா-அத்துன்பந்தருமவை களை, செய்யாமை (தாம்) செய்யாமையும், மாசு அற்றார் - அக்குற்ற மற்றவரது, கோள் - துணிவு.

நூ செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தாரை
நையா விழுமந் தரும்

(பரி-ரை.) எ-து—யான் முன்போரின்னுமை செய்யாதிருக்கத் தன் மேற் செற்றதெகொண்டவாக்கும் இன்னாவுதரைத் துறந்தவன் செய்யுமாயின், அசெயல் அவனுக்குக் கடக்கமுடியாத இடும்பையைக்கொடுக்கும்,எ-று.

அல்லிடும்பையாவது துவறிடித்து பரியும் பாவமும் எய்துதல்.

(தே - ப - ரை.)—செய்யாமல் - (தான்முன்பு தீங்கு செய்யாதிருந்த தொண்மைச்) செய்யாதிருக்க. செற்றார்க் கும் - (தன்னிடமே) வைரங் கொண்டவர்க்கும், இன்னாத-தீங்கு தருமவைகளை. செய்தாரை-(அதற் கந்தவன்) செய்தானையின் பின்பு, (அச்செயலானது), உய்யா-கடக்க முடியாத, விழுமம்-துன்பத்தை, தரும்- அவனைத் தரும்.

ஈ இன்னா செய்தாரை பொறுத்தலிவர்தரணை
கன்னாய்ந் தெரிதுவிடல்

(பரி-ரை.) எ-து,—தமக்கின்னாதவாறை செய்தாரையு துறந்தோர் ஒறுத்தலாவது, அவர்தாமே காணுமாறு அவருக்கு இனிய வுவகைகளைச் செய்ய அவ்விரண்டினையும் மறத்தல், எ-று.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்குமாகலின், மறக்கற்பால வாயின. அவரை வெலற முயாயது கூடியவாறு. இவை மூன்றுபாட்டானுஞ் செற்றம் பற்றிச செயதல விலக்கப்பட்டது.

(தே - ப - ரை. — இன்னாசெய்தாரை-(தனக்குத்) தீங்கிழைத்தவரை செய்தவரை, ஒறுத்தல்-(தண்டித்தலாவது, அவர்தாம-அவர்(தமே) காணும்படி, நன்மையம்செய்து-(அவருக்கு) இனிமையான மகிழ்ச்சிகளைசெய்து, விடல - (அவரிடையும்) மறத்தலாம்

நி அறிவினு ளுள்ள துண்டோ பிறிதினோய்
தந்தீர்ப்பான் மேற்பா றுறற்கு கடை

(பரி-ரை.) எ-து,—துறந்தார்க்கு உயிர்முதலியவற்றை உள்ளவாறு அறிக்த அறிவினுள் ஆவதொரு பயனுண்டோ, பிறிதோருயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம்முயிர்க் கவற்கனபோலக் குறிக்கொணடு காவாவிடத்து, எ-று.

குறிக்கொண்டு காவாலாவது கடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தன்தொழில்களானும். பிறவாற்றானும், உயிர்களுறுவன வற்றை முன்னேயறிந்து உறுமற் காத்தல். இது பெரும்பான்மையும் அஃ

நிணைக்கண் துன்னிய வுடம்புடையவற்றைப் பற்றி வருதலின் பொதுப்படப் பிறிதினோயென்றும், மறப்பான் அது துன்புறினும் நமக்கின்னாசெய்தலா மென் றறிந்து காத்தல்வேண்டு மாகலின், அது செய்யாவழி அறிவாற் பயனில்லை யென்றாங்கு கூறினார். இன்னாத் தோர்வா, செய்தல் விலக்கப்பட்டது.

(தெ - ப - ரை.)—பிறிநோய் - பேதைமையிற்செய்க, நோய் - துன்பத்தை நாவையதனை, தம்நோய்போல் - நமக்குவந்த துன்பத்தை மனவேபோல, போற்றாஅன் - பாதுகாக்கின்றி, தாய்போற்றாதவிட த்து, அறிவிலாஞ் - (தம்முற்றாக் குறிப்பு (ப) கலியவற்றை உள்ளபடி அறி ந்த) அறிவிலாரே; ஆகுபெயர்-ஆகுமொழியாயன். உவமிடம்-இல்லை.

கஅ இன்னா செயினு நினதா னுயர்நலம் பன்னாள் வரினும்
தீவெய்தற் பாற்றன் றுயர்.

(பதி-ரை.) எ-து;—இவை மக்கட்கு இன்னாதவை யென அறிவுமானத்தால் தானறிந்தவறைப் பிறன்மாட்டுச் செயலே மேவாமை துறந்தவனுக்கு வேண்டும், எ-று.

இன்பதுன்பங்கள் பிரக்ருதமாகலின், அவை காட்சியளவையான் அறி யப்படாமை யறிக. அறமும் பாவமும் உலகாதுமன முளதாயவழி யாக வான், உண்மைத்தவையென்றார்.

(தெ - ப - ரை.)—இன்னாசெ - இன்னாசெயினும் நற்குத்; துன் பந்தருமனமெய்தினும், நா உயர்நலம் - உயர்மானவிரமணத்தி ஞல் ஞானறிந்தவனதுனை. பிற - மகன்-பிறனிடத்து, செயின் - செய் தலில், துன்னாசெய - மிகாதுசெயாவை, வேண்டும் - நிறைந்தானுக்குத் தகுதி.

கக மனைத்தா னலனெனு மாண்மையு மாண்டுமன் னுயிர்த்தா னமைந்தாங்
கடைத்தா ணலனெனு மாண்மை.

(பதி-ரை) எ-து;— மனத்தோடு ளவாகின்ற இன்னாத செயல்களை எக்காலத்தும் யாவர்க்குஞ்சிறிதாயினுஞ் செய்யாமை நலியாயரசும், எ-று.

ஈண்டு மனத்தா னலனெனாவழிப் பாவமிலலையென்பது பெற்றும். ஆற்ற லுண்டாய காலத்தும் ஆகாமையின் எஞ்ஞான்றுமென்றும், எளியார்க்கும் ஆகா மையின் யார்க்குமென்றும், செயல் சிறிதாயினுடபாவம் பெரிதாகலின் எனைத் தென்றாங் கூறினார்.

(தெ - ப - ரை.)—மனத்தான்ஆம் - மனத்தோடு உண்டாகி ன்ற, ஆணை-தின்பந்தருமவைகளை, வஞ்ஞான்றும்-யாதொருகாலத்

எனினும், யார்க்கும்-யாவரொருவர்க்கும், **எனைத்தானும்**-எவ்வளவு சிறிதாயினும், **செய்யாமை**-செய்யாதிருத்தல், **தலை**-முதன்மையான **அறம்**

அ தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

(பரி-ரை.) எ-து,—பிறர் செய்யும் இன்னாதன தன்னுயிர்கு இன்னாவாக் தன்மையை அனுபவித் தறிகின்றவன் நிலேபேறுடைய பிறவுயிர்கட்குத் தானவற்றைச செய்தல் என்னகாரணத்தான், எ-று.

இவ்வாறே இவை பிறவுயிர்களும் இன்னாவென்பது அனுமானத்தான றிந்துவைத்துச செய்கின்ற இப்பாவங களுழப்படாமைபினை, இன்னாதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்துமென்பது ஆகம நூறு மறிந்து ஒழியற்பால னென்பது தோன்றத் தானென்னும், அதுதன்மையான் ஒழியாமைக்குக் காரணம் மயக்கமென்பது தோன்ற என்கொலோவென்றும் கூறினர். இவை மூன்றுபாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது,

(தே - ப - ரை.)—தன்உயிர்க்கு - (பிறர்செய்யுந் துர்பத்தருமவைகள்) தனதுயிர்க்கு, இன்னாமை - துன்பந்தரு மையைபாந்தன்மையை, அறிவான் - (அனுபவித்து) அறிபவன், மன்உயிர்க்கு - நிலேயுள்ள பிறவுயிர்களுக்கு, இன்னா - அத்துன்பந்தருமவைகளை, தான்செயல் - தான்செய்தல், எவன் - யாது.

கூ. பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

(பரி-ரை.) எ-து,—தாந்தவர் பிறர்க்கின்னாதனவற்றை ஒருபகலது முற்கூற்றின்கட் செயவராயின். தமக்கின்னாதன அதன்பிற்கூற்றின்கண் அவர் செய்யாமற் றாமேவரும், எ-று.

முற்பகல் பிற்பகலென்பன பின் முன்னாகத் தொகை ஆரும் வேற்றுமைத்தொகை. தவமழிதலின், அவனவ கடிதினும் எளிதினும் வரும்; அதனல் அவைசெயலாகவென்பதாம். இனித தானேவருமென்பது பாடமாயின், அச்செயல்தானே தமக்கின்னாதனவாய் வருமென உபசாரவழக்காக்கி, ஆக்கம் வருவித்துரைக்க.

(தே - ப - ரை.)—பிறர்க்கு - (துன்பந்தவர்) மற்றவர்களுக்கு, இன்னா - துன்பந்தருமவைகளை, முன்பகல்-ஒருமுகூர்த்தத்தினது முன்பங்கிலே, செய்யின் - செய்தால், தமக்கு - தங்கட்கு, இன்னா-

தன்பத்தருமவைகள், பின்பகல் - அம்முகூர்த்தினது பிற்பாகத்தில், வரும் - (அவர்செய்யாமல்) தாமே வரும்.

கஅ. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்

(பதவுரை.) எ-து,—இன்னுதனவெல்லாம் பிறிதோருயிர்க்கு வரு-ஞ் தன செய்தார்மேலவாம்; அதனால், தம்முயிர்கு இன்னுதன வேண்டாதார் பிறிதோருயிர்க்கு இன்னுதன செயயார், எ-று.

* உவர்க்கத்து விளைவிதிட்டார்க்கு விளைவும் அதுவே யாகலின், நோயெல்லா நோய்செய்தார் மேலவாமென்றார். இது சொற்பொருட்பின் வருநிலை. இவை யிரண்டுபொட்டானும் அது செய்தார்க்கு வருகின்றகு கூறப் பட்டது.

(தெ - ப - ரை) — நோய்வல்லாம் - துன்பந்தருமவையெல் லாம், நோய்செய்தார்மேலவாம் - ஒன்றனுயிர்க்குத்) துன்பந் தருமவைகளைச் செய்தவர்மேலனவாம்; (அதனால்) நோயின்மை வேண்டுபவர் - (தம்முயிர்க்குத்) துன்பந்தருமவை யில்லாமையை வேண்டுபவர், நோய்செய்யார் - (ஒர்றனுயிர்க்குத்) துன்பந்தரு மவைகளைச்செய்யார்.

ஙஙம் அதிகாரம் —கொல்லாமை.

‡ அஃதாவது, யறிவுடையன முதல் ஸ்றறிவுடையன ஈறுய உயிர்களைச சோர்ந்துநு கொல்லுதலை செய்யாமை. இது, மற்றுரிய அறஙகளில் பாவற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் கூறுதலறஙகளையும் அகப்படுத்திநிற்ற மின், இறுதிக்கண் வைக்கப்பட்ட .

க அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்

சேவகஞ்செய்தாபணி முதலியவடபதம், ஏகதே.

‡ புல்லும் மரமும் முதலியன பரிசவுணர்ச்சியுடையன. இப்பியுஞ் சங்கும் முதலியன அதனேடு இரசவுணர்ச்சியுடையன. கறையானும் எறும்பும் முதலி யன அவ்விரண்டினேடு கந்தவுணர்ச்சியுடையன. தும்பியும் வண்டும் முதலி யன அம்மூன்றினேடு ஊசவுணர்ச்சியுடையன. வானவரும் மக்களும் நாகரும் விலங்கும் புள்ளும் முதலியன அவ்வைந்தினேடு சுரவுணர்ச்சியுடையன.

நாநம் அதி. கொல்லாமை

(பரி-ரை) எ-து:—அறங்களெல்லாமாகிய செய்கை யாதென்னவினை, அஃது ஒருபிறையுங் கொல்லாமையாம், அவற்றைக் கொல்லுதல் பாவசெய்கைகள் எல்லாவற்றையுந் தானே தரும் ஆதலான், எ-று.

அறம்—சாரியொருமை. விலக்கியது ஒழிதலும் அறஞ்செய்தலா மாகலின், கொல்லாமையை அறவினையென்றார். ஈண்டுப் பிறவினையென்றது அவற்றின் வினைவை. கொலைப்பாவம வினைக்குந்தம் ஏனைப்பாவங்களெல்லாங கூடியும் வினைக்கமாட்டா என்றவாறு. கொல்லாமைதானே பிறவுநங்களெலாவற்றின் பயனையுந் தருமென்று மேற்கோள்கூறி, அதற் கேது எதிர்மறைமுகத்தாற் கூறியவாறுயிற்று.

(தெ - ப - ரை)—அறவினை-அறங்களெலாமாகிய செய்கை, யாதுவினின் - எதிலெல்லாமுள், (அது) கொல்லாமை - (ஒருயிரையும்) கொல்லாமையாம், கோறல் - (அவற்றைத்) கொல்லுதல், பிறவினைஎல்லாம் - பாவசெய்கைகளெலாவற்றையும், தரும் - (தானே) தரும் (ஆதலால்).

உ. பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

(பரி - ரை.) எ-து,—உண்பதனைப் பகுத்தலையிடத்துப் பகுத்துக்கொத்து உண்டு ஏவகை யுயிர்களையும் ஓம்புதல் அறநூலுடையார் தொகுத்தார்க்குத் தொகுத்த அறங்களெல்லாவற்றினுந் தலையாய அறம், எ-று.

பல்லுயிரும் என்னும் முற்றும்மை விகாரத்தாற்றொகுகது. ஓம்புதல் சோர்ந்துங் கொலை யாமாமற் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்துண்டல் இன்றியமையா வறுப்பாகலின், அதனிறப்புத்தோன்ற, அதனை இறந்தகால வினையெச்சமாற்றா கூறினார். எல்லாநூல்களினும் நல்லனவெல்லாந் தெரிந்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பாகலின், எண்ணும் பொதுப்பட நூலோரென்றதூ, அவ்வெல்லார்க்கும் ஒப்பமுடிதலான் இதுதலையாய அறமென்றுங கூறினார்.

(தெ-ப-ரை)—பகுத்து-(உண்ணப்பட்டதைப் பகிர்ந்த உயிர்களுக்குப்) பங்கிட்டுமகாத்து, உண்டு - (தானும்) உண்டு, பல்லுயிர் - ஏவகையுயிர்களையும், ஓம்புதல் - காப்பாற்றல், நூலோர் - அறநூலுடையோரால், தொகுத்தவற்றுள்எல்லாம் - (திறத்தவர்க்குத்) தொகுத்துவைக்கப்பட்ட அறங்களெல்லாவற்றினும், தலை - மூதன்மையான அறமாம்.

ங. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

கஉ-ம் அதி. கொல்லாமை

(பரி-ரை.) எ-து,—நூலோர் தொகுத்த அறஙகளுள் தன்னெடிணை யொப்பதின்றி நானேயாக கல்லது கொல்லாமை; அஃதொழிக்கால் பொய்யாமை ஒருன்பின்னேநிற்க நன்று உ-ரை.

லார் தொகுத்த அறஙகளென்பது அதிகார ரான் வகுத்தது. அதி காரம் கொல்லாமையாயினும், மேல் 'பொய்யாமைபொயயாமை யாற்றி" னனவும், 'யாமெய்யா கண்டவற்று ளில்லே"யெனவும் கூறினராகலின், ரண்டாநாளும் யாது நிரல் நின்று ஒழுகுமன்றே, அதுநிகழா மைபொருட்டு, ரண்டு அனைய ரப் பொய்யாமை நன்றென்றார், றற்கு நிற்பதிற் பிழைபிறவு வலியுடைத்தாகலின் அதனைப் பின்சார நன்றாது, நன்மை பயக்கும் வழி பொயயும் மெயயாயும், தீமை பயக்கும் வழி மெய்யும் பொயயாயும் இவ்வளவாறு அ ரிந்துகருதலா னனவுணர்க. இவ்வை முன்பு டா மறுவாரத்தினது சிறப்பு கூறப் ட்டது.

(தே - ப - ரை.) —ஒன்றுமுத - (நூலோர்தாலே தொகுக்கப் ட்ட அறஙகளுள் தான் தேறி இவ்வளவிது இவ்வளவாக, நொ லாரமை - கொல்லாமை, கல்லது—; (அது நீங் னால்) பொயயாமை - பொயயாரா நிற்றல், அதன் பின் சார - துதன் பின்னே நிற்க. நன்று உ-ரை.

சு. நல்லா றெனப் படுவ துயாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழ் கெறி.

(பரி - ரை.) எ-து,—மேற்கூறி வீசி பேறுகட்கு கலல கெறியென்று சாலவலப்படுவ பாதென்ற வினவினன, அது யாதொருயிரை யும் கொல் ாமையாகிய அறஙகளிற்கைக்கொ ருதுமெறி, எ-று.

யாதொன்றுமென்றது, தீரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல் - மூவாமற் காத்தல். இதனால் இவ்வாறு கூறினையுடையதே நன்னெறி யென் து கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கல்லாறு எனப்படுவது - (மேற்கதியும் முத் தியும் பெருகற்கு) நல்லவழியென்று சொலலப்படுவது, யாது னின் - எதுவென்முல், (அது) யாதொன்றும் - யாதோருயிரையும், கொல்லாமை - கொல்லாமைபாகிய அறஙகளின் சூழும் - (காக்க) னைக்கும், நெறி - வழியாம்

நு நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை

(பரி-ரை.) எ-து,—பிறப்புகின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப்பொருட்டு மனை வாழ்க்கையைத் துறந்தார் எல்லாருள்ளும் கொலைப்பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன், எ-று.

பிறப்பு கின்ற நிலையாவது இயலுவ சிற்பலவின்னும் இருவகைப் பிறப்பினும் இனபமென்பது ஒன்றின்றி உள்ளனவெல்லாக் துன்பமேயாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமபவேறுபாட்டாற் பலவாம் ஆகலின், நீத்தாருளெல்லா மென்றார். இதனுன இவ்வதிம் மறவாதவன் உயர்சி கூறப்பட்டது.

(தே - ப - ரை.—நிலை - பிறப்புகின்ற) நிலைக்கு, அஞ்சி - பயந்து, நீத் தார் எல்லாம் - (பிறவாமைப்பொருட்டு) மனை வாழ்க்கையைத் துறந்த வெல்லா ருள்ளும், கொலை - கொலைப் பாவத்திற்கு, அஞ்சி - பயந்து, கொல்லாமை - கொலலாமையாகிய அறத்தை; சூழ்வான் - மறவாதவன். தலை - உயர்ந்தோன்.

கூ. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழுநாண்மேற் செல்லா துயிருண்ணுங் கூற்று.

(பரி-ரை.) எ-து,—கொல்லாமையை விரதமாக மேற்கொண்டொழுகு வானது வாழ்நாளின்மேல் உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது, எ-று.

மிகப்பெரிய அறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறை யானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின்பயன் அனுபவிப்பரென்னும் அற நூற் றுணிபுபற்றி, இப்பேரறஞ் செய்தானதாயுங் கொல்லப்பட்டான், படா னாகவே, அடியிற் கட்டியவாழ்நாள் இடையூறின்றி யெய்துமென்பார், வாழ் நாண்மேற் கூற்றுச்செல்லாதென்றார்: செல்லாதாகவே, காலநீட்டிக்கும், நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடுபெறுமென்பது கருத்து. இதனுன் அவர்க்கு வரு நன்மை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—உயிர்உண்ணுங்கூற்று - உயிரைக்கொண்டு போம் யமனுவன், கொல்லாமை - கொலைசெய்யாமையாகிய விர தத்தை, மேற்கொண்டு—, ஒழுகுவான - நடப்பவனது, வாழ்நாள் மேல் - ஆயுளின்மேல், செல்லாது - செல்லான்.

எ. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி தின்னுயிர் நீக்கும் வினை.

(பரி-ரை.) எ-து,—அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பினீங்கிப்போமாயினும், தான் பிறிதோரின்னுயிரை அதனுடம்பினீக்குந் தொழிலைச் செய்யற்க, எ-று.

தன்னை அது கொல்லினுந் தான் அதனைக் கொல்லற்கவென்றது, பாவம் கொலையுண்டவழித தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. இனித் தன்னுயிர் நீப்பினுமென்பதற்குச் சான்றியாகச் செய்யாவழித தன்னுயிர்போ மாயினுமென் றுரைப்பாருமுளர்; பிறர் செய்தலுமாகாமையின், அஃதுரை யன்மை யறிக.

(தெ - ப - ரை — தான் —, பிறிது - வெறொன்றனது, இன்னுயிர் - இனிதாகியவுயிரை, நீக்கும் - (அகலுடம் பிலிருந்து) நீக்குதலாகிய, வினை - தெறியிலை தன்னுயிர் - (அதுசெய்பாவிடத்து) தனது உயிரானது நீபினுந் - (உடம்பைவிட்டு) நீங்கிப்போமாயினும், செய்யற்க - செயலாகாதிருக்கக்கடவன்

அ. கன் றகு மாக்கள் பெரிதெனினுஞ ரான்றோர்க் குதக் கொன்ற கு மாக்கள் கடை.

(பரி-ரை.) எ-து,—தேவபொருட்டு வேள்விக்கணகொன்றல் இன்ப மிருஞ்செல்வம் பெரிதாமெனறு இலவாழ்வார்க்கு கூறப்பட்டதாயினும், துற வானமைந்தார்க்கு முரியதைக கொலலவருங் செல்வங்கடை, எ-று

இன்பமிருஞ் செல்வமாவது தாமுறுதீவராய்த் துறக்கத்துக் சென்றெய் துஞ் செல்வம். அது நிதானலானும், பின்னும் பிறத்தற்கேதுவாகலானும், வீடாகிய நிறிலின்பம் எய்துவார்க்குக் கடையெனபபட்டது துறக்கமெய்து வார்க்கு ஆமாயினும வீடெய்துவார்களுக்கு ஆகா தனறமையின், விதி விலக்கு கள் தம்முண மலையாமை விளக்கியவாறுயிற்று. இஃது இலலறம் அனைமைக் குக காரணம் இவை பிரணடபாட்டானுங கொலையது நிறறங கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—கன்று ஆகும் - (யாகத்திலே கொன்றல்) இன்பமிகுவதாகிய, ஆக்கம் - செல்வமானது, பெரிது - பெரிதாகும், எனினும் - என்றாலெல்லப்பட்டதாயினும், சான்றோர்க்கு - (துறவினாலே) நிறைந்தோர்க்கு, கொன்று - (ஓருயிரைக்) கொன்று, ஆகும் - (அதனால்) உண்டாவதாகிய, ஆக்கம் - செல்வமானது, கடை - இழிந்ததாம்

கூ கொலலவினைய ராகிய மாக்கள் புலலினையர் புன்மை தெரிவா ரகத்து

(பரி-ரை.) எ-து,—கொலைதொழிலே உடையராகிய மாக்கள், அத்தொழிலின் கீழ்மையை அறியுஞ்சித்த ரல்லராயினும, அறிவார் நெஞ்சத்துப் புலைத்தொழிலினா, எ-று

நாநம் அதி. கொல்லாமை

கொலைவினையரென்றதனுன், வேள்விக்கண் கொலையன்மை யறிக. புலை வினையரென்றது தொழிலாற் புலையரென்றவாறு. இம்மைக்கட் கீழ்மை யெய்து வரென்பதாம்.

(தே - ப - ரை.) —கொலைவினையர்ஆகிய - கொலைத் தொழிலை யுடையவராகிய. மாக்கள் - மனிதர், (அத்தொழிலினது இழிவை அறியாத மெஞ்ஞானராயிருந்தாலும்), புன்மைதெரியார் அகத்து - அவ்விழிவை அறிவாரது நெஞ்சில். புலைவினையர் - இழிதொழிலா ராய்த் தீதாம்.

கஅ உயிருடம்பி னீக்கிபா ரென்பர் செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்

(பரி-ரை.) எ-து —நோக்கலாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழிதொழில் வாழ்க்கையினையுடையாரை இவர் முற்பிறப்பின்கண் உயிர்களை அவை நின்றவுடம்பினின்று நீக்கினவரென்று கூறுவர் வினைவிளைவுகளை யறிந்தோர், எ-று.

செல்லாவாழ்க்கை தீவாழ்க்கையெனக்கூட்டுக. செயிருடம்பினராதல் * "அக்கேபோ லங்கை யொழிய வீரலழுதித்—துக்கத் தொழுநோ யெழு பவே" என்பதனுளு மறிக. மறுமைக்கண் இவையு மெய்துவ ரென்பதாம். இவை யிரணபோட்டானுங் கொல்வார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

அருளுடைமைமுதல் கொல்லாமையீறாக சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதகளும் அடங்கும்; அஃதறிந்து அடக்கிக்கொள்க. சண்ணிரைப்பிற் பெருகும்.

(தே - ப - ரை.)—செயிர் உடம்பின் - (பார்க்கக்கூடாத) நோ யுடம்புடனே, செல்லாத்தீ வாழ்க்கையவர் - வறுமையோடு கூடிய இழிதொழில் வாழ்க்கை யுடைய வரை. உயிர்-(இவர்முற்பிறப்பில்) உயிர்களை, உடம்பின் - (அவை நின்ற) உடம்புகளிலிருந்து, நீக்கியார் - நீக்கினவர், என்பர் - என்று (வினைவிளைவுகளை சொல்லுவர்)

* அக்கேபோ லங்கை யொழிய வீரலழுதித்-துக்கத் தொழுநோயெழுபவே-பக்கர-லலலங்கைக் கான்முரிதது, நினற-பழவினை வாதடைதகால், காலடியார், தீவினையச்சம்.

ஞானம்.

அவற்றின்பயனுகிய ஞானங்கூறிய தொடங்கினுர். ஞானமாவது வீடுபெயக்குமுணர்வு. அது நிலையாமைமுதல் அவாவறுத்த விறுதியாக நான்கதி காரத்துளடக்கப்பட்டது.

௩௩-ம் அதிகாரம்—நிலையாமை.

அவற்புள் நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுத லில வாக்தன்மை. மயங்கியவழப் பேய்த்தேர்ம் புனல்போலத் தோன்றி மெய்யுண ர்ந்தவழிக் கயிற்றில்அரவுபோலக மெய்தலிற் பொய்யென்பாரும், நிலைவேறு பட்டு வருதலாற் கணந்தோறும் பிறந்திறக்கு மென்பாரும், ஒருவாற்றுன் வேறுபடுதலும் ஒருவர்ருன் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கேயுடைய வென்பாருமெனப் பொருட்பெற்றிகூறுவார் பலதிறத்தாவர்; அவர் எல்லார்மதும் அவற்றுள் நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்ருர். இதுணர்ந்தார் யலைதும் பொருள்களிற் பற்றுவிடாதாகலின், இது முன் வைக்கப்பட்டது.

க நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

(பதவுரை) எ-து.—நிலையுதல் இலவாகிய பொருள்களை நிலையுதலுடைய வென்று கருதுகின்ற புல்லிய அறிவினையுடைய ராதல் தாழ்ந்தார்கிழ்ப்பு எ-று.

தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவால் அவற் றின்மேற பற்றுசெய்தல் பிறவித்துன்ப நிற் சேதுவாகலின், அது வீடெய் துவார்க் கிழுக்கெனபது இ ஞ்ரு கூறப்பட்டது. இனிப் புல்லறிவினர் பெரும் பான்மையும் பற்றுசெய்வது நிற்றின்ப நிற்சேதுவாகிய செலவத்தின்கண் ணும் அதனையனுபவிக்கும் யாக்கையின்கணணும் ஆகலின், வருகின்ற பாட்டி களான் அவற்றது நிலையாமையை விதந்து கூறுப.

(தெ - ப - ரை.) — நில்லாதவற்றை - நிலையில்லாதவைகளே, நிலையின என்று - நிலையுடையவையென்று உணரும் - நினைக்கின்ற, புல்லறிவு ஆண்மை - அற்பபுத்தியை யுடையவராயிருக்கை, கடை- (அதற்தார்க்கு) இழிவு.

உ. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவினிற் றுணறு.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் மாட்டுப் பெரிய செல்வம்வருதல் கூத்தாடு தல் செய்கின்ற அரங்கின்கட் காண்போர்குழாம் வந்தாற்போலும்; அதனது போகலும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் போயினாற்போலும், எ-று.

பெருஞ்செல்வமெனவே, துறக்கச்செல்வமும் அடங்கிற்று. போக்கு மென்ற செசவும்மையான், வருதலெனபது பெறாம். அக்குழாங் கூத்தாட் டுக் காரணமாக அரங்கின்கட் பஃறிறத்தாற் ருனேக ர, அகாரணம் போய வழித்தானும் போமாறுபோல, செல்வமும் ஒருவனல்வினை காரணமாக அவன் மாட்டுப் பஃறிறத்தாற ருனேவந்து, அக்காரணம்போயவழித் தானும் போமென்றதாயிறறு.

(தே - ப - ரை)—பெருஞ்செல்வம் - (ஓ நுவணிடத்து) பெரிய செல்வம்வருதல், கூத்தாட்டு - கூத்தாடுதல்செய்கின்ற, அவை - சபையினிட க்தே, குழாத்து அற்று - (காண்போர) கூட்டம் வரு தல்போலும். போக்கும் - (அச்செல்வம்) போ தகலும், அ ஞ - அக் கூட்டமானது, விளிந்தது அற்று - (அக்கூ தாட்டு) முடிந்தவிடத் துப்) போதுதல்போலும்.

கூ. அற்கா வியல்பிற்று செல்வ மதுபெற்ரு
லற்குப வாங்கே செயல்.

(பரி-ரை) எ-து,—நில்லாத இயல்பினையுடைத்து செல்வம்; அதனைப் பெற்ருல் அதனஞற் செய்யப்படும் அறஙகளை அப்பெற்றபொழுதேசெய்க,எ-று.

அல்காவென்பது திரிந்துநின்றது. ஈழுள்வழியல்லது ஊதுந்தாராற் பெறப்படாமையின் அது பெருருவென்றும், அஃதில்வழி நில்லாமையின் ஆங்கேயென்றும கூறினர். அதனஞற்செய்யப்படும் அறஙகளாவன:—பய னெய்காத செய்யுங கடவுட்பூசையும, தானமும் முதலாயின. அவை ஞானவேதுவாய் வீடுபயகுதலின், அதற்றை அறகுவென்றும் செய்கவென் றுகூறினர். இவை யிரண்டுபொட்டானும செல்வநிலையாமை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—செல்வம் செல்வமானது, அற்கா - நிலை யாத, இயல்பிற்று - இயல்பையுடையதாகும்; அதுபெற்ரல்-அச் செல்வத்தைபபெற்ரல, அற் நு ப - (அதனலேசெய்யப்படும்) அற ங்களே, ஆங்கே-பெற்றபொழுதே, செயல் - செய்யக்கடவன்

கூ. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

(பரி-ரை.) எ-து,—நாளென்று அறக்கப்படுவதொரு கால வரையறை போலத் தன்னைக் காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர், அஃதுணர்வாரைப் பெறின், எ-று.

நச்சம் அதி. நிலையாமை

காலமென்னும் அருவப்பொருள் உலகியல் நடாத்தற்பொருட்டு ஆதித் தன் முதலிய அளவைகளாற் கூறப்பட்டதாக வழங்கப்படுதலால் தாளைக் கூறுபடாமையின் நாளென வொன்றபோலென்றும், அது தன்னை வாளென்று உணரமாட்டாதார் நமக்குப் பொழுது போகாகின்றதென்று இன் புறுமாறு நாளாய் மயக்கலின் காட்டியென்றும், இடைவிடாது ஈர்த்தலான் வாளின் வாயதென்றும், அஃதோகினதமையை உணர்வார் அரியராகலின் உணர்வார்பெறி னென்றும் கூறினர். உயிரென்னுஞ் சாதியொருமைப் பெயர் எண்டி உடம்பின்மே லினறது, ர ப்படுவது அதுவேயாகலின். வாளென்பது ஆகுபெயர். இனி இக்னே நாளெனபதொரு பொருள்போலத் தோன்றி உயிரை மிரவதொரு வாளாமென றுரைப்பாருமுளர் எனவென்பது பெயரன்றி இடைசசொல்லாகலானும், ஒனறுபோதாகாட்டி யென்பதற்கு ர் பொருட்கிறப பின்னையானும், அது வென்பது குத்தியலுகரமன்மை யானும், அஃதுரையன்மையறிக.

(தே - ப - ரை)—உயிர் - உயிரானது நாள்ளன - நாளென்று அளவுசெய்யப்படு வதாகிய, ஒனறுபோல - ஒருகாலவளவு போல், காட்டி - (தன்னைக் காட்டி, ஈரும் - அறுத்துச செல்லுகின்ற வாளது - வாளினை நு யாயினிடத்து, உணர்வார்ப்பெறின் - (அது) அறிவாரைப்பெறின்.

நு நாசரெற்று விகுண்டீரல வாராமு னல்வினை
மேற்சென்று செய்பா படிம

(பரி-ரை.) எ-து,—யமாடாணைமை நாவையடைகி விக்குள் எழுவ தற்கு முன்னே வீட்டிறதேதுவாகிய அறம விரைந்து செயயப்படிமெ, எ-று.

மேலுலகிவருதல் ருபலோகவாழ்நர, வத்துழிச செய்தலேபன்றிச சொல்லலு மாகாமையானும் வா ாமுனென றும், அதுதான் இன்னபொழுது வருமென்பது இன்மையின மேறசென்றெனறு கூறினர். மேற்சேறல் - மணடுதல். நல்வினை செயயுமாறதன்மேல வைத்து நிலையாமை கூறியவாறு.

(தே - ப - ரை. —நாசரெற்று - (பேசாதிருக்கும்படி) நாவை அடக்கி, விக்குள் - விக்கலான து, மேலவாராமுன் - எழுவதற்கு முன்னே, நல்வினை - (மோக்ஷத்துக்கு ஏதுவாகிய) அறமானது, மேற்சென்று - விரைந்து, செய்யபபடும் - செய்யத்தகும்.

கூ. நெருநற் றுளனொருநா னின்றிலனே யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு

(பரி-ரை.) எ-து,—ஒருவன் நெருநற்றுளனொருநான் அவ்வினை இன்றில்லை யாயினனென்னு சொல்லும் நிலையாமை மிகுதியுடைத்து இவ்வுலகம், எ-று.

ஈண்டு உண்மை பிறத்தலேயும், இன்மை இறத்தலேயும் உணர்த்தி நின்றன. அவை பெண்பாற்கும் உளவாயினும், சிறப்புப்பற்றி ஆண்பாலேயே கூறினார். இந்நிலையாமையே உலகின் மிக்கதென்பதாம்.

(தெ - ப - ரை.) —இவ்வுலகு-இந்த வுலகமானது, ஒருவன்—, நெருநல் - நேற்று, உளன் - உள்ளவனென் [றிருந்தவனென்றபடி]; இன்று - (அவனை, இன்றைக்கு, இலை - இல்லையினென் [றிறந்தவனென்றபடி], என்னும் பெருமை - என்று சொல்லும் (நிலையாமையின்) மிகுதியை, உடைத்து - உடையதாயிருக்கின்றது.

எ. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

(பரி-தை.) எ-து,—ஒருபொழுதளவும் தம்முடம்பும் உயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார், மாட்டாதவைத்தும், கோடியளவுமன்றி அதனினும் பலவாய நினைவுகளே நினையாநிற்பர் அறிவிலாதார், எ-று.

இஃது நிறப்பும்மையாற் பொழுதென்பது ஈண்டுக் கணத்தின்மேனின்றது. காரணமாகிய வினையினாலே வாழ்தற்கும் அளவாகலின், அம் முறியப்படா தாயிற்று. பலவாய நினைவுகளாவன — பொறிகளான் நுகரப்படும் இன்பங்கள் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாமுயலுமாறும், அவற்றிற்கு வருமிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப்பொருள் கடைகூட்டுமாறும், அதனைப் பிறர்கொள்ளாமற் காக்குமாறும், அதனுள் நட்டாரை யாக்குமாறும், கள்ளாரை யழிக்குமாறும், தாம அவ்வினபங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரது இயல்பின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு. இனிக் கருதுப வெனபதனை அஃறிணைப் பன்மைப்பெயராக்கி வினைப்பாருமுளர்.

(தெ - ப - ரை.) —ஒருபொழுதும் - அறிவில்லாதவர்) ஒரு பொழுதளவும், வாழ்வது - தம் முடம்பும் உயிரும் கூடி யிருக்கையை, அறியார் - அறிகிலாராட்டார்; (மாட்டாதிருந்தும்) கோடியும் அல்ல-கோடியளவுமன்றி, பல - (அதனினும்) பலவாகிய நினைவுகளை, கருதுப - நினையாநிற்பர்.

அ. நுடம்பை தனித்தொழியப் பிட்பறக் தற்றே
யுடம்பொ டுயிரிடை நட்பு.

(பரி-ரை.) எ-து —மூன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுளிருந்த புளுவும் பருவம்வந்தழிப் பறந்துபோய தன்மைத்து உடம்பிற்கும் உயிர்க்கு முளதாய நட்பு, எ-று.

தனித்தொழிய வென்றதனுன், முன் தனியாமை பெற்றும், அஃதாவது கருவுற்றாலும் ஒன்றுப்பிறக்கு வேருக்குனேயும் அதற்கு ஆகாமாய் நிற் றல்; அதனுல் அஃது உடம்பிற் குவமையாயிற்று; அதனுல வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற்போகலின், புள் உயிரக்குவமையாயிற்று. மூட்டையுட் பிறப்பன பிரவுமுளவேனும், புள்ளேயே கூறினுர், பரந்துபோ டற்றெழிலான் உயிரோ டொப்புமை யெய்துவது அ தேயாகலின். * நட்பென்றது சண் டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப்போத் துணைத்தின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய ரிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முண் மாருகலின், விரைவய தொற் கூடியதல்லது நட்பிலவென்ப தறிக. இனிக்குடம்பை யென்பதற்குக் கூடென்று உரைப்பாருமுளர் அது புள்ளு டன்தோன்றுமையானும், அதன்கண அதுமீண்டு புகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை யறிக.

(தெ - ப - ரை —உடம்பாடி - உடம்புடனே, உயிரிடை - உயிருக்கு உண்டாகிய, நட்பு-இனமான து. குடம்பை-(முன்னே தனியாதிருந்த) முட்டையான து, தனித்து ஒழிய - தனித்துக் கிடக்க, புள் - (அ தனுலிருந்த பறவை, பறக்கு தற்கு - (பருவம் வந்தவிடத்து) பறந்துபோக் தன்மையை யுடையதா கும்

கூ. உறங்குவது போலுஞ் சாக்காடு றங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோ டொக்கும்; அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழிதல் வருதலோ டொக் கும், எ-று.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருகின்றமை போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வரு மென்பது கருத்து. நிலையாமையின் விளைபயனுகாது அறிவித்தலுப் பிறப் பும் உடன்கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—சாக்காடு - (ஒருவனுக்கு) மரணம் வருதல், உறங்குவது போலும் - தூக்கம் வருதல்போலும்; பிறப்பு-(அதன் பின்னே) பிறப்புவருதல், உறங்கி விழிப்பதுபோலும்-தூங்கிவிழித் தல் வருதல்போலும்

* இவ்வாறு பெயரடியாகத் தோன்றிய குறிப்பை வடநூலார் அபிநாமூலத்தொனி யென்றும், விருத்தலகணையென்றும் கூறுவர்.

கo. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி விருந்த வுயிர்க்கு.

(பரி-ரை.) எ-து,—வாதமுதலியவற்றின் இல்லாய உடம்புகளுள் ஒதுக்கி இருந்தே போந்த உயிருக்கு எஞ்ஞான்றும் இருப்பதோரில் இதுகாறும் அமைந்ததில்லே போலும், எ-று.

அந்நோய்கள் இருக்க அமைந்த ஞான்று இருந்தும், வெகுண்ட ஞான்று போயும். ஒருடம்பிலும் நிலேபெறுது வருதலால், துச்சிலிருந்தவென்றார். பின் புறப்பட்டாது புக்கேவிடுமில் அமைந்தாயின், பிறர் இற்களுள் ஒதுக்கிரா தென்பதாம்; ஆகவே, உயிரோடு கூடிநிற்பதோ ருடம்பும் இல்லேயென்பது பெறப்பட்டது. இவை யேழுபாட்டானும், மூன்றையே யாக்கைக்கு வமைந்த நாள் கழிகின்றவாறும், கழிந்தால் உளதாம் நிலேமையும், அவை ஒரோவழிப் பிறந்த அளவிலே இறத்தலும், ஒரு கணமாயினும் நிற்குமென்பது தெளியப் படாமையும், உயிர் நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருமாறும், அவைதாம் உயிர்க்குரிய அன்மையுமென்று, இவ் வாற்றால் யாக்கை நிலேயாமை கூறியவாறு கண்டுகொள்க.

(தே - ப - ரை.)—உடம்பினுள் - (வாதமுதலான வைகளது வீடுகளாகிய) உடம்புகளுள், தூங்கில இருந்த - ஒதுங்கிக்குடி யிருந்து வந்த, உயிர்க்கு - உயிர்களுக்கு, புக்கில் - என்றைக்கும் இருப்பதாகிய ஒருவீடானது, அமைந்த தறிந்றுகொல் - (இது வரையில்) அமைந்ததில்லேபோலும்.

நடு-ம் அதிகாரம்—துறவு.

அஃதாவது புறமாகிய செல்வத்தின்கணானும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாய பற்றினே, அவற்றது நிலேயாமை நோக்கி, விடுதல். அதி காரமுறைமையும இதனுனே விளங்கும.

கக. யாதனின் யாதனி னீங்கியா தேதை
லதனி னதனி னிலன்.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் யாகொருபொருளின் யாதொருபொரு ளின் நீங்கினன் அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பமெய்தல்

அடுக்குகள் பன்மை குறித்துநின்றன. நீங்குதல் - துறத்தல். துன்பமென்றது இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவும் ஆய இருவகைத் துன்பங்களேயுமாம். எல்லாப்பொருளேயும் ஒருங்கே விடுதல்

தலை, அஃதன்றி ஒரோவொன்றை விடினும் அவற்றான் வரும் துன்பம் இலனு மென்பது கருத்து.

(தே - ப - ரை) — பாதனி ர்பாதனி ர் - (ஒருவன்) யாதொரு பொருளின்யாதொருபொருளின், நீங்கியான்-நீங்கினால், அதனின் அதனின் - (அவன்) அப்பொருளினலே அப்பொருளினலே, சோதல் - துன்பம் அனுபவித்தலை, இலன் - உடையவனாகான்.

உ வேண்டி லுண்டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

(பரி-ரை.) எ-து,—எல்லாப்பொருள்களையுந் துறத்தலால் ஒருவர்க்கு இம்மைக்கணனே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல; அவ் வின்பங்களை வேண்டின், அவற்றைக் காலம் பெறுத துறக்க, எ-று.

அவ்வின்பங்களாவன—அப்பொருள்கள் காரணமாக மனமொழிமெய் களில் அலையாது நிற்றலாலும், அவை கண்ணெறிக்கட்சேறலாலும் வருவன. இளமைக்கணதுறந்தான் அவற்றை நெடுங்காலம் எய்துமாகலின், உண்டாகத் துறக்கவென்றார். இன்பங்களென்பது காலமென்பதும் வருவிக்கப்பட் டன. இம்மைக்கண்துன்பங்கள் இலவாதலேயன்றி இன்பங்கள் உளவாதலும் உண்டென்பதாம்.

(தே - ப - ரை) — துறந்தபின் - (எல்லாப் பொருள்களையும்) துறந்தபின், ஈண்டி - (ஒருவனுக்கு) இப்பிறப்பிலே, இயற்பால - உண்டாகும் முறைமையையுடைய இன்பங்கள், பல - பலவாம்; வேண்டின் - (அவ்வின்பங்களை) வேண்டினால், உண்டாக - (காலம்) உண்டாக, துறக்க - (அப்பொருள்களை) துறக்கக்கடவன்.

ங. அடல்வேண்டு மைந்தன் புலந்தைவிடல்வேண்டும்
வேண்டி யவெல்லா மொருங்கு.

(பரி-ரை.) எ-து,—வீடெய்துவதாக்கு செவி முதலிய ஐம்பொறிகட்கு உரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையுங் கெடுத்தல்வேண்டும்; கெடுக்குங் கால், அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுதையும் ஒருங்கே விடுதல்வேண்டும், எ-று.

புலமென்றது அவற்றை நுகர்தலே. அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானும் அன்றி வாராத பொருள்கண்மேல் அல்லது வீட்டு நெறியாகிய யோகஞானங்களிற் செலுத்தாமையின், அதனை அடல்வேண்டு மென்றும், அஃது அப்பொருள்கண்மேற்செல்லின் அந்நுகர்ச்சி விறகுபெற்ற தழல்

போல் முழுகுவதல்லது அடப்படாமையின், வேண்டியவெல்லா மொருங்கு விடல்வேண்டு மென்றுங் கூறினர்.

(தெ - ப - ரை)—ஐந்தன் - (முத்தியை அடைவோர்க்கு) செவி முதலாகிய ஐம்பொறிகளுக்குரிய, புலத்தை - ஓசை முதலாகிய ஐம்புலன்களையும், அடலாவண்டும் - தெடுத்தலாவண்டும்; வேண்டிய எல்லாம் - தெடுக்குப்போது) அப்புலன்களை அனுபவித்தற்பொருட்டுத், தாம்படைத்த பொருள்களையெல்லாம், ஒருங்கு-ஒருமிக்க, விடல்வேண்டும் - விட்டுவிடல்வேண்டும்

9. இயல்பா கு நோன்றிற்கென் றிமையு டைமை
மயலாகு மற்றிப் பெயர்த்து.

(பரி-ரை.) எ-து,—பற்றப்படுவ தொரு பொருளும் இல்லாமை தவஞ் செய்வார்க்கு இயல்பாம்; அஃதன்றி, ஒன்றையேனும் உடைமை அதனைவிட்டுப் போக்குவானை, நிணமும் மயலாகுமாதலானும், எ-து.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நோன்பென்பதூஉம், மயலென்பதூஉம் ஆகுபெயர். பெயர்த்தலான் என்பது தொக்கு நின்றது. நோன்பைப் பெயர்த்தலானென வேறுமைமைப்படுத்திக் கூட்டுக. எல்லாப் பொருள்களையுமேவிட்டு ஒருபொருளை விடாதுவிடியும், அது சாபமாக விட்டனவெல்லாம் மீண்டுவந்து தவத்திற் கிடையீடாய் மனக்கலக்கஞ் செய்யுமென்பது கருத்து. இவை கான்குபாட்டானும் எனதென்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—நோன்பிற்கு - தவஞ்செய்வோர்க்கு, ஒன்று-(பற்றப்படுவது) ஓருபொருளும், இன்மை - இல்லாதிருக்கை, இயல்பு ஆகும் - இயல்பாம்; உடைமை - (ஒன்றையினும்) உடைமை, பெயர்த்து - (அத்தவத்தைப்) போக்குதலால், மற்றும் - மறுபடியும், மயல் ஆகும் - மயக்கத்துக்கு ஏதுவாகும்

---

10. மற்றுங் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்த் துடம்பு மிகை.

(பரி-ரை.) எ-து,—பிறப்பறுத்தலே மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்புமமிகையாம்; ஆனபின், அதற்குமேலே இயைபில்லனவுஞ் சில தொடர்ப்பாடு உளவாகல் என்னும், எ-று.

உடம்பென்பொதுமையான் *உருவுடம்பும். அருவுடம்புங் கொள்ளப்படும். அவற்றுள், அருவுடம்பாவது பத்துவகை இந்திரியவுணர்வோடும்

---

* உருவுடம்பு - தூலசரீரம், அருவுடம்பு - சூக்குமசரீரம்.

ழவகை வாயுக்களோடும் காமவினை விளைவுகளோடும் கூடிய மனம்; இது நுண்ணுடம் பெனவும்படும். இதன்கட்பற்று நீலியாமை உணர்ந்த துணிபான் விடாமையின், விடுதற் குபாயம முன்னர்க்கூறுப இவ்வுடம்புகளால் துன்பம் இடையறாது வருதலே உணர்த்து, இவற்றுள் ஆய கட்டினை இறைப் பொழுதும் பொறாது வீடடின்கணணே விரைதலின், உடம்புமிகை யென்றார். இன்பதுன்பகளான் உயிர்தோறும் ஒற்றுமையெய்துதலின், இவ்வுடம் புகளும் யாவனெனப்படும். இதனுள் அகப்பாடுவிடுதல் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பிறபபு அறுக்கும் உபாயத்தை - பிறவியை நீக்குமுபாயத்தினை மேறகொண்டவருக்கு, உடம்பும் - (அதற்கு உதவியாகிய) உடம்பும், மிகை - அதிகமாய்; (ஆனபின்), மற்றும் - அதற்குமேலும், தொடர்ப்பாடு - (சம்பந்தமில்லாதவையுஞ் சில பொருள்கள்) பற்றப்படுதல், எவன் - எவ்வகையர்.

கூ. யாவனை னெனனுஞ் சொருபதாபான் வாவேர்க்
நோயாதது யாகம பிருபு

(பதி-ரை.) ஏ-து,—யானல்லாத பொருளை யானென்னும் தன்மோழையை யில்லாத பொருளை எனதென்னும் எனக் கருதி, அவற்றின்கட் பற்றுசெய்தற் கேதுவாகிய மயக்கத்தைக் கொடுப்பான் வாவேர்க்கும் எவ்வகையிய வீட்டில கத்தை யெய்தும், எ-று.

மயக்கம்-அறியாமை. பழவினைக் கெடுதலாவது தேகிகபாற் பெற்ற உறுதிமொழிகளாலுர, யோகப்பயிற்சியாலும், அவை யானனது அன்மை தெளிந்து, அவற்றின்கட்பற்றை விடுதல். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. இதனுள் இவ்விருவகைப்படாமையும் விட்டார்க்கே வீடுளதென்பதும் கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—யாவனெனதுவன்னும் - (தானல்லாதவிடம் பை) யானென்றும் (தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை) எனதென்றும் நினைத்து அவைகளிலே பற்றுசெய்தற்கு ஏதுவாகிய, சொரூப - மயக்கத்தை, அறுப்பான் - கெடுப்பவன், வாவேர்க்கு-தேவாக்கும், உயர்ந்த - அடைதற்கரிதாகிய, உலகம் - முத்தியுல கத்தில், புகும் - செல்லுவான்

எ பற்றி விடாஅ விடும்பைபள் பற்
பற்றி விடாஅ தவர்க்கு

(பரி-லை.) ஏ-து,—இருவகைப் பற்றையும் இறுகப்பற்றி விடாதவர்க் பிறவித்துன்பங்கள் இறுகப்பற்றி விடா, எ-று.

இறகப்பற்றதல் - காதல்கூர்தல். விடாதவர்க்கென்பது வேற்றுமை மயக்கம். இதனுல் இவை விடாதார்க்கு வீடில்லையென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—பற்றினை - (இருவகைப்) பற்றுக்களையும், பற்றி - இறகப்பற்றி, விடாதவர்க்கு - விடாதவரை, இடும்பைகள் - துன்பங்கள், பற்றி - இறகப்பற்றி, விடா-விட்டு நீங்காவாம்.

அ. * தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்

(பரி-ரை.) எ-து,—முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார்; அமராந் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையுட்பட்டார், எ-று.

முற்றத்துறத்தலாவது பொருள்களையும், இருவகை உடம்பினையும் உவர்த்துபபறறற விடுதல். அவையனைக் துறவாமையாவது அவற்றுள் யாதானு மொன்றின்கட் சிறிதாயினும் பற்றுசெய்தல். துணிவுபறறிக் தலைப்பட்டாரென்றும், பொய்த் தெறிகணடே பிறப்புவலையு ளகப்படுதலின், மயங்கியென்றுங கூறினர்.

(தே - ப - ரை.)—தீரத்துறந்தார் - முழுதுந்துறந்தவர், தலைப் பட்டார் - (முத்தியை) அடைந்தவராவர், மற்றையவர் - அப் படித் துறவாதவர், மயங்கி - மருண்டு, வலைபபட்டார - (பிறபப) கிய) வலையில் அகப்பட்டவராவர்.

கூ. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்

(பரி-ரை.) எ-து,—ஒருவன் இருவகைப்பற்றும் அற்றபொழுதே, அப் பற்றறுதி அவன்பிறப்பையறுக்கும்; அவையறுதபொழுது அவற்றுற் பிறக்கிற நிலையாமை காணப்படும், எ-று.

இவ்வருளுரை கருகுறுனர் காஞ்சனபுரவுக பொருவாகிய கெற்ற வண்குடி உபாபதி வெள்ளாரியா செஞ்சுவிதூரில் "தேருருகரா-னுணர்பொழிய வறவிலலே யென்னுமதுதன்னே யறிவைத் தனிபபரிவை - முனனர் - , லேப்பட்டார் தீரதுறதுதார் பாயகி - வலேப் பட்டார் பறறையவென்று - நிலேபகிழின - றெறபப் புலனைத் திருவுளாளுய ருரைதத-மெய்வைதசு சொல்லே விருப்பாக - லேவ ருக - பாவது செயதகு கவளழியைந் நப்பா மற் - பாவபெ னும் பெளவப் பரப்பதிதுப் - பூவையபுகு - கண்ணலேயிறபட்டுக கலவிக் கலேபயின்றங் - குண்ணைநிலேபுணாச்சி பே டாரமற - றிண்மையிலு - ஞவிற்கொடுமை பல பிதற்றி காடோறுஞ்-சாவிற பிறபபிற்றலேபட்டிடி - காவிகிலே - நிற்குல்வகை பாராய் நிலேயான நெஞ்சமே பொருபினுன ட-னே புலகுகேளு" என வெலிபிதருளிரசெய்தார் இக்கொஞ்சவிடதுது சைவசிதாதட பதிஞனஞினு னொன்று.

காரணமற்றபொழுதே காரியமும் அற்றதா முறைமைபற்றி, பற்றற்ற கண்ணே யென்றார்; ஈ "அற்றது பற்றெனி லுற்றது வீடு" என்பதூஉம் அது பற்றிவந்தது. இவை யிரண்டோட்டானும் அவ்விருமையும் ஒருங்கு கூறப் பட்டன.

(தே-ப-ரை)—பற்று அற்ற காரணே-(ஒருவன் இருவகைப்) பற்றுக்களையும் அற்றபொழுதே, பிறப்பு-அப்பற்றறுதியான அவனது பிறவியை. அறும் துர்-ஒழிந்து நீர். மற்று-அவை அற்றபொழுது. வியாமை-அவரது பிறந்தும் இறந்தும் வருகிறது நியாமை பானது, காணப்படுவர்-அறியப்படும்.

கஎ பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்றை விடற்கு.

(பரி-ரை.) எ-து,—எல்லாவிதப்பொருள்களையும் பற்றிநின்றே பற்றற்ற இறைவன் ஒதிய வீட்டுநெறியை இதுவே நன்னெறியென்று மனததுகொள்க; காரணம், அவன்கண் பாயத்தை அம்மனத்தாறசெய்க, வீடாது வந்த பற்று வீடுதற்கு, எ-று.

கடவுள் வாழ்த்திற் கேற்ப ணைமும் பொ வகையாற் பற்றறுருனென்றார். பற்றறுருன பற்றென்புழி ஆருவது செயபுட்புழைமைகளை வந்தது. ஆண்டுப் பற்றென்றது பற்றப்படுவனவை. அவன்கண் ஈ பாயமென்றது நியானசமாதிகளை. வீடாதுவந்த பற்றென்றது அநாதியாயவரும் உடம்பிற்பற்றினை. அப்பற்று வீடுதற்கு ஈ பாயம் இதனுறை கூறப்பட்டது.

(தே-ப-ரை)—பற்று-வீடாதுவந்த பற்ற, வீடற்கு-வீடுகற்கு, பற்று அற்றான்-(எல்லாப்பொருள்களையும் பற்றிநின்றே) பற்றற்ற கடவுளைப் பொருளாகப்பட்ட, பற்றினை-முற்றத் தெரியை, பற்றுக-இவ்வீடுக நன்னெறியை உறுதி) மனத்துட் கொள்ளக்கடவர், அப்பற்றை-அதனிடத்து பாயத்தை ஈ. பற்றுக-மனத்தாற்செய்யக்கடவர்.

ஈ நூல்-ம் அதிகாரம்—மெய்ப்புணர்தல்.

அஃதாவது பிறப்பு வீடுகளையும், அவற்றின் காரணகளையும், விபரீத ஒய்களான அன்றி ணமையா னுணர்தல். இதனை வடநூலார் தத்துவ ஞானமென்ப. இதனும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவதாகலின், அகாரணவொற்றுமைபற்றித் துறவினின் வைக்கப்பட்டது.

அற்றதுபற்றெனி லுற்றதுவீடு என்றும் மற்றதை பற்றேல்-நிருவாய் மொழி. உ-ம் திருவள்ளுவர். நீ ட யகட.

க. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளா னு மாணப் பிறப்பு.

(பரி - ரை.) எ-து,—மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளெ
றுணரும் விபரீதவுணர்வானே உளதாம் இன்பமில்லாத பிறப்பு, எ-று.

அவ்விபரீதவுணர்வாவது மறுபிரபாவ, இருவினைப்பயனும், கடவுளும் இல்லையெனவும், மற்றும் இத்தனமையவுஞ்சொலலும் மயக்கநூல் வழக்குகளே மெயநூல் வழகெனதலுமாதல். குறியை மகனென்றும, இயபபயை வெள்ளியெனறும், இவ்வாறே ஒன்றனபபிறபொன்றுகதலும் அது. மருள, மயக்கம, விபரீதவுணர்வு, அவிசசையெனபன ஒருபொருட்கிளவி. நரகர், விலஙகு, மக்கள், தேவரெனனும நாலவகைப் பிறபபிறு மூள்ளது துன்பமேயாகலின, மாணப்பிறப்பென்றார். இதனுள் பிறப்புத துன்பமென் பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிசசையென்பதூஉங கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—பொருள் அல்லவற்றை - மெய்ப்பொருள் களல்லாதவைகளே, பொருள் என்று-மெய்ப்பொருள்களொன்று, உணரும் - அறிகின்ற, மருளான்-விபரீதஞானத்தினால், மாணப்பிறப்பு-மாட்சிமைபபடாதபிறவி [இன்பமில்லாத பிறவியென்றபடி], ஆம் - உண்டாகும்

உ. இரு ளீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(பரி-ரை.) எ-து,—அவிசசையினீங்கி மெய்யுணர்வினை டையராயினார்க்கு அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீடடின்ப மெதிர்க்கும், எ-று.

இருள்-நரகம், அஃது ஆகுபெயராய காரணத்தின்மேனின்றது; நீங்கி யெனத தொடைநோக்கி மெலிக்துன்றது; நீங்கவென்பதன் திரிபெனினும் அமையும். மருணீங்கியென்னும் வினையெசசம காட்சியவரெனனுங குறிப்பு வினைப்பெயர் கொண்டது. மாசறுகாட்சியென்றது கேவல வுணர்வினை. இதனால் வீடாவது நிதிசய இன்பமென்பதூஉம், அதற்கு நிமித்தகாரணம் கேவலப்பொருளென்பதூஉங கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—மருள் நீங்கி - அவ்விபரீதஞானத்திலிருந்து நீங்கி, மாசு அறு-தூற்றமற்ற, காட்சியவர்க்கு - மெய்பறிவையுடைய வராயினவர்க்கு, (அம்மெய்யறிவானது) இருள்-பிறவியை, நீங்கி-நீங்கச்செய்து, இன்பம்-முத்தியை, பயக்கும் - கொடுக்கும்.

ங. ஐயந்தி ரிவுகண் டெளிந்தார்ப் பு லையத்தி ன்
வான நலமிய லுலகத்து.

நகரம் அதி. மெய்யுணர்தல் ககஎ

(பரி-ரை.) எ-து;—ழயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு எய்தி நின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் நணித்தாத லுடைத்து, எ-று.

ஐயமாவது பலதலையாய் வரு; அஃதாவது மறபிறப்பும், இருவி னைப் பயனும், கடவுளும், வளிவே றிலவேறென நின்றிறுணவு பிற வாது சிற்றல்; பேயபிசாசோ புனமோ கயிறோ அ வோவென்ற தணி யாது பிறபதும் அது. ஒருவாறாயும் பிரமம் கற்றாரது தமமதுணிறுத்தல் எல்லாச் சமயநூல்கட்கும் இடல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்க ளுள் யாது மெயயென ரிபடி ருபதினை யோரழுமாச்சியுடையார் தம் மனபவத்தானீங்கி மெயயுணர்வாராகலின், அவரை ஏபறி ங்கிதெளிச் காரென்றும், அவராகிய புவனபவ வுணர்வு நீப்பட்டு வீடபே பணடை லகியவுணர்வ ரங்குருபர் ப் பிரமம பானமேயிட்டு வையத் தின் ரனணியுடைதென்று கூறலு கூறவே, அபவுணர்வமை பிறப் பிற்குக் காரணமாகல கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—ஐயத்தினீங்கி - சந்தேகத்தினி நின்று நீங்கி, தெளிந்தாருக்கு - மெய்ம்மெயாருளே ணர்ந்தவர்க்கு, வையத்தின் - (அடைந்திருன்ற) நிலவுலகத்தினும், யானம - (அடையக் கடவ தாகிய) வீட்டுலகம், நணியது - அடைந்ததாகலி, உடைத்து - உடையதாம்

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

(பரி-ரை.) எ-து,—தெல்லபடுகின்ற புலன்கள வேறபாட்டான் ஐந் ராகியவுணர்வு அவற்றைவிட நிலையத்தாய வழியும், அதனற் பயனில் லேயேயாம மெய்பினை யுணராதலில்லாரிரு, எ-று.

ஐந்தாகியவுணர்வு மனம, அஃதெயதுலாவது மடங்கி ஒருதலைப்பட் டுத் தாமினைகளண பிறரல அவனினறவழியும் வீடு பயவாமையுன், பய மின்றென்றார் சிறப்புமமை எய்துதற்குமை விளக்கினறது. இவை யிரணபொட்டானும மெய்யுணர வுடையாரதே வீடினென மெய்யுணர் வின் சிறப்புக் கூறப்பட்டது

(தெ - ப - ரை)—மெய்புணர்வி இலாதவர்க்கு - மெய்யை அறிந்த லிலாதவர்க்கு ஐந்து உணர்வு - (ஒரை ஒளி சுவை நாற்றம் இவைவந்து புலன்களிலும் செல்லுதலால்) ஐந்தாகிய உணர்வு, எய்தியக்கண்ணும் - (அபபுலன்களிலிடத்து தமக்கு வசப்பட்டவிடத்தும், பயம - (அதனலே) பிரயோசனம், இன்று - இல்லை.

நி. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(பரி-ரை.) எ-து,—யாதொருபொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றினும் அத்தோன்றியவாற்றைக் கடைபோகியாது அப்பொருளின்கண்ணின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது. எ-று.

பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற நற்பனைகளைக் கழித்து, நின்றவுண்மைமையைக் காண்பதென்றவாறுயிற்று. அஃதாவது—கோரதேசமான யானைக்கட்சேனைய் மாந்தரருகொலிரும்பொறை என்றவழி ஆசனென்பதோர் சாதியும், சேரமானென்பதொரு குடியும், வேழநோக்கினையுடையானென்பதோர் வழக்கும், சேயென்பதோரியற்பெயரும், மாக்கரஞ்சொலிரும்பொறையென்பதோர் சிறப்புப்பெயரும், ஒரு பொருளின்கட் கற்பனைபாலின், அவ்வாபாணரானது நிலமுதல் பூமியீறுகிய தத்துவங்களின் றொகுதியெனவுணர்க்து, அவ்வாறை நிலமுலகத்தத்தங் காரணங்களுள் ஒடுங்கிக்கொண்டுசென்றற் காரணகாரியங்கள் இரண்டுமின்றி முடிவாய் நிற்பதனை யுணர்லாம். எப்பொருளென்ற பொதுமையான் இயகுஞ்சேயும் சீலதத்தினையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே யுணரப்படும். இதனை மெய்யுணர்வினது இலக்கணமகூறப்பட்டது.

(தே-ப-ரை.)—எப்பொருள் - யாதொருபொருள், எத்தன்மைத்தாயினும் - யாதொரு இயல்புடையதாய்த் தோன்றினும், (அத்தோற்றிய விதத்தைக் கண்டு விடாமல்), அப்பொருள் - (தோன்றிய) அப்பொருளிடத்திருந்தும், மெய்ப்பொருள் - மெய்யாகிய பொருளை, காண்பது - அறிவது; அறிவு - மெய்யறிவாம்.

சு. கற்றீண்டி மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(பரி-ரை.) எ-து,—இம்மக்கட் பிறப்பின்கணனே உபதேசமொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனுள் மெய்ப்பொருளை யுணர்ந்தவர் மீண்டு இப்பிறப்பின்கண் வாராத நெறியைபெய்துவர், எ-று.

கற்றொன்றதனுல் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், எண்டென்றதனுல் வீடுபேற்றிற்குரிய மக்கட்பிறப்பினது பெறுதற்கருமையும் பெற்றும். ஈண்டுவாராநெறி வீட்டுநெறி; வீட்டிறகு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தறகு உபாயம் மூன்று; அவை * கேள்வி, விமரிசம், பாவனை யென்பன. அவற்றுள் கேள்வி இவ்வுரற் கூறப்பட்டது.

---

* கேளவியென்னும், விசாரணமென்னுமொருபொருள். விமரிசனமென்னும், விசேசித்தலெனினும், மனனமெனினுமொக்கும். பாவனை யென்னும், தெளிதலெனினும், நிதித்யாசனமெனினு மொக்கும்.

(தெ - ப - ரை.)—ஈண்டு - இம்மையிலே, கற்று - (உபதேசத்தை ஞானசாரியரிடத்தே) கேட்டு, மெய்ப்பொருள் - (அதனால் உண்மைப்பொருளை, கண்டார் - உணர்ந்தவர், மற்று ஈண்டு - திரும்பி இப்பிறப்பினிடத்து, வாராநெறி - வாராதவழியை, தலைப்படுவர் - அடைவார்.

எ. தர்த்துள்ள மூள்ள துணரி னெருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

(பரி-ரை.) எ-து,—அங்ஙனங்கேட்ட உபதேசமொழிப்பொருளை ஒருவனுள்ளமை அளவைகளாலும் பொருந்துமாறு ஆராய்ந்து, அதனால் மூற்பொருளையுணருமாயின் அவனுக்கு மறுபிறப்புளதாக நினைக்கவேண்டா, எ-று.

ஒருதலைபாவோர்த்தென இயையும். அளவைகளும் பொருந்துமாறும் மேலே உரைத்தாம். இதனால் யோகிசுவரர் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—உள்ளம் - (அப்படிக்கேட்கப்பட்ட உபதேசப்பொருளை ஒருவனது) உள்ளமானது, ஒருதலையாக - நிச்சயப்பட, ஓர்ந்து - (பிரமாணங்களாலும் யுக்தியினாலும்) ஆராய்ந்து, உள்ளதா - அதனால் முதற்பொருளை, உணரின் - அறியுமாயின், பிறப்பு - (அவனுக்குத்) பிறவியுள்ளதாக, பேர்த்து - மாறி, உள்ளவேண்டா - நினைக்கவேண்டுவதில்லை

அ. பிறப்பெனும் பேதைமை நீங்கச் சிறப்பெனுஞ்
செம்பொருள் காண்ப தறிவு

(பரி-ரை.) எ-து,—பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சைகெட வீட்டிற்கு நிமித்தகாரணமாய செவ்வியபொருளைக் காணபதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது, எ-று.

பிறப்பென்னும் பேதைமையெனவும், சிறப்பென்னுஞ் செம்பொருளெனவும், காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக்குற்றங்களுள் அவிச்சை ஏனையாண்கிற்கும் காரணமாத லுடைமையின், அச்சிறப்புப் பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக் கூறினர். எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாகலான், வீடு சிறப்பெனப்பட்டது. தோற்றக்கேடுகளின்மையின் நிரதிசயமாய், நோன்மையாற் றன்னையொன்றாத கலத்தலின்மையின் தூய்தாய்த், தானெல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள்

---

* உசஉ - ம், குறளுரையிற் காண்க.

விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருத்தன்மைத்தாதல்பற்றி, அதனைச் செம்பொரு ளென்றார். மேல் மெய்ப்பொருளெனவும், உள்ளதெனவும், கூறியதூஉம் இதுபற்றியெனவுணர்க. அதனைக் காண்கையாவது, உயிர் தன்னவிசை கெட்டு அதனெஞ்சு ஏற்றமையுற இடைவிடாது பாவித்தல். இதனைச் சமாதி யெனவுஞ் சுகநிலநதியானமெனவுங்கூறுப. உயிர் உடம்பினீங்குங்காலத்து அதனுல் யாதொன்று பாவிக்கப்பட்டது, அஃது அதுவாய்த் தோன்றுமென் பது எல்லா ஆகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிரப்பிற்கேதுவாய பாவனை கெடுத்தற்பொருட்டுக் கேவலப்பொருளையே பாவித்தல்வேண்டுமென்றான், அதனை முன்னே பயிலாய இதனின் மிக்க வுபாயமில்லையென்பதறிக. இதனுள் பாவனை கூறப்பட்டது.

(தெ - ப - னை) —பிறப்புஎன்னும் - பிறவிக்கு முதற்காரண மெனப்படுகிற, மோகமை - அஞ்ஞானமான கு, நீங்க - கெட, சிறப்பென்னும் - மோக்கத்திற்கு நிமித்தகாரண மெனப்படுகிற, செம்பொருளை - தெளிவியபொருளை, காண்பது - அறிவது, அறிவு- (ஒருவனுக்கு மெய்யறிவார்.

கஉ சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்காரா சார்தரு நோய்

(பரி-ரை.) எ-து,—ஒருவன் எல்லாப்பொருட்குஞ்சார்பாய அசசெம் பொருளே யுணர்ந்து இருவகைப்பற்றும் அற வொழுகவல்லனாயின் அவனை முன் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வு மொழுக்கங்களை அழித்துப் பின்சாரமாட்டா, எ-று.

ஆகுபெயரால் சாருமிடத்தையும் சார்வனவற்றையுஞ் சார்பென்றார். ஈண்டொழுக்கமென்றது யோகநெறி யொழுகுதலே. அஃது இயமம், நிய

[illegible] ‘சாயுணர்வது சாவுநினைவொழுகி னெஞ்ஞான்று சாவுஞ்சாவுகாலனே யினையுமாஞ் சாவுநினைவுமிலன் சாவுநினைவுடையனாயினும் நிலையினைப் பற்றான்.’ என்பதனுளும் இவ்வாசாரியரே பெரும்பற்றப்புலியூரில் எழுந்தருளியிருந்தபொழுது சாலையாசாரி ஒருவரிடம் இரண்டு சிலை, இரண்டிருதலைப் பலகை, ஒரு மணையடுப்பு, ஒரு செப்புக்கலம், ஒரு வெண்கலப்பானை, ஒரு சாணிபறுப்பதற்கு ஒரு கூடை, ஒரு கரண்டி, ஒரு கலம் முதலியனஞ் சிலவே வாழ்தற்கு ஏதுவாய பாண்டங்களுமன்றி வேறுஞ்சிலவும் இருக்கக்கொண்டு செய்யும் தொழிலையே தமக்குத் தொழிலாகவும் பிறரும் சபிக்கியிலே கூடி நின்று வியப்படையும், இத்தகைய இருதலைப் பலகையாகிய திருநாமஞ் சாதலினு மென்க. இது சைவஞ்சாராத சாண்டிலம் பகிஷ்ணுவினு மொன்று.

மம், இருப்பு உயிர்நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதியென எண்வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் எண்திரைப்பிற் பெருகும்; யோகநூல்களுட்காண்க. மற்றுச்சார்த்தாவென இயையும். சாக்கடவன வாய் நின்ற துன்பங்களாவன பிறப்பு அசாதியாய் வருதலின் உயிரான் அள வின்றி யீட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுப விதத்தலும் பிறந்த வுடம்பான் முகந்து கொள்ளுதலும் முடிப் பின்னு மனுப விக்கக்கடவனவாய்க் கிடக்கை. அவை விளக்கின் முன் னிருள்போல் ஞான யோகங்களின் முன்னர்க் கெடுதலான், அடுத்துச் சாதகரென்றார். இதனை ஆருகதர் ஈவர்ப்பென்ப பிறப்பிற்குக்காரணமாகலான், கல்வினைப்பயனும் நோயெனப்பட்டது மேல்மூன்றுபாயத்தாலும் பற்பலபொருளை ஈண் டுப் பிறப் பறுமென்றார். ஆதி அறம் வழிநிகழ்ந்த துன்பங்களெல்லாம் என்செய்யு மென்னுங் கடாவை யாக நிற்கு அவை ஞான யோகங்களின் மூதிராசி யுடைய உயிரைச் சாரமாட்டாமையாலும் மீளு சாபன்மையாலும் கெட்டு விடுமென்பது இதனுட் கூறப்பட்டது.

(தெ. சொ - ளை) — சாரா - ஒழுகுமவர் அவரவரிடைக்குளங் கும் சார்பாகிய அரையிலொருவீர், ஈ வர்க்கு - அவர்க்கு, சார்பு - இருவகைப்பற்றுக்களும், கெட - கெடுதற்பொ, ஒழுகுதி ய - நடக்க வல்லனெனிலோ, சார்ந்தநர் - (முன்ன அவ்வினை) சேர்ந்த நரியவையாய் நின்ற நோய் - துன்பங்கள், அழித்து - அவ்வினையையும் ஒழுக் கத்தையும்) கெடுத்து, மற்றுஞாதாத்தா - பிறசேரமாட்டாவாம்.

கம். காமம் வெகுளி மயக்க மிலையேனும்
ஞமங் கெடற்கெதி நோய்

(பரி-ரை.) எ-து,—ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிசையென்னும இரு குற்றங்களுண் முன்றனுடைய பெயரு கூடக் கெடுதலான், அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா, எ-று.

அசாதியாய அவிசையும், அநபாயி யாவனென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட் கட் செல்லுமு ஆசையும், அதுபற்றி ஆசன் மதத்தினைகட் செல்லுங் கோபமு மென வடநூலார் குற்றமைந்தென்ப; ஓரா அவற்றுள் அகங்காரம் அவிச சைக்கணனும ஆவாவுதல் ஆசைக்கணனு மடங்குதலான், மூன்றென்றார். இடையறாத ஞானயோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றுங் காட் டுத்தீமுன்னர்ப் பஞ்சுபோலாயபோது மாகலின், அமலிகு நிர்வான்ற இவை மூன் றனுமை கெடவென்றார். இரு வு சிறப்புமை விகாரத்தா லிருக்கது. கெட வென்பது எச்சத்திரிவு. நோயென்பது காரியொருமை. காரணமாய அக் குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், அவர் க்கு வரக்கடவதுன்பங்களு மில்லையெனபது இதனுமற் கூறப்பட்டது. முன்

இடர்தரும்பங்களும் மேல்வரக்கடவ துன்பங்களும் இலவாதல் மெய்யுணர்வின் பயனுகலின், இவை யிரண்டுபோட்டும் இவ்வதிகாரத்த வாயின. இவ் வாருனே மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தவுடம்பும் அதுகொண்ட வினைப் பயன்களுமே யென்பது பெற்ரும்.

(தெ - ப - ரை.)—காமம்வெகுளிமயக்கம் - (ஞானயோகங் களின் முதிர்ச்சி யுடைவர்க்கு) விருப்பு வெறுப்பு அஞ்ஞானம் எனப்படுகிற, இவைமூன்றன்-இத் தற்றம்மூன்றனது, நாமம் - பெய ரும், கெட - கெடுதலால், நோய் - (அவைகளின் காரியங்களாகிய) **வினைப்பயன்கள், கெடும் - உண்டாதலில்லை.**

நெ-ம் அதிகாரம்—அவாவறுத்தல்.

அஃதாவது முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு நேர்வதின்ற உடம்பும் அது கொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனைபற்றி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கணமேற் பழைய பயிற்சிவையுதான் நினைவு செல்லுமன்றே, அந்நினைவும் அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாது மெய்ப்பொருளுணர்வான் அறுத்தல். அதிகாரமுறைமை யும் இதனுனே விளங்கும்.

க. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

(பரி-ரை.) எ-து,—எல்லாவுயிர்க்கும் எக்காலத்தும் கெடாது வரு கின்ற பிறப்பினையீனுக்கும் வித்து அவாவென்று சொல்லுவர் நூலோர்;எ-று.

உடம்பு நீங்கிப்போங்காலத்து அடித்த வினையும், அது காட்டுங்கதிர்மி த்தங்களும், அக்கதிர்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிர்கட்கொண்டு செல் லுமாகலான், அதனைப் பிறப்பீனும் வித்தென்றும், கதிரையத்தானுளதாய அவ் வுயிர்வேறுபாட்டினும் அவை தன்மை நிரியும்* உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி யென்னுங் கால வேறுபாட்டினும், அது வித்தாதல் வேறுபடாமையின் எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுமென்றும், இஃது எல்லாச்சமயங்கட்கும் ஒத்த லான் என்பவென்றுங்கூறினர். இதனுற் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப் பட்டது.

(தெ - ப - ரை)—எல்லா வுயிர்க்கும் - உயிர்களுக்கெல்லாம், எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், தவா - கெடாதுவருகின்ற, பிற

---

* உற்சர்ப்பிணியாவது உலகம் பாழாய்ப் போகமுதலியவற்றுள் வளர்பிறைபோலப் பெருகுங்காலம். அவசர்ப்பிணியாவது அஃது அவற்றுள் தேய்பிறைபோலச் சுருங்குங்காலம்.

பயன் - பிறவியை, ஈறும் - விளையாதாகிய, வித்து - காரணம், அவா - ஆசையாகும், என்ப - என்று (நூலோர்) சொல்லுவார்.

உ. * வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

(பதி-னா.) எ-து,—பிறப்புத்துன்பமாதல் அறிந்தவன் ஒன்றை வேண்டின் பிறவாமையை வேண்டுமே; அப்பிறவாமை தான் ஒருபொருளேயும் அவாவாமையை வேண்ட அவனுக்குத் தானேயுணடாம். எ-று.

அநாதியாகத் தான் பிறப்புப் பிறப் மூப்பு இறப்புக்களாற்றுன்பமுற்று வருகின்றமையை உணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண்ணேயாகலின் பிறவாமையை வேண்டுமென்றும், ஈண்டைச்சிற்றின்பவகருதி ஒருபொருளே அவாவின் அது பிறப்பினும் விடாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைதலின், அது வேண்டாமை வேண்டவருமென்றது கூறினர். பிறவாமையின் சிறப்புக்கூறிப் பின அது வரும்வழி கூறத் தொடங்குகின்றமையின. மற்று வினைமாற்றின்கண வந்தது.

(தெ - ப - ரை.) —வேண்டுங்கால் - (பிறப்புத் துன்பமாயிருக்கையை அறிந்தவன் ஒன்றை) வேண்டினால், பிறவாமை - பிறவாதிருக்கையை, வேண்டும் - விரும்பும்; அது - அப்பிறவாமையானது, வேண்டாமை - (தான் ஒருபொருளேயும்) விரும்பாமையை, வேண்ட - விரும்ப, வரும் - (அவனுக்குத்) தானே உண்டாம்.

உ. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டிய
யாண்டு மமைந்தொழுக்க நில.

(பதி-னா.) எ-து,—ஒருபொருளேயும் அவாவாமையை ஒக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்கண் இல்லை; இனி அவ்வளவேஅன்று, கேட்கப்படுகின்ற துறக்கத்தின்கண்ணும் அதனை உடைத்தில்லை, எ-று.

மக்கள்செல்வமும் தேவாசெல்வமும் மேன்மேல்நோக்கக் கீழ்தாதலுடைமையின், தனக்கு மேலில்லாத வேண்டாமையை விழுச்செல்வமென்றும், அதற்கு இரண்டலகினும் ஒப்பதில்லையென்றுங்கூறினர். ஆகமஅளவைபோலாது காட்சியளவை எல்லாரானுந் தெளியப்படுதலின், மக்கள்செல்வம் வரு

---

* இவ்வருளுரையிருக்குமிடம் திருவாவடுதுறைப் பதிப்பிலே "வேண்டுவார்கள் வேண்டும் பிறவாமை யென்றலையால் வேண்டி அதற்கேற்ற முயற்சியினாற் வேண்டிமுடித்து வேண்டாமை வேண்டவருமென்றதையால் வேண்டுமே வேண்டாமை வேண்டுமென்றால்," எனவெழுதி மருளிச்செயப்பட்டது.

த்து முற்கூறப்பட்டது. பிறவாமைக்கு வழியாமெனவும், வீழுச்செல்வமா மெனவும், வேண்டாமையின் சிறப்பு இவ்விரண்டுபோட்டாலுங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வேண்டாமைஅன்ன — (ஒருபொருளையும்) விரும்பாமைபோலும், வீழுச்செல்வம் - மேலாகிய செல்வமானது, சண்டி - (நாணப்படுகிற) இவ்வுலகத்தில், இல்லை - இலது, (அவ் வளவேயன்றி), ஆண்டும் - (கேட்கப்படுகிற) அவ்வுலகத்திலும், அஃதே ஒப்பது - அதுபோல்வது; இல் - இல்லை.

ச. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வா அய்மை வேண்ட வரும்.

(பரி-ரை.) எ-து,—ஒருவாக்கு வீடென்று சொல்லப்படுவது அவாவில் லாமை; அவ்வவாலில்லாமைதான் மெய்ம்மையை வேண்டத் தானே உண் டாம், எ-று.

வீடாவது உயிர் அவிழ்தை முதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் தூய்மையெனறும், காரணத்தை காரியமாக உபசரித்துத் தூய்மையென்பதவா வின்மையென்றும், மெய்ம்மையையுடைய பரத்தை ஆகுபெயரான் மெய்ம்மை யென்றுங் கூறினார். மற்று மேலையதுபோல வினைமாற்றின்கணவந்தது. வேண்டுதல் - இடைவிடாது பாவித்தல். அவாவறுத்தல் வீட்டிறகுப் பரம் பரையானன்றி நேரேயெதுவென்பதூஉம் அது வரும்வழியும் இதனுற் கூறப் பட்டன.

(தே - ப - ரை.) —தூய்மையென்பது - (ஒருவர்க்கு) முத்தியென் றுசொல்லப்படுவது; அவாஇன்மை - ஆசையில்லாமையாம்; அது - அவ்வாசையில்லாமை, வாய்மை - மெய்ம்மையாகிய கட வுளை, வேண்ட - விரும்ப, வரும் - தானேயுண்டாம்.

நி. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றக வற்ற திலர்.

(பரி-ரை.) எ-து,—பிறவி அற்றவரென்று சொல்லப்படுவார் அதற்கு நேரேயெதுவாகிய அவாவற்றவர்கள்; பிற எதுக்களற்று அஃதொன்றும் அறுத் வர்கள், அவற்றுற சிலதுன்பங்க ளற்றதல்லது, அவாபோற் பிறவி அற் றிலர், எ-று.

இதனுல் அவாவறுத்தாது சிறப்பு விதிமுகத்தானும் எதிர்மறைமுகத் தானும கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அற்றவர்என்பார் - (பிறவி) அற்றவரென்று சொல்லப்படுமவர், அவாஅற்றார் - (அதற்குநேரே ஏதுவாகிய)

ஆசை அற்றவர்; மற்றையார் - பிற எதுக்கள் அற்று அதவொன் றும் அறாதவர். அற்று ஆக அற்றுதலிலர் - (அவ்வேதுக்களாலே சில தன்பாகங்கள் அற்ற பால்லாமல்) அவர்போற் பிறவியற்றிலர்.

அஞ்ஞ வேதாரு மறவோ பொருவினை
வஞ்சிப்ப தோரு மவா

(பரி-ரை) எ-து —மெய்யுணர்தல் முதலிய காரணங்களெல்லாம் எய்தி அவற்றான் வீடெய்துதற்பாலனவு முவினை மறவினும், யாதற் புகுந்து பின்னும் பிறப்பின்கணவே வீழ்த்துக் கெடுக்கவல்லது அவா; ஆகலான அவாவினை அஞ்சிக்காப்பதே துணிவுமையாவது, ற-று.

ஒருமென்பன அசைநிலை. அகாரியமாயப் போந்த அவா, புரோவழி வாய்மை வேண்டலேயெனவு பாகரதா வாவாஞினை, அம்மிடமாக அவனியாமறபுகுந்து பழையவியாகையாய் சினவு பிறப்பினையுண்டாக் குவான், அதனை வஞ்சிப்பதென்றார். காரணமாது வாபாவமை வேண்டலே இடைவிடாது பயின்று அதுவேயபாமற பரிகரித்தல். இதனால் அவாவின் குற்றமும் அதினைக காப்பதே அறமெனவுமாகவு கூறப்பட்டன.

(தெ - ப - ரை. —ஒருவனை - துறக்க ஒருபினை, வஞ்சிப்பது- பின்னும் பிறவியிலே தள்ளிக்கெடுக்கவல்லது, அவா - ஆசையாம் (ஆகலால்), அஞ்சுவது - அவாவினை அஞ்சிக்காபாதே. அறன்- துறவறமாம்

எ. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டி மாற்றான் வரும்

(பரி-ரை.) எ-து,—ஒருவன் அவாவினையருத்து வாகெடுக்கவல்ல ஞயின், அவனுகுக் கெடாமைகேதுவாகிய விணை தான யிரும்புகெறி யாளே உண்டாரும் எ-று.

கெடாமை - பிறவித்துனபங்களான் அழியாமை. அதற்கேதுவாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களை. வினை - சாதியொருமை. தான் யிரும்புகெறி - மெய்வருத்தாகெறி. அவாவினை முற்ற அறுத்தலைக்கு வேறறஞ்செய்யவேணடா, செய்தலெல்லாம் அமைமென்பது கருத்து. இதனால அவாவறுத்தற சிறப்புக கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—அவாவினை - (ஒருவன்) ஆசையை, ஆற்ற அறுப்பின் - முழுதுமறுத்தால், [வஞ்சித்தும் வாராமற்கெடுக்க வல்லவஞயினென்றபடி.], (அவனுக்கு) தாவாவினை - கெடாமைக்கு

ஏதுவாகியசெயல், தான்வேண்டும்ஆற்றல் - தான்விரும்பும் வழி யினல், வரும் - உண்டாகும்.

அ. அவாவில்லார்க் கிலலாகுந் துன்ப மஃதுண்டேற் றவாஅது மேன்மேல் வரும்.

(பரி-ரை.) எ-து,—அவாவில்லாதார்க்கு வரக்கடவதொரு துன்பமும் இல்லை; ஒருவற்குப் பிரதிகாரணங்களெல்லாம் இன்றி அஃதொன்று உண் டாயின், அதனுனே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும், எ-று.

உடம்பு முதலாகின்ற துன்பம் ஈண்டே செய்துகொண்டதாகலின், ஈண்டுத்துன்பமென்றது,நிகழுபொழுது அவாவாற் செய்துகொள்வனவற்றை. தவாதுமேன்மேல் வருமென்றதனுல், மூலவினைத் துன்பங்களுமென்பது பெற்றாம். இதனுல் அவாவே துன்பத்திற்குக் காரணமென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—அவா இல்லாருக்கு - ஆசை யில்லாதவர்க்கு, துன்பம் - (வரக்கடவது) ஒருதுன்பம், இல்லாகும் - இல்லையா கும்; (ஒருவனுக்குப் பிறகாரணங்களெல்லாம் நிகராகிநின்றும்), அஃதுண்டேல் - அவ்வொன்றுமாத்திரம் உண்டாயின், தவாது - (அதனல் எல்லாத்துன்பங்களும்) முடிவில்லாமல், மேல் மேல் - மேலுமேலும், வரும் - உண்டாகும்.

கூ. இன்ப மிடையறு தீண்டு மவாவென்னுந் துன்பத் துட்டுன்பங் கெடின்

(பரி-ரை.) எ-து,—அவாவென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக்கெடுமாயின், அவன் வீடு பெற்றவழியே அன்றி உடம்போடு நின்றவழியும் இன்பம் இடையறாது, எ-று.

துன்பத்துட்டுன்பம் - எனைத்துன்பங்களெலலாம் இன்பமாக வருந் துன்பம். வினைவின்கண்ணே அன்றிக தோற்றநின்கணனும் துன்பமாக லின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரியமாக உபசரித்து அவா வென்னுந் துன்பத்துட்டுன்பமென்றும், அது கெட்டாாக்கு மனக்கவ லாறுதல் நிமித்தமாகி நித்தலான் ஈண்டுமின்பமிடையறாதென்றவாறு கூறினர். இனி ஈண்டு மென்பதற்குப் பெருகுமென் றுரைப்பாருமுளர். இதனுல் அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்போடு நின்றே எய்துவரென்பது கூறப் பட்டது.

(தெ - ப - ரை.)—அவாஎன்னும் - ஆசைஎன்று சொல்லப்படு கிற, துன்பத்துள் துன்பம் - துன்பங்களுள்ளே மிகுந்தஇன்பமா

னது; நெடின் - (ஒருவனுக்குக்) கெடுமாயின், (அவன்முத்தி பெற்றவிடத்தேதவல்லாமல்), ஈண்டும் - இவ்விடத்தையும் [உடம்போடு கூடினஇவ்விடத்தும் என்றபடி], இன்பம் - சுகம், இடையறாது - நடுவே நீங்காது

கஅ ஆரா வியற்கை யவாநீப்பி னன்றி
பேரா வியற்கை தரும்.

(ரா-ரை) எ-ள்,—ஒருகாலும் நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின், அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனும் இயல்பைக் கொடுக்கும், எ-று.

நிரம்பாமையாவது தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர்தல். அவ்வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. களிப்புக் கவற்சி களுமபிறப்புப பிணிமூப்பு இறப்புகளுமுமாயினவின்றி யமிர்திசய வினபத்தராய் நிற்றலின், விடுதலைப் பேராவியற்கை யென்றும், அஃது அவாநீத்தவழிப பெறுதல் ஒருதலையாகலின், அந்நிலைய தருமென்றும் கூறினர்.

* "சுன்றுஞ்ஞாலங் கடந்துபோய் கலலுருகிய மெல்லாநீத்
தொன்றுய்ங்கிடந்த வரும்பெரும்பா ழுலப்பிலத்தே யுணர்ந்துணர்ந்து
சென்றுநின்ப துன்பங்கள் தெரிறுக்கவோர்ந்து பசையற்று
லன்றேயப்போ தேயீடு மதுவேயீடு வீடாமே."

என்பதூம் இதகருத்தேபற்றி வந்தது. இக்நிலைமையுடையவினை வடநூலார் சீவன்முத்தனென்ப. இனைல் வீடாவது இதுவென்பதூஉம் அதை அவாவறுத்தார்க்கு அப்பொழுதே உளதாமென்ப தூஉம் கூறப்பட்டன.

(தெ - ப - ரை)—ஆரா இயற்கை - (ஒருபோதும்) நிரம்பாத இயல்பையுடைய, அவா-ஆசையை, நீப்பின் - (ஒருவன்) விடுவானுயின், (அவ்விடுதலை), அந்நிலைமேய - (அவனுக்கு) அடைபோதே, பேரா இயற்கை - எப்போதும் ஒரு நிலைமையனுக்தன்மையை, தரும் - கொடுக்கும்.

துறவறவியல் முற்றிற்று.

இவ்வாற்றான் இம்மை மறுமை வீடென்னுமூன்றனையும் பயத்தற் சிறப் புடைத்தாய அறவகூற்றினர்; இனிப் பொருளும் இன்பமும் கூறுவார், அவற் றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்.

நூஅ-ம் அதிகாரம்—ஊழ்.

— ◌ ◌ ◌ —

அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற் கேதுவா கிய நியதி. கூழ், பால், முதை, உண்மை, பெய்வம், நியதி, விதியென்பன ஒரு பொருட்கிளவி. இது பொருளின்பகுதிகள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்ற னுள் வைக்கப்படாமையானும் மேறகூறிய அறத்தோ டியைபுடைமையானும், அதனது இறுதிக்கண வைகக்பட்டது.

க ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

(பரி-ரை.) எ-து,—ஒருவற்குக் கைப்பொருளாதற்குக் காரணமாகிய ஊழான் முயற்சிஉண்டாம்; அஃதழிதற்குக் காரணமாகிய ஊழான் மடிஉண் டாம், எ-று.

ஆகூழ் போகூழென்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப் பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு மடி, பொருளின் ஆக்க அழி வுகட்குத் துணைக்காரணமாய முயற்சி மடிகளோயுக் ஊனை தோன்றவிக்கு மென்பது கருத்து.

(தே - ப - ரை) — கைப்பொருள் - ஒருவனுக்கு கையிற் கிடைத்தபொருள், ஆகூழால்-ஆதற்குக் காரணமாகிய ஊழி னலே, அசைவு இன்மை - முயற்சியானது, சோன்றும் - உண்டா கும்; போகூழால் - போதற்குக் காரணமாகிய ஊழினலே, மடி - சோம்பலானது, தோன்றும் - உண்டாகும்.

— ◌ ◌ ◌ —

உ தோற்றம் படுத்து நிறுவி முடிவகற்று
மாகலூழ் முற்றும் உடைத்து

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயிருவும் கைப்பொ ருளிழக்கச் சேதுவாகிய ஊழ்வந்து உற்றவிடத்து, அஃது அவனைப் பேதை யாக்கும்; இனி அவனறிவு சுருங்கி இருப்பினும் கைப்பொருளாதற் கேது வாகிய ஊழ்வந்து உறாவிடாது அஃது அவனை விரிக்கும், எ-று.

கைப்பொருளெனபது மேற்சொன்னான் வந்தது. இழவூழ் ஆகலூழென் பன இடைமடி வீழ்ந்துமைத்தொகை. உற்றக்கடையென்பது முன்னுங் கூட்டப்பட்டது. இயற்கையாளுட அறிவையும் வேறுபடுக்குமென்பதாம்,

(தே - ப - ரை.)—அறிவு-(ஒருவனுக்கு) எல்லாவறிவும் (உண்டாயிருந்தாலும்), இழவு - (கைப்பொருளை) இழத்தற்குக் காரணமாகிய, ஊழ் - பழவினை, உறுதற்கடை - பொருந்திய விடத்தை, பேதைப்படுத்தும் - (அதனை) அறியாமையடையச்செய்யும், ஆகல் - (அவனறிவு சுருங்கியிருந்தாலும் கைப்பொருள்) ஆகுதற்குக் காரணமாகிய, ஊழ்-வினை, உற்றக்கடை - பொருந்தியவிடத்தை, அகற்றும் - (அதனை) விசாலப்படுத்தும்.

நூலளவாகிய நுால்பல கற்றிலும் மற்றுந்தன்
னுள்ளமை யறிவே மிகும்

(பரி-ரை) எ-து,—பிறரைப்பின்செல்லும் புத்தியுடையான் ஒருவன் நூலளவாகிய பொருள்களை உணர்த்தும் நூல்பலவற்றையுங் கற்றுணர்ந்திலும், அவனுக்குப் பின்னுந் தன்னுள்ளாகிய பேதைமையுணர்வே மேற்படும். எ-று.

பொருளின்நுணுக்கம் நூலின்மேல் ஏற்றப்பட்டது. மேற்படுதல்-கல்வியறிவைப் பின்னியருளுதற்காகிய செயல்புரிதல் முன்முற்படுதல். * "காதன்மிக்குழிக் கற்றவரு கைகொடார்—சொல்ல கணணந்த முஞ்ஞான மோபாலுமால்", என்பதுமது. செயற்கையாகிய அறிவையுங் கீழ்ப்படுத்து மென்பதாம்.

(தே - ப - ரை.)—நுண்ணிய - (அறியாமையாக்குவதாகிய) நுட்பமான பொருள்களையுடைய, நூல் பல - பலநூல்களையும், கற்பினும்-கற்றுணர்ந்திலும், மற்றும் - (அவனுக்குப்) பின்னும், தன் உலமை - தனது உயிரிலுள்ளிய அறிவு, மிகும் - மேற்படுமே.

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

(பரி-ரை.) எ-து,—உலகத்தில் ஒருவனுடைய இயற்கை இரண்டிறத்து; ஆகலான், செல்வமுடையராதலும் வேறு, அறிவுடையராதலும் வேறு, எ-று.

செல்வத்தினைப் படைத்தலுங் காத்தலும் பயன்கோடலும் அறிவு உடையார்க் கல்லது இயலாதன்றே, அவ்வாதன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையர் செல்வராகவும் காண்டலான், அறிவுடையராதற்காம்-ஊழ் செல்வமுடையராதற் காகாது, செல்வமுடையராதற் காகும்-ஊழ் அறிவுடையராதற் காகாதென்றதாயிற்று. ஆகவே, செல்வஞ்செய்யுகால் அறிவாகிய துணைக் காரணமும் வேண்டாவென்பது பெற்றாம்.

* தேவபிரகாசனி, கன பரீக்ஷாநிரூபணம், எஸ்.

(தே - ப - ரை)—உலகத்த - உலகத்தில். இயற்கை - (ஊழினது) இயற்கையானது, இருவேறு - இரண்டுகூறு பிருக்கின்றது (ஆதலால்), திருவேறு - செல்வமுடையவராதலும் வேறு; தெள்ளியராதலும் வேறு - அறிவுடையவராதலும் வேறு.

நி கல்லாவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
கல்லாவாஞ் செல்வஞ் செயற்கு

(பரி-மை.) எ-து,—செல்வத்தைஆக்குதற்கு நல்லவையெல்லாந் தீயவாய் அழிக்கும்; அதுவேயன்றித் தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும் ஊழ் வயத்தான்; எ-று.

நல்லவை தீயவையென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. * ஊழானென்பது அதிகாரத்தாற்பெற்றாம். அழிக்கும் ஊழுற்றவழி, க் காலமுதலிய நல்லவாயினும் அழியும், ஆக்கும் ஊழுற்றவழி அவை தீயவாயினும் ஆகுமென்பதாயிற்று. ஆகவே, காலமுதலிய தினைக் காரணங்களோடும் வேறுபடுக்குமென்பது பெற்றாம்.

(தே - ப - ரை —செல்வம் - செல்வத்தை, செயற்கு - உண்டாக்குதற்கு; நல்லவை எல்லாம் - நற்குருமுங்க ளெல்லாம், தீயனும்-தீயவையாய்அழிக்கும், (அதுமாத்திரமல்லாமல்) தீயவும் - தீயவை தாமும், நல்லனும் - நல்லவையாய் ஆக்கும், ஊழ்வசத்தால்).

கூ பரியினு மாகா வாம் பாலவ வுய்த்த
சொரியினும் போகா தம.

(பரி-மை.) எ-து,—ஊழ்கூழலாத பொருள்கள் வருந்திக்காப்பினும், தம்மிடத்து நில்லாவாம்; ஊழாலுதமமாயபொருள்கள் புறத்தே கொண்டு போய்ச சொரிந்தாலும், தம்மவிட்டுப் போகா, எ-று.

பொருள்களின்நிலையும் போக்கும் ஊழினல்லது காப்பகழ்ச்சி களான்ஆகா வென்பதாம். இவை ஆறாட்டாமும் பொருட்குகாரணமாய ஊழின்வலி கூறப்பட்டது.

(தே - ப - ரை)—பால் - ஊழினுலே, அல்ல - தம்முடையவை யாகாதபொருள்கள், பரியினும் - வருந்திக் காப்பாற்றினும், ஆகாஅம் - (தம்மிடத்து நில்லாமற்போகும், தம - தம்முடையவையாகிய பொருள்கள், உய்த்து - (பிறரிடத்தே) கொண்டுபோய்,

---

இவ்வாறு அதிகாரம் ஒவ்வொன்றும் முடியும்வரையிலும் அமைந்துள்ளன என்பர்.

சொரியினும் - பெய்துவிட்டாலும், போகா - (தம்மைவிட்டுப்) போகாவாம்.

எவ்வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
கொகுத்தார்க்குந் துய்க்கதாகலரிது.

(பதவுரை.) எவ்வகுத்தான் — ஒருவன் முன்னெழுதிவைத்த, வகுத்த வகை — விதிக்கப்பட்ட வகையை, அல்லால் — அல்லாமல், கோடி — (தானமாகக் கொடுக்கப்படும்) பொருள்களை, கொகுத்தார்க்கும் — (அவற்றை) வாரிவழங்கினவர்களுக்கும், துய்க்கதாகல் — அனுபவிக்கத்தக்கதாதல், அரிது — இல்லை.

(பதவுரை — கோடி — அனுபவிக்கப்படும் பொருள்கள்) கோடியை; கொகுத்தார்க்கும் — வாரிக்கொடுத்தவர்க்கும், வகுத்தான் — முன்பு விதித்தவன், வகுத்த — விதிக்கப்பட்ட, வகையல்லால் — வகையாலல்லது, துய்த்தல் — அனுபவித்தல், அரிது — இல்லாதது.

எறப்பாரிமற் றுயரழ விவ்வா நாற்பால்
முட்டாக் கழியு மெனின்

(பதவுரை.) எறப்பாரி — வள்ளல் பாரியை, மற்று — அசைநிலை, அழ — (அவன் இறந்தபோது) அழுமாறு, இவ்வா நாற்பால் — இவ்வாறான நான்கு வகைகளும், முட்டாக் கழியும் — தடைபடாமல் நீங்கிவிடுமாயின், எனின் — என்றால்.

துறப்பாரென்பது ஆசிரியரை சொல்லுமுறையாகச்சொல். தம்மால் விடப்படுவனவாகிய விடப்படுபொருள்களை அன்பு சருகுபோல வெறுத்தபோட்டாற் முன்பமுறுகின்றது வாழ்வின்வலியானென்பது எஞ்சிநின்றவினை, மன முழுமியசைகளைவந்தது.

(பதவுரை — உறுபால் — நான்கு வகையும் அனுபவிக்கத்தக்கதாகிய முன்பங்களை. முட்டாக் — அடைவிக்காமல், கழியும்மனின் — நீங்குமாயின், துப்புரவு இல்லார் — வசதியில்லாதவர், அறுபவிக்கப்படும் பொருளில்லாதார், துறப்பார் — துறக்கும் தன்மையுடையராவர்.

பெருவள்ளலாகிய பாரி இறந்தபோது அவனுடைய மகளிர் இருவரையும் கபிலர் அழைத்துக்கொண்டுபோய் விச்சிக்கோன் பேகனிடத்திலும் மலையமான் திருமுடிக்காரியிடத்திலும் விட்டுவந்தார் என்பது வரலாறு. இவ்வரலாறு விரிவாக இந்நூலின் இறுதியில் கூறப்பட்டிருக்கின்றது. பார்க்க.

கூ. நன்ரும்கா னல்லவாக் காண்பவ ரன்ரும்கா
லல்லற் படுவ தெவன்.

(பரி - ரை.) எ-து,—நல்வினை வீளையுமகால் அதன் வீளைவாய இன்பங்களைத் துடைக்குந்திறன் நாடாது இவை நல்லவென்று இயைத்தனுபவிப் பார் எனைத்தீவின வீளையுங்கால் அதன் வீளைவாய துன்பங்களையும் அவ்வா றனுபவியாது துடைக்குந்திறன் நாடி அல்லலுழப்பது என்கருதி? எ-று.

தாமே முன்செய்து கொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும், இரண்டும் இயைத்தனுபவிக்கற்பால; அவறறுள் ஒனறறற்கு இயைத்தனுப வித்து எனையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன்றென்பதாம். இவை மூன்றுபாட்டானும் இன்பதுன்பங்கட்குக காரணமாய பழவினவலி கூறப் பட்டது.

(தெ - ப - ரை.—நன்ரு - நல்வினை. ஆம்காற் - இன்பங்களைக் கொடுக்கும்போது. நல்லஆக - நுவலின்பங்களை நீக்கும் விதங் தேடாமல் இவை) நல்லவையென்றிசைத்து, காண்பவர் - அனுப விப்பவர். அன்று - மற்றைநாளினை. ஆக்கம் - துன்பங்களைக்கொடு க்கும்போது, அல்லற்படுவது- அத்துன்பங்களையும்அப்படி அனுப வியாமல் நீக்கும் விதந்தேடித தானப் படுவது, எவன் - யாது?

கஅ. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்

(பரி-ரை.) எ-து,—தன்னை விலக்குதற்பொருட்டுத் தனக்கு மறுதலை யாவதோ ருபாயதனைச சூழினும, தான் அவ்வுபாயமீமையாலும் பிறிதொன்ரு னும் வழியாக வருது ஆசூழ்சியினை முற்பட்டு நிரக்கும்; அதனால் ஊழ்போல மிக்கவலியுடையது யாவையுள? எ-று.

பெருவலி—ஆகுபெயர். சூழ்தல் - பலருடனும் பழுதற எணணுதல். செய்தற்கே அன்றிச சூழ்தற்கும் அவரி னொடாதென்றமையின், உம்மைஎசச வும்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையின், ஊழே வலியதென்பதாம். இதனுள் அவ்விருவகை ஊழின் வலியும் பொதுவாகக்கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—மற்றைஒன்று - நன்னெஞ்சில்தீதற்பொருட் டுத்) தனக்குப்பகையாகிய ஒருபாயத்தை. சூழினும் - ஆராய்ந் தாலும், தான் - அவ்வூழ் முந்துவரல் - (அவ்வுபாயத்தையாவது மற் ரொன் றையாவது வழியாகக்கொண்டு வந்து அவ்வுபாயச்செய்கைக்கு)முற் பட்டுநிற்கும், ஊழின் - (அதனால்) ஊழ்போல், பெருவலி - மிகு ந்த வலிமையுடையவை, யா - எவை, உள - இருக்கின்றது?

அறத்துப்பால் முற்றிற்று.

பொருட்பால்.

அரசியல்.

இனி இல்லறத்தின் விரிவாகிய பொருளிலக்கணமுள் இருமையும் பயப்பதாகிய பொருள் கூறுவல் எனத்தொடங்கினார். அது தன்துணைத்தாரணமாய அரசியல் கூறற்பாலதாகலின். அரசனீயியல்பாவது காவலில் நடாத்தல் முதலாகிய ஆட்சியல், அமைச்சியல், நட்பியலென மூவகைப்படுத்து, மலாதலியலதிறத்தும் எனத்தொடங்கி அமைச்சியலது இருபத்தைந்ததிகாரத்தாற் கூறுவானெடுத்து, முதற்கண் இறைமாட்சி கூறு

நான்காம் அதிகாரம்—இறைமாட்சி.

அஃதாவது அவன்றன் காருண்ணியப்பகைகள். உலகமெலாம் ஒருவாய் நின்று உலகுகாத்தலின், இறையியனாயும்; ஈரிருவுடைமண்ணரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யெனலின்" என்று பெரியாரும் பணித்தார்.

கற படைகுடி கூழமைச்சு நட்பரண் நான்கு
முடையான் வேந்தரு ணெறு.

(இ-ள்.) எ-து,—படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணுமென்று சொலப்பட்ட ஆறங்கங்களையு முடையவன் அரசருள் ஏறு போல்வான், எ-று.

ராணிக் குடியெனறது அவனியுடைய நாட்டினை. கூழென்றது அதற் கேதுவாய பொருளே. அமைசசு, நாடு, அரண், பொருள், படை, நட்பென்பதே முறையாயினும ராணியெனறோகுக்கப் பிறழ வைத்தார். ஆறுமுடையா ரெனறதனால், அவையுள் ஒன்று இலவாயிலும அரசனீதி செல்லாதென்பது பெறாம; வடநூலார் இவறறினிறகு அங்கமெனப் பெயர்

கருமுடை டானைவா ளணிப் பிரமன் கண்டேனே யெனனு முருவுடையண னேயரி யணிதுலயாரு நினைதல் தாமரைச் சேவிறுத லெலாங் சடல யணணன கோயிலே யெனனும பொருவிலும் வீழவ்யுமே யான கணணன கழலகள விரும்புமே - திருவாய்மொழி சுகபிரமபிரான் அபிபாசுரம்,

கொடித்தானும் அது நோக்கி. எறென்பது உபசாரவழக்கு. அரசற்கங்கமாவன இவையென்பதானும் இவை முற்றும் உடைமையே அவன் வெற்றிக்கேது வென்பதானும கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—படை - சேனையும், குடி - நாடும், கூழ் - பொருளும், அமைச்சு - மந்திரியும், நட்பு - நட்பும், அரண் - அரணும், (என்றுசொல்லப்படுகிற) ஆறும் - ஆறங்கங்களையும், உடையான் - உடையவன், அரசருள் ஏறு - மன்னருள் ஆண்சிங்கம் போல்வானவன்.

உ. அஞ்ராமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்ராமை வேந்தற் கியல்பு

(பரி-ரை.) எ-து,—அரசனுக்கியல்பாவது நிண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமுமென்னும் இந்நான்கு குணமும் இடைவிடாது ற்றல். எ-று.

ஊக்கம் - வினைசெய்தற்கண் மனவெழுகை. இவற்றுள் அறிவு ஆறங்கத்திற்கும் உரித்து, ஏகை படைக்குரித்து. எனைய வினைக்குரிய. உயிர்க் குணங்களுள் புன்றோன்ற வெனைய அடங்கிவரும். அவற்றுள் இவையடங்கின், அரசற்குக் கெடுவன பலவா மாகலின், இவை எப்பொழுதுந்தோன்றி நிற்றல் இயல்பாகவேண்டுமென்பார், ஞ்சாமை வேந்தற்கியல்பென்றார்.

(தே - ப - ரை.)—வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது, அஞ்சாமை - உறுதியும், ஈகை - கொடையும், அறிவு - விவேகமும், ஊக்கமும் - மனவெழுச்சியும், இந்நான்கும் - இந்நான்கு குணங்களும், ஞ்சாமை - நடுவே நிங்காது நிற்றலாம்.

ங. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவர்க்கு

(பரி-ரை.) எ-து,—நிலத்தினை ஆளுந் திருவுடையார்க்கு அக்காரியங்களில் விரைவுடைமையும் அவையபிநிதக்கேற்ற கல்வியுடைமையும் ஆண்மையுடைமையுமாகிய இம்மூன்றுகுணமும் ஒருகாலும் நீங்கா, எ-று.

கல்வியது கூறுபாடு முன்னர்க்கூறப்படும். ஆண்மையாவது ஒன்றனையும் பாராது கடிதிற்செய்வதாகலின், அது ஈண்டு உபகாரவழக்காற் துணிவெனப்பட்ட . உம்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. இவற்றுட் கல்வி ஆறாங்கத்திற்கும் உரித்து, எனைய வினைக்குரிய. நீங்காவென்பதற்கு மேலெஞ்சாமைக் குரைத்தாங்குரைக்க.

(தே - ப - ரை.)—நிலன்ஆள்பவற்கு - நிலத்தினை ஆளுந் திருவினையுடையவனுக்கு, தூங்காமை (உடைமை) - அக்காரியங்களி

லே வினைவுடைமையும், கல்வி (உடைமை) - (அவைகளே அறி தற்கு ஏற்ற) கல்வி யுடைமையும், துணிவு உடைமை - ஆண்மை யுடைமையும்ஆகிய, இம்மூன்றும் - இம்மூன்று குணங்களும், நீங் கா - (ஒருபோதும்) நீங்காவாம்.

۴. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு

(பதி-ரை.) எ-து,—தனக்கோதிய அறத்தின் வழுவாதொழுகி அறன் அல்லவை தன்னுட்டின் கண்ணும் (கழுமாமற் நடக்கு வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினை யுடையான் அரசன், எ-று.

அவ்வறமாவது தூதல், வேட்டல், ஈகலென்னும் பொதுத் தொழிலினும், படைக்கலம்பயிறல், பல்லுயிரோம்பல், பகைத்திறந்தெரிதலென்னுஞ் சிறப் புத்தொழிலினும், வழுவாது நிற்றல். * "மாண்டவறந்தெரி முதற்றே யரசின் தொற்றம்" என்பதனுல் இவ்வறம் பொருட்குக் காரணமாதலறிக. அல் லவை கொலை களவு முதலாயின. குற்றமாய மானத்தினீங்குதற்கு மறனி ழுக்காமானமென்றார். அஃதாவது † "வீரத்தின்மையின் வினைகாமென மத வேழமு மெறியா—னேறுடைவா ணிகரையினும் பிறர் நிரையென் றெறியான்-மாறன்மையின் மறம்வாயென் றியாயையு மெறியா—னுறன்மையின் மூரியாயையு மெறியானாயி ருவன்." எனவும் || "அழியுங் புறக்கொடை யயில்வீவ மேலா சான்" எனவுஞ்சொல்லப்படுவது. அரசு - அரசனது தன்மை; அஃது உபசாரவழக்கால் அவன்றன்மே னின்றது.

(தே - ப - ரை.)—அறன்-(தனக்குச் சொல்லப்பட்ட) அறத்தி னிநுங்கு, இழுக்காது - தவறாது நடந்து, அல்லவை - அறமல்லா தவைகளை [பாவங்களை], நீக்கி - (தனதுகாட்டினும்) உண்டாகா மல்கடிந்து, மறன் - வீரத்தினிழுக்கு, இழுக்கா - தவறுத, மானம்-மானத்தை, உடையது - உடையவன், அரசு - அரசனவான்.

**நி. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.**

(பதி-ரை.) எ-து,—தனக்குப் பொருள்கள் வரும்வழிகளை மேன்மேலுள வாக்கலும், அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித்தொகுத்தலும், தொகுத்தவற்

---

* புறநானூறு, குரு
† சீவகசிந்தாமணி, பன்மகளிலம்பகம், சகுசு.
|| புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சிப்படலம், உ0.

றைப் பிறர்கொள்ளாமற் காத்தலும், காத்தவற்றை அறம்பொருளின் பங்களின்பொருட்டு விடுத்தலும் வல்லவனே அரசன், எ-று.

ஈட்டல், காத்தல், வகுத்தலென்றவற்றிற்கேற்ப இயற்றலென்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன: மணி, பொன், நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன: பகைவரையழித்தலும், திறை கோடலும், தன்னுடு தலையளித்தலும் முதலாயின. பிறரென்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினர். கடவுளர், அந்தணர், வறியோரென்றிவர்க்கும் புகழிற்குங் கொடுத்தலே அறப்பொருட்டாகவும், யானை, குதிரை, படை, நாடு, அரணென்றிவற்றிற்கும் பகையொடுகூடாமற பிரிகப் படுவார்க்கும் தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவார்க்குங் கொடுத்தலேப் பொருட் பொருட்டாகவும், மண்டபம், வாவி செய்குன்று, இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களான் நுகர்வனவற்றிற்குங் கொடுத்தலே இன்பப்பொருட் டாகவுங்கொள்க. இயற்றன்முதலிய தவருமத்செய்தல் அரிதாகலின், வல்ல தென்றார். இவை கான்குபாட்டாலும் மாட்சியே கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—இயற்றலும் - (தனக்குப்பொருள்கள் வரும் வழிகளே மேலுமேலும்) உண்டாக்கலும், ஈட்டலும் - (அப்படி வந்த வைகளே) ஒரிடத்தேசேர்த்தலும், காத்தலும் - (சேர்க்கப்பட்ட வைகளைப் பிறர்கொள்ளாமல்) காத்தலும், காத்த - காக்கப்பட்ட வைகளே, வகுத்தலும் - (அறம் பொருளின்பங்களின் பொருட்டுச்) செலவுசெய்தலும், வல்லது - வல்லவன், அரசு - அரசனுவான்.

கூ காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்

(பரி-ரை.) எ-று.—முறை வேண்டினர்க்கு குறைவேண்டினர்க்குங் காண்டற்கெளியனும் யாவர்மாட்டுங் கடுஞ்சொல்ல னல்லனுமாயின் அம்மன்னனது நிலத்தை எல்லா நிலைகளினும் உயர்த்தக்கூறும் உலகம். எ-று.

முறைவேண்டினர் - வலியரான் நலிவெய்தினர். குறைவேண்டினர்-வறுமையுற்றிரந்தார். காண்டற்கெளிமையாவது பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடையனுயிருத்தல். கருஞ்சொல்-கேள்வியினும் வினையினுங் கடியவாய சொல். நிலத்தை மீக்கூறுமெனவே, மன்னனே மீக்கூறுதல் சொல்லவேண்டாவாயிற்று. மீக்கூறுதல் இவன் காக்கின்ற நாடு பசி பணி பகை முதலிய இன்றி யாவர்க்கும் பேரின்பந் தரு தலின், தேவருலகினும் நன்றென்றல். உலகமென்னும் எழுவாய் வருவிக்கப் பட்டது.

(தெ - ப - ரை.)—மன்னன் - அரசன், காட்சிக்கு எளியன் - (வழக்கறிவிப்பவர்க்கும் குறை பிரப்பவர்க்கும்) காணுதற்கு எளி

கடுஞ்சொல்லன் அல்லனேல் - (யாவரிடத்தும்) கடிய சொல்லினன் அல்லாதவனுமாயிருந்தால், நிலம் - (அவனதை) நிலத்தை, மீக்கூறும் - உலகம் எல்லாமிலங்களினும் உயர்த்திச் சொல்லும்.

எ. இனசெலா னீந்தளிக்க வல்லார்குப் தன்சொலாற்
குன்கண் டீனதகிவ் வுலகு

(பரி-ரை.) எ-து;—இனியசொல்லுடனே ஆதலைசெய்து அளிக்கவல்ல அரசனுக்கு இவ்வுலகம் மன்புகழோடு மேலிடுதான் கருதிய அளவிறரும்,எ-று.

இன்சொல்-சொல்லியபினும் விளைபயனும் இனியவாய சொல் ஆதல், வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல். அளித்தல் - உண்பவரை ஆதரித்தலும் பகைவராதலும் கலிவுபடாமை காத்தல். இவை அரியவாகலின் வல்லாற் கென்றும், அவன் மண்முழுதும் ஆளுமாகலின் இவ் வுலகென்றது கூறினார். கருதியஅளவிற்றாதல்-கருதியபொருளெல்லாஞ் சுரத்தல்.

(தெ - ப - ரை.)—இன்சொலால்-இனிமையாகிய சொல்லை, ஈந்து-கொடுத்து, அளிக்க - காக்க, வல்லார்க்கு - வல்ல அரசனுக்கு, இவ்வுலகு - இவ்வுலகமானது, தன்கண் மாய்வு - தன்னிடத்தில் பகைமையிலாமை, தான் நினைத்த அனைத்து - தான் நினைத்த அளவினதாகும்.

அ. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்

(பரி-ரை.) எ-து;— தான் முறைசெய்தும் பிறரை வியாபாரஞ்செய்யும் அரசன் பிரப்பான மகனேயாயினும், செயலான் மகற்குக் கடவுளென்று வேறு வைக்கப்படும். எ-று.

முறை - அறநூலும் நிதிநூலுஞ் சொல் லியபோல். பிறரென்றது மேற்சொல்லியாரை. வேறுவைத்தல்-மகனினீதிபிரித்து உயர்த்தலைவைத்தல்.

(தெ - ப - ரை)—முறை செய்து - நீதி செலுத்தி, காப் பாற்றும் - (பிறர்வருந்தாமல்) காத்து ஆட்சிசெய்யும், மன்னவன் - அரசன், (பிறப்பால்மனிதனேயாயினும்), மக்கட்கு - மனிதர்களுக்கு, இறைவன்று - (செயலினாலே) கடவுளென்று, வைக்கப்படும்-வைக்கப்படுவன்.

கூ. செவிநைப்பச் சொற்றொடாநிற்கும் பண்புடை மன்னன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

(பரி-ரை.) எ-து,—இடிக்குந் துணையாயினுர் சொற்களைத் தன்செவி பொருதாகவும் விளைவுகோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது குடை நிழற்கண்ணே தங்கும் உலகம், எ-று.

செவிவைப்ப வென்றதற்கேற்ப இடிக்குந்துணையென்பது வருவிக்கப் பட்டது. நாவின்புலத்தைச செவிமேலேறறிக் கைப்பவென்றுர். பண்பு டைமை - விசேடவுணர்வினுதல். அறநீதிகளிற் றவருமையின், மண்முழு துந் தானேயாளுமென்பதாம்.

(தே - ப - ரை.)—சொல்-(கண்டிக்குப் புத்திசொல்லுந் துணை யாயினவரது) சொற்களை, செவிவைப்ப - (தன்) செவிபொருதாக வும், பொறுக்கும் - (அவைகளிற்பயனைக் கறித்தபி) பொறுக்கும், பண்புடை - குணமுடைய, வேந்தன் - அரசனது, கவிகைக்கீழ் - குடைநிழலின்கீழே, உலகு - உலகமானது, தங்கும்—

கo தொடையளி செங்கோல் குடியோம்ப னென்கு
முடையானும் வேந்தர்க் கொளி

(பரி-ரை.) எ-து,—வேண்டுவோர்க்கு வேண்டுவன (கொடுத்தலும், யாவர் பாட்டுந் தலையளி செய்தலும், முறைசெய்தலும், தளர்ந்த குடிகளைப் பேண மாகிய இந்நான்கு செயலையும் உடையவன் வேந்தர்க் கெல்லாம் விளக் கம், எ-று.

தலையளி - முகமலர்ந்தினியகூறல், செவ்விய கோல்போலின், செங் கோலெனப்பட்டது. குடியோம்பலென எடுத்துக் கூறினமையால், தளர்ச்சி பெற்றும் அஃதாவது ஆறிலொன்றுய பொருடன்னையும் வறுமைநீங்கிய வழிக்கொள்ளல் வேண்டின் அவ்வாறுகோடலும். இழத்தல் வேண்டின் இழ த்தலுமாம். சாதிமுழுதும் விளக்கலின், விளக்கென்றுர். ஒளி—ஆகுபெயர். பாட்டானும் மாட்சியும் பயனும் உடன் கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—கொடை-(வேண்டுவோர்க்கு வேண்டுமவை கொடுத்தலும், அளி - (யாவரிடத்தும்) முகமலர்ந்து இன் சொற்சொல்லுதலும், செங்கோல் - முறைசெய்தலும், குடியோம் பல் - (தளர்ந்த) குடிகளைக்காத்தலும் (ஆகிய), நான்கும்-இந்நான்கு செயல்களையும், உடையான் - உடையவன், வேந்தர்க்கு - அரசர்க் கெல்லாம், ஒளியும் - விளக்காம்

ச0-ம் அதிகாரம்—கல்வி.

அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவை வன: அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமென்றி றி னூல்களும் முகலாயின. அரசன் அறிவுடைய னாயக்கால் தன்னுயிர்க் யன்றி மன்னுயிர்க்கும் பயன்படுத்தலேக்கி, இவ்தாயிலுள் வைக்கப்பட்ட பினும், யாவர்க்கும் உறுதி பயதற்கு சிறப்புடைமையிற பொதுப்படக் றுகின்றார். மேல் தூங்காமை கல்வியெனத் தோற்றவாய் செய்த மாட் ய விதித்துக் கூறுகின்றமையின் இவ்திறைமாட்சியின் பின் வைக்கப்பட் து.

க. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

(பரி-ரை.) எ து—ஒருவன் கற்கப்படு நூல்களைப் பழுதறக் கற்க; வ்வனங்கற்றால் அக்கல்விக்குத்தக அவைசொல்லுகின்ற படிக்கண்ணே ற்க, எ-று

கற்பவை யென்றதனான், அஃப்பொருள் இன்பம் வீடென்னும் ரு நிறப் ாருளுணர்த்துவன அன்றிப் பிறபொரு ளுணர்த்துவன கின்னுட்பல் ன்ச சிற்றறிவினர்க்கு அகாவென்ப து பெறாம். கசடறக்கற்றலாவது ரீத் ஐயங்களோ நீக்கி மெய்ப்பொருளே கல்லோ டலருடனும் பலகாலும் றல். நிற்றலாவது இல்வாழ்வுநிக் ட "கருமமு முள்படாப் போகமும் துவ் ம்—தருமமுந் தகுகாகக்கை செய்" எலினும், பறர்துறித்வத்தான் மெய் ணர்த்து அவாவறுத்தலினும், வழுவாமை சிறப்புடைமைகாயின் கற்றல் ண்டு மென்பதூஉம், அவனுற் கற்கப்படு நூல்களும்; அவற்றைக் கற்குமா ம், கற்றதனுற பயனும் இதனுற் கூறப்பட்டன.

(தெ - ப - ரை)—கற் பவை - ஒருவனால், கற்கப்படு நூல் ளை, கசடு - பழுதறக், கற்க - கற்கக்கடவன்; கற்ற பின்- ற்ப்படி) கற்றறிந்து, அதற்கு - அக்கல்விக்கு, தக - தகுதியாக, ற்க - (அவைகளால் சொல்லப்பட்ட வழியிலே) நிற்கக்கடவன்.

உ. மண்ணெண்ப வேனை யெழுத்தெண்ப விவ்விரண்டுங்
கண்ணெண்ப வாழ முயிர்க்கு

(பரி-ரை.) எ-து,—அறிவாதார் எண்ணென்று சொல்லுவனவும் மற்றை ழுத்தென்று சொல்லுவனவும் ஆகிய கலைகள் இரண்டனையும் அறிந்தார் ப்புடை உயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர், எ-று.

---

* தாலடியார், அறிவுடைமை—10.

எண்ணென்பது கணிதம்: அது கருவியுஞ் செய்கையுமென இருவகைப் படும்; அவை ஏம்பமுதலிய நூல்களுட்காண்க. எழுத்தெனவே, அதனே டொற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விருதிறமும், அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின், கண்ணெனப்பட்டன. அவை கருவியாதல் "ஐந்முதலொழிய வல்லா தனவெண்ணி, வீடுவழுவா நிலை மையவான—மாதே, யறமாம் பொருளின்பம் வீடென் றிவற்றின், றிறமாமோ வெண்ணத்தாற் செப்பு." "எழுத்தறிய, திரு மிதனைமு தோன்றான், மொழித்திறத்தின் முட்டறுப்பா ளூ—மொழித்திறத்தின், முட்டறுத்த நல் லோன் மூனுறு பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடு பெறும்." இவற்றுள் எனபவென்பவற்றுள், முன்னைய இரண்டும் அஃறிணைப் பன்மைப் பெயர்; பின்னது உயர்திணைப் பன்மைவினை. அறியாதார அறிந்தாரென்பன வருவிக்கப்பட்டன. நிறப்புடையுயிரென்றது மகளுயிருள்ளும் உணர்வுமிகுதி யுடையதனை. இதனை கதப்பிதநூல்கட்குக் கருவியாவனவும் அவற்றது இன்றியமையாமையும் கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—எண்ணென்ப - அறியாதாரால் எண் ணென்று சொல்லப்படுவனவும், எழுத்து நவின்ற - பற்று யெழுத்தென்று சொல்லப்படுவனவும் ஆகிய, இவ்விரண்டும் - இத் திரண்டையும், வாழும் உயிர்க்கு - வாழ்தற்குரிய மனிதர்க்கு, ஈ-கண்களாகும், என்ப - என் றலையோர், (அறிஞரோர)

ஈ. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(பதவுரை.) எ-து,—கண்ணுடையர் என்று உயர்ந்தோர் சொல்லப்படு வார் கற்றவரே; மற்றைக் கல்லாதவர் முகத்தின்கண் இரண்டுபுண்ணுடை யர், [கண்ணிலார்] எ-று.

தேயம் இடையிட்டவற்றையும் காலம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண்ணுடைமையின் கற்றவரைக் கண்ணுடையரென்றும், அஃதின்றி நோய் முதலியவற்றுன் துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணே உடைமையிற் கல்லாதவரைப் புண்ணுடைய ரென்றும் கூறினர். மேற்கண்ணென்மை யுணர்கின்ற ஞானக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றுன், பொருணூல்களே யுங் கருவிநூல்களையுங் கற்றாரது உயர்வும் கல்லாதாரது இழிவும் இதனுற் ருெருதலைக் கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—கற்றோர் - கற்றவர், கண் உடையர் - கண் களையுடையவர், என்பவர் - என்று உயர்த்திச் சொல்லப்படுவர்; கல்லாதவர் - கற்காதவர், முகத்து - முகத்தினிடத்து, இரண்டு புண்டையர் - இரண்டு புண்களையுடையவராவர், [கண்ணிலார்].

சு. உலப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைக்கே புலவர் தொழில்.

(பரி-ரை.) எ-து,—யாவையும் தொகவுணர்குமாறு தலைப்பெய்து இனி இவையாம் எனவணர் கூறுதுமென நினையுமாறு நிகழுலகிலுள்ள அத்தன்மைத்தாகற்றி யுரைத்தது தொடர்ல், எ-று.

சாம்பல்லா பொருளில் பிரிக்குறு கூறலென்பன இரண்டுந் தொழிலை ஒன்றே யடைகுவலின், அதன்மையனெனுர். அதன்மை - அப்பயனைத்தருந் தன்மை. கல்லாமுதலிய தாமடலா மும். அக்கு மதுமும் உறுதியுமாய கூறுதல் நிகழ் வெனினும் இன்பம் பயக்குலாலும், கற்றோர்மாட்டு எல்லாரும் அன்புடையராத லின்மையாலும், இருவரும் கற்றோ ரெனுக்குக் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)— நவை - குற்றந்திக்காதது, தொழிலில் - செயலில், உலப்ப - (யாவருஞ்) பகிழுப்படி, தலைக்கூடி - (அவரைச்) சேர்ந்து, உன்ன - (இனி இவரை நாம் பரிசோதனை காண்போ மென்று நினைக்கும்படி, பிரிதல் - நீங்குதலாகிய, அனைத்து - அத்தன்மையை யுடைய தாய

— —

நு. உடை பார்முன் னில்லார்போல் வேக்கற்றும் நூற்றார்
கடையரே கல்லா தவர்

(பரி-ரை.) எ-து,— "பிணைகிலைமையாது கூறல் நன்று" தலான், செல்வாமுன் கல்கூர்ந்தார் குறைபெலகாமும் பெரியராமுன் எக்கற்றறிந்தாகுறை தலையாயிஞர்; அவ்வாறு தாம் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரேயாவர், எ-று.

உடையார் இல்லாரென்பன உலகவழக்கு. எக்கறத்தல் - அசையாற்றுழ்தல். கடையரெனும் காரணம் அதன் மாண்பெலப்பெயர் வருவிக்கப்பட்டது. பொய்யாய மானம் நோக்கி மெய்யாய தலவிழிக்கார் பின்னெரு ஞான்றும் அறிவுடையராகாமையின், கடையரே யென்றார். இதனைக் கற்றாரது உயர்வுங் கல்லாதாரது இழிவுங் கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—உடையாரமுன் - செல்வர்முன்னே, இல்லார்போல் - வறியவர்போல, எக்கறனும் - (தம்மாகிரிபர்முவ) எக்கற்றகின்றும், நற்றார் - நூற்புலவர்கள், (யாரிக்கவராவார்); கல்லாதவர் - (அங்ஙனிலக்நகாரமிற்) கூரகாவ. கடையரே - (எப்போதும்) இழிந்தவரேயாவர்

புறாஅறு—சுழக. (உரைகை—).

சு. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

(பரி-ரை.) எ-து,—மணலின்கட்கேணி தோண்டிய அளவிற்றாக வூறும்; அதுபோல மக்கட் கறிவு கற்ற அளவிற்றாக வூறும், எ-று.

ஈண்டுக் கேணியென்றது அதன்கண் நீரை. அளவிற்றாகவென்றது அத னளவுஞ்செல்ல வென்றவாறு. சிறிதுகற்றதனையான் அமையாது மேன் மேற் கற்றல்வேண்டு மென்பதாம். இதை முழு மாறுகொள்ளா வழியாக லின், மேல் * "உண்மையறிவே மிகும்" என்றதனோடு மலையாமையறிக.

(தெ - ப - ரை.)—மணல் - மணலினிடத்தே, கேணி - கிணறு யானது. தொட்ட அனைத்து - தோண்டிய அளவினதாக. ஊறும் - சுரக்கும்; (அதுபோல) அறிவு - (மனிதருக்கு) அறிவானது. கற்ற - கற்ற அளவினதாக, மாறும் - சுரக்கும்.

எ யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(பரி-ரை.) எ - து,—கற்றவனுக்குத் தன்னுடைய தன்னூருமேயன்றி யாதானு மொருநாடும் நாடாம், யாதானுமோரூரும் ஊராம்; இங்ஙனமாயின் ஒருவன் தானிறக்குமளவும் கல்லாத தெதின்றது என்றருளி, எ-று.

உயிர்வாழ்தலிற் சாந்துணையுமென்றார். பிறநாடுகளுக்கும் பார்க்குந்தம் போல உரிய பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற் கேதுவாக லின் கல்விபோலச் சிறந்தது பிறிதில்லை, அதனையே எப்பொழுதுஞ் செய்க வென்பதாம்.

(தெ - ப - ரை.)—யாதானும் - (கற்றவனுக்குத் தன்னுடைய ஊருமேயல்லாமல்) யாதாயினுமொருநாடும், நாடாம் - தன்னாடாம், (யாதானும்) - யாதாயினுமோரூரும், ஊராம் - தன்னூராம்; (அப்படியிருக்க ஒருவன்), சாந்துணையும் - இறக்குமளவும், கல்லாதவாறு - கல்லாமற்கழிகின்றது, என் - யாது?

அ. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி பொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து

(பரி-ரை.) எ-து.—ஒருவனுக்குத் தானொரு பிறப்பின்கண் கற்ற கல்வி எழுபிறப்பினுஞ் சென்ற உதவுதலே புடைத்து, எ-று.

* திருக்குறள், ஈஎஉ,

வினைகள்போல உயிரின்கட்கிடந்து அது புக்குழிப் புகுமாகலின், எழுமையு மேமாப் புடைத்தென்றார். * எழுமை மேலே கூறப்பட்டது. உதவுதல் - நன்னெறிக்கண் உய்த்தல்.

(தெ - ப - ரை)—ஒருவற்கு-ஒருவனுக்கு, தான்—, ஒருமைக்கண் - ஒருபிறப்பில், கற்றதல்லி - கற்றகல்வியானது, எழுமையும் - எழுபிறப்புகளிலும், ஏமாப்பு-பேராய் உதவுதலால், உடைத்து-உடையதாகும்.

கூ காமின் புறுவ தலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(பரி-ரை) எ-து,—காமின்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகமின் புறுதலால் அசிதப்பு நோகின்கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர், எ-று.

காம் இன்புறுதலாவது பிறப்பின்கட் பொற்பொருள்களின் சுவை நுகர்வானும் புகழ் பொருள் பூசை பிறருலானும், எறிவின்கண் அறம் வீடு பயத்தலானும், அருளுன் இடையறாத இன்பமெய்தல். உலகின்புறுதலாவது இம்மிக்காரோடு தலைப்பெயது அறியாதன வெல்லாம் அறியப்பெற்றே மென்றும், "யானடி பலவாக நரையிலமாயினே" மென்றும் உவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தலென்பனவற்றுள் துன்புறுதலும் பலரையும் பகையாக்கலும் உடையதென அறிந்து அதனைக் காமுறுமையிற் கற்றறிந்தாரென்றும், கருப்பு அபிநற்குக் கூலிபோலத் காமின்புறுதற்கு உலகின்புறுதல் பிறவாற்றான் இன்மையின் அதனையே காமுறுவரென்றுங் கூறினார்.

(தெ - ப - ரை)—தாம் - தாங்கள், இன்புஉறுவது - இன்பமடைதற்கு ஏதுவாகிய கல்விக்கு, உலகு - உலகமானது, இன்பு உற - இன்பமடைய, கண்டு-(அச்சிறப்பு) தோக்கி, கற்றுஅறிந்தார்-(நூல்களைக்) கற்றறிந்தவர்கள், காமுறுவர் - (பின்னும் அதனையே) விரும்புவார்.

கூ. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி; அஃதொழிந்த மணியும் பொன்னுமுதலாயின செல்வமல்ல, எ-று.

* உ-ம் குறளுரையிற் காண்க. † புறநானூறு சக்க. (உரை நடை).

அழிவின்மையாவது தாயத்தார் கள்வர், வலியர், அரசரென் றிவராற் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையுமாம். சீர்மை-தக்காராகாணமே நிற்றல் மணி பொன் முதலியவற்றிற்கு இவ்விரண் டும் இன்மையின், அவற்றை மாடல்லவென்றார். இவையைந்து பாட்டா னுங் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது

(தெ - ப - ரை)--ஒருவற்கு - ஒருவனுக்கு, கேடு இல் - அழி வில்லாதது, விழுச்செல்வம் - சிறப்பாகிய செலவமாவது, கல்வி - வித் தையாகும். மற்றை யவை - அது நீங்கலாகிய மனையும் பொன்னும் முதலான செல்வம். மாடு அல்ல - செல்வமல்ல

சகம் அதிகாரம்—கல்லாமை.

அஃதாவது கற்றறிஞர்செயலாமை; என்றது அதனின் ஆய இழிபினை. கல்விசிறப்பு மேல விதிமுகத்தார் கூறியதினையான முற்றுப்பெருமை நோககி, எதிர்மறை முகத்தானுங் கூறுகின்றதாகலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

க. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்

(பதவுரை) எ-து,—அரங்கமின்றி யிழையாது வட்டாடினாற் போலும்தான் நிரம்பவுற்ற நேதுவாகிய நூல்களைக் கல்லாத ஒருவன் அவையின்கண் ஒன்ற னோடு சொல்லுதல், எ-று

அரங்கு - வசனகரணம். வட்டாடல் - மணையுருட்டல்.
* "கட்டீரா யன்ன வட்டாயங் கிழைத்துக்—கல்லாத சிறுசிரா செல்லிவட டாடும்" என்பதனானறிக. சிரப்புதல் அறியவேண்டுவன வெல்லாமறிதல். கோட்டி யென்பது மணடாகுபெயர். † 'புலவர வெழுத்திற பொருளில் வறுங கோட்டி" எனபுழிப்போல. சொல்லும பொருளும தெறிப்படா வென்பதாம்.

---

* எனபரு தூயவும் வானபொரு ளெடுகுவினைப-பொரியரை வேபபின புளி கீழற-கட்டினையன வட்டாங்கிழைதது கலலாத பிறசு சிரலவி பட்டாடும விலலே குழவா வெயமுனை சீறர சுனமுதலவரு வறனப ரரில யுரளினெ னலலனே யாளே யுளளிய-வினைமுடி எனன விளியேயான பனேரணட சுடெரி படா பொழுதெனவே கற

† புலவர வெழுத றற பொருளிலவ றங்கோட்டி கலவர வொருவ னுரைபபவங கண் ணுழை-கலை ரி வருதியுங கேடட்டே பறறன மலர ருணரல பரிநது-காலடியார,மேன முகரை,

(தே - ப - ரை.)—நிரம்பிய - (தான்) நிரம்புதற்கு ஏதுவாகிய, நூல் - நூல்களை, இன்றி - இல்லாமல், கோட்டி கொளல்-(ஒருவன்) சபையின்கண் ஒன்றைச்சொல்லுதல், அரங்கு - வகுக்குமிடம், இன்றி - இல்லாமல், வட்டாடியற்று-உண்டையுருட்டியதுபோலும்.

உ. கல்லாதான் சொற்காமுறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுறற்று.

(பதி-ரை.) எ-து,—கலவியில்லாதாகிய ஒருவன் அவையின்கண் ஒன்று சொலலுதலே அவாவுதல் முலையில்லாகலவி முலையுணர்வு இல்லாதாளொருத்தி பெணமையை அவாவினாற்போலும், உ-று.

* "ஐவேதிகென அந்தத் திகையா" யாகலின், திதாகுகியொழி முறும்மை தொடுத்தார். சிறுதும் இலலாதாள் என்பதாம் அவாவியவழிக் கடை போகாது, போகினும் கலை வியாகரு மெனபதாயிற்று.

(தே - ப - ரை.)—கல்லாதான் - கல்வியிலாதவொருவன், சொல் - (சபையினிடத்து ஒன்று) சொல்லுதலே, காமுறுதல் - வேண்டுதல், முலையிரண்டும் - இரண்டுமுலைகளும், இல்லாதாள் - இலலாதவொருத்தி, பெண் - பெண்மையை, காமுறுதலற்று - வேண்டுவதுபோலும்

உ. கல்லா தவரு ணனிசலை கற்றார்முற்
சொலலா திருக்கப் பெறின்.

(பரி-ரை.) எ-து —கல்லாதாரும் மிகநல்லராவர் ஆதலேதமமை யறிந்து கற்றார் அவையின்கண ஒன்றுமேயுஞ் சொல்லாதிருத்தல் கூடுமாயின், எ-று.

உம்மை இழிவுசிறப்பும்மை. தம்மைதாம் அறியாமையின் அது கூடாதென்பார் பெற்றனென்றும், கூடின் ஒண்டித்தமமை வெளிப்படுத்தாமையானும், பின் கல்வியை விரும்புவராகலானும் நனிநல்லரென்றுங் கூறினார். இவை மூன்றுபாட்டானும் கல்லாதார் அவைக்கட் சொலலுதற் குரியர் அன்மை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கற்றார்முன் - (தாமே தம்மை அறிந்து) கற்றோர் சபையின்கண், சொல்லாதிருக்க - (யாதொன்றையும்) பேசாத

திருக்க, பெறின் - பெறுவராயின்; கல்லாதவரும் - கற்றிலாதவரும், நனிகல்லர் - மிகவும் கல்லவராவார்.

ச. கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்

(பரி-ரை.) எ-து;—கல்லாதவனது ஒண்மை ஒரோவழி மிகநன்றாயிருப்பினும் அறிவுடையார் அதனை ஒண்மையாகக் கொள்ளார், எ-று.

ஒண்மை - அறிவுடைமை. அது நன்றாகாது; ஆயிற்றாயினும் * நீர்மேலெழுத்துப் போல்வதோர் விழுக்காடாகலின், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியாரென்பதாம்.

(தே - ப - ரை.)—கல்லாதான் - கற்காதவனது, ஒட்பம்-அறிவுடைமையானது, கழிபநன்று ஆயினும் - (ஒரோவிடத்தே) மிகநன்றாயிருப்பினும், அறிவுடையார் - அறிவுடையவர், கொள்ளார்-(அதனை அறிவுடைமையாகக்) கொள்ளார்.

ரு. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடர் சோர்வு படும்.

(பரி-ரை.) எ-து;—நூல்களைக் கல்லாதவொருவன் யான் அறிவுடையனெனத் தன்னை மதிக்கும் மதிப்பு அவற்றைக் கற்றவன் கண்ம் உரையாடக் கெடும், எ-று.

கற்றவனென்பது வருவிக்கப்பட்டது. யாதானுமோர் வார்த்தை சொல்லுந்தோறுமே நீர்ப்பது, சொல்லியவழி வழுப்படுதலின், அழிந்து விடுமென்பதாம். இவை யிரண்டுபாட்டானுங் கல்லாதாரது இயற்கையறிவின் குற்றங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கல்லாவொருவன் - (நூல்களைக்) கற்காதவொருவன், தகைமை - (அறிவுடையனென்று தன்னை மதிக்கும்) மதிப்பானது, தலைப்பெய்து - அவைகளைக் கற்றவன்) கண்டு, சொல்லாட - பேச, சோர்வுபடும் - கெடும்.

---

* நாது நாகூர் வண்டுசென்னடைவழி யெழுத்தாய—வாது வீழினும் வீழும்." என்னுர் திருவிளையாடற் புராணத்தினும், சமணரை கழுவேற்றிய படலம், கூ0. பற்றும், ஏரல் எழுத்து—நதைக்கிற்றில தோன்றும் எழுத்து. தினபொருண்மாலையுடையார், இவ்வுரைக் குறிப்பாக "ஏரல்—நதை; வடநூலார் குணகரமென்ப" என்றெழுதிக் கொல்லுலாலும் 'நீர்மே லெழுத்து' என்னுப்பாடம். எல்லாநூலெடுத்துகாட்டி பிறர உளையாசமையாலும் பிறகிகள் பலவற்றினுங்காண்ட இப்பாடத்தினுண்மை தெரியப்படும்.

சூ. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரணியர் கல்லா தவர்.

(பரி-ரை.) எ-து.—கல்லாதவர் காணப்படுதலான் இலரல்லர் உள ரென்று சிலசொல்லு மளவினராதல் அன்றித் தமக்கும் பிறர்க்கும் பயன் படாமையால் வீணேயாத களர்நிலத்தோ டொப்பர், எ-று.

களர் தானும் பேணற்பா டழிந்து மயிர்கட்கும் ணைமுதலிய உத வாதுபோலத் தானும் நன்கு மதிக்கற்பாடழிந்து பிறர்க்குஞ் அறிவு முதலிய உதவா ரெனபதாம். இதனுல் கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கல்லாதவர் - கற்றிலாதவர், (காணப்பட்டுக் கொண்டிருக்கையால்), உளர் என்னும் - உள்ளவரென்று (சிலராலே) சொல்லப்படும். மாத்திரையர் அலலால் - அளவினராதல் அல்லா மல், (தமக்கும் பிறர்க்கும்பயன்படாமைபால்), பயவா களர் அணி யர் - வினேயாத களர்நிலத்தோடு ஒப்பாவர்.

ஈ. நுண்மா ணுழைபுல மில்லா ளெழினல
மண்மாண் புனைபாவை யற்று

(பரி-ரை.) எ-து.—நுண்ணி தாய் மாட்சிமைப் பட்டுப் பலநூல்களினுலுஞ் சென்ற அறிவிலாதவனுடைய எழுசியும் அழகும் சுதையான் மாட்சிமைப் படப் புனேந்த பாவையுடைய எழுசியும் அழகும் போலும், எ-று.

அறிவிற்கு மாட்சிமையாவ தொருள்களேக் கடிதிற்சாண்டலும் மறவா மையும் முதலாயின. பாவை ஆகுபெயர். ஈ உருவின் பக்கதோ குடம்பத பெறுத்துமிரு" ஆகலான் எழிலையுளராஉ ஞர்பயனேயெனினும், நூலறி வில்வழிச சிறப்பில வென்பதாம். இதனுன் அவர் வடிவழகாற் பயனின்மை கூறப்பட்டது.

(தே - ப - ரை. —நுண் - நுட்பமாகி, மாண் - மாட்சிமைப் பட்டு, நுழை - (பலநூல்களிலும்) சென்ற, புலம் - அறிவை, இல் லான் - இல்லாதவனது, எழில் - எழுசியும், நலம்-அழகும், மண் சுண்ணச்சாந்தினுலே, மாண் - மாட்சிமைப்பட, புனை - அலங்கரிக் கப்பட்ட, பாவை அற்று - பாவையினது எழுசியும் அழகும்

ஈ கருவிரலாழை யீரெரி ளெரிழி னெனவழிநா—மருவியீ பாடிருடாம் தருதன வருப்பினி மழுஉட்—டாருவி ர ய ர ப ——ரீ டிவயிற பிழைபா—அருவின மிக்க தோருடப்பது பெரு துபரிதே—நீடசஇர்,பாணி முந்நீரிலப்பகை, எஞ்ச.

அ. நல்லார்கட் பட்ட
கல்லார்கட் பட்ட திரு.

(பரி-ரை.) எ-து,—கற்றோர்மாட்டு நின்ற வறுமையிலும் இன்னது கல்லா தார்மாட்டு நின்ற செல்வம், எ-று.

இழிவுசிறப்பும்மை விகாரம்;தாற்பரியக்கது. தத்தங்லேயின் அன்றி மாறி நிற்றலான் தாழ்க்கப்படுதலும் ஏலாதிரும் தான்பஞ் செய்தலும் இரண்டற் கும் ஒக்குமாயினும், திருக் கல்லாரைக்கெடுக்க, வறுமை கல்லாரைகெடாது நிற்றலான, வறுமையினும் திரு இன்னதென்றார். இதனால் அவா திருவின் குற்றங கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—கலலார்கண் - கலலாதவரிடத்து, பட்ட - உண்டாகிய, திரு - செலவானது, நல்லார்கண் - கற்றவரிடத்து, பட்ட - உண்டாகிய, வறுமையின் - தரித்திரத்தினும், இன்னதே தான்பஞ் செய்வதேயாகும்

கூ. மேறபிறந்தா ராயினுங் கலலாதார் கீழ்ப்பிறந்தங்
கற்றோ ரனைத்திலர் பாடு.

(பரி-ரை.) எ-து,—கல்லாதார் உயர்ந்த சாதிக்கட் பிறந்தா ஆயினும் தாழ்ந்தசாதிகளட் பிறந்துவைத்தய கற்றோ துபெருமை அளவிற்குய பெருமை யிலர், எ-று.

உடலோடொழியுஞ் சாதியுயர்சியினும் உயிரோடு செல்லுங கல்வி யுயர்சி சிறப்புடைத் தென்பதாம். இதனால் அவா சாதியுயர்சியாற் பய னின்மை கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—கல்லாதார் - கற்றிலாதவர், மேற்பிறந்தார் ஆயினும் - உயர்ந்தசாதியிற் பிறந்தா ராயினும், கீழ்ப்பிறந்தும் - தாழ்ந்தசாதியிற் பிறந்திருந்தும், கற்றோர்அனைத்து - கற்றவரது பெருமையளவினதாகிய, பாடு - பெருமையை, இலர் - உடை யவராகார்.

கஂ விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றோ ரொடனை யவர்.

(பர்-ரை.) எ-து,—விலங்கோடு நோக்க மக்கள் எத்துணை ன்மையு டையர் அத்துணைத்தன்மையுடையர் விளங்கியதுலக கற்றோடு நோக்கக் கல்லாதவர், எ-று.

இலக்கு தூலென்பது சாதியொருமைப்பெயர். விளங்குதல் - மேம்படுதல். விலகின் மக்கட் கேற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றூர் கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒருப்பிறப்பின்லரென்பதாம். மயக்கத் னிலை. இது ஆல் அவா மகட்பற்றப்பா பயனெயதாமை கூறப் ...

(தெ - ப - ரை)—இலக்குநூல் - விளங்கியநூலை, கற்றோரோடு- கற்றவருடனு, ஒப்பீடவர் - கலவாதவர், விலங் தொடு - ஒ ங்க ருட ன். மக்கள ஒப்பீயர் - மனிதனா ஒப்பாவர்

ஈ-ம் அதிகாரம்—கேள்வி.

அஃதாவது கேட்கப்படும பொருளாகிய கற்றறிந்தா கூறக்கேட்டல். கற்றவழி அவரின் அய அறிவை விரிவுறுதலாறும, கல்லாதவழியும் அதனை உண்டாக்குவதாறும, இது கூறி கல்லா மடகளின்பின் வைக்கப் பட்டது.

க. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மத்செல்வஞ்
செல்வத்கு ளெல்லாந் தலை

(பரி-ரை.) எ-து,—ஒருவர்க்கு சிறப்புடைய செல்வமாவது செவியான் வருஞ்செல்வம் அச்செல்வம் பிறசெல்வங்க ளெல்லாவற்றினுந் தலை யாகலான, எ-று

செவியான் வருஞ்செல்வம் - கேள்வியான் எல்லாப்பொருளையு மறி தல். பிறசெல்வங்கள் பொருளான் வருவன; அவை நிலையா யுகலானும், துன்பவினையான ஆகலானும, இது கலையாயிறு. அவற்றை ஒழித்கு இத னையே செய்கவெனபது நிபபெறம.

(தெ - ப - ரை.)—செல்வத்துள் செல்வம் - (ஒ ருவனுக்குச்) சிறப்புடைய செல்வமானது, செவிச செல்வம் - செவியால்வருஞ் செல்வமாம், அச்செல்வம் - அந்தச் செவிச்செல்வமானது, செல் வத்துள் எல்லாம் - பிறசெல்வங்க ளெல்லாவற்றினும். தலை - தலை மையாம் (ஆதலால்)

உ. செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(பரி-ரை.) எ-து,—செவிகுணவாகிய கேள்வி யில்லாத பொழுது வயிற்றுக்குஞ் சிறிதுணவு இடப்படும், எ-று,

சுவை மிகுதியும் பிறப்பயத்தலும் உடைய கேள்வி யுள்ளபொழுது வெறுக்கப்படுதலான் இல்லாத போழ்தென்றும், பெரிதாயவழித் தேடற்றன் பமேயன்றி நோயுங் காமமும் பெருகுதலாற் சிறிதென்றும், அதுதானும் பின்னிருந்து கேட்டற் பொருட்டாகலான் ரயப்பயமென்றது கூறினர். ஈதல் வயிற்றது இரிவுதோன்ற நின்றது. இவையிரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—செவிக்கு-கருதுக்கு, உணவு-உணராகிய கேள்வியானது, இல்லாதபோழ்து-இல்லாதகாலத்து, வயிற்றுக்கும்-வயிற்றினுக்கும், சிறிது-சிறிதணவு, ரயப்பயம்-இடப்படும்.

ஈ செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னுண்ணுரோ டொப்பர் நிலத்து.

(பரி-ரை.) எ-ரு,—செவியுணவாகிய கேள்வியினையுடையார் நிலத்தின்கண்ணராயினும், அவியுணவினையுடைய தேவரோடொப்பர், எ-று.

செவியுணவு-செவியாலுண்ணு முணவு. அல்வழிக்கண்வந்த இன்சாரியையது னகரம் வலித்து நின்றது. அவியாகியவுணவு தேவர்க்கு வேள்வித்தீயிற் கொப்பன. அறிவான் நிறைந்தமையான் ஆன்றோ ரென்றும், தன் பமறியாமையாற் றேவரோ டொப்பரென்றுங் கூறினர். இரண்டு அதனையுடையாதது சிறப்புக் கூறப்பட்டது.

(தே-ப-ரை)—செவியுணவின்-செவியுணவாகிய, கேள்வி-கேள்வியை, உடையார்-உடையவர், நிலத்து-பூமியிலிருக்கினும், அவியுணவின்-அவியாகிய வுணவினையுடைய, ஆன்றோரோடு-தேரோடு, ஒப்பர்-ஒப்பாவார்

ஏ. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றூன் றதுணை.

(பரி-ரை.) எ-ரு,—நூறுநூல்களைத்தான் கற்றிலனாயினும், அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக்கேட்க. அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சிவந்தழிப் பற்றுக்கோடாந் துணையாகலான், எ-று.

உம்மை கற்கவேண்டுமென்பதுபட நின்றது. தளர்ச்சி-வறுமையான் ஆதல் அறிவின்மையான் ஆதல் இடுக்கட்பட்டிழி மனத்தளர்தல். அதனைக் கேள்வியின் ஆய அறிவுதீர்குமாகலின், ஊற்றூன்றுதுணையென்றார். ஊன் றென்னு மாருபெயரின் னகரம் திரிந்து நின்றது.

(தே - ப - ரை.)—கற்றிலன் ஆயினும் - (உறுதிநூல்களைத் தான்) கல்லானாயினும், கேட்க - (அவைகளின் பொருள்களைக் கற்றார்சொல்லக்) கேட்கக்கடவன; அஃது - அக்கேள்வியானது, ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒப்கத்தின் - தனாச்சிவக்தவிடத்து, ஊன்று ஆம்தூணை - பற்றுக்கோடாக் தூணையாம், (ஆதலால்)

நு இழுக்க முடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார் வாய்ச் சொல்

(பரி-ரை.) ஒ-ரை,—வழுக்குநிலையுடைய சேற்றுநிலத்து இயங்குவார்க்கு ஊன்றுகோல்போலவும் காவாற்சாகாடு ஒகைபபாருகு ஒழுகுமுடையார் வாயிற்சொற்கள், எ-று.

அவாய்நிலையான் வந்த வமைபடையாற பொருளடை வருவிக்கப்பட்டது. உறுதிப்பகோல்போலவும் எனல் தனாகுதற் பொருட்டு. கல்லியுடையரேனும் ஒழுக்கமில்லாராகலின், அவாவாய்ச்சொற் கேட்கப்படாதென்பது தோன்ற ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்லென்றார். வாயென்பது தீச்சொல் வறியாமையாகிய சிறப்புணரா நின்றது. அவற்றைக் கேட்கவென்பது குறிப்பெச்சம.

(தே - ப - ரை)—ஒழுக்கம் உடையார் - (அரசனுக்கு) நன்னடக்கையுடையவரது, வாய்ச்சொல் - வாயிற்பிறக்குஞ்சொல, இழுக்கல் உடையுழி - வழுக்குநிலையுடைய சேற்றுநிலத்தில், ஊன்று கோல் அற்றே - ஊன்றுகோலேபோ லுதவும்.

கூ. எணைத்தானு நல்லவை கேட்க வணைத்தானு
மான்ற பெருமை தரும்.

(பரி-ரை) எ-து,—எருவன சிறிதாயினும் உறுதிப் பொருள்களைக் கேட்க, அக்கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெருமையைத் தரும் ஆகலான், எ-று

எனைத்து அனைத்து எனபன கேட்கும் பொருணமேலுங காலத்தின் மேலும் நின்றன அக்கேளவி மழைத்துளிபோல வந்தீண்டி எல்லா அறிவுகளையும் உளவாக்கலின், சிறிதென்ற இகழ்தகவெனபதாம்.

(தே - ப - ரை)—நல்லவை - (ஒருவன்) உறுதிப் பொருள்களில், எனைத்தது ஆனும் - எவ்வளவு சிறிதாயினும, கேட்க - கேட்கக்கடவன்; (அக்கேள்வியானது) அனைத்து ஆனும் - அவ்வளவினாலும், ஆன்ற பெருமை - நிறைந்த பெருமையை, தரும் - தொடுக்கும் (ஆதலால்).

எ. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா நிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

(பரி-ரை.) எ-து,—பிறழ வுணர்ந்தவழியும், தமக்குப் பேதைமை பயக்குஞ் சொற்களைச் சொல்லார். பொருள்களைத் தாமும் நுண்ணிதாக ஆராய்ந்தறிந்து அதன்மேலும் ஈண்டிய கேள்வியினையுடையார், எ-று.

பிழைப்பவென்பது திரிந்து நின்றது. பேதைமை—ஆகுபெயர். ஈண்டு தல்-பலவாற்றுண் வந்து மிறைதல். பொருள்களின் மெய்ம்மையைத் தாமும் அறிந்து அறிந்தாரோடு ஒப்பிப்பதுஞ் செய்தார் தாமதகுணத்தான் மயங்கினராயினும், அவ்வாறல்லது சொல்லாரென்பதாம். இவை தான் நபாட்டானுங் கேட்டார்க்கு வருநன்மை கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—இழைத்துணர்ந்து - (பொருள்களை) நுட்பமாக ஆராய்ந்தறிந்து, ஈண்டிய - (அதன்மீதாலும் நிறைந்த, கேள்வியயர் - கேள்வியையுடையவர், பிழைத்து உணர்ந்தார் - பிழைபட அறிந்தவிடத்தும், பேதைமை - (தமக்கு) அறியாமையைத்தருஞ் சொற்களை, சொல்லார் - சொல்லமாட்டார்.

அ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

(பரி-ரை.) எ-து,—தம்புலமாய நுசைமாத்திரத்தைக் கேட்குமாயினுஞ் செவிடாந் தன்மையவேயாம், கேள்வியால் தொளைக்கப்படாத செவிகள், எ-று.

ஏகாரம் தேற்றத்தின்கண்வந்தது. நுசைமாத்திரத்தான் உறுதியெய்தாமையின் கேளாத் தகையவென்றும், மனத்தின்கண் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலிற் கேள்வியைக் கருவியாக்கியுங் கூறினர். பழையதொளை தொளை அன்றென்பதாம்.

(தெ - ப - ரை.)— கேள்வியால் - கேள்விகளால், தோட்கப் படாத - தொளைக்கப்படாத, செவி - காதுகள், கேட்பினும் - (தமக்குரிய ஓசையைக்) கேட்குமாயினும், கேளாத்தகையவே - செவிடாந் தன்மையினவேயாம்.

கூ. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது

(பரி-ரை.) எ-து,—நுண்ணிதாகிய கேள்வியுடையர் அல்லாதார் பணிந்த மொழியினையுடையராதல் கூடாது, எ-று.

கேட்கப்படுகின்ற பொருளின் நுண்மை கேள்வியே லேற்றப்பட்டது. வாய் ஆகுபெயர். பணிந்தமொழி பணிவைப் புலப்படுத்திய மொழி. கேளா

தார் உணர்வின்மையாற் றம்மையியக்து கூறுவரென்பதாம். அல்லாலென்ப தூஉம் பாடம்.

(தே - ப - ரை)— நுணங்கிய - நுட்பமாகிய, கேள்வியர் அல் லார் - கேள்வியை யுடையவரல்லாதவர், வணங்கிய - வணக்கத் தைக்காட்டுகிற, வாயினர் ஆதல் - சொல்லையுடையராகுதல், அரிது - கூடாது.

ஙூ செவியிறை யவையுமா யாயுணர்வின் மாக்க
ளவியினு மவாழினு மென்

(பரி-ரை.) எ-து,—செவியான் நுகரப்படுஞ் சுவைகளோ டுணராதவாயு ணர்வினையுடைய மாந்தர் சாவினும வாழினும் ஒரு கிறகு வருவதென்னை, எ-று.

செவியான நுகரப்படுஞ் சுவை ஏழாவன சொற்சுவையும், பொருட்சுவை யும் அவற்றுள் சொற்சுவை குணம, அலங்காரமென இருவகைத்து. பொருட் சுவை காமம், நகை, கருணை, வீரம், ரௌத்திரம், இழிபு, வியப்பு, சாந்தமென ஒன்பதுவகைத்து. அவ் வியல்பாம் ஆணிலைப்பாட்டு பெருகும. வாயுணர்வெனபது இடைப்பிங்கள பொருகுணர மூலமாக வேற்றுமைத் தொகை அது வாயான நுகரப்படுஞ் சுவைகளோடுணரும் உணர்வென விரி யும். அவை கைப்பு, காரப்பு புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பென ஆறும. செத்தலிழப்பதும வாழ்நாற பெறுவதும இன்மையின, இரண்டும் ஒருகு மெனபதாம். வாயுணர்வினனறு பாடமோதுவாருமுளர். இவை மூன்றுபாட் டானுங கேளாதவிழிப படுஞ்சாதரங கூறப்பட்டது

(தே - ப - ரை)—செவியின் சுவை - காதினால அறியப்படுஞ் சுவைகளோ, உணரா - அறியாத, வாயுணர் மாக்கள - வாயா லுணரப் பட்ட பொருளின சுவையை அறியும அறிவினையுடைய, மாக்கள் - மனிதர், அவியினும - இறந்தாலும, வாழினும - வாழ்ந்தாலும், என் - (உலகத்திற்குவதுவது) யாது.

✓ ஙூ-ம் அத்காரம்—அறிவுடைமை.

அஃதாவது கல்வி கேள்விகளின் ஆய அறிவோடு உணமை அறிவுடைய ஞதல். அதிகாரமுறைமையும் இதனானே விளகுமு.

க அறிவறற் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாதா வரண்

(பரி-ரை.) எ-து,—அரசர்க்கு அறிவென்பது இறுதிவாராமற் காக்குங் கருவியாம்; அதுவேயும் அன்றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள்ளரணுமாம், எ-று.

காத்தல் - முன்னறிந்து பரிகரித்தல். உளளரண - உள்ளாய அரண்; உள்புக்கழிக்கலாகா அரணென்றுமாம். இதனுல் அறிவினது சிறப்புக் கூறப் பட்டது.

(தே - ப - ரை)—அறிவு- அரசர்க்கு) அறிவென்பது, அற்றம்-முடிவுவாராமல், காக்கும் - பாதுகாக்கும், கருவி - படையாம்; (அதுவல்லாமல்) செறுவார்க்கும் - பகைவர்க்கும், அழிக்கல்லாகா - அழிக்கக்கூடாத, உள் - உள்ளாகிய, அரண் - காவலிடமுமாம்.

---

2. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(பரி-ரை.) எ-து,—மனமுதை அது சென்ற புலத்தின்கட்செல்லவிடாது அப்புலத்தின் நன்மை தீமைகளே ஆராய்ந்து தியதனில் நீக்கி நல்லதன்கட் செலுத்துவது அறிவு, எ-று.

வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஊசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமெனப் புலம் ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றிகண் அல்லது செல்லாமையின், இடத்தாலெனன்றார். விடாதென்பது ஒருகடைக்குறைந்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல வேருக்கி மனதைப் புலமறிந்து செலுத்துவது அறிவெனறார், அஃது உயிர்க்குணமாகலின்.

(தே - ப - ரை)—சென்றிடத்தால் - (மனத்தை அது) போனவிஷயத்தில், செலவிடாது - போகவிடாமல், (அவ்விஷயங்களி னன்மைதீமைகளே ஆராய்ந்து), தீது-தியதிலிருந்து, ஒரீஇ - நீக்கி, நன்றின்பால் - நல்லதனிடத்து, உய்ப்பது - போகவிடுவது, அறிவு - அறிவாம்.

---

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

(பரி-ரை.) எ-து,—யாதொருபொருளே யாவர் யாவர் சொல்லக்கேட்பினும் அப்பொருளின் மெய்யாய பயனேக்காணவல்லது அறிவு, எ-று.

குணங்கள்மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்தபொருள் இழிந்தார்வாயினும், இழிந்தபொருள் உயர்ந்தார்வாயினும், உறுதிப்பொருள் பகைவர்வாயினும், கெடுபொருள் நட்டார்வாயினும் ஒரோவழிக்

கேட்கப்படுதலான், எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினுமென்றுரை. அதற்குப் பன்மைபற்றி வந்தது. வாயென்பது அவர் அப்பொருளின்கட் பழிவாமை யுணர்த்திநின்றது. மெய்யாதல் - நிலைபெறுதல். சொல்லாதது இயல்பு நோக்காது அப்பொருளின் பயனெஞ்சிற் கொள்ளுதல் ஒழிதல் செய்வ

(தே - ப - ரை.)—எப்பொருள் - யாதொருபொருளை, யார் யார்வாய் - எவரெவர்வாயில், கேட்பினும் - கேட்டாலும், அப் பொருள் - அப்பொருளினது, மெய்ப்பொருள் - மெய்யாகிய பயனை, காண்பது - காணவல்லது, அறிவு - அறிவாம்.

1. எண்பொருளாகச செலச்சொல்லிக் தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு

(பரி-ரை.) எ-து,—தான் சொல்லுஞ்சொறகளை அரிய பொருளவாயினும் கேட்பார்க்கு எளிய பொருளவாமாறு மனங்கொளச சொல்லிப் பிறர் வாய்க்கேட்குஞ் சொற்களின் நுணுக்கியபொருள் காணவரிதாயினும் அதனைக் காணவல்லது அறிவு, எ-று.

உடையவன்தொழில் அறிவின்மே லேற்றப்பட்டது. சொல்லுவன வழுவின்றி இனிது விளங்கச சொல்லுகவென்பார் சொன்மேல் வைத்தும, கேட்பன வழுவினும் இனிது விளங்காவாயினும் பயனைக் கொணடொழிகவென் பார் பொருண்மேல்வைத்தும கூறினார.

(தே - ப - ரை.)—எண்பொருள்ஆக - (கேட்பவர்க்கு) எளிய பொருளினவாக, செல - மனங்கொள்ள, சொலலி—, தான் பிறர் வாய் - தான் பிறர்வாயில் (கேட்கப்படுஞ்சொற்களில்), நுண்பொருள் - (காணுதற்கரிய) நுட்பமாகிய பொருளையும், காண்பது - காணவல்லது, அறிவு - அறிவாம்

2. உலகந் தழீஇய தொட்பமலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

(பரி-ரை.) எ-து,—உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்; அந்நட்பின்கண முன்மலர்தலும் பின் கூம்புதலுமின்றி ஒருநிலையனாவது அறிவாம், எ-று.

தழீஇயது இல்லது என்பன அவ்வத் தொழின்மேனின்றன. உலகமென்பதனுண்டியர்க்தோறை, அவரோடு கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்பூப் போல ஒருநிலையே நட்பாயினுன் எல்லா இன்பமும் எய்துமாகலின், அதனை

அறிவென்றார். * காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன. இதனைச் செல்வத்தின் மலர்தலும் நல்குரவிற் கூம்பலுமில்லதென்று உரைப்பாரு முளர்.

(தே - ப - ரை)—உலகம் - (ஒருவனுக்கு) உயர்ந்தோரை, இயது - நட்பாக்குவது, ஒப்பம் - அறிவுடைமையாம்; மலர்தலும் - (முன்னே) விரிதலும், கூம்பலும் - (பின்னே) குவிதலும், இல்லது - (அந்நட்பினிடத்தே) இல்லாதது, அறிவு - அறிவாம்.

சு. எவ்வ துறைவ துலக மூலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(பரி-ரை.) எ-து,—உலகம் யாதொருவாற்றான் ஒழுகுவதாயிற்று அவ் வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றானொழுகுவது அரசனுக்கறிவு, எ-று.

உலகதையெல்லாம் யான் நியமிதலான் என்னை நியமிப்பாரில்லையெனக் கருதித் தானினைத்தவாறே ஒழுகுதல் பாவமும் பரியுமாம் ஆகலான், அவ்வாறொழுகுதல் அறிவின்மேலன விலக்கிய வாறுயிற்று. இவையைதுபாட்டாலும் அதனது இலக்கணங கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—உலகம் - உலகமானது, எவ்வது - எவ்வித்தினால், உறைவது - நடப்பதாயிருக்கிறது, உலகத்தோடு - அவ்வுலகத்துடன் பொருந்தி, அவ்வது - அவ்வித்தால், உறைவது - (தானும்) நடப்பது, அறிவு - (அரசனுக்கு) அறிவாம்.

எ. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃ்தறி கல்லா தவர்.

(பரி-ரை.) எ-து,—அறிவுடையராவார் வரக்கடவதனை முன்னறியவல் லார்; அறிவிலராவார் அதனை முன்னறியமாட்டாதார், எ-று

முன்னறிதல் முன்னேயெண்ணியறிதல். அஃ தறிகல்லாமையாவது வந்தாலறிதல். இனி ஆவதறிவாரென்பதற்குத் தமக்கு நன்மையறிவாரென் றுரைப்பாருமுளர்.

(தே - ப - ரை)—ஆவது - வரக்கடவதை, அறிவார் - (முன்னே) அறியவல்லவர், அறிவுடையார் - அறிவையுடையவராவார்;

---

* கோடுபபூபபோல மலர்தலிறை கூம்பல—வேட்டதே வேட்டதா நட்பாட்சி தோட்ட—கையப்பூபபோன முனைலாது பிறகூம புலனை—யபபாரு நட்பாருமில—நாலடியார். நட்டாராயதல.

(பதி-உரை.) எ-து —அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம், அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவாகத்தொழிலாம், எ-று

பாவமும் பழியும் கேடு முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதிபற்றி அஞ்சுவதென்றார் அஞ்சாமை - எண்ணுதல் செய்துநீற்றல். அஞ்சுதல் - எண்ணித் தவிர்தல். அஞ்சாரியமன்றென்று இதழப்படாதன்பார் அறிவா தொழிலென்றார். அஞ்சாமை இறைமாட்டியாகச் சொல்லப்பட்டமையின், ஈனடஞ்சவேண்டியிடங்கூறியவாறு. இவை பிரணபொட்டானும் அதனையுடையாரது இலக்கணங கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—அஞ்சுவது - அஞ்சத்தகுவதற்கு, அஞ்சாமை - அஞ்சாதிருந்தல், பேதைமை - அறிவின்மையாம்; அஞ்சுவது - அஞ்சத்தகுவதற்கு, அஞ்சல் - பயப்படுதல், அறிவா தொழில் - அறிவுடையார் தொழிலாம்

கூ எதிரதாக் காக்கு மறிவினர்ப் கில்லை
யதிர வருவதோர் நோய்.

(பதி-உரை.) எ-து —வாக்கடவதாகிய அதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினை யுடையாராகக் குவா நடுங்க வருவதொரு துன்பமுமில்லை, எ-று.

நோயென வருவினை யாயின், வாளா எதிராதென்றார் இதனுள் காக்கலாங் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல் அதனகாரணத்தை விலக்குதல். அவர்க்குத் துன்பமின்மை இதனுள் கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—எதிரது ஆக - (பின்வாக்கடவதை) முன்னதாக அறிந்து, காக்கும் - காக்கவல்ல, அறிவினர்க்கு - டையார்க்கு, அதிர - (அவர்) நடுங்கும்படி, வருவது ஓர்நோய் - வருவதாகிய ஒரு துன்பமும். இல்லை - இலது.

கo. அறி புடையா ரெல்லா மூடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

(பரி-ரை.) எ-து,—அறிவுடையார் பிறிதொன்றும் இலராயினும் எல்லாமுடையராவர்; அறிவிலாதார் எல்லாமுடையராயினும் ஒன்றும் இலரா வர், எ-று.

செல்வங்களெல்லாம் அறிவாற்படைக்கவுங் காக்கவும்படுதலின் அஃ துடையாரை எல்லா முடையவரென்றும், அவையெல்லாம் மூன்னியமைத்து கிடப்பினும் அழியாமற் காத்தற்குந் தெய்வத்தானுங்கிதழிப் படைத்தற்குங் கருவியுடையரன்மையின் அஃதிலலாதாரை என்னுடைய ரேனுமிலரென்றுங் கூறினர். என்னுமென்புழி உம்மை விகாரத்தாற்றொக்கது. இதனுன் அவ ரது உடைமையும் ஏனையாரது இன்மையுங்கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—அறிவு உடையார் - அறிவுடையவர்; எல் லாம் உடையார் - (வேறென்றும் இல்லாதவராயிருந்தாலும்) எல்லா முடையவராவர்; அறிவிலார் - அறிவிலலாதவர், என் உடையர் ஏனும் - எல்லாமுடையவரா யிருந்தாலும், இலர் - (ஒன்றும்) இல்லாதவராவார்.

ஐஅ-ம் அதிகாரம்—குற்றங்கடிதல்.

அஃதாவது காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்பட்ட குற்றங்களாறனையும் அரசன் தன்கண் நிகழாமற கடிதல் இவற்றை வடநூலார் பகைவர்க்கமென்ப. இவைகுற்றமென் றறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், அதன்பின் வைக்கப் பட்டது.

க. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

(பரி-ரை.) எ-து,—மதமும் வெகுளியுங் காமமுமாகிய குற்றங்களில் லாத அரசரது செல்வம் மேம்பாட்டு நீர்மையினை டைத்து, எ-று.

மதம் செல்வக்களிப்பு. சிறியோர் செயலாகலின், அளவிறக்ககாமஞ் சிறுமையெனப்பட்டது இவை நீதியல்லன செய்வித்தலான், இவற்றைக் கடிக்தார்செல்வம் நல்வழிப்பாடும் நீலைபேறும் உடைமையின், மதிப்பு டைத்தென்பதாம். மிகுதிபற்றி இவை மூற்கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—செருக்கும் - மதமும், சினமும் - குரோத மும், சிறுமையும் - காமமும் ஆகிய (குற்றங்களை), இல்லார் - இல் லாத அரசரது, பெருக்கம் - செல்வமானது, பெருமிதநீர்த்து - மேம்பாட்டுக் குணத்தை யுடையதாம்.

---

௨ இவறலு மாண்பிறக்த மானமு மாண
வுவகையு மேத மிறைக்கு.

(பரி-ரை.) எ-து,—வேண்டுமளவிற் பொருள்கொடாமையும் நன்மையி னீங்கிய மானமும் அளவிறந்த வுவகையும் அரசனுக்குக் குற்றம். எ-று.

மாட்சியான மானத்தினிக்குதற்கு மாணபிறந்த மானமென்றார்: அஃதாவது அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாயென்றிவரை ச வைகாமையும், முடிக்கப் டாதபிறவும் கருதியது முடித்தேதவிடு†லும் முதலாயின அளவிறந்த வுவகையாவது கழிகண் ணேட்டம் பிறருஞ் சினனேகாமங் கழிகண்ணேட்ட மென்றிவற்றை யறங் தருதிதிக்கு வழியடையாகு நீதென்றார். ‡ இவை யிரண்டுபாட்டானும் குற் றங்களாவன இவையென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—இவறலும் - உலோபகுணமும், மாண்பு இற ந்தமானமும் - கர்வமையில் நீங்கியமானமும், மாணை உவகையும் - அளவிறந்தமகிழ்ச்சியும், இறைக்கு - அரசனுக்கு, ஏதம் - குற்றங் களாம்.

ஈ தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிகாணு வார்.

(பரி-ரை.) எ-து,—பழியையஞ்சுவார்தங்கண் தினையளவாகு குற்றம்வந்த தாயினும் அதனை அவ்வளவாக அன்றிப் பனையினளவாகக் கொள்வர், எ-று.

குற்றம்-ஈறுதிப்பெயர். தமக்கேலாமையிற் சிறிதென்று பொருர்பெரி தாகக்கொண்டு வருந்திப் பின் அது வராமற் காப்பரென்பதாம்.

(தெ - ப - ரை)—பழிகாணுவார் - பழிக்கு அஞ்சுவோர், தினைத் துணை ஆம் குற்றம் - தினையளவாகிய சிறிய குற்றமானது, வரினும் - (தம்மிடத்து) வந்தாயினும், பனைத்துணை ஆக - (அதனை அவ்வள வாக நினையாமல்) பனையினளவு பெரிதாக, கொள்வர் - எண்ணு வார்.

ச. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
பற்றக் தருவுடம் பகை

(பரி-ரை.) எ-து,—தனக்கிறுதி பயக்கும் பகை குற்றமே, ஆகலான், அக்குற்றம் தன்கண்வாராமையே பயனுகக் கொண்டு காக்கவேண்டும், எ-று.

புறப்பொருள வெண்பாமாலை பாடாண்படலம், ௧௧. (உரைகாண்)

‡ பதிற்றுப்பத்து ௨௨.

இவைபற்றியல்லது பகைவர் அற்றத்தாராமையின் இவையே பகையாவனவென்னும் வடநூலார் மதம் பற்றிக் குற்றமேயற்றத்தரூஉம் பகையென்றும், இவற்றது இன்மையே குணங்களது உண்மையாகக் கொண்டென் பார் பொருளாகவென்றுங் கூறினர். குற்றமேகாக்கவென்பது "அரும்பண் பினுற்றீமைகாக்க" என்பதுபோல நின்றது.

(தே- ப - ரை.)—அற்றம் - மூடினை, கருமம்பகை-(தனக்குத்) தரும்பகை—, குற்றமே—, (ஆதலால்) குற்றமே - அக்குற்றம் (தன்னிடத்து வாராமையையே), பொருள்ஆக-பயனுடன்றொண்டு, காக்க-காக்கவேண்டும்.

நி. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—குற்றம் வரக்கடவதாகின்ற முற்காலத்திலே அதனைக்காவாத அரசன் வாழ்க்கை அது வந்தால் எரிபகுத்துன்ற வைக்குவை போல அழிந்துவிடும், எ-று.

குற்றமென்பது அதிகாரத்தான் வந்தது. முன்னரென்றதனீற்றது பகுதிப்பொருள்விகுதி. வருமென்னும் பெயரெச்சம் முன்னரென்னுங் காலப் பெயர்கொண்டது; அதனாற் காக்கலாங் காலம் பெறப்பட்டது. குற்றஞ்நிறி தாயினும் அதனாற் பெரியசெல்வம் அழிந்தேவிடுமென்பது உவமையாற் பெறும்.

(தே - ப - ரை.)—வரும் முன்னர் - (குற்றம்) வரும்முன்னே தானே, காவாதான் - (அதனைவாராமல்) காவாத அரசனது, வாழ்க்கை - வாழ்வானது, (அதுவந்தால்) எரிமுன்னர் - தீமுன் நின்ற, வைத்தூறுபோல - வைத்தோலின் கூட்டம்போல, கெடும் - அழிந்துபோம்.

சு. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு பிறைக்கு.

(பரி-ரை.) எ-து,—முன்னர்த் தன்குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர்குற்றங் காணவல்லனாயின் அரசனுக்கு ஆகக்கடவ குற்றம் யாது, எ-று.

அரசனுக்குத் தன்குற்றங் கடியாவழியே பிறர்குற்றங்கடிதல் குற்றமாம். அதுகடிந்தவழி முறைசெய்தலாமென்பார்,என்குற்றமாகு மென்றார்: எனவே, தன்குற்றங் கடிந்தவனே முறைசெய்தற் குரியனென்ப தாயிற்று. இதனை

தான்குபாட்டாலும் அவற்றது கடிதற்பாடு பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப.

(தே - ப - ரை)—தன் குற்றம் - தனது குற்றத்தை, நீக்கி - (முன்னீனகண்டு) பரிகரித்து, பிறர் குற்றம் - (பின்பு) பிறரதுகுற்றத்தை, காண்கிற்பின் - ஆராய வல்லனாயின், இறைக்கு - அரசனுக்கு, ஆகும் குற்றம் - ஆகக்கடவதாகிய குற்றம், என் - யாது.

எ. செயற்பால செய்யா தொழியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—பொருளாற் றனக்குச் செய்துகொள்ளப்படும் மவற்றைச் செய்துகொள்ளாது அதன்கட் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம் பின உளதாம் பான்மைத்தன்றி வறிதாகெடும், எ-று.

செயற்பாலவாவன அறம் பொரு ளின்பங்கள். பொருளாற் பொருள் செய்தலாவது பெருக்குதல்; அது "பொன்னரி ஞரும் பொருபடையப் படை—தன்னரி ஞருந் தானை தரற்பரி—பின்னே யாகும் பெரும்பொரு ளப்பொரு—டின்னுய காலேத் துன்னுன வில்லையே" என்பதனுலறிக. அறஞ்செய்யாமையானும் பொருள் பெருகாமையானும் உயற்பாலதன்றி யென்றும், இன்பப் பயன்கொள்ளாமையிற் கெடுமென்றுங் கூறினர். உயற்பாலதின்றியென்று பாடமோதுவாருமுளர்.

(தே - ப - ரை.) -செயற்பால - (பொருளினலே நனக்குச்) செய்துகொள்ள வேண்டியவற்றை, செயாது - செய்துகொள்ளாமல், இவறியான் - (அதனிடத்து உலோபஞ்) செய்தவனது, செல்வம் - செல்வமானது, உயற்பாலதன்றி - பின்புள்ளதாகும் பகுப்பினதன்றி, கெடும் - (வீணே கெடும்.

அ. பற்றுள்ள மென்னு மிவ்வன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

(பரி-ரை.) எ-து,—பொருளே விடத்தகுமிடத்து விடாது பற்றுதலேச் செய்யுமுள்ளமாகிய உலோபத்தினது தன்மை குற்றத்தன்மைக ளெல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவதொன்றன்று, மிக்கது, எ-று.

இவ்வுலோபத் தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்துத் தான் மேற்படவல்ல வியல்பு. ஒழிந்தன அதன் மாட்டாமையின், எற்றுள்ளு மெண்ணப்படுவ தொன்றன்றென்றார். எவற்

* சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், சுரு.

துள்ளுமென்பது இடைக்குறைத்து நின்றது. இவையிரண்டோட்டானும் உலோபத்தின் தீமை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—பற்றுஉள்ளம் என்னும் - (பொருளைவிட வேண்டியவிடத்து விடாது) பற்றுகின்ற உள்ளமாகிய, இவறன்மை-உலோபத்தினதுகுணமானது, எற்றுள்ளும் - எல்லாக் குற்றங்களுள்ளும், எண்ணப்படுவது ஒன்று அன்று - (வைத்து) எண்ணப்படுவதொருகுற்றமன்று [மிகப்பெரியது]

கூ. வியவற்க வெஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

(பரி-ரை.) எ-து,—தான் இறப்ப வுயர்ந்தஞான்றும் மதத்தாற்றன்னை கன்குமதியா தொழிக; தனக்கு கன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாதொழிக, எ-று.

தன்னைவியந்துழி இடமும் காலமும் வலியும் அறியப்படாமையானும், அறனும் பொருளும் இகழப்படுதலானும், எஞ்ஞான்றும் வியவற்கவென்றும், கருதியது முடித்தீவிவெலென்னு அதம் பொருளின்பகைகள் பயவாவினைகளை நயப்பின் அவற்றுற் பாதமும் பழியுங் தோடும் வருமாகலின், அவற்றை நயவற்கவென்றுங் கூறினார் இதனுன் மதமானமகளின் தீமை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—எஞ்ஞான்றும் - எக்காலத்திலும் [தான் மிகவும் உயர்ந்தகாலத்திலு மென்க படி], தன்னை வியவற்க - (மதத் தினாலே) தன்னை கன்குமதியாதிருக்கக்கடவன; நன்றி - நன்மையை, பயவா - (தனக்குத்) தராத, வினை - தொழில்களை, நயவற்க - (மானத்தால்) விரும்பாதிருக்கக்கடவன்.

கo. காதல காத லறியா மையுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

(பரி-ரை.) எ-து —தான் காதலித்த பொருள்களை அவர் அக்காதலறி யாமல் அனுபவிக்க வல்லனுயின் பகைவர் தன்னை வஞ்சித்தற் கெண்ணும் எண்ணம் பழுதாம், எ-று.

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாம லுய்த்தால் வாயிலின்மையின் வஞ்சிக்கப்படானென்பதாம். காமம், வெகுளி, உவகையென்பன முற்றக்கடியுங் குற்றம் அன்மையின், இதனுற் பெரும் பான்மைத்தாகிய காமம் நகருமாறுகூறி, ஏனைச் சிறுபான்மை அவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந்தார்.

சரும் அதி. பெரியாரைத்துணைக்கோடல் உக்க

(தே - ப - ரை.)—காதல - (தான்) விரும்பியபொருள்களை, காதல் - அவ்விருப்பத்தை, அறியாமை - (அபர்) அறியாதபடி, உய்க்கிற்பின் - அதுபவிக்க வல்லவனுயின், ஏதிலார் - பகைவர், தூல் - (தன்னை வஞ்சித்தற்கு எண்ணும்) எண்ணமானது, ஏதில - பழுதாம்.

சரும் அதிகாரம்—பெரியாரைத்துணைக்கோடல்.

அஞ்சாவது மூவிருகும்றமும் முறைமையிற் கடிதலிற் காவற்சாகாடி உகைத்தற்குரியனைய அரசன் திசெறிவிலனகி நன்கெறிசெலுதலும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல். அதிகாரமுறைமையும் இதனனே விளகும். பேரறிவுடையாராவார் அரசர்க்கும் அங்கனகட்கும் மானுடத்தெய்வக் குற்றங்கள் வாராமற் காத்தற்குரிய அமைசசர், புரோகிதர்.

க. அறனறிந்து மூத்த அறிவுடையார் கீகண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்

(பரி-ரை. எ-து,—அறத்தது நுணுமையை அறிந்து முன்னின் மூத்த அறிவுடையாரது கேணுமையை அரசன் தனது அருமையை ஆராந்துகொள்ளுந் திறமறிந்து கொள்க, எ-று.

அறநுண்மை நூலாலேயன்றி அனுபவத்துணையாலும் அறியவேண்டுதலின், அறனறிந்தென்றார். மூத்தல் - அறிவானும் சிலத்தானும் காலத்தானும் மூதிர்தல். அறிவுடையார்- நீதியையும் உலகியலையும் அறிந்தவையுடையார். திறனறிதலாவது நன்குமதித்தல், உயரசெய்தல் - அவர்வரைதிற்ற லெல்பன முதலாம அவர பிரயப்புணர்ந்து திறனறிந்து செய்தல்.

(தெ - ப - ரை.)—அறனும் அறிந்து - அறத்தினது நுட்பத்தை அறிந்தது, மூதத - தன்னைப்பார்க்கிலும், மூதிர்ந்த, அறிவுடையார்- அறிவுடையவரது, கேண்மை-நட்பை, தேர்ந்து - (அதனது அருமையைத்) தெரிந்து, திறன் அறிந்து - (கொள்ளும்) வகை யறிந்து, கொளல்-(அரசன்) கொள்ளக்கடவன்.

உற்றநோய் நீக்கி யுறுபொருள் முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(பரி-ரை.) எ-து,—தெய்வத்தானுக மக்களானுகத் தனக்கு வந்ததுன் பங்களை நீக்குவாறறிந்து நீக்கிப் பின் அப்பெற்றியன வாரிவணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மையினையுடையாரை அரசன் அவர் மகப்பனசெய்து துணையாகக்கொள்க, எ-று.

உச்ச சுரும்ம் அதி. பெரியாரைத்துணைக்கோடல்

தெய்வத்தான்வரும் துன்பங்களாவன: மழையினை தின்மைமிகுதிகளாலும், காற்றுத் தீப்பிணியென் றிவற்றலும், வருவன. அவை கடவுளரையும் தக்கோரையும் கோக்கிச் செய்யுஞ் சாந்திகளான் நீக்கப்படும். மக்களான்வரும் துன்பங்களாவன. பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வாரென் றிவர்களான் வருவன. அவை சாம பேத தான தண்டங்களாகிய நால்வகை உபாயத்துள் ஏறறதனுல் நீக்கப்படும. மூறுகாத்தலாவது தெய்வத்தான் வருவன வற்றை உற்பாதங்களானறிந் ந, அசசாந்திகளாற்காத்தலும, மக்களான் வருவனவற்றை அவர்குணம், இங்கிதம், ஆகாரம், செயலென்பனவற்றுன் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றுற் காத்தலுமாம். ஆகலின், புரோகிதரையும் அமைசசரையுங கூறியவாறுமிற்று. இங்கிதம்-குறிப்பான் நிகழும் உறுப்பின் தொழில். ஆகாரம்-குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன-நன்குமதித்தன் முதலியன. இவையிரண்டொட்டானும் பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டுமென்பதூம், கொள்ளுமாறுங கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—உற்ற - (தெய்வத்தாலாவது மனிதராலாவது தனக்கு) வந்த, நோய் - துன்பங்களை, நீக்கி - (நீக்கும் விதம் அறிந்து) நீக்கி, உறுதை - (பின்பவை) வாராதபடி, முன்காக்கும் - முன்னறிந்து காக்கவல்ல, பெற்றியார் - தன்மையுடைய பரை, பேணி - (அரசன்) அவர்மகிழுந்தக்கவைகளை செய்து, கொளல் - துணையாகக் கொள்ளக்கடவன்.

க. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணிக் கமராம் கொளல்.

(இ-ரை.) எ-து,—அப்பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல் அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிது, எ-று.

உலகத்து அரியனவெல்லாம் பெறுதற்குரிய அரசாககு இப்பேறு சிறந்ததென்றது, இதனுல் அவையெல்லாம் உளவாதலேகில்.

(தே - ப - ரை.)—பெரியாரை - அந்தக்குணமுடையவர்களை, பேணி - அவர் மகிழத்தக்கவைகளைச்செய்து, தமர் ஆக - தமக்குச் சிறந்தவராக, கொளல் - கொள்ளுதல், அரியவற்றுள் எல்லாம் - (அரசர்க்கு) அரியபேறுகள் எல்லாவற்றுள்ளும், அரிதே - அரியதே.

ச. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

சுரு-ம் அதி. பெரியாரைத்துணைக்கோடல் உகநி

(பரி-ரை.) எ-து,—அறிவு முதலியவற்றுல் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர்வழி நின்றொழுகுதல் அரசர்க்கு எல்லாவலியுடை மையினுந் தலை, எ-று.

பொருள். படை, அரண்களான் ஆய வலியினும் இத்துணைவலி சிறந்த தென்றது, இவை அவற்றுணீக்கப்படாத தெய்வத்தன்ப முதலியனவும் நீக்கு தற்கு உரியவாகலின்.

(தே - ப - ரை.)—தம்மில்பெரியார் - (அறிவுமுதலியவற்றுல்) தம்மிலுயர்ந்தோர், தமை ஆக - தமக்குச்சிறந்தவராகக்கருதி, ஒழுகுதல் - (தாம் அவர்வழியிலின்று) நடத்தல், வன்மையுள் எல்லாம் - (அரசர்க்கு) எல்லாவலியுடைமைகளி லும், தலை - தலைமையாகிய வலிமையாம்

நி. சூழ்வார் கண்ணுடை வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

(பரி-ரை.) எ-து,—தன்பாரம் அமைச்சரைக் கண்ணுகக்கொண்டு நடத்த வான், அரசன் அத்தன்மையராய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணை யாகக் கொள்க, எ-று.

இரண்டாவது விகாரத்தாற் றொக்கது. தானே சூழவல்லனுயினும் அள விறந்த தொழில்களான் ஆகுலமெய்தும் அரசன்பாரம் அதுவே தொழிலாய அமைச்சரான் அல்லது இனிது நடவாமைபற்றி, அவரைக் கண்ணுகக் கூறி னர்; ஆராய்தல்-அமைசெயற்குச்சொல்லப்படும் இலக்கணத்தினென்பதனே யாராய்தல் இவை மூன்றுபாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின்சிறப் புக் கூறப்பட்டது

(தே - ப - ரை.)—சூழ்வார் - மந்திரிகளை, கண் ஆக - கண்ணு கக்கொண்டு, ஒழுகலால் — (தன்பாரம்) நடத்தலால், மன்ன வன் - அரசன், சூழ்வாரை - (அந்தன்மையாகிய) மந்திரிகளை, சூழ்ந்து - ஆராய்ந்து, கொளல் - (தனக்குத்துணையாகக்) கொள் ளக்கடவன்.

சு. தக்கா ரினத்தனுய்த் தானெழுக வல்லானைச்
செற்றூர் செயக்கிடந்த தில்.

(பரி-ரை.) எ-து,—தக்காராகிய இனத்தை உடையனுய்த் தானும் அறிந் தொழுகவல்ல அரசனைப் பகைவர் செய்யக் கிடந்ததொரு தின்பமும் இல்லை, எ-று.

உகசு சடு-ம் அதி. பெரியாரைத்துணைக்கோடல்

தக்கார் - அறிவொழுக்கங்களால் தகுதியுடையார். ஒழுகுதல் - அறநீதி களின் நெறிவழுவாமல் நடத்தல். வஞ்சித்தல், கூடினரைப்பிரித்தல், வேறு பகைவீளத்தலென் றிவற்றினும், வலியானும், பகைவர் செய்யுந் தின்பன் சன் பலதிறத்த வாயினும், தானுமறிந்து அறிவார்சொல்லுங் கொணடொழுகு அவற்றுள் ஒன்றும் வாராதென்பார், செயக் கிடந்ததில்லென்றார்.

(தெ - ப - ரை.) — *தக்கார் இனத்தராய் - பெரியோராகிய இனத்தையுடையனாகி, தான்ஒழுக - தானும் (அறிந்து நடக்க, வல்லாணை - வல்லஅரசனை, தெரிந்தார் - பகைவர், செயக்கிடந்தது - செய்யக்கிடந்த ஒருதின்பமும், ய -*

ஈ. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே கெடுக்கும் தகைமையவர்

(பரி-ரை.) *எ-து,—தீயன கண்டால் நெருங்கிச்சொல்லுந் துணையாராந் தன்மையை உடையாரை இவ் நமக்கு நிறைந்தென்றாலும் அரசரைக் கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தி யாவர், எ-று.*

தீயன - பாவமாகிய நிஷி அல்லனவும். துணையாக் கன்மையாவது தமக்கு அமையின்மையும் அரசன்கண் அன்புடைமையுமாம். அத்தன்மை யுடையார் நெறியினீங்க விடாமையின், அவையாலும் அரசா ஒருவராலுங் கெடுக்கப்படா தென்பதாம். நெருங்கிச் சொல்லும் அளவினேரை யென் றுரைப்பாருமுளர். இவையிரண்டுபொட்டாலும் அத்தன்பன் கூறப்பட்டது.

(தெ - ப - ரை) — *இடிக்கும் - கோபித்துப் புத்திசொல்லும், துணையாரை - துணையாந் தன்மையை யுடையவரை, ஆள்வாரை - (இவ்நமக்குச்சிறந்தவரென்று) ஆளும் அரசரை, கெடுக்கும்தகை மையவர் - கெடுக்கும் பெருமையையுடையபகைவர், யார் - (உல கத்தில்) யாவர்.*

அ. இடிப்பாரை யில்லாத ஏமராமன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்

(பரி-ரை) *எ-து,—கழுறுதற்பாலாரைத் தனக்குத் துணையாகக் கொள் ளாமையிற் காவலற்ற அரசன் பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும், எ-று.*

இல்லாத ஏமரா என்பன பெயரெச்சக் கெடுக்கு. கெடுப்பார் உளராவரென் பது தோன்ற, இலானுமென்றார். தானே கெடுதலாவது பாகனில்லாத யானைபோல நெறியல்லா நெறிசென்று கெடுதல்.

(தெ - ப - ரை)—இடிப்பாரை - உறுதிசொல்லுதற் குரிய வரை, இல்லாத - (தனக்குத்துணையாகக்) கொள்ளாமையால், ஏமரா - காவலற்ற, மன்னன் - அரசன், கெடுப்பார்இல்லாஅும் - (பகையாய்க்) கெடுப்பவர் இல்லாதிருந்தாலும், கெடும் - (தானே) கெடுவன்.

முதலிலார்க் கூதிய மில் லாகுபொருள்
ஏமரா மன்னன் நிலை.

(பரி-ரை.) எ-து,—முத, பொருளில்லாத வணிகர்க்கு அதனல்வரும் ஊதியம் இல்லையாம், அதுபோலத் தம்மை, நாடருவதாக் துணையில்லாத அரசர்க்கு அதனன் வரும் நிலையில்லை, எ-று.

முதலைப் பெற்றே இலாபம் பெறவேண்டுமாறுபோலத் சாகுவாரைப் பெற்றே நிலைபெறவேண்டுமென்பதாம். "லை - அரசர் பாரத்தோடி சுலியா நிற்றல்.

(தெ - ப - ரை)—முதற்பொருளில்லாத வணிகர்க்கு, ஊதியம் - (அதனல்வரும்) ஆதாயம். இல்லை - இலது, (அதுபோல) மகனையும் - (தம்மைத் தாங்குவதாகிய, சார்பு இலார்க்கு - துணையில்லாத அரசர்க்கு, நிலை - (அதனல்வரும்) நிலையானது, இல்லை - இலது.

கஅ) பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

(பரி-ரை.) எ-து,—தான் ரனியனுய்வைத்துப் பலரோடும் பகைகொள்ளுதலின் பதிற்றுமடங்கு தீமையுடைத்து அரசன் பெரியாரோடு கட்பினைக் கொள்ளாதொழிதல், எ-று.

பலர் பகையாயக்கால் "மோதி மூள்ளொடு முட்பகை கண்டிடல்—பேதுசெய்து பிளந்திடல்" என்பனையல்லது ருங்கு வினையாக்குதல் தீது, செய்தாலும் ஒருவாற்று னுய்தல்கூடும். நல்லார் தொடர்கைவிட்டால் ஒருவாற்றுனும் உய்தல் கூடாமையின், இது செய்தல் அதனினும் தீதென்பதாம். இவைமூன்றுபாட்டானும் அது செய்யாதவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

நீயொ றறுதகநிடீட்டு;—லாரியாய வரும்பகை காட்டுதன்—மோதி மூள்ளொடு முட்பகை கண்டிடல்—பேது செயது பிரகிடல் பெட்டதே;—சீவகசிந்தாமணி விமலையாரிலம்பகம், கூ.

(தே - ப - ரை)—நல்லார் - (அரசன்) பெரியவருடைய, தொடர்கைவிடல் - நட்பைவிட்டிருத்தல், பல்லார் - (தான்தனியனு யிருந்து) பலரோடும், பகைகொளலின் - பகைகொள்ளுதலிற்பார்க்கினும், பத்தடுத்த - பத்தப்பங்கு அதிகமாகிய, தீமைத்தே - தீமையையுடையதேயாம்.

சசுஉம் அதிகாரம்—சிற்றினஞ்சேராமை.

அஃதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது *"நல்லதன்கலனும் தீயதன்தீமையும் இல்லென்போரும்" விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்டகுழு. அறிவைத் திரித்து இருமையுங்கெடுக்கும் இயல் பிற்றாய அதனைப் பொருந்திற் பெரியாரைத் துணைக்கோடல் பயனின் றென்ப துணர்த்தற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்ட .

இன மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்

(பரி-ரை.) எ-து,—பெரியோரியல்பு சிறிய இனத்தை அஞ்சாதிருக்கும்; எஞ்சுசிறியோரியல்பு அது சோக்கபொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணித் துணியும், எ-று.

தத்தம் அறிவு திரியுமாறும் அதனால் தமக்குவருந் துன்பமும் நோக்கலின் அறிவுடையார் நஞ்சுவென்றும், அறிவொற்றுமையாற் பிறிது நோக்காமையின் அறிவிலாதார் தமக்குச் சுற்றமாகத் துணிவாரென்றுங் கூறினார். பொருளின்தொழில்கள் பண்பின்மேனின்றன. இதனாற் சிறிய இனம் பெரியோர்க் காகாதென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பெருமை - பெரியோருடைய சுபாவகுணமானது, சிறுஇனம் - சிறியவினத்தைத்தண்டி, அஞ்சும் - அஞ்சாதிற்கும்; சிறுமைதான் - மற்றச்சிறியோருடைய சுபாவகுணமானது, (அந்தச் சிற்றினஞ் சேர்ந்தவுடனே), சுற்றம் ஆக - (தனக்கு) உறவாக, சூழ்ந்துவிடும் - எண்ணித் தழுவிக்கொள்ளும்.

உ. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

(பரி-ரை.) எ-து,—தான் சேர்ந்த நிலத்தினது இயல்பானே நீர் தன் தன்மை திரிந்து அந்நிலத்தின் தன்மைத்தாம்; அதுபோல, மாந்தற்குத் தாம்சேர்ந்த இனத்தினது இயல்பானே அறிவுந் தன்தன்மை திரிந்து அவ் வினத்தின் தன்மைத்தாம், எ-று.

எடுத்துக்காட்டுவமை. விசும்பின்கண் தன்தன்மைத்தாய நீர் நிலத் தோடு சேர்ந்தவழி, நிறம் சுவை மூத்தலிய பண்புகள் திரிந்தாற்போலத் தனி நிலேக்கண் தன்தன்மைத்தாய அறிவு பிற இனத்தோடு சேர்ந்தவழிக் சிறுதலிய தொழில்கள் திரியுமென இதனுல் அதனது காரணம் உப்பட்டது.

(தெ - ப - ரை.)—நீர் - நீராளது, நிலத்து - (தான்சேர்ந்த) நிலத்தினது, இயல்பான் - குணத்தினுலே, திரிந்து - (தனது) தன்மைவேறுபட்டு, அற்றாகும் - அந்நிலத்தினது தன்மைய தாகும்; (அதுபோல) மாந்தற்கு - மனிதற்கு, அறிவு - அறிவானது, இனத்து - (தாம் சேர்ந்த) இனத்தினது, இயல்பு - குணத் தினுலே, (திரிந்து) - தனது தன்மைவேறுபட்டு, அதுவாகும் - அவ்வினத்தினது தன்மையதாகும்.

நூ. மனத்தானு மாந்தாம் குணாசாரி யினத்த
மின்னு னெனப்படுஞ் சொல

(பரி-ரை.) எ-து,—மாந்தர்க்குப் பொதுவுணர்வு தம்மனங்காரணமாக வுண்டாம்; இவன் இத்தன்மையனென்று உலகத்தாரால சொல்லப் படும் சொல் இனங்காரணமாக வுண்டாம், எ-று.

இயற்கையாய புலனுணர்வுமாதிரித்திரு வினம் வேண்டாமையின் அதனை மனத்தானுமென்றும், செயற்கையாய விசேடவுணர்வுபற்றி நல்ல னென்றுந் தீயனென்றுங் கீழுஞ்சொற்கு இனம் வேண்டுதலின் அதனை இனத்தானுமென்றுங் கூறினர். ஈண்டையவற்றை கொள்ளாது அத்திரிபும் மனத்தானு மென்பாரை நோக்கி இதனுன் அது மறுத்துக் கூறப் பட்டது.

(தெ - ப - ரை.)—மாந்தற்கு - மனிதற்கு, உணர்ச்சி - பொது அறிவானது, மனத்தான் - (தம்) மனங்காரணமாக, ஆம் - உண் டாகும்; இன்னன்னெனப்படும் - (இவன்) இத்தன்மையனென்று (உலகத்தாராலே) சொல்லப்படும், சொல - சொல்லானது, இனத் தான் - இனங்காரணமாக, ஆம் - உண்டாகும்.

சு. மனத்தி னதுபோலக் கூர்ப் பொருவற்
கினத்தி னதாகு மறி

(பரி-ரை.) எ-து,—ஒருவற்கு மனத்து உளதுபோலக்காட்டி அவன் சேர்ந்த இனத்தின் கண்ணே உளதாம், எ-று.

மெய்ம்மை நோக்காமுன் மனத்துளதுபோன்று காட்டியும் பின்னெக் கியவழிப் பயின்ற இனத்துளதாயும் இருத்தலின். காட்டியென இறந்தகாலத் தாற் கூறினர். விசேடவுணர்வுதானும் மனத்தின்கண்ணே அன்றே உளதாவ ன்பாரைநோக்கி, ஆணடுப் புலப்படுக் துணையேயுள்ளது அதற்குமூலம் து இதனுற் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அறிவு - அந்தவிசேடஅறிவு, ஒருவற்கு - ஒருவனுக்கு, மனத்து - மனத்தினிடத்து, உளதுபோல - உண்டா வதுபோல, காட்டி - (தன்னைக்) காட்டி, இனத்து - (அவன்சேர் ந்த) இனத்தினிடத்தே, உளது ஆகும் - உண்டாகும்.

நி. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்.

(பரி-ரை.) எ-து —அவ்விசேடவுணர்வு புலப்படுதற்கிடனாய மனந்தூய ஞ்சற்றன்மையும் செயும்வினை தூயஞ்சற்றன்மையுமாகிய இரண்டும் ஒரு வற்கு இனந்தூயஞ்சற்றன்மை பற்றுக்கோடாக உளவாம், எ-று.

மனந்தூயஞ்தலாவது விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறி யாமையின் நீங்குதல். செய்வினை தூயஞ்தலாவது மொழிமெய்களாற செய் யும் நல்வினை உடையஞ்தல். தூவெனபது அப்பொருட்டாதல் * "தூவறத் துறந்தாரை" என்பதனுனு மறிக. ஒருவன இனந்தூயஞ்வே அந்நெறி பயிற்சிவயத்தான் மனந்தூயஞாய் அதன்கண் விசேடவுணர்வு புலப்பட்டு அத னஞ்சொல்லுஞ் செயலுந் தூயஞமென, இதனுல இனத்துள்ளவாமாறு கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—மனம் - (அந்தவிசேட அறிவு வெளிப்படு தற்கு இடமாகிய) மனம், தூய்மை - பரிசுத்தனற்றன்மையும், செய்வினை - செய்தொழில், தூய்மை - பரிசுத்தனற்றன்மையும், இரண்டும் - (ஆகிய) இரண்டும், இனம் - (சேர்ந்த) இனம், தூய்மை - பரிசுத்தனந்தன்மை, தூவா - பற்றுக்கோடாக, வரும் - உண்டாகும்.

சு. மனந்தூயார்க் கெச்சநன் ருகு மினந்தூயார்க்
கில்லைநன் ருகா வினை.

* குலந்தெரிவரை, செய்யுளியல், 4.

(பரி-ரை.) எ-து,—மனக்தூய ராயினுர்க்கு மக்கட்பேறு நன்ருகும்;இனக் தூய ராயினுர்க்கு நன்ருகாத வினை யாதும் இல்லே, எ-று.

காரியங காரணத்தின் வேறுபடாமையின் எச்சநன்ருகுமென்றும், நல் லினத்தோடெணணிச செய்யப்படுதலின் எல்லாவினேயும் நல்லவாமென்றுங் கூறினர.

(தே - ப - ரை.)—மனம்தூயார்க்கு - மனம் பரிசுத்தமானவர் க்கு; எச்சம் - மக்கட்பேறு, நன்முகும்-நலமுடையதாம்; இனம் தூயார்க்கு - இனம் பரிசுத்தமானவர்க்கு; நன்றுஆகாவினை - நன்ரு காதசெயல், இல்லே - (யாதும்) இல்லே.

வி. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

(பரி-ரை.) எ-து,—நீலேபெற்ற உயிர்கட்கு மனநன்மை செல்வத் தைக் கொடுக்கும்; இனநன்மை அதனேடு எல்லாப்புகழையுங் கொடு க்கும், எ-று.

மண்ணுயிரென்றது மண்ணிடை யுயிர்த்தினேமேன்மேற்றது. தருமென்னும் இட வழுவமைதியொல முன்னுங கூட்டப்பட்டது. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. மனன்முதலாநனே அறமாகலின் அதனே ஆக்கந்தருமென்றும் புகழ் கொடுத்தற்குரிய நல்லோர்காமே இனமாகலின் இனநலமெல்லாப் புக ழுந்தருமென்றுங கூறினர். மேல் மனநன்மை இனநன்மைபற்றிவருமென்ப தனே ஈட்கொணடு அஃதியல்பாகவே உடையார்க்கு அவ்வினநன்மை வேணடாவெனபாரை நோக்கி, அதுநிற்கவன்றி அதற்குமை பலவற்றையுந் தருமென அவர்க்கு அது வணங்குமெனப் பகழ இவ்விரண்டுபொட்டாலுங கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—மன்னுயிர்க்கு - நிலேபெற்றவுயிர்களுக்கு, மனநலம் - மனத்தின தாகன்மையானது, ஆக்கும் - செல்வத்தைத் (தரும்), இனநலம் - இனத்தின தாகன்மையானது, எல்லாப்புகழும்- (அதனேடு) எல்லாப்புகழையும், தரும் - கொடுக்கும்

அ. மனநல நன்குடைய ராயினுஞ் சான்ருர்க்
கினநல மேமாப் புடைத்து

(பரி - ரை.) எ-து,—மனநன்மையை மூன்னேநல்வினேயால் தாமேஉடை யராயினும் அமைந்தார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலே உடைத்து, எ-று.

நன்காலென்றும் மூன்றனுருபு விகாரத்தாற்றொக்கது. அந்நல்வினேஉள் வழியும் மனநலத்தைக் களர்த்துவருதலின், அதற்கேமாப் புடைத்தாயிற்று.

(தே - ப - ரை.)—மனநலம் - மனநன்மையை, நன்கு - (மூன்றே) நல்லினையினும், உடையர் ஆயினும் - (தாமே) உடையவராயிருந்தாலும், சான்றோர்க்கு - நிறைந்தோர்க்கு, இனநலம் - இனநன்மையானது, ஏமாப்பு - (அதற்கு) வலிமையாதலால், உடை - உடையது.

கூ. மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

(பரி-ரை.) எ-து,—ஒருவற்கு மனநன்மையானே மறுமையின்பம் உண்டாம்; அதற்கு அச்சிறப்புத்தானும இனநன்மையான வலிபெறுதலே உடைத்து, எ-று.

மனநலத்தினாகு மறுமையென்றது மறுமை பயப்பது மனநன்மை தானே பிறிதொன் றன்றென்னும் மதத்தை உடம்பட்டுக் கூறியவாறு. மற்று—வினைமாற்று. உம்மை—இறந்தது தழுவிய எச்சவும்மை. ஒப்போவழித் தாமத்தகுணத்தான் மனநலத்தினியும நல்லினம் ஒப்பதிறுதலி மறுமைபயப்பிக்குமென நிலைபெறச்செய்யுமாறு கூறப்பட்டது. இவையைந்துபாட்டானும் சிற்றினஞ்சேராமையது சிறப்பு நல்லினஞ்சேர்தலாகிய எதிர்மறைமுகத்தாற் கூறியவாறறிக.

(தே - ப - ரை.)—மனநலத்தின் - மனநன்மையால், மறுமை - மறுமையின்பம், ஆகும் - உண்டாம்; மற்று அஃதும் - அதற்கு அச்சிறப்புத்தானும், இனநலத்தின் - இனநன்மையால், ஏமாப்பு - வலிபெறுதலே, உடைத்து - உடையதாம்.

கஎ. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

(பரி-ரை.) எ-து,—ஒருவற்கு நல்லினத்தின் மிகுத துணையும் இல்லை; தீயவினத்தின் மிக்க பகையும் இலலை, எ-று.

ஐந்தனிருபுகள் உறழ்பொருளின்கண வந்தன. தீங்கென்பது பின்னுங் கூட்டி உம்மை மாற்றியுரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையின் நீக்கித் தீயருறுமற் காத்தலின் அதனேத் துணையென்றும், தீயினம் அறிவின் நீக்கித் தீயருறுவித்தலின் அதனைப் பகையென்றும கூறினர். அல்லற்படுப்பதென்பது ஏதுப்பெயர். இதனால் விதியெதிர்மறைகள் உடன்கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—நல்ல இனத்தின் ஊங்கு துணையும் இல்லை - (ஒருவனுக்கு) நல்ல இனத்தின் மிகுந்த துணையும் இல்லை; தீயி

னத்தின் (ஊங்கு) - தீய இனத்தின் மிகுந்த, அல்லற்படுப்பதும் · தின்பத்தைவிளைப்பதும் [பகையும்], இல் - இல்லை.

120-ம் அதிகாரம்—தெரிந்துசெயல்வகை.

அஃதாவது அரசன் தான்செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுங்திறம். அசசெயல் பெரியாரைத் துணைகோடல் பயனுடைத்தாயவழி அவரோடுஞ் செய்யப்படுவதாகலின், இது பிறவினைஞ் சேராமையின்பின் வைக்கப்பட்டது.

கு அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

(பரி-ரை.) எ-து.—வினைசெயபுகால் அப்பொழுது அதனுல் அழிவ தனையும் அழிந்தார்பின் ஆவதனையும் ஆய்ந்து பிற்பொழுதுதரும் ஊதியத தையும் சிந்தித்து முடிவுசெய்க, எ-று.

ஊறுவதாவது நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு எதிர்வினும் அது வளர்ந்துவருதல். அழிவின்மையின், எதிர்வின்கண வருமாக்கத்தை ஊதிய மென்றார்: எனவே, அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண அழிவதும் ஆவது மாகமுளிளாதாலும் முடிவுபார்ப்பானென்பது பெறும். காலத்தும பயனுடைமை தெரிந்து செய்க வெனபதாம்.

- ப - ரை)—அழிவதும - (தொழில்செய்யுமிடத்து) (அதனை) அழிவதையும், ஆவதும் - (அழிந்தால்பின்) ஆவதை யும், ஆகி - ஆகிநின்று, வழிபயக்கும் - பின்புதருகின்ற, ஊதிய மும் - ஆதாயத்தையும், சூழ்ந்து - ஆராய்ந்து, செயல - (ஆதாயம் கெடாபடியால்) செய்யக்கடவன.

உ. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க் கரும்பொருள் யாதொன்று மில்

(பரி-ரை.) எ-து,—தாம் தெரிந்துகொண்ட இனத்துடனே செய்யத் தகும் வினையை ஆராய்ந்து பின் தாமேயும் எண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு எய்துதற்கரிய பொருள் யாதொன்றும் இல்லை, எ-று.

ஆராயப் படுவனவெல்லாம் ஆராய்ந்துபோந்த இனமென்றுமாம். செய் வார்க் கென்றதனுல், வினையென்னுஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட் டது. வினையாவது மேற்சேறன்முதல் வேறல் ஈறுய தொழில். பொருள் தட் சேதுவாய அதனிற் றவருமையின், அரியபொருள்களெல்லாம் எளிதி

னெய்தவ ரென்பதாம். இவை யிரண்டுபொட்டாளுஞ் செய்யத்தகும் வினை யும் அது செய்யுமாறும் கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—தெரிக்க - (தாம்)தெரிந்துகொண்ட, இனத் தொடு - இனத்துடனே, தேர்ந்து - (செய்யத்தகுந்தொழிலை) ஆராய்ந்து, எண்ணி - (பின்புதாமும்தனித்து) ஆலோசித்து, செய் வார்க்கு - செய்துமுடிக்கவல்ல அரசருக்கு; அரும்பொருள் - பெறு தற்கரியபொருள், யாதொன்றும் இல் - யாதொன்றும் இல்லை

கூ. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

(பரி-ரை.) எ-து —மேல்எய்க்கடவ ராகியதெரிவு சோர்ந்து முன் னெய்திநின்ற முதல் தன்னையும் இழத்தற்கேதுவாய செய்வினையை அறிவு டையார் மேற்கொள்ளார், எ-று.

கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்சவினை கொண்டது. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. ஆக்கமேயன்றி முதலையும் இழக்கும் வினைகளாவன வலியுங காலமும் இடனும் அறியாது பிறர்மண் கொள்வான்சென்று தமமணணும இழத்தல்போல்வன. முன்செய்து போந்த வினையாயினுமொன்பார், செய்வினையென்றார்.

(தே - ப - ரை.)—ஆக்கங் கருதி-(பின்பெறக்கடவதாகிய)இலா பத்தைநினைத்து; முதல் - (முன்பெற்றுள்ள) முதலையும், இழக்கும்-இழத்தற்கு ஏதுவாகிய, செய்வினை - தொழிலை, அறிவுடையார் - விவேகிகள், ஊக்கார் - மேற்கொள்ளார்.

சு. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

(பரி-ரை.) எ-து,—இனமதோடும் தனித்தும் ஆராய்ந்து துணிதலில் லாத வினையைத் தொடங்கார், தமக்கு இளிவரவென்னுங குற்றமுண்டாதலே அஞ்சுவார், எ-று.

தொடங்கின் இடையின் மடங்குதலாகாமையின், தொடங்காரென்றார். இளிவரவு - அவ்வினையாற் பின்னழிவெய்தியவழி அதன்மேலும் அறிவும் மானமும் இலரென்றும் உலகத்தார் இகழும் இகழ்ச்சி. அஃதுண்டாதல் ஒரு தலையாகலின், தெளிவுள்வழித் தொடங்குக வென்பதாம்.

(தே - ப - ரை.)—இளிவுஎன்னும் - (தமக்கு) இழிவென்று சொல்லப்பட்ட, ஏதப்பாடு - குற்றமுண்டாவதற்கு, அஞ்சுபவர் -

பயப்படுவோர், தெளிவுஇல்அதனை - (இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து) தெளியாததொழில், தொடங்கார் - செய்யத்தொடங்கார்.

நி வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

(பரி-ரை.) எ-து,—சென்றால் நிகழும் நிமித்தங்களையெல்லாம் முற்றஎண்ணுதல் சில எண்ணிய துணையாளனே அரசன் பகைவர்மேற் செல்லுதல் அவரை வளருநிலத்திலே நிலைபெறச் செய்வதொரு தொழியாம், எ-று.

அஃதிறங்களாவன வலி, காலம், இடனென்றிவற்றால் தனக்கும் பகைவர்க்கு முளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும் அதனாற் பெறும் பயனும் முதலாயின. அவற்றட்சில எஞ்ஞான்றும் பகைவர்க்கு இடனும் ஆகலான், முற்றுப்பெற எண்ணவேண்டுமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஒழியத்தரும் வினையும் ஒழியாவகைப்பும் இருக்குங கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—வகை - (சென்றால்நடக்கும்) விதங்களையெல்லாம், அறச்சூழாது - முற்ற எண்ணாமல் [சிலவெண்ணியவளவிலென்றபடி], எழுதல் - (அரசன் பகைவர்மேல்) செல்லுதல், பகை வரை - அப்பகை யரை, பாத்தி - வளருநிலத்திலே, படுப்பது - நிலை பெறச்செய்வதாகிய, ஓர் ஆறு - ஒருவழியாம்.

சூ. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யா மையானுங் கெடும்

(பரி-ரை.) எ-து —அரசன் தன்னினைகளுள் செய்யத்தக்கன அல்லவற்றைச் செய்தலாற்கெடும்; இனி அதனினை அன்றிச் செய்யத்தக்கனவற்றைச் செய்யாமைதன்னானுங் கெடும், எ-று.

செய்யத்தக்கன வல்லாதவன பெரிய முயற்சியினவும், செய்தாற் பயனில்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவும், பின்துயர்விளைப்பனவுமென இவை. செய்யத்தக்கனவாவன அவற்றின் மறுதலையாயின. இச்செய்தல் செய்யாமைகளான் அறிவு அண்மை பெருமையென்னும் மூவகையாற்றலுள் பொருள் படையென இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனும் ஆகலான், இரண்டுங் கேட்டிற்கேதுவாயின. இதனைத் செய்வன செய்து ஒழிந்தவினாலெனவென இருவகையனவும் உடனே கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—செய்தக்க அல்ல-(அரசன் தனதுதொழில் களில்) செய்யத்தகாதவைகளை, செய - செய்தலால், கெடும் - கெடு

வான்; (அன்றியும்), செய்தக்க - செய்யத்தக்கவைகளை, செய்யா மையினும் - செய்யாமையினாலும், கெடும் - கெடுவான்.

எ எண்ணித் துணிக கருமம் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

(பரி-ரை.) எ-து,—செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை எண்ணித்தொடங்குக, தொடங்கினவைத்துப் பின்னெண்ணக்கடவோம் என் றெழுதல் குற்றமாதலான், எ-று.

துணிவுபற்றி நிகழ்தலின், துணிவெனப்பட்டது. சிறப்பும்மை விகாரத் தாற்றொக்கது. உபாயமென்பது அவாய்நிலையான் வந்தது அது கொடு தல், இன்சொற்சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தலென நால்வகைப்படும். இவற்றை வடநூலார் தான சாம பேத தண்டமென்ப. அவற்றுள் மூன் னைய இரண்டும் ஐவகைய, எனைய மூவகையை; அவ்வகைகளெல்லாம் ஈண்டு ரைப்பிற்பெருகும் * இவ்வுபாயமெல்லாம் எண்ணுதற்தொடங்கின் அவ்வினை மாற்றாலும் விலக்கப்பட்டு முடியாமையானும், இடையின் ஒழிந்த லாகாமை யானும், அரசன் துபாயருகலின், அவ்வெண்ணுமையை இழுக்கென்றார். செய்வனவற்றையும் உபாயமறிந்தே தொடங்குக வென்பதாம்.

(தே - ப - ரை.)—கருமம் - (செய்யத்தக்க) தொழிலையும் எண்ணி - (முடிக்கும் உபாயத்தை) ஆலோசித்து, துணிக - தொடங் கக்கடவன், துணிந்தபின் - தொடங்கியபின்பு, எண்ணுவம் என் பது - ஆராயக்கடவோமென்பது, இழுக்கு - குற்றமாதலால்.

அ. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

(பரி-ரை.) எ-து,—முடியும் உபாயத்தாற் கருமத்தை முயலாத முயற்சி தூணேவர்பலர் நின்று புரைபடாமற் காப்பினும் புரைபடும், எ-று.

முடியும் உபாயத்தான் முயறலாவது கொடுத்தலேப் பொருணசையா ளன் கண்ணும், இன்சொல்லேசெப்பமுடையான். மடியாளன், முன்னே பிறரோடு பொருது கொந்தவனென இவர்கண்ணும், வேறுபடுத்தலேத் தூணேப்படையாளன், தன் பகுதியோடு பொருந்தாதானென இவர்கண்ணும்

* அரும்பொருளா கொடுத்தல் தருமம்பொருள் பொருது விடுதல், கொடிகருப்பொரு கொடுத்தல், பிறனபொருள் கொண்டு கொடுத்தல், இறையொழிதல் எனக்கொடுத்தல் ஐந்து, வணங்ஙல, புகழ்தல, எதிர்கோடல். நட்புக்கூறல் உறவுகூறல் என இன்சொ சொல்லல் ஐது, நட்பொழிதல, கூடினரை பிரிதரதல், வேறுபகைவினைதல் எனவேறு படுத்தல் மூன்று தண்பஞ் செயதல், பொருள்கோடல், கோறல் என ஒறுத்தல் மூன்று.

ஒறுத்தலே இவற்றின் வாராதவழி இவர்கண்ணுந் தேறப்படாத கீழ்மக்கள் கண்ணுஞ் செய்து, வெல்லுமாற்ருன் முயறல். புரைபடுதல்-கருதிய நன்மை யன்றிக் கருதாத தீமை பயததல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு.

(தே - ப - ரை)—ஆற்றின் - முடியுமுபாயத்தால், வருந்தா வருத்தம் - (கருமத்தைத் தரித்தி) வருந்தாத முயற்சியானது, பலர்நினறு - (துணைவர்) பலாகூடிநின்று, பேரற்றிலும் - (குற்றப் படாமல) காப்பினும், பொத்துப்படும் - குற்றப்படும்

கூ. கனமுற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

(பரி-ரை.) எ-து,—வேறு லுவேர்தாமட்டு ஈன்றன உபாயஞ் செய்தற் றுங குற்றமுண்டாம், அவரவர்குணங்களே ஆராய்ந்தறிந்து அவறறிறகி யையச செய்யாவிடின், எ-று.

நன்றன உபாயமாவது கொடுத்தலும் இன்னொரா சொல்லுதலுமாம். அவை யாவர்கண்ணும் இனியவாதற் சிறப்புடைமையின், உம்மை சிறப் பும்மை. அவற்றை அவரவர பண்பறிந் தாற்றுமையான அவற்றிற்கு உரிய ரல்லாதாரகணணே செய்தல். தவறு - அல்வினைமுடியாமை.

(தே - ப - ரை)—ஈன்று - (வேற்றரசரிடத்து) நல்லுபா யத்தை, ஆற்றவுள்ளும் - செய்யுமிடத்தும், தவறு - குற்றம், உண் டு—; அவர் அவர் - அவரவருடைய, பண்பு - குணங்களை, அறி ந்து - (ஆராய்ந்து) அறிந்து, ஆற்றுக்கடை - அக்குணங்களுக்கு இசையச) செய்யாவிடத்து.

கஅ. எள்ளாத வெண்ணிச் செயலமீண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

(பரி-ரை.) எ-து,—அரசர் வினைமுடித்தற்பொருட்டித் தம் நிலைமை யோடு பொருந்தாத உபாயங்களே செய்வாராயின் உலகந் தம்மை இகழா நிற் கும்; ஆகலான், அஃது இகழாவுபாயங்களே நாடிச் செய்க, எ-று.

தம்மென்பது ஆகுபெயர. தந்நிலைமையோடு பொருந்தாத உபாயங் களேச செய்தலாவது தாம் வலியராய்வைத்து மெலியார்க்குரிய கொத்தன் முதலிய மூன்றனேசசெய்தலும், மெலியராய்வைத்து வலியார்க்குரிய ஒறுத் தலேச் செய்தலுமாம். இவையிரண்டும் அறிவிலார் செய்வன ஆகலின் உலகங் கொள்ளாதென்ருர். அஃது எள்ளாதனசெய்தலாவது அவற்றைத் தத்தம் வன்மை மென்மைகட்கேற்பச செய்தல். மேல் இடவகையான் உரிமை

கூறிய உபாயங்கட்கு வினைமுதல்வனையான் உரிமை கூறியவாறு. இவை நான்குபாட்டானுஞ் செய்வனவற்றிற்கு உபாயமும் அதனது உரிமையுங் கூறப்பட்டன.

(தே - ப - ரை)—தம்மொடு - அரசர்தொழில் முடித்தற் பொருட்டுத) தமதுநிலைமையோடு, கொள்ளாத - பொருந்தாத உபாயங்களைச் (செய்வாராயின்), உலகு - உலகமானது, கொள்ளாது - அங்கிகரியாது [இகழுமென்றபடி]; (ஆகலால்), எள்ளாத - (அவ்வுலகம்) இகழாத உபாயங்களை, எண்ணி - ஆராய்ந்து, செயல்வேண்டும் - செய்யக்கடவர்.

ஏஅம் அதிகாரம்—வலியறிதல்.

அஃதாவது அவ்வுபாயங்களுள் ஒருதலை குறித்த அரசன் நால்வகை வலிமையும் அளந்தறிதல். அதிகாரமுறைமையும் இதனுளே விளங்கும்.

க. வினைவலியுந் தின்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

(பரி-ரை.) எ-து,—தான் செய்யக்கருதிய வினைவலியையும் அதனைச் செய்து முடிக்குந் தன்வலியையும் அவனை யெதிர்க்கலுறும் மாற்றான்வலியையும் இருவர்க்குந் துணையாவார வலியையும் சீர்தூக்கித் தன்வலிமிகுமாயின் அவ்வினையைச் செய்க, எ-று.

இந்நால்வகைவலியுள் வினைவலி அறன்முற்றலும் கோடலும் முதலிய தொழிலானும், வினைய லூவகையா ருலாவுறு கூறுபடுதற் றூகப்படும். தன்வலி மிகவின்கட் செய்கவென்ற விதியால், மேற்றாதல் ஒருதலையாய குறைவின்கண்ணும் வேறல் பயமாய ஒப்பின்கண்ணும் ஒழிகவென்பது பெற்றும்.

(தே - ப - ரை)—வினைவலியும் - (தான் செய்யக்கருதிய) தொழிலது வலிமையையும், தன்வலியும் - (அதனைச்செய்துமுடிக்கும்) தனதுவலிமையையும். மாற்றான்வலியும் - (அதனைவிலக்கும்) பகைவனது வலிமையையும், துணைவலியும் - (இருவர்க்கும்) துணையாவாரது வலிமைகளையும், தூக்கி - ஆராய்ந்து, செயல் - (தன்வலிமிகுமாயின் அத்தொழிலைச்) செய்யக்கடவன்.

உ. ஒல்வ தறிவ தறிந்த தன் கட்டங்கிர
செல்வார்க்குச் செல்லா தில்.

(பரி-ரை.) எ-து,—தமக்கியலும் வினையையும் அதற்கறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து எப்பொழுதும் மனமொழி மெய்களை அதன்கண்வைத்துப் பகைமேற்செல்லும் அரசர்க்கு முடியாத பொருளில்லை, எ-று.

ஒல்வதெனவே வினைவலி முதலாய மூன்றும்அடங்குதலின், ஈண்டறிவதென்றது துணைவலியேயாயிற்று எல்லாப்பொருளும் எய்துவரென்பதாம். இவையிரண்டுபாட்டானும் வலியின்பகுதியும் அஃதறிந்து மேற் செல்வாரெய்தும் பயனுங் கூறப்பட்டன.

(தே - ப - ரை)—ஒல்வது - (தமக்குச்) செய்யக்கூடுந்தொழிலையும், அறிவது அறிந்து - (அதற்கு) அறியவேண்டும்வலியையும் அறிந்து; அருன்கண் - அருளிடத்து, தங்கி - (மனமொழிகளை யப்போதும்) வைத்து, செல்வார்ந்த - (பகைமேல்) செல்லும் அரசர்க்கு, செல்லாதது - முடியாதபொருள், இல் - இல்லை.

ஈ உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னுக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்

(பரி-ரை.) எ-து,—கருத்தாவாதலையுடைய தம்வலியின் அளவறியாதே மனவெழுச்சியால் தம்மின்வலியாரோடு வினைசெய்தலைத் தொடங்கி அவர் அடர்த்தலான் அது செய்து முடிக்கப்பெறுது இடையே கெட்ட அரசர் உலகத்துப் பலர், எ-று.

உடையவெம்பது அவாய்நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மூவகையாதலுள்ளுஞ் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின், முரிந்தார் பலரென்றார். அதனால் தமவலியறிந்தே தொடங்குகவென்பது எஞ்சிநின்றது.

(தே - ப - ரை.)—உடைய - (தலைவனுதலை) உடைய, தம்வலி- தமதுவலிமையினளவை, அறியார - தெரிந்துகொள்ளாதவராகி, ஊக்கத்தின் - மனவெழுச்சியால், ஊக்கி - (தம்மின் வலியவரோடு) போர்செய்யத்தொடங்கி, இடைக்கண் - (அவர்முரியஅடித்தலால் தாம் அதுசெய்து முடிக்கப்பெறுது) நடுவிலே, முரிந்தார் - கெட்டஅரசர், பலர் - (உலகத்துப்) பலராவர்.

ச. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

(பரி-ரை.) எ-து,—அயல் வேந்தரோடு பொருந்தி ஒழுகுவதுஞ் செய்யாது தன் வலியளவறிவதுஞ் செய்யாது தன்னே வியந்து அவரோடு பகைத்தரசன் விரையக் கெடும், எ-று.

காரியத்தைக் காரணமாக உபசரித்து, வியக்தானென்றார். விரைய வென்பது திரிந்துநின்றது. நட்பாயொழுதல், வலியறிந்து பகைத்த லென்னும் இரண்டனுள் ஒன்றன்றே அயல்வேந்தரோடு செயற்பாலது, இவையன்றித் தான் மெலியனாய்வைத்து அவரோடு பகைகொண்டானுக்கு ஒருபொழுதும் நிலேயின்மையின், விரைந்துகெடுமென்றார். இவையிரண் டோட்டானுந் தன்வலியறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

(தெ-ப-ரை)—ஆங்கு - அயல்வேந்தரிடத்து, அமைந்து - பொருந்தி, ஒழுகான் - நடவாதவனுகியும், அளவு - (தன்வலி) யளவை, அறிபான் - அறியாதவனுகியும், தன்னே வியக்தான் - தன்னேமெச்சிக்கொண்டு (அவரோடுபகைத்த) அரசன், விரைந்து - விரைவாக, கெடும் - கெடுவான்.

நு. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்ட ஞ்
சால மிகுத்துப் பெயின்.

(பரி-ரை.) எ-து,—பீலியேற்றிய சகடமும் அசசுமுறியும், அப்பீலியை அது பொறுக்குமளவின்றி மிகுத்தேற்றின், எ-று.

உம்மை சாகாட்டது வலிசிறப்பேயன்றிப் பீலியது கொய்மை சிறப்புந்தோன்ற நின்றது. இருமென்னுஞ்சினவினே முதன்மேனின்றது. எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனே ஆயினும் அவர் தொக்கவழி வலியழியுமென்னும் பொருள்தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழி தலென்னும் அலங்காரம்: இதனே நுவலாநுவற்சி யென்பாரும் ஒட்டென்பாரு மூளர். ஒருவன் தொகுவாபலரோடு பகைகொள்ளற்க வெனறமையின், இதனுன் மாற்றுரன் வலியும் அவன்துணேவலியும் அறியாவழிப்படும் இழுக்குக கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—பீலி - மயிலிறகை, பெய் - ஏற்றிய, சாகாடும் - வண்டியும், அச்சு இறும் - இறுகமுறியும், அப்பண்டம் - அம்மயிலிறகை, சாலமிகுத்து - (அதுசுமக்குமளவினல்லாமல்) மிகவும் அதிகப்படுத்தி, பெயின் - ஏற்றினுல்.

சு. நுனிக்கொம்ப ரேறினு ரஃகிறக் தூக்கி
னுயிர்க்கமுகி யாகி விடும்.

(பரி-ரை.) எ-து,—ஒருமரக்கோட்டினது நுனிக்கண்ணே ஏறினின் ரூர் தம்மூக்கத்தால் அவ்வளவினைக் கடந்து மேலும்ஏற வூக்குவராயின் அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாய் முடியும், எ-று.

நுனிக்கொம்பரென்பது கடைக்கனென்பதுபோலப் பின்முன்னுகைத் தொக்க ஆரும் வேரு முமைத்தொகை. பன்மை அறிவின்மைபற்றி இழித் தற்கண வந்தது. இறுதிக்கேதுவாவதனை இறுதியென்ரூர். பகைமேற் செல்வான் தொடங்கித் தன்னூர் செல்லலாமளவுஞ் சென்று நின்ரூன் பின் அவ்வளவில் நில்லாது மனவெழுச்சியான் மேலுஞ்செல்லுமாயின், அவ்வெ ழுச்சி வினைமுடிவிற் கேதுவாகாது அவன் உயிராமுடிவிற்கேதுவாமென்னும் பொருள்தோன்றநின்றமையின், இதுவும மேலே அலங்கா ம். அளவறிந்து நிற்றல்வேண்டி மென்றமையின், இதனுல் வினைவலி யறியாவழிப்படும் ழக்குக் கூறப்பட்டது.

-ப-ரை.)—நொம்பர் - (ஒருமரக்) கொம்பினது, நுனி - நுனியில், ஏறினர் - ஏறினர்போல், அஃது - (தம்வலிமையால்) அவ்வளவினை, இங்கு - கடந்து, ஊக்கின் - மேலும் ஏறவலிமை கொள்வாராயின், உயிர்க்கு - அவ்வலிமை அவர்) உயிர்க்கு, இறுதி யாகிவிடும் - முடிவாக

எ. அற்றறி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி

(பரி-ரை.) எ-து,—ஈயுநெறியாலே தமக்குள்ள பொருளின் எல்லே யையறிந்து அதற்கேற்ப ஈக; அங்ஙனமஈதல் பொருளோப் பேணிக்கொண் டொழுகும் நெறியாம், எ-று.

ஈயும்நெறி மேல் இறைமாட்சியுள் ※ "வகுத்தலும் வல்லதரசு" என்புழி உரைத்தாம். எல்லேக்கேற்ப ஈலவாவது ஒன்றுனவெல்லேயை நான்கு கூறுக்கி, அவற்றுள் இரண்டனேத் தன்செலவாக்கி, ஒன்றனே மேல் இடர்ந் தழி அது நீக்குதற்பொருட்டு வைப்பாக்கி, நின்றவொன்றனேயீதல் பிறரும் † "வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்" என்ரூர். பேணிக்கொண் டொழுகுதல் - ஒருவரோடு நட்பிலாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொண்டொழுகுதல். முதலிற்செலவு சுருங்கிற் பொருள் ஒருகாலும் நீயகா தென்பதாம்.

※ கூஅரி-ம் குறளுரையிற் காணுக.

† வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருமாயப்பர் உசெய்தலை நாடார்சிறப் புடைமை. மெய்ந்நப் - பலகாடி நல்லலை சற்றலிம்மூனறு - கலபாட்டி நல்லலர் கோள் - நிரிகடிதம், உ.

(தெ - ப - ரை)—ஆற்றின் - (கொடுக்கும்) வழியினாலே, அளவு - (தனக்குள்ள பொருளின்) அளவை, அறிந்து - தெரிந்து, ஈக - (அதற்கு ஏற்கக்) கொடுக்கக்கடவன், அது - அக்கொடுத்தலானது, பொருள் - பேரூளை, போற்றிவழங்கும்நெறி - காப்பாற்றிக்கொண்டு நடக்கும் வழியாம்.

அ. ஆகா தளவிட்டி தாயினுங் கேடில்லைப்
போகா றகலாக் கடை

(பரி-ரை.) எ-து,—அரசர்க்குப் பொருள்வருகின்ற நெறியளவு சிறிதாயிற்றாயினும் அழிதற் கேடில்லையாம், போகின்ற நெறியளவு அதனிற் பெருகாதாயின், எ-று

இட்டிதெனவும் அகலாதென வும் வந்தபண்பின்தொழில்கள் பொருண்மேனின்றன. பொருளென்பது அதிகாரத்தான் வருவித்து, அளவென்பது பின்னுங்கூட்டி உரைக்கப்பட்டன. முதலுஞ் செலவுந் தம்முள் ஒப்பினுங் கேடில்லையென்பதாம்.

(தெ - ப - ரை.)—ஆகுஆறு - (அரசனுக்குப்பொருள்) வருகின்றவழியானது, அளவு - அளவினால், இட்டிதுஆயினும் - சிறிதாயிருந்தாலும், கேடு இல்லை - (அதனால்) கெடுதல் இல்லை, போகு - ஆறு - போகின்றவழி, (அளவு) - அளவினால், அகலாக்கடை - (அதனில்) அதிகப்படாதாயின்.

கூ. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாக்கித் தோன்றுக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப வாழாமாட்டாதான் வாழ்க்கைகள் உள்ளனபோலத் தோன்றிமெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அதுதோற்றமும் இன்றிக் கெட்டுவிடும், எ-று.

அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது அதனிற் சுருங்கக்கூடாதாயின் ஒக்கவாயினும் சுத்துந் துப்புந் வாழ்தல். தொடக்கத்திற் கேடு வெளிப்படாமையின், உளபோலத் தோன்றியென்றார். முதலிற்செலவு மிக்கால்வரும் எதங் கூறியவாறு.

(தெ - ப - ரை.)—அளவு - (தனக்குள்ளபொருளின்) அளவை, அறிந்து - தெரிந்து, வாழாதான் - (அதற்கேற்ப) வாழாமாட்டாதவனது, வாழ்க்கை - வாழ்க்கைகளான வை, உளபோல - உள்ளவைபோலத் (தோன்றி), இல்லாகி - (மெய்ம்மையால்) இல்லை

பாதி, தோன்று - (பின்பு) அத்தோற்றமும் இல்லாமல், கெடும் - ம்.

கo. உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—தனக்குள்ள அளவு தூக்காமைக் கேதுவாய ஒப்புர வாண்மையால் ஒருவன் செல்வத்தினெல்லே விரையக் கெடும், எ-று.

ஒப்புரவேயாயினும் மிகலாகாதென்றமையான், இதுவுமது. இவை ரண்குபாட்டானும் மூவகையாற்றலுள் செருமையின் பகுதியாய பொருள்வலி பறிதல் நிறப்பு நோக்கி வகுத்துக் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—உளவரை-(தனக்கு) உள்ள பொருளினள வை, தூக்காத - ஆராயாமற்கேதுவாகிய, ஒப்புரவுஆண்மை - உப காரமுடைமையால். வளவரை - (ஒருவனது) செல்வத்தினளவு, வல் லைக்கெடும் - விரைவாகக்கெடும்.

சகூம் அதிகாரம்—காலமறிதல்.

அஃதாவது வலியான் மிகுதியுடையனுப்ப் பகைமேற்சேறலுற்ற அரசன் ச்செலவிற்கேற்ற காலத்தினையறிதல், அதிகாரமுறைமையும் இதனினே னங்கும்.

க. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(பரி-ரை.) எ-து,—தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழு ர்கண் வெல்லாநிற்கும்; ஆதலால், பகைவரது இகலே வெல்லக் கருதும்அர சர்கு அத்தற்கேற்ற காலம் இன்றியமையாது, எ-று.

எடுத்துக்காட்டுவமை. காலமல்லாவழி வலியாற் பயனில்லேயென்பது க்கி நின்றது. இனிக் காலமாவது வெம்மையுங் குளிர்ச்சியுந் தம்முள் ஒ நோய்செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய வுடைத்தாய்த்தானே ர்தாது செல்லும் இயல்பினதாம். இதனுற் காலத்தது நிறப்புக்கூறப்பட்ட .

(தெ - ப - ரை.)—காக்கை - காக்கையானது, கூகையை - ரீனைப்பார்க்கிலும் வலிதாகிய) கோட்டானை, பகல்-பகற்பொழு , வெல்லும்-செயிக்கும், (ஆதலால்), இகல் - பகைவரை, வெல்

லும் - வெல்லக்கருதுகின்ற, வேந்தர்க்கு - அரசர்க்கு, பொழுது வேண்டும் - (அதற்கேற்ற) காலம் வேண்டும்.

உ. பருவத்தோ டொட்ட வொழுக லிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

(பரி-ரை.) எ-து,—அரசன் காலத்தோடு பொருந்த வினைசெய் தா ஒழுகுதல் ஒருவர்கண்ணும் நில்லாது நீங்குஞ்செல்வத்தைத் தன்கண் நீங்காமற் பிணிக்குங்கயிறும், எ-று.

காலத்தோடுபொருந்துதல்—காலந்தப்பாமற்செய்தல். தீராமையென்ற தனால், தீர்ந்தாலெய்துமென்பது பெற்றாம். வினை வாய்த்துவருகலான் அதனின் ஆகுஞ் செல்வம் எஞ்ஞான்றும் நீங்காதென்பதாம்.

(தே - ப - ரை.)—பருவத்தோடு ஒட்ட - (அரசன்) காலத்தோடுபொருந்த, ஒழுகல் - (தொழில்செய்து) நடக்கல், இருவினை - (ஒருவரிடத்தும் நில்லாதுநீங்குஞ்) செல்வத்தை, தீராமை - (தன்னின்) நீங்காமல், ஆர்க்கும் - கட்டுவதாகிய, கயிறு - கயிறாகும்.

ங. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

(பரி-ரை.) எ-து,—அரசரால் செய்தற்கரிய வினைகளென்று சொல்லப்படுவன உளவோ, அவற்றை முடித்தற்கு ஆம் கருவிகளுடனே செய்தற்கு ஆங காலம் அறிந்து செய்வராயின், எ-று.

கருவிகளாவன —மூவகையாற்றலும் நால்வகை உபாயங்களுமாம். அவை உளவாயவழியுங் காலம் வேண்டுமென்ப தறிவித்தற்கு, கருவியாலென்றார். எல்லாவினையும் எளிதின்முடியுமென்பதாம்.

(தே - ப - ரை.)—கருவியால் - (முடித்தற்கு அமைந்த) காரணங்களுடனே, காலம் - (செய்தற்குஆகும்) காலத்தையும், அறிந்து - தெரிந்து, செயின் - செய்வாராயின், அருவினைஎன - (அரசரால்) செய்தற்குஅரிய தொழில்களென்று சொல்லப்படுவன, உளவோ - உண்டோ.

ச. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

அதிகாரம் அறிதல்

(பரி-ரை.) எ-து,—ஒருவன் ஞாலமுழுதுந் தானே ஆளக் கரு யினும் அஃது அவன் கையகத்தாம். அதற்குச்செய்யும் வினையைக் கால மறிந்து இடத்தோடு பொருந்தச செய்வனாயின், எ-று.

இடத்தானென்பதற்கு மேற்கருவியா னென்பதற்கு உரைத்தாங்குரை க்க. கைகூடாதனம் கைகூடுமென்பதாம். இவை மூன்றுபாட்டானுங் கால மறிதற்பயன் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—காலம் - காலத்தை. கருதி - அறிந்து, இடத் தால் - இடத்தோடுபொருந்த, செயின் - (அதற்காகச்செய்யுந் தொழிலைச்) செய்வானாயின், ஞாலம் - (ஒருவன்) பூமிமுழு தையும், கருதினும் - (தானே ஆள) நினைத்தானும், கைகூடும் - (அது) அவன் கைக்குள் இருந்ததாம்

நி. காலங் கருதி யிருப்பா கலங்காது
ஞாலங் கருதுபவர்.

(பரி-ரை.) எ-து,—தப்பாது ஞாலமெல்லாங் கொள்ளக் கருதும் அர சர்தம் வலிமிகும் ஆயினும் அது கருதாது அதற்கேற்ற காலத்தையே கருதி அதுவருந்துணையும் பகைமேற் செல்லார், எ-று

தப்பாமை - கருதியவழியே கொள்ளுதல். வலிமிகுதி காலங்கருதியென் றதனுற் பெற்றும். அதுகருதாது செல்லின் இருவகைப்பெருமையுங் கேய்த் துருத்தும் உறுவராகலின், இருப்பரெனவுரை. இருத்தலாவது கட்பாக்கல், கையாக்கல். மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்னும் அறு வகைக்குணங்களுள் மேற்செலவிற்கு மாறாயது. இதனுற் காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது

(தே-ப-ரை)—கலங்காது - தப்பாமல், ஞாலம் - பூமிமுழு தையும், கருதுபவர் - (கைக்கொள்ள) நினைக்குமரசர், காலம் - தம்வலி மிகுமாயினும் அதைநினையாமல் அதற்கேற்ற) காலத் தையே, கருதி - நினைத்து, இருப்பர் - (அதுவருமளவும் பகை மற்செல்லாது) காத்திருப்பர்

கூ ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து

(பரி-ரை.) எ-து,—வலிமிகுதியுடைய அரசன் பகைமேற்செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு பொருகின்ற தகர் தன்பகை கெடப்பாய் தற்பொருட்டு பின்னே கால்வாங்குந் தன்மைத்து; எ-று.

உவமைக்கண் தாக்கற் கென்றதனால், பொருளினும் வென்றியெய்தற் பொருட்டென்பது கொள்க. இதனால் அவ்விருப்பின் சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—ஊக்கமுடையான்-மிகுந்த வலிமையுடைய அரசன். ஒடுக்கம் - (பகைமேற்செல்லாது) காலம்பார்த்திருக்கின்ற இருப்பு, பொருதகர் - சண்டைசெய்கின்ற ஆட்டுக்கடா. தாக்கற்கு-(தன்பகைகெடப்) பாய்தற்பொருட்டு, பேருதகைத்து - பின்னே கால்வாங்கிப்போம் தகைமைத்து

எ. பொள்ளென வாங்கே புறம்மேவார் காலம்பார்த்
துள்ளேர்ப்ப ரொள்ளி யவர்.

(பரி-ரை.) எ-து,—அறிவுடைய அரசர் பகைவர் மிகைசெய்த பொழுதே அவரறியப் புறத்து வெகுளார்; தாம் அவரை வெல்லுதற்கேற்ற காலத்தினை யறிந்து அது வருந்தினையும் உள்ளே வெகுள்வர், எ-று

பொள்ளெனவென்பது குறிப்புமொழி. வேரார் வேர்ப்பரெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். அறிவு வெருண்டுழித் தம்மைக் காப்பர் ஆகலிற் புறம்மேவாரென்றும், வெருளிஒழிந்துழிப் பின்னும் மிகை செய்யாமலடக்குதல் கூடாமையின் உள்ளேர்ப்பரென்றும் கூறினர்.

(தே - ப - ரை)—ஒள்ளியவர் - அறிவுடைய அரசர், ஆங்கே - (பகைவர் குற்றஞ்செய்த) அப்பொழுதே, பொள்ளென - (அவரறிய) விரைவாக, புறம்மேவார் - புறத்தில் கோபஞ்செய்யார், காலம்-(அவரை வெலலுதற்கேற்ற) காலத்தை, பார்த்து - அறிந்து, உள்ளேர்ப்பர் - உள்ளேகோபங்கொண்டிருப்பர்.

அ. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

(பரி-ரை.) எ-து,—தாம் வெல்லக் கருதிய அரசர் பகைவர்க்கு இறுதிக் காலம் வருந்தினையும் அவரைக் கண்டாற்பணிக; பணியவே, அக்காலம் வந்திறும்வழி அவர் தகைவின்றி இறுவர், எ-று.

பகைமை ஒழியும் வகை மிகவுந்தாழ்கவென்பார் சுமக்கவென்றும், அங்ஙனந் தாழவே அவர் தம்மைக் காத்த லிகழ்வராகலின் தப்பாமற் கெடுவரென்பார் அவர்தலை கீழாமென்றும் கூறினர். தலைமேற்கொண்ட தொரு பொருளைத் தன்ஞங்கால் அது தன்தலை கீழாக விழுமாகலின், அவ்வியல்பு பெறப்பட்டது. இவை யிரண்டுபொட்டானும் இருக்கும்வழிப்பகைமை தோன்றும லிருக்கவென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—செறுஞரை - (வெல்லக்கருதியஅரசர்) பகை வரை, காணின் - கண்டால், சுமக்க - (அவர்க்கு முடிவுகாலம் வரு மளவும்) பணியக்கடவர், இறுவரைகாணின் - அக்காலம் வந்து முடியுமிடத்து, தலை - (அவரது) தலை, கிழக்காம் - கீழ்விழும்.

கூ. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செல்தற் கரிய செயல்.

(பரி-ரை.) எ- ற,—பகையை வெல்லக்கருதும்அரசர் தம்மாலெய்துதற் கரிய காலம் வந்துகூடியக்கால், அதுகழிவதற்கு முன்பே அது கூடாவழித் தம்மாற் செய்தற்கரிய வினைகளைச செய்க, எ-று.

ஆற்றன்முதலியவற்றுற் செய்துகொள்ளப்படாமையின் எய்தற்கரிய தென்றும், அது தானேவந் தியைதல் அரிதாகலின் இயைந்தக்காலென்றும், இயைந்தவழிப் பின்னில்லாது தடுத்தலின் அந்நிலையேயென்றும், அது பெரு வழிச செய்யப்படாமையின் செய்தற்கரியவென்றும கூறினர். இதனாற் காலம் வந்துழிவீரைந்து செய்கவென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—எய்தற்குஅரியது - (பகையைவெல்லக்கரு தும் அரசர்தம்மாலே) பெறுதற்கரியகாலம், இயைந்தக்கால் - வந்து கூடியக்கால், அந்நிலையே - அது நிற்குமளவிலே, செய்தற்குஅரிய - (அக்காலம் வாராதற்குமுன்னே) செய்தற்கு அரியனவாயிருந்த தொழில்களை, செயல் - செய்யக்கடவர்.

கஎ கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

(பரி-ரை.) எ-து.—வினைமேற் செல்லாநிருக்குங்காலத்துக் கொக்கு நக்குமாறுபோல இருக்க; மற்றைச செல்லுங்காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறுபோலத் தப்பாமற்செய்து முடிக்க, எ-று.

மீன்கோடற்கு இருக்கும் வழி அது வந்தெய்துங்காலும் முன்னறிந்து தப்பாமற்பொருட்டு உயிரில்லது போன்றிருக்கும் ஆகலானும், எய்தியவழிப் பின்தப்புவதற்கு முன்பே விரைந்து குத்தும் ஆகலானும், இருப்பிறகுஞ் செயலிற்கும கொக்கே உவமையாயிற்று. கொக்கொக்க வென்றாராயினும் அது கூம்புமாறுபோலக் கூம்புகவென்றும், குத்தொக்க வென்றாராயினும் அது குத்துமாறுபோலக் குத்துகவென்றும் உரைக்கப்படும், இது தொழில் உவமமாகலின். உவமைமுகத்தால் இருப்பிற்குஞ் செயலிற்கும் இலக்கணங் கூறியவாறுயிற்று.

(தே - ப - ரை.)—கூம்பும்பருவத்து - தொழின்மேற்செல்லா திருக்கவேண்டுங்காலத்தில், கொக்கொக்க - கொக்கு இருப்பது போல் இருக்கக்கடவன்; மற்றுச்சீர்த்தவிடத்து - மற்றைச் (செல் லுங்காலம்) வாய்த்தவிடத்து, அதன்குத்தொக்க - அது தப்பாமற் குத்திக்கொள்வதுபோலத் தப்பாமற்செய்து முடிக்கக்கடவன்.

ஐ0-ம் அதிகாரம்—இடனறிதல்.

அரசனது வலியும காலமும் அறிந்து பகைமேற் செல்வான் தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினை அறிதல். அதிகாரமுறைமையும் இதனினே

க. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

(பரி-ரை.) எ-து,—பகைவரை முற்றுதற்காகதோரிடம் பெற்றபின் அல்லது அவர்மாட்டு யாதொரு வினையையுந் தொடங்காதொழிக; அவரைச் சிறியரென் றிகழாதொழிக, எ-று.

முற்றுதல்-வளைத்தல். அதற்காம் இடமாவது வாயில்களானும் நூழில்க ளானும் அவர் புகலொடு போகொழியும்வகை அரணினைச சூழ்ந்து ஒன்றற் கொன்று துணையாய்த் தம்மூள் நலிவிலாத பலபடை யிருப்பிற்கும மதிலும் அகழு முதலிய அரணசெய்யப்பட்ட அரசிருப்பிற்கும் ஏற்ற நிலக்கிடக்கையும் நீருமுடையது. அது பெற்றால் இரண்டினு செய்க வென்பதாம்.

(தே - ப - ரை.)—முற்றும் - (பகைவரை) வளைத்துக்கொள்வ தற்கான, இடம் - நிலத்தை; கண்டபின் அல்லது - பெற்றபின் பன்றி, எவ்வினையும் - (அவரிடத்து) யாதொரு தொழிலையும், தொடங்கற்க - தொடங்காதிருக்கக்கடவர்; எள்ளற்க - (அவரைச் சிறியரென்று) இகழாதிருக்கக்கடவர்.

உ. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுக் தரும்

(பரி-ரை) எ-து,—மாறுபாட்டோடு கூடிய வலியினை உடையார்க்கும் அரணைசசேர்ந்து ஆகின்ற ஆக்கம் பலபயன்களையுங்கொடுக்கும், எ-று.

மாறுபாடாவது ஞாலம் பொதுவெனப் பொரு அரசர் மனத்தின்கண் நிகழ்வ தாகலானும், வலியுடைமை கூறியவதனானும், இது பகைமேற்சென்ற

அரசர்மேற்ருயிற்று. உம்மை சிறப்பும்மை. அரண்சேர்ந்தா மாக்கமும் உண்மையின், ஈண்டரக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றது அதற்கேதுவாய மூற்றினை. அது கொடுக்கும் பயன்களாவன பகைவரால் தமக்கு கலிவின்மையும், தாம் சிலேபெற்றுன்று அவரை கலிதலும் முதலாயின.

(தெ - ப - ரை)—மூரண் - மாறுபாட்டை, சேர்ந்த - அடைந்த, மொய்ம்பினவர்க்குந் - வலிமையை யுடையவருக்கும், அரண் சேர்ந்த - அரணைச்சேர்ந்து, ஓம் - ஆகின்ற, ஆக்கம் - பெருக்கமானது, பலவும் - பலபயன்களையும், தரும் - கொடுக்கும்.

ந ஆற்றுரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றுர்கட் போற்றிச் செயின்.

(பரி-ரை) எ-து—வலியர் அல்லாதாரும் வலியராய் வெல்வர், அதற்கேற்ற இடத்தினையறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாட்டு வினை செய்வராயின், எ-று.

வினையென்பதூஉம் தம்மையென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. காத்தல் - பகைவரான் கலிவு வாராமல் அரணும் படையாலுங்காத்தல். இவ்வாற்றான் வினைசெய்வராயின் மேற்சொல்லிய வலியின்றியும் வெல்வரென்பதாம்.

(தெ - ப - ரை.)—இடன் அறிந்து - (வெல்லுதற்குரிய) இடத்தை அறிந்து, போற்றி - (தம்மைப்) பாதுகாத்துக்கொண்டு, போற்றுர்கண் - பகைவரிடத்து. செயின் - (தொழிலைச்) செய்வாராயின், ஆற்றரும் - வலியில்லாதவரும், ஆற்றி - பலமுடையவராகி. அடுப - வெல்லுவர்.

ச. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
தின்னியார் தின்னிச் செயின்.

(பரி-ரை.) எ-து,—தாம் வினைசெய்தற்கேற்ற இடத்தினையறிந்து சென்ற அரசர் அவணைப் பொருந்தின்று அதனைச் செய்வாராயின் அவரை வெல்வதாக எண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை யிழப்பர், எ-று.

அரணென்பது அவாய்நிலையான்வந்தது. எண்ணமென்றது எண்ணப்பட்ட தம்வெற்றியை. அதனையிழப்பரென்றுர். அவர் வினைசெய்யாமல் தம்மைக்காத்தமையின். இதனுல் அவர் பகைவர் தோற்பரென்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் பகைவ ரரணின் புறத்திறுப்பர் அதற்காமிடம் அறிதல் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—இடன் - (தாம்தொழில் செய்தற்கேற்ற) இடத்தை, அறிந்து-தெரிந்து, துன்னியார்-சென்றஅரசர், துன்னி-(அவ்வரணைப்) பொருந்திநின்று, செயின்-(அத்தொழிலைச்) செய்வாராயின், எண்ணியார்-(முன்பு அவரை வெல்ல) எண்ணியிருந்த பகைவர், எண்ணம்-அவ்வெண்ணத்தை, இழப்பர்-இழந்துவிடுவர்.

நி. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற.

(பரி-ரை.) எ-து,—முதலை ஆழமுடைய நீரின்கண்ணேயின் பிறவற்றையெல்லாந் தான் வெல்லாநிற்கும்; அப்புனலின் நீங்குமாயின் அதனைப் பிற வெல்லாம் வெல்லாநிற்கும், எ-று.

எனவே, எல்லாரும் தங்கிலத்து வலியரென்பது கூறப்பட்டது. பிற வென்பது முன்னுங கூட்டப்பட்டது. நிலைப்படா நீரின்கண் பிறவெல்லாம் நிற்றல் ஆற்றுமையின் அவையெல்லாம் முதலைக்கெளியவாம், அவை இயங்குதற்குரிய நிலத்தின்கண் அஃதியங்கல் ஆற்றுமையின் அஃதவற்றிற்கெல்லாம் எளிதாமென்றது, மேற்செல்லும் அரசர் பகைவர் நிற்றல் ஆற்று இடனறிந்து செல்வாயின் அவர்தமக் கெளியராவர் அன்றித் தாம் நிற்றல்ஆற்றுவிடத்துச் செல்வாயின் அவர்க் கெளியராவரென்னும் பொருள்தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னும் அலங்காரம். அவரை அவர் நிற்றல் ஆற்றுவிடத்துச சென்று வெல்கவென்பதாம்.

(தே - ப - ரை)—முதலை - முதலையானது, நெடும்புனலுள் - ஆழமுள்ள நீரிலானுல், பிற - பிறவுயிர்களையெல்லாம், வெல்லும் - வெல்லாநிற்கும்; புனலின் - அந்நீரினின்றும், நீங்கின் - நீங்கினால், அதனை - அம்முதலையை, பிற - பிறவுயிர்களெல்லாம், அடும் - வெல்லும்.

சு. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

(பரி-ரை.) எ-து,—நிலத்தின்கண் ஓடுங் கால்வலிய நெடியதேர்கள் கடலின்கண் ஓடமாட்டா; இனி அக்கடலின்கண் ஓடும் நாவாய்கள் தாமும் நிலத்தின்கண் ஓடமாட்டா, எ-று.

கடலோடாவென்ற மறுதலையடையான் நிலத்தோடுமென்பது வருவிக்கப்பட்டது. கால்வனெடுந்தேரென்பது ஓடுதற்கேற்றகாலும் பெருமையுமுடைய வாயினுமென்பது பட நின்றது. மேற்சென்றூர் பகைவரிடங்களை

அறிந்து அவற்றிற்கேற்ற கருவிகளான் வினைசெய்கவென்பது தோன்றுகின்ற மையின், இதுவும் மேலே அலங்காரமாயிற்று.

(தே - ப - ரை.)— வல்தால் - (நிலத்தில் ஓடுகின்ற) வலிமை ஆகிய உருளைகளையுடைய, தெரிதேர் - பெரிய தேர்கள், உ. ல் - கடலில், ஓ - ஓடமாட்டாவாம்; கடல்ஓடும் - கடலில்ஓடுகின்ற, நாவாயும் - மரக்கலங்களும், நிலத்து-நிலத்தில், ஓடா - ஓடமாட்டா வாம்

எ. அஞ்ராமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்

(பரி-ரை.) எ-து,—பகையிடத்து வினைசெய்யுங் திறங்களையெல்லாம் ஒழியாதெண்ணி அவற்றை அரசர் இடத்தோடு பொருந்த செய்வராயின் அச் செயற்குத் தம்நிண்மையல்லது பிறிதொருதுணை வேண்டுவதில்லை, எ-று.

நிண்ணியாராய் நின்று செய்துமுடித்தலே வேண்டுதலல்லது துணை வேண்டாவென்றார், அவ்வினை தவறுதற் கேதுவின்மையின். இவை மூன்று பாட்டாலும் வினைசெய்தற்காம் இடனறிதல் கூறப்பட்ட. று.

(தே - ப - ரை.) — எஞ்ராமை - (அரசர் பகைவரிடத்துத் தொழில்செய்யும் வித ங்களையெல்லாம்) குறையாமல், எண்ணி - ஆலோசித்து, இடத்தால் - இடத்தோடுபொருந்த, செயின் - செய்வாராயின், அஞ்ராமைஅல்லால் - (அ செய லுக்குத் தமது) கைரியமல்லாமல், துணை - (வேறொரு) துணை, வேண்டா - வேண்டுவதில்லை.

அ. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்த விடும்.

(பரி-ரை.) எ-து,—பெரும்படையுடைய அரசன் எனைசிறுபடையுடை பனைஅழித்தல் கருதி அவன் புகலைசென்று சாருமாயின் அவனுல் தன் பெருமை யழியும், எ-று.

செல்லிடம் - அவனுக்குச் செல்லுமிடம். அழித்தல்விடுமென்பது - எழுக்கிருக்கு மென்றுற்போல ஒரு சொல். ஊக்கத்தின் அழிவு உடையான்மேலேற் றப்பட்டது. தன்படைப் பெருமைகோக்கி இடகோக்காது செல்வனுயின் அஃது அப்படைக் கொருகுகுசென்று வினைசெயல் ஆகாமையான் ஆகப் பயிற் நியின்மையான்ஆக அப்பெருமையாற் பயனின்றித் தானழிந்து விடுமென்ப தாம்.

(தே - ப - ரை.)—உறுபடையான் - பருஞ்சேணையையுடைய அரசன், சிறுபடையான் - சிறியசேணையுடையவனது, செல்லிடம் - செல்லுமிடத்தை, சேரின் - (அவனை அழிக்கவினைத்துச்) சேர்வனாயின், ஊக்கம் - (அவனுள்ளத்தன்) பெருமை, அழிந்துவிடும் - அழிந்துபோம்.

கூ. சிறைகலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத் தோடொட்ட லரிது

(பரி-ரை.) எ-து,— ஆண்மையும் பெருமையுமாகிய ஆற்றலும்உடையர் அல்லராயிலும், வினைக்குரிய மாந்தரை அவருறைகின்ற நிலத்தின் கட்சென்று தாக்குதலரிது, எ-று.

நிலத்தோடென்பது வேற்றுமைமயக்கம். ஆண்மையுடையாரைச சிறுமை கோக்கி இருப்பின்கட்சென்று தாக்கின் அவர் அது விட்டுப்போதற் றுணிவினர் அன்றி+ சாதற்றுணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படை உடையு மென்பதாம்.

(தே - ப - ரை)—சிறைகலனும் - அழித்தற்கு அரியகோட்டையும், சீரும் - பெருமையாகிய வலிமையும், இலர்எனினும் - இல்லாதவராயினும், மாந்தர் - (தொழில் செய்தற்குரிய) மனிதரை, உறைநிலத்தோடு - (அவரது) இருப்பிடத்திற்சென்று, ஒட்டல் - தாக்குதல், அரிது - அரியது.

கo காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

(பரி-ரை.) எ-து,—பாகர்க்கடங்காதுமாய் வேலாட்களைக் கோத்தகோட்டமுமாய களிறுகளை, அவை காலாழும் இயல்பிற்றாய சேற்றுநிலத்துப் பட்டுழி நரி கொல்லும், எ-று.

முகம் —ஆகுபெயர். ஆண்மையும் பெருமையும்உடையாரும் தமக்கேலா நிலத்துச் செல்லின் அவற்றாற் பயனின்றி மிகவும்எளியராம் அழிவதென் பது தோன்ற நீன்றமையின், இ ரவும அவ்வலகாரம். வேலாழ்முகத்த வென்று பாடமோதுவாருமுளர்: வேற்படை குளித்தமுகத்தவாயின் அதுவும் நரியடித்தற்கேதுவாய் முடிதலின், அது பாடம் அன்மையறிக. இவை மூன்று பாட்டானும் பகைவரைச சார்ந்தாராகவிடினும் சார்ந்துழிப் பயம் இழுக்குங் கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—கண்ணஞ்சா - பாகர்க்கு அடங்காதனவும், வேல் ஆள் முகத்த - வேலியுடைய ஆட்களைக் கோத்த கொம்பு

களையுடையனவும்ஆகிய, கள்ளிறு - யானைக்கோ, கால்ஆழ் - கால்புதை கிற இயல்பினதாகிய, களரில் - சேற்றுநிலத்தில் (அகப்பட்ட விடத்து); நரி - நரிகளானவை, அடும் - கொல்லும்.

நீக-ம் அதிகாரம்—தெரிந்துதெளிதல்.

அஃதாவது அமைச்சர் முதலாயினுரைப் பிறப்புக் குணம் அறிவென்பன வற்றையும் செயலேயும் காட்சி கருத்து ஆகமமென்னும் அளவைகளான் ஆராய்ந்து தெளிதல். வல்முதன் முன்னுறறிந்து பகைமேற்செல்வானுக்குத் * தானே வினையுற்றுச செய்தற்பொருட்டும் அறைபோகாமற்பொருட்டும் இது வேண்டுதலின், அவற்றின் பின் வைக்கப்பட்டது.

க. அறம்பொரு ளின்ப முயிரரு நான்கின்
நிறந்தெரிந்து தேறப் படும்.

(பரி-ரை.) எ-து,—அரசனுற் தெளியப்படுவான் ஒருவன், அரமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான்வரும் அசசமும் என்னும் ‡ உபதை நான்கின் நிறத்தான் மனவியல்பு ஆராய்ந்தால் பின்பு தெளியப் படும், எ-று.

அவற்றுள், அறவுபதையாவது புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோன்அன்மையின் இவனைப் போக்கி அறனும் உரிமையுமுடையான் ஒருவனை வைத்தற்கெண்ணம், இதுதான் யாவர்க்கும் இயைந்தது, நின்கருத்து என்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலைவனையும் அவனேடியையத்தாரையும் விட்டு, அவரான் இவ்வரசன் இவரன்மாலியன் ஆகலின் இவனைப்போக்கிக் கொடை யும் உரிமையு முடையான் ஒருவனே வைத்தற்கெண்ணம், இதுதான் யாவர்க்கும் இயைந்தது, நின்கருத்தென்னேயெனச சூளுறவோடு சொல்லு வித்தல். இன்பவுபதையாவது தொன்றுதொட்டு || உரிமையோடு பயின் றுள். ஓர் தவமுதுமகளேவிட்டு, அவளால் உரிமையுள இன்னுள் நின்னைக் கண்டு வருத்தமுறறுக் கூட்டுவிக்கவேணடுமென்று என்னேவிடுத்தாள், அவ ளைக் கூடுவையாயின் நினக்குப் போன்பமேயன்றிப் பெரும்பொருளுங் கைகூடுமெனச சூளுறவோடு சொல்லுவித்தல். அசசவுபதையாவது ஒரு நிமித்தத்தின்மேலிட்டு நமைசசனுல் ஏனையோரை அவன் இல்லின்கண் அழைப்பித்து, இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினுரென்று தான் காவல்செய்து, ஒருவனுல் இவ்வரசன் கம்மைக்கொல்வான் சூழ்கின்றமை

* "தானை" எனனும் பாடம்.
‡ உபதை - தோன்றல்.
|| உரிமை - அரசன்மனேவியர்.

யின் அதனை நாம் முற்படச்செய்து நடக்கினிய அரசனொருவனை வைத்தல், ஈண்டையாவர்க்கும் இயைந்தது, நின்கருதுதென்னையெனச குளுறவோடி சொல்லுவித்தல். இக்ஙானினுக் திரிபிலனுயவழி எதிர்காலத்துக் திரிபில னெனக் கருத்தளவையாற் தெளியப்படுமென்பதாம். * இவ்வடநூற்பொருண மையை யுட்கொண்டு இவரோதியதறியாது பிறரெல்லாம் இதனை உயி ரெச்சமெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத தோன்றியவாறே உரைத்தார்.

(தே - ப - ரை.)—அரசம் - (அரசனுல் சோதிக்கப்படுவான் ஒரு வன்) தருமமும், பொருள் - பொருளும், இன்பம் - காமமும், உயிர் அச்சம் - உயிர்ப்பொருட்டால்வரும் பயமும், நான்கின் - ஆகிய நான்கு தந்திரங்களினுடைய, திறம் - திறத்தினுல், தெரிந்து - (மன நிலை) ஆராய்ந்து, தேறப்படும் - (பிற) தெளியப்படுவான்.

2. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடிப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

(பரி-ரை.) எ-ள்,—உயர்ந்த குடியிற்பிறந்து குற்றங்களினின்று நீங்கி நமக்கு வடி வருந்துகொலென்று அஞ்சாநிற்கும் நாணுடையவன் கண்ணதே அரசனது தெளிவு. எ-று.

குற்றங்களாவன:—மேல்அரசனுக்குச் சொல்லிய வகையாறும், மடி, மறப்பு, பிழைப்பு என்றிவை முதலாயவுமாம். நாண - இழிதொழில்களின் மனஞ்செல்லாமை. இவை பெரும்பான்மையும் தக்கோர்வாய்க் கேட்ட லாகிய ஆகமஅளவையாற் தெரிவன. இந்நான்கும் உடையவனையே தெளிக வென்பதாம்.

(தே - ப - ரை.)—தெளிவு - (அரசரது) தெளிவானது, குடிப் பிறந்து - (உயர்ந்த) குடியிற்பிறந்து, குற்றத்தின் - குற்றங்களினின் றும் நீங்கி, வடி - (நமக்குப்) பழுதுவருமோவென்று, பரியும் - அஞ்சி நிற்கும், நாணுடையான் கட்டே - நாணமுடையவனிடத்ததே.

---

3. அரியகற் ருசற்ருர் கண்ணுங் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

(பரி-ரை.) எ-து,—கற்றற்கரிய நூல்களைக் கற்று மேற்சொல்லிய குற் றங்கள் அற்ருர்மாட்டும் நுண்ணதாக ஆராயுமிடத்து வெண்மையில்லாமை அரிது, எ-று.

* இவ்வுபதேசம் நான்கும் நாணுகையாது அர்த்தசாஸ்திரம் முதலதிகரணம் 10-ம் அத்தி யாயத்திற கூறப்பட்டுளளன.

வெண்மை-அறியாமை; அஃது இவர்மாட்டேதாவது மனத்தது நிலேயா மையான் ஒரோவழியாகலின், தெரியுங்காலென்றார். காட்சியளவையாற் றெரிந்தால் அதுவும் இல்லாதாரே தெளியப்படுவரென்பது குறிப்பெச்சம். இவ்வளவைகளான் இக்குணமுங் குற்றமுந்தெரிந்து குணமுடையாரைத் தெளிகவென்பது இவை மூன்றுபாட்டானுங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அரிய கற்று - (கற்றற்கு) அருமையாகிய நூல்களேக்கற்று, ஆசு - (மூன்சொல்லப்பட்ட) குற்றங்கள், அற் றுக்கண்ணும் - நீங்கவிடத்தும், தெரியுங்கால் - (நுட்பமாக) ஆராயுமிடத்து, வெளிறு - அறிவுமையானது, இன்மை - இல்லா திருக்கை, அரிதே - அரியதே.

ஈ. குணனுடிக் குறறமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்

(பரி-ரை.) எ-து,—குணங்குற்றங்களுள் ஒன்றே யுடையார் உலகத் தின்மையின ஒருவன் குணங்களே ஆராய்ந்து அவைக்குற்றங்களேயும் ஆராய்ந்து பின் அவ்விருபகுதியுள்ளும் மிக்கவற்றை ஆராய்ந்து அவனே அம்மிக்க வற்றுனே அறிக, எ-து.

மிகையுடையவற்றை மிகையென்றார். அவையாவன:—தலேமையான் ஆகப் பன்மையான் ஆக வேர்ந்தன. அவற்றுன் அறிதலாவது குணமிக்கதா யின் வினேகுரியனென்றும், குற்றமிக்கதாயின் அல்லனென்றும் அறிதல் குணமே உடையார் உலகதார்யமாகலின், இவ்வகை யாவரையுந் தெளிக வென்பது இதனுற் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—குணம் - (குணகுற்றங்களில் ஒன்றே யுடை யார் உலகில் இல்லாமையால்) குணங்களே, நாடி - ஆராய்ந்து, குற்றமும் - மற்றைக்குற்றங்களேயும், நாடி - ஆராய்ந்து, அவற்றுள்- (பின்பு) அவ்விருவகையுள்ளும், மிகை - மிகுந்தனவகளே, நாடி - ஆராய்ந்து, மிக்க - மிகுந்தவைகளால், கொளல் - (அவரை) அறி யக்கடவன்.

நி. பெருமைக்கு மேலோச் சிறுமைக்குந் தத்தங்
தருமமே கட்டளேக் கல்.

(பரி-ரை.) எ-து,—பிறப்புக் குணம் அறிவென்பனவற்றுன் மக்கள் எய்தும் பெருமைக்கும் மற்றைச்சிறுமைக்கும் உரைகல்லாவது தாம் தாம் செய்யுங் கருமமே, பிழையில்லே, எ-து.

உசசு நீங்கம் அதி. தெரிந்துதெளிதல்

இஃது எதேச்சாருவகம். மக்களது பெருமையும் சிறுமையும், தப்பாமல் அறியலுறுவார்க்குப் பிறகருவிகளும் உளவாயினும், முடிந்தகருவி செயலென்பது தேற்றேகாரத்தாற் பெற்றும். இதனுற் குணங்குற்றங்கள் நாடற்குக் கருவி கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—பெருமைக் குற்-(குடிப்பிறப்புக்குணம் அறிவு என்பவற்றுல் மனிதரடையும்) பெருமையாகிய பொன்னின் மாற்றறிதற்கும், ஏனைச்சிறுமைக்கும் - மற்றைச்சிறுமையாகிய பொன்னின்மாற்றறிதற்கும், கட்டளைக்கல - உரைகல்லாவது, தம் தம்கருமமே - தங்கள்தங்கள் செயல்களேயாம்.

கூ. அற்ருரைத் தீதறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி.

(பரி-ரை.) எ-து,—சுற்றமில்லாதாரைத் தெளிதலேயொழிக; அவர் உலகத்தோடு தொடர்பிலர் ஆகலான் பழிக்கஞ்சார், எ-று.

பற்றிலரென்பதனுல் சுற்றமென்பது விருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன வொருதற்கும் புகழ்வன செய்தற்கும் எதுவாகிய உலகநடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப்படாரென்பதாம்.

(தே-ப-ரை)—அற்ருரை - சுற்றமில்லாதவரை, தேறுதல் ஓம்புக - தெளிதலொழியக்கடவன், அவர் மற்றப்பற்றிலர் - அவர் உலகத்தோடு சம்பந்தமில ராதலால், பழி - பழித்து, நாணுர் - அஞ்சார்.

வ. காதலமை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.

(பரி-ரை.) எ-து,—அன்புடைமை பற்றுக்கோடாகத் தமக்கறியவேண்டுவன அறியாதாரைத் தெளிதல் அரசனுக்கு எல்லாவறியாமையையுங் கொடுக்கும், எ-று.

தன்னேடு அவரிடைகின்ற அன்புபற்றி அரசன் அறிவிலார்மேல் வினையைவைப்பின், அஃது அவரறிவின்மையாற் கெடும், கெட்டால் அவர்க்குள தேயன்றி வினைக்குரியாரை அறியாமை, மேல்வினைவறியாமை முதலாக அவனுக்கு அறியாமை பலவும் உளவாமென்பதாம்.

(தே-ப-ரை.)—காதன்மை - அன்புடைமையாவது, கந்து ஆக - பற்றுக்கோடாக, அறிவு - (தமக்கு) அறியவேண்டுமவைகளை, அறியார் - அறியாதவரை, தேறுதல் - தெளிதலானது,

பேதைமை எல்லாம் - அரசனுக்கு எல்லா அறியாமைகளையும், தரும் - கொடுக்கும்.

அ. தேரான்பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்

(பரி-ரை) எ-து,—தன்னுடை இயைபுடையன் அல்லாதானைப் பிறப்பு முதலியவற்றினும் செயலாலும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு அத்தெளிவு தன்வழி முழுமையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும், எ-று.

இயைபு-தன் குடியொடு கோடாமை. இதனானே அதுவும் வேண்டு மென்பது பெற்றும். தெளிதல் அவன் திண்மை வினையை வைத்தல். அவ் வினை கெடுதலால் தன்குலத்துப் பிறந்தாரும் பகைவர்கைப்பட்டு ஓழாய் விடுவரென்பதாம். சான்றோருடு விகாரத்தால் ரொக்கது.

(பத-ரை.)—பிறனை - தன்னுடைசம்பந்தம் இல்லாதவனை, தேரான் - (பிறப்புமுதலியவற்றினும் செய்கையாலும்) ஆலோசியாதவனுஞ், தெளிந்தான் - தெளிந்த அரசனுக்கு, (அத்தெளிவு), வழிமுறை - (அவன்) குடிவழிக்கிரமத்தினும், தீரா - நீங்காத, இடும்பை - துன்பத்தை, தரும் - கொடுக்கும்

கூ. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

(பரி-ரை.) எ-து,—யாவரையும் ஆராயாது தெளியாதொழிக; ஆராய்ந்த பின் தெளியும்பொருள்களே ஐயுறுதொழிக, எ-று.

தேறற்கவெனற் பொதுமையான் ஒருவினைக்கண்ணுந் தெளியலாகா தென்பது பெற்றும். ஈண்டுத்தேறுக வென்றது தார்பரியத்தால் ஐயுறவி னது விலக்கின்மேனின்றது. தேறும்பொருளென்றது அவரவர் ஆற்றற் கேற்ற வினைகளே. பொருள்—ஆகுபெயர்.

(தே-ப-ரை)—யாரையும்-யாவரையும், தேராது - ஆரா யாமல், தேறற்க - தெளியாதிருக்கக் கடவன், தேர்ந்தபின் - ஆராய் ந்தபின், தேறும்பொருள் - தெளியும்பொருள்களை, தேறுக - தெளி யக்கடவன்.

கo. தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

உசாஅ நுஉ-ம் அதி. தெரிந்துவினையாடல்

(பரி-ரை.) எ-து,—அரசன் ஒருவனேஆராயாது தெளிதலும் ஆராய்ந்து தெளிந்தவன்மாட்டே ஐயப்படுதலும் இவ்விரண்டும் அவனுக்கு நீங்காத துன் பத்தைக் கொடுக்கும், எ-று.

வினைவைத்தபின் ஒருதலை காணுதலைத்து ஐயுறுமாயின், அகனே அவ னறிந்து இனி இது நில்லாதென்னுக கருத்தான் அவ்வினையை நெகிழ்த்து விடும், அதுவேயன்றிப் பகைவரால் எளிதிற் பிரிக்கவும்படும், ஆகலான் தெளிந்தான்கண ஐயுறவும் ஆகாதாயிற்று. தெளிவிற்கெல்லே கூறியவாறு. இவை ஐந்துபாட்டானும், தெளியப்படாதார் இவரென்பதூஉம், அவரைத் தெளிந்தாற் படும் இழுக்கும், தெளிவிரதலையும், கூறப்பட்டன.

(தே - ப - ரை)—தேராான் - (அரசன்ஒருவனே) ஆராய்ந்தில னாகி, தெளிவுர் - தெளிதலும், தெளிந்தான்கண் - ஆராய்ந்துதெளி யப்பட்டவனிடத்தில், ஐயுறவுர - சந்தேகப்படுதலும், தீரா இடும் பை - (அவனுக்கு) நீங்காத துன்பத்தை. தரும் - கொடுச்சும்

நுஉ-ம் அதிகாரம்—தெரிந்துவினையாடல்

அஃதாவது அதெளியப்பட்டாரை அவர் செய்யவல்ல வினைகளே அறி னை ஆளுந்திறம். அதிகார முறைமையும்

க நண்மையும் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா னளப் படும்.

(பரி-ரை) எ-து,—அரசன் முதற்கண ஒருவினையைத் தன்கணவைத் தால், அவன்கணவனவும் ஆகாதனவும்ஆய செயல்களே ஆராயந்தறிந்து அவற்றுள ஆவனவற்றையே விரும்பிய இயல்பினையுடையான் பின் அவனுற் றெரந்தவினைகளிலே ஆளப்படும், எ-று.

தன்னே உரிமை அறிந்தபொருட்டே அகம்புறமகட்கு நவோயதோர் வினையை அரசன் தன்கணவைத்தவழி அதன்கண ஆம்செயலகளேயே செய் தவன் பின்னும் அவ்வியல்பின ஞதல்பறறி அகமாய வினைக்கணமே ஆளப் படுவனென்பதாயிற்று. புரிந்தவென்ற இறந்தகாலத்தான், முன்உரிமை அறி தற்பொருட்டு வைத்த வினையாதல் பெற்றும்.

(தே - ப - ரை)—நன்மையும்தீமையும்-(அரசன் முதலில்ஒரு தொழிலைக் கொடுத்தால் அதில்) ஆவனவும் ஆகாதனவும் ஆகிய செயல்களை. நாடி - ஆராய்ந்தறிந்து, நலம் - (அவ்வகைளுள்) ஆமவை களையே, புரிந்த - விரும்பிய, தன்மையான் - தன்மையுடையவன், ஆளப்படும் - (பின்பு கிறந்ததொழில்களில் அவன்) ஆளப்படுவான்.

உ. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை

(பரி-ரை.) எ-து,—பொருள் வருகாயில்களை விரியசெய்து அப்பொருளாற் செல்வங்களை வளர்த்து அவ்வாயில்கட்கும் பொருட்குஞ் செல்வங்கட்கும் உற்ற இடையூறுகளை ஈடோறும் ஆராய்ந்து நீக்கவல்லவன் அரசனுக்கு வினைசெய்க, எ-று.

வாயில்களாவன மேல் * இறைமாட்சியுள் இயற்றலும் என்புழி உரைத்தனவும், உழவு, பசுக்காவல், வாணிகமென்னும் † வார்த்தையுமாம். செல்வங்களாவன ஆண்டுப் பொருளும் இன்பமுமாக உரைக்கப்பட்டன. இடையூறுகளாவன அரசன் வினைசெயவார், சூற்றதகார், பகைவர், கள்வரென்று இவரான் வரும் கலிவுகள்.

(தே - ப - ரை.)—வாரி - (பொருள்கள்) வரும்வழிகளை, பெருக்கி - விரியச்செய்து, வளம்படுத்து - (அப்பொருள்களாலே) செல்வங்களைவளர்த்து. உற்றவை - (அவ்வரும்வழிகளுக்கும் பொருள்களுக்கும் செல்வங்களுக்கும்) வந்த இடையூறுகளை, ஆராய்வான் - (தினந்தோறும்) ஆராய்ந்து நீக்கவல்லவன், வினை - தொழிலை, செய்க - (அரசனுக்குச்) செய்யக்கடவன்

ஈ. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

(பரி-ரை.) எ-து,—அரசன்மாட்டன்பும் அவனுக்காவன அறியுமறிவும் அவை செய்தற்கட் கலங்காமையும் அவற்றுற் பொருள் கையுற்றவழி அதன்மேல் அவாவின்மை முமாகிய இந்நான்கு குணங்களையும் நிலைபெறவுடையான் மேலதே வினையைவிட்டிருக்குந் தெளிவு, எ-று.

இந்நான்கு நன்குடைமை இவன் செய்கின்ற வினைக்கண் யாதும் ஆராய வேண்டுதலில்லையென்று அரசன் தெளிதற்கேதுவாகலின், அவனே அதன் பிறப்பிடனுக்கிக் கூறினர். இவை மூன்றபாட்டானும் ஆடற்குரியாளது இலக்கணங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அன்பு - (அரசனிடத்து) அன்பும், அறிவு- அவனுக்கு ஆவனவற்றை அறியும்) அறிவும், தேற்றம் - (அவை ஊசச் செய்யுமிடத்து) மனங்கலங்காமையும், அவா இன்மை - அவற்றால் பொருள் கைகூடியவழி அதன்மேல்) ஆசை இல்லாமை

* திருக்குறள்—கூஅடு.

‡ வார்த்தை—வாழ்தி, தொழில்,

யும், இக்நான்கும் - ஆகிய இக்நான்கு குணங்களையும், நன்கு உடையான்கட்டே - நிலையாக உடையவனிடத்தில், தெளிவு - (தொழிலில்விட்டிருக்கும்) தெளிவு

ச எனைவகையாற் றேறிய்க் கண்ணும் வினைவகையான்
வேருகு மாந்தர் பலர

(பரி-ரை.) எ-து,—எல்லாவகையானும் ஆராயாது தெளிந்து வினை வைத்த பின்னும் அவ்வினையின இடல்பானே வேறுபடுமாந்தர் உலகத்துப் பலர், எ-று.

* கட்டியங்காரன்போல அரச இன்பத்தினை வெஃகி விகாரப்படுவதல்லது அத்தனை குற்றமென்றெழுதாது தம்மிபலபி னிறபா அரியராகலின், வேருகுமாந்தர பலரென்றார். வினைவைப்பதற்முன் எல்லாக குணங்களும உடையாரை வைத்தபின் விகாரப்படுவாரை இடையாயதொரு வினையைவைத் தறிந்து ஒழிக்க வென்பதாம. இதனுன் ஒருவகையா லொழிக்கப்படுவார் இவரென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—எனை வகையால் - எல்லாவகைகளாலும், தேறியக்கண்ணும் - ஆராய்ந்துதெளிந்து தொழிலே வைத்த பின்னும், வினைவகையான - அத்தொழிலின் நன்மைமிஞ்சிலு, வேறு ஆகும் - வேறுபடுகின்ற, மாந்தர் - மனிதர், பலர் - (உலகத்தில்) பலர்

ஞ அறிந்தார் நிச் செய்கிற்பார் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

(பரி-ரை.) எ-து,—செய்யும உபாயங்களே அறிந்து செயலானும் இடையூறுகளானும் வருந்துன்பங்களைப் பொருந்து முடிவுசெய்ய வல்லானே அல்லது வினைதான் இவன் நம்மாட்டி அன்புடையனென்று பிறனொருவனே யேவும் இயல்புடைத்தன்று, எ-று.

செயகிறபாற்கென்பது வேற்றுமைமயக்கம். அறிவாற்றல்களான் அல்லது அன்பான் முடியாதென இதனுல் வினையினது இயல்பு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வினைதான் - தொழில்தான், அறிந்து-(செய்யும் உபாயங்களை) அறிந்து, ஆற்றி - (செயலானும் இடையூறுகளாலும் வருந்துன்பங்களைப்) பொறுத்து, செய்கிற்பாற்கு அல்லால்-

---

கட்டியங்காரன் ஜீவகசிந்தாமணியிற கூறப்படும சசசந்தனெனனும் அரசனுடைய மந்திரி,

(முடிவு) செய்யவல்லவனுக்கு அல்லது, சிறந்தான் என்று - (இவன் கம்மிட்டத்தி) அன்புடைபவனென்று, ஏவல்பாற்று அன்று - (வேறொருவனை) ஏவுதற்றன்மையை உடையதன்று.

கூ. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

(பரி-ரை.) எ-து,—முதற்கண்ணே செய்வானது இலக்கணத்தை ஆராய்ந்து பின் செய்யப்படும வினையினது இயல்பை ஆராய்ந்து பின் அவனையும் அதனையுங காலத்தோடுபொருந்தஅறிந்து அவனை அதன்கண் ஆட்சேசெய்க, எ-று.

செய்வானது இலக்கணமும் வினையினது இயல்பும் மேலேகூறப்பட்டன. காலத்தோடெய்த வுணர்தலாவது இக்காலத்து இவ்விலக்கண முடையான் செய்யின் இவ்வியல்பிற்றாய வினை முடியுமென்று கூட்டியுணர்தல்.

(தே - ப - ரை.)—செய்வானை - (முன்னே) செய்பவனிலக்கணத்தை, நாடி - ஆராய்ந்து, வினை - பின்னைசெய்யப்படுந) தொழினியலபை, நாடி-ஆராய்ந்து, காலதோடு - (பின்பு அவனையும் அத்தொழிலையும்) காலதுடனே சேர்ந்து, எய்த - பொருந்த, உணர்ந்து - அறிந்து, செயல - அவனை அத்தொழினிடத்து [illegible]

ஙா இதனை யிதனு மிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண விடல

(பரி-ரை.) எ-து,—இவ்வினையை இக்கருவியால் இவன முடிக்கவல்லனெனக் கூறுபடுத்த ஆராயந்து, முன்னுங் தமமுள் இயைந்தவழ் அவ்வினையை வன்கணனே விடுக, எ-று

கருவி-துணைவரும் பொருளும் முதலாயின. வினை முதலும் கருவியும் தமமுள் இயைதலாவது ஒன்றோடு ஏனைய இரண்டற்கும் பாருத்தமுண்டாதல். விடுதல் - அதற்கு அவனை உரியனாக்குதல்.

(தே - ப - ரை.)—இதனை - இத்தொழிலை, இதனால் - இந்தக் காரணத்தால், இவன்முடிக்கும்என்று - இவன் முடிக்கவல்லவனன்று, ஆய்ந்து - (பகுத்து) ஆராய்ந்து, அதனை - (இம்மூன்றும் தமமுள் ஒத்திருந்தவிடத்து) அத்தொழிலை, அவன்கண் - அவனித்தை, விடல் - விடுக்கடவன்.

நீஉ-ம் அதி. தெரிந்துவினையாடல்

அ. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற் குரியனாகச் செயல்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனை அரசன் தன்வினைசெய்தற் குரியனாக ஆராய்ந்து துணிந்தால், பின் அவனை அதற் குரியனுமாறு உயரசெய்க, எ-று.

உயரசெய்தலாவது அதனைத் தானே செய்து முடிக்கும் ஆற்றலுடையானாக்குதல். அது செய்யாக்காலுங் கெடுமென்பது கருத்து.

(தே - ப - ரை)—உரிமை - (ஒருவனை அரசன்) தன்தொழில் செய்தற்கு உரியனாயிருக்கையை, நாடியபின்றை - ஆராய்ந்து துணிந்தபின்பு, அவனை அதற்கு - அவனை அத்தொழில்செய்தற்கு, - உரியவனாக, செயல் - (உயரச்) செய்யக்கடவன்.

கூ. வினைக்கண் வினைப்புடையான் கேண்மைமே லுலக
நினைப்பானை நீங்குந் திரு.

(பரி-ரை.) எ-து,—எப்பொழுதுந் தன்வினையின்கண்ணே முயறலை யுடையான் அவ்வரிமையாற்றனக்குக் கேளாய ஒழுகுகின்ற தன்மையை அது பொருதா சொற்கேட்டு அரசன் மாறுபடக் கருதுமாயின், திருமகள் அவனை விட்டுநீங்கும், எ-று.

மேளாயொழுகுகின்ற தன்மையாவது தான் பிறனுய் நில்லாது கேளிர் செய்யும் உரிமையெல்லாஞ் செய்தொழுகுதல். அவனை அமைதிப்பாகக் கொண்டு சேறக்கருதுமாயின் பின் ஒருவரும் உட்பட்டு முயல்வாரில்லையாம் ஆகலே, தன்செல்வ ங் கெடுமென்பது கருத்து. இக்நான்குபாட்டானும் ஆள் தற்குரியானை அளந்தறிதல கூறப்பட்டது.

(தே - ப - ரை)—வினைக்கண் - (தன்) தொழிலினிடத்தே, வினைபுடையான் - (எப்போதும்) முயற்சியையுடையவன், (அவ் வுரிமையால்), கேண்மை - (தனக்குச்) சுற்றமாய் நடக்கின்ற தன் மையை, வேறுஆக - (அதுபொருதவரது சொல்லைக்கேட்டு) மாறு பட, நினைப்பானை - நினைக்கும் அரசனை. திரு - திருமகள், நீங்கும் - விட்டுநீங்குவாள்.

கo. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு

(பரி-ரை.) எ-து,—வினைசெய்வான் கோடாதொழிய உலகு கோடாது; ஆதலான், அரசன் அவன்செயலை நாள்தோறும் ஆராய்க, எ-று.

அஃதொன்றனையும் ஆராயவே அதன்வழித்தாய உலகமெல்லாம் ஆராய்ந் தானும், அதனல் அவனுரிமை அழியாமற் றன்னுள்ளே ஆராய்ந்து போதுக வென்பதாம். இதனுன் ஆணடவழிசெய்வது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)---வினைசெய்வான் - தொழில்செய்பவன், கோ டாமை - கோணுதிருக்க, உலகு - உலகமானது, கோடாது - கோ ணுது; (ஆகலால்), மன்னன் - அரசன், நாள்தோறும் - தினந்தோறும், நாடுக - (அவன்செயலை) ஆராயக்கடவன்.

நிகழ்ம் அதிகாரம்—சுற்றந்தழால்.

அஃதாவது அரசன் தன்னிலோருமைத் தன்னில் நீங்காமல் அணைற்றல். வினைசெய்வாரைக் கூறி வினைசுற்றங் கூறுகின்றார் ஆகலின், இது தொடர்ந்து வினையாடலின் பின் வைக்கப்பட்டது.

க. பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள

(பரி-ரை.) எ-து,—ஒருவன் செல்வக்தொலேந்து வறியன் ஆயவழியும் வீடாது தம்மோடு அவனிடைப் பழமையை எடுத்துக்கொண்டாடும் இயல்பு கள் சுற்றத்தாமாட்டே யுளவாவன, எ-று.

சிறப்பும்மை வறியனுயவழிப் பாராட்டப்படாமை விளக்கிநின்றது. பழமை - பற்றருக் காலத்துத் தமக்குச் செய்த உபகாரம். பிறவெல்லாம் அவன் பற்றற்றபொழுதே நீங்கும் அவனேடு பற்றறவராகலின், ஏகாரத் தேற்றத்தினுல் வந்தது. இதனுற் சுற்றத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பற்று அற்றகண்ணும் - (ஒருவன்) செல்வந் தொலேந்து வறுமைப்பட்டவிடத்தும், பழமை - (தம்மோடு அவ னிடத்து உண்டாகிய) பழமையை, பராராட்டுதல் - (எடுத்துக்) கொண்டாடுந்தன்மைகள், சுற்றத்தார்கண்ணே - உறவினரிடத்தே, உள - உளவாகும்.

உ வீற்றபற்ற சுற்றமியையி னருப்பற்
வாக்கம் பலவுந் தரும்.

(பரி-ரை.) எ-து,—அன்பற்ற சுற்றம் ஒருவற்கெய்துமாயின் அஃது அவற்குக் கிலேத்தல் அற்றுஞ் செல்வங்கள் பலவற்றையுங் தொடுக்கும், எ-று.

உட்பகையினீக்குதற்கு விருப்பமுஞ் சுற்றமென்றும், தானேவளர்க்கும் ஒருதலையாய செல்வத்தினீக்குதற்கு அருப்பமுமாக்கமென்றும், விசேடித்தார். தொடைநோக்கி விகாரமாயிற்று. இயையினென்பது அதனது அருமை விளக்கி நின்றது. ஆக்கமென்பது ஆகுபெயர். பலவுமென்றது அங்கங்கள் ஆறனையும் நோக்கி. பலர்கூடி வளர்த்தலின், அவை மேன்மேற் கிளைக்கு மென்பது கருத்து.

(தெ - ப - ரை.)—விருப்புஅறு - அன்புநீங்காத, சுற்றம்-சுற்றமானது, இயையின்-(ஒருவனுக்கு) வாய்க்குமாயின், (அது) அரும்பு அறு - கிளைத்தல்நீங்காத, ஆக்கம்பலவும் - பலசெல்வங்களையும், தரும் - (அவனுக்குத்) கொடுக்கும்.

நூ. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாம்
கோடியின்றி நீர்நிறைந் தற்று.

(பரி-ரை.) எ-து,—அசுசுற்றத்தோடு நெஞ்சு கலத்தல் இல்லாதவன் வாழ்க்கை குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தாற்போலும், எ-று.

சுற்றத்தோடென்பது அதிகாரத்தான் வந்தது. நெஞ்சுகலப்புத்தன்னளவும் அதனளவும் உசாவுதலான் வருவதாகலின், அளவளாவென்பது ஆகுபெயர். வாழ்க்கையென்றதனாலும் அதற்கேதுவாய செல்வங்களே. நிறைதலென்னும் இடத்து நிழற் பொருளின் தொழில் இடநடுவின்மேல் நின்றது. சுற்றமில்லாதான் செல்வங்கள் தாங்குவார் இன்மையின் புறத்துப்போமென்பதாம்.

(தெ - ப - ரை.)—அளவளா இல்லாதான் - அசுசுற்றத்தோடு) நெஞ்சுகலத்தலில்லாதவனது, வாழ்க்கை - செல்வம், குளவளா - குளப்பரப்பானது, கோடுஇன்றி - கரையில்லாமல், நீர் நிறைந்து அற்று - நீர்நிறைந்தாற்போலும்.

ந. சுற்றத்தாற் சுறறப் படவொழுகல் செலவந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

(பரி-ரை.) எ-து,—செல்வம் பெற்றவதனால் ஒருவன் பெற்ற பயனாவது தன்சுற்றத்தால் தான் சூழப்படும்வகை அதனைத் தழீஇ ஒழுகுதல், எ-று.

பெற்றவென்பதனுள் அகரமும் அதனானென்பதனுள் அன்சாரியையும் தொடைநோக்கி விகாரத்தாற்றொக்கன. இவ்வொழுக்கப் பகையின்றி அரசாட்கேதுவாகலின், இதனைச செல்வத்திற்குப் பயனென்றார். இவை மூன்றுபாட்டானும் சுற்றத்தழால் செல்வத்திற்கேதுவும் அரணும் பயனுமாமென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை)—செல்வம் - செல்வத்தை, பெற்றத்தால் - பெற்ற அதனால், பெற்றபயன் - (ஒருவன்) பெற்றபயனுவது, சுற்றத்தால் - (தன்) சுற்றத்தினாலே, தான்சுற்றப்பட - தான்சூழப் படும்வகை, ஒழுகல் - (அச்சுற்றத்தைத்) தழுவிநடத்தலாம்.

நி. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றுத்தாற் சுற்றப் படும்.

(பரி-ரை.) எ-து.—ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொற் சொல்லுதலையும் வல்லனுபின் தம்மிற்றொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே சூழப்படும், எ-று.

இரண்டும் அளவறிந்தாற்றுதல் அஃதென்பதுதோன்ற, ஆற்றினென் றார். தம்மிற்றொடர்தலாவது சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் அவற்றுள் பிணிப்புணர்வெருதல். இவ்வுபாயங்களே வடநூலார் தானமுஞ் சாமமுமென்ப.

(தே - ப - ரை.)—கொடுத்தலும் - (ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன) கொடுத்தலையும், இன்சொலும் - இனியசொற் சொல்லுதலையும், ஆற்றின் - செய்யவல்லவனுபின், அடுக்கிய - (தம்மில்) தொடர்ந்த, சுற்றத்தால்- பலவகைச் சுற்றத்தாலும், சுற்றப்படும் - சூழப்படுவான்.

சு. பெருங்கொடையான் பேணுன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் மிக்கொடையை உடையனுமாய் வெகுளியை விரும்பானும் ஆயின் அவன்போலக் கீழோயுடையார் இவ்வுலகத்தில்லை, எ-று.

மிக்ககொடை - ஒன்றனும் வறுமையெய்தாமற் கொடுத்தல். விரும்பாமை - இஃதுஅரசற்கு வேண்டுவதொன்றன்று அளவிறந்துசெய்யாமை.

(தே - ப - ரை)—பெருங்கொடையான் - (ஒருவன்) மிகுத்த கொடையையுடையவனும், வெகுளி - கோபத்தை, பேணுன்-விரும் பாதவனும் (ஆனால்), அவனின் - அவனைப்போல, மருங்குடை யார் - சுற்றமுடையவர், மாநிலத்து - இப்பெரிய உலகத்தில், இல் - இலர்.

எ. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.

(பரி-ரை.) எ-து,—காக்கைகள் தமக்கிரையாயின கண்டவழி மறையாது இனத்தை அழைத்து அதனோடுங் கூட வுண்ணுநிற்கும்; சுற்றத்தான் எய்தும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினை டையார்க்கே உளவாவன, எ-று.

அவ்வாக்கங்களாவன: பகையின்மையும், பெருஞ்செல்வம் உடைமையும் முதலாயின. எசசவும்மையான் அறமும் இன்பமுமே அன்றிப் பொருளும் எய்துமென்பது பெறுதும். அப்பெற்றித்தாய இயல்பென்றது தாம் நுகர் வனவெல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல்.

(தே - ப - ரை.)—காக்கை - காகங்கள், கரவா - (இரைகண்ட விடத்து) மறைக்காமல், கரைந்து - (இனத்தை) அழைத்து, உண் ணும் - (அதனோடு) உண்ணுகிற்கும்; ஆக்கமும் - (சுற்றுதலால்வரும்) செல்வங்களும், அன்னநீரார்க்கே - அப்படிப்பட்ட குணத்தை யுடையவர்க்கே, உள - உள்ளனவாகும்.

அ. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

(பரி-ரை.) எ-து,—எல்லாரையும் ஒருதன்மையாக நோக்காது அர சன் தத்தந் தகுதிக்கேற்ப நோக்குமாயின் அசிறப்புநோக்கி அவனை விடாது வாழுஞ் சுற்றத்தார் பலர், எ-று.

உயர்ந்தார் நீக்குதல் நோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடா தொழுகுதல் நோக்கி வரிசைநோக்கை விதித்தார். இக்கான்குபாட்டா னுஞ் சுற்றந்தழுவும் உபாயங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வேந்தன் - அரசன், பொதுநோக்கான்-எல் லாரையும் ஒருதன்மையாக நோக்காமல், வரிசை ஆக - அவரவர் தகுதிக்கு ஏற்ப, நோக்கின் - நோக்குவானாயின், அதுநோக்கி - அச் சிறப்புநோக்கி, வாழ்வார்பலர் - (அவனைவிடாது) வாழுஞ்சுற்றத் தார் பலர்.

கூ. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

(பரி-ரை.) எ-து,—முன்தமராய் வைத்துத் தன்னோடு அமராதயாதானு மொரு காரணத்தால் தன்னைப் பிரிந்துபோயவர் பின்னும் வந்து சுற்றமாதல் அவ்வமராமைக்காரணம் தன்மாட்டிலையாகத் தானே யுளதாம், எ-று.

அமராமைக் காரணமின்றி யென்றதனால், முன் அஃதுண்டாய்த் துறத்தல் பெற்றாம்: அஃதாவது, அரசன் தான் நெறிகெடவொழுகல் வெறுப்பன செய்தலென்றிவை முதலியவற்றான் வருவது. ஆக்கம் வருவிக்கப்பட்டது. இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்குச் செயற்கையான் வந்த நீக்கம் அதனை ஒழிய ஒழியும். ஒழிந்தால் அவர்க்கன்புசெய்து கொள்ள வேண்டா, பழைய இயல்பாய் நிற்குமென்பார், வருமென்றார்.

(தே - ப - ரை.)—தமர்ஆகி - முன்பு சுற்றத்தாராயிருந்து, தன்னைநீங்கார் - யாதோ ஒருகாரணத்தால் தன்னைப்பிரிந்துபோன வர், சுற்றம் - பிரிந்தும்வந்து சுற்றத்தாராதல், அமராமைக்காரணம் - அப்பொருந்தாமையின்காரணம், இன்றி - (தன்னிடத்து) இல்லையாக, வரும் - (தானே) உண்டாகும்.

கூ. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

(பரி-ரை.) எ-து,—காரணமின்றித்தன்னிடத்தினும் பிரிந்துபோய்ப் பின்காரணத்தான் வந்த சுற்றத்தானை அரசன் அக்காரணத்தைச் செய்து வைத்து ஆராய்ந்து தழீஇக்கொள்க, எ-று.

வாளா உழைப்பிரிந்தென்றமையின், பிரிதற்குக் காரணம் இன்மைபெறும். வருஞ்சுற்காரணத்தைச செய்யாதவழிப் பின்னும் பிரிந்துபோய்ப் பகையோடு கூடுமாகலின் இழைத்திருந்தென்றமை, அன்பின்றிப் போய்ப் பின்னுங் காரணத்தான் வந்தமையின் எண்ணிக் கொளலென்றுங் கூறினர். பிரிந்து போய சுற்றத்தாருள் தீமை செய்யப்போய் அதனை ஒழிய வருவானும் அது செய்யாமற்போய்ப் பின் நன்மை செய்யவருவானும் தழுவப்படுமாகலின், தழுவுமாறுமுறையே இவ்விரண்டுபோட்டானுங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—உழை - (காரணமின்றித்)தன்னிடத்தினின்றும், பிரிந்து - பிரிந்துபோய், காரணத்தின் - (பின்பு) காரணத்தால், வந்தானை - வந்தசுற்றத்தானை, வேந்தன் - அரசன், இழைத்து இருந்து - அக்காரணத்தைச்செய்துவைத்து, எண்ணி - ஆராய்ந்து, கொளல் (தழுவித்)கொள்ளக்கடவன்.

நேசம் அதிகாரம்—பொச்சாவாமை.

அஃதாவது உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றான் மயிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தன் முதலிய காரியங்களினும் சோர்விலைச் செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாராற் பயனுள்ளது இச்சோர்வு இல் வழி யாகலின், இது சுற்றந்தழாலின்பின் வைக்கப்பட்டது.

க. இறந்த வெகுளியிற் தீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

(பரி-ரை.) எ-து,—மிக்கவுவகைக் களிப்பான் வரும் மறவி அரசனுக்கு அளவிறந்த வெகுளியினும் தீது, எ-று.

மிக்கவுவகை - பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதமென்றிவற்றான் வருவது. அளவு பகைவரை அடர்த்தற்கும் கொடியோரை ஒறுத்தற்கும் வேண்டுவது. இறந்தவெகுளி ஒரோவழிப் பகைவரையுங்கொல்லும். இஃது இன்னதன்றித் தன்னையே சோதலின், அதனினுங் தீதாயிற்று.

(தே-ப-ரை.)—சிறந்தஉவகை - மிகுந்த அகமலர்ச்சியினது, மகிழ்ச்சியின் - களிப்பால் வருவதாகிய, சோர்வு - மறதியானது, இறந்த வெகுளியின் - (அரசனுக்கு) அளவுகடந்த கோபத்தினும், தீதே - தீயதேயாம்.

உ. பொச்சாப்புக் கொல்லும் புகழை யழி
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு

(பரி-ரை.) எ-து,—ஒருவன் புகழினை அவன் மறவிகெடுக்கும், அறிவினை நிச்சநிரப்புக் கெடுக்குமாறுபோல; எ-று.

நிச்சநிரப்பு-நாள்தோறும் இரவான் வருந்தித் தன்வயிறு நிறைத்தல். அஃது அறிவுடையான்கண் உண்டாயின் அவற்கு இனிவரவானும் பாவந் தானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் நன்குமதிப்பினை அழிக்கும்; அதுபோல, மறவியும் புகழுடையான்கண உண்டாயின் அவற்குத் தற்காவா மையாலும் காரியகேட்டானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் நன்கு மதிப்பினை அழிக்குமென்பதாயிற்று. இவையிரண்டுபொட்டானும் பொச்சாப் பினது குற்றங கூறப்பட்டது.

(தே-ப-ரை)—அறிவினை - ஞானத்தை, நிச்சநிரப்பு - நித்தியதரித்திரமானது, கொன்றாங்கு - கெடுக்கும்விதம்போல, பொச்சாப்பு - (ஒருவனுடைய) மறதியானது; புகழை - (அவன்) புகழை, கொல்லும் - கெடுக்கும்.

கூ. பொச்சாப்பார்க் கில்லைப் புகழ்மை யதுவுலகத்
தெப்பாலா லோர்க்குந் துணிவு.

(பரி-ரை.) எ-து,—பொசசாரக் தொழுகுவார்க்குப் புகழுடைமையில்லை; அவ்வின்மை இக்நீதி நூலுடையார்க்கே அன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிக்கத்து, எ-று.

அரசார்கே அன்றி அறமுதலிய நான்கினும் மூயல்வார் யாவர்க்கும்; அவை யகூடாமையின் புக ல்லையென்பது தோன்ற, எப்பாலாலோர்க்குந் துணிவென்றார்

(தே - ப - ரை.)—புகழ்மை - புகழுடையராயிருக்கையானது, பொச்சாப்பார்க்கு - மறதியுடையவர்க்கு, இல்லை - இலது; அது - அவ்வில்லாமையானது, (இந்நீதி நூலுடையார்க்கே அன்றி), உலகத்து - உலகத்தின்வ, எப்பாலாலோராக்கும் - எவ்வகைப்பட்ட நூலுடையவர்க்கும், துணிவு - (ஒப்பமுடிந்த) தெளிவாம்

ச. அச்ச முடையார்க் கரணில்லை யாங்
பொசசாப் புடையார்க்கு நன்கு.

(பரி-ரை.) எ-து.—காடு மலை முதலிய அரணகளுள்ளே நிற்பினும், மனத்தின்கண் அசசமுடையாரகு அவற்றுற்பயனில்லை; அதுபோலச செல்வமெல்லாம் உடையராயினும், மனத்தின்கண் மறவியை உடையார்க்கு அவற்றுற் பயனில்லை, எ-று.

நண்மைக்கே துவாகலின், நன்கென்றார். அசசமுடையார் நின்ற அரணழியுமாறும்போல மறவியுடையாருடைய செல்வங்களுமழியுமென்ப தாயிற்று.

(தே - ப - ரை)—அரம்உடையார்க்கு - (மனத்தின்கண்) அசசமுடையார்க்கு, அரண் - (காடுமலை முதலாகிய) அரணங்களில் (இருந்தாலும்), இலலை - (அவைகளாலே பயன்) இலலை; ஆங்கு - அதுபோலவே, பொச்சாப்புடையார்க்கு - மறதியுடைவர்க்கு, நன்கு - செலவமெலலாம் (உடையராயிருந்தாலும்), இல்லை - (அவைகளாலேபயன்) இல்லை.

ஞ. முன்னுறக் காவா நிழுக்கியான் றன்பிழை
பின்னூ நிரங்கி விடும்

(பரி-ரை.) எ-து,—தன்னுற் காக்கப்படுந் துன்பங்களே அவை வருதற்கு முன்னே அறிந்து காவாது மறந்திருந்தான் பின்வந்து உற்றகாலத்துக்காக்க லாகாமையின் அப்பிழைப்பினே நினைந்திரங்கிவிடும், எ-று.

காக்கப்படுந் துன்பங்களாவன: சோர்வு பார்த்துப் பகைவர் செய்வன. ஊற்றின்கண் என்புழி உருபுஞ்சாரியையும் உடன்றொக்கன. உற்றகாலத்துக் காக்கலாகாமையின், இரங்கிவிடுமென்றார். இவை மூன்றுபாட்டானும் பொச சாப்புடையார்க்கு வரும் ஏதங கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—முன்உற - (வாராமற்காக்கப்படுந் துன்பங் களே அவை வருதற்கு முற்பட, காவாது - (அறிந்து) காவாமல், இழுக்கியான் - மறந்திருந்தவன், பின்ஊறு - பின்துன்பம் வந்த காலத்தில் (காக்கக்கூடாமையால்), தன்பிழை - தன்னுடைய அத் தவறு (நினைத்து) இரங்கிவிடும் - இரங்கிவிடுவான்.

சு. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில்.

(பரி-ரை.) எ-து,—அமைச்சர்க்கு மறவாமைக்குணம் யாவர்மாட்டும் எக் காலத்தும் ஒழிவின்றி வாய்க்குமாயின் அதனே ஒக்கும் நன்மை பிறி

வினைசெய்வார் சுற்றத்தாரென்னுந் தம் பாலார்கண்ணும் ஒப்பவேண்டு தலின் யார்மாட்டுமென்றும். தாம் பெருகியஞான்றும், சுருங்கியஞான்றும் ஒப்பவேண்டுதலின் என்றுமென்றும், எல்லாக்காரியங்களினும் ஒப்பவேண்டு தலின் வழுக்காமை யென்றது கூறினர். வாயினென்பது முதனிலைத்தொழிற் பெய ரடியாக வந்த வினையெச்சம். வாய்த்தல்-நேர்படுதல்.

(தே- ப - ரை.)—இழுக்காமை - (அரசர்க்கு) மறவாமையா னது, யார்மாட்டும் - யாவரிடத்தும், என்றும் - எக்காலத்திலும், வழுக்காமை - ஒழிவில்லாமல், வாயின் - வாய்க்குமாயின், அது - அதனை, ஒப்பது - ஒக்கும் நன்மையானது, இல் - இல்லை.

எ. அரியவென் றுகாத வில்லைப்பொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

(பரி-ரை.) எ-து,—இவை செய்தற்கரியனவென்று சொல்லப்பட்டு ஒரு வற்கு முடியாத காரியமகளில்லை. மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப் பெறின், எ-று.

* பொச்சாவாத என்பதன் இறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. அந்தக் காரணமாகலின் கருவியென்றார். இடைவிடாதநினைவும் தப்பாத சூழ்ச்சியும் உடையார்கு எல்லாம் எளிதின் முடியுமென்பதாம் இவையிரண்டொட்டானும் பொச்சாவாமையது சிறப்புக் கூறப்பட்டது

(தே - ப - ரை.)—பொச்சாவாத-மறவாத, கருவியால் - மனத்தால், போற்றிச்செயின் - எண்ணிச்செயின். அரிய என்று - (இவை செய்தற்கு) அரியனவென்று சொல்லப்பட்டு, ஆகாத இல்லை - முடியாத காரியங்களில்லை.

அ புகழுந்தலை யேபோற்றிச செயலீண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

(பரி-ரை.) எ-து,—நீதிநூலுடையார் இவை அரசர்க்குரியனவென்று உயர்த்துகூறிய செயல்களைக் கடைப்பிடித்தாற செய, அங்ஙனஞ்செய்யாது மறந்தவர்க்கு எழுமையினும் நலமையில்லை ஆகலான், எ-து.

அசசெயல்களாவன.—† மூவகைஆற்றல், நூல்வகை உபாயமும், ஐவகைத் கொழிலும், அவ்வகைக குணமும முதலாயசெயல்கள். சாதிதருமமாகிய இவற்றின் வழு இயோர்க்கும உள்ளது நீரயத்துன்பமேயாகலின், எழுமையு மில்லென்றார். எழுமை—ஆகுபெயர். இத்தஞ் பொசசாவாது செய்யவேண்டு

(தே - ப - ரை.)—புகழ்நுதலவை - நீதி நூலுடையார் இவை அரசர்க்கு உரியவையென்று உயர்த்துதிச்சொல்லிய செயல்களை, போற்றி - மறவாது, செயல் வேண்டும - செய்யக்கடவர், செய்யாது-

பொசசாவாமை கருவி என்பதற்குப் பொச சாவாமையாகிய கருவியெனப பொருள் கோடலேயிறபு அது நெடுங்காலமாயிருந்து வம்பமுர "கேளுமை பொருளும்" எனறும் முபப, நோழஞ்சூத்திரத்துலாமேலே சேரமானைபா "கின்முங்காணுமருநினேன் என்புழிக காடபியை குறிஞ்னருலின காணுங்குறிஞ்சாது விடாப்பியை கொண்ட நாம். பொசசாவாத கருவிபாற போறிசெயின எனபுழிபோசசாவாகருவி எனபதும் அது" என கூறுமாறுமுளவாம். இலக்கணவிளக்கச் சூருவளியாகும் இதுவே கருத்தென்ற.

† மூவகையாறறலாவன அரிவு, ஆண்மை, பெருமை என்ன-ன, நல்லகை உபாயம் கொடுத்தல், இனசொறறிசசால்லல, வேறுபடுத்தல, ஒப்புரவு எனபன, ஐவகைத்தொழில் பேற்றல், ஈறணமுறறல், மோடல, பொருளல, வேடல எனபன, அவ்வகைக குணமாவன நட்பாகல, பலகையாகல, பேறுபேறல, இருதலை, பிரிதல, கூட்டலெனபன. இவறறுள் மூவகைபாறறலில் சுசுசு சூறறுரைப்பினும், நூல்வகை உபாயதறை சசுசு-ம் சூறறுரையினும், ஐவகைத்தொழிறறில் ஈசுஉ, எஎ ட சூறறுரையினும், அரியலை சுசுணத்தை சுஅடு-ம் சூறறுரையினும காணல.

(அப்படிச்) செய்யாமல், இகழ்ந்தார்க்கு - மறந்தவர்க்கு, எழுமையும் - எழுபிறப்பிலும் வரும் நன்மை, இல் - இல்லை, (ஆதலால்).

கூ. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்த
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

(பரி-ரை.) எ-து,—அரசர் தம்மகிழ்ச்சிக்கண் தாம் வலியுறும்பொழுது முற்காலத்து அதனின் ஆய சோவாறு கெட்டவர்களை நினைக்க, எ-று.

காரணகளோடு அவாக்குளதாய உரிமையை மகிழ்ச்சியே லேற்றித் தம் மகிழ்சியி னென்றும், இகழ்சியுங் கேடும் உடன்தோன்றுமாகலின் மகிழ்சியின் மைந்துறும் போழ்தென்றுங கூறினர். கெட்டாரை உள்ளவே, காமும் அவ்வாறே கெடுதுமெனறு அதன்கண் மைந்துருவென்பது கருத்து. எண்ணுகவென்று பாடமோதுவாரும் உளர்.

(தெ - ப - ரை.)—தம்மகிழ்ச்சியின் - (அரசர்) தமதுமகிழ்ச்சியில், தாம் மைந்துறும்போழ்து - தாம்வலிபட நிற்கும்பொழுது, இகழ்ச்சியின் - (முற்காலத்தில் அம்மகிழ்ச்சியில்தோன்றிய) மறதியினல், கெட்டாரை - கெட்டவர்களை, உள்ளுக - நினைக்கக்கடவர்.

கஎ. உள்ளிய தெய்த லெளிதுமன் ஊற்றுறுந்தா
ளுள்ளிய துள்ளப் பெறின்.

(பரி-ரை.) எ-து.—அரசனுக்குத் தான் எய்த நினைத்தபொருளை அந்நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம். பின்னும் அதனையே நினைக்கக்கூடுமாயின், எ-று.

அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அதனையே நினைத்தலாவது மறவியின்றி அதன்கணணே முயறல். இவை யிரணடுபோட்டாலும் பொச்சாவாமைக்கு உபாயம கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—உள்ளியது - (அரசன்தான் பெற) நினைத்த பொருளை, எய்தல - அந்நினைத்தபடியே) அடைதல், எளிதுமன் - எளிதாகும், மற்றும்தான் - பிறவும் அவன், உள்ளியது - அந்நினைத்தபொருளை, உள்ளப்பெறின் - நினைக்கக்கூடுமானால்.

ஆறாம் அதிகாரம்—செங்கோன்மை.

அஃதாவது அரசனுக் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறை ஒருபாற்கோடாது செவ்விய கோல் போறலின் செங்கோனெனப்பட்டது. வடநூலாரும் தண்டமெண்ணுர். அது சோர்வில்லாத அரசஞ் செயற்பாலது ஆகலின், இது பொதுவாமையின்பின் வைக்கப்பட்டது.

க. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் திவர்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை

(பரி-ரை.) எ-து,—தன்கீழ் வாழ்வார் குற்றஞ் செய்தால் அக்குற்றத்தை நாடி யாவர்மாட்டுங் கண்ணோடாது நடுவுநிலைமையைப் பொருந்தி அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து அவ்வளவிற் ருகச செய்வதே முறையாம், எ-று.

நடுவுநிற்றல் இறைக்கியல்பாகலின் அதனை இறையென்றும், உயிரினுஞ் சிறந்தார்கண்ணும் என்பார் யார்மாட்டுமென்றுங் கூறினர். இறைமை இறை யெனவும், செய்வது செய்வதெனவும், நின்றன. இதனுற் செங்கோன்மை யது இலக்கணங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—ஓர்ந்து - (கண்ணிற்வாழ்வார் செய்தகுற் றத்தை) ஆராய்ந்து, யார்மாட்டும் - யாவரிடத்தும், கண்ணோடாது - தாட்சிணியப்படாமல், இறைபுரிந்து - நடுவுநிலைமையை விரும்பி, தேர்ந்து - (அக்குற்றத்திற்குச்சொல்லிய கண்டத்தை நூலாரோ டும்) ஆராய்ந்து, செய்வஃதே-அவ்வளவினதாகச் செய்தலே, முறை-

உ. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி

(பரி-ரை.) எ-து,—உலகத்துயிரெல்லாம் மழையுளதாயின் உளவாகா நிற்குமே எனினும், குடிகள் அரசன் செங்கோலுளதாயின் உளவாகா நிற் கும், எ-று.

நோக்கிவாழ்தல் - இன்றியமையாமை. வானினையவுணவை வானென் றும், கோலினைய எமத்தைக் கோலென்றுங கூறினர். அவ்வேமம் இல்வழி உணவுளதாயினுங குடிகட்கு அதனுற் பயனில்லை யென்பதாம்.

(தே - ப - ரை.)—உலகுஎல்லாம் - உயிர்களெல்லாம், வான் நோக்கி - மழையைநோக்கி, வாழும் - வாழாநிற்கும், (ஆயினும்) குடி - குடிகள், மன்னவன் - அரசனது, கோல்நோக்கி - செங் கோலைநோக்கி, வாழும் - வாழாநிற்கும்.

கூ. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

(பரி-ரை) எ-து,—அந்தணர்க்குரித்தாய வேதத்திற்கும் அதனுற் சொல்லப்பட்ட அறத்திற்கு ங் காரணமாய் நிலேபெற்றது அரசனுற் செலுத்தப்படுகின்ற செங்கோல், எ-று.

அரசர் வணிகரென்னும் எனேயோர்க்கும் உரித்தாயினும், தலேமைபற்றி அந்தணர் நூலென்றார். * "மாதவர் நோன்பு மடவார் கற்புங—காவலன் காவலன்றித் தங்கா" ஆகலின். ஈண்டறமென்றது அவையொழுக்குவற்றை. வேதமும் அறனும் அரசியலினுஞ் செங்கோல் இல்வழி நடவாகலின், அதனை அவற்றிற்காதியென்றும், அப்பெற்றியே தனக்காதியாவது பிறிதில்லே யென்பார் நின்றதென்றுங கூறினர். இவை யிரண்டுபோட்டானுஞ் செங்கோலது சிறப்புக் கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—மன்னவன்கோல் - அரசன் செங்கோலானது, அந்தணர்நூற்கும் - அந்தணர்க்கு உரிந்தாகிய வேதத்திற்கும், அறத்திற்கும் - (அதனுல் சொல்லப்பட்ட) தருமத்திற்கும், ஆதிஆய் - காரணமாகி, நின்றது - நிலேபெற்றது

ச. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

(பரி-ரை.) எ-து,—தன்குடிகளேயும் அணேத்துச் செங்கோலேயுஞ் செலுத்தும் பெருநிலவேந்தன் அடியைப் பொருந்தி விடார் உலகத்தார், எ-று.

அணேத்தல் - இன்சொற் சொல்லுதலும், தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின. இவ்விரண்டனேயும் வழுவாமற்செயவான் நில முழுதும் ஆளுமாகலின் அவனே மாநிலமன்னனென்றும், அவன்மாட்டியாவரும நீங்காதன்பின ராவர்ஆகலின் அடிதழீஇ நிற்கு முலகென்றும், கூறினர்.

(தெ - ப - ரை.)—உலகு - உலகத்தார், குடிதழீஇ - (தன்) குடிகளேயும் அணேத்துக்கொண்டு, கோல் ஓச்சும் - செங்கோலேயும் செலுத்தும், மாநிலமன்னன் - பெரியநிலவேந்தனது, அடிதழீஇ - அடியை அணேத்துக்கொண்டு, நிற்கும் - விடாதுநிற்பார்.

நி. இயல்புளி கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளேயுளுந் தொக்கு.

மணிமேகலே, "இருபச்சின்டாயது நிறைசெய்தகாதை, உ0அ, உ0கூ,

(பரி-ரை.) எ-து,—பருவமழையுங் குன்றுதலிலேவும் ஒருங்கு கூடினால் கள் சொல்லியஇயல்பாற் செங்கோலைச் செலுத்தும் அரசனது நாட்டின். கண்ணவாம், எ-று.

உளியென்பது மூன்றுவதன் பொருள்படுவதோ நிடை+சொல். வானும் நிலனுஞ் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்கு மென்பதாம்.

(தே - ப - ரை.)—பெயலும் - (காலங்தப்பாத) மழையும், விளையுளும் - (குறையாத) விளைவும், தொக்கு - (ஒருங்கிக்கக்) கூடி, இயல் புளி - (நூல்கள்சொல்லிய) இயல்பால், கோல்ஒச்சும் - செங்கோலைச்செலுத்தும். மன்னவன் - அரசனது, நாட்ட - நாட்டி லுள்ளன வாம்.

சு. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்

(பரி-ரை.) எ-து,—மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக்கொடுப் பது அவன் வீரியமும் வேலன்று கோல், அஃதும் அப்பெற்றித்தாவது தான் கோடாதாயின், எ-று.

கோல் செல்வி.ராயவழியே வேல்வாய்ப்பதென்பார் வேல்அன்றென்றார்: * 'மாண்ட — வறுகெறி முதற்றே யரசின் கொற்றம்" என்றார் பிறரும். கோடாதெனன்பது பாடமாயின், கருவியின்தொழில் வினைமுதன்மேனின்ற தாக வுரைக்க.

(தே - ப - ரை.)—மன்னவன் - அரசனுக்கு, வென்றிதருவது - (போரில்) வெற்றியைத்தருவது, வேல்அன்று - (அவன்எறியும்) வேற்படையன்றாகும், கோல் - (அவனது) செங்கோலாகுப்; அதுவும் - அக்கோலும், (அவ்வாறுவது) கோடாதாயினின் - (தான்) கோணுதிருக்குமாயின்.

எ. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

(பரி-ரை.) எ-து,—வையகத்தையெல்லாம் அரசன் காக்கும்; அவன் தன்னை அவனது செங்கோலே காக்கும், அதனை முட்டவந்தழியும் முட்டா மற்செலுத்துவனுயின், எ-று.

* புறநானூறு. 186.

முட்டாமற் செலுத்தியவாறு * மகனே முறைசெய்தான் கண்ணும் ‡ தன் கை குறைத்தான்கண்ணுங் காண்க. முட்டாதென்பதன் இறுதிநிலை விகாரத் தாற்றொக்கது. இவை காண்குபாட்டானும் அதனைச் செலுத்தினுன் எய்தும் பயன் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—இறை - அரசன், வையகம்எல்லாம் - பூமி முழுதையும், காக்கும் - காப்பாற்றுவான்; முறை - (அவனது) செங்கோல், அவனை - அவ்வரசனை, காக்கும் - காப்பாற்றும், முட் டாச்செயின் - முட்டுப்படாமல் அதைச்செலுத்த வல்லவனையின்.

அ. எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
நண்பதத்தாற் நானே கெடும்

(பரி-ரை.) எ-து,—முறைவேண்டினோர்க்கு எளிய செவ்வியையுடைய னுய் அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடும் ஆராய்ந்து நின்றவண் மைக்கொப்ப முறை செய்யாத அரசன் தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடும், எ-று.

எண்பதத்தானென்னும் முற்றுவினையெச்சமும், ஒபாவென்னும் வினை யெச்சமும், செய்யாவென்னும் பெயரெச்ச எதிர்மறையுட் செய்தல் வினை கொண்டன. தாழ்ந்தபதம்-பாவமும் பழியும் எய்திற்கும் நிலை. ‖ "அல் லவைசெய்தார்க் கறங்கூற்றம்" ஆகலின், பகைவர் இன்றியுங் கெடுமென் றார். இதனுன் முறை செலுத்தாதானது கேடு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—எண்பதத்தான் - (நீதிவேண்டினோர்க்கு) எளிதாகிய சமயத்தையுடையவனுகி, ஓரா - (அவர்சொல்லியவற்றை நூலோர்பலரோடும்) ஆராய்ந்து, முறைசெய்யா - (நின்றஉண்மைக் கேற்க) நீதிசெய்யாத, மன்னவன் - அரசன், தண்பதத்தால் - தாழ்ந்தபதத்திலே நின்று, தானேகெடும் - (ஒருவர் கெடுக்க வேண்டாமல்) தானேகெடுவான்.

கூ. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடிவன்று வேந்தன் தொழில்.

(பரி-ரை.) எ-து.—குடிகளைப் பிறர் கவியாமற் காத்துத் தானும் கவியாதபேணி, அவர்மாட்டுக் குற்றநிகழின் அதனை ஒழிப்பான்ஒறுத்தல் வேந்தனுக்குப் பழியன்று, தொழில்ஆகலான், எ-று.

---

* மனுநீதிகண்டசோழன். சிலப்பதிகாரம், உ0. வழக்குரைகாதை, நிசு-நிடு.

‡ பொற்கைப்பாண்டியன். சிலப்பதிகாரம், உசு, எட்டிரைகாதை, சஉ—நிசு,

‖ நான்மணிக்கடிகை, அடு. மேலே சுகூ-ம் பக்கத்திற் காண்க

துன்பஞ்செய்தல், பொருட்கோடல், கோறலென ஒறுப்பு மூன்று; அவற்றுள், ஈண்டைக்கெய்துவன மூன்றையவென்பது குற்றங்கடிதலென் பதனைப் பெற்றாம். தன்கீழ் வாழ்வாரை ஒறுத்தல் அறன்அன்மையின் வடி வாமென்பதனை ஆசங்கித்து, அஃதாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தி னீக்கித் தூயராக்குதலுஞ் சாதிதரும மென்றார்.

(தெ - ப - ரை.)—குடி - குடிகளை, புறங்காத்து - பிறர்வருத் தாமற்காத்து, ழம்பி - தானும்வருந்தாமற்காத்து, குற்றம் - (அவ ரிடத்தில்) குற்றம்உளதாயின், கடிதல் - (அதை தீர்க்கும்பொருட் டுத்) தண்டித்தல், வேந்தன்தொழில் - அரசனது தொழிலாம், (ஆதலால்), வடு அன்று - பழியன்று.

கூ. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்.

(பரி-மை.) எ-து,—அரசன் கொடியவர்களைக் கொலையான் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல், உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்ததனை டொக்கும், எ-று.

கொடியவனென்றது தீக்கொளுவுவார், கஞ்சிவார், கருவியிற் கொல் வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில்விழைவானென்றிவர் முத லாயினரை. இவரை வடநூலார் ஆதாயிகளென்ப. இப்பெற்றியாரைக் கண் ணோடிக் கொலவாவழிப் புற்களைக்கு அஞ்சாதன்ற பைங்கூழ்போன்று நலிவு பலவெய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதிதரும மென் பதாயிற்று. இவை யிரண்டோடுஞ் செவ்வேல்செலுத்தும் வெண்குடை வேந்தருக்கு தீயாரைமாய்த்து ஆலங்கையொறுப்பும் நடுவுநிலைமை அல்லவென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—வேந்து - அரசன், கொடியாரை - கொடிய வர்களை, கொலையின் - கொலையினாலே, ஒறுத்தல் - தண்டித்து (நல் லோரைக் காப்பாற்றல்), பைங்கூழ் - (உழவன்) பயிரை, களைகட் டதனொடு - களையைக்களைந்துகாத்ததனோடு, நேர் - ஒக்கும்.

நூசு-ம் அதிகாரம்—கொடுங்கோன்மை.

அஃதாவது அம்முறையினது கொடுந்தன்மை. ஈண்டும் உவமையின் பெயர் பொருண்மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறுகலின், இஃது அதன் பின் வைக்கப்பட்டது.

க. கொலைமேற் கொண்டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து.

(பரி-ரை.) எ-து,—பகைமைபற்றிக் கொல்லுதற்றொழிலைத் தம்மேற் கொண்டொழுகுவாரினும் கொடியன், பொருள் வெஃகிக் குடிகளை அதற்றொழிலைத் தன்மேற்கொண்டு முறையல்லவற்றைச செய்தொழுகும் வேந்தன், எ-று.

அவர் செய்வது ஒருபாழுைத்துன்பம், இவன் செய்வது எப்பொழு துந் துன்பமென்பதுபற்றி, அவரினுங் கொடியனென்றார். பான்மையக் குறழ்ச்சி. வேந்தென்பது உயர்திணைப் பொருட்கண் வந்த அஃறிணைசொல். அலை கொலையினுங் கொடிதென்பதாயிற்று.

(தெ-ப-ரை.)—அலை - (பொருளை விரும்பிக் குடிகளை) அலைத்தற்றொழிலை; மேற்கொண்டு-(தன்) மேற்கொண்டு, அல்லவை-நீதியல்லாதவைகளைச் செய்து, ஒழுகும் - நடக்கும், வேந்து - அரசன், கொலை-(பகைமைபற்றிக்) கொல்லுதற்றொழிலை, மேற்கொண்டாரின் - (தம்) மேற்கொண்டுநடப்பவரினும், கொடிது - கொடியனவன்.

உ வேலொடு நின்ரு னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ரு னிரவு

(பரி-ரை.) எ-து,—ஆறலைக்குமிடத்தைத் தனியே வேல்கொண்டு நின்ற கள்வன் ஆறுசெல்வாரை நின்கைப்பொருள் தாவென்று வேண்டுதலோடு ஒக்கும், ஒறுத்தற்றொழிலொடு நின்ற அரசன் குடிகளைப் பொருள் வேண்டுதல், எ-று.

வேலொடு நின்ருனென்றதனும் பிறவொடு கில்லாமையும், இரவென்றதனால் இறைப்பொருள் அன்மையும், பெற்ரும். தாராக்கால் ஒறுப்பலென்னுங் குறிப்பினன் ஆகலின், இரவாற்கோடலும் கொடுங்கோன்மையாயிற்று. இவை யிரண்டுபாட்டானுங் கொடுங்கோன்மையது குற்ரங் கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—கோலொடு - ஒறுத்தற்றொழிலோடு, நின்ருன் - நின்றஅரசன், இரவு - (குடிகளைப்பொருள்) வேண்டுதல், வேலொடு - வேல்கொண்டு, நின்ருன் - (வழியில் அடித்துப்பறிக்கு மிடத்தத்தனியே) நின்ற கள்வன், இடுவென்றதுபோலும் - (வழிப் போக்கனை நோக்கி உன் கைப் பொருளைத்) தாவென்று வேண்டுதல் போலும்.

கூ. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னெடொறு நாடு கெடும்.

(பரி-ரை.) எ-து,—தன்னுட்டு நிகழுந் தீமைகளை நாடோறும் ஆராய்ந்து அதற்கொக்க முறைமையைச் செய்யாத அரசன் நாடோறும் நாடிழக்கும், எ-று.

அரசனுக்கு நாடு உறுப்பாகலின், அதன்மேனின்றது. இழத்தல் - பயனெய்தாமை, மன்னவனெடு நாடோறுங் கெடுமென் றுரைப் பாரும் உளர்.

(தே - ப - ரை.)—நாள்தொறும் - தினந்தோறும், நாடி-(தன் னுட்டில் நடக்கும் தீமைகளை) ஆராய்ந்து, முறை - நீதியை, செய் யா - (அதற்கு ஒக்கச்) செய்யாத, மன்னவன் - அரசன், நாள் தொறும் - நாள்தோறும், நாடுகெடும் - நாடிழப்பான்.

ச கூழுங்குடியு மொருங் கிழக்குங் கோல்கோடி ர
சூழாது செய்யு மரச.

(பரி-ரை.) எ-து,—மேல் வினைவது எண்ணுது முறை தப்பச செய்யும் அரசன் அமையலான் முன்னீட்டிய பொருளையும் பின்னீட்டுதற்கேதுவா கிய குடிகளையுஞ் சேர இழக்கும், எ-று.

கோடலென்பது திரிந்து நின்றது. முன்னீட்டியபொருள் இழத்தற் கேதுவ கின்ற பாட்டாற் கூறுப.

(தே - ப - ரை.)—கூழாது - (மேல்வினைவை) எண்ணுமல், கோல்கோடி - நீதிதப்ப, செய்யும்-செய்கின்ற, அரசு-அரசன், (அச் செயலால்) கூழும் - (முன்பு சம்பாதித்துவைத்த) பொருளையும், குடியும் - (பின்பு பொருள் சேர்ப்பதற்குக் காரணமாகிய) குடிகளை யும், ஒருங்கு - ஒருசேர, இழக்கும் - இழப்பான்.

ஙு அல்லற்பட் டாற்றா வழுதகண் ணீரன்றோ
செல்வத்தைத் தேய்க்கும் படை.

(பரி-ரை.) எ-து,—அரசன் முறைசெய்யாமையாற் குடிகள் துன்ப முற்று அழுகின்றபொருக்கமாட்டாது அழுத கண்ணீரன்றே அவன் செல்வத் தைக் குறைக்கு கருவி, எ-று.

அழுதகண்ணீர்-அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தை யென்னுமையின், இஃது ஏகதேசவுருவகம். அல்லற்படுத்திய பாவத்தது தொழில் அதற்கேதுவாகிய கண்ணீர்மேனின்றது. அக்கண்ணீரிற்றொடி தி பிறிதின்மையின் செல்வங்கடிதிற் றேயுமென்பது கருத்து.

(தே - ப - ரை)—செல்வத்தை - (அரசன்) செல்வத்தை, தேய்க்கும் - குறைக்கும், படை - ஆயுதம், (அவன் நீதிசெய்பாமை நினைலே;) அல்லற்பட்டு - (குடிகள்) துன்பப்பட்டு, ஆற்றாது-(அதை) பொறுக்கமாட்டாமல், அழுத கண்நீர் அன்றே - அழுத கண்ணீர் அன்றோ

சு. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்
மன்னுவா மன்னர்க் கொளி.

(பரி-ரை.) எ-து,—அரசாக்குப் புகழ்கள்தாம் நிலைபெறுதல் செங்கோன்மையான் ஆம்; அச்செங்கோன்மை யில்லையாயின், அவர்க்கு அப்புகழ்கள் தாம் உளவாகா, எ-று

விகாரத்தாற்றொக்க மூன்றாவது விரித்து ஆகம் வருவித்துரைக்கப் பட்டது. மன்னுதற்கேது புகழாதல் * "இக்கிலத்து மன்னுதல் வேண்டி னிசைநங்கே" என்பதனானும் அறிக, மன்னுமை-ஒருகாலும்நில்லாமை. பழிக்கப்பட்டால் ஒளி மன்னுவாம், ஆகலே, தாமும் மன்னு ரென்பதாயிற்று. வென்றி, கொடை முதலிய எதுக்களாற் புகழ் பரந்திபதெலின், பன்மையாற் கூறினர். அவையெலலாம் செங்கோன்மையில்வழி இலவாமென்பதாம். இவை நானகுபாட்டானும் கோடுகோல ஞபிஞன் எயதுகுற்ற கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—மன்னர்க்கு - அரசர்க்கு, மன்னுதல் - (புகழ்கள்) நிலைபெறுதல், செங்கோன்மை - நீதியினலேபாம்; அஃது - அந்நீதி, இன்றேல் - இலலையாயின், மன்னர்க்கு - அவ்வரசர்க்கு, ஒளி - அப்புகழ்கள், மன்னுஆம் - நிலைபெறுதலிலலேபாம்

மு துளியின்மை ஞாலத்திற் கெற்றுமே லேவருந
னளியின்மை வாழு முயிர்க்கு

(பரி-ரை.) எ-து,—மழையில்லாமை வையகத்து வாழும் உயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயருமோ, அவ்வகைத் தனபம் பயக்கும் அரசன் கணணளியில்லாமை அவனுட்டி வாழுங குடிகட்கு, எ-று.

சிறப்புப்பற்றித் துளியென்பது மழைமேனின்றது. உயிரென்பது குடிகண்மேனின்றது. மேல் வானேக்கிவாழுமென்றதனை எதிர்மறை முகத்தாற் கூறியவாறு.

(தே - ப - ரை)—வேந்தன் - அரசனது, அளிஇன்மை - அருளில்லாமையானது, வாழும் - (அவன்நாட்டில்) வாழும், உயிர்க்கு -

குடிகளுக்கு, துளி - மழையினது. இன்மை - இல்லாமையானது, ஞாலத்திற்கு - பூமியில்வாழும் உயிர்களுக்கு, எற்று - எவ்வகைத் துன்பத்தருமோ, அற்று - அவ்வகைத்துன்பம் தரும்.

.அ இன்மை யி னின்ஞ துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்

(பரி-ரை.) எ-து,—முறைசெய்யாத அரசனது கொடுங்கோலின் கீழ் வாழின், யாவர்க்கும் பொருளினது இன்மையினும் உடைமை இன்ஞது,எ-று.

தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் வெஃகுவோனது கரீட்டுக் கைந்நோவ யாப்புடைல் முதலிய வருவது பொருளுடையார்க்கே ஆகலின், அவ்வுடைமை இன்மையினும் இன்ஞதாயிற்று. இவை யிரண்டுபாட்டானும் அவனுட்டி வாழ்வார்க்கு வருவ குற்றங் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—முறைசெய்யா - நீதியைச்செய்யாத, மன்னவன் - அரசனது, கோல்கீழ் - கொடுங்கோலின்கீழ், படின் - வாழின், இன்மையின் - (யாவர்க்கும்) பொருளில்லாமையினும், உடைமை - பொருளுடைமையானது, இன்ஞது - துன்பந்தருவதாம்.

கூ. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.

(பரி-ரை.) எ-து,—மன்னவன் தான் செய்யும் பொருளை முறை தப்பச் செய்யுமாயின், அவனுட்டுப் பருவமழை இன்றும்வகை மேகம் பொழிதலைச் செய்யாது, எ-று.

இரண்டிடத்தும் கோட வெனபன திரிந்துநின்றன. உறைகோடுதலாவது பெய்யுங்காலத்துப் பொய்யாமை. அதற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப.

(தெ - ப - ரை)—மன்னவன் - அரசன், முறைகோடி - நீதி தப்ப, செய்யின் - (பொருளைச்) சம்பாதிப்பானாயின், (அவனது நாட்டில்) உறை - பருவமழையானது, கோடி - இல்லாமற்போக, வானம் - மேகமானது, பெயல் - பொழிதலை, ஒல்லாது - பொருந்தாது.

கo. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

(பரி-ரை.) எ-து,—காத்தற்குரிய அரசன் உயிர்களைக் காவான்ஆயின் அறனில்லாத அவனுட்டுப் பசுக்களும் பால்குன்றும் அந்தணரும் நூல்களே மறந்து விடுவர், எ-று.

ஆபயன் - ஆவாற்கொள்ளும் பயன். அறதொழிலாவன:—ஓதல், ஓது வித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என இவை. பசுக்கள் பால் குன்றியவழி அவியின்மையாலும், அது கொடுத்தற்குரியார் மந்திரம், கற்ப மென்பன ஓதாமையாலும், வேள்வி நடவாதாம், ஆகவே, வானம் பெய லொல்லா தென்பதாயிற்று. இவை யிரண்டுபொட்டானும் அவனுட்டின்கண் நிகழும குற்றங கூறப்பட்டது.

* (தே - ப - ரை.)—காவலன் - காத்தற்குரிய அரசன், காவான் எனின்-(உயிர்களைக்) காப்பாற்றானாயின், (அவனது நாட்டிலே) ஆ-பசுக்களும், பயன்குன்றும் - பால்சுருங்கும், அறுதொழிலோர் - அந்தணரும், நூல் - நூல்களை, மறப்ப - மறந்துவிடுவர.

நூஎ-ம் அதிகாரம்—வெருவந்தசெய்யாமை.



அஃதாவது குடிகள் அஞ்சுவதும் * பகுதி அஞ்சுவதும் தானஞ்சுவதும் ஆயதொழில்களைச செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைப் பாற் படுதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

க. தக்காங்கு நாடித் தகுசெய்யா மண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் தன்னின்மெலியார்மேற் சென்றவழி அதனை நடுவாக நின்று ஆராய்ந்து பின்னும் அது செய்யாமற்பொருட்டு அவனை அக்குற்றத்திற்கொப்ப ஒறுப்பானே அரசனுவான், எ-று.

தக்காங்கு ஒத்தாங்கென்பன ஒருசொல்; தகுதியென்பது நடுவுநிலைமை யாதல் † "தகுதி யெனவொன் றுண்டே" என்பதனுனும் அறிக. இதனுனே தக்காங்கு நாடாமையும், பிறிதோர்காரணம்பற்றி மிகவொறுத்தலும், குடிக ளஞ்சும் வினையாதல் பெற்றும்.

(தே - ப -ரை.)—தக்காங்கு - (ஒருவன் மெலிய வனுக்குத் தீங்குசெய்தவிடத்து) நடுவாய்நின்று, நாடி - (அதனை) ஆராய்ந்து, தகுசெய்லா மண்ணததால் - (பின்னும்) அது செய்யாதிருத்தற் பொருட்டு, ஒத்தாங்கு - (அக்குற்றத்திற்கு) ஏற்க, ஒறுப்பது - (அவனைத்) தண்டிப்பவனே, வேந்து - அரசனுவான்.

† குறள், கூஉ-ம் அதி. நடுவுநிலைமை, க.

உ. கடிதோச்சி மெல்ல வெறிக செடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்.

(பரி-ரை.) எ-து.—அவ்வொத்தாங்கு ஒறுத்தல் தொடங்குங்கால் அள விறப்பச் செய்வார்போற் ரோடங்கி, செய்யுங்கால் அளவிறவாமற்செய்க, ஆக்கந் தங்கண்டெடுங்காலம் நிற்றலே வேண்டுவார், எ-று.

கடிதோசல் குற்றஞ்செய்வார் அதனையஞ்சுதற்பொருட்டும், மெல்ல வெறிதல் யாவரும் வெருவாமைப்பொருட்டும் ஆம். தொடங்கின அளவிற் குறைதல்பற்றி மென்மை கூறப்பட்டது. ஏச்சுதல் எறிதலென்பன இரண்டும் உவமைபற்றி வந்தன. இவை யிரண்டுபோட்டானும் குடிகள் வெருவந்த செய் யாமையது இயல்பு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—ஆக்கம் - செல்வமானது, கெடிது - நெடுங் காலம், நீங்காமை - நீங்காமல் நிற்றலே, வேண்டுபவர் - விரும்பு வோர், கடிதுஓச்சி - (தண்டிக்கத் தொடங்கும்போது) அளவுகடக் கச் செய்பவர்போலே தொடங்கி, மெல்லஎறிந - (செய்யும்போது) அளவுகடவாமற் செய்யக்கடவர்

ங. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல ஞரி
ஞெருவந்த மொல்லைக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—குடிகள் வெருவிய செயல்களைச்செய்து நடக்கும் வெங்கோலன் ஆயின் அரசன் ஒருதலையாகக் கடிதிற் கெடும், எ-று.

வெங்கோலனென்பது ஈண்டு வாளா பெயராய் நின்றது. ஒருவந்தம், ஒருதலை, எகாந்தம் என்பன ஒருபொருட்கிளவி. அச்செயல்களுங் கேடுகளும் முன்னர்க் கூறப்படும.

(தே - ப - ரை.)—வெருவந்தசெய்து-(அரசன் குடிகள்) அஞ் சத்தக்க செயல்களைச்செய்து, ஒழுகும் - நடக்கும், வெங்கோலன் ஆயின் - கொடுங்கோலனாயிருந்தால், ஒருவந்தம் - நிச்சயமாகவே, ஒல்லை - கடிதில், கெடும் - (அவன்) கெடுவான்.

ச. இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—குடிகளான் நம்மிறைவன் கடியனென்று சொல்லப் படும் இன்னாத சொல்லையுடைய வேந்தன் ஆயுளுங்குறைந்து செல்வமுங் கடிதின் இழக்கும், எ-று.

நெஞ்சு நொந்து சொல்லுதலான், இன்னாமை பயப்பதாய சொல்லை இன்னாச் சொல்லென்றார், உறையென்பது முதனிலைத் தொழிற்பெயர்,

அஃது ஈண்டு ஆகுபெயராய் உறைதலேச்செய்யும் நாண்மேனின்றது. அது குறைதலாவது அச்சொல்லில்லாதார்க்கு உள்ளதிற் சுருங்குதல்.

(தே - ப - ரை.)—இறை - (குடிகளால்ரும்) அரசன், கடியன் என்று - கடுமையையுடையவனென்று, உரைக்கும் - சொல்லப்படுகிற, இன்னாசொல் - துன்பந்தருஞ் சொல்லையுடைய, வேந்தன் - அரசன், உறைகடுகி - ஆயுளுங்குறைந்து, ஒல்லைக்கெடும் - (செல்வமும்) கடிதின் இழப்பான்.

நி. அருஞ்செவ்வி யில்லை முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

(பரி-ரை.) எ-து,—ஒன்னைக் காணவேண்டுவார்க்குங் காலம் அரியனாய்க் கண்டாலும் இன்னாத முகத்தினையுடையானது பெரியசெல்வம் பேயார்காணப் பட்டாற் போல்வதொரு குற்றம் உடைத்து, எ-று.

எனவே, இவையிரண்டும் வெருவந்த செய்தலாயின. இவைசெய்வானைச சார்வார் இன்மையின், அவனது செல்வம் தனக்கும் பிறாக்கும் பயன்படாதென்பதுபற்றிப் பேய்கண்டன்ன துடைத்தென்றார். காணுதல்-தன்வயமாக்குதல.

(தே - ப - ரை.)—அருஞ்செவ்வி - (தன்னைக் காணவேண்டுவார்க்கு) அரிதாகிய சமயத்தையுடைய, இன்னாமுகத்தான் - (கண்டால்) இனிமையில்லாத முகத்தையுமுடையவனது, பெருஞ்செல்வம் - மிக்கசெல்வமானது, பேஎய் - பேயால், கண்டு அன்னது - காணப்பட்டாற் போல்வ தொருகுற்றத்தை, உடைத்து - உடையதாகும்.

சு. கடுஞ்சொல்லன் கண்ணிலை னெயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

(பரி-ரை.) எ-து,—அரசன் கடியசொல்லையும் உடையனாய்க் கண்ணோட்டமும் இலனும் ஆயின், அவனது பெரியசெல்வம் நீடுதலின்றி அப்பொழுதே கெடும், எ-று.

"வேட்டங கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு—ளீட்டங்கட் காம மோடேழு" எனப்பட்ட வினைகளுட் கடுஞ்சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ்வெருவந்தசெய்தலுள் அடக்கினார். கண்—ஆகுபெயர். இனைய செய்தபொழுதே கெடுஞ்சிறுமைத்து அன்றியினுமென் பார், நெடுஞ்செல்வ மென்றார். நீடுதல்-நீட்டித்தல்.

(தெ - ப - ரை.)—கடுஞ்சொல்லன் - (அரசன்) கடுஞ்சொல்லை யுடையவனும், கண்இலன் - கண்ணோட்டமில்லாதவனுமா, ஆயின் - ஆனால், கெடுஞ்செல்வம் - (அவனது) பெரிய செல்வமானது, நீடுஇன்றி - நீடுதலில்லாமல், ஆங்கே - அப்பொழுதே, கெடும் - அழியும்.

எ. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த னடுமுரண் டேய்க்கு மரம்

(பதி-ரை.) எ-து,—கடிய சால்லும் குற்றத்தின் மிக்க தண்டமும் அரசனது பகை வெல்லுதற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினை தேய்க்கும் அரமாம், எ-று.

கடுமொழியால் தான்செய்யுங் கையிகந்த தண்டத்தால் தேசமும் கெட்டு முண்ண சுருங்கி வருதலின் அவற்றை அ மாகவு, நிணஞ்தாயினுந் தேயு மென்றதற்கு அடுமுரணோ இரும்பாகினுர்; எகதேசவுருகம். x அப்மென்பத னைக தனித்தனி கூட்டுக. இவை ஸ்ருதுபாட்டானும் செவ்வியின்மை, இன் னுமுகம் உடைமை, கண்ணோட்டமின்மை, கடுஞ்சொற சொல்லல், கையி கந்த தண்டமென்றிவைகள் குடிகளுஞ்சும் வினையென்பதூஉம், இவை செய் தான் ஆயுளும் அடுமுரணுஞ் செல்வமும் இழக் மென்பதூஉம் கூறப் பட்டன.

(தெ - ப - ரை.)—கடுமொழியும் - கடுஞ்சொல்லும், கையிகந்த தண்டமும் - (நூற்றத்தின்) மேற்பட்ட தண்டமும், வேந்தன் - அர சன், அடும் - (தன்பகையை) வெல்லுதற்கு ஏற்ற, முரண் - மாறு பாடாகிய இரும்பை, தேய்க்கும் - தேயுக்கும். அரம் - அரமாம்.

---

x இனத்தாறறி யெண்ணுக வேந்தன் சினத்தாற்றிச சீறிற் சிறுகுந் திரு.

(பதி-ரை.) எ-து,—காரியத்தைப்பற்றிவந்த எண்ணத்தை அமைசசா மேல்வைத்து அவரோடு தானுமஎண்ணிச செய்யாத அரசன் அப்பிழைப் பாற் றன்காரியக தப்பியவிடத் தன்னைச சினமாகிய குற்றத்தின்கணணே செலுத்தி அவரை வெகுளுமாயின அவன்செல்வம் நாடோறுஞ் சுருங கும், எ-று.

அரசர்பாரம் பொறுத்தற்கு ஒப்புமையான் அமைசசரை இனமென் றும், தான் பின் பிழைப்பாலறிந்து அமையாது அவனை அவர்மேல் ஏற்றி

---

x இவ்வாறு ஒருதலைப்பிபயரை வாகியம-பேதாரோ நின்றதனை கூட்டி முடிப்பது னைத தோலட பிழைப்பாரபோலை பிரதிபேக டதாதலய பென்பா வடதுலா.

வெருளின் அவர் வெரீஇ நீக்குவர், நீக்கவே, அப்பிழைப்புத் தீருமாறும் அப் பாரம் இனிதுய்க்குமாறும் இலனுமென்பது கோக்கித் திருச்சிறுகமென்றுங் கூறினர். இதனுற் பகுதியஞ்சும் வினையும் அதுசெய்தான் எய்துங குற்றமுங் கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—இனத்துஆற்றி - (காரியத்தைப்பற்றிவந்த எண்ணத்தை) மந்திரிகள்மேல்வைத்து, எண்ணுத - (அவரோடு தானும்) எண்ணிச்செய்யாத, வேந்தன் - அரசன், (அதனல் தன் காரியந்தப்பியவிடத்து) இனத்துஆற்றி - (தன்னேக்) கோபத்திலே செலுத்தி, சிறின் - (அவரைத்) கோபிப்பானுயின், திரு - (அவனது) செல்வமானது, சிறுகும் - (நாள்தோறும்) சுருங்கும்.

கூ. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்

(பரி-ரை.) எ-து,—செரு வருதற்குமுன்னே தனக்குப் புகலாவதோர் அரண்செய்துகொள்ளாத அரசன், அது வந்தகாலத்து எமம் இன்மையான் வெருவிக் கடிதிற்கெடும், எ-று.

பகையை வெருவிச் சேர்ந்தார் நீங்குதலின் தமியனுய்த் தானும் வெருவி அப்பகையையத்தனுமென்பதாம். இதனல் தானஞ்சும் வினையும் அது செய் தான் எய்தும் பயனுங் கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—சிறைசெய்யா - போர்வருதற்கு முன்னே தனக்கொருகாப்பிடமாக) அரண்செய்துகொள்ளாத, வேந்தன் - அரசன், செருவந்தபோழ்தில் - போர்வந்தகாலத்தில், வெருவந்து - (காப்பிடம் இல்லாமையால்) அஞ்சி, வெய்து - விரைவில், கெடும்- கெடுவான்.

கூ. கல்லார்ப் பிணிக்குங் கடிந்தீ தாதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

(பரி-ரை.) எ-து,—கடிந்தோலனுய அரசன் நீதிநூன்முதலிய கல்லா தாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டாநிற்கும்; அக்கூட்டம் அல்லது நிலத் திற்கு யிகையாய பாரம் பிறிதில்லை எ-று.

கடிந்தோலென்பது ஈண்டு மிக்க தண்டத்தின்மேற்றன்றி அதனைசெய் வான் மேற்றுயிற்று. அவன் அது செய்தற்கியைவாரை அல்லது கூட்டாமை யின் கல்லார்ப்பிணிக்குமென்றும், எனையவற்றையெல்லாம் பொறுக்கின்றது இயல்பாகலின் நிலத்திற்குப் பொறை அதுவல்ல தில்லையென்றுங் கூறினர்.

நிலக்கென்பது செய்யுள் விகாரம். இதனால் வெருவக்த செய்தலின் குற்றம் கூறப்பட்டது.

(தெ- ப - ரை)—கடுங்கோல் - கடுங்கோலாலனுகிய அரசன், கல்லார் - (நீதிநூல்முதலியவற்றைக்) கல்லாதவரை, பிணிக்கும் - (தன க்குக்காரியஞ்செய்பவராகக்) கூட்டாகிற்பன்; அதுஅல்லது - அக் கூட்டமல்லாமல், நிலக்கு - பூமிக்கு, பொறை - (அதிகமான) பாரம் இல்லை - (வேறே) இல்லை.

ருஅம் அதிகாரம்—கண்ணோட்டம்.

அம்தாவது தன்னெடு பயின்றுரைக் கண்டால் அவா கூறியன மறுக்க மாட்டாமை. இஃது அவர்மேற்கணசென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த் தாயிறது. மேல் வெருவக்தசெய்யாமையுட் கூறியவதனையே சிறப்புப்பற்றி விரித்துக் கூறுகின்றமையின், இஃதன்பின் வைக்கப்பட்டது.

க. கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மைபா னுண்டி வுலகு

(பரி-ரை.) எ-து.—கண்ணோட்டமென்று சொல்லப்படுகின்ற சிறப்பு டைய அழகு அதிசாமாட்டு உண்டாகலான் இவ்வுலகம் உண்டாகின் றது, எ-று,

கழிபெருங்காரிகையென்புழி ஒருபொருட்பன்மொழி இவ்வுயிரழகதி சிறப்புண் ணினறது. இவ்வழகு அத்தருமப்பாகலின், உண்மையானென நிலை பேறுன கூறினர். இன்மை வெருவக்தசெய்தலாகலின் அவாஅாட்டு வாழ்வார் புலியைஅடைந்த புல்வாயினம்போன்று மெஞ்சாமைபற்றி, இவ்வுலகுண் டென்றார்.

(தெ - ப - ரை)—கண்ணோட்டம் என்னும் - கண்ணோட்ட மென்றுசொல்லப்படுகிற, கழிபெருங்காரிகை – மிக்கசிறப்புடைய அழகானது, உண்மையால் - (அரசரிடத்தில்) உண்டாதலால், இவ் வுலகு-இந்தவுலகம், உண்டி-உண்டாகின்றது.

க. கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

(பரி-ரை.) எ-து,—உலகநடை கண்ணோட்டத்தின்கணணே நிகழ்வது ஆகலான், அக்கண்ணோட்டமில்லாதார் வாளாதல் இந்நிலத்திற்குப் பார மாதற்கே, பிறிதொன்றற்கு அன்று, எ-று.

உலகடையாவது—ஒப்புரவுசெய்தல், புறந்தருதல், பிழைத்தனபொறுத்தலென் றிவைமுதலாயின. அவை நிகழாமையால் தமக் நம் பிறர்க்கும் பயன்படாரென் பதுபற்றி, நிலசகுபபொறை யென்ருர். ஆதறகென்பதுசொல் லெச்சம். இவை பிணைபொட்டானுங கணஞேட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—உலகுஇயல் - உலகநடையானது, கண்ணேட்டத்து - கண்ணேட்டத்தினிடத்தே, உள்ளது - உண்டாவது (ஆதலால்), அஃதுஇலார் - அக்கண்ணேட்ட மில்லாதவர், உண்மை - உள்ளவராதல், நிலக்கு - பூமிக்கு, பொறை-பாரமாவதற்கே (வேறென்றுக்கு அன்று)

ரு பண்ணெண்ணும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங் கண்ணேட்ட மில்லாத கண்

(பரி-ரை.) எ-து,—பண என்னபயத்தாம் பாடறெழிலோடு பொருத்தம் இன்ருயின்; அதுபோலக் கண என்ன பயத்தாம கணஞேட்டமில்லாதவிடத்து, எ-று.

பண்கண என்பன சாதிப் பயர. பண்களாவன பாலையாழ் முதலிய நூற்றுமூன்று. * பாடற்றெழில்களாவன யாழின்கண வாதல் முதலிய எட்டும், † பண்ணல் முதலிய எட்டும், மிடறறின்கண எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலமென்னும் மூன்றும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ண முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இவற்றோடியையாதவழிப் பண்ணற் பயனிலவாதலாறுபோலக் கணஞேட்டத்தியையாதவழிக் கண்ணற் பயனில்லையென்பதாம் கண என்றவழி நிகழ்தல்பற்றி அதனே யிடமாக்கினர். இறுதிக்கட் கணணென்பதனைக் ‖ ''கணணகன் ஞாலம்'' என் புழிப்போலகொள்க.

(தே - ப - ரை.)—பண் - இசையானது, பாடற்கு - பாடற் றெழிலோடு, இயைபுஇன்றேல - பொருத்தமில்லையாயின், என் ஆம் - என்னபயனுடையதாம்; (அதுபோல) கண் - கண்ணானது, கண்ணேட்டம் இல்லாதகண் - கண்ணேட்டமில்லாத இடத்து, என் ஆம் - என்னபயனுடையதாம்

* யாழ்தலைமுதலிய இசைகரணங்களொட்டாவன யாழ்தல், வடித்தல், உரித்தல், உறழ்தல், உருட்டல், திருட்டல், எளனல், பட்டடை எனவிவை

† பண்ணல முதலிய கலிரதொழிலகளொட்டாவன பண்ணல, பரிவட்டணை, ஆராய்தல், தையரல், செலவு, விசோபாடடி, கைபுழ் குறப்போகரு எனவிவை.

‖ திரிகடுகம், 6.

ச. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினுற்
கண்ணேணட்ட மில்லாத கண்

(பரி-ரை) எ-து,—கண்டார்க்கு முகத்தின்கண் உளபோற்றோன்றல் அல்லது வேறென்ன பயனைச்செய்யும், அளவிறவாத கண்ணேணதலையுடைய அல்லாத கண்கள், எ-று.

தோன்றல் அல்ல தென்னுஞ் சொறகள அவாய்நிலையான் வந்தன. கழி கண்ணேணட்டதனி னீக்குதறகு, அளவினனென்றார். ஒருபயனையுஞ் செய்யா வென்பது குறிப்பெசசம்.

(தெ - ப - ரை)—அளவினால் - அளவோடுகூடி, கண்ணேணட்டம்இல்லாத - கண்ணேணதலில்லாத, கண் - கண்கள், முகத்து - (கண்டோர்க்கு) முகத்தினிடத்து, உளபோல் - உள்ளனபோல் தோன்றுவதல்லது, ஒன்செய்யும் - வேறொன்னபயனைச்செய்யும்.

நி. கண்ணிற் கணிகலங் கண்ணேணட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப படும்.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் கண்ணிற்கு அணியுங் கலமாவது கண்ணேணட்டம்: அகலமில்லையாயின் அஃதறிவுடையாராத புண்ணென்றறியப் படும், எ-று

வேறணிகலம் இன்மையின் கண்ணிற்கு கலமென்றும், கண்ணுய்த் தோன்றினும் சோர்வராமை புலன்படாலாலுந் துயரவிளைவ்கோக்கிப் புணணென்றுணரப் படுமென்றல கூறினர். இவை மூன்றுபாட்டானும் ஓடாதநின்ற கண்ணின்குறறங கூறபபட்டது.

(தெ - ப - ரை.)—கண்ணிற்கு - (ஒருவனது) கண்ணிற்கு, அணிகலம் - அணிகற் தரியஆபரணம், கண்ணேணட்டம் - காட்சிவிளையமாம்; அஃது இன்றேல் - அப்பரணம் இல்லையாயின், புண் என்று உணரப்படும் - (அறிவுடையோரால்) அது புண்ணென்று அறியப்படும்

ரு மண்ணே டியைந்த மரத்தினையர் கண்ணே
டியைந்தகண் ணேணடா தவர்

(பரி-ரை.) எ-து —நுதற்குரிய கண்ணேணடியைத்துவைத்து அஃதோடா தவர் இயங்காநின்றார் ஆயினும் மண்ணேணடு பொருந்திநிறகின்ற மரத்தினை யொப்பர், எ-று.

ஓடாதவரென்புழிச கினைவினை முதன்மேனின்றது. மரமுங் கண்ணே டியைந்து கண்ணேடாமையின், இது தொழிலுவமம். இதனைச் சுதமண் ணேடு கூடிய மரப்பாவையென் றுரைப்பாருமூளர். அஃதுரை அன்மை காணப்படுகை கண்ணனன்றி அதனுண் மறைந்துநிற்கின்ற ஒருசாருள்ளீட் டாற் கூறினமையானும், * "மரக்கணேடு மணணுள்வாரா கண்ணென்-றிரக் கண்டாய்" என்பதனானுமறிக.

(தெ - ப - ரை)—கண்ணேடு - (தாட்சிணரிப்படுதற்குரிய) கண்ணேடு, இயைந்து - கூடியிருந்தும், கண்ணேடாதவர் - தாட்சி ணியப்படாதவர், (கடந்து நிரிபவராயினும்), மண்ணேடு இயைந்த - மண்ணேடு பொருந்திநிற்கின்ற, மரத்தனையர் - மரத்தை ஒப்பர்.

எ கண்ணேட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணேட்ட மின்மையு மில்.

(பரி-ரை.) எ-து,—கண்ணேட்டமில்லாதவர் கண்ணுடையரும் அல்லர்; கண்ணுடையவர் கண்ணேட்டமிலராதலும் இல்லை, எ-று.

கண்ணுடையராயின் காட்சிக்கண்ணே அஃதோடும் என்பதுபற்றிக் கண்ணேட்டமில்லவர் கண்ணிலரெனக் கூறிப் பின் அதனை எதிர்மறைமுகத் தான் விளக்கினர். உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. இவை யிரண்டு பாட்டானுங் கண்ணேடாதாரது இழிவு கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—கண்ணேட்டம் இல்லவர் - தாட்சிணியம் இல்லாதவர், கண்இலர் - கண்ணுடையருமல்லர்; கண்உடை யார் - கண்ணுடையவர், கண்ணேட்டம்இன்மையும் - தாட்சி யம் இலராதலும், இல் - இல்லை.

அ. கருமஞ் சிதையாமற் கண்ணேடை வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(பரி-ரை.) எ-து —முறைசெய்தலாகிய தந்தொழிலழியாமற் வல்ல வேந்தர்க்கு உரித்தாந் தன்மையுடைத்து இவ்வுலகம், எ-று.

தம்மோடு பயின்றார பிறரை யிடுக்கண் செய்துழி அவரைக் கண்ணேடி ஒருதார்க்கு முறை சிதைதல் மேல் ‡ "ஓர்ந்துகண் ணேடாது" என்ற முறை

* மரகணம் நாணுமே லலீயா னெஞ்சே - மரகணமே ணாணுமாயா கண் ணென் - றிரக்கண்டாய - வாளுழுவை வெல்கொடியான் வண்புனலீர் நாடற்கென் - றேளுமுயர தோன்றுத தொழுது - முத்தொள்ளாயிரம்,

‡ குறள், இருந்-ம் அதி, ச.

யிலக்கணத்தானும் பெற்றும். முறை சிதையவரும்வழிக் கண்ணேடாமையும் வராவழிக் கண்ணேடலும் ஒருவற்கியல்பாத லருமையின் கண்ணேடவல் லார்க்கென்றும், அவ்வியல்புடையார்க்கு உலகமுழுதும் நெடுங்காலஞ் சேற லின் உரிமையுடைதென்றுங் கூறினர். இதனாற் கண்ணேடுமாறு கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—இவ்வுலகு - இவ்வுலகம், கருமம் - (நீதி செய்தலாகிய தமது) தொழில், சிதையாமல் - அழியாமல், கண் ணேட வல்லார்க்கு - தாட்சிணியப்படவல்ல அரசர்க்கு, உரிமை - உரியதாந் தன்மையை, உடைத்து - உடையதாம்.

கூ. ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணேடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

(பரி-ரை.) எ-து,—தம்மை ஒறுக்கும் இயல்புடையாரிடத்தும் கண் ணேட்டம் உடையராய்க் குற்றத்தைப் பொறுக்குமியல்பே அரசர்க்குத் தலை யாய இயல்பாவது, எ-று.

பண்பினுென்றதனுல் அவர்பயிற்சி பெற்றும். ஒறுத்தாற்றும், பொறுத் தாற்று மென்பன ஈண்டொருசொன்னீர.

(தே - ப - ரை.)—ஒறுத்தாற்றும் பண்பினர்கண்ணும் - (தம் மை) வருத்தும் இயல்புடையவரிடத்தும், கண்ணேடி - தாட்சிணிய முடையராகி, பொறுத்தாற்றும் பண்பே - (அக்குற்றத்தைப்) பொறுக்குந் தன்மையே, தலை - (அரசர்க்கு) முதன்மைபாகிய நற் குணம்.

கo. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

(பரி-ரை.) எ-து,—பயின்றூர் தமக்கு நஞ்சிடக்கண்டுவைத்தும் கண் மறக்கமாட்டாமையின் அதனேயுண்டு பின்னும்அவரோடு மேவுவர் யாவ ராலும் விரும்பத்தக்க கண்ணேட்டத்தினே வேண்டுமவர், எ-று.

நாகரிகமென்பது கண்ணேட்டமாதல் * "முந்தை யிருத்து நட்டோர் கொடுப்பி—னஞ்சு முண்பர் கனிகா கரிகர்." என்பதனுலுமறிக. அரசர் அவரை ஒருகால் கண்ணேடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ்செய்துழியென்பது இவ்விரண்டுபாட்டானும் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—நயத்தக்க - (யாவராலும்) விரும்பத்தக்க, நாகரிகம் - தாட்சிணியத்தை, வேண்டுபவர் - விரும்புவோர், நஞ்சு -

* நற்றிணை, கூடுதி

நஞ்சை, பெயக்கண்டும் - (பழகினவர்) இடக்கண்டும், உண்டு - (மறுக்கமாட்டார்) அதனை) உண்டு, அமைவர் - (பின்னும் அவரோடு பழகுவர்.

இகூம் அதிகாரம்—ஒற்றுடல்.

அஃதாவது பகை, நொதுமல், நட்பென்னும் மூன்றுதிறத்தார் மாட்டும் நிகழ்ந்தன அறிதற்கு ஒற்றரை அளத்தல். மேற்சொல்லிய இலக்கணத்தனைய அரசனுக்குத் தன்னுடு செலுத்துங்காலும் பிறர்நாடு கொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றாராகலின், அவ்விருமைக்கும் இன்றியமையாதாய இது முன்வைக்கப்பட்டது.

க. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுங்
தெற்றென்க மன்னவன் கண்.

(பரி-ரை.) எ-து,—ஒற்றும் புகழமைந்த நீதிநூலுமாகிய இவை யிரண்டனையும் அரசன் தன்னிரண்டு கண்ணுமாகத் தெளிக, எ-று.

ஒற்று தன்கண் செல்லமாட்டாத பரப்பெலாஞ்சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தனவெல்லாம் உணர்த்தலானும், நூல் அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளெயெல்லாஞ் சொல்லி யுணர்த்தலானும், இவ்விரண்டனையுமே தனக்கனக்கண்ணும் ஞானகண்ணுமாகத துணிந்து கொண்டு ஒழுகுக என்பதாம். ஒற்றினை ஒற்றென்றார், வேந்தனை வேந்தென்றாற்போல. தெற்றென்க என்பது தெற்றென்என்பது முதனிலையாகவந்த வியங்கோள். அது தெற்றென என்னுஞ் செயவெனசசதானறிக. இதனால் ஒற்றினது சிறப்புக்கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—மன்னவன் - அரசன், ஒற்றும் - ஒற்றனும், உரைசான்ற - புகழ்நிறைந்த, நூலும் - (நீதி) நூலும், இவைஇரண்டும் - ஆகிய இவ்விரண்டையும், (கண்) - தன்னிருகண்களுமாக, தெற்றென்க - தெளியக்கடவன்.

உ. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

(பரி-ரை.) எ-து,—எல்லார்கண்ணும் நிகழ்வன எல்லாவற்றையும் நான்றோறும் ஒற்றன் விரைந்தறிதல் அரசனுக்கு உரியதொழில், எ-று.

எல்லார்க்குமென்றது மூன்றுதிறத்தாரையும். நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. நிகழ்வனவெல்லாமென்றது கல்லவுந் தீயவுமாய

சொற்களையுஞ் செயல்களையும். அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத் தக்கவழியாகத் தேறுதலாகச் செய்யவேண்டுதலின் வல்லறிதலென்றும், அவ்வீருதொழிற்கும் அறிதல் காரணமாகலின் அதனையே உபசாரவழக்காற் றொழிலென்றுங் கூறினர். ஒற்றுனென்பது அதிகாரத்தான் வந்தது. இதனுல் ஒற்றினுபயன் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—எல்லார்க்கும் - எல்லாரிடத்தும், நிகழ் பவையெல்லாம் - நடப்பன எல்லாவற்றையும், நாள்தோறும் - தினந்தோறும், வல்அறிதல் - (ஒற்றனுலே) விரைந்தறிதல், வேந் தன்தொழில் - அரசனுக்கு உரிய தொழிலாம்.

கூ. ஒற்றினு னெற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

(பரி-மார.) எ-து;—ஒற்றினுனே எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றுவித்தது அவற்றுன் எய்தும் பயனே ஆராயாத அரசன் வென்றி யடை யக்கிடந்தது வேறொரு தெறியில்லை, எ-று.

அந்நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்களியதனுல் பிறிதிற்றீரா மையின், கொற்றங்கொளக் கிடந்ததில்லென்றார். இதற்குக் கொளக்கிடந்த தொரு வென்றியில்லையென் றுரைப்பினு மமையும். இதனுல் அத்தொழில் செய்யாதவழி வருங்குற்றங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—ஒற்றினுன் - ஒற்றனைக்கொண்டு, ஒற்றி - (எல்லாரிடத்தும் நிகழ்ந்தவைகளை) அறிந்துவரச்செய்து, பொருள்- (அவற்றுல் அடையும்) பயனை, தெரியா - ஆராய்ந்தறியாத, மன்ன வன் - அரசன், கொற்றங் கொளக்கிடந்தது - வெற்றியடையக் கிடந்தது, இல் - (வேறொரு வழி) இல்லை.

ச. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றுங்
கனைவரையு மாராய்வ தொற்று.

(பரி-ரை.) எ-து,—தங்காரியஞ்செய்வார், சுற்றத்தார், பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையும் சொற்செயல்களான் ஆராய்வானே ஒற்ற னுவான், எ-று.

தம்மென்றது அரசனை களைப்படுத்தி. அவனுக்குக் காரியஞ்செய்வார் செய்வனவும், சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்துஞ் செய்வனவும், பகை வர் தன்அற்றம் ஆராய்தலும் மேற்றேறப்படுதலும் முன்னிட்டுத் தன்னிடத் துச் செய்வனவு மறிந்து, அவற்றிற் கேற்றன செய்யவேண்டுதலின், இம்

மூவகையாரையும் எஞ்சாமல் ஆராயவேண்டுமென்பார், அனைவரையு மாராய்வ தொற்றென்றார்.

(தே - ப - ரை.)—தம் - தம்முடைய, வினைசெய்வார் - காரியஞ்செய்பவர், சுற்றம் - சுற்றத்தார், வேண்டாதார் - பகைவர், என்ற - என்றுசொல்லப்பட்ட, அனைவரையும் - யாவரையும், ஆராய்வது - (சொல்லாலும்செயலாலும்) ஆராய்பவனே; ஒற்று - ஒற்றனுவான்.

நி. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா நியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

(பரி-ரை.) எ-து,—ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுறுத வடிவோடு பொருந்தி அவர் ஐயுற்றறியலுறின் செயிர்த்து நோக்கிய அவர்கண்ணிற கஞ்சாது நின்று நான்குபாயமுஞ் செய்தாலும் மனத்துகொண்டவற்றை உமிழாமை வல்லவனே ஒற்றனுவான், எ-று.

காடாவென்பது கடுக்கும் பெயரெச்சத்தெதிர்மறை. ஐயுறுத வடிவாவன பார்ப்பார், வணிகர் முதலாயினர் வடிவு.

(தெ - ப - ரை.)—கடா - (எவரது செய்தியை அறிதற்குச் சென்றானே அவராலே) சந்தேகிக்கப்படாத, உருவொடு - வடிவோடு (பொருந்தி), கண்அஞ்சாது - (அவர்சந்தேகித்து அறியத் தொடங்கினால கோபித்துப்பார்க்கின்ற அவர்) கண்ணிற்கு அஞ்சாமனின்று, யாண்டும் - நான்குபாயங்களும் செய்தாலும், உகாமை (மனத்திலுள்ளவைகளை) உமிழாதிருத்த, வல்லதே - வல்லவனே, ஒற்று - ஒற்றனுவான்.

சு. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாரா யிந்
தென்செயினுஞ் சோர்விலை தொற்று.

(பரி-லா.) எ-து,—முற்றத்துறந்தாராயும் விரதவொழுக்கினாயும் உள்புகுதற் கரியவிடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டுவன ஆராய்ந்தறிந்து ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து எல்லாத்துன்பமுஞ்செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனுவான், எ-று.

விரதவொழுக்கம்—தீர்த்தயாத்திரை முதலாயின. செயினுமென்பது அறவோரென்று செய்வாரின்மை விளக்கி நின்றது. மேல் நால்வகையுபாயத்தினுஞ் சோர்வின்மை சொல்லிவைத்து ஈண்டுத் தண்டத்தைப் பிரித்துக் கூறியது அதனது பொறுத்தற்கருமைச் சிறப்பு நோக்கி. இதனுள் படிவமென்றதனை வேடமாக்கித் துறந்தார் வேடத்தராகியென் றுரைப்பாருளர்.

(தே - ப - ரை.)—துறந்தார் (ஆகி) - முழுதுந்துறந்தோராகியும், படிவத்தர்ஆகி - விரதவொழுக்கத்தோராகியும், இறந்து - (போகக்கூடாதவிடங்களிலெல்லாம்) போய், ஆராய்ந்து - (ஆராயவேண்டுவனவற்றைஎல்லாம்) ஆராய்ந்தறிந்து, என்செயினும் - (அவ்விடத்துள்ளோர் சந்தேகித்துப்பிடித்து) என்னதுன்பஞ்செய்து கேட்கினும், சோர்விலது - தன்னை வெளிப்படுத்தாதவனே, ஒற்று - ஒற்றனுவான்.

எ. மறைந்தவை கேட்கவற் றுகி யறிந்தவை
பையப்பா டில்லதே யொற்று.

(பரி-ரை.) எ-து,—ஒற்றப்பட்டார் மறையசெய்த செயல்களை அவர்க் குள்ளாயினுாற் கேட்க வல்லனுய்க் கேட்டறிந்த செயல்களிற் பின் ஐயப் படாது துணியவல்லவனே ஒற்றனுவான், எ-று.

மறைந்தவை சொல்லுவாரை அறிந்து, அவர் அபிராமற் சென்றுட்டித் தாமேசொல்லும்வகை அதற்கேற்ற சொல்லாகச செயலாக முன்னே வினவித்து, அத்தொடர்பாற் கேட்குங்காலும் உரூதார் போன்றுன்று கேட்க வேண்டுதலின் கேட்கவற்றுகி யென்றும், கேட்டறிந்தவற்றைத் தானே ஐயுற்றுவந்து சொல்லின் அரசனுல் அவற்றிற்கேற்ற வினை செய்யலாகாமையின் ஐயப்பாடில்லதே யென்றுங கூறினர். இவை கான்குபாட்டானும் ஒற்றின திலக்கணங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—மறைந்தவை - (எவரதுசெயல்களை அறியச் சென்றுனை அவரது) மறைவாயுள்ளசெயல்களை, கேட்கவற்றுகி - (அவருக்கு உள்ளானவராலே) கேட்கவல்லவனுகி, அறிந்தவை - (கேட்டு) அறியப்பட்ட அச்செயல்களிலே, ஐயப்பாடு இல்லதே - (பின்) சந்தேகப்படுதலில்லாதவனே, ஒற்று - ஒற்றனுவான்.

அ. ஒற்றிறுற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினு லொற்றிக் கொளல்.

(பரி-ரை.) எ-து,—ஒருொற்றன் ஒற்றி வந்தறிவித்த காரியத்தன்னையும் பிறனுெருொற்றனுலும் ஒற்றுவித்து ஒப்புமை கண்டுகொள்க, எ-று.

ஒற்றப்பட்டாரோ டொத்துரைன்று மாறுபடக்கூறலும் கூடுமாகலின், ஒருவன்மாற்றந் தேறப்படா தென்பதாம்.

(தே - ப - ரை.) —ஒற்று - ஒருொற்றனுலே, ஒற்றி - மறைவாயறிந்துவந்து, தந்த-அறிவிக்கப்பட்ட, பொருளையும் - காரியத்தை

யும், மற்றும் ஓர் ஒற்றினை - பின்னும் ஒரொற்றனையும், ஒற்றி அறிந்துவரச்செய்து, கொளல் - (ஒப்புமைகண்டு) கொள்ளக்கடவன்.

கூ. ஒற்றிறற் றூணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றிறக்க தேறப் படும்

(பரி-ரை.) எ-து,—ஒற்றரை ஆளுமிடத்து ஒருவனே ஒருவனறியாமல் ஆள்க. அங்ஙனமாண்ட வொற்றர்மூவரை ஒருபொருணமேல வேறுவேறுவிட்டால் அம்மூவர் சொல்லும் பயனல் ஒத்தனவாயின், அது மெய்யென்று தெளியப்படும், எ-று.

ஆயினென்பது வருவிக்கப்பட்டது. ஒருவனே யொருவனறியின் தம்மூளியையந்து ஒப்பகூறுவராகலின் உணராமை யாள்கவென்றும், மூவர்க்கும் செஞ் சொற்றுமைப்படுத்தலும் பட்டால் நீதேற்றலுங் கூடாமையின் தேறப்படுமென்றுகூறினர். இதனுனே அஃதொத்திலராயின் பின்னும் ஆராய்கவென்பதூ உம் பெற்றும்.

(தே - ப - ரை.)—ஒற்று - (ஒற்றரை ஆளுமிடத்து) மற்றோரொற்றனை, உணராமை - அறியாதிருக்கும்படி, ஆள்க - ஆளக்கடவர், (அப்படி ஆளப்பட்ட ஒற்றர்களுள்), உடன்மூவர் - (ஒரு பொருண்மேல் வேறுவேறு விடப்பட்ட) மூவருடைய, சொல் - சொற்களும், தொக்க - (பயனல்) ஒத்திருக்குமாயின், தேறப்படும்- (அப்பொருள மெய்யென்று) தெளியப்படும்.

கஎ. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னுகு மறை.

(பரி-ரை) எ-து,—மறைந்தவை அறிந்து கூறிய ஒற்றின்கட் செய்யுஞ் சிறப்பினை அரசன் பிறரறியச செய்யாதொழிக; செய்தானுயின் தன்னகத்து அடக்கப்படும் மறையைத் தானே புறத்திட்டானும், எ-று.

மறையாவது அவனெறதனுயதூஉம், அவன் கூறியதூஉமாம். சிறப்புப் பெற்ற இவன் யாவனென்றும் இது பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவுவாரும் இறப்பாரும் அயலாராகலின், புறப்படுத்தா னுகுமென்றார். இவை மூன்றுபட்டானும் ஒற்றரையாளுமாறும், அவரான் நிகழ்ந்தன அறியுமாறும், அறிந்தாற் சிறப்புசசெய்யுமாறுங கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—ஒற்றின்கண் - (இரகசியங்களை அறிந்து சொல்லிய) ஒற்றனிடத்துச்செய்யும், சிறப்பு - சிறப்பை, அறிய - (பிறர்) அறிய, செய்யற்க - செய்யாதிருக்கக்கடவன்; செய்யின் -

செய்வானுயின், மறை - (தன்னுள் அடக்கப்படும்) இரகசியங்களை, புறப்படுத்தான் ஆகும் - (தானை) வெளிப்படுத்தினவன் ஆவான்.

கூ0-ம் அதிகாரம்—ஊக்கமுடைமை.

அஃதாவது மனம் மெலிதலின்றி விஞை செய்தற்கண் இளர்ச்சி யுடைத்தாதல். ஒற்றரான் நிகழ்ந்தன அறிந்து அவற்றிற்கேற்ற விஞை செய்வானுக்கு இஃது இன்றியமையாமையின், ஒற்றுடலின்பின் வைக்கப்பட்டது.

க உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று.

(பரி-ரை.) எ-து,—ஒருவரை உடையரென்று சொல்லச் சிறந்தது ஊக்கம்; அவ்வூக்கமில்லாதார் வேறுடையதுதானும் உடையராவரோ ஆகார்; எ-று.

வேறுடையதென்றது - முன்னெய்திநின்ற பொருளை. உம்மை விகாரத்தாற் றொக்கது. காக்கும் ஆற்றல் இலராகலின், அதுவும் இழப்பரென்பதாம்.

(தே - ப - ரை.)—உடையர் எனப்படுவது - (ஒருவரை) உடையவரென்று சொல்லுதற்குச் சிறந்தது. ஊக்கம் - மனவெழுச்சியாம்; அஃ தி்ல்லார் - அம்மனவெழுச்சியில்லாதவர், மற்றுடையது - வேறுடைத்தா யிருந்ததை. உடையரோ - தாம் உடையரா வரோ (ஆகார்).

உ உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(பரி-ரை.) எ-து —ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைகின்ற உடைமையாவது; மற்றைப் பொருளுடைமை நிலைசில்லாது நீங்கிப்போம், எ-று.

உள்ளம்—ஆகுபெயர். ஊக்கம் உள்ளதைப் பண்பாகலின், அதற்கு நிலைதற்றலும், பொருள் உடம்பினும் வேறுய் அழிதன்மாலைத்தாகலின் அதற்கு நிலை நில்லாமையுங் கூறினர்; கூறவே, அஃது உடைமை அன்றென்பது பெறப்பட்டது.

(தே - ப - ரை.)—உள்ளம்உடைமை - (ஒருவனுக்கு) ஊக்கம் உடைமையே, உடைமை - (நிலைபெற்ற) உடைமையாம்; பொருளுடைமை - மற்றைப்பொருளுடைமையானது, நில்லாது - நிலை பெறுமல், நீங்கிவிடும் - நீங்கிப்போம்.

சுo-ம் அதி. ஊக்கமுடைமை

ஈ ஆக்க மிழந்தேமென் றல்லாவா வூக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

(பரி-ரை.) எ-து,—இழந்தாமாயினும் யாம் கைப்பொருளேமிழந்தேமென்று அலமரார் நீலேபெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக வுடையார், எ-று.

ஆக்கம்—ஆகுபெயர். ஒருவந்தமாயவூக்கமென்க. கைத்து—கையகத்தாயபொருள்: * "கைத் தண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்" என்னுர் பிறரும். அல்லாவாமைக்கேது வருகின்ற பாட்டாற் கூறுப.

(தே - ப - ரை.)—ஒருவந்தம் - நிலேபெற்றதாகிய, ஊக்கம்-மனவுறுதியை, கைத்து - கைப்பொருளாக, உடையார் - உடையவர் நந்தாமாயினும்), ஆக்கம் - கைப்பொருளே, இழந்தேம் என்று - நந்தேமென்று, அல்லாவார் - மனஞ்சுழலார்.

சு. ஆக்க மதர்வினுப்ச் செல்லு மரசவிலா
வூக்க முடையா னுழை

(பரி-ரை.) எ-து,—அசைவில்லாத ஊக்கத்தை உடையான்மாட்டுப் பொருள் தானே வழிவினவிக்கொண்டு செல்லும், எ-று.

அசைவின்மை—இடுக்கண் முதலியவற்றுற் றளராமை. வழிவினவிச் சென்று சார்வார்போலத் தானே சென்று சாருமென்பார், அதர்வினுப்ச் செல்லுமென்னுர். எய்தின்ற பொருளினும் அதற்குக் காரணமாய வூக்கஞ் சிறந்ததென்பது இவை நான்குபாட்டானுங் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—அசைவுஇலா - அசைவில்லாத, ஊக்கம் உடையானுழை - மனத்திட்ப முடையவனிடத்தே, ஆக்கம் - பொருளானது, அதர்வினுப் - வழிதேட்டுக்கொண்டு, செல்லும் - போம்.

நி. வெள்ளத் தணைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தணைய துயர்வு.

(பரி-ரை.) எ-து,—நின்ற நீரினளவினவாம் நீர்ப்பூக்களின் தாளினது நீளங்கள், அதுபோல் மக்கள்தம் ஊக்கத்தளவினதாம் அவருயர்ச்சி, எ-று.

நியா நல்லிலே யாமிலேய மென்னுது—கைத்தண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்மின்—மூறுபியிருந்த கனியொழியச் தீவினிபா—னற்கா யுதிர்ந்துமுண்டு—நாலடியார், இரண்டாம் நிலைபாடை.

மலர்-ஆகுபெயர். நீர் மிக்கதனையும் மலர்த்தாள் நீளு வெள்ளத்தனையவென்றார். இவ்வுவமை ஆற்றலான் ஊக்க மக்களுயர்வு ரென்பது பெறப்பட்டது. உயர்தல் - பொருமிகுதல்.

(தே - ப - ரை.)—மலர்-நீர்ப்பூவின் காம்புகளிள் ளீளம், வெள்ளத்து அனைய - (நின்ற) நீரளவினவாம் ; (அதுபோல்) உயர்வு - உயர்ச்சியானது, மாந்தர்தம் - மனிதரது, உள்ளத்து அனையது - மனவுறுதியி னளவினதாம்

கூ. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

(பரி-ரை.) எ-து —அரசரானினர் கருதுவதெல்லாம் தம்முயர்ச்சியையே கருதுக; அவ்வுயர்ச்சி பால்வகையாற் கூடற்றில்லேபாயினும், அக்கருத்துத் தள்ளாமை நீர்மையுடைத்து, எ-று.

உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. தள்ளியவழியுந் தாளாண்மையிற் றவறின்றி நல்லோராற் பழிக்கப்படாமையின், தள்ளா வியற்கைத் தென்பதாம். மேல் 'உள்ளத்தனையதுயர்வு' என்றதனையே வற்புறுத்திய வாறு.

(தே - ப - ரை.)—உள்ளுவது எல்லாம் - (அரசரானவர்) நினைப்பதெல்லாம், உயர்வு - (தமது) உயர்ச்சியையே, உள்ளல் - நினைக்கக்கடவர்; அது - அவ்வுயர்ச்சியானது, தள்ளினும் - (விதிவகையி னூலே) கூடாமற் போயினும், தள்ளாமைநீர்த்து - (அந்நினைப்பு) தள்ளாமைக் குணமுடையதாம்

எ. நிதைவிடந் தெரல்கா ரூரவோர் புதையம்பிற்
பட்டுப்பா நீன்றுங் களிறு

(பரி-ரை.) எ-து,—தளிறு புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்துத் தளராது தன்பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல, ஊக்கமுடையார் தாம் கருதிய உயர்வுக்குச் சிதைவு வந்தவிடத்துத் தளராது தம்பெருமையை நிலை நிறுத்துவர், எ-று.

புதை—அம்புக்கட்டு. பன்மை கூறியவாறு. பட்டாரென்பது பட்டெனத் திரிந்துநின்றது. ஒல்காமை களிற்றுடனும், பாய்ந்துதல் உரவோருடனும், சென்றியைத்தன. தள்ளினும் தவறுது உள்ளியதுமுடிப்பரென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஊக்கமுடையாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—களிறு - யானை, புதைஅம்பின் - கட்டாகிய அம்பினாலே, பட்டு - (புண்) பட்டவிடத்து, பாடுஊன்றும் - (தன ராமல்தன்) பெருமையை நிலைநிறுத்தும்; (அதுபோல), உரவோர் - மனவெழுச்சியையுடையவர், சிதைவிடத்து - (தாம் நினைத்த உயர்ச் சிக்கு) அழிவுவந்தவிடத்து, ஒல்கார் - தளராமல் தம்பெருமையை நிலைநிறுத்துவர்.

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

(பரி-ரை.) எ-து,—ஊக்கமில்லாத அரசர் இவ்வுலகத்தாருள் யாம் வண் மையுடையேமென்று தம்மைத் தாமதித்துலேப் பெறார், எ-று.

ஊக்கம்இல்லையாகவே, முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவை முறையே இலவாம் ஆகலின், செருக்கெய்தாரென்றார். கொடை வென்றியி னுய இன்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனாகாமையின், தன்மையாற் கூறப் ...

(தே - ப - ரை.)—உள்ளம்இலாதவர் - மனவெழுச்சியில்லாத அரசர், உலகத்து - இவ்வுலகத்தாருள், வள்ளியம்என்னும் - வண் மையையுடையமென்று (தம்மைத்தாமே மதிக்கும்), செருக்கு - மதிப்பை, எய்தார் - பெறார்.

கூ. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

(பரி-ரை.) எ-து,—எல்லாவிலங்கினும் தான் பேருடம்பினது, அது வேயும் அன்றிக் கூரியகோட்டையும் உடையதாயினும், யானை தன்னேப்புலி யெதிர்ப்படின் அதற்கஞ்சும், எ-று.

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய்வலியுங் கருவிச் சிறப்பும் உடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான் அஃதுடைய அதற்கு அஞ்சுமென்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியுங் கருவிச்சிறப்பும் உடையராயினும் அரசர் ஊக்கமிலராயின் அஃதுடைய அரசர்க் கஞ்சுவரென் பது தோன்ற நின்றமையின், பிறிதுமெழிதல்.

(தே - ப - ரை.)—யானை - யானையானது, பரியது - (எல்லா மிருகங்களினும்) பெரிய உடம்பையுடையது, (அதுவும்அன்றி) கூர்ங்கோட்டது - கூர்மையான கொம்புகளையுமுடையது, ஆயினும்-

ஆளனும், புலி - புலியானது, தாக்குறின் - (தன்னை) எதிர்ப்படின், வெளூஉம் - (அதற்கு) அஞ்சும்.

கo. உரமோருவற் குள்ள வெறுக்கை யஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு.

(பரி-ரை.) எ-து,—ஒருவற்குத் திண்ணியஅறிவாவது ஊக்கமிருதி; அவ் வூக்கமிருதியில்லாதார் மக்களாகார், மரங்களாவார்; சாதிமரங்களோடு இம் மரங்களிடை வேறுறுமை வடிவு மக்கள்வடிவே, பிறிதிலவே, எ-று.

உரமென்பது அறிவாதல்; "உரனென்னுந் தோட்டியான்" என்பதனு ணுமறிக. மரமென்பது சாதியொருமை. மக்கட்குள்ள நல்லறிவுங் காரியமுயற் சியும் இன்மைபற்றி மரமென்றும், மாதிரருள்ள பயன்பாடின்மைபற்றி மக் களாதலே லேதென்றுங் கூறினார். பயன் பழமுதலியவும் தேவாகோட்டம், இல்லம், தேர், நாவாய் டீட்கு உறுப்பாதலும் முதலிய. இவை மூன்றுபாட்டா லும் ஊக்கமில்லாதாரது இழிபு கூறப்பட்டது.

(தே - ப - ரை)—ஒருவற்கு - ஒருவனுக்கு, உரம் - திடமான அறிவாவது; உள்ளவெறுக்கை - மனவெழுச்சியின் மிகுதியாம்; அஃது - அதனை, இல்லார் - இலலாதவர், மரம் - [மனிதராகார்] மரங்களாவார்; வேறு - சாதிமரங்களோடு இம்மரங்களிடத்து)வேற் றுமை, மக்கள் ஆதலே - மனிதவடிவாயிருக்கையே, [வேறில்லை].

கூக்-ம் அதிகாரம்—மடியின்மை.

அஃதாவது கருதியன செய்யுங்காற் சோம்புதலில்லாமை. ஊக்கமுடை யார்க்கு ஒரோவழிக் குணவயத்தான் மடி வருதல்நோக்கி, இஃதூக்கமுடை மையின்பின் வைக்கப்பட்டது.

க. குடியென்னுங் குன்று விளக்க மடியென்னு
மாசூர மரய்ந்து கெடும்.

(பரி-ரை.) எ-து,—தான் பிறந்த குடியாகிய நந்தாவிளக்கு ஒருவன் மடியாகிய இருள் அடர நந்திப்போம், எ-று.

உலகநடை:[1] எனுமிணையும் இடையுறுத தன்னுட்பிறந்தாரை விளக்கு தலின் குடிவிளக்குக் குன்றுவிளக்கமென்றும், தாமதகுணத்தான் வருதலின் மடியை மாசென்றும், அஃது ஏனையிருன்போலாது அவ்விளக்கத்தைத் தான்

[1] குறள். கூ-ம்அதி. மீதூராபெருமை, ச.

அடர்ந்து மாய்க்கும் வலியுடைமையின் மாசூர மாய்ந்து கெடுமென்றுங் கூறினர். கெடுதல் - பெயர்வழக்கமும் இல்லையாதல்.

(தே - ப - ரை.)—குடியென்னுங் குன்றுவிளக்கம் - (தான் பிறந்த) குடியாகிய கெடாத விளக்கானது, மடியென்னுமாசு - (ஒருவனது) சோம்பலாகிய இருளானது, ஊர - அடர, மாய்ந்துகெடும்- கெட்டுப்போம்.

உ. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

(பரி-ரை.) எ-து,—தாம் பிறந்த குடியை மேன்மேலுயரும் நற்குடியாக வேண்டுவார் மடியை மடியாகவே கருதி முயற்சியோடொழுகுக, எ-று.

முயற்சியோடென்பது அவாய்நிலையான் வந்தது. தெருப்பிற்கொடியது பிறிதின்மைபற்றி செருப்பை செருப்பாகவே கருதுகவென்றுரைத்போல மடியிற்றீயது பிறிதின்மைபற்றிப் பின்னும் அப்பெயர்தன்னானே கூறினர். அங்ஙனங்கருதி அதனைச கடிந்து முயன்றொழுகுவே தாமுயர்வர், உயரவே, குடியுயருமென்பார், குடியைக் குடியாகவேண்டுபவரென்றார். அங்ஙனம் ஒழுகாக்காற் குடியழியுமென்பது கருத்து. இனி மடியாவென்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுகவென்று உரைப்பாருமுளர்.

(தே - ப - ரை.)—குடியை - (தாம்பிறந்த) குடியை, குடி ஆக - (மேன்மேலுயரும்) நற்குடியாக, வேண்டுபவர் - விரும்புவோர், மடியை - சோம்பலை, மடி ஆக - சோம்பலாகவே (நினைத்து), ஒழுகல்- (முயற்சியோடு) நடக்கக்கடவர்.

ஊ. மடிமடித் தொன்டொழுகும் பேதை பிறர்த
குடிமடியுந் தன்னினு முந்து.

(பரி-ரை.) எ-து,—விடத்தகுவதாய மடியைத் தன்னுள்ளே கொண்டொழுகும் அறிவில்லாதான் பிறந்தகுடி அவன்தன்னினும் முந்துற அழியும், எ-று.

அழிபு தருவதனை அகத்தே கொண்டொழுகுதலின் பேதையென்றும், அவனுற் புறந்தரப் படுவதாகலின் குடி தனனினு முந்துற அழியுமென்றுங் கூறினர். ஆக்கத்திற் பிற்படினும் அழிவின் முற்படுமென்பதாம்.

(தே - ப - ரை.)—மடி-மடிக்கத்தகுவதாகிய, மடி-சோம்பலை, கொண்டு - (தன்னுள்ளே) கொண்டு, ஒழுகும் - நடக்கும், பேதை -

அறிவில்லாதவன், பிறந்த - தான்பிறந்த, குடி - குடியானது, தன்னினும் - அவனினும், முந்து - முற்பட, மடியும் -

ச. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

(பரி-ரை.) எ-து,—மடியின்கண்ணே வீழ்கலாற்றிருந்திய முயற்சியில ராயினர்க்கு குடியும் மடிந்து குற்றமும் பல்கும், எ-று.

மடிந்தெனத் திரிந்து நின்ற வினையெச்சம் இலவென்னுங் குறிப்பு வினைப்பெயர் கொண்டது. குற்றங்கள் முன்னர்க்கூறுப. இவை நான்கு பாட்டானும் மடியின் தீமை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—மடி - சோர்ப்பதினே, மடிந்து வீழ்தலால், மாண்ட உஞற்று இலவர்க்கு - திருந்தமாகிய முயற்சியில்லாதார்க்கு, குடி - குடியும், மடிந்து - கெட்டு, குற்றம் - குற்றங்களும், பெருகும் - பல்கும்.

நு. நெடுநீர் மறவி மடி துயி ஞன்குங்
கெடுநீரார் காமக் கலன்.

(பரி-ரை.) எ-து,—மடியும், விரைந்துசெய்வதனை நீட்டிசெய்யும் இயல்பும், மறப்பும், துயிலும் ஆகிய இந்நான்கும் இறச்சும் இயல்பினையுடையார் விரும்பி யேறும் மரக்கலம், எ-று.

முன்னிற்கற்பாலதாய மடி செய்யுள்நோக்கி இடைநின்றது. நெடுமை யாகிய காலப்பண்பு அதன்கண் நிகழ்வதாய செயன்மே னின்றது. காலநீட் டத்தையுடைய செயன் முதன்மூன்றும் தாமதகுணத்திற் றோன்றி உடன் நிகழ்வனவாகலின், மடியோடு ஒருங்கெண்ணப்பட்டன. இறக்கும் இயல்பு-நாளுலத்தல். இவை தன்புறு நீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி அவர் விரும்பிக் கொண்டவழித் துன்பத்திடை வீழ்த்தலின், நாளுலந்தார்க்கு ஆக்கம் பயப்பதுபோன்று காட்டி அவர் விரும்பி யேறியவழிக் கடலிடை வீழ்க்குங் கலத்தினையொக்கு மென்னும் உவமைநோக்குறிப்புக் காமக்கலனென் னுஞ் சொல்லாற் பெறப்பட்டது. இதற்கு விரும்பிப் பூணும் ஆபரணமென் றுரைப்பாரு முளர்.

(தே - ப - ரை.)—மடி - சோம்பலும், நெடுநீர் - (விரைவிற் செய்தற் குரியவைகளை) நீட்டித்துச்செய்யுங் குணமும், மறவி - மறதியும், துயில் - நித்திரையும், நான்கும் - ஆகிய இந்நான்கும், கெடுநீரார் - இறக்குமியல்பினையுடையவர், காமக்கலன் - விரும்பி யேறு மரக்கலமாம்.

சூ. படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

(பரி-ரை.) எ-து,—நிலமுழுதும் ஆண்டாலது செல்வம் தானே வந் தெய்தியவிடத்தும் மடியுடையார் அதனான் மாண்ட பயனை யெய்துத லில்லை, எ-று.

உம்மை எய்தாமை விளக்கிநின்றது. மாண்பயன் - பேரின்பம். அச் செல்வம் அழியாமற் காக்கும் முயற்சி யின்மையின் அழியும், அழியவே, தம் தன்ப நீங்காதென்பதாம். இதனாற் நிலமுழுதும் உடைய வேந்தர் தினையா தல் கூடிய விடத்தும் என்றுரைப்பாரு முளர்.

(தே - ப - ரை.)—படியுடையார் - நிலமுழுமையும் ஆண்ட அரசரது, பற்று - செல்வமான து, அமைந்தக்கண்ணும் - (தானே வந்து) சேர்ந்தவிடத்தும், மடியுடையார் - சோம்பலுடையவர், மாண்பயன் - (அதனால்) பெரும்பயனை, எய்தல்அரிது - அடைத

ஏ. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பார் மடிபுரிந் து
மாண்ட வுஞற்றி லவர்.

(பரி-ரை.) எ-து,—மடியை விரும்புவான் மாண்ட முயற்சியில்லா தார் தம் கட்டார்முன் கழறுதலை மகசெய்து அதனாற் பயன் காணுமையின் பின் இகழ்ந்துசொல்லுஞ் சொல்லைக்கேட்பர், எ-று

இடியென்னும் முதனிலைதொழிற்பெயரான், கட்டாரென்பது பெற் றும். அவரிகழ்ச்சி சொல்லவே, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவற்றிற்கெல்லாம் மாறு சொலலும் ஆற்றலின்மையின், கேட்பரென்றார்.

(தே - ப - ரை.)—படிபுரிந்து - சோம்பலை விரும்புதலால், மாண்ட - சிறந்த, உஞற்றுஇலவர் - முயற்சியில்லாதவர், இடிபுரி ந்து - (தம்கட்பினர்) கண்டித்துப் புத்திசொல்லி, (அதனாற்பயன் காணுமையினால்) எள்ளும்சொல் - (பின்) இகழுஞ்சொல்லை, கேட்

அ மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னெண்ணுர்க்
கடிமை புகுத்தி விடும்.

(பரி-ரை.) எ-து,—மடியினது தன்மை குடிமை உடையான் கண்ணே தங்குமாயின், அஃது அவனைத் தன்பகைவர்க்கு அடியனாந்தன்மையை அடை வித்துவிடும், எ-று.

மடியினதுதன்மை - காரிபக்கேடு. குடிமை - குடிசெய்தற்றன்மை. அஃது அதனையுடைய அரசன்மேற்றாதல், தன்னென்னுர்க்கென்றதனுன், அறிக. அடியளந்தன்மை - தாழ்ந்துரின்ற எவல்கேட்டல். இவை ரான்கு பாட்டானும் மடிமைக்குற்றங்கள் கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—மடிமை - சோம்பற்றன்மையானது, குடிமைக்கண் - குடிமையுடைய அரசனிடத்தே, தங்கின் - தங்குமாயின், (அது) தன்னென்னுர்க்கு - தன்பகைவர்க்கு, அடிமை - அடியளந்தன்மையை, புகுத்திவிடும் - அடைவித்துவிடும்.

கூ குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றற் கெடும்.

(பதி-ரை.) எ- ய—ஒருவன் தன் மடியாளுந்தன்மையை ஒழிக்கவே, அவன் குடியுள்ளும் ஆணமையுள்ளும் வந்த குற்றங்கள் கெடும். எ-று

மடியாளுந்தனமை - மடியுடைமைக் கேதுவாய தாமதகுணம். குடியாண்மை யென்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்த குற்றமென்றது மடியான்அன்றி முன்னே ப்ரகாணங்களான் நிகழ்ந்வற்றை. அவையும் மடியாணமையை மாற்றி முபதேசியுடையனுக நீங்குமென்பதாம்.

(தே - ப - ரை.)—ஒருவன் மடியாண்மை - ஒருவன் சோம்பலில் ஆளுந்தன்மையை, மாற்ற - ஒழிக்கவே, குடி - (அவனது) குடியுள்ளும், ஆண்மையுள் - ஆண்தன்மையுள்ளும், வந்தகுற்றம்-வந்த குற்றங்கள், கெடும் - கெட்டுபோம்

கூ. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
முயல தெலா மொருங்கு.

(பதி-ரை.) எ-து,—தன்னடியளவானே எல்லாவுலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுதையும் மடியிலாத அரசன் முறையான் அன்றி ஒருவ்வே யெய்தும், எ-று.

அடியளந்தானென்றது வாளா பெயராய் நின்றது. தாவியதென்பது இடைக் குறைந்து நின்றது. எப்பொழுதும் வினையின்கணணே முபதலின், இடையீடின்றி யெய்துமென்பதாம். இவை யிரண்டுபோட்டானும் மடியிலா தான் எய்தும் பயன் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—மடி இலா - சோம்பலில்லாத, மன்னவன் - அரசன், அடி - (தன்) அடியினது அளவினுலே, அளந்தான் - (எல்

லாவுலகங்களையும்) அளக்தகடவுள், தாயதுஎல்லாம் - கடந்தஉலக விரிவு முழுவதையும், ஒருங்கு - ஒருசேர, எய்தும் - அடைவான்

சுஉ-ம் அதிகாரம்—ஆள்வினையுடைமை.

அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சிஉடையனுதல். இஃது ஆளும் வினையெனக் காரியத்தாற் கூறப்பட்டது. மடிகெடுத்தாலும் வினை முயற்சியான் அன்றி ஆளப்படாமையின், இது மடியின்பின் வைக்கப்பட்டது.

க. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

(பரி-ரை.) எ-து,—தம்சிறுமை நோக்கி நாம் இவ்வினை முடித்தலருமை யுடைத்தென்றகருதித் தளராதொழிக; அது முடித்தற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சி யுண்டாக்கும், எ-று.

சிறுமைநோக்கியென்பது பெருமை தருமென்றதனுனும், வினைமுடித்தலென்பது அதிகாரத்தானும், வருவிக்கப்பட்டன. விடாது முயலத் தாம் பெரியராவர். ஆகவே, அரியனவும் எளிதின் முடியுமென்பதாம்.

(தே - ப - ரை.)—அருமைஉடைத்துஎன்று - (தமதுசிறுமை நோக்கி நாம் இத்தொழிலைமுடித்தல்) அருமையையுடையதென்று நினைத்து, அசாவாமைவேண்டும் - தளராதிருக்கவேண்டும்; பெருமை - (அத்தொழில் முடித்தற்கு ஏற்ற) பெருமையை, முயற்சி - முயற்சியானது, தரும் - (தமக்கு) உண்டாக்கும்.

உ வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

(பரி-ரை.) எ-து,—வினையாகிய குறையைச செய்யாதுவிட்டாரை உலகம் விட்டது; அதனைச் செய்யப்பெற்ற வினைக்கண் தவிர்ந்திருத்தலே ஒழிக, எ-று.

குறை - இன்றியமையாப்பொருள். அது * "பயக்குறை யில்லேதாம் வாழுநாளே" என்பதனுனுமறிக. இதற்கு வினைசெய்யவேண்டுங் குறையை நீங்கினுரின் நீங்கிற்றென் றுரைப்பாருமுளர்.

(தே - ப - ரை.)—உலகு - உலகமானது, வினைக்குறை-தொழிலாகியகுறையை, தீர்ந்தாரின்-செய்யாதுவிட்டவரை, தீர்ந்தன்று -

* புறநானூறு கஅஅ. மேலே எ-ம் அதி. புதல்வரைப்பெறுதல், ச-ம் குறளில் காண்க.

விட்டது; (அதனால்) வினைக்கண் - (செய்யத்தகும்) தொழிலினிடத்தே, வினைதடல் - செயலற்றிருக்கையை, ஓப்பல் - ஒழியக்கடவை.

கூ. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கி
வேளாண்மை யென்னுஞ் செருக்கு

(பரி-ரை.) எ-து,—முயற்சியென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தே நிலைபெற்றது எல்லார்க்கும் உபகாரஞ்செய்தலென்னும் மேம்பாடு, எ-று

பொருள் கைகூடுதலான் உபகரித்தற்குரியார் முயற்சியுடையரென்பார் அவ்வகைமை நோக்கி மேல்வைத்தும், அது பிறராட்டில்லையென்பார் தங்கிற்றேயென்றும் கூறினார். இவை மூன்றுபாட்டானும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வேளாண்மை என்னும் செருக்கு - (யாவர்க்கும்) உபகாரஞ் செய்தலென்னு மேம்பாடானது, தாளாண்மையென்னும் தகைமைக்கண்-முயற்சியென்றும் உயர்ந்தகுணத்தினிடத்தே, தங்கிற்று - நிலைபெற்றது.

எ. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடி கை
வாளாண்மை போலக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—முயற்சி யில்லாதவன் உபகாரியாந் தன்மை படைகண்டால் அஞ்சும் பேடி அதனிடத் தன்கையில் வாளை ஆளுதற் றன்மை போல இல்லையாம், எ-று.

ஆளென்பது முதனிலைத்தொழிற்பெயர். பேடி வாளைப் பணிகோடற் கருத்துடையளாயினும் அது கன்அச்சத்தான் முடியாதவாறுபோல முயற்சியில்லாதான் பலர்க்கும் உபகரித்தற் கருத்துடையனாயினும் அது தன்வறுமையான் முடியாதென்பதாம். வாளாண்மையென்பதற்கு வாளாற் செய்யும் ஆண்மையென் றுரைப்பாருமுளர். இதனுள் அஃதில்லாதானது குற்றங் கூறப்பட்டது

(தே - ப - ரை.)—தாளாண்மை இல்லாதான் - முயற்சியில்லாதவன், வேளாண்மை - உபகாரியாந்தன்மையானது, பேடி - (சேணைபைக்கண்டால் அஞ்சும்) பேடியானவன், கைவாள் ஆண்மைபோல-(அச்சேணையிடத்தே) கையில்வாளை ஆளுதற்றன்மைபோல, கெடும்-இல்லையாம்.

நி. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
தன்பந் துடைத்தூன்றுந் தூண்

(பரி-ரை) எ-து,—தனக்கின்பத்தை விரும்பானாகி வினைமுடித்தலிலே விரும்புவான் தன்கேளிராகிய பாரத்தின் தன்பத்தினை நீக்கி அதனைத் தாங்கு தூணும், எ-று.

இஃது ஏகதேசவுருவகம். ஊன்றுமென்றது அப்பொருட்டாதல் *"மதியாய் மற்றதன் வீழ்ன்றி யாங்கு" என்பதனுள்ளுமறிக. சுற்றத்தார் கட்டாயு வருமையுந்தீர்தது அவர்க்கு ஏமஞ்செய்யும் ஆற்றலே யுடையனாமெனவே தன்னைக் கூறவேண்டாவாயிற்று. காரியத்தைவிழையாது காரணத்தை விழைவான் எல்லாப்பயனு மெய்துமென்றதனுல், காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாதும் எய்தானென்பது பெற்றும். இதனுல் அஃதையானது நன்மை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—இன்பம்விழையான்-(தனக்கு)இன்பத்தை விரும்பாதவனுகி, வினைவிழைவான் - தொழில்முடித்தலிலேயே விருபுவோன், தன்கேளிர் - தன்சுற்றத்தாரது, தன்பம் - துன்பத்தை துடைத்து - போக்கி, ஊன்றும் - (குடும்பபாரத்தைத்) தாங்குவதாகிய, தூண் -

கூ. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

(பரி-ரை.) எ-து,—அரசர்மாட்டெனதாய முயற்சி அவரது செல்வத்தினை வளர்க்கும்; அஃதில்லாமை வறுமையை அடைவித்துவிடும், எ-று.

செல்வம் - அறவகை அகவகைகள். வறுமை - அவற்றுன் வறியராதலை அதனையடைவிக்கவே, பகைவரான் அழிவெனென்பது கருத்து

(தே - ப - ரை.)—முயற்சி-(அரசரிடத்துஉண்டாகிய) முயற்சியானது, திருவினை - (அவரது) செல்வத்தை, ஆக்கும் - வளர்க்கும் முயற்றுஇன்மை - அம்முயற்சியில்லாமையானது, இன்மை - வறுமையை, புகுத்திவிடும் - அடைவித்துவிடும்.

எ. மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
முகனுளா டாமரையி னாள்

னபபட்ட வால மரத்தை—அதனையாய மற்றதன் வீழ்ன்றி யாங்குக—ஒ லுமை தன்தைகட் டோனிற ருனபெறற—புசலவன் மறைப்பக் கெடும்—ாலடியா தாளாணமை எ,

(பரி-ரை.) எ-து,—தரியசேட்டை ஒருவன் மடியின்கண்ணே உறையும்; திருமகள் மடியிலாதானது முயற்சிக்கண்ணே உறையுமென்று சொல்லுவர் அறிந்தோர், எ-று.

பாவத்தின் சருமை அதன்பயனது முகத்தின்மேலே ஏற்றப்பட்டது. மடியும் முயற்சியும் உடையார்மாட்டு நிலைமை அவற்றின்மேல் வைத்துக் கூறினர். இவை யிரண்டுபோட்டாலும் அவ்விருமைக்குமாக எது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—மாமுகடி-தரியலட்சுமி, மடி-(சோம்பலினை) வனது) சோம்பலினிடத்தில், உளாள் - இருப்பாள்; தாமரையி னுள் - சிறந்தவியானவள், மடி இலா - சோம்பலில்லாதவனது, தாள் - முயற்சியினிடத்தில், உளாள் - இருப்பாள், என்ப - என்று சொல்லுவர் (அறிவுடையோர்).

அ பொறியின்மை யார்க்கும் பழி
தன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

(பரி-ரை.) எ-து,—பயனைத் தருவதாகிய விதியில்லாமை ஒருவர்க்கும் பழியாகாது; அறியவேண்டுமவற்றை அறிந்து வினைசெய்யாமையே பழியாவது, எ-று.

அறியவேண்டுவன வலி முதலாயின தெய்வம் இயையாவழி ஆள்வினை யுடைமையாற் பயனில்லையென்பாரை யார்க்கு, உலகம் பழிவினைபற்றிப் பழியாது ஈண்டைக் குற்றமுடைமைபற்றி யே பழிப்பதென்றார். அதனால் விடாது முயல்கவென்பது குறிப்பெச்சம்.

(தே - ப - ரை.)—பொறி இன்மை - (பயனைத்தருவதாகிய) விதியில்லாமை, யார்க்கும் - யாவர்க்கும், பழி அன்று-பழியாகாது; அறிவு அறிந்து - அறியவேண்டுமவை யறிந்து, ஆள்வினை இன்மை - தொழில்செய்யாமையே, பழி - பழியாகும்.

கூ. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

(பரி-ரை.) எ-து,—முயன்ற வினை பால்வகையாற் கருதிய பயனைத் தாராதாயினும் முயற்சி தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும், பாழாகாது, எ-று.

தெய்வத்தானையழித் தன்னளவின் மிக்க பயனைத் தருமென்பது உம்மையாற் பெற்றாம். இருவழியும் பாழாகல் இன்மையின், தெய்வநோக்கியிராது முயல்கவென்பது கருத்து.

(தே - ப - ரை.)—தெய்வத்தான் - (முயற்சி செய்ததொழில்) விதிவகையால், ஆகாதெனினும் - (தருகியபயனைத்) தாராதாயினும், முயற்சி - முயற்சியான து, தன்மெய்-தனக்கிடமாகிய உடம்பு, வருத்தக்கூலிதரும் - (வருத்திய) வருத்தத்தின் கூலியளவுதரும் [பாழாகாது].

கo. ஊழையு முப்பக்கஞ் காண்ப
தாமா தாளுற்று பவர்.

(பரி-ரை.) எ-து,—பயனே விலக்குவதாய ஊழினையும் புறங்காண்பர் அவ்விலக்கிற் கிளையாது வினையைத் தாழ்வற முயல்வார், எ-று.

தாழ்வறுதல் - சூழ்ச்சியினும், செயலி முதலிய அறிதலினும், செயலினுங் குற்றமறுதல். ஊழ் ஒருகாலாக இருகாலாகவல்லது விலக்கலாமையின் பல கான் முயல்வார் பயனெய்துவரென்பார், உப்பக்கங்காண்பரென்றார். தெய்வத்தான் இடுக்கணவரினும முயற்சி விடற்பாலதன்றென்பது இவை மூன்று பாட்டானுங கூறப்பட்டது.

(தே - ப - ரை)—ஊழையும் - (பயனைவிலக்குவதாகிய) விதியையும், உப்பக்கங்காண்பர்-புறங்காண்பர், உலைவு இன்றி - (அவ்விலக்கிற்கு) இளையாமல், தாமாதாது - குற்றமற, ஊற்றுபவர் - (தொழிலை) முயல்வோர்.

கூடம் அதிகாரம்—இடுக்கணழியாமை.

அஃதாவது வினைபின்கண் மேற்பல்வான், தெய்வத்தான் ஆக, பொருளின்மையான் ஆக, மெய்வருத்தத்தான் ஆகத் தனக்கிடுக்கண் வந்துழி, அதற்கு மனங்கலங்காமை. அதிகார முறைமையும்

க. இடுக்கண் வருங்கா னகுக வத
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் வினையாற் றனக்கிடுக்கண வருமிடத்து அதற்கழியாது உண்மகிழ்க; அவ்விடுக்கணே மேன்மேலடரவல்லது அம்மகிழ்ச்சிபோல்வது பிறிதில்லையாகலான், எ-று.

வினை இனிதாமுடிந்தழி நிகழற்பாலதாய மகிழ்சசியை அதற்கிடையே இடுக்கண் வருவழிச செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியான் அதனைத்தள்ளி அக்குறை முடிக்கும் ஆற்றலுடையனும் ஆகலின், அதனை யடுத்தூர்வது அஃதொப்பதில் லென்றார்

(தே - ப - ரை.)—இடுக்கண் - (ஒருவன் விதியால் தனக்குத்) தான்பமான தை, வருங்கால் - வருமிடத்து, நகுக - (அதற்குச்சலி யாமல்) மனமகிழக்கடவன்; அதனை - அத்தான்பத்தை, அடுத்து - மேலுமேலுமாய், ஊர்வது-தெருக்கவல்லது, அஃதொப்பது - அம் மகிழ்ச்சியைப்போல்வது. இல் - (வேறே) இலது (ஆதலால்).

---

2. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

(பரி-ரை.) எ-து,—வெள்ளம்போலக் கரையிலவாய இடும்பைகளெல் லாம் அறிவுடையவன் தன்னுள்ளதுதான் ஒன்றனை நீங்கக, அத்துணை யானே கெடும், எ-று.

இடும்பையாவது உள்ளத்து ஓர்கோட்பாடேயன்றிப் பிறிதில்லையென்ப தூஉம் அது மாறுபடக்கொள்ள நீங்குமென்பதூஉம் அறிதல் வேண்டுதலின், அறிவுடையானென்றும், அவ்வுபாயத்தெணமை தோன்ற உள்ளத்தினுள்ள வென்றுங் கூறினார். இவை யிரண்டுபொட்டானும் ஈழினுன் ஆய இடுக்கணுல் அழியாமைக்கு உபாயங கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வெள்ளத்தனைய - வெள்ளம்போலக்கரை யில்லாத, இடும்பை - துன்பமெல்லாம், அறிவுடையான் - அறிவு டையவன், உள்ளத்தின்-உள்ளத்தினாலே, உள்ள - (ஒன்றை) நினை த்தவளவிலே, கெடும் - கெட்டுப்போம்.

---

3. இடும்பைக் கிடும்பை படுப்ப திடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

(பரி-ரை.) எ-து,—வினைசெய்யுங்கால் அதற்கிடையே வந்த துன்பத் திற்கு வருந்தாதவர், அத்துன்பத்தைக்குத் தாம் துன்பம் வினைப்பர், எ-று.

வருந்துதல்-இளைத்துவிட நினைத்தல். மனத்திட்பம் உடையராய் விடாது முயலவே வினை முற்றுப்பெற்றுப் பயன்படும்; படவே, எல்லா விடும்பையு மிலவா மாகலின், இடும்பைக் கிடும்பை படுப்ப தென்றார். வருகின்ற பாட்டி ரண்டினும் இதற்கு இவ்வாறேகொள்க. சொற்பொருட்பின் வருநிலை.

(தே - ப - ரை.)—இடும்பைக்கு - (தொழில் செய்யும்போது அதற்கு நடுவிலே வந்த) துன்பத்திற்கு, இடும்பை படாதவர் - வருந்தாதவர், இடும்பைக்கு - அத்துன்பத்திற்கு, இடும்பை - துன் பத்தை, படுப்பர் - உண்டாக்குவார்.

சு. மடித்தவா யெல்லாம் பகடன்ன ணுற்ற
விடுக்க ணிடர்ப்பா டிடைத்து.

(பரி-ரை.) எ-து,—விலங்கிய வீடுகளெல்லாவற்றினுஞ் சகடமீர்க்கும் பகடுபோல வினையையெடுத்துக்கொண்டு உய்க்கவல்லானே வந்துற்ற இடுக்கண்தானே இடர்ப்படுதலே யுடைத்து, எ-று.

மடித்தவாயெல்லா மென்பது பொதுப்பட நின்றமையின், சகடத்திற்கு அளற்று நிலமுதலியவாயவும், பகைக்கு இடையூறுகளாகவுங் கொள்க. பகடு மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாடவழுந்தும் அரிதினுய்க்குமாறுபோலத் தன் மெய்வருத்தங் கூர்க்காது முயன் றுய்ப்பானென்பார், பகடன்ன னென்ருர்.

(தெ - ப - ரை.)—மடித்தவாய் எல்லாம் - தடைப்பட்டவிடங்களிலெல்லாம், பகடன்னான் - (பண்டியை இழுத்துச்செல்லுங்) கடாப்போலத் தொழிலே மேற்கொண்டு செலுத்தவல்லவனே; உற்ற - அடைந்த, இடுக்கண் - துன்பமான தை, இடர்ப்பாடு - தானே தன்பப்படுதலே, உடைத்து - உடையதாம்.

நி. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

(பரி-ரை) எ-து,—இடை விடாது மேன்மேல் வந்தனவாயினும், தன்னுள்ளக் கோட்பாடு விடாதான் உற்ற விடுக்கணடாம் இடுக்கணிலே பட்டுப் போம், எ-று.

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன வியாய்வருதலுமடங்க அடுக்கி வரினும்மென்ருர். அழிவென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மே னின்றது. இவை மூன்றுபாட்டானும் தெய்வத்தானுயதற் கழியாமைகூறப்பட்டது.

(தெ-ப - ரை.)—அடுக்கிவரினும் - இடைவிடாது மேலுமேலும் வந்தனவாயினும், அழிவுஇலான் - (தன்னுள்ளக் கோட்பாடு) விடாதவனே, உற்ற - அடைந்த, இடுக்கண் - துன்பமானது, இடுக்கண் படும் - (தான்) துன்பத்திலேபடும்.

சூ. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றேம்புத றேற்ற தவா.

சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், 3 அடி. (உரைநடை)

(பரி-ரை.) எ-து,—வறுமைக்காலத்து யாம் வறிய மாயினேமென்று மனத்தாற றுயருழப்பரோ, செல்வக்காலத்து இது பெற்றேமென்று இவறுதலே யறியாதார், எ-று.

பெற்றவழி இருமையோகி அற்றவழியும் அப்பகுதி விடாதாகலின், அல்லற்பாடில்லை யாயிற்று. இதனுற் பொருளின்மையான் ஆயுதற்கு அழியாமையும் அதுகுபாயமுங் கூறப்பட்டன.

(தே - ப - ரை)—பெற்றேம் என்று - (செல்வக்காலத்து) இது பெற்றோமென்று, ஓம்புதல் - உலோபஞ்செய்தலில், தேற்றாதவர் - அறியாதவர், அற்றேம் என்று - (வறுமைகாலத்து) வறியேமாயினேமென்று, அல்லல் படுபவோ - மனத்தினுலே துன்பப்படுவாரோ

ஈ இலக்க ரறா ரிரிவர் கையம் கென்று நலக்கத்தைத்
கையாறு கொள் வாதா மேல்

(பரி-ரை.) எ-து —சாற்கதியினும் உள்ள உடம்புகள் இடும்பையென்னும் வாளுக்கு இலக்கென்று தெரிந்து, தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடையார், எ-று.

எகதேசவருவகம் உடம்பு—சாரிப்பெயர். கலக்கமென்னுங் காரியப் பெயர் காரணத்தின்மே லேறின்றது. கையறென்பது ஒருசொல், இதற்கு ஒழுக்கமெறியென் றுரைப்பாருமுளர். இயல்பாகக் கொள்ளவென்பது குறிப்பெச்சம்.

(தே - ப - ரை)—ஈர் - அறிவுடையார், உடம்பு - தேகமானது, இடும்பை - துன்பமாகிய வாளுக்கு, இலக்கம் என்று - குறியிடமென்று தெளிந்து, கலக்கத்தை - தம்மேல்வந்த துன்பத்தை, கையாறு ஆ - துன்பமாக, கொள்ளாதாம் - கொள்ளார்

அ. இனபம் விழைபா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுதல் வினன்.

(பரி-ரை.) எ-து,—தன் உடம்பிற்கு இன்பமாயவற்றை விரும்பாதே வினையால் இடும்பை எய்துதல் இயல்பென்று தெளிர்திருப்பான், துன்முயற்சியாற் றுன்பமுறுரூன், எ-று.

இன்பத்தை விழையினும், இடும்பையை யியல்பென்னுது காக்கக்கருதினும், தன்பம் வினாதலின், இவ்விரண்டுஞ் செய்யாதானைத் துன்பமுறுதல் இலனென்றார்.

(தெ - ப - ரை.)—இன்பம் - (தன்னுடம்பிற்கு) இன்பமான வைகளை, விழைபான்-விரும்பானாகி, இடும்பை - (விளையால்) துன்ப மடைதல், இயல்புளன்பான் - இயல்பென்று தெளிந்திருப்பான், துன்பம் உறுதல் இலன் - (தன் முயற்சியால்) துன்பமடையான்.

கூ. இன்பத்து ளின்பம் விழைபாதான் துன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

(பரி-ரை.) எ-து,—வினையாற் றனக்கின்பம்வந்துழி அதனை யனுபவியா நின்றே மனத்தான் விரும்பாதான், துன்பம் வந்துழியும் அதனை யனுபவியா நின்றே மனத்தான் வருந்தான், எ-று.

துன்பம் - முயற்சியான் வரும்இடுக்கண். இரண்டையும் ஒருதன்மையா கக்கோடலின், பயனகளு மிலவாயின.

(தெ - ப - ரை.)—இன்பத்துள் -(வினையினால்) இன்பம் வந்த விடத்து, இன்பம் - அவ்வின்பத்தை, விழைபாதான் - (அனுபவித் துக்கொண்டே மனத்தால்) விரும்பாதவன, துன்பத்துள் - துன்பம் வந்தவிடத்தும், துன்பம் - அத் துன்பத்தை, உறுதல் இலன்-(அனுப விக்துக்கொண்டே மனத்தால்) அடையான்.

கo இன்னுமை யின்ப மெனக்கொளி னுகுந்தன்
னென்னுர விழையுஞ் சிறப்பு

(பரி-ரை.) எ-து,—ஒருகன் வினைசெயு மிடத்து முபாயியான் வருந் துன்பத்தன்னையே தனகின்பமாகக் கறபித்துக்கொள்வனுயின், அதனைத் தன் பகைவ ரன்கு மதித்ததற் கேதுவாய உயர்ச்சி யுணடாம், எ-று.

துன்பத்தானும் உயிர்க்கியல்பன்றிக கணிகமாய் மனத்திடை நிகழ்வ தோர் கோட்பாடாகலின், அதனை மாறுபடக்கொள்ளவே, அதற்கழிவின்றி மனமகிழ்ச்சியுடையனும் அதனைத் ருெடங்கிய வினை முடிந்தேவிடி மாற்றலு டையனு மென்பது கருத்து. இவை ரான்குபாட்டானும் மெய்வருத்தத்தா னுயதற்கு அழியாமையும் அதற் குபாயமுங கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—(ஒருவன் தொழில்செய்யுமிடத்து) இன் னுமை - (முயற்சியால் வரும்) துன்பத்தையே, இன்பம் எனக்கொ ளின் - (தனக்கு) இன்பமாக நினைத்துக்கொள்ளுவானுயின், (அத னால்), தன் ஒன்னர் - தன்பகைவர், விழையும் - ரன்குமதித்தற்கு ஏதுவாகிய, சிறப்பு - உயர்ச்சியானது, ஆகும் - உண்டாகும்.

அரசியல் முற்றிற்று.

அங்கவியல்.

இனி முறையானே அரசியல் நடாத்துதற்கண் ஒன்றற்கொன்று துணையாய அங்கங்கள் ஆறனதியல்பு முப்பத்திரண்டதிகாரத்தாற் கூறுவானெடுத்தொண்டு, அவையாறனுள்ளும் * "காவற் சாதாடு கைத்தற்" கண் அவ்வரசற் கியைபாய அமைச்சன தியல்பு பத்துதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கண அமைச்சுக் கூறுகின்றார்.

கூழ்ம் அதிகாரம்— அமைச்சு.

அமைதாவது அமைச்சனது தன்மை: என்றது அவன்றன் குணங்களையுஞ் செயல்களையும்.

க. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

(பரி-ரை.) எ-து,—வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டுங்கருவிகளும், அதற்கேற்ற காலமும், அது செய்யுமாறும், அவ்வாறறிற் செய்யப்படும் அவ்வரியவினைதாமாய்ப்ப எண்ணவல்லவனே அமைச்சனுவான், எ-று.

கருவிகள்:—தானையும், பொருளும்; காலம்:—அது தொடங்குங்காலம்; செய்கையெனவே—அது தொடங்குமுபாயமும், இடையூறுநீக்கி முடிவு போக்குமாறும் அடங்கின சிறிய முபாயியாற் பெரிய பயன் தருவதென்பார், அருவினையென்றார். இவை யைந்தனையும் வடநூலார் மந்திரத்திற் கங்கமென்ப.

(தே - ப - ரை.)—தொழில்செய்யுங்போது, கருவியும் - (அதற்குவேண்டுஞ்) சாதனங்களும், காலமும் - (அதறகேற்ற) காலமும், செய்கையும் - (அது) செய்யும் விதமும், செய்யும் அருவினையும் - (அவிதத்திலேசெய்யப்படும்) அரியதொழில்களும், மாண்டது - பொருந்த எண்ண வல்லவனே, அமைச்சு - மந்திரியாவான்.

உ. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

(பரி-ரை.) எ-து,—வினை செய்தற்கண் அச்சவின்மையும், குடிகளைக் காத்தலும், நீதிநூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன வறிதலும், முயற்சியும்

* புறநானூறு, கஅசு.

மேற்சொல்லிய அவ் வங்கத்க ளோ்துடனே திருந்தவுடையானே அமைச்சனு வான், எ-று.

எண்ணெடு நீண்டது. அவ்வைந்தெனச் சுட்டு வருவிக்க. இந்தான்க னையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையு மிவற்றோடு கூடியே மாட்சிமைப்படவேண்டுதலாலும, அவற்றிற்கு ஐந்தென்னுந்தொகை பெறுதற்கும். இனி இத்தனை சண்டெண்ணிய வற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தலென்பதனைக் குடிபிறப்பும் அதனை யொழுக்கந்தாற் காத்தலுமென னப் பகுப்பாரும், கற்றறிதலென்பதனைக் கற்ற ம் அறிதலுமெனப் பகுப் பாருமுளர். அவர் உடனென்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடி யென்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுக.

(தே - ப - ரை.)—வங்கண் - (கொழிலசெய்யுமிடத்தி) அசை வில்லாமையுர், குடிகாத்தல் - குடிகளைக் காத்தலும், கற்று அறி தல் - (நீதிநூல்களை) கற்று (விதிவிலக்குகளை) அறிதலும், ஆள் வினை - முயற்சியும், ஐந்துடன் - (முன்சொலலப்பட்ட) அவ்வங்க ளோ்துடனே, மாண்டது - திருந்தவுடையவனே; அமைச்சு - மந் திரியாவான்.

கூ. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல தமைச்சு.

(பரி-ரை.) எ-து,—வினை வர்துழிப் பகைவர்க்குத் துணையாயினரை அவ ரிற் பிரிக்கவேண்டிற் பிரித்தலும், தம்பாலாரை அவர் பிரியாமற் கொடைஇன் சொற்களாற் பேணிக்கொள்ளுதலும், முன்னே தம்மினுந் தம்பாலாரினும் பிரிந்தாரைமீண்டுப் பொருத்தவேண்டிற் பொருத்தலும் வல்லவனே அமைச்ச னுவான், எ-று.

இவற்றுள் அப்பொழுதை நிலைக்கேற்ற செயலறிதலும், அதனை அவரறி யாமல் ஏற்றவுபாயத்தாற் கடைப்பிடித்தலும் அரியவாகலினுக்கு, வல்லதென் றார். வடநூலார் இவற்றுட் பொருத்தலைச சக்தியென்றும், பிரித்தலை விக்தி ரகமென்றுங் கூறுப.

(தே - ப -ரை.)—பேரா்வந்தவிடத்தி, பிரித்தலும் - (பகைவர் க்குத் துணையாயினவரை அவரைவிட்டுப் பிரிக்கவேண்டினுல்) பிரித் தலும், பேணிக்கொளலும் - (தம்மிடத்தேதாரை இடைபிரியாமற் கொடையினுலும் இன்சொல்லினுலும்) காத்துக்கொள்ளுதலும், பிரிந்தார் - (தம்மைவிட்டும் தமரைவிட்டும்) பிரிந்தவரை, பொருத் தலும்—, வல்லது - வல்லவனே, அமைச்சு - மந்திரியாவான்.

சு. தெரிதலும் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

(பரி-ரை.) எ-து:— ஒரு காரியச்செய்கை பலவாற்றாற் றோன்றின் அவற்றுள் ஆவதாராய்ந் தறிதலும், அது செய்யுங்காலை வாய்க்குந் திறனுடைச் செய்தலும், இவரைப் பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலதென்று துணிவு பிறக்கும்வகை சொல்லுதலும் வல்லவனே அமைச்சனுவான், எ-று.

தெரிதல் செயன்மேலதாயிற்று, வருகின்றது அதுவாகலின்.

(தே-ப-ரை.)—ஒருகாரியச்செய்கை பலவிதமாகத் தோன்றினால், தெரிதலும் - (அவற்றுள் ஆவதை) ஆராய்ந்தறிதலும், தேர்ந்து செயலும் - (அதுசெயும்போது பலித்தும்விதம்) நாடிச் செய்தலும், (இவரைப் பிரித்தல் பொருத்தல் செய்தலிலே) ஒருதலையாச்சொல்லலும் - (அவர்க்கு இதுவே நம்பத்தகுமென்று) துணிவு பிறக்கும் வகைசொல்லலும், வல்லது - வல்லவனே, அமைச்சு - மந்திரியாவான்.

எ. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந் தாள்வர் தெளிந்து.

(பரி-ரை.) எ-து:—முன்செலுஞ் செய்யப்படும் அறங்களையறிந்து தனக்கேற்ற கல்வியானிறைந் தமைந்த சொல்லையுடையனுய்க் காலத்தும் வினை செய்யுந்திறங்களையறிந்தான் அவற்குச் சூழ்ந்தித் துணையாம், எ-று.

தன்னரசன் சுருங்கிய காலத்தும் பெருகிய காலத்தும் இடைநிகராய காலத்துமென் பார், எஞ்ஞான்றுமென்றார். சொல்லானெண்பதனை ஒடு வுறு பின்பொருட்டாய அனுருபாக்கி யுடைப்பாருமுளர். இவை யைந்துபாட்டானும் அமைச்சரதுணைதன்மை கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—அறன் - (அரசனுலேசெய்யப்படும்) அறங்களை, அறிந்து - தெரிந்து, ஆன்றஅமைந்த - (தனக்கு ஏற்ற கல்வியாலே) நிறைந்தமைந்த, சொல்லான் - சொல்லையுடையவனுகி, எஞ்ஞான்றும் - எக்காலத்தும், திறன் - தொழில்செய்யுந் திறங்களை, அறிந்தான் - அறிந்தவன், தேர்ச்சி - ஆலோசனைக்கு, துணை-யாவான்.

சு மதிநூட்ப நூலோ டிடையார்க் கதிநூட்பம்
யாவுள முன்னிற் பவை.

ரை.) எ-து,—இயற்கையாகிய நண்ணறிவைச் செயற்கையாகிய
டு உடையராய அமைச்சர்க்கு மிக்கநுட்பத்தையுடைய சூழ்ச்சிகளா
ற்பன யாவையுள? எ-று.

நுட்பமென்பது பின்மொழிகேலல். அது தெய்வந்தர வேண்டுத
றப்பட்டது. நூலென்பதூஉம் மதிநுட்பமென்பதூஉம் ஆகுபெயர்.
பது வடசொல்லுள் மிகுதிப்பொருளதோ ரிடைசொல; அது
ட்பமென்பதனோடு தொக்கது முன்னறிற்றல் மாற்றூர்சூழ்ச்சியா
ழ்ச்சியால் அழியாது நிற்றல். இனி அதினுட்பமென்று பாட
தனினுட்பம் யாவென்றுரைப்பாருமுளர்; அவர் சூழ்ச்சிகினமாய்
ப்படுவதொன்றில்லாமையும், சுட்டுப்பெயர் ஐந்தாமுருபேற்றவழி
கில்லாமையு மறிந்திலர். பகைவர் சூழ்வனவற்றைத் தாமறிந்து
வராறிந்தழியாதன தாஞ்சூழ்வரென்பது கருத்து. இதனால் அவரது
றப்பட்டது.

ர-ப-ரை.)—மதி நுட்பம் - (இயற்கையாகிய) புத்திநுட்
பத்தை, நூலோடு - (செயற்கையாகிய) நூலறிவோடு, உடையார்
க்கு - உடையமந்திரிகளுக்கு, அதிநுட்பம் - அதிக நுட்பத்தை
யுடைய ஆலாசனைகளாய், முன்நிற்பவை-எதிர்நிற்பவை, யா உள-
ளவை யுள.

அ செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

(பர்-ரை.) எ-து,—நூனெறியான் வினைசெயுந் திறவகையோ யறிந்தவிட
த்தும், அப்பொழுது நடக்கின்ற உலகவியற்கையையறிந்து அதனோடு
பொருந்தச செய்க, எ-று.

கடைத்தென்பழி து—பதநிற்பொருள் விகுதி. நூனெறியேயாயினும்
உலகநெறியோடு பொருந்தாதன செய்யற்க, செய்யின் அது பழிக்குமென
இயற்கையறிவாற் பயன் கூறியவாறு.

(தே-ப-ரை)—செயற்கை - நூல்வழியினால் நொழில்செய்
யுந் திறத்தை, அறிந்தக்கடைத்தும் - அறிந்தவிடத்தும், உலகத்து-
உலகத்திலே, இயற்கை-அப்போது நடக்கின்ற இயற்கையை; அறி
ந்து - தெரிந்து, செயல் - (அதனோடு பொருந்தச்) செய்யக்கடவன்.

அ அறிகொன் றறியா வெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

(பரி-ரை.) எ-து,—அறிந்து சொல்லியாரது அறிவையு மழித்து,அரசன் தானு மறியானேயாயினும், அக்குற்றம் நோக்கி யொழியாது அவனுக்கு உறுதியாயினகூறுதல் அமைசசனுக்கு முறைமை, எ-று.

அறியென்பது முதனிலைதொழிற்பெயர். கோறல்-தான் கொள்ளாமை மேலும் இகழ்ந்து கூறுதல். உழையிருந்தானெனப் பெயர் கொடுத்தார், * அமாதிய ரென்னும்வடமொழிப்பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின். உறுதிகூருக்கால் அவன திறுதியெய்தற் குறுதலதை உலகந் தன்மேலேற்று மென்பார், கூறல்கடனென்றார். இவை யிரண்டோட்டானும் அவர்செயல் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—அறிகொன்று - (அறிந்து சொல்லினவரது) அறிவையும் அழித்து, அறியான் எனினும் - (தானும்) அறியாதே யாயினும், (அக்குற்றநோக்கிக் கைவிடாமல்) உறுதி -(அரசனுக்கு) உறுதியானவைகளை, கூறல் - சொல்லுதல், உழையிருந்தான் - மந்திரினது, கடன் - முறையாகும்.

கூ. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோர்
ரெழுபது கோடி யுறும்

(பரி-ரை.) எ-து,—பக்கத் திருந்து பிழைப்ப வெண்ணும் அமைசச னொருவனில் அரசனுக்கு எந்நாற்பார் ஒழெழுபதுகோடி பகைவ ருறுவர், எ-று.

எழுபதுகோடி யென்றது மிகப்பலவாய வெண்ணிற் கொன்று காட்டிய வாறு. வெளிப்படநிற்றலான அவர் காக்கப்படவொ, இவன் உட்பகையாய் நிற்றலாற் காக்கப்படானென்பதுபற்றி, இவ்வாறு கூறினார். எழுபதுகோடிமட ஙகு நல்லரென்றுரைப்பாரும், எழுபதுகூறு தலேயென்று பாடமோதுவாரு முளர்.

(தே - ப - ரை)—பக்கத்துள் - பக்கத்திலிருந்து, பழுது எண்ணும் - நிங்குசெய்யவெண்ணும், மந்திரியின் - மந்திரி யொருவனில், தெவ் - (அரசனுக்கு) பகைவர்நிற்பவர், ஓர் எழுபதுகோடி - ஒழெழுபதுகோடி பகைவர், உறும் - உறுவர்.

கo. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

அமாதிய ரென்பதனுள் அமா என்பதற்குப்பொருள் அண்மை.

(பரி-ரை.) எ-து,—செய்யப்படும் வினைகளை முன் அடைவுபடவெண்ணி வைத்தும், செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யா நிற்பர், முடித்தற் கேற்ற கூறுபா டில்லாதார், எ-று.

அக்கூறுபாடாவன வந்த வந்த விடையூறுகட்கு ஏற்ற வேற்ற பரிகாரமறிந்து செப்பலும், தாக் கிண்ணியாதலுமாம். பிழையாம லெண்ண வலலராய் வைத்தும் செய்து முடிக்கமாட்டாரு முளரென்பதாம். இவையிரண்டுபோட்டானும் அமைச்சருள் விடப்படுவோ ரது குற்றமு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—செய்யப்படுங் கொழில்களை, திப்பாடு - (முடித்தற்கேற்ற) கூறுபாடு, இலாதவர் - இலலாதவர்; முறைப்படச் சூழ்ந்தும் - (முன்) அடைவுபட ஆலோசித்திருந்தும், முடிவு இலவேவசெய்வர் - (செய்யும்பொழுது அவை) முடிவிலலனவாகவே செய்யா நிற்பர்.

கூடும் அதிகாரம்—சொல்வன்மை.

அஃதாவது தான் கருதிய வினை முடியுமாற்றாலே அமைச்சியனடத்தற்கே துவாய சொற்களைச் சொல்ல வல்லனதல். மேல் * "ஒருதலையாச சொல்லலும் வல்ல" தென்றதனையே சிறப்புப்பற்றி விரித்துரைக்கின்றமையின், இஃ தமைச்சின்பின் வைக்கப்பட்டது.

க. நாநல மெனனு நலனுடை யமை யநலம
யாநலத் துள்ளதூஉ மன்று.

(பரி-ரை.) எ-து,—அமைச்சர்க்கு இன்றியமையாத குணமாவது சான்றோரான் நாநலமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்தினையுடையராதல்; அந்நலம் பிறர்க்கும் பிறநல மெல்லாவற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்க தாகலான், எ-று.

நாவாலுளதாய நலமென விரியும். இந்நலம் உலகநூலைத் தம்வயத்தாக்கும் அமைச்சர்க்கு வேறுகவேண்டுமென்னும் நீதிநூல் வழக்குப்பற்றி நாநலமென்னு நலனென்றும், பிறர்களும் இதுபோற் சிறந்தது பிறிதின்மையான் அந்நலம் யாநலத் துள்ளதூஉ மன்றென்றுங் கூறினர். பிரித்தல் பொருத்தல் முதலிய தொழில்லாதார்க்கும் இஃ நின்றியமையாதாயபின் அத்தொழிலிலார்க்குக் கூறவேண்டுமோ வென்பது கருத்து.

(தே - ப - ரை.)—மந்திரிகட்கு அவசியம் வேண்டிய குணமாவது, நாநலம் என்னும் - நாவினாலுளதாய நலமென்று சிறப்பித்

* மேலே கூடும் அதி. அடைசசு, 2-ம் பூவிலிகாண்க.

தச்சொல்லப்படும், கலன் உடைமை - கலமுடையராதல் ; அக் கலம் - அக்கன்மை (பிறர்க்கும்), யாகலத்து - பிறகலங்களிலெல்லாம், உள்ளதும் அன்ற - அடங்குவதுமன்று, (மிக்கது ஆதலால்).

ஆக்கமும் சேடும் ஆதனு மாருங்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(பரி-ரை.) எ-து,—தம் மரசற்கும் அங்கங்களுக்கும் அந்த வழிஞர்கள் தஞ் சொல்லான் வருமாகலான், அப்பிறற்கரிய சொல்லின்கட் சோர்தலே அமைச்சர் குணஞ்ஞ்ழுமற் போற்றிக் காக்க, எ-று.

ஆக்கத்திற்கேதுவாய கற்சொல்லியும் கேட்டிற்கேதுவாய தீசசொல்லி யும் சொல்லாத லொப்புமைபற்றி அரசனெனறார். செய்யுளாகலின், சுட்டுப் பெயர் முன்வந்தது. பிறர் சோர்வுபோலாது உயிர்க்கட்கெல்லாம் ஒருங்குவரு தலால், காக்கோம்பலென்றார். இவை பிணைபொட்டாலும் இதிது இவர்க் கின்றியமையா தென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை) — ஆக்கமும் - (தம்மரசனுக்கும் அங்கங்களுக் கும்) பொருந்தமும், சேடும் - அழிவும், ஆதனும் - அச் சோர்வினுலே, வருதலால் - வருமாகலால், சொல்லின்கண்-(மந்திரிகள்) சொல்லி னிடத்து, சோர்வு - சோர்தலே, காத்து ஓம்பல் - (தம்மிடத் டாகாமல்) காக்கக்கடவர்

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

(பரி-ரை.) எ-து.—கேட்பாயேற் றுக்கொண்டாரைப் பின் வேறுபடாமற் பிணிக்குங் குணஞ்களே அவாவி மற்றைப் பகையாய் எற்றுக்கொள்ளாதாரும் பின் அப்பகைமையொழிந்து கேட்பினே விரும்பும் வண்ணஞ் சொல்லப்படு வதே அமைச்சர்க்குச் சொல்லாவது, எ-று.

அச்சுணங்களாவன வழுவின்மை, கருங்குதல், விளங்குதல்,இனிதாதல், விழுப்பயன்தருதலென்றிவை முறையாயின. அவற்றை யவாவுதலாவது சொல்லுவான் குறிக்கனவேபன்றி வேறு நுண்ணுணர்வுடையோர் கொள்ப வற்றின்மேலும் போக்குடைத்தாதல். அவாயென்னுஞ் செய்தெனெச்சம் மொ ழிவதென்னுஞ் செயப்பாட்டுவினே கொண்டது. இனிக் கேட்டார் கேளா ரென்பதற்கு மூல்கேட்டார் கேளாதாரெனவும், வினவியார் வினவாதா ரெனவுமுரைப்பாருமுளர். தகையவாபென்பதற்கு எல்லாருங் தகுதியை யுடையவாயென்றுரைத்தார் : அவர் அப்பண்மை மொழிவதென்னும் ஒருமை யோடு இயையாமை நோக்கிற்றிலர். இதனுற் சொல்லின திலக்கணங் கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—கேட்டார் - (கட்பாய்) ஏற்றுக்கொண்டவ ரை, பிணிக்கும் - (பின் வேறுபடாமல்) கட்டும், தகை - குணங் களை, அவாய் - அவாவி, கேளாரும் - (மற்றப்பகைபாய்) ஏற்றுக் கொள்ளாதவரும், வேட்ப - (பின் அப்பகைமை ஒழிந்து கட்பினை) விரும்பும்வண்ணம், மொழிவது - சொல்லப்படுவதே, சொல் - சொல்லாம்.

சு. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

(பரி-ரை.) எ-து,—அப்பெற்றித்தாய சொல்லை அமைசசர் தம்முடைய வுங் கேட்பாருடையவுமாய திறங்களையறிந்து சொல்லுக, அங்ஙனஞ் சொல் லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளுமில்லை யாகலான்,எ-று.

அத்திறங்களாவன குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவ மென்பனவற்றுள் வருக் தகுதிவேறுபாடுகள். அவற்றை யறிந்து சொல்லுதலாவ து அவற்றுற் றமக்கும் அவர்க்கு மூளவாய ஏற்றத்தாழ்வுகளை யறிந்து அவ்வம்மரபாற் சொல்லுதல். அஃது உலகதேதோ டொட்டவொழுகலே யும் இனிமையையும் பயத்தலின் அறனுமிற்று, தகுகாரிய முடித்தலிற் பொரு ளாயிற்று. அறனும் பொருளுமெனக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறினர்.

(தே - ப - ரை.)—சொல்லை - (மந்திரிகள் அப்படிப்பட்ட) சொல்லை, திறன் - (தம்முடையவும் கேட்பாருடையவும் ஆன) திறங் களை, அறிந்து - தெரிந்து, சொல்லுக - சொல்லக்கடவர்; அதனின் ஊங்கு - அப்படி சொல்லுதற்கு மேற்பட்ட, அறனும் பொருளும் - தகுமமும் பொருளும், இல் - இல்லை, (ஆதலால்).

நி. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லர்சொல்லை
வெல்லுஞ்சொ ல்லின்மை யறிந்து.

(பரி-ரை.) எ-து,—தாஞ்சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதோர்சொல் லரய் வெல்லவல்லதொரு சொல் இல்லாமையறிந்து பின் அச்சொல்லைச் சொல்லுக, எ-று.

பிறிதோர்சொல்-மாற்றுமது மறுதலைச்சொல். வெல்லுதல்-குணங்க ளான்மிகுதல். அதுவே வெல்லச் சொல்லுக.வென்பதாம். இனிப் பிறிதோர் சொல் வெல்லுஞ் சொல்லெனச செவ்வெண்ணுக்கி, ஒத்த சொல்லும் மிக்க சொல்லு மூளவாகாமற் சொல்லுகவென் றுரைப்பாருமுளர். இது சொற் பொருட்பின் வருநிலை.

(தே - ப - ரை.)—சொல்லே-(தாம்சொல்லக்கருதிய) சொல்லை, வெல்லுஞ்சொல் - வெல்லவல்ல சொல்லாகிய, பிறிதோர்சொல் - வேறொருசொல், இன்மை - இல்லாமையை, அறிந்து - தெரிந்து, அச்சொல்லே - அந்தச்சொல்லை, சொல்லுக - சொல்லக்கடவர்.

கூ வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள்

(பரி-ரை.) எ-து,—பிறர்க்குத் தாஞ்சொல்லுங்கால் அவர் பின்னுங்கேட்டலே விரும்புமாறு சொல்லி, அவர் தமக்குச் சொல்லுங்கால் அச்சொல்லின் பயனைக் கொண்டொடுங்கல் அமைச்சியலுட் குற்றமற்றாரது துணிவு, எ-று.

பிறர்சொற்களுட் குற்றமுளவாயினும் அவை நோக்கி யிகழாரென்பதாம். வல்லாரையிகழ்தல் வல்லுநர்க்குத் தகுதியன்மையின், இதுவு முடன்கூறினார். இவை மூன்றுபாட்டானும் அந்தணச் சொல்லுமாறு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வேட்பத்தாம் சொல்லி - (பிறர்பின்னுங் கேட்டலே) விரும்பும்படி தாஞ்சொல்லி, பிறர்சொல் - பிறர் (தமக்குச் சொல்லுஞ்) சொல்லினது, பயன்கோடல் - பயனைக்கொண்டு விடுதல், மாட்சியில் - (மந்திரி) இலக்கணத்தில், மாசுஅற்றார் - குற்றமற்றவரது, கோள் - துணிவு.

எ. சொலல்வல்லன் சோர்விலனஞ்சா னவனே
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

(பரி-ரை.) எ-து,—தானெண்ணிய காரியங்களைப் பிறர்கேற்பச் சொல்லுதல் வல்லனும் அவை யிகப் பலவாயவழி ஒன்றினுஞ் சோர்விலனும் அவைக் கஞ்சானுமான யாவன் அவனை மாறுபாட்டின்கண வெல்லுதல் யாவர்க்கு மரிது, எ-று.

எற்பசசொல்லுதல்-அவர்க்கு அவை காரியமல்லவாயினும் ஆமெனத் துணியும்வகை சொல்லுதல். சோர்வு-சொல்லவேண்டுவதனை மறப்பானெழுதல். இம்மூன்றுதுணமு முடையானே மாற்றாராய்ப் பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வானில்லை யென்பதாம்.

(தே - ப - ரை.)—சொலல்வல்லன் - (தான்எண்ணிய காரியங்களைப் பிறர்க்கேற்க) சொல்லுதல் வல்லனும், சோர்விலன் - (அவைமிகவும் பலவானவிடத்து ஒன்றினுஞ்) சோர்வில்லாதவனும், அஞ்சான் அவனை - (சபைக்கு) அஞ்சாதவன் (யாவன்) அவனை,

இகல் - மாறுபாட்டிலே, வெல்லல் - வெல்லுதல், யார்க்கும் யாவர்க்கும், அரிது - அரியது.

அ. வினைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

(பரி-ரை.) எ-து,—சொல்லப்படுகின்ற காரியங்களை நிரல்படக்கோத்து தாகச் சொல்லுதல் வல்லாரைப்பெறின், உலகம் அவற்றை விரைந் தேற்றுக் கொள்ளும், எ-று.

தொழில் - சாதியொருமை. நிரல்படக்கோத்தல்-முன்சொல்வனவும் பின் சொல்வனவு மறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல்-கேட்பார்க்கின்பம் பயத்தல். சொல்லுதல்வல்லான் நூறுயிரவரு ளொருவன் என்ற வடமொழி பற்றிப் பெறினென்றார். ஈண்டுங் கேட்டல்-எற்றுக்கோடல். இவை யிரண்டு பாட்டானும் அவ்வாற்றாற் சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—தொழில் - (சொல்லப்படும்) காரியங்களை, நிரந்து - ஒழுங்குபடக்கோத்து, இனிது - இனிதாக, சொல்லுதல்வல்லார் - சொல்லுதல் வல்லவரை, பெறின் - பெற்றால், ஞாலம்-உலகமானது, விரைந்து கேட்கும் - (அவைகளை) விரைந்து ஏற்றுக் கொள்ளும்.

கூ. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்.

(பரி-ரை.) எ-து;—குற்றமற்றனவாய்* சிலவாய வார்த்தைகளை அவ்வாற்றாற சொல்லுதலே யறியாதார் பலவாய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர், எ-று.

குற்றம்-மேற்சொல்லிய * குணங்கட்கு மறுதலையாயின. இடைவிடாது பல சொல்லுதலேயுஞ் சொல்வன்மையென்று விரும்புவா ருளர், அவர் இவ்வாறு சொல்லமாட்டாதாரே, வல்லார் அதுசெய்யாரென யாப்புறுப்பார், மன்றவென்றார்.

(தே - ப - ரை)—மாசு அற்ற - குற்றமற்றவைகளாய். சில - சிலவாகிய வார்த்தைகளை, சொல்லல் - (அவ்வகையால்) சொல்லுதலே, தேற்றாதவர் - அறியாதவர், பல - பலவாகிய வார்த்தைகளை, சொல்ல - தொடுத்துச்சொல்ல, காமுறுவர்-விரும்புவார்.

* சொற்குணங்களை மேலே சுஞ்-ம் அதி. சொல்வன்மை, சுக-ம் திருக்குறளரையிற் காண்க.


கo. இணரூழ்ந்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

(பரி-ரை.) எ-து,—கற்றுவைத்த நூலைப் பிறரறியும் வண்ணம் விரித் துரைக்கமாட்டாதவர் கொத்தின்கண்ணே மலர்ந்து வைத்தும் நாறுத பூவை யொப்பர். எ-று.

செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாற்றமில்லாத பூச குடப்படாத வாறு போல நூலைக் கற்றுவைத்துஞ் சொல்லமாட்டாதார் நன்குமதிக்கப்படா ரென் றமையின், இது தொழிலுவமையாயிற்று. இவை யிணைபோட்டானும் அது மாட்டாதார திழிபு கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—கற்றது - கற்றநூல்களை, உணர - (பிறர்) அறியும் விதமாக, விரித்து உரையாதார் - விரித்துச்சொல்ல மாட் டாதவர், இணர் - கொத்தினிடத்தே, ஊழ்த்தும்-மலர்ந்திருந்தும், நாறு - மணக்காத, மலர் அனையர் - பூப்போல்வர்.

கூ-ம் அதிகாரம் —வினைத்தூய்மை.



அஃதாவது செய்யப்படும் வினைகள் பொருளோயன்றி அறமும் புகழும் பயந்து நல்லவாதல். சொல்லேயன்றி செயலும் நன்குகவேண்டுமென்கின் றமையின், இது சொல்வன்மையின்பின் வைக்கப்பட்டது.

க துணைநல மாக்கந் தானுஞ் வினைநலம
வேண்டிய வெல்லாந் தரும்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்குத் துணையது நன்மை செல்வமொன்றினை யுங் கொடுக்கும், அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையுங கொடுக்கும், எ-று.

வேண்டியவெல்லா மென்றது இம்மைக்கண் அறம் பொருளின்ப மூத லாயவற்றையும் மறுமைக்கட் டான்விரும்பிய பதங்களையும். இதனுள் காணப் படுந் துணைநன்மையினுங் சருதப்படும் வினைநன்மை சிறந்தென வினைத் தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—துணைநலம்-(ஒருவனுக்கு) துணையினது நன்மையானது, ஆக்கம்-செல்வம் ஒன்றையே, தரும் - கொடுக்கும்; வினைநலம் - தொழிலினது நன்மையானது, வேண்டியவெல்லாம் - (அவன்) வேண்டியவைகளையெல்லாம், தரும்-கொடுக்கும்.

உ. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

(பரி-ரை.) எ-து.—தம்மரசனுக்கு இம்மைக்கட் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை அமைச்சர்க்கு எக்காலத்து மொழித்தல்வேண்டும், எ-று.

பெருகல், சுருங்கல், இடைநிற்றலென்னும் நிலைவேறுபாடு காலத்தான் வருதலின், என்றுமென்றார். வேண்டுமென்பது ஈண்டு இன்றியமையாதென்னும் பொருட்டு.

(தே-ப-ரை.)—புகழொடு - (தம்மரசனுக்கு) புகழையும், நன்றி - அறத்தையும், பயவா - தராத, வினை - தொழில்களை, என்றும் - எக்காலத்தும், ஒருவுதல் வேண்டும் - (மந்திரிகளுக்கு) ஒழிதல் வேண்டும்.

ஊ. ஒழுகல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

(பரி-ரை.) எ-து,—மேலாகக் கடவேமென்று கருதுவார் தம்மொளி கெடுதற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க, எ-று.

ஒழுகல்வேண்டுமென்பது ஒருசொன்னீர்மைத்து. ஒழுகலென்பது குறைந்து நின்றது. ஒளி-தாமுள காலத்து எல்லாராலும் நன்குமதிக்கப்படுதல். செய்யென்னும் முதனிலைதொழிற்பெயர் மாறுபட்டது. அன்றிச் செய்வினையென வினைத்தொகை யாக்கியுரைப்பினுமையமில்லை. ஒளி கெட வருவது ஆக்கமன்றென்பதாம்.

(தே-ப-ரை.)—ஆஅதும் - மேலாம்கடவோம், என்னுமவர் - என்று நினைப்பவர், ஒளி - தம்) ஒளி, மாழ்குஞ் - கெடுதற்குக் காரணமாகிய, வினை - தொழில், செய் - செய்தலை, ஒழுகல்வேண்டும் - ஒழியக்கடவர்.

எ. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
கெடுக்கற்ற காட்சி யவர்.

(பரி-ரை.) எ-து,—தாமிடுக்கணிலே படவரினும், அது தீர்தற்பொருட்டு முன்செய்தார்க்கு இளிவந்த வினைகளைச செய்யார் தளர்க்கமற்ற தெளிவினையுடையார், எ-று.

சிறிதுபோழ்திற் கழிவதாய இடுக்க ணிலைக்கி எஞ்ஞான்றுங் கழியாத விழிவு எய்தற்பாலதன்றென்பதூஉம் அஃதெய்தினலும் வருவது வருமென்பதூஉம் தெளிவராகலான், செய்யாரென்றார்.

(தே - ப - ரை)—நடுக்கு அற்ற - அசைவற்ற, காட்சியவர் - தெளிவையுடையவர், இடுக்கட்படினும் - (தாம்) தன்பத்திலேபட வரினும், (அது தீர்தற்பொருட்டு), இளிவந்த - (முன் செய் தவர்க்கு) இழிவுவந்ததொழில்களை, செய்யார் - செய்யமாட் டார்கள்.

நி. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்யானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

(பரி-ரை.) எ-து,—யான் செய்தது எத்தன்மைத்தென்று பின் ருனே யிரங்கும் வினைகளை ஒருகாலுஞ் செய்யாதொழிக; அன்றி ஒருகான்மயங்கி அவற்றைச செய்யுந்தன்மையனுயினு ஞயின், பின்னிருந்து அவ்விரகங்களை ஊச செய்யாதொழிதல் நன்று, எ-று.

இரங்குவனென முன்வந்தமையிற பின் அன்னவெனச சுட்டியொழிந் தார். அவ்வினைகளது பன்மையான், இரக்கமும் பலவாயின. அசசெயற்குப் பின்னிருந்திரங்குவனுயின், அது தீரும்வாயி லறிந்திலனெனவும், திட்பமில னெனவும், பயனில்லன செய்கின்ரு னெனவும், தன்பழியைத் தானே தூற்று கின்ரு னெனவும், எல்லாரும்இகழ்தலிற் பின்னிரவகாமை நன்றென்ரார். இது வும், வினைத்தூயார் செயலாகலின், உடன்கூறப்பட்டது. பிற்ரெடர்தற்குச் செய்வானுயின் அவை போல்வனவுஞ் செய்யாமை நன்றெனப் பிறரெல்லாம் இயையற வுரைத்தார்.

(தே - ப - ரை.)—எற்று என்று - (நான்செய்தது) எப்படிப் பட்டதென்று, இரங்குவ - (பின்தானே) இரங்கும் தொழில்களை, செய்யற்க - (ஒருநாளும்) செய்யா திருக்கக்கடவன்; செய்வா னேல் - (ஒருநாள்மயங்கி அவைதனை) செய்வானுயின், மற்ற-பின்பு, அன்ன - அவ்விரங்கலை, செய்யாமை - செய்யாதிருத்தல், நன்று-நலமுடையது.

கூ. நன்ருள் பசிதாண்பா ரையினுஞ் செய்யற்க
சான்ரோர் பழிக்கும் வினை.

(பரி-ரை.) எ-து,—தன்னைப் பயந்தாளது பசியை வறுமையாற் கண்டி ரங்குந் தன்மையனுயினுனெனினும் அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யா தொழிக, எ-று.

இறந்த மூப்பினராய இருமுதுகுரவருங் கற்புடைமனைவியுங் குழவியும் பசியான் வருந்துமெல்லைக்கண் தீயனபலவுஞ் செய்தாயினும் புறந்தருகவென் னும் அறநூற்பொதுவிதி பொருணூல்வழி யொழுகுதலும் அரசர் தொழிற்

குரியராதலும் நன்கு மதிக்கற்பாலுமுடைய அமைச்சர்க் செய்தாமைபற்றி, இவ்வாறு கூறினர். இவை யைத்துபாட்டானும் பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யறகவென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை)—ஈன்றாள் - (ஒருவன் தன்னை) பெற்றதாயினது, பசி - பசியை, காண்பான் ஆயினும் - (வறுமையாலே) கண்டிருக்குந் தன்மைய ஞயினனெனினும், (அதைக்குறித்து), சான்றோர்பழிக்கும் - (அறிவால்) நிறைந்தோர் பழிக்கும், வினை - தொழில்களை, செய்யற்க - செய்யாதிருக்கக்கடவன்.

ஈ. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை

(பரி-ரை.) எ-து,—சாலாதார் தியவினைகளாசெய்து அதனாற் பழியைத் தம்மேற்கொண்டுபெற்ற செல்வத்தின் அது மேற்கொள்ளாத சான்றோரனுபவிக்கும் மிக்க நல்குரவே உயர்ந்தது, எ-று.

நிலையாத செல்வத்தின்பொருட்டு நிலையின பாயை மேற்கொடல் சால் போடியையாமையின், சான்றோர் கழிநல்குரவே தலை யென்றார்.

(தே - ப - ரை.)—பழிமலைந்து - (சான்றோரல்லாதவர் நித் தொழில்கள்செய்து அதனால்) பழியைத் தம்மேற்கொண்டு, எய்திய - பெற்ற, ஆக்கத்தின் - செல்வத்தைக்காட்டிலும், சான்றோர் - (அது மேற்கொள்ளாத) சான்றோரனுபவிக்கும், கழிநல்குரவே - மிகுந்தவறுமையே, தலை - உயர்ந்தது.

அ. கடிந்த கடிந்தோரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

(பரி-ரை.) எ-து,—நூலோர் கடிந்த வினைகளைத் தாமும கடிந்தொழியாது பொருளைக்கிச செய்த அமைச்சர்க்கு அவை தூயவன்மையின் முடியா, ஒருவாற்றான் முடியினும் பின் துன்பத்தையே கொடுக்கும், எ-று.

முடித்தல்-கருதியபொருள்தருதல். பீழைதருதலாகிய பொருளின்றொழில் அதற்குக் காரணமாய வினைகண்மே லேற்றப்பட்டது.

(தே - ப - ரை.)—கடிந்த - (நூலோர்) தள்ளியதொழில்களை, கடிந்து ஓரார் - (தாமும்) தள்ளிவிடாராகி, செய்தார்க்கு - (பொருளைக்குறித்து) செய்த மந்திரிகளுக்கு, அவைதாம் - அத்தொழில்கள், (தூயவை யல்லாமையால் முடியாவாம்), முடிந்தாலும் - (ஒரு

வழியால்) முடிந்தாலும், பிழை - (பின்) துன்பத்தை, தரும் கொடுக்கும்.

கூ அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் தீயவினைகளைச் செய்து பிறர் இரங்கக் கொண்ட பொருளெல்லாம் இம்மையிலே அவன்முன் இரங்கப் போகாதிற்கும்; மறைதத நயவினையான் வந்த பொருள்கள் முன்னிழந்தான் ஆயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும், எ-று,

பின்னைனவே மறுமையு மடங்கிற்று. பொருள்களான் அவற்றிற்குக் காரணமாய வினைகள தியல்பு கூறியவாறு.

(தே - ப - ரை)—ஒருவன் நீத்தொழில்களைச் செய்து, அழக் கொண்ட எலலாம் - (பிறர்) துக்கிக்கநம்கொண்ட பொருள்களெல் லாம், அழப்போம்-(இம்மையில் அவன்) துக்கிக்கப் போகாதிற்கும்; நல்பாலவை - மற்ற கல்லதொழில்களால் வந்தபொருள்கள், இழப்பி னும் - (முன்) இழந்தானெனினும், பிற்பயக்கும் - பின்னுந்து பயன் கொடுக்கும்.

கo. சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பகமட்
கலத்துளீர் பெய்தீ இ யற்று.

(பரி-ரை.) எ-து,—அமைச்சன் தீயவினைகளாற் பொருள்படைத்து அத னால் அரசனுக்கு எமஞ்செய்தல் பகை மட்கலத்துள்ளே நீரைப்பெய்து அதற்கு எமஞ்செய்ததனை டொக்கும், எ-று.

முன் ஆக்கம் பயப்பனபோற்றோன்றிப் பின்னழிவே பயத்தலால், அவை * சலமெனப்பட்டன. எமமார்த்தலென்பது எமார்த்தலென்றுயிறது: எமத் தையடையப்பண்ணுதலென்றவாறு. இருத்துதல்-நெடுங்காலமிருப்பச்செய் தல். அரசனும் பொருளும் சேரப்போமென்பதாம். பிறரெல்லாம் எமார்த்த லென்று பாடமோதி, அதற்கு மகிழ்தலென்றும், இரீஇயற்றென்பதற்கு வைத்தாற்போலுமென்று மூரைத்தார்; அவர் அவை தன்வினையும் பிறிதின் வினையுமாய உவமையிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர். இவை நான்குபாட்டானும் அதற்குக் காரணங் கூறப்பட்டது.

* சலம், ஊடசொல்லின்றிரிபு, இதற்கு வெளிறு ஒருவகையாகக் காணப்பட்டு உள்ளே ஒருவகையாக விருப்பதெனபது பொருள்.

(தே - ப - ரை.)—செலுத்தால் - (மந்த்
பொருள்செய்து - பொருளைச் சம்பாதித்து, ஏமம் ஆர்த்தல் - (அதனால் அரசனுக்கு) காப்புச்செய்தல், பசு மட்கலத்துள் - பசிய மட்பாத்திரத்தில், நீர்பெய்து - நீரைவார்த்து; இரீஇயற்று - (அதற்கு) காப்புச்செய்ததனை டொக்கும்.

சுஎ-ம் அதிகாரம்—வினைத்திட்பம்.

அஃதாவது அத்தூய வினை முடிப்பானுக்கு வேண்டுவதாய மனத்திண்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

க. வினைத்திட்ப மெனப்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற.

(பரி-ரை.) எ-து,—வினைசெய்தற்கட் டிண்மையென்று சொல்லப்படுவது அதனைமுடித்தற்கு உரியனொருவன் மனத்தினது திண்மை; அஃதொழிந்தன வெல்லாம் அதற்குத் திண்மையென்று சொல்லப்படா, எ-று.

ஒழிந்தனவாவன—படை, அரண், நட்பு முதலியவற்றின் திண்மைகள். அவையும் அதற்கு வேண்டுவனவாய் இனமாகலின் மற்றைய வென்றும், வேண்டினும் அஃதில்வழிப் பயனிலவாகலிற் பிறவென்றுங் கூறினர். இதனால் வினைத்திட்பமாவது இன்னதென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வினைத்திட்பம் என்பது - தொழில்செய்யுமிடத்து வலிமையென்று சொல்லப்படுவது; ஒருவன் - (அதனை முடித்தற்குரிய) ஒருவனது, மனத்திட்பம் - மனத்தினது வலிமையாம்; மற்றைய எல்லாம் - அது நீங்கலான வல்லமைகளெல்லாம், பிற - (அதற்கு) வலிமையென்று சொல்லப்படுவனவல்ல.

உ. ஊழையுரா வுற்றபி னெஞ்காமை யிவ்விரண்டி-
ஞழென்ப ராய்ந்தவர் கோள்.

(பரி-ரை.) எ-து,—முன் நீதியாராய்ந்த அமைச்சரது துணிபு பழுதுபடும் வினைகளோச செய்யாமையும், செய்யும்வினை தெய்வத்தாற் பழுதுபட்டவழி அதற்குத் தளராமையும் ஆகிய இவ்விரண்டன் வழியென்பர் நூலோர், எ-று

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழவெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் * நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு

* ஈண்டு நீதிநூலுடையார் என்றது சாணக்கியரையும் காமந்தகரையும்.

வினைத்தூய்மையும் உடன்கூறினர். உறுதலுடையதனை முன் ஊரென்றமை யின் உற்றபினென்றும், இவ்விரண்டின்கண்ணே பட்டதென்பார் இரண்டினு ளென்றுங் கூறினர். ஊரெரராரென்று பாடமோதுவாரு முளர்; அஃது ஒல் காமை யென்னு மெண்ணேடு இரண்டென்னுந் தொகையோடும் இயை யாமை அவரறிந்திலர்.

(தே - ப - ரை)—ஆய்ந்தவர் - (முன்பு நீதிநூலை) ஆராய்ந்த மந்திரிகளது, தோள் - துணிவு, ஊறு - பழுதுபடுந் தொழிலை, ஒரால் - செய்யாமையும், உற்றபின் - செய்யுந்தொழில் ஊறுணேலை) பழுதுபட்டவிடத்து, ஒல்காமை - (அதற்கு) தளராமையும் (ஆகிய), இவ்விரண்டின் - இவ்விரண்டு வகை, ஆறு - வழியாகும், என் பர்-என்று (நூலோர் சொல்லுவர்.

ஈ. கடைக்கொட்கப் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி னெற்ற விழுமங் தரும்.

(பரி-ரை.) எ-து,—செயப்படும் வினையை முடிவின்கட் புலப்படும்வகை முன்னெல்லாம் மறைத்துச் செய்வதே நிட்பமாவது; அங்ஙனமன்றி இடையே புலப்படுமாயின் அப்புலப்பாடு செய்வானுக்கு நீங்காத இடும்பை யைக்கொடுக்கும். எ-று.

மறைத்துச செய்வதாவது அங்கம் ஐந்து மெண்ணியவாறு பிறராயாம லும், தானறிந்ததூஉம், தன்னினங்கிதம், வடிவு, செயல், சொற்களான் அவ ருய்த்த துணாமலும் அடக்கி+ செய்தல். அத் திட்பம், ஆண்டன்மையான் வருதலின், ஆண்மையெனப்பட்டது. எற்றுவிழுமமாவன - பகைவர் முன்ன றிந்து அவ்வினையை விலக்குதல், செய்வானே விலக்குதல் செய்வராகலின், அவற்றுல் வருவன. விழுமம்—சாதிப்பெயர். இவை யிரண்டுபோட்டானும் அதனது பகுதி கூறப்பட்டது.

(தே - ப - ரை)—கடை - (செய்யப்படுந்தொழிலை) முடிவிலே, கொட்க - சுழல [வெளிப்பட வென்றபடி], செய்யத்தக்கது - (அத ற்குமுன்னெல்லாம் மறைந்து) செய்யதே, ஆண்மை - வலியாகும்; இடை - நடுவிலே, கொட்கின் - வெளிப்படுமாயின், (அவ்வெளிப் படுதல்), எற்று - நீங்கப்படாத, விழுமம் - துன்பத்தை, தரும் - (செய்தவனுக்கு) கொடுக்கும்.

ச. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

(பரி-ரை.) எ-து,—யாம் இவ்வினையை இவ்வாற்றுற்செய்துமென நிரல் படச் சொல்லுதல் யாவர்க்கும் எளிய; அதனை அவ்வாற்றுனே செய்தல் யாவர்க்கும் அரியவாம். எ-று.

சொல்லுதல், செயலென்பன காதிப்பெயர். அரியவற்றை பெண்ணிச சொல்லுதல் திட்பமில்லாதார்க்கும் இயறலின், எளிபவென்றார். இதனுல் அதனதருமை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—சொல்லுதல் - (இக்தெழிலை இவ்விதத்தால் செய்வோமென்று ஒழுங்குபட) சொல்லுதல், யார்க்கும் - எவர்க்கும், எளிய - எளியவையாகும், சொல்லிபவண்ணம் - (அதனை) அச்சொல்லப்பட்ட விதத்தால், செயல் - செய்தல், அரியவாம்-அரியவையாம்.

நி. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி புள்ளப் படும்.

(பரி-ரை.) எ-து,—எண்ணத்தாற் சிறப்பெய்திப் பிறவிலக்கணகளா னும் மாட்சிமைப் பட்ட அமைச்சரது வினைத்திட்பம், வேந்தன்கணனே உறுதலேயெய்தலான், எல்லாராலும் கன்குமதிக்கப்படும், எ-று.

வேந்தன்க ணூறெய்தல்-டெத்தவினை அதனுல் முற்றுப்பெற்றுச செல்வ மும் புகழும் அவன்கணணவாதல். எய்தலா னன்பது திரிந்து நின்றது. உள் ளல்-மதிப்பான் மறவாமை. இதனுல் அதன்சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வீறு எய்தி - (எண்ணத்தினாலே) சிறப்பை அடைந்து, மாண்டார் - (மற்றைபிலக்கணங்களாலும்) மாட்சி மைப்பட்ட மந்திரிகளது, வினைத்திட்பம் - தொழிலவலிமையானது, வேந்தன்கண் - அரசனிடத்து, ஊறு எய்தி - உறுதலை அடைத லாலே, உள்ளப்படும் - (எல்லாராலும்) கன்குமதிக்கப்படும்.

ஈ. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(பரி-ரை.) எ-து,—தாமெய்த எண்ணிய பொருள்க ளெல்லாவற்றையும் அவ்வெண்ணியவாறே எய்துவர், எண்ணியவர் அவற்றிற்கு வாயிலாகிய வினை க்கட் டிண்மை யுடையராகப் பெறின், எ-று.

எளிதினெய்துப வென்பார், எண்ணியாங் கெய்துப வென்றார். அவர் அவ்வாறல்ல தெண்ணுமையிற் றிணனியராகவே வினைமுடியும், அது முடிய அவையாவையுக கைகூடுமென்பது கருத்து. இதனுல் அஃதுடையாரெய்தும் பயன் கூறப்பட்டது.

(தே - ப ரை)—எண்ணியார் - (ஒருபொருளே அடைய) எண்ணினவர், திண்ணியர் ஆகப்பெறின் - (அப்பொருட்கு வழி யாகிய தொழிலிடத்து) வலிமையுடையராகப் பெற்றால், எண்ணிய- (தம்மால்) எண்ணப்பட்ட பொருள்களெல்லாம், எண்ணி ஆங்கு - அவ்வெண்ணியபடியே, எய்தும் - அடைவர்

எ. உருவகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து

(பரி-ரை.) எ-து,—உருளா நின்ற பெரிய தேர்க்கு அச்சின்கண் ஆணி போல வினைக்கண் நிண்ணியரை யுடைத்து உலகம், அதனால் அவரை வடி வின் சிறுமை நோக்கி இகழ்தலே யொழிக, எ-று.

சிறுமை, எள்ளான்மைவேண்டு மென்பதனாலும், உலமையானும், பெற் றும். அச்சு-உருள் கோத்த மரம். ஆணி-உருள் கழலாது அதன்கடைக்கட் செருகுமது. அது வடிவாற் சிறியராயிருந்தே பெரியபாரதத்தைக் கொண்டுய்க் குந் திட்பமுடைத்து அதுபோல, வடிவாற் சிறியராயிருந்தே பெரிய வினை களைக் கொணர்டுய்க்குந் திட்பமுடைய அமைச்சருமுளர், அவரை அத்திட்ப நோக்கி அறிந்துகொள்க வென்பதாம். இதனால் அவையறியுமாறு கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—உலகம், உருள் - உருளாகின்ற, பெருந் தேர்க்கு - பெரியதேர்க்கு, அச்சு ஆணி அன்னர் - அச்சினிடத்தே ஆணிபோல் தொழிலினிடத்தே வலிமையைபுடையவரை, உடை த்து - உடையது, அதனால் உருவகண்டு-(அவர்) வடிவினிடத்தே சிறுமை நோக்கி, எள்ளாமைவேண்டும் - (அவரை) இகழாமை வேண்டும்.

அ. கலங்காது கண்ட வினைக்கட் டெளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

(பரி-ரை.) எ-து,—மனந் தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின் கண ணின்னசைதலின்றி நீட்டித்தலேயொழிந்து செய்க, எ-று.

கலங்கியவழி ஒழிவதும் செய்வதற்பாற் றேறுமாகலின், தெளிந்து பலகா லாராய்ந்து தாஞ்செய்வதாக வுரைத்த வினைபைக் கலங்காது கண்ட வினையென்றார். தூளங்காமை-திட்பமுடைமை.

(தே - ப - ரை.)—கலங்காது - (மனம்) கலங்காமல், கண்ட - (செய்வதாக) துணிந்த, வினைக்கண் - தொழிலினிடத்து, தூளம்

காது - (பின்) அசைதல் இல்லாமல், **தூக்கம் கடிந்து** - ஆலசியத்தை ஒழித்து, **செயல்** - செயக்கடவர்

கூ **துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி**
பின்பம பயக்கும் வினை.

(பரி-ரை.) எ-து,—முகற்கண மெயம்முயறசியாற றமக்குத்துன்பம் மிக வருமாயினும், அதுமே ாகுகித தளராது முடிவின்கண இன்பம் பயக்கும வினையைத திட்பமுடையாாய்ச் செய்க, எ-று.

துணிவு-கலயகாமை. அரைதுடையாாக்கல்லது கணிகமாய முபற்சித் துன்ப நோகாகாது நிலையுந்துடைய * பரிணவின்பத்தை நோக்கிச செப்தல் கூடாமையின், துணிவாறறிச செய்கவென்றார். இவை யிரணடுபொட்டானும் அவர்வினை செய்யுமாறு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)— **துன்பம்** - (முகலில் மெய்ம்முயிற்சியால்) **துன்பம்.** உறுவரினும் - (கமக்கு) மிகவரினும் (அதுகண்டுதளராமல்), **இன்பம்** - சுகத்தை, **பயக்கும்** - (முடிவில்) தருகின்ற, **வினை** - தொழிலை, **துணிவு ஆற்றி** - வலிமையுடையராய், **செய்க** - செய்யக்கடவர்.

கூ **வினைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்**
வேண்டாரை வேண்டா வுலகு

(பரி-ரை.) எ-து —வினைக திட்பததை இது நமகருச சிறந்ததென்று கொள்ளாத அமைசசரை, ஒழிக்க திட்பங்களெல்லா முடையாராய விடத்தும் நன்குமதியாா உயாகதோா எ-று.

மனதினகண திட்பமில்லாதாாக்குப் படை, அரண், கட்பு முதலியவற்றின் திட்பங்களெலலாம் உளவாயினும், வினை முடியாதாம், ஆகலே அவையெல்லாம் கெமை என்பதுபற்றி உலகு வேண்டாதென்றார். இதனால் வினைத்திட்பமில்லாதாரது ஒழிபு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)— **உலகு** - உயர்ந்தோர். **வினைத்திட்பம்** - தொழில்வலிமையை, **வேண்டாரை** - (இது நமக்குச் சிறந்ததென்று) கொள்ளாத மந்திரிகளை, **வினைத்திட்பம்** - அவை ஙிங்கலாகிய வலிமைகளெல்லாம், **எய்தியக்கண்ணும்** - உடையவராகிய விடத்தும், **வேண்டாது-நன்கு மதியார்.**

---

* பரிணாமவினபம - முடிகல துாஉகுசுகம்.

கூஅ-ம் அதிகாரம்—வினைசெயல்வகை.

அஃதாவது அத்திட்பமுடைய வமைச்சன் அவ்வினையைச் செய்யுந் திறம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

க. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குக தீது.

(பரி-ரை.) எ-து,—விசாரத்தில் கெல்லாவாது விசாரிக்கின்றான் இனி இது தப்பாதென்னுந் துணிவினைப் பெறுதல்; அங்ஙனந் துணிவுபெற்ற வினை பின் நீட்டிப் பின்கட்டளகுமாயின், அது குற்றமுடைத்து, எ-று.

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் எனவே, துணிவெய்து மளவுஞ் சூழவே ண்டுமென்பது பெறாரும். பின்னைத் துணிவு ஆருபெயர். நீட்டிப்பு-செய் யுங்காலத்துச் செய்யாமை. அஃதுள்வழிக் காலக்கழிவாகலானும், பகைவர் அறிந்தழித்தலானும் முடியாமையின், அதனைத் தீதென்றார்.

(தே - ப - ரை.)—சூழ்ச்சி-ஆலோசனைக்கு, முடிவு - எவ்லியாவது, துணிவு எய்தல் - ஆலோசிப்பவன் இனி இது தப்பாதென்னும்) தெளிவைப்பெறுதல்; அத்துணிவு - அப்படித் துணிவு பெற்றதொழில், தாழ்ச்சியுள் - (பின்) ஆலசியத்தில், தங்குதல் - பொருந்துதல், தீது - குற்றமுடையதாம்.

உ. தூங்குக தூங்கிச செய்பவோ தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

(பரி-ரை.) எ-து,—நீட்டித்துச செய்யும் பருதியவாய வினைகளுள் நீட்டிக்க; நீட்டியாது செய்யும் வினைகளுள் நீட்டியாதொழிக, எ-று.

இருவழியும் இதற்கிக்கட்டொக்க ஏழாவது விரிக்கப்பட்டது. இருவகை வினைகளும் வலியாலும் காலத்தாலும் அறியப்படும். மாறிசெய்யின், அவை வாயா வென்பது கருத்து. * மேற்றூவகாமை யென்றார், ஈண்டனைப் பகுத்துக் கூறினார். இவை இரண்டுபோட்டானும் பொதுவகையால் வினைசெய்யுந் திறங கூறப்பட்டது.

(தே - ப - ரை)—தூங்கி - ஆலசியித்து, செயல்பால - செய்யும்பகுதியையுடைய தொழில்களுள், தூங்குக - ஆலசியம் பண்ணக்கடவன்; தூங்காது - ஆலசியப்பண்ணாமல், செய்யும்வினை - செய்யுந் தொழில்களுள், தூங்கற்க - ஆலசியம் பண்ணுதிருக்கக் கடவன்.

* மேலே கூஉ-ம் அதி. இறையாட்சி, கூ-ம் குறளிற்காண்க.

நடு. ஒல்லும்வா யெல்லாம் வினைகன்றே பொல்லாங்காற்
செல்லும்வாய்ப் நோக்கிச் செயல்.

(பரி-ரை.) எ-து,—வினைசெய்யுங்கால் இயலுமிடத் தெல்லாம் போராற் செய்தல் நன்று; அஃதியலாவிடத்து எனைமூன் றுபாயத்துள்ளும் அது முடிவதோருபாய நோக்கிச செய்க, எ-று.

இயலுமிடம் - பகையிற் றன்வலியுனது காலம் அக்காலத்துத் தண்டமே நன்றென்றார், அற்சவது அதற்கேயாகலின். இயலாவிடம் - ஒத்த காலமும் மெலியகாலமும். அவ்விரண்டுகாலத்துஞ் சாமபேதானங்களுள் அது முடியுமுபாயத்தாற் செய்கவென்றார், அவை ஒன்றற்கொன்று வேறுபாடுடையவேனும் உம்பதினெட்டற் பயத்தாற் றமமுளொக்குமாகலின். இதனுள் வலியான், ஒப்பான், மெலியா னென நீலை மூவகைத் தென்பதூஉம் அவற்றுள் வலியது கிறப்பும், கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—ஒல்லும்வாய் எல்லாம் - (தொழில்செய்யும் போது) கூடுமிடத்தெல்லாம், வினை - தன்டஞ்செய்தல், நன்று - நலமுடையதாம்; ஒல்லாக்கால்-(அது) கூடாதவிடத்து, செல்லும் வாய் நோக்கி - (மற்றைமூன்று உபாயங்களிலே அது) முடிவதோ ருபாய நோக்கி, செயல் - செய்யக்கடவான்

சு. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

(பரி-ரை.) எ-து,—செய்யத் தொடங்கிய வினையும் கெடாயத் தொடங்கிய பகையுமென்று சொல்லப்பட்ட இரண்டன தொழிவும் ஆராயுங்காற் றீயின தொழிவுபோலப் பின் வளர்த்து கெடுக்கும், எ-று.

இனி இக்குறை என்செய்வ தென்று இதழ்த்தொழியற்க, முடியச்செய்க வென்பதாம். பின் வளர்த்த லொப்புமைபற்றிப் பகையெச்சமும் உடன் கூறினார். இதனுள் வலியான் செய்யுந்திறனு கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—வினை - (செய்யத்தொடங்கிய) தொழிலும், பகை - (அழிக்கத்தொடங்கிய) பகையும், என்ற இரண்டின் - என்றுசொல்லப்பட்ட இரண்டினது, எச்சம் - குறையும், நினையுங் கால் - ஆராயுமிடத்து, தீ எச்சம் போல - தீயினது குறைபோல், தும் - (பின வளர்ந்து) கெடுக்கும்.

நூ. பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து
மிருமூர வெண்ணிச் செயல்.

(பரி-ரை.) எ-து,—வினைசெய்யுமிடத்துப் பொருளுங் கருவியுங் காலமும் வினையும் இடனுமாகிய இவ்வைந்தினையும் மயக்கமற வெண்ணிச் செய்க, எ-று.

எண்ணைடு பிறவழி ங கூட்டப்பட்டது. பொருள்-அஃறிணையும் பொருளும் ஆகும் பொருளாம். கருவி-தன்முனையும் மாற்றார்முனையும். காலம்-தனக்காங் காலமும் அவர்க்காகாலமும். வினை-தான் வல்லவினையும் அவர் வல்லவினையும். இடம்-தான் வெல்லுமிடமும் அவர் வெல்லுமிடமும். இவற்றைத் தான் வென்றியெபதுக்கிறத்திற பிழையாமலெண்ணிச் செய்கவென்பதாம்.

(தே - ப - ரை.)—பொருள் - (தொழில்செய்யுமிடத்து) பொருளும், கருவி - சாதனமும், காலம் - காலமும், வினை - தொழிலும், இடன் - இடமும் (ஆகிய), ஐந்தும்—, இருள்தீர - மபக்கம் நீங்க, எண்ணி - நினைத்து, செயல் - செய்யக்கடவன்

சு. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படியனும் பார்த்துச் செயல்.

(பரி-ரை) எ-து,—வினைசெய்யுங்கால் அது முடிதற்குளதாம் முயற்சியும் அதற்குவரு மிடையூறும் அது நீங்கி முடிதற்குளெனைத்தும் பெரும்பயனும் நோக்கிச் செய்க, எ-று.

முடிவு—ஆகுபெயர். முயற்சியிடையூறுகளளவிற் பயனளவு பெரிதாயிற் செய்க வென்பதாம்.

(தே - ப - ரை)—முடிவும் - (தொழில் செய்யுமிடத்து அது) முடிதற்கு உளதாகிய முயற்சியையும், இடையூறும் - (அதற்குவரும்) இடையூற்றையும், ஆற்றி-(அவ்விடையூறு நீங்கி) முடித்தால், எய்தும் - (தான்) அடையும், படியனும் - பெரும் பயனையும், பார்த்து - ஆலோசித்து, செயல் - செய்யக்கடவன்.

எ. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

(பரி-ரை.) எ-து,—அவ்வாற்றுற் செய்யப்படும் வினையைத் தொடங்கினான் செய்யுமுறைமையாவது அதனதளப்பாட்டினையறிவான் கருத்தினைத் தானறிதல், எ-று.

அவ்வாறென்றது பொருண்முதலிய வெண்ணியெயும் முடிவுமுதலிய துக்கியெயும். உள்ளறிவான்-முன்செய்து போந்தவன். அவன்கருத்து-அவன் செய்து போந்த உபாயம். அதனையறியவே, தானும் அதனைச்செய்து பயு

னெய்துமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஒப்பான் செய்யுந் திறங் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—செய்வினை - (அவ்வதியால்) செய்யப்படுந் தொழிலை, செய்வான் - செய்யத்தொடங்கினவன், செயல் முறை - செய்யுமுறையாவது, அவ்வினை - அத்தொழிலினது, உள் - உளப் பாட்டை, அறிவான் - அறிவானது, உள்ளம் - நடுத்தை, கொளல்-(தான்) அறிதல்.

அ. வினையான் வினைபாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

(பரி-ரை.) எ-து—செய்கின்ற வினையாலே அன்னது பிறிது மோர் வினையை முடித்துக்கொள்க; அது மதநீரானனைந்த கபோலத்தினை யுடைய யானையாலே அன்னது பிறிது மோர்யானைபைப் பிணித்ததனை டொக்கும், எ-று.

பிணித்தற்கருமை தோன்ற நனைகவுளென்பது பின்னும் கூட்டப்பட்டது. தொடங்கிய வினையானே பிறிதுமோர்வினையை முடித்தற்குபாயமா மாறு எண்ணிச் செய்க; செய்யவே அம்முறையான் எல்லாவினையும் எளி தின் முடியுமென்பதாம்.

(தே - ப - ரை.)—வினைபால் - (செய்யப்படுகின்ற) தொழி லால், வினை-(அப்படிப்பட்ட) வேறொருதொழிலை, ஆங்கிற்கோடல்-முடித்துக்கொள்ளக் கடவன்; (அது) நனை கவுள் - (மதத்தால்) நனைந்த கபோலத்தையுடைய, யானையால் - யானையினாலே, யானை - (அப்படிப்பட்ட வேறொரு) யானையை, யாத்தது அற்று - கட்டிய தோடு ஒக்கும்.

கூ. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல்

(பரி-ரை.) எ-து,—வினைசெய்வானுந் தன் னட்டார்க்கு இனியவற் றைச்செய்தலினும் விரைந்து செய்யப்படுந் தன்பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல், எ-று.

அவ்வினை வாய்த்தற் பயத்தவாய இவ்விரண்டும் பகைவர்க்குத் தன் மெலிவு புலனுவதன்முன்னே செய்கவென்பார், விரைந்ததென்றார். விரைந்து செய்யப்படுவ தென்றவாறு. வினைசெய்யுந் திறமாகலிற் பகைவரோ டொட்டா ராயிற்று. தன்னெட்டார் பிறருட்கூடாமல் மாற்றி வைத்த லெனினு மமையும்.

(தே - ப - ரை.)—கட்டார்க்கு - (தொழில்செப்பவனல் தனது) கட்பினருக்கு, நல்லசெயலின் - நல்லவகைகளைச் செய்தலினும், ஒட்டாரை - (தன்பகைவரது) பகைவரை, ஒட்டிக்கொளல் - (தனக்கு) நட்பாக்கிக்கொள்ளுதல், விரைந்தீது - விரைந்து செய்யத்

கஅ. உறைசிறியார் ருண்ணடுங்க வெரிக்கு றைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

(பரி-மா.) எ-து,—ஆளுகிடஞ்சிறியராய அமைச்சர், தமதின்வலியார் எதிர்க்கவழிப் தம்பருதி கடிதகலவுஞ், சுத்திலேகு வேண்டுவதாய சந்து கூடுமாயின், அவரைத் தாழ்ந்து அதணே பேற்றுக்கொள்வர், எ-று

இடம்-நாடு அரணும். அவற்றது சிறுமை யுள்வார்மே லேற்றப்பட்ட து. மெலியாரோடு சந்திக்கு வலியார் இயல்லாகலின், பெரினைன்றார். அடியிலே மெலியாரிஞர் தம் பகுதியுமவரி நீங்கின் ருலொடுத கெடுவாதகலின், அது வாராமற் சிறிது கொடு புதுரு சந்தினே டற்றுக்கொள்க வென்பதாம். பணிதல் மானமுடையார்க்குக் கருத்தன்மையின், கொள்வென உலகியலாற் கூறினர். இவை மூன்றுபாட்டாலும் மெலியான் செய்யுந்திறங கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—உறை சிறியார் - ஆநெம் இடஞ் சிறியராகிய மந்திரிகள், (தம்மின்மிக்க வலியரர் எதிர்ந்தவிடத்தே), உள் - (தமது) அங்கங்கள், நடுங்கல் - நடுங்குதலுக்கு, அஞ்சி - பயந்து, குறைபெறின் - (அந்திலேக்கு வேண்டுவதாகிய) சந்தி கூடுமாயின், பெரியார் - அப்பெரியரை, பணிந்து - வணங்கி, கொள்வர் - (அதணை) ஏற்றுக் கொள்ளுவர்.

சூசூ-ம் அதிகாரம்—சூது.

அஃதாவது சுத்தி விக்கிரகங்கட்கு வேற்றுமேற்தரிடை+ செல்வாது தன்மை. அவ்விரண்டினையும் மேல் வினைசெயல்வகை யென்றமையின் இஃது தன்பின் வைக்கப்பட்டது. தான் வருத்திக் கூறுவான், கூறியது கூறுவா னெனத் தூது இருவகைப்படும். அவருள் மூன்னேன் அமைச்சனே டொப்பாஞலாலும் பின்னேன் அவனிற் காற்கூறு குணம் குறைந்தோ ஞலாலும், இஃதமைசசிய லாயிற்று.

க. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

(பரி-ரை.) எ-து,—தன்சுற்றத்தார்மாட்டும் அன்புடையனாதலும் அமைச்சுப் பூணத்தமைந்த குடியின்கட் பிறத்தலும் அரசாராதி விரும்பும் பண்புடையனாதலும் தூவாவார்த்தை சொல்லுவானுக் கிலக்கணம், எ-று.

மூன்னேயவிரண்டனாலும், முறையே சுற்றத்தாராத் தீங்கு வாராமற் மூன் பேணி பொழுகலும், தன்முன்னோர் ஏயல் கேட்டறிதலும், பெற்ரும். வேந்தரம்பணபுடைமை முன்னா மன்னரை சேர்தொழுகற்கட் பெறப்படும். அதனல் வேற்ரு சரு அன் வபதாதல் (பெ) தூ.

(தே - ப - ரை) — அன்பு உடைமை - (தம்மரசனிடத்து) அன்புடையனாதலும். ஆன்ற குடிப் பிறத்தல் - (மந்திரிதொழில் செய்தற்கு) அமைந்த குடியில் வந்து பிறத்தலும் வேந்து அவர் பால் அன்பு உடைமை - அரசர் சாதி விரும்புங் குணமுடையவ ராகலும், தூதுரைப்பான்-தூது வார்த்தையைச் சொல்லுவோனுக்கு, பண்பு-இலக்கணமாம்.

உ. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

(பரி-ரை.) எ-து,—தம்மரசன்மாட் டன்புடைமையும் அவனுக்கு ஆவன வறியு மறிவுடைமையும் அவற்றை வேற்றரசரிடத்துச் சொல்லுவதால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையுமெனத் தூதுரைக்க வுரியார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று, எ-று.

ஆராய்தல் - அவற்றிற் குடம்படுத்து சொர்க்கோள் தெரிதல். இன்றியமையாத மூன்றெனவே, அமைச்சர்க்குச் சொல்லிய பிற குணங்களும் வேண்டுமென்பது பெற்றும். இவை யிரண்டுபாட்டானும் இருவகையார்க்கும் பொது விலக்கணங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அன்பு .. (தம்மரசனிடத்து) அன்புடைமையும், அறிவு - (அவனுக்கு ஆமவைகளே அறியும்) அறிவுடைமையும், ஆராய்ந்த சொல் வன்மை - (அவைகளே வேற்று வேந்தரிடத்துச் சொல்லும்போது) ஆராய்ந்து சொல்லுதல் வல்லமையும், (என) தூதுரைப்பார்க்கு-தூதுசொல்ல உரியவர்க்கு, இன்றியமையாத-அவசியமாக வேண்டிய குணங்கள், மூன்று - மூன்றும்

ஈ. நூலாரு ணூல்வல்ல ஞதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

(பரி-ரை.) எ-து,—வேலையுடைய வேற்றரசரிடைச் சென்று தன்னரசனுக்கு வென்றிதரும் வினையைச சொல்வானுக்கு இலக்கணமாவது நீதிநூலை யுணர்ந்த அமைசசரிடைத் தான் அந்நூலை வல்லனுதல், எ-று.

கோறன் மாலையென்பது தோன்ற வேலரென்றும், தூதுவினையிறண்டிடமுங வென்றிவினையென்றுங கூறினார். வல்லனுதல்-உணர்வுமாத்திரமுடையனாய அவர்முன் வகுசகுமாற்ற லுடையனுதல்.

(தெ - ப - ரை.)—வேலருஞ் - வேலினையுடைய வேற்றரசரிடத்து, வென்றி - (தன்னரசனுக்கு) வெற்றியைத் தருகின்ற, வினை உரைப்பான் - தொழிலைச சொல்லுவானுக்கு, பண்பு - இலக்கணமாவது, நூலாருள் - நீதிநூலை அறிந்த மந்திரிகளிடத்து, நூல்வல்லன் ஆதல் - (தான்) அந்நூலில் வல்லவனுதல்

ச. அறிவு நனாயாய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு

(பரி-ரை.) எ-து —இயற்கையாகிய அறிவும் கண்டார்விரும்புந் தோற்றப் பொலிவும் பலசீரார்பும் பலகாலு மாராய்ப்பட்ட கல்வியுமென கன்குமதித்தற் கேதுவாய இம்மூன்றனது கூட்டமுடையான் வேறுபிவேந்தரிடைத் தூதுவினைக்கு செல்க, எ-று.

இம்மூன்றும் ஒருவன்பா கூடினாலின, செறிவுடையனென்றார். இவற்றுள் கன்குமதிப்புடையனுகவே, விரை இனிது முடியுமென்பது கருத்து.

(தெ - ப - ரை.)—அறிவு - (இயற்கை) அறிவும், உருவு-(கண்டோரிசகிக்கும்) தோற்றப்பொலிவும், ஆராய்ந்த கல்வி - (பலசீரும் பலகாலும்) ஆராயப்பட்டகல்வியும் (எனை), இம்மூன்றின் - (நன்குமதித்தற்கு ஏதுவாகிய) இம்மூன்றினது, செறிவு உடையான் - கூட்டத்தை உடையவன், வினைக்கு - (வேற்றரசரிடத்துத் தூது) தொழிலுக்கு, செல்லுக - செல்லக்கடவன்.

நு. தொகச சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது

(பரி-ரை.) எ-து,—வேற்றரசர்க்குப் பலகாரியமுகளைச சொல்லும் வழிக் காரணவகையாற் றொகுத்துச சொல்லியும் இன்னுதகாரியங்களைச சொல்

லும் வழி வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களால் மனமகிழச் சொல்லியும் தன்னரசனுக்கு நன்மையைப் பயப்பவனே தூதனவான், எ-று.

பலகாரியங்களைக் குடும்பத்தார் பரம்பரையான அவற்றிற்குக் காரணமாய தொன்றைச் சொல்ல அ-ஞல் அவை சிலேயுமா றுய். துணை வருமையாஞஞ் சுருக்கத்தாளை மூண்டவை, இன்னுரவற்றிற் குடும்பத்தார் தம்மனமகிழச் சொல்ல அவ்வினஞ்மை காணுது உடம்பவோரினின், அவ் விருவாற்றலும் தன் காரியந் தவருமல் முடிகவல்லா ரென்பதாம். எண்ணும்மைகள் விகாரத்தாற்றொக்கன.

(தெ - ப - ரை)—தொகுத்சொல்லி - (வேற்றரசர்க்குப் பலகாரியங்களைச் சொல்லுமிடத்தும் காரணவகையால்) தொகுத்துச் சொல்லியும், நூவாத நீக்கி-(இனிமையில்லாத காரியங்களைச்சொல்லுமிடத்து) வெய்யசொற்களை நீக்கி, நகச்சொல்லி - (இனிமையான சொற்களால்) மகிழச்சொல்லியும், நன்றி பயப்பது-(தன் அரசனுக்கு நன்மையைச் செய்பவனே, தூது - தூதனவான்.

கூ. கற்றுக்கண் ணஞரான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது

(பரி-ரை.) எ-து,—நீதிநூல்களைக்கற்றுத்தான் சென்ற கருமத்தைப் பகை வேந்தர் மனங்கொளச் சொல்லி அவர் செயிர்த்தது சோக்கின் அந்தோக்கிற் கஞ்சாது காலத்தோடு பொருந்த அது முடிக்கத்தக்க வுபாயமறிவானே தூதனவான், எ-று.

அவ்வுபாய மறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அதனுணர்ந்தபிறி தொன்றன் முடியுங்காலமுணர்ந்து அவ்வாறு முடிக்கவேண்டுதலிற் காலத்தாற் றக்கதறிதலும், இலக்கணமாயின.

(தெ - ப - ரை.)—கற்று - (நீதிநூல்களை) கற்று, செல-(பகை வேந்தர்) மனங்கொள, சொல்லி - (தான் சென்ற கருமத்தை) சொல்லி, கண் அஞ்சான் - (அவர் கோபித்துப் பார்க்கில்) அப் பார்வைக்கு அஞ்சாது, காலத்தால் - காலத்தோடு பொருந்த, தக்கது - (அதுமுடிக்க) தக்க உபாயத்தை, அறிவது-அறிபவனே, தூதாம் - தூதனவான்.

எ. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

(பரி-ரை.) எ-து,—வேற்றரசரிடத்துச் தான் செய்யு முறைமையறிந்து அவர் செவ்விபார்த்துச் சென்ற கருமஞ் சொல்லுதற்கேற்ற இடமறிந்து

சொல்லுமாற்றை முன்னே விசாரித்து அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான், எ-று.

செய்யு முறைமையாவது அவர் நிலையும் தன்னரசனிலையும் தன்னிலையும் தூக்கி அவற்றிற்கேற்பக் காணுமுறைமையும் சொல்லு முறைமையும் முதலாயின. செவ்வி - தன்சொல்லே யேற்றுக்கொள்ளும் மனநிகழ்ச்சி. அது காலவயத்தாகலிற் காலமென்றார். இடம் - தனக்குத் தீங்கையாவா ருடனுய விடம். எண்ணுதல் - தான் அது சொல்லுமாறும் அதற்கு அவர்சொல்லு முத்தரமும் அதற்குப்பின் ருன்சொல்லுவனவுமாக இவ்வாற்றுன் மேன்மேற் ருனே கற்பித்தல். வடநூலார் இவ்விருவகையாருடன் ஒலிகொடுத்து நிற் பாரையுங் கூட்டித் தூதரை மூவி, இடை, கடையென்று வகுத்துக் கூறினு ராகலின், அவர்மூவர்தோன்றத் தலையென்றார். தூதென்பது அதிகாரத் தான் வந்தது. இவை ஐந்துபாட்டானும் தான் வகுத்துக் கூறுவான திலக் கணங் கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—கடன் - (வேற்றரசரிடத்துத்தான்செய்யும்) முறைமையை, அறிந்து - தெரிந்து, காலம் கருதி - (அவர்) சமயம் பார்த்து, இடன்-(சென்றகருமஞ்சொல்லுதற்கு ஏற்ற இடத்தை, அறிந்து - தெரிந்து, எண்ணி-(சொல்லும்வழியை முன்னே) விசா ரித்து, உரைப்பான் - (அவ்வழி) சொல்லுவோன், தலை - (தூதரில்) மிக்கவன்.

அ. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

(பதி-ரை.) எ-து —ரன்னரசன் வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்றரசர்க்குச் சென்று சொல்லுவான் நிலக்கணமாவது பொருள் காமங்க ளாற் றூயனுதலும் தனக்கு அவாமை சர் துணையாக்தன்மையும் துணிதலு டைமையும் இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையுமென விவை, எ-று.

பொருள் காமங்கள்பற்றி வேறுபடக கூருமைப்பொருட்டுத் தூய்மையும், தன்னரசனுக்கு உயர்சிகூறியவழி எம்மனேர்க் கஃதியல்பெனக்கூறி அவர் வெகுளி நீக்குதற்பொருட்டுத் துணைமையும், இது சொல்லின் இவரேதஞ் செய்வரென் ருெழியாமற்பொருட்டுத் துணிவுடைமையும், யாவராலுங் தேறப்படுதற்பொருட்டு மெய்ம்மையும், வேண்டப்பட்டன. இன்—ருகிலின் பொருட்கண் வந்தது.

(தெ - ப - ரை.)—வழி - (தன்னரசன் வார்த்தையை) அவன் சொல்லியவழியே, உரைப்பான் - (வேற்றரசர்க்கு) சொல்லுவா னது, பண்பு - இலக்கணமாவது, தூய்மை - (பொருளாலும் காமத் தாலும்) பரிசுத்தஞ்தாலும், துணைமை - (தூசாக்கு அவர் மந்திரிகள்)

துணையாக்தன்மையும், துலிரிவு உடைமை - துணிதலில் புடைமை யும், இம்மூன்றின் - இம்மூன்றிறுகூடிய, வாய்மை - மெய்ம்மை யும் ஆம்.

கூ. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன.

(பரி-ரை.) எ-து,—தன்னரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றர சர்க்குச் சென்று சொல்லவறியான் தனக்கு வரு மேதத்திறகஞ்சி அவரைக் குத் தாழ்வானவார்த்தையை வாய்சோர்ந்துஞ் சொல்லாத நிண்மையை யுடை யன், எ-று.

தாழ்வு சாதி தருமமன்மையின், வடுவென்றார். வாய்சோராவெனக் காரி யங் காரணத்து விடக்கப்பட்டது.

(தே - ப - ரை.)—விடுமாற்றம் - (தனக்கு வரும் துன்பத்திற் கஞ்சி அவனுக்கு) தாழ்வான வார்த்தையை, வாய்சோரா - வாய் தவறியுஞ் சொல்லாத, வன்கணவன் - வலிமையையுடையவன், விடு மாற்றம் - (தன் அரசன்சொல்லி) விட்டவார்த்தையை, வேந்தர் க்கு - வேற்றரசர்க்கு, உரைப்பான் - சொல்லுதற் குரியன்.

கூ. இறந்தி பயப்பினு மெஞ்சா நிலைவற்
குறுதி பயப்பதாந் தூது.

(பரி-ரை.) எ-து,—அவ்வார்த்தை தன்னுயிர்க்கிறுதி தருமாயினும் அதற் கஞ்சி யொழியாது தன்னரசன் சொல்லியவாறே அவரசற்கு நிருதியை வேற் றரசரிடைச் சொல்லுவானே தூதுவன், எ-று.

இறந்தியப்பினு மென்றதனால், ஏனைய பயத்தால் சொல்லவேண்டா வாயிற்று. இவை மூன்றுபாட்டானும் கூறியது கூறுவான நிலைகணங் கூறப்பட்டது.

(தே- ப - ரை.)—இறந்தி பயப்பினும் - (அவ்வார்த்தை தன க்கு) முடிவைத் தருமாயினும், அஞ்சாது - (அதற்கு) பயப்படாது, (தன்னரசன் சொன்னபடியே) இறைவற்கு-அவ்வரசனுக்கு, உறுதி- மிகுதியை, பயப்பது-(வேற்றரசரிடத்து) சொல்லுவானே, தூதாம்- தூதனுவான்.

ஏ0-ம் அதிகாரம்—மன்னரைச் சேர்ந்தொழுகல்.

அஃதாவது அமைச்சர் அரசரைப்பொருந்தி யொழுகுமாறு. இது, வேர்தவாம் பண்புடைமையென மேலே வெண்டப்பட்டமையின் தூநின்பின் வைக்கப்படடது.

க. அகலா கலுமாகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர் சேர்ந்தொழுகு வார்

(பதி-ரை) எ-து—மாறுபடுதலேயுடைய அரசரைச சேர்ந்தொழுகும் அமைச்சர் அவரை விடீரவுதும் மிகச்சேறிவதரு செய்யாது தீக்காய்வார் போல இடைநில நிலை பர்க, எ-று.

கடிதின் வெகுளுந் தன்மையென்பது தோன்ற, இகல்வேந்த ரென்றார். மிகவகலிற் பயன விளாடாது மிகவணுகின அவமதிபபதித் தெறும் வேந்தர்க்கு, மிகவகலா குளிர் பாகாது மிகவணுகிற சுடுவதாய தீயோடொதாய தொழிலுவமம் பெறப்பட்டது.

(தெ - ப - ரை.)—அகலாது - மாறுபடுதலில்லாமையுடைய, வேந்தர்-அரசரை, சேர்ந்து - அடுத்து, ஒழுகுவார் - நடக்கு மந்திரிகள், அகலாது - அவரை விட்டு நீங்காமலும், அணுகாது - மிக நெருங்காமலும், தீகாய்வார் போல - நெருப்பிற் குளிர் காய்வாரைபோல் (நடுவிடத்து) நிற்கக்கடவர்.

உ மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய மாண்பு தரும்

(பதி-ரை) எ-து—மாறு சேர்ப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதொழிதல் அமைச்சர்க் கவராலே நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும், எ-று.

ராணடு விழைபவென்றது அவர்க்குச் சிறப்பாக வரியவற்றை. அவை நுகரப்படுவன, ஒப்பனை, மேன்மையென்றிவை முதலாயின. இவற்றை ஒப்பித் கஞ்சித் தாம் விழையாதொழியவே, அவ்வரசர்காக்கி யுவந்து அவர்தாமே எல்லாச செல்வமும் கல்குவரென்பது கருத்து. எனவே, அவற்றை விரும்பித் கேடு தரு மென்பதாம்.

(தெ - ப - ரை.)—மன்னர் - (தம்) அரசரால்; விழைப - விரும்பப் பட்டவைகளை, விழையாமை - (தாம்) விரும்பாதிருத்தல்; மன்னரால் - அவ்வரசராலே, மன்னிய - நிலைபெற்ற, ஆக்கம்-செல்வத்தை, தரும் - (மந்திரிகளுக்கு) கொடுக்கும்.

நெடுஞ எடு-ம் அதி. மன்னரைச்சேர்ந்தொழுகல்

நூ. போற்றி னரியவை போற்றல் கடித்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

(பரி-ரை.) எ-து,—அமைசசர் தம்மைக் காக்கக் கருதின் அரியபிழைகள் தங்கண்வாராமற் காக்க, அவற்றை வந்தனவாகக் கேட்டு அவ்வரசர் ஐயுற்றால் அவரைப் பின்தெளிவித்தல் யார்க்கு மரிதாகலான், எ-று.

அரியபிழைகளாவன அவபாற் பொறுத்தற்கரிய அறைபோ லல், உரிமை யொடு மருவல், அரும்பொருள் வெளவ லென் றிவை மூதலாயின. அவற்றைக் காத்தலாவது ஒருவன் சொல்லியக்கால் தகுமோவென் றையுறுது தகா தென்றே அவர் துணிப வொழுகல். ஒருவாற்றுற் றெளிவித்தாலும் கடன் கொண்டான் றேன்றப் பொருடோன்று மாறுபோலக கணடுழியெல்லாம் அவை நினைக்கப்படுதலின், யார்க்கு மரிதென்றார். இவை மூன்றபாட்டானும் அது பொதுவகையாற் கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—போற்றின் - (மந்திரிகள் தம்மை) காத்துக் கொள்ள வேண்டினால், அரியவை - அரியபிழைகளை, போற்றல் - (தம்மிடத்திலே வாராமல்) காக்கக்கடவர், கடித்தபின் - (அவ்வரசர் அவை வந்தவைகளாகக் கேட்டு) சந்தேகித்தபின்பு, தேற்றுதல் - (அவரைப்பின்) தெளிவித்தல், யார்க்கும் - யாவர்க்கும், அரிது-அரியது, (ஆதலால்).

சு. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.

(பரி-ரை.) எ-து,—அமைந்த வரச ருருகிருந்தால் அவர்காண ஒருவன் செவிக்கட் சொல்லுதலேயும் ஒருவன் முகநோக்கி நகுதலேயுக் தவிர்ந் தொழுகுக, எ-று.

சேர்தல் - பிறனெடு சேர்தல். செய்தொழுகின், தமதற்றம் கண்டுசெய் தனவாகக் கொள்வரென்பது கருத்து.

(தெ - ப - ரை.)—ஆன்ற - நிறைந்த, பெரியார் அகத்து-அரச ரிடத்திருக்கும்போது, செவிச் சொல்லும் - (ஒருவன்) காதிலே சொல்லுதலேயும். சேர்ந்த நகையும் - (ஒருவன்முக) நோக்கி நகைத் தலேயும். அவித்து - நீக்கி. ஒழுகல் - நடக்கக்கடவன்

நி. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளே
லிட்டக்காற் கேட்க மறை.

(பரி-ரை.) எ-து,—அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி யாதொரு பொருளேயுஞ் செவிகொடுத்துக் கேளாது அவனே மூடுகி வினவுவதுஞ் செய்யாது அம்மறைப்பொருளே அவன்முனே அடக்காது சொல்லியக்காற் கேட்க, எ-று.

ஓர்தற்கேற்கும் பொருளாயினு மென்பார், எப்பொருளு மென்றார். மற்று வினைமாற்றின்கண் வந்தது.

(தே - ப - ரை.)—மறை - (அரசனுக்குப் பிறரோடு) ரகசியம் (நிகழ மிட்டது); எப்பொருளும் - யாதொரு பொருளையும், ஓரார் - (செவிகொடுத்து) கேளாமலும், தொடரார் - (அவனே) மூடுகினவாமலும், அப்பொருளே - அந்த ரகசியப்பொருளே, விட்டக்கால் - (அவனே அடக்காமல்) சொல்லினல், கேட்க - கேட்கக்கடவர்.

ஈ. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச சொலல்.

(பரி-ரை.) எ-து,—அரசனுக்குச் காரியஞ் சொல்லுங்கால் அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினையறிந்து சொல்லுதற்கேற்ற காலத்தையும் நோக்கி வெறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரியங்களே அவனமனம் விரும்பும்வகை சொல்லுக, எ-று.

குறிப்புக் காரியத்தின்கணன்றிக் காம வெகுளி யுள்ளிட்டவற்றி னிகழ்வுழியும் அதற் கேலாக்காலத்துஞ் சொல்லுதல் பயனின்மையிற் குறிப்பறிந்து காலங் கருதியென்றும், அவனுடம்படாதன முடிவுபோகாமையின் வெறுப்பிலவென்றும், பயனில்லவும் பயன்சருகியவுஞ் செய்தல்வேண்டாமையின் வேண்டுபவென்றும், அவற்றை இனியவாய்ச் சுருங்கி விளங்கிய பொருளவாய சொற்களாற் சொல்லுகவென்பார் வேட்பசசொல் லென்றது கூறினர்.

(தே - ப - ரை.)—(அரசனுக்குக் காரியஞ் சொல்லும்போது) குறிப்பு அறிந்து - (அப்பொழுது நிகழ்கின்ற அவனது) குறிப்பையறிந்து, காலம் கருதி - (சொல்லுதற்குரிய) காலத்தையும் பார்த்து, வெறுப்பு இல - வெறுப்பில்லாதனவும், வேண்டுப - வேண்டுவனவும் ஆகிய காரியங்களே, வேட்ப - (அவன்மனம்) விரும் பும்வகை, சொல்லல் - சொல்லக்கடவர்.

உ. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லாவிடல்.

(பரி-ரை.) எ-து,—பயன் பெரியனவுமாய் அரசன் விரும்புவனவுமாய காரியங்களே அவன் கேட்டிலனுயினுஞ் சொல்லி எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றைத் தானேகேட்டானுஞ் சொல்லாது விடுக, எ-று.

யிலெனவுங் கேட்பினுமெனவும் வந்த சொற்களான், அவற்றின் சொற்கள் வருவிக்கப்பட்டன. வினையான்வருதலின் வினையென் றமக்காலமு மடங்க எஞ்ஞான்றுமென்றுங் கூறினார். சொல்லுவன வெல்லாதனவும் வருத்துக் கூறியவாறு. இவை நான்குபாட்டானுஞ் சுயாற் கூறப்பட்டது.

(பதவு - ப - ரை.)—வேட்பன - (பெரும்பய னுள்ளவையும் அரசன்) விரும்புவனவும் (ஆகிய காரியங்களை), செல்லின் - (அவன் கேட்டிலனாயினும்) சொல்லி, எஞ்ஞான்றும் - எக்காலமும், வினை இல-பயனில்லாதவைகளை, கேட்பினும் - (தானே) கேட்டாலும், சொல்லாயிடல் - சொல்லாது விடுக.

அ. இனையா னினமுறைய செய்திகழார் பின்ற
வொளியோ டொழுகப் படும்.

(பரி-ரை.) எ-து,—இவர் எம்மியல்பென்றும் எமக்கின்ன முறையினை யுடையரென்றும் அரசரை யவமதியா தவர்மாட்டு நின்றவொளியோடு, பொருந்த வொழுகுதல் செயப்படும், எ-று.

* ஒளி-உறங்காதிறகவுந் தாழுலகங்காக்கின்ற அவர் கடவுட்டன்மை., அதனோடுபொருந்த வொழுகலாவது அவர் கடவுளருக் தாம் மக்களா யொழுகுதல். அவ்வொளியாற் போக்கப்பட்ட வினையும் முறையும்பற்றி இகழ்வாயின், தாமும் போக்கப்படுவரென்பது கருத்து.

(தே - ப - ரை.)—இனையர் - (இவர் எமக்கு) இனையவர், இன முறையர் - (எமக்கு) இன்னமுறையினர், என்று இகழார் - என்று (அரசரை) அவமதியாமல், நின்ற - (அவரிடத்து) நிலை பெற்ற, ஒளியோடு - ஒளியோடுபொருந்த, ஒழுகப்படும் - நடக்கத் தகும்.

கூ. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

(பரி-ரை.) எ-து,—அரசனுல் யாம் கன்குமதிக்கப்பட்டேமென்று கருதி அவன் விரும்பாதவற்றைச செய்யார் நிலேபெற்ற வறிவினையுடையார், எ-று.

' உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி—நறையுகு தெரியலை யாகுமா-லிறங்கு கண்ணிமை யாவிழித் தேயிருக்—நறையுகன் மௌலை யதன்புறை காக்கலார்—சீவக சிந்தாமணி, காமகளிலம்பகம், உகக.

கொள்ளாதனசெய் தழிவெய்துவார் கொளப்பாட்டிற்குப் பின் தம்மை வேறொருவராகக் கருதுவராகலின், முன்னேயாகவே கருதி யஞ்சி யொழுகு வானைத் துளக்கற்ற காட்சியவ ரென்றார்.

(தே - ப - ரை.) - நுளக்கு அற்ற - அசைவற்ற, காட்சியவர் - அறிவுடையவர். கொள்ளப்பட்டேம் எள்று - (அரசனால்) நன்கு மதிக்கப்பட்டோ மென்று, எண்ணி-கருதி, கொள்ளாத - (அவன்) விரும்பாதனவாகிய; செய்யார் - செய்யமாட்டார்கள்.

கo. பழையா மெனக்கருதிப் பண்பல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

(பரி-ரை.) எ-து—அரசனுக்கு யாம் பழையமெனக் கருதித் தமக்கியல் பல்லாதவற்றைச செய்யுமுரிமை அமைச்சர்க்குக் கேட்டினேப்பயக்கும், எ-று.

அவன் பொருது செறும்பொழுதின் அப்பழமை நோக்கிக் கண்ணேடாது உரிமை வெளவுதலான், அவன் வேண்டாதன செய்தற் கேதுவாய கெழுதகைமை கேடுசருமென்றார். இவை மூன்றுபாட்டானும் பொறுப்ப தென்று அஞ்சா வெறுப்பன செய்யற்க வென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பழைபம் எனல - (அரசனுக்கு) பழமை யோமென, கருதி - நினைத்து, பண்பு அல்ல-(தமக்கு) இயல்பல்லாத லாதவைகளை, செய்யும் - செய்கின்ற, கெழுதகைமை - உரிமை யானது, கேடுதரும் - (மந்திரிகளுக்கு) கேட்டைத் தரும்.

எகம் அதிகாரம்—குறிப்பறிதல்.

அஃதாவது அரசர் கருதியவாறே அவர் கூறுமறிதல். இது, மன்ன ரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமையா தாகலின், அதன்பின் வைக்கப்பட் டது.

க. கூறுமை நோக்கிக் குறிப் பறிவ னெஞ்ஞான்று
மாறுநீர் வையக் கணி.

(பரி-ரை.) எ-து.—அரசனுற் குறித்த கருமத்தை அவன் கூறவேண்டா வகை அவன் முகமாறுக கண்ணாறு நோக்கி அறியுமமைசன் எஞ்ஞான்றும் வற்றுத நீராற்சூழப்பட்ட வையத்துள்ளார்க்கு ஓராபரணமாம், எ-று.

ஓட்பமுடையனுய் எல்லார்க்கும் அழகுசெய்தலான், வையக்கணியென் றார். குறிப்பும் வையமும் ஆகுபெயர். வையத்திற்கென்பது விகாரப்பட்டு நின் றது.

(தே - ப - ரை.)—குறிப்பு - (அரசனல்) குறிக்கப்பட்ட காரியத்தை, கூருமை - (அவன்) சொல்லவேண்டாவகை, நோக்கி - (அவன்முகத்தையாவது கண்ணினையாவது) பார்த்து, அறிவான்-அறிகிற மந்திரியானவன், எஞ்ஞான்றும் - எக்காலும், மாருநீர் - வற்றுத நீரினலே சூழப்பட்ட, வையக்கு - உலகத்துள்ளார்க்கு, அணி-ஆபரணம்.

உ. ஐயப் படாஅ தகத்த தணர்வாணர்
தெய்வத்தோ டொப்பம் கொளல்.

(பரி-ரை.) எ-து —ஒருவன் மனத்தின்கணிகழ்ந்தனை ஐயப்படாது ஒருதலையாக வுணரவல்லானை மகனேயாயினும் தெய்வத்தோ டொப்ப நன்குமதிக்க, எ-று.

உடம்பு முதலியவற்றுன் ஒவ்வாளுயினும் பிறர்நினைந்த துணருந் தெய்வத் தன்மை யுடைமையின், தெய்வத்தோ டொப்ப வென்றூர்.

(தே - ப - ரை.)—அகத்தது - (ஒருவனது) மனத்தினிடத்து நிகழ்வதை, ஐயப்படாது - சந்தேகப் படாமல், உணர்வாரை - (துணிவாக அறியவல்லவரை, தெய்வத்தோடு ஒப்ப-(மனிதனேயாயினும்) தெய்வத்தோடி சமானமாக, கொளல்-நன்குமதிக்கக் கடவன்.

ங. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

(பரி-ரை.) எ-து,—தாங்குறிப்பு ரகழுமா றறிந்து அதனைப் பிறர் குறிப்பறியுந் தன்மையரை அவர் தம்முறுப்புக்களுள் அவா வேண்டுவதொன்றனைக் கொடுத்தாயினும், தமக்குத் துணையாகக் கொள்க, எ-று.

உண்ணிகழுநெறி யாவர்க்குமொத்தலின், பிறர் குறிப்பறிதற்குந் தங்குறிப்புக் கருவியாயிற்ற. உறுப்புகளாவன பொருளும் நாடும் யானை குதிரைகளும் முதலிய பறத்துறுப்புகள். இதற்குப் பிறர் மூகக்குறிப்பானே அவர் மனக்குறிப் புணர்வாரை யென்றுரைப்பாரு முளர். இவை மூன்றுபாட்டானும் குறிப்பறிவாரது சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—குறிப்பின் - (தம்) குறிப்புநிகழும்விதம்(அறிந்து); குறிப்பு உணர்வாரை - (அதனல்) பிறர்குறிப்பு அறியுந் தன்மையவரை, உறுப்பினுள் - (அரசர்தம்) உறுப்புகளுஞ், யாது கொடுத்தும் - (அவர் வேண்டுவது) யாதொன்றைக் கொடுத்தாயினும், கொளல் - (தமக்குத் துணையாக) கொள்ளக்கடவர்.

ச. குறித்தது கூறுமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரணையரால் வேறு.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் மனத்துக் கருகிய வதனை அவன் கூற வேண்டாமல் அறியவல்லாரோடு மற்றை மாட்டாதார் உறுப்பா லொருதன் மையராக வொப்பாராயினும் அறிவான் வேறு, எ-று.

கொள்ளாதா ரென்பதூஉம் ஆயினுமென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. சிறந்த வறிவின்மையின், விலங்கென்னுங் கருத்தான் வேறென்றார்.

(தே - ப - ரை.)-குறித்தது-(ஒருவன் மனத்தில்) நினைத்ததை, கூறுமை - (அவன்) சொல்லாமல், கொள்வாரோடு - அறியவல்லவ ரோடு, ஏனை - மற்றை (அறியமாட்டாதவர்), உறுப்பு - அவயவத் தால், ஓரனையர் - ஒருதன்மையராக வொப்பினும், வேறு - (அறி வால்) வேறு.

நி. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண்

(பரி-ரை.) எ-து,—குறித்தது காணவல்ல தங்காட்சியாற் பிறர்குறிப் பினை யுணரமாட்டாவாயின் ஒருவனுறுப்புகளுட் சிறந்த கண்கள் வேறென்ன பயனைச் செய்வன, எ-று.

முதற்கட் குறிப்பு ஆகுபெயர். குறிப்பறித்தற்கட் நினையாதற் சிறப்புப் பற்றி உயிரதுணர்வு கணமே லேற்றப்பட்டது. அக்கண்களாற் பயனில்லை யென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் குறிப்பறியாத திழிபு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—குறிப்பின்-(குறித்ததை அறியவல்லவன்) காட்சியால், குறிப்பு - (பிறர்) குறிப்பை, உணரா ஆயின் - அறி யமாட்டா ஆயின், உறுப்பினுள் - (ஒருவனுக்கு) அவயவங்களுள், கண் – சிறந்தகண்கள், என்ன பயத்தவோ - (வேறே) என்னபயன் செய்வனவோ.

ரு. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

(பரி-ரை.) எ-து,—தன்னெயடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டுகாட்டும் பளிங்குபோல ஒருவனெஞ்சத்து மிக்கதனை அவன்முகந் தானே கொண்டு காட்டும், எ-று.

அடுத்தென்பது ஆகுபெயர். கடுத்தென்பது கடியென்னு முரிச்சொ லடியாய்வந்த தொழிற்பெயர். உவமை ஒருபொருள் பிறிதொரு பொருளின் பண்பைக்கொண்டு தோற்றுதலாகிய தொழில்பற்றி வந்தது.

(தே - ப - ரை)—அடித்தது - (தன்னை) அடித்த பொருளினது நிறத்தை, காட்டும் - (தான்கொண்டு) காட்டுகிற, பளிங்கு போல் - கண்ணாடிபோல், நெஞ்சம் - (ஒருவனது) நெஞ்சத்தில், கடுத்தது - மிகுந்த குணத்தை, முகம் - (அவன்) முகமானது, காட்டும் - (தான் கொண்டு) காட்டும்.

எ. முகத்தின் முகக் துறைந்த தண்டோ வுகப்பினும்
காயினுங் தான்முந் துறும்.

(பரி-ரை.) எ-து,—உயிர் ஒருவனை யுவத்தலானும் காய்தலாலுமுறின், தானறிந்து அவற்றின்கண அதனின் முற்பட்டு நிருகுமாகலான் முகமபோல அறிவுமிக்கது பிறிதுண்டோ இல்லை, எ-று.

உயிர்க்கே அறி ள்ளது ஞம்பூகங்களா னியன்ற முகத்திற்கில்லை யென் பாரைநோக்கி, உயிரது கருத்தறிந்து அஃதவக்குறின் மலர்ந்துங காய்வுறிற் கருகியும் வரலான், ணைடென மறப்பாபோன்று, குறிபறிதற்குக் கருவி கூறியவாறு.

(தே - ப - ரை)—உவப்பினும் - (உயிரானது) மிருப்பினுலும், காயினும் - வெறுத்தாலும், தான் - தான் (அறிந்து), முந்துறும் - (அவ்விரண்டிலும் அவ்வுயிருக்கு) முற்பட்டு நிற்கும், (ஆகலால்) முகத்தின் - முகம்போல, முதலும் குறைந்தது - அறிவு மிகுந்தது, உண்டோ - உளதோ, [இல்லை].

அ. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

(பரி-ரை.) எ-து,—குறையுறவாளும் தன்மனதைக் குறிப்பானறிந்து தானுற்றவதனைத் தீர்ப்பாரைப் பெறின் அவர் தன்முகம் நோக்கும்வகை தானும் அவர்முகநோக்கி அவ்வெல்லைக்கணிற்க வமையும், எ-று.

உணர்வாரெனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினர். அவ்வெல்லையைக் கடந்து செல்லுமாயின் இருவர்க்குஞ் சிறுமையாமாகலின், அதுவேண்டாவென்பதாம் குறையுறவானியல்பு கூறுவார்போன்று கருவி கூறியவாறு. இவை மூன்றபாட்டானுங குறிப்பறிதற் கருவி முகமென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அகம் நோக்கி - (குறையுறுவோன் தன்) மனத்தைக் குறிப்பால் அறிந்து, உற்றது - (தான்) ற்றதனை, உணர்வார் - அறிந்து தீர்ப்பாரை, பெறின் - பெற்றால், முகநோக்கி-

(அவர்தன் முகத்தை பார்க்குங்படி அவர்) முகக்கைப் பார்த்து, நிறை - (அவ்வளவிலே) நிற்க, அனையும் - போதும்.

கூ. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

(பரி-ரை.) எ-து.—வேகாத நோக்கு வேறுபட்டின் றன்மையை அறியவல்ல புலமை பெரும்பெரின் அவர்க்கு மனத்துக்கிடந்த பகைமையையும் ஏனைக்கேண்மையையும் வேற்றுவேடமா சொல்லிடலாயினும் அவர் கணகளே சொல்லும், எ-று.

இறுகி யட்கண ஆகுபெயர். நோக்கு வேறுபாடாவன வெறுத்தநோக்கமும் உவந்த நோக்கமும். உணர்தல் - அவற்றை அவ்வகை நிகளாணறிதல்.

தெ-ப-ரை.—கண்ணின் வகைமை - (தமது, பார்வை வேறுபாட்டிற் கண்மையை உணர்வார் - அறியவல்ல மந்திரிகளை, பெறின் - அரசர் பெற்றால், (அவர்க்கு) பகைமையும் கேண்மையும்-(மனத்திலுள்ள) பகைத்தன்மையும் நட்புத்தன்மையும், கண் - (வேற்றரசர் சொல்லா நற் போயினும் அவர்) கண்களே. உரைக்கும்-சொல்லும்.

கூ. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல திவ்வே பிற.

(பரி-ரை.) எ-து,—யாம் நுணணறிவுடையே மென்றிருக்கும் அமைச்சர் அரசர் கருத்திகை யளக்குங கோலாவது ஆராயுமிடத்து அவர்கணணல்லது பிறவில்லை, எ-று.

அறிவிலுணமை அரிதுடைபார்மே லேற்றப்பட்டது. இங்கிதம், வடிவு, தொழில் சொல்லென்பன முதலாகப் பிறர்கருத் துளக்கு மளவைகள் பல, அவை யெல்லாம் முன்னறிக்கவும் அவரான் மறைக்கப்படும், நோக்கம் மனத் தொடு கலத்தலான் ஆண்டு மறைக்கப்படா தென்பதுபற்றி, அதனையே பிரித் துக் கூறினர். இனி 'அலைக்குங்கோல்' என்று பாடமோதி, நுண்ணியமென்றி ருக்கும் அமைச்சரை அரசரலைக்குங்கோலாவது கண்ணினை வரைத்து, தன் வெகுளி நோக்கால் அவர் வெருட்குறிப் பறிகவென்பது கருத்தாக்குவாரு முளர். இவை யிரண்டுபோட்டானும் நுணுகருவி நோக்கென்பது கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—நுண்ணியம் என்பார் - நுட்பஅறிவுடை யேம் என்றிருக்கு மந்திரிகள், அளக்கும் கோல் - (அரசரது கரு த்தை) அளக்கு கோலாவது, காணுங்கால் - ஆராயுமிடத்து, கண் அல்லது - (அவரது) கண்களல்லாமல், பிற-வேறு, இல்லை - இல்லை.

எஉ-ம் அதிகாரம்—அவையறிதல்.



அஃதாவது அரசனோடிருந்த அவையின தியல்பையறிதல்· காரியஞ் சொல்லுங்கால் அவன் குறிப்பறிந்தலே யன்றி இதுவும் வேண்டுதலின், இஃ ததன்பின் வைக்கப்பட்டது.

க. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றேகையறிந்த தூய்மை யவர்.

(பரி-ரை.) எ-து,—சொல்லின் குழுவினை யறிந்த தூய்மையினையுடை யார் தாமொன்றுசொல்லுங்கால் அப்பொழுதை யவையினையறிந்து ஆராய்ந் தது சொல்லுக, எ-று.

சொல்லின் குழுவினவே, ‡ செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச் சொல்லென்னும் மூவகைச்சொல்லு மடங்கின. தூய்மை-அவற்றுள் தமக்கா காதன வொழித்து ஆவன கோடல். அவையென்றது ஈண்டு அதனளவை. அது மிகுதி, ஒப்பு, தாழ்வென மூவகைத்து. அறிதல்-தம்மொடு தூக்கியறிதல். ஆராய்தல்-இவ்வவைக்கட் சொல்லுங்காரியம் இது, சொல் மாறிது, சொன் னால் அதன் முடிவிது வென்ற இவையுள்ளிட்டன வாராய்தல்.

(தே - ப - ரை)—சொல்லின் தொகை - சொல்லின் கூட்டத் தை, அறிந்த - தெரிந்த, தூய்மையவர் - பரிசுத்த குணமுடையவர், (தாம் ஒன்றுசொல்லும்போது) அவை - (அப்பொழுதுள்ள) சபை யை, அறிந்து - தெரிந்து, ஆராய்ந்து - ஆராய்ச்சிசெய்து, சொல் லுக - சொல்லக்கடவர்.

உ. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர்.

(பரி-ரை.) எ-து,—சொற்களினடையினை ஆராய்ந்தறிந்த நன்மையினை யுடையார் அவைக்கண் ஒன்றுசொல்லுங்கால் அதன் செவ்வியை யாராய்ந் தறிந்து வழுப்படாமல் மிகவுந்தெளிந்து சொல்லுக, எ-று.

‡ சொற்களினடையாவது அம்மூவகைச சொல்லும் செம்பொருள், இலக்கணப்பொருள், குறிப்புப்பொருளென்னும் பொருள்களேப்பயக்குமாறு. செவ்வி - கேட்டற்கண் விருப்புடைமை. வழு - சொல்வழுவும் பொருள்வழு வும். இவை யிரண்டுபோட்டாலும் ஒன்று சொல்லுங்கால் அவையறிந்தே சொல்லவேண்டுமென்பது கூறப்பட்டது.

---

* செஞ்சொல், இலக்கணச்சொல, குறிப்புச் சொல் லென்பனவுமுறை முறையே வாச கம், லக்ஷகம், வியஞ்சகம் எனவும்.

‡ அவை பொருளை உணர்த்தும் வகையினை முறையே அபிதை, இலக்கணை, வியஞ் சனை விருத்தி யெனவும் கூறுவர் வடநூலார்.

(தெ - ப - ரை.)—சொல்லின் கடை - சொற்களது கடையை, தெரிந்த - ஆராய்ந்து அறிந்த, கண்ணையவர் - கண் முதலையுடையவர், இடைதெரிதல் - (சபையினிடத்து ஒன்றும் சொல்லும்போது) சமயத்தை ஆராய்ந்தறிதலை, கன்குணர்ந்து - (வழுப்படாமல்) மிக வந் தெளிந்து, சொல்லுக - சொல்லக்கடவர்

ஈ. அவையறியார் சொல்லன்மேற் கொள்ளார் சொல்லின்
வகையறியார் வல்லதூஉமில

(பரி-ரை.) எ-து,—அவையின் தன்மையறியாது ஒன்று சொல்லுதலைத் தம்மேற்கொள்வார் அச்சொல்லுதலின் கூறுபாடும் அறியார். கற்ற வல்ல கலை யும் அவர்க்கில்லை, எ-று.

அம்மூவகைச்சொற்களால் வருஞ் சொல்லுதல் வகைமை கேட்பாரது உணர்வு வகைமைபற்றி வருதலாற் சொல்லின் வகையறியாரென்றும், இந்த றியார் யாதுமறியாரென்று எல்லாரானு மிகழப்படுதலின் வல்லதூஉமில் லென்னுய கூறினர். இவ்வுல் அவையறியாக்கால் வருமருமறை கூறப் பட்டது.

(தெ - ப - ரை.)—அவை - சபையினளவை, அறியார் - அறி யாதவராகி, சொல்லல - (ஒன்று) சொல்லுதல், மேற்கொளபவர் - தம்மேற் கொள்ளுபவர், சொல்லின்வகை - அச்சொல்லின் கூறுபா டும், அறியார் - தெரியாராயர்; வல்லதூஉம் - (மற்றும்) வல்லகலை யும், இல் - (அவர்க்கு) இல்லை

அ. ஒளியார்முற னெள்ளிய ராதலவெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

(பரி-ரை.) எ-து,—அறிவாலொள்ளியார் அவைக்கட் டாழு மொள்ளிய ராக, ஏனவெள்ளோக எவைகட் டாழும் வாலிய சுதையி னிறத்தைக் கொள்க, எ-று.

ஒள்ளியாவென்றது மிக்காரையும் ஒத்தாரையும். அது விகாரத்தால் ஒளி யாரென நின்றது. ஒள்ளியாரல் தக்நூலறிவுஞ் சொல்வண்மையுந் தோன்ற விரித்தல். அவையறியாத புல்லரை வெளியாரென்றது, வயிரமின்மரத்தை வெளிதென்னும் வழக்கப்பற்றி. அவர் மதிக்கும் வகை அவரினும் வெண்மை யுடையராக வென்பார், வான்சுதைவண்ணங்கொளலென்றார். அவையள வறிந்தார் செய்யுந்திறம் இதனுள் நெருக்குக் கூறப்பட்டது. முன்னர் விரித் துக் கூறுப.

(தே - ப - ரை.)—ஒளியார்முன் - (அறிவால்) ஒள்ளியாரது சபையினிடத்து; ஒள்ளியர் ஆதல் - (தாமும்) ஒள்ளிபராகம்கடவர்; வெளியார்முன் - (மற்றை) அறிவீனர்களது சபையினிடத்து, வான் சுதை வண்ணம் - தாமும் வெண் சுண்ணச் சாந்து நிறத்தை, கொளல் - கொள்ளக்கடவர்.

நி நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
முன்து கிளவாத தெறிவு.

(பரி-ரை.) எ-து —ஒருவற்கு இது நன்றென்று சிறப்பித்துச் சொல்லப் குணங்களெல்லாவற்றுள்ளும் நன்றே கும்மின் மிக்காரவைக்கண அவரின் மூற்பட்டு ஒன்றுமே சொல்லாத வடக்கம், எ-று.

தகுதியும் அவர்மிருதியும் முந்துகிளந்தாற்படி மிழற்கும் இளவாக்கலெய்து நன்மையும் அறிந்தே யடங்கினமையின் அவையடக்கத்தினை நன்றென்றவற்றுள்ளு நன்றென்றார். முன்கிளந்தலேயே விலக்கினமையின், உடன் கிளத்தலும் பின்கிளந்தலுமா மென்பது பெறாரும். இதனுன் மிக்காரவைக் கட் செய்யுங்கிறாய கூறப்பட்டது

(தே - ப - ரை)—முதுவருள் - (கும்மின் மிகுந்தவரது சபையினிடத்து; முந்து - (அவருக்கு) மூற்பட்டு, கிளவா - (ஒன்றை) சொல்லாத, செறிவு - அடக்கம், நன்று வற்றுள்ளும் - (ஒருவர்க்கு இது) நல்லதென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்கள் பலவினும், நன்றே - நல்லதாம்

சு. ஆற்றி னிலேதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு

(பரி-ரை.) எ-து,—வீடெய்தற்பொருட்டு நன்னெறிக்க ணின்றுளெரு வன் அக்நெறியினின்றும் நிலேதளர்ந்து வீழ்ந்தாலொக்கும் அகன்ற நூற் பொருள்களே யுட்கொண்டு அவற்றின் மெய்ம்மை யுணரவல்லா ரவைக்கண வல்லாளெருவன் சொல்லிழுக்குப்படுதல், எ-று.

நிலேதளர்ந்து வீழ்தல் உம்னென்னுந் தோட்டியா னேரைந்துங் காத தொழுகியான் பின்னிழுகிக் கூடாவொழுக்கத்தனுதல். பயனிழத்தலேயன்றி இகழவும் படுமென்பதாம். இதனுன் அதன்க ணிழுகியவழிப் படுவதூறு கூறப்பட்டது

(தே - ப - ரை.)—வியன்புலம் - விரிந்த நூற்பொருள்களே, ஏற்று - உட்கொண்டு, உணர்வார் முன்னர் - (அவைகளின் மெய்ம்மையை) அறியவல்லவர் சபையினில், இழுக்கு - (வல்லவனெருவன்)

சொல்லிழுக்குப்படுதல், (முத்திபெறற்பொருட்டு நல்வழியினின்றவ னெருவன்), ஆற்றின் - அவ்வழியினின்றும், நிலைதளர்ந்தால் அற்றை-நிலைதளர்ந்து வீழ்ந்தாலொக்கும்.

எ. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கரடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து

(பரி-மை.) எ-து,—வழுப்படாமற் சொறகளோ யாராய்தல் வல்லா ரவைக் கட்சொல்லின், பல நூல்களோயுங் கற்று அவற்றிலுறய பயனையறிந்தாரது கல்வி யாவாக்கும் விளங்கித்தோன்றுமு, எ-று.

சொல்லினென்பது அவாய்நிலையான் வந்தது. ஆண்டே சொல்லவென்ப தாம்

(தெ - ப - ரை)—கரடு அற - வழுப்படாமல், சொல் தெரிதல் - சொற்களை ஆராய்தலில், வல்லார் அகத்து - வல்லவர் சபையிடத்தே, (சொல்லினால்), கற்று - (பல நூல்களையுங்) கற்று, அறிந்தார் - (அவைகளாலாகிய பயனை) அறிந்தவரது, கல்வி - கல்வியானது, விளங்கும் - பாவம்பெறும் விளங்குதேதானும்.

அ. உலகம் ஆடையாமுறை சொல்லில் வளர்வதன்
பாத்தியு ளீர்சொரிந் தற்று.

(பரி-மை.) எ-து, மற்றுமுள்ள பொருளை யுத்தமே யுணரவல்ல அறிவினையுடையா ரவைக்கட் கற்றார் ஒன்றனை சொல்லுதல் தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண நீரினை சொரிந்தாபோலும், எ-று.

தானேயும் வளர்தற்குரிய கல்வி மிக வளருமென்பதாம். இவையிரண்டு பாட்டானும் ஒத்தாரவைக்கண வெவ்வழியு சொல்லுகவென்பது கூறப் பட்டது.

(தெ - ப - ரை)—உணர்வது - (பொருள்களைத் தாமே) அறிய வல்ல அறிவை, உடையார்முன் - உடையவர் சபையினிடத்து, சொல்லல் - (கற்றவர் ஒன்றை) சொல்லுதல், வளர்வதன் - (தானே) வளர்வதொரு பயிர் நின்ற, பாத்தியுள் - பாத்தியினுள்ளே, நீர் சொரிந்தால் அற்று - நீரைச் சொரிந்தாற்போலும்.

கூ. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

(பரி-ரை.) எ-து,—நல்லாரிருந்த வவைக்கண் நல்லபொருள்களே அவர் மனங்கொள்ளச் சொல்லுதற்குரியார் அவையறியாத புல்லரிருந்த வவைக்கண் அவற்றை மறந்துஞ் சொல்லா தொழிக, எ-று.

சொல்லின், தம் மவையறியாமையை நோக்கி நல்லவையும், பொருளறியாமையாற புல்லவைதானும் இகழ்தலின், இரண்டவைக்கு மாகாரென்பது கருதிப் பொச்சாந்துஞ் சொல்லற்க வென்றார்.

(தே - ப - ரை.)—நல் அவையுள் - நல்லவரிருந்த சபையினிடத்து, கண்ணு - நல்லபொருள்களே, செல - (அவர்) மனங்கொள்ள, சொல்லுவார் - சொல்லுதற் குரியவர், புல் அவையுள் - (அவையறியாத) புல்லரிருந்த சபையினிடத்து, பொச்சாந்தும் - மறந்தும், சொல்லற்க - (அவையிலே) சொல்லாதொழியக்கடவர்.

கo. அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(பரி-ரை.) எ-து,—நல்லார் தம்மினத்தரல்லாதாரவைக்கண் ஒன்றினையுஞ் சொல்லற்க, சொல்லின் அது நாய்நல்லாத முற்றத்தின்கணுக்க அமிழ்தினை யொக்கும், எ-று.

கொள்ளென்னும் முதனிலைத் தொழிற்பெயர் முன்னின்று பின்னெதிர்மறை அவ்விகுதியோடு கூடி, * "மகனெனல்" என்பதுபோனின்றது. சொல்லின் அது வென்பன அவாப்ர்லையான் வந்தன. பிறரெல்லாங் கொளலென்பதனை தொழிற்பெயராக்கி யுரை கூறினார்; அவர் அத்தொழில் அமிழ்தென்னும் பொருளுமையோடு இயையாமை நோக்கிற்றிலர். சாவா மருந்தாதலறிந்து யுகர்வார் கையிலம்படாது அவ்வங்கணத்துக்கு மியையின்றிக் கெட்டகாறு தோன்ற, வக்க வமிழ்தென்றார். அச்சொற் பயனில்சொல்லாமென் பதாயிற்று. இவை யிரண்டிற்பட்டானும் தாழ்ந்தாரவைக்கண ஒருவழியுஞ் சொல்லற்கவென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—(நல்லோர்) தங்கணத்தர் அல்லாமுன் - தம்மினத்தவ ரல்லாதவர் சபையிடத்து, கோட்டிகொளல் - (யாதொன்றையுங்) கொள்ளாதிருக்கக்கடவர்; (கொண்டால் அது) அங்கணத்துள் - (பரிசுத்தமல்லாத) முற்றத்துள், உக்க - வீழ்ந்த, அமிழ்து அற்று - அமிழ்த மொக்குர்.

---

* மேலே உo-ம் அதி. பயனிலைசொல்லாமை, சு-ம் குறளிற்காண்க,

எஉ-ம் அதிகாரம்—அவையஞ்சாமை.

அஃதாவது சொல்லுதற்குரிய அவையினையறிந்து சொல்லுங்கால் அதற் கஞ்சாமை. அதிகாரமுறைமையும் இதனானே வீளங்கும்.

க. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
ருகையறிந்த தூய்மை யவர்

(பரி-ரை.) எ-து,—கற்றவல்லவை அல்லாவவை யென்னும் அவைவகை யினையறிந்து வல்ல வவைக்கண் ஒன்றுசொல்லுங்கால் அரசத்தான் வழுப் படச்சொல்லார். சொல்லின் ருகையெல்லாமறிந்த தூய்மையினை யுடை யார், எ-று.

இருந்தாதுவன்மை அவைமே லேற்றப்பட்டது. வல்லவை யென்பதற் குத் தாங்கற்றுவல்ல நூற்பாருள்ளே பென்றுரைப்பாரு முளர். அச்சத்தா னென்பது அதிகாரத்தான் வந்தது. சொல்லின்ருகை, தூய்மை யென் பனவற்றிற்கு மேலுரைத்தாங் குரைக்க.

(தே-ப-ரை.)—சொல்லின் தொகை அறிந்த - சொற்களது தொகையை அறிந்த, தூய்மையவர் - பரிசுத்தருணமுடையவர், வகையறிந்து - (கற்றுவல்லசபை மூடசபை என்கிற சபையின்) வகையை அறிந்து, வல்லவை - கற்றுவல்ல சபையில், (ஒன்று சொல்லும்போது) வாய்சோரார் - (அரசத்தாற்) பிழைபடச் சொல் லார்.

உ கற்றருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்

(பரி-ரை.) எ-து,—கற்றருள்ளாரினும் இவர் நன்குகற்றாரென்று உல கத்தாராற் சொல்லப்படுவார். கற்றாவைக்கண அஞ்சாதே தாங்கற்றவற்றை அவர் மனங்கொள்ளும்வகை சொல்லவல்லார், எ-று.

உலகமறிவது அவையேயாகலின், அதனுற் புகழப்படுவாரும் அவரென் பதாம்.

(தே-ப-ரை.)—கற்றார் முன் - கற்றோர் சபையினிடத்தே, கற்ற - (தாமே) கற்றவைகளை, செல - (அவர்) மனங்கொள்ளும் வகை, சொல்லுவார் - (அஞ்சாமல்) சொல்லவல்லவர், கற்றருள் - கற்றவரெல்லாரினும், கற்றார் - (இவர்) நன்குகற்றவர், எனப்படு வர் - என்று (உலகத்தோரால்) சொல்லப்படுவர்.

மேலே எஉ-ம் அதி. அவையறிதல், உ-ம் குற

ங. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்

(பரி-ரை.) எ-து,—பகையிடை யஞ்சாது புகுஞ சாவவல்லார் உலகத்துப் பலர். அவையிடை யஞ்சாது புகுஞ சொல்லவல்லார் சிலர், எ-று.

அஞ்சாமை சாவாரென்பதனேறிய கூட்டி. அதனஞ் சொல்லவல்லாரென்பது வருவித்துரைக்கப்பட்டது. இவை மூன்றுபாட்டானும் அவையஞ்சாதது சிறப்புக் கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—பகை அகத்து - பகையினிடத்து ந, ராவார்-(அஞ்சாதுபோய்) இறக்கவல்லவர், ளரியர் - (உலகத்து) பலர், அவைஅகத்து - சபையினிடத்தில், அஞ்சாதவர் - அஞ்சாமல் போய்ச்சொல்ல) வல்லவர், அரியர் - சிலர்.

ச. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

(பரி-ரை.) எ-து,—பலநூல்களோடும் கற்றாருலகுக்கட் டாங்கற்றவற்றை அவர் மனங்கொள்ளு மாற்றாற சொல்லி அவற்றின் மிகுபொருளைத் தாம்மிக கற்றாரிடத தறிந்துகொள்க, எ-று.

எல்லாம் ஒருவர்க்கு கற்றல் கூடாமையின் வேறுவேறாய பல்லியுடையார் பலரிருந்த அவைக்கட் டாங்கற்றவற்றை அவாகளே பல சொல்லுக, சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல்லுவராகலான், ஒருவர்க்குப் பெறுதன கேட்டறியலா மென்பதாயிற்று. இதனுல் அதனை தேருசார்பயன் கூறப்பட்டது

(தெ - ப - ரை)—கற்றார்முன் - (பலநூல்களோடும்) கற்றோர் சபையினிடத்து, கற்ற - (தாம்) கற்றவைகளை, செல - (அவர்) மனங்கொள்ளும்படி, சொல்லி - சொல்லிக்காட்டி, தாம் கற்ற-தாங் கற்றவைகளினும், மிக்க - அதிகமானபொருள்களை, மிக்காரின் - அதிகமாகக் கற்றவரிடத்து, கொளல - அறிந்துகொள்ளக்கடவர்.

ரு. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றல் கொடுத்தற் பொருட்டு.

(பரி-ரை.) எ-து,—சொல்லிலக்கண நெறியானே அளவைநூலே அமைசசர் உட்பட்டுக் கற்க, வேற்றுவேந்த ரவையிடை யஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரஞ் சொல்லுதற்பொருட்டு, எ-று.

அளவைநூல் சொன்னூல் கற்றேற கற்கவேண்டுதலின், அதற் கஃதாறெ னப்பட்டது. அளக்குங கருவியை அளவென்றார், ஆகுபெயரான். அவர் சொல்லே வெல்வதொருசொற சொல்லலாவது நியாயத்துவாதஞெச்ப விதண் டைகளும் சல சாதிகளும் முதலிய கற்றாக்கேயாகலின், அவறறைப் பிழை யாமற் கற்கவென்பதாம். இதனுல் அதன்காரணங கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—அவை-(வேற்றுமே வந்தர்) சபையில், அஞ்சா-அஞ்சாமல், மாற்றம் - எதிர்மொழியை, கொடுத்தற் பொருட்டு - சொல்லும்பொருட்டு, ஆறறின் - (தொலலிலக்கண) வழிபால், அளவு - அளவைநூலை, அறிந்து - தெரிந்து, கற்க - (மந்திரிகள்) கற்கக்கடவர்

கூ. வாளொடென் வன்கண்ணர் ஸல்லார்க்கு நூலொடென்
னுண்ணலை யஞ்ச பவர்க்கு.

(பரி-ரை.) எ-து,—வன்கண்மை யுடையரல்லாதார்க்கு வாளோடெ வியை புணை, அதுபோல நுண்ணியார தலையை யஞ்சுவாக்கு நூலோ டென்ன வியை புண்டு, எ-று.

இருந்தாரது நுண்மை அவைமே லேற்றப்பட்டது. நூற்குரியரல்ல ரென்பதாம்.

(தெ - ப - ரை.)—வன்கண்ணர் அல்லார்க்கு - சௌரியமுடை யவ ரல்லாதவர்க்கு, வாளொடு - வாளுடனே, என் - யாது (சம்பந்த மூண்டு), (அதுபோல) நுண் அலை - புத்திநுட்பமுடையவரது சபையை, அஞ்சபவர்க்கு - பயப்படுபவர்க்கு, நூலொடு - கல்வி யுடனே, என் - என்ன (சம்பந்தமுண்டு)

அ. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சுமவன் கற்ற நூல்.

(பரி-ரை.) எ-து,—எறியப்படும் பகைகடவெண் அதனையஞ்சும் பேடி பிடித்த கூர்வாளையொக்கும், சொல்லப்படும் அவைகடவெண் அதனை யஞ்சு மவன் கற்றநூல், எ-று.

பேடி பெணணியல்புமிக்கு ஆணியல்பு முடையவள். களமும் வாய்த்துத் தானும் கண்ருயிருந்தே யாயினும் பிடித்தவள் குற்றத்தால் வாள் சிறப்பின் ருயினற்போல, அவையும் வாய்த்துத் தானும் கண்ருயிருந்தே யாயினும் கற்றவன்குற்றத்தால் நூல் சிறப்பின்ருயிற்று.

(தெ - ப - ரை.)—அவை அகத்து - (சொல்லப்படும்) சபை நடுவில், அஞ்சுமவன் - (அதனை) அஞ்சுமவன், கற்றநூல் - கற்ற

நிக்தநூல், பகைஅகத்து - (எறியப்படும்) பகைநடுவில், பேடி - (அதனை அஞ்சும்) பேடி, கை - கையிற்பிடித்த, ஒள்வாள் - கூர் வாளை (ஒக்கும்).

அ. பல்லவை கற்றும் பயமிலரே கல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

(பரி-ரை.) எ-து,—கல்லாரிருந்த வவைக்கண் கல்ல சொற்பொருள்க ளோத் தம்மசத்தான் அவர்க்கேற்கச சொல்லமாட்டாதார் பலநூல்களைக் கற்றாராயினும் உலகிற்குப் பயன்படுதலிலர், எ-று.

அறிவார்முற் சொல்லாமையிற் கல்வியினுண்மை யறிவாரில்லை யென்ப தாம். இனிப் பயமிலரென்பதற்குக் கல்விப்பயனுடைய ரல்லரென் றுரைப் பாருமுளர்.

(தே - ப - ரை.)—கல் அவையுள் - கல்லவரிருந்த சபையுள், கன்கு - கல்லசொற்பொருள்களை, செல - (அவர்க்கு) ஏற்க, சொல் லாதார் - (அபசத்தால்) சொல்லமாட்டாதவர், பல்லவை கற்றும் - பலநூல்களைக் கற்றாராயினும், பயம் இலரே - (உலகத்துக்கு) பிர யோசனப்படுதலிலர்.

கூ. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
கல்லா ரவையஞ்சு வார்.

(பரி-ரை.) எ-து,—நூல்களைக் கற்றவைத்தும் அவற்றாற் பயனறிந்து வைத்தும் கல்லாரிருந்த அவையினையஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை உலகத் தார் கல்லாதவரினுங் கடையரென்று சொல்லுவர், எ-று.

அக்கல்வியறிவுகளாற் பயன் ருமுமெய்தாது பிறரையெய்துவிப்பதுஞ் செய்யாது கல்வித்தன்மையெய்திற்றாலின், கல்லாதவரிற் கடையென உலகம் பழிக்கு மென்பதாம்.

(தே - ப - ரை.)—கற்று - (நூல்களை) கற்று, அறிந்தும் - (அவைகளாலேபயனை) அறிந்திருந்தும், கல்லார் - கல்லவரிருந்த, அவை - சபையை, அஞ்சுவார் - அஞ்சி (அவ்விடத்தில்) சொல் லாதவரை, கல்லாதவரின் - மூடரினும், கடை - கடையர், என்ப - என்று (உலகத்தோர்) சொல்லுவர்.

கo. உளசெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

(பரி-ரை.) எ-து,—அவைக்களக்ஸை யஞ்சி காரகாரவர்ரை அதற் கேற்ற சொல்லமாட்டா ரர் உயிர வாழ்கின்ற ரயி னும், உலகத்தோர லெண்ணப்படாமையின் இறந்தாரே ரொப்பர், எ-று.

ணக்கு களனென்றது ஆண்டிருந்தாரை. இவையைந்து பாட்டானும் அவையஞ்சுவார திழிபு கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—களன் - சபையை, அஞ்சி - பயந்து, கற்ற - (தம்)கற்றவைகளை, செல - (அதற்கு) ஏற்ற, சொல்லாதார்-சொல்ல மாட்டாதவர், உளர் எனினும் - உயிரோ டிருந்தாராயினும், இல்லாரோடு ஒப்பர் - (உலகத்தோரால் எண் ணப்படாமையால்) தவரோ டொப்பாவர்.

எசும் அதிகாரம்—நாடு.

அவ்வரசனாலும் அமைசனாலும் கொணையகப்படுவதாய் எனை அரண் முதலிய அங்கங்களட்கு இன்றியமையாச றிறப்பிற்றாய நாடு ஒதிகாரத் தாற் கூறுகின்றார்.

க. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச
செல்வருஞ் சேர்வது நாடு.

(பரி-ரை.) எ-து,—குன்றாத விளையுளோக செய்வோரும் அறவோரும் கேடில்லாத செல்வமுடையோரும் ஒருவரு வாழ்வதே நாடாவது, எ-று.

மற்றை யுயர்திணைப் பொருள்களோடுஞ் சேர்தலிறை லோடும் இயை யாமையின், விளையுளென்பது ஈவுமேனின்றது. குன்றுமை-எல்லாவுணவு களும் நிறைய வளவாதல். இதனன் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட் டது. அறவோர்-துறந்தோர அதணர் முதலாயினர் 'நல்லவருஞ்செய்வார்க் கிடக் தவருஞ்செய்வார்க்கு மஃதிடம்" என்றார பிறரும். இதனல் அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை-வழுகதிலாமை; செல்வர் கலத்தினுங் காலினும் அரும்பொரு டரும் வணிகர. இதனல் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள்வாய்த்தல் பெறப்பட்டது.

நறற வஞ்செய் வாகுகிடக தவருசெய்வாரகு மஃதிடம்—நறபொருவசெயவார்க் கிடம் பொருள் செய்வாரகு மஃதிடர —வெறற வின்பம் விரீஇயபான வீணனு வாது வீழ்கதென—மறறை நாடி வட்டடாக வைகு பவடை ரோடாரோ—சீவகசிர ராமணி. காமகளி லம்பகம், சஅ.

(தெ - ப - ரை.)—நாடு - நாடாவது, தள்ளா விளையுளும்-குன்றுதல் இன்மையையுடையோரும், தக்காரும் - அறவோரும், தாழ்விலாச் செல்வரும் - நேடில்லாத செல்வமுடையோரும், சேர்வது - கூடி வாழ்வதே.

ஈ பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்று விளைவது நாடு.

(பரி-ரை.) எ-து;— அளவிறந்த பொருளுடைமையாற் பிறதேயத்தாரா லும் விரும்பத் தக்கதாய் கேழுண்மையோடுகூடி மிகவிளைவதே நாடாவது, எ-று.

அளவிறப்புப் பொருள்களாவது பன்மைமேலும் தனிக்கனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது-மிக்கபெயல், பெயர்ன்மை, எலி, விட்டில், கிளி, அகுணமை யென்றிவரான் வருவது. "மிக்கபெய லோடுபெய வின்மையெலி விட்டில்கிளி யக்கணா சணமையோ டாறு." இவற்றை வட நூலார் பாகிலெனப. இவற்றுள் முன்னையவற்றின்மை அரசனாற்தானும், பின்னையதின்மை அவன்மாற்தானும், வரும். இவ்வின்மைகளான் மிகவிளைவு தாயிற்று.

(தெ - ப - ரை.)—நாடு - நாடாவது, பெரும் பொருளால் - அளவிறந்த பொருளுடைமையால், பெட்டக்கது ஆகி - (பிறதேசத் தாராலும்) விரும்பத்தக்கதாகி, அருங்கேட்டால் - அழிவில்லாமை யோடு கூடி, அற்ற விளைவது - மிகவிளைவதே.

ஈ பொறையொருப்படு மேல்வருங்கால் மற்றவை யிறைவற்
கிறையொருப்படு நேர்வது நாடு.

(பரி-ரை.) எ-து;—பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருமகே தன் கண்வருகலால் அவ்வளவு தாங்கி அதன்மேற் றன்னபரனுக்கு இறைப் பொருண முழுதையும் உடம்பட்டுச் செலுப்பதே நாடாவது, எ-று.

பாடியகம்-மகட்பெடாகுரியம் ஆனெருமை முதலிய விலங்குத் தொகுதி யும். தாக்குல்- ரவை தத்தங்கியாதுப் பகை வந்திறுத்தாக, அரசுகோல் கோடியதாக, உணவின்மையானதத் தன்கண் வந்தால் அவ்வத் தேயங்களைப் போல இனிதிருப்பச செய்தல். அச்செயலால் இறையைக் குறைபடித்தாது தானே கொடுப்பதென்பார், இறையொருகு கேர்வதென்றார்.

(தெ - ப - ரை.)—நாடு - நாடாவது, பொறை - (பிறநாடுகள் சுமந்த) பாரமெல்லாம், ஒருங்கு - ஒருங்குசேர, மேல்வருங் கால் - (தன்) மேல்வரும்போது, தாங்கி - (அவைகளை) தாங்கி,

இறைவற்கு - (அதன்மேலும் தன்) அரசனுக்கு, இறை ஒருங்கு-இறைப்பொருண் முழுவதையும், நேர்வது-உடன்பட்டுக் கொடுப்பதே.

ச. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.

(பரி-ரை.) எ-து,—மிக்க பசியும் நீங்காத நோயும் புறத்தின்று வந்தழிவுசெய்யும் பகையுமின்றி இனிது நடப்பதே நாடாவது, எ-று.

உறுபசி உழவருடைமையானும் ஆற்றலரசனாலும் சேராதாயிற்று. ஓவாப்பிணி திக்காற்று மிக்கருளிர் வெப்பங்களும் நுகரப்படுமவற்றது தீமையுமின்மையிற் சேராதாயிற்று. செறுபகை அரசனுற்றலும் நிலைப்படையும் அடவியும் அரணு முடைமையிற் சேராதாயிற்று.

(தெ - ப - ரை.)—நாடு - நாடாவது, உறுபசியும் - அதிகபசியும், ஓவாப் பிணியும் - நீங்காத நோயும், செறுபகையும் - (புறத்திலிருந்துவந்த) அழிவுசெய்யும் பகையும், சேராது - அடையப் பெறாமல், இயல்வது - இனிதுநடப்பதே.

நி. பருகுவும் பாழ்செய்பு முட்பகையுங் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.

(பரி-ரை.) எ-து,—சங்கேதவயத்தான் மாறுபட்டுக் கூடும் பலகூட்டமும், உடனுறையாகின்றே பாழாகச் செய்பு முட்பகையும், அளவுவந்தால் வேந்தனை யலைக்கும் கொல்லிணைக் குறும்பரும் இல்லாததே நாடாவது, எ-று.

சங்கேதம் - சாதிபற்றியும் கடவுள்பற்றியும் பலர்க்குளதா மொருமை. உட்பகை - ஆறலைப்பார் கள்வர் குறுகூறுவார் முதலிய மக்களும், பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும். உட்பகை குறும்பென்பன ஒருபெயர். இம்மூன்றும் அரசனுலும் வாழ்வாராலுங் கடியப்பட்டு நடப்பதே நாடென்பதாம்.

(தெ - பரை.)—நாடு - நாடாவது, பல் குழுவும் - (சங்கேதவசத்தால் மாறுபட்டுக்கூடும்) பலகூட்டமும், பாழ் செய்யும் - (உடனிருந்துகொண்டே) பாழாகச்செய்பு, உட்பகையும் - (கள்ளர்முதலிய) உட்பகையும், வேந்தலைக்கும் - (சமயம்வந்தால்) அரசனை அலைக்கின்ற, கொல் குறும்பும் - கொலைத்தொழிற் குறும்பரும், இல்லது - இல்லாததே.

சு. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்று
நாடென்ப நாட்டிற் றலை.

(பரி-ரை.) எ-து,—பகைவராற் கெடுத லறியாததாய் அரிதிற்கெட்ட தாயினும் அப்பொழுதுந் தன்வளமுங்குன்றாத நாட்டினை எல்லாநாட்டினுந் தலையென்று சொல்லுவர் தூலோர், எ-று.

அறியாத குன்றாத வென்றும் பெயரெச்சங்களி னிறுதிநிலைகள் விகாரத் தாற் றொக்கன. கேடறியாமை - அரசனுற்றலாலாவ கடவட்பூசை யறங்க ளென்றிவற்றது செயலாலும் வரும். வளம் - ஆகட்களிற் படுவனவும் வயலி னுக் தண்டலையினும் விளைவுமாம். குன்றுமை - அவை செய்யவேண்டா மல் இயல்பாகவே யுளவாயும் முன்னீட்டப்பட்டுங் குறைவறுதல். இவை யாறுபாட்டானும் நாட்ட நிலக்கணங கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கேடு அறியா - பகைவராலே) கெடுதலறி யாததும், கெட்டவிடத்தும் - (அரிதில்) கெட்டவிடத்தும், வளம் குன்று - (அப்பொழுதும்) வளங்குறையாததும் ஆன, நாடு - நாட்டை, நாட்டின் - (எல்லா நாடுகளிலும்), தலை - முதன்மைய தாகும், என்ப - என்று தூலோர் சொல்லுவர்.

எ. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

(பரி-ரை.) எ-து,—மேற்சொல்லப்பட்ட தன்கணீரும் வாய்ப் புடைத்தாய மலையும் அதனினின்றும் வருவதாய நீரும் அழியாத நகரியும் நாட்டிற் கவயவமாம், எ-று.

ஈண்டுப் புனலென்றது குளக்கேணிகளும் வாவிகளும் ஆறுகளுமாகிய ஆகாசநீரை, அவயவமாத்திரியன அவையே யாகலின். அவற்றுள் வானம் வறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது. இடையதன்றி யொருபுடையதாக லும் தன்வளந்தருதலும் மாரிக்கணுண்டநீர் கோடைக்கணுமிழ்த்தலு முடைமை பற்றி வாய்ந்த மலையென்றார். அரண—ஆகுபெயர். இதனுன் அதனவயவம் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—இருபுனலும் - (தன்னிடத்துக் கிழ்நீர் மேல் நீர் எனப்படும்) இருவகை நீரும், வாய்ந்த மலையும் - வாய்ப்புடைத் தாகிய மலையும், வரு புனலும் - (அதிலிருந்து) வருவதாகிய நீரும், வல் அரணும் - அழியாத நகரியும், நாட்டிற்கு - நாட்டினுக்கு, உறுப்பு - அவயவமாம்.

அ. பிணியின்மை செல்வம் விளையின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(பரி-ரை.) எ-து,—நோயின்மையுஞ் செல்வம் விளைதல் இன்பம் காவ லென்றிவை யுடைமையுமாகிய இவ்வைந்தினையும் நாட்டிற் கழகென்று சொல்லுவர் நூலோர், எ-று.

பிணியின்மை - நிலைநலத்தான் வருவது. செல்வம் - மேற்சொல்லியன. இன்பம்-விழவும் (வள்ளியுஞ் சான்றோரு மூடைமையானும், நகர்வன வுடை மையானும், நிலநீர்களது நன்மையானும், வாழ்வார்க்கு உண்ணிகழ்வது. காவ லெனவே அரசன்காவலும் வாழ்வோர காவலும் அரண்காவலு மடங்கின. பிறதேயங்களி னுள்ளாரும் விழைந்து பின் அவையுள்ளாமைக் கேதுவாய அதனழகு இதனுற் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—பிணி இன்மை - நோயில்லாமையும், செல் வம் - செல்வமும், விளைவு - பயிர்விளைவும், இன்பம் - சுகமும், ஏமம் - காவலும், இவ்வைந்து - ஆகிய இவ்வைந்தினையும், நாட் டிற்கு - தேசத்திற்கு, அணி - அழகாகும், என்ப - என்று (நூலோர்) சொல்லுவர்.

ஆ. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(பரி-ரை.) எ-து,—தங்கண்வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பாற் றானேயடையுஞ் செல்வத்தை யுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லு வர்; ஆதலாற் றேடிவருந்தச் செல்வமடைவிக்கும் நாடுகள் நாடாகா, எ-று.

நாடுதல் இருவழியும் வருத்தத்தினமே னின்றது. ஃ "பொருள்செய்வார்க்கு மஃதிடம்" என்றார் பிறரும். நூலோரிதிற்றி எதிர்மறை முகத்தாற் குற்றங கூறியவாறு. இவ்வாறன்றி என்பவென்பதனைப் பின்னுங்கூட்டி இரு பொருள்பட வுரைப்பினு, அனுவாதமாம்.

(தெ - ப - ரை.)—நாடா - (தம்மிடத்து வாழ்வோர்) தேடி வருந்தாமல், வளத்தன - (அவரிடத்துத் தானே அடையும்) செல் வத்தை யுடையவைகளை, நாடு - நாடுகள், என்ப - என்று (நூலோர்) சொல்லுவர், (ஆதலால்), நாட-தேடிவருந்த, வளந்தரும்- செல்வத்தை அடைவிப்பவையாகிய, நாடு - நாடுகள், நாடுஅல்ல - நாடுகளாகாவாம்.

கo ஆக்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(பரி-ரை.) எ-து,—வேந்தனுடைய மேலுதலில்லாத நாடு மேலுஞ்சொல்லிய குணங்களெல்லாவற்றாலும் நிறைந்திருந்ததாயினும் அவற்றாற பயனுடைத்தன்று, எ-று.

வேந்தமை வென்னவே, குடிகள் அவன்மாட் டன்புடையராதலும் அவன் றன் இயல்மாட்டருளுடைமையுமுதலும் அடங்கின. அமையிலவழி வாழ்வோரின்மையின் அவற்றாற பயனின்றாயிற்று இவை யிரண்டுபோட்டானும் அதன் குற்றங கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வேந்து - அரசனுடைய, அமைவு இலலாத - பொருந்துதலில்லாத, நாடு - தேசம், ஆங்கு - மேறசொலலிய குணங்களெல்லாம், அமைவு உடற்பற்கண்ணும் - நிறைந்துள்ளதாயினும், பயம் இன்றே - (அவைகளால்) பயனுடைத்தன்று

எறும்பு அதிகாரம்—அரண்.

இனி அரசாட்டிற குறுப்பாயடங்குமாயினும் பகைவயாற றெரலிவுவந்தழி அதனகரும் அரசன்றனகரும் எமமாதற் சிறப்புப்பற்றிப் பிரிதோரதிகாரமாக வோதப்பட்ட அரண இவ்வதிகாரத்தாற கூறுகின்றார.

க ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்

(பரி-ரை.) எ-து,—மூவகையாறறலு முடையராயப் பிறரமேற செல்வார்க்கும் அரண சிறந்தது. அவையின்றித தம்மேல் வருவார்க்களஞித் தன்னையே யடைவாகவும் அரண சிறந்தது, எ-று.

பிறராமேற் செல்லுங்கால் உரிமை பொருண் முதலியவற்றைப் பிறனெருவன் வௌவாமல வைதுசெல்லவேண்டி மாகலானும, அப்பெருமை தொலைந் திறுதிவக்தழிக கடனறிவு ணுடைகலதாரர் போன்று எமங்காஞ திறுவராகலானும்,ஆர தபவாகவும் போற்றபவாக்கும் அரண பொருளாயிற்று. அரணில்வழி அழியும்பாலராகலின், அவரை முதலகூறினர். இதனால் அரணினது சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அரண் - கோட்டையானது, ஆற்றுபவர்க்கும் - (மூவகை வலிமையு முடையவராய்) பிறர்மேற் செல்வோர்க்கும், பொருள் - சிறந்ததாகும், அஞ்சி - (அவையல்லாமல் தம்

மேல் வருவோர்க்கு) அஞ்சி, தற்போற்றுபவர்க்கும் - தன்னையே அடைவோர்க்கும், பொருள் - பிறந்ததாகும்.

> ஈ. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
> காடு முடைய தரண்.

(பரி-வரை.) எ-து,—மழைபோலு நிறத்தினையுடைய நீரும் வெள்ளிடை நிலமும் மலையுங் குளிர்ந்த நிழலையுடைய காடுமுடையதே அரணெனது, எ-று.

எல்லாரன்னும் வந்தடுத்த நிலன்பார் மன்னென்னும், பெருவழுவில்லா மருவிலனென்பார் மனனென்னும், பெரிய்த வனென்பார் அண்ணிழற்கா டென்றன கூறினர். மதிற்புறத்து மரமெலாம் பகைவர் அடனபற்றுமைப் பொருட்டு. அரண், மலையுண்ண காட்டினென இயற்கையுஞ் செயற்கையு மரண இக்காண்கனுஞ் சுட்டப்படுவது அறிணன்பதாம்.

(தே-ப-ரை.)—அரண்-கோட்டையாவது, மணிநீரும் - மணி போல் நிறத்தையுடைய நீரும், மண்ணும் - வெளிநிலமும் மலையும், அணிநிழல் காடும் - குளிர்ந்த நிழலையுடைய காடும், உடையது - உடையதே.

> கூ. உயர்வகலந் திண்மை யருமைபிற் கான்கி
> னமைவர வெண்ணுரைத்த நூல்

(பரி-வரை.) எ-து,—உயர்ச்சியும் அகலமும் திண்மையும் அருமையு மென்று சொல்லப்பட்ட இன்னான்கின் மிகுதியையுடைய மதிலே அர ணென்று சொல்லுவர் நூலோர், எ-று.

அமைவு நூல் என்பன ஒருபெயர். உயர்வு - எனியெற்றுத்தி. அலகம்- புறத்தோர்க்கு அரணழிதரா அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினைசெய் யலாக் தலையகலமும். திண்மை-கல்லிட்டிகைகளாற் செய்தலிற் குற்றப்படாமை. அருமை - பொறிகளான் அணுகற்கருமை. பொறிகளாவன— * "வளை விற்பொறியு மயிற்செறிலோடு—கருவி வாகமுங் கல்லுமிழ் கவணும்—பரி வுறு வெஃகெயும் பாகடி சுழியுமு—நாய்பொன னுலையுங் கல்லிடி கூடையுந் தண்டிலுந் துடக்கு மாண்டலை யமிப்பும்—கவையுங் கழுவும் புதையு புழை யும்—மையவித் தலாமுங் கைபெய ரூசியுஞ்—செலறெறி சிரலும் பன்றியும் பணையு—மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங்—கோலுங் குந்தமும் வேலுஞ் சூலமும்" என்றிவை முதலாயின.

(தே-ப-ரை.)—உயர்வு - உயர்ச்சியும், அகலம் - அகலமும், திண்மை - வலிமையும், அருமை - அருமையும் (என்னப்பட்ட),

* பெரும்பாணாற்றுப்படை, அடி 84 முதல் 92 வரை.

இக்காள்கின் - இவை காள்கினுடைய, அமைவு - மிகுதியையுடைய மதிலே, அரணென்று - கோட்டையென்று, நூல் - நூலோர், உரைக்கும் - சொல்லுவர்.

ச. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

(பரி-ரை.) எ-து,—காக்கவேண்டு மிடஞ்சிறிதாய் அகன்ற விடத்தை யுடைத்தாய்த் தன்னைவந்து முற்றிய பகைவரது மனவெழுச்சியைக் கெடுப்பதே அரணெனது, எ-று.

வாயிலும் வழியும் ஒழிந்த விடங்கள் மலை, காடு, நீரிலையென் றிவற்றுள் ஏற்பனவுடைத்தாதல் பற்றி+சிறுகாப்பினென்றும், அகழோ கலிவின்றி யிருத்தல் பாறிப் பேரிடத்ததாகியென்றும், தம்வலி தோகுகி இதுபொழுதே யழித்து மென்று வரும்பகைவர் வந்துகண்டால் அவ்வூக மொடிதல்பற்றி ஊக்க மழிப்ப தென்றுங் கூறினர்.

(தெ - ப - ரை)—அரண்கோட்டையாவது, சிறுகாப்பின் - காக்கவேண்டுமிடஞ் சிறியதாய், பேரிடத்தது ஆகி-பரந்த இடத்தை உடையதாய், உறுபகை - (தன்னை) சூழ்ந்த பகைவரது, ஊக்கம் - மனவெழுச்சியை, அழிப்பது - கெடுப்பதே

ரு கொளற்கரிதாய்க் கொண்டகூற்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

(பரி-ரை.) எ-து,—புறத்தாராற் கோடற்கரிதாய் உட்கொண்ட பல வகை யுணவிற்றும் அகத்தாரது போர்நிலைகெளிதாய நிலைமையை யுடையதே அரணெனது, எ-று.

கோடற்கருமை - இவை கிடங்குகளானும் பொறிகளானும் இடங்கொள் ளுதற் கருமை. உணவு தலைமைபற்றிக கூறினமையின், மற்றுள்ள நுகரப்படு வனவு மடங்கின. நிலைக்கெளிதா நீரமையாவது அகத்தார் விட்ட ஆயுதமுத லிய புறத்தாமே லெளிதிறசேறலும், அவர்விட்டன அகத்தார்மேற் செல்லா மையும், பகுணப்பாப்பும் முதலாயின.

(தெ - ப - ரை)—அரண் - கோட்டையாவது, கொளற்கு அரிது ஆய் - (புறத்தோராலே) கொள்ளுதற் கரிதாய், கொண்ட - உட்கொண்ட, கூற்று ஆகி - (பலவகை) உணவை உடையதாகி, அகத்தார் - உள்ளிடத்தோரது, நிலைக்கு - (போர்) நிலைக்கு, எளிது ஆம் - எளியதாகிய, நீரது - குணத்தையு முடையதே.

கூ. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய நரண்.

(பரி-ரை.) எ-து,—அகத்தோர்க்கு வேண்டிய பொருள்க ளெல்லாவற் றையும் உள்ளேயுடைத்தாய்ப் புறத்தோ ரல் அழிவெய்தா மெல்லிலக்கண அஃ தெய்தாவகை யுதவிக் காக்கும் எல்லாரிடையு முளை யதே ர ர ர, ர ர.

அ சன்மார் ன னி ர ர ம ர ர ர

உம்மை சிறப்பும்மை. பற்றின்கண்ணே யாற்றியெனவிரியும். பற்று ஆகு பெயர். வெல்வதென உடையார்தொழில் அரண்மே னின்றது. பெரும்படை யானைச் சிறுபடையான் பொறுத்து நிற்குந் தூணேயேயன்றி வெல்லுமியல் பினதென்பதாம். இதற்குப் பிறிதுரைப்பாருமுளர். இவை யேழுபாட்டா னும் அதனிலக்கணங கூறப்பட்டது.

(தே - ப - ரை)—அரண் - கோட்டையாவது, முற்று ஆற்றி - (சேனைப்பெருமையால் சூழ்தல்வல்லவராகி, முற்றியவரையும் - (வக்து) சூழ்ந்த புறத்தோரையும், பற்றியார் - (தன்னைப்பற்றிய) உள்ளிடத்தோர், பற்று ஆற்றி - (தாம்) பற்றியவிடம் விடாதே னின்று, வெல்வது - (போர்செய்து) வெல்வதே

கூ. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்

(பரி-ரை) எ-து,—போர்தொடங்கினவளவிலே பகைவர் கெடும்வண் ணம் அகத்தோர்செய்யும் வினைவேறுபாடுகளான் வீறுபெற்று மற்றும் வேண்டு மாட்சியை யுடையதே அரணுவது, எ-று.

தொடக்கத்திற் கெட்டார் பின்னுங்கூடிப் பொருதல் கூடாமையின், முனைமுகத்து சாய வென்றார். வினைவேறுபாடுகளாவன பகைவர் தொடங் கிய போரினையறிந்து காய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதலென் றிவை முதலாயின வினைகளுள் அதனைச் சாய்ப்பன செய்தல். மற்றும் வேண்டு மாட்சியென்றது புறஞ்சோறாறியாமற் பொருதல் போதல் செய்தற்குக் கண்ட சூருங்கைவழி முதலாயினவுடைமை.

(தே - ப - ரை)—அரண் - கோட்டையாவது, முனைமுகத்து - போர்தொடங்கினவளவிலே, மாற்றலர் - பகைவர், சாய - கெட, வினைமுகத்து - (உள்ளிடத்தோர் செய்யும்) தொழில் வேறுபாடுக ளால், வீறு எய்தி - வீறு பெற்று; மாண்டது - (மற்றும் வேண்டும்) பெருமையை யுடையது.

கo. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

(பரி-ரை.) எ-து,—அரணமேற் சொல்லப்பட்ட மாட்சியெல்லா மூடைத் தாய விடத்தும் வினைசெய்தற்கண மாட்சியில்லாதார்மாட்டு அவையில தாம, எ-று.

வாளாவிருத்தலும் அளவறியாது செய்தலும் எலாதது செய்தலுமெல் லாம் அடங்க வினைமாட்சியில்லா ரென்றும், எற்றவினையை யளவறிந்து

செய்து காவாக்கால் அம்மாட்சிகளாற் பயனின்றி யழியுமென்பார் அவை யுடைத்தன் றென்றுங் கூறினார். இவை யிரண்டுபோட்டானுங் காப்பாரை யின்றியமையாதென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை)—அரண் - கோட்டையாவது, எணை மாட்சித்து ஆகியக்கண்ணும் - (மூன்சொல்லப்பட்ட) பெருமையெல் லாம் உடைத்தாகிய விடத்தும், வினை - தொழில் செய்யுமிடத்து, மாட்சி - பெருமையை, இல்லார்கண் - இல்லாதவிடத்து, இல் லது - (அவை) இலதாம்.

எசும் அதிகாரம்—பொருள்செயல்வகை.



இனிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரணானும் ஆக்கவகை காக்கவும் பகைதாய பொருளைச செய்தலின் நிறம் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

க. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

(பரி-ரை.) எ-து,—ஒருபொருளாக மதிக்கப்படாதாரையும் பலவாராகச் செய்யவல்ல பொருளையொழிய ஒருவனுக்குப் பொருளாவதில்லை, எ-று.

மதிக்கப்படாதார்—அறிவிலாதார், இழிகுலத்தார், இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. மதிக்கப்படவாராகச செய்தல்-அறிவுடையாரும் உயர் குலத்தாரும் அவர்பாற்சென்று நிற்கப் பண்ணுதல். அதனால் ஈட்டப்படுவது அதுவே பிறிதில்லையென்பதாம்.

(தே - ப - ரை.)—பொருள் அல்லவரை - ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும், பொருள் ஆகச்செய்யும் - பொருளாக மதிக்கப்படச்செய்யவல்ல, பொருள் அல்லது - பொருளையல்லாமல், பொருள் - (வேறு) பொருள், இல்லை - இல்லையாம்.

உ. ஃ இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(பரி-ரை.) எ-து,—எல்லாநன்மையு முடையராயினும் பொருளில் லாரை யாவரு மூயரசசெய்வர், எ-று.

* இத்திருக்குறட்பா சோழான் பெருமாணடிஞர் திருச்சிலாய ஞானவுலாவில் எடுத் தாளைக்கப்பட்டது.

உயரசெய்தல் - தாழ்த்து நிற்றல். இகழ்தற்கண்ணும் தாழ்தற்கண்ணும் பகைவர், நட்டார், தொதுமல ரென்னும் மூவகையாரு மொத்தலின், யாவரு மென்றார். பின்னுங்கூறியது அத்தேவலியு முதற்பொருட்டு.

(தெ - ப - ரை)—இல்லாரை - (எல்லாருன்மையு முடையராயினும் பொருள்) இல்லாதவரை, எல்லாரும் - யாவரும், எள்ளுவர் - இகழ்வர்; செல்வரை - (எல்லாத்தன்மையு முடையராயினும்) அப் பொருளுடையவரை, எல்லாரும் - யாவரும், சிறபபுரசெய்வர் - உயரசெய்வர

ந. பொருளென்னும் பெயரா விளக்க மிருளறுக்கு
மிருண்மாய ஞாயி றனைத்தே சென்றற்று

(பரி-ரை) எ து —பொருளென்ற எல்லாரானுஞ்சிறப்பிக்கபபடுமமகத்தா விளக்குரு ணன்னச செயரகொக்கு ஆகா ணைதத தேயதது சென்று பகை யென்னுமிருளைக் கெடுக்கு ம, எ-று.

எல்லாரக்கு ஞ ஞாஞ்ஞ இன்றியமையா தாயவருதலபற்றிப் பொய் யாவிளக்கமெனா. ம, வவிளக்கமிகாயி இருவிடை வேறுமைதோன்ற எண ணியதேயத்துச் செ றென்னு கூறினு; எகதேசவுருகம். இவை மூன்று பாட்டானும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது.

(தெ - ப - ரை) —பொருள் என்னும் - பொருளென்று (எல் லாரானும்) சிறப்பிக்கப் படும், பொய்யா விளக்கம் - கெடாத விளக் கானது. (ஞாயிறு ஸாபாதித் தவர்த்து) எண்ணிய - அவர் நினைத்த, தேயத்தை ரென்ற - நாடுகளிற்போய், இருள் - (பகை யென்னும்) இருளை, அறுக்கும் - கெடுக்கும்

ச. அறனீ டின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

(பரி-ரை.) எ து,—செயயுந் திறதினையறிந்து அரசன் கொடுகோன் மையிலனுக உளதாய பொருள் அவனுக்கு அறதகையுங கொடுக்கும், இன்பத் தையுங கொடுக்கும். எ-று

செயயுந்திறம்-தான் பொருள்செய்தற்குரிய நெறி. இலனுகவென்பது இன்றியெனத திரிந்துநினறது. செ கோலனென்று புகழப்படுதலானும் கட வுட் பூசை தானை களாற பயனெயதலானும் அறனீனுமென்றும், நெடுங்கால நின்று துய்க்கப்படுதலான் நீன்பமு மீனுமென்று கூறினுர். அதனுன் அத் திறதைதானுட்க வென்பதாம.

(தெ - ப - ரை.)—திறன் அறிந்து - (சம்பாதிக்கும்) திறத்தை அறிந்து, தீது இன்றி - (அரசன்) கொடுங்கோன்மையில்லாதவனாக, வந்தபொருள் - அடைந்தசெல்வம், அறன் - (அவனுக்கு) அறத்தையும், ஈனும் - கொடுக்கும், இன்பமும் - இன்பத்தையும், ஈனும் - கொடுக்கும்.

நூ அருளொடு மன்பொடும் வாரப பொருளாகும்
புல்லார் புரள விடல்

(பரி-ரை.) எ-து,—காபகுடிகணமாட்சி செயபு மருளோடும் அவர் தம்மாட்சி செயபு மன்போடு கூடிவாராத பொருளீட்டத்தை அரசர் பொருந்தாது கழிபவிடுக, எ-று.

அவரோடு கூடிவருவதாவது ஆதிலொன்றுபய் வ மல். அவ்வாறு வாராத பொருளீட்டம பகமட்கலபதுணிபோலவ செய்தானேயுங் கொண்டிறத்தலின், அதனைப் புல்லாரென்றெடுபபாது புரளவிடலென்றபய கூறினர்.

(தெ - டு - ரை.)—அருளொடும் - (தாம்குடிகளிடத்துசெய்யுஞ்) கருணையோடும், அன்பொடும் - (அவர் தம்மிடத்தாசெய்யும்) அன்போடுங், வாரா - (கூடி) வாராத, பொருள் ஆக்கம் - பொருட்சம்பாத்தியத்தை, புல்லார் - (அரசர்) பொருந்தாராகி, புரளவிடல்-நீங்கவிடக்கடவர்.

சு உறுபொருளு முல்கு பொருளுந்தன் னெஞ்ஞான்
றெறுபொருளும் வேந்தன் பொருள்

(பரி-ரை.) எ-து,—உடையரானமையிற் றானேவந்தூறு பொருளும் சுங்கமாகிய பொருளும் தன்பகைவரைத் தோறையாகக கொளளுமபொருளும் அரசருக்குரிய பொருள்கள், எ-று.

உறுபொருள் - வைத்தாரிறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட்கிடந்து பின்கணடெடுத்தாலும், தாயதாதா பெருதாரு மாம். சுங்கம் - கலத்தினுங் காலினும் வரும பண்டங்கட்டோயாயது. தெறுபொருள் - தெறுதலான் வரும் பொருளென விரியும் ஆதிலொன்றெழியவும் உரியன கூறியவாறு.
மூன்றுபாட்டானுங் அஃதீட்டுதெறி கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—உறுபொருளும் - (உடையவர் இல்லாமையால் தானேவந்து) கிடைத்தபொருளும், உல்குபொருளும் - தீர்வையாகியபொருளும், தன் ஒன்னார் - தன்பகைவரை, தெறுபொ

ருளும் - வென்று (திறையாகக்கொள்ளும்) பொருளும், வேந்தன் பொருள் - அரசனுக்குரிய பொருள்கள்.

எ. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

(பரி-ரை.) எ-து —அன்பிஞ லீனப்பட்ட அருளென்னுங்குழவி பொருளென்றுயர்த்துச சொலலப்படுஞ செல்வத்தையுடைய செவிலியான் வளரும், எ-று.

தொடர்புபற்றுதே வருத்தமுற்றுர்மேற் செல்வதாய அருள் தொடர்பு பற்றிச செல்லு மன்பு முதிர்ந்துழி ளதாவதாகலின் அதனை அன்பீன்குழவி யென்றும், அது றியார்மேற்செல்வது அவ்வறுமை களையவல்லார்க்காத லிற் பொருளை அதற்குச செவிலியென்றும், அஃதலகிற்செவிலியர்போலாது தானே யெல்லாப்பொருளுமுதவி வளர்த்தலிற் செல்வச்செவிலியென்றுங கூறினர்.

(தே - ப - ரை.)—அன்புரான் - அன்பினால் ஈன்றிடப்பட்ட, அருள் என்னும் - அருளென்கிற, குழவி - குழந்தையானது, பொருள் என்னும் - பொருளென்று (உயர்த்தித்) சொல்லப்படும், செல்வம் - செல்வத்தையுடைய, செவிலியால் - வளர்க்குந்தாயால், உண்டு - வளரும்

அ. சுன்றேறி யாணப்போர் கண்டற்றுப் றண்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

(பரி-ரை.) எ-து,—தன் கையதாகிய பொருளுண்டாக ஒருவினையை யெடுத்துக்கொண்டான் அதனைச செய்தல் ஒருவன் மலைமேலேறிநின்று யானைப்போரைக் கண்டாலொக்கும், எ-று.

ஒன்றென்பது வினையாதல் செய்வா னென்றதனாற் பெற்றும். குன்றேறியான் அசசமுவருத்தமுமின்றி நிலத்திடையானையும் யானையும் பொருபோரைத் தானினிருந்து காணுமதுபோலக் கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும் அசசமும் வருத்தமுமின்றி வல்லாரையேவித் தானினிருந்து முடிக்குமென்பதாம்.

(தே - ப - ரை)—தன் கைத்து - தன்கையதாகிய பொருள், உண்டு ஆக - உளதாக, ஒன்று - ஒருதொழிலை, செய்வான் - செய்பவனது, வினை - செய்தலானது, குன்று ஏறி - (ஒருவன்) மலைமேல்

ஏறிநின்று, யானைப்போர் - யானைகளதுபோரை, கண்டது அற்று-கண்டதனைடொக்கும்

கூ செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
மெய்தணிற் கூரிய தில்.

(பரி-ரை.) எ-து,—தமக்கொன்றுண்டாகக் கருதுவார் பொருளை யுண்டாகுக; தம்மைவெர் தருகினையறுகும படைகலம் அதுவாம்; அதற்கது போலக் கூரிய படைகலம் பிறிதில்லை எ-று

அதுவாம் அதற்கென்ன அவாயநிலையான் வருதனை. பொருளைச் செய்யவே பெரும்படையும் ரட்புமுடைய ராவர், ஆகலே பகைவர் கருக்கொழிந்துதாமே யடங்குவரென்பார் செறுநர்செருக்கறுக்குமென்றும், எனையெஃகுகள் அதுபோல அருவப்பொருளை யறுக்கமாட்டாமையின் அதனிற் கூரியதில் லென்றும் கூறினர்.

(தெ - ப - ரை)—(தமக்கு ஒன்று உண்டாக நினைப்பவர்) பொருளை - செலவத்தை, செய்க - சம்பாதிக்கக்கடவர், செறுநர் - (அப்பொருள் தான்) பகையரசது, செருக்கு - களிப்பை, அறுக்கும் - கெடுக்கும், எஃகு - ஆயுதமாம்; அதனின் - அதுபோல, கூரியது - கூரிய ஆயுதம். இல் - இலது

கஎ ஒல்பொருள் காம்ப்ப மியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு

(பரி-ரை.) எ-து,—நெறியான் வரும் பொருளை இறப்ப மிகப்படைத்தார்க்கு மற்றை யறனும்மின்பமும் ஒருங்கே யெளிய பொருள்களாம்.

காம்த்தல-முதிர்தல். பயன்கொடுத்தல்லது போகாமையின் ஒண்பொருளென்றும், ஏனை யிரண்டும் அதன்வினைவாகலிற் றூலமெயாருகாலத்திலே யுளவாமென்பார் ஏனைபொருளென்றல கூறினர். இவை நான்குபாட்டானும் அதனான் வரும் பயன் கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—ஒள் பொருள் - நல்லவழியால் வரும் பொருளை, காம்ப்ப - மிகவதிகமாக, இயற்றியார்க்கு - உண்டாக்கினவர்க்கு, ஏனை இரண்டும்-மற்றை அறமும் இன்பமும், ஒருங்கு - ஒருசேர, எண் பொருள் - எளிய பொருள்களாம்.

எஎ-ம் அதிகாரம்—படைமாட்சி.

இனி அப்பொருளினை ஏவுதாய் வெல்வதாய படை இரண்டதிகாரத் தாற் கூறுவான் றொடங்கி, முதற்கட் படைமாட்சி கூறுகின்றார். அஃதாவது படையினது நன்மை.

க உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை

(பரி-ரை.) எ-து,—பாகை முதலிய நான்குறுப்பானும் நிறைந்து போரின்க ணூறுபகர்ந் தூஞ்சாது நின்ற பகைமேல் வெல்வதாய படை அரசன் செல்வங்க ளெல்லாவற்றுள்ளுந் தலையாய செல்வம், எ று.

ஈண்டுப் படையென்றது நான்கின்மேற் றொகுதியை யுணர்ந்தியவழி வேறல் கூடாமையின் "ஊறஞ்சா வென்றும், எஃகு வகைகளாற்றும் அரசன் றனக்கு நாலாகலின் வெறுக்கையு ளெல்லாந் தலையென்றும் கூறினர்.

(தெ - ப - ரை)—உறுப்பு - (யானை முதலாகிய) நாலுறுப்பு களாலும், அமைந்து - நிறைந்து, ஊறு - போரிலே) காயம்படு தற்கு, அஞ்சா - அஞ்சாதுநின்று, வெல் - (பகையை) வெல்வதாகிய, படை - சேனையானது, வேந்தன் - அரசனது, வெறுக்கையுள் எல் லாம் - செல்வங்களிலெ லாம், தலை - முதன்மை யாகிய (செல்வ மாம்).

உ. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது

(பரி-ரை) எ-து,—தான் சிதைதாய வழியும் அரசற்குப் போரின்க ணூலைவு வந்தால் முன்னே யுறவுநற் கஞ்சாது தனது மாறும் வன்கண்மை அவன் முன்னோரைத் தொடங்கிவரும் படைக்கல்லா லுளகாராது எ-று.

இழிவுசிறப்புமை விகாரத்தாற் றொக்கது. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, தொணப்படை, கைப்படை யென்னும் அறு வகைப் படையுள்ளுஞ் சிறப்புடையது மூலப்படையாகலான், அதனை அர சன் * "வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையு மவ—கொல்களிறு மாவுங்கொடித்தளிக்க" என்பது குறிப்பெசசம். இப்படையை வடநூலார் மௌலமென்ப.

(தெ - ப - ரை)—தொலைவிடத்து - (தான்) சிறிதாகிவிடத் தும், உலைவிடத்து-(அரசனுக்குப் போரினிடத்து) அழிவு வந்தால்,

---

* வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுமவ—கொல்களிறு மாவுங் கொடித்தளிதானன் - புல்புரவி—னமணி, திண்டேர் நயவா நிலைபணிப்பப் - பன்மணிப் பூணன் படைக்கு—மெனபராலே, துப்பைப்படலம், உ.

ஊறு - (கன்மேல்) காயம்படுதற்கு, அஞ்சா - அஞ்சாதுநின்று தாங்கும், வன்கண் - செளரியமானது, தொல் படைக்கு அல்லால் - அவன்மூன்னோரைத் தொடங்கிவருஞ் சேனைக்கல்லாமல், அரிது - உண்டாகாது.

ங. ஒலிக்குந்தக்கா லெஞ்ஞாறவரி யொழிபாலை
காகமுரிற்படத் தெரிந்து.

(பரி-ரை.) எ-து — ஆரவாரத்தையுடைய கடல்போல வெல்லுதற்கரிதாகிய சேனைத்திறமு எண்ணத்தகும்; அச்சேனைமுகத்து நிற்பாரையே ஆராய்ந்து தெரிதலே கெடும், எ-று.

உவமைகொற் பெருமைகூறினார். இம்மொழி வமகாரத நிரட்சிபெற்றும் வீரரல்லாதார பலராயிருண்டாலும் அது குறிக்கொண்டான் அவன் இளைத்துநிற்பாரையே அவர் தாங்கெடுவரென்பது தோன்ற சினாமையின், இது பிறிது மொழிபுலென்று மலயகாரம். வீரரலாதாரபலரினும் வீரனொருவனையாடல் நன்றென்பதாம். இவை மூன்றுபாட்டானும முறையே அரசனுக்குப் படை ஏனை யங்களுட் சிறந்த தென்பதும், அதுதன்னுள்ளும் மூலப்படை சிறந்த தென்பதும், அதுதன்னுளளும் வீரன் சிறந்தானென்பதூஉங கூறப்பட்டன.

(தெ-ப-ரை)—எலிப்பாலை - எலிகளாகிய பகை (தீண்டி), உயிரி - கடல்போல், ஒலிக்குந்தால் - இரைந்தால், என் ஆம்-(பாம்புக்கு) என்னதுன்பம் வருஞ் ; காகம் - அப்பறவையி, உரிப்ப - மூச் செறிந்தவளவிலே, கெடும் - (அது முதலே) கெடும்.

ச. அழிவின் றுறைபோக நாகெ வழிவந்த
வன்க ணடுதலே படை

(பரி-ரை.) எ-து,—போரின்கட் கெடுதலின் றி பகைவராற் கழுக்கப்படாததாய் தொன்றுதொட்டுவந்த தறுகணமையை யுடையதே அரசனுக்குப் படையாவது, எ-று.

அழிவின்மையான் மறமானகு ஞடைமையும், அறைபோகாமையான் அரசன்மாட் டன்புடைமையும், பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை—* "கன்னின்றனெக்தை கணவன்களப்பட்டான், மூன்னின்று மொய்ய விந்தாரென்னேபர்—பின்னிலை, கைபோய்க் கயிறுபோற் கையுறைப்பக் காவலன்மே லோடி, யெய்போற் கிடந்தானென் னேறு." என்பதனுனறிக. குற்றிய

---

* வெண்பாமாலை, ஊழைப்படலம், உக

லகத்தின் முன்னர் உடம்படுமெய் விகாரத்தான் வந்தது. இது வருகின்ற பாட்டின்ஞ ுமாக்கும.

(தெ - ப - ரை.)—படை - (அரசனுக்கு) படையாவது, அழிவு இன்மு - (போரினிடத்து) கெடுதலில்லாமல், அறைபோகாது ஆகி- (பகைவரால்) சூழறுக்கப்படாததாகி, வழிவந்த - பழமையாகவந்த, வன்கணதுவே - சௌரியமுடையதே

நி. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

(பரி-ரை.) எ-து,—கூற்றவன் ருனே வெகுண்டு மேல்வந்தாலும் நெஞ் சொத்து எதிர்நின்று தாங்குமாற்றலே யுடையதே படையாவது, எ-று.

* மருங்கில் கூற்றுகலின், உம்மை சிறப்பும்மை. மிகப்பலர் நெஞ்சொத் தற்குக் காரணம் அரசன்மேலன்ப. ஆற்றல் - மனவலி.

(தெ - ப - ரை.)—படை - சேனையாவது, கூற்று - எமன், உடன்று - கோபித்து, மேல்வரினும் - எதிர்ப்பினும், கூடி - மன மொத்து, எதிர்நிற்கும் - எதிர்நின்று தாங்கும், ஆற்றலதுவே - மன வலிமை. பையுடையதே

கூ. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

(பரி-ரை.) எ-து,—யுகுணமையும் மானமும் மூன்வீரராயினர் சென்ற நன்னெறிக்கட்சேறலும் அரசனுற் றேறப்படுத்து மென இந்நான்கு குண முமே படைக்† அரணுவது, எ-று.

இவற்றுன் முறையே பகைவரைக் கடிதிற்கொன்று நிற்றலும், அரச னுக்குத் தாழ்வுவராமற் காத்தலும், ‡ "அழியுகர்புறக்கொடையயில் வாளோச சாமை" முதலியவுமஅ றைபோகாமையு மாகிய செய்கைகள் பெறப்பட்டன. இச்செய்கை யார்க்குப் பகைவர் நணுகாராகலின், வேறரண் வேண்டாமென்ப தாம்.

(தெ - ப - ரை.)—மறம் - சௌரியமும், மானம் - மானமும், மாண்ட - மாட்சிமைபபட்ட, வழிச்செலவு - (முன்வீரர்சென்ற) நலவழியிலே செல்லுதலும், தேற்றம்-(அரசனுல்) நம்பப்படுதலும்,

பருவில் கூற்று, ருருதொழிலாசிரி - புறநானூறு, கூ.
† வேண்பாமாலே, வஞ்சிப்படலம், உ0.

எண சான்கே-என இந்நான்கு குணமுமே, படைக்கு - சேனைக்கு, ரமம் - காவலாம்.

ம. தார்தாங்கிச் செல்வது தானே தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து.

(பரி-ரை.) எ-து,—மாற்றரால் வருக்கப்பட்டுத் தன்மேல்வந்த படை பின்போரை விலக்கும் வகுப்பறிந்து வகுத்துக்கொண்டு அவர் தாக்கையைத் தன்மேல் வராமற்றடுத்துத் தான் அதன்மேற் செல்வதே படையாவது, எ-று.

படைவகுப்பாவது வியூகம்; அஃது எழுவகை யுறுப்பிற்றாம், வகையாஞன்காய், வியூகன்மூப்பதாம் * உறுப்பேழாவன அமைகூ ரேருட்டியிரு யின. † வகை நான்காவன தண்டம், மண்டலம், சகடம், போகமென விவை. ‖ விரி மூப்பதாவன தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரியாறும், போகவிரி யைந்துமென விவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் ஈண்டுப்பிற் பெருகும்; அவையெல்லாம் வடநூல்களுட் கண்டுகொள்க. இவை நான்குபாட்டானும் படையின திலக்கண கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—தானே - சேனையானது, தலைவந்த - (பகைவ ராலே வருக்கப்பட்டு) தன்மேல்வந்த, போர்-(படையின்) போரை, தாங்குந்தன்மை - விலக்கும்வகுப்பை, அறிந்து - தெரிந்து (வகுத் துக்கொண்டு), தார் - (அவரது) தாக்கிப்படையை, தாங்கி - (தன் மேல் வாராமல்) நடித்து, செல்வது - (தான் அந்தமேலே) செல்வதே.

* உறுப்பேழாவன:—டம், இரண்டாம்நாவி, டலம், பிரள் ல் , பிரிஷ்டம், கோழி எனவிவை.

† தண்டம்:—தே ல ப குதிகள் ; மண்டலம்—ப படி மண்டல பிதியதுபோலச் சேனையை நிறுத்துவது. அகலம்:—சேனைய யெழுமெழுமே நிறு துவது. போகம்:—எதிரங்கசேனையை ஒன்றிரு தப்பின் ஒ ரரச நிறுத்துவது.

‖ தண்டவிரி பதினேழாவன:—பிரதம், திருடகம், வியாவஸ்தம், குஞ்சி, பிரதிட் டம், சுப்பிரதிட்டம், விஜயம், சஞ்சயம், விசாலம், ஜயம், சூழ், ஸ்தூணி, கர் ணம், சமூகமுகம், நந்தியம், வலயம் எனவிவை. மண்டலவிரி யிரண்டாவன:—சர்வதோ பத்திரம், துர்ஜயம் எனவிவை. அசங்கதவிரியாருவன:—அபூததமனம், உபநாயம், சிருங்காடம், சுங்கடகவியூகாரி, சகாபாரி, ரேவதி எனவிவை. போகவிரியைந்தாவன:— கோமூத்திரிகை, மிச்சகம், சஞ்சாரி, சகடம், பதுமம் எனவிவை. இவ்வுறைக் காமந்தக மென்னு நூலுட் கண்டுகொள்க.

அ அடற்றகையு மாற்றலு மில்லெனினுங் தாணை
படைத்தகையாற் பாடி பெறும்.

(பரி-ரை.) எ-து.—தாணை, பகைமேற் முன் சென்றடுங் தறுகண்மையும் அது தன்மேல்வந்தாற் பொறுக்கு மாற்றலும் இல்லேபாயினும், தன்றேற்றப் பொலிவானே பெருமையெய்தும், எ-று.

இல்லெனிறுமெனவே, அவற்ற தின்றியமையாமை பெறப்பட்டது. படைத்தகையென்றது ஒருபெயர்மாததிரமாய் நின்றது. தோற்றப்பொலிவாவது அலங்கரிக்கப்பட்ட தேர், யானை, குதிரைகளுடனும் பதாகை, கொடி, குடை, பல்லியம், காகளமுதலியவற்றுடனும் அலங்கரித்து மேற்கொண்டமழகு. பாடு-கண்டவளவிலே பகைவாஞ்சும் பெருமை.

(தே - ப - ரை.)—தாணை - தேரினை, அடல் தகையும் - (பகை மேல் தான்சென்று) போர்செய்யுஞ் சௌரியமும், ஆற்றலும் - (அது தன்மேல்வந்தால்) பொறுக்கும் வலிமையும், இல் எனினும் - இல்லேயாயினும்; படைத்தகையால் - தனது தோற்றப் பொலிவால், பாடு - பெருமையை, பெறும் - பெறுவதாம்.

கூ. சிறுமை யடுத்த செல்லாத் துவியும் வறுமையு
மில்லார்கண் வெல்லும் படை.

(பரி-ரை.) எ-து - தான் சேர்ந்த சிறிதாகவும் மனத்தினின்று நீங்காத வெறுப்பும் கல்குரவும் தனக்கில்லேயாயின் படை பகையைவெல்லும், எ-று.

வீட்டுப்போதலும் நின்றது கல்கூர்தலும் அரசன் பொருள்கொடாமையான் வருவன. செல்லாத்துணியாவது மகளிரை வௌவல், இளிவராயின செய்தன் முதலியவற்றுன் வருவது. இவையுள்ளழி அவன் மாட் டன்பின்றி உற்றுப்பொராமையின், இல்லாயின் வெல்லுமென்றார்.

(தே - ப - ரை.)—சிறுமையும் - (தான் சேர்ந்து) சிறிதாகலும், செல்லாத் துவியும்-(மனத்திலிருந்து) நீங்காதவெறுப்பும், வறுமையும் - தாரித்திரியமும், இல் ஆயினும் - (தனக்கு) இல்லேயாயின், படை - சேனையானது, வெல்லும் - (பகையை) வெல்லும்.

கo. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தாணை
தலைமக்க ளில்லாழி யில்.

(பரி-ரை.) எ-து,—பொருள்களினுடைய வீரரை மிகவுடைத்தேயாயினும், தனக்குத் தலைவனாகிய வீரரில்லாதவழித் தாணை நில்லாது, எ-று.

எஅ-ம் அதி· படைச்செருக்கு நஎங

படைத்தலைவர் நிலையுடையரன்றிப் போவாராயிற் காண்போரில்லெனப் பொராது தானும் போமென்பதா, தலைமக்களில்வழி யில்லென்றார். இவை மூன்றுபாட்டானும் முறையே படைத்தகையின்மையானும், அரசன் கொடைத் தாழ்வுகளானும், தலைவரின்மையானும், தாழ்வு கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—நிலைமக்கள் - (போரிடத்து) நிலையையுடைய வீரரை, சால உடைத்து எனினும் - மிகவுடையதாயினும், தலைமக்கள் - (தனக்கு) தலைவராகிய வீரர், இல்வழி - இல்லாவிடத்து, தான் - சேனை, இல் - நடவாது.

எஅ-ம் அதிகாரம்—படைச்செருக்கு.

அஃதாவது அப்படையது மாண்பு. அவ்வாறு முறைமையும் விளங்கும்.

க. மன்னுறுவ லில்லையின் றெவ்வி பலரென்னை
மு ல்லின்று கண்ணின் றுவர்.

(பரி-ரை) எ-து —பகைவீர், முன்றில் வெண்தலைவனெதிர் போரேற்று நின்ற அவன்வேல்வாய வீழ்ந்து பின்கல்லின்கணனே நின்றவீர் பலர் நீவிர் அதன்கணின்றி ஏம்முடைய கற்பிறழ்வேண்டின், என்? வேலனெதிர் போரேற்று நிற்றலை யொழிமின், எ-று.

வண்ணையெனத் தன்னெடு தொடர்புபடு† ஞர் கூறினரையின், அவன் வேல்வாய் வீழ்தல்பெற்றிட்டு. * கல்-நடுகல். ‡ "கெம்பன் நிலவாய் நடக்குங் கனை மிசிலல்லா—லம்பொன் முடிப்பூ ணரசும்மிலே" எனப் பதுமகன் கூறினாற்போல ஒருவீன வன்மதம் அரசன்மேல் வைத்துக் கூறியவாறு. இப் பாட்டு நெடுமொழிவஞ்சி.

(தெ - ப - ரை.)—தெவ்விர் - பகைவீர், மன் - என்னுடைய, ஐமுன் - தலைவனெதிர், நின்று - (போரேற்று) நின்று, கல் நின்றவர் - (அவன் வேல்பட்டு வீழ்ந்து) கல்லினிடத்தே நின்ற வீரர், பலர் - அநேகர், என் - (நீர் அதனிடத்தில்லாமல் உம்முடலிலே

மெய்யிலுள்ள உணர்வு, தொல், பொருள், புறம், பு-ப் முதலியவற்றையுணர்க.

† வைப்பொடு புணர்ந்த பருவ னியமபீட்டஞ்—மெய்போ னெடுதேர்ப தொகை மாகடற் சூன வெளை—நம்பன் நிலவாய நடகுங்கனை மி சிலல்லா—லம்பொ ன் மணிப் பூணரசும்மிலே யெனறு கடவுள் வாழ்த்து—ஏலாதி, சாத்துவதாரிலம்பகம், சுகை.

‖ நெடுமொழியஞ்சி யென்பது ஒன்றாந் தலைகெழுமித்—தன்னை யெடுத் துரைத்தான்—வெனைபபாலி, வஞ்சிப்படலம், உக.

நிற்கையை வேண்டில்) என்னுடைய, ஐமுன்-தலைவனெதிர், நில்லன்மின் - (போரேற்று) நில்லாதேகயுங்கள்.

உ. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேக்கற வினிது.

(பரி-ரை.) எ-து,—கானத்தின்கணுமிடும் முயலைப் பிழையாம லெய்த அம்பை யேந்தலினும் வெள்ளிடைநின்ற யானையையெறிந்து பிழைத்த வேலை யேந்துதல் நன்று, எ-று.

கானமுயலென்றதனால் வெள்ளிடைநின்ற வென்பதும், பிழைத்தவென்றதனாற் பிழையாமலென்பதும், முயற்குத் தக எய்தவென்றதனால் யானைக்குத்தக எறிதலும், கருவிக்கப்பட்டன. இது வேற்றரசன் படையொடு பொருதானேர் வீரன் அதுபுறங்கொடுத்ததாக ராணப்பின்னவன் தன்மேற் செல்லலுற்றானது கூற்று.

(தெ-ப-ரை.)—கானம் - காட்டில் ஓடுகிற, முயல் - முசலை, எய்த - (தப்பாமல்) எய்த, அம்பினில் - அம்பை ஏந்துதலிற்பார்க்கிலும், யானை - (வெளிநிலத்திலேநின்ற) யானையை, பிழைத்தவேல்-(எறிந்து) தப்பிய வேலை, ஏக்கறல் - ஏந்துதல், இனிது - நன்று.

கூ. பேராண்மை யென்ப தறுகணெஞ் ஞான்றக்கா
ஓராண்மை மற்றத னெஃகு

(பரி-ரை.) எ-து,—பகைவர்மேற் கண்ணேடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்கவாண்டன்மை யென்று சொல்லுவர், அவர்க்கு ஒருதாழ்வு வந்த தாயிற் கண்ணேடி அது தீர்த்துக்கோடற்பொருட்டு ஊராண்மை செய்தலை நூலோர் அதற்குக் கூர்மையென்று சொல்லுவர், எ-று.

என்ப வென்பது பின்னு மியைத்தது. ஊராண்மை-உபகாரியாந் தன்மை. அஃதாவது இலங்கையர்வேந்தன் போரிடைத் தன்ருனை முழுதும்படத் தமியனுயகப்பட்டானது நிலைமை நோகி, அயோத்தியரிறை மேற்செல்லாது இன்றுபோய் நாளை நின்ருனையோடு வாவென விட்டாற்போல்வது. * இவை யிரண்டு பாட்டுந் தழிஞ்சி.

(தெ-ப-ரை.)—தறுகண் - (பகைவரிடத்தே முகங்கொடாமற் செய்கிற) மறம், பேர் ஆண்மை - மிகுந்த ஆண்மையாகும், ஒன்று உற்றக்கால் - (அவர்க்கு) ஒருதாழ்வு வந்ததாயின், (அது தீர்த்துக்கொள்ளுதற் பொருட்டு), ஊராண்மை-(முகங்கொடுத்து)

---

* தழிஞ்சி யென்பது அழிபவர் புறங்கொடை யெய்யாமோச்சாக்—தழிஞ்சி கண்ணை காதலித்த துறைத்தன்று—வெண்பாமாலை, வஞ்சிப்படலம், கூ.

உபகாரியாற்தன்மை, அதன் - அதற்கு, எஃகு - கூர்மையாகும், என்ப - என்று (நூலோர்) சொல்லுவர்

ச. கைவேல் களிற்றெறி போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்

(பதி-உரை.) எ-து,—தன்கைப்படையாய வேலைத் தன்மேல்வந்த களிற் றேறு போக்கி வருகின்ற களிற்றுக்கு வேறு தட் டிரிவான் தன்மார்பின்க ணேன்ற வேலைக் கணை பறித்து மகிழும்.

களிற்றெறு போக்கல்-களிற்றினதுயிரைக் கொடுபோமாறு விடுதல். மகி ழ்ச்சி தெரியத்தலான். இதனுட் கூறிற்றையல்ல தெறிடாரனென்பதூஉம், சினமிகுதியான் வேலிடைபோழ்ந்த தறிதலென்பதூஉம், பின்னும் போர் மேல் விருப்பனென்பதூஉம், பெறப்பட்டன. * நாழிலாட்டு.

(தெ - ப - ரை.)—கைவேல்-(தன்) கைப்படையாகிய வேலை, களிற்றெறி - (தன்மேல்வந்த) யானையை, போக்கி - எறிந்து விட்டு, வருபவன் - (வருகின்ற) யானைக்கு வேல் தேடி திரிபவன், மெய் வேல்-தன்மார்பி லிருந்த வேலை, (கண்டு), பறியா - பிடுங்கி, நகும் - மகிழ்வான்

நி. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னேட்டன்றே வன்க ணவர்க்கு.

(பதி-உரை.) எ-து,—பகைவரை வெகுண்டுநோக்கிய கண அவர் வேலைக் கொணடெறிய அஃதாற்றாது அந்நோக்கையழித்து இமைகுமாயின், அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம், எ-று.

அவ்வெகுளிநோக்க மீட்டலும் போரின்கண மீட்கியெனக்கருதி அது வுஞ் செய்யா ரென்பதாம்.

(தெ-ப-ரை.)—விழித்தகண்-(பகைவரை)கோபித்துப்பார்த்த கண், வேல்கொண்டு - (அவர்) வேலைக்கொண்டு, எறிய - வீச, அழித்து - (அதற்குப் பொறாமல் அப்பார்வையை) அழித்து, இமைப்பின்-இமைத்தாமாயின், (அவ்விமைத்தல்). வன்கணவர்க்கு - வீரர்க்கு, ஓட்டு அன்றே - தோற்பாம்

* நாழிலாட்டென்பது களவழியில படலியிய—வெங்களிற்றுவேல் பறித்தோச் சின்று—வெண்பாமாலை, துய்பைப்படலம், கக.

சு விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைங்குந்தன் ஞாள யெடுத்தெ.

(பரி-ரை.) எ-து,—ரனக்குச் சென்ற நாள்களை யெடுத்தெண்ணி, அவற்றுள் விழுப்புண்படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்தநாளுள்ளே வைக்கும் வீரன், எ-று.

விழுப்புண-முகத்திலும் மார்பிலும் பட்டபுண். போர்பெற்றிருக்கவும் பெறுத நாள்களோடுங் கூட்டுமென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் உறஞ் சாமை கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—தன் நாளை - (வீரனுனவன்) தனக்குக் கழிந்த நாட்களை, எடுத்து - எடுத்து (எண்ணி), (அங்ஙனட் டனுன்), விழுப்புண் - பெருங்காயங்கள், படாத நாள் எல்லாம் - படாத நாட்களையெல்லாம், வழுக்கினுள் - (பயன்படாது) கழிந்தநாட்களுள்ளே. வைக்கும் - வைப்பான்.

எ கழலு மிகழ வேண்டி வேண்டா வுயிர்மே
கழல்பயிற்றுக் காரிகை நீர்த்து.

(பரி-ரை.) எ-து,—துறக்க, துக்கமெமதி செல்லாது வையுலகைச் சூழ்ந்து நிற்கும் புகழை வேண்டி உயிர்வாழ்தலை வேண்டாத வீரர் கழல் கட்டுதல் அலங்கார நிர்மலையுடைத்து, எ-று

வையத்தைச் சூழுமென்றலே, புரள் பெருமை பெற்றும். செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. கழற்கல்- அகற்றல். துறக்கமும் புகழும் எளிதினெய்துவராகலின், ஆபரணமாவது அதுவேயென்பதாம்.

(தெ - ப - ரை.)—கழலுமை - (புழுதியை) சூழ்ந்து நிற்கும்; இகழ - புகழை, வேண்டி - விரும்பி, வேண்டா உயிரார - உயிர்வாழ்தலை வேண்டாத வீரர், கழல் - வீரக்கழலை, பயிற்று - கட்டுதல், காரிகை நீர்த்து - அலங்கார குணமுடையதாம்

அ. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீ ரதன்றி லில்.

(பரி-ரை.) எ-து,—போரைப்பற்றி நம்முயிரைப்பொருட்டஞ்சாது அதன் மேற்செல்லுமவ ரமிழைவன் அது வேண்டாரென்று மூனியினும அவ் வீரமிருதி குணமா எ-று.

போர்பேற் றறியாமையின், அதுபெற்றால் அரசன் உடற்பிழையும் இல்லா ரென்பதாம். பிறரும் "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" என்றும்

2, கூக.

* "புட்பகத்தேவ ஞகலிற் சாவேம் யாமென - நீங்கா மரவர் வீக்குதோள் புடைப்ப" என்றுங கூறினர்.

(தே - ப - ரை.)—உறின் - (போர் பெறின், உயிர் - (தம) முயிர்ப்பொருட்டு, அஞ்சா-அஞ்சாமல் (அதன்மேற்செல்லும்) மற வா - வீரர், இறைவன் - (சுப்) அரசன், செறினும் - (அது வேண்டா என்று) கோபிக்கினும், சீர் குன்றல் இலர் - அவ்வீரரிருதி குறை தல் இலர்

கூ. இறைத்த திகவாமைர ராயாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர

(பரி-ரை.) எ - து —தாங்கூறின வஞ்சினங் தப்பாமற் பொருட்டுச் சென்று சாவவல்ல வீரரை அது தப்பியவாறு சொல்லி யெள்ளுதற்குரியார் யாவர், எ-று.

இழைத்தல் - இன்னது செய்யேனாயின் இன்னனுகுகவெனத் தான் வகுத்தல். சொல்லியென்பது அவாய் நிலேயான வந்தது. வஞ்சினமுடிப்பான் புக்கு முன்னே சாவிலுக தொலேவன்மையின், அது முடித்தாரவினை சாதற்கிரப்புக கூறியவாறு.

(தே - ப - ரை.)—இறைத்த நு - (நாம்) சொல்லியபரபதம், இகவாமை - தபபாமற்பொருட்டு, சாவாரை - (போய்) சாதவலல வீரரை, பிழைத்தது - (அது தப்பியவிதம் (சொல்லி), ஒறுக்கிற்ப வர் - இகழ்தற்குரியபவர், யார் - பரர்

கo. புரந்தார்கண் ணீர்மல்கச சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து

(பரி-ரை.) எ-து,—தமக்குச்செய்த நன்றிகளே நினேந்து அணடவரசர் கண்கள் நீர் மல்கும்வகை போரிடைச் சாவப்பெறின், அசாகாகடு இரந்தாயி னுங கொள்ளுக் தகுதியையுடைத்து, எ-று.

மல்குதலாகிய இடத்து நிகழ்பொருளின்முதில் இடநின்மேனின் றுக. இனியழ இல்லிடைபோபால் வினிவரா பழவினேப்பயனே யெய்தலின், அதுதவினேயார் நூறக்கெய்துஞ் சாலேல இரந்துகோட்டக்கதைத்தென் ருர். இவை நான்குபாட்டானும் பிரோம்பாமை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—(தமக்குச் செய்த நன்றினை நினேத்து), புரந் தார் - ஆண்டவரசரது. கண் - கண்கள், நீர்மல்க - நீர்பெருகும்படி,

சாகிற்பின் - (ஆபரிலே) சாகப்பெறின், சாக்காடு - அச்சமும், இர ந்து - இரந்தாபினும், கோட்டக்கது - கொள்ளுந்தகுதியை, உடை த்து - உடையது.

எகூம் அதி. நட்பு.

இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்துதவுவதாய நட்பினை ஓர்த திகாரம் விரிமூகத்தானும் பன்னிரண்டதிகாரம் எதிர்மறைமுகத்தானும் கூறு வான்றொடங்கி, விரிமூகவதிகாரமைந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின் ருர். அஃதாவது இன்னதென்பதூஉம் அதிகாரமுறைமையும் இதனுள் விளக்கும்.

க. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

(பரி-ரை.) எ-து,—நட்புப்போலச் செய்து கோடற்கரிய பொருள்கள் யாவையுள? செய்துகொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கரிய காவலாவன யாவையுள? எ-று.

நட்புசெய்தற்காவாரைப் பெறுதலும் பெற்றுச் செய்யுமுபாயமும் செய் தாற்றினியின்றி நிரிர்ஙவுமுதலிய அரியவாகலின் நட்பிற்செயற்கரியனவில்லை யென்றும், செய்தாற் பகைவரஞ்சி வினைதொடங்காராகலின் அதுபோல வினைவராமைக்கு அரியகாவ லில்லையென்றுங் கூறினர். நட்புத்தான் இயற்கை செயற்கையென இருவகைப்படும். அவற்றுள் இயற்கை பிறப்பு முறையானுமூஉம் தேபமுறையானுமூஉமென விருவகைப்படும். அவற் றுண் முன்னையது சுற்றமாகலின் அது சுற்றந்தழாலினடங்கிற்று; ஏனையது பகையிடையிட்ட தேபத்தராகலின், அது துணைவலியென வலியறிதலுளடங் கிற்று. இனி ஈண்டுச் சொல்லப்படுவது முன்செய்த வுதவிபற்றி வருஞ் செயற்கையேயாகலின், அதன் சிறப்பு இதனுற் கூறப்பட்டது.

(தே-ப-ரை.)—நட்பின் - சிநேகம்போல, செயற்கு அரிய - சம்பாதித்துக்கொள்ளுதற்கு அரியபொருள்கள், யா - எவைகள், உள - இருக்கின்றன; (சம்பாதித்துக்கொண்டால்) அதுபோல் - அச்சிநேகத்தைப் போல, வினைக்கு அரிய - (பகைவர் செய்யும்) தொழிலுக்குப் (புகுதற்கு) அரிய, காப்பு - காவலாவன, யா - எவைகள், உள - இருக்கின்றன.

உ. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பேதையார் நட்பு

(பரி-ரை.) எ-து,—அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறையுந்தன்மை போல காடோறு நிறையுந்தன்மையவாம்; மற்றைப் பேதைமையுடையார் நட்புகள் நிறைந்த மதி பின் குறையுந்தன்மைபோல காடோறுங குறையுந் தன்மையவாம், எ-று.

நீரவரென்றூர், இனிமைபற்றி. சேண்மை, நட்பென்பன ஒருபொருட் கிளவி. செய்தாரது பண்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்தன மூன்சுருங்கிப் பின்பெருகற்கும், பேதையாரும் பேதையாருஞ் செய்தன மூனபெருகிப் பின்சுருங்காகுங காரணம் கம்முண முன்னதியாமையும் பின்னதிதுவுமாம்.

(தே - ப - ரை.)—நீரவர் - அறிவுடையவரது, நேண்மை - சிநேகம், பிறை - பிறைபோல, நிறை நீர - (காடோறும்) நிறை யுந் தன்மையினவாம்; பேதையார் - அறிவில்லாதவரது, நட்பு - சிநேகம், மதி - (நிறைந்த) சந்திரன்போல, பின் நீர - பின்னே (காடோறும்) குறையுந்தன்மையன வாம்.

கூ. நவிலுறு நானயம் போலும் பயிலுறும்
பண்புடையாளர் தொடர்பு.

(பரி-ரை.) எ-து,—நற்குணமுடையவர்கள் தம்முட்செய்த நட்புப்பயி லுந்தோறும் அவர்கின்பஞ்செய்தல் நூறபொருள் கறஞ்சேதாறுங கற்றார்க் கின்பஞ் செய்தலே பொக்கும், எ-று.

நயத்தினோச செய்தலான், நயமெனப்பட்டது. இருமையிலும் ஒருகாலைக் கொருகால் மிகுமென்பதாம். இவை யிரணடுபொட்டானும் அசசிறப்பிற்கேனு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பண்புடையாளர் - நற்குண முடையமக் கள், தொடர்பு - (தங்களிலேசெய்த) சுட்பு, பயில்தொறும் - பழ குந்தோறும், (அவருக்கு இன்பஞ்செய்தல்), நூல் - நூற்பொருள், நவில்தொறும் - கற்குந்தோறும். நயம்போலும் - (கற்பவர்க்கு) இன்பஞ்செய்தல்போலும்

ச. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

(பரி-ரை.) எ-து,—ஒருவனேடொருவன் நட்புச்செய்தல் தம்முணகுதற் கியைந்தன செல்லி நகையாடற் பொருட்டன்று; அவர்க்கு வேண்டாத செய்கை யுளதாயவழ் மூற்பட்டுக் கழறுதற்பொருட்டு.

பழியும் பாவமும் தருஞ்செய்கை தன்பமே பயத்தலான் வேண்டப்படுவ தன்மையின் அதனை மிகுதியென்றும், அதுசெய்தற்கு முன்னே மீட்டல் வேண்டுதலின் மேற்சென்றென்றும், இன்சொற்கு மீளாமையின் இடித்தற் பொருட்டென்பது கூறினார். இராஞன் நட்பின் பயன் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—நட்டல் - (ஒருவரோடு ஒருவர்) நட்புச்செய் தல், (நகைசெய்தற்கு எற்றவைசொல்லி) நகுநல்பொருட்டு - நகை செய்தற்பொருட்டு, அன்று - அல்ல, மிகுதிக்கண் - (அவர்க்கு) வேண்டாத செய்கை (உண்டான விடத்து) மேற்சென்று - முற் பட்டு, இடுக்கண் பொருட்டு - கண்டிடுக்குப் பிறரிடலுதற் பொருட்டு

நு புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்

(பரி-ரை.) எ-து,—ஒருவனேடொருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை, இருவர்க்கு மொத்த வுணர்ச்சி தானே நட்பாமூர்மையைக் கொடுக்கும், எ-று

புணர்ச்சி ஒருதேயத்தா பாதல், * "இன்றே போல்கரும் புணர்ச்சி தானே." என்றதும் அதனை. பழகுதல் பலகாறகணஞ் சொல்லாடியும் மருவுதல். | இவ்விணைமின்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராக்தை யார்க்கும்போல உணர்ச்சியொப்பின், அதுவே உடனுயிர் நீங்குமூர்மைத்தாய நட்பினைப் பயக்குமென்பதாம். நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தலென்னுங் காரண மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்தென்பது இதனுற் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—ஒருவனேடு ஒருவன் நட்பாகுதற்கு), புணர்ச்சி - முகிடத்திருந்தலும், பழகுதல் - பலதரங்கண்டு பேசு லும், வேண்டா - வேண்டுவதில்லை ; உணர்ச்சிதான் - (இருவர்க் கும்) ஒத்த அறிவுதானே, நட்பு ஆம் - சிநேகமாகும், கிழமை - உரி மையை, தரும் - கொடுக்கும்

சு. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

(பரி-ரை.) எ-து,—கணடவழி அகமொழிய முகமாத்திரமே மலரும் வகை நட்குமது நட்பாகாது ; அன்றால் அகமுமலர நட்குமதே நட்பா வது, எ-று.

* புறநானூறு, குசு. | புறநானூறு, உரை.

நெஞ்சின்க ணிகழ்வதனே நெஞ்சென்றுர். இறந்தது கழீஇய வெச்ச வும்மை விகாரத்தாற்றெக்கது. அதஞல் இரண்டும் ஒருங்கே மலரவேண்டு மென்பது பெற்றும்.

(தே - ப - ரை.)—முகம் நக-(கண்டவிடத்து) முதமாத்திரமே மலரும் வகை, நட்பது - சிநேகிப்பது. நட்பு அன்று-சிநேகமன்று; நெஞ்சத்து அகம் நக - (அன்பால்) உள்ளமும் மலர, நட்பது - சிநேகிப்பதே, நட்பு - சிநேகமாம்

எ. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
னல்ல னுமப்பதா நட்பு.

(பரி-ரை.) எ-து.—கேட்டினேத்தருந் திசநிகளோச செல்ருங்கால் விலகி எனே நன்னெறிகளோச செல்லாக்காற் செலுத்தித் தெய்வத்தாற் கேடு வந்துழி அது விலக்கப்படாமையின் அதனுன் பதனே உடனனுபவிப்பதே ஒரு வனுக்கு நட்பாவது, எ-று.

ஆதலை வருகின்றமையின், அழிவினேத் தருமவையென் றெழுத்தார். * "தெருணடவறிவினவா" என்புழிப்போல இன்சாரியை நீக்க இரண்ட னுருபுதொக்க ரு. இனி நகையென்று பாடமோதி, அதற்குப் போழிவி னுஞ் செல்வவழிவிலும் வந்த துன்பங்களென்னும், அழிவின்களென்பதற்கு யாக்கையழிவின்க ணென்றும் உரைப்பாரு முளர்.

(தே - ப - ரை.)—நட்பு - (ஒருவனுக்கு) நட்பாவது, அழி வின் - அழிவைத்தருகிற, அவை - தீயவழிகளில்லே, நீக்கி - நீங்கச் செய்து, ஆறு - நல்வழிகளில்லே, உய்த்து - நடத்தி, அழிவின்கண்- (ஏழிஞலே) கேடு வந்தவிடத்து, அல்லல்-அத் துன்பத்தை; உமப் பது ஆம் - உடனிருந்து அனுபவிப்பதேயாம்.

அ உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களேவதா நட்பு

(பரி-ரை.) எ-து,—அவையிடை யாடைகுலேந்தவனுக்கு அப்பொழுதே கைசென்றுதவி அவ்வினிவரல் களேயுமாறுபோல, நட்டவனுக்கு இடுக்கண் வந்துழி அப்பொழுதே சென்றுதவி அதனைக் களேவதே நட்பாவது, எ-று.

அற்றகாத்தற்கட் கை தன்மனத்தினு முற்படுதலின், அவ்விரைவு இடுக்கண் களேவுழியும் அதற்கொத்த தொழி லுமைமையினும் வருவிக்க. உடையவன்றெழில் நட்பின்மே லேற்றப்பட்டது.

---

* காலடியார், இரவச்சம், ..

(தே - ப - ரை.)—நட்பு - நட்பாவது, உடுக்கை இழந்தவன் - (சபையினிடத்து) ஆடைகுலைந்தவனுக்கு, கைபோல - கையுதவுதல் போல, (சிதேஷிக்கப்பட்டவனுக்கு); ஆங்கே-அப்பொழுதே, இடுக் கண் - துன்பத்தை, களைவது ஆம் - நீக்குவதாம்

கூ. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

(பரி-ரை.) எ-து,—நட்புக்கு அமருக்கை யாதெனின், அஃது எஞ் ஞான்றுந் திரிபின்றி இயலுமெல்லையெல்லாம் அறம் பொருள்களிற் றளரா மைத்தாங்குந் திண்மை, எ-று.

ஒருஞான்றும் வேறுபடாது மறுமை யிம்மைக்கு உதவியாய அறம் பொருளகளிற றளர்ந்துழி அத்தளர்ச்சி நீக்கி அவற்றின்க ணிறுத்துதற்குமேல் ஒரு செயலுமின்மையின், அதனை நட்பு ஊன்று முறுத்தலெல்லை யென்றார்

(தே - ப - ரை.)—நட்பிற்கு - சிநேகத்திற்கு, வீற்றிருக்கை - அரசிருக்கை, யாது எனின் - எதெனின், கொட்பு இன்றி - (எந் நாளும்) வேறுபடாமல், ஒல்லும்வாய - கூடுமிடத் தெல்லாம், ஊன்று நிலை - (அறம்பொருள்களில் தளராமல்) தாங்குந்திண்மை.

கஎ. இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு

(பரி-ரை.) எ-து —இவர் நமக இதனினையன்பினர் யாமிவராக் மையமென்று ஒருவரை யொருவர் புனைந்து சொல்லினும், நட்புப் புல்லிதாய்த் தோன்றும், எ-று.

இவர்கென்பது வருவிக்கப்பட்டது. தாம் அவரென்னும் வேறுமை யின்றிவைதுப் புனைந்துரைப்பினும் வேற்றுமையுண்டாமாகலின், நட்புப் புல்லென்னு மென்றார். இவை யைந்துபாட்டானும நட்பினிலக்கணங கூறப்பட்டது

(தே - ப - ரை.)—இவர் எமக்கு - இவர் நமக்கு, இனையர் - இவ்வள வன்பினர், யாம் - நாம, இன்னம் என்று - (இவர்க்கு) இவ்வள வன்பினேம் என்று, புனையினும் - (ஒருவரை) ஒருவர் சிறப்பிக்கினும், நட்பு - சிநேகம், புல் என்னும் - சிறிதாய்த்தோன் றும்

அ0-ம் அதிகாரம்—நட்பாராய்தல்.

அஃதாவது மேற்சொல்லிய விலக்கணத்தாரை யாராய்ந்தறிந்தே நட்க வேண்டுதலின், அவரை யாராயுங்திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

க. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
விடில்லை நட்பாள் பவர்க்கு

(பரி-ரை.) எ-து,—நட்பினைவிரும்பி அதன்கணணே நிற்பார்க்கு ஒருவனைநட்புசெய்தபின் அவனை விடுதலுண்டாகாது; ஆகலான், ஆராயாது நட்புசெய்தல்போலக் கேடு தருவது பிறிதில்லை, எ-று.

ஆராய்தல் - குணஞசெய்கைகளது நன்மையை யாராய்தல். கேடு—ஆகுபெயர். நட்கிற்குமவனென்னும் வேறுமை யின்மையின் விடில்லையெனறும், அவ்வேற்றுமை யின்மையான் அவன்கட் பழிபாவங்கள் தமவா மாகலின் இருமையுங கெடுவனென்பது நோகதி நாடாது நட்டலிற் கேடில்லையென்றுங கூறினர்.

(தே - ப - ரை)—நட்பு ஆள்பவர்க்கு - நட்பைவிரும்பி அதனிடத்தே நிற்பவர்க்கு, நட்டபின் - (ஒருவனைநீ) நட்புச் செய்தபின், விடு - (அவனை) விடுதல், இல்லை - உண்டாகாது, (ஆகலால்), நாடாது - ஆராயாமல், நட்டலின் - நிகேகித்தல்போல, கேடு-கேடு (தருவது, இல்லை - வேறு) இல்லையாம்

ஒ.. ஆய்ந்தாய்ந்து தெளிளாதான் கேண்மை கடைமுறை தான்சாந் துயரந் தரும்.

(பரி-ரை.) எ-து,—குணமுஞ்செய்கையு நல்லனென்பதும் அல்லனெ பதும் பலகா லாராய்ந்தும் பலவாற்று ளாய்ந்தும் ஒருவனைநீ நட்புக்கொள் ளாதவன் முடிவிற் றன் சாதற்கேதுவாய துன்பத்தினைத் தன் மாற்றார் வினைக்கவேண்டாமற் றானேவினைக்கும், எ-று.

கடைமுறைக்கணணை இறுதிக்கட்டொக்க எழாவது விரிக்க. குணமுஞ்செயலுந் தீயனெனறு கொள்ளின் அவற்கு வரும் பகைமையெல்லாந் தன் மேலவாய்ப் பின் அவற்று னிறந்துவிடு மென்பதாம். இவை யிண்டுபாட்டானும் ஆராயாவழிப்படு மிழுக்குக் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—(குணமுஞ் செய்கையும் நல்லனென்பதும் அல்லனென்பதும்) ஆய்ந்து - (பலகால்) ஆராய்ந்தும், ஆய்ந்து - (பலவழியால்) ஆராய்ந்தும், கேண்மை - (ஒருவனைநீ) நட்பை,

கொள்ளாதான் - கொள்ளாதவன், கடைமுறை - முடிவில், தான் சாம் - தான் சாவதற்கு ஏதுவாகிய, துயரம் - துன்பத்தை, தரும்- (தானே) விளைத்துக்கொள்ளுவான்.

கூ. குணனும் குடிமையுங் குற்றமுங் குன்ற
வினனு மறிந்தியாக்க நட்பு

(பரி-ரை.) எ-து,—ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையு மாராய்ந்தறிந்து, அவனோடு நட்புச செய்க, எ-று.

குற்றமில்லாதார் உலகத்தின்மையின் உள்ளது பொறுக்கப்படுவதாயின் அவர்நட்பு விடற்பாற் றன்மென்பா குற்றமுமென்றும், சுற்றப் பிணிப்புடையார் நட்டாரோடும் பிரிப்புண்டுவருதலிற் குன்றுவினை மென்றும், விடப்படிற் றகுறையா மென்பார் அறிந்தியாக்க வென்றுங கூறினர்.

(தெ - ப - ரை)—குணனும் - (ஒருவனது) குணத்தையும், குடிமையும் - குடிப்பிறபபையும், குற்றமும் - குற்றத்தையும், குன்ற இனனும் - குறைவற்ற சுற்றத்தையும், அறிந்து - (ஆராய்ந்து) அறிந்து, நட்பு யாக்க - (அவனோடு) கிரேகஞ்செய்பக்கடவன்.

சு குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

(பரி-ரை.) எ-து,—உயர்ந்த குடியின்கட் பிறந்து தன்மாட்டு உலகர் சொல்லும் பழிக்கு அஞ்சுவானைச சில கொடுத்தாயினும் நட்புக்கோடல் சிறந்தது, எ-று.

குடிப்பிறப்பாற் றுன் பிழைசெய்யாமையும், பழிக்கஞ்சலாற் பிழைத்தன பொறுத்தலும், பெறுமை. இவை யிரண்டு முடையானைப் பெறுதலருமையின், அவன் நட்பை விலைகொடுத்துங கொள்க வென்பதாம்.

(தெ - ப - ரை.)—குடிப்பிறந்து - உயர்ந்தகுடியிற் பிறந்து, தன்கண் - தன்னிடத்து, பழி - (உலகத்தார்) சொல்லும் பழிக்கு, நாணுவானை - அஞ்சுபவனை, கொடுத்தும் - (பாதாயினுமொன்றை) கொடுத்தாயினும், நட்புக் கொளல்வேண்டும் - கிரேகஞ் செய்தல் வேண்டும்.

நி. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்,

(பரி-ரை.) எ-து,—தாம் உலகவழக்கல்லது செய்யக் கருதிற் சோகம் பிறக்கும்வகை சொல்லி விலக்கியும், செய்தக்காற் பின்னுஞ் செய்யாவகை தெருக்கியும், அவ்வழக்குச் செய்யாவழிச் செய்விக்கவும் வல்லாரை ஆராய்ந்து நட்புக்கொள்க, எ-று.

அழகுசொல்லிடித் தென வகுத பரிகாரவினைகளான் அவற்றிற்கேற்ற குற்றவினைகள் வருவிக்கப்பட்டன. வழக்கு - உலகத்தார் வழிப்படச் செய்து போருத செயல். தம்மொடு நட்டாரும் பிறியுமவகை அறிவித்த லரிதாகலின் அறியவல்லா னென்றார். இரண்டாவது இறந்தகட் டொக்கது.

(தே - ப - ரை)—அல்லது - சார் உலகவழையல்லாதனை (செய்யவினைக்கின்), அழுசொல்லி - அழுங்வகைசொல்லி (விலக்கியும்), இடித்து - (செய்தக்கால் பின்னுஞ்செய்யாவகை) தெருக்கியும், வழக்கு - அவுவுலகவழையை (செய்யாவிடத்து), அறியவல்லார் - செய்விக்கவும் வல்லவரை, ஆய்க - ஆராய்ந்து, நட்பு கொளல் - சிநேகஞ்செய்யக் கடவர்

கூ. கேட்டினு முண்டோ ருயிர்க் கினிஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்குக் கேடென்பது சென்னட்டாராகிய புலம் கினை எஞ்சாமலளப்பதோ கோல், ஆகலின், அதன்கணணும அவனுற்பெறப் படுதோர் நல்லறிவுடைமை எ-று

தந்தந நட்பெலலைகள் சுருங்கியிருக்கவும் பிலவுகாலதுப் புறத்தந்தோன்றுமா போன்றுமா பின் கேடுவந்துழிச் செயல் வேறபடுதலின் அக்கேட்டால் அவை வரையறுக்கப்படுமெனபது பறறிக கேட்டினைக்கோலாகவும், அதனுல் அவை யளக்கறிதால் ஆவாை யே கோடலின் அவறிலை உறுதி யென்றுங கூறினார். இனிஞர்—ஒருபொயா இ ஈதேதேச முருவகம். இவை தான்குபாட்டாலும் சாயுமாறும் ஆய தால் நட்புப்படுவார இவனென்பது உங கூறப்பட்டன.

(தே - ப - ரை)—(ஒருவனுக்குப் கேடென்பது) கினைஞரை - சுற்றத்தாரது நட்பாகிய (நிலமதனை), நீட்டி அளப்பது - குறையாமல் அளப்பதாகிய, ஓர்கோல் - ஒரு கோலாம்; (ஆகலால்), கேட்டினும் - அக்கேட்டினிடத்தும், ஓர் உறுதி - (அவராலே பெறப்படும்) ஒருநல்லறிவு. உண்டு - உளது.

எ. ஊதியமென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை பொரீஇ விடல்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்குப் பேதென்று சொல்லப்படுவது அறிவிலாரோடு நட்புக்கொண்டானுயின் அதனையொழித்து அவரினீங்குதல், எ-று.

கட்பொழிக்தாலும் நீங்காக்கால் *"வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வே" மாறுபோலத் தீங்கு வருதலின் விடலென்றும், நீங்கியவழித் தீங்கொழிதலேயன்றி இருமை யின்பத்திற் குரிமைபெய்தலு மூடைமையின் அதனை ஊதிய மென்றும் கூறினர்.

(தே - ப - ரை)—ஒருவற்கு-ஒருவனுக்கு, ஊதியம் என்பது-பேதென்று சொல்லப்படுவது, பேதையார் - அறிவிலாதவரது, கேண்மை - நட்பை, ஒரீஇ - ஒழித்து, விடல் - (அவரை) விட்டுதல்.

அ. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணுற்றுறுப்பார் நட்பு.

(பரி-ரை.) எ-து —தம்மூக்கஞ் சுருங்குதற்குக் காரணமாய வினைகளைச் செய்ய நினையாதொழிக; அதுபோலத் தமக்கொருதுன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதொழிக, எ-று.

உள்ளஞ் சிறுகுவனவன தம்மின்வலியாரோடு தொடங்கியனவும் பயனில்லனவுமாம். ஆதலென்பது முதனிலைத்தொழிற்பெயர். முன்னெல்லாம் வலியாரைப்போன்று ஒழிதலின், வலியுறப்பா ரென்றார். எடுத்துக்காட்டுவமை. கொள்ளின் அழிக்தேவிடுமென்பதாம்.

(தே - ப - ரை.)—உள்ளம் - (தம்) மனவெழுச்சி, சிறுகுவ - சுருங்குதற்குக் காரணமாகிய தொழில்களை, உள்ளற்க - (செய்ய) நினையாதிருக்கக்கடவர் ; (அதுபோல), அல்லற்கண் - (தமக்கொரு) துன்பம் வந்தவிடத்து, ஆற்று அறுப்பார் - கைவிடுவோரது, நட்பு - நேசத்தை, கொள்ளற்க - கொள்ளாதிருக்கக்கடவர்.

கூ. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் கெடுங்காலத்து அவனைவிட்டு நீங்குவார் முன்னவனுழே செய்த நட்பு, தன்னைக் கூற்றடுங்காலத்து ஒருவன் நினைப்பினும், அந்நினைத்த வுள்ளத்தைச சுடும், எ-று.

நினைத்ததுணையானே இயைபில்லாத பிறனுக்குங் கூற்றினுங் கொடிதா மெனக் கைவீடெணணிச செய்த நட்பின் கொடுமை கூறியவாறு. இனி அவன்

---

* நாலடியார், நல்லினஞ்சேர்தல், அ0.

ரூனே ஆக்கியகேடு தன்னையடுக்காலே யுள்ளினும் அக்கேட்டினுஞ் சுடுமென் றுரைப்பாரு மூளர். இவை மூன்றுபாட்டானும் ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவரென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கெடும் காலை - (ஒருவன்) கெடுங்காலத்து, கைவிடுவார் - (அவனை விட்டு) நீங்குவார், கேண்மை - (முன் அவனோடுசெய்த) நட்பானது, அடும் காலை - (கூற்றுவன்) கொல்லுங் காலத்து, உள்ளினும் - (ஒருவன்) நினைத்தாலும், உள்ளாம் - (அந் நினைத்த) உள்ளத்தை; சுடும் - பருத்தும்.

கo. மருவுக மாரறிவுர் கேண்மையொன் றித்து
மொருவுக வொப்பிலார் நட்பு.

(பரி-ரை.) எ-து;—உலகோடு ஒத்தகுற்றமுடைமை நட்பினையே பயில்க; உலகோடொத்தலில்லார் நட்பினை அறியாது கொண்டாராயின், அவர் வேண்டியதொன்றனைக் கொடுத்தாயினும் விடுக, எ-று.

உலகோடொத்தார் நட்பு இருமையின் பழம் பயத்தலின் மருவுகவென்றும், அதனோடு மாறுபினர் நட்புத் துன்பமே பயத்தலின் அதனொழிவை விலை கொடுத்துங் கொள்ளவென்றும் கூறினர். இதனுல் அவ்விருமையுந் தொகுத்துக் கூறப்பட்டன.

(வ - ப - ரை.)—மாசு அறுர் - (உலகோடொத்து) குற்ற மறுதலவரது, கேண்மை - நட்பையே, மருவுக - பருகுக்கடவன்; ஒப்பு இலார் - (உலகத்தோடு) ஒத்தலில்லாதவரது, நட்பு - சிநேகத்தை, (ஆராயாதுகொண்டால்), ஒன்று - (அவருக்குவேண்டிய) ஒன்றை, ஈந்தும் - கொடுத்தாயினும், ஒருவுக - விடக்கடவன்.

அகம் அதிகாரம்—பழமை.

அஃதாவது நட்டாரது பழையராந்தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப்பெயர் காரியத்திற் காயிற்று. ஆராய்ந்து நட்கப்பட்டாரெனினும் பொறுக்கப்படுங் குற்றமுடைய ராகலானும் ஊழ்வகையானும் நட்டார்மாட்டுப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு, இது நட்பாராய்தலின் பின் வைக்கப்பட்டது.

க. பழகுமெ யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கிழ்ந்திடா நட்பு.

(பரி-ரை.) எ-து.—பழமையென்ற சொல்லப்படுவது நியாதென்று வினவின், அது பழமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதுஞ்சிதையாது அவற்றிற் குடம்படும் நட்பு, எ-று.

பழமை - ஆகுபெயர். கெடுகையைமையென வருவனவு மது. உரிமையாற் செய்வனவாவன கருமமாயின செய்யுங்காற் கேளாதுசெய்தல், கெடும் வகைசெய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவுசங்களின்மை யென்றிவை முதலாயின. சிதைத்தல் - விலக்கல். இதனுட் பழமையாவது காலஞ்சென்றதன்று இப்பெற்றிதாய நட்பென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை) -- பழமை எனப்படுவது - பாரமை என்று சொல்லப்படுவது, யாதானின் - யாதென்றுகேட்கின் (அது), பிழமையை - (பாரமைபோர் உரிமையாலே செய்த வைகளை, யாதும் - சிறிதாயினும், கீழ்ந்திடா - சிதைத்தாமல் (அவையதற்கு உடன் படுவதாகிய), நட்பு - சிநேகமாம்

உ நட்பிற் குறுப்புக் கெழுதகை மை மற்றுந்தற்
குப்பாதல் சான்றோர் கடன்.

(பரி-ரை.) எ-து,—நட்பிற்கு அவயவமாவன நட்டார் உரிமையாறசெய்வன, அதனுல் அவ்வுரிமைக்கு இனியாதல் அமைந்தார்க்கு முறைமை, எ-று.

வேறண்மை தோன்ற உறுப்பென்றார். உறுப்பென்பது ரண்டிலக்கணை யடியாகவந்த சுதிப்புசொல். அவயவமாக லறிந்தே இனியவாவரென்பது தோன்றச சான்றோர்மேல் வைத்தார்.

(தெ - ப - ரை.)—நட்பிற்கு - சிநேகத்திற்கு, உறுப்பு - அவயவமாவன, கெழுதகைமை - (நட்டினர்) உரிமையாற் செய்பவை யாம்; (ஆதலால்), அதற்கு - அவயவிமைக்கு, உபபு ஆகல்-இனிமையராதல். சான்றோர் - நிறைந்தார்க்கு, கடன் - முறைமை.

ஊ. பழகிய நட்பெ னன் செய்யுங் கெழுதகைமை
செய்தா ரகைமையாம் கடை.

(பரி-ரை.) எ-து —தாழடம்படாதனவேனும் நட்டார் உரிமையாற் செய்தனவற்றிற்குத் தாஞ்செய்தாற்போல உடம்படாராயின், அவரோடு பழயதாய் வந்த நட்பு என்னபயனைச் செய்யும். எ-று.

செய்தாற்போல வுடம்படுதலாவது தாமும் அவரிடத்துரிமையா லுடம் படுதல். இவை பிரணபோட்டானும் பழமையான் எரும் உரிமையது சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.) —கெழுதகைமை - (நட்பினர்) உரிமையினாலே செய்தவைகளுக்கு, செய்தாங்கு - (தாம்) செய்தவைபோல, அமையாக்கடை - உடன்படாராயின், பழகிய - (அவரோடு) பழையதாய் வந்த, நட்பு-இகேகம், ராயன்-என்னாயினை, செய்யும் - தகும்.

ர. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

(பரி-ரை.) எ-து,—தங்கருமத்தைக் நட்டார் உரிமையாற் கேளாதுசெய்தாராயின், அச்செயலது விழையப்படுந் தன்மைபற்றி அதனை விரும்புவர் அறிவுடையார், எ-று.

ஒருவாக்குத் தமகருமம் தாமறியாமை முடிந்திருத்தலினும் உவகு நன்மையின்மையின், அச்செயல் விழையத்தகுவதாயிற்று. அதனை அவ்வாறறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கல்ல தின்மையின், அவர்மேலவைத்துக்கூறினார். வேண்டியிருப்பினென்பது எழுந்திருப்ப தென்பதுபோல ஒருசொன்னீர்மைத்து. இதனுட் கேளாது செய்தழி அதனை விரும்புகவென்பது கூறப்பட்டது

(தே - ப - ரை.)—நட்டார்-நட்பினர், கெழுதகையால்-உரிமையால், கேளாது - (தம்மை) கேளாமல், செயின் - (தங்கருமத்தை) செய்தாராயின், விழைதகையான - (அச்செயலது) விரும்பப்படுந் தன்மைபற்றி, (அறிவுடையோர்), வேண்டியிருப்பர் - (அதனை) விரும்புவர்.

ரு பேதைமை யொன்றே பெருங்கிழமை யென்னார்க
கோதக்க நட்டார் செயின்.

(பரி-ரை.) எ-து,—தாம் வெறுக்கத்தக்கனவற்றை நட்டார் செய்தாராயின், அதற்குக் காரணம் ஒன்றிற் பேதைமையென்றுதல் ஒன்றின் மிக்க வுரிமையென்றுதல் கொள்க, எ-று.

ஒன்றே வென்பது எண்ணிடைச்சொல். செயினெனவே, தம்மியல்பாற் செய்பாமையிற்றும். இது வருகின்றவற்றுள்ளு மொக்கும். இழுக்கான் வரும்பேதைமை யாவர்க்கு முணையிற் றமக் கேதங்கொண்டா ரென்றுதல் வழ்வகையான் எம்மின்வரற்பாலது ஒற்றுமைமிகுதிபற்றி அவரின் வந்தென் றுதல்கொள்வதல்லது அன்பின்மையென்று கொள்ளப்படாதென்பதாம். கெடும்வகை செய்யின் அதற்குக் காரணம் இதனுட் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கோ தக்க - (தரம்) வெறுக்கத்தக்கவைகளை, நட்டார் - சிநேகித்தவர், செயின் - செய்தாராயின், (அதற்குக்காரணம்), பேதைமை ஒன்றே-அறியாமையொன்றே, பெருங்கிழமை-மிகுந்த உரிமையு(மரம்), என்று-என்று, உணர்க - அறியக்கடவர்.

சு. எல்லிக்க ணின்றூர் துறவார் தொலவிடத்தும்
தொல்லிக்க ணின்றூர் தொடர்பு.

(பரி-ரை.) எ-து,—நட்புவரம் பிகவாது அதன்கண்ணே நின்றவர் தம்மொடு பழமையிற் றிரியாது நின்றாரது நட்பினை அவராற் றொலவு வந்தவிடத்தும் விடார், எ-று.

பழமையிற் றிரியாமை - உரிமையொழியாமை. தொலவு - பொருட் கேடும் போர்க்கேடும்.

(தே - ப - ரை.)—எல்லிக்கண் நின்றூர் - (நட்பின்) வரம்பிலே நின்றவர், தொல்லிக்கண் நின்றூர் - (தம்மோடு) பழமையில் வேறுபடாது நின்றவரது, தொடர்பு - நட்பை, தொலைந்த விடத்தும் - (அவராலே) தொலவு வந்தவிடத்தும், துறவார் - விடார்.

எ. அழிவந்த செய்யினு மன்பழு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

(பரி-மை.) எ-து,—நட்டார் தமக்கழிவுவந்தவற்றைச செய்தாராயினும் அவர்மாட் டன்பொழியா ; அன்புடனே பழையதாய் வந்த நட்பினையுடையார், எ-று.

அழியென்பது முதனிலைத்தொழிற்பெயர். அழிவு - மேற்சொல்லிய கேடுகள். இவையிரண்டொட்டானுங் கேடுசெய்தக்கண்ணும் நட்பு விடற்பாற் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அன்பின் - அன்புடனே, வழிவந்த - பழையதாய்வந்த, கேண்மையவர் - நட்பினையுடையவர், அழிவந்த - அழிவு வந்தவைகளை, செய்யினும் - செய்தாராயினும், அன்பு அறார் - (அவரிடத்தே) அன்பு நீங்கார்.

அ. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்.

(பரி-ரை.) எ-து,—நட்டார்செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னலுங் கொள்ளாத உரிமையுரியவல்லார்க்கு அவர் பிழை செய்வாராயின், அது பயன்பட்ட காளாம், எ-று.

பிழையாவன சொல்லாது நற்பொருள்வெளவல், பணியாமை, அஞ்சாமை முதலாயின. கேட்டல்-உட்கோடல். கெழுதகைமைவல்லா ரென்பது ஒருபெயராய்க் கேளாதவென்னு மெச்சத்திற்கு முடிபாயிற்று. செய்துபோந் துரியல்லது அவ்வன்மைவெளிப்படாமையின். செய்பாதன காளல்லவாயின். இதனுற் பிழைபொறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கேள் - நட்பினரது, இழுக்கம் - பிழையை, கேளா - (பிறர்சொல்லினும்) கேளாத, கெழுதகைமை வல்லார்க்கு - உரிமையுரியவல்லவர்க்கு, நட்டார் - அந்நட்பினர், இழுக்கம் - பிழையை, செயின் - செய்தாராயின் - (அது), காள் - (பயன்பட்ட) காளாம்

கூ. கெடாஅ வழிவந்த கேண்மைபார் கேண்மை
விடாஅர் விழையு முலகு

(பரி-ரை.) எ-து,—உரிமையுரிது பழையதாய்வந்த நட்பினையுடையாரது நட்பினை அவர் பிழைநோக்கி விடுதல் செய்யாதாரை உலகம் நட்புக்குறித்து விரும்பும், எ-று.

கெடாதென்பத னிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது. விடாதாரையெனவே விடுதற்காரணங்கூறப்பட்டது. நம்மாட்டும் இவர்த்தன்மைய ராவரென்று யாவருந் தாமே வந்து நட்பாவரென்பதாம். கெடாரெனறு பாடமோதி, நட்புத்தன்மையிற் கெடாராகியென் றுரைப்பாருமுளர்.

(தே - ப - ரை.)—கெடா - (உரிமை) கெடாமல், வழிவந்த - பழையதாய்வந்த, கேண்மையார்-நட்பையுடையவரது, கேண்மை-நட்பை, விடார் - (அவர்பிழைநோக்கி) விடாதவரை, உலகு-உலகமானது, விழையும் - (நட்புக்குறித்து) விரும்பும்.

கo. விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

(பரி-ரை.) எ-து,—பழைய நட்டார் பிழைசெய்தாராயினும். அவர்மாட்டுத் தம்பண்பி னீங்காதார் பகைவரானும் விரும்பப்படுவர், எ-று.

தம்பண்பாவது செய்யாதமுன்போல அன்புடையராதல்-மூன்றனுருபுஞ் சிறப்புமும்மையும் விகாரத்தாற் றொக்கன. அத்திரிபின்மை நோக்கிப் பகை

வரும் நாட்டாராவ ரென்பதாம். இவை யிரண்டுபோட்டானும் பழமையறிவார் பயன் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—பழையார்கண் - பழையநட்பினரிடத்து, (அவர் பிழைசெய்தாராயினும்), பண்பிற் றலைப் பிரியாதார் - (தம்) பண்பு நீங்காதவர், விழையார் - பகைவராயினும். விழையப்படுப - விரும்பப்படுவர்.

அஉ-ம் அதிகாரம்—தீராட்பு.

இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையின் விடற்பாலதாய நட்பு நட்பாராய்தற்கட் சுருங்கச்சொல்லியதனையான் அடங்காமையின் அதனை யிருவகைப்படுத்து இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, மூதர்கட்டீராட் புக்கூறுகின்றார். அஃதாவது தீக்குணத்தாரோடு உளதாய நட்பு. குணத்தின் தீமை ஒற்றுமைபற்றி உடையார் மேற்றாயது, பின் அவரோடு செய்த நட்பின் மேற்றாயிற்று. அதிகாரமுறைமை கூறுமையே விளக்கும்.

க. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது

(பரி-ரை.) எ-து —காதன்மிகுதியாற் பருகுவார் போன்றாராயினும் தீக்குணமுடையார் நட்பு வளராதலிற் றேய்தல் நன்று, எ-று.

* "பருகு வண்ண வருகா னோக்கமொடு" என்றார் பிறரும். நற்குண மில்லா ரெனவே, தீக்குணமுடையாரென்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகுஞல் வருங்கேடு குன்றுஞல் வாராமையின், குன்றலினினெனறார். இத னுற்றீட்பினை ஆகாமை பொதுவகையாற் கூறப்பட்டது, இனிச் சிறப்பு வகையாற் கூறிய.

(தெ - ப - ரை.)—பருகுவார் போலினும் - (ஆசைமிகுதியால்) உண்பவர் போன்றாராயினும். பண்பு இலார் - குணமில்லாதது, [தீக்குணமுடையவரது என்றபடி.,] கேண்மை - நட்பானது, பெருகலின் - வளர்தலினும், குன்றல் - குறைதல், இனிது - நல்லது.

உ. நிறைனட் டறிஞரு மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்.

(பரி-ரை.) எ-து,—தமக்குப் பயனுள்வழி நட்புசெய்து அஃதில்வழி யொழியும் ஒப்பிலாதது நட்பினை பெற்றால் ஆக்கமியாது? இழந்தாற் கேடி யாது? எ-று.

* பொருளாம்பு, அடி, எஅ.

தமக்குற்றன பார்ப்பார் பிறரோடு பொருத்தமிலராகலின், அவரை ஒப்பி லாரென்றார். அசர்மாட்டு நொதுமற்றன்மையே அமையு மென்பதாம்.

(தே - ப - ரை)—உறின் - (தமக் குப்பயன்) உள்ளபிடத்து, நட்டு - நிநேகித்து, அறின் - (அது) இல்லாவிடத்து, ஒரூஉம் - ஒழியும், ஒப்பு இலார் - ஒப்பில்லாதவரது, கேண்மை - நிநேகத்தை, பெறினும் - பெற்றாலும், (என்) - (சொல்லாது, இழப்பினும் - இழந்தாலும், என் - (கேடு) யாது

கூ. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர்.

(பரி-ரை.) எ-து,—நட்பளவு பாரா அதனுல்வரும் பயனளவு பார்க்கும் நட்டாரும், கொடுப்பாரைக் கொள்ளாத விலையைக்கொள்ளும் பொதுமகளி ரும், பிறர்கேடு நோக்காது அவர்சோர்வு நோக்குங் கள்வரும், தம்மூளாப் பர், எ-று.

நட்பு—ஆகுபெயர். பொருளையேருமித்து வஞ்சித்தொழுகலின், கணிகை யர் கள்வ ரென் றிவரோ டொபபரென்பதாயிறறு. இவையிரணபோட்டாலுந் தமக்குறுவது பாராப்பா நட்பின்றீமை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—உறுவது - (நட்பளவுபாராமல் அதனுல்) வரும் பிரயோசனத்தளவு, சீர்தூக்கும் - பார்க்கும், நட்பும் - நட் பினரும், பெறுவது - (கொடுப் பாரைக் கொள்ளாமல்) விலையை, கொள்வாரும் - கொள்ளும் வேசையரும், கள்வரும் - (பிறர்கேடு நோக்காது அவர்சோர்வுபார்க்கும்) கள்வரும், நேர் - (தம்மூள்) ஒப்பர்.

ஈ. அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னர்
தமரிற் றனிமை தலை.

(பரி-ரை.) எ-து,—அமர் வாராதமுன்னெல்லாங் தாங்குவதுபோன்று வந்துழிக் களத்திடை வீழ்த்துப்போங் கல்வியில்லாத புரவிபோல்வாரது தமர் மையில் தனிமை சிறப்புடைத்து, எ-று

* கல்லாமை-கதியைக் கும் சாரிபதினெட்டும் பொருமுரணுற்றலும் அறி யாமை. துன்பம் வாராதமுன்னெல்லாந் துணையாவார்போன்று வந்துழி விட்டு

---

* விகிரமம் வல்லிதம் வெல்லு முபகண்டம்—மதிநிமஞ் சாரியோ டைந்து, மல்ல கவி முதலியவாக வேறு கூறுவதுமுண்டு.

நீங்குவரைன்பது உவமையாற் பெற்ரும். அவர் தமரானுல் வருமிறுதி தனியா னுல் வாராமையின், தனிமையைத் தலேயென்ருர்: எனவே, அதுவுந் தோதல் பெறுதும்.

(தெ - ப - ரை.)—(முன்னெல்லாங் தாங்குவதுபோ லிருந்து) அமரகத்து-போர்வந்தவிடத்து, ஆற்ற அறுக்கும் - போர்க்களத் திலே தன்னிவிட்டுப்போகின்ற, கல்லா-கல்வியில்லாத, மா அன்னர்-குதிரைபோல்பவரது, தமரின் - தமராற் தன்மையினும், தனிமை - தனியாயிருத்தலே, தலே - சிறப்புடைத்து.

நி. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

(பரி-மா.) எ-து,—செய்துவைத்தாலும் அரணுகாத் தீம்மக்களது தீந ட்பு ஒருவற் குண்டாதலின் இல்லியாதல் நன்று, எ-று.

சிறப்பும்மை விகாரத்தாலுரைக்கது. அரணுகாமை - தொலேவின்கண் விட்டு நீங்குதல். எய்தலினெய்தாமை நன்றென்பதற்கு மேலுரைத்தாங் குரைக்க. சாராதவென்னும் பெயரெச்சம் கேண்மையென்றும் பெயர்கொண் டது; சிறியவரென்பதனை கொள்ளின், செய்தென்பது நின்று வற்றும். இவை யிரண்டுபோட்டானுந் தொலேவிற் றுணையாகாத நட்பின தீமை கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—செய்து - செய்துவைத்தாலும், எமம்சாரா-காவலாகாத, சிறியவர் - தீம்மக்களது, புல் கேண்மை - தீநட்பு, எய் தலின் - (ஒருவனுக்கு) உண்டாதலினும், எய்தாமை - இல்லாதிருத் தல், நன்று - நல்லது.

கூ. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும்.

(பரி-மா.) எ-து,—அறிவிலானது மிகச்செறிந்த நட்பின் அறிவுடையா னது பகைமை கோடிமடங்கு நன்று, எ-று.

கேழீஇயவென்பது னிறுதிகிலே விகாரத்தாற்றொக்கது. பன்மை உயர்த் தற்கண் வந்தது. அறிவுடையான்பகைமை ஒருதீமைகும் பயவாமையானும், பேதை நட்பு எல்லாத்தீமைகும் பயத்தலானும், கோடியுறுமென்ருர். பெருங் கழிநட்பென்று பாடமோதுவாருமுளர்.

(தெ - ப - ரை.)—பேதை - அறிவிலாதவனது, பெருங் கெழீஇ நட்பின் - மிகச்செருங்கிய நட்பைப்பார்க்கிலும், அறிவுடை யார் - அறிவுடையாரது, ஏதின்மை - பகைமை, கோடி உறும் - கோடிப்பங்கு நல்லது.

எ. நகைவகையா ராகிய நட்பிற் பகைவரால்
பத்தடுத்த கோடி யுறும்.

(பரி-மை.) எ-து,—தாமறிதல் வகையராகாது நகுமல் வகையராதற் பாகிய நட்பான் வருவனவற்றின் பகைவரான் வருவன பத்துக்கோடி மடங்கு நல்ல, எ-று.

நட்பு—ஆகுபெயர். அந்நட்பாவது விடமுந் தீர்த்தரும் வேழம்பரும் போன்று பலவகையா னகுவித்துந் தாம் பயன்கொண் டொழிவாரோடு உளதாயது. பகைவராலென்பது அவாப்பிற்றலின், வருவனவென்பது வருவிக்கப்பட்டது. பத்தடுத்தகோடி-பத்தாகத்தொடுத்தகோடி. அந்நட்பான் வருமின்பங்களின அப்பகைவரான் வருந்துன்பங்கள் இறப்பநல்லவென்பதாம் இதற்குப் பிறரெல்லாரு சொல்லிலக்கணமுதோடு மாறுகொள வுரைசெதார்.

(தே - ப - ரை)—நகைவகைபர் ஆகிய-(தாம் அறிதல்வகையராதற்கல்லாமல்) நகுதல்வகையராதற் நு ஏதுவாகிய, நட்பின் - நட்பால் (வருமவைகளின்), பகைவரால் - பகைவரால் (வருபவை), பத்தடுத்தகோடி - பத்துக்கோடிமடங்கு, உறும் - நல்லவையாம்.

அ. ஒல்லுங் கருமம் முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

(பரி-ரை.) எ-து,—தம்மான் முடியுங் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரோடு கொண்ட நட்பினை அது கண்டால் அவரறியச்சொல்லாதே சோரவிடுக, எ-று.

முடியாதாகுதல்-முடியாதாக நடித்தல். சோரவிடல்-விடுகின்றவாறு தோன்றுமல் ஒருகாலேக்கொருகா லோரவிடுதல். அறியச்சொல்லினும் விடுகின்றவாறு தோன்றினும் அதுபொழுது பரிகரித்துப் பின்னு நட்பாயொழுகக் கருதுவராகலின், சொல்லாடாரென்றுஞ் சோரவிடலென்றுங் கூறினர். இவை மூன்றுபாட்டானும் முறையே பேதையார், நகுவிப்பார், இயல்வது செய்யாதாரென்றிவர்க ணட்பின் தீமை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—ஒல்லும் கருமம் - (தம்மாலே) முடியுந் தொழிலே. உடற்றுபவர் - முடியாதாகச் செய்பவரோடு கொண்ட, கேண்மை - நட்பை, (அதுகண்டால்) சொல்லாடார் - (அதை அவரறிய) சொல்லாமல், சோரவிடல் - தளரவிடற்க.

கூ. கனவினு மின்னாது மன்னே வினைவே
சொல்லேறு பட்டார் தொடர்பு.

"முடியாதாகச் சடிதல்" எனவும் பாடம்.

(பரி-ரை.) எ-து,—வினையுஞ்சொல்லு மொவ்வாது வேறுசெரு யிருப் பார் நட்பு நனவின்கண்ணேயன்றிக் கனவின்கண்ணு மின்னாது, எ-று.

வினை சொற்களதொவ்வாமை முதன்மே லேற்றப்பட்டது. அஃதாவது வினையிற் பகைவராய்ச சொல்லின் நட்டாராயிருத்தல். நிகழ்வின்கண் உளதா யிருத்தலால், கனவிற்று மின்னாதென்றார். உம்மை எசசவும்மை: இரிவு சிறப் பும்மையுமாம். மன்னும் ஓவும் அசைநிலை.

(தே - ப - ரை.)—வினைவேறு - தொழில்வேறு, சொல்வேறு - பேச்சுவேறு, பாட்டார் - பட்டவரது, தொடர்பு - நட்பு, கனவி னும் - (நனவிலே மாத்திரமல்லாமல்) கனவிலும், இன்னாது - துன் பஞ் செய்யாதாகும்.

கூ எணேத்துங குறுகுத லோப்பன் பணேக்கெடு இ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

(பரி-ரை.) எ-து,—தனியே மனேகணேருதழி நட்பாடிப் பலரோடு மன்றின்க ணேருந்தழிப் பழிகூறுவார்நட்பு சிறிதாயினுந் தம்மை ணணுகுதலேப் பர்கார்க்க எ-று.

மனேக்கட் செழுமையும் மன்றின்கட் பழித்தலுந் திதாகலின், அவா ஒரு காலுந் தம்மை ணணுகாவகை குறிகொண்டு காக்கவென்பார், அவர் நட்பின் மேல வைத்துக் கூறினர். இவை யிரணபொட்டாணும் வருசர்நட்பின் தீமை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—மனே - வீட்டிலே (தனித்திருந்தபோது) கெழீஇ - நட்பாடி, மன்றில் - சபையிலே (பலருடனிருந்தபோது), பழிப்பார் - பழிசொல்வோரது, தொடர்பு - நட்பு, எணேத்தும் - எவ்வளவு சிறிதாயினும், குறுகுதல் - (தம்மை) சேர்தலே, ஓம்பல் - பரிகரிக்கக்கடவர்.

அகூ-ம் அதிகாரம்—கூடாநட்பு.

யேனைக் கூடாநட்புக் கூறுகின்றார். அஃதாவது பகைமையான் அகத்தாடி கூடாதிருக்கே தமக்கு வாய்க்குமிடம் பெறுத்துணேயும் புறத்தாற் கூடி யொழுகுவார் நட்பு.

க. சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

(பரி-ரை.) எ-து,—கூடாதிருந்தே தமக்கு வாய்த்தமிடம் பெறுந்துணை யுங்கூடி யொழுகுவார்நட்பு அது பெற்றால், அறவெறித்தற்குத் துணையாய் பட்டடையாம், எ-று.

எறியுமெல்லை வாராமுனெல்லார் தாங்குவ போன்றிருந்து வந்தழி அறவெறிவிப்பதாய பட்டடைக்கும் அத்தன்மைத்தாய நட்பிற்குந் தொழி லொப்புமை யுணையையான், அதுபற்றி அங்ஙட்பினைப் பட்டடையாக வுபசரித் தார். தீர்விடமென்று பாடமோதி முடிவிடமென் றுரைப்பாருமுளர்.

(தே - ப - ரை.)—நேரா-கூடாதிருந்தே, நிரந்தவர் - (வாய்க்கு மிடம் காணுமளவும்) புறத்திற்கூடி கடப்பவரது, நட்பு - சிநே கம், ஈர் இடம் - வாய்க்குமிடத்தை, காணின் - கண்டால், எறி தற்கு - (அழி) வெறிதற்குத் (துணையாகிய), பட்டடை - பட்டடை யாம்.

---

1. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம் போல வேறுபடும்.

(பரி-ரை.) எ-து.—தமக் குற்றார்போன் றுரு தாரோடு உளதாய நட்பு இடம்பெற்றுற் பெணபாலார் மனமபோல வேறுபடும், எ-று.

அவர்மனம் வேறுபடுதல் "பெண்மனம் பேதின் றெருப்படுப் பேனென் னுமெண்ணு லொருவன" என்பதனுனுமறிக. நட்புவேறுபடுதலாவது பழைய பகையேயாதல். இவையிரண்டொட்டானுங் கூடாநட்பினதுகுற்றம் கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—இனம்போன்று - (தமக்கு) உற்றவர் போன்று, இனம் அல்லார் - உருதாரோடு உண்டாகிய, கேண்மை - நட்பானது, (இடம்பெற்றால்) மகளிர்-பெண்பாலார், மனம்போல-மனதைப்போல, வேறுபடும் - மாறும்.

2. பலநல்ல கற்றம் கடைத்தும் மனநல்ல
ராகுதல் மாணார்க் கரிது.

(பரி-ரை.) எ-து,—நல்லன பலநூல்களைக் கற்றவிடத்தும் அதனுன் மனந்திருந்தி நட்பாதல் பகைவர்க் கில்லை, எ-று.

நல்லன-மனக்குற்றங்கெடுப்பன. மனநல்லரெனச் சினைவினை முதன் மேனின்றது. நல்லராகுதல் - செற்றம் விடுதல். உள்ளே செற்றமுடையா ரைக் கல்வி யுடைமைபற்றி நட்பென்று கருதற்க வென்பதாம்.

---

1 வினையாபதி—(புறத்திட்டு, பேரெழை, கஷ்.)

(தெ - ப - ரை.)—நல்ல - நல்லவையாகிய, பல - பலநூல்களை, கற்றக்கடைத்தும் - கற்றவிடத்தும் (அதனால்), மனம் நல்லர் ஆகுதல் - மனந்திருந்தி நட்பினராகுதல், மாணர்க்கு - பகைவர்க்கு, அரிது - இல்லை.

ச. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னு
வஞ்சரை யஞ்சப் படும்.

(பரி-ரை.) எ-து,—கண்டபொழுது முகத்தால் இனியவாச சிரித்து எப் பொழுதும் மனத்தி லின்னாய வஞ்சரை அஞ்சல்வேண்டும், எ-று.

நகையது வகைபற்றி இனியவென்றும், அகத்துச் செற்றம் நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்துவிளைத்தலின் வஞ்சரென்றும், அச் செற்றக குறிப்பறித்த் கருவியாய முகத்தானுக் தோன்றுமையின் அஞ்சுதல் செய்யப்படுமென்றுங் கூறினர். இவை யிரண்டுபோட்டானுங் குற்றத்திறகேது வாய அவர் கொடுமை கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—(கண்டபோது) முகத்தின் - முகத்தால், இனிய - இனிமையுள்ளனவாக, நகா - சிரித்து, அகத்தி - மனத்தால், இன்னா - (எப்பொழுதும்) இனியராகாத, வஞ்சரை - வஞ்சகரை, அஞ்சப்படும் - அஞ்சல்வேண்டும்.

நி. மனத்தி னமைபா தவரை யெணீத்தொன்றுஞ்
சொல்லினுற் றேறற்பாற் றன்று.

(பரி-ரை.) எ-து,—மனத்தாற் றம்மொடு மேவாதாரை யாதொரு கருத்தினுஞ் சொல்லாற் தெளிதன் முறைமைத் தன்றென்று சொல்லும் நீதி நூல், எ-று.

நீதிநூலென்பது அவாய்நிலையான் வந்தது. பகைமை மறைத்தற்பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச்சொல்லைச் செவ்விய சொல்லெனக் கருதி அவரைக் கருமங்களிற்றெளிதல் நீதிநூன்முறைமை யன்றென்பதாம்.

(தெ - ப - ரை.)—மனத்தின் - மனத்தால், அமையாதவரை - (தம்மோடு) பொருந்தாதவரை, எணீத்து ஒன்றும் - யாதொரு கருமத்திலும், சொல்லினால்-(அவர்பேசும்) பேச்சினால், தேறல் பாற்று - தெளிதன் முறைமையது, அன்று - அல்ல (என்று நீதிநூல் சொல்லும்).

சு. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

(பரி-ரை.) எ-து,—நட்டார்போன்று நன்மையகக்குஞ் சொற்களைச் சொன்னராயினும் பகைவர்சொற்கள் அது பயவாமை அசைசொல்லிய பொழுதே யறியப்படும், எ-று.

சொல்லினுமெனவே, சொல்லாமையே பெற்றும். ஒட்டாராதலாற் றீமையத்தல் ஒருதலையென்பார், ஒல்லை யுணரப்படு மென்றார்.

(தே - ப - ரை.)—நட்டார்போல் - நட்பினர்போல, நல்லவை-நன்மையைந்தருஞ் சொற்களோ, சொல்லினும் - சொன்னலும், ஒட்டார்சொல் - பகைவர்சொற்கள், (அநுகாராமை), ஒல்லை - விரைவிலே (சொல்லியபொழுதே யென்றபடி), உணரப்படும் - அறியப்படும்.

எ. சொல்வணக்கமொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான்.

(பரி-ரை.) எ-து.—வில்லினது வணக்கம் ஏற்றவர்க்குத் தீமைசெய்தலைக் குறித்தமையால் பகைவர்மாட்டுப் பிறக்குஞ் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மைசெய்தலைக் குறித்ததென்று கருதற்க, எ-று.

தம்வணக்க மன்றென்பது தோன்றச் சொல்வணக்கமென்றும், வில் வணக்கம் வேரூன்றிவரும் வணங்குதலொப்புமைபற்றி அகன்குறிப்பை யேது வாக்கியுங்கூறினர். வில்லியாகுறிப்பு அவனிளைய வில்வணக்கத்தின்மே னிற்றலான், ஒன்னுரதி றெறிப்பும் அவரிளைய சொல்வணக்கத்தின்மேலதா யிற்று. இதுவந் தீங்கு குறித்த வணக்கமென்றே கொண்டஞ்சிக் காக்கவென்ப தாம். இவை மூன்றுபாட்டாலும் அவரைச் சொல்லாற் றெளியற்கவென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வில்வணக்கம் - வில்லினது வணக்கம், தீங்கு குறித்தமையால் - (ஏற்றவர்க்கு) தீமைசெய்தலைக் குறித்தமையால், ஒன்னர்கண் - பகைவரிடத்தே (பிறக்கும்), சொல் வணக்கம்-சொலலினது வணக்கத்தையும், கொள்ளற்க - (நமக்கு நன்மைசெய்தலைக் குறித்ததென்று) நினையாதிருக்கவேண்டுவர்.

அ. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார்
அழுதகண் ணீரு மனைத்து.

(பரி-ரை.) எ-து.—ஒன்னர் குறிப்பைஞரை வல்லார்க்கு அவர் தொழுதகையகத்தும் படைக்கலம் மறைத்திருக்கும் அவரழுதகண்ணீரும் அவ்வாறே அது மறைத்திருத்தற் கிடனும், எ-று.

தாம் நட்பென்பதனைத் தங்கையானும் கண்ணனும் தேற்றிப் பின் கோறற்கு வாகவிருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வழித் தேற்றுகின்ற பொழுதே அவற்றுளளே தோன்றுமென்பார், ஒகுகுமென்றார். பகைவர் தம்மெனமைகாட்டிய தொழிலுமழினும், அவர்குறிப்பையே கோக்கிக் காக்க வென்பதாம். இதனுல் ஆவரைச் செயலாற் தெளியற்கவென்பது கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—(பகைவர்குறிப்பை அறியவல்லவர்க்கு) ஒன்னர் - பகைவர், தொழுத கையுள்ளும் - கும்பிட்ட கையுள்ளும், படை - ஆயுதமானது, ஒடுங்கும்-மறைந்திருக்கும்; அழுதகண்ணீ ரும் - (அவர்) அழுதகண்ணீ நும், அனைத்து - அப்படியே அது மறைந்திருத்தற்கு இடமாம்.

கூ. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

(பரி-ரை.) எ-து,—பகைமை தோன்றுமற் புறத்தின்கண நட்பினை மிகச் செய்து அகத்தின்கட் டம்மையிகழும் பகைவரைத் தாமும் அந்நட்பின் கண்ணேநின்று புறத்தின்கண அவர் மகிழும்வண்ணஞ் செய்து அகத்தின்கண் அது சாம்வண்ணம், ! பாருந்தறபான்மை யுடைத்து அரசநீதி, எ-று.

நின்றென்பதனுலும் அரசநீதியென்பதனுலும் அவாய்நிலையான் வந்தன. அக னென்று புறனென்றுதல் ஒருவர்க்குத் தகாதெனினும் பகைவர் மாட்டாயிற் றகுமென்பது நீதிநூற்றுணபென்பார், அதன்மேல்வைத்துக் கூறினர். சாவ வென்பதனிற்றிலே விகாரத்தாற்றொக்கது, ("தோட்டின்வாய்சசாக்குத்தி" என்புழிப்போல. எள்ளுவாரைப் புல்லலினைக் கூட்டுக.

(தே - ப - ரை.)—(அரசநீதியானது) மிகச்செய்து - (புறத் திலே நட்பை) மிகச்செய்து, தம் எள்ளுவாரை - (உள்ளே) தம்மை இகழும் பகைவரை, நட்பினுள் - (தாமும்) அந்நட்பினிடத்தே நின்று, நகச்செய்து - (புறத்திலே அவர்) மகிழும்படிசெய்து, சாப் புல்லல் பாற்று - (உள்ளே அது) சாம்படிற்குப் பொருந்துந் தன்மை யுடைத்து.

கo. பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட்பொரீஇ விடல்.

(பரி-ரை.) எ-து,—தம்பகைவர் தமக்கு நட்டாராயொழுகுங்காலம் வந்தால் தாமும் அவரோடு முகத்தால் நட்புசெய்து அகத்தால் அதனைவிட்டுப் பின்னதுவுந் தவிர்க, எ-று.

கலி, முல்லை, நி.

அக்காலமாவது தம்மானும் பகையென்ற வெளிப்பட நீக்கலாகாத வளவு. இதனானே ஆமளவெல்லாம் நீக்குகவென்பது பெற்றும். இவை யிரண்டுபாட்டானும் அங்கட்பிடை யொழுகுமாறு கூறப்பட்டது.

(தெ - ப - ரை.) பகை - (தம்) பகைவர்; கட்பு ஆம் காலம் - நட்பினராய் நடக்குங்காலம், வருங்கால் - வரும்போது, முகம் - (தாமும்) முகத்தால், நட்டு - (அவரோடு) நட்புச்செய்து, அகம் - மனத்தால், கட்பு - சிநேகத்தை, ஒரீஇ - நீங்கி, விடல் - (பின் அதையும்) விடக்கடவர்.

அசூயம் அதிகாரம்—பேதைமை.

அங்கட்பிழை யெதிர்மறுத்துப் பகைமுகத்தாற்கூறிய தொடங்கினார் அப்பகைதான் மூற்றக்கடியுங் குற்றமன்மையி னுளவாய வெருளியானும் ஐ காமத்தானும் வருவதாம். அவற்றுள் வெருளியான் வருவன முந்நதிகாரத்தானும் காமத்தான் வருவன ஒன்பதிகாரத்தானும் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாயமயக்கத்தை இருவகைப்படுத்து, இவ்விரண்டதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, மூத்தகட்பேதைமை கூறுகின்றார். அஃதாவது யாதுமறியாமை.

க. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டீதியம்போக விடல்.

(பரி-ரை.) எ-து,—பேதைமையென்று சொல்லப்படுவது ஒருவனுக்கு ஏனைக்குற்றங்க ளெல்லாவற்றினும் மிக்கதொன்று; அதுதான் யாதென்று வினவின், தனக்குங்கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பன வற்றைக் கைவிடுதல், எ-று.

கேடு - வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம் - செல்வம், புகழ், அறங்கள். தானே தன்னிருமையுங் கெடுத்துக்கோடலென்பதாம்.

(தெ - ப - ரை.)—பேதைமை என்பது - பேதைமையென்று சொல்லப்படுவது, ஒன்று - (முற்றைக் குற்றங்களிலெல்லாம் மிகுந்தது) ஒன்று, யாது எனின் - (அது) யாதென்று வினவினால், ஏதம் கொண்டு - (தனக்கு) கேடு தருமவைகளைக் கைக்கொண்டு, ஊதியம் - ஆக்கந்தருமவைகளை, போகவிடல் - கைவிடுதல்.

உ. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்குப் பேதைமை யெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது தனக்காகாத ஒழுக்கத்தின்கட் காதன்மை செய்தல், எ-று. இருமைக்கும் ஆகாவென்று தூலோர் கடிந்த செயல்களே விரும்பிச் செய்தலென்பதாம். இவை யிரண்டுபோட்டானும் பேதைமையதிலக்கணங் கூறப்பட்டது.

(தெ-ப-ரை.)—(ஒருவனுக்கு) பேதைமையுள் எல்லாம் - பேதைமை யெல்லாவற்றுள்ளும், பேதைமை - மிகுந்த பேதைமை யாவது, கை அல்லதன்கண் - (தனக்கு) ஆகாத செய்கையில், காதன்மை - ஆசையை, செயல் - செய்தலாம்.

நா நாணுமை நாடாமை நார்ன்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்.

(பரி-ரை.)— எ-து, நாணவேண்டுமவற்றுக்கு நாணுமையும் நாட வேண்டுமவற்றை நாடாமையும் யாவர்மாட்டும் முறிந்தசொற்செய லுடைமை யும் பேணவேண்டுமவற்றுள் யா தானுமேயும் பேணுமையும் பேதையது தொழில் எ-று.

நாணவேண்டுமவை-பழி பாவங்கள். நாடவேண்டுமவை - கருமங்களிற் செய்வன தவிர்வன. முறிதல் - கண்ணழிதல். பேணவேண்டுமவை - குடிப் பிறப்பு, கல்வி, ஒழுக்கமுதலாயின. இவை பேதைக்கு எஞ்ஞான்று மியல்பாய் வருதலின், தொழிலென்றார்.

(தெ-ப-ரை.)—நாணுமை - (நாணவேண்டு மவைகளுக்கு) நாணுமையும், நாடாமை - (நாடவேண்டுமவைகளே) நாடாமையும், நார் இன்மை - (யாவரிடத்திலும்) முறிந்த சொற்செயலுடைமை யும், யாது ஒன்றும் - (பேணவேண்டு மவைகளுள்) யாதொன்றை யும், பேணுமை - பேணுமையும், பேதை தொழில் - மூடனது தொழில்களாம்

ந. ஓதி யுணர்ந்தும் பிறக்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

(பரி-ரை.) எ-து,—மனமொழிமெய்க ளடங்குதற்கேதுவாய நூல்களே யோதியும், அவ்வடக்கத்தான் வரும்பயனே யுணர்ந்தும், அதனை யறியலுறப் பிறர்க்குரைத்தும், தான் அவையடங்கி யொழுகாதபேதைபோல பேதையார் உலகத்தில்லை, எ-று.

உமையுண்ணுங் கூடப்பட்டது. இப்பேதைமை தனக்கு மருந்தாய தற் றீராமையானும், வேற்றுமருந்தின்மையானும், பேதையிற் பேதை

யாரில்லென்றார். இவை யிரண்டுபாட்டானும் பேதையது தொழில் பொது வகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப.

(தே - ப - ரை.)—ஓதி - (மனமொழிமெய்கள் அடங்குதற்கு ஏதுவாகிய நூல்களை) ஓதியும், உணர்ந்தும் - (அவ்வடக்கத்தால் வரும் பயனை) அறிந்தும், பிறர்க்கு - மற்றவர்களுக்கு, உரைத்தும் - (அதனை அறியும்படி) சொல்லியும், தான் அடங்கா-தான் (அவை) அடங்கிநடவாத, பேதையின் - மூடன்போல, பேதையார் - மூடர், இல் - (உல

நி. ஒருமைசெ யெலாற்றும் பேதை யெழுமையும்
தான்புக் கழுந்து மளறு

(பரி-ரை.) எ-து,—பேதையாயினான் வரும் பிறவிகளெல்லாந் தான்புக் கழுந்தும் நிரயத்தினை இவ்வொரு பிறப்புள்ளே செய்துகொள்ள வல்ல னும், எ-று.

எல்லாப்பிறப்பும் ஏழாயடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும்மை கொடுத்தார். அழுந்துதற்கிடனாய நிரயம் ஈண்டைப்பிறப்புக்களிலுங் கொடு வினைவயத்தால் அந்நிரயத்துன்பமே யுழந்துவருதலின், எழுமையுந் தானபுக் கழுந்து மளறென்றார். முடிவில் காலமெல்லாம தான் நிரயத்துன்ப முழத்தற் கேதுவாய செடுவினைகளையே யிருது செகாலத்துள்ளே செய்துகோடல் பிறர்க் கரிதாகலின், ஆர்த்துமென்றார். இதனுள் அவன் மறுமைசெயல் கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—பேதை-மூடனானவன், எழுமையும்-(வரும்) எழுவகைப் பிறவிகளிலெல்லாம், தான் புக்கு - தான் புகுந்து, அழுந்தும் - அழுந்துதற்கிடமாகிய, அளறு - நரகத்தை, ஒருமை- இவ்வொருபிறப்புள்ளே, செயல் ஆற்றும் - செய்துகொள்ள வல் லவனாவான்.

கூ. பொய்ப்படு மொன்றே புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

(பரி-ரை.) எ-து,—செய்யுமுறைமை யறியாதபேதை ஒருகருமத்தை மேற்கொள்வானாயின், அதுவும் புனைபட்டுத் தானுந் தளைபூணும், எ-று.

புனைபடுதல்-பின் ஆகாவகை உள்ளழிதல். ஒன்றேவென்பது எண் ணிடைச்சொல். அதனையுங்கெடுத்துத் தானுமகெடுமென்பதாம். இதனுள் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—தை அறியா – செய்யுமுறைமையறியாத, பேதை – மூடனுனவன், வினை - ஒருதொழிலை, மேற்கொளின் – மேறகொள்ளுவானுயின், பொய்படும்-(அதுவும்) பாழாம்படும், ஒன்றே (அது) ஒன்றுதானே, பூனை பூலும் - (காணும்) பூனை பூலும்.

எ. ஏதிலா ராரந் தமர்பகிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

(பரி-ரை.) எ-து,—பேதையாயினுன் பெரியசெல்வத்தைத் தெய்வத்தா னெய்தியவழி; தன்னேடு ஒரியையுமில்லாதா ரிறைய, எல்லாவியைபுடைய தமராயினர் பகியாதிருப்பர், எ-று.

எல்லா ஙன்மையுஞ் செய்துகோடற் கருவியென்பது தோன்றப் பெருஞ் செல்வமென்றும், அதனைப் படைக்கு மாற்றலில்லாமை தோன்ற உற்றக் கடை யென்றும், எல்லாம் பெறுதற்குரிய ஆரெனின்றும், உணவும் பெருமை தோன்றப் பகிர்பரென்றுங் கூறினர்.

(தே - ப - ரை.)—பேதை - மூடனுனவன், பெருஞ்செல்வம்-பெரியசெல்வத்தை, உற்றுழிக்கடை - (வறுமைகால) அடைந்திடத்து, ஏதிலார் - (தன்னேடு) ஒரு சம்பந்தமுமில்லாதவர், ஆர - நிறைய, தமர்-(எல்லாச் சம்பந்தமுமுடைய) சுமமவர், பகிபபர் - பகியாகிற்பர்.

அ. மைய லொருவன் களித்தற்றுற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

(பரி-ரை.) எ-து,—பேதையாயினுன் தன்கைக்கணனே ஒன்றனையுடை மையாகப் பெற்றனுயின், அவன் மயங்குதல் முன்னே பித்தினையுடையா னெருவன் அம்மயக்கத்தின்மேலே மதுவுண்டு மயங்கினுற்போலும், எ-று.

பெறுனனவே, தெய்வத்தானன்றித் தன்னுறபெருமை பெற்றும். பேதைமையுஞ் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்வன மையலும் மதுக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோற் றலைதடுமாறு மென்பதாம். இவை யிரண்டுபாட்டாலும் அவன் செல்வமெய்தியவழிப் பயன் கொள்ளுமாறு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பேதை - மூடனுனவன், தன்கை - தன் கையில், ஒன்று - ஒருபொருளை, உடைமைபெறின் - உடைமை யாகப் பெற்றனுயின், மையல் ஒருவன் - பித்தினையுடைய ஒருவன், களித்தற்று - (அம்மயக்கத்தின்மேலே) மதுவுண்டு மயங்கியதி போலும்.

கூ. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

(பரி-ரை.) எ-ற.—பின் பிரிவுவந்துழி அஃதிருவாக்குக் தருவதொரு துன்பமில்லை; ஆகலாற் பேதையாயினுந் தம்முட்கொண்ட நட்பு மிக வினிது, எ-று.

நாடோறுங்கூடியிருந்து வருகலின், துன்பந்தாராதாயிற்று. புகழ்வார் போன்று பழித்தவாறு. இதனுள் அவரது நட்பின் சுற்றம கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பிரிவின்கண் - (பின்) பிரிவு வந்தவிடத்து, (அப்பிரிவு) தருவது - (இருவருக்கும்) தருவதாகிய, பீழை ஒன்று - துன்ப மொன்று, இல் - இல்லை, (ஆகலால்), பேதையார் கேண்மை - பேதையாயினுர் (நம்முட்கொண்ட) நட்பு, பெரிது இனிது - மிகவு மினிது

கூ. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்

(பரி-மா.) க-து, சான்றோரவையின்கட் பேதையாயினுன் புகுதல் தூயவல்ல மிருந்தகாலை யுன்பந்தரும அமளிக்கணணே வைத்தாற்போலும், எ-று.

கழுவாகாலென்பது இடக்கரடக்கு. பதனுல் அவ்வமளியும் இழிக்கப் படுமாறுபோல இவனுல் அவ்வவையும இழிக்கபபடுமெனபதாம. இதனுல் அவன் அவையிடை யிருக்குமாறு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—சான்றோர் - பெரியோரது, குழாத்து - சபையினிடத்து, பேதை - மூடனுனவன், புகல் - புகுதல், கழா அக்கால் - கழுவாதகாலை. அகத்த மிருந்த காலையென் றபடி), பள்ளியுள் – (இன்பந்தரும்) சயனத்தினிடமல; வைத்தற்று - வைத் தல் போலும்

அறம்-ம் அதிகாரம்—புல்லறிவாண்மை.

— நி ஏனைப்புல்லறிவாண்மை கூறுகின்றார். அது புல்லியவறிவினை யாடற்றன்மையென விரியும். அஃதாவது தான் சிற்றறிவினனு யிருந்தே தன்னைப் பேரறிவினனுக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிசொற் கொள் ளாமை.

க. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா தலகு

(பரி-ரை.) எ-து,—ஒருவ ுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்கவில் லாமையாவது அறிவில்லாமை; மற்றைப்பொரு ளில்லாமையோவெனின், அதனை அப்பெற்றித்தாய இல்லாமையாகக் கொள்ளார் உலகத்தார், எ-று.

அறிவென்பது ாண்டித் தலைமைபற்றி நல்லறிவின்மேனின்றது. புல்லறி வாளர் செல்வமெய்தியவழியும் இமைை மறுமைப்பயனெய்தாமையின் அதனை இன்மையுளின்மையென்றும், நல்லறிவாளர் வறுமையெய்தியவழியும் அஃதிழிவாமையின் அதனை இன்மையா வையாதென்றது கூறினார். ஈண்டுப் புல்லறிவினது குற்றங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—இன்மையுள் - (ஒருவனுக்கு) இல்லாமை பலவுள்ளும், இன்மை - மிகுந்த இல்லாமையாவது, அறிவு இன் மை - அறிவில்லாமை; பிறிது இன்மை - மற்றைப் பொருளிலா மையோவெனின், (அதனை), உலகு - உலகத்தார், இன்மையு - (அப்படிப்பட்ட) இல்லாமையாக, வையாது - கொள்ளார்.

உ. அறிவிலா னெஞ்சுவந் தீதல பிறிதியாது
மில்லை பெறுவான் ரவம்.

(பரி-ரை.) எ-து,—புல்லறி ாடையான் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின், அதற்குக் காரணம் பெறுகின்றவ னல்வினையே, வேறொன்று மில்லை, எ-று.

ஒரோவழி நெஞ்சுவந்தீதல் கூடலிற புல்லறிவாளரும் நல்வினைசெய்ப என்பார்க்குப் பெறுவான் வீழ்பொரு ளெய்தியான்போல்வதல்லது இம்மை நோக்கியாக மறுமை நோக்கியாக ாகின்றாரல்லரெனக் கூறியவாறு. கூடிற்று யின் அதற்குக்காரணமென்னுஞ் சொற்கள் அவாய் நிலையான் வந்தன. இத னால் அஃதுடையார் தம்மாட்டு நல்லனை செய்தலறியாமை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—அறிவு இலான்-புல்லறிவுடையவன், நெஞ்சு உவந்து - மனமகிழ்ந்து, ஈதல் - ஒருவனுக்கு ஒன்று) கொடுத்தல், (கூடியதாயின் அதற்குக்காரணம்), பெறுவான் - பெறுகின்றவனது, தவம் - நல்வினையே, பிறிது யாதும் இல்லை - வேறொன்றும் இல்லை.

ங. அறிவிலார் தாந்தமைப் பீழிக்கும் பிழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

(பரி-ரை.) எ-து,—புல்லறிவுடையார் தாமே தம்மை வருத்தும் வருத்தம் அது செய்தற்குரியராய தம்பகைவர்க்குஞ் செய்தலரிது, எ-று.

பகைவர் நாம் அறிந்தொன்றனைக் காலம்பார்த்திருந்து செய்வதல்லது வறுமை, பழி, பாவமுதலிய பலவற்றையும் எக்காலத்துஞ் செய்யமாட்டாமையின், அவர்க்குஞ் செய்தலரிதென்றார். இதனால் அவர்தம்மாட்டுந் தீயன செய்தலறிவன்றென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை)—அறிவு இலார் - புல்லறிவுடையவர், தாம் - தாமே, தம்மை - தங்களை, பிழித்தும் - வருத்தும், பிழை - வருத்தமானது, செறுவார்க்கும் - (வருத்துதற்குரிய) பகைவர்க்கும், செய்தல் அரிது - செய்தலரிதாம்.

ச. வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்மை
யுடையரா மென்னுஞ் செருக்கு.

(பரி-ரை.) எ-து,—புல்லறிவுடைமை யென்று சொல்லப்படுவது யாதென்றவினவின், அது தம்மைத்தாமே யாம் நல்லறிவுடையமென்று நன்குமதிக்கும் மயக்கம், எ-று.

வெண்மையாவது அறிவுமுன்றாமை. ஒண்மையெனக் காரியப்பெயர் காரணத்திற் காயிற்று. உலகத்தாரிகழ்தல் அறிந்துவைத்தும் அவ்வாறு மதித்தலான், மயக்கமென்றார்.

(தே - ப - ரை.)—வெண்மை எனப்படுவது - புல்லறிவுடைமையெனப்படுவது, யாதுயெனின் - யாதென்றவினவின், (அது) ஒண்மை உடையம் யாம் - யாம் நல்லறிவுடையோம், என்னும் - என்று (தம்மைத்தாமே) நன்குமதிக்கும், செருக்கு - மயக்கம்.

நி. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையக் தரும்.

(பரி-ரை.) எ-து,—புல்லறிவாளர் தாங கல்லாத நூல்களேயுங் கற்றாராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுகுதல், கசடறக் கற்றதொருநூலுண்டாயின், அதன் கண்ணும் பிறர்க்கு, யத்தை வினக்கும், எ-று.

வல்லதென ஏழாவது இறுதிக்கட்டொக்கது. உண்டாயினென்பது அவாய் நிலையான் வந்தது ஐயம் அதுவல்லவென்பதூஉம் இவ்வாறு கொல்லோ வென்பது.

(தே - ப - ரை.)—(புல்லறிவாளர்), கல்லாத - (தாம்) கல்லாத நூல்களேயும், மேல் கொண்டு - (கற்றவராக) மேலிட்டுக்கொண்டு,

ஒழுகல் - நடக்குதல், கசடு அற - குற்றமற, வல்லதும்-கற்றதொரு நூல் (உண்டாயின்) அதனிடத்திர், ஐயம் - சந்தேகத்தை, தரும் - (பிறருக்கு) விளக்கும்.

சு. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி

(பரி-ரை.) எ-து,—புல்லறிவாளர் தங்களிடமுள்ள குற்றங்களையறிந்து கடியாராயின், ஆடையால் அற்றமறைத்தாராக; தம்மைக் கருதுகலும் புல்லறிவாம், எ-று.

குற்றமறைத்தலாவது அவற்றை இலவாக்குதல். மறைக்கப்படுவன பலவற்றுள்ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது தாழ்ந்தொன்றனையே மறைத்து அவ்வளவாற் றம்மையு முலகமொழுங்கினராக மதித்தலும் புல்லறிவென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் அவர் தம்மை வியத்தற் குற்றங் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—(புல்லறிவாளர்); தம்வயின் - தம்மிடத்து உண்டாகும், குற்றம் - குற்றங்களை, மறையா வழி - (அறிந்து) கடியாராயின், அற்றம் - மறைக்கத்தக்க அவயவத்தை. மறைக்குலோ - (ஆடையால்) மறைத்தவராகத் தம்மை நினைத்தலும், புல் அறிவு - புல்லறிவாம்.

எ. அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு

(பரி-ரை.) எ-து —பெறுதற்கரிய உபதேசப்பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன் அவ்வுறுதியறியாமற் றானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்துகொள்ளும், எ-று.

சோருமென இடத்து நிகழ்பொருளின்மேற்றில் இடத்தின்மேனின்றது. மிக்கவருத்தம்-பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி அருமறைசோருமென்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய்சோர்ந்து பிறர்க்குரைக்குமென் றுரைத்தார். அதுபேணுமையென்னும் பேதைமை யாவதன்றிப் புல்லறிவாண்மை யன்மை யறிக.

(தே - ப - ரை)—அருமறை - பெறுதற்கரிய உபதேசப் பொருளை, சோரும் - (பெற்றாலும்) உட்கொள்ளாது போக்கும், அறிவு இலான் - புல்லறிவாளன், (அவ்வுறுதி அறியாமையால்) தானேதனக்கு - தனக்குத்தானே, பெருமிறை - மிகுந்த வருத்தத்தை, செய்யும் - செய்துகொள்ளுவான்.

அ. எவஞ்செய்கலான் முன்றேறு னவ்வுயிர்
போ மளவுமோர் கோய்

(பரி-ரை.) எ-து,—புல்லறிவாளன் தனக்குறுதியாயவற்றை அறிவுடையார் சொல்லாசிற்கவுஞ் செய்யான்; அதுவன்றித் தானுஞவும் அவை செய்வனவென்றறியான்; அவ்வியிர் யாக்கைவி னீங்குமளவும் (லத்திற்குப் பொறுத்தற்கரிய தொருகோயாம், எ-று.

உயிர் தான் உணர்த்தற்கன்மையுங் காயிருந்தும் (ன்ற யாக்கையத்தான் மருடற்றன்மைத்தாய வேறுபடிதலின் அவ்வுயிரென்னும், அதனினீங்கிய பொழுதே அதற்கு இரண்டனெளன்னு கூடுதலிற் போமளவுவென்னும், குல மலே முதலிய பொறுக்கின்ற நிலத்திற்குப் பாவயாக்கை பெரும்பொறையாய்த் துன்பஞ் செய்தவின் (ருகோயென்று கூறினர்.

(தெ - ப - ரை.)—(புல்லறிவாளன்), யாதும் - (தனக்கு உறுதியானவைகளை அறிவுடையோர்) சொல்லவும், செய்தலான் - செய்யான்; (அதுவல்லாமல்), தான் - தானுஞவும், தேறான் - (இவை செய்பவையென்று) அறியான்; அவ்வுயிர்-அந்த உயிரானது, போகம் அளவும் - (உடம்பைவிட்டு) நீங்குமளவும், (ருகோய் - (பூமிக்குப் பொறுத்தற்கரிய) ஒருநோயாம்

கூ. காணுதாற் காட்டுவான் முன்காணுன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு.

(பரி-ரை.) எ-து,—தன்னே எல்லாமறிந்தானுக மதித்தலாற் பிறரால் ஒன்றறியுந்தன்மை யிலாதானே அறிவிக்கப்படுவான் அதனுற் பழிக்கப்பட்டுத் தான் அறியானுப் முடியும்; இனி அவ்வறியுந்தன்மை யில்லாதான் கொண்டது விடாமையாற் முன்றிந்தவாற்முல் அதனே அறிந்தானுய் முடியும், எ-று.

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்முனும் இயைவதன் றென்பதாம்.

(தெ - ப - ரை.)—(தன்னே எல்லாமறிந்தவனுக மதித்தலால்) காணுதான் - (பிறரால் ஒன்றை) அறியுந் தன்மை யில்லாதவனே, காட்டுவான் - அறிவிக்கப் புகுவான், தான்காணுன் - (அவனுலே பழிக்கப்பட்டு) தான் அறியாதவனுப் முடியும்; காணுதான் - (இனி) அவ்வறியுந்தன்மை யில்லாதவன், (தான் கொண்டது விடாமையால்) தான் கண்ட ஆறு - தான் அறிந்த விதத்தால், கண்டான் ஆம் - (அதனே) அறிந்தவனுய் முடியும்.

க0. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலைகையா வைக்கப் படும்.

(பரி-ரை.) எ-து,—உயர்ந்தோர் பலரும் உண்டென்பதோர் பொருளைத் தன் புல்லறிவா னில்லையென்று சொல்லுவான் மகனென்பு கருதப்படான்; வையத் தக் காணப்படுவதோர் பேயென்பு கருதப்படும், எ-று.

கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலாக அவர் உளவென் பனபலவேனுஞ் சாரிபற்றி உணடென்பதென்றும். தானே வேண்டியகூற லால் நப்பும் வடசொல் ஸ்வாமையுமுடைமையிற் றன்யாக்கை கருத்து மக்கள் யாக்கையுட்டோன்றுதல்வல்ல தலைகையென்றுங் கூறினர். இவை நான்கு பாட்டானும் உறுசெசொற் கொள்ளாமையது குற்றம் கூறப்பட்டது

(தே- ப - ரை.)—உலகத்தார் - உயர்ந்தோர்பலராலும், உண்டு என்பது - உண்டெனப்படுகிற பொருளை, இல் என்பான் - (தன் புல்லறிவால்) இல்லையென்று சொல்லுவோன், (மனிதனென்று நினைக்கப்படான்), வையத்து - பூமியிலே, அலகை ஆ - (காணப் படுகிற) ஓர் பேயென்று, வைக்கப்படும் - நினைக்கப்படுவான்.

அசூ-ம் அதிகாரம்—இகல்.

இனி அவற்றான் வரும் வெகுளி காமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும் பான்மைத்தாகலின், அதனான் வருவன கூறுவான்றொடங்கி, மூதற்கண் இகல் கூறுகின்றார். ஆஃதாவது இருவர் தம்மூட்பொருது வலிதொலைதற் கேதுவாய மாறுபாடு.

க இகலெய்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்.

(பரி-ரை.) எ-து,—எல்லாவுயிர்கட்கும் பிறவுயிர்களோடு கூடாமை யென்னுங் தீக்குணத்தை வளர்க்குகுற்றம் இகலென்று சொல்லுவர் நூலோர், எ-று.

மக்களேயும் விலங்குகளோ டொப்பிப்பதென்பது தோன்ற எல்லாவுயிர் க்குமென்றும், * பகுதிக்குணத்தை இடைநின்று வினைத்தலிற் பகலென்னும் பண்பின்மையென்று கூறினர். கற்குணமின்மை அருத்தாபத்தியாற் றீக் குணமாயிற்று. இதனால் இகலது குற்றம கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—எல்லா உயிர்க்கும் - எல்லா உயிர்களுக் கும், பகல் என்னும் - (பிறவுயிரோடு) கூடாமையென்னும், பண்பு

---

* பகுதிக்குணத்தை" எனவும் பிரிவேசர்.

இன்மை - தீயகுணத்தை, பாரிக்கும - வளர்க்கும், நோய் - குற்றமாவது, இகல் - மாறுபாடாம், என்ப - என்று சொல்லுவர் லார்).

2. பகல்கருதிப பற்றுஞ செயினு மிகல்க ருதி
யின்னுஞ்செய் யாமை தலை.

(பரி-ரை.) எ-து,—தம்மோடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானுயினும், அவ்வினறி மாறுபடுதலைக் குறித்துத் தாமவனுக்கு இன்னுதவற்றைச செய்யாமை உயர்ந்தது, எ-று.

செய்யிற் பகைமையளவாத் தாழ்த்துவரலானும், ஒழியின் அப்பற்றுதன தாமேயோய்ந்துபோகத் தாம் உயிகிவரலானும், செயாமை தலையென்றார். பற்றுதலென்பது விகாரமாயிற்று.

(தே - ப - ரை.)—பகல் - (தம்மோடு) கூடாமையை, கருதி - கினைதது, பற்று - வெறுப்பவைகளை, செயினும் - (ஒருவன்) செய்தானுயினும், இகல் கருதி - (அவனெறி) மாறுபடுதலைக் குறித்து, இன்னு - தன்பந்தருவனவைகளை, செய்யாமை - (தாம் அவனுக்கு) செய்யாமை, தலை - உயர்ந்தது.

3. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவமில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

(பரி-ரை.) எ-து,—மாறுபாடென்று சொல்லப்படுகின்ற துன்பத்தைச செய்யு நோயை ஒருவன் தன்மனத்தினின்று நீக்குமாயின், அவனுக்கு அந் நீக்குதல் எஞ்ஞான்றும் உளனுக்கு கேதுவாய புகழைக் கொடுக்கும், எ-று.

தவலில்லாமை அருத்தாபத்தியான் அப்பொருட்டாயிற்று. தாவில்விளக்கம் வெளிப்படை. யாரு நணபராவர், ஆகவே எல்லாரசெல்வமு மெய்திக் கொடைமுதலிய காரணங்களாற் புகழ்பெறு மென்பதாம்.

(தே - ப - ரை.)—(ஒருவன்) இகல் என்னும்-மாறுபாடென்று சொல்லப்படுகின்ற, எவ்வம் - துன்பத்தைச் (செய்யும்), நோய் - நோயை, நீக்கின் - (தன்மனத்திலிருந்து) நீக்குவானுயின், (அந்நீக்குதல்), தவல் இல்லா - (எந்நாளும்) அழிவில்லாமைக்கு ஏதுவாகிய, தாவில் விளக்கம் - கெடுதலில்லாத புகழை, தரும் - (அவனுக்கு) கொடுக்கும்.

ச. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(பரி-ரை.) எ-து,—மாறுபாடென்று சொல்லப்படுகின்ற துன்பங்களெல் லாவற்றினும் மிக்கதுன்பம் ஒருவனுக் கில்லையாயின், அவ்வின்மை அவனுக்கு இன் பங்களெல்லாவற்றினும் மிக்கவின்பத்தினைக் கொடுக்கும், எ-று.

துன்பத்துட்டுன்பம்-பலரோடு பொருது வலிதொலைகலான் யாவர்க்கு மெளியனு யுறுவது. அதனை யிடையின்றியே பயத்தலின், இகலென்னுமென் ரூர். இன்பத்துளின்பம் யாவரு ஈட்பாகலின் எல்லாப்பயனு மெய்தி யுறுவது.

(தே - ப - ரை.)—இகல் எனனும் - மாறுபாடென்று சொல் லப்படுகின்ற, துன்பத்துள் - துன்பங்கள் பலவினும், துன்பம் - மிகுந்ததுன்பம், கெடின் - (ஒருவனுக்கு) இல்லையாயின், அவ்வில் லாமை), இன்பத்துள் - இன்பங்கள் பலவினும், இன்பம் - மிகுந்த வின்பத்தை, பயக்கும் - (அவனுக்கு) கொடுக்கும்

நி. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்

(பரி-ரை.) எ-து,—தம்முள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை யேற்றுக்கொள்ளாது சாய்ந்தொழுகவல்லாரை வெல்லக்கருதுந்தன்மை யுடை யார் யாவர், எ-று.

இகலெயொழிந் தொழுகல் வேந்தர்க்கு எவ்வாறருளும் அரிதாகலின் வல் லாரையென்றும், அவ யாவராக்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருது வார் யாவரு மில்லையென்று கூறினர். இவை நான்குபாட்டாலும் இகலா தார்க்கு வரும் டன்மை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—இகல் - மாறுபாடு, தம்மனத்துந் தோன் றியவிடத்து மதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை - (அதனை) மற்றுக் கொள்ளாமற் சாய்ந்து நடக்கவல்லவரை, மிகல் ஊக்கும் - வெல்ல நினைக்கும், தன்மையவர் - தன்மையையுடையவர், யார் - யாவர்.

சு. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து.

(பரி-ரை.) எ-து,—பிறரோடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு தென்று அதனைச் செய்வானது உயிர்வாழ்க்கை பிழைத்தலும் முற்றக்கெடுத லுஞ் சிறிதுபொழுதுள் உளவாம், எ-று.

மிகுதல் - மேன்மேலாக்குதல். இனிதென்பது தான் வேறல் குறித்தல். பிழைத்தல் - வழுமையா னின்றொழிதல். முற்றக்கெடுதல் - இறத்தல். இவற்

ரோடு நணித்தென்பதனைத் தனித்தனிக்கூட்டி, உம்மைகளை எதிரதும் இறந்ததுந் தழீஇய வெச்சவும்மையாக வுரைக்க. பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே யுளவா மென்பதாம்.

(தே - ப - ரை.)—இகலின் - (பிறரோடு) மாறுபடுதலினால, மிகல் - மிகுதல், இனிது என்பவன் - (எனக்கு) இனிதென்று செய்பவனது, வாழ்நாள் - உயிர்வாழ்க்கை, தவலும் - பிழைபடுதலும், நணித்து - சிறிது பொழுதிலுண்டாம்; கெடலும் - முழுதுங்கெடுதலும், (நணித்து) - சிறிது பொழுதிலுண்டாம்.

எ. மிகன்மேவு மெய்ப்பொருள் காணு நிகன்மேவு
மின்ன வறிவி னவர்.

(பரி-ரை.) எ-து,—இகலோடு மேவுதலையுடைய இன்னுவறிவினையுடையார் வெற்றிபொருந்துதலையுடைய நீதிநூற்பொருளே யறியமாட்டார், எ-று.

இன்னுவறிவு-தமக்கும் பிறாக்குந் தீங்கு பயக்குமறிவு. வெற்றவழி நின்றார்க்கு உளதாவது காணப்படும் பயத்தற்காகலின், மெய்ந்நூலென்பட்டது. இகலால் அறிவு கலங்குதலின், காணுவென்றார். இவை பிரண்டுபொட்டானும் இகலினார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—இகல் மேவும் - மாறுபாட்டோடு பொருந்துதலையுடைய, இன்னு - துன்பஞ்செய்கின்ற, அறிவினவர் - அறிவையுடையவர், மிகல் மேவும் - வெற்றி பொருந்துதலை யுடைய, மெய்ப்பொருள் - நீதிநூற்பொருளை, காணார் - அறியமாட்டார்.

அ. இகலிற் கெதிர்சாய்த லாகாத மற்றஃ
மிகலூக்கி னூக்குமா ங்கே டு.

(பரி-ரை.) எ-து,—தன்னுள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை யெதிர்த்தலையொழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம்; அதுசெய்யாது அதன்கண் மிகுதலை மேற்கொள்ளுமிடத்துக் கேடுந் தன்கணவருதலை மேற்கொள்ளும், எ-று.

எதிர்தல் எற்றுக்கோடல். சாய்ந்தபொழுதே வருதலின், சாய்தல்ஆக்க மென்றார். இகலிற்கெனவும் அதனையெனவும் வற்புறுமைமயக்கம்.

(தே - ப - ரை.)—இகலிற்கு - (தன்னுள்ளத்து) மாறுபாடு தோன்றியவிடத்து, எதிர் சாய்தல் - (அதற்கு) எதிரிடுதலையொழிதல், ஆக்கம் - (ஒருவனுக்கு) ஆக்கமாம்; அதனை - அம்மாறு பாட்

டிலே, மிகல் - மிகுதலே, ஊக்கின் - மேற்கொள்ளுபவனின், மகிழ்கேடும், ஊக்கும் ஆம் - (தன்னிடத்து வருதலே) மேற்கொள்ளும்.

கூ. இகல்காணு னுக்கம் வருங்கா லதனி
மிகல்காணும் கேடு தரற்கு.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் தனக்குக்கம் வரும்வழிக் காரணமுண்டா யினும் இகலே நினையான, தனக்குக் கேடுசெய்துகோடற்கட் காரணமின்றியும் அதன்கண மிகுதலே நினைக்கும், எ-று.

இகலான் வருங்கேடு பிறரா னன்றென்பது தோன்றத் தரற்கென்றார். நான்காவதும் இரண்டாவதும் எழாவதன்கண்வந்தன. ஆக்கக்கேடுகட்கு முன் னடப்பன இகலினது இனமை உண்மைக ளென்பதாம்.

(தே - ப - ரை)—(ஒருவன்) ஆக்கம் வருங்கால்-(தன்னிடத்து) ஆக்கம் வரும்போது, (காரணம் உண்டாயினும்), இகல் - மாறு பாட்டை, காணுன் - நினையான் ; கேடு தரற்கு - (தனக்கு) கேடு செய்துகொள்ளுமிடத்து, (காரணம் இல்லாதிருந்தும்), அதனி - அதனிடத்தே, மிகல்-மிகுதலே, காணும்-நினைப்பான்.

கஅ. இகலான மின்னுத வெல்லா நகலான
நன்னய மென்னுஞ் செருக்கு.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்கு மாறுபா டொன்றினே இன்னுதன வெல்லாம் உளவாம் ; நட்பொன்றினே நல்லநீதி யென்னும் பெருஞ்செல்வம் உளதாம், எ-று.

இன்னுதன-வறுமை, பழி, பாவ முதலாயின. நகல்-மகிழ்தல். நகலென் பதுஞ் செருக்கென்பதும் ததந்தங் காரணங்கட் காயின. நயமென்னுஞ் செருக்கெனக் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார். இவை மூன்றுபாட் டானும் அவ்விருமையுங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—இகலான் - மாறுபாடொன்றினாலே, இன் னுத எல்லாம் - துன்பஞ் செய்பவையெல்லாம், ஆம் - உண்டா கும் ; நகலான் - நட்பொன்றினாலே, நல் நயம் என்னும் - நல்ல நீதி யென்னும், செருக்கு - பெருஞ்செல்வம், ஆம் - உண்டாகும்.

அஎ-ம் அதிகாரம்—பகைமாட்சி.

அஃதாவது அறிவின்மை முதலிய குற்றங்களுடைமையாற் பகையை மாட்சிப்படுத்தல். அரசர்க்கு எவ்வாற்றானும் பகைமின்மை கூடாமையின் மேற் பொதுவகையான் விலக்கப்பட்ட இகலே ஈண்டுச் சிறப்புவகையான் விதிக்கின்றாராகலின்; இஃது, முன்பின் வைக்கப்பட்டது

க. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை

(பரி-ரை.) எ-து,—தம்மின் வலியார்க்குப் பகையாயெதிர்த்தலே ஒழிக; ஏனை மெலியார்க்குப் பகையாதலே ஒழியாது விரும்புக, எ-று.

வலியாரென்புழித் தூணைவலியு மடங்கலின், மெலியாரென்புழித் தூணை வலியின்மையு மடங்கென்பதும். அஃது ஈண்டான் படை பொருணமுதலிய வேற்றுமைத்தூணையும் நல்லமிவுடைமை நீதிநூல்வழி யொழுகன் முதலிய ஒற்றுமைத் தூணையுமென விரண்டாம் அவ்விரண்டுமில்லாரை வெல்வார்க்கு வலி தொலைபாமையின் அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. சிங்கநோக்காகிய இதனுட் பகைமாட்சி பொதுவகையாற் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வலியார்க்கு - (தம்மின்) வலியவர்க்கு, மாறு ஏற்றல் - பகையா யெதிர்த்தலே, ஓம்புக - ஒழியக்கடவர்; மெலியார்மேல் - (மற்றை) மெலியவர்க்கு, பகை - பகையாகுதலே, ஓம்பா - ஒழியாமல், மேக - விரும்பக்கடவர்.

உ. அன்பிலனன்ற துணைநிலன் றுன்னுவா
னென்பரியு மேதிலான் றுப்பு

(பரி-ரை.) எ-து,—ஒருவன் தன் சுற்றத்தின்மே லன்பிலன், அன்றி வலிய துணையிலன், அதன்மே றுன்னுவதிலன், அப்பெற்றியான் மேல்வந்த பகைவன் வலியினை யாதானுந் தொலைக்கும், எ-று.

சுற்றமும் இருவகைத்துணையும் தன்வலியுமிலனாயின், அவன்மேற் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையா தென்பதாம். துவ்வான்-துவ்வி னைசெய்யான்.

(தே - ப - ரை.)—(ஒருவன்) அன்பு இலன் - (தன் சுற்றத்தார் மேல்) அன்பிலன், ஆன்ற துணை இலன் - (அதற்கேயன்றி) வலிய துணையிலன், தான் துவ்வான் - (அதன்மேல்) தான்வலியிலன், (அப்படிப்பட்டவன்), ஏதிலான் - (தன்மேல்வந்த) பகைவனது, துப்பு - வலிமையை, என் பரியும் - எப்படிதொலைப்பான்.

சு. அஞ்சு மறியா னமைவில னீகலான்
நஞ்ச மெளியன் பகைக்கு.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாதிற்சம், அறியவேண்டுமவற்றை யறியான், பிறரோடுபொருத்தமிலன், இவற்றின் மேலும் யாவர்மாட்டும் இவறன்மாலையன், இப்பெற்றியான் பகைவர்க்கு மிக வெளியன், எ-று.

* நஞ்சமெளியனென்பன ஒருபொருட்பன்மொழி. இக்ஙான்கு குற்றமுமுடையான் பகையின்றியு மழியுமாகலின், நஞ்சமெளியனென்றார்.

(தே - ப - ரை.)—(ஒருவன்) அஞ்சும் - (அஞ்சவேண்டாத வைகளுக்கு) அஞ்சுவான், அறியான் - (அறியவேண்டுமவைகளை) அறியான், அமைவு இலன் - (பிறரோடு) பொருத்தமிலன், ஈகலான் - (இவைகளின்மேலும் யாவரிடத்தும்) உலோபகுணமுடையன், (இப்படிப்பட்டவன்), பகைக்கு - பகைவர்க்கு, நஞ்சம் எளியன் - மிகவெளியனாவான்.

ச. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் வெகுளியினீங்கான், அதுவேயன்றித் தான் நிறையுடையனல்லன், அவன்மேற்சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கு மெளிது, எ-று.

‡ நிறை - மறைபிறரறியாமை. வெகுடன்மாலேஞயகலானும், மறை வெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியுமறிந்து சேறல் வேண்டாதாயிற்று. இனி இனிதென்று பாடமோதி அவன்பகைமை இனிதென்றுரைப்பாருமுளர்.

(தே - ப - ரை.)—(ஒருவன்) வெகுளி நீங்கான் - கோபத்தினின்றும் நீங்கான், நிறை இலன் - (அதுவேயன்றிக்கான்) நிறையுடையனல்லன், (அவன்மேமேல் செல்லுதல்), எஞ்ஞான்றும் - எக்காலத்தும், யாங்கணும் - எவ்விடத்தும், யார்க்கும் - எவருக்கும், எளிது - எளிதாம்.

ரு. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

* நஞ்சுக்கினாவி யெண்மை பொருட்டே. தொல்காப்பியம், சொல், உகசு.
‡ நிறை யெனப்படுவது மறைபிறரறியாமை. கலி, நெய்தல், கசு.

(பரி-ரை.) எ-று,—ஒருவன் நீதிநூலை போதான், அது விதித்த தொழில் களைச் செய்யான், தனக்கு வரும் பழியைப் பாரான், தான் பண்புடைய னல்லன், அவன் பகைவர்க்கு அப்பகைமை யினிது, எ-று.

தொல்லோ ரடிப்பட்டு வழங்கிவந்த தாகலான் வழியென்றும், நப்பாது பயன்படுதலின் வாய்ப்பனவென்றும், நிகழ்ந்த களைடையான் முனே யழி தலிற் பற்றார்க் கினிதென்றுங் கூறினார்.

(தே - ப - ரை.)—(ஒருவன்) வழி நோக்கான் - நீதிநூலைக் கல்லான், வாய்ப்பன செய்யான் - (அது) விதித்த தொழில்களைச் செய்யான், பழி நோக்கான் - (தனக்குவரும்) பழியைப்பாராள், பண்பு இலன் - குணமுடையனல்லன், பற்றார்க்கு இனிது - (அவன் பகைமை) பகைவர்க் கினிது.

கூ. காணைச் சினத்தான் கழிபெருங் காமத்தாற்
பேணுமை பேணப் படும்

(பரி-ரை.) எ-து,—தன்னையும் பிறரையுந் தானறியாமைக் கேதுவாகிய வெகுளியை யுடையான் யாவன், மேன்மேல் வளர்ந்த மிக்க காமத்தை யுடையான் யாவன், அவர்தம் பகைமை விரும்பிக் கொள்ளப்படும், எ-று.

காணுதல் தினமென்பது விகாரமாயிற்று. முன்னுணுக்கு யாவரும் பகை யாகலானும், எஞ்ஞான்றுக்குக் காரியந் தோன்றுமையானும், தாமீம யிவ்வென் பதுபற்றி, இவர்பேணுமை பேணப்படு மென்றார்.

(தே - ப - ரை.)—காணாை சினத்தான் - தன்னையும் பிறரை யும்) அறியாமைக்கு ஏதுவாகிய கோபத்தையுடையவன், கழிபெருங் காமத்தான் - மேலுமேலும் வளர்ந்த மிகுந்த காமத்தையுடை யவன், (ஆகிய இவரது). பேணுமை - பகைமை, பேணப்படும் - விரும்பிக்கொள்ளப்படும்

எ. கொடித்துங் கொளல்வேண்டி மன்ற வடித்திருந்து
மாணுத செய்வான் பகை.

(பரி-ரை.) எ-து,—வினையைத் தொடங்கியிருந்து அதற் கேலாதன செய்வான் பகைமைமையை சிலபொரு ளழியக் கொடுத்தாயினுங் கோடல் ஒரு தலையாக வேண்டும், எ-று.

ஏலாதன-மெலியஞ்வைத்துத் தூணிதலும், வலியஞ்வைத்துத் தணி தலும் முதலாயின. அப்பொழுது அழனும் சிலபொருளழியினும் பின் பல பொரு ளெய்தற்கு ஐயமின்மையின், கொளல்வேண்டி மன்ற வென்றார். இவை யாறுபாட்டானும் அது சிறப்புவகையாற் கூறப்பட்டது.

(தே - ப ரை.)—அடுத்து இருந்து - (தொழில்) தொடங்கியிருந்து, மாறை - (அதற்கு) ஏற்காதவைகளை, செய்வான் - செய்பவனது, பகை - பகைமையை, தொடித்தும் - (சில பொருள் அழிய) கொடுத்தாயினும், மன்ற - நிரயமாக, கோளல்வேண்டும் - கொள்ளல்வேண்டும்

அ. குணனிலனெப்ப குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனு மேமமாப் புடைத்து.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் குண னொன்று மிலனுய் உடைய குற்றம் பலவாயவழி அவன் தோணிலனும்; அவ் விலனுகருனே அவன் பகைவர்க்குத் துணையாதலை யுடைத்து, எ-று.

குணம் நிறைமாட்சியு ' நொல் லியன. குற்றம்-இவ்விகாரத்துச் சொல்லியனவும் மாறு மதத்தனமையனவும். துணை-சுற்றம், கூட்டு, பொருள், படை முதலாயின. பகைவர்க்கு இவற்றுளதாம் பயன்றுனே யுளதாகலின், ஏமாப்புடைத்தென்றார். இலனுயினுஞ் செப்தெனைசசம் உடையவென வந்த பெயரெசசக்குறிப்புக் கொண்டது.

(தே - ப - ரை.)—(ஒருவன்) குணன் இலன் ஆய் - குண மொன்றுமிலனுய், குற்றம் பல ஆயின் - (உடைய) குற்றம் பல வாகியவிடத்து, இனன் இலன் ஆம் - (அவன்) துணையில்லாதவனுகும்; (அவ்விலனு தகைமை), மாற்றார்க்கு-(அவன்) பகைவர்க்கு, ஏமாப்பு உடைத்து - துணையாகுகையை யுடையது

சு. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

(பரி-ரை) எ-து,—நீதியை யறிதலில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றுல், அவரைச் செறுவார்க்கு உயர்ந்த வின்பங்கள் நீங்கா, எ-று.

உபாயமறிதலும் அறிந்தாற் செய்து முடிக்குந் திணைமையு மில்லாதாரே பகைவராதல் கூடாமையிற பெறினென்றும, அவரை யறிந்து மேற் சென்ற பொழுதே பகையின்மையுஞ் செல்வமும் ஒருங்கே யெய்தலிற் சேணுடை யின்பங்கள் இகவாவென்றுங கூறினுர்.

(தே - ப - ரை.)—அறிவு இலா - (நீதியை) அறிதலில்லாத, அஞ்சும் - பயப்படுகின்ற, பகைவர் - பகைவரை, பெறின் - பெற்றுல், செறுவார்க்கு - (அவரை) வெல்வார்க்கு, சேண் - உயர்வுள்ள, இன்பம் - இன்பங்கள், இகவா - நீங்கா.

கo. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லாஅ யொல்லா தொளி.

(பரி-ரை.) எ-து,—நீதிநூலைக் கல்லாதானேடு பகைத்தலான் வரும் எளிய பொருளே மேவாதானை எஞ்ஞான்றும் புகழ் மேவாது, எ-று.

சிறுபொருள்-மூயற்சி சிறிதாய பொருள். நீதியறியாதானை வேறல் எளி தாயிருக்கவும் அதுமாட்டாதானை வெற்றியான் வரும் புகழ் கூடாதென்ப தாம்; ஆகவே, இசசிறிய மூபற்சியாற் பெரிய பயனெய்துத வென்றவா றாயிற்று. இதற்குப் பிறவெல்லாம் அதிகாரத்தோடு மாறுதன்மேலும் ஓர் பொருட்டொடர்பு படாம லுரைத்தார். இவை மூன்றுபாட்டானும் அதனி னுய பயன் கூறப்பட்டது.

(ப-ரை)—கல்லான் - (நீதி நூல்களை) கல்லாதவ னேடு, வெகுளுஞ் - பகைத்தலால் வருஞ், சிறு பொருள் - எளிய பொருளை, ஒல்லாஅ - அடையாதவனை, எஞ்ஞான்றும் - எந் நாளும், ஒளி - புகழ், ஒல்லாது - அடையாது.

அஅ-ம் அதிகாரம்—பகைத்திறந் தெரிதல்.

அஃதாவது மாணுத பகையை ஆக்குதற் குறுதறமும், மூன் ஆங்கின்றபகை யுள் நட்பாக்கற்பாலதும், நொதும லாக்கற்பாலதும், அவற்றின்கட் செய்வ தும், னேக்கலைதற்பால தன்கட்செய்வனவும், கோயும் பருவமும், கலை யாக்காற்பயிழுக்கும் என்று இதனிறங்களை ஆராய்தல். இரட்டுறமொழித லென்பதனுற் பகையது நிறமும் பகையிடத்தாக்குந் நிறமுமென விரிக்கப் பட்டது. இவையெல்லாம் மாணுப் பகையவாகலின், இது பகைமாட்சியின் பின் வைக்கப்பட்டது.

க. பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று

(பரி-ரை.) எ-து,—பகையென்று சொல்லப்படுந் தீமை பயப்பதனை ஒரு வன் விளையாட்டின்கண்ணே யாயினும் விரும்புத லியற்கைத்தன்றென்று கூறும் நீதிநூல், எ-று.

மாணுத பகையை யாக்கிக்கோடல் எவ்வாற்றானுங் தீமையே பயத்தலிற் பண்பிலதென்றும், அதனை விளையாட்டினகண் வேண்டினுஞ் செற்றமே விளை த்து மெய்யாமாகலின் நகையேயு மென்றும், வேண்டாமை தொல்லை யோரது துணிவென்பார் நீதிநூல்மேல் வைத்துங் கூறினர். அப்பெயர் அவாய் நிலையான் வந்தது.

(தே - ப - ரை.)—(ஒருவன்) பகை என்னும் - பகையென்று சொல்லப்படும், பண்பு இலதனை - தீமையுண்டாகுவதனை, நகையேயும் - விளையாட்டிடத்தேயாயினும், வேண்டல் பாற்று அன்று - விரும்புதற்றன்மையையுடைத்தன்று, (நீதிநூல்).

உ வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

(பரி-ரை.) எ-து.—ஒருவன் வில்லே ஏராகவுடைய உழவரோடு பகை கொண்டானுமிறும், சொல்லே ஏராகவுடைய உழவரோடு பகைகொள்ளா தொழிக, எ-று.

சொல் ஆகுபெயரான் நிகழ்ந்தமேலின்றது. வீரம் சூழ்ச்சி யென்னும் ஆற்றல்களுள் வீரமே யுடையாரோடு பகைகொண்டாற் கேடுவருதல் ஒருதலை யன்று, வக்கதாயினுங் கணக்கியாம்; எனைசூழ்ச்சி யுடையாரோடாயிற் தன் வழியிலுள்ளார்களுந் தப்பாது வருதலின், அது கொளினுமிது கொள்ளற்க வென்றார். உம்மையான அதனது மாகாமை பெறுதும். இரண்டு மூடையாரோடு கொள்ளலாகாமை சொல்லவேண்டா வாயிற்று. உருவக விசேடம்.

(தெ - ப - ரை.)—(ஒருவன்) வில் ஏர் - வில்லே ஏராகவுடைய, உழவர் - உழவரோடு, [வீரர் என்றபடி]. பகை கொளினும் - மாறுகொண்டாலும் சொல் ஏர்-சொல்லே ஏராகவுடைய, உழவர்-உழவரோடு, [ஆலோசகர்கள் என்றபடி]. பகை - விரோதத்தை, கொள்ளற்க - கொள்ளாதொழிவானாக.

ங. எழுற்றவரினும் மேறை கழியனுப்பர்
பல்லார் பகைகொள் பவன்.

(பரி-ரை.) எ-து,—தான் தனியனாயிருந்துப் பலரோடு பகைகொள் வான் பித்தாகுமிறும் அறிவிலன், எ-று.

தனிமை-சுற்றம் கட்புப் படைமுதலிய வின்மை. மபக்கத்தால் ஒப்பாரா யினும் எழுற்றவர் அதனுற் றீங்கெய்தாமையின், தீங்கெய்துதற்குமுடைய இவனை அவரினும் எழையென்றார். தீங்காவது தனிமைபுள்ளியும் வேறல் ஐய மாயிருக்க அஃதின்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறுவேறு பொருதற்கண்ணும் ஒருங்கு பொருதற்கண்ணும் அழிந்தேவிடுதல். இவை மூன்று பாட்டானும் பகைகோடற் குற்றம் பொதுவினுஞ் சிறப்பினுங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—தனியன் ஆய் - (தான்) தனியனாயிருந்து கொண்டு, பல்லார்-பலரோடும், பகைகொள்பவன் - மாறுபடுபவன், எழுற்றவரினும் - பித்தங்கொண்டவரினும், எழை - அறிவிலன்.

சு. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கட் டங்கிற் றுலகு.

(பரி-ரை) எ-து,—வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச செய்துகொண டொழுகும் இயல்பினையுடைய அரசனது பெருமை யுள்ளே அடங்கிற்று இவ்வுலகு, எ-று.

வேண்டிய வழியென்பது ஆக்கந்தான் வந்த ழி. வேறுபடுத்தல்-பகைநிலை மையி னீக்கல். ஒழுகல்-நிகழ்தொழுகல. பெருமை-பொருள் படைஎன இருவகைத்தாய ஆறறல். அடங் குதற்கு எஞ்ஞான்றுந் தினிபின்மை பின், அது தணிவுபற்றித் தங்கிற தெனகுர.

(தே - ப - ரை)—பகை - பகைமை, நட்பு ஆ கொண்டு ஒழுகும் - (வேண்டி பபோது வேறுபடுத்தித் தனக்கு) நட்பாகச செய்து கொண்டு நடக்குர், பண்பு உடைபாளன் - இயல்பையுடைய அரசனது, தகைமைக்கண் - பெருமைபுள்ளே, உலகு - உலகம், தங்கிற்று - அடாகிளமாயிருக்கிற்றது

நி. தன்றுணை யின்றுற் பகையிரண்டாற் முனெருவ
னின்றுணையாக் கொள்க வற்றி னெனறு

(பரி-ரை.) எ-து,—தனக்குவமை துணையோவெனின் இல்லை; கலிவு செய்யும பகையோவெம்பின் இரண்டு; அங்ஙனமாப் பின்றவி ஒருவனஞ்சிய தான் அப்பகையிரண்டனுட் பொருந்தியதொன்றை அப்பொழுதைக்கு னிய துணையாகச செய்துகொளக, எ-று.

பொருந்திய-எனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது அவ்வெல்லும் பொழுது திரிபன்குகச செய்துகொளகவென்பார், இன்றுணையா வென்றார். ஏகள்-அசை. இவை யிரண்டுபோட்டாலும் கட்பாக்கற்பாலது கூறப்பட்டது.

(தே - ப - ரை)—தன் துணை-தனக்கு உதவுக் துணையோவெ னில், இன்று - இல்லை ; பகை இரண்டும் - (கலிவுசெய்யும்) பகை யாவெனில் இரண்டு (இப்படியிருக்கையில்), தான் ஒருவன் - ருவனுஞ்சியதான, அவற்றின் - அப்பகை யிரண்டனுள், ஒன்று - பொருந்தியதாகிய) ஒனறை, இன் துணையா - (அக்காலத்துக்கு)னிய துணையாக, கொள்க - (செய்து) கொள்ளக்கடவன்.

சூ. மேதறிஞர் தேறு விடிலு மழிவின்கட்
டேறுன் பகாஅன் வீடல்.

(பரி-ரை.) எ-து,—பகைவனை முன் தெளிந்தகாலுமினுந் தெளிந்திலனுமி யும் தனக்குப் புறத்து ஒருவனையாற் முழ்வு வந்துழிக் கூடாது நீக்காது விடையேவிட்டு வைக்க, எ-று.

மூன் தெளிர்தானுயினும் அப்பொழுது கூடாதொழிகவென்றது, உள் ளாய் நின்று கெடுத்தல் நோக்கி. தெளிர்திலனுயினும் அப்பொழுது நீக்கா தொழிக வென்றது, அவ்வழிவீற்குத் துணைபாதல் நோக்கி. இதனுன் நொதுமலாக்கற் பாலது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—(பகைவன்) தேறினும் -(முன்) தெளிர்தானு யினும், தேறுவிடினும் - தெளிர்திலனுயினும், அழிவின்கண்-(தனக் குப் புறத்தொரு தொழிலால்) தாழ்வு வந்தவிடத்து, தேறுண் - கூடானுகியும், பகான் - நீங்கானுகியும், விடல் - (நடுவே) விட்டு வைக்கக்கடவன்.

மா. நோவற்க நொந்த தறிபார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

(பரி-ரை.) எ-து,—நொந்ததனைத் தாமாக வறியாத நட்டார்க்குத் தன் னேவு சொல்லற்க; வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்மாட்டு அவ்வலியின் மையை மேலிட்டுக் கொள்ளற்க, எ-று.

நோவென்னும் முதனிலைதொழிற்பெயர் ாண்டு அதுசொல்லுதற்க ணுயிற்று. பகைவர்கட்டவிர்வகூறுவார், நட்டார்கட்டவிர்வதும் உடன் தமினுர். இதனுல் அவ் விருபகுதிக்கணணுஞ் செய்வது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—நொந்தது - நொந்ததனை, அறியார்க்கு - (தாமாக) அறியாத நட்பினர்க்கு, நோவற்க - (தன்) நோவுசொல்லா திருக்கக்கடவன் ; மென்மை - வலியில்லாமையை, பகைவர் அகத்து - (அதைப் பார்த்திருக்கும்) பகைவரிடத்து, மேவற்க - மேலிட்டுக் கொள்ளா திருக்கக்கடவன்.

ச வலையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

(பரி-ரை.) எ-து,—தான் வினைசெய்யும் வகையை அறிந்து அது முடித் தற்கேற்பத் தன்னைப் பெருக்கி மறவிபுகாமற் றன்னைக் காக்கவே, தன்பகை வர் மாட் டெதாய களிப்புக் கெடும், எ-று.

வகை-வலியுளுய்த் தானெதிரே பொருமாறும், மெளியனுயவளவிற் போர்விலக்குமாறும் முதலாயின. பெருக்கல்-பொருள் படைகளாற் பெருகச் செய்தல். களிப்பு-இவற்றுன் வேறுமென் றெண்ணி மகிழ்ந்திருத்தல். இவ் விறுகுதலறிந்து தாமே அடங்குவ ரென்பதாம். இதனுற் கூடாத்பால தன் கட்செய்வன கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வகை அறிந்து - (தான் தொழில்செய்யும்) பகையை அறிந்து, தன் செய்து - (அது மூடிக்கத்திற்கு ஏற்ப) தன் னப்பெருக்கி, தன் காப்ப - (மற்றி அடையாமல்) தன்னைக் காக் வே. பகைவர்கண் - (தன்) பகைவரிடத்து; பட்ட - உண்டாகிய, சருக்கு - களிப்பு, மாயும் - கெடும்.

கூ. இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

(பரி-ரை.) எ-து —களையவேண்டுவதாய முண்மரத்தை இளைதாய நிலை மைக்கட் களைக; அன்றியே முதிர்ந்த நிலைமைக்கட் களையலுறிற் களைவார் கையினை அது தான் களையும், எ-து.

களையப்படுவதாய தம்பகையை அது மெலிதாய காலத்தே களைக, அன் றியே வலிதாயகாலத்துக் களையலுறிற் றம்மை அது தான்களையு மென்பது தான்றன்னமையின், இவ பிறிதுமொழிதல். இதனுள் களையும் பருவங் றப்பட்டது.

(தே - ப - ரை.)—முள் மரம் - (களையவேண்டுவதாகிய) ள்ளுமரத்தை, இளைதாக - இளைதாகிய நிலையிலே, கொல்க - களை க்கடவர்; (அல்லாமல்). காழ்த்த இடத்து - முதிர்ந்த நிலையில், களையத் தொடங்கினால், களையுநர் - களைபவரது, கை - கையை, கால்லும் - (அது தானே) களையும்.

கூ. உயிர்ப்ப வளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

(பரி-ரை.) எ-து —தம்மொடு பகைப்பாரது சருக்கினைக் கெடுக்கலா யிரு ந இகழ்ச்சியான் அது செய்யாத வரசர் பின் உயிர்க்குமாத்திரத்திற்கும் உள ல்லர் ஒருதலையாக, எ-து.

அவர் வலியராய்த் தம்மைக் களைதல் ஒருதலையாகலின், இறந்தாரேயாவ ரன்பதாம். அவருயிர்த்த துணையானே தாமிறப்பரெனினு மமையும். இத ற்குக் களையாவழிப்படு மிமுக்குக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—செயிர்ப்பவர் - (தம்மோடு) பகைப்பவரது, செம்மல் - தருக்கை, (கெடுக்கலாயிருக்க), சிதைக்கலா தார்-(இகழ்ச் யால்) கெடுக்காதவரசர், உயிர்ப்ப - (பின்) மூச்சுவிடுமாத்திரத் ும், மன்ற - நிச்சயமாக, உளர் அல்லர் - இருக்கின்றவரல்லர்.

அகம் அதிகாரம்—உட்பகை.

அமைச்சாவது புறப்பகைக்கு இடனஞ்சிக் கொடுத்து அது வெல்லுந்துணையும் உள்ளாய் நிற்கும் பகை. இதுவும், கோயற்படுவதன் பலகாலின், பகைத்திறந் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

க. நிழறீரு மின்னுக வின்னு தமர்நீரு
மின்னுவா மின்னு செயின்.

(பரி-ரை.) எ-து;—ஒருவனுக்கு அனுபவிக்க வேண்டுவனவாய நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய் செய்வன இன்னுவாம்; அதுபோலத் தழுவ வேண்டுவனவாய தமரியல்புகளும் முன் இனியவேனும் பின் இன்னு செய்வன இன்னுவாம், எ-று.

நோய் - பெருங்கால், பெருவயிறு முதலாயின. தமரென்றதனால் உட்பகையாதற் குரியராய் நேரிய ரென்ப தறிக. இன்னு செயல் - முன்வெளிப்படாமைபின்று துணைபெற்றவழிக் கெடுத்தல்.

(தே - ப - ரை.)—(ஒருவனுக்கு) நிழலும்நீரும் - (அனுபவிக்கப் படுவனவாகிய) நிழலும்நீரும், இன்னா - (முன் இன்புசெய்வனவாயினும் பின்) நோய்செய்யுமவை, இன்னு - இனியனவல்லவாம்; (அதுபோல), தமர்நீரும் - (தழுவவேண்டுவனவாகிய) தம்மவரியல்புகளும், இன்னு செயின் - (முன் இன்புறு செய்வனவாயினும் பின்) துன்புறு செய்யுமவை. இன்னுவாம் - இனியனவல்லவாம்.

உ. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு

(பரி-ரை.) எ-து,—வாள்போல எதிரு மென்று வெளிப்பட்டு நிற்கும் பகைவரை அஞ்சாதொழிக; அவமானம் தில்லாது கேள்போல மறைத்து நிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக, எ-று.

முன்னே யறிந்து காக்கப்படுதலான் அஞ்சற்கவென்றும், அவமானம் அறியவும் காக்கவும் படாமையிற் தெரிதல் ஒருதலை யென்பதுபற்றி அஞ்சுக வென்றுங் கூறினார். பின்செய்யும் பகையிது வுங் கொடிதாகலானும், காக்குங் காலம் அதுவாகலானும் அஞ்சப்படுவது முன்செய்த அவர்தொடர்பாயிற்று. இவை யிரண்டுபோட்டானும் உட்பகை ஆகாதென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வாள்போல் - வாள் போல (வெட்டுவோ மென்று வெளிப்பட்டுநிற்கும்), பகைவரை - பகையாளிகளை, அஞ்சற்க-அஞ்சாதிருக்கக்கடவை; (அப்படி தில்லாமல்), கேள்போல்-உறவினர்போல (மறைந்து நிற்கும்), பகைவர் - பகைவரது, தொடர்பு-நட்பை, அஞ்சுக - பயப்படக்கடவன்.

ரூ. உட்பகை யஞ்சித்கற் காக்க வுலவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

(பரி-ரை.) எ-து,—உட்பகையாயினுரை யஞ்சித் தன்னைக் காத்துக் கொண்டொழுகுக; அவ்வன மொழுகாதவழித் தனக்கோர் தளர்ச்சி வந்த விடத்துக் குயவன் மட்கலத்தையறுக்கு மருவிபோல அவர் தப்பாமற் கெடுப்பர், எ-று.

காத்தல்-அவரினையாமலும் அவர்க்கு உடம்படாமலும் பரிகரித்தல். மண்ணப் பகுக்கு மருவி மட்பகையெனப்பட்டது. பகைமை தோன்றுமல்லாயிருந்தே கீழறுத்தலின், கெடுதல் தப்பாதென்பதாம்.

(தே - ப - ரை.)—உட்பகை - உட்பகையாயினோரை, அஞ்சியந்து, தன் காக்க - தன்னைக்காத் துக்கொண்டு நடக்கக்கடவர்; அப்படி நடவாதகோபோது), உலவிடத்து - (காலத்து ஏர்) தளர்ச்சி வந்தவிடத்து, மண் பகையின் - குயவன் மட்கலத்தை அறுக்கும் யுதம்போல, மாண - தப்பாமல், தெறும் - (அவர்) கெடுப்பர்.

ரு. மனமாணு வுட்பகை தோன்றி னினமா ணை
வேதம் பலவுக் குரும்.

(பரி-ரை.) எ-து,—புறத் திருந்தியதுபோன்று அகத்திருந்தாக உட்பகை ரசனுக்கு உண்டாவதாயின், அஃது அவனுக்குச் சுற்றம் வயமாகாமைக் கதுவாகிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும், எ-று.

அவை சுற்றத்தாரை உள்ளாய் நின்று வேறுபடுத்தலும், அதனுல் அவர் வறுபட்டவழித் தான் தேறுமையும், பின் அவர்முன் வீணாவனவுமாம்.

(தே - ப - ரை.)—மனம் மாணு - (புறத்திருந்தியது போன்று) அகத் திருந்தாத, உட்பகை - உட்பகையானது, தோன்றின் - (அரசனுக்கு) உண்டாமாயின், (அது) இனம் மாணு-சுற்றம் வசப்டாமைக்கு ஏதுவாகிய, ஏதம் பலவும் - பல குற்றங்களையும், ரும் - (அவனுக்கு) உண்டாக்கும்.

ரு. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுக் குரும்.

(பரி-ரை.) எ-து,—புறத்து உறவுமுறைத் தன்மையோடுகூடிய உட்பகை ரசனுக்கு உண்டாவதாயின், அஃது அவனுக்கு இறத்தன் முறையோடு டிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும், எ-று.

அவை புறப்பகைத் துணையாய் நின்றே அது தோன்றுமற் கோடன் முத லிய வஞ்சனை செய்தலும், அமைச்சர் முதலிய உறப்புகளைத் தேய்த்தலும் முதலாயின.

(தே - ப - ரை.)—உறல் முறையான்-(புறத்தில்) உரவுமுறைத் தன்மையோடு கூடிய, உட்பகை - உட்பகையான து, தோன்றின் - (அரசனுக்கு) உண்டாயின்; (அ து) இறல் முறையான் - இறுத்தன் முறைமையோடுகூடிய, எதம்பலவும்-குற்றம் பலவற்றையும், தரும்- (அவனுக்கு) கொடுக்கும்.

சூ. ஒன்றுமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றுமை யொன்ற லரிது.

(பரி-ரை.) எ-து,—பகைமை தனக்குள்ளாயினர் மாட்டே பிரக்கு மாயின், அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்றுமரிது, எ-று.

பொருள்படை முதலிய உறுப்புகளாற் பெரியனய காலத்து மென்பார், எஞ்ஞான்று மென்றார். இவை கான்கு பாட்டானும் அதனைத் தனக்கு வருக் தீங்கு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—ஒன்றுமை - பகைமை, ஒன்றியார்கண் - (தனக்கு) உள்ளாயினரிடத்து, படின் - உண்டாகு மாயின், பொன் றுமை - இறவாமை, ஒன்றல் - (அரசனுக்கு) கூடுதல், எஞ்ஞான் றும் - எக்காலமும், அரிது - அரிது.

எ. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

(பரி-ரை.) எ-து,—செப்பினது புணர்ச்சிபோலப் புறத்து வேற்றுமை தெரியாமற் கூடினராயினும், உட்பகை உண்டாய குடியிலுள்ளார் அகத்துத் தம்மூட் கூடார், எ-று.

செப்பினது புணர்சி-செப்பு மூடியோடு புணர்ந்த புணர்சி. உட்பகை யான் மனம் வேறுபட்டமையிற் புறப்பகை பெற்றுழி வீற்றுவீற்றுவென்ப தாம். குடிகூடா தென்பதனை நாடி வந்தென்பதுபோலக் கொள்க. உட்பகை தானுற்றகுடியோடு கூடாதென்றும் உட்பகையுண்டாயதுடி அப்பகையோடு கூடாதென்றும் உரைப்பாருமுளர்.

(தே - ப - ரை.)—செப்பின் - செப்பினது, புணர்ச்சிபோல்- (மூடிகளின்) சேர்க்கைபோல, கூடினும் - (புறத்தே வேற்றுமை தெரியாமற்) கூடினராயினும், உட்பகை - உட்பகையான து,

உற்ற - உண்டாகிய, குடி - குடியிலுள்ளார், கூடாதே-(அதத்தே தம் முள்) கூடார்.

அ. அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

(பரி-ரை.) எ-து:—முன் வளர்ந்து வந்த தாயினும் உட்பகையுண்டாய குடி அரத்தாற் பொரப்பட்ட இரும்புபோல அதனுற்பொரப்பட்டு வலி தேயும், எ-று.

பொருதென்னுஞ் செயப்பாட்டுவினையெசம் தேயுமென்னும் வினை கொண்டது. அஃது, உரத்தின் மிகுழிலாயினுங குடிமே லேற்றதலின், வினை முதல் வினையாயிற்று. காரியஞ் செய்வதுபோனறு பொருந்தி மெல்லமெல் லப் பிரிவித்தலான், வலி தேய்ந்துவிடு மென்பதாம். இவை யிரண்டுபொட்டா னும் அவன் குடிக்கு வருந் தீமைகு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—(முன்வளர்ந்து வந்ததாயினும்) உட்பகை உற்ற குடி - உட்பகையுள்ள குடியானது, அரம் பொருத - அரத் தினுலே தேய்க்கப்பட்ட, பொன் போல - இரும்புபோல, பொருது- (அதனுலே) தேய்க்கப்பட்டு, உரம் - வலிமை, தேயும் - குறையும்.

கூ. உட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

(பரி-ரை.) கூ-து:—அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின்பிளவை யொத்த சிறுமையுடைத்தே யாயினும் பெருமையெல்லாம் அழிய வருங்கேடு அதனகத்தாம், எ-று.

எத்துணையும் பெரிதாயகேடு தனக் கெல்லைவருந்துணையும் எத்துணை யுஞ் சிறிதாய உட்பகையுள்ளே யடங்கியிருந்து வந்தால் வெளிப்பட்டுநிற்கு மென்பதாம். இதனுல் அது சிறுதென்று இகழப்படா தென்பது கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—உட்பகை - (அரசனது) உட்பகை, (அவன் பெருமையைநோக்க) எள் பகவு அன்ன - எள்ளின் பிளவை யொத்த, சிறுமைத்தே ஆயினும் - சிறுமையுடையதேயாயினும், கேடு - (அப்பெருமையெல்லாம் அழியவரும்) கேடு, உள்ளது ஆம் - (அதன்) அகத்ததாம்.

கo. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டிடனுறைந் தற்று.

சஉஅ கo0-ம் அதி. பெரியாரைப்பிழையாமை

(பரி-ரை) எ-து,—மனப்பொருந்தமில்லாதாரோடுகூட ஒருவன் வாழும் வாழ்க்கை ஒரு குடிலுள்ளே பாம்போடுகூட உறைந்தாற் போலும், எ-று.

குடங்கமென்னும் வடசொல் திரிந்து நின்றது. இடசுசிறுமையானும் பயிற் சியானும் பாம்பாற் கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, அவ்வமையால் அவனுபிரக்கு இறுதிவருதல் ருதலேயென்பது பெற்றம். இதனுற் கண் ணோடாதவரைக் கடிகவென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—உடம்பாடு இலாதவர் - மனப்பொருத்த மில்லாதவரோடு, வாழ்க்கை - (ஒருவன்) கூடிவாழும் வாழ்வு, குடங் கருள் - ஒரு குடி ரையிலுள்ளே, பாம்போடு - பாம்புடனே, உடன் உறைந்தற்று - கூடி வாழ்ந்தாற் போலும்.

கo0-ம் அதிகாரம்—பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது பெரியரையினுமை அவமதித்து வாழுகாமை. இரட்டுறமொழிந் தலென்பதனுற பெரியரென்பது ஆற்றலாற் பெரியாரை வேந்தர்மேலும் தனது தாற் பெரியாராய முனிவரையும் கொள்ளென்றது. மேற்சொல்லாது எஞ்சிநின்ற தாகலின், இது வெகுளியான் வருவனவற்றை நிறுத்திக்கண வைக்கப்பட்டது.

க ஆற்றுவார் ஆற்றல் விகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை

(பரி-ரை.) எ-து,—எதனுக்கொண்டனயாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றல்களை அவமதியாமை, தங்கட் டங்குவராமற் காப்பாய செய்யுங காவல்க ளெல்லாவற்றினும் மிக்கது, எ-று.

ஆற்றலென்பது பெருமை, அறிவு, முயற்சியென்னும் மூன்றன்மேலும் நிற்றலிற் சாதிபொருமை. இகழ்ந்தவழிக லேய வல்லரெனபது தோன்ற ஆறுவனென்றும, அரண, படை, பொருள், நட்பு முதலிய பிற காவல்கள் அவரா னுபியமாகலின் அவ்விசழாமையைத் தலையாய காவலென்றுங கூறி னர். பொதுவகையால் அவ் விருதிறத்தாரையும பிழையாமையது சிறப்பு இதனுற கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—ஆற்றுவார் - (எடுத்துக்கொள்ளப்பட்டவை யாவும் முடிக்க) வல்லாருடைய, ஆற்றல்-வல்லமைகளை, இகழாமை-அவமதியாமை, போற்றுவார் - (தம்மிடத்துத் தீங்குவாராமல்) காப் பவருடைய, போற்றலுள் எல்லாம் - காவல்களுக்குளெல்லாம், தலை-மிக்கது.

உ. பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
போரா விடும்பை தரும்.

(பரி-ரை.) எ-து.—ஆற்றல்களாற் பெரியராயினரை வேந்தர் நன்கு மதியாது அவமதித்து ஒழுகுவாராயின், அவ்வொழுக்கம் அப்பெரியரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும், எ-று.

அத்துன்பங்களாவன இருமையினும் இடையறாது வரும் மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாம் தாமே செயதுகொள்கின்றன ரென்பது தோன்ற, ஒழுக்கத்தை வினைமுதலாகவியும் பெரியாரைக் கருவியாக்கியுங் கூறினர். யாதுவகையால் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனைக் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற கூறுப.

(தே - ப - ரை.)—(வேந்தர்) பெரியாரை - (வலிமைகளாலே) பெரியராயினரை, பேணுது - நன்குமதியாமல் (அவமதித்து), ஒழுகின் - நடப்பாராயின், (அந்நடக்கையானது), பெரியரால் - அப்பெரியவரால், பேரா இடும்பை - (எஞ்ஞாளும்) நீங்காத துன்பங்களை, தரும் - (அவருக்கு) கொடுக்கும்.

கூ. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னுற்று ளவர்க ணிழுக்கு

(பரி-ரை.) எ-து —வேற்றுவேந்தரைக் கோறல்வேண்டியவழி அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர்மாட்டுப் பிழையினை, தான் கெடுதல் வேண்டினனாயின். ஒருவன் நீதிநூலைக் கடந்துசெய்க, எ-று.

அப்பெரியாரைக் "காலநோக காலமு பாராது—வேலிண்டு தானை விழுமியோர் தொலைய—வேண்டிடமு தரீம வெல்போர் வேந்தர்" என்றார் பிறரும். நீதிநூல் செயலாகாதென்று கூறலின், கேளாதென்றார்.

(தே - ப - ரை.)—அடல் வேண்டின் - (வேற்று வேந்தரை) கொல்லுதல் வேண்டியவிடத்து, ஆற்றுபவர்கண் - (அதனை அப்பொழுதே) செய்யவல்ல வேந்தரிடத்து, இழுக்கு - பிழையை, கெடல வேண்டின் - (தான்) கெடுதல் வேண்டினனாயின், கேளாது - (நீதிநூலிலே சொல்லப்பட்டதை) கேளாமல், செய்க - (ஒருவன்) செய்யக்கடவன்.

ரு. கூற்றத்தைக் கையால் விலித்தற்று லாற்றுவார்க்
காற்றுதா ரின்ன செயல்

புறநானூறு, ரூக.

சுஉ0 கூ0-ம் அதி. பெரியாரைப்பிழையாமை

(பரி-ரை). எ-து,—மூவகையாற்றலு முடையார்க்கு அவையில்லாதார் தாம் முற்பட்டு இன்னுதவற்றைச் செய்தல் தானேயும் வாற்பாலனய கூற்று வனே அதற்கு முன்னே கைகாட்டி அழைத்தா லொக்கும், எ-று.

கையால் விளித்தல் இகழ்ச்சிக் குறிப்பிற்று. தாமேயும் உயிர்முதலிய கோடற்குரியாரை அதற்குமுன்னே விரைந்து தம்மேல் வருவித்துக்கொள் வார் இறப்பினது உணமையும் அண்மையுங கூறியவாறு. இவை யிரண்டு பாட்டானும் வேந்தரைப் பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—ஆற்றுவார்க்கு - (மூவகை) யாற்றலுமுடைய வர்க்கு, ஆற்றுதார் - அவ்வாற்றலில்லாதவர், இன்னு-இன்னுதவை களே, செயல் - (முற்பட்டு) செய்தல், கூற்றாத்தை - (தானேயும் வருந் தன்மையனுகிய) யமனே, கையால் - (அதற்குமுன்னே) கைகாட்டி, விளிதற்று - அழைத்தாலொக்கும்.

நு. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

(பரி-ரை.) எ-து,—பகைவர்க்கு வெய்தாய வலியினேயுடைய வேந்தனுற் செறப்பட்ட அரசர் அவனைத் தப்பி எங்கேபோ யுளராவர்; ஓரிடத்தும் உள ராகார், எ-று.

இடைவந்த சொற்கள் அவாய்நிலேயான் வந்தன. வெந்துப்பின் வேந் தாகலால் தந்நிலம் விட்டுப்போயவர்க்கு இடங்கொடுப்பாரில்லே, உளராயின் இவர் இனி யாகாரென்பது நோக்கி அவனேடு நட்புக்கோடற்பொருட்டும் தாமே வந்தெய்திய அவருடைமையை வௌவுதற்பொருட்டும் கொல்வர், அன்றெனின் உடனேயழிவரென்பன நோக்கி, யாண்டுச்சென்றியாண்டு முளராகாரென்ருர். இத்தனல அக்குற்றமுடையார் அருமையுடைய அரண சேர்ந்தும் உய்யாரென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—வெம் துப்பின் - வெவ்விதாகிய வலிமையை யுடைய, வேந்து - வேந்தனுல், செறப்பட்டவர் - கோபிக்கப்பட்ட அரசர், யாண்டுச் சென்று - (அவனேத்தப்பி) எங்கேபோய், (உள ராவார்), யாண்டும் - எவ்விடத்தும், உளர் ஆகார் - பிழைத்திரார்.

கூ. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

(பரி-ரை.) எ-து,—காட்டிடைச் சென்றுனெருவன் ஆண்டைத் தீயாற் சுடப்பட்டானுயினும் ஒருவாற்றுன் உயிருய்தல் கூடும்; தவத்தாற் பெரி யாரைப்பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றுனும் உயிருய்யார், எ-று.

தீமூன் உடம்பினைக் கதுவி அதுவழியாக உயிர்மேற் சேறலின் இடையே உய்யவுங் கூடும், அருந்தவர்கெளி அன்னதன்றித் தானிற்பது கணமாய் அதற்குள்ளே * யாவர்க்குங் காத்த லரிதாகலின், அது கூடாதாகலான் அதற் கேதுவாய பிழை செய்யற்க வென்பதாம்.

(தே - ப - ரை)—(காட்டிடைச்செ ற்றவென்) னரியால்- (அவ்விடத்து நீயர் கூப்பிடினும் - கூப்பட்டாலும் உய்யு - (ஒருவழியால்) உயிர்பிழைத்தல், உண்டாம் - கூடும்; பெரியார் - (தவத்தால்) பெரியார்க்கு, பிழைத்து ஒழுகுவார் - பிழைசெய்து நடப்பவர், உப்பார் - (எவ்வழியாலும்) உயிர்பிழையார்.

எ. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் தெரிந்.

(பரி-ரை.) எ-து,—சாப வருள்கட் கேதுவாய பெருமை மாட்சிமைப் பட்ட அருந்தவர் அரசனை வெகுள்வாயின் உறப்பழகுபெற்ற அவனரசாட்சி யும் ஈட்டிவைத்த பெரும்பொருளும் என்பட்டுவிடும், எ-று.

உறப்பு அமைசசு, நாடு, அரண், படை யெனவிவை. செறினென்பது அவர் செருமை தோன்ற நின்றது. இவ்வெசசத்தான் மூன் வருவனவற் றிற்கும் இஃதொக்கும். அரசர் தஞ்சிலவக்களிப்பான் அருந்தவர்மாட்டுப் பிழைசெய்வாயின், அச்செல்வம் அவர் வெகுளித்தியான் ஒருகணத்தின்னே வெந்துவிடு மென்பதாம்.

(தே - ப - ரை.)—தகை - (சாபானுக்கிரகங்களுக்கு ஏதுவா கிய) பெருமையால், மாண்ட - மாட்சிமைப்பட்ட, தக்கார் - அருந் தவர், செறின் - (அரசனை) கோபிப்பாராயின், வகை - அங்கங்க ளால், மாண்ட - அழகுபெற்ற, வாழ்க்கையும் - (அவன்) அரசாட் சியும், வான் பொருளும் - (சம்பாதித்து வைத்த) பெரும் பொரு ளும், என்னும் - எப்படியாய்விடும்.

அ. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
மாய்வர் நில

(பரி-ரை.) எ-து,—குன்றத்தையொக்கும் அருந்தவர் தெட நீனைப்பாரா யின், அப்பொழுதே இந்நிலத்து நிலைபெற்றாற்போலுஞ்செல்வர் தங்குடியொ டும் மாய்வர், எ-று.

* மேலே கூம் அதி, நீத்தார்பெருமை, கூம் குறளிற்காண்க,

சுகூஉ கூ0-ம் அதி. பெரியாரைப்பிழையாமை

வெயில் மழை முதலிய பொறுத்தலுஞ் சலியாமையும் உள்ளிட்ட குணங் களுடைமையின், குன்றன்ன ரென்றார்: ‡ "மல்லன் மலையனைய மாதவர்" என்றார் பிறரும். நிலைபெற்றார் போதலாவது இறப்பப் பெரியராகலின் இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லையென்று கண்டாராற் கருதப்படுதல்.

(தெ - ப - ரை)—குன்று அன்னர் - மலையையொக்கும் அருந் தவர், குன்ற - கெட, மதிப் பின் - நினைப்பாராயின், நிலத்து - இந் நிலத்து; நின்று அன்னர் - நிலைபெற்றாரைபோலுள்ள செல்வர், குடி யொடு - (தங்) குடியோடு; மாய்வர் - (அப்பொழுதே) கெடுவர்

கூ. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்த
வேந்தனும் வேந்து கெடும்.

(பரி-ரை.) எ-து,—காத்தற் கருமையான் உயர்ந்த விரதங்களே உடை யார் வெகுள்வாராயின், அவராற்றலான் இந்திரனும் இடையே தன்பதம் இழ ந்து கெடும், எ-று.

‡ "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" என்றார் பிறரும். சுகுடனென் பான் இந்திரன் பதம்பெற்றுச செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதி யான் அகத்தியன் வெகுள்வ தோர் பிழைசெய அதனுற் சாபமெய்தி அப்பதம் இடையே இழந்தா னென்பதனை யுட்கொண்டு, இவ்வாறு கூறினார். இவை நான்கு பாட்டானும் மூனிவரைப் பிழைத்தலின் குற்றங கூறப்பட்டது.

(தெ - ப .. ரை.)—ஏந்திய கொள்கையார் - (காத்தற்கருமை யால்) உயர்ந்த விரதங்களை யுடையார், சீறின் - (அவ்வலிமையால்) கோபித்தால், வேந்தனும் - இந்திரனும், இடைவேந்து முரிந்து - நடுவே தன்பதம் இழந்து, கெடும் - கெடுவான்.

கo. இறந்தமைந்த சார்புடையா ரியினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

(பரி-ரை.) எ-து,—கழியமிக்க தவத்தினையுடையார் வெகுள்வாராயின், அவரான் வெகுளப்பட்டார் கழியப் பெரியசார்பு உடையராயினும், அதுபற்றி உய்யமாட்டார், எ-று.

சார்பு - அரண, படை, பொருள், சுட்பெனவிவை. அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலாற் றிரிபுரம்போல அழிந்துவிடு மாகலின், உய்யா ரென்றார். சீருடையது சீரெனப்பட்டது. இதனுல் அக்குற்றமுடையார் சார்புபற்றியும உய்யாரென்பது கூறப்பட்டது.

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம, சுகூஉ.

‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்தினை யியல், இ.

(தே - ப - ரை)—சிறந்து அமைக்த - மிகவும் அதிகமான, சீரார் - கவத்தையுடையவர், செறிர் - தேர்ந்தெடுப்ப ராயின் (யக் தேர்ந்தெடுக்கப்பட்டவர்), இறந்து அமைந்த - மிகவும் பெரிய, சார்பு உடையராயினும் - துணையாய அந்தங்களை யுடையவராயினும், உய்யார் - (அதுபற்றி) உய்யமாட்டார்.

கூக-ம் அதிகாரம்—பெண்வழிச்சேறல்.

ரிக் காமத்தான் வருவன கேரே பகையல்ல வாயினும் ஆக்கஞ்சிதைத் தல் அழிவு தலேத்தருத லென்னுக் தொழில்களாற் பகையோடொத்தலிற் பகைப்பாற் படினவாம்; ஆகலான் அவரறைப் பகைப் பகுதிய நிறுதிக்கட் கூறுவான் ரொடங்கி, மூந்றுகட் பெனவ ரசேறல் கூறுகின்றார். அஃதாவது தன்வழி பொழுகற் பாலளாய இல்லாள்வழியே தான் ரொழுகுதல்.

க. மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழை வார்
வேண்டாப் பொருளு மது

(பரி-ரை.) எ-து,—இன்பங காரணமாகத் தம் மனையாளே விழைந்து அவடன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன்றியமையாத அறத்தினை யெய்தார்; இனிப் பொருள் செய்தலே முயல்வார் அதற் கிடையீடென்று இகழும் பொரு ளும் அவ்வின்பம், எ-று.

மனையும் விழைதலும் பயனும் ஆருபெயர். அவ்வின்பம்-அவடன்மைய ராதற்கு எதுவாய வின்பம். அஃது அவளாற் பயனுய வறத்தினும் அவ்வறத் திற்குக் கனக்கும் எதுவாய பொருளினுஞ் செல்லவிடாமையின், விடற்பாற் றென்பதாம்.

(தே - ப - ரை.)—மனை விழைவார் - (இன்பங் காரணமாக) தம்மனையாளை விரும்பி (அவள்வழி) நடப்பவர், மாண் பயன் - (தமக்கு) இனியதுணையாகிய (அறத்தை), எய்தார் - அடையார்; வினை விழைவார் - பொருள் சம்பாதித்தலிலே முயல்பவர், வேண் டாப் பொருளும் - (அதற்கு விரோதமென்று) இகழும்பொருளும், அது - அவ்வின்பம்.

உ. பேணு மொண்விழைவா னுக்கம் பெரியதோர்
நாணு நாணுத் தரும்

(பரி-ரை.) எ-து,—தன் ஆண்மையை விட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்திநின்ற செல்வம் இவ்வுலகத்து ஆண்பாலார்க் கெல்லாம் பெரியதோர் நாணுண்டாகத் தனக்கும் நாணுதலைக் கொடுக்கும், எ-று.

எய்திநின்றகாயிற்று, படைக்கும் ஆற்ற லிலனுகலின். அசெல்வத்தால் ஈதலுந் துய்த்தலும் முதலிய * பயன்கொள்வாள் அவளாகலின், அவ்வாண்மைசெய்கை அவள்கண்ண தாயிற்று ஆண்பாலார் யாவரும் நாண அதனுற் றன் ஆண்மையின்மை அறிந்து பின் தானும் நாணுமென்பதுகோக்கிப் பெரிய தோர்நாணுக நாணுத்தரு மென்றார். இவை யிரண்டுபாட்டானும் மனை விழைத்தற் குற்றம கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பேணுது - (தன்னுண்மையை) விரும்பாமல், பெண்விழைவான் - (மனையவளது) பெண்மையை விரும்பு வோனது, ஆக்கம் - செல்வம், (இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம்), பெரியது ஓர் நாண் - மிக்கதொரு வெட்கம், ஆக - உண்டாக, நாணு - நாணுதலை. தரும் - (தனக்கும்) கொடுக்கும்.

கூ. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும்.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் இல்லாண்மாட்டுத் தாழ்தற்கு எதுவாய அச்சம் அஃதிலராய நல்லாரிடைச செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்துங் கொடுக்கும், எ-று.

அவடான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளை யஞ்சுதல் இயல் பின்மையாயிற்ற. அங்ஙன மஞ்சியொழுகுதலின், அவளை கியமிப்பா ரில்லை யாம்; ஆகவே, எல்லாக்குற்றமும் வீளையுமென்பது நோக்கி, எஞ்ஞான்றும் நாணுத் தருமென்றார்.

(தே - ப - ரை.)—(ஒருவன்) இல்லாள் கண் - இல்லாளிடத்து, தாழ்ந்த இயல்பு இன்மை - தாழ்தற்கு எதுவாகிய அச்சம், நல்லாருள் - (அவ்வச்சமில்லாத) நல்லாரிடத்து, (செல்லுங்கால்) நாணு - நாணுதலை, எஞ்ஞான்றும் - எக்காலமும், தரும் - (அவனுக்கு) கொடுக்கும்.

கூ. மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

* "பயன்கொள்வாளை யாகலின்" எனவும் பாடம்,

(பரி-ரை.) எ-து,—தன் மனையாளை யஞ்சி ஒழுகுகின்ற மறுமைப்பய னில்லாதானுக்கு வினையை ஆளுந்தன்மை உண்டாயவழியும் நல்லோராற் கொண்டாடப்படாது, எ-று.

உண்டாயவழியுமென்பது அவாய்நிலையான் வந்தது. இல்லதஞ் செய்தற் குரிய நன்மை யின்மையின் மறுமையிலாள னென்றும், வினையை யாளுந் தன்மை தன்றன்மை யில்லாத அவனுன் முடிவுபோகாமையின் வீறெய்த லின்றென்றுங கூறினர்.

(தெ - ப - ரை.)—மனையாளை - (தன்) மனையாளை, அஞ்சும் - அஞ்சி நடக்கின்ற, மறுமை இலாளன் - மறுமைப்பய னில்லாத வனுக்கு. வினை ஆண்மை - தொழிலை யாளுந்தன்மை, (உண்டாகிய வழியும்) வீறு எய்தல் இன்று - (நல்லோராலே) கொண்டாடப் படாது.

நி. இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றொஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

(பரி-ரை.) எ-து,—தன் மனையாளை யஞ்சுவான் தான் நேடிய பொருளே யாயினும் அதனால் நல்லார்க்கு நல்லன செய்தலை எஞ்ஞான்றும் அஞ்சாநிற் கும், எ-று.

நல்லார்-தேவர், அருந்தவர், சான்றோர், இரு முதுகுரவர் முதலாயி னோரும் நல்விருந்தினரும். நல்லன செய்தல்-அவர்விரும்புவன கொடுத்தல். அது செய்யவேண்டும் நாள்களினு மென்பார் எஞ்ஞான்று மென்றார். * "இல் லாளையஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சிற், புல்லாளனை" என்றார் பிறரும்.

(தெ - ப - ரை.)—இல்லாளை அஞ்சுவான் - (தன்) மனையாளை அஞ்சுவோன், (தான் தேடியபொருளே யாயினும்), நல்லார்க்கு - நல்லவர்க்கு, நல்ல செயல் - (அப்பொருளாலே) நல்லவைகள் செய் தற்கு, ஒஞ்ஞான்றும் - எந்நாளும், அஞ்சும் - அஞ்சாநிற்பன்.

சு. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்ச பவர்.

---

* இல்லாளை யஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சிற்—புல்லாள னை மறைதோற்றி லெனப்பு கைது—வில்லா ளழுவம் பிளதிட்டு வெருண்டு நோக்கிக—கொல்யானை யுந் திக் குடை யேலுமோ சோழெடுத்தான்—சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், உரை.

(பரி-ரை.) எ-து,—தம் மில்லாளுடைய வேய்போலுந் தோளினை அஞ்சுவார் வீரதாதற் றுறக்கமெய்திய அமரர்போல இவ்வுலகதது வாழ்தாராயினும், ஆண்மை யிலர், எ-று.

அமரர்போல வாழ்தலாவது பகைத்த வீரர் தோள்களையெல்லாம் வேறலான் நன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையின், வாழினு மென்றார். அமையாதோ ளெனவே, அஞ்சுதற் காரணதாது எண்மை கூறியவாறு. வீரர் தோள்களே வென்றாயினும் இல்லாடோள்களே அஞ்சுவா ஆணமை யில ரென்பதாம். இவை நான் பாட்டானும் அவளே யஞ்சுதற் குறுதுணை கூறப் பட்டது.

(தெ - ப - ரை)—இல்லாள் - (தம்) மில்லாளுடைய, அமை ஆர் தோள் - வேய்ப்போலுக் தோளுக்கு, அஞ்சுபவர் - அஞ்சுகிடப் பவர், இமையாரின் - (வீரத்தாலே சுவர்க்கமடைந்த) தேவர்போல, வாழினும்-(இல்லிலதது) வாழ்ந்தாராயினும், பாடிலிலர் - ஆண்மை யிலர்.

வ. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னுணுமடைப் பெண்ணே பெருமை யுடைத்து.

(பரி-ரை.) எ-து,—நாணின்றித் தன் னில்லாளது எவற்றெழிலே செய்து திரிகின்றவனது ஆண்டன்மையின் நாணுடையுடைய அவள் பெண டன்மையே மேம்பா டெடைத்து, எ-று.

நாணுடைப் பெண்ணென வேண்டாது கூறியது அவளேவல் செய்வா னது நாணின்மை முடித்தற் காதலின், அம்முதலே தொழில் வருவிக்கப்பட் ட . எவல்—ஆ பெயா, றுறுதிக்கட் பெண்ணேண்பதூஉம் அது. எவல் செய்வித்தல் கோடற்சிறப்புத் தோன்றப் பெண்ணே யெனப் பிரித்தார்.

(தெ - ப - ரை)—பெண் - இல்லாளது. ஏவல் - ஏவற்றொழிலை, செய்து ஒழுகும் - (நாணமில்லாமல்) செய்து திரிகின்றவனது, ஆண் மையின் - ஆண்டன்மையைக்காட்டிலும், நாண் உடை - நாணுதலை யுடைய, பெண்ணே - (அவள்) பெண்தன்மையே, பெருமை - மேம்பாட்டை; உடைத்து - உடையது

அ. நட்டார் குறைமுடியார் நன்றறிவார் நன்னுகலாட் பெட்டாங் கொழுகு பவர்.

பெண்மை ஆணைகட்டுப பொருள கட்பலஞ்சிய அமைசித்தன்மை, ஆளுர் தன்மை என்பா ராச்சிரூரினியா.

(பரி-ரை.) எ-து,—தாம் வேண்டியவா றன்றித் தம்மனையாள் வேண்டிய வாறு ஒழுகுவார் தமமொடு சுட்புசெயதார் உற்ற குறை முடிக்கமாட்டார்; அதுவேயன்றி மறுமைக்குத் துணையாய அறஞ் செய்யவு மாட்டார், எ-று.

கன்னுதலா ளென்பகனே * "அமையார்தோள்" என்புழிப்போலக் கொள்க. அவடானே அறிந்து எவ்வும பொருள் கொடுத்தலுங கூடாமை யின், இருமைகளும் வேண்டுவன செயயமாட்டா ரென்பதாம்.

(தெ - ப - ரை)—(தாம் வேண்டியபடியன்றி) நல் நுதலாள் - (தம்) மனையாள், பெட்டு ஆங்கு - வேண்டியபடி, ஒழுகுபவர் - நடப் பவர், நட்டார் - (தம்மோடு) நட்புச்செய்தவரது, குறை-குறையை, முடியார் - முடிக்கமாட்டார்; (அதுவல்லாமலும்) நன்று - (மறு மைக்குத் துணையாகிய) அறத்தையும், ஆற்றார் - செய்யமாட்டார்.

கூ அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்.

(பரி-ரை.) எ-து,—அறச செயலும் அது முடித்தற்கு ஏதுவாய பொருட் செயலும் அவ்விரண்டின் வேறுய இன்ப செயலகளும் தம்மனையாள் ஏவல் செய்வார் மாட்டு உளவாகா, எ-று.

புலன்க ளைந்தாகலின், பிறவினையெனப் பன்மை யாயிறறு. அவை நோக்கி அறசெயல் பொருட்செயலகள் முன்னே யொழிந்தாக்குத் தலைமை அவள் கணவதாகலின், பின் அவைதாமும் இலவாயினவெனப தோன்ற அவறறைப பிரித்துக் கூறினார். இவை மூன்றபாட்டானும் அவளேவல் செய் தூ குரூயகூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—அறவினையும் - அறசெயலும், ஆன்ற பொருளும் - அது முடித்தற்கு ஏதுவாகிய பொருட்செயலும், பிற வினையும் - அவ்விரண்டின் வேறுகிய இன்பச செயலகளும், பெண் ஏவல் - (தம்) மனையாளேவலை, செய்வார்கண் - செய்பவரிடத்து, இல் - உண்டாகா.

கO. பெண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்

(பரி-ரை.) எ-து,—கருமச குழ்சிக்கட் சென்ற நெஞ்சத்தினையும் அத னினைய செல்வத்தினையும் உடையராய வேந்தர்க்கு மனையாளைச சேர்ந்தான் வினையும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது, எ-று.

இவ்வதிகாரர் சுமம் குறளிற பாண.

* "இடனில் பருவத்தும்" எனவும் † "இடனின்றி யிரந்தோர்க்கு" என வும் வந்தமையான், இடனென்பது அப் பொருட்டாத லறிக. இளமைக்கால த்து மென்பார், எஞ்ஞான்று மென்றார். அப் பேதைமை யாவது மேற்சொல் லிய விழைதல், அஞ்சல், எவல் செய்தலென்னும் மூன்றற்கு மு காரணமாயது. எதிர்மறை முகத்தான் அம் மூன்றும் இதனுற் றொகுத்துக் கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—எண் சேர்ந்த - (தருமம்) ஆலாசனையிலே சென்ற, நெஞ்சத்து - மனத்தையும்; இடன் - (அதனுலாகிய) செல் வத்தையும், உடையார்க்கு - உடையவர்களுக்கு, பெண் சேர்ந்து ஆம் - மனையாளைச் சேர்தலால் விளையும், பேதைமை - அறிவின்மை, எஞ்ஞான்றும் - எக்காலத்தும், இல் - உண்டாகாது.

கூ-ம் அதிகாரம்—வரைவின் மகளிர்.

அஃதாவது தக்கலம் வீலை கொடுப்பார் யாவர்க்கும் விற்ப தல்லது அத ற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரையிலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக் குரிய மகளிரான் வருங குற்றத்தின்பின் வைக்கப்பட்டது.

க. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனை அன்பு பற்றி விழையாது பொருள் பற்றி விழையும் மகளிர் அது கையுறுக் தூணையும் தாம் அன்பு பற்றி விழைந்தாரா கச் சொல்லும் இனிய சொல் அவனுக்குப் பின் இன்னுமையைப் பயக் கும், எ-று.

பொரு ளென்புழி இன் விகாரத்தாற் றொக்கது. ஆய்ந்த தொடியினை யுடையா ரென்றதனுனும் இனிய சொல் லென்றதனுனும், அவர் கருவி கூறப்பட்டது. அசசொல் அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் வறுமை பயத்தலின், அது கொள்ளற்க வென்பதாம்.

(தே - ப - ரை.)—அன்பின் விழையார் - (ஒருவனை) அன்பு பற்றி விரும்பாராகி, பொருள் விழையும் - பொருள்பற்றி விரும்பும், ஆய் தொடியார் - ஆய்ந்தணிந்த வளையையுடைய மகளிர், இன் சொல் - (அது கைவருமளவும் அன்புபற்றி விரும்பினராகச் சொல் லும்) இனியசொல், இழுக்கு - இன்னுமையை, தரும்-(அவனுக்கு) கொடுக்கும்.

மேலே உ-ம் அதி, அ-ம் குறளிற் பாகை. † கலி, பாலை,

உ. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

(பரி-ரை.) எ-து —ஒருவனுக்கு உள்ளபொருளை அளந்தறிந்து அவனதெய்
தற்குரியமதம் பண்புடைமை சொல்லும் பண்பில்லாத மகளிரது ஒழுக
லாற்றினை ஆராய்ந்தறிந்து அவரைப் பொருந்தாது விடுக, எ று.

பண்பு சொல்லின்கணல்லது தங்கட் கிடவாமை தோன்றப் பண்பின்
மகளிரென்றும், அவர்க்கு அது சாதிதருமமாதல் நூலானேயன்றி அவர் செய
லானு மறிந்தென்பார் நயன்றூக்கி பென்றும், அவ்வறிவு அவரை விடுதற்கு
உபாயமென்பது தோன்றப் பின் நள்ளாவிடலென்றும் கூறினர்.

(தே - ப - ரை.)—பயன் தூக்கி - (ஒருவனுக்கு உள்ள)
பொருளை அளந்தறிந்து, பண்புரைக்கும்-(அது கிடைக்குமளவும்)
தமதுகுணமுடைமை சொல்லும், பண்பு இல் மகளிர் - குணமில்
லாத மகளிரது, நயன் தூக்கி - நடக்கைவழியை ஆராய்ந்தறிந்து,
நள்ளா - (அவரை) பொருந்தாமல், விடல் - விடக்கடவர்.

ங. பொருட்பெண்டிர் பொய்மை முயங்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.

(பரி-ரை.) எ-து,—கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும்
பொது மகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம் பிணமெடுப்பார் இருட்
டறைக்கணணே முன னறியாத பிணத்தைத் தழுவினற் போலும், எ-று.

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்துஞ் செயலும் ஆராயாது சாதியும்
பருவமும் ஒவ்வாதானே முயக்குங்கால அவர் குறிப்புக் கூறிப்புக் கூலிக்குப் பிணமெடுப்
பார் காணப்படாதநேரிடத்தின்கண இயைபில்லாததோர் பிணத்தை எடுக்
குங்கால் அவர் குறிப்போடொக்கு மென்னவே, அகத்தால் அருவாகின்றும்
பொருணேக்கிப் புறத்தாற் றழுவுவர் அதனையொழிக வென்பதாம். இவை
மூன்று பாட்டானும் அவர் சொல்லும் செய்யும் பொய்யென்பது கூறப்
பட்டது.

(தே - ப - ரை.)—பொருள் பெண்டிர் - (கொடுப்பாரை விரும்
பாது பொருளையே விரும்பும்) பொதுமகளிரது, பொய்ம்மை -
பொய்ம்மையையுடைய, முயக்கம் - தழுவுதல், (பிணமெடுப்பவர்)
இருட்டு அறையில் - இருள்வீட்டில், ஏதில் பிணம் - முன்னறியாத
பிணத்தை, தழீஇ அற்று - தழுவினற்போலும்.

ச. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர்.

(பரி-ரை.) எ-து,—இன்பமாகிய பொருளே இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லிய நலத்தை அருளோடுகூடிய பொருளே ஆராய்ந்து செய்யும் அறிவினை யுடையார் தீண்டார், எ-று.

அறமுதலிய மூன்றும் பாருளெனப்படுதலின், பொருட்பொருள் அருட் பொருளென விசேடித்தார். புன்மை - இந்தார்க்கே உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர் மெய்க்கலம் மறுதலையாகலின், தோயா ரென்பதாம்.

(தே - ப - ரை.)—பொருள் பொருளார் - (இன்பமாகிய பொருளே இகழ்ந்து) பொருளாகிய பொருளையே விரும்பு மகளிரது, புல் நலம் - புல்லிய நலத்தை, அருள் பொருள் - அருளோடுகூடிய பொருளை, ஆயும்-ஆராய்ந் து செம்பாகிக்கும், அறிவினர் - அறிவை யுடையவர், தோயார் - தீண்டார்.

நி. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலந்தின் மாண்ட வறிவி னவர்.

(பரி-ரை.) எ-து,—இயற்கையாகிய மதிநன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கை யறிவினை யுடையார் பொருள் கொடுப்பார்க் கெல்லாம் பொது வாய ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார், எ-று.

மதிநன்மை—மூற்பிறப்புகளிற் செய்த நல்வினைகளான் மனக் தெளி வுடைத்தாதல். அஃதன்றிக் கல்வி யறிவு மாட்சிமைப் படாமையின் 'மதி நலத்தின் மாண்டவறிவினவ' ரென்றும், அவ்வறிவுடையார்க்கு அவராசை யது பொய்ம்மையும் மெய்ந்நலத்தது பொதுமையும் விளங்கித் தோன்றலின் தோயாரென்றுங் கூறினார்.

(தே - ப - ரை.)—மதி நலத்தின் - (இயற்கையாகிய) மதி நன்மையால், மாண்ட-மாட்சிமைப்பட்ட, அறிவினவர்-(செயற்கை) யறிவையுடையவர், பொது நலத்தார் - (பொருள் கொடுப்பவர்க் கெல்லாம்) பொதுவாகிய ஆசையையுடைய மகளிரது, புல் நலம் - புல்லிய நலத்தை, தோயார் - தீண்டார்.

சு. தங்கலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள்.

(பரி-ரை.) எ-து,— ஆடல், பாடல், அழகென்பனவற்றுற் களித்துத் தம் புல்லிய நலத்தை விலைகொடுப்பார் யாவர்மாட்டும் பரப்பும் மகளிர் தோளினை அறிவொழுக்கங்களானுயர்ந்த தம்புகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந்தோர் தீண்டார், எ-று.

ஆடன்மூதலாகிய மூன்று முடைமை அவர்க்கு மேம்பாடாகலின் தகை யென்றும், தோபின் அறிவொழுக்கங்கள் அழிய மாகலின் அவர்ஞற் புகழ் பரப்புவார் தோயா ரென்றுங் கூறினார். தக்கலென்பழி நலம் ஆகுபெயர். இவை மூன்றுபாட்டானும் அவரை உயர்ந்தோர் நீண்டா ரென்பது கூறப் பட்டது.

(தெ - ப - ரை.) —நகை - ஆடல் பாடல் அழகென்பனவை களாலே. செருக்கி - களித்து, புல் நயம் - (கம்) புல்லிய நலத்தை, பாரிப்பார் - (அவரே தொடுப்பதற்கெல்லாம்) பரப்பு மகளிரது, தோள் - தோளை, தம நயம் - (அறிவொழுக்கங்களாலாகிய) தமது புகழை, பாரிப்பார் - (உலகந்தொறும் பரப்புதற்குரிய) உயர்ந்தோர், தோயார் - நீங்கு வர்.

எ. நிறைகெஞ்ச மில்லவர் தேயவர் பிரிகெஞ்சிற்
பேணி புணர்பவர் தோள்.

(பரி-ரை) எ-து,—நெஞ்சினுற் பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரண மாகக் கொடுப்பாரை மெய்யாற் புணரும் மகளிர் தோள்போல் நிறையாற் நிருத் திய நெஞ்சமில்லாதார் தேய்வர், எ-று.

பொருளும் அதனை படைகளப்படுவனவும் வீருமும் நெஞ்சு அவற்றின் மேலதாகலின், புணர்வ ரு உடம்புமாத்திரம் மென்ப து நீங்காது அதுவழி நடாது நிறரும் நெஞ்சினே யுடையார் போயாரைமின், அஃதிலார தேய்வ ரென்றார்.

(தெ - ப - ரை.)—நெஞ்சில்-நெஞ்சினால், பிற-வேறுபொருள் களை, பேணி - ஆசைப்பட்டு, (அவை கொடுப்பவரை) புணர் பவர் — (அவைகாரணமாக மெய்யினால்) புணரு மகளிரது, தோள் - தோள்களை, நிறை நெஞ்சம் இல்லவர் - நிற்கச்செய்தலி ஞல் (நிருத்திய) நெஞ்சமில்லாதவர், தேய்வர் - நீங்குவர்.

அ. ஆயு மறிவினை யல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

(பரி-ரை.) எ-து,—உரு சொற் செயல்களான் வஞ்சித்தலே யல்ல மக ளிடத முயக்கத்தை அவ் வஞ்சனை ஆராய்ந்தறியு மறிவுடைய ரல்லார்க்கு அணங்குதாக்கு என்று சொல்லுவர் தூலோர், எ-று.

அணங்கு - காமநெறியான் ரு பிரகொள்ளும் தெயவமகள். தாக்கு - நீண டல். இவ் வருவகத்தான் அம் முயக்கம் மூன் இனிது போன்று பின் உயிர் கோடல் பெறாரும். இ ரு தூலோர் நணேவென்பது தோன்ற அவர்மேல் வைத்துக் கூறினர். அப் பெயர் அவாய் நிலையான் வந்தது.

(தே - ப - ரை)—மாய மகளிர்-(உருவு சொற் செயல்களால்) வஞ்சித்தல் வல்ல மகளிரது. முயக்-புணர்ச்சியை, ஆயும் - (அவ் வஞ்சனையை) ஆராய்ந்தறியார், அறிவினர் அல்லார்க்கு - அறிவுடையவ ரல்லாதவர்க்கு, அணங்கு - அணங்குதாக்கு, என்ப - என்று சொல்வர் (நூலோர்)

கூ. வரையிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு.

(பரி-ரை.) எ-து,—உயர்ந்தோர் இழிந்தோ ரென்னாது விலை கொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்கள் அக் குற்றத்தை யறியும் அறிவில்லாத கீழ் மக்கள் புக்கழுந்து நிரயம், எ-று

உயர்தற் கேதுவாகலின், புரை யெனப்பட்டது. சாதியா னிழிந்தாரி னீக்குதற்குப் புரையிலாப் பூரியர்க ளென்றும், அவர் அழுந்தற்கேது உருவ மூலிய மூன்றுமென்பது தோன்ற மாணிழையார் மென்றோ ளென்றும், அவர்க்கு அளற்றினை யிடையின்றிப் பயக்கு மென்பது தோன்ற உருவக மாக்கியுங் கூறினர்.

(தே - ப - ரை.)—வரைவு இலா - உயர்ந்தோர் இழிந்தோ ரென்னாது விலைகொடுப்பவர் யாவரையும் கூடும், மாண் இழையார் - மாட்சிமைப்பட்ட ஆபரணத்தை யுடையவரது, மெல் தோள்-மெல் லியதோள்கள், புரை இலா - (அக்குற்றத்தை அறியும்) அறிவில் லாத; பூரியர்கள் - கீழ்மக்கள். ஆழும் - (புகுந்து) அழுந்தும், அளறு - நரகமாம்.

கூ. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுங்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(பரி-ரை.) எ-து,—கவர்த்த மனத்தினையுடைய மகளிரும் கள்ளும் சூதுமென இம்மூன்றும் திருமகளாற் றுறக்கப்பட்டார்க்கு நட்பு, எ-று.

இருமனம்-ஒருவனேடு புணர்த்தலும் புணராமையும் ஒருகாலத்தே யுடைய மனம். கவறு-ஆகுபெயர். ஒத்த குற்றத்த வாகலின், கள்ளும் சூதும் உடன் கூறப்பட்டன. [1] வடநூலாரும் இக்கருத்தான் 'வீதனமென உடன் கூறினர். வருகின்ற அதிகார முறைமையும் இதனானறிக. தினைவிரா வெண்ணியவழிப் பன்மை பற்றி முடிபு கோடலின், ஈண்டு அஃறிணையாற் கொண்டது. திருநீக்கப்பட்டமை இக்குறிகளான் அறியப்படு மென்பதாம். இவை நான்குபாட்டானும் சேர்வார் இழிந்தோ ரென்பது கூறப்பட்டது.

---

[1] காமந்தகம், அதிகாரம். கக சுலோகம், கஉச.

(தே - ப - ரை.)—இரு மனப் பெண்டிரும் - கவர்மனத்தை யுடைய மகளிரும், கள்ளும் - கள்ளுண்ணலும், கவறும் - சூதும், திரு-திருமகளால், நீக்கப்பட்டார் - விடப்பட்டவர்க்கு, தொடர்பு-கட்புகளாம்.

கூடம் அதிகாரம்—கள்ளுண்ணுமை.

ஒழுகுமும் உணர்வு மழிதற்கண ஆவ்வுரையின் மகளிரோ டொப்பதாய கள்ளினே யுண்ணுமையது சிறப்பு எதிர்மறைமுகத்தாற் கூறு கின்றார்.

க. உட்கப் படாஅ ரொளியிழப்ப வெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்

(பரி-ரை.) எ-து,—கள்ளின்மேற காதல்செய்தொழுகு மரசர் எஞ்ஞான் றும் பகைவரா னஞ்சப்படார், அதுவேயன்றி முன்னெய்தி நின்ற ஒளியினையு மிழப்பர், எ-று.

அறிவின்மையால் பொருள்படை முதலியவற்றுட் பரியராய காலத்தும் பகைவர் அஞ்சார், தம்முன்னோ ரெய்தி நின்ற ஒளியினையும் இகழற்பாட் டான் இழப்பரென்பதாம். இவை யிடைடானும் அரசு இனிது செல்லா தென்பது இதனற் கூறப்பட்டது.

(தே-ப - ரை.)—கள் காதல் கொண்டு - கள்ளின்மேல் ஆசை கொண்டு, ஒழுகுவார் - நடக்குமரசர், எஞ்ஞான்றும் - எந்காலும், உட்கப்படார் - (பகைவரால்) அஞ்சப்படார்; (அதுவேயல்லா மல்) ஒளி - (முனபெற்றுநின்ற) ஒளியையும், இழபபர்—.

உ. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
ணெண்ணப் படவேண்டா தார்.

(பரி-ரை.) எ-து,—அறிவுடையராயினர் அஃதிலராதற்கு எதுவாய கள்ளினை உண்ணுதொழிக; அன்றியே உணணல் வேணவெரர் உளராயின், நல்லோரால் எண்ணப்படுதலை வேணடாதார் உண்க, எ-று.

பெறுதற்கரிய அறிவைப் பெற்றுவைத்தும் கள்ளானழித்துக் கொள் வாரை இயல்பாகவே அஃதில்லாத விலங்குகளுடனும் எண்ணுராகவின், சான்றோரா ணெண்ணப்பட வேண்டாதா ருணக வென்றார்.

(தே - ப - ரை.)—(அறிவுடையராயினோர்), கள்ளை - (அவ் வறிவுகெடுதற்கு எதுவாகிய) கள்ளினை, உண்ணற்க - உண்ணு

திருக்கக்கடவர்; உணில் - உண்ணவேண்டுவராயின், சான்றோரான் - நல்லோரால், எண்ணப்பட வேண்டாதார் - எண்ணப்படுதலை வேண்டாதவர்; உண்க - உண்ணக்கடவர்.

கடல் சான்றாளன் முகத்தே படினுதான் செல்மற்றுச்
சான்றோர் முகத்தும் களி.

(பதவுரை.) எது,—யாது செய்யினும் உலகுக்குந் தாய்முன்பாயினும் கள் ஞண்டு களித்தல் இன்னாதாம்; ஆனபின் குற்றம் யாதும்பொருந்த சான்றோர் முன்பு களித்தல் அவர்க்கியாதாமோ? எது.

மனமொழிமெய்கள் தம்வயத்த வன்மையான நாணமுடியும், அழியவே, சான்றோர்க்கும் இனனுதாயிறனு, ஆனபின, கள் இருமையுங் கெடுத்தலறிந்து சேய்மைகாணவே கடியுஞ் சான்றோர்க்கு இன்னுதாதல் சொல்லவேண்டுமோ வென்பதாம்.

(வ - ப - ரை.)—சான்றாள் முகத்தே யாயும் - (எது செய்தாலும் மகிழும்) தாய்முன்பாயினும், களி - (சுள் ளுண்டு) களித்தல், இன்னாது-தன்மை செய்வதாம்: (ஆதலால்), மற்றுச் சான்றோர்முகத்து-(பின் குறைபாடு யாதும் பொருந்த) பெரியோர் முன்பு, (அக்களித்தல்), என் - (அவர்க்கு) யாதாகும்.

ச. நாணெனனு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு

(பதவுரை) எது,—கள்ளென்று சொல்லப்படுகின்றயாவருமிகழும் மிக்க குற்றமுடைய தாயை நாணென்று சொல்லப்படுகின்ற உயர்ந்தவள் தோக்குதற்கஞ்சி அவர்க்கெதிர்முக மாகாள், எது.

காணுதற்கு மஞ்சி லகதரார் செய்மைகாண்மே னியகுவராகலிற் பேணு வெனறும், பண ருருவாற்றுலுங் கழுவப்படாமையிற் பெருங்குற்றமென்றும், இழிந்தோர்பா லில்லாமையின் நல்லாளென்றும், கூறினர். * பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி. இவை மூன்றுபாட்டானும் ஒளியிழத்தற்காணாது கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—கள் எனனும் - கள்ளென்று சொல்லப்படுகிற, பெணு - (யாவருமி) கழும், பெருங் குற்றத்தார்க்கு-மிகுந்த குற்றத்தை யுடையவர்க்கு; நாண் எனனும் நல்லாள் - நாணமாகிய

பிரயோகவிவேகம், முகவுப்படலம், கடு, வடமொழியுள 'லசசை' என்பது (பிரயோகவிவேகம், சகம்)

கல்லவள், (அவரைப்பார்த்தற்கு அஞ்சி) புறங்கொடுக்கும் - எதிர் முகமாகாள்.

நி. கையறி யாமை யுடைந்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்

(பரி-ரை.) எ-து,—ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளாற் றரைக்கு மெய்ம்மறப்பினைக் கொள்ளுதல் அவன் பழவினைப்பய னுய செய்வ தறியாமையைத் தனக்குக்காரணமாக வுடைத்து, எ-று.

தன்னை யறியாமை சொல்லவே, பழித்தன யாவு மறியாமை சொல்லல் வேண்டாவாயிற்று. கை அப்பொருட்டாய் ‘‘பழனுடைப் பெருமரம் வீழ்ந்தெனக் கையற்று’’ என்பதனுனு மறிக. அறிவார் விலைகொடுத்து ஒன் றனைக்கொள்ளுங்காற் றீயதுகொள்ளாமையின், மெய்யறியாமை கொளல் முன்னை யறியாமையான் வந்தென்பதாம்.

(தே - ப - ரை.) - ஒருவன், பொருள் கொடுத்து - விலைப் பொருளைக் கொடுத்து, மெய் அறியாமை - கள்ளிலே தனக்கு மெய்ம் மற நினையை, கொளல் - கொள்ளுதல், வகை அறியாமை - (அவன் பழவினைப பயனுகிய) மெய் ய றியா மையை, உடைத்து - (தனக்குக் காரணமாக) உடைத்து

சு தொகுதினர் செற்றாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நகுசண்பர் கள்ளுண் பவர்.

(பரி-ரை.) எ-து.—உறங்கினூர செற்றாரின் வேறுத லுடையரேனும், அக்காலத் தறிவின்மையான் வேறென்படார்; அவ்வாறே கள்ளுணபார், நஞ்சுண்பாரின் வேறுத லுடையரேனும். எக்காலத்து மறிவின்மையான் வேறென்படார், அவர்தாமே யாவர், எ-று.

உறங்கினூர்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உயிர்ப்பு நிற்றல். வேறு தலும் வேறன்மையு மூடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது. இதனை ரனிறை யாக்கி, நிர்க்கப்படுதலால் உறங்கினூரும் நஞ்சுண்பாரு மொப்பர், கைவிடப்படுதலாற் செற்றாரு கள்ளுணபாரு மொப்பரென் றுரைப்பாரு மூளர். அதிகாரப்பொருள் பன்னதாயிருக்க யாதுமினையபில்லாத நஞ்சுண் பார்க்கு உவமை புணர்த்து ணர்மைக்கூறல் பயனன்றுகலானும், சொற் கிடக்கை நிரனிறைக்கேலாமையானும், அஃதுரையன்மை யறிக. இவை யிரண்டுபாட்டானும் அவர தறிவிழுத்தற் குற்றம கூறப்பட்டது.

† பழனாழ்பு, உ0ஈ, ‘‘நீர்பரி னை’’ எனைப் பாடம்.

(தே - ப - ரை.)—துஞ்சினர் - உறங்கினவர், செத்தாரின் - இறந்தாரினும், வேறு அல்லர் - (வேறுயினும் அக்காலத்தே அறிவில்லாமையால்) வேறெனப்பட்டார்; (அப்படியே), கள்ளுண்பவர், எஞ்ஞான்றும் - எக்காலத்தும், நஞ்சுண்பார் - (அறிவில்லாமையால்) நஞ்சுண்பவரே யாவர்; [அவரின் வேறுயினும் வேறெனப்படார்.]

எ. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

(பரி-ரை.) எ-து,—கள்ளே மறைந்துண்டு அக்களிப்பாற் றம்மறிவு தளர்வார் உள்ளூர் வாழ்பவரான் உண்ணிகழ்கின்ற துய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவர், எ-று.

உள்ளூர்—ஆகுபெயர். உண்டென்பது அவாய் நிலையான் வந்தது. உய்த்துணர்தல் தளாசியாற் களிப்பினையுணர்ந்து அதனாற் கள்ளுண்ட துணர்தல்.

(தே - ப - ரை.)—கள் ஒற்றி - கள்ளே மறைந்து (குடித்து), கண் சாய்பவர் - (அக்களிப்பால்) அறிவுசோர்பவர், உள் ஊர் - உள்ளூர் வாழ்பவரால், உள் ஒற்றி - உள்ளே நடக்கிற காரியத்தை) ஆலோசித்தறிந்து, எஞ்ஞான்றும் - எக்காலும், நகப்படுவர் - சிரிக்கப்படுவர்.

அ. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தெளித்த தூஉ மாங்கே மிகும்.

(பரி-ரை.) எ-து,—மறைந்துண்டு வைத்து யான் கள்ளுண்டறியே னென்று உண்ணுதலொழுது தம்மொழுக்கங் கூறுதலே யொழிக; அவ்வுண்ட பொழுதே பிறராறியின் இழுக்காமென்று முன்னெஞ்சத் தெளித்த குற்றமும் முன்னே யளவின்மிக்கு வெளிப்படுதலான், எ-று.

களித்தறியே னெனக் காரியத்தாற் கூறினர். இவை யிரண்டுபோட்டாலும் அது மறைக்கப்படா தென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—களித்தறியேன் என்பது-(மறைந்துண்டு) கள்ளுண்டறியேனென்று(உண்ணுதலொழுது தமது ஆசாரஞ்) சொல்லுதலே, கைவிடுக - விடக்கடவர்; (அவ்வுண்டபொழுதே) நெஞ்சத்து ஒளித்ததூஉம் - (முன் பிறர் அறிந்தால் இழுக்கா

மென்று) மனத்தில் ஒளிக்க நற்றமும், ஆங்கே மிகும் - (மூன்றை யளவின்) மிகுந்து வெளிப்படும் (ஆகலால்).

கூ. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

(பதி-ரை.) எ-து,—கள்ளுண்டு களித்தானெருவனே இஃதாகாதென்று பிறனெருவன் காரணங்காட்டித் தெளிவித்தல் நீருண்மூழ்கினு னெருவனைப் பிறனெருவன் விளக்கினுல் நாடுதலே யொக்கும், எ-று.

களித்தானை யென்னு மிரண்டாவது * "அறிவுடை யந்தண னவனைக் காட் டென்றலே" என்புழிப்போல நின்றது. நீருள் விளக்கை செல்லாதாற் போல மனத்துக் காரணஞ் செல்லா தென்பதாம். இதனுன் அவனைத் தெளி வித்தல் முடியாதென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—களித்தானை - (கள்ளுண்டு) களித்த ஒருவனை, காரணம் காட்டுதல் - (இது ஆகாதென்று மற்றெருவன்) காரணங்காட்டித் தெளிவித்தல், கீழ் நீர் குளித்தானை - நீருள்ளே மூழ்கிய ஒருவனை, தீ - விளக்கினுல், துரீஇயற்று - (மற்றெருவன்) தேடுதலை யொக்கும்.

கஅ கள்ளுண்ணுப் போழ்தின் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு

(பரி-ரை.) எ-து,—கள்ளுண்பானெருவன் தான் அஃதுண்ணுது தெளிந் திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணுமன்றே, காணுங்கால் தானுண்டபொழுதே உளதாஞ் சோர்வினை அவன் சோர்வால் அதுவு மிற்றென்று கருதான்போலும், எ-று.

சோர்வு - மனமொழிமெய்கள் தன்வயத்தவல்லவாதல். கருதலளவை யான் அதனிழுக்கினை யுய்த்துணரின் ஒழியுமென இதனுல் அஃதொழிதற் காரணங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—(கள்ளுண்பவ னெருவன்), கள் உணப் போழ்தில் - கள்ளையுண்ணுமல் தெளிந்திருந்தபொழுதில், களித் தானை - (கள்ளுண்டு) களித்த பிறனை, காணுங்கால்—, உண்ட தன் சோர்வு - (தான்) உண்டபொழுது உண்டாந் தன்சோர்வை, உள்ளான் கொல் - (அவன்சோர்வால் அதுவும் இப்படிப்பட்ட தென்று) நினையான்போலும்.

* எ, மருதம், எ.

இனி அக்கள்ளுண்டல்போல அறம் பொருள் இன்பங்கட்கு இடையீடாகிய சூதாடலும் பிணியுழந்தலும் கூறுவான் றொடங்கி, முதற்கட் சூதினதியல்பு கூறுகின்றார்.

க வேண்டற்க வெறிறிடினுஞ் சூதினை வென்ற தூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(பரி-ரை.) எ-து.—தான் வெல்லுமாற்றலுடைய ஞெதிலும் சூதாடலை விரும்பாதொழிக; வென்று பொருளெய்துவார் உளராலெனின் அவ்வென்ற பொருடானும் இரையான் மறைந்த தூண்டி விரும்பினை இரையெனக் கருதி மீன் விழுங்கினைப் போலும், எ-று.

வேறல் ருலேயன்மையின் வென்றிடினு மன்றும், கருமவகள் பல வுங்தெகெலின் வேண்டற்க வென்றுங் கூறினர். எய்தியபொருள் சூதாடுவார் நீங்காமைக்கு நிட்டதோர் மீளையென்பதாகம், அதனைப் பின்னுயருழத்தலும், உவமையாற் பெற்றும்.

(தே - ப - ரை.)—வெற்றிடினும் - (தான்) வெல்லும்வலிமையுடைஞெதிலும், சூதினை - சூதாகிலே, வேண்டற்க - விரும்பாதிருக்கக்கடவன்; (வெற்றுபொருள் பெறுவர் உண்டெனினும்) வென்றதும் - அவ்வென்றபொருளும், தூண்டில் பொன் - (இரையால் மறைந்த) தூண்டி மீனும்பை, மீன் விழுங்கியற்று - மீன் யதுபோலும்.

உ. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
லன்றெய்தி வாழ்வதோ ராறு.

(பரி-ரை.) எ-து,—அத்தூண்டிற்பொன்போன்ற ஒன்றனை முன்பெற்று இன்னும் பெறுதுமென்னுமவ கருதுதால் நூற்றினை யிழந்து வறியராஞ் சூதர்க்கும் பொருளால் அறனுமின்பமுமெய்தி வாழ்வதொரு தெறியுண்டாமோ ஆகாது, எ-று.

அவ்வாற்றாற் பொருளிழந்தே வருதலான், அதனலெய்தும் பயனும் அவர்க் கில்லை யென்பதாம்.

(தே - ப - ரை.)—ஒன்றை எய்தி-(அத் தூண்டிலிறம்பு போன்ற) ஒன்றினை முன்பெற்று, (இன்னும் பெறுவோ மென்னுங் கருத்தால்), நூறு இழக்கும் - நூறாயினை இழக்து வறியராகும், சூதர்க்கும் - சூதாடுவோர்க்கும், நன்று எய்தி - (அப்பொருளால்) அறமு

மின்பழும்பெற்று, வாழ்வ தா ஓர் ஆ ய - வா ந்வதொரு வழி, டாங்கொல் - உண்டாமோ.

ங. உருளாய பேயவா தா கூறிற் பொ ருளாயம்
போ றப்பு றுமே படும்.

(பரி-ரை.) எ-து,—உருளுங் கவறுநின்கட் பட்ட ஆயத்தை இடை விடாதுகூறுங் காலமெல்லாம், அவனிற்றியபொருளும் அவன் பொருள் வரு வாயும் அவனை விட்டுப்போய்ப் பகைவர்க்ணே சேருமும், எ-று.

கவற்றினதருட்சியை அதனினுடைய உபதிநின்மே லேறியும், சூதாடலே அது கூறலாகிய காணத்தின்மே விட்டுவிடவுஞர். பொருளாயமென்பது உம்மைத்தொகை. ஆயம்—கடமொழித்தற்கொல். காரணத்தணனும் இயற் றறகணனும் கருதிலுலகினை, உரைவ பிரனைம் பகைவர் பற் கொல்லுமென் பதாம்.

(தெ - ப - ரை.)—உருள் ஆயம் - (உருளுங் கவற்றில் அகப் பட்ட) ஆதாயத் தை, (அவனது-இடைவிடாமல், கூறிற் - சொல்லித் (சூதாடு) மாயின், பொருள் - (அதரன் சம்பாதித்த) பொருளும், ஆயம் - (அவன்) பொருள் யாவையும், போய் - (அவனிடமிட்டு) போய், புறமே படும் - பகைவரிடத்தே சேரும்.

ச. சிறுமை பலசெய்து சீரழிக் குஞ்சூதின்
வறுமை தருவதொன் றில்

(பரி-ரை.) எ-து,—தன்னை விழைந்தார்க்கு முன்னில்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்து உள்ளபுகழையுங் கெடுக்குஞ் சூதுபோல் கல்குர வினைக் கொடுக்கவல்லது பிறிதொன்றில்லை, எ-று.

அத்துன்பங்கள் முன்னார்க்கூறுப. கல்வினைகளையும் வல்வினைகளையும் நீக் கித் தீவினைகளையுந் தீயினதுரையுங் கூட்டுதலால், சீரழிக்கு மென்றார். வறு மைக்கு எல்லாவாவ ரென்பதாம்.

(தெ - ப - ரை.)—சிறுமை பல - (முன்னில்லாத) துன்பங் கள்பலவும், செய்து - (தன்னை விரும்பினவர்க்கு) செய்து, சீர் - (உள்ள) புகழையும், அழிக்கும் - கெடுக்கும், சூதின் - சூதுபோல, வறுமை - வறுமையை, தருவது - கொடுக்கவல்லது, ஒன்று - வேறொன்று, இல் - இல்லை.

நி. கவறுங் கழகமுங் கையுக் தருக்கி
யிவறியா நில்லாகி யார்.

(பரி-ரை.) எ-து,—முற்காலத்துத் தாமுளராகியே இலராகியொழுகினர் கவற்றினையும் அஃதோடுங் களத்தினையும் அவ்வாடற்கு வேண்டிய கைத்தொழி லினையும் மேற்கொண்டு கைவிடாத வேந்தர், எ-று.

கைத்தொழில்—வெல்லுமாயம்படப் பிடிந்தெறிதல். * அவ்விவறுதலாற் பாண்டவர் தம்மாசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டு மறைந்தொழுகினு ரென அனுபவங் காட்டியவாறு. இவை யைந்து பாட்டாலும் அதனது வறுமை பயத்தற் குரித்தாங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—இல்லாகியார் - (முற்காலத்திலே தாம் இருந்தும்) இல்லாதவரா யொழுகினவர், கவறும் - சூதினையும், கழகமும் - அதையாடு மிடத்தினையும், கையற் - (அவ்வாடுதற்கு வேண்டும்) கைத்தொழிலினையும், தருக்கு இவறியார் - மேற்கொண்டு கைவிடாத வேந்தர்.

சு அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப் பட்டார்.

(பரி-ரை.) எ-து,—தன்பெயர்சொல்லல் மங்கலமன்மையிற் சூதென்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்பட்டார் இம்மைக்கண் வயிறுரப்பெறார், மறுமைக்கண் நிரயத்துன்ப முழப்பர், எ-று.

செல்வமெகெடுத்து நல்குரவு கொடுத்தற்றாயினும் வேறுபடாமையிற் சூதெனனு முகடியென்றும், வெறாறி தோல்விக ணேக்கி ஒருபொழுதும் விடாராகலின் ஈண்டு அகடாரென்றும்,பொய்யுங களவும் முதலிய பாவங்க ளீட்டலின் ஆணை அல்லலுழப்பரென்றது கூறினர். வயிறாமை சொல் லவே, எனைப்புலன்க ணுகரப்பெறுமை சொல்ல வேனடா வாயிறாறு. உழப்ப ரென்பது எதிர்காலவினை.

(தே - ப - ரை.)—சூது என்னும் - (தனது பெயர்சொல்லல் மங்கல மல்லாமையால் சூதென்று (வேறுபெயர்) சொல்லப்படுகிற, முகடியால் - மூதேவியால், மூடப்பட்டார் - விழுங்கப்பட்டவர், அகடு ஆரார் - (இம்மையிலே) வயிறு நிறையப்பெறார்; அல்லல் உழப்பர் - (மறுமையில்) நரகத்துன்ப மனுபவிப்பர்.

"அவ்வாயக் கவறுதலால்" எனவும் பாடம்,

எ. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

(பரி-ரை.) எ-து,—அறம் பொருளின்பங்களுட் கடைத்தரமான அரசனுக்குச் சூதாடு களத்தினிடத்தே கழியுமாயின், அக்கழிவு தொன்றுதொட்டுவந்த அவன் செல்வத்தினையும் நற் குணங்களையும் போக்கும், எ-று.

பழகியவென்பது பண்புடனுமியையும். தான் செய்துகொள்ளும் அற முதலியவேயன்றி முன்னோரைத்தொடங்கி வருகின்ற செல்வமும் முன் செய்த கல்வினையின் பயனுய பண்பும் இலவாமென்பதாம்.

(தெ - ப - ரை.)—காலை - (அறம் பொருளின்பங்களுக்கு விதித்த) காலம். கழகத்து - சூதாடிடத்து. புகின் - (அரசனுக்கு) கழியுமாயின்; (அக்கழிவு), பழகிய - நெடுநாளாய்வந்த, செல்வமும் - (அவன்) செல்வத்தையும், பண்பும் - நற்குணங்களையும், கெடுக்கும் - போக்கும்.

அ. பொருள்கெடுத்துப் பொய்மேற்கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது.

(பரி-ரை.) எ-து,—சூது தனைப் பயின்றவன்பொருளைக் கெடுத்துப் பொய்ம்மையை மேற்கொள்ளப்பண்ணி, மனத்திற்கும் அருளைக்கெடுத்து இவ்வாற்ருன் அவனை இருமையினும் துன்பமுறுவிக்கும், எ-று.

இத்தொடர்க்கண மூன்றற்கும் சூது வினைமுதலாகவும், தோல்வி, வெற்றி, செற்றமென்பன முறையே கருவிளாகவும் கொள்க. முன்னதனுன் இம்மையினும், ஏனையவற்ருன் மறுமையினுமாம். பொருள்கொண்டதென்பது பாடமாயின், அவ்வசசத்திற்கு முற்பு மேற்கொளப்பட்டி மேற்கோடலாகிய வினை முதல்வினை.

(தெ - ப - ரை.)—சூது—, பொருள் கெடுத்து - (தன்னைப் பழகினவனது) பொருளைக்கெடுத்து, பொய் - பொய்யை, மேற்கொளீஇ - மேற்கொள்ளப்பண்ணி, அருள்கெடுத்து - (மனதில் எழுகிற) அருளைக்கெடுத்து, (இவ்வழியால்), அல்லல் உழப்பிக்கும் - (அவனை இருமையிலும்) துன்பமுறுவிக்கும்.

கூ. உடைசெல்வ மூழ்ஞெளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

(பரி-ரை.) எ-து,—அரசன் சூதினைத் தனக்கு விநோதத்தொழிலாக விரும்புமாயின் அவனை ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையுமென்கிற ஐவகைத்துஞ் சாராவாம், எ-று.

ஆயம்—ஆகுபெயர். இச்சிறப்புமுறை செய்யுணேக்கிப் பிறழ்கின்றது. செல்வம்—அறவகை யுறுப்புக்கள். ஈண்டை யென்பனவற்றுல் துப்புரவு வெல்லாம கொள்ளப்படும். காலமும் கருத்தும் பெருமையின், இவையுள வாகாவென்பதாம். இவை நான்குபாட்டானும் சிறுமைபலசெய்து அவற்று னிருமையுங் கெடுத்தல் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—(அரசன்) ஆயம் - சூதினை, கொளின் - (தனக்கு விரோயபாட்டுத்தாழிலாக) விரும்புவானையின், ஓரி - ஓரியும், கல்லி - கல்லியும், செல்வம் - செல்வராம், வளன் - வளனும், உடை - உடையும். என்ற ஞாம் - என்று சொல்லப்பட்ட வெல் வைந்தும், அடையாவாம் - (அவனை) சேராவாம்.

கo இடர்தொன்றாஉய் காதலிற்குஞ் சூதேபோற் றுன்ப முழுதொன்றாஉங் காதற் றுயிர்.

(பதவுரை.) எ-து;—சூதாடலான் இருமைப்பயன்களையு மிழக்குந்தோறும் அதன்மேற் காதல்செய்யுஞ் சூதன்போல உடம்பான் மூவகைத் துன்பங்களையும் அனுபவிக்குந்தோறும் அதன்மேற் காதலையுடைத்து உயிர், எ-று.

குதி—ஆகுபெயர். உயிரினதுறியாமை கூறவார்போன்று சூதனதுறியாமை கூறுதல கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற்பொருட்டு உவமமாக்கிக் கூறினர். இங்ஙனந்மறைமுகத்தாற் சூதினை வெறுத்தொழிவானே யொக்கும் உடம்பினை வெறுத்தொழியு முபாயனவுங் கொள்க. இதனுன் அஃதொழிதற் கருமையும் ஒழிந்தாரது பெருமையுங் கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—இழுக்கே தாஉம் - (சூதாடலால் இருமைப் பயன்களையும்) இழக்குந்தோறும், காதலிந்தும் - (அதன்மேல்) ஆசைசெய்யும், சூதேபோல - சூதனேபோல, உயிர்—, துன்பம் உழுக்கெ தாஉம் - (உடம்பால்) மூவகைத் துன்பங்களையும் அனுபவிக்குந்தாயும், காதற்று - (அதன்மேல்) ஆசையையுடைத்து.

கூறும்-ம் அதிகாரம்—மருந்து.

பழவினையாலும் காரணங்களாலும் மக்கட்கு வாதாழுதலிய பிணிகள் வரும்; அவற்றுட் பழவினையான் வருவன அதன்கழிவின்கண்ணல்லது தீராமையின் அவையொழித்து, வேனேக் காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின்றிறங் கூறுகின்றார். காரணங்களாவன - உணவு செயல்கள தொவ்வாமையாகலின், பிணிகளுங் காரணத்தான் வருவனவாயின.

க. மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

(பரி-ரை.) எ-து.—உணவுஞ் செயல்களும் ஒருவன் பகுதிக்கொத்த வள வினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும் ஆயுள்வேத முடையா ரால் வாதமுதலாக வெண்ணப்பட்ட மூன்றுநோயும் அவனுக்குத் துன்பஞ் செய்யும், எ-று.

நூலோ ரெண்ணியவென்க; அவர் அவர்முன்னகுத வாதப்பகுதி பித் தப்பகுதி ழப்பகுதியென்னும் பகுதிப்பாடு பெற்றமை. அவற்றிற் குணவொத்த லாவது சுவை வீரியங்களாறும் அளவானும் பொருந்துதல். செயல்களொத்த லாவது மனமொழி மெய்களாற் செய்யுந் தொழில்களே அவைவருந்துவதற்கு முன்னே யொழிதல். இவையிரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல் செய் யின், அவை தத்தங் கூறினில்லாவாய் வருத்துமென்பதாம். காரண மிரண்டும் அவாய்நிலையான் வந்தன. முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. இதனால், யாக்கைகட் கியல்பாகிய நோய் மூவகைத்தென்பதூஉம், அவை துன்பஞ் செய்தற் காரணம் இருவகைத்தென்பதூஉம், கூறப்பட்டன. இன்பஞ் செய்தற்காரணம் முனைகூறுப.

(தே - ப - ரை)—(உணவும் செயல்களும் ஒருவன் சரீர சுபா வத்துக்கு ஒத்தவளவினவன்றி) மிகினும் - (அதனின்) மிகுமாயி னும், குறையினும் - குறையுமாயினும், நூலோர் - ஆயுள்வேதமுணர் யோராற், வளி முதல் ஆ - வாதமுதலாக, எண்ணிய - எண்ணப் பட்ட, மூன்று - மூன்றுநோயும், நோய் - துன்பத்தை, செய்யும் - (அவனுக்குச்) செய்யும்.

உ. மருந்தெனவேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

(பரி-ரை.) எ-து,—ஒருவன் முன்னுண்டது அற்றபடியைக் குறிகளாற் றெளியவறிந்து பின்னுணணுமாயின் அவன்யாக்கைக்கு மருந்தென்று வேறு வேண்டாவாம், எ-று.

குறிகளாவன யாக்கை நொய்ம்மை, நோக்கின்றாய்மை, கரணங்களொ ழிற் குரியவாதல், பசியிருகுலென விவை முதலாயின. பிணிகள் யாக்கைய வாகலின், யாக்கைக்கென்றார். உண்ணென்பது அதனருமை தோன்ற

(தே - ப - ரை)—(ஒருவன்) அருந்தியது - (முன்) உண்ணப் பட்டது, அற்றது - சீரணித்தபடியை, போற்றி - (குறிகளாலே) தெளியவறிந்து, உணின் - (பின்னே) உண்பானாயின், யாக்கைக்கு-

(அவன்) உடம்புக்கு, மருந்து என - மருந்தென்று, வேண்டா ஆம்- (வேறு) வேண்டுவதில்லை.

ந. அற்ற ளவறிந் துண்க வஃதிடம்பு
பெற்ற னெடிதுய்க்கு மாறு.

(பரி-ரை.) எ-து,—முன்னுண்டது அற்றதை பின்னுணபதனை அறுமளவறிந்து அவ்வளவிற்றாக உண்க, இற்பபவும் பலவாய பிறயாக்கைகளிற் பிழைத்துப் பெறற்கரிய இம்மானுடபாகையைப் பெற்றான் அதனை நெடுங் காலங்கொண்டு செலுத்துதற்கு அதுவாகலான, எ-று.

இம்மை மறுமை வீடு பேறாக வெய்தற்பாலது ஒன்றுமேயாகலின் உடம்புபெற்றுனென்றும், அது நெடிதுநின்றுழி அவை பெருகச செய்து கொள்ளலாமாகலின் நெடிதுப்க்குமாறென்றும கூறினர். பெற்றுலென்று பாடமோதுவாரு முளர்.

(தே - ப - ரை.)—அற்றல்-(முன்னுண்ணப்பட்டது) சீரணித்தால், (பின்னுண்ணப்படுவதனை), அளவு அறிந்து - (அறும்) அளவறிந்து, உண்க - (அவ்வளவினதாக) உண்ணக்கடவன் ; உடம்பு- (பெறுதற்கரிய விம்மனித) உடம்பை, பெற்றான் - பெற்றவன், நெடிது - நெடுங்காலம், உய்க்கும் ஆறு - (அதனை) கொண்டு மவ்வழி, அஃது - அதுவாம், (ஆகலால்).

ஈ. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து

(பரி-ரை.) எ-து,—முன்னுண்டது அற்றபடியையறிந்து பின் மிகப் பசித்து உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டுண்க, எ-று.

* அற்றதறிந்தென்னும் பெயர்த்துரை அதனை யாப்புறுத்தற்பொருட்டு. உண்டது அற்றலும் அதன் பயனுகிய இரத மருசாகலான் அதுவு மறல் வேண்டுமென்பார் மிகப்பசித்தென்றார். பசித்தல்வினை யுண்டு உடையான்மேனின்றது. மாறுகொள்ளாமையாவது உண்பான் பகுதியோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களாற்றம்முண்மாறு கொள்ளாமையுமாம். அவையாவன முறையே வாத பித்த ஐகளானுய பகுதிகடோதவற்றைச செய்வனவாதலும், பெரும்பொழுது சிறு பொழுதென்னுங் காலவேறுபாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற் காகாமையும், தேனுநெய்யுந் தம்முளொத்து நஞ்சாதல் போல்வனவுமாம்.

* "பெற்றதன் பெயர்த்துரை" எனவும் பிற்பேறும், பெயர்த்துரை - அதுவாதலும்.

அவற்றைக் குறிக்கொள்ளாது மனம்பட்டவாற்றுற் றுப்பின் அதனனே நோயும் மரணமும் வருதலின், கடைப்பிடித் தென்றார்.

(ப - ரை.)—அற்றது அறிந்து - (முன்னுண்ணப்பட்டது) சீரணித்தபடி யை அறிந்து, தூவாப் பசித்து - (பின்னே) மிகப் பசித்து, (உண்ணும்போது). மாறு அல்ல - மாறுகொள்ளாத உணவு களை, கடைப்பிடித்து - தூரிந்தொன்று. துய்க்க-உண்ணக்கடவன்.

மாறுபா டில்லாத வுண்டி மருத்தெரணி
னூறுபா டில்லை யுயிர்க்கு

(பரி-ரை.) எ-து,—அமுலவகை மாறுகோளுதில்லாத உணவைத் னுள்ளம் வேண்டிய வளவிலுனன்றிப் பினிவாரா வளவிலுல் ஒருவனுண்ணு மாயின் அவனுயிர்க்குப் பினிகளாற் றுன்பம் விளையாவுணடாகா து, எ-று.

மருவதனே ரறைன்றார்; அந்து இன்பத்திற் செல்லாதாயிற்று, இல்லை யென்பது தொடர்பாகலின். துன்பமுறுவது உயிரேயாதலின், அதன்மேல் வைத்துக்கூறினர். மாறுபா டில்லைழியுங குறைதல் நன்றென்பதாம். இவை கான்குபாட்டானும் உண்ணப்படுவனவும், அவற்றளவும், காலமும் பயனும் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—மாறுபாடு இல்லாத - அம்மூவகை மாறு கோளும் இல்லாத, உண்டி - உணவை, மறுத்து - (தன்னுள்ளம் வேண்டியவளவாய) மறுத்து, (பிணிவாராதவளவில்), உண்ணின்- (ஒருவன்) உண்டால், உயிர்த்து - (அவன்) உயிர்த்து, ஊறுபாடு - (பிணிகளாலே துன்பம்வினாதல், இல்லை - உண்டாகாது.

சூ. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்

(பரி-ரை.) எ-து,—அக்குறைதலே நன்றென்றறிந்து அவ்வாறே யுண் பவன்மாட்டு இன்பம் நீங்காது நிலைநிற்குமாறுபோல் மிகப் பெரியவிரையை விழுங்குவான்மாட்டு நோய் நீங்காது நிலைநிற்கும், எ-று.

அவ்வாறேயுண்டல் உண்ணலாமளவிற் சிறிது குறையவுண்டல். இன்ப மாவது வாதமுதலிய மூன்றும் தத்தநிலையிற் பிரியாமையின் மனமொழிமெய் கள் அவன் வயத்தவாதலும் அதனுன் அறமுதலிய நான்குமெய்தலுமாம். இரையை யளவின்றியெடுத்து அதனுன்வருந்தி லிலங்கோ டொத்தலின், இரையானென்றார். விதி பெரிர்மறைகளே உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு.

(தே - ப - ரை.)—இழிவு அறிந்து - அக்குறைதலே (நல்ல தென்று) அறிந்து; உண்பான்கண் - (அவ்வாறே) உண்பவனிடத்து, இன்பம்போல்-இன்பம் (நீங்காது நிலைநிற்குமாறு) போல, கழிபேர் இரையான்கண் - மிகப்பெரிய இரைமை மிழுங்குவோனிடத்து, நோய்—; நிற்கும் - நீங்காதிருக்கும்.

எ. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும்

(பரி-ரை.) எ-து,—தன்பகுதியும் அதற்கேற்றவுணவும் காலமும் மாராயாது வேண்டியதோருணவை வேண்டியகாலத்து வயிற்றுத் தீயள வன்றி ஒருவன் மிகவுண்ணுமாயின் அவன்மாட்டு நோய்கள் எல்லையற வளரும், எ-று.

தெரியாமையினைக்குச் செயப்படுபொருள்கள் அதிகாரத்தின் வந்தன. நோய்—காதியொருமை. இவை யிரண்டுபொட்டாணும் அவ்வகை யுண்ணு வழிப்படி மிழுக்குக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—தெரியான் - (தன்சரீரசுபாவமும் அதற்கேற்ற வுணவும் காலமும்) ஆராயாதுகி, (வேண்டிய உணவை வேண்டியகாலத்து), தீயளவு அன்றி - (வயிற்றுத் தீயளவல்லாமல், பெரிது உண்ணின் - (ஒருவன் மிகவுண்ணுமாயின், நோய்—, அளவுஇன்றி - அளவில்லாமல், படும் - அவனிடத்தே வளரும்.

அ நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக் நும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(பரி-ரை.) எ-து,—மருத்துவனுயினன் ஆதுரன்மாட்டு நிகழ்கின்ற நோயை அதன்குறிகளான் இன்னதென்று துணிந்து, பின் அதுவருதற் காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, பின் அது தீர்க்கு முபாயங்களினை யறிந்து அதனைச் செய்யும் வழிப் பிழையாமற் செய்க, எ-று.

காரணம்—உணவு செயலென மூன்கூமிய வியண்டும். அவற்றை ஆயுள் வேதமுடையார் நிதானமென்ப. அவை நாடித்தற் பயன் நோயினையும் வாயினையும் ஐயமறத் துணிதல். மருத்துசெய்தல், உதிராங்ஙோதல், அறுத்தல், சுடுதன்முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு, அது துணிக்கும் வாயென்றார். * "கழுவாயுமுள" என்றார் பிறரும். பிழையாமை—பழையமருந்துவர் செய்து வருகின்ற முறைமையிற் றப்பாமை.

(தே - ப - ரை.)—(மருத்துவன்) நோய் - (நோயாளியிடத்து நிகழ்கின்ற) நோயை, நாடி - (அதன் குறிகளால் இன்னதென்று) தணிர்ந்து, நோய்முதல் - (பின்பு) அந்நோய்க்கு மூதற் காரணத்தை, நாடி - ஆராய்ந்து, அது நணிக்கும் வாய் - (இவ்) அது தீர்க்கும் உபாயத்தினை, நாடி - அறிந்து, வாய்ப்பச் செயல் - (அதனால்) பிழை படாமற் செய்யக்கடவன்

கூ. உற்ற னளவும் பிணியள வும்மரு
கற்றன் கருதிச் செயல்

(பரி-ரை.) எ-து —ஆயுள்வேதத்தினைக் கற்றமருத்துவன், அவ் பாயத் தினைச செய்யுங்காலை அதனாளவினையும் வண்ண நகழ்கின்ற நோயி னள வினையும் தன்செயற்கேற்ற கால தினையும், அந் நாளின் நியால் நோக்கி அவற் றோடு பொருந்தச்செய்க, எ-று

ஆதானளவு—பருகி பருவம் வேகவை வலிகளி னளவு. பிணியளவு— சாத்தியம், அசாத்தியம், யாப்பியமென் றுஞ் சாதி வேறபாடும், தொடக்க நடு வீறென்னும அதன்பருவவேறபாடும், வண்மை மென்மைகளு முதலாயின. காலம் - மேற்சொல்லியன. இம்மூன்றும் பிழையாமல் தானெனறியானும் உணர்வு மிருதியானும் ஆராய்ந்து செயக வென்பார, கற்றன் கருதிச செய லென்றார். இவை யிரணபொட்டாலும் அவிழிக்குப்பட்டிழி மருத்துவன் தீர்க்குமாறு கூறப்பட்டது.

(தே - ப - ரை)—கற்றார் - (ஆயுள்வேதத்தை) கற்றமருத் துவன். (அவ்வுபாயத்தினை செப்புங்கால்). உற்றன் அளவும் - நோயாளி யளவையும், பிணி அளவும் - (அவனிடத்து நிகழ்கின்ற) நோயினளவையும், காலமும் - (தாசெயற்கேற்ற) காலத்தினையும், கருதி - (அந் நூல்வழியால்) நோக்கி, செயல் - (அவைகளோடு பொ ருந்த) செய்யக்கடவன்.

கo உறுவன் தீர்பயாள் மருத்துவ செல்வனென்
றப் பானைற் கூற்றோ மருந்து

(பரி-ரை) எ-து.—பிணிகளு மருத்துவது அவனேயுற்றவன் அவனைத் தீர்க்கு மருத்துவன் அவனுக்குக் கருவியாகிய மருத்து அவனைப் பிழையாமல்* இயற்றுவானென்று சொல்லப்பட்ட நான்கு பகுதியையுடைய நான்கு நிறத் தது, எ-று.

* சாதியம்-தீராதகுணத்தது. அசாத்தியம்-தீராதகுணத்தாதது. யாபியம்-பெரும் பானமை தீராதகுணத்தாதும் சிறுபானமை தீராதகுணத்தாதுமென கொள்ளத்தகுது.

சூடிஅ கூடி-ம் அதி. மருந்து

நான்கென்னு மென வருகின்றமையின், அதுநோக்கி அப்பாலென் றெழுந்தார். நாற்கூற்றதென்பது விகாரமாயிற்று. அவற்றுள் உற்றவன்வகை நான்காவன-பொருளுடைமை, மருத்துவன் வழி நிற்றல், நோய்நீலை யுணர்த் தல் வன்மை, மருத்துத்தன்பம் பொறுத்தலென விவை. தீர்ப்பான்வகை நான்காவன-பலபிணிநோய் காணடற்கஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டோதிய கல்வியு நுணணறிவுமுடைமை, பலகாலுந் தீர்த்துவருதல், மனமொழிமெய்க யேவாதலென விவை. மருந்தின்வகை நான்காவன - பலபிணிகட்குமேற்றல், சுவை வீரியம் விளைவாறறல்களான் மம்படுத்தல், எளிதினெய்தப்படுதல்,பருதி யோடு பொருந்துதலென விவை. இயற்றுவான்வகை நான்காவன—ஆதரன் மாட்டன்புடைமை, மனமொழிமெய்க யேவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை. அறிவுடைமை யென விவை. இவையெல்லாங கூடியவழி யல்லது பிணிதீராமையின், இத்தொகுதியையும் மருந்தென்றார். ஆயுள்வேத முடையாரும் இவை கால்களாக நடக்குமெனபதுபற்றிப்பாதமென்றும், இவை மாறுபட்டவழிச சாத்தியமு முதிர்ந்து அசாத்தியமா மென்றுங கூறினர். இத னால் அருனைத் தீர்த்தற்கு வேணடுவனவெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—மருந்து - (பிணிக்கு) மருந்தாவது, உற்ற வன் - (அதனை) யடைந்தவன், தீர்ப்பான் - (அதனைத்) தீர்க்கு மருத் துவன், மருந்து - (அவனுக்குச் சாதனமாகிய) மருந்து, உழைச் செல்வான் - (அதனைத்தபபாமல்) செய்பவன், என்ற - என்று சொல்லப்பட்ட, அப்பால் - அநநான்கு பகுதியையுடைய, நாற் கூற்று - நான்

ஒழிபியல்.

அவ்வரசியலினும் அங்கவியலினும் அடங்கா தொழிக்கவற்ற நியல்பு பதின்மூன் றதிகாரத்தாற் கூறவானருடங்கி, முதற்கட் குடிமை யுறுகின்றார்.

கூஉம் அதிகாரம்—குடிமை.

அஃதாவது உயர்ந்த குடியின்கட் பிறராதது தன்மை. உயர்ந்த குடிப் பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின், அசிறப்புப் பற்றி இது முன்வைக்கப்பட்டது.

க. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

(பரி-ரை) எ-து,—செம்மையும் நாணும் சேரக் குடிப்பிறந்தார்மாட்டல்லது பிறர்மாட் டியற்கையாக வுளவாகா, எ-று.

இல்லுக்குடி யென்பன ரண யொர்த்தவறிவின் மேல. செம்மை—கருத்துஞ் சொல்லுஞ் செயலுந் தம்முணமாருகாமை நாண-பழி பாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவா கற்பிக்கவேண்டாமற் ருமேபுன வாம், பிறர்க்காயிற் கற்பித்தவழியும் நெடிது நில்லா வென்பதாம்.

(தே - ப - ரை.)—செபபமும் - செம்மையும், நாணும் - வெட்கமும், ஒருங்கு - ஒருசேர, இல் பிறந்தார்கண் அல்லது - உயர்ந்த குடியிலே பிறந்தவரிடத்தல்லாமல் (பிறரிடத்தில்), இயல்பு ஆக - சுபாவமாக, இல்லை - உண்டாகா

உ. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார்.

(பரி-ரை.) எ-து,—உயர்ந்த குடியின்கட் பிறந்தார் தமக்குரிய ஒழுக்கம் மெய்ம்மை நாணெனப்பட்ட இம் மூன்றன்கண்ணும் கல்வியானன்றித் தாமாகவே வழுவார், எ-று.

ஒழுக்க முதலியன மெய்ம்மொழி மனங்களினவாகலின், அம்முறைய வாயின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், இழுக்காரென்றார்.

(தெ-ப-ரை)—குடிப்பிறந்தார்-உயர்ந்த குடியிற்பிறந்தவர், (கடமக்குரிய), ஒழுக்கமும் - நல்லாசாரத்தையும். வாயமையும் - மெய்ம்மையும். நாணும் - வெட்கமும் ஆகிய, இம்மூன்றும் - இம்மூன்று நிடத்தும். இழுக்கார் - (தாழ்வில்லாமல் மேலாகவே) வழுவார

கூ கருவியாகை யின்செய் விகழாமை நான்குமே
வகை யெனப் பாய்மைக் குடிக்கு

(பரி-ரை.) எ-து,—எக்காலத்துந் தாழ்வில்லாத குடியின்கட் பிறந்தாராக்கு வறியார் சென்றவழி முகமலராசியும், எளளன கொடுத்தலும், இன்சொற் சொலலுமும், இகழாமையுமாகிய இந்நானகும் உரிய கூறென்று சொல்லுவர் நூலோர், எ-று

பொயயாமை சிறிதுடைமையிற சிறப்பின்மையை வாய்மையெனறும், ஈகை லாரை யெல்லாரு மெச்சுதராகலின் இதழாமையை அவர் கூறுகியது கூறினர். குடி—ஆகுபெயர். நான்கின்வகையெனபது பாடமாயின், வாய்மைக குடிப்பிறதாராகுப பிறரை வேறாடு இநானான்காலுளதாமென முரைக்க. இவை மூனறுபாட்டாலுங குடிப்பிறதாரியல்ப கூறபபட்டது.

(தெ-ப-ரை)—வாய்மை - (எக்காலத்தும்) வேறுபடாத, குடிக்கு - (உயரிற் பிறந்தவர்க்கு (வறியவர் சென்றவிடத்து), நலகை - முகமலராசியும், ஈகை - (உளளவை) கொடுத்தலும், இன சொல் - இனியசொலலும் (கொடாவிடத்தும்), இகழாமை - இகழாமையும், நான்கும் - (ஆகிய) நானகும், வகை - (உரிய) வகையாகும், என்ப - என்று சொல்லுவர் (நூலோர்)

ச. அடுகின்ற கோடி பெறினுங குடிப்பறந்தார்
குறைவு செய்த லிலர்

(பரி-ரை.) எ-து,—பலவாக எடுகின்ற கோடி யளவிறரிய பொருளைப் பெறுராயினும் உயர்ந்த குடியின்கட் பிறந்தார் தம் மாழுக்கங குன்றுந் தொழிலகளைச் செய்யார், எ-று.

அடுகின்ற கோடியெனபது எண் டெணணப்படும் பொருணமே னின்றது. குனறுந தொழிலள - குன்றுதற் கேதுவாய தொழில்கள.

(தெ-ப-ரை)—அடுக்கின்ற - (பலவாக) அடுக்கிய, கோடி - கோடியளவினவாகிய பொருளை, பெறினும் - பெற்றாலும், குடிப்

---

[1] மேலே எசு-ப ஆந், தொகு பெயலையை, உ-ம்

பிறந்தார் - உயர்ந்தகுடியிலே பிறந்தவர், குன்றுவ - (தம்மொழுக்கங்) குன்றுந்தொழில்களை, செய்தலிலர் - செய்யமாட்டார்கள்.

நி. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று.

(பரி-ரை.) எ-து —தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார் தாங்கொடுக்கும் பொருள் பலவிடையிற் சுருங்கிய விடத்தும் தம்பணபுடைமையின் நீங்காரா, எ-று.

தொன்றுதொட்டு வருதல் - சோழ சோழ பாண்டிய ரென்றாற்போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருதல். அவர்க்கு றல்குவாவது வழங்குவது ளள் வீழ்வதாகலின், அதனையே கூறினர்.

(தே - ப - ரை.)—பழம் குடி - பழமைகொட்டிவருகிற குடியிலே பிறந்தார், வழங்குவது - (தாம்) கொடுக்கும்பொருள், உள் வீழ்ந்த கண்ணும் - மூர்ச்சையளவிலே சுருங்கியவிடத்தும், பண்பின் - (தமது) குணமுடைமையில், தலைப் பிரிதல் இன்று - நில்காரர்.

கூ. தலைப்பற்றிய சால்பிற் செய்பாவமற்று
குலம்பற்றி வாழ்தலென் பார்

(பரி-ரை.) எ-து,—வலையகத்து வருகின்ற நவகுலமரபினை டொத்து வாழ்க்கடவேமென்று கருதி அவ்வாறு வாழ்வார், வறுமையுற்ற விடத்தும், வஞ்சனையைப பொருந்தி, அமைவிலவாய தொழில்களைச் செய்யார், எ-று.

அமைவின்மை—அமைபடாதிருக்கை. இவை மூன்றுபாட்டானும் அவர் வறுமையுற்றவிடத்தும் அவ்வியல்பின் வேறுபடாரென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை)—மாசு அற்ற - வசையற்று வருகின்ற, குலம் பற்றி - (நவகுல) குடிமரபிற்றொடர்ந்து, வாழ்த்தும் என்பார் - வாழ்த்தக்கடவேமென்று நினைக்கும் அப்படியே வாழ்வோர் (வறுமையுற்றவிடத்தும்), தலைப் பற்றி - வஞ்சனையைப் பொருந்தி, சால்பு இல - அமைவில்லாத தொழில்களை, செய்யார் - செய்யமாட்டார்.

எ. குடிபபிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல லுயர்ந்து.

(பரி-ரை.) எ-து,—உயர்ந்த குடியின்கட் பிறந்தார்மாட் டொன்றும் குற்றம், தான் சிறிதேயாயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல வுலகிற் தோன்றும், எ-று.

உயர்குடி முதலிய பொருள்வகை மூன்றற்கும் விசும் [redacted]மை வகை யொத்துப் பான்மாறுபட்டது. குடிய துயர்ச்சியா [redacted]ன்ற அவர் நற்குணங்களோடு மாறுதலானும், உலகெங்கும் [redacted]ப்படு மென்பதாம்.

(தே - ப - ரை)—குடி பிறர்ந்தார்கண் - [redacted]யிற் பிறந்தவரிடத்தே (உண்டாகிற), குற்றம் - குற்றமானது, (தான் சிறியதேயாயினும்), விசும்பின் - ஆகாசத்தின்கண், மதிக்கண் - சந்திரனிடத்து, மறு போல - களங்கம்போல, உயர்ந்து - ஓங்கி, விளங்கும் - தோன்றும்

அ. நலத்தின்க ணூரின்மை தோன்றி னவ்வீணக்
குலத்தின்க ணீயப் படும்.

(பரி-ரை.) எ-து,—குல நல முடையனுய் வருகின்றவன்கண்ணே ஈரமின்மை யுளதாமாயின், அவனே அக குலப பிறப்பின்கண்ணே ழுயப்படும் உலகம், எ-று.

நலமும் குலமும் ஆருபெயர். நாரின்மையாற் கொடாமையுங கடிஞ் சொல்லு முதலிய கூறப்பட்டன. தோன்றினென்பது தோன்றுமை விளக்கி நின்றது. நலனுடையனுய வருதலினிடையே இவை தோன்றலின், உள்ளது ஐயமாயிற்று. உலகமென்பது அவாய் நிலையான் வந்தது. ழுயப்படலென்பது பாடமாயின், ஐயப்படுகவென விதியாகவி யுரைக்க. இவை யிரண்டுபோட்டானும் வேறுபட்டவழிப்படி மிழுகருக் கூறபபட்டது.

(தே - ப - ரை)—நலத்தின்கண் - (குல) நலமுடையனுய் வருகின்றவனிடத்தே, நா இன்மை - அன்பில்லாமை, தோன்றின் - உண்டாமையின், அவனை—, குலத்தின்கண் - அக்குலப் பிறப்பிடத்தே, ஐயப்படும் - சந்தேகப்படும் (உலகம்)

கூ. நிலத்திற் கிடந்தமை காலகாட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச சொல்.

(பரி-ரை.) எ-து,—நிலத்தி னியல்பை அதன்கண முளைத்த முளை காட்டும்; அதுபோலக் குலத்தினியல்பை அதன்கட் பிறந்தாவாயிற்சொற் காட்டும், எ-று.

கிடந்தமை - உள்ளபடி. முளைத்தமாத்திரத்தானே நன்மையுந் தீமையுந் தெரிதலின், இலேமுதலிய கூறுராயினுர்; ஆகவே, பொருளினுஞ் செயன் முதலியன வேண்டாவாயின. குலத்தியல் பறிதற் கருவி கூறுவார்போன்று, இன்சொல் வேண்டுமென்றவா முயிற்று.



வ - ரை.)—நிலத்தில் கிடந்தமை - நிலத்தினியல்பை, னிடத்தேமுளைத்த) முளையான து, காட்டும் - காட்டி நபோல), குலத்தில் பிறந்தார் வாய்சொல் - நல்ல றந்தவர்களின் வாயிலுண்டா கிய சொற்கள். காட்டும்- தினியல்பை) காட்டும்.

கலம்வேண்டி ஞணுடைமை வேண்டுங் குலம்வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு

(பத-ம்.) எ-து,—ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவ ஞணுடையனுலே வேணுக; குலனுடைமையை வேண்டுவ னின். பணியப்படுவோர் யாவர்கட்டும் பணிதலே வேண்டுக, எ-று.

நலம்—புகழ், புணர்ணியங்கள். வேணுமென்பது விதிப்பொருட்டாய் நின்றது, * "விளைப்படு தொகுதியி லும்மை வேணும்" என்புழிப்போல. † அந்தணர் சான்றோ ரருந்தவத்தோர் தம்முனேரோ தந்தை தா யென் றிவ ரெல்லாருமடங்க, யாக்குமென்றுரா. பணிவு—இருக்கை யெழலும் எதிர் செலவும் முதலாயின. இவை யிரண்டோட்டானும குடிமைக்கு வேண்டி வன கூறப்பட்டன.

(தெ - ப - ரை)—(ஒருவன்) நலம் வேண்டின் - (தனக்கு) நல முடைமை வேண்டுவானுகில், நாண் உடைமை - நாணமுடையவ னுதலே, வேண்டும் - வேண்டக்கடவன்; குலம் வேண்டின் - குல முடைமையை வேண்டுவானுயின், யார்க்கும்-(வணங்கத்தக்க) யாவ ரிடத்தும். பணிவு - வணங்குதலே, வேண்டுக - வேண்டக்கடவன்.

கள-ம் அதிகாரம்—மானம்.

இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறுவான் ரொடங்கி, முதற்கண் மானங கூறுகின்றுரா. அஃதாவது எஞ்ஞான்றும் தன்னிலேயிற் ருழாமையும், தெய்வத்தாற் ருழ்வுவந்துழி உயிர்வாழாமையு மாம். இஃது, அக்குடிப்பிறப்பி னிறுத்துதலுடைமையின், அதிறப்புப்பற்றி முன்வைக்கப் பட்டது.

க. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருபா விடல்.

---

* தொல்காப்பியம், இளவியாகரம், ஈக.

† வெண்பாமாலே, பாடாணபடலம், ஈக

(பரி-ரை.) எ-து,—செய்யாதவழித் தாம் அமையாத சிறப்பினை யுடையேயெனினும், தகுகுடிப்பிறப்புத் தாழவருஞ் செல்லே யொழிக, எ-று.

அமையாமை—இறத்தல். குடிப்பிறப் பென்பது அதிகார முறைமையான் வந்தது. ஈ இழபவருவழி இனிவக்ரன செய்தாயினும் ஈய்கவென்னும் வடநூன் முறைமையை மறத்து, உடம்பினது நிலைபின்மையையும் மாண்டினது நிலையுடைமையையுங் நோக்கி அவை செய்யற்க வென்பதாம்.

(தெ - ப - ரை.)—இன்றி அமையா-செய்யாகவிடத்தே தாம் அமையாத, சிறப்பின ஆயினும்-சிறப்புடைபவையாலும், குன்ற-(தங்குடிப்பிறப்பானது) காற, வருப - வருஞ்செயல்களை, விடல்-விடக்கடவன்

ஒ- சிரிஞ்சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்

(பரி-ரை) எ-து,—புகழ் செய்யுமிடத்தைத் தகுமுடைமைக் கொவ்வாத இனிவரவுகளைச் செய்யார், புகழுடனே மானத்தை சிறந்நுலை விரும்புவார், எ-று.

எவ்விடத்தும் நிலை நிலையாத நிண்மையான் உளதாதல்பற்றிப் பேராண்மை யெனப்பட்டது. நிலையுடைய புகழின்பொருட்டாகவுஞ் செய்யாரென்பதாம்.

(தெ - ப - ரை.)—சீரொடு - புகழுடனே, பேர் ஆண்மை - மானத்தை நிறுத்ததலை, வேண்டுபவர் - விரும்புகின்றவர்கள், சீரினும் - புகழ் சம்பாதிக்குமிடத்தும், சீர் அல்ல - (தம்முடைக்கு) ஒவ்வாத (இழிதொழில்களை), செய்யார் - செய்யமாட்டார்கள்.

ஈ. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
கருக்கத்து வேண்டு முயர்வு.

(பரி-ரை.) எ-து,—குடிப்பிறந்தார்க்கு நிறைந்த செல்வமுளதாய வழியாவர்மாட்டும் பணிவு வேண்டும்; குறைந்த நல்குரவாய வழிப் பணியாமை வேண்டும், எ-று.

பணியாமை—தாழ்வுவாராமற் பழையவுயர்ச்சிகெடாண்ணே நிற்றல். செல்வக்காலே அஃதுயர்ச்சி செய்யத் தாந் தாழ்தலும், அல்லற்காலே அது தாழ்வு செய்யத் தாமுயர்தலும், வேண்டுமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் தாந்தாழ்தற்கேதுவாயின செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது.

---

* மணக்குடவர், கo-ம் அதி, கலோகம், கoச.

(தே - ப - ரை.)—(குடிப்பிறந்தவர்க்கு), பெருக்கத்தை-நிறைந்த செல்வம் உண்டானவிடத்து, பணிதல் வேண்டும் - (யாவரிடத்தும்) பணிவு வேண்டும்; சிறிய - குறைந்த, நடந்தால் - வறுமை யுண்டானவிடத்து, உயர்வு வேண்டும் - பணிபாடை வேண்டும்.

ஈ. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை

(பரி-ரை.) எ-து,—குடிப்பிறந்த மாந்தர், தம்முயர்ந்த நிலையைவிட்டு அதனி னின்றுந் தாழ்ந்தவழி தலையை விட்டு அதனி னின்றும் வீழ்ந்த மயி ரினை யொப்பர், எ-று.

அந்நிலையை விடாது நின்றவழிப் பேணப்படுதலும். விட்டுத் தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும். உவமையாற் பெற்றாம்

(தே - ப - ரை.)—மாந்தர் - (குடிப்பிறந்த) மனிதர், நிலையின்-(தம்முயர்ந்த) நிலையிலிருந்து, இழிந்தக்கடை - தாழ்ந்த விடத்து, தலையின் இழிந்த - தலையிலிருந்து வீழ்ந்த, மயிர் அனையர் - மயிர் போல்வர்.

உ. குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

(பரி-ரை.) எ-து,—குடிப்பிறப்பான் மலைபோல வுயர்ந்தோரும் தாழ்தற் கேதுவாகிய செயல்களே ஒரு குன்றி யளவாயினுஞ் செய்வராயிற் றாழ் வர், எ-று.

குன்றி யனையவுமென்னும் இழிவு சிறப்புமை விகாரத்தாற் றொக்கது. தாழ்தற்கேதுவாய செயல்களாவன இனிவந்தன. சொற்பின்வருநிலை.

(தே - ப - ரை.)—குன்றின் அனையாரும் - (குடிப்பிறப்பால்) மலைபோலுயர்ந்தவரும், குன்றுவ - தாழ்தற்கு ஏதுவாகிய செயல் களை, குன்றி அனைய - ஒரு குன்றிமணி யளவாயினும், செயின் - செய்தால், குன்றுவர் - தாழ்வர்.

ஊ. புகழின்றுற் புத்தேளுட் டெய்யாதா லென்மற்
றிகழ்வார்முன் சென்று நிலை.

(பரி-ரை.) எ-து,—மானத்தை விட்டுத் தன்னோ டியமதிப்பார் பின்னே ஒருவன் சென்று நிற்கின்ற நிலை இவ்வுலகத்துப் புகழ்பயவாது; எனைப்புத்தே ளுலகத்துஞ் செலுத்தாது; இனி அவனுக்கு அது செய்வதியாது? எ-று.

புகழ் பயப்பதனைப் புகழென்றார். பயனுய இவ்விரண்டு மின்றிக் கொன்னே மானம் கெடுக்கின்றது என்னை யென்பதாம். இவை மூன்று பாட்டானும் அவை செய்தற் குற்றங் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—இகழ்வார் பின் - (தம்மை) அவமதிப்பவர் பின்னே, சென்று நிலை - (ஒருவன் மானம் விடுதி) சென்று நிற்கின்ற நிலை, புகழ் இன்று - (இவ்வுலகத்து) புகழுடம்பாகாது; புத்தேள் காட்டு - (மறுமை) தெய்வமேலகத்திலே, உய்யாது - செலுத்தாது; மற்று - இனி, என் - (அவனுக்குச் செய்வது) யாது?

எ. ஒட்டார்பி ர் சென்றிருவன் வாழ்தலி னஃதிலையே
கெட்டா னெனப்படுதல் நன்று.

(பரி-ரை.) எ-து,—ஏன்னே யிகழ்வார் பின்னே சென்று பொருள் பெற்று அதனலொருவன் உயிர்வாழ்தலின், அது செய்யாது இறந்தா னென்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று, எ-று.

ஒட்டுதல்-பொருதுதல். அஃதிலையே யென்றது செல்லாத முன்னே நிலைக்கண்ணே நின்றென்றவாறு; அப்பொழுதே யென்றுமாம். புகழும் புத்தேளுலகும் பயவாதேனும் பொருள் பெற்று உயிர் வாழ்வா னென்பாரை நோக்கிக் கூறியது.

(தெ - ப - ரை.)—ஒட்டார் பின் - (தன்னை) இகழ்வார்பின்னே, சென்று - போய், (பொருள்பெற்று), ஒருவன் வாழ்தலின் - (அதனல்) ஒருவன் உயிர்வாழ்தலைக்காட்டிலும், அஃதிலையே - முன்னே நிலைநின்று கெட்டான் எனப்படுதல் - இறந்தானென்று சொல்லப்படுதல், நன்று - (அவனுக்கு) நன்று

அ. மருந்தோமற் றூணும்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்தவிடத்து.

(பரி-ரை.) எ-து,—உயிர் குடிபிறப்பும் தன்வலியாகிய மானம் அழிய வந்தழி, இறந்த லொழிந்த பயனில்லாத வுடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னு மிறவாமைக் கருந்தாமோ? எ-று.

மற்றென்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றி நின்றது. நற்குணங் கட்கெல்லாம் இடனுதற் சிறப்புப்பற்றிப் பெருந் தகைமை யென்றும், அவையெல்லாவற்றுள்ளும் அதற்கு வலியாதற் சிறப்புப்பற்றிப் பீடென்றும், அஃ தழிந்தால் நின்றவெற்றுடம்பு இழிக்கப்படுதலின் அதனை ஊனென்றும், பின்னு மிறத்தல் ஒருதலையென்பார் மருந்தோ வென்றுங் கூறினர். மானத்தின் றொழில் அதற்கிடனுகிய குடிப்பிறப்பின் மேனின்றது.

(தே - ப - ரை.)—பெருந் தகைமை-உயர்குடிப் பிறப்பானது, பீடு - (தன்) வலியாகிய மானம்; அழிய வக்கவிடத்து - அழியும்படி நேரிட்டபோது, ஊன் ஓம்பும் - (இறந்துபோகாமல் பயனில்லாத) உடம்பைக் காப்பாற்றும், வாழாகை க - வாழ்வானது, மற்று மருந்தோ - (பின்னுமிறவாமைப்பு) மருந்தோ?

கஈ மயிர்நீப் பின் வாழாக் கவரிமா வன்ஞர்
உயிர்நீப்பர் மானம் வரின்

(பதி-ரை.) எ-து,—தன் மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமானை யொப்பார், உயிர் நீங்குதற்கான மானமெய்து மெல்லை வரின், அதனைத் தாங்கா திறப்பர், எ-று

இழிவு சிறப்புமை விகாரத்தாற் பிறந்தது. உயிரும் மானமும் உடனில் லாமைக்கண், பின்னும் போவதாய உவமைத்தது எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தை யெய்துவரென்பதாம். உவமை அவர்க்கு அஃதியல்பென்பது விளக்கி நின்றது.

(தே - ப - ரை.)—மயிர் நீப்பின் - (தன் மயிர்க்திரளில்) ஒரு மயிர் நீங்கினும், வாழா - உயிர்வாழாத, கவரிமா அன்னர் - கவரி மானை யொப்பவர், மானம் வரின் - (உயிர்நீக்குதற்கான) மானம் உறுமாயினால், உயிர் - அவ்வுயிரை, நீப்பர் - விடுவர்.

கஏ இனிவரின் வாழாத மான முடையார்
ரொனிதொழு தேத்து முலகு

(பதி-ரை.) எ-து,—தமக்கோ நிழிவு வந்தவழப் பொறுத்து உயிர் வாழாது அதனை நீக்க மானமுடையாரது புகழ்வடிவினை எஞ்ஞான்றுந் தொழுது துதியா நிற்பர் உலகத்தார், எ-று.

* "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்—நிலவனேவா வான வூர்தி யெய்துவ" ராகலின், துறக்கசெலவு சொல்லவேண்டா வாயிற்று. இவை நான்கு பாட்டானும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—இனி வரின் - (தமக்கு) ஓரவமானம் வந்த விடத்து, வாழாத - (பொறுமல்) உயிர்விட்ட; மானம் உடையார்-மானமுடையவரது, ஒளி - புகழ்வடிவை, உலகு - உலகத்தார், தொழுது ஏத்தும் - (அங்ஙனஞ்) தொழுது துதியாகிற்பர்.

கூஅ-ம் அதிகாரம்—பெருமை.

அஃதாவது செயற்கரியசெய்தல், தருக்கின்மை, பிறர் குற்றங்கூறுமை யென்றிவை முதலிய நற்குணங்களாற் பெரியாரது தன்மை. நிலையினு மேன்மேலுயர்ந்தற் பயத்தலாய வினை உளவாவது நிலையிற் சுழாமையுள்வழியாகலின், இது மானத்தின்பின் வைக்கப்பட்டது.

க. ஒளியொருவற் குள்ள வெறுப்பை யினியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக் கொளியாவது பிறராற் செயற்கரிய செய்வேமென்று கருதும் ஊக்கமிருதி; ஒருவனுக்கு மாசாவது அசசெயலே யொழிந்து உயிர்வாழக்கடவே மென்று கருதுதல், எ-று.

ஒளி தானுளனாயகாலத்து மிக்குத்தோன்றுத லுடைமை. * "ஒளிதிரு னேகருகுகழ் செய்யான்" என்றார் பிறரும். மேலும் செயற்கரிய செய்வார் பெரிய ரென்றாயினும், ஈண்டு அவை அளவிறந்த வொப்புரவு ஈகை முத லியவாம். அவற்றினுமை பெருமையை அதன் காரணத்தின்மேலிட்டு உள்ள வெறுக்கையென்று, அது தன்னையே அதன் காரியமாகிய ஒளியாக்கியுங கூறினார். இவ்வாறு இதனெதிர்மறைக்கண்ணு மொக்கும். இதனற் பெருமை யின் சிறப்புக் கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—ஒருவற்கு - ஒருவனுக்கு; ஒளி-ஒளியாவது; உள்ள வெறுக்கை - (பிறராலே செய்தற் கரியவைகளைச் செய்வே மென்னு [illegible] மனவெழுச்சியின் மிகுதி; ஒருவற்கு - ஒருவனுக்கு, இனி - மாசாவது, அஃது இற்று-அச்செயலே தொழிந்து; வாழ்தும் எனல் - உயிர்வாழக் கடவேமென்று நினைந்தல்.

உ. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(பரி-ரை.) எ-து,—எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப் பியல்பு ஒக்குமேயெனினும், பெருமை சிறுமை யெனப்பட்ட சிறப்பியல்புக ளொவ்வா, அவைசெய்யுந் தொழில்களது வேறுபாட்டான், எ-று.

வேறுபாடு—நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், இரண்டுமல்ல வாயினவுமாய் அளவிறந்த பாகுபாடுகள். வினையத்தாற் பஞ்சபூத பரிணாம மாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதன்பய னனுபவித்தல் எல்லாவரு ணத்தார்க்கு மொத்தலிற் பிறப்பொக்கு மென்றும், பெருமை சிறுமைகட்குக்

---

* உண்ணு ஞெளி நிருளுங்கு புகழ்செயான—றுண்ணருங் கேளிர் துயர்கூரு யான்—கொன்னே—முழங்கான் பொருள்வாதநிருப்பானேல் அஃ—விழுங்தானென் மெண் ணப்படும்—நாலடியார், செல்வக்கீயாமை, கூ.

கட்டளைக்கல்லாகிய தொழிற்பாகுபா'கள் வருணக்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலிற் சிறப்பொவ்வா வென்றது கூறினர்.

(தெ - ப - ரை.)—எல்லா உயிர்க்கும் - எல்லா மக்களுயிர்க்கும், பிறப்பு - (பொதுவாகிய) பிறப்பியல்பு, ஒக்கும் - ஒத்திருக்கும், (ஆயினும்), சிறப்பு - (பெருமை சிறுமையெனப்பட்ட) சிறப்பியல்புகள், செய் தொழில் - செய்யுந் தொழில்களது, வேற்றுமையான் - வேறுபாட்டால், ஒ'வா - ஒத்திடாலாம்

நஉ மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

(பரி-ரை.) எ-து,—செயற்கரிய செய்கலாது சிறியராயினர், உயர்ந்த வமனி முதலியவற்றின்மிசை யிருந்தாராயினும, பெரியராகார்; அவைசெய்து பெரியராயினும், தாழ்ந்த வறுகல்லது திருந்தாராயினும், சிறியராகார், எ-று.

மேலிருந்தல் கீழிருந்தல்களாற செல்வ நல்குரவுகளும், மேல் கீழ்களாற் பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன. இவை யிரண்டுபொட்டானும் முறையே குடிமை மாத்திரத்தானுஞ் செல்வமாத்திரத்தானும் அஃதுள தாகாமை கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—மேல் அல்லார் - (செய்தற் கரியவைகளைச் செய்யமாட்டாமல்) சிறியராயினோர், மேல் இருந்தும் - உயர்ந்த ஆதனங்களில் இருந்தாராயினும், மேல அல்லர் - பெரியராகார்; கீழ் அல்லவர் - (அவைசெய்து) பெரியராயினோர், கீழ் இருந்தும் - தாழ்ந்த வெறுநிலத்தில் இருந்தாராயினும், கீழ் அல்லார் - சிறியராகார்.

ச. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு

(பரி-ரை.) எ-து,—கவரா மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவா மற் றம்மைத் தாங காத்துக்கொண டொழுகுமாறுபோல, பெருமைக்குண னும், ஒருவன் நிறையின் வழுவாமற் றன்னைத் தான் காத்துக்கொண்டொழுகு வானுயின், அவன்கண்ணுண்டாம், எ-று.

பொருளின்றெழில் உவமையினும் வந்தது. கற்புண்டாதல் தோன்ற நின்றமையின், உம்மை எச்சவும்மை ஒழுகுதல் மன் மொழி மெய்களோ யொடு

' மேலே, கூ-ம் அதி. சீ, ஆசாபெருமை, கூ-ம் குறளிற காண்க.

க்கி ஒப்புரவு முதலிய செய்துபோதல். இதனுல் அஃதுளதாமாறு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—ஒருமை - பிளவுபடாத மனத்தையுடைய, மகளிரே போல - மக்களைப் போல, தன்னைத்தான்—, காத்தொழுகின் - (ஒருவன் கிறையின் வழுவாமல்) காத்துக்கொண்டு நடக்கவல்லனுயின், பெருமையும் - பெருமைக்குணமும், உண்டு - (அவனிடத்து) உண்டாம்.

நி. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்

(பரி-ரை.) எ-து,—அவ்வாறுற் பெருமை யுடையராயினர் தாம் வறியராயவழியும் பிறராற் செய்தற்கரியவாய தஞ்செயல்களே விடாது அவை செய்யு நெறியாற் கடைபோகச்செய்தலே வல்லராவர், எ-று.

வறியராய வழியுமென்பது, முன்செய்து போந்தமை தோன்றப் பெருமை யுடையவரென்றதனுலும், ஆற்றுவாரென்றதனுலும், பெற்றும். இதனுல் அதனை யுடையார் செய்தி கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பெருமை உடையவர் - (அவ்வழியாலே) பெருமையுடையவராயினர், (தாம் வறியராகிய வழியும்); அருமை உடைய-(பிறராலே செய்தற்கு) அருமை யுடையனவாகிய, செயல்-(தஞ்) செயல்களை, ஆற்றின் - (அவை செய்யும்) வழியால், ஆற்றுவார் - (முடிவுபெற) செய்பவல்லராவர்.

அ. சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணித்கொள் வேமென்னு நோக்கு

(பரி-ரை.) எ-து,—அப்பெற்றியராய பெரியாரை வழிபட்டு அவரியல் பினை யாமுகோடு மென்னுங் கருத்து மற்றைச் சிறியராயினர் மனத்தின்கண் உளதாகாது, எ-று.

குடிமை, செல்வம், கல்வி யென்றிவற்றது உணமை மாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவை நமக்கியல்பென்று அமைந்திருப்பாரை வழிப்பட்டு அஃதுடையராதல் கூடாதென்பதாம்.

(தே - ப - ரை.)—பெரியாரை - (அப்படிப்பட்ட) பெரியாரை, பேணி - வழிபட்டு, கொள்வேம் என்னும் - (அவரியல்பை) கொள்வோமென்னும், நோக்கு - கருத்து. சிறியார் - (மற்றை)

சிறியராயினோரது; உணர்ச்சியுள் - மனத்தினிடத்து, இல்லை - உண்டாகாது.

எ. இறப்பே புரிந்த தொழிற்றஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்

(பரி-ரை.) எ-து,—தனக்கொக்கும் பெரியாரிடத்து அமைந்திருத்தலைச் செய்வதாய சிறப்புத்தானும், தனக்கொவ்வாத சிறியாரிடத்துப் படுமாயின், அதனை யொழிந்து தருக்கின்கணணே மிகச்செயலை யுடைத்தாம், எ-று.

தருக்கினை மிகச்செய்யு மென்பதாயிற்று. சிறப்பு—குடிமை, செல்வம், கல்விகளினுள மிகுதி. இவை யிரண்டுபோட்டானும் அஃதிலார் செய்தி கூறப் பட்டது.

(தே - ப - ரை.)—சிறப்பும்-(தனக்குத்தகும் பெரியோரிடத்து அடங்கியிருத்தலோ செய்வதாகிய) சிறப்பும், தான்—, சீரல்லவர் கண் படின் - (தனக்குத்தகாத) சிறியவரிடத்து உண்டாமாயின், இறப்பே புரிந்த - (அடங்கி யிருத்தலொழிந்து) செருக்கினிடத்திலே மிருந்த, தொழிற்றும் - செயலையுடைத்தாம்.

அ. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

(பரி-ரை.) எ-து —பெருமையுடையார் அகிறப்புடைய ஞான்றுக் தருக்கின்றி அமைந்தொழுகுவர்; மற்றை சிறுமையுடையார் அஃதில்லாத ஞான்றுந் தம்மை வியந்து புனையாநிற்பர், எ-று.

பொருளின் ரெழில்கள் பணிபின்மே லேற்றப்பட்டன. இஃது *'அற்ற மறைக்கும் பெருமை' என்புழியு மொக்கும். என்று மென்பது பின்னும் வந்தியையத்து. ஆமென்பன வீரண்டும் அசை. புனைதல்—பிறரிற் றமக்கோர் மிகுதியையேற்றிக் கோடல். இதற்கு உயர்ந்தார் தாழ்வார் தாழ்ந்தார் உயர்வார் இஃதொரு வீரோத மிருந்தவாறென்னை உலகியலே வியந்து கூறிற் ருக்கு வாருமூளர்.

(தே - ப - ரை)—பெருமை - பெருமையுடையவர், என்றும்-சிறப்புண்டாகிய காலிலும், பணியும்-அடங்கி நடப்பார்; சிறுமை-(மற்றை) சிறுமையுடையவர், (என்றும்) - அது இல்லாதகாலிலும், தன்னை வியந்து - தற்மை மெச்சி, அணியும் - சிறப்பிப்பார்.

---

* இவ்வதிகாரம், க0-ம் குறளிற் காண்க.

கூ. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்

(பரி-ரை.) எ-து,—பெருமைக்குணமாவது காரணமுணடாய வழியும் அஃதில்லையாகிய தருக்கினறி யிருத்தல்; சிறுமைக் குணமாவது அஃதில் வழியும் அதனை யேற்றுக்கொணடு தருக்கின் முடிவின் கணணே நினறு விடுதல், எ-று.

அளவறத் தருகுத லென்பதாயிறறு. விடுமென்று பாடமோதுவாரு முளர். மூற்றத் தொடரும் எழுவாய்த் தொடரும் கும்மு னியையாமையின், அதுபாடமன்மை யுணர்க.

(தே - ப - ரை)—பெருமை - பெருமைக் குணமாவது, பெருமிதம் இன்மை - (காரணம் உண்டாகியவிடத்தும் அது இயல்பாதனைக்கி) செருக்கிலலா திருத்தல்; சிறுமை - சிறுமைக் குணமாவது, பெருமிதம் ஊர்ந்து விடல் - (காரணம் இல்லாவிடத்தும் அகனை ஏற்றுக்கொண்டு) செருக்கின் முடிவிலே நின்றுவிடுதல.

கo அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

(பரி-ரை.) எ-து,—பெருமை யுடையார் பிறர் மானத்தையே கூறி அவ மானத்தை மறையா நிற்பர்; மற்றைச சிறுமை யுடையா பிறர்குணத்தை மறைத்துக் குறறத்தையே கூறி விடுவர், எ-று.

மறைத்தலுங கூறலும் எனையிடத்து மிலைக்கன. அற்றம்—ஆகுபெயர். தானென்பது அசை. இவை மூன்று பாட்டானும் இருவர் செயலும் ஒருங்கு கூறப்பட்டன.

(தே - ப - ரை)—பெருமை - பெருமையுடையவர், அற்றம் மறைக்கும் -(பிறர் மானத்தைமே சொல்லி) அவமானத்தை மறையா நிற்பர்; சிறுமை - (மற்றை) சிறுமையுடையவர், குறறமே கூறி விடும் -(பிறர் குணத்தை மறைத்து) குற்றத்தையே சொல்லி விடுவர்.

கூகூ-ம் அதிகாரம்—சான்றாண்மை.



அஃதாவது பலகுணங்களானு நிறைந்து அவற்றை யாடற்றன்மை. பல குணங்களானு மென்பது சாலுகற் றெரிலாற் பெறப்படுலின், அவற்றை யென்பது வருவிக்கப்பட்டது. பெருமையு ளடகுகாத குணங்கள் பலவற்றை யுந் தொகுதுக்கொண்டு நிற்றலின், இஃதன்பின் வைக்கப்பட்டது.

க. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

(பரி-மை.) எ-து,—நமக்குக் கதுவது இதுவென் றறிந்து சான்றாண்மையை மேற்கொண் டொழுகுவார்க்கு நல்லனவாய குணங்க ளெல்லாம் இயல்பா யிருக்குமென்று சொல்லுவர் நூலோர், எ-று.

சில குணங்க ளிலவாயவழியும் உள்ளன செய்துகொண்டனவாய வழி யுஞ் சான்றாண்மை யென்னுஞ் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ் வேதுப்பெயர் பற்றி அவரிலக்கணம் றிவ்வாறு கூறுவ ரென்பதாம்.

(தெ - ப - ரை.)—கடன் அறிந்து - (நமக்கு இது) தகுவ தென்று அறிந்து, சான்று - (பலகுணங்களானும்) நிறைந்து, ஆண்மை - (அவைகளை) ஆராதற்றன்மையை, மேல் கொள்பவர்க் ஙு மேற்கொண்டு நடப்பவர்க்கு, நல்லவை எல்லாம் - நல்லகுணங்க ளெல்லாம், கடன் - இயல்பா யிருக்கும், என்ப - என்று சொல்லு வர் (நூலோர்).

உ. குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று

(பரி-மை.) எ-து,—சான்றோர் நலமாவது குணங்களானுய நலமே; அஃ தொழிந்த வுறுப்புக்களானுய நலம் ஒரு நலத்தினு முள்ளதன்று, எ-று.

அகநலத்தை முன்னே பிரித்தமையின் எனைப்புற நலத்தைப் பிறநல மென்றும், அது குடிப்பிறப்புங் கல்வியு முதலாக நூலோரெடுத்த நலங்களுட் புகுதாமையின் எந் நலத்துள்ளதூஉ மன்றென்றுங் கூறினர். இவை யிரண்டு பாட்டானும் சால்பிற்கேற்ற குணங்கள் பொதுவகையாற் கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—சான்றோர் நலன் - சான்றோர் நலமாவது, குண நலம் - குணங்களாலாகிய நலமே; பிற நலம் - அது நீங்க லான (உறுப்புக்களாலாகிய) நலம், எந்நலத்து உள்ளதும் - எந்த நலத்தினு முள்ளதும், அன்று - அல்லதாம்.

ங. அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்.

(பரி-ரை.) எ-து,—சுற்றத்தார்மேலே யன்றிப் பிறர்மேலு முளதாயவன்பும், பழிபாவங்களி ஞ்ஞலும், யாவர்மாட்டு மொப்புரவு செய்தலும், பண்டியார்மேற் கண்ணோட்டலும், எவ்விடத்தும் மெய்ம்மைகூறலும் என சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய தூணகளோந்து, எ-று.

எனவே மேற்கூறிய வற்றோடு கூடிற்று. இக்குணங்களில்வழிச் சால்பு நிலைபெறுமையின், இவற்றைத் தூணென்றார். எகதேச வுருவகம்.

(தே - ப - ரை.)—அன்பு - (சுற்றத்தார்மேலே யல்லாமல் பிறர்மேலும் உண்டாகிய) அன்பும், நாண் - (பழிபாவங்களில்) நாணமும், ஒப்புரவு - (யாவரிடத்தும்) உபகாரஞ் செய்தலும், கண்ணோட்டம் - (பழையவர்மேல்) கண்ணோட்டமும், வாய்மையோடு - (எவ்விடத்தும்) மெய்மைசொல்லலும் என, சால்பு - சால்பென்னும் (பாரத்தை), ஒன்றிய - தாங்கிய, தூண் - தூண்கள், ஐந்து - ஐந்தாகும்.

ச. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

(பரி-ரை.) எ-து.—பிறவறங்களும் வேண்மொயினுங் தவம் ஒருயிரையுங் கொல்லாத அறத்தின்கணைதாம்; அதுபோலப் பிறகுணங்களும் வேண்டுமாயினுஞ் சால்பு பிறர் குற்றத்தைச சொல்லாத குணத்தின் கண்ணதாம், எ-று.

நலமென்னும் ஆகுபெயர்ப்பொரு ளிரண்டனையுந் தலைமைதோன்ற இவ்விரண்டற்கு மதிகாரமாக்கிக் கூறினார். தவத்திற்குக் கொல்லாவறஞ் சிறந்தாற்போலச சால்பிற்குப் பிறர் குற்றஞ் சொல்லாக்குணஞ் சிறந்த தென்பதாம்.

(தே - ப - ரை.)—நோன்மை - தவமாவது, கொல்லா நலத்தது - (பிற வறங்களும் வேண்டுமாயினும்) ஒருயிரையுங் கொல்லா அறத்தினிடத்ததாம்; (அதுபோல), சால்பு - சால்பாவது, பிறர் தீமை சொல்லா நலத்தது - (பிறகுணங்களும் வேண்டுமாயினும்) பிறர் தீமையைச் சொல்லாத குணத்தினிடத்ததாம்.

ஞ. ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றுரை மாற்றும் படை.

(பரி-ரை.) எ-து,—ஒருகருமத்தைச் செய்து முடிப்பார தாற்றலாவது அகற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல்; இனிச் சால்புடையார் தம்பகைவரைப் பகைமை யொழிக்குங் கருவியும் அது, எ-று.

ஆற்றல்—அதுவல்லாக் தன்மை. இறந்தது தழீஇய வெச்சவும்மை மிகாரத்தாற் றொக்கது. சால்பிற்கேற்ற பணிதற் குணத்தது சிறப்புக் கூறு மார் வேனையது மூடன் கூறினர்.

(தெ - ப - ரை.)—ஆற்றுவார் - (ஒருகருமத்தை) செய்து முடிப்பவரது, ஆற்றல் - வலிமையாவது, பணிதல் - (அதற்குத் துணையாவாரை) தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல்; சான்றோர் - (இனி) சால்புடையவர், மாறறுரை - பகைவரை, மாற்றும் படை - (பகைகூம) ஒழிக்குஞ் சாதனமும், அது - அப்படிப் பணிதலே யாம்.

கூ. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றேல்வி
தலையல்லா கண்ணுங் கொளல்

(பரி-ரை.) எ-து,—சால்பாகிய பொன்னினளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாதெனின், அது தம்மி னுயர்ந்தார்மாட்டுக் கொள்ளுந் தோல்வியை இழிந்தார் மாட்டுங் கோடல், எ-று.

தலை—ஒப்பு. எசச வும்மையான் இருநிறத்தார் கண்ணும் வேண்டுதல் பெற்றும். கொள்ளுதல்—வெலலுமாற்ற லுடையராயிருந்தே ஏற்றுக் கொள்ளுதல். இழிந்தாரை வெல்லுதல் கருதித் தம்மோ டொப்பிதாகக கொள்ளாது தோல்வியான் அவரி னுயர்வாயின், அதனாற் சால்பள வறியப்படு மென்ப தாம்.

(தெ - ப - ரை.)—சால்பிற்கு - சால்பாகிய (பொன்னின்) அள வறிதற்கு, கட்டளை - உரைகல்லாகிய (செயல்), யாது எனின் - என்னவெனின், தோல்வி - (அது தம்மினுயர்ந்தவரிடத்துக் கொள்ளும்) தோற்பை, தலை அலலார் கண்ணும் - இழிந்தவரிடத்தும், கொளல் - (வெல்லும் வலிமை யுடையராயிருந்தே) ஏற்றுக்கொள்ளுதலாம்.

எ. இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு

(பரி-ரை.) எ-து,—தமக்கின்னுதவற்றைச் செய்தார்க்குஞ் சால்புடையார் இனியவற்றைச செய்யாராயின், அச்சால்பு வேறென்ன பயனே புடைத்து, எ-று.

சிறப்பும்மை அவர் இன்னுசெய்தற் கிடனுதல் விளக்கி நின்றது. ஓகாரம் அசை. வினு எதிர்மறைப் பொருட்டு. தாமு மின்னுசெய்வாராயின், சால்பா

லொரு பயனுமில்லை யென்பதாம். இவை யைந்துபாட்டானுஞ் ஈறபபு வஞ்
யாற் கூறப்பட்டது.

(தே - ப - ரை)—(சால்புடையவர்) இன்னு - (தமக்கு) துன்
பந் தருமவைகளை, செய்தார்க்கும் - செய்தவர்களுக்கும், இன்
யவே - இன்பந்தருமவைகளையே, செய்யாக்கால் - செய்யாவிடின்
சால்பு - அச்சால்புடைமை, என்ன பயத்தது - (வேறே) என்ன
பயனுடைத்து.

அ இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(பரி-ரை.) எ-து,—சால்பென்று சொல்லப்படும் வலியுடையாகப்பெறின்
ஒருவனுக்கு நல்குரவு இளிவாகாது, எ-று

தளராமை நாட்டுதலின், வலியாயிற்று. இன்மையான் வருவதனை
இன்மைதானுக வுபசரித்துக கூறினார். சால்புடையார் நல்கூர்ந்தவழியும்
மேம்படுத லுடையரென்பதாம்.

(தே - ப - ரை.)—சால்பு என்னும் - சால்பென்று சொல்லப்
படும், திண்மை - வலிமை, உண்டு ஆகப் பெறின் - உண்டாகப்
பெற்றால், ஒருவற்கு - ஒருவனுக்கு, இன்மை - வறுமையால் வரு
வது, இளிவு அன்று - இகழ்வாகாது

கூ. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

(பரி-ரை.) எ-து,—சால்புடைமையாகிய கடற்குக் கரையென்று சொல்
லப்படுவார் ஏனையகடலுக கரையுணில்லாமற் காலந்திரிந்தாலும், தாந்திரி
யார், எ-று.

சான்றாண்மையது பெருமைமேன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத்
தாங்கிகொண்டு நிறைதலின் அஃதுடையாரைக் கரையாக்கியக கூறினார்;
*"பெருங்கடற் காழி யனையன் மாதோ" என்றா பிறரும். எகதேசவுருவகம்.

(தே - ப - ரை.)—சான்றாண்மைக்கு - சால்புடைமையாகிய
(கடலுக்கு), ஆழி எனப்படுவார் - கரையென்று சொல்லப்படுவார்;
ஊழி பெயரினும் - (மற்றைக் கடலும் கரையுள் நில்லாமல்) காலம்
வேறுபட்டாலும், தாம் பெயரார் - தாம் வேறுபடார்.

---

* புறநானூறு, கூகூ.


கO. சான்றவர் சான்றுண்மை குன்றி னிருநிலந்தான்
றாங்காது மன்னே பொறை.

(பரி-ரை.) எ-து,—பலகுணங்களாலு நிறைந்தவர் தந்தன்மை குன்றுவ ராயின் மற்றை யிருநிலத்தாலுந் தன்பொறையைத் தாங்காதாய் முடியும், எ-று.

தானுமென்னு மெசசவும்மை விகாரத்தாற்றொக்கது. அவர்க்கது குன்று மையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான், அவையெஞ்ஞான்று மூல வாகா நின்றனவென்பது தோன்றநின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ஏகாரம் அசை. இதற்கு இருநிலம் பொறைதாங்குவது சான்றவர்துணை யாக வருதலான் அதுவும் அது தாங்கலாற்றென் றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் அவற்றுணிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—சான்றவர் - (பலகுணங்களாலும்) நிறைந்தவர், சான்றுண்மை - (தமது) தன்மை, குன்றின் - குன்றுவராயின், இரு நிலந்தான் - மற்றைப்பெரிய பூமிதானும், பொறை - (தன்) பாரத்தை, தாங்காது - தாங்காதாய் முடியும்

கOO-ம் அதிகாரம்—பண்புடைமை.



அஃதாவது பெருமை சான்றுண்மைகளிற் றும்வழுவாதுநின்றே எல்லா ரியல்புகளு மறிந்தொதொழுகுதல்; * "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" என்றார் பிறரும். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

க. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை பென்னும் வழக்கு.

(பரி-ரை.) எ-து,—யாவர்மாட்டு மெளியசெவ்வியதாலால் அரிதாய பண்புடைமையென்னும் நன்னெறியினையெய்துதல் எளிதென்று சொல்லுவர் நூலோர், எ-று.

குணங்களா னிறைந்து செவ்வியெளியரு மாயக்காற் பண்புடைமைதானே உளதா மாகலின், எண்பதத்தாலெய்த லெளிதென்றும், அஃதுலகத்தையெல் லாம் வசிகரித்தற்பயத்த தாகலின் அதனைத் தொல்லோர்சென்ற நன்னெறி யாக்கியும், அதனை யெளிதி னெய்துதற்கு இது நூலோரோதிய வுபாயமென் பார் அவர்மேல் வைத்துங கூறினர்.

(தே - ப - ரை.)—யார் மாட்டும் - யாவரிடத்தும், எண் பதத்தால் - எளியசமயத்தரா யிருந்தால், பண்பு உடைமை என்னும் -

---

* கலி, நெய்தல், கசு.

பண்புடைமை யெனப்படுகின்ற, வழக்கு-(அரிதாகிய) நல்வழிணை, எய்தல் - அடைதல், எளிது—, என்ப - என்று சொல்லுவர் (தூலோர்).

உ. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(பரி-ரை.) எ-து,—பிறரிமே லன்புடையனுதலும் உலகதோடமைந்த குடியின்கட் பிறத்தலுமாகிய இவ்விரணடும் ஒருவனுக்குப் பண்புடைமை யென்று உலகத்தார சொல்லும் நன்னெறி, எ-று.

அமைதல் - ஒத்துவருதல். குடிப்பிறத்தலென்றது பிறத்தார்செயலே. தனித்தவழி ஆகாது இரணடுகூடியவழியே ஆவதென்பது தோன்ற, மும்மை கொடுத்தா. காரணங்கள் காரியமாக வுபசரிக்கப்பட்டன. இவை யிரண்டொட்டானும பண்புடையராதற் காரணங கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அன்பு உடைமை - (பிறர்மேல்) அன்புடை யதனாலும், ஆன்ற குடிப் பிறத்தல் - (உலகத்தோடு) அமைந்தகுடி யிற் பிறத்தலும் (ஆகிய), இவ்விரண்டும்—, பண்பு உடைமை என் னும் - (ஒருவனுக்கு) பண்புடைமை யென்று (உலகத்தார்) சொல் லும், வழக்கு - நல்வழி.

ஊ. உறுப்பொத்தன் மக்களொப் பன்றுல் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.

(பரி-ரை.) எ-து,—செறியத்தகாத வுடம்பாலொத்தல் ஒருவனுக்கு நன் மக்களோ டொப்பாகாமையின் அது பொருந்துவதன்று; இனிப பொருந்துவ தாய வொப்பாவது செறியத்தக்க பண்பா லொத்தல், எ-று.

வடநூலார் அங்கமென்றமையின் உறுப்பென்றார. ஒருவனுகு நண்மக் களோடு பெறப்படு மொப்பாவது உயிரின்வேறுய் நீலேயுதலில்லா வுடம்பொத் தலன்று வேறன்றி நிலேயுதலுடைய பண்பொத்தலாகலான், அப்பெற்றித் தாய அவா பண்பினே யுடையனுக வென்பதாம்.

(தே - ப - ரை.)—உறுப்பு ஒத்தல் - (செருங்கத்தகாத) உடம் பாலொத்தல், மக்கள் ஒப்பு அன்று - (ஒருவனுக்கு) நல்லமனித ரோடு (ஒப்பாகாமையால்) பொருந்துவதன்று; ஒப்பது ஆம் - (இனி) பொருந்துவதாகிய, ஒப்பு-ஒப்பாவது, வெறுத்தக்க-செருங் கத்தக்க; பண்பு ஒத்தல் - பண்பாலொத்தல்.

நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு மூலகு.

(பரி-ரை.) எ-து,—நீதியையும் அறத்தையும் விரும்புதலாற் பிறர்க்குந் தமக்கும் பயன்படத் வுடையாராது பண்பினை உலகத்தார் கொண்டாடா நிற் பர், எ-று.

புரிந்தவென்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொருட்டு; நயனெடு நன்றிபுரிதலும் பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமையின், அதனைப் பாராட்டு மென்றார்.

(தே - ப - ரை.)—நயன் - நீதியையும், நன்றி - அறத்தையும், புரிந்த - விரும்புதலால், பயன் உடையார் - (பிறர்க்குந் தமக்கும்) பயன்படுதலுடையவரது, பண்பு - பண்பை, உலகு - உலகத்தார், பாராட்டும் - கொண்டாடா நிற்பர்.

நி. நகையுள்ளு மின்னு திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

(பரி-ரை.) எ-து.—தன்னையிகழ்தல் ஒருவற்கு வினையாட்டின் கண்ணும் இன்னாது; ஆகலாற் பிறர்பாடறிந் தொழுகுவார் மாட்டுப் பகைமையுள் வழியும் அஃதிளதாகாது இனியவாய பண்புகளே உளவாவன, எ-று.

பாடறிவா ரெனவே, அவ்வின்னாமை யறிதலும் பெற்றும். அதனையறிந்தவர் பின் அதுசெய்யார் இனியவே செய்வா ரென்பது கருத்து. இதற்குப் பிறரெல்லாம் இரண்டுதொடருந் தம்மு ளியையாம வுரைப்பாரும், இன்னாதென்னுஞ் சொற்குப் பிறவாதென் றுரைப்பாரு மாயினர்.

(தே - ப - ரை.)—இகழ்ச்சி - (தன்னை) இகழ்தல், நகையுள்ளும் - (ஒருவனுக்கு) வினையாட்டினிடத்தும், இன்னாது - துன்பந் தருவதாம்; (ஆகலால்), பாடு அறிவார்மாட்டு - (பிறர்) இயல் பறிந்து நடப்பவரிடத்து, பகையுள்ளும் - பகையுள்ளவிடத்தும், பண்பு - (அப்பகை உண்டாகாமல் இனிமையாகிய) பண்புகளே, உள - உண்டாவனவாம்.

சு. பண்புடையார் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்.

(பரி-ரை.) எ-து,—பண்புடையார்கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்று மூண்டாய் வாராகின்றது; ஆணைப்பதெ லில்லையாயின், அது மண்ணினகட் புக்கு மாய்ந்துபோவதாம், எ-று,

படவென்பது திரிந்துநின்றது. உலகு—ஆகுபெயர். மற்றைப்பண்பில்லார் சார்பன்மையின் ஓர் சார்புமின்றி மணணின்கட்புக்கு மாயுமது வேண்டுமீ வாயிற்றென்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. இவை நான்குபாட்டானும் அதனை யுடையார் தூயர்சசி கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பண்பு உடையார் - பண்புடையவரிடத்தே, பட்டு - படிதலால், உலகம் - உலகியல், உண்டு - (எங்ஙனும்) உளதாய் வராகின்றது ; இன்றேல்-(அங்கேபடுதல்) இல்லாயின், அது - அவ்வுலகியல், மண் புங்கு - மண்ணிலே புகுந்து, மாய்வது- மாய்ந்துபோவதாம்.

எ. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

(பரி-ரை.) எ-து,—கண்மக்கட்கேயுரிய பண்பில்லாதவர் அரத்தின் கூர்மைபோலுங் கூமையையுடையரேயாயினும் ஓரறிவிற்றாயமரத்தினை யொப்பர், எ-று.

அரம்—ஆகுபெயர். ஓரறிவு - ஊற்றினையறிதல். உவமையிரண்டனுள் முன்னது தான் மடிவின்றித் தன்னேயுற்றபொருள்களே மடிவித்தலாகிய' தொழில்பற்றி வந்தது ; எனையது விசேடவறிவின்மையாகிய பண்புபற்றிவந்தது. அவ்விசேடவறிவிற்குப் பயனுகிய மக்கட்பண்பின்மையின், அதுதானு மில்லையென்பதாயிற்று.

(தே - ப - ரை)—மக்கள் - (கல்) மக்களுக்கே (உரிய), பண்பு இல்லாதவர்—, அரம் போலும் - அரத்தைப்போலும், கூர்மையர் ஏனும் - கூர்மையை யுடையரேயாயினும். மரம் போல்வர் - (பரிசத்தை அறிதலென்னும் ஓரறிவினதாகிய) மரத்துக்கொப்பாவர்.

அ. கண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை.

(பரி-ரை.) எ-து,—தம்மொடு சட்பினைசெய்யாது பகைமையைச் செய்தொழுகுவார் மாட்டும் தாம் பண்புடையரா யொழுகாமை அறிவுடையார்க் கிழுக்காம், எ-று.

நயம் - ஈரம். சிறப்பும்மை அவர் பண்பாற்றுமைக்கிடனுதல் தோன்றநின்றது. அதனைச்செய்யிற் றுமும் அவர் தன்மையராவரென்பார், கடையெனறார்.

(தே - ப - ரை.)—நண்பு-நட்பினை, ஆற்றார் ஆகி - (தம்மோடு) செய்யாதவராகி, நயம் இல - பகைமையை, [நயமில்லாமையை

என்றபடி]. செய்வார்க்கும் - செய்து நடப்பவரிடத்தும், பண்பு ஆறறிவர் ஆதல் - (தாம்) பண்புடையராய் நடவாமை, கடை - (அறிவுடையவர்க்கு) இழுக்காம்.

கூ. நகல்வல்ல நல்லார்க்கு மாபிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

(பரி-ரை.) எ-து,—பணமன்மையான் ஒருவரோடுகலந்து உண்மகிழ்தன்மாட்டாதார்க்கு மிகவும் பெரிய ஞாலம் இருளில்லாத பகற்பொழுதினும் இருளின்கட் கிடந்ததாம், எ-று.

எல்லாரோடும் கலந்தறியப் பெறுமையிற் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாதென்பார், உலக மிருளின்கட் பட்ட தென்றார். பாழ்பட்டன்றிரு ளென்றுபாடமோதி, இருணீங்கிற்றன்றென் றுரைப்பாறு மூளர்.

(தே - ப - ரை)—நகல் வல்லார் அல்லார்க்கு - பண்பில்லாமையால் ஒருவரோடுகலந்து) உண்மகிழ்தல் மாட்டாதவர்க்கு, மா இரு ஞாலம் - மிகவும் பெரியபூமியானது, பகலும் - (இருளில்லாத) பகற்பொழுதினும், இருட்பால் - இருளினிடத்தே, பட்டன்று - கிடந்ததாம்.

கo பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

(பரி-ரை.) எ-து.—பண்பிலாதவன் முன்னைநல்வினையா னெய்திய பெரியசெல்வம் அக்குற்றத்தால் ஒருவற்கும பயன்படாது கெடுதல் நல்ல வான்பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெட்டாற்போலும், எ-று.

கலத்தீமை யென்பது மெலிந்துநின்ற ரு. தொழிலுவம மாகலின் பொருளின்கண ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. படைக்கு மாற்றிலனுகரூன்றப் பெற்ற வென்றும் எல்லாப்பயனுக கோடற்கேற்ற இடனுடைமை தோன்றப் பெருஞ்செல்வ மென்றுங கூறினர். அசசெல்வமும் பயன்படாதென்ற இதனன் வருகின்ற அதிகாரப் பொருண்மையுக் தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்குபாட்டானும் அஃதில்லார திழிவு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—பண்பு இலான் - பண்பில்லாதவன், பெற்ற-(மூன்னை நல்வினையினால்) அடைந்த, பெருஞ் செல்வம்—, (அக்குற்றத்தால் ஒருவர்க்கும் பயன்படாது கெடுதல்), நல் பால் - நல்ல (பசுவின்) பால், கலம் - (ஏற்ற) கலத்தினது, தீமையால் - குற்றத்தால், திரிந்தற்று - கெட்டாற்போலும்.

கoகம் அதிகாரம்—ஈன்றியில் செல்வம்.

அஃதாவது ஈட்டியாற்கும் பிறர்க்கும் பயன்படுத லில்லாத செல்வத்தினதியல்பு. உடையானது குற்றஞ் செல்வத்தின்மே லேற்றப்பட்டது. அதி காரமுறைமை மேற்றோற்றுவாய் செய்வதனாற் பெற்றாம்.

க. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணுன்
செத்தான் செயக்கிடந்த தில்.

(பதி - ரை.) எ-து,—தன் மனையகலமெல்லாம் நிறைதற் கேதுவாய பெரும்பொருளீட்டிவைத்து உலோபத்தால் அதனை யுண்ணுதவன் உளனாயினுஞ் செத்தானும், அதன்கண் அவனுற் செயக்கிடந்ததோ ருரிமையின்மையான், எ-று.

வைத்தானென்பது முற்றெச்சம். உண்ணுதல் அதனு னேம்புலன்களையும் நுகர்தல். வாய்சான்ற பெரும்பொருளை வைத்தானெருவன் அதனையுண்ணுது செத்தவழி அதன்கண் அவனுற் செயக்கிடந்ததோ ருரிமை யில்லையாகலான், வையாது பெற்றபொழுதே நுகர்கவென் றுரைப்பினு மமையும். இதற்குச் செத்தானென்ப தெச்சம். இதனுல் ஈட்டியானுக்குப் பயன்படலின்மை கூறப்பட்ட து.

(தே - ப - ரை.)—வாய் சான்ற - (தம்) மனையிடமெல்லாம் நிறைதற்கு ஏதுவாகிய, பெரும் பொருள் - பெரியபொருளை, வைத்தான் - (சம்பாதித்து) வைத்தவனுகி, அஃது - அதனை, உண்ணுன் - (உலோபத்தால்) அனுபவியாதவன், (உளனுயினும்), செயக் கிடந்தது - (அதனிடத்து அவனுலே) செயக்கிடந்ததோ ருரிமையானது, இல் - இல்லை (ஆதலால்), செத்தான் - செத்தவனேயாவன்.

ஒ பொருளானு மெல்லாமென் றீயா தவறு
மருளானு மாணப் பிறப்பு.

(பதி - ரை) எ-து,—பொருளொன்று முண்டாக அதனு லெல்லா முண்டாமென்றறிந்து அதனை ஈட்டிப் பின் பிறர்க்கீயாது பற்றுள்ளஞ்செய்பு மயக்கத்தாலே ஒருவனுக்கு நிறைதலில்லாத பேய்ப்பிறப் புண்டாம், எ-று.

இருமையினு மெய்து மின்பங்கள் பலவுமடங்க எல்லாமென்றும், ஈட்டுதற்கு முன்னுண்டாய வறிவு பின்மயங்குதலின் மருளென்றும், பொருளுண்டாயிருக்கப் பிறர்பசி கண்டிருந்த தீவினைபற்றி உனவுக ளுளவாயிருக்கப் பசித்து வருந்தும் பிறப்புளதா மென்றுங் கூறினர்.

(தே - ப - ரை.)—பொருளான் - பொருளொன்றினுல், எல்லாம் ஆம் என்று - எல்லாம் உண்டாகும் என்று (அறிந்து), (அதனைச்சம்பாதித்து), ஈயாது இவறும் - (பின்பிறர்க்கு) கொடாது

உலோபத்துவஞ் செய்யும், மருளான் - மயக்கத்தினாலே, மாணப் பிறப்பு - நிறைதலில்லாத (பேய்) பிறப்பு, ஆம் - (ஒருவனுக்கு) உண்டாம்.

நூ. ஈட்ட மிவறி வேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

(பரி-ரை.) எ-து;—யாம் பிறரின்மிக வீட்டிது மென்று பொருளின தீட்டன் மாத்திரத்தையே விரும்பி அதன்பயனுய புகழை விரும்பாத மக்களது பிறப்பு நிலத்திற்குப் பாரமாமத்துணையே, எ-று.

இசை இருமைக்கு முறுதியாய அறமாகலின் ஈகையான் அதனையே வேண்டல் செய்யாது ஈட்டற் றுன்பத்தையும் காத்தற் றுன்பத்தையும் வேண்டிய வறிவின்மைபற்றி, நிலக்குப்பொறை யென்ருர். பிறப்பென்றது அதற் குரிய வுடம்பினை.

(தெ - ப - ரை)—ஈட்டம் - (பிறரின்மிக) சம்பாதிப்போ மென்று, இவறி - (பொருள் சம்பாதித்தன் மாத்திரத்தையே) விரும்பி, இசை வேண்டா ஆடவர் - (அதன்பயனுகிய) புகழை விரும்பாத மக்களது, தோற்றம் - (பேய்) பிறப்பு, நிலக்கு பொறை-பூமிக்குப் பாரமேயாம்.

சு. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன்.

(பரி-ரை.) எ-து,—ஒருபொருளு நீத்தறியாமையின் ஒருவராலும் நச்சப் படுதலில்லாதவன் தானிறந்தவழி ஈண்டொழிந்து நிற்பதாக யாதனைக் கருதுமோ? எ-று.

ஈண்டொழிந்து நிற்கும்புகழ் ஈவான்மேலன்றி நில்லாமையின் அவனுக் கதனே டியாது மியைபில்லையென்பார், என்னெண்ணுங கொல்லோவென் ருர். ஓகாரம் அசை. இவை மூன்றுபாட்டானும் பிறர்க்குப் பயன்படலின்மை கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—ஒருவரான் - (ஒருபொருளுங் கொடுத்து அறியாமையால்) ஒருவராலும், நச்சப்படாதவன் - இச்சிக்கப்படாதவன், (தான் இறந்தவிடத்து), எச்சம் என்று - (இங்கே) ஒழிந்து நிற்பதாக, என் எண்ணுங்கொல்- எதை நினைப்பானே?

நி. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.

(பரி-ரை.) எ-து;—பிறர்க் கீவதும் தாநுகர்வதுமாய இரண்டுசெய்கையு முடைய ரல்லதாக் ரப் பலவாக வடுக்கிய கோடிபொரு ளுண்டாயினும் ஒன்று மில்லை, எ-று.

இன்பத்தினும் அரஞ் சிறந்தமையின், கொடுத்தற்றொழில் முற்கூறப்பட்டது. அடுக்கியகோடியென்றது ரண்டெண்ணப்படும் பொருண்மே னின்றது. ஒன்று மில்லார்போலப் பயனிரண்டு மிழத்தலின், இல்லென்றார்.

(தே - ப - ரை.)—கொடுப்பதூஉம் - (பிறர்க்கு) ஈவதும், துய்ப்பதூஉம் - (தான்) அனுபவிப்பதுமாகிய, (இரண்டு செய்கையும்), இலலார்க்கு - உடையரல்லாதவர்க்கு, அடுக்கிய - (பலவாக) அடுக்கிய, கோடி உண்டாயினும் - கோடிப்பொருள் உண்டாயினும், இல்-(ஒன்றும்) இல்லை.

சு. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீதலியல்பிலா தான்.

(பரி-ரை.) எ-து;—தானுகாளும் அதன்மேலும் தகுதியுடையார்க்கு அவர்வேண்டியதொன்றை ஈதலியல்பை யிலனாயினும் இரண்டுஞ் செய்தற் கிடனுடைத்தாய செல்வத்திற்கு ஒருநோய், எ-று.

தகுதி - தானகு கோடற் கேற்புடைமை. ஏதம்—ஆகுபெயர். நுகரப்படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழிற்பெரியதனை அன்றுக்கினமையின், நோயென்றார். ஈதலியல்பிலாதானது பெருஞ்செல்வம் அவனுக்கு ஈட்டல் காத்தன் முதலியவற்றுல் துன்பமேயாமென் றுரைப்பாருமுளர். இவை யிரண்டுபோட்டானும் அவ்விருமையும் உடன் கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—தான் துய்வான் - தான் அனுபவியாதவனாகி, (அதன்மேலும்), தக்கார்க்கு - தகுதியுடையவர்க்கு, ஒன்று - (அவர்வேண்டியது) ஒன்றை, ஈதல் இயல்பு இலாதான் - கொடுத்தற்றன்மை யில்லாதவன், பெருஞ்செல்வம் - அவ்விரண்டுஞ் செய்தற்கு இடமுடையதாகிய) பெரிய செல்வத்திற்கு, ஏதம் - ஒருநோய்.

எ. அற்றூர்க்கொன் றூற்றுதான் செல்வ மிகலகம்
பெற்றூ டமியண்மூத் தற்று.

(பரி-ரை.) எ-து;—ஒருபொருளு மிலராயினர்க்கு அவர் வேண்டிய -ரக் கொடாதானது செல்வங் கோன்னைதழிதல் பெண்டிரின்மிக்க

நலத்தினைப்பெறருளொருத்தி கொடுப்பாரின்மையிற கொழுனின்றித் தமியளாய மூதத்தனமைதது, எ று.

நலம—வடிவினனமையும குணத்தினன்மையும. இரணடுமொருங்கு பெறுத லரிதாகலின, பெறருளெனறார. கொடுபபாருங கொழுனனுமேயனறித தானும பயனிழதது கழிதத குயரியோ டுவமை கூறினமையின, தானு மேறபானுமேயனறிச செலவமும பயனிழதது கழியுமெனபதாயிறறு

(தெ-ப ரை)—அறருகு-(ஒருபொருளும)இலராயினுர்க்கு, ஒனறு - (அவரவ ராடியது) ஒனறனே, ஆறறுகான - கொடாதவனது, செலவம - செலவானது (வீணுகைகழிதல), மிகநலமபெற்ருள்-(அழகு குணமுகலிய) மிகுநத நலதத்தினப பெறற வொருதத்தி, (கொடுபபாரிலலாமைபினுலே), தமியள - (நணவனிலலாமல்) யளாய, மூதத்தறறு - மூதத்தனமைதது

அ நசசப படாதவன் செலவ நடுவுரு
ணசசு மரமபழுத் தறறு

(பரி-ரை) எ-து—வறியாகக்ணியனு யிருநதும ஒனறுங கொடாமையின் அவரா னசசபபடாதவன செலவமெயதுதல உரிடை நிரபதோ நசசு மரம பழுதத்தாறபோலும, எ-று

நடுவுரெனபது பினமுனனுகக் தொக்கவாரும வோறுமைதொகை. அணமையுடைமைகளாற பயனிலலை யெனபதாம

(தெ - ப - ரை)—(வறிய ரகுச சமீபனு யிருநதும் ஒன்றுங் கொடாமையால), நசசபபடாதவன- (அவரால) இரசிக்கபபடாதவன, செலவம - செலவா (பொறுதல), நடுவுருள - ஊர்நடுவுள்ள, நசசுமரம - எடடி மரம, பழுதறறு - பழுதறலபோலும

கூ அன்பொரீஇக் கறசெற றறகோகா நீட்டிய
வொண்பொருள கொளவா பிறா

(பரி ரை) எ-து,—ருவன கொடாமைபபொருடடுச சுறறத்தார நட்டாராகண அனபு செயதலே யொழிதது வேணடுவன துகயாது தனனச செறறது வறியாராகுக ரதன்மூதவியத றத்தை நினபபதுஞ செயயாது ஈட்டிய வொள்ளியபொருளைக கொணடுபோயப பயனபெறுவா பிறா, எ-று.

பயனுய அறறும இனபமுஞ செய்துகொள்ளாதானுகருப் பொருளாலுள்ளது ரடடறறுனபமே யெனபது தோனற ஈட்டியவென றும, அவனவழியினுளளாாக்கும உதவாதெனபது தோன்ற பிறரென றும கூறினுர.

(தே - ப - ரை.)—(ஒருவன்), அன்பு ஒரீஇ - (கொடாதிருத்தற்பொருட்டுச் சுற்றத்தாரிடத்தும் கட்பினரிடத்தும்) அன்பு செய்வதனை ஒழிந்து, தன் செற்று - (வேண்டுவன அனுபவியாமல்) தன்னை வருத்தி, அறன் நோக்காது - (வலியவர்க்குக் கொடுத்தலாகியாகிய) அறத்தை நினையாமல், ஈட்டிய ஒள் பொருள் - சம்பாதித்த ஒள்ளியபொருளை, பிறர் கொள்வார் - அன்னியர் (கொண்டுபோய்ப் பயன்) கொள்ளுவார்.

கo. சிறுமை செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

(பரி-ரை.) எ-து,—புகழுடைத்தாய செல்வத்தினை யுடையவரது நிற்குங்காலஞ் சிறிதாய வறுமை உலகத்தையெல்லாம் நிலைகிறுத்துமேகம் வறுமை மிக்காற்போல்வதோ ரியல்பினை யுடைத்து, எ-று.

துனி-வெறுப்பு ; அதனைச செயதலாற் றுனியெனப்பட்டது. யாவர்க்கும் பயன்பட்டார் அதனுன் வறியராய வழியும் அவ்வறுமை கடிகினிங்கு தலிற் பின்புஞ் செல்வராய்ப் பயன்படுவரென்பது உவமையாற் பெறப்பட்டது ; படவே, நன்றியில்லாத் செல்வம் எஞ்ஞான்றும் பயன்படாதென்பதாயிற்று. இதற்குச் சிறுமைசசெல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில் வெறுப்பு மாரி வறங் கூர்ந்தனைய தன்மையையுடைத்தென அதிகாரத்தோடு பொருந்தாமை மேலும் ஓர்பொருட்டொடர்பு படாமலுரைப்பாருமுளர். இவை நான்குபாட்டானும் அசசெல்வத்தது குற்றங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—சீர் உடை - புகழுடைத்தாகிய, செல்வர் - செல்வத்தினை யுடையவரது, சிறு துனி - (நிற்குங்காலம்) சிறிய வறுமை, மாரி - (உலகத்தையெல்லா நிலைகிறுத்துகிற) மேகம், வறம் கூர்ந்து அனைய தை - வறுமை மிகுந்தது போல்வதோ ரியல் பினை, உடைத்து - உடையது

கo2-ம் அதிகாரம்—நாணுடைமை.

அஃதாவது மேற்சொல்லிய சால்பு பண்பு முதலிய குணங்களை னுயர்ந்தோர் தமக்கொவ்வாத கருமங்களில் நாணுத்துடையராந்தன்மை. அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

க. கருமத்தா னாணுத னாணுத் திருநுத
னல்லவர் நாணப் பிற.

(பரி-ரை.) எ-து,—நன்மக்களுணர்வது இழிந்த கருமங் காரணமாக நாணுதல்; அஃதன்றி மனமொழிமெய்களை தொடுக்கத்தான் வருவனவோ வெனின், அவை அவரளவல்ல அழகிய நூதலினையுடைய குலமகளிர் நாண்கள், எ-று.

பிற குலமகளிர் நாணென்றதனன் எனையது நன்மக்களுணென்பதும், நாணுதலென்றதனுற் கருமத்தினிழிவும், பெற்றும். திருநுதனல்லவரென்பது புகழ்சசிக்குறிப்பு. எதுப்பன்மைபற்றிப் பிறவென்றார். இனி அற்றமறைத்தன் மூதலியன பொதுமகளிர் நாணை டொக்குமென் றுரைப்பாரு முளர். அவர்க்கு நாண கேடு பயக்குமென விலக்கப்பட்டமையானும், அவர் பெயராற் கூறப்படாமையானும், அஃதரையன்மையறிக. இதனுன் நாணின நிலக்கணங் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—நா ணு - (நன்மக்களது) நாணுவது, கருமத்தால் நாணுதல் - (இழிந்த) கருமங்காரணமாக நாணுதலாம்; பிறவாதல்லாமல் (மனமொழிமெய்களது ஒடுக்கத்தால் வருகிற) நாணங்கள், திரு நுதல் - அழகிய நெற்றியையுடைய, கல்லவர் - குலமகளு, நா ணு - நாணங்கள் போலும்.

உ. ஒளணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(பரி-ரை.) எ-து —உணும் உடையும் அவையொழிந்தனவும் மக்களுயிர்க்கெல்லாம் பொது; நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே, அவையல்ல, எ-று.

ஒழிந்தன—உறக்கமும் அச்சமும் காமமும். சிறப்பு—அவ்வுயிர்களின் வேறுபாடு. அச்சமென்று பாடமோதுவாரு முளர்.

(தே - ப - ரை.)—ஒளண் - உண்டியும், உடை - ஆடையும், எச்சம் - (உறக்கம் காமம் அச்சம் என்பன) ஒழிந்தவைகளும், உயிர்க்கு எல்லாம்-(மக்கள்) உயிர்க்கெல்லாம், வேறு அல்ல-பொதுவாம்; மாந்தர் சிறப்பு - நன்மக்களுக்குச் சிறப்பாவது, நாண் உடைமை - நாணமுடைமையாம், (அவையல்ல).

ங. ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

(பரி-ரை.) எ-து,—எல்லாவுயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனைவிடா; அதுபோலச் சால்பு நாணென்னு நன்மைக் குணத்தைத் தனக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனை விடாது, எ-று.

உடம்பென்பது சாதியொருமை கண்மை—ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயனெய்தாதவாறு போலச் சால்பு நாணோடு கூடியல்லது பயனெய்தா தென்பதாம். ஊணைக் குறித்தவென்று பாடமோதுவாரு முளர்.

(தே - ப - ரை.)—உயிர் எல்லாம் - எல்லாவுயிர்க்குரும், ஊணை - உடம்பை, குறித்த - (தமக்கு) இருப்பிடமாகக் கொண்டு அதனை விடாவாம்; (அதுபோல்), சால்பு-(நற்குணங்களின்) நிறைவானது, நாண் எனு நன்மை - நாணெனுகிற நற்குணத்தை, குறித்தது-(தனக்கு) இருப்பிடமாககொண்டு அதனைவிடாது.

சு. அணியன்றே நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேற்
பிணியன்றே பீடு நடை.

(பரி-ரை.) எ-து,—சான்றோர்க்கு நாணுடைமை யாபரணமாம்; அவ் வாபரண மில்லையாயின் அவர் பெருமிதநடையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம், எ-று.

அழகு செய்தலின் அணியென்றும், பொறுத்தற் கருமையிற் பிணியென்றுங் கூறினர். ஓகாரவிடைச் சொற்கள் எதிர்மறைக்கண் வந்தன. இவை மூன்றுபாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—சான்றோர்க்கு - நற்குண நிறைந்தோர்க்கு, நாண் உடைமை - நாணமுடைமை, அணி அன்றே - ஆபரணமாம்; அஃது இன்றேல் - அவ்வணி இல்லையாயின், பீடு நடை - (அவர்) பெருமிதநடை, பிணி அன்றே - (கண்டவர்க்கு) நோயாம்.

நி. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு.

(பரி-ரை.) எ-து,—பிறர்க்கு வரும்பழியையுந் தமக்கு வரும்பழியையும் ஒப்பமதித்து நாணுவாரை உலகத்தார் நாணுக் குறைவிடமென்று சொல்லுவர், எ-று.

ஒப்பமதித்தல்-அதுவுந் தமக்கு வந்ததாகவே கருதுதல். அக்கருத்துடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரென்பதாம். இதனுல் அதனை யுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

(தே -ப - ரை.)—பிறர் பழியும் - பிறர்க்குவரும் பழியையும், தம் பழியும் - தமக்குவரும் பழியையும், நாணுவார் - (ஒப்பமதித்து) நாணுவாரை, உலகு - உலகத்தார், நாணுக்கு—, உறைபதி என்னும் - இருப்பிடமென்று சொல்லுவர்.

கூ. நாண்வேலி கொள்ளாது மன்னெ வியன்ஞாலம்
பேணலா மேலா யவர்.

(பரி-ரை.) எ-து,—உயர்ந்தவர், தமக்கேமமாக நாணினைக் கொள்ள), அகன்றஞாலத்தைக் கொள்ள விரும்பார், எ-று.

பழி பாவங்கள் புகுதாமற் காத்தலின், வேலியென்றார். நாணும்ஞாலமுந் தம்முண்மாறுயவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவையுதி நெறியாய ஞாலத்தினைக்கொள்ள விரும்பா ரென்பதாம். மன்னும் ஒவும் அசை. நாணை யிய வேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பாரென் றுரைப்பாருமுளர்.

(தே - ப - ரை)—மேலாயவர் - உயர்ந்தவர், வேலி - (தமக்கு) காப்பாக, நாண் - நாணத்தை, கொள்ளாது - கொள்வதல்லாமல், இயன் ஞாலம் - பரப்பானபூமியை, பேணலர் - கொள்ள விரும்பார்.

எ. நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பிரு ட்டா
ணுண்டுறவார் நாணுள் பவர்.

(பரி-ரை.) எ-து,—நாணினை நெறிப்பறிந்து அதனை விடாதொழுகுவார் அந்நாணு முயிருந் தம்முண் மாறுயவழி நாணினையாமற் பொருட்டு உயிரை நீப்பர், உயிர் சிதையாமற் பொருட்டு நாணினை நீக்கார், எ-று.

உயிரினும் நாண் சிறந்ததென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் அவர் செயல் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—நாண் ஆள்பவர் - நாணத்தை (அதனது சிறப்பறிந்து) விடாதுகடைப்பிடிப்பவர், (அந்நாணும் உயிருங் கூடிநிற்க மாட்டாத விடத்து), நாணுல் - நாண் சிதையாமற்பொருட்டு, உயிர் துறப்பார் - உயிரை நீக்குவார் ; உயிர் பொருட்டான் - உயிர்சிதையாமற் பொருட்டு, நாண் துறவார் - நாணினை நீக்கார்.

அ. பிறர்நாணத் தக்கது தானுணை னுயி
னறநாணத் தக்க துடைத்து.

(பரி-ரை.) எ-து,—கேட்டாருங் கண்டாரு நாணத்தக்க பழியை ஒருவன் தானுணுது செய்யுமாயின், அந்நாணுமை அவனை அறம் விட்டு நீங்கத்தக்க குற்றத்தினை யுடைத்து, எ-று.

தானெனச் செய்வானைப் பிரிக்கின்றாராகலின், பிறரென்றார். நாணை டியை பில்லாதானை அறஞ்சாரா தென்பதாம்.

(தே - ப - ரை.)—பிறர் - கேட்டவரும் கண்டவரும், நாணத் தக்கது - நாணத்தக்கபழியை, தான் நாணுன் ஆயின் - (ஒருவன்)

தான் நாணுதசெய்வானுயின், (அந்நாணுமை), அறம் நாணத் தக்கது - அறமானது (அவனை) விட்டு நீங்கத்தக்க குற்றத்தை, உடைந்து - உடையது.

கூ. குலனுசுடுங் கொள்கை பிழைப்பி னிலனுசுடு
நாணின்மை நின்றக் கடை.

(பரி-மை.) எ-து,—ஒருவனுக்கொழுக்கம பிழைக்குமாயின் அப்பிழைப்பு அவன் குடிபிறப் பொன்றனையுங் கெடுக்கும்; ஒருவன்மாட்டு நாணின்மை நின்றவழி அந்நிலை அவனலம் யாவற்றையுங் கெடுக்கும், எ-று.

நிற்றல் ஒருபொழுதும் நிகாதமை. நலம் சாதியொருமை யாகலின்; பிறப்பு, கல்வி, குணம், செயல், இனமென் றிவற்றுள் வந்தனவெல்லாங் கொள்ளப்படும். ஒழுக்க அழிவினும் நாணழிவு இறப்பத் தீதென்பதாம்.

(தே - ப - ரை.)—கொள்கை - ஒழுக்கம், பிழைப்பின்-(ஒருவனுக்கு) வழுவு மாயின், (அவ்வழுவு), குலம் சுடும் - (அவன்) குடிப் பிறப் பொன்றையும் கெடுக்கும்; நாண் இன்மை - நாணில்லாமை, நின்றக்கடை - (ஒருவன்கண்ணே) நின்றவிடத்து, (அந்நிலை), நலம் - (அப்பிறப்பு கல்வி குணம் செயல் இனம் என்பவைகளால் அவனுக்குவரும்) நலம்யாவையும், சுடும் - கெடுக்கும்.

கo. நாணகத் தில்லை நிலக்க மரப்பாவை
நாணு முயிர்மருட்டி யற்று.

(பரி - மை.) எ-து,—தம்மனத்தின்கண் நாணில்லாத மக்கள் உயிருடையார் போன்றியங்குகின்ற வியக்கம் மரத்தாற் செய்த பாவை இயந்திரக் கயிற் றினுலுய தன்னியக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினற்போலும், எ-று.

கருவியே கருத்தாவாயிற்று. நாணில்லாத மக்களியக்கம் நாணுடைய பாவையியக்கம் போல்வ தல்லது உயிரியக்க மன்றென்பதாம். இவை மூன்று பாட்டானும் நாணில்லார திழிவு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—அகத்து-(தம்) மனத்தில், நாண்-நாணத்தை, இல்லார் - இல்லாதமக்கள், இயக்கம் - (உயிருடையவர் போன்று சஞ்சரிக்கின்ற) சஞ்சரிப்பு, மரப்பாவை - மரத்தாற் செய்யப்பட்ட பாவை, நாணும் - எந்திரக் கயிற்றினுலாகிய (சஞ்சரிப்பால் உயிர்-உயிருடையதாக, மருட்டியற்று - மயக்குதல் போலும்,

---

கூடம் அதிகாரம்—குடிசெயல்வகை.

அஃதாவது ஒருவன் முன்பிறந்த குடியை உயர்செய்தலின் நிறம். இது தாழ்வின்க ணுணர்த்துலுடையாராக குளதாவதாகலின நாணுடைமையின்பின வைக்கப்பட்டது.

க கருமஞ செயவொருவன் கைதூவே னென்னும
பெருமையிற் பீடுடைய தில

(பரி-ரை) எ-து,—தனகுடி செயதற்பொருட்டுத் தொடங்கிய கருமம முடியாமையின எண்ணிய கருமஞ செயத லியான கைவிழியே னென்னும் ஆளவினைப் பெருமைபோல ஒருவனுக்கு மேமபாடுடைய பெருமை பிறிதில்லை, எ-று.

குடிசெயதற்கென்பது அதிகாரத்தான வந்தது. பலவகைத்தாய கருமச செயலாற் செலவமும புகழுமெயதிக் குடியுயருமாகலின, பீடுடைய தில லென்றார். குடிசெயதற கருமமே நடத்தலால, தனகருமஞ செயவெனறும பிறாகருமஞ செயவெனறு முரைபபாரு முளர, தனகருமமும அதுவே யாகலானும, பிறரேவல செயதல கீழ்மையனமையானும, அவையுரை யன்மை யறிக.

(தே - ப - ரை)—ஒருவன்—, (தனகுடி செயகற்பொருட்டுத் தொடஙகிய கருமமுடியாமைபால), கருமம செய - அககருமஞ் செய்தற்கு, கைதூவேன் எனனும - கைவிழியேனென்கிற, பெருமையின - முயறசிப பெருமைபோல, பீடு உடையது - மேம்பாடுடைய பெருமை, இல - (அவனுக்கு) இல்லை

உ ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங குடி

(பரி-ரை.) எ-து,—முயறசியும நிறைந்த வறிவுமென்று சொலலபபட்ட இரணடினையுமுடைய இடையறாத கருமசெயலால ஒருவன குடியுயரும், எ-று.

நிறைதல—இயறகையறிவு செயறகையறிவோடுகூடி நிரமபுதல். ஆளவினை மடியுகுதாமற பொருட்டு. ஆனறவறிவு உயாதறகேறற செயலகளும அவைமுடிகுஙு நிறமும பிழையாம லெணணுதறபொருட்டு. இவை யிரணடு பாட்டானும் அசசெயறகுக காரணங கூறப்பட்டது.

(தே - ப - ரை)—ஆள்வினையும - முயறசியும, ஆனற அறிவும - நிறைந்தவறிவும், என இரண்டினை - எனறு சொலலபபட்ட இரண்டினையுமுடைய, நீள் வினையான - நீடிய இலலாத கருமசெயலால், குடி - (ஒருவனது) குடி, நீளும - உயரும்

ஈ. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

((பரி-ரை.) எ-து,—என் குடியினை யுயரசெய்யக்கடவே னென்று கொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் ஒருவனுக்குத் தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும், எ-று.

முயற்சியை அதன் காரணத்தாற் கூறினர். தற்றுதல் - இறகவடித்தல். முன்னடப்பார்செயல் நியதியே லேற்றப்பட்டது.

(தே - ப - ரை.)—குடிசெய்வல் என்னும் - (என்) குடியினை உயரசெயயக்கடவேனென்று கொண்டு (அதற்கு ஏறற கருமங்களின் முயலுகிற), ஒருவற்கு - ஒருவனுக்கு, தெய்வம் - தெய்வமானது, மடி - உடையை, தற்று - இறுக உடுத்திக்கொண்டு, தான்—, முந்துறும் - முன்னே யுற்று நிற்கும்.

ச. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா தஞ்ற்று பவர்க்கு

(பரி-ரை.) எ-து,—தங்குடிக்காம் வினையை விடைந்து முயல்வார்க்கு அவ்வினை முடிக்குந்திறம் அவர் சூழவேண்டாமற் றானே முடிவெய்தும், எ-று.

குடி—ஆகுபெயர். தெய்வ முந்துறுதலாற் பயன்கூறியவாறு. இவை யிரண்டு பாட்டானும் அதற்குத் தெய்வக் துணையாதல் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—தம் குடியை - தங்குடிக்காந் தொழிலை, தாழாது - விடைந்து, உஞற்றுபவர்க்கு - முயல்பவர்க்கு, (அத் தொழில் முடிக்கும் விதம்), சூழாமல - ஆலோசிக்கவேண்டாமல், தானே முடிவு வய்தும் - தானே முடிவுபெறும்.

— ——

ரு. குற்ற மிலனுய்க் குடிசெய்து வாழ்வாணை
சுற்றமாச் சுற்று முலகு

(பரி-ரை.) எ-து,—குற்றமாயின செய்யாது தன்குடியை யுயரச்செய் தொழுகுவானை அவனுக்குச சுற்றமாக வேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார், எ-று.

குற்றமாயின—அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பய னெய்தலேகை யாவருஞ்சென்று சார்வ ரென்பதாம்.

(தே - ப - ரை.)—குற்றம் இலன் ஆய் - குற்றமானவை செய்திலனாகி, குடி செய்து - (தன்) குடியை உயரச்செய்து, வாழ்வானை -

வாழ்கின்றவனே, சுற்றம் ஆ - (அவனுக்கு) உறவாகவேண்டி, உலகு-உலகத்தார், சுற்றும் - (தாமே சென்று) சூழ்வர்.

ங நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று உயர்த்துச் சொல்லப்படுவது தான் பிறந்த குடியினையாளுந் தனமையைத் தனக்குளதாகக் கிக்கோடல், எ-று.

போர்த்தொழில் ஈக்குதற்கு நல்லாண்மையென விசேடித்தார். குடியினை யாளுந்தன்மை—குடியிலுள்ளாரை யுயரசெய்து தன்வழிப்படுத்தல். அதனைச செய்துகோடல நல்லாண்மையாமாறு வருகின்ற பாட்டாற் பெறப்படும்.

(தே - ப - ரை.)—ஒருவற்கு - ஒருவனுக்கு, நல்ல ஆண்மை என்பது - நல்ல ஆண்மையென்று (உயர்த்தி) சொல்லப்படுவது, தான் பிறந்த—, இல் ஆண்மை - குடியை ஆளுதற் றன்மையை, கொளல் - (தனக்கு) உண்டாக்கிக்கொள்ளுதல்.

ச. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவா மேற்றே பொறை.

(பரி-ரை) எ-து,—களத்தின்கட் சென்ருர் பலராயினும் போர்தாங்குதல் வன்கணணர் மேலதானுற்போல, குடியின்கட் பிறந்தார் பலராயினும் அதன் பாரம் பொறுத்தல் அது வல்லார் மேலதாம், எ-று.

பொருட்கொக்கவேண்டுஞ் சொற்கள் உவமைக்கண் வருவிக்கப்பட்டன. ஈன்குமதிக்கப் படுவோ அவரே யென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் அது செய்வா செய்துஞ் சிறப்புக கூறப்பட்டது.

(தே - ப - ரை)—அமரகத்து - களத்தினிடத்து, (சென்றவர் பலராயினும் போர்தாங்குதல்), வன் கண்ணர் போல - சூரர் (மேலாகுதல்) போல, தமரகத்தும் - குடியினிடத்தும், (பிறந்தவர் பலராயினும்), பொறை - (அதன்பாரம்) பொறுத்தல், ஆற்றுவார் மேற்றே - வல்லவர்மேலதேயாம்

அ. குடிசெய்வார்க் கில்லைப் பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்

கo. அதி. குடிசெயல்வகை

(பரி-ரை.) எ-து,—தங்குடியினை யுயரச்செய்வார் அசசெயலேயே நோக் காது காலத்தைநோக்கி மடியினைச் செய்துகொண்டு மானத்தையும் கருதுவ ராயிற் குடி கெடும், ஆகலான் அவர்க்குக் காலவியதி யில்லை, எ-று.

காலத்தைநோக்கி மடிசெய்தல்-வெயின் மழை பனி யென்பன வுடைமை நோக்கிப் பின்னர்ச செய்துமென் றெழுந்திருத்தல். மானங் கருதுதல்— இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறவேண் யானேவென்று உட்கோடல். மேல் * "இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண் டும்பொழு" தென்றதுட்கொண்டு இவர்க்கு வேணடுமோ வென்று கருதினும் அது கருதற்க வென்று மறுத்தவா று.

(தே - ப - ரை.)—மடிசெய்து - (குடியுயரச்செய்தலே நோக் காது காலத்தை நோக்கி) சோம்பல்செய்துகொண்டு, மானம் - மானத்தையும், கருத - நினைப்பராகில், கெடும் - (குடி) கெடும்; (ஆதலால்), குடிசெய்வார்க்கு—, பருவம் - காலவியதி, இல்லை—.

கூ. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைத்
குற்ற மறைப்பா னுடம்பு.

(பரி-ரை.) எ-து,—மூவகைத்துன்பமு முறற்பாலதாய தன்குடியை அவை யுறுமாற்காக்க மூபல்வானது உடமபு அம்முயற்சித் துன்பத்திற்கே கொள்கலமா மதனுணீய, அஃதொழிந்து இன்பத்திற்காத் லில்லையோ?எ-று.

† "உறைப்பெய லோலை போல—மறைக்குவன் பெருமந்தகுமித்து வரு வலே" என்புழியும் மறைத்தல் இப்பொருட்டாயிற்று. என்குடிமுழுதுமின் புற்றுயிரவே தானிருமையுமெய்துதலான் இம்மெய்வருத்தமாத்திரம் எனக்கு நன்றென்று முயலுமறிவுடையான் அஃதொருஞான்று மொழியாமைநோக்கி, இடும்பைக்கே கொள்கலங கொல்லோவென்றார். இது குறிப்புமொழி. இவை யிரண்டுபொட்டாணும் அவர் அது செய்யுமியல்பு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—குடும்பத்தை - (தன்) குடியை, குற்றம் மறைப்பான் - (மூவகை) துன்பங்களும் அடையாமற்காக்க முயல் பவனது, உடம்பு—, இடும்பைக்கே - (முயற்சி) துன்பத்திற்கே, கொள்கலம் கொல - கொள்கலமா மவ்வளவோ, [இன்பத்திற் காகுத லில்லையோ?]

கo. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி.

* மேலே, சுகூ-ம் அதி. காலமறிதல், கூ ம் குறளிற காண்க.
† புறநானூறு, உகo.

(பரி-ரை.) எ-து.—துன்பமாகிய கவியம் புருந்து தன்முதலேவெட்டிச் சாய்க்க ஒருபற்றின்றி வீழாகிற்கும. அக்காலத்துப் பற்றுவன கொடுத்துத் தாங்கவல்ல நல்லவாண்மகன் பிறவாத குடியாகிய மரம், எ-று.

முதல்—அதன்வழிக்குரியார். வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன் படுதலும் அல்லாவுழிக் கெடுதலுமுடைமையின், மரமாக்கினர்; * "தாங்கு சிறை வாவலுறை தொன்மரங்க ளன்ன, புங்குருல காயவத னுட்பிறந்த வீரர், தாங்கல்கடை ஞருந் தலே சாய்ப்பவரு நீசெர. விங்கன்மட வார்கள்கட னென்றழுந்து போந்தால்." எனருர் பிறரும். இது குறிப்புருவகம். இதனை அவரில்லாத முடக்குளதாகக் குற்றம கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—அடுத்து - தான்வீழும்போது) முட்டுக் கொடுத்து, மன்றும் - தாங்கவல்ல, நல் ஆன் - நல்ல வாண்மகன், இலாத - பிறவாத, குடி - குடியாகிய (மரம்), இடுக்கண் - துன்ப மாகிய (கோடரியானது), கால் - (தன்) முதலே, கொன்றிட-வெட்டிச் சாய்க்க, வீழும் - (ஒருபற்றில்லாமல்) வீழாகிற்கும்.

கoசம் அதிகாரம்—உழவு.

அஃதாவது சிறபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கு மூரித்தாய உழுதற்றொழில். செய்விக்குங்கால் ஏனேயோர்க்கு மூரித்து. இது, மேற்குடி யயர்தற் கேதுவென் ன அவினே வகுகயாகவின். குடிசெயல்வகை யின்பின் வைக்கப்பட்டது.

க. கழன்றுமேர்ப் பின்ன துலக மதனு
ழுழன்று முழுவே தலே

(பரி-ரை.) எ-து —உழுதலான்வரும் மெய்வருத்த நோக்கிப் பிறதொழில் களேச செய்துதிரிந்தும், முடிவில் எருடையார் வழியதாயிற்று உலகம். ஆத லான் எல்லாவருத்த முற்றும், தலேயாயதொழில் உழவே, எ-று.

எர்—ஆருபெயர். பிறதொழில்களாற் பொருளெய்திய வழியும் உணவின் பொருட்டு உழுவார்கட் செல்லவேண்டுதலிற் சுழன்று மேர்ப்பின்ன துலக மென்றும், வருத்தமிலவேனும் பிறதொழில்கள் கடையென்பது போதர உழத்துமுழவே தலேயென்றும கூறினர். இதனுல் உழவினது சிறப்புக் கூறப் பட்டது.

(தெ - ப - ரை)—உலகம்—, சுழன்றும் - (உழுதலால் வரு மெய் வருத்தநோக்கிப் பிறதொழில்களேச்செய்தும்) திரிந்தும், எர்

* சிவகசிந்தாமணி, கந்தருவதத்தையாரிலம்பகம், சு.

பின்னது - (மூடிவிலே) ஏருடையார் வழியதாயிற்று ; அதனால்-ஆதலால்; உழந்தும் - (எல்லா) வருத்தமுற்றும், தலை - தலைமையாகிய (தொழில்); உழவே - உழுதலேயாம்.

உ. உழவா ருலகத்தார்க் காணி யஃதாற்றா
தொழுவாரை யெல்லாம் பொறுத்து.

(பரி-ரை.) எ-து,—அவ்வுழுதலேச செய்யமாட்டாது பிறதொழில்கண் மேற் செல்வார் யாவரையுங் தாங்குதலால், அதுவல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அசசாணியாவர், எ-று.

* "காடுகொன்று நாடாக்கிக் குளந் தொட்" டென்றுற்போல உழுவா ரென்றது உழுவிப்பார் மேலுஞ் செலலும். உலகத்தாரென்றது ஈண்டியவை யொழிந்தாரை. கலங்காம னிறுத்தற்கண ஆணிபோலின், ஆணியென்றார். பொறுத்தலானென்பது திரிந்து நின்றது. எகதேச வருவகம். அஃதாற்றார் தொழுவரே யெல்லாம் பொறுத்தென்று பாடமோதி, அது மாட்டாதார் புரப் பார் செய்யும் பரிபவமெலலாம் பொறுத்து அவரைத் தொழுவாரேயாவ ரென்று உரைப்பாரு முளர்.

(தே - ப - ரை.)—உழுவார் - உழுதலில் வல்லவர், அஃது ஆற்றாது - அவ்வுழுதலைச் செய்யமாட்டாமல், எழுவாரை எல்லாம்- (பிறதொழில்களின்மேல்) மேற்செல்வோர் யாவரையும், பொறுத்து - தாங்குதலால், உலகத்தார்க்கு - உலகத்தாராகிய (தேர்க்கு), ஆணி-

ங. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாங்
தொழுதுண்டு பின் செல் பவர்.

(பரி-ரை.) எ-து,—யாவரு மூண்ணும் வகை உழுதலேசெய்து அதனற் ருமுமுண்டு வாழ்கின்ருரே தமக்குரியராய் வாழ்கின்றவர் ; மற்றையாரெல் லாம் பிறரைத்தொழுது அதனற் ருமுண்டு அவரைப் பின்செல்கின்ற வர், எ-று.

மற்றென்பது வழக்குப்பற்றி வந்தது. தாமு மக்கட்பிறப்பினராய் வைத் துப் பிறரைத்தொழுது அவர் பிலகொடுப்பத் தமமுமிரோம்பி அவர்பின் செல் வார் தமக்குரியரல்ல ரென்பது கருத்து.

(தே - ப - ரை.)—உழுது - (எல்லாரும் உண்ணும்படி) உழு தலேச்செய்து, உண்டு - (அதனால்தாமும்) உண்டு, வாழ்வாரே - வாழ்கின்றவர்களே, வாழ்வார் - (தமக்கு உரியராய்) வாழ்கின்ற

---

* பட்டினப்பாலை, அடி-உஅசு-ச.

வர்; மற்றெல்லாம் - மற்றவரெல்லாரும், தொழுது - (பிறரை) தொழுது, உண்டி - (அதனால் தாமும்) உண்டி, பின் செல்பவர் - (அவரை) பின்செல்லுகின்றவர்.

*. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
தலைகுடை நீழலவர்.

(பரி-ரை.) எ-து,—உழுதலிற்றொழிலான் செல்வினை யுடையராய உண்ணினியுடையோர் பலவேந்தர் குடைநிழலராய மன முழுதினையுந் தம்வேந்தர் குடைக்கீழே காண்பர், எ-று.

அலகு - கதிர்; அஃதிடைதாகுபெயராய் நென்மேல் நின்றது. உடைய வென்ப குறைந்து நின்றது. நிழலபோதலின் நீழலெனப்பட்டது. நீழலவ ரென்றது இரப்போர்க்கெல்லாம் ஈதலேயுங்கி ஒற்றுமைபற்றித் தங்குடை யென்றார். குடைநீழலென்பதூஉம் ஆகுபெயர்; † "வானுதான் மருங்கி னீன்றதன் பயனே" என்றதனுள் தம்மாசனுக்குத் தொழாரும் பெருக்கி மண் முழுதும் அவனதாகக் கணடிருப்ப ரென்பதாம்; ‡ "இரப்போர் சுற்றமும் புரப்போர் கோற்றமு, முழவிடைவிளிப்போ" என்றார் பிறரும்.

(தெ - ப - ரை.)—அலகு உடை-(உழுதற்றொழிலால்) செல்வ யுடையராகிய, நீழலவர் - தண்ணளியுடையோர், பல குடை நீழலும் - பலவேந்தர்குடை நிழலுகிய (பூமி முழுதையும்), தம் குடைக்கீழ் - தம் (வேந்தர்) குடைக்கீழே, காண்பர்—.

நே இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலீயவர்.

(பரி-ரை.) எ-து,—தந்தையா லுழுதுண்டலே யியல்பாகவுடையார் பிறரைத் தாமிரவார்; தம்மையிரப்பார்க்கு அவர்வேண்டியதொன்றனைக் கரவாது கொடுப்பர், எ-று.

செய்தென்பதற்கு முழுதலேயெனவருவிக்க. கைசெய்தூண்மாலீயவ ரென்பது ஒருஞான்றும் அழிவில்லாத செல்வமுடையரென்னும் எதுவை யுட்கொண்டு நின்றது.

(தெ - ப - ரை.)—கை - (தங்) கையால், செய்து - (உழுதல்) செய்து, ஊண் மாலீயவர் - உண்ணுதலே இயல்பாக வுடையவர், இரவார் - (பிறரைத்தாம்) இரவார்; இரப்பார்க்கு - (தம்மை)

---

* புறநானூறு. கஙி.

† சிலப்பதிகாரம், மாடலன்காதை. அழி, கசக.

இரப்பவர்க்கு, ஒன்று - அவர் (வேண்டியது) ஒன்றை, கரவது ஒளிக்காமல், ஈவர் - கொடுப்பார்.

சு. உழவினுர் கைம்மடங்கி னில்லே விழைவதூஉம்
விட்டிடமென் பார்க்கு நிலே.

(பரி-ரை.) எ-து,—உழுதலேயுடையார்கை அதனைச்செய்யாது மடங்குமாயின், யாவரும் விழையுமுணவும் யாந்துறந்தோ மென்பார்க்கு அவ்வறத்தின்கண் நிற்றலு முளவாகா. எ-று.

உம்மை இறுதிக்கண்ணும் வந்தியைந்தது. உணவின்மையால், தாமுண்டலும் இல்லாஞ்செய்தலும் யாவர்க்கு மில்லேயாயின். அவ ருறுப்புமாத்திரமாய கை வாளாவிருப்பின் உலகத்து இம்மை மறுமை யீடென்னும் பயன்கள் நிகழா வென்பதாம். ஒன்றினே மனத்தால் விழைதலுமொழிந்தே மென்பார்க் கெனவுரைப்பாரு முளர். இவையெந்தபாட்டானும் அதனைச்செய்வாரது சிறப்புக் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—உழவினர்-உழுதலே யுடையவர், கைமடங்கின் - கை (அதனைச்செய்யாது) மடங்குமாயின், விழைவதூஉம் - (யாவரும்) விரும்பு முணவும், விட்டிடம் என்பார்க்கு - துறந்தோ மென்பார்க்கு, நிலே - (அவ்வறத்திலே) நிற்றலும், இல்லே - உளவாகா.

எ. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

(பரி-ரை.) எ-து,—ஒரு நிலத்தினேயுழுதவன் ஒருபலப்புழுதி கஃசாம் வண்ணம் அதனைக் காயவிடுவானுயின், அதன்கட் செய்தபயிர் ஒருபிடியின் கணடங்கிய எருவுமிடவேண்டாமற் பணைத்து விளேயும், எ-று.

பிடித்து—பிடியின்கண்ணது. பிடித்தவென்பதன் விகாரமென்பாரு முளர். வேண்டாமல், சான்று என்பன நிரிந்துநின்றன.

(தே - ப - ரை.)—(ஒரு நிலத்தினே யுழுதவன்), தொடிப் புழுதி - ஒருபலப்புழுதி, கஃசா - கால்பலமாம்படி, உணக்கின் - (அதனை) காயவிடுவானுயின், (அதனிடத்துச்செய்தபயிர்), பிடித்து எருவும் - ஒருபிடியில் அடங்கிய எருவும், வேண்டாது - (இட) வேண்டாமல், சாலப் படும் - பருத்து விளேயும்.

அ. ஏரினு நன்று லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றுதன் காப்பு.

(பரி-ரை.) எ-து,—அப்பயிர்கு அவவுழுதலினும் எருப்பெய்தல் நன்று; இவ்விரண்டுஞ் செய்து களைகட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீரால் யாத்தலினு நன்று, எ-று.

எர்—ஆகுபெயர். காத்தல்—பட்டி முதலியவதருன் அழிவெய்தாமற் காத்தல். உழுதல், எருப்பெயதல், களைகட்டல், பர்காலயாத்தல், காத்தலென் றிம்முறையவாய இவ்வைந்தும் வேண்டுமென்பதாம்.

(தே - ப - ரை.)—(அபயயிர்க்கு,) ஏரினும் - அவ்வுழுதலினும், எரு இடுதல் - எருபபெய்தல், நன்று - நலலதாம்; கட்டபினை - (இவ்விரண்டுஞ்செய்து) களைபிடுங்கிபபின், அதன் காபபு - அதனைக் காத்தல், நீரினும் - நீர்பாய்ச்சலினும், நன்று - நலந்தருவதாம்.

கூ செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்

(பரி-ரை.) எ-து,—அந்நிலத்திற் குரியவன் அதன்க ணூடனாதுஞ் சென்று பார்த்து அதித்தன செய்யாது மடிந்திருக்குமாயின், அஃது அவனில்லாள் போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின்னவனே டிடிவிடும், எ-று.

செல்லுதல்—ஆகுபெயர். பிறரை யேவியிபாது தானே சேறல்வேண்டு மென்பது போதரக் கிழவனென்றார். ஈ தன்கட்சென்று வேண்டுவன செய்யாது வேறிடத்திருந்தவழி மனையா னூடுமாறபோல வென்றது அவனை போக மிழத்தலேக்கி. இவை மூன்றபாட்டானும் அது செய்யுமாறு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கிழவன் - (அந்நிலத்தக்கு) உரியவன், செல்லான் - (அதனிடத்து நாள்தோறும்) போய்ப்பார்த்து வேண்டியவை செய்பானஞ்சி, இருப்பின் - (சோம்பி) இருந்தால், நிலம் - அந்நிலம், இல்லாளின் - மனைவிபோல, புலந்து - (தனனுள்) வெறுத்து, ஊடிவிடும் - (அவனைநோடு) பிணங்கிவிடும்

கo. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்

(பரி-ரை.) எ-து,—யாம் வறியேமென்று சொல்லி மடிந்திருப்பாரைக் கண்டால், நிலமகளென்று உயாததுச சொல்லப்படுகின்ற நல்லாள் தன்னுள்ளே நகாகிற்கும், எ-று.

அதன்கட் சென்று" எனபாடபேடம்.

உழுதன் முதலிய செய்வார் யாவர்க்குஞ் செல்வங்கொடித்து வருகின்ற வாறுபற்றி நல்லானென்றும், அதுகண்டு வைத்தும் அது செய்யாது வறுமை யுறுகின்ற பேதைமைபற்றி நகுமென்றுங் கூறினர். இரப்பாரை யென்று பாட மோதுவாரு முளர். இதனுள் அது செய்பாதுவழிப்படு மிழுக்குக் கூறப்பட் டது. வருகின்ற வதிகார முறைமைக்குங் காரணமு மிது.

(தே - ப - ரை)—இலம் என்று - வறியேமென்றுசொல்லி, அரை இ இருப்பாரை - சீசாம்பியி நுப்ப பரை, காணின் - கண்டால், நிலம் என்னும் நல்லாள்-நிலமகளென்று உயர்த்திச் சொல்லப்பரு நல்லாள், நகும் - (தன்னுள்ளே) சிரியாகிற்பள்.

க0ரு-ம் அதிகாரம்—நல்குரவு.

அஃதாவது நுகரப்படுவன யாவு மில்லாமை.

க. இன்மைபி னின்னாத நியாதெனி னின்மையி
னின்மைபே யின்னாத தது.

(பரி-ரை.) எ-து,—ஒருவனுக்கு வறுமைபோல வின்னாதது யாதென்று வினவின், வறுமைபோல வின்னாதது வறுமையே, பிறிதில்லை, எ-று.

இன்னாதது - துன்பஞ்செய்வது, ஒப்பதில்லையெனவே, மிக்கதின்மை சொல்லவேண்டா வாயிற்று.

(தே - ப - ரை)—இன்மையின்-(ஒருவனுக்கு) வறுமைபோல, இன்னாதது - துன்பஞ்செய்வது, யாது எனின் - யாதென்றுவினவின், இன்மையின் - வறுமைபோல, இன்னாது - துன்பஞ் செய் வது, இன்மையே - வறுமையே

உ. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

(பரி-ரை.) எ-து,—வறுமையென்று சொல்லப்படுவ தொருபாவி ஒருவ னுழை வருங்கால் அவனுக்கு மறுமை யின்பமு மிம்மையின்பமு மில்லையாக வரும், எ-று.

இன்மையெனவொருபாவியென்பதற்கு மேல் * "அழுக்காறெனவொரு பாவி" யென்புழி யுரைத்தாங் குரைக்க. மறுமை இம்மையென்பன ஆகு பெயர். ஈயாமையாலுந் தவ்வாமையாலும் அவையில்லவாயின. இன்றிவிடு மென்று பாடமோதிப் பாவியாலென விரித்துரைப்பாரு முளர்.

* மேலே, எ-ம் அதி. வெஃகாமை, அ-ம் குறளிற் காண்க.

(தே - ப - ரை.)—இன்மை என - வறுமையெனப்படுகிற, ஒரு பாவி—, (ஒருவனிடத்துவரும்போது). மறுமையும் - மறுமையின்பமும், இம்மையும்-இம்மையின்பமும், இன்றி - (அவனுக்கு) இல்லையாக; வரும் - வரும்.

கூ. தொல்வரவுந் தோலுங் தெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை.

(பரி-ரை.) எ-து,—நல்குரவென்று சொல்லப்படு மாசை தன்னுற் பற்றப்பட்டாருடைய பழைய குடிவரவினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒருவகே கெடுக்கும், எ-று.

நசையில்வழி நல்குரவு மில்லையாகலின் நல்குரவையே நசையாக்கி, அஃது அக்குடியிற் றெரல்லோர்க்கிலவா ; இழிதொழில்களையும் இளிவந்த சொற்களையு முளவாக்கலான் அவ்விரண்டனையு மொரு ரு கெடுகுமென்றார்: * "குடிப்பிறப்பழிக்கும் வீழுப்பங்கொல்லும்" என்றார் பிறரும். தோலாவது † "இழுமென் மொழியால் விழுமியது நவறல்" என்றார் தொல்காப்பியனாரும். இதற்கு உடம்பென் றுரைப்பாரு முளர் : அஃததற்குப் பெயராயினும் உடம்புகெடுக்கு மென்றற்கோர் பொருட்பிறப்பில்லாமை யறிக.

(தே - ப - ரை.)—நல்குரவு என்னும் - வறுமையென்று சொல்லப்படுகிற, நசை - ஆசை, தொல் வரவும் - (தன்னுலேபற்றப்பட்ட வருடைய) பழையகுடி வரவினையும், தோலும் - (அதற்கேற்ற) சொல்லினையும், கெடுக்கும் - (ஒருவசை) கெடுக்கும்

ச. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

(பரி-ரை.) எ-து,—இளிவந்த சொற்பிறவாத குடிப்பிறந்தார் மாட்டேயும் அது பிறத்தற்கேதுவாகிய சோர்வினை நல்குரவு உண்டாக்கும், எ-று.

சிறப்பும்மை அவர்மாட்டு அது பிறவாமை தோன்ற நின்றது. இளிவந்த சொல் - இளிவருதற் கேதுவாகிய சொல். அஃதாவது எமக்கியவேண்டு மென்றல். சோர்வு-தாழுதலின்ற தன்பமிகுதி பற்றி ஒரோவழிப் பிறப்பினை மறந்து அது சொல்லுவதாக நினைத்தல்.

(தே - ப - ரை.)—இன்மை - வறுமையானது; இல் பிறந்தார் கண்ணேயும்-உயர்ந்த குடிப்பிறந்தவரிடத்தேதயும், இளிவந்த சொல்-

---

* மணிமேகலை, சக-வது பாததிரம்பெற்ற காதை, எசு.

† பொருள், செய்யுளியல், உசுஉ.

அவமானச்சொல், பிறத்கும் - பிறத்தற்கு ஏதுவாகிய, சோர்வு - சோர்வினை, தரும் - உண்டாக்கும்.

நி. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

(பரி-ரை.) எ-து,—நல்குரவென்று சொல்லப்படுந் துன்ப மொன்றனுள்ளே பலதுன்பங்களும் வந்துவிளையும், எ-று.

குரை—இசைநிறை. செலவு—விரைவின்கண் வந்தது. துன்பமூந்தானு மூடனே நிகழ்த்தலின் நல்குரவைத் துன்பமாக்கியும், அத் துன்பமடியாகச் செல்வர் கடைநோக்கிச் சேறற்றறன்பமும், அவரைக் காணடற்றன்பமும், கண்டான் மறத்துழி நிகழுந்துனபமும், மருவுந்யும் அவர் கொடுத்தது வாங்கற்றன்பமும், அது கொடுவந்து நுகர்வன கூட்டற்றன்பமு முதலாயின நாடோறும் வேறுவேறுக வருதலின் எல்லாத் துன்பங்களுஞ் மூளவமென்றுங் கூறினர். இவையைத்துபாட்டானும் நல்குவின் கொடுமை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—நல்குரவு என்னும்-வறுமையென்று சொல்லப்படும், இடும்பையுள் - துன்பமொன்றினுள்ளே, பல்-பலவாகிய, துன்பங்கள் - துன்பங்களும், சென்று - வந்து, படும் - விளையும்.

சு. நற்பொரு ளான்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

(பரி-ரை.) எ-து,—மெய்ந்நூற் பொருளைத் தெளியவறிந்து சொன்னாயினும், நல்கூர்ந்தார் சொல்லுஞ்சொற் பொருளின்மையைத் தலைப்படும், எ-று.

பொருளின்மையைத் தலைப்படுதலாவது யாமிவர் சொல்லியன விரும்பிக் கேட்குமாயிற் கண்ணோடி இவருறுகின்ற குறை முடிக்கவேண்டு மென்றஞ்சி யாவருங் கேளாமையிற் பயனில் சொல்லாய் முடிதல். கல்வியும் பயன்படாதென்பதாம்.

(தே - ப - ரை.)—நல் பொருள்-மெய்ந்நூற் பொருளை, நன்கு உணர்ந்து - தெளியவறிந்து, சொல்லினும் - சொன்னாலும், நல் கூர்ந்தார் - வறுமைப்பட்டவரது, சொல் - சொல்லானது, பொருள் சோர்வு - பொருளில்லாமையை, படும் - கூடும்.

எ. அறஞ்சாரா நல்குர வீன்றதா யாணும்
பிறன்போல நோக்கப் படும்.

(பரி-ரை.) எ-து,—அறத்தோ டியைபில்லாத நல்குரவுடையான்தன்னை யீன்ற தாயானும் பிறனைக் கருதுமாறுபோலக் கருதி நோக்கப்படும், எ-று.

அறத்தோடு கூடாமை - காரண காரிய வகளு ளொன்று யிையையாமை. நல்குரவு—ஆகுபெயர். சிறப்பும்மை அவளதியற்கை யன்புடைமை விளக்கி நின்றது. கொள்வதின்றுதலே யன்றிக் கொடுப்பதுண்டாதலு முடைமை யின், அது நோக்கிச சுற்றமுகார் டாவருந் துறப்பரென்பதாம்.

(தே - ப - ரை.) —அறம் சாரா - அறதேதாடு பொருந்துதலில் லாத, நல்குரவு - வறுமையையுடைபவள், ஈற்ற தாயானும் - (தனனைப்) பெற்றதாயினு மும், பிறன் போல - ஏதிலனைபோல, நோக்கப்படும் - (நீணோகுது) பார்க்கப்படுவாள்.

அ. இன்றும் வருவது கொலோ கெருநலுங்
கொன்றது போலு நிரப்பு

(பரி-ரை.) எ-து,—கெருநற்றுங கொன்றது போன்று எனக்கின்னுத வற்றைச செயத நல்குரவு இனறும் என்பால் வரகடவதோ, வந்தால் இனி யாது செய்வேன், எ-று.

* அவ்வின்னுதனவாவன—மேற்சொல்லிய துன்பங்கள். செருநன்மிக வருந்தித் தன்வயிறு நிறைத்தாளெருவன் கூற்று.

(தே - ப - ரை.) —கெருநலும்-கேற்றும், கொன்றதுபோலும்-கொன்றதுபோன்று (எனத் தத்தன்பங்களாச்செய்த). நிரப்பு - வறுமையான து, இன்றும் - இன்றைத்தும், வருவ தகொல் - (எனனிடத்தி) வரகடவதோ, [வந்தால் இனி யாது செய்வேன்]

கூ. கெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது

(பரி-ரை.) எ-து,—மந்திர மருந்துகளான் ஒருவனுக்கு கெருப்பிடையே கிடத்தலுகலு மாம்; நிரப்பு வந்தழி யாதொன்றுனு முதாக்கமில்லை, எ-று.

நெருப்பினும் நிரப்புக் கொடிதென்றவா றாயிற்று. இதுவுமவன் கூற்று. இவை நான்குபாட்டானும் நல்கூர்ந்தார்க குளதாக குற்றங கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—நெருப்பினுள் - நெருப்பிலே, துஞ்சலும் - (கிடத்தி) தூங்கலும், ஆகும் - (மந்திரமருந்துகளால் ஒருவனுக்கு கூடும்; நிரப்பினுள் - வறுமை வந்தவிடத்து, யாது ஒன்றும் - யாதொன்றுனும், கண்படு - தூங்குதல், அரிது - இல்லை

* மேலே இவ்வதிகாரம், நி-ம் குறளிற் காண்க.

கஅ. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

(பரி-ரை.) எ-து,—நுகரப்படும் பொருள்க ளில்லாதார் தம்மாற் செயற் பாலது முற்றத் துற ந்தலேயாகவும் அது செய்யா தொழிதல் பிறரில்லி னுள வாய உப்பிற்கு ங காடிக்குங் கூற்றும், எ-று.

மான மழியாமையிற் செயற்பாலது அதுவே யாயிற்று. முற்றத் துறத் தல்—சுற்றத் தாரே விட்டமையின் ஒருவாற்றாற் றுறந்தாமாயினு நின்றதம் மூடம்பினையுந் துற ந்தல். அது செய்பா தொழிருந்தல் இரண்டனையு மாளப்பண் ணுதலின். அதனை அவ பிற்குக் கூற்றென்றார். இனி முற்றத் துறத்தலாவது துப்புரவில்லாமையின் ஒருவாற்றாற் றுறந்தாமாயினா பின் னவற்றை மனத்தாற்றுறவாமை யென்றுரைப்பாருமுளர். இதனுன் அஃதுள தாயவழிசெய்வது கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—துப்புரவு இல்லார் - அனுபவிக்கப்படும் பொருளில்லாதவர், (தம்மாலே செய்ந்த நவ நு முழுதுந் துறந்தமை யாகவும்), துவரத் துறவாமை - முழுதுந் துறவுதொழிதல், (பிறர்வீட்டி லுள்ள), உப்பிற்கு ங் காடிக்கு ம்—, கூற்று - எமனுகும்.

கஅசு-ம் அதிகாரம்—இரவு.

இனி மானங் தீராவிரவு இரவாமையோ டொத்தலின், அதனனும் வீடெய்தற்பயத்ததாய உடம் போம்பப்படு மென்னும் அறநூல் வழக்குப்பற்றி மேலெய்த்திய துவரத்துறத்தல் விலக்குதற் பொருட்டு இரவு கூறுகின்றுர். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

க. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று

(பரி-ரை.) எ-து,—கல்கூர்த்தா இரத்தற் கேற்புடையாரைக் காணின், அவர் மாட்டிரக்க; இரக்கால் அவர் கரந்தாரின் அவர்க்குப் பழியாவதல் லது தமக்குப் பழியாகாமையான், எ-று.

இரவென்னு மூணுமிலை தொழிற்பெய ரிறுதிக்கண நான்னுருபு விகாரத்தாற்றொக்கது. இரத்தற் கேற்புடையாரவர் உரையாமைமூன் னுணரு மொண்மை யுடையராய் மாற்று தீவர். அவர் உலகத்தரியராகலிற் காணி னென்றும், அவர்மாட் டிரந்தார்க்கு இரவன்வரு மிழிவின்மையின் இரக்க வென்றும், அவரீதலிற் குறைகாட்டாமையிற் கரப்பினென்றும், காட்டுவரா யின் அப்பழி தானெள்ளறவைக்கண் மாசுபோல அவரைட் கடிது சேறலின் அவர் பழியென்றும், எற்பிலார்மாட் டிரவன்மையிற் தம்பழியன்றென்றுங் கூறினர்.

(தெ - ப - ரை)—(வறுமைப்பட்டவர்), இரக்கக்காரர் - இரக்கத்திற்கு ஏற்புடையவரை [கேட்கு முன்னமே அறிந்து கொடுப்பவரை என்றபடி], காணின் - கண்டவிடத்து, இரக்க - (அவரிடத்தில்) இரக்கக்கடவர் ; கரப்பின் - (அப்படிப்பட்டவர்) ஒளித்தாராயின் அவர் பழி - அவருக்குப்பழியாதேமெ யல்லது), தம்பழி அன்று - தமக்குப்பழியாகாது.

2. இன்ப மொருவற் கிரக்க லிரந்தவை
துன்ப முறுமஅ வரின்.

(பரி-ரை.) எ-து.—ஒருவற்கு இரத்தலுனும் இன்பத்திற் கேதுவாம், இரந்த பொருள்கள் ஈவாட துணர்வுடையரா முன்னுன்புறுமல் வரு மாயின், எ-று.

இன்பம்—ஆகுபெயர். உறுமலென்பது கடைக்குறைத்து நின்றது. துன் பம்—சாதியொருமைப்பெயர். அவையாவன ரவர்கட் காலமுமிடனு மறிந்து சேறலும், அவர் குறிப்பறிதலும், அவரைத் தம் வயமாக்கலும், அவர் மன செகிழ்வன கராடிச் சொல்லலு முகலியவற்றுன் வருவனவும், மறுத்திழி வரு வனவுமாம். அவையுறுமல் வருதலாவது அவர் முன்னுணர்ந்தியக் கோடல். இரந்தவர் துன்பமுறுவரி னென்று பாடமோதி, இரகப்பட்டவர் பொரு ளின்மை முதலியவற்றுற் றுன்புறுது எளிர் வந்திவரா யினென்றுரைப்பாரு முளர். இவை யிரண்டுபோட்டாலும் கல்குரவா ரென்பார்க்கு மெல்லேக்கண் இளி வில்லாவிரவு விலக்கப்படா தென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—ஒருவற்கு—, இரந்தவை - இரந்தபொருள் கள், (ஈவாரது அறிவுடையரால்), துன்பம் உறு - (தான்) துன்ப முறுமல், வரின் - வருமாயின். இரத்தல் - இரந்தலும், இன்பம் - இன்பத்திற்கு ஏதுவாம்.

கூ. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்பதோ ரேர முடைத்து.

(பரி-ரை.) எ-து,—கரத்த லில்லாத நெஞ்சினையுடைய மானமறிவார் முன்னர் நின்று அவர்மாட் டொன் றிரத்தலும் நல்கூர்ந்தார்க்கு ஓரழ குடைத்து எ-று.

* "சிறிய சருக்கத்து வேண்டுமுயர்" வென்றதனுல், அவர்க்கு அதுகட னெனப்பட்டது. அதனை யறிதல்—சொல்லுக ணிற்றுரைக்க லாகாமைக் கேது வாய அதனியல்பினை யறிதல். அவ்வறிவுடையார்க்கு முன்னிற்றன் மாத்

* மேலே, கூ-ம் அதி. மானம், கூ-ம்

திரமே யமைதலின் முன்னின் றென்றும், சொல்லுதலான் வருஞ் சிறுமை யெய்தாமையின் ஞாருடைத் தென்றுங் கூறினர். உம்மை அதனிழிபு விளக்கி நின்றது.

(தே - ப - ரை.)—கரப்பு இலா - ஒளித்தலில்லாத, கெஞ்சின்-கெஞ்சினுடைய, கடன் அறிவார் முன் - மரபறிவாரமுன், நின்று—, இரப்பும் - (அவரிடத்தே ஒன்றை) இரத்தலும், ஓர் உடைத்து - (வடிவமைப் பட்டவர்க்கு) ஓரழகை உடைத்து

ரு இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவினுந் தேற்றாதார் மாட்டு

(பரி-ரை.) எ-து.—ரகத்துள்ளது கரத்தலென்க கனவின்கண்ணு மறியாதார் மாட்டெனென் றெடுத்தோதினமையால் விரித்தலும் வரியார்க்கீதலே போலும், எ-று.

உம்மை எண்ணு மல்வாறு நின்றது. தான் புகழ்பயவா தாயினும் முன்னுளதாய புகழ்கெட வாராமையின், ரத்தலேபோலு மென்றார். எகாரம் - ஈற்றசை.

(தே - ப - ரை)—கரத்தல் - (தமக்கு உள்ளது) மறைத்தலே, கனவினும்—, தேற்றாதார்மாட்டு - அறியாதவரிடத்து, இரத்தலும்-யாசித்தலும், ரதலே போலும் - (வறிய பக்கு) கொடுத்தலே போலும்

நி. கரப்பிலார் வையகத் தண்மைபாற் றண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.

(பரி-ரை.) எ-து.—சொல்லுதன் மாட்டாது முன்னிற்றன் மாத்திரத்தான் இரப்பார் உயிரோம்பற்பொருட்டு அதனை மேற்கொண்டு போதுகின்றது அவர்க்கு உள்ளது காவாது கொடுப்பா ரிலர் உலகத்துளராய தன்மையானே, பிறிதொன்று னன்று, எ-று.

அவரில்லையாயின, மான நீக்கமாட்டாமையின் உயிர் நீப்பரென்பதாம்.

(தே - ப - ரை.)—கண் நின்று - (சொல்லமாட்டாமல்) முன்னின்றமாத்திரத்தால், கரப்பு இலார் - (அவர்க்கு உள்ளது) ஒளிக்காமற் கொடுப்பவர், வையகத்து - உலகத்து. உண்மையால் - இருக்கின்றபடியினாலே, இரப்பவர்—, மேற்கொள்வது - (இரத்தலை) மேற்கொள்வது, (உயிர்காத்தற் பொருட்டேயாம்).

சூ. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்

(பரி-மை.) எ-து,—உள்ளது கருதலாகிய நோயில்லாரைக் கண்டால், மானம் விடாரிரப்பார்க்கு நிரப்பான் வருந்துன்பமெல்லாஞ் சேரக் கெடும், எ-று.

கரத்தல் ஒருவற்கு வேண்டுவ தொன்றன்மையின் அதனை நோயென்றும், அஃதில்லாத இரக்கத்தக்காரைக் கண்டபொழுத்த அவர் கழியுமுவகையராவராகலின் எல்லா மொருங்கு கெடுமென்றல கூறினர். இடும்பை - ஆகுபெயர். முழுதுங் கெடுமென்று பாடமோதி, எஞ்சாமற்கெடுமென் றுரைப் பாருமுளர்.

(தே - ப - ரை.)—கரப்பு இடும்பை - (உள்ளதை) ஒளித்தலாகிய நோயை, இல்லாரை - உடையரல்லாரை, காணின்—, (மானம் விடாத நிரப்பவர்க்கு), நிரப்பு இடும்பை எல்லாம் - வறுமைபால் வருந் துன்பங்களெல்லாம், ஒருங்கு கெடும் - ஒரு சேரக்கெடும்.

எ. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப தடைத்து.

(பரி-மை.) எ-து,—தம்மை பவமதித்திழிவு சொல்லாது பொருள்கொடுப்பாரைக் கண்டால், அவ்விரப்பாரது உள்ளமகிழ்ந்து உள்ளுள்ளே யுவக்குர் தன்மை யுடைத்து, எ-று.

இகழ்தெள்ளாதெனவே, கல்குமதித்தலும் பழியுரை கூறலும் பெறுதும். நிரப்பிடும்பை கெடுதலளவேயன்றி, மம்புலன்களாலும் பேரின்பமெய்தி ஞராகக் கருதலான், உள்ளுளுவப்பதடைதென்றார். இவை யைந்துபாட்டானும் அவ்விரத்தக்கார தியல்பு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—இகழ்ந்து-(தம்மை) அவமதித்து, எள்ளாது-இழிவு சொல்லாமல், ஈவாரை-(பொருள்) கொடுப்பவரை, காணின்-கண்டால், உள்ளம் - (அவ்விரப்பவரது) மனம், மகிழ்ந்து - மகிழ்வடைந்து, உள் உள் - உள்ளுள்ளே, உவப்பது-மகிழுந்தன்மையை, உடைத்து - உடையதாகும்.

அ. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று.

(பரி-ரை.) எ-து;—வறுமையுற் றிரப்பா ரில்லையாயின், குளிர்ந்த விடத்தையுடைய பெரியஞாலத்துள்ளார் செலவரவுகள் உயிரில்லாத மரப்பாவை இயந்திரக் கயிற்றாற் சென்றுவந்தாற் போலும், எ-று.

ஐகாரம்—அசைநிலை ஞாலமென்னும் ஆகுபெயர்ப்பொருட்கு உவமையோ டொத்தலெழுவி வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளா ரென்றது அவரை யொழித்தாரை. அவர்க்கீதிலேசஞ்செய்து புகழும் புணர்ச்சியுமுமெய்தாமையின், உயிருடையரல்லரென்பதாம்; "ஈவாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்க ணவர்" என்றுர் பிறரும். இத்தொடை யின்பநோக்காது இரப்பவரில்லாயினென்று பாடமோதுவாரு மூளர்.

(தெ - ப - ரை.)—இரப்பார்-(வறுமையுற்று) இரப்பவர், இல்லாயின் - இல்லையாயின், ஈரம் கண் மா ஞாலம் - குளிர்ந்த இடமுடைய பெரிய பூமியி னுள்ளவரது, (செலவு வரவுகள்), மரப பாவை - (உயிரில்லாத) மரப்பாவை, சென்று வந்தற்று - (எந்திரக் கயிற்றால்) சென்று வந்தாற் போலும்

கூ. ஈவார்க ணென்னுண்டாந் தோற்று மிரந்துகோண்
மேவா ரிலாஅக் கடை.

(பரி-ரை.) எ-து,—அவாபாற் சென்று ஒன்றனை யிரந்துகோடலே விரும்புவாரில்லாதவழிச் கொடுப்பார்மாட் டென்ன புகழுண்டாம் யாதுமிலலை, எ-று.

தோற்றம்—ஆகுபெயர். மேவுவா ரென்பது விகாரமாயிற்று. கொடுத்தல் வன்மை வெளிப்படாமையின், அதனைப் புகழெய்தா ரென்பதாம். இவை யிரண்டுபோட்டாணும் உலகிற் இரப்பார் வேண்டுமென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—இரந்து கோள் - (அவரிடத்துச்சென்று ஒன்றனை) இரந்துகொள்ளுதலை, மேவார் இலாக்கடை - விரும்புவாரில்லாதவழி, ஈவார்கண் - கொடுப்பவரிடத்து, என்-என்ன, தோற்றம் - புகழ், உண்டாம் - உண்டாகும், [யாதுமில்லை என்றபடி].

கo. இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

(பரி-ரை) எ-து,—ஈவானுக்குப் பொருளுதவாவழி, இவனெனைக் கீழ்நின்றில னென்று அவனை யிரப்பான் வெகுளா தொழிதல்வேண்டும்; அது வேண்டியபொழுது உதவானென்பதற்கு வேறுசான்று வேண்டா, நிரப்பாகிய தன்னிடும்பை தானேயுஞ் சான்றுத லமையும், எ-று.

யாவர்க்கும் வேண்டுதலும் நிலையின்மையு முதலிய பிறசான்று மூண்டென்பதபட நின்றமையின், உம்மை எச்சவும்மை. தனக்கேயன்றி மற்றை

யிரந்தார்க்கும் அற்றைக்கன்று பொருள் கடைக்கூட்டற்கு அவனுறுந் துன்பத்தைத் தனக்கே யாகவைத்துத் தானுறுந்துன்பந் தானறிந்தி லவருளத்க வென்பதாம். இதனுல் அவாக்கின்றியமையாததோ ரியல்பு கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—(ஈவானுக்குப பொருள் உதவாதவிடத்தே), இரப்பான் - இரப்பவன், வெகுளாமை வேண்டும் - (இவன் எனக்குக் கொடுக்கின்றிலனென்று அவனே) கோபியாதொழிதல் வேண்டும்; (அதுவேண்டியபொழுது உதவாதென்பதற்கு வேறுசாக்ஷி வேண்டா), நிரப்பு இடும்பைதானேயும் - வறுமையாகிய தன்னோய் தானேயும, கரி - ராக்ஷியாதல், சாலும் - அமையும்

கoள-ம் அதிகாரம்—இரவச்சம்.

அஃதாவது மானஈனச் செயல்களிற் கஞ்சுதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

க. கரவா துவந்தீயு நண்ணன்ஞ ரண்ணு
மிரவாமை கோடி யுறும்.

(பரி-ரை.) எ-து,—தமக்குள்ளது கரவாது இவர் வரப்பெற்றேமென்று உணமகிழ்ந்து கொடுக்கும் கணபோலச சிறந்தார்மாட்டும் இரவாதே ஒருவன் வறுமை கூர்தல் இரந்து செல்வமெய்தலிற் கோடிமடங்கு நன்று, எ-று.

கல்குரவு மரைக்கப்படாத கட்டார்மாட்டும் ஆகாதென்பது பட நின்றமையின், உம்மையுயர்வு சிறப்பின்கண வந்தது. அவ்விரவான் மானஈனமென்னுந் தீயலலது அதற்கு மிகுதி கூடாமையின், வல்லதோர் முயற்சியானுயிரோம்பலே நல்லதென்பது கருத்து.

(தே - ப - ரை.)—(ஒருவன்) கரவாது - (தனக்குள்ளத்தை) ஒளிக்காமல், உவந்து - (இவர் வரப்பெற்றேமென்று) உள்ள மகிழ்ந்து, ஈயும் - கொடுக்கும், கண் அன்னார்கண்ணும் - கண்போற் சிறந்தவரிடத்தும், இரவாமை - இரவாமல் வறுமைப்படுதல், கோடி உறும் - (இரந்து செல்வமடைதலில்) கோடிமடங்கு நன்றும்.

உ. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(பரி-ரை.) எ-து,—இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன்கண வாழ்வார்க்கு முயன் றுயிர்வாழ்தலேயன்றி இரந்து முயிர் வாழ்தலேவேண்டி விதிததா

கoஎ-ம் அதி. இரவச்சம்

பின், அக்கொடியோன்முனும் அவரைப்போன்று எங்கு மலமந்து கெடுவா னாக, எ-று.

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாய வண்டியும் அதற்கேதுவாய செய்தொழிலும் பழவினை வயத்தாற் கருவொடு கலந்த வன்றே அவன் கற்பிக்குமன்றே, அவற்றுட் சில வுயிர்க்கு இரத்தலேயும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தானுயின் அத்தீவினையாற் முனும் அதனுன்ப முறல் வேண்டு மென்பதாம். இவை யிணைபொட்டானும் அவ்விரவின் கொடுமை கூறப்பட்டது.

(தே - ப - ரை)—உலகு இயற்றியான் - இவ்வுலகத் தைப் படைத்தவன், (இனிடத்து வாழ் வார்க்கு முயன்று சீவனஞ்செய் தலே யல்லாமல்), இரத்தும்—, உயிர் வாழ்தல் வேண்டின் - சீவனஞ் செய்தலே வேண்டி யிருத்தானுயின், (அக்கொடியோன்), பரந்து - (தானும் அவர்போல்) எங்குஞ்சுழன்று, கெடுக - கெடக்கடவன்.

கூ. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட் டதில்.

(பரி-ரை.) எ-து,—வறுமையான் வருந்துன்பத்தை முயன்று நீக்கக்கட வேமென்று கருதாது இரந்துநீக்கக்கடவேமென்று கருதும் வன்மைபோல வலிமைப்பாடையது பிறிதில்லை, எ-று.

தெரியாய முயற்சி நீக்க தெரியல்லாத இவரற் நீர்ககக் கருதுதலின், வன்மையாயிற்று. வன்பாடு—மூமாட்டித்தன்மை. ஆகாவது ஒராது செய்து நிற்றல். இதனுன் வறுமை சீரத்துக்குறி இறவன்றென்பது கூறப்பட்டது.

(தே - ப - ரை)—இன்மை - வறுமையால்வரும், இடும்பை - துன்பத்தை, (முயற்சிசெய்து நீக்கக் கடவோமென்று நினையாமல்), இரந்து தீர்வாம் என்னும் - இரந்து நீக்கக்கடவோமென்று நினைக் கும், வன்மையின் - வல்லமைபோல, வன்பாட்டது - வலிமைப் பாடுடையது, இல் - இல்லை

சு. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிமவொல்லாச் சால்பு.

(பரி-ரை.) எ-து,—துகவேண்டினவின்றி கல்கூர்ந்தவழியும் பிறர்பாற் சென்றிரத்தலே யுடம்படாத அமைதி எல்லாவுலகும் ஒருங்கியைத்தாலுங் கொள்ளாத பெருமையுடைத்து, எ-று.

அவ்விரத்தலைச் சால்பு விலக்குமாகலின், இடவொல்லாமை அதன் மேலேற்றப்பட்டது. இதனுள் அங்ஙனம் பல்லதூணச் சால்புடையார் செய்யாரென்ப ஏ கருத்து.

(தெ - ப - ரை.)—இடம் இல்லாக்காலும் - அறுபவிக்கவேண்டுவதில்லாமல் உறுமைப்பாட்டினிடத்தும், இரவு - (பிறரிடத்துச் சென்று) இரக்கலும், ஒல்லார்-உடம்படாத, சால்பு-கிறைவு, இடம் எல்லாம் - உலகமெல்லாம், (ஒருதீரர் இயைந்தாலும்) கொள்ளாத் தகைத்து - கொள்ளாத பெருமையுடைத்து

— —

நி. தெண்ணீர் ரடுபுற்கை யாயினுங் காடகந்த
துண்ணலி னூங்கினிய தில்.

(பரி-ரை.) எ- று,—தெறியாத முயற்சியொடுவந்து தந்தது தெளிந்த நீர் போலும் அடுபுற்கையேயாயினும் அதனையுண்டற்குமே லினியதில்லை, எ-று.

காடகந்த கூழ் தெறிவின்றித் தெண்ணீர் போன்றதாயினும் இரவாய இரவான் வந்ததன்றித் தர்முடைமையாலின், அதிற்சாலாதொக்கு மென்பதாம். இதனுள் தெறியிளைஞனது சிறிதேனும் அது செய்யுமின்பம் பெரிதென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—தான் - (வழியாகிய) முயற்சி, தந்தது - (கொண்டுவந்து) தந்தது, தெள் நீர் - தெளிந்த நீர்போலும், அடுபுற்கை ஆயினும் - சமைத்த கூழேயாயினும், உண்ணலின் ஊங்கு - (அதனை) உண்ணுதற்குமேல், இனியது - இன்பந்தருவது, இல் -

சு ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னினியவந் தில்

(பரி-ரை.) எ-து,—தண்ணீர்பெறுது இறக்குநிலைமைத் தாயதோ ராவினைக் கண்டு அதனெஞ்சு இதற்குத் தண்ணீர் தரல்வேண்டுமென் றிரந்துசொல்லுங்காலும் அவ்விரவுபோல ஒருவனுவிற் கினிவந்தது பிறிதில்லை, எ-று.

ஆ காத்தோம்பல் பாறமாகலின் ஆவிற்கென்றும், பொருள்கொடுத்துக் கொள்ளவேண்டாத எளிமைத்தாகலின் நீரென்றும், இரக்கின்றுழக்கு இளிவு அச்சொல்லவேயாகலின் நாவிற்கென்றும், அதுதான் எல்லாவினிவினும் மேற்படுதலின் இனிவந்தில்லென்றும் கூறினர். இதனுள் அறனும் முயன்று செய்வதல்லது இரந்துசெய்யற்கவென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை.)—ஆவிற்கு - (தண்ணீர்பெறுதிறக்கு நிலைமைய தாகிய) பசுவுக்கு, நீர் என்று - (தருமமோக்கி) இதற்குத் தண்ணீர்

தரல்வேண்டுமென்று, இரப்பினும் - இரந்து சொல்லுப்போதும், இரவின் - அவ்விரவுபோல, நாவிற்கு - (ஒருவன்) நாவிற்கு, இளிவந்தது - அவமானம்வந்தது. இல் - ஓ

எ. இரப்ப னிரப்பாரை பெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று

(பரி-ரை.) எ-து,—இரப்பாரையெல்லாம் யானிரவாதின்றேன், யாது சொல்லியெனின், நுமக்கிரக்கவேண்டுமாயிற் றமக்குள்ளது கரப்பாரை யிரவா தொழிமினென்று சொல்லி, எ-று.

இரண்டாவது விகாரத்தாற்றொகுத்தது. இவ்விளிவந்தசெயலான் ஊட்டிய வழியும் உடம்பு கில்லாதாகலின் இதுவேண்டாவென்பது தோன்ற, இரப்ப னென்றார். இதனுன் மானக்கீழ்மகளிரவு விலக்கப்பட்டது.

(தே - ப - ரை.)—இரப்பாரை எல்லாம்—. இரப்பின் - (உம க்கு) இரக்கவேண்டுமாகில், கரப்பார் - (கமத்து உள்ளதை) ஒளிப்ப வரை, இரவன்மி ன் என்று - இரவாதிருங்களென்றுசொல்லி, இரப் பன் - (நான்) இரவாதின்றேன்.

அ. இரவென்னு மேமாப்பி றேணி கரவென்னும்
பார்தாக்கப பக்கு விடும்.

(பரி-ரை.)எ-து,—இவ்வுறுமையென்னுங்கடலே இதனைக் கடத்துமெனக் கருதி ஒருவனேறிய இரவென்னுஞ் சேமமற்ற தோணி அதன்கணேறுங் காற் கரத்தலென்னும் வண்ணிலத்தோடு தாக்குமாயிற் பிளந்துபோம், எ-று.

முயற்சியாற் கடப்பதனே இரவாற் கடக்கலுற்றான் அதன் கரைகாண மையின், ஏமாப்பிறேணியென்றார். ஏமாப்பின்மை தோணிமேலேற்றப்பட் டது. அதுகடத்தற்கேற்ற தன்மையானும், நிலமறியாது செலுத்தியவழி உடைதலானும், அதன்கணேறற்க வெனபதாம். இஃதவயவவுருவகம்.

(தே - ப - ரை.)—(இவ்வுறுமையென்னுங் கடலே இதனைக் கடப்போமென்று நினைத்து ஒருவனேறிய), இரவு என்னும் - இரத் தல் என்னும், ஏமாப்பு இல் - காவலற்ற, தோணி - மரக்கலம், (அதனிடத்தே ஓடுங்கால்), கரவு என்னும் - ஒளித்தலென்னும், பார் - வண்ணிலத்தோடு, தாக்க - தாக்குமாயின், பக்குவிடும் - பிளந்துபோம்.

கூ இரவுள்ளவுள்ள முருகுகு கரவுள்ள
வள்ளதூஉ மின்றிக செடுமை

(பரி-ரை) எ-து,—*டையாள னை இல்லார சென்றியாது நிற்றலின் கொடுமையை நீனைகாலாமமுன்ன கலர தருகாரிதாரும; இனி அந்நிலை யைக கண்ணைவர இலவெனறலிள கொடுமையை நீனைகால் அல் வருகுமனவு சாயுமினறிப் பொனன நிறறி , எ-று

x "நிரவினை, யுளளுந கா வுளள முருகுமா லெனறொலோ—கொள்ளுங காரு கொளவரா குறிப்பு" எனறு பிரமும இபபாடலவு கொடுகெனப தாம இயறகுப் பிறலெலாம இகழின வருளளி முருகுமென் றுரைததார.

(தெ - ப - ரை)—இரவு - உ ன - ரா முன் இல்லா (என்று) இரக்கு நரினிளின் கொடு நமை உ - ரா - நினை ரகால உள்ளம் - (எம்) மூள்ளம், உருகும் - ரா நரா நுநரா நிற்கும, கரவு - (இனி அருகிலைபைக் கண்டிருந்தவர) நிலைபெ னாலின கொடுமையை, உள்ள - நினைந்தால, உள்ள நம்-அ வருகுளளி காணும இன்றி-இல்லாமல், நெடும் - அழி துளிபோர

கo நரபாவாக கிபாநசொரி ரபா கொரோ விரபாவர்
சொல்லாடப் போழ முயிர

(பரி-ரை) எ-து —கரபபா நி லெலியனறு சொலலாடிய யானே இ ப்பாரக ளுயிரபோகாரினறது; இனி சொல் லாடுகினற நவர கடக்கு உயிர பிரனறி றலான அபபொழுது எ ஸ்ரா ட கெலாரி நிறது நிறகும, எ-று.

*உயிரப்பாகலாவது இனி யாமெனசெயதுமெனறெணணி செயலறறு நிற றல், † "அநரிலையே—மையாஞ மாறறி விடின" என்றார பிறரும கேட்டா ரைக கொலலவறறுயெனற சொலலா லாகலாரால் சொல்லவேணடா வாயி னும் அதகாணகின்றிலம் இரதென்றே நு வெனபதாம வறுமை நிறறி மறை யாது இரகபபடுவாராய கேளிரகட்கு அதனை சொலலாட உயிர்போம, ஆனபின் மறைகபபடுவாராய நிற கருக சாலலாடியகாறற போகாதெனகே யொளிதது நிறகும இரணடானும பேரேயாரேனென இரவஞசினுமெ யருளி

சாவாத பிணணனபி ரணணனறு ரணனு— நிரயாது யாபுமாம யாருகைக-யிர வினை—புரிஞஙகா னுமா முருகுட லெனறொலோ—கொ ஞகாற கொளவரா குறிப்பு—காலடியார, இரவசசா

† புறகதுபுத்தன வினைை கலியாக கதுந்தன —னனருளா நீகெ நி நீ இ யொருவினை—யீயா யெனகெனை நிறபபானே லரிகிலையே—ரயாஞ மாறறி விடின—காலடியார, இரவசசா.

வன் கூற்றுக்கு யுரைப்பாரு மூளர். இவை மூன்றுபாட்டானும் அவ்விரவின் குற்றமும் கரவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன.

(தெ - ப - ரை.)—சொல்லாட - (ஒளிப்பவர் இல்லையென்று) சொல்லிய மாத்திரத்தே, இரப்பவர் - இரப்பவர்க்கு, உயிர்—, போம் - போதா நின்றது; கரப்பவர்க்கு - (இனிச் சொல்லுகின்ற) அவ்வொளிப்பவர்க்கு, (உயிர்போன இருந்தலால்), யாங்கு-எப்புரையுள், ஒளிக்குங்கொல் - (அப்பொழுது) புகுந்தொளித்து நிற்குமோ.

கஅ-ம் அதிகாரம்—கயமை.

அரசாவது மேல அரியவர்களும் அமரகவியுள்ளுஞ் சிறப்பு வகையாக் கூறப்பட்ட குணங்களுந் தமக்கடையன குறிப்பினால் யாவர்க்கு மெய்க வைத் தமையின் ஆண்டுக் குறிப்பாற கூறியனவும் ஈண்டொழிபியலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்கள் யாவுமிலராய கீழோரது தன்மை. அதனால் இஃ தெல்லாவற்றிற்கும் பின் வைக்கப்பட்டது.

க மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பா ரியாங்கண்ட தில்.

(பரி-ரை) எ-து—வடிவான் முழுதும் மக்களேயொப்பர் கயவர்; அவர் மக்களையொத்தாற்போன்றவொப்பு வேறிணடு சாதிக்கண யாங்கண்ட தில்லை. எ-று.

முழுதுமொத்தல் தேற்றேகாரத்தாற் பெற்றும். அவரென்றது அவர் மாட்டினதாய வொப்புமையை. மக்கட்சாதிக்கு மகயசாதிக்கும் வடிவொத்த லிற் குணங்களது உணமையின்மைகளா னல்லது வேற்றுமை யறியப்டா தென்பதாம். இதனைத் கயவாது குற்றமிகுதி கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—கயவர் - கீழோர், மக்களேபோல்வர் - (வடிவால் முழுதும்) மக்களேபோலிருப்பர்; அவர் அன்ன ஒப்பரி-அவர் அம்மக்களே யொத்தல்போன்ற வொப்பு, யாம் - நாங்கள், கண்டதில் - (மேற்றிண்டுசாதிகளிடத்து) கண்டதில்லை.

உ கன்றறி வாரிற கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவலம் மிலர்.

(பரி-ரை.) எ-து,—தமக் ஈறுதியாவன வறிவாரின் அவையறியாத கீழ் மக்கள் கன்மையுடையர், அவர்போல அவைகாரணமாகத் தந்நெஞ்சத்தின் கட் கவலை யிலராகலான், எ-று.

நன்றென்பது சாதிபொருமை. உறுதிகளாவன இம்மை மறுமை வீடுகட் குரியவாய புகழ்நலனாங்கள். இவற்றையறிவார் இவை செய்யாதின்றே மிகச் செயப் பெறுகின்றிலே யென்றும், செய்கின்ற வினை தமக்கு இடையூறு வருங்காலென்றும். இவற்றின் மறுதலையாய பழிபாவமுதலியனை யென்பன வற்றுள் யாதுவிளையுமோ வென்றும், இவ்வாற்றுற் கவலையுறுவர், கயவர் அப்புகழ் முதலிய வொழுக்கத்துப் பழிமுதலிய செயல்களினும் யாதுங்கவலை யுடைய ரல்லராகலாற் றிருவுடையரெனப் புகழ்ந்தவாறு. இதனும் பழமுதலியவற்றிற் கஞ்சாமை யென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை — நன்று - (தகும்) நூறுதியாயினையன்மை, அறிவாரின் - அறிபவர்களினும், கயவர் - அலையநியாயர்) கீழ்மக்கள், திருவுடையர் - நன்மையுடையவர்; அமர்பாலர். நெஞ்சக்கு - (தகுதல்) நெஞ்சினிடத்து. அமையும் நிலை - (அவை காரணமாக) கவலையிலர் (ஆதலால்)

கஉ தேவ ரணைய கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான

(பரி-ரை) எ-து,—தேவருக்கு கயவரும் ஒரு தன்மையர், அங்ஙனமாகுமெனின், தேவரைப்போன்று தம்மை நியமிப்பாரின்றிக் கயவருந்தாம விரும்புவனவற்றைச் செய்தொழுகலான், எ-று.

உயாசகியும் இழிவுமாகிய அதன்காரணமேறுபாடு குறிப்பாற்றோன்றினின்றமையின், இது புகழ்வார்போனறு பழித்தவாறு பிறர் இதனுல் விலக்கற்பாடின்றி வேண்டிய செயவாரென்பது கூறப்பட்டது.

(தெ - ப - ரை)—தேவர் அனையர் கயவர் - தேவருந்தம் கயவருந்தம் ஒருதன்மையர், (அதுவெங்ஙனமெனில்). அவருர் - அக்கயவருந்தம், (தேவர்போலத் தம்மை நியமிப்பாரில்லாமல்), தாம் மேவன - தாம் விரும்புமவைகளை, செய்து ஒழுகலான் - செய்து நடத்தலால்.

கக அகப்பட்டி யாவரைக் காணினவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்

(பரி-ரை.) எ-து,—கீழாயினுன் தன்னிற் சூழ்கிய பட்டியா யொழுகுவாரைக் கண்டானுயின், அவ்வொழுகுகத்தின்கண அவரிற் முன் மேம்பட்டு அதனுற் றன்மிகுதிகாட்டியிறுமாகுமும், எ-று.

அகப்பட்டி—அகமாகியபட்டி. பட்டிபோன்று வேண்டியவாறே யொழுகலின், பட்டியென்றார்; ✱ "கோதகசெய்யுஞ் சிறுபட்டி" என்றார் பிறரும். இதனுற் அவர் மேம்படுமாறு கூறப்பட்டது.

✱ கலி குறிஞ்சி, கடு.

(தே - ப - ரை.)—கீழ் - கீழ்மையினை; அகப்பட்டி ஆவ ரை - (தன்னில்) குறைந்தபட்டியாய் நடப்பவரை. காணின் - கண்டால், (அவன் அருகடக்கையிலே). அவரிற் - அவரைக் காட்டிலும். மிகப் பட்டு - (காலம்) மேம்பட்டு. தெரிமதம் - (அதனால் கன்மிகுதி காட்டி) இறுமாப்பான்.

———

நு. அரச மே கீழ்கள் ஆசார பெரிய
மவாகண்டே ணுண்டாஞ் சிறி து

(பரி-ரை.) எ-து,—கயவமாய வாசாரங் கண்டதுண்டாயின் அதற்குக் காரணம் அரசனுன் எமம் வரு மன்றஞ்சு மசமே; அஃதொழிந்தால், தம் மால் அவாவப்படும்பொருள் அதனுலுண்டாமாயிற் சிறிதுண்டாம், எ-று.

ஆசாரத்தன்காரணத்தை ஆசாரமென்றும், அவாவப்படுவதனை அவா வென்றது கூறினுர். எசமதன்கண் ணென்றுமேழாவது இறுதிக்கட் டொக்கது. பெருமபான்மை அசம், சிறுபான்மை பொருட்பே), இவ்வீரண் டானு மன்றி இயல்பாக ா டாகாதெனபதாம். வேணடியசெய்தலே இயல்பு, ஆகாஞ் செய்தல் இயல்பன்றென்பது அதனுற் கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—கீழ்களது ஆசாரம் - கீழோரது ஆசாரம், (கண்டது உண்டாயின அதற்குக்காரணம்), அச்சமம - (அரச னுலே தன்பம் வருமெம்று அஞ்சும்) அசமே; ஈச்சம் - (அது) ஒழிந்தால். அவா - அவாவப்படும்பொருள், உண்டேல் - (அதனால்) உண்டாமாகில். சிறிது—, உண்டாம் - உண்டாகும்.

சு. அறைபறை யண்ணர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைத்த லான்.

(பரி-ரை.) எ-து,—தாங்கேட்டமறைகளை இடந்தோறுந் தாக்கிக் கொண்டுசென்று பிறர்க்குச சொல்லுதலான், கயவர் அறையப்படும் பறை யொப்பர், எ-று.

மறை - வெளிப்படித் குற்றம் வினையுமென்றபிறரை மறைத்து ஒருவன் சொல்லிய சொல். பிறர்-அம்மறைத்தற்குரியார். உய்த்தென்றர், அவர்க்கது பெரும்பாரமாதலேக்கி. பறை ஒருவன்கையாற் றன்னை யறிவித்த தொன் றனை இடந்தோறுய கொண்டுசென்று யாவரையு மறிவிக்குமாகலான், இது தொழிலுவமம். இதனுல் அவரது செறிவின்மை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)—தாம் கேட்ட மறை - தாங்கள் கேட்ட இரகசியங்களை, உய்த்து - (இடந்தோறும்) தாக்கிக்கொண்டு

போய், பிறர்க்கு—, உரைக்கலான் - சொல்லுதலால், கயவர் - கீழ் மக்கள், அறை பறை அன்னர் - அறையப்படும் பறை போலுவர்.

ஈ. ஈர்ங்கை விதிரார்கயவர் கொடிறுடைக்குற்
கூன்கைய ரல்லா ரவர்க்கு

(பரி-ரை.) எ-து,—கயவர் தம் கருப்பினை வெளிப்படுத்தாத வஞ்சகமுடைய ரல்லாதார்க்குத் தாமுண்டி பூசியகையைத் தெரித்தல்வேண்டுமென் றிருந்தாலுந் தெரியார, எ-று.

வஞ்சகம்—மறுக்கியதை. மெல்லாகுயா துகொடார, கலிவார்க்கு எல்லாங்கொடுப்ப ரென்பதாம்.

(தே - ப - ரை.—கயவர்-கீழ்மக்கள். கொடிறு உடைக்கும் - (தம்) கருப்பினை வெளிப்படாத. கூன் - வஞ்சக, கையர் அல்லாதவர்க்கு - கைபிணியுடைய ரல்லாதவர்க்கு, ஈர்ங்கை - (தாம்) உண்டு பூசியகைபை. விதிர்த்தலேவண்டுமென்று இருந்தாலும்), விதிரார் - யார.

அ. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கருப்பறியார்
கொல்லப் பயன்படுங் கீழ்.

(பரி-ரை.) எ-து.—மெலியார் சென்று தங்குறையைச்சொல்லிய துணையானே இரங்கிப் பயன்படுவ மேலாயினர்; மற்றைக்கீழாயினர கரும்பு போல வலியார கையெருக்கியபிழிப் பயன்படுவர். எ-று.

பயன்படுதல்—உள்ளதுகொடுத்தல். கீழாயினுந்திறிவுதோன்ற, மேலாயினரையும் உடன் கூறினர். இவை யிரண்டுபாட்டானும் அவர் கொடுக்குமாறு கூறப்பட்டது.

(தே - ப - ரை)—சான்றோர் - மேலாயினர், சொல்ல-(மெலியவர் போய்த் தங் குறையை) சொல்லியவளவிலே, பயன்படுவர் - (இரங்கி) பிரயோசனப்படுவர்; கீழ் - (மற்றை) கீழாயினர், கரும்புபோல்—, கொல்ல - (வலியவர்) கையெருக்கியவிடத்தே, பயன் படும் - பிரயோசனப்படுவர்.

கூ. உடுப்பதூஉ மூண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுத்தாண வற்றாகுங் கீழ்.

(பரி-ரை.) எ-து,—பிறர் செல்வத்தைப் பட்டுத் துகிலு முதித்தலையும் பாலோ டடிசி லுண்டலையுங் கழனியின் காணுமாயின், அவர்மாட்டு வடுவில்லையாகவும் மாட்டாதலில்லாளும், எ-று.

உடுப்பது, உண்பதென்பன ஈண்டவ்வத் தொழின்மே னின்றன ; அவற் றுட் பூண்டலு ர்தன் முதலிய பிறதொழில்களுங கொள்ளப்படும். அவற் றைக் கண்டதனாலே பொருமையெய்தலிற காணினென்றும், கேட்டார் இது கூடுமென நியையப்படைத்தல் அரிதாகலின் வற்புருகுமென்றுங கூறி னர். இதனுற பிறர்செல்வம் பொருமை கூறப்பட்டது.

(தே - ப - ரை.)--கீழ - கீழாயினேன், உடுபபதும் - (பட்டுக் துகிலும்) உடுத்தலையும், உண்பதும் - (பாலுஞ்சோறும்) உண்ணு தலையும், காணின் - கண்டால், (அவைபொருமல்), பிறர்மேல்—, (குற்றமில்லையாகவும), வடுக்காண-குற்றமுண்டாக்க, வற்று ஆகும் - வல்லவனுவன்.

கஅ மற்றிற குரியர் கயவரொன் றுறறுக்கால
விற்றற் குரியர் விரைந்து

(பரி-ரை.) எ-ு—கயவர் தம்மை யாதானுமொரு துனப முற்றக்கால் அதுவே பறறுககோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விறறற் குரியர் ; அது வன்றி வேறெதொழிற குரியர, எ-று.

உணவின்மையாகப் பிறிதாக ஒன்றுவந் நற்ற துணையானென்பது தோன்ற ஒன்றுற்றக்காலென்றும், கொள்ளுகின்றுர் தய கயமையறிது வேண்டாவென்றருகுன்னே விறறுநிற் றலின் விரைந்தென்றுங கூறினு ஒருதொழிற்கு மூர்யரல்லரென்பது குறிப்பெசம் இனனுற் ரும் பிறர்க்கடி மையாய் நிறபனென்பது கூறப்பட்டது

(தே - ப - ரை.)—கயவர் - கீழோர், ஒன்று - ஒருதுன்பம், உற்றக்கால் - (தம்மை) அடைந்தவிடத்து, (அதுவே சார்பாக), விரைந்து—, விற்றற்கு உரியர் - (தம்மைப்பிறர்க்கு) விலைசெய்தற்கு உரியவராவர் ; (அதுவல்லாமலு) எறறிற்கு உரியர் - (வேறே) எத் தொழிலுக்கு உரியராவர்.

ஒழிபியல முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று.

காமத்துப்பால்.

களவியல்.

இனி அப்பொருளைத் துணைக்காரணமாகவுடைத்தாய் இயைபே பயப்பதாய வினைபற்றி கூறுவா னெடுத்துக்கொண்டார். ஈண்டின்பமென்றது ஒருகாலத் தொருபொருளான் முயலுநர்க்கு நுகர்ச்சிப்புடைத்தாய காமவினபத்தினை. இச் சிறப்புப்பற்றி வடநூலுட பேசாராசனுஞ் சுவைபலவென்று கூறுவார் கூறுக யாங்கூறுவ தினபசுவை யொன்றேயுமேயென இவையே மிருத்தக கூறினுன். இது புணர்ச்சி பிரிவென விருவகைப்படும் எனைபிருகதல், இரகசல், ஊடலென்பனவோவெனின், இவா பொருடபாகுபாட்டினே அரம் பொருளினபமென வடநூல வழகுறப்பகு யோதி லான. அவைதாமே யவற்றைப பிரிவினக ணடக்கினுளென்க இனி அவைபம்மையே தமிழ் நூல்களோடும பொருந்தப் புணர்ச்சியைக களவென்றும் பிரிவைக கற்பென்றும் பெரும்பானமைபற்றி வருத்தி, அவற்றைக சுவைபிருகியப்ப உலக நடையோடு ஒப்பு மொவ்வாமையுமுடைய வாகிக கூறுகினருர். அகைகோளிரண்டினுள்ளுங களவாவது பிரிவுபிரப்புகளினை யெஞ்ஞான்று மொரு தன்மையராய ருவுக்சிறவும் பருவ முக்குலனுங குணனு மன்பு முதலியவற்றுற் றம்மு ளொப்புமையுடையராய கலேமகளும் பலேமகளு மபிரர்கொடுப்பவு மடுப்பவுமன்றிப் பால்வகையாற ரு மையெரிபடப்பட்டுப் புணர்ந்து வருவது. அதனே யேழுதிகாரத்தாற் கூறவான மொடை யி முதற்கட்டகையணகுறுத்தல் கூறுகினருர்.

கO-ம் அதிகாரம்—நகையணங்குறுத்தல்.

அஃதாவது, பொழில்வினேயாட்டு விருப்பான் அய நீங்க அனகட்டமியளாய் நின்றுளே வேட்டவிருப்பான் இனேயாரா பிாகத் தமியனுயவாது கண்ணுற்ற தலேமகன் அவன வனப்புச் சனனே வருத்த முறவிகதலேச சொல்லுதல். இது, கண்ணுற்றபொழுதே நிகழ்வதாகலின், முதற்கட் கூறப்பட்டது.

க. அணங்குகொ லாய்மயில் கொலோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்ச

[தலேமகளுருவுமுதலியன முறைக்ஷடனிவன்றித் தியற்றமையின்
அவனேத் தலேமகன் மயற்றது]

(பரி-ரை.) எ-து,—இக்கனிய குழையையுடையாள் இப்பொழிற்கணுறைவா ளோர் தெய்வமகளோ? அன்றி யொருமயில்வீசேடமோ? அன்றி

யொரு மானுடமாதரோ? இவளே பின்னளென்று துணியமாட்டாது என் னெஞ்சு மயங்காநின்றது, எ-று.

இ—ரை. ஆய்மயில்—படைத்தோன் விசேடமாக வாய்த்து படைத்த மயில்; மயிற்சாதியிட்டெனினுமது பசுமென்றழாம். கனங்குழை—ஆகு பெயர். கணங்குழையென்று பாடமோதிப் பலவாயதற்கிரண்டை குழையென் றுரைப்பாரு முளர். எழுதுகொக்கு வருவதற்கு முன்பாகவே வருத்தமும்பற்றி அணங்கு கொலெனவும், சாயலும் பொழில்வயின் வந்தழுபபற்றி ஆய்மயிலெனவும், தன்னெஞ்சு சென்றதையும் அவளதிராக்கியவாறும்பற்றி மாதர் கொலென்று கூறினளை.

(தெ - ப - ரை)—நனம் குழை - இக்கனமாகிய குழையை யுடையவள், அணங்கு கொல் - (இச்சோலயிலி ருப்பவளாகிய) ஒரு தெய்வபபெண் தானோ? (அ வ ள ல் ல ை) ஆய் மயில் கொல் - (கடவுளால் ஆராய்ந்து படைக்கப்பட்ட) ஒரு மயில் தானோ? (அல்லாமல்), மாதர் கொல - ஒரு மானுடமாதரோ? என்னெஞ்சு - என் மனம், மரும் - (இவள இப்படியென்று துணிபமாட்டாமல்) மயங்காநின்றது.

உ. கோக்கிளை பேணக்கெதிர் கோக்குரு நம்கணங்கு
காணக்கொண் டன்னை நடைத்து.

[மானுடமாதராதல் தெளிந்தநலமகள் தன்னெஞ்சினையே நோக்கிக் கூறியது]

(பரி-ரை.) எ-து,—இப்பெற்றி தாய வனப் னுயுடையாள் என்னுங்கி றற் கெதிரேசாக் தல் தானே நக்கிவருதலேயாமணங்கு தாக்குதற்குத் தானேயையுங் கொண்டுவந்தாற்போலுக் ணன்மையையுடைத்து, எ-று.

மேலும் அணங்குகொ லாய்மயில்கொ லென்றமையபான், இவரச்சுட்டு வருவிக்கப்பட்டது. எதிரேநோக்குத லென்றமையின், அது குறிப்பு நோக் காயிற்றாது. எனப்பால் வருதலன்மேலும் நிற்புறேசாக்கால் வருத்துதல் கூறியவாறு. கோக்கிளை பேணக்கெதிர் கோக்குரு நம்கணங்கு காணக்கொண் டன்னை நடைத்து எனவும் பிரிக்கப்பட்டாளென துரைப் பாருமுளர்.

(தெ - ப - ரை)—கோக்கிளை - (இப்படிப்பட்ட) அழகினை யுடையவள், கோக்குஎதிர் - (என்) பார்வைக்கெதிரே. கோக்கு தல்—, நம் கணங்கு - (சாதியை) நாங்கி வருந்துகிற ஒரு தெய் வப்பெண், காணக் கொண்டன்னை - (தாந்தனக்குச) சேணையை யுங் கொண்டுவந்தாற்போலுந் தன்மையை, உடைத்து - உடையது.

கூ. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—கூற்றென்று நூலோர் சொல்வதனைப் பண்டுகேட்டறிவதல்லது கண்டறியேன்; இப்பொழுது கண்டறிந்தேன்; அது பெண்டகையுடனே பெரியவாய் அமர்ந்த கண்களையுடைத்து, எ-று.

பெண்டகை—நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னுங்குணங்கள். அவை அவ்வக்குறிகளானறியப்பட்டன அமர்—தல்-அமர்செய்தல், பெயரடியாய வினை. பெண்டகையால் இன்பம் பயந்தும் முணடோன்றும் துன்பம் பயத்தன் மிகுதிபற்றிக் கூற்றுக்கிக் கூறு

(தெ - ப - ரை.)—கூற்று எய்பதனை - கூற்றுவனென்று (நூலோர்) சொல்லுவதை, பண்டு அறியேன் - முன் (கேட்டறிந்ததல்லது) கண்டறிந்திலேன்; இனி அறிந்தேன் - இப்பொழுது கண்டறிந்தேன்; (அது), பெண் தகையால் - நாணமடம் அச்சம் பயிர்ப்புஎன்கிற) பெண்தன்மையுடனே, பேர் அமர் - பெரியவாய்ப்போர்செய்கின்ற, கட்டு - கண்களையுடைத்து.

சு கண்டார் குயிருண் ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—பெண்டகையையுடைய வீப்பேதைக்கு உளவாய கண்கள் தம்மைக்கண்டார் குயிருண்ணுந் தோற்றத்துடனேகூடி அமர்த்திருந்தன, எ-று.

அமர்த்தல்—மாறுபடுதல். குணங்கட்கும் பேதைமைக்கு மேலாது கொடியவாயிருந்தனவென்பதாம்.

(தெ - ப - ரை.)—பெண்தகை-பெண்குணங்களுடைய, பேதைக்கு - இப்பேதைக்கு, கண் - கண்கள், கண்டார் - (தம்மை) கண்டவரது, உயிர் உண்ணுந் தோற்றத்தால் - உயிரையுண்ணுந் தோற்றத்துடனேகூடி, அமர்த்தன - மாறுபட்டிருந்தன.

கூ. கூற்றமோ கண்ணே பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து

குறள் 1102 கற்கோம் அதி. தகையணங்குறுத்தல்

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—என்னை வருத்துதலுடைமையாற் கூற்றமோ? என் மேலோடித லுடைமையாற் கண்ணே? இயல்பாக வெருவுத லுடைமையாற் பிணையோ? அறிகின்றிலேன். இம்மடவரல் கண்களினேக்கம் இம்மூன் றன் றன்மையையு முடைத்தா யிராகின்றது, எ-று.

இன்பமும் துன்பமும் ஒருங்கு செய்யாகின்ற நென்பதாம். தொழில் பற்றி வந்த ஐயவலோபமம்.

(தே - ப - ரை.)—கூற்றமோ - (என்னை வருத்துதலாலே) கூற் றமோ? கண்ணே-(என்மேலோடுதலாலே) கண்ணே? பிணையோ - (இயல்பாக அஞ்சுதலாலே) பெண்மானே? (அறிகின்றிலேன்); மடவாலகேர்க்கம் - இம்மாது (கண்களின்) பார்வையானது, இம் மூன்றும் - இம்மூன்றனுடைய தன்மைகளையும், உடைத்து - உடைத்தாயிருக்கின்றது

சு. கொடும்புருவங் கோடா மறைப்பி னெடுங்களுர்
செய்யல மன்னிவள் கண்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—பிரியாகட்பாய கொடும்புருவங்கடாஞ் செப்பமுடை யவாய் விலக்கினவாயின் அவற்றைக்கடக்கு இவள் கண்கள் எனக்கு நடுக் குந்துயரைச செய்யமாட்டா, எ-று.

கட்டாரைக் கழறுவார்க்குத் தாஞ் செம்மையுடையராதல் வேண்டலிற் கோடாவென்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்ற தனக்கும் இடை நின்று விலக்குங்காலுஞ் சிறிதிடைபெறின் அதுவழியாக வந்து அளுர் செய்யு மாகலின் மறைப்பினென்றுங் கூறினுர். நடுங்குதற்கேதுவாயவளுர். தாமியல்பாகக் கோடுதலுடையையான் அவற்றை மிகுதிக்கண் மேற்சென் றிடிக்கமாட்டாவாயின வென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

(தே - ப - ரை.)—கொடும் புருவம் - (பிரியா கட்பாகிய) கொடியபுருவங்கள், கோடா மறைப்பின் - (தாம்) செவ்வையா பிருந்துவிலக்கினுல், (அவைகளைகடந்து); இவள்கண் - இவளது கண்கள், நடுங்கு அளுர்-நடுங்குதற்கு ஏதுவாகியதுயரை, செய்யல-(எனக்கு) செய்யமாட்டா.

எ. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் துகில்.

[அவனீ முலைகளிறைய வருத்தங் கூறியது.]

(பரி-ரை.) எ-து.—இம்மாதர் படாமுலைகளின் மேலிட்ட துகில், அவை கொல்லாமற் காத்தலின், கொல்வதாய மதக்களிற்றின்மேலிட்ட மூகபடாத்தினை யொக்கும், எ-று.

கண்ணை மறைத்தல்பற்றிக் கட்படா மென்றான். துகிலான் மறைத்தல் நாணுடை மகளிர்க் கியல்பாகலின், அத்துகிலோடு அவற்றின் வெம்மையும் பெருமையுங் கணடு இத்தினையாற்றலுடையன இனி யெஞ்ஞான்றுஞ் சாய் விலவெனக் கருதிப் படாமுலையென்றான். உவமை சிறிதுமறையாவழி உவை கொல்லுமென்பதோன்றநின்றது.

(தெ - ப - ரை)—மாதர் - இம்மாதருடைய, படா முலைமேல் துகில்-சாய்தலில்லாத முலைகளின் மேலிட்ட ஆடையான து, (அவை கொல்லாமற் காத்தலால்), கடாக் களிற்றின் மேல் - (கொல்லுவ தாகிய) மதயானையின்மேலிட்ட, கட்படாம் - முகபடாத்தினை (ஒக்கும்)

அ. ஒண்ணுதற் கோல வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணுரு முட்குமென் பீடு.

[நுதலிறைய வருத்தங் கூறியது.]

(பரி-ரை.) எ-து,—போர்க்களத்து வந்துநேராத பகைவரும், நேர்ந்தா வாய்க்கேட் டஞ்சுதற கேதுவாய என்வலி இம்மாதர் தொள்ளிய நுதலொன் றற்குமே அழிக்துவிட்டது, எ-று.

மாதரென்பது அதிகாரத்தான் வந்தது. ஞாட்பினு ளென்றதனாற் பகைவ ராதல் பெற்றும். பீடென்றபொதுமையான் மனவலியுங் காயவலியுங் கொள்க. ஒவென்னும் வியப்பின்கட்குறிப்பு அவ்வலிகளது பெருமையும் நுத லது சிறுமையுந் தோன்ற நின்றது. கழற்றற் கிரங்கலிற் றற்புகழ்த்தலென்று மியற்று.

(தெ - ப - ரை)—ஞாட்பினுள் - போர்க்களத்து, கண்ணுரும் - எதிர்த்திலாதபகைவரும், உட்கும் - (எதிர்த்தவர்வாய்ச் சொற் கேட்டு) அஞ்சுதற்கு ஏதுவாகிய, என்பீடு - என்வலி, ஒள் நுதற்கு ஓ - (இம்மாதருடைய) ஒளிபொருந்திய நெற்றியொன்றற்குமே, உடைந்தது - அழிந்துவிட்டது.

கூ. பிணையோர் மடநோக்கு நாணு முடையாட
கணியெனினே வேதில தந்து.

[அணிநலத்தாலுய வருத்தங்கூறியது.]

(பரி-ரை.) எ-து,—புறத்து மான்பிணையொத்த மடநோக்கினையும் அகத்து நாணினையுமுடையளாய விவட்கு ஒற்றுமையுடைய இவ்வணிகளே யமைந்திருக்க வேற்றுமையுடைய வணிகளைப் படைத்தணிதல் என்னபய னுடைத்து, எ-று.

மடநோக்கு-வெருவுத் லுடையநோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக் கணிவகாதலுங் கருதாமையின், அவர்தார் அறிவில ரென்பதாம்.

(தே - ப - ரை.)—பிணை ரா மடநோக்கும் - (புறத்திலே) பெண்மான்போன்ற அஞ்சுதலுடைய பார்வையையும், நாணும் - (ஓ ரு)மையுடைய இப்பாவனையும் காணமும் ஆகிய அணிகளே போதுமான வையாயிருக்க), ஏதில தந்து - மேலற்றுமையுடைய அணிகளையுண்டாக்கி, அணி - அணிதல், எவன் - என்னபய னுடைத்து?

க0. உண்டார்க ணல்ல தருநறுங் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

[தலைமகள் குறிப்பறிதலுற்றனள் தோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—அடப்படு நறு தன்னையுண்டார்மாட்டு மகிழ்ச்சியைச செய்வதல்லது காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்தலுடைத தன்று, எ-று.

அருநறு—வெளிப்படை. காமமென்றது ஈண்டு அது நுகர்தற் கிடனாகி யாரை. கண்டார்கணெனனு மேழாவது இரு திக்கட் டொக்கது. மகிழ்செய் தற்கட் காமம் நறவினுஞ் சிறந்தே யெனினும் இவள் குறிப்பாய்த் தறி யாமையின் யானது பெற்றிலேனெனக் குறிப்பெசசம் வருவித்துரைக்க, * "அரிமயிர்த்திரண முன்கை" என்னும் புறப்பாட்டிற் குறிப்புப்போல.

(தே - ப - ரை.)—அடு நறு - காய்ச்சப்பட்ட மதுவானது, உண்டார்கண் அல்லது - (தன்னை) உண்டவரிடத்தே தயல்லாமல், காமம் போல்—, கண்டார் - கண்டவரிடத்தே, மகிழ் செய்தல் - மகிழ்ச்சிசெய்தலை, இன்று - உடைத்தன்று.

கக0-ம் அதிகாரம்—குறிப்பறிதல்.

அஃதாவது: தலைமகன் தலைமகள் குறிப்பினையறிதலும், தோழி குறிப் பினையறிதலும், அவடான் அவ்விருவர் குறிப்பினையு மறிதலுமாம். தகை

* புறநானூறு, ௪௪.

யணங்குற்ற நலமகன் நலமகளைக் கூடுங்கால் இது வேண்டுமாகலின், தகை யணங்குறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

க இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றங்நோய் மருந்து.

[நலமகன் நலமகளுழைப் பாட்டே துறிப்பினை அவணுணர்கிறு வறிந்தது.]

(பரி-ரை.) எ-து,—இவளுடைய வுண்க ணைகத்தாய நோக்கு இது பொழுது என்மே லிரண்டு நோக்காயிறது; அவற்றுள் ஒருநோக்கு என்க ணுயைசெய்து நோக்க ந. எனையது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு, எ-று.

உண்கண - மையுண்டகண. நோய் செய்யுநோக்கு—அவண் மனத்தினுள்ள காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு. மருந்தாய நோக்கு - தன்க ணைக்கழ்கின்ற அற்புநோக்கு. நோய்செய்யு நோக்கினைப் பொதுநோக்கென் பாருமுளர்; அது நோய்செயிற் கைக்கிளையாவதலினு அகமாகாமை யறிக. இவ் வருத்தந் தீரும் வாயிலு முண்டாயிற் தென்பதாம்.

(தே - ப - ரை.)—இவள் உண் கண்-இவளு டைய (மை) உண்ட கண்களில், உள்ளது - இருந்நிற் பார்வையானது, இரு நோக்கு-(இப்பொழுது மல்மேல்) இரண்டுபார்வையாயிற்று; (அவற்றுள்), ஒரு நோக்கு-ஒருபார்வையானது, நோய் நோக்கு - (என்னிடத்து) நோய்செய்யும் பார்வையாம்; ஒன்று - மற்றொரு பார்வையானது, அந்நோய் மருந்து - அந்நோய்க்கு மருந்தாகபார்வையாம்.

உ. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது.

[நுதுவுயது]

(பரி-ரை.) எ-து,—இவள்கணகள் யானகாரணமல் என்மே னேக்குகின்ற அருகிய நோக்கம் மெய்யுறு புணர்ச்சியின் ஒத்த பாரியளவனறு, அதனினு மிகும், எ-று.

தானேக்கியவழி நாணியிறஞ்சியும் நோக்காவழி உற்றுநோக்கியும் வருதலாற் களவுகொள்ளுமென்றும், அஃதுளதாங காலஞ் சிறிதாகலிற் சிறுநோக்க மென்றும், அஃது உளப்பாடில்வழி நிகழ்வதாகலின் இனிப்புணர்தல் ஒருதலை யென்பான் செம்பாகமன்று பெரிதென்றுங கூறினுன்.

(தே - ப - ரை.)—கண் - (இவளது) கண்கள், களவுகொள் ளும் சிறு நோக்கம் - நான்காணுமல் என்னைப்பார்க்கின்ற சிறிய பார்வை, காமத்தில் - மெய்யுறு புணர்ச்சியில், செம் பாகம் அன்று - ஒக்கபாகியளவன்று, பெரிது - (அதனிலும்) மிகும்.

கூ. நோக்கினு நோக்கி யிறைஞ்சினு ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.

[நோக்கினும் நாணினும் மறிந்தது]

(பரி-ரை.) எ-து,—யானெக்காலவளிற் றுனென்னை யன்போடு நோக்கினுள், நோக்கி ஒன்றனை யுட்கொண்டு நாணி இறைஞ்சினுள், அக்குறிப்பு இருவேறிடையுற் றோன்றிய அற்புப் பயிர்வளர அதன்கணைவள் வார்த்த நீராயிற்று, எ-று.

அஃதென்னுஞ் சுட்டுப்பெயர் அசைசெய்கைக் கேதுவாய குறிப்பின்மேனின்றது. யாப்பினுளதனை யாப்பென்றார். ஏகதேசவுருவகம்.

(தெ - ப - ரை.)—அவள்—. நோக்கினுள் - (நான் பாராதவள விடலை தான் என்னை அன்போடு) பார்த்தாள்; நோக்கி - பார்த்து, இறைஞ்சினுள் - (ஒன்றை உட்கொண்டுநாணி) தலைகுனிக்தாள்; அஃது - அச்செய்கைக்கு ஏதுவாகிய குறிப்பானது, யாப்பினுள் - (எம்மிருவரிடத்துந் தோன்றிய) அன்பாகியபயிருள், அட்டிய நீர் - (அதுவளரும்படி) வார்த்த நீராயிற்று.

ச. யாமேனுக்குங் காலை நிலமேனுக்கு நோக்காக்காற்
றுனேக்கி மெல்ல நகும்.

[நாணினும் மகிழ்ச்சியினும் மறிந்தது.]

(பரி-ரை.) எ-து,—யான் றன்னை நோக்குங்காற் றுனைநீர் நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்காநிற்கும்; அஃதறிந் தியானெக்காக்காற் றுனென்னைநோக்கித் தன்னுள்ளே மகிழாநிற்கும், எ-று.

மெல்ல—வெளிப்படாமல். மகிழ்ச்சியாற் புணர்தற் குறிப்பினிது விளங்கும். மெல்லநகு மென்பதற்கு முதுவலிக்குமென் றுரைப்பாரு முளர்.

(தெ - ப - ரை.)—யான் நோக்குங் காலை - (தண்ணை) நான் பார்க்கும்போது, நிலம் நோக்கும் - (எதிர்பாராமல் நாணித்தலை குனிந்து) நிலத்தைப் பாரா நிற்கின்றாள்; நோக்காக்கால் - (அதை அறிந்து நான்) பாராதபோது, தான் நோக்கி - தான் (என்னை) பார்த்து, மெல்ல நகும் - (தன்னுள்ளே) மகிழா நிற்பள்.

டு. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் பேரா நகும்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—கேளே குறிக்கொண்டு நோக்காத் துணையல்லது ஒரு கண்ணைச சிறகுகணித்தான் போல என்னை நோக்கிப் பின தன்னுள்ளே மகிழா நிற்கும், எ-று.

சிறக்கணித்தா ளென்பது செய்யுள் விகாரம். சிறகுகணித்தல் - சுருங்குதல். அது தானும் வெளிப்பட நிகழாமையிற் போலவென்றான். நோக்கியென்பது சொல்லெசசம். இனி இவளே யெய்துதல் ஒருதலை யென்பது குறிப்பெசசம்.

(தே - ப - ரை.)—குறிக்கொண்டு - (கேளே) குறிக்கொண்டு, நோக்காமை அல்லால - பாராமைமாத்திரமே யல்லது. ஒரு கண் - ஒருகண்ணை, சிறகுகணித்தாள் போல - கருங்கின வள்போல, நகும்- (என்னைப் பார்த்துத் தன்னுள்ளே) மகிழா நின்றாள்.

சூ. உறுஅ தவர்போற் சொலினுஞ் செறுஅர்சொ
லொல்லை யுணரப் படும்.

[தோழி கேட்பிற்றவறி அவள்தூறிப் பறிந்த தலைமகன்
தன்னு ளானே சொல்லியது]

(பரி-ரை.) எ-து,—புறத்து நொதுமலர்போலக் கடுஞ்சொற் சொன்னாயினும், அகத்துச் செறுதலிலாதார் சொற்பிறபயத்தல் முறையுற்றாற் கடிதின் அறியப்படும், எ-று.

கடுஞ்சொலென்பது-இவ்விடங்காறன் மிகுதியுடைத்து வாற்பாலிரல்லீ ரென்றன் முதலாயின். செறுனெனவே, அருளுடைமை பெறப்பட்டது. தன் குறை முடிக்கக் கருதியே சேட்படுகின்றமை குறிப்பானறிந்து, உலகியன் மேலிட்டுக் கூறியவாறு. இது வருகின்ற பாட்டிறகு மொக்கும்.

(தே - ப - ரை.)—உறுதவர்போல் - (புறத்திலே) அயலார் போல, சொலினும் - (கடுஞ்சொல்) சொல்லினும், செறர் சொல்- (உள்ளே) பகையாதவர்சொல், (பின் பிரயோசனப படுதல்); ஒல்லை உணரப்படும் - (குறையிரந்தவராலே) கடிதில் அறியப்படும்.

எ. செறுஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னெஞ்சு
முறுஅர்போன் றுற்றார் குறிப்பு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—பின்னினிதாய் முன்னின்னுதாய சொல்லுஞ் அகத்துச் செறுதிருக்தே புறத்துச செற்றார் போன்ற வெகுளிநோக்கும் நொதுமலர் போன்று நட்பாயினர்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவன, எ-று,

குறிப்பு—ஆகுபெயர். இவை உள்ளே யொருபயன் குறித்துச்செய்கின்றன இயல்பல்லவாதலான், இவற்றிற் கஞ்சவேண்டா வன்பதாம்.

(தே - ப - ரை.)—செறுச் சிறு சொல்லும் - (பிரிந் இனிதாவதாப் முன்னே) இரங்கதாகிய சொல்லும். செற்றார்போல கோக்கும்- (உள்ளே பகைபாதிருந்தே புறத்தே) பகைத்தவர்போன்ற கோபப் பார்வையும், உறார் போல் - அயலார்போலிருந்து. உற்றார் - நட்பாயினவர்க்கு. குறிப்பு - ஒரு குறிப்புப்பற்றி வருவனவாம்.

அ அசைஇயற் குண்டாண்டோ ரேஎய்பா ணெஞ்சுகர்
பசைஇனன் பையக குங்

[தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைச்சுமந்து தலைமகன் கூறியது]

(பரி-ரை.) எ-து—என்னையற்றன்ற சொற்காற்று தியானிரந்து நோக்கிய வழி அகந்திந்து மெழிந்து உள்ளே மெல்ல நகாநின்றுள், அதனால் நடந்திய வியல்பினையுடையாட்கு அகதையினகணமே தோன்றுகின்ற தோர் கன்மைக் குறிப்புண்டு, எ-று.

எர்—ஆகுபெயர். அக்குறிப்பு இனிப்பழுதாகா தென்பதாம்.

(தே - ப - ரை)—பான் நோக்க - (என்னை நீக் நுகின்ற சொல்லுக்குப் பொருமல்) நான் (இரந்து) நோக்கியவிடத்து, பசையினள் - (அதுதெளிந்து) இரங்கினளாகி, பையநகும் - உள்ளே நகாநின்றுள்; (அதனால்), அசை இயற்கு - அசைந்த சாயலையுடைய வளுக்கு, ஆண்டு - அச்சமையினிடத்து, ஓர் ஏர் - ஒரு நன்மைக் குறிப்பு, உண்டு - உளது.

கூ ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

[தோழி மதியுடம்படுவாட்னுக்கோ சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—முன்னறியாதார்போல ஒருவரை யொருவர் பொது நோக்கத்தா னோக்குதல் இக்காதலை யுடையார் கண்ணே யுளவாகா கின்றன, எ-று.

பொதுநோக்கு—யாவர்மாட்டும் ஒரு தன்மைத்தாய நோக்கு. நோக்குதற் றொழில், ஒன்றேயாயினும் இருவர்கண்ணு நிகழ்தலானும், ஒருவர்கட்டானுங் குறிப்பு வேறுபாட்டாற் பலவா மாகலானும், உளவெனப் பன்மையாற் கூறப் பட்டது. இருவரும் * "மதுமறைந் தூணேடோர் மகிழ்ச்சிபோல உள்ளத்

---

* "எனல் காவலிவளு மல்லள்" என்றபாட்டு. இறையனு கப்பொருள். அ-ம் சூத்திரத்துரையிற் காணக.

துள்ளே மகிழ்" தலின் அதுபற்றிக் காதலாரென்றும், அது புறத்து வெளிப் படாமையின் எதிலாரைபோல வென்றுங் கூறினர்.

(தே - ப - ரை.)—எதிலார் போல - முன்னறியாதவர் போல, பொது நோக்கு நோக்குதல் - (ஒருவரை ஒருவர்) பொதுப்பார் வையாகப் பார்த்தல், காதலார்கண்ணே - ஆசையையுடைய இவ் விருவரிடத்தும், உள - உண்டாகின்றன

கo. கண்ணிணை கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மிலை

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காமத்திற் குரிய விருவருள் ஒருவர் கண்களோடு ஒரு வர்கண்கள் நோக்கா லொக்குமாயின், அவர் வாய்மைதோன்றச் சொல்லு கின்ற வாய்சசொற்கள் ஒரு பயனு முடையவல்ல, எ-று.

நோக்காலொத்தல்—காதலேஞ்கினவாதல். வாய்சசொற்கள் — மனத் தின்கணின்றி வாயளவிற் றோன்றுகின்ற சொற்கள். இருவர் சொல்லுங் கேட்டு உலகியன்மேல் வைத்துக் கூறினார். இருவர் சொல்லுமாவன அவள் புனங காவன்மேலும அவன வேட்டைகின்மேலுஞ் சொல்லுவன பய னில் சொற்களாதலின். இவை [illegible] வென்றார். இதனாற் புணர் ரிமித்தம்.

(தெ - ப - ரை.)—(காமத்திற்குரிய இரு வருள்), கண்ணிணை - (ஒருவரது) கண்களோடு, கண் இணை - (ஒருவர்) கண்கள், நோக்கு ஒக்கின் - பார்வையால் ஒக்குமாயின், வாய்சசொற்கள் - (உண்மை தோன்றச சொல்லுகின்ற) வாய்ச்சொற்கள், என்ன பயனும் - ஒரு பயனும், இல - உடையனவல்ல

ககக-ம் அதிகாரம்—புணர்ச்சிமகிழ்தல்.

அஃதாவது அங்ஙனங் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சி யினே மகிழ்ந்து கூறல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

க. ஃ கண்டுகேட் டுண்டுயிர்க் தற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

---

* இத்திருக்குறள் சேரமானபெருமாணயனார் தருக்கலாய ஞானவுலாவில் லெடுத் துரைக்கப்பட்டது.

[இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது.]

(பரி-ரை) எ-து,—கண்ணுறற் கண்டும் செவியாற் கேட்டும் நாவாலுண்டும் மூக்கான் மோந்தும் மெய்பாற் றீண்டியும் அனுபவிக்கப்படுமைம்புலனும் இவ்வொள்ளிய தொடியை யுடையாள் கண்ணே யுளவாயின, எ-று.

உம்மை - முற்றும்மை. தேற்றேகாரம் வேறிடத்தின்மை விளக்கின்றது. வேறுவேறு காலங்களில் வேறுவேறு பொருள்களாக னனுபவிக்கப்படுவன ஒரு காலத்து இவள் கண்ணே யனுபவிக்கப் பட்டன வென்பதாம். வடநூலார் இடக்கர்ப் பொருளாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் எண்டடக்கிக் கூறப்பட்டன.

(தே - ப - ரை.)—கண்டு - (கண்ணாலே) கண்டும், கேட்டு - (செவியாலே) கேட்டும், உண்டு - (நாவாலே) உண்டும். உயிர்த்து - (மூக்காலே) மோந்தும், ஊற்று - (மெய்யாலே) தீண்டியும், அறியும் - அனுபவிக்கப்படுகிற, ஐம்புலனும்—, ஒள் தொடி கண்ணே - இவ் வொளிபொருந்திய வளையையுடையவளிடத்தே, உள - உண்டாயின.

உ. பிணிக்கு மருந்து பிறமன னணியிழை
தன்னேய்க்கு நாதே மருந்து.

[இடந்தலைப்பாட்டிற்கட் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—வாதமுதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு நிதானமாயினவன்றி மாறுபடவிபரீத யுடையனவாம்; அவ்வாறன்றி இவ் வணியிழையினே யுடையாள் தன்னினையபிணிக்கு மருந்துந் தானேயாயினள், எ-று.

இயற்கைப் புணர்ச்சியை நினைந்து முன்வருந்தினேனகலிற் றன்னேயென்றும், அவ் வருத்தத் தமியாளே யிடதத்திற்பட்டுத் தீர்த்தானகலிற் றானே மருந்தென்றுங் கூறினன். இப்பிணியும் எளியவாயவற்றுற் றீரப்பெற்றில மென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

(தே - ப - ரை.)—பிணிக்கு - (வாதமுதலாகிய) பிணிகளுக்கு, மருந்து - மருந்தாவன, பிற - (அவைகளுக்கு நிதானமானவையல்லாமல்) விபரீதமாகிய குணத்தையுடையவையாம்; (அப்படியல்லாமல்), அணி இழை - இவ்வணியினையுடையவள், தன்னேய்க்கு - னலாகிய பிணிக்கு, தானே மருந்து - தானே மருந்துமாயினள்.

நூ. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணு னுலகு.

[நிரதிசய வின்பத்திற்குரிய நீ (இச்சிற்றின்பத்திற் கியைவதால்]
தகாதெனற பாங்கற்குச் சொல்லியது.]

(பரி-ரை) எ-து —ஐம்புலன்களையு நகர்வார்க்குத் தாம்விரும்பு மகளிர் மெல்லியதோளின்கட் டுயிலுந் துயில்போல வருந்தாம லெய்தலாமோ அவற் றைத் துறந்த யோகிகளெய்துஞ செங்கண்மா லுலகம், எ-று.

ஐம்புலன்களையு நுகர்வா னென்னும்பெயர் அவாய்நிலையான்வந்தது. இப் பெற்றித்தாய துயிலேவிட்டுத் தவயோகங்களான் வருந்தவேண்டுதலின், எம் மனோர்க் காகாதென்னுங் கருத்தால் இனிதுகொ லெனருன். இந்திரனுல கென்றுரைப்பாரு முளர்: தாமரைக்கண்ணு னென்பது அவனுக்குப் பெயரன் மையின், அஃதுரையன்மை யறிக.

(தே - ப - ரை.)—(ஐம்புலன்களையும் அனுபவிப்பவர்க்கு), தாம் வீழ்வார் - தாம் விரும்புமகளிரது, மெல தோள் - மெல்லிய தோள்களிடத்து, துயிலின் - (துயிலும்) துயில்போல, தாமரைக் கண்ணன் உலகு - (அவைகளைத் துறந்த யோகிகளால் அடையப் படுவதாகிய) கமலக்கண்ணனது உலகம், இனிது கொல் - வருந்தாம லடையக்கூடுவதோ.

கூ. நீங்கிற் றெறுழ்வ குறுகுங்காற் றண்ணென்னுங்
தீயாண்டுப் பெற்ற ளிவள்

[பாங்கற்கூடி ந் திறுத்தது சொல்லியது]

(பரி-ரை.) எ-து.—தன்னை யகன்றுழ சுடாநிற்கும், அணுகுழிக் குளிராநிற்கும், இப்பெற்றித்தாய தீயை என்சட் டருகுதற்கு இவ ளெல்வுலகத்துப் பெற்ருள், எ-று.

கூடாமுன் நுன்புறுதலின் நீங்கிற் றெறுழ்வ மென்றும், கூடியபினின்பு றுதலிற் குறுகுங்காற் றணனென்னு மென்றும், இப்பெற்றியதோர் தீ உல கத் தில்லையாமாகலின் யாண்டுப் பெற்ருளென்றுங் கூறினன். தன்காமத் தீத் தன்னையே அவடந்தாளாகக்கூறினன், அவளான் அது வெளிப்படுதலின்.

(தே - ப - ரை.)—நீங்கின் - (தன்னை) நீங்கியபோது, தெறும்-சுடாநிற்கும், குறுகுங் கால் - நெருங்கும்போது, தண் என்னும் - குளிராநிற்கும், தீ - (இப்படிப்பட்ட) நியை, (எனக்குத் தருவதற்கு), யாண்டு - எவ்வுலகத்திலே, இவள் பெற்ருள்—.

நிகழ கககம் அதி. புணர்ச்சிமகிழ்தல்

நி. வேட்ட பொழுதி னையவை போலுமே
தோட்டார் கதுப்பினு டோள்.

[தோழியிற்கூட்டத் திறுதிகண் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—மிகவினியவாய பொருள்களோப் பெரிது அவற்றின் மேல் விருப்பங்கூர்ந்த பொழுதின்கண் அவையவை காமேவக் தின்பஞ் செய்யுமாறுபோல இன்பஞ்செய்யும், எப்பொழுதும் புணரினும், பூலினே யணிந்த தழைந்த கூந்தலினையுடையா டோள்கள், எ-று.

தோடு-ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடக் தலைப்பாடு, பாங்கற்கூட் டத்துக்கண் முனனரே சிகழ்ந்திருக்கப் பின்னரும் புதியவாய் நெஞ்சம்பிணித் தலின், அவ்வாறாமைபற்றி இவ்வாறு கூறினுன். தொழிலுவமம்.

(தெ - ப - ரை.)—(எப்பொழுது பெற்றும்கூடினும்), தோடு ஆர் கதுப்பினுள் - மலராணிறைந்த கூந்தலையுடைய வளது, தோள்-தோள்கள், வேட்ட பொழுதின - (மிகவும் இனிய பொருள்களைப் பெற) விரும்பியபொழுது, அவை அவை போலுமே - அவ்வப் பொருள்கள் போல் வந்து (இன்பஞ்செய்யும்).

கூ. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—தன்னேப்பெரிது வாடிய என்னுயிர் பெற்றுறுந் தோறுந் தளிர்க்கும்வகை தீண்டுதலான், இப்பேதைக்குத் தோள்கள் தீண்டப் படுதோ றமிழ்தினுற் செய்யப்பட்டன, எ-று.

ஏதுவாகலாற தீண்டல் அமிழ்திற்கு மெய்திற்று. வாடிய வுயிரைத் தளிர்ப்பத்தலபற்றி, அவை யமிழ்தி னியன்றன வென்ருன். தளிர்த்தல்-இன் பத்தாற் ரழைத்தல்.

(தெ - ப - ரை.)—உயிர் - (தன்னேப்பெரிதுவாடிய என்) உயிர், உறுதோறு - (பெற்ற) உறுந்தோறும், தளிர்ப்ப - தளிர்க் கும்படி, தீண்டலால்—, பேதைக்கு - இம்மங்கைக்கு, தோள் - தோள்கள், அமிழ்தின் இயன்றன - (தீண்டப்பட்ட) அமிழ்தி னுலே செய்யப்பட்டன.

எ. தம்மி லிருந்து தமதுபாக் தின்றற்ரு
லம்மா வரிவை பூம்பு

[இவனை நீவரைந்துகொண்டு உலகோர் தம்மில்லிருந்து தமதுபாத்
துண்ணுமில்லறத்தோடு படல்வேண்டுமென்ற
தோழிக்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—அழகிய மாமை நிறத்தையுடைய அரிவையது முயக்கம் இன்பம் பயத்தற்கட் டமக்குரிய வில்லின் கண்ருந்து உலகோர் தந்தாளான் வந்தபொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்கட்குப் பகுத்துத் தங்கூற்றை யுண்டாற்போலும், எ-று.

தொழிலுமைம். இல்லறஞ்செய்தா லெதுந் துரிசகத்தின்பம் எனக்கிப் புணர்சகியே தருமென வரைவுடன்படான் கூறியவாருயிறறு.

(தே - ப - ரை.)—அம் மா அரிவை முயக்கு - அழகிய மாமை நிறத்தையுடைய மாதின்கண் புணர்ச்சியானது, (இன்பந்தருதலில்), தம் இல் இருந்து - தமக்குரிய மனையிலிருந்து, தமது - (உலகோர்) தம்முயற்சியால் வந்த பொருளை, பார்த்து - (தென்புலத்தார் முதலாகிய ஐவர்க்கும்) பகுந்துகொடுத்து, உண்டது அற்று - (தமது பங்கை) உண்பதுபோல் (இன்பஞ்செய்கின்றது).

அ. வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

[ஒத்தவன்புடைய நமதருமைபோலுதும்மிடைக் முயக்கமே
இனியதென வரைவுகடாய தோழிக்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நீசொல்லுகின்றதொகுதும் ஒருபொழுது கெகிழாமையிற் காற்றுலிடையறுக்கப்படாத முயக்கம ஒருவரையொருவர் விழைவாரிருவர்க்கு மினிதே, எ-று.

முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. எகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஈண்டு இருவர்ல்லே, ஒன்மையான் இவ்வொவ்வாதென்பது கருத்து. களவிற் புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன்படான் கூறியவாறு.

(தே - ப - ரை.)—(நீசொல்லுகின்ற தொகுதும்). வளி இடை போழப்படா - (ஒருபொழுதும் கெகிழாமையால்) காற்றால் இடையறுக்கப்படாத, முயக்கு - புணர்ச்சியானது, வீழும் இருவர்க்கு - (ஒருவரையொருவர்) விரும்புகிற இருவர்க்கும், இனிதே - இனிதேயாம்.

கூ. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

[கரத்தல் வேண்டாமையின் இடையறவில்லாதகூட்டமே இன்பய
றுடைத்தென வரைவுகடாவியாட்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—புணர்ச்சி யினிதாதற்பொருட்டு வேண்டுதாய ஐட லும் அதனையளவறிந்து நீங்குதலும் அதன்பி னிகழ்வதாய வப்புணர்ச்சிதானு மென வியைபன்றே வரைந்துகொண்டு காமத்தை யிடைவிடாதெய்தியவர் பெற்ற பயன்கள், எ-று.

ஆடவர்க்குப் பிரிவென்பதொன் றுளதாயன்மேலும் அதுதான் பரத்தை யர்மாட்டாதலும் அதனையறிந்து மகளிர் சூடிகிற்றலும் அல்லூடலைத் தவறு செய்தவர் தாமே தந்தவறின்மைகூறி நீக்கலும் பின்னுமவ்விருவரும் ஒத்த வன்பினராய்க் கூடலுமன்றே முனவரைந்தெய்தினர் பெற்றபயன் ; அப் பயன் இருதலைப்புள்ளி னேருயிராய உழுவலன்புடைய வெமக்கு வேண்டா வென அவ்வரைந்தெய்தலை யிகழ்ந்து கூறியவாறு.

(தே-ப-ரை.)—ஊடல் - (புணர்ச்சி இனிதாதற்பொருட்டு வேண்டும்) ஊடலும், உணர்தல் - (அதனை அளவறிந்து) நீங்குதலும், புணர்தல் - (அதன்பின் உண்டாகின்ற) அப்புணர்ச்சியும் என்கிற, இவை - இவையல்லவா, காமம் கூடியார்-(விலாகஞ் செய்து கொண்டு) காமத்தை இடைவிடா தடைந்தவர், பெற்ற பயன் - பெற்றபயன்கள்.

கo. அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு

[புணர்ந்துடன்போகின்றலின் றன்னுள்ளோ சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நூல்களானும் நுணுகுணர்வானும் பொருள்களை யறியவறிய முன்னையறியாமை கண்டாற்போலக் காணப்படாநின்றது சிவந்த விழையினையுடையாளை இடைவிடாது செறியச்செறிய இவ்வளமாட்டுக் காதல், எ-று.

களவொழுக்கத்திற் பலவிடை யீடுகளா னெய்தப்பெறுது அவாவுற்றுன் இது பொழுது கிடைத்தாமாக வெய்தப்பெற்றமையின், செறிதோறுமென்றுன். அறிவிற் கெல்லையின்மையான் மேன்மேலறியவறிய முன்னையறிவு அறி யாமையாய் முடியுமாறுபோலச் செறிவிற் கெல்லையின்றி மேன்மேற் செறியச் செறிய முன்னைச்செறிவு செறியாமையாய் முடியாநிற்கின்றதெனத் தன்னு ராமை கூறியவாறு. இப்புணர்ச்சிமகிழ்தல் தலைமகட்கு முண்டேனும் அவண மாட்டுக் குறிப்பானிகழ்வதல்லது கூற்று னிகழாமையறிக.

(தே-ப-ரை.)—செறி தோறும் - புணரப்புணர, சேயிழை மாட்டு - செம்பொன் ஆபரணத்தையுடைய இவளிடத்து, காமம் - காதல், அறிதோறு - (நூல்தளாலும் நுட்பவறிவாலும் பொருள்

களை) அறியவறிய, அறியாமை - (முன்னே) யறியாமை, கண்டற்று-காணப்படுதல்போலே காணப்படுதி

ககஉ-ம் அதிகாரம்—நலம்புனைந்துரைத்தல்.

அஃதாவது தலைமகனை தலைமகளதைப் புனைந்துசொல்லியது. இது புணர்ச்சிமகிழ்ந்திரு கிழவதாகலின், புணர்ச்சிமகிழ்தலின்பின் வைக்கப்பட்டது.

க. நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்பரீர் யாம்வீழ் பவள்

[இயற்கைப்புணர்ச்சி யிருதிக்கட் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து.—அனிச்சப்பூவே வாழ்வாயாக, மென்மையால் நீயெல் லாப்பூவினு நல்லவியற்கையையுடையை, அவ்வணமாயினும் எம்மால் விரும் பப்பட்டவள் நின்னினுமெல்லிய வியற்கையையுடையள், எ-று.

அனிச்சம்—ஆகுபெயர். வாழியென்பது உடம்பாட்டுக்குறிப்பு. இனி யாதே மெல்லியனென்னுந் தருக்கினை யொழிவாயாக வென்பதாம். அது பொழுதுற்றறிந்தாளுகலின், ராத்தினினிலையையே பாராட்டினாள். இன் னீரென்று பாடமோதுவாரு முளர்.

(தே - ப - ரை)—அனிச்சமே - அனிச்சப்பூவே, வாழி - வாழ் வாயாக; நல் நீரை - (மென்மையாலே நீ எல்லாப்பூவினும்) நல்ல குணமுடையை; (அப்படியி நுந்தாலும்). யாம் வீழ்பவள் - எம் மால் விரும்பப்பட்டவள், நின்னினும் மெல் லீரள் - உன்னிலு மெல் லிய குணத்தையுடையள்.

உ. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

[இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து.—நெஞ்சே யானேகாணப்பெற்ற இவள்கண்களைப்பல ராலுங் காணப்படும் பூக்கள் ஒக்குமென்று கருதி தாமரை, குவளை, நீலமுத லிய மலர்களைக்கண்டால் மயங்காகின்றாய், நின்னறிவிருந்தவாறென்? எ-று.

மையாத்தல்-ஈண்டு ஒவ்வாதவற்றை யொக்குமெனக்கோடல்; இறுமாத் தல் செம்மாந்த லென்பனபோல வொருசொல். இயற்கைப்புணர்ச்சி நீக்க முதலாகத் தலைமகள் கண்களைக் காணப்பெறுமையின் அவற்றை டொருபுடை

திருக்குறள் அதிகாரம் நலம்புனைந்துரைத்தல்

யொக்கு மலர்களைக் கண்டிழியெல்லாம் அவற்றின்கட்காதல் செய்துபோக் தான், இதுபொழுது அக்கண்களி னலமுழுதுந் தானே தமியாளே யிடத் தெதிர்ப்பட்டறுபவித்தானுகலின், அம்மலர்கள் ஒவ்வாமைகண்டு ஒப்புமை கருதிய நெஞ்சை யிகழ்ந்து கூறியவாறு.

(தே - ப - ரை.)—நெஞ்சே—, இவள் கண் - (யாதொன்காணப் பெற்ற) இவள் கண்களை, பலர் காணும் - பலராலுங்காணப்படுகிற, பூ ஒக்கும் என்று - மலர்கள் ஒக்குமென்று நினைத்து, மலர்காணின் - (காமமை குவளை நீலமுதலாகிய) மலர்களைக் கண்டால், மையாத்தி - மயங்காதொழி; [உனக்கு அறிவிருந்தவிதம் என்ன?]

கூ முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

[கூர்தலுவற்ப பாங்கற்குந் தலைமகன் றலைமகட் குயல்பு கூறியது.]

(பரி-ரை.) எ-து,—வேயபோலுந் தோளினையுடையவட்கு நிறந்தளிர் நிறமாயிருக்கும், பல்லுமுத்தமாயிருக்கும், இயல்பாயகாற்றம் கறுகாற்றமா யிருக்கும். உணக்கண்கள வேலாயிருக்கும், எ-று.

பெயரடையாலும் வினையடையாலும் குறிப்பட்டது. முறி, முறுவலென்பன ஆகு பெயர். முருகவினையாற் கூறினமையின், முன்துணியாயிற்று. நின்னுற் கருதப்பட்டாள் யாயியென்று சேட்படுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியதூஉமாம்.

(தே - ப - ரை.)—வேய் தோளவட்கு - முங்கில் போலுந் தோள்களையுடையவளுக்கு, மேனி - நிறம், முறி - தளிர்நிறமாயி ருக்கும்; முறுவல் - பல்லானது, முத்தம் - முத்தாயிருக்கும்; காற் றம் - (இயற்கை) வாசனையானது, வெறி - கல்லவாசனையாயிருக் கும்; உண்கண் - (மை) உண்டகண்கள். வேல் - வேல்களாயிருக் கும்.

சு. காணிற்குவளை கவிழ்ந்து நிலனேக்கு
மாணிழை கண்ணெறிதோ மென்று.

[பாங்கற்கூட்டத்துச்சென்ற சார்தலுறுவான் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—குவளைப்பூக்கடாமம் காண்டற்குரிமையிலை புடைய வையின் மாண்டவிழையினை யுடையாள்கணைகளை யாமெவ்வே மென்றதருதி அக்காணுரிமைஞ்சி நிலத்தினேநோக்கும், எ-று.

பண்பாளனேயன்றித் தொழிலாளு மொவ்வாதென்பான் காணினென்றும் கண்டால் அவ்வொவ்வாமையால் காணுடைத்தாமென்பது தோன்றக் கலிழ்ந்தென்றுங் கூறினான். காட்சியுகாணுகின்மையிற் செம்மாந்து வாளேகோக்கின வென்பதாம்.

(தே - ப - ரை)—குவளை - குவளைமலர்கள், காணின் - பார்க்கிறதொழிலே உடையனையாயிருந்தால், மாண் இழை நண் - மரபட்சிமைப்பட்ட ஆபரணங்களே யுடையவளது கண்களே ஒவ்வோம் என்று - நிகரேமென்றுநினைத்து, கலிழ்ந்து - (அந்தாணத்திறலே) தலைகுனிந்து, நிலம் - நிலத்தை, நோக்கும் - பார்க்கும்.

நி அனிச்சப்பூக் காலினாள் பெய்தா னுயிர்ப்பிற்கு
நல்ல படாஅ பறை.

[பெருந்தேவி பூவணி பாடு கொல்லியாது]

(பரி-ரை) எ-து,—இவள் கன்மென்னைகரு ராது அனிச்சப்பூவை முகிழ் களாயாது சூடினுள் இனி யிவளிடைக்கு கலவு பறைகளொலியா, எ-று.

அம்முகிழ்ப்பாரம் பொருமையின் இடைமுரியும், முரிந்தால் அதற்குச் செத்தார்களுரிய செய்ராபறையே படவேதென்பதாம் *மக்கட்குரிய சாகாகாடு பறைபடுதலும் இலக்கணைக்குறிப்பால் நுகப்பின்மேலேறப்பட்டன.

(தே - ப - ரை.)—(இவள் தனமென்மை நினையாமல்). அனிச்சப்பூ - அனிச்சமலரை, காலினாள் - தாள் களையாளாகி, பெய்தாள் - சூடினுள்; நுகர்ப்பிற்கு - (இனியிவள்) இடைக்கு, நல்ல - நல்லவையாகிய, பறை - பாறைகள், படா - ஒலியா

சு மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்

[இரவுக்குறிக்கண் மதிகண்டு சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—வானகதுமீன்கள் வேறுபாடு பெரிதாகவும் கம்மதியினையும் எம்மடந்தை முகத்தினையும் இதுமதி இதுமுகமென் றறியமாட்டாது தங்கிலை-யினின்றுங் கலங்கித் திரியாகின்றன, எ-று.

ஒரிடமுது நில்லாது எப்பொழுது மியகுதல்பற்றிப் பதியிற்கலங்கிய வென்றான். வேறுபாடு வருகின்றபாட்டாற் பறப்படும். இனி யிரண்டனையும் பதியிற்கலங்காத மீன்களறியுமல்லது கலங்கின மீன்கள் அறியாவென்று சைப்பினு மமையும்.

* இவ்விலக்கணையடிபாரத தோனறியகுறிபடை வடமூலார இலக்கணமூலத் தொனி யென்பா.

இடஅ கஉம் அதி. நலம்புனைந்துரைத்தல்

(தே - ப - ரை.)—மீன் - தாரைகைகள், (வேறுபாடு பெரிதாகவும்), மதியும் - (கமத) சந்திரனையும், மடைக்தை முகனும் - (எமது) மாதமுகத்தையும், அறியா - (இதுசந்திரன் இது முக மென்று) அறியமாட்டாமல், பகியின் - (தன்) நிலைபினின்றும், நெய - கலங்கித்திரியாநின்றன

எ. அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

[இருவுமது.]

(பரி-ரை.) எ-து,—அம்மீன்கள் அவ்வனங் கலங்குதற்குக் காரணம்யாது மூன்குறைந்தவிடம் வந்துநிரம்பியே விளங்குமதிகட்போல இம்மாதர் முகத்து மறுவுண்டோ, எ-று.

இடம் - கலே. மதிக்கென்பது வேற்றுமை மயக்கம். நேய்த்லும் வளர்த லும் மறுவுடைமையு மின்மைபற்றி வேறுபாடறியலாயிருக்க அறிந்திலவென விகழ்ந்து கூறியவாறு.

(தே - ப - ரை.)—(அத்தாரகைகள் அப்படி கலங்குதற்குக் காரணம் யாது); அறுவாய் நிறைந்த - முன்குறைந்தகலே வந்து நிறைந்த, அவிர்-விளங்குகிற, மதிக்குப்போல - சந்திரனிடத்துப் போல, மாதர் முகத்து - இம்மாதர் முகத்தினிடத்து, மறு-களங்க மானது, உண்டோ - உளதோ, [இல்லை என்றபடி].

அ மாதர் முகம்போ லொளிவிட வல்லேயேற்
காதலே வாழி மதி.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—மதியே! வாழ்வாயாக. இம்மாதர்முகம்போல யான் மகிழும்வகை ஒளிவீசவல்லையாயின் நீயுமென்காதலே யுடையையாதி, எ-று.

மறுவுடைமையின் அதுமாட்டாய் மாட்டாமையின் என்னும் காதலிக்க வும் படாயென்பதாம். வாழியென்பது இகழ்ச்சிக்குறிப்பு.

(தே - ப - ரை.)—மதி - சந்திரனே ! வாழி - வாழ்வாயாக ; மாதர் முகம்போல்—, ஒளிவிடவல்லேயேல் - (நான்மகிழும்படி) ஒளி வீசவல்லாயாகில், காதலே - (நீயும் என்னால்) இச்சிக்கப்படுதலே யுடையையாவாய்

கூ. மலரன்ன கண்ணெண் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—மதியே! இம்மலர்போலுங் கண்ணினையுடையாண் முகத்தை நீயொக்கவேண்டுதியாயின் இதுபோல யான்காணத் தோன்று, பலர்காணத் தோன்றுதொழி.

தானே முகத்தினலமுழுதுங் கண்டனுபவித்தாளுகலின் ஈண்டும் பலர் காணத் தோன்றுலே யிழித்துக் கூறினுன். தோன்றின் வினைக்கவ்வொப் புண்டாகாதென்பதாம்.

(தே - ப - ரை.)—மதி - சக்திரனே! மலர் அன்ன கண்ணாள் - இம்மலர்போலுங் கண்களையுடையவளது, முகம் - முகத்தை, ஒத்தி ஆயின் - ஒக்க வேண்டுவையாகில், (இதுபோல்யான்காணத் தோன்று), பலர் காணத் தோன்றல் - பலர்காணத் தோன்றுதே.

கo. அனிச்சமு மன்னத்தின் ரூளியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

[உடன்பொருத்தைத்த தோழிக்கு அதனதுமைகூறி மறுத்தது.]

(பரி-ரை.) எ-து,—உலகத்தாரான் மென்மைக்கெடுக்கப்பட்ட அனிசசப் பூவும் அன்னப்புள்ளின் சிறகுமாகிய விரண்டும் மாதரடிக்கு நெருஞ்சிப்பழம் போல வருத்தஞ்செய்யும், எ-று.

மூள் வலிதாத லுடைமையிற பழமென்றுன். இம்மென்மைத்தாயவடி * "பாத்தியன்ன குடுமிக் கூகை" களோயுடைய வெஞ்சாதை யாங்ஙனங் கடக்குமென்பது குறிப்பாற் பெறப்பட்டது. செம்பொருளையன்றிக் குறிப்புப் பொருளும் அடிகல னழ்யாமையாகலின், இதுவு மிவ்வதிகாரத்த தாயிற்று.

(தே - ப - ரை.)—(உலகத்தாரால் மென்மைக்கு எடுக்கப் பட்ட), அனிசசமும் - அனிச்சமலரும், அன்னத்தின் தூவியும் - அன்னப்பறவையினிறகும், மாதர் அடிக்கு - மாதர் பாதத்திற்கு, நெருஞ்சிப் பழம் - நெருஞ்சிப் பழம்போல் (வருத்தஞ்செய்யும்).

ககடம் அதிகாரம்—காதற்சிறப்புரைத்தல்.

அஃதாவது தலேமகன் தன்காதன் மிகுதிகூறலும், தலேமகள் தன்காதன் மிகுதிகூறலுமாம். இது புணர்ச்சியுமதலனும்பற்றி நிகழ்வதாகலின், புணர்ச்சி மகிழ்தல் நலம்புனைந்துரைத்தல்களின்பின் வைக்கப்பட்டது.

க. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி*
வாலெயி றூறிய நீர்

---

* அகநானூறு களிற்றியானை நிரை, இ.

நிசெ ககநூம் அதி. காதற்சிறப்புரைத்தல்

[இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கட் டலைமகன் றன்னையப் புணர்த்தியது.]

(பரி-ரை.) எ-து,—இம்மெல்லிய மொழியினை யுடையாளது வாலிய வெயிறூறியநீர் பாலுடனே தேனைக்கலந்த கலவைபோலும், எ-று.

கலக்கதற்றென்பது விகாரமாயிற்று, கலக்கப்பட்ட தென்றவாறு. பாலொடு தேனென்றவதனால் அதன்சுவைபோலுஞ் சுவையினையுடைத் தென்பதாயிற்று. எயிறூறியவென இடத்துநிகழ்பொருளின் மெழிலி இடத் தினைமேனின்றது. வேறுவே றறியப்பட்ட சுவையவாய பாலுந்தேனுங்கலந் தழி அக்கலவை இன்னதென்றறியலாகாத இன்சுவைத்தாமாகலின், அது பொருளாகிய நீர்த் மெய்ஞ்ஞவிக்க.

(தெ - ப - ரை.)— பணி மொழி- இம்மெல்லிய சொல்லியுடை யவளது, வால் எயிறு ஊறிய நீர் - வெண்பல்லூறிய நீரானது, பாலொடு தேன் கலந்தது அற்று - பாலுடனே தேனைக்கலந்த கலவைபோலும்

ஒ. உடம்போ டியிரிடை யென்னாந் றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு.

[பிரவச்சங் கூறியது.]

(பரி-ரை) எ-து,—உடம்போடியிரிடையுளவாய நட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய இம்மடந்தையோடு எம்மிடையுளவாய நட்புக்கள், எ-று.

என்னெனப் பன்மையாற்கூறியது, இரண்டுந் தொன்றுதொட்டு வேற் றுமையின்றிக் கலந்துவருதல். இன்பதுன்பங்களொக்கவனுபவித்தலின்,இன்றி யமையாமை யென்றவாறை நோக்கி. பெட்பப்புணர்ச்சி யாலவன் அது பொழுது உணர்ச்சியிலளாகியாள் பன்னுடையளாமன்றே, ஆயவழி இவன் யாவன்கொ லெனவும் எகுகண்புடையன்கொ லெனவும் இன்றியினைத் தூலப்பெய்தல்கூடுங்கொ லெனவும் அவண்மனத்தின்கணைகழும், அக்கிகழ் வனவற்றைக் குறிப்பானறிந்து அவைதீர்க் கூறியவாறு என்னையென்று பாட மோதுவாருமுளர்.

(தெ - ப - ரை.)—மடந்தையோடு - இம்மாதோடு, எம்மிடை - எம்மிடத்து உண்டாகிய, நட்பு - நட்புகள், உடம்போடு உயிரிடை - உடம்போடுயிரிடத்தி, என்ன - எப்படிப்பட்டவை, அன்ன - அப்படிப்பட்டனவையாகும்.

ஙூ. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்.

[இடந்தலைப்பாட்டின்கட் டலைமகனிக்கத்துச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—என்கண்ணிற் கருமணியின் கணுறையும் பாவாய், நீ யங்குகின்றம் போதருவாயாக; போதராதிருத்தியாயின், எம்மால் விரும்பப் பட்ட திருநுதலே யுடையாட்கு இருக்க விடமில்லேயாம், எ-று.

யான் காணு தமையாமையின் இவள் புறத்துப்போகாமற்பாலளன்றி என்கண்ணு ளிருக்கற்பாலள், இருக்குங்கால் கின்னேடொருங்கிருக்க இடம் போதாமையின் கின்னிலுஞ் சிறந்த விவட்கு அவ்விடத்தைக்கொடுத்து நீ போதுவாயாக வென்பதாம்.

(தே - ப - ரை.)—கருமணியில் பாவாய் - (என்கண்ணில்) கரு மணியிலிருந்கின்றபாவையே! நீ—, போதாதாய் - (அவ்விடம் விட்டுப்) போவாயாக; (போகாதிருப்பாயாகில்), யாம் வீழும் - எம்மால் விரும்பப்படுகின்ற, திருநுதற்கு - அழகிய நெற்றியையுடைய வளுக்கு, இடர்—, இல்லே - இல்லேயாம்

ச. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்னு னீங்கு மிடத்து.

[பகற்குறிக்கட் புணர்ந்துநீங்குவாற் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—தெரிந்த விழையினே யுடையாள் எனக்குப் புணரு மிடத்து உயிர்க்குடம்போடு கூடிவாழ்தல்போலும்; பிரியுமிடத்து அதற்கு அதனி னீங்கிப்போதல் போலும், எ-று.

எனக்கென்பதும் புணருமிடரென்பதும் அவாய் நிலேயான் வந்தன. வாழுங்காலத்து வேற்றுமையின்றி வழிநிற்றலானும், சாங்காலத்து வருத்தஞ் செய்தலானும், அவற்றை அவள்புணர்வு பிரிவுகட் குவமையாக்கினுன்.

(தே - ப - ரை.)—(எனக்கு). ஆய்இழை - ஆராய்ந்து கொள் ளப்பட்ட ஆபரணத்தை யுடையவர், (புணருமிடத்து), உயிர்க்கு—, நீவாழ்தல் அன்னள் - (உடம்போடுகூடி) வாழ்தல்போலாகின்றாள்; நீங்கும்இடத்து - பிரியுமிடத்து, அதற்கு - அவ்வுயிர்க்கு, சாதல் அன்னள் - அவ்வுடம்பு நீங்கிச்சாதல் போலாகின்றாள்.

ஞ. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பரா
ளெள்ளமர்க் கண்ணாள் குணம்.

[ஒருவழித்தணந்துவந்த தலைமகன் நீயிப்படிதணந்தாயென்மை யுள்ளியுமறிதிரோவென்ற தோழிக்குச் சொல்லியது]

(பரி-ரை.) எ-து,—ஒள்ளியவாய் அமைச்செய்யுங் கண்ணினேயுடை யாள் குணங்களே யான்மறந்தேனுயின், நினேப்பேன், ஒருபொழுதும் மறத் தலேயறியேன், ஆதலான் நினேத்தலேயுமறியேன், எ-று.

மன்—ஒழியிசைக்கண் வந்தது. குணங்கள்—நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின. இத்துணையும் தலைமகனகூற்று; மேற்றலைமகள் கூற்று

(தெ - ப - ரை)—யான்—, ஒள் அமர் கண்ணுள் குணம்-ஒ யினவாகிப் போர்செய்கிற கண்களையுடையவளது குணங்களை, மறப் பின் - மறந்தேனுயின், உள்ளுவன் - நினைப்பேன்; மறப்பு அறி யேன் - (ஒருபோதும்) மறத்தலறியேன்; (ஆகலால நினைத்தலுமறி யேன்).

ஈ. கண்ணுள்ளிற் போகா நிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காதலவர்.

[ஒருவழித்தணப்பின்கட் டலைமகனைத் தோழி இயற்பழிக்குமென்றஞ்சி அவளைக்கட்டித் தன்னுள்ளே சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—தாங்காணுமைபற்றிச் சேய்மைக்கட்போயினுரென்று கருதுவார் கருதுக; எம்முடையகாதலர் எங கணணகத்தினின்றும் போகார்; யாமறியாதிமைத்தேமாயின் அதனுல் வருந்துவதுஞ் செய்யார்; ஆகலாற் காணப்படாநுண்ணியர், எ-று.

இடைவிடாத நினைவின்முதிர்ச்சியான் எப்பொழுதும் முன்னேதோன்ற லித் கண்ணுள்ளிற போகாரென்றும், இமைத்தழியும் அது கிற்றலான் இமைப் பிற் பருவாரென்றுங் கூறினுள்.

(தெ - ப - ரை)—(காம்காணுமைபற்றித் தூரத்திலே போயினு ரென்று நினைப்பவர் நினைக்கக்கடவர்), எம் காதலவர்—, கண்ணுள் ளில் - எமது கண்ணுள்ளே நின்றும், போகார்—; இமைப்பின் - (அறியாமல்) இமைத்தேமாயின், பருவரார் - (அதனுல்) வருந்து வதுஞ் செய்யார்; (ஆதலாலே), நுண்ணியர் - (காணப்படாத) நுண்ணியர்.

எ. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து —காதலர் எப்பொழுது மெங்கணணினுள்ளாராகலாற் கண்ணினே யுஞ்சனதத்தா லெழுதுவதுஞ் செய்யேம், அத்துணைக்காலமும் அவர் மறைதலையறிந்து, எ-று.

இழிவுதெரிப்பும்மை மாற்றப்பட்டது. காப்பாக்கென்பது வினைப்பெயர். வருகின்ற வேபாக்கென்பதுமது. யாவினைடயிடின்றிக் காணின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னையென்பது குறிப்பெசம்.

(தே - ப - ரை)—காதலவர்—, கண் உள்ளார்ஆக - (எம்) கண்ணுள் இருக்கின்றாராகலால், கண்ணும் எழுதேம் - கண்ணினை (மையினால்) எழுதுவதுஞ் செய்யேம்; கரப்பாக்கு அறிந்து - (அவ் வளவுகாலமும் அவர்) மறைதலை அறிந்து.

அ. நெஞ்சுத்தார் காதலவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காதலர் எங்நெஞ்சினுள்ளாராகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலையஞ்சாநின்றேம் ஆவர் அதனுள் வெய்துறலையறிந்து, எ-று.

எப்பொழுதும் என்னெஞ்சின்கண் நீங்காதிருக்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமா றென்னையென்பது குறிப்பெச்சம்.

(தே - ப - ரை)—காதலவர்—, நெஞ்சுத்தார் ஆக - நெஞ்சு நீங்காதிருக்கின்றாராதலால், (உண்ணும்போது), வெய்து உண்டல் - சூடுள்ளதாக உண்ணுதற்கு, அஞ்சுதும் - அஞ்சாநின்றேம், வேபாக்கு அறிந்து - (அவர் அதனுள்ளே) சூடுறுதலை அறிந்து.

கூ இமைப்பிற் கரப்பாக் கறிவ ரிமைத்திற்கே
யேதில ரென்னு மிவ்வூர்.

[வரைவிடைவைத்து பிரிவின்கட் டலைமகளாற்றதற்பொருட்டுத்தோழி தலைமகளையியற்பழித்தவழி அவளியற்படமொழிந்தது]

(பரி-ரை.) எ-து,—என்கண்ணிமைக்குமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலையறிந்து இமையேன், அவ்வளவிற்கு அவரைத் துயிலா கோய்செய்தார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர், எ-று.

தன் கருத்தறியாமைபற்றிப் புலந்து சொல்லுகின்றாளாகலின், தோழியை வேறுபடுத்து இவ்வூரென்றாள். ஒருபொழுதும் பிரியாதவரைப் பிரிந்தாரென்று பழிக்கற்பாலையலே லென்பதாம்.

(தே - ப - ரை.)—இமைப்பின் - (என்கண்) இமைக்குமாயின், கரப்பாக்கு அறிவல் - (உள்ளிருக்கிறகாதலர்) மறைதலறிந்து இமையேன், அஃதுத்திறமே - அவ்வளவுக்கே, இவ்வூர்—, ஏதிலர் என்னும் - (தூங்காது கோய்செய்தார்) அன்பிலர் என்னும்.

கo. உவக்குறைவ ருள்ளத்து ளென்று மிகற்துறைவ
ரேதில ரென்னு மிவ்வூர்.

[இதுவுமது]

(பரி-ரை.) எ-து,—காதலர் எஞ்ஞான்றும் என்னுள்ளத்துள்ளே யுவந் துறையாநிற்பர், அதனையறியாது அவரைப் பிரிந்துறையாரின்றூர் அன்பில ரென்று சொல்லாநிற்கும் இவ்வூர், எ-று.

உவந்துறைவரென்றதனால் அன்புடைமைகூறினுள். பிரியாமையும் அன்பு முடையாரை இலரெனப் பழிக்கற்பாலையல்லை யென்பதாம்.

(தே - ப - ரை.)—(காதலர்), உள்ளத்துள் - மனதில், எஞ் ஞான்றும் - எப்போதும், உவந்து - மகிழ்ந்து, உறைவர் - வாசஞ்செய்யா நிற்பர் ; (அதனையறியாமல்). இவ்வூர்—, இகழ்ந்து உறைவர் - பிரிந் திராநின்றூர், எனில் எஞ்ஞான்றும்-அன்பிலரொன்று(அவரைச்சொல்லு கின்றன்று).

ககச-ம் அதிகாரம்—நாணுத்துறவுரைத்தல்.

அஃதாவது கேட்படுக்கப்பட்டு ஆற்றுளுய தலைமகன் தோழிக்குத் ஞண்டுறவுரைத்தலும், அதற்றெளிந்தபிற்றை தலைமகள் அவட்குத் தன் ஞண்டுறவுரைத்தலுமாம். இது, காதனமிக்குழி நிகழ்வதாகலின், காதற்சிறப் புரைத்தலின் பின் வைக்கப்பட்டது.

க. காம முழந்து வருந்தினர்க் கேம
மடலல்ல தில்லை வலி.

[கேட்படுக்கப்பட்டு ஆற்றுளுய தலைமகன் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—ஆரியரான மகளிரோடு காமத்தையனுபவித்துப் பின் னதுபெறாது துன்புற்ற வாடவர்களுக்குப் பண்டும் எமமாய்வருகின்ற மடலல் லது இனியெனக்கு வலியாவதில்லை, எ-று.

எமமாதல் அத்துன்பநீங்கும்வகை அவ்வனுபவத்தினைக் கொடுத்தல். வலி—ஆகுபெயர். பண்மொடவராயினர் இன்பமெய்தி வருகின்றவாறுநிற்க நின்னையதற்குத் துணையென்று கருதிக் கொன்னேமுயன்ற யான் இது பொழுது அல்லாமையை யறிந்தேனுகலான் இனியானுமவ்வாற்றான் அதனை யெய்துவலென்பது கருத்து.

(தே - ப - ரை)—காமம் உழந்து - (அரிய மகளிரோடு) காமத்தை அனுபவித்து, (பின் அதுபெறாமல்), வருந்தினர்க்கு - துன்பமடைந்த ஆடவர்க்கு, எம மடல் அல்லது - (அத்துன்ப நீங்கும்வகை அவ்வனுபவத்தைத் கொடுக்கும்) காப்பாய் வருகின்ற

மடன்மாவல்லது, [பணைமடலாலே செய்யப்பட்ட குதிரை என்ற படி], வலி - வலிபது, இல்லை - (இனி எனக்கு) இல்லை.

உ. நோனை வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து.

[நாணுடையநுமக்கு அது முடியாதேனு மடல்விலக்கலுற்றுத்
தோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—அவ்வருத்தத்தினைப் பொறுகவுடம்புமுயிரும் அதற் கேமமாய மடன்மாவினையுங் கருதாநின்றன, அதனை விலக்குவதாய நாணினையகற்றி, எ-று.

வருத்தினர்க்கென மேல்வந்தமையிற் செயப்படுபொருள் ஈண்டுக் கூறாயினர். மடல—ஆகுபெயர். நீக்கி நிறுத்தென்பது ஒருசொன்னீர்மைத்து. அறிவுகிறையோர்ப்புக் கடைப்பிடிமுதலிய முன்னை நீங்கவு நாணீங்காதின்றது, அதுவு மிதுபொழுது நீங்குமென்பான், உடம்புமுயிருமென்றான். அவைதாக் தம்முணீங்காமற்பொருட்டு மடலேறுமென்றது அவள் தன்னுற் றுமையறிந்து கடிதிற்குறைகோக்குணேக்கி.

(தெ - ப - ரை.)—நோனை - (அவ்வருத்தத்தை) பொறுத்த, உடம்பும் உயிருமும்—, மடல் ஏறும் - (அதற்குக்காப்பாகிய மடன் மாவை) ஏறுகின்றன, நாணினை - (அதனை விலக்குவதாகிய) நாணத்தை, நீக்கி நிறுத்து - ஒழித்துவிட்டு

ஈ. நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்ற பேறு மடல்.

[நாணேயன்றி நல்லாண்மையுமுடைமையின் முடியாதென்றுரைத்
தோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நாணும் மிக்கவாண்டகைமையும் யான் பண்டுடை யேன்; அவை காமத்தானீங்குதலான், அக்காமமிக்கா பேறும் மடலினை யின் றுடையேன், எ-று.

நாண்—இழிவாயினசெய்தற்கண் விலக்குவது. ஆண்மை—ஒன்றற்குந் தளராது நிற்றல். அவை பண்டுள்ளன, இன்றுள்ளது இதுவேயாகலிற் கடி தின் முடியுமென்பதாம்.

(தெ - ப - ரை.)—நாணெடு நல் ஆண்மை - நாணத்தையும் மிகுந்த ஆண்மையையும், பண்டு - முன்னே, உடையேன்—; (அவைகாமத்தால் நீங்குதலால்), காமுற்றார் ஏறு மடல் - காதி

மிகுந்தவரேறுமடலே, இன்று - இப்போது; உடையேன் - உடைய வனுகின்றேன்.

சு காமக் கடும்புன லுய்க்குமே நாணெடு
கல்லாண்மை யென்னும் புணை.

[நாணுகல்லாண்மையுங் காமவெள்ளத்தில் துப்பு புணையாகலின் அதனுல் அவைநீங்கு வனவல்லவே யென்றுட்கொ ண்டு சோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—யான்தன்னைக் கடத்தற்குக் கொண்டநாணும் கல் லாண்மையுமாகிய புணைகளே என்னிற்பிரிக்கதுக காமமாகிய கடியபுனல் கொண்டு போகாகின்றது, எ-று.

அதுசெய்யமாட்டாத எனைப்புனலினீக்குதற்குக டும்புனலென்றுன். இப்புனற்கு அவை புணையாகா, அதனுன் அவை நீக்குமென்பதாம்

(தெ - ப - ரை)—(நான் தன்னைக் கடத்தற்குக்கொண்ட), நாணெடு கல் ஆண்மை என்னும் புணை - நாணமும் கல்லாண்மை யும் ஆகிய புணைகளை, காமம் கடும் புனல் - காமமாகிய கடியவெள்ள மானது, உய்க்கும் - (என்னிற்பிரித்து) கொண்டு போகின்றது.

நி. தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்.

[ஒவ்வாவ்ரமையுங் மடலும் நமக்கெவ்வாறு வர்தனவென்றுட்கொ ண்டு சோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—மாலைப்பொழுதின்க ணனுபவிக்குந் துயரினையும் அதற்கு மருந்தாயமடலினையும் முன்னறியேன், இது பாழுது எனக்கு மாலை போலதொடர்ந்த சிறுவளையினையுடையாடந்தான், எ-று.

காமம் எனைப்பொழுதுகளினு முளதேனும் மாலைக்கண் மலர்தலுடைமை யின் மாலையுழக்குந் துயரென்றும், மடலும் அதுபற்றி வந்ததாகலின் அவ் விழிவும் அவளாற் றரப்பட்டதென்றும், அவடான் நீகூறியதே கூறுயினை மையெனன்பது தோன்றத் தொடலைக் குறுந் தொடியென்றுங் கூறினுன். அப் பெயர் உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த வன்மொழித்தொகை. இவை யவடன்னவாகலின் கின்னுநீக்குமென்பது கருத்து.

(தெ - ப - ரை.)—மாலை உழக்கும் துயர் - மாலைக்காலத்தி அனுபவிக்குந் தன்பத்தையும், மடலொடு - (அதற்கு மருந்தாகிய) மடலன்மாலையும், (முன் அறியேன்); தொடலைக் குறுந்தொடி -

ாலைபோல் தொடர்ந்த சிறிய வளைபலையுடையவள்; தந்தாள் -( )பாழுது) எனக்குத் தந்தாள்.

சு. மடலூர்தல் யாமத்து முள்ளுநீலன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்.

[மடலூரும்போழுது இப்பைத்துங் கழிந்ததென்றுதூ சோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—என்பேதைகாரணமாக என்கண்கள் ஒருகாலுந் துயி லெப்பொருந்தா; அதனால் எல்லாருந் துயிலுமிடையாமத்தும யானிருந்து டலூர்தலையே கருதாநிற்பேன், எ-று.

பேதையென்றது பருவம் பற்றியன்று மடமைபற்றி. இனிச்சாதைமுடிப் து நானே யெனவேண்டா வென்பதாம்.

(தே - ப - ரை.)—பேதைக்கு - பேதையாகிய எனக்கு, (உன் ாது காரணமாக), என்கண் - எனது கண்கள், படல் ஒல்லா - ஒரு ீபாதும்) தூங்குதல் பொருந்தாவாம்; (அதனால்), யாமத்தும் - எல்லாரும் தூங்குகிற) பாதியிரவிலும் மன்ற படல் ஊர்தல் - டன்மாவேறலையே, உள்ளுவேன் - நினைப்பேன்.

எ. கடலன்ன காம முழந்து மடலேறப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

[பேதைக்கெய்காமாட லோல்லாவேனாதுபற்றி அறிவிலாய
மகளிர்மீனும் அஃதுடையராய வாடவரைப்போ லுயிர்பபால
சென்றூட்தூர் சோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—கடல்போலக் கரையற்ற காமநோயினை யனுபவித் தும் மடலூர்தலை செய்யாது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப்போல மிக்க குதியினையுடைய பிறப்பு உலகத்தில்லை, எ-று.

பிறப்பு விசேடத்தால் அவ்வடக்கம் எனக்கில்லையாகாநின்றது, நீயஃதறி என்றியலெனபதாம். இத்துணையுந தலைமகன்கூறது; மேறறலைமகள் கூற்று.

(தே - ப - ரை.)—கடல் அன்ன காமம்உழந்தும்-கடல் போற் றையற்ற காமநோயை அனுபவித்தும், மடல் ஏறு - மடன்மாவேறு தல் (பொறுத்திருக்கிற), பெண்ணின் - பெண் (பிறப்பு) போல், பெருந்தக்கது - மிகுந்த தகுதியுடையபிறப்பு, இல் - (உலகத்தில்) இல்லை.

நிசஅ ககசம் அதி. நாணுத்துறவுரைத்தல்

அ. நிறையரியர் மன்னளிய ரென்னது காம
மறையிறந்து மன்று படும்.

[காப்புச்சிறைமீக்குக் காமம்மே நுகியவழிச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—இவர்க்கையால் காமீதூர்தற் கரியரென்றஞ்சுதல் செய்யாது மிகவுமளிக்கத்தக்காரென் றிரங்குதல் செய்யாது மகளிர்காமமும் அவர்மறைத்தலேக்கடந்து மன்றின்கணணே வெளிப்படுவதாயிருக்கது, எ-று.

என்னதென்பது முன்னுங்கூட்டி மகளிரென்பது வருவிக்கப்பட்டது. எச்சவும்மை விகாரத்தாற றொக்கது. மன்றென்பது தந்தை தன்னையரை நோக்கி உலகத்துப் பெண்பாலார் காமத்தியல்பு கூறுவாள்போன்று, தன் காமம் பெருகியவாறும் இனி யறதொடுநிற்றல் வேண்டுமென்பதுங் குறிப் பாற் கூறியவாறுயிற்று.

(தே - ப - ரை)—(இவர்), நிறை அரியர் (என்னது) - நிறை யால் (நாம் மேற்கொள்ளுதற்கு) அரியரென்று அஞ்சாமலும், மன் அளியர் என்னது-மிகவும் அளிக்கத்தக்கவரென்று இரங்காமலும், காமம் - (மகளிரது) காமமும், மறை இறந்து - (அவர்) மறைத் தலைக் கடந்து, மன்று படும் - சபையிடத்து வெளிப்படுவதாயிருந்

கூ. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—யான் முன்னடங்கி நிற்றலான் எல்லாரு மென்னை யறிதலிலர், இனியவ்வாறு நில்லா நியானே வெளிப்பட்டறிவிப்ப லென்று கருதி என்காமம் இவ்வூர் மறுகின்கணணே மயங்கிச் சுழலாநின்றது, எ-று.

மயங்குதல்-அம்பலாதல். மறுகுதல்-அலராதல். அம்பலுமலருமாயிற்று, இனியறத்தொடுநிறறல் வேண்டுமென்பதாம். அறிவிலாரென்பதுஉம் பாடம்.

(தே - ப - ரை.)—(நான்முன் அடங்கியிருக்கையால்), எல்லா ரும்—, அறிகிலார் என்று - (என்னை) அறிந்திலர் (இனி அப்படி அடங்கியிராமல் நானேவெளிப்பட்டு அறிவிப்பேன்) என்று நினை த்து, என் காமம்—, மறுகில் - (இவ்வூர்) வீதியில், மருண்டு மறு குகும் - மயங்கிச் சுழல்கின்றது, [சிலாறிந்து பேசிக்கொள்ளும் படிக் கும் பலரறிந்து தூற்றும்படிக்கும் என்றபடி.]

கo. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

[சேவிலிச்சுறத்தோடு நின்றவைத்து யானிற்குமாறென்னை
யென்று நகையாடிய தோழியோடு புலந்து
தனதுள்ளம் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—யாங கேட்குமாறுமன்றிக் கண்ணுற்காணுமாறு எம்மையறிவிலார் நகாநின்றார், அவரங்ஙனஞ செய்கின்றது யாமுற்ற நோய்கள் தாமுறாமையான், எ-று.

கண்ணினென்றது முன்கண்டறியாமை யுணர்கின்றது. அறத்தொடு நின்றமையறியாது வரைவுமாட்சிமைப்படுகின்றிலனெனப புலக்கின்றாளாகலின், எதிர்ளாக்கிக் கூறினாள். இது, காரணம் சேட்படுக்குந்தோழிக்குத் தலைமகன் கூறியதாங்கால், அதிகாரத்திற் கேலாமையறிக.

(தெ - ப - ரை.)—யாம்—, கண்ணில் காண - (நீகட்குஞ் படியுமன்றி) கண்ணுற காணும்படி, அறிவில்லார்—, நகுப - (எம்மை) சிரிக்கின்றார்; (அவர அப்படிச செய்கின்றது), யாம் பட்ட - யாம் அடைந்த நோய்களை, தாம்படா ஆறு - தாம் அடையாமையால்

ககடு-ம் அதிகாரம்—அலரறிவுறுத்தல்.

அஃதாவது களவொழுக்கம் வேண்டிய தலைமகன் பிறர கூறுகின்றவர் தனக்காகின்றவாற்றைத் தோழிக கறிவுறுத்தலும், வைவாக ுடன்போக்காக ஒன்றுவேண்டிய தலைமகளுந் தோழியும் அவ்வலை யவன்றனக் கறிவுறுத்தலுமாம். இ ஐ, நாணுத்துறைவழி நிகழ்வதாகலான், நாணுரத்துற வரைத்தலின்பின் வைக்கப்பட்டது

க அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாற்கியத் தால்

[அல்லதுறிப்பட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி
யலர்கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—மடந்தையோ டெம்மிடைநட்பு ஊரின்க ணலா யெழுதலான் அவளைப்பெறுது வருந்துமென் னரியவுயிர பெற்றதுபோன்று நிலைபெறும், அந்நிலைபேற்றைத் தெய்வத்தால் யாமெயதிவதல்லது கூறுகின்றபலரு மறியார், எ-று.

அல்லதுறிப்பட்டுத் தலைமகளையெய்தப்பெறுத வருத்தமெல்லாந்தோன்ற அரியவுயிரென்றும், அவளை மரியாளை எளியளாக்கி யெடுக்கின்றமையின், அஃதவ்வாருயிர்க்குப் பற்றுக் கோடாகநின்ற தென்பான் அலரெழவாருயிர்

நிற்குமென்றும், பற்றுக்கோடாதலே அவ்வேதிலாரறியிற் றூற்றுதொழிவர் ஒழியவே ஆருயிர்போமாகலான் அவரறியாதொழிகின்றது தெய்வத்தானென்றுங் கூறினர். முற்றும்மை விகாரத்தாற்றொக்கது.

(தே - ப - ரை.)—(உன்மாதுக்குஞ் எமக்கும் உண்டாகிய நட்பு), அலர் எழ - (இவ்வூரில்) அலராயெழுதலால், ஆர் உயிர் - (அவளைப்பெறுதி வருந்துகின்ற என்) அரிய வுயிரானது, நிற்குஞ் - (அவளைப்பெற்றதாற்) நிலைபெறும்; அகணை - அங்ஙிலேபற்றை, பாக்கியத்தால் - நல்லூழால், (ஈனே அறிவதல்லது), பலர் - (தூற்றுகின்ற) பலரும், அறியார் - அறியமாட்டார்.

2. மலரன்ன கண்ணு ளருமை யறியா
தலரெமக் கிந்தநிவ் வூர்.

(பரி-ரை.) எ-து,—மலர்போலுங் கண்ணையுடையாளது எய்தற் கருமை யறியாது இவ்வூர் அவளை யெளியளாக்கி அவளோ டலர்கூறலே எமக்குபகரித்தது, எ-று.

அருமை அல்ல குறிப்பாட்டானும் இடையீடுகளானும் ஆயது. ஈந்த தென்றான், தனக்குப் பற்றுக்கோடாகலின்.அலர் கூறுவாரை அவர்செய்த வுதவிபற்றி இவ்வீரென்றான்.

(தே - ப - ரை.)—மலர் அன்ன கண்ணுள் - மலர்போலுங் கண்களை யுடையவளது, அருமை - (அடைதற்கு) அருமையை அறியாது, இவ்வூர் - இந்தவூர், (அவளை எளியவளாக்கி), அலர் - (அவளோடு) பழிகூறலே, எமக்கு—, ஈந்தது - உபகரித்தது.

ங. உருஅதோ ஒழறிந்த கௌவை யதனைப்
பெருஅது பெற்றன்ன நீர்த்து.

[ஓதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—எங்கட்குக் கூட்டமுண்மை இவ்வூரறிதலான்வீளைந்த வலர் எனச்சுருவ தொன்றன்றே, அதுகேட்ட வெனமனம் அக்கூட்டத்தைப் பெருதிருந்தே பெற்றார்போலு நீர்மையை யுடைத்தாகலான், எ-று.

பெற்றன்னநீர்மை—பெற்றவழியுளதா மின்பம்போலு மின்பமுடைமை, நீர்த்தென்பதற்கேற்ற மனமென்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது.

(தே - ப - ரை.)—ஊர் அறிந்த கௌவை - (எங்களுக்குப் புணர்ச்சி உண்டாயிருக்கையை) இவ்வூர் அறிதலால் விளைந்த அலரானது, உறுதோ - (எனக்கு) உறுவதொன்றன்றோ, (அதுகேட்ட என்மனமானது), பெறுது - (புணர்ச்சியை) பெறுதிருந்தே, பெற்றது அன்ன நீர்த்து - பெற்றதுபோலுங் குணமுடைத்து, (ஆகலால்).

ச. மவ்வை யயாற் கவ்வினி தாம மதுவின்வேற்
றவ்வெவன்னுந் தன்மை யிழந்து.

(பரி-ரை.) எ-து,—என்காமம் இவ்வூரெடுக்கின்ற அலராலே யலர்த்லை யுடைத்தாயிற்று அவ்வலரில்லையாயின், முன்னியல்பிழந்து குங்கும், எ-று.

அலர்த்தல்—மேனமேன்மிகுதல். செவ்வையுடையதனை செவ்வியதென் றுற்போலக் கவ்வையுடையதனைக கவ்வியனரு. இயலபு—இன்பம் பயத்தல், தவ்வென் னுமென்பது பிறபபுமொழி; * "நூலகால யாத்த மாலை வெண் குடை—தவ்வென் றசைஇத் தாழ்துளி மறைப்ப" எனபுழியுமது.

(தே - ப - ரை.)—காமம் - (என்) காமம், கவ்வையால் - (இவ்வூர்) எடுக்கின்ற தூற்றல், கவ்வினி தாம் - மேலுமேலும் மிகுதலை யுடைத்தாயிற்று ; அது இன்றேல் - அவ்வவர் இல்லையாயின், தன்மை யிழந்து - இன்பந் தருதலிழந்து, தவ்வென்னும் - சுருங்கிப்போகும்.

நி. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றுற் காமம்
வெளிப்படுத் தோறு மினிது

[இதுவுமது]

(பரி-ரை.) எ-து,—கள்ளுணபார்க்குக் களிக்குந்தோறுங கள்ளுணடல் இனிதாமாறுபோல எனக்குக் காமம் அலராந்தோறும் இனிதாகாநின்றது, எ-று.

வேட்டப் பட்டற்றுலென்பது வேட்டற்றுலெனநின்றது. வேட்கையிகுதியால் அலரும் இன்பஞ் செய்யாநின்ற தென்பதாம்.

(தே - ப - ரை.)—(கள்ளுண்பார்க்கு), களித்தொறும் - களிக்குந்தோறும், கள்ளுண்டல்—, வேட்டற்று - இனிதாம் விதம்

---

* நெடுநல் வாடை, அடி. 4அச-4அஅ,

போல், (எனக்கு), காமம்—, வெளிப்படுந்தோறும் - மிகுந்தோறும், இனிது - இனிதாகாநின்றது.

சு. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

[இடையிடுகளாலும் அல்லதுரியாளுந் தலைமகனையெய்தப்பெறுத தலை
மகள் அவள் சிறைப்புறத்தானுக்குத் தோழிக்குச் சொல்லு
வாபோய் அலரறிவுறீஇ வரைவுகடாயது]

(பரி-ரை.) எ-து,—யான் காதலரைக் கணணுறப்பெற்றது ஒருநாளன்றே, அதனினுமலர் அவ்வளவிற்றன்றித திங்களைப பாம்புகொண்ட வலர் போன்று உலகெலாம் பரந்தது, எ-று.

காரியத்தைக் காரணமாக வுபசரித்துப் பாம்புகொண்டற்றென்றாள். இரு வழியும் மன்னும் உம்மையும் அசைநிலை காட்சிபின்றியும் அலர்பரக்கின்ற இவ்வொழுக்கம இனியாகாது, வரைந்துகோடல் வேண்டுமென்பதாம்.

(தே - ப - ரை)—கண்டது - (தலைவனை நான்) காணப்பெற்றது, ஒரு நாள் - ஒருநாளேயாகும்; அலர் - (அதனாலுண்டாகிய) பழிதூற்றுகலானது, (அவ்வளவினதன்றி), திங்களை பாம்பு கொண்டற்று - சந்திரனை பாம்புகொண்ட அலர்போல் உலகெங்கும் பரந்தது.

எ ஊரவர் கௌவை யெருவாக வண்ணைசொன்
னீராக நீளுமிந் நோய்

[வரைவுநீட ஆற்றளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானுத
லறிந்ததோழி ஊரவரலரும் அன்னைசொல்லுநோக்கி யாற்றல்
வேண்டுமெனச் சொல்லெடுப்பியவழி அவளசொல்லியது.]

(பரி-ரை) எ-து,—இக்காமநோயாகிய பயிர் இவ்வூரின் மகளிரெடுக்கின்ற அலா ருவாக அதுகேட்டு அன்னை வெருண்டுசொல்லுகின்ற வெஞ் சொல் நீராக, வளராநின்றது, எ-று.

ஊரவரென்பது தொழிலான் ஆணைழித்து நின்றது. ஏகதேசவுருவகம். சுருங்குதற் கேதுவானதாமே விரிதற்கேதுவாகா நின்றனவென்பதாம். வரைவானுதல் பயன்.

(தே - ப - ரை)—இந்நோய் - இக்காமநோயாகிய (பயிர்), ஊரவர் கௌவை - இவ்வூரிலுள்ள (மகளிர் எடுக்கின்ற) தூறு

னது, எரு ஆக எருவாகவும், அன்னசொல் - (அதுகேட்டுக்கோபித்து) தாய்சொல்லுகின்ற கடுஞ்சொலானது, நீர ஆக—, நீளும்-வளராநின்றது.

அ. கெய்யா லெரி நாதுப்பே மென்றற்றுற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,— எதிலாரெடுக்கின்ற அலரால் நாம காமத்தை யவித்தலுமென்று கருதுதல் நெய்யாலெரியை யவித்துமென்று கருதுதலோ டொக்கும், எ-று.

மூன்றனுருபுகள் கருவிகாரணவர்த்தன. இளித்தற் காரணமாய அலரால் அவித்தல் கூடாதென்பதாம்.

(தே - ப - ரை.)—கௌவையா ல் - (அயலவர் எடுக்கின்ற) அல ராலுண்டாகின்ற, காமம் - காமத்தை, நுதுப்பேம் எனல் - அவிப் பேமென்று நினைத்தல், நெய்யால்—, எரி - நெருப்பை, நுதுப்பேம் என்றற்று - அவிப்பே மென்று நினைத்தலோ டொக்கும்

கூ அலரொண வொல்லதோ வஞ்சலோம் பென்றூர்
பலரொண ரீ

[வரைவிடைவைத்துப் பிரிவின்கணும் ாய கூலமகளி அவர் வந்து சிறைபுறத்தா ஞதலறிந்து அலரறிவி யாற்றல் வேண்டுமென்ற நாயகிக்குத் தோழி சொல்லியது]

(பரி-ரை.) எ-து,—நம்மை யெதிர்பட்டஞான்று நின்னிறப்பரியேன் அஞ்சுலோம் பென்றவர்தாமே இன்று கண்டார் பலரும் நாணும்வகை நம் மைத் துறந்தபின் நாமேதிலார் கூறுமலருக் நாணக்கூடுமோ கூடாது, எ-று.

நாணவென்னும் வினையெசம் ஒல்வதென்னுந் தொழிற்பெயருள் ஒல்லு கற் றொழிலோடு முடிந்தது. கண்டார் நாணுதலேமையமாய யாம் நாணுதல் பாண்டைய தென்பதாம்.

(தே - ப - ரை.)—(தம்மைக்கள்ளாளில்), அஞ்சல் ஓம்பு என்றூர் - (உன்னைவிட்டு நீங்கேன்) அஞ்சுதலொழியென்றவரே, பலர் நாண - (இன்றுகண்டவர்) பலரும் நாணும்வகை, நீத்தக் கடை - (நம்மைவிட்டு) நீங்கியபின், அலர் - (அயல்வர் தூற்றுகிற) தூறுக்கு, நாண ஒல்வதோ - (நாம்) நாணக்கூடுமோ,

---

கo. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்கு மிவ்வூர்.

[தலைமகள் சிறைப்புக்காலைத் தோழி தலைமகட்குச்சொல் லியாங்காய அலரறிவுறீஇ அவள் உடன் போக்கு மெய்ப்பாடு சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—உடன்போகற் கேதுவாகனேக்கி யாம்பண்டே விரும்புவதாய வலரை இவ்வூர்தானே யெடாநின்றது; இனிக் காதலர்தாமும் யாம்வேண்டியக்கால் அதனை யினிதினேர்வர், அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய்வந்தது, எ-று.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. நங்கட்காதலுடைமையின் மறுரென்பது தோன்றக் காதலனென்றாள். இவ்விருபதுபாட்டும் புணர்ந்தனிமித்தம்.

(தெ-ப-ரை.)—யாம்—, வேண்டுங் கௌவை - (உடன் போதற்குக் காரணமாதல் பற்றி முன்னமே) இரசிப்பதாகிய அலரை, இவ்வூர்—, எடுக்கும் - (தானே) எடுக்கின்றது; காதலர்-(இனி) தலைவர், வேண்டின் - (நாம்) வேண்டினால், தாம் - தாமும், நல்குவர் - அதற்கு உடன்படுவர், (ஆதலால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது).

களவியல் முற்றிற்று.

கற்பியல்.

இக் கற்புப் பகுனெட் டதிகாரத்தாற் கூறவான்றொடங்கி, முதற்கட் பிரிவாற்றுமை கூறுகின்றார்.

ககக-ம் அதிகாரம்—பிரிவாற்றுமை.

அஃதாவது வரைந்தெய்தியபின் தலைமகன் அறம் பொரு ளின்பங் களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினுந் தலைமகளைப் பிரிந்துசெல் லும் செல்லுழான்ற அப்பிரிவினை அவளாற்ருளாற்றன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி கூறலும். அவ னதனைக்குத் தலைமகடானே அவண் குறிப்பாலுணர்ந்துகூறலும், பிரிவுணர்த்தியவழிக்கூறலும், தலைமகன் பிரிந்தழி ஆற்றுவிக்குந்தோழிக்குத் தலைமகள் மறுத்துக்கூறலுமென நான்வகையாற் கூறப்படும்.

க. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

[பிரிந்து கடிதின் வருவலென்ற நலமகற்குத்
தோழிசொலலியது.]

(பரி-ரை.) எ-து,—நீ யெம்மைப் பிரியாமை யுண்டாயின் அதனை யெனக்குச் சொல், அஃதொழியப் பிரிந்துபோய் விரைந்துவருதல் சொல்லை பாயின் அதனை அப்பொழுது உயிர்வாழ்வார்க்கு+ சொல், எ-று.

தலைமகளொழித்து எனக்கென்றுள், தானவளென்னும் வேற்றுமை யின்மையின். அக்காலமெல்லா மாற்றியிருந்து அவ்வரவு காணவல்லளல்லள், பிரிந்தபொழுதே யிறந்துபடுமென்பதாம். அழுங்குவித்தல் பயன். இதனைத் தலைமகன் கூற்றுக்கி யுரைப்பாருமுளர்.

(தே - ப - ரை.)—செல்லாமை உண்டேல் -(நீ எம்மை) பிரியா மை உண்டாயின், எனக்கு—, உரை - (அதனை) சொல்லு; மற்று- அது கேள்க, நின் வல் வரவு-(பிரிந்துபோய்) நின் விரைந்து வருதலை, வாழ்வார்க்கு - (அப்பொழுதி) உயிர்வாழ்வார்க்கு, உரை -

உ. இன்கணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
பின்கணுடைத்தாற் புணர்வு.

[பிரிவு தலைமகள் குறிப்பாலறிந்த நலமகள் நோமிகுத்து சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—தழையுங் கண்ணியுங்கொண்டு பின்னின்ற ஞான்று அவர்நோக்கு மாத்திரமும் புணர்ச்சி குறித்தலையான் நமக்கின்ப முடைத்தா யிருக்கும்; இன்று அப்புணர்ச்சிதான் நிகழா நிற்கவும் அது பிரிவென்னுஞ் சுச்சத்தினை யுடைத்தாயிற்று; அவன்பி னிலேமை யிது, எ-று.

பார்வலென்றது ஞற்புணர்ச்சிபெருத பின்னிலைக்காலம் பெறப்பட்டது. புன்கணென்னுங் காரியப்பெயர காரணத்தின்மேல தாயிற்று. அவ்வச்சத் தினை யுடைத்தாதலாவது * "மூள்ளுறழ் முளையிறை முழித்தாங் தீரைக்— கள்ளிலு மகிழ்செய்பு மெனவுரைத்தது மையோரென்—னெள்ளிழை திருத் தும்" பண்டையிற் சிறப்பால் அவன் பிரிதற்குறிப்புக்காட்டி அச்சஞ்செய்த லுடைமை. அழுங்குவித்தல் பயன்.

(தே - ப - ரை)—(தழையு மாலையுங் கொண்டு பின்னின்ற தாளில்), அவர் பார்வல் - அவரது பார்வைமாத்திரமும், (புணர்ச்சி குறித்தமையால்), இன்கண் உடைத்து - (நமக்கு) இன்பமுடைத்

* கலி பாலை, ரு.

தா யிருந்தது; (இன்று அப்புணர்ச்சிதான் நடந்துகொண்டிருக்கவும்,) புணர்வு - அப்புணர்ச்சி, பிரிவு அஞ்சும் - பிரிவுரென்றஞ்சுகிற, புன்கண் - அச்சத்தினை, உடைத்து - உடைத்தாயிற்று, (அவரன்பினிலைமை இது.)

கூ. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோரிடத்தண்மை யான்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—பிரியேனென்ற தஞ்சொல்லும் நம்பிரிவாற்றுமையும் அறிதலுடையராய காதலர்கணனும், ஒரோவழிப் பிரிவு நிகழ்தலான், அவர் சொல்லும் தலையளியும் பற்றி நம்மாட்டன்புடையரெனத் தேறுந்தேற்றம் அரிதாயிருந்தது. எ-று.

அரோ—அசைநிலை. உம்மை: யாவு சிறப்பின்கண் வந்தது.

(தே - ப - ரை.)—அறிவு உடையார்கண்ணும் - (பிரியேனென்ற தஞ்சொல்லையும், நம்பிரிவு பொறுமையையும்) அறிதலுடையவராகிய காதலரிடத்தும், ஓர் இடத்து - ஒரோவழி, பிரிவு—, உண்மையான் - உண்டாதலால், தேற்றம் - (அவர் சொல்லும் தலையளியும்பற்றி நம்மேல் அன்புடையரென்று தெளியும்) தெளிவு, அரிது - அரிதாயிருந்தது

ச. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ கரை.

[இதுவுமது]

(பரி-ரை.) எ-து,—எதிர்ப்பட்ட ஞான்றே தலையளிசெய்து நின்னிற் பிரியேன் அஞ்சலெனறவர் தாமே பின் பிரிவராயின், அவர்கன்றி அவர் தெளிவித்த சொலலே மெயயெனத் தெளிந்தார்க்குக் குற்றமுண்டோ, எ-று.

தேறியாரென்பது தன்னைப் பிறர்போற்கூறல். சொல்லுஞ்செயலு மொவ்வாமைக் குற்றம அவாக்கெய்தும், அஃதெய்தாவகை யழுங்குவி யென்பது கருத்து.

(தே - ப - ரை.)—அளித்து - (எதிர்ப்பட்டஞான்) தலையளி செய்து, அஞ்சல் என்றவர் - (உன்னைவிட்டுப் பிரியேன்) அஞ்சாதிரு வென்றவர் (தாமே), நீப்பின் - (பின்னே) பிரிவராயின், (அவர்க்கல்லாமல்), தெளித்த சொல் - (அவரால்) தெளிவிக்கப்

க்கசு-ம் அதி. பிரிவாற்றுமை

பட்ட சொல்லை, தேறியார்க்கு - (மெய்யென்று) தெளிந்தவர்க்கு, தவறு - குற்றம், உண்டோ - உளதோ, [இல்லை என்றபடி].

நி. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—என்னுயிரைச் செல்லாமற் காத்தியாயின், அதனை யாளுதற் கமைந்தாருடைய செலவினை அழுங்குவிப்பாயாக; அழுங்குவிப்பா னினறி அவர் செல்வராயின அவரால்ளப்பட்ட யிருஞ் செல்லும், சென்றூற் பின்னவரைக் கூடுதல் எனக்கரிதாம், எ-று.

ஆளுதற்கமைதல் இதைவபாதாருக் செய்வித்தா மேலற்புடையராதல். மற்று—வினைமாற்றின்கண வந்தது.

(தே - ப - ரை.)—ஓம்பின் - (என்னுயிரைச் செல்லாமல்) காப்பாறுவையாயின், அமைந்தார் - (அதனை ஆளுதற்கு) அமைந் தவரது, பிரிவு - செலவை, ஓம்பல் - அழுங்குவிப்பாயாக; மற்று அவர் நீங்கின் - அழுங்குவிப்பாரில்லாமல், அவர் செல்வாராயின் - (அவரால் ஆளப்பட்ட உயிரும் செல்லுமாதலால்), புணர்வு - (பின்பு அவரை) கூடுதல், அரிது - (எனக்கு) அரிதாம்

சு பிரிவுரைக்கும் வன்கண்ணா யாயினரிதவர்
நல்குவ ரென்னு நசை

[தலைமகன் பிரிவுணர்த்திய வாயு வாதுசோலலிய நோழித்துச் சோலலியது.]

(பரி-ரை.) எ-து,—நமதவவுக்கமையறிந்தும் தலைவர்தாமே நம்முனின்று தம்பிரிவினை யுணர்த்தும் வன்கணமை யுடையராயின், அத்தன்மையார் பின்பு நம்மாற்றுமை யறிந்துவந்து தலையளி செய்வரென்றிருக்கு மாசை விடப்படும், எ-று.

அருமை—பயன்படுதலில்லாமை. கூடியிருந்தே அன்பின்றிப் பிரி வெண்ணுதலும் உணர்தலும் வல்லாயினுர் பிரிந்துபோய் அன்புடையராய் நம்மை நினைத்துவந்து நல்குதல் யாண்டைய தென்பதாம். அழுங்குவித்தல் பயன்.

(தே - ப - ரை.)—அவர் - (நமது பிரிவுபொறுமையறிந்த) அத் தலைவர்தாமே, (நம்முன்னின்றும்), பிரிவு உரைக்கும் - (தம்) பிரிவை அறிவிக்கும், வன்கண்ணர் ஆயின் - அருளில்லாமையை யுடைய

சாயின், (அத்தன்மையரானபின்பு), நல்குவர் என்னும் நசை - (நம் பொருமையை அறிந்துவந்து) தலைவளிசெய்வாரென்னுமாசை, அரிது - விடப்படும்.

எ. துறைவன் றுறந்தமை தூற்றுகொன் முன்கை
யிறையிறவா நின்ற வளை

[இருவகைமது.]

(பரி-ரை.) எ-து,—துறைவன் என்னைப் பிரியலுறுதலையை அவனுணர்த் தாமற் றுமே யுணர்ந்து என் முன்கை னிறையினின்று நழுவாநின்ற வளையி கள் எனக்கறிவியாவோ, அவனுணர்த்த வுணர்த்துவந்து நீயறிவித்தல் வேண் டுமோ, எ-று.

முன்னே நிகழ்ந்தமையிற் றுறந்தமை யென்றும், கேட்ட தோழியான் மெலிந்து ஆற்றுமையின் இறவாநின்ற வென்றும் கூறினுள். அழுங்குவித்து வந்து கூறற்பாலே யல்லையாய நீயும் இவ்வளைகள் செய்தனவே செய்தா யெனப் புலந்து கூறியவாறு.

(தே - ப - ரை.)—துறைவன் - துறந்தமை - (என்னை) பிரிய லுற்றமையை, (அவன் அறிவிக்காமல் தானே அறிந்து), முன்கை இறை - (என்) முன்கை இறையினின்றும், இறவாநின்றவளை - கழலாநின்ற வளையல்கள், தூற்றுகொல் - (எனக்கு) அறிவியாவோ, [அவன் அறிவிக்க அறிந்துவந்து நீ அறிவித்தல்வேண்டுமோ.]

ச. இன்ன தினனில்லூர் வாழ்த லவளினு
மின்ன தினியார்ப் பிரிவு

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—மகளிர்க்குத் தங்குறிப்பறியுந் தோழியில்லாத வேற் றூரின்கண் வாழ்தலின்னுது; அதன்மேலுந் தங் காதலரைப் பிரிதல் அதனினு மின்னுது, எ-று.

தலைவன் செலவினை யழுங்குவித்து வாராது உடன்பட்டு வந்தமைபற் றிப் புலக்கின்றுளாகலின், இனனில்லூ ரென்றுள். உலகியல் கூறுவாள் போன்று தனக்கவிறண்டு முண்மை கூறியவாறு.

(தே - ப - ரை.)—இனன் இல் ஊர் - (மகளிர்குத் தங்குறிப் பறிகிற) தோழியரில்லாத வேற்றூரினிடத்து, வாழ்தல்—, இன் னுது - துன்பஞ்செய்வதாகும்; (அதன்மேலும்), இனியார் பிரிவு -

(தங்) காதலரைப்பிரிதல், அதனினும் - அவ்வாழ்தலைக்காட்டிலும், இன்னாது - துன்பஞ்செய்வதாகும்.

கூ. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.

[காமந்தீயேபோன்றது தானிற்றவிட் டதைச் சுடுமாகலான் நீயாற்றல்
வேண்டுமென்ற தோழிக்குத் சோல்லியது]

(பரி-ரை.) எ-து,—தீத் தன்னைதொட்டாற் சுடுமையிற் சுடுதலல்லது காமமாகிய நோய்போலத் தன்னையகன்றுற் றப்பாது சுடுதலை வற்றே, மாட்டாது, எ-று.

சுடுமையினென்பது மந்திரமருந்துகளாற் றம்பிக்கப்படாதாயி னென்ற வாறு. காமத்திற் கதுவுமில்லை யென் பாள் வாளா சுடலென்றுள். அதறல-நுக ராமை. சுடலென்பது மூன்னுங கூட்டப்பட்டது. தீயினுங் கொடியதனை யானுற்றுமாறென்னை யென்பதாம்.

(தே - ப - ரை.)—நீ - நெருப்பு, தொடின் - (தன்னை) தொட்டால், சுடின் (சுடல்) அலலது - சுட்டாற் சுடலல்லது, காமநோய் போல—, விடின் -(தன்னை) விட்டுநீங்கினால், சுடல் ஆற்றுமோ-(தப் பாது) சுடல்வல்லதோ

கo. அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

[தலைவியிடமுஞ் பிரிவாற்றியிருப்பவு அது நீயேயகிற்றிலை
யென்ற தோழிக்குத் சோல்லியது.]

(பரி-ரை) எ-து,—அரிது ஆற்றி அல்லல் நோய் நீக்கி பிரிவு ஆற்றிப் பின் இருந்து வாழ்வார் பலர்பிரிந்தால் அப்பிரிவு தன்னையுமாற்றிப் பின்னு மிருந்து உயிர்வாழு மகளிர் உலகத்துப் பலர், எ-று.

பண்டையிற் நிறப்பத் தலையளிபெற் றின்புறுகின்ற வெல்லைக்கண்ணே அஃதிழந்து தன்புறுதற் குடம்படுதல் அரியதொன்றுகலின் அரியதனைச் செய் தென்றும், செல்லுந் தேயத்து அவர்க்கியாது நிகழுமென்றும் வருந் துணையும் யாமாற்றி யிருக்குமா றென்னென்றும் அவ்வரவுதான் எஞ்ஞான் றுவக்கெய்துமென்றும், இவ்வாற்று னிகழுங்கவலை மனத்து நீங்காதாகலான் அல்லனோய் நீக்கியென்றும், பிரிந்தால் வருந்துணையும் அகத்து நிகழுங் காம வேதனையும் புறத்து யாழிசை, மகிழ், தென்றலென்றிவை முதலாகவுள்ளு அதனை வளர்ப்பனவும் ஆற்றலரியவாகலிற் பிரிவாற்றி யென்றும், தக்காத லரை யின்றியமையா மகளிருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னுமிருந்து உயிர் வாழ்வார் ஒருவருமில்லை யென்பதுங்குறிப்பாற்றோன்றப் பின்னிருந்து

வாழ்வார் பலரென்றங் கூறினுள். அரிதென்பது வினைக்குறிப்புப் பெயர். பிரிவின்கணிகழ்வனவற்றைப் பிரிவென்றாள். செய்து, நீக்கி, ஆற்றியென்பன ஓசைவகையான் அவ்வவற்ற தருமையுணர நின்றன. சிறப்பும்மை விகாரத்தொக்கது. யானுமிரந்துபடுவ லென்பது கருத்து.

(தே - ப - ரை.)—(நீசொல்லுகின்றது ஒக்கும்); அரிதுஆற்றி-(பிரிவை அறிவித்தவிடத்து) அதற்கு உடம்பட்டு, அல்லல் நோய்-(பிரியுந்போது உண்டாகிற) துன்பநோயையும், நீக்கி—,பிரிவு ஆற்றி (பிரிந்தால்) அப்பிரிவையும் பொறுத்து, பின் இருந்து - பின்னும் இருந்து, வாழ்வார் - உயிர்வாழுமகளிர். பலர் (உலகத்தில்) பலர்.

ககன-ம் அதிகாரம்—படர்மெலிந்திரங்கல்.

அது படரான் மெலிந்திரங்கலென விரியும். அஃதாவது பிரிவாற்றுளாய தலைமகள் தானுறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின் அங்ஙனே வான் மெலிந்திரங்குதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

க. மறைப்பேன்மன் யாஎிஃதோ நோயை யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும்.

[காமநோயை வெளிப்படுத்தல் நிலையுணர்ந் கேளாதென்று நோழிக்குச் சொலலியது.]

(பரி-ரை.) எ-து,—இக்நோயைப் பிறரறிதலுணி யான் மறையா நின்றேன்; நிற்பவும், இஃது அங்ஙனமன்றி நில்லாது நீர்வேண்டுமென் றிறைப்பவர்க்கு ஊற்றுநீர் மிகுமாறுபோன் மிகாநின்றது எ-று.

அம்மறைத்தலாற் பயனென் னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. "இஃதோ செல்வர்க் கொத்தனென்யான்" என் புழிப்போல ஈண்டிசை சுட்டுப்பெயரோடு நிரந்து நின்றது. இஃதோர் நோயையென்று பாடமோதி வாருமுளர்; அது பாட மன்மையறிக. இனி அதற்கடுத்தது நீ செயல் வேண்டுமென்பதாம்.

(தே - ப - ரை.)—யான்—, நோயை-இந்நோயை, மறைப்பேன்-(பிறரறிதற் குகாணி) மறையாநின்றேன்; (நிற்கவும்), இஃதோ - இந்நோயோ, இறைப்பவர்க்கு - (நீர் வேண்டுமென்று) இறைப்போர்க்கு ஊற்றுநீர்போல—, மிகும் - பெருகும்.

.. *கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும்.*

[ஈண்டையா றறியாமன் மறைத்தலு ஆண்டையாரறியத் தூது
விடுதலென்னு மிரண்டுபா ஒன்று செயல்வேண்டு
மென்ற தோழிக்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—இக்நோயை எண்டையா றறியாமன் மறைத்தலும் வல்லேனுகின்றேன்; ஆகாக்கால், நோய் செய்தவாக் குரைக்கவெனின், அதுவும் எனக்கு நாணினைத் தாமாகின்றது, இனியென் செய்கோ, எ-று.

ஒரு காலேக்கொருகான் மிகுதலிற் கரத்தலு மாற்றே னென்றும், சேயிடைச் சென்றவர்க்கு இது சொல்லித் தூது விட்டால் இன்று மிருந்தே னென்பது பயக்குமென்னு மருத்தால் நாணுத்ருமென்றுங் கூறினுள்.

(தே - ப - ரை.)—இக்நோயை - இக்காமநோயை, கரத்தலும் ஆற்றேன் - (இவ்விடத்தோர் அறியாமல்) மறைத்தலும் வல்லேனு கின்றிலேன்; (ஆதலால்), நோய் செய்தார்க்கு—. சொல்லென்பை யாயின்), உரைத்தலும் - சொல்லலும், நாணுத் - (எனக்கு) நாணந்தரும் (இனி என்செய்வேன்)

கூ. காமமு நாணு முயிர்காவாத் தாங்குமென்
னேனை யுடம்பினதத்து.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காமநோயும் அதனைச்செய்தவர்க்கு வரைக்க லொல்லாத நாணும் தம்மைப் பெருத என்னுடம்பின்கணேனை உயிர் காத்தண்டாக அதனிருதலையினுந் தாங்காகின்றன, எ-று.

பொருமை மெலிவானுயது. தூங்குமென்ப ரென்றிஞென்று மிகாது இரண்டும் ஒத்தசீரவென்பது தோன்ற நின்றது. தூது விடவும் ஒழியவும் பண்ணுவனவாய காம நாணுகள் தம்முளொரு தி உயிரினே யிறவியா நின்றன, யான் அவற்று ளொன்றின்கணிற்கமாட்டாமையின் இம்மிரண்டினுமென்ப தாம்.

(தே - ப - ரை.)—காமமும் - காமநோயும், நாணும் - (அது செய்தவர்க்கு) சொல்லவொட்டாத நாணும், என் நோனுடம்பின் அகத்து - (தம்மைப்) பொருத என்னுடம்பினிடத்து, உயிர்—, காவா - காவடித்தண்டாக, தூங்கும் - (அதனிருதலையினும்) தொங்குகின்றன

ச. காமக் கடன்மன்னு முண்டே யதுகீக்து
மேமப் புணைமன்னு மில்

[தலைவியர் காமக்கடற்படார் பட்டிலும் அதனை ஏற்றபுணையானிந்திக் கடப்பாரென்ற தோழிக்குத் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—யாவர்க்கும் உளவாய் வருகின்ற இவ்விரண்டனுள்ளும் எனக்குண்டாகின்றது காமக்கடலே; அதனை நீந்தும் அரணுடைய புணையில்லை, எ-று.

இருவழியும் மண்ணும் உம்மும் அசைநிலை. தூதுவிட்டு இதற்குப் புணையாகற்பாலையாய நீயும் ஆயிற்றிலை யென்பது கருத்து.

(தெ-ப-ரை.)—(யாவர்க்கும் உண்டாய் வருகின்ற இரண்டினுள்ளும்), காமக்கடலே—, உண்டு - (எனக்கு) உண்டாகின்றது; அது நீந்தும் - அக்கடலைக்கடக்கும், ஏமம் புணை - காப்பாகியபுணை, இல் - (எனக்கு) இல்லை.

நி. தப்பி னெவனுவர் மற்கொ லுயர்வரவு
நட்பினு ளாற்று பவர்.

[தூதுவிடாமைநோக்கித் தோழியோடு புலந்து சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—இன்பஞ் செய்தற்குரிய நட்பின்கண்ணே துன்பவரவினைச செய்ய வல்லவர் துன்பஞ்செய்தற்குரிய பகைமைக்கண் என்செய்வர் கொல்லோ, எ-று.

நுப்புப் பகையுமாதல், "துப்பெதிர்ந் தோர்க்கே புள்ளாச் சேய்மைய—னைட்பெதிர்ந் தோர்க்கே யஞகை யண்மையன்" என்பதனுனு மறிக. அப்பகைமை ஈண்டுக் காணுமையின் அவர் செய்வது மறியப்பெற்றிலே மென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. துயர்வருதலே விலக்கராயிருக்க அது செய்கின்றிலை யெனப் புலக்கின்றமையின், துயர்வரவு செய்தாளாக்கியும் பிரளாக்கியுங கூறினுள்.

(தெ-ப-ரை.)—நட்பினுள் - (இன்பஞ் செய்தற்கு உரிய) நட்பினிடத்து, துயர் வரவு - துன்பத்தின் வரவினை, ஆற்றுபவர் - செய்யவல்லவர், துப்பின் - (துன்பஞ்செய்தற்கு உரிய) பகைமையிடத்து, எவன் ஆவர் கொல் - என்னசெய்வரோ.

கூ. இன்பங் கடன்மற்றுக் காம மஃதடங்காற்
றுன்ப மதனிற் பெரிது.

[காமத்தானின்ப முற்றர்க்த அதனினை துன்பம் வருமென்ற தோழிக்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—காமம் புணர்வா லின்பஞ்செய்யுங்கால், அவ்வின்பங் கடல்போலப் பெரிதாம்; இனி அதுதானே பிரிவாற் றுன்பஞ்செய்யுங்கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம், எ-று.

மற்று—வினைமாற்றின்கண் வந்தது. அடுக்காலென வந்தமையின், மறு தலே யெச்சம் வருவிக்கப்பட்டது. பெறுதலின்பத்தோ டொத்துவரின் ஆற்ற லாம், இஃததன தளவன்றென்பது கருத்து.

(தெ - ப - ரை.)—காமம்—, (புணர்ச்சியால் இன்பஞ்செய்யும் போது); இன்பம் - அவ்வின்பம், நடல் - கடல்போற் (பெரிதாம்); மற்று அஃது - இனி அக்காமந்தானே, அடும் கால் - (பிரிவினாலே) துன்பஞ் செய்யும்போது, துன்பம்-அத்துன்பம்; அதனிற்பெரிது-அக்கடலினும் பெரிதாம்.

எ. காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

[காமக்கடலை நீந்தப் புணையாக நீந்தப்படு மேறுடைத் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—காமமாகிய கடலை நீந்தாதே னல்லேன், நீந்தியும் அதற்குக் கரைகாண்கின்றிலேன், அக்காணுமைக் காலத்தான் எல்லாருந் துயி லும் அரையிளாயிற்று, அவ்வரை யிருட்கண்ணும் அதற்கொரு துணையின்றி யானே யாயினேன், ஆயும் இறந்துபட்டுய்ந்து போகா துளேனாகின்றேன், ஈதொரு தீவினைப் பயனிருந்தவாறென், எ-று.

கடுமை ஈண்டு மிகுதிக்கண்ணின்றது. உம்மை முன்னுங கூட்டப்பட்டது. யானே யாயினே னென்பது நீதுணையாயிற்றிலை யென்னுங குறிப்பிற்று.

(தெ - ப - ரை.)—காமம் கடும் புனல் - காமமாகியகடலை, நீக்தி (யும்)—, கரை காணேன் - (அதற்கு) கரைகாண்கின்றிலேன்; (அக்காணுமைக் காலத்தான் எல்லாரும் நித்திரைசெய்யும் பாதியிர வாயிற்று); யாமத்தும் - அப்பாதியிரவி லும்; யானே - (அதற்கு ஒருதுணையில்லாமல்) யானேயாயினேன்; (ஆகியும்), உளேன் - வாதிருக்கின்றேன்; (ஈதொரு தீவினைப்பயன் இருந்தவிதம் என்).

அ. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லை துணை.

நெய்தல் — கருப்பொருள் — அதி. படர்மெலிந்திரங்கல்

[இரவின் கொடுமைசொல்லி யிரங்கியது.]

(பரி-ரை.) எ-து,—இவ்வீரா அளித்தாயிருந்தது; உலகத்து நிலைபெறுகின்ற உயிர்களெல்லாந் தானே துயிலப்பண்ணுதலான் என்னையல்லது வேறுதுணை உடைத்தாயிறறில்லே, எ-று.

துயிற்றியெனத் திரிந்துநின்ற வினையெச்சம் அவாய் நிலையான் வந்த உடைத்தாதலோடு முடிந்தது. துணையோ டொன்றுகின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்துபடு மெல்லியனுய என்னையே துணையாகக் கோடலின் அறிவின்றென்பதுபற்றி அளிதுயென்றாள்; இழிசினக்குறிப்பு.

(தெ - ப - ரை)—இரா - இவ்விரவு, அளித்து - அன்புடைத்தாயிருந்தது, மன் உயிர் எலாம் - (உலகத்தில்) நிலைபெற்ற உயிர்களெல்லாம், துயிற்றி - (தானே) தூங்கசெய்தலால், என் அல்லது - என்னையல்லது, துணை - (வேறு) துணையை, இல்லை - (உடைத்தாயிறு) றில்லே.

கூ. கொடியார் கொடுமையிற் முங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா

[ரதுவுமது]

(பரி-ரை.) எ-து —கூர்மலரொடு காமன்புரிற முன்னுள்களிற் குறியவாய் அவர் பிரிவாறதே யாகின்ற இந்நாள்களிலே நெடியவாய்ச் செல்கின்ற கங்குல்கள் அக்கொடியா தது கொடுமைக்குமேலே தாங்கொடுமை செய்யாநின்றன, எ-று.

நன்னுதலுருமை கருதாது பிரிதலின், கொடியாயென்றுள். கொடுமை-கடிதின் வாராது பட்டிதல். அவர் பிரிவானும நீட்டிப்பான முளதாய ஆற்றுமைக்குக் கணமேனுடாமை மேலும் பணைத்தலின் நெடியவாய்க் கொடியவாகாநின்றன வென்பதாம்.

(தெ - ப - ரை) (காதலர்தாமே நாம் இன்புறுற நாள்களிலே குறியவையாயிருந்து, இந்நாள் - (அவர்பிரிவைப் பொறுக்கமாட்டாத) இந்நாள்களிலே, நெடிய - நெடியவையாய், கழியும் - செல்கின்ற; இரா - இரவுகள், கொடியார்-அக்கொடியவரது, கொடுமையின் - கொடுமைக்குமேலே, தாம்—, கொடிய - கொடுமைசெய்யாநின்றன.

கo. உள்ளப்போன் முள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண்.

[நின்கண்களும் பேரழகு கழிகின்றன வாகலின் அழற்பாலை யல்லை யென்றுதற் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—மனம்போலக காதலருள்ள தேயத்துக் கடிதிற் செல்ல வல்லனவாயின, என் கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய தண்ணீரை ர, எ-று.

அது மாட்டாமையின் இனி அவற்பிரிதல் நீங்குதலே யுள்ளதென்பது படுநினைமையின், மன ஒழியிசைக்கண வந்தது. மனத்திற்குச் செலவாவது நினைவே யாகலின் உள்ளம் போன்றென்றும், மெய்யாகு மடந்தை செல்ல வேண்டுதலின் கண்களை அதனொடுசென்று காதலரைக் காண்டல் கூடாதென்னுங் கருத்தாற் செல்கிற்பனைபோ லுங் கூறினர். இதனுள் வருகின்ற வதிகாரமுந் தோற்றுவாய செய்யப்பட்டன.

(தே - ப - ரை.)—உள்ளார்போன்று - மனம்போன்று, உள்வழி - (காதலர்) இருக்கிற நாட்டிற்கு, செலநிற்பின் - (கடிதிலே) செல்லவல்லனவாயின, பன்கண் - எனது கண்கள், வெள்ளநீர் - வெள்ளமாகிய (தண்) நீரை. நீந்துதல் - நீந்தா.

ககஅ-ம் அதிகாரம்—கண்விதுப்பழிதல்.

அஃதாவது கண்கள் தங்காட்சி விதுப்பான வருந்துதல. காட்சிபுக் தலைமகனைக காணடறகு விரைதல். இது, படரான மெலிந்தவழி நிகழ்வதாகலின், படர்மெலிந் திரங்கலினபின் வைக்கப்பட்டது.

க கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது

[நீனகமாகிய கலுழ்ந்து நுமையை கூபாதலாலும நீயிறபுல மெலலுமென்ற தோழிகதுத் தலைமக ளொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—இதத்தை யோ நோயை யாமறிந்தது தாமெமக்குக் காதலரைக் காட்டலானனறே, அன்று அததொழிலவாய கணகள் இன்று எம்மைக காட்டசொல்லி யழுகின்றது என்கருதி? எ-று.

காட்டவென்பதற கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இன்றுந் தாமே காட்டுதலல்லது யாங்காட்டுதல் யாணடைய தென்பதாம்.

(தே - ப - ரை.)—தண்டாநோய் - இத்தீராத (காம) நோயை, யாம்—, கண்டது - அறிந்தது, தாம்—. காட்ட - (காதலரை எமக்கு) காட்டலாலன்றே, கண் தாம் - (அன்று அதுசெய்த)

கண்கள், கலுழ்வது - (இன்று எம்மைக்காட்டச்சொல்லி) அழுகிறது, எவன்கொல் - யாது நினைத்து?

---

௮. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைத லுழப்ப தெவன்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—மேல் வினவுதனை யாராய்ந்தறியாது அன்றுகாத லரை நோக்கின்ற உண்கண்கள் இன்று இதற்கம்மால்வந்ததாகலிற் பொறுத்தல் வேண்டுமெனக் கூறுபடுத்து துணராது துன்பமுழப்பது என்கருதி? எ-று.

வினவுது—பிரிந்துபோயவர் வராமையிற் காண்டற்கரியராய் வருத்தல். முன்னே வருவரறிந்து அது காவாதார்க்கு அது வந்தவழிப் பொறுத்தலன்றே யுள்ளது, அதுவுஞ்செய்யாது வருந்துதல் கழிமடச்செய்கை யென்பதாம்.

(தே - ப - ரை.)—தெரிந்து உணரா — (மேல்வினவுதனை) ஆராய்ந்தறியாமல், நோக்கிய - (அன்று தலைவரைப்) பார்த்த, உண் கண் - (மை) உண்ட கண்கள், (இன்று இதற்கம்மால் வந்த தாதலால் பொறுத்தல் வேண்டுமென்று), பரிந்து உணரா — கூறுபடுத்தி அறியாமல், பைதல் உழப்பது - துன்பமனுபவிப்பது, எவன் - யாது நினைத்து?

௯. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழ்
மிதுநகத் தக்க துடைத்து

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்து நோக்கி இன்றுந் தாமேயிருந் தழுகின்றவிது நம்மாற் சிரிக்கத்தக்க வியல்பினையுடைத்து, எ-று.

கண்களென்பது அதிகாரத்தான் வந்தது. இதுவென்றது மேற்கூறிய கழிமடச் செய்கையை. அது வருமுன்னர்க் காப்பார்க்கு நகை விளைக்குமாகலான், நகத்தக்க துடைத்தென்றாள்.

(தே - ப - ரை.)—(இக்கண்கள்), கதுமெனத் தாம் நோக்கி - (அன்று காதலரை) தாமே விரைந்து நோக்கி, தாமேகலுழும் - (இன்றும்) தாமே யிருந்து அழுகின்ற, இது - இவ்வறியாமைச் செயல், நகத் தக்கது - (நம்மாலே) சிரிக்கத்தக்க இயல்பை, உடைத்து - உடையது.

ச. பெயலாற்று நீருலக்த வுண்க ணுயலாற்று
வுய்வினே பென்க ணிறுத்த.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—உண்கண்கள், அன்று யானுய்யமாட்டாமைக் கேது வாய ஒழிவில்லாத நோயை என்கண்ணே நிறுத்தி, தாமு மழுதலே மாட்டா வண்ணம் நீர் வற்றிவிட்டன, எ-று.

நிறுத்தல்—பிரிதலும் பின்கூடாமையு முடையாரைக் காட்டி அதனுல் நிலேபெறச் செய்தல். மூன் எனக்கின்னுதன செய்தலாற் பின் தமக்கின்னு தன தாமே வந்தன வென்பதாம்.

(தெ - ப - ரை.)—உண் கண் - (இந்த மை) உண்ட கண்கள், உயல் ஆற்று - (தான்) பிழைக்கமாட்டாமைக்கு ஏதுவாகிய, உய்வு இல் நோய் - ஒழிவில்லாத நோயை, என் கண்—, நிறுத்து - நிறுத்தி, பெயல் ஆற்று - (தாமும்) அழுமாட்டாத வண்ணம், நீர் உலர்த்த - நீர்வற்றிவிட்டன.

நி. படலாற்று பைத லுழக்குங் கடலாற்றுக்
காமநோய் செய்தவென் கண்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—எனக்குக் கடலுஞ் சிறிதாம் வண்ணம் பெரிதாய காம நோயைச் செய்த என்கண்கள் அத்தீவினையாற் முழுக் துயில்கிலவாய்த் துன் பத்தையு முழுவா நின்றன.

காமநோய் காட்சியான் வந்தாகலின், அதனைக் கண்களே செய்ததாக் கிக் கூறினுள். துன்பம் அழுதலானுயது.

(தெ - ப - ரை.)—(எனக்கு), கடல் ஆற்று - கடலுஞ் சிறிதாம் வண்ணம், (பெரிதாகிய), காம நோய் செய்த - காமநோயைச்செய்த, என் கண் - எனது கண்கள், (அத்தீவினை பாலே), படல் ஆற்று - (தாமும்) தூங்குகிலவாகி, பைதல உழக்கும் - துன்பத்தையும்

10

சு. ஒஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—எமக்கிக்காமநோயினைச் செய்த கண்களாமும் இத்து யிலா தழுதற்கண்ணேபட்டது மிகவுமினிதாயிற்று, எ-று.

இரண்டாம் அதிகாரம்-கண்விதுப்பழிதல்

ஓவென்பது மிகுதிப்பொருட்கண்வந்த குறிப்புச்சொல். தம்மால் வருத்தமுற்றவெமக்கு அது தீர்ந்தாற்போன்ற தென்பதாம்.

(தெ - ப - ரை.)—எமக்கு—, இக்கோய் - இக்காமநோயை, செய்த கண் - செய்தகண்கள், தாம் - தாமும், இதற்பட்டது - இத்தூங்காமல் அழுதலிலே பட்டது, முன் இனிது - மிகவும் இனிதாயிற்று.

எ. உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—விழைந்து உணெனெகிழ்ந்து விடாதே அன்று அவரைக்கண்ட கண்கள் இன்று உத்துயிலாதழுங்கலாய துன்பத்தினேயுழந்துழந்து தம்மகத்துள்ள நீர் அற்றேபோக, எ-று.

அடுக்கு இடைவிடாமைகண் வந்தது. அறுதலாகிய இடத்து நிகழ் பொருளின்றெழில் இடத்தின்மே னின்றது.

(தெ - ப - ரை.)—விழைந்து - விரும்பி, இழைந்து - உட்குழைந்து, வேண்டி—, அவர் கண்டகண் - (அன்று) அத்தலை வரைப் பார்த்த கண்கள், உழந்து உழந்து - (இன்று தூங்காமல் அழுதற்றுன்பத்தை) அனுபவித்து அனுபவித்து, உள் நீர் - (தம்) முள்ளிருக்கிற நீர், அறுக - அற்றுப் போகுக.

அ. பேணுது பெட்டார் புளர்மன் மனை மற்றவர்க்
காணுற் றமைவில கண்

[காதலர் பிரிந்துபோய்ஞாலிலர் அவரைக் காணுமாவும் நீயாற்றலில்லேமெனுற்ற தோழிக்குத் சொல்லியது.]

(பரி-ரை) எ-து,—நெஞ்சால் விழையாதவரைத் நச் சொன்மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தேயுளர்; அவ்வுண்மையையாற் பயன் யாது, அவரைக் கண்கள் காணுற்றமைக்கின்றன வில்லேயாயின், எ-று.

செயலாற்பிரிந்து நின்றமையிற் பேணுதென்றும், முன்னலம் பாராட்டிப் பிரிவச்சமும் வன்புறையுங கூறினராகலிற் பெட்டாரென்றுங கூறினள். மன்—ஒழியிசைக்கண வந்தது. மற்று—வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம்—அசைநிலே. யாஞற்றவுங கண்கள் அவரைக் காண்டற்கு விரும்பாதின்றன வென்பதாம். இனிக் கொண்கனேயென்ற பாடமாயின், என்கண்கள் தம்மைக் காணுதமைகின்ற கொண்கனைத் தாங்காணுதமைக்கின்றனவில்லே இவ்

வாறே தம்மை யொருவர் விழையாதிருக்கத் தாமவரை விழைந்தார் உலகத் துளரோ வென்றுரைக்க. இதற்கு மன்—அசைநிலை.

(தே - ப - ரை.)—பேதைஅது - (மனத்தால்) விரும்பாதிருந்து, பெட்டார் - (சொன்மாத்திரத்தால்) விரும்பியவர், உளர் மன் - (இந்நேர) இருக்கின்றார்; (அவ்விருத்தலால் பல பயனாது), கண்-கண்கள், மற்று அவர் காணுந - அவரைக்காணுமல், அமைவு இல - பொறுக்கின்றில.

கூ. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ நூர்தனை கண்

[நீயுமாயினி நின்னை நுதி துயிலாவாதல் பேணாடு
மேனிற தோழிக்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து—காதலர் வாராதஞான்று அவர் வரவு பார்த்துத் துயிலா, வந்தஞான்று அவர் பிரிவஞ்சித் துயிலா; ஆகலான் அவ்விருவழியும் என் கணகள் பொறுத்தலிய துன்பத்தினையுடைய, எ-று.

ஆயிடையெனச் சுட்டு நீண்டது. இனி அவற்றிற்குத் துயில் ஒருஞான்றுமில்லை யென்பதாம்.

(தே - ப - ரை.)—வாராக்கால் -(காதலர்) வாராதநாளில், துஞ்சா - (அவர் வரவுபார்த்து) தூங்காவாம்; வரின் - வந்தநாள் களிலே, துஞ்சா - (அவர் பிரிவரென்று அஞ்சி) தூங்காவாம்; (ஆகலால்), ஆயிடை - அவ்விருவழியும், என்கண் - எனதுகண்கள், ஆர் அஞர் உற்றன - பொறுத்தற்கரிய துன்பத்தை யுடையனவாம்.

கo மறைபிற வூராரார்க் கரிதன்றா லெம்போ
லறைபறை யன்னா ரகந்த.

[கடலரை லெய்தூர் இயற்பழியாமல் அவர் கோடுமையை மறைக்க வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—எம்மைப்போலும் அறைபறையாகிய கண்ணினை யுடையார் தங்கெஞ்சின்கணடக்கிய மறையை யறிதல் இவ்வூரின்க ணுள்ளார்க்கு எளிது, எ-று.

மறையென்றது ரண்டு மனக்கப்படுவதனை. அகத்து நிகழ்வதனைப் புறத்துள்ளார்க் கறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமை யுண்மையின், அறை பறையாகிய கண்ணென்றார். இதனைஞ் செய்யுள் விகார மாக்காது அறை பறைக் கண்ணரென்று பாடமோதுவாரு மூளர். யான் மறைக்கவும் இவை வெளிப்படுத்தாநின்றன வென்பதாம்.

(தே - ப - ரை.)—எம் போல் - எம்மைப்போலும், அறை பறை கண்ணர் - அறைபறையாகிய கண்ணையுடையவர், அகத்து - (தமது) நெஞ்சிலடக்கிய, மறை பெறல் - இரகசியத்தை அறிதல், ஊரார்க்கு - இவ்வூரிலுள்ளவர்க்கு, அரிது அன்று - எளிது.

கககூம் அதிகாரம்—பசப்புறுபருவரல்.

அது பசப்புற்றபருவரலென விரியும். அஃதாவது பசப்புறுதலாலுளவருத்தம். இதனைப் "பசந்தெறிந்தவர்" வென்பதுபோலக் கொள்க. பசப்பாவது பிரிவாற்றுமையான் வருவதோர் நிறவேறுபாடு. இது, தலைமகனைக் காணப்பெறுதலாற் பிரிந்துழ்வதாகலின், கண்விதுப்பழிதலின்பின் வைக்கப்பட்டது.

க. நயந்தவர்க்கு நல்காமை கோர்த்தேன் பரந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.

[பு ரி பிரிவு மிய்பட தலையகஸ் அஃதாற்று பசந்தவழித்
நபிறுள்ளோ சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,— என்னை நயந்தவர்க்கு அதுபொழுது பிரிவையுடம்பட்ட நான் அவையாற்றுது இதுபொழுது பசந்தவென்னியல்பினை யார்க்குச் சொல்வேன்? எ-று.

பிரிவென்பது அவரிலே உடம்படாவழி ஒழிதல்குறித்துப் பிரிவுணர்த்தினராகலின் அவரன்புடையேன் றுங்கருத்தான் நயந்தவரென்றும், இதுவேயுடம்பாடாக மேலும் பிரிவுகிழுமாகலின் இனி அவரைக் கூடுதலரிதென்னுங்கருத்தான் நல்காமையென்றும், முன்னருடம்படுதலும் பின்னராற்றுது பசத்தலும் பிறர்செய்தனவல்லவென்பாள் பசந்தவென்பண்பென்றும், யான் செய்துகொண்டதன்பத்தினை இன்னொருவர்க்குச் சொல்லலும் பழியாமென்னுங் கருத்தால் யார்க்குரைக்கோவென்றும் கூறினள்.

(தே - ப - ரை.)—நயந்தவர்க்கு - (என்னை) விரும்பிய தலைவர்க்கு, நல்காமை - பிரிவை, கோர்த்தேன் - (அப்போது) உடன்பட்ட நான், பசந்த - (அதனைப்பொறாமல் இப்பொழுது) பசப்பு நிறமடைந்த, என் பண்பு - என்னியல்பை, யார்க்கு உரைக்கோ - யார்க்குச் சொல்வேன்?

சுலி. "பந்தெரிவையாவு" எனவும் பிரிபேதம்.

ஈ. அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு.

[ஆற்றலெனக் கவலற்ற தோழிக்கு ஆற்றுவலெனாது படச் சொலலியது.]

(பரி-ரை.) எ-து,—இப்பசப்புத்தான், என்னை யுண்டாக்கினார் அவரென்னும் பெருமித்தான், என்மேனியை மேல்கொண்டு செலுத்தாநின்றது, எ-று.

* "குருதிகொப் புளிக்கும் வேலான் கூகந்மா விரைந்து செல்ல" என் புழியும் இவர்தல் இப்பொருட்டாத லறிக. இஃது உரிமைபற்றி யுரைக்கின்றது, இதற்கு நீ கவலல் வேணடா வென்பதாம்.

(தே - ப - ரை.)—(நான் பொறுத்திருக்கவும்), பசப்பு - இப் பசப்பு நிறம், அவர்—, தந்தார் என்னுந் தகையால் - (என்னை) உண்டாக்கினரென்னுங் களிப்பு மிகுதியால், என்மேனி மேல்—, இவர்தந்து - ஏறி, ஊரும் - செலுத்தாநின்றது.

உ. சாயலு நாணு மவரிகொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து.

[அழுது நாணு மழியாமல நீ யாயவல் லேமாகுமென்ற தோழிக்குச் சொலலியது.]

(பரி-ரை.) எ-து,—பிரிகின்ற ஞான்றே அவ்விரண்டற்கும் கலைமாறுக இக்காமநோயினையும் பசலையையும் எனக்குத் தந்து, எனமேனி அழகினையும் நாணினையும் அவர் கொணடுபோயினர், எ-று

எதிர் நிரனிறை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலை மாறுயிற்று. இனி அவர் தந்தாலல்லது அவை யுளவாகலும் இவை யிலவாக லுங் கூடாவென்பதாம்.

(தே - ப - ரை.)—(பிரிகின்றபொழுதே), கைம்மாறு - (அவ் விரண்டிற்கும்) கலைமாறுக, நோயும் பசலையும் - இக்காமநோயையும் பசலையையும், தந்து - (எனக்கு) தந்து, சாயலும் நாணும் - (என் மேனி) யழகையும் நாணத்தையும், அவர்—, கொண்டார்-கொண்டு போயினர்.

ஊ. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.

[பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையு மறிதியாகலின் நீடியாது வருவரென்றவழிச் சொல்லியது].

(பரி-ரை.) எ-து,—அவர சொறகளை யான மனததா னினையாதிதேன், வாக்காலுரைப்பதும் அவர நறறிறங்களையே; அவஙனஞ செயயாநிறகவும், பசப்பு வநது நின்றது, இது வஞ்சனையா யிருகக , எ-று

பிறவும் ஒவம அறறீலை மெய மறறை மனவாகருகளின வழிததாக லின் அதன் கணணுள வபபாற ரன்ருயிருக வகதமையின, இதனசெயல கள்ளமா யிருத்தெனத தானுந் தெளிதமை கூறியவாருயிறறு.

(தே - ப - ரை)—யான்—, உளளுவ ர - (அவர சொறகளை மனததால) நினைகஙின்றேன , உரைபபது - (பாயால) சொலலப் படுவதும், அவர நிமம - அவர நறகுணமே, (அபபடி செய்யாநிற் கவும்), பசபபு - பசலை நிறம (வநதுநின்ற து); உளளம -(இது) வஞ சணையா யிருகதது

நி உவக்க ணெங் காரலா தெ ளாவா ரிவகாணென் மேனி பரப்பூ வது

[காதலர பிரா நணிதது யிருகவும் ஆற்றகி றிலையெனப கொழிதது ழானிகு நகது கூறியது]

(பரி-ரை) எ-து,—பாஙகிய உகாதலர பிரிக செலவாரக், என மேனி பசப்பூவ தெங்கே யனீரு ? அபபெறறியது இனறு பிறிதொன ருமோ? எ-று.

உவககாண இவகாணெனனை ருடடினேற விடை சொறகள. தேய ணையாற காலவணமை கருதப்பட்டது. அவர செலவும பசபினது வர வும் பகலிரவுகளின செலவும வரவும போல்வ தறி தலைவது அறியாதாய போல நீ சொலலுகினற தெனனெனபதாம.

(தே - ப - ரை.)—உ அகாண் - அகாக நங்காய் காதலர்—, செல்வா - (பிரிநது) செலவாராக, என்மேனி - எனனுடலிவம், பசப்பு ஊர்வது - பசலைநிறபடை படி, இவ்வாண்-இஙகே யன்ரோ; [அபபடிப்பட்ட தி இன்ற வேரென்ருமோ]

ந. விளகுநிறம் பாரகு மிருளெபோ லொண்கண் முயக்குநிறம் பாக்கூட் பரப்பி

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—விளக்கினது மெலிவுபார்த்து நெருங்கிவரு மிருளே போல கொண்கன் முயக்கினது மெலிவுபார்த்து நெருங்கிவரும் இப் பசப்பு, எ-று.

பார்க்குமென்பன இலக்கணையாகொல். முன் பிரியாதிருக்கவந் தனைக் கவ காசம் பார். துவருமு பசப்புப் பிரிவுபெற்றால் என்செய்யா தென்பதாம்.

(தெ - ப - ரை.)—விளக்கு - விளக்கினது, அற்றம் பார்க்கும் - சோர்வுபார்த்து நெருங்கிவருகிற, இருளே போல்—, பசப்பு - பசலைநிறம், கொண்கன - தலைவனது, முயக்கு - புணர்ச்சியிலே அற்றம் பார்க்கும் - சோர்வுபார்த்து நெருங்கிவரும்

எ. புல்லிக் கிடந்தான் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—முன்னொருநாளன்று காதலரைப் புல்லிக்கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தேன் ; அப்புடைபெயர்ந்தவளவிலே பசப்பு அள்ளிக் கொள்வதுபோல வந்து செறிந்தது. எ-று.

கொளவென்பது குறைந்து நின்றது. அள்ளிக்கொள்வது-அள்ளிக்கொள் ளப்படும்பொருள். புடைபெயர்தலொழிதற்கு அவ்வாறுரையது இப்பிரி வின்கணுமாறு சொல்லலேயணுகுமோ வென்பதாம்.

(தெ - ப - ரை.)—புல்லி கிடந்தேன் - (முன்னொரு நாளிலே காதலரை தழுவிக்கிடந்த நான், புடை பெயர்ந்தேன் - (அறியாது) சற்றுவிலகினேன்; அவ்வளவில - அவ்விலகிய வளவிலே, பசப்பு - பசலைநிறமானது, அள்ளிக் கொள்வற்றே - அள்ளிக்கொள்ளப்படும் பொருள்போல் வந்து நிறைந்தது

அ. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்.

[நீங்குங்காலத்தும் பசலையிலையென்று தோழிக்கோடு
புலந்தது சொல்லியது]

(பரி-ரை.) எ-து —இவள் ஆற்றியிராது பசந்தாளென்று என்னைப் பழி கூறுவதல்லது இவளைவர்துறந்துபோயினரென்று அவரைக் கூறுவாரொரு வருமில்லை, எ-று.

என்பாரென வேறுபடுத்துக்கூறினுள், தன்னையே கெருங்குதல்பற்றிப் புலக்கின்றமையின்.

(தே - ப - ரை)—இவள்—, பசநதாள் என்பது அல்லால் - (பொறுத்திராமல்) பசலைநிற மடைந்தாளென்று (என்னை) பழி சொல்வதல்லது, இவளை—, அவர்—, துறந்தார் என்பார்-துறந்து போயினரென்று சொல்லுவரா, இல - இலலை.

ச. பசக்கமற் படடாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து —இப்பிரிவையாளே யுடம்படும் வகை சொல்லியவர் இன்று நின்கருத்தான் நலனிலையின ராவராயின், என்மேனி பட்டதுபடப் பசப்பதாக, எ-று.

நன்னிலையாதல்-நன்மைக்கணணே நிற்றலேயுடையராதல். பட்டாங் காகவென ஆக்கம் வருவித்துரைக்க. மூன் இப்பிரிவின் கொடுமையறியாத வென்னை இதற்குடமபடுத்திப் பிரிந்தவர் தவறிலராகவேவேண்டுவது, என் மேனியும் பசப்பும் யாதுசெய்யினென் னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

(தே - ப - ரை.)—நயப்பித்தார் - (இப்பிரிவை யாளே) உடம் படும்வகை சொல்லியவர், நல் நிலையா ஆவர் எனின் - (இன்று உன் கருத்தால்) நல்லநிலையின ராவராயின், என் மேனி—, பட்டாங்கு (ஆக) - பட்டதுபட, பசக்க - பசலைநிற மடையக்கடவது.

கo. பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்று ரெனின்

[நலமக ளாறுதற்பொரு டீத் தோழி நலமகனை யியற்
பழித்தவழி அவள் இயற்படமொழிந்தது.]

(பரி-ரை.) எ-து,—அன்று தாங்குறை நயப்பித்துக் கூடினவர்க்கு இன்று நல்காமையை நட்டோர் தூற்றுராயின், பசப்புற்றுளென வேற்றுமையாள னன்றிப் பசப்புத்தானுயினுளென ஒற்றுமையாற் சுருங்சொல்ல அப்பெயரைப் பெறுதல எனக்கு நன்று, எ-று.

நட்டாரென்பது அவாய்நிலையான் வந்தது. இயற்பழித்தல்பொருது புலக்கின்றனாகலின், இகழ்ச்சிக்குறிப்பாற் கூறினுள். அவரை அருளில ரென்னுது இன்னும் பசந்தாளிவளென்கையே யானுற்றுநெறியாவதென்ப தாம்.

(தெ - ப - ரை.)—கயப்பிக்கார் - (அன்று) குறைகயப்பித்திக் கூடினவர்க்கு, கல்காமை - (இன்று) அருளாமையை, தூற்றார் எனின் - (கட்புறத்தோர்) தூற்றாராயின், பசப்பு என - பசப்புத்தானுமினுமென்று (ஒற்றுமையால் தாம்) சொல்ல, போய்பெறுதல்—, நன்றே - (எனக்கு) நன்றாம்.

கஉ0-ம் அதிகாரம்—தனிப்படர்மிகுதி.

அது தனிப்படர்மிகுதியென விரியும். அஃதாவது படர்மிகுதி தலைவன்கண்ணன்றி முகங்கண்ணேயாதல் கூறுதல். அரசரும் பொருளுமோக்கிப் பிரிதலின் அவன்கண இல்லாமையிற்று. இது, பசப்புற்றது வருத்தியாட் குரிய தாகலின், பசப்புறுபருவத்தின்பின் வைக்கப்பட்டது.

க. தாம்வீழ்வார் தம்வீழப் பெறாதவர் பெற்றாரே
காமத்துப் பாழிலை கனி.

[காதலரும் பலரினுமாற்றாராய்க் கடிதிவரவாதலினவரோடு
பேர்ந்திருத்தலாற்றாமைத்தென் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து—தம்மாற் காதலிக்கப்பட்ட கணவரை தம்மைக் காதலிக்கப்பெற்ற மகளிர் பெற்றாற்போல காமநுகர்ச்சியென்னும் பயனில்லாத கனியை, எ-று.

காமம்—ஆகுபெயர். அத்து—அலவுருபுக்கண் வந்தது. முன்னைநல்வினை இல்வழிப் பெறப்படாமையிற் பெற்றாரென்றும், ஆயாற் றடையின்றி நுகரப்படுதலிற் காழில்கனியென்றும் கூறினன். நுகர்காதலர் பிரிதலேயன்றிப் பின் வாராமையுமுடைமையின், அக்கனி யாம் பெற்றிலே மென்பதாயிற்று.

(தெ - ப - ரை.)—தாம் வீழ்வார் - தம்மாலே விரும்பப்பட்ட கணவர், தம் வீழ - தம்மை விரும்ப, பெற்றவர் - பெற்றமகளிர், காமத்து - காமனுபவத்தினது, காழ் இல - விதத்தில்லாத, கனி - பழத்தை, பெற்றாரே - பெற்றாரன்றே

உ. வாழ்வார்க்கு வானம் பயற்றன்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் நலிக்கு மணி

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து—ஆரரும் பொருளுமோக்கிப் பிரிந்தார் தம்மையின்றியமையா மகளிர்க்கு அவரையின்றியமையாக் கணவர் அளவறிந்து வந்து செய்

பயல்—விதை.

யுத்தலோயளி தன்னையே நோக்கி உயிர்வாழ்வார்க்கு வானம் அளவறிந்து பெய்தாற்போலும், எ-று.

நகைகாதலர் நம்மை விழையாமையின் அத்தலோயளி யில்லோரகலான், மழைவறந்தழி அதனுன் வாழ்வார்போல இறந்துபடுதலே நமக்குள்ள தென்ப தாம்.

(தே - ப - ரை.)—(அறமும் பொருளும் இன்பமும் நோக்கிப் பிரிந்தால்), வீழ்வார்க்கு - (கம்மை) விட்டிருக்க மாட்டாதமக ளிர்க்கு, வீழ்வார - (அவரை) விட்டிருக்கமாட்டாதகணவர், அளிக் கும் - அளவறிந்துவந்துசெய்கிற, அளி - தலைபளி, வாழ்வார்க்கு - (தன்னையே நோக்கி) உயிர் வாழ்வார்க்கு, வானம்-மழை, பயந்தற்று- அளவறிந்துவந்து பெய்வதுபோலும்.

கூ. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு

[இதுபொருது.]

(பரி-ரை.) எ-து,—தாம் விழையுங்கணவரான் விழையப்படி மகளிர்க்கு ஏற்புடைத்து. காதலர் பிரிந்தாராயினும் நமை நீங்காது கடிதின்வருவர், வந் தால் நாமின்புற்று வாழ்துமென்றிருக்குஞ் செருக்கு, எ-று.

நாம் அவரான் வீழப்படாமையின், நமக்கமைவது இறந்துபாடென்ப தாம்.

(தே - ப - ரை.)—வீழுநர் - (தாமாம்) விரும்பப்படுகிற கணவ ரால், வீழப்படுவார்க்கு-விரும்பப்படுகிற மகளிர்க்கு, (காதலர் பிரிந் தாலும் நம்மைநினைந்து கடிதில் வருவார்), வாழுநம் என்னும் - (வந் தால நாம் இன்புற்று) வாழ்வோமென்றிருக்கிற, செருக்கு-தருக்கு, அமையும் - ஏற்புடைத்தாம்.

ச. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின.

[காதலரை யியற்பழித்தலையஞ்சி அவரருளி ன்மறைத்த கடவுட் கற்பினையாகலிற் கற்புடைமகளிரால் நன்குமதிக்கப்படுத் தியென்ற தோழிக்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—கற்புடைமகளிரால் நன்குமதிக்கப்படுவாரும் தாம் விரும்புங் கணவரான் விரும்பப்படாராயிற் றீவினையாட்டியர், எ-று.

நெறிப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தெழீஇயின்மை-நல்வினையின்மை. அஃது அருத்தாபத்தியாற்றீவினை யுடைமையாயிற்று. தீவினையுடையேற்கு அக் கண்குமிதிப்பாற் பயனில்லை யென்பதாம்.

(தே - ப - ரை)—வீழ்ப்படுவார்-(நற்பு)டைமகளிராலே) கண்கு மதிக்கப்படுவாரும், தாம் வீழ்வார் - தம்மால்விரும்பப்படுகிற கணவ ராலே, வீழப்படார் எனின் - விரும்பப்படாராயின், தெழீஇ யிலர் - தீவினையுடையரேயாவர்

நு. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை.

[அவர் பெரு காதலையுடையராயினும் அவர் காதலிக்காதிருந்தால் யாம் நோதற்பாலேமல்லேம்.]

(பரி-ரை.) எ-து—நமமாற் காதல்செய்யப்பட்டவர் நமக்கென்ன வின் பத்தைச் செய்வர்? அவ்வாறே தாமும் நங்கட்காதல் செய்யாவழி, எ-று.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அக்காதலுடைமையால் நாம் பெற் றது துன்பமே யென்பதாம்.

(தே - ப - ரை)—நாம் காதல் கொண்டார் - நம்மாலே காதல் கொள்ளப்பட்டவர், நமக்கு —, எவன் - என்னவின்பத்தை, செய்ப - செய்வார்? (அப்படியே), தாம் காதல கொள்ளாக்கடை - தாமும் (நம்மிடத்து) காதல்செய்யாத விடத்து ந

சு. ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யாணை மினிது

[இதுவுமது.]

(பரி-ரை) எ-து—மகளிர் ஆடவ ரென்னு மிருதலையினும் வேட்கை ஒரு தலைக்கண்ணேயாயின் அஃதின்னாது. காவினது பாரம்போல இருதலைக் கண்ணுமொப்பின், அஃதினிது, எ-று.

மூன்றனுருபுகள் எழன்பொருண்மைக்கண் வந்தன. கா—ஆகுபெயர். என்மாட்டிணடாயவேட்கை அவர்மாட்டிழண்டாயின், யாமிவ்வாறு துன்ப முழத்தல் கூடுமோ வென்பதாம்.

(தே - ப - ரை.)—(மகளிர் ஆடவர் எனப்படுகிற இரண்டிடங் களிலும்), காமம் - ஆசையானது, ஒருதலைபான் - ஓரிடத்தில் (உண்டாயின்), இன்னாது - துன்பஞ் செய்வதாம்; காபோல - காவு

டிப்பாரம்போல, இருதலையானும் - இரண்டிடங்களிலும் (ஒத்திருக்கு மாயின்), (அது), இனிது - இன்பஞ்செய்வதாம்.

எ. பருவரலும் பைதலும் காணன்கொல் காம
னொருவர்க் ணிரின்றுழுகு வான்.

[இதுவுமது.]

(பரி-ரை) எ-து,—காமநகர்த்தற்குரிய விருவரிடத்தும் ஒப்பநிற்ற லொழிந்து ஒருவரிடத்தே நின்ற பொருகின்ற காமக்கடவுள் அவ்விடத்துப் பசப்பானது பருவரலும் படர்மிகுதியும் அறியான்கொலோ, எ-று.

விளைவும் வெறுப்புமின், யெல்லார்கணணு நிகழ்த்தனவறிதற்குரிய கட வுளும் என்கண் வேறுபட்ட னை, இனி யானுய்யுமாறென்னை யென்பதாம்.

(தே - ப - ரை) — (காமத்தை அனுபவித்தற்குரிய இருவ ரிடத்தும் ஒத்துநில்லாமல்), ஒருவர்கண் நின்று - ஒருவரிடத்தே நின்று, ஒருதலான் - பேராசெய்கின்றவனுகிய, காமன்—, (அவ்வி டத்துப் பசப்பாகிய), பருவரலும் - நோயையும், பைதலும் - துன்பமிகுதியையும், காணன்கொல் - அறியானே.

அ. வீழ்வார்நி னின்றொற் பெறுஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணு நில்

[தலைமகள் ஆற்றுவிக்கானது சொல்லியது]

(பரி-ரை.) எ-து,—தம்மால் விரும்பப்படும் காதலர்நிறத்துநின்றும் ஓரின்சொல்லளவும் பெறுதே பிரிவாற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல வன் கண்மையுடையார் இவ்வுலகத்தில்லை, எ-று.

காதலர் நிறத்துசொல் யாதானும் எனக்கினிதென்னுங் கருத்தால், இன்சொலென்றுள். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. யான் வன் கண்ணேனுகலின், அதுவும்பெறுது உயிர்வாழ்கின்றே னென்பதாம்.

(தே - ப - ரை.)—வீழ்வாரின் - (தம்மால்) விரும்பப்படுங் காதலரிடத்திருந்து, இன் சொல் - ஓரின்சொலளவும், பெறுதே—, வாழ்வாரின் - (பிரிவுபொறுத்து) உயிர் வாழ்கின்ற மகளிர்போல், வன்கணு - கைரியமுடையவர்; உலகத்தே—, இல்

கூ. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செலிக்கு.

[ரிதுவுமது]

(பரி-ரை.) எ-து,—என்னுல் நசசப்பட்டகாதலர் என்மாட்டன்பிலரே யாயினும் அவர்திறத்தியாதானு மோசொல்லும் என்செவிக்கினியவாம், எ-று.

இழிவுசிறப்பும்மை, அவர் வாலிலொன்னுஞ் சொல்லாயினும் அமையு மென்பதுபட நின்றது. அதுவும பெற்றிலேனென்பதாம்.

(தே - ப - ரை)—நகை இயார் - (எம்மால்) விரும்பப்பட்ட தலைவர், கல்கார் எனினும் - (எமக்கு) அருள்செய்பா ராயினும், அவர்மாட்டு - அவரிடத்து, இசையாம - வாசொற்களுந், செவிக்கு-என்காதகளுக்கு, இனிய - இன்பஞ்செய்வன வாம்

கக. உறுஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறுஅய வாழிய நெஞ்சு

[தலைமகன் முதுபாலைபோந்து நாடை றுவப்பி ஈ கதுயோள்
நெஞ்சோடு சொலலியது.]

(பரி-ரை.) எ-து,—என்னை நெருநாகு நினனுநோயை யுரைக்க லுற்ற நெஞ்சே யீயாற்குயாயினும அரிதாய அதன்பொழுது, நினகருத் துய ரஞ்செய்கின்ற கடலைத தூராக முயல்வாயாக, அஃதெனிது எ-று.

உரைக்கலுற்றது அளவிறந்த நோயாகலானு கேட்பார் உறவிலராகலா னும் அது முடிவதொன்றனது, முடிந்தாலும பயனில்லையென்பது கருதாது, முயலாகின்ருயென்னுங குறிப்பான, வாழியவென்ருள.

(தே - ப - ரை)—உறுஅர்க் - (உன்னைநி) உறுதவர்க்கு, உறு நோய் - (உனது) மிகுந்தநோயை, உரைப்பாய - சொல்லலுற்ற, நெஞ்சு - நெஞ்சே! வாழிய - வாழ்வாயாக, (நீயொருயாயினும் அரி தாகிய அதனைவிட்டு), கடலை-(உனக்குத் துயரஞ் செய்கின்ற) கடலை, செறுய் - தூர்க்கமுயற்சிசெய், (அது எளிது)

கடகம் அதிகாரம்—நினைந்தவர்புலம்பல்.

அஃதாவது முன்கூடிய ஞான்றையின்பத்தினை நினைந்து தலைமக டனிமை யெய்தலும், பாசறைக்கட் டலைமகன் றனிமையெய்தலுமாம் இவ் வாறு இருவர்க்கும் பொதுவாதலிற்பற்றிப் பண்மைப்பாலாற் கூறப்பட்டது. இது, படர்மிகுதி தன்கண்ணதாகநினைந்த தலைமகட்கு முரிதாதலின், அவ் வியைபுபற்றி அதனிற்படர் மிகுதியின்பின் வைக்கப்பட்டது.

க. உள்ளினுங் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

[தூதாய்ச்சேன்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது]

(பரி-ரை) எ-து,—முன்கூடிய ஞான்றையின்பத்தினைப் பிரிந்துழி நினைக்தாலும் அதுபொழுது பெற்றாற்போல நிகராத மிகமகிழ்ச்சியைத் தருகலால், உண்டுழியல்லது மகிழ்ச்சிசெய்யாத கள்ளினும் காமம் இன்பம்பயத்தலுடைத்து, எ-று.

தன்னினமையுக் தலைமகளே மறவாமையுங கூறியவாறு

(தெ - ப - ரை)—(முன் அனுபவித்தஞான்றினின்பத்தை), உள்ளினும் - (பிரிந்தவிடத்து) நினைக்தாலும், (அப்பொழுது பெற்றதுபோல்), தீரா பெரு மகிழ் செய்தலால் - நீங்காத பெரு மகிழ்ச்சியைத் தருதலால், கள்ளினும் - (உண்டபோதல்லது மகிழ்ச்சிசெய்யாத) கள்ளைப்பார்க்கிலும், காமம்—, இனிது - இன்பந்தருதலையுடைத்து

உ. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்

[நீதுமைமது.]

(பரி-ரை) எ-து,—தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்கண்ணேதால் அந்நினைவார்க்கு அபபிரிவான வருவதோர் துணைபமில்லையாம். அதனாற் காமம் எத்தன்மையேனு மினிதொன்றே காண், எ-று.

புணர்ந்துழியும் பிரிந்துழியும் முபபவினிதென்பான், எனைத்தும்இனிதென்றான். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. ஞானறியவகை கூறியவாறு.

(தெ - ப - ரை)—தாம் வீழ்வார் - தம்மால் விரும்பப்படுவாரை, நினைப்ப-(பிரிவின்கண்) நினைந்தால், (அந்நினைந்தவர்க்கு), வருவது ஒன்று - (அப்பிரிவால்) வருவதோர்துன்பம். இல்-இல்லையாம்; (அதனால்), காமம்—, எனைத்து - பலவள வாயினும், ஒன்று நிதே காண்-இன்பந்தருவ தொன்றேகாண்,

ங. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும்.

[தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—எனக்கு தும்மல் எழுவதுபோன்று தோன்றிக் கெடாநின்றது. அதனாற் காதலர் என்னை நினைப்பாரைபோன்று நினையாராகல் வேண்டும், எ-று.

நினைத்தல்—அரும்புதல். சேய்மைக்கண்ணராய கேளிர் நினைக்குழி அக் நினைக்கப்பட்டார்க்குத் தும்மருண்டு மென்னு முலகியல்பற்றித் தலைமை னெடுத்துக்கொண்ட வினை முடிவதுபோன்று முடியாமை யுணர்த்தாள் சொல் லியதாயிற்று.

(தே - ப - ரை.)—எனக்கு, தும்மல்—, நினைப்பது போன்று - அரும்புதலேபோலே தோன்றி, கெடும் - கெடுகின் றது ; (அதனால்), நினைப்பவர் போன்று - (தலைவர்) என்னை நினைப் பவர் போன்று, நினையார்கொல் - நினையாராகல் வேண்டும்.

மு. பாரறி புலனெறி வகுத்தநெஞ் சதுநெஞ் சத்தோ
டோரு வளரே யவர்

[ஈரடியது.]

(பரி-ரை.) எ-து,—தம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுதுமுள ரேயா யிராநின்றார் அவ்வளவே அவருடைய நெஞ்சத்தும் யாமுமுள மாதலோ, ஆகேமோ? எ-று.

ஓகாரவிடைபொ [illegible] யுணர்த்தின்றது. உளமாயும் வினைமுடியாமையின் வாரா ராயினும், அது முடிந்தும் இலமாகலின் வாரா ராயினுமோவென்பது கருத்து.

(தே - ப - ரை.)—*பாரறி நெஞ்சத்து* - எமது நெஞ்சத்தில், அவர்—, *ஒருவளரே* - [illegible] (எப்பொழுதும்) உள்ளவராயே யிருக்கின்றார்; (அப்படி யே), அவர் நெஞ்சத்து - அவரது நெஞ்சிலும், யாமும்—, உளேம்கொல் - உள்ளோமாகின்றோமோ (ஆகேமோ).

நி தந்நெஞ்சத் தெதிர்மைக் கடிகொண்டார் நாணர்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்.

[இருவடியது.]

(பரி-ரை.) எ-து.—தம்முடைய நெஞ்சின்கணணே யாஞ்சொல்லாமல் எம்மைக் காவல்கொண்ட காதலர் தாமெம்முடைய நெஞ்சின்கண் ஒழியாதி வருதலே நாணர்கொல்லோ, எ-று.

ஒருவரைத் தங்கண் வருதற்கு ஒருகாலு மூடம்படாது தாமவர்கட் பல காலுஞ் சேறல் நாணுடையார் செயலன்மையின், நாணர்கொ லென்றாள்.

(தே - ப - ரை.)—*தம் நெஞ்சத்து* - தமது நெஞ்சிடத்து, (யாம் செல்லாமல்), *எம்மை*—; *கடிகொண்டார்* - காவல்கொண்ட

இஅஉ கஉகும் அதி. நினைந்தவர்புலம்பல்

தனிவர், எம் நெஞ்சத்து - எமது நெஞ்சினிடத்து, ஓவா வரல் - ஒழியாமல் (தாம்) வருதலுக்கு, காணர்கொல் - காணுவரோ.

சூ. மற்றியா னென்னுளேன் மன்னே வவரோடியா
னுற்றநா ளுள்ள வுளேன்.

[அவரோடு புணர்ந்தநாளை யியாற்றை நினைந்து இரங்துபாடேயதா
நிபறியை அதுமறந்தநெஞ்சே டெவறுத்தே
சோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—யான் அவரோடு புணர்ந்தருான்றை யின்பத்தை நினைதலான் இத்துன்பவெள்ளத்தும் உயிர்வாழ்கின்றேன்; அதுவின்றாயின் வேறெத்தால் உயிர்வாழ்வேன்? எ-று

நான்-ஆகுபெயர். உயிர்வாழ்தற்கு வேறாமுள, அவைபெற்றிலேனென் பதபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண வந்தது. அவை அவன்றாதுவரு தல், தன்றாதுசேறன் முதலாயின. அவை யாவதின்மையின், இதுவல்லது எனக்குப் பற்றுக்கோடில்லையென்பது கருத்து.

(தெ - ப - ரை)—யான் அவரோடு—உற்ற நாள்-புணர்ந்த நாளையின்பத்தை, உள்ள-நினைத்தலால், உளேன்-(இத்துன்ப வெள்ளத்தில்) உயிர்வாழ்கின்றேன்; மற்று-அது இல்லாயின், யான் என் உளேன்-வேறே எந்தால் உயிர்வாழ்வேன்

எ. மறப்பி னெனலவன் மற்கொல் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—அவ்வின்பத்தை மறத்தலறியேனுப் இன்னுள்ளாகிற் கவும், பிரிவு என்னுள்ளத்தைச் சுடாகின்றது; அகனால் பிரிவாற்றுதலான் மறந்தால் இறந்துபடாது உளேனவது எந்தால், எ-று.

* மறக்கப்படுவது அதிகாரத்தான் வந்தது. மன ரண்டும் அது படகின்று ஒழியிசையாயிற்று. கொல்-அசைநிலை.

(தெ - ப - ரை.)—மறப்பு அறியேன் - (அவ்வின்பத்தை) மறத்தலறியேனுகி, உள்ளினும் - (இன்று) நினையாகிற்கவும், (பிரி வானது), உள்ளம் - (என்) உள்ளத்தை, சுடும் - சுடுகின்றது; (அப்

---

* "செயப்படுபொருள்" எனவும்படும்.

படி பிரிவுபொறுத்த நான்), மறப்பின் - மறந்தால், எவன் ஆவன் - எத்தால் இறவாதிருப்பேன்.

அ. எனைத்து நினைப்பினும் காயா ரனைத்தன்றே
காதலர் செய்யுஞ் சிறப்பு.

[இத்துணை மறித்துமதது பகுதலர் தினைத்தினை செயினு
மெ ணைத்தா கெழீஇயது]

(பரி-ரை.) எ-து,—தம்மை யானைத்துணையும் மிகநினைக்காலும் அதற்கு வெகுளார்; காதலர் எனக்கு செய்யுமின்பமாவது அவ்வளவன்றே? எ-று.

வெகுளாமை-அதற்குடன்பட்டு நெஞ்சின்கணிற்றல். தனக்கு அவ்வின் பத்திற்சிறந்த தின்மையின், அவனை சிறப்பென்றாள். காதலர் கும்மாட்டரு ளென்றும், செய்யுமகுணமென்றும், பாடமோதுவாரு முளர். தோழி கூறிய வதனைக் குறிப்பாணிகழ்ந்து கூறுபவாறு.

(தெ - ப - ரை.)—காதலர்—, எனைத்து நினைப்பினும் - (நான் தம்மை) எவ்வளவு மிக நினைத்தாலும், காயார் - (அதற்கு) கோபியார்; செய்யும் சிறப்பு - (அவர் எனக்கு) செய்யுமின்பமாவது, அன்றே - அவ்வளவன்றே?

கூ விளியுமென் னின்னுயிர் வேறல்ல மெம்பா
ரளியின்மை யாற்ற நினைந்து

[தலைமகளே றாதுவரக் தாமதது வருந்துதலைய வுற்றுணர்ந்துத்
தோழிக்குச் சொல்லியது]

(பரி-ரை.) எ-து,—முன்பெல்லாம் நாமிருவரும் வேறல்லமென்று சொல்லுவார தளியின்மையை மிகவுநினைந்து எனதினியவுயிர் கழியாநின் றது. எ-று.

அளியின்மை-பின்வருவாரகலுமாய்ப்பிரிதலும், பிரிந்து வாராமையும், ஆண்டின்றழிந் தூதுவிடாமையும் முதலாயின. பிரிவாற்றல் வேண்டுமென வற்புறுத்தாட்கு என்னுயிர் கழிகின்றது பிரிவிற்கன்று அவரன்பின்மைக்கென எதிரழிந்து கூறியவாறு.

(தெ - ப - ரை.)—வேறு அல்லம் என்பார் - (முன்னெல்லாம் நாமிருவரும்) வேறல்லமென்று சொல்லுவாரது, அளி இன்மை - அருளில்லாமையை, ஆற்ற நினைந்து - மிகவும் நினைந்து, என் இன் உயிர் - எனது இனிதாகியவுயிர், விளியும் - கழிகின்றது.

இரண்டாம் அதிகாரம். கனவுநிலையுரைத்தல்

கக. விடாஅது சென்றூரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி.

[வன்புறை யெதிரழிந்தான் காமமிக்க கழிபடரான் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—மதியே என்னெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப் போயினுரை யானென் கண்ணளவா ஞபினும் எதிர்ப்படும்வகை நீ படா தொழிவாயாக, எ-று.

கண்ணளவா னெதிர்படுதலாவது மதி இருவரானு நோக்கப்படுதலின் இருவர்கண்ணும் அந்தகண்ணே சேரல். முதலொடு சினைக்கொற்றுமை புண்மையிற் சென்றூரைக்காணவென்றும், குறையுறுகின்றுளாகலின் வாழி யென்றுங் கூறினுள். இனிப் படாதென்பது பாடமாயின், கனவிடைக் கண்ணி ஞற்காணுமாறு மதி படுகின்றதில்லையென அதனைத் தூயில்பெறுது வருந்து கின்றுள் கூற்றுக் க. இப்பொருட்கு வாழியென்பது அசைநிலை.

(தே - ப - ரை)—மதி - சந்திரனே. வாழி - வாழ்க்கடவாய்; விடாது - (என்னெஞ்சை) விடாதிருந்தே. சென்றூரை - (விட்டுப்) போயினுரை. கண்ணினாலை - கண்ணாலாலாயினும். காண - எதிர்ப் படும்வகை, படாதி - (நீ) மறைபடாதிரு-யாயாக.

கஉஉ-ம் அதிகாரம் —கனவுநிலை புரைத்தல்.

அஃதாவது தலைமகன் தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக் குச்சொல்லுதல். அக்கனவு நனவின்கண்ணேவுமிகுதிபாற் கண்டதாகலின், இது நினைந்தவர் புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

க. காதலர் தூதொடு வந்த நனவினும்
கியாதுசெய் வேன்கொல் விருந்து

[தலையகன் றூது வாக்கண்மாட்டு சொல்லியது.]

(பரி-ரை) எ-து,—யான் வருந்துகின்றதறிந்து அதுதீரக் காதலர் விடுத்த தூதினைக்கொண்டு என்மாட்டுவந்த கனவினுக்கு யான் விருந்தாக யாதனைசெய்வேன்? எ-று.

விருந்தென்றது விருந்திற்குரசெய்யு முபசாரத்தினை. அது கனவிற் கொன்று காணுமையின், யாதுசெய்வே னென்றுள்.

(தே - ப - ரை.)—(யான் வருந்துகிறதை அறிந்து அதுதீர விடுத்த), காதலர் - தலைவரது; தூதொடு - தூதைக்கொண்டு, வந்த - (என்னிடத்து) வந்த, கனவினுக்கு—. விருந்து - விருந்தாக, யாது செய்வேன் - என்னசெய்யமாட்டுவேன்?

உ. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலர்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

[தூதுவிடக் கருதியாள் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—துஞ்சாது வருத்துகின்ற என்கயல்போல முண்கண்கள் யானிரந்தாற் றுஞ்சுமாயின் கனவிடைக் காதலரைக் காண்பேன், கண்டால் அவர்க்கியா னுற்றியுளேனை தன்மையை யானே விரியசொல்வேன், எ-று.

கயலுண்கணென்னுள், தடித்த கலடதிற்கிரபகி. உயல்-காமநோய்க்குத் தப்புதல். தூதாக்குசொல்லாது யாமடக்குவனவும் சொல்லுவனவற்றுள் ஞ சருகுவனவற்றின் பரப்புச்தான்ற சொல்வேனென்னுங் கருத்தாற் சாற்றுவேனென்னுள். இனி அவையுந்துஞ்சா சாற்றலுங் கூடாதென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைகணவுக்கது. முன்னுங்கண்டாள் கூற்றுகலின் கனவுநிலை யுரைத்தலாயிற்று.

(தே - ப - ரை)—கயல் உண் கண - (தூங்காதழிகின்ற) என் கயல்போலு மையுண்ட கண்கள், யான—, இரப்ப - இரந்தால், துஞ்சில்-தூங்குமாயின், கலந்தார்க்கு - (கனவிலே காணப்பட்ட) தலைவர்க்கு, உயல் உண்மை-பொறுத்திருக்கிற தன்மையை, சாற்று வேன் - (யானே) விரியச்சொல்லுவேன்.

ங. நனவினு னல்கா தவரைக் கனவினுற்
காண்டலி னுண்டென் னுயிர்.

[ஆற்றலோக் கவன்றுதூ ஆற்றவலெம்பதூபடச்
சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நனவின்கண் வந்து தலையளிசெய்யாதாரை யான் கனவின்கட்கண்ட காட்சியானே என்னுயிருண்டாகாநின்றது, எ-று.

மூன்றனுருபுகள் ஏழன்பொருணமைக்கண வந்தன. அக்காட்சியானே யானுற்றியுளேனுகினறேன நீ கவலலவேண்டா வென்பதாம்.

(தே - ப - ரை)—நனவினுன் - நனவில் (வந்து), நல்காதவரை-அருள்செய்யாத தலைவரை, கனவினுன் - கனவிடத்து, காண்டலின்-காணுதலால், என் உயிர்—, உண்டு - இருக்கின்றது.

கனவினு னுண்டாகுங் காம நனவினு
னல்காரை காடிக் கரப்பு.

இரண்டாம் அதிகாரம் கனவுநிலையுரைத்தல்

[இருவகைமதம்.]

(பரி-ரை.) எ-து,—கனவின்கண்வந்து தலையளி செய்யாதாரை அவர் சென்றழிகாடிக்கொண்டுவந்து கனவுகருதலான் அக்கனவின்கண்ணே எனக் கின்பமுண்டாகாநின்றது, எ-று.

காமம் - ஆகுபெயர். நான்காவது மூன்றன்பொருண்மைக்கண் வந்தது. இயல்பான் நல்காதவரை அவர்சென்ற தேயமறிந்து சென்று கொண்டு வந்து தந்து நல்குவித்தகனவால் யானுற்றவை லென்பதாம்.

(தே - ப - ரை.)—கனவினால் - கனவில் (வந்து), நல்காரை - அருள்செய்யாதவரை, நாடித்தாற்று - (அவரிடமானவிடம்) தேடிக் கொண்டுவந்து தருதலால். கனவினால் - அக்கனவில், காமம்-இன்ப மானது, உண்டாகும் - (எனக்கு) உண்டாகின்றது.

குறி. கனவினும் கண்டனை மாயன்மே கனவுதான்
கண்ட பொழுதே யினிது.

[இருவகைமதம்.]

(பரி-ரை.) எ-து,—முன்னனவின்கண அவனைக்கண்டு துயர்ந்த வின் பத்தானு மினிதாயிறறு அப்பொழுதே, இன்று கனவின்கட்கண்டு துயர்ந்த வின்பமும் அக்கணடபொழுதே யினிதாயிற்று, அதனுன் எனக்கிரண்டு மொத் தன, எ-று.

இனிதென்பது முன்னுங்கூட்டப்பட்டது. கனவு-ஆகுபெயர். முன்னும் யான்பெற்றதிவ்வளவே, இனனும் அது கொண்டாற்றுவலென்பதாம்.

(தே - ப - ரை.)—கனவினால் - (முன்னே) கனவினிடத்து, கண்டதும் - (தலைவரை) கண்டு அனுபவித்தவின்பமும், அங்கே - அக்கண்டபொழுதே, இனிது-இனிதாயிற்று; கனவுதான்-(இன்று) கனவினிடத்துக் (கண்டு அனுபவித்தவின்பமும்), கண்டபொழுதே - இக்கண்டபொழுதே, இனிது-இனிதாயிற்று ; (அதனால் எனக்கு இரண்டும் ஒத்தன)

சுக. கனவென வொன்றில்லை யாயிற் கனவினுற்
காதலர் நீங்கலர் மன்.

[இருவகைமதம்.]

(பரி-ரை) எ-து,—கனவென்று சொல்லப்படுகின்ற ஒருபாவி இல்லை யாயின், கனவின்கணவந்து கூடிய காதலர் என்னைப் பிரியார், எ-று.

ஒன்றென்பது அதன்கொடுமைமிளக்கி நின்றது. அஃது இடையே புகுந்து கனவைப்போக்கி அவரைப் பிரிவித்ததென்பதபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கனவிற்பெற் ருற்றுகின்றமை கூறியவாறு.

(தே - ப - ரை.)—நனவு என ஒன்று - நனவென்று சொல்லப் படுகின்ற ஒருபாவி, இல்லை ஆயின் - இல்லாவிடின், கனவினுள் - கனவினிடத்து (வந்துகூடிய), காதலர் - அன்பர், நீங்கலர்-(என்னை) பிரியார்.

எ. நனவினு னல்காம் கொடியார் கனவினு
னென்னெம்மைப் பீழிப் பது.

[விழித்துழித் காணாயினுங் கனவிற்கூட்டு நினைந்து
ஆற்றாயாயச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—ஒருஞான்றும் நனவின்கண் வந்து தலையளிசெய்யாத கொடியவர் நாடோறு நனவின்கண் வந்து நம்மைவருத்துவது எவ்வியைபு பற்றி, எ-று.

பிரிதலும் பின்னினைந்து வாராமையுநோக்கிக் கொடியாரென்றும், கனவிற்றோண்மேலாய் விழித்துழிக் காத்தலின் அதனினுங் துன்பமாகின்ற தென்பாள் பீழிப்பதென்றுங் கூறினாள். நனவினில்லது கனவினுமில்லை யென்பார், அது கண்டிலமென்பதாம்.

(தே - ப - ரை)—நனவினுள் - (ஒருதினமாயினும்) நனவில் வந்து, நல்கா - அருள்செய்யாத, கொடியார்—, கனவினுள் - (திங்கள் தோறும்) கனவில் வந்து, எம்மை—, பீழிப்பது - வருத்துவது என் - யாதுபற்றி

அ திஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து.

[தானுறுதற்பொருட்டேத் தலைமகளையறவழித்தாட்டு
இயற்பட மொழிந்தது.]

(பரி-ரை.) எ-து.—என்னெஞ்சு விடாதுறைகின்ற காதலர் யான் றுஞ் சும்பொழுது வந்து என்றோண்மேலராய்ப் பின் விழிக்கும்பொழுது விரைந்து புழைய நெஞ்சின்கண்ண ராவர், எ-று.

கல்விவிட்டுமறையுங் கடுமைபற்றி விரைந்தென்றாள். ஒருகாலும் என்னை நீங்கி யறியாதாரை நீ நோவதற்பாலையல்லை யென்பதாம்.

(தே - ப - ரை.)—(என்னெஞ்சு விடாமல் உறைகின்ற காதலர்), திஞ்சுங்கால் - (யான்) தூங்கும்போது, தோள்மேலர் ஆகி—, விழிக்கும் கால் - (பின்) விழிக்கும்போது விரைந்து—, நெஞ்சத்தார் ஆர் - (பழைய) நெஞ்சினுள்ளவ ராவர்.

இரண்டாம் அதி. கனவுநிலையுரைத்தல்

கூ. நனவினு னல்காரை நோவர் கனவினுற்
காதலர்க் காணு தவர்

[இதுவுமது]

(பரி-ரை.) எ-து,—தமக்கொருகாதலரின்மையின் அவரைக் கனவிறகண் டறியாத மகளிர் தாமறிய நனவினகண வந்து நலகாத நங்காதலரை அன்பில ரென நோவாநிற்பர், எ-று.

இயற்பழித்தபொருது புலகின்ருளாகலின், நன்மைதோன்றக் கூறி னுள். தமக்குய காதலருளராய அவரைக கனவிற கண்டறிவாராயின் நங காதலர் கனவின்கணுற்றி நல்குகலறிது நோவாரென்பதாம்.

(தே - ப - ரை.)—(தமக்கு ஒருகாதலர் இல்லாமைபாலே), கனவினுன் - கனவிலே, காதலர்க் காணுதவர் - அக்காதலரைக் காணலறியாதமகளிர், நனவினுல் - (தாம் அறிய) நனவிலவந்து, நல் காரை - அருள்செய்யாத (எனது) காதலரை, நோவர் - (அன்பில ரென்று) நோவாநிற்பர்

கo. நனவினு னங்நீத்தா ரென்பர் கனவினுற்
காணர்கொ லில்லெ ரவர்

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—இவ்வூரினமகளிர் நனவின்கண நமமை நீத்தாரென்று நங்காதலரைக் கொடுமை கூறி, அவர் கனவினகண வங்காதுவருதல் கண்டறியாரோ, எ-று.

என்னெடு தன்னிடை வேற்றுமையின்ருயின் யான்கண்டது நானுய கண்டமையுமு, அதுகாணாது அவரைகொடுமை கூறுகின்றமையின் அய லாளேயாமென்னுக கருதுதால், இவ்வூரவரென்ருள்.

(தே - ப - ரை.)—இ ஊரவர் - இவ்வூரின் மகளிர், நனவினுல்- நனவினிடத்து, நம் நீத்தார் என்பர் - நம்மைவிட்டு நீங்கினரென்று (தலைவர்மேலகொடுமை) சொலலாநிற்பர் ; கனவினுன் - கனவினிடத்து, காணர்கொல் - (அவர்நீங்காது வருதலை) கண்டறி யாரோ.

*அஃதாவது மாலைப்பொழுது வந்துழி அதனைக்கண்டு தலைமகளிரங்குதல். * கனை முந்துறுத்த வினையில்லை யென்பதுபற்றிப் பகற்பொழுதாற்றி யிருக்தாட்கு உரியதாகலின், இ ; கனவுந்லையுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.*

க. மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

[பொழுதோடு புலந்து சொல்லியது.]

(பரி-ரை.) எ-து.—பொழுதே, நீ முன்னுள்களின் வந்த மாலையோ வெனின், அல்லை; இருக்தவாறன்றி அக்காட்காதலரை மணந்த மகளிருயிரையுண்ணும் இறுதிக்காலமா யிருந்தாய், எ-று.

முன்னுள் - கூடியிருந்த ாள். அந்நாண்மணந்தாயெனவே, பின்பிரிந்தாதல் பெறுதும். வாழியென்ப தொரு குறிப்புச்சொல், † "வாலிழை மகளிர் உயிர்ப் பொதியவிழ்க்கு காலை" என்றாற்போல ஈண்டுப் பொதுமையாற் கூறப்பட்டது. வேலையென்பது ஆகுபெயர். வேலையென்பதற்கு வேலையிருந்தா யென்பாருமுளர்.

(தே-ப-ரை)—பொழுதே - பொழுதே, வாழி - வாழக்கடவாய்; நீ மாலையோ அல்லை - (முன்னுள்களின்வந்த) நீ மாலைக்காலமோ அல்லை ; மணந்தார - (அந்நாள்களிலே காதலரைக்கூடிய) மகளிரது, உயிர் உண்ணும் - உயிரையுண்ணுகிற, வேலை - முடிவு காலமாயிருந்தாய்.

உ. பழங்கண்ணே வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ணை தோநின் றுணை.

[தனதுபிரிவைப்பற வை அதனுக்கிரங்கிச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து —மயங்கியமாலாய், நீயுமெம்போலப் புண்கணுடையையாயிருந்தாய் ; நின்றுணையும் எந்துணைபோல வன்கண்மையுடையதோ, கூறு வாயாக, எ-று.

மயங்குதல் - பகலுமிரவுந் தம்முள்ளே விரவுதல் ; கலங்குதலுந்தோன்ற நின்றது. புன்கண்-ஒளியிழத்தல் ; அதுபற்றித் துணையுமுண்டாக்கிக் கூறினள். எசசம்மை விகாரத்தாற் பிறக்கது. எமக்குத்துன்பஞ் செய்தாய், நீயுமின்ப முற்றிலை யென்னுங் குறிப்பால் வாழியென்றாள்.

* பழவொழி, உ. (உரைகடை).
† கலி, நெய்தல், உ.

(தே - ப - ரை.)—மருள் மாலை - மயங்கிய மாலையே ! வாழி-வாழக்கடவாய்; (நீயும்), புன் கண்ணை - (எம்போல்) ஒளியிழப்பை புடையாய் ; நின் துணை - உனது துணையும், எம் கேள்போல் - எமது துணைபோல, வன் கண்ணதோ - இரக்கமில்லாமை புடை யதோ, (சொல்லு).

கூ. பனியரும்பிப் பைதல்கொண் மாலை தனியரும்பித்
தன்பம் வளர வரும்.

[ஆற்றல்வேண்டுமென்று தோழிக்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—காதலர்கூடிய நாளெல்லாம் என்முன் நடுக்கமெய் திப் பசந்துவந்த மாலை இந்நாள் எனக் கிறந்துபாடு வந்துதோன்றி அதற்குள தாந்துன்பம் ஒரு காலைக்கொருகால் மிகவாரின்ற து, எ-று.

குளிர்சசிதோன்ற மயங்கிவரு மாலையென்னுஞ் செம்பொருள் இக்குறிப் புணரந்தது. தனி - உயிர்வாழ்தற்கண வெறுப்பு. அதனால் யாளுற்றமா றென்னையென்பது குறிப்பெசசம்.

(தே - ப - ரை.)—(தலைவர் கூடியகாலெல்லாம்), பனி அரும்பி-(என்முன்னே) நடுக்கமடைந்து, பைதல் கொள் மாலை - பசந்து வந்த மாலையானது, தனி அரும்பி - (எனக்கு) உயிர்வாழ்தலில் வெறுப்புண்டாகி, துன்பம் - (அதற்கு உண்டாகிற) துன்பம், வளர (ஒருகாலைக்கொருகால்) மிக, வரும் - வருகின்றது.

ச. காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காதலருள்ள பொழுதெல்லாம் என்னுயிர் தளிர்ப்ப வந்தமாலை, அவரில்லாத இப்பொழுது அஃதொழிந்து கிற்றலேயன்றிக் கொல்லுங் களரியிற் கொலைஞர் வழுமாறுபோல அவ்வுயிரைக்கோடற்கு வாராநின்றது, எ-று.

ஏதிலர் - அருள்யாதுமில்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன் பஞ் செய்துவந்தபொழுதும் இன்று என்மேற்பகையாய்த் துன்பஞ்செய்து வாராநின்றது, இனி யாளுற்றமா றென்னே யென்பதாம்.

(தே - ப - ரை.)—மாலை - (தலைவர் உள்ளபொழுதெல்லாம் என்னுயிர் தளிர்க்கவந்த) மாலை, காதலர் இல் வழி-தலைவரில்லாத இப்பொழுது, கொலைக் களத்து-கொலைசெல்கிற இடத்திலே, ஏதி

போல - கொலைஞர்போல, வரும் - (அவ்வுயிரைக் கொள்ளு
கு) வருகின்றது.

நி. காலேக்குச் செய்தகன் றென்கொ லெவன்கொல்யான்
மாலேக்குச் செய்த பகை.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காலையும், மாலையும், அவர் கூடியஞான்றுபோலாது
ஞ்ஞான்று வேறுபட்டு வாராநின்றன அவற்றுள், யான் காலேக்குச்செய்த
பகாரம் யாது மாலேக்குச்செய்த அபகாரம் யாது, எ-று.

கூடியஞான்று பிரிவரென் றஞ்சப்பணிய காலை அஃதொழிந்து இஞ்
ஞான்று கங்குல்வெள்ளதிற்குக் கரையாய் வாராநின்ற தென்னுகருத்தால்
ன் றென்கொலென்றும், கூடியஞான்று இன்பஞ்செய்துவந்த மாலை அஃ
தொழிந்து இஞ்ஞான்று அளியறன்பஞ் செய்யாநின்ற தென்னுகருத்தாற்
கையவன்கொலென்றுங் கூறினுள். பகை—ஆகுபெயர். தனஞ்தொடர்ந்த
லேபோலாது மாலை தன்கொமையாற றுன்பஞ்செய்யாநின்ற தென்ப
ரம்.

(தே - ப - ரை.) —(காலேயும்,மாலையும், அவர் கூடியகாள்போலல்
ாமல் இன்று வேறுபட்டு வருகின்றன; அவைகளுள்) காலேக்கு—,
செய்த - (என்னுலே) செய்யப்பட்ட, நன்று - உபகாரம், என் -
ாது? மாலேக்கு—, செய்த - செய்யப்பட்ட, பகை - அபகாரம்,
வன் - யாது?

கூ. மாலேநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலே யறிந்த திலேன்.

[இன்று இன்னேயாகின்ற நீ அன்று அவாபிரிவிற்கும்பட்ட
தென்னேயென்றுட்கி சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—முன்னெல்லாம் எனக்குநட்பாய் இன்பஞ் செய்து
போந்த மாலே இன்று பகையாய்த் துன்பஞ்செய்தலேக் காதலர் பிரிதற்கு
முன்னே அறியப்பெற்றிலேன், எ-று.

இங்ஙனம் வேறுபடுத லறிந்திலேன், அறிந்தேனுயின் அவர்பிரிவிற்
குடம்படே னென்பதாம்.

(தே - ப - ரை.)—மாலே - (முன்னெல்லாம் எனக்கு நட்பாய்
இன்பஞ்செய்துவந்த) மாலேக்காலை, நோய் செய்தல் - (இன்று
பகையாய்) துன்பஞ் செய்தலே, மணந்தார் - தலேவர், அகலாத

காலை - பிரிதற்கு முன்னே, அறிந்தது இலேன் - அறியப்பெற்றிலேன்.

எ. காலே யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிக் கோய்.

[மாலைப்பொழுதிலீங்கே இவ்வையாதற்குக் காரண
மென்னை யெனக்கேட்கச் சொல்லியது]

(பரி-ரை) எ-து,—இக்காமநோயாகிய பூக் காலைப்பொழுதின்கணரும்பி பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து மாலைப்பொழுதின்கண் மலராநிற்கும், எ-று.

துயிலெழுந்தபொழுதாகலிற் கனவின்கட்கூட்ட நினைந்தாற்றுதல்பற்றிக்காலையரும்பியென் றும்,பின் பொழுது செலச்செல அதுமறந்து பிரிவுள்ளியாற்ருனாதல்பற்றிப் பகலெல்லாம் போராகியென்றும், தத்தந்துணையையுள்ளிவந்து சேரும் விலங்குகளேயும் மக்களேயுங்கண்டு தான் அக்காலத்தினுகர்ந்த வின்பநினைந்தாற்றுமை மிகுதிபற்றி மாலைமலருமென்றுங் கூறினுள். பூப்போல இந்நோய் காலவயத்தாற் ருன்றுதென்பது உருவகத்தாற் பெறப்பட்டது. ஏகதேச வுருவகம்.

(தே - ப - ரை.)—இக் கோப் - இக்காமநோயாகிய(பூ), காலை யரும்பி - காலைப்பொழுதில் அரும்பி, பகல் எல்லாம் போதாகி - பகற்பொழுதெல்லாம் பெரிய அரும்பாய் முதிர்ந்து, மாலை மலரும் - மாலைப்பொழுதில் மலர்கின்றது.

அ. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து.—முன்னெல்லாம் இனிதாய்ப்போந்த ஆயன்குழல் இதுபொழுது அழல்போலச சுடுவதாய மாலைக்குத் தூதுமாய் அதுவர் தென்னைக் கொல்வழிக் கொல்லும் படையு மாயிற்று, எ-று.

பின்னின்ற போலுமென்பது உவமை. முன்னரே வரவுணர்த்தலிற் தூதாயிற்று; கோறற்கருவியாகலிற் படையாயிற்று. தானே சுடவல்லமாலை இத்தனையும் பெற்றுல் என்செய்யா தென்பதாம்.

(தே - ப - ரை)—ஆயன் குழல் - (முன்னெல்லாம் இன்பஞ் செய்த) இடையனது வேணுகானம், அழல் போலும் - (இப்போது) நெருப்புப்போலே சுடுவதாகி, மாலைக்கு தூது ஆகி—, (அம்மாலை

வந்து எண்ணைக்கொல்லும்படத்து), கொல்லும் படை - கொலைசெய்யும் படையுமாயிற்று.

பைதல் உழக்கு மதிமருண்டு
படர்தரும் போழ்து.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயுழற்றேன் இனிக் கண்டாரும் மதிமருளும்வகை மாலை வரும்பொழுது இப்பதியெல்லாம் மயங்கி நோயுழக்குமு, எ-று.

மதிமருளவென்பது மதிமருண்டெனத் திரிந்துநின்றது. கூற்றமாகக் கருதிக் கூற்ஞளாகலின், மாலைபடர்தரும்போழ்தென்ருள். யானிறந்துபடவே' லென்பதாம். மாலை மயங்கிவரும் போழ்தென மதிலிலேலகலகி நோயுழக்கு மென் றுரைப்பாருமூர்.

(தெ - ப - ரை.)—(இதற்கு முன்னெல்லாம் யானேமதிமயங்கி நோயுழற்றேன்), மதிமருண்டு - (இனிக்கண்டாரும்) மதிமருளும் வகை, மாலை—,படர்தரும் போழ்து - வருந்பொழுது, பதி - இவ்வூரெல்லாம், மருண்டு - மயங்கி, பைதல் உழக்கும் - நோயை அனுபவிக்கும்.

கஎ. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காதலர் பிரிவைப் பொறுத்து இறந்துபடாதிருந்த என்னுயிர் இன்று பொருளியல்பே தம்மியல்பாக வுடையவரை நினைந்து, இம்மயக்குமாலைக்கணமே இறந்துபடா ன்றது, எ-று.

குறித்தபருவம் கழியவும் பொருணமுடிவுநோக்கி வாராமையிற் சொல் வேற்று படாமையாகிய தம்மியல்பொடுக்கவர் அப்பொருளியல்பே தம்மியல் பாயினர், காலமிதுவாயிற்று, இனி நீ சொல்கின்றவாற்றுற் பயனில்லையென் பதாம்.

(தெ - ப - ரை.)—என் மாயா உயிர் - (பிரிவைப்பொறுத்து) இறவாதிருந்த என்னுயிரானது, பொருள் மாலை ஆளரை - பொருளியல்பே தமக்கியல்பாக வுடையவரை, உள்ளி - நினைந்து, மருள் மாலை - இம் மயங்கு மாலையிலே, மாயும் - மாய்கின்றது.

கூசம் அதிகாரம்—உறுப்புநலனழிதல்.

அஃதாவது தலைமகன் கண்ணும், தோளும், நுதலுமுதலாய அவயவங்கள் தம்மழகழிதல். இஃது, இரக்கமிக்குழி நிகழ்வதாகலின், பொழுதுகண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.

கூ. சிறுமை நமக்கொழியச் சேட்சென்ற சுள்ளி
நறுமலர் நாணின கண்.

[ஆற்றுமைமிகுதியான் வேறுபட்ட தலைமகடீதுச்
சோழி சொல்லியது.]

(பரி-மா.) எ-து,—இவ்வாற்றுமை நங்கணவே நிற்பத் தாஞ் சேணிடைச்சென்ற காதலரை நீநினைந்தழுதலால் நின்கண்கள் ஒளியிழந்து முன்றமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம நாணிவிட்டன, எ-று.

நமக்கென்பது வேற்றுமை மயக்கம். உள்ளவென்பது உள்ளியெனத் திரிந்து நின்றது. உள்ளுதலென்பது காரணப்பெயர் காரியத்திற்காய வாகு பெயர். இவை கண்டார் அவரைக கொடுமை கூறுவர் நீயாற்றல் வேண்டுமென்பது கருத்து.

(தே - ப - ரை)—சிறுமை - இப்பொறுமை, நமக்கு ஒழிய - நம்மிடத்தினின்று, சேண் சென்றார் - நெடுந்தூரத்திலே சென்ற தலைவரை, உள்ளி - நினைத்து (அழுதலால்), கண் - (உன்) கண்கள், (ஒளியிழந்து), நறுமலர் - (முன்னே தமக்குநாணின) நல்லமலர் களுக்கு, நாணின - (இன்று) நாணிவிட்டன.

ஒ. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரு நுங் கண்

[இதுவுமது.]

(பரி-மா.) எ-து,—பசப்பெய்தன்மே னீர்வார்கின்ற நின் கண்கள் நம்மா னயக்கப்பட்டவரது நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவபோலா நின்றன, இனி நீயாற்றல் வேண்டும், எ-று.

சொல்லுவபோறல் அதனை யவருணர்தற் கனுமானமாதல். நயந்தவர்க் கென்று பாட மோதுவாரு முளர்.

(தே - ப - ரை.)—பசந்து - நிறம் வேறுபட்டு, பனிவாரும் கண் - நீர் ஒழுகுகின்ற கண்கள், நயந்தவர் - (நம்மால்) விரும்பப் பட்டவரது, நல்காமை - அருள்செய்யாமையை, சொல்லுவபோலும் - (பிறர்க்குச்சொல்லுவ) போல்கின்றன, (இனி நீ பொறுத்தல் வேண்டும்).

ங. தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காதலர் மணந்த ஞான்று இன்பமிகுதியாற் பூரித்த நின் றோள்கள் இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவதுபோல மெலியாநின்றன, இது தகாது, எ-று.

அன்று மவ்வாறு பூரித்து இன்று மிவ்வாறு மெலிந்தால் இரண்டுங் கண்டவர் கடிதினறிந்து அவரைத் தகவின்மை கூறுவ ரென்பதாம்.

(தே - ப - ரை.)—மணந்த நாள் - (தலைவர்) கூடிய நாளில், வீங்கிய - (இன்பமிகுதியால்) பூரித்த, தோள் - (நினது) தோள்கள்; தணந்தமை - (இன்று அவர்) பிரிந்தமையை, சால அறிவிப்ப போலும் - விளங்க அறிவிப்பவைபோல் வாடுகின்றன, (இது தகாது).

ச. பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—அன்றுந் தந் துணைவர் நீங்குதலான் அவராற்பெற்ற செயற்கை யழகேயன்றிப் பழைய வியற்கை யழகுமிழந்த இத்தோள்கள் இன்றதற்குமேலே தம்பெருமை யிழந்து வளை கழலாநின்றன, இவை யிங்ஙனஞ் செயற்பாலவல்ல, எ-று.

பெருமையிழத்தல்—மெலிதல். பைந்தொடி—பசிய பொன்னைச் செய்த தொடி. சோருமென்னும் வினைத்தொழில் தோணமேனின்றது. அன்றும் பிரிந்தாரென்று அவரின்மை யுணர்த்தி இன்றும் குறித்த பருவத்து வரு திலரென்று அவர் பொய்ம்மை யுணர்த்தாநின்றன, இனி அவற்றைக் கூறுகின்றீர்மேற் குறையுண்டோ வென்பதாம்.

(தே - ப - ரை.)—துணை நீங்கி - (அன்றும்) துணைவர் நீங்குதலால், (அவராலே பெற்ற செயற்கை யழகுமாத்திர மல்லாமல்) தொல் கவின் - பழைய இயற்கையழகும், வாடிய தோள் - இழந்த இத்தோள்கள், (இன்று அதற்குமேலே), பணை நீங்கி - (தம்) பெருமையிழந்து, பைந்தொடி - புனம்பொன்வளைகள், சோரும் - கழலுகின்றன; (இவை இப்படிசெய்யுந் தன்மையனவல்ல).

நி. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தோள்களின் வாடிய தோள்.

[இதுவுமது.]

(பரி-மை.) எ-து,—கவலுற்றை நெகிழினும் ஆற்றுமாட்டி இக்கால நீட்டத்து என்னுமென்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லாகின்றன, வளைகளுங் கழன்று பழைய வியற்கையழகு மிழந்த இத்தோள்கள். இனியதனை யாமறைக்குமா றென்னை, எ-று.

உரைக்கு மென்பது அப் பாருண்மை தோன்ற நின்ற குறிப்புச்சொல். ஒடு வேறுவினைக்கண் வந்தது. அவரொடு கலந்த தோள்களே சொல்லுவன வாளல் அயலார் சொல்லுதல் சொல்லவேண்டுமோ வென்பதாம்.

(தே - ப - ரை.)—கொடியார் - (தழுவுங்கை விலகினும் பொருதவஞ்சு இப்படி காலநீட்டிப்பில் என்னுமென்று நினையாத) கொடியவரது, கொடுமை - பொய்யான்கை, உரைக்கும் - சொல்லுகின்றன, தொடியொடு - வளைகளுங்கழன்று, தொள்களின் வாடிய தோள் - பழைய இயற்கைபழகு மிழந்த இத்தோள்கள், (இனி அதனை மறைக்கும் வழி யாது)

சு. தொடியொடு தோணெகிழ நோ லவரைக்
கொடிய ரெனக்கூற னெஞ்சு.

[தானுற்றுதற்பொருட டியற்பழிந்த தோழிக்குத்
தலைமகள் சொல்லியது.]

(பரி-மை.) எ-து,—யானுற்றவும் என்வயத்த வன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கண் மெலிய, அவற்றைக் கண்டு, நீ யவரைக் கொடியரெனக் கூறுதலைப் பொறுது யாணெண்ணுள்ளே நோவாரின்றேன், எ-று.

ஒடு மேல்வந்த பொருண்மைத்து. யானுற்றே னெனின்றது அவர் வாராத தற்கன்று நீ கூறுகின்றதற் கென்பதாம்.

(தே - ப - ரை.)—(யான் பொறுக்கவும் என்வசப் படாமல்), தொடியொடு - வளைகள் கழலும்படி, தோள் நெகிழ - தோள்கள் வாட, (அவற்றைக்கண்டு), அவரை—, கொடியார் எனகூறல் - (நீ) கொடியவரென்று சொல்லல், நொந்து - பொறுமல், நோவல் - (என்னுள்ளே) நோகின்றேன்.

எ. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து.

[அவ்வியற் பழிப்புப் பொறாது தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நெஞ்சே, இவள் கொடியா ரென்கின்றவர்க்கு நீ சென்று என் மெலிகின்ற தோளினுல் வீளைகின்ற ஆரவாரத்தைச் சோல்லி ஒரு மேம்பாடெய்தவல்லேயோ, வல்லையாயின அதனை யொப்பதில்லை, எ-று.

கொடியார்க ளென்பது கொடியாரல்ல ரென்பது தோன்ற நின்ற குறிப்புச்சொல். வாடுதோ ளென்ப ம் அவை தாமே வாடாநின்றன வென்பது தோன்றநின்றது பூசல்—ஆரவாரம். அஃது அவள் தோணெகிழ்கியபழித் தன் மேலும் அதனுற றனை காரணமை மிகன்மேலும் நின்றது. நின்னுரை கேட்டாலும் அவர் வருவர், வந்தால் இவையெல்லா மீங்கும், நீக அஃ தெனக்குக் காலத்தினுற் செய்த நன்றியாமாகலின், அதன்பய னெல்லா மெய்துதி யென்னுங் கருத்தாற் பாடு பெறுதியோ வென்றன்.

(தே - ப - ரை.)—நெஞ்சே - நெஞ்சமே! கொடியார்க்கு - (இவளாலே) கொடியாரென்று சொல்லப்பட்டவர்க்கு, என்வாடு தோள் - என்வாடுகின்ற மூங்காளினுல விளைகிற, பூசல் - ஆரவாரத் தை, உரைத்து - சொல்லி, பாடு-ஒரு மேம்பாட்டை, பெறுதியோ-அடையவல்லேயோ, (வல்லையாயின அதனை யொப்பது இல்லை.)

அ. முயங்கிய கைகளோ யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்

[வினைமுடித்து மீண்டுவந்த தலைமகன் புனிலகழ்ந்தது நினைந்து நயனபாலோ சோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—தன்னை யிறுகே முயங்கிய கைகளோ இவட்குகோ மென்று கருதி ஒருஞான் றியானெனிழ்ந்தலுக அத்தினைபம் பொருது பைந்தொடிகளே யணிந்த பேதையது நுதல் பசந்தது, அப்பெற்றித்தாய நுதல் இப்பிரிவிற்கியாது செய்யுமோ, எ-று.

இனிக் கடிதிற் செல்லவேண்டுமென்பது கருத்து.

(தே - ப - ரை.)—முயங்கிய கைகளோ - (தன்னை இறுக) தழுவிய கைகளோ, (இவளுக்கு நோவென்று நினைத்து), ஊக்க - (ஒருதினம்) தளர்ந்திலனுக : (அம்மாத்திரமும் பொறுமல்), பைந் தொடி-பசியவளைகளை அணிந்த, பேதை நுதல்-பேதையது நெற்றி யானது, பசந்தது - நிறம்வேறுபட்டது ; (அப்படிப்பட்ட இப்பிரிவிற்கு யாதுசெய்யுமோ ?)

கூ. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து.—அங்ஙனங கைகளே யூக்குதலான் அம்முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக அத்துணையிடையீடும் பொறுது, பேதையுடைய பெரியமழைக்கணகள் பசப்புற்றன ; அத்தன்மையவான கண்கள், மலைகளும் காடும் நாடுமாய இவ்விடையீடுகளேயெல்லாம், யாங்ஙனம் பொறுத்தன, எ-று.

தண்மை—ஈண்டு மென்மைமேனின்றது. போழவென்றது உடம்பிரண்டும் ஒன்றுனதுதோன்ற நின்றது. மழை - குளிர்ச்சி.

(தெ - ப - ரை.)—(அப்படி தழுவிய கைகளைத் தளர்த்தலால்), முயக்கு இடை - அப்புணர்ச்சிக் நடுவே, தண் வளி போழ - சிறு காற்று நுழைந்ததாக, (அவ்வள விடையீடும் பொறுமல்), பேதை பெரு மழைக்கண் - பேதையினது பெரிய குளிர்ந்தகண்கள், பசப் புற்ற - பசலைநிற மடைந்தன ; (அப்படிப்பட்ட கண்கள் மலைகளும் காடுகளும் நாடுகளும் ஆகிய இவ்விடையீடுகளே யெல்லாம் எப்படி பொறுத்தன?)

கூ. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
யொண்ணுதல் செய்தது கண்டு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—தண்வளி போழவந்த கண்ணின் பசப்புத் தன்ப மூற்றது, தனக்கியலாய ஒண்ணுதல் வினைத்த பசப்பைக் கண்டு, எ-று.

அது கைகளேயூக்க அவ்வளவிற் பசந்தது, யான் கைகளேயு மூக்கி மெய் களு நீக்கிச் சிறுகாற்று ஊடறுக்குத்துணையும் பசந்திலனெனத் தன்வன்மை யும் அதன் மென்மையுங கருதி வெள்கிற்றென்பதாம் : ஆகவே அவளுறுப்புக் கள் ஒன்றினொன்று முற்பட்டு நலனழியும், யாங்கடிதிற் சேறுமென்பது கருத்தாயிற்று.

(தெ - ப - ரை.)—கண்ணின் பசப்போ - (சிறுகாற்று நுழைய வந்த) கண்களின்பசப்போ, பருவரல் எய்தின்று - துன்பமடைந் தது; ஒள் நுதல் - (தனக்கு அயலாகிய) ஒளிபொருந்திய நெற்றி யால், செய்தது - வினைக்கப்பட்ட பசப்பை, கண்டு - பார்த்து.

கஉடு-ம் அதிகாரம்—நெஞ்சொடுகிளத்தல்.

அஃதாவது ஆற்றுமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணுத தலை மகள் தன்னெஞ்சொடு செய்திறனறியாது சொல்லுதல். இஃது, உறுப்புக் கள் தந்நலனழிந்தவழி நிகழ்வதாகலின், உறுப்பு நலனழிதலின்பின் வைக்கப் பட்டது.

க. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து

[கருவுற்றமை கூறுதற்றொடங்கியது.]

(பரி-ரை.) எ-து,—நெஞ்சே! இவ்வெவ்வ நோயினைத் தீர்க்கு மருந்தாவ தொன்றனை, யானறியு மாற்றலின், எத்தன்மைய தியாதொன்றையினும் நீயறிந் தெனக்கு சொல், எ-று.

எவ்வம் - ஒன்றனுக் தீராமை. உயிரினுஞ் நெந்த காணினை விட்டுச் செய்வதியாதொன்றையினு மென்பாள், எனைத்தொன்று மென்றாள்.

(தே - ப - ரை)—நெஞ்சே—! எவ்வம் நோய் - ஒன்றனுக் தீராதநோயை, தீர்க்கும் மருந்து—, ஒன்று - ஒன்றை, (நான் அறி யும்படியாக), எனைத்து ஒன்றும் - எப்படிப்பட்ட தொன்றையினும், நினைத்து - அறிந்து. சொல்லாயோ - (எனக்கு) சொல்லாயோ.

உ. காதலவரிலராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

[தலைமகனைக் காண்டற்கண் மேவிநை மிதுதியாய் மொழிந்தது.]

(பரி-ரை.) எ-து,—என்னெஞ்சே! வாழ்வாயாக, அவர் நங்கட் காதலில ராகவும் நீயவர் வரவுநோக்கி வருந்துதற்கேது நின்பேதைமையே, பிறி தில்லை, எ-று.

நம்மை நினையாமையின் நங்கட்காதலிலரென்ப தறியலாம், அஃதறி யாமை மேலும் அவர்பாற்செல்லக் கருகாது அவர்வரவு பார்த்து வருந்கா நின்றாய், இது நீ செய்துகொள்கின்ற தென்னை கருத்தாற் பேதைமை யென் றாள். வாழி இகழ்ச்சிக்குறிப்பு. யாமவர்பாற்சேறலே அறிவாவதென்பதாம்.

(தே - ப - ரை.)—என்னெஞ்சு - எனது நெஞ்சே! வாழி - வாழ்வாயாக; அவர்—, காதல் இலராக - (நம்மேல்) ஆசையிலராக வும், நீ நோவது - நீ (அவர் வரவு பார்த்து) வருந்துதற்குக் காரண ணம், பேதைமை - (உன்) அறியாமையேயாம், (வேறொன்று இல்லை).

கூ. இருந்தள்ளி ✲ யென்பரிந்த னெஞ்சே பரிந்துள்ளல்
பைதலைப் செய்தார்க ளில்.

(பரி-ரை.) எ-து,—நெஞ்சே! அவர்பாற் செல்வதுஞ் செய்யாது ஈண்டிறந்துபடுவதுஞ் செய்யாதிருந்து அவர்வரவு நினைந்து நீ வருந்துகின்றதென்னை? இப்பையுளை யெய்தார்மாட்டுக்கைக்கிரங்கிவரக் கருதுதல் உண்டாகாது, எ-று.

நம்மாட்டருளுடைய ரன்மையிற் றூமாக வாரார், நாஞ்சேறலே இனித் தகுவ தென்பதாம்.

(தே - ப - ரை.)—நெஞ்சே - மனமே! இருந்து - (அவரிடத்துக்கும் போகாமல் இங்கேயும் இறந்திடாமல்) இருந்து, உள்ளி - (அவர்வரவை) நினைந்து, பரிதல் - (நீ) வருந்துகின்றது, என் - என்னை? பைதல் நோய் செய்தார்கண் - இத்துன்பநோய் செய்தவரிடத்து, பரிந்து - (கருணை) இரங்கி, உள்ளல் - (வர) நினைத்தல், இல் - உண்டாகாது.

சு. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நெஞ்சே! நீயவர்பாற் சேறலுற்றாயாயின் இக்கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக; அன்றி நீயே சேறியாயின், இவை தாம் காட்சி விதுப்பினால் அவரைக் காண்டல்வேண்டி நோட்டென்று என்னைத் தின்பனபோன்று கலியா நிற்கும், எ-று.

தொளடென்பது கொளவெனத் திரிந்து நின்றது. தின்னுமென்பது இலக்கணைக்குறிப்பு. அங்ஙனிவு நோக்கவேண்டு மென்பதாம்: என்றது தான் சேறல் குறித்து.

(தே - ப - ரை.)—நெஞ்சே—! (நீ அவரிடத்துச் செல்லலுற்றாயாயின்), கண்ணும் கொள சேறி - இக்கண்களையும் உடன்கொண்டு செல்லு; (அல்லாமல் நீமாத்திரம் செல்வாயானால்), இவை - இக்கண்கள், அவர் காணல் உற்று - அவரைக் காணல்வேண்டி, என்னை—, தின்னும் - (நோட்டென்று) தின்பனபோல் வருத்தும்.

✲ "என்பரிந் நெஞ்சே" எனவும் பதம.

நி. செற்ற ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்ற லுறுஅ தவர்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நெஞ்சே! யாம் தம்மையுறத் தாமுற்ற நங்காதலரை வெறுத்தாரென்று கருதிப் புலத்து கைவிட்டிருக்கும் வலி நமக்குண்டோ இல்லை, எ-று.

உறுதல்-அன்பு பதிதல். அவ்வலியின்மையின் அவர்பாற் செல்வதே நமக்குத் தகுவ தென்பதாம்

(தெ - ப - ரை.)—நெஞ்சே - மனமே! யாம்—, உற்றால் - (தம்மை) விரும்ப, உறுதவர் - (நம்மை) விரும்பாத தலிலரை, செற்றார் என - வெறுத்தாரென்று நீனைந்து, கை விடல் - (பிணங்கி) கைவிட்டிருக்கும்வழி, உண்டோ - (நமக்கு) உண்டோ, [இல்லை].

சு. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு

[தலைமகள் தோழியை நினைத்து சொலவுடனாடாத நெஞ்சினைக் குறித்தது.]

(பரி-ரை) எ-து,—என்னெஞ்சே! யான்றம்மொடு புலந்தால் அப்புல வியைக் கலவிதன்னுளே நீக்கவல்ல காதலரைக் கண்டாற் பொய்யேயாயினும் ஒருகாற் புலத்து பின்னதனை நீங்கமாட்டாய்; அதுவுமாட்டாத நீ இப் பொழுது அவர் கொடியரெனப் பொய்க்காய்வு காயாநின்றாய்; இனி யிதனை யொழிந்து அவர்பாற் செல்லத் துணிவாயாக, எ-று.

கலத்தலா னென்னும் பொருட்டாய கலக்கவென்பது திரிந்து நின்றது. அதனை னுணர்த்தலாவது கலவியின்பத்தைக் காட்டி அதனன் மயக்கிப் புல விக்குறிப்பினை யொழிதல். பொய்க்காய்வு-நீலிமில் வெறுப்பு. கண்டான் மாட்டாத நீ காணுதவழி வெறுக்கின்றதனுற் பயனில்லை யென்பதாம்.

(தெ - ப - ரை.)—என் நெஞ்சு - எனது நெஞ்சே! (யான் தம்மோடு பிணங்கினால்); கலந்து - புணர்தலால், உணர்த்தும் காதலர் - (அப்பிணக்கை) நீக்கவல்ல தலிலரை, கண்டால்—, புலந்து - (பொய்பாகவாயினும் ஒருதகரம்) பிணங்கி, உணராய்-(பின்) அதனை நீங்கமாட்டாய்; (அதுவுமாட்டாத நீ இப்போது), பொய் காய்வு காய்தி - (அவரைக் கொடியரென்று) பொய்க் காய்வாகக் காய்கின்றாய்; (இனி அதனை யொழிந்து அவரிடத்துச் செல்லத் துணி).

எ. காமம் விடுவொன்றே நாண்விடு நன்னெஞ்சே
யானை பொறேனிவ் விரண்டு.

[நாணுடைத்தலின் அரிசிலவொழிவாயாக சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நல்ல நெஞ்சே! ஒன்றினுண் விடமாட்டாயாயிற் காமவேட்கையை விடு, ஒன்றினது விடமாட்டாயாயின் நாணினை விடு, அன்றியே இரண்டும் விடாமை நின் கருத்தாயின், வன்றற்கொன்று மறுதலையாய் இவ்விரண்டனையும் உடன்றழுகுமதுகை யானிலன், எ-று.

யானெனவென்னும் பிரிநிலை நீபொறுப்பனு மென்பதுபட நின்றது. நன்னெஞ்சே யென்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுத்தலின், நல்லே யென்னுங் குறிப்பித்து. அது நன்றே யெனினும் என்னுயிருண்டாதல் சாலாமையின். அதற்காகின்றிலே னென்பதாம். முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

(தே - ப ரை)—நல் நெஞ்சே-நல்லமனமே! ஒன்று காமம் விடு - ஒன்று (நாணம்விடமாட்டாயாகில்) காமவிருப்பத்தை விட்டுவிடு; (ஒனறு) நாண் விடு - ஒன்று (காமவிருப்பத்தை விடமாட்டாயாகில்) நாணத்தை விட்டுவிடு; (இரண்டும் விடாமை உன்கருத்தாகில்), இவ்விரண்டு - (ஒன்றற்கொன்று பகையாகிய) இவ்விரண்டையும், யானை - நானை, பொறேன் - (ஒருசேர) தாங்கவல்லேனல்லேன்.

அ. பிரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் போதையென் னெஞ்சு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—என்னெஞ்சே! அவர் இவ்வாற்றுமையை யறியாமையின் நொந்துவந்து தலையளி செய்யாராயினுரென்று கருதி அஃதறிவித்தற் பொருட்டு நம்மைப் பிரிந்துபோவர்பின் எங்கே செல்லுற்ற நீ யாதுமறியாய், எ-று.

ஆற்றுமை கண்டுவைத்தும் நல்காது போயினுரைக் காணுதவழிச் சென்றறிவித்த றுணியானே நல்கவருவரென்று கருதினமைபிற் பேதையென்றுள்.

(தே - ப - ரை.)—என் நெஞ்சு - எனது நெஞ்சே! அவர்—, (இப் பொருமை அறியாமையால்), பிரிந்து - நொந்துவந்து, நல்காள் என்று - அருள்செய்யா ராயினுரென்று நினைந்து; (அதை அறிவித்தற்பொருட்டு). பிரிந்தவர் பின் - (நம்மை) பிரிந்துபோகிய தலைவர் பின்னே, எங்கே—, செல்வாய் - போகலுற்ற நீ, பேதை - ஒன்றும் மறியாய்,

கூ. உள்ளத்தார் காதலராக
யாருழைச் சேறியென் னெஞ்சு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—என்னெஞ்சே! காதலர் நின்னகத்தாராக, முன்பெல்லாங் கண்டு வைத்து இப்பொழுது நீ புறத்துத் தேடிச செல்கின்றது யாரிடத்து, எ-று.

உள்ளமென்பதி அம்முப் பகுதிப்பொருள் விகுதி. நின்னகத்திருக்கின்ற வரை அஃதறியாது புறத்துத்தேடிச சேறல் நகையுடைத்து, அதனை யொழியென்பதாம்.

(தே - ப - ரை.)—என் நெஞ்சு - எனது நெஞ்சே! காதலவர் - அன்பர், உள்ளத்தார் ஆக - (உன்) உள்ளிருப்பவராக, (முன்னெல்லாங் கண்டிருந்தும்), நீ , உள்ளி - இப்பொழுது புறத்தே தேடி, யார் உழை - யாரிடத்து, சேறி - செல்லுகின்றாய்.

கo. துன்னுந் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
யின்னு மிழத்துங் கவின்

[அவரை மறந்தாற்போல் வேறுமெனப்படாதே சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நம்மைக் கூடாவண்ணந் துறந்துபோயினாரை நாம் நம்மகத்துடையேமாக, முன்னிழந்த புறக்கவினே யன்றி நின்ற அகக்கவினு மிழப்பேம், எ-று.

* "குன்றி—னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்" என்புழிப்போல நெஞ்சென்பது ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது. அவர் நம்மைத் துன்னுமற் றுறந்தாராகவும், நாமவரை மறத்தன் மாட்டேமாகவும், போன மெய்க் கவினேயன்றி நின்றநிறையு மிழப்பே மென்பதாம்.

(தே - ப - ரை.)—துன்னு - (நம்மை) கூடாதவண்ணம், துறந்தாரை - துறந்தபோயினாரை, நெஞ்சத்து உடையேம் ஆ - (நாம்) உள்ளுடையேமாக, (முன்னிழந்த புறத்தழகேயன்றி), இன்னும்—, கவின் - (அகத்)தழகையும், இழத்தும் - இழப்போம்.

* குறுந்தொகை, 5-ஆம்பாட்டு.

கஉசுடம் அதிகாரம்—நிறையழிதல்.

* அஃதாவது தலைமகள் மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கை மிகுதி யான் அடக்கமாட்டாது வாய்விடுதல்: † "நிறையெனப் படுவது மறைபிற ரறி யாமை" என்றார் பிறரும். அஃதழிதற் காரணம் நெஞ்சொடு கிளந்தமையின், இது நெஞ்சொடு கிளத்தலின்பின் வைக்கப்பட்டது.

க. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு

[நாணுநிறையுமழியாமை நீயாற்றல்வேண்டுமென்று தோழிக்குந் தலைமகன் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நாணுகிய தாழினைக் கோத்த நிறையென்னுங் கதவினைக் காமவேட்கையாகிய கணிச்சி முறியாகின்றது, இனி அவைநிற்றலுமில்லை, யானுற்றலுமில்லை, எ-று.

கணிச்சி - குந்தாலி. நாணுள்ள ஆணையும் நிறையழியாதாகலின் அதனைத் தாழாக்கியும், அகத்துக்கிடந்தன பிறர் கொள்ளாமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலியவாய்த் தாமாக நீங்காத அவ்விரண்டனையும் ஒருங்கு நிக்கலிற் றன் காமவேட்கையைக் கணிச்சியாக்கியுங் கூறினாள்.

(தெ - ப - ரை) —நாணுத்தாழ் வீழ்த்த - நாணுகிய தாழினைக் கோத்த, நிறை என்னும் கதவு - நிறையென்று சொல்லப்படுகிற கதவை, காமக்கணிச்சி-காமமேவட்கையாகிய குந்தாலி, உடைக்கும்-முறிக்கின்றது ; (இனி அவை நிற்றலும் இல்லை, யான் பொறுத்தலும்

உ. காம மெனவொன்றே கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாருந் தொழில்.

[நெஞ்சினீடேன்றிய காமம் நெஞ்சாலடக்கியபடி மேற்றட்டுத் தொல்லியது]

(பரி-ரை.) எ-து —எல்லாருக் தொழிலொழியு மிடையாமத்தும் என் னெஞ்சத்தை யொறுத்துத் தொழில் கொள்ளா நின்றது, ஆகலாற் காம மென்று சொல்லப்பட்ட வொன்று கண்ணேட்ட மின்றி யிருத்தது, எ-று.

ஒவென்பது இரக்கக்குறிப்பு. தொழிலின் கண்ணே யாடல் - தலைமகன் பாற் செலவிடுத்தல். || தானைப்பணிகோடல் உலகியலன்மையிற் காமமென

---

* "அஃதாவது, பிறரறியாமன் பறைகற்பாலதாய காமவேட்கை, தன்னைத்தன் றிப் பெருகலிற் றலைமகள் அதனை மறைத்தலாற்றாது வெளிப்படுத்தல்"—பிரதிபேதம்.

† ஒலி, நெட்டலை, ப-க. || "தானைப்பணிகோடல்" எனவும் பாடம்.

வொன்றென்றும், அது தன்னைக் கொள்கின்றது அளவறியாது கோடலிற் கண்ணின்றென்றுங் கூறினாள். அடக்கப்படாமை கூறியவாறு.

(தே - ப - ரை.)—பாமத்தும் - (எல்லாருந் தொழுமொழிகிற) நடுராத்திரியிலும், என் நெஞ்சத்தை—, தொழில் - தொழிலிலே, ஆளும் - (தண்டித்து) ஆருகிற்றது; (ஆதலால்), காமம் என ஒன்று - காமமென்று சொல்லப்பட்ட ஒன்று, ஓ - ஐயோ! கண் இன்று - கண்ணேட்ட மில்லாதாயிருந்தது.

கூ. மறைப்பேன்மற் காமத்தை யாரே நுறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும்.

[மகளிர்தாமே மறைத்தியாடுமென்றுத்தோழி சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—இக்காமத்தை யாரென்னுள்ளே மறைக்கக் கருது வேன்; அதனை இம்மூன்று கருத்தின் வாராது தும்மல்போல வெளிப்பட்டே விடா நின்றது, எ-று.

மன்—ஒழியிசைக்கண் வந்தது. நுகாரம்—பிரிநிலைக்கண் வந்தது. தும்ம லடங்காதாரபோல * அடங்குகின்றதில்லை யென்பதாம்.

(தே - ப - ரை.)—காமத்தை - இக்காமத்தை, யான்—, ஓ-ஐயோ! மறைப்பேன் - (என்னுள்ளே) மறைக்க நினைப்பேன்; (அதனை) குறிப்பு இன்று - (இது) என்கருத்தின்வழி வாராமல், தும்மல்போல்—, தோன்றிவிடும் – வெளிப்பட்டே விடுகின்றது.

ச. நிறையுடை மீய மென்பேன்மன் யாரேனென் காம
மறையிறந்து மன்று படும்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—இன்றினுங்கெல்லாம் யானென்னை நிறையுடையே னென்று கருதியிருந்தேன்; அதனால் இன்றென் காமம் மறைத்தலைக்கடந்து மன்றின்கண் வெளிப்படா நின்றது, எ-று.

மன்னும் உவும் - மேலவற்றின்கண் வந்தன. மன்று படுதல் - பலருமறிதல். இனி என்வரைத்தன் றென்பதாம்

(தே - ப - ரை.)—ஓ - ஐயோ! நிறை உடையேன் என்பேன்—(இதுவரையும் எண்ணி) நிறையுடையே னென்று நினைத்திருப்பேன்; (அதனால்), என் காமம் - எனது காமம், மறை இற

---

* "நிறுப்பன்" என்றுபாடம்.

ந்து - மறைத்தலைக்கடந்து, மன்று படும் - பலருமறியப் படுகின்றது.

நி. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றார் அறிவதொன் றன்று.

[நம்மை மறந்தாரை நாமுமறக்கற்பால மென்றுட்கோ சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—தம்மையன்று சென்றார்பின் செல்லாது தாமும் அன்றுமிதற்கு நிறையுடைமை காமநோயினையுற்றார் அறிவதொன்றன்றி உற்றார் அறிவதொன்றன்று, எ-று.

இன்பத்தொடுகழியுங் காலத்தைத் துன்பத்தொடுகழியுமாறு செய்தலிற் செற்றாரென்றார். பின்சேறல்-மனத்தால் இடைவிடாதுநினைத்தல். பெருந்தகைமை-ஈண்டாகுபெயர். காமநோயுற்றார் - மானமுடையார். நன்னெஞ்ஞணார்மாட்டுஞ் சென்றேநிற்கும் யானறிவதொன்றன் றென்பதாம்.

(தே - ப - ரை.)—செற்றார் பின் - (தம்மை) நீங்கிப் போனவர்பின், செல்லா - செல்லாது (தாமும் நீங்கி நிற்கிற), பெருந்தகைமை - நிறையுடைமையானது, காமநோய் உற்றார் - காமநோயடைந்தவரால், அறிவது ஒன்று அன்று - அறியப்படுவதொன்றன்று.

ஈ. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தோரா
வெற்றென்னை யுற்ற தியர்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—என்னையன்று சென்றார்பின்னே யான் சேறலே வேண்டுதலான் என்னை யுற்றதியர் எத்தன்மையது? சாலவன்று, எ-று.

செற்றவரென்றது ஈண்டும் அப்பொருட்டு. வேண்டவென்பது வேண்டியெனத் திரிந்துநின்றது. அளித்தென்பது இகழ்ச்சிக்குறிப்பு. இக்காமநோய் யான்சொல்லவுங் கேட்கவுமாவ தொன்றன்று, சாலக்கொடி தென்பதாம்.

(தே - ப - ரை.)—செற்றவர் பின் - (என்னைநீங்கி) சென்றவர் பின்னே, சேறல் வேண்டி-(யான்) செல்லல்வேண்டுதலால், என்னை உற்ற தியர் - என்னையடைந்த துன்பமானது, எற்று - எத்தன்மையது ; அளித்து - மிகநன்று.

எ. நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின்.

[பாத்தையிற்பிரிந்துவந்த தலைமகளோடு நிறையழிவாற்கூடிய தலைமகள் நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய்யுமளவின் நாணென் றொன்றையும் அறியமாட்டே மாயிருந்தேம். எ று.

பேணியாரென செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. விரும்பியன - வேட்கைமிகவினை கருதியிருந்த கலவிகள். நாண்-பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்றென்பது ஈண்டுச் சிறிதென் னும்பொருட்டு. இழிவுசிறபபுமமை விகாரத்தற்றொகை. நிறையழிவான் அறியாது கூடிய தலைமகற்கோக்கி, அவ்வாயமுளப்படுத்தாள்.

(தே - ப - ரை.)—பேணியார் - (நம்மால்) விரும்பப்பட்ட தலைவர், (வந்து), காமத்தால்—, பெட்ப -(நாம்) விரும்பியவைகளை, செயின் - செய்யுமளவில், நாண் என ஒன்று - நாணென்று சொல் லப்பட்ட ஒன்றையும், அறியலம் - அறியமாட்டேமா யிருந்தோம்.

அ பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நங்நிறையாகிய வரணையழிக்குந் தானே பலபொய் களேவல்ல கள்வனுடைய தாழ்ந்தசொற்க ளன்றோ? ஆனபின் அது நிற்குமா றென்னை? எ-று.

பெண்மை ஈண்டுத் தலைமைபற்றி நிறைமேனின்றது. வந்தாற் புலக்கக் கடவேமென்றும் புலந்தால் அவன் சொற்ளாளுஞ் செயல்களாளும் நீயதே மென்றும் இவைமுதலாகவெண்ணிக்கொண்டிருந்தன யாவுங காணுது கல விக்கட் டன்னிலு முற்படும்வகை வந்திரந்தபினு னெனபாள், பண்மாயக் கள்வனென்றாள். பணிமொழி-நம்மிறுத்தானன்பு மிகுதியுடையனுகச் சொல் லுஞ்சொற்கள். அவன் அதற்கன்மையனுக, சொற்கள் அவையாக, நங்நிறை யழியாதொழியுமோ வென்பதாம்.

(தே - ப - ரை.)—நம் பெண்மை - நமதுநிறையாகிய (அர ணத்தை), உடைக்கும் - அழிக்கிற, படை - ஆயுதம்; பல் மாயம் கள்வன் - பலபொய்கள் பேசவல்ல கள்வனுடைய, பணிமொழி

அன்றே - தாழ்ந்த சொற்களன்றே, (ஆனபின் அது நிற்கும்வித்தம் யாது?

கூ. புலப்ப லெனைச்சென்றேன் புல்லினை னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—அவர் வந்தபொழுது புலக்கக்கடவேனென்று கருதி முன்னில்லாது பிறிதோரிடத்துப் போயினேன்; போயும், என்னெஞ்சம் நிறையினில்லாது அறைபோய் அவரோடு கலந்தறொடங்குகலையறிந்து, இனி அது வாயாதென்று புல்லினேன், எ-று.

வாயாமை - புலத்தற் கருவியாய் நெஞ்சுதானே கலத்தற் கருவியாய் நிற்றலின் அது முடியாமை.

(தே - ப - ரை.)—(அவர்வந்தபொழுது), புலப்பல் என - பிணங்கக்கடவேனென்று நினைத்து, சென்றேன் - (அவரெதிர் நில்லாமல் வேறோரிடத்திலே) போயினேன்; (போகியும்), நெஞ்சம் - (என்) நெஞ்சமானது, (நினையினில்லாமல் கீழறுத்துக்கொண்டு போய்), கலத்தல் உறுவது - (அவரோடு) கலத்தலைத்தொடங்குவதை, கண்டு - அறிந்து, புல்லினேன் - (இனி அதுவாயாதென்று) தழுவினேன்.

கo. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினர்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நிணத்தைத் தீயின்கண்ணே யிட்டால் அஃதுருகுமாறுபோலத் தங்காதலரைக் கண்டால் நினைப்பதுருகு நெஞ்சினையுடைய மகளிர்க்கு, அவர் புணர யாமூடிப் பின்புணராது அங்கேயே நிற்கக்கடவேமென்று கருதுதலுண்டாகுமோ, ஆகாது, எ-று.

புணர்தல் - ஈண்டு மிகநணுகுதல்; எதிர்ப்படலுமாம். புணரென்பது புணர்ந்தெனத் திரிந்து நின்றது. யானதன்மையெனுசலின் எனக்கஃதில்லையாயிற்றென்பதாம்.

(தே - ப - ரை.)—நிணம் தீயில் இட்டன்ன - நிணத்தைத் தீயிலிட்டால் அது உருகுமாறுபோல் (தங்காதலரைக் கண்டால் நினை யழிந்து உருகுகின்ற), நெஞ்சினர்க்கு - நெஞ்சினையுடையமகளிர்க்கு, ஊடி - (யாம்) பிணங்கி, புணர்ந்து - (பின்) புணர்ந்து, நிற்

பேம் எனல் - (அக்கிலிபிலே) நிற்கக்கடவேமென்று நினைத்தல், உண்டோ - ஆகாது.

களவழி அதிகாரம்— அவர்வயின்விதும்பல்.

அஃதாவது சேயிடைப் பிரிவின்கட் டலைமகனும் தலைமகளும் வேட்கை மிகவினுள் ஒருவரை பொருவர் காணுட்குவிரைதல். தலைமகன் பிரிவும் தலைமகளாற்றுமையும் அதிகாரப்பட்டு வருகின்றமையின், இருவரையுஞ் சுட்டிப் பொதுவாகிய பண்மைப்பாலாற் கூறினார் பிறரெல்லாம் இதனைத் தலைமகனே நினைத்து தலைமகள் விதுப்புறுவெனவுரப்: சுட்டுப்பெயர் சொல்லுவார் குறிப்பொடு கூடிய பொருளுணர்த்துவதல்லது தானெஞ்றற்குப் பெயராகாமையானும், கவிகூற்றும் அதிகாரத்துத் தலைமகன் உயர்த்தற் பண்மையாற் கூறப்படாமையானும், அஃதுரையன்மையறிக. இதனுட்டலைமகள் கூற்று நிறையழிவாணிகழ்ந்ததாகவின், அவ்வியைபுபற்றி நிறையழிதலின்பின் வைக்கப்பட்டது.

க. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

[தலைமகன் காமீடலீ விதுபடுஞ் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—அவர் நம்மைப் பிரிந்துபோய நாள்கள் சுவரின்கணி ழைத்தவற்றைத்தொட்டு எண்ணுதலான் என் விரல்கடேய்ந்தன ; அதுவே யன்றி அவர் வரும் வழிபார்த்து என் கண்களும் ஒளிபிழந்து புல்லியவாயின ; இவ்வாறுயும் அவர் வரவுண்டாயிற்றில்லை, எ-று.

நாள்—ஆகுபெயர். புல்லியவாதல் - துணையிண்ய காணமாட்டாமை. ஒற்றவென்பது ஒற்றியெனத் திரிந்து நின்றது. இனி யான் காணுமாறென்னை யென்பதரும். நாளெண்ணலும் வழிபார்த்தலும் ஒருகாற் செய்தொழியாது இடையின்றிச் செய்தலான், விதுப்பாயிற்று.

(தே - ப - ரை)—விரல் - (என்) விரல்கள், அவர் சென்றநாள்-அவர் (நம்மைப்பிரிந்து) போகிய நாள்களை, ஒற்றி - (சுவரிலே குறி வைத்து) தொட்டெண்ணுதலால். தேய்ந்த - தேய்ந்தன ; (அதுவே யன்றி), கண்ணும் - (என்) கண்களும், வாள்அற்று - (அவர்வரும் வழிபார்த்து) ஒளியிழந்து, புற்கென்ற - புல்லியவாயின; (இவ்வாறு கியும் அவர் வரவு உண்டாயிற்றில்லை).

உ. இலங்கிழா யின்று மறப்பினென் றேறண்மேற்
கலங்கரியுங் காரிகை நீத்து.

[ஆற்றமை மிதலின் இடையின்றி நினக்கற்பாலையல்லே
சிறிது மறக்கல்வேண்டுமென்ற தோழிக்குச்
சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—விளங்கா நின்ற விழையினையுடையாய், காதலரை இன்று யான் மறப்பேனுயின், மேலுங் காரிகை யென்னோடிப்ப என்றேள்கள் வளே கழல்வனவாம், எ-று.

இலங்கிழா யென்பது இதற்கு ஏயாதும் பரியலே யென்னுங் குறிப்பிற்று. இன்று - யானிறந்து படுகின்ற வின்று. மேலும் - மறுபிறப்பினும். எச்ச வும்மை விகாரத்தாற் றொக்கது. நீப்ப வென்பது நீத்தெனத் திரிந்து நின்றது கழியுமென்னும் இடத்து ிகழ்பொருளின் றொழில் இடத்தின்மே னின்றது. இவ்வெல்லைக்கணினைந்தால் மறுமைக்கண் அவரை யெய்தி யின்புறலாம், அதனுன் மறக்கற்பாலே னல்லே னென்பதாம்.

(தே - ப - ரை.)—இலங்கு இழாய் - விளங்காநின்ற ஆபரண முடையாய்! இன்று - (இறந்துபடுகின்ற) இக்காளில், மறப்பின் - (தலைவரை) மறப்பேனுயின், மேல் - மறுபிறப்பிலும், காரிகை - அழகானது, நீத்து - (என்னைவிட்டு) நீங்க, என்றேள் - எனது தோள்கள், கலங் கழியும் - வளையல்கள் கழலப்பெறுவனவாம்.

கூ. உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்.

[ரிகுவியது.]

(பரி-ரை.) எ-து,—இன்பநுகர்தலே நச்சாது வேறலே நச்சி நாந்துணையா தலே யெழுந்து தம்மூக்கத் துணையாகப் போயினர் அவற்றை யெழுந்த ஈண்டு வருதலே நச்சுதலான், யானிவ்வெல்லையினு முளேனுயினேன், எ-று.

உரனென்பது ஆருபெயர். அந்நசையா னுயிர்வாழா நீன்றேன், அஃ தில்லையாயின் இறந்துபடவே லென்பதாம்.

(தே - ப - ரை.)—உரன் நசைஇ - (இன்பத்தை விரும்பாமல்) வெற்றியையிரும்பி, உள்ளம் துணை ஆக - (நாம் துணையாதலே யிழந்து) தம்மனவெழுச்சித்துணையாக, சென்றார் - போயினவர், வரல் நசைஇ - (அவைகளே இழந்து இங்கு) வருதலேயிரும்புதலால், இன்னும் - இவ்வெல்லையிலும், உளேன் - உயிர்வாழ்கின்றேன்.

சு. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
தோடுகொ டேறுமென் னெஞ்சு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நீங்கிய காமத்தராய் நம்மைப் பிரிந்துபோயவர் மேற் கூடிய காமத்துடனே நங்கண் வருதலே நினைத்து, என்னெஞ்சு வருத்தமொழித்து மேன்மேற் பிணைத்தெழா நின்றது, எ-று.

வினையிற்பிரிவுழிக் காமவின்ப நோக்காமையும் அதுமுடிந்துழி அதுவே நோக்கலுந் தலைமகற்கியல்பாகலின், கூடிய காமமோ டென்றுள். ஒடிவுருபு விகாரத்தாற் றொக்கது. கோடுகொண்டேறலாகிய மரத்ததொழில் நெஞ் சின்மே லேற்றப்பட்டது. கொண்டென்பது குறைந்து நின்றது. அஃதுள் ளிற்றிலேனுயின் இறந்துபடுவ லென்பதாம்.

(தே - ப - ரை.)—பிரிந்தார் - (நீங்கியகாமத்தராகி நம்மை) பிரிந்துபோனவர்; கூடிய காமம்-கூடியகாமத்துடனே, வரவுஉள்ளி - (கம்மிடத்து) வருதலே நினைத்தலால், என் நெஞ்சு—, வருத்தம் ஒழிந்து - துயர்நீங்கி, கோடு கொண்டு எறும் - மேன்மேலும் பருத் தெழுகின்றது.

நி. காண்கமற் கொண்கனைக் கண்ணரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு.

[தலைமகன் வரவுகூறி ஆறுயாயபாசக்கற்பாலே
யல்லே யேனற தோழிகுத் தோல்லியது.]

(பரி-ரை.) எ-து,—என்கண்களாரும்வகை என் கொண்கனை யான் காண் பேனுக; அங்ஙனம் கண்டபின், என் மெல்லியதோளின்கட் பசப்புத் தானே நீக்கும், எ-று.

காண்கவென்பது ஈண்டு வேண்டிக்கோடற் பொருட்டு. அது வேண்டு மென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண வந்தது. கேட்டதனையா னிங்கா தென்பதாம்.

(தே - ப - ரை.)—கண் ஆர - (என்) கண்களாரும்வகை, கொண்கனை - (என்) கணவனை, காண்க - (நான்) காண்பேனுக; கண்டபின் - (அப்படி) கண்டபின்பு, என் மெல் தோள் - என்மெல் லியதோளிலுள்ள, பசப்பு—, நீங்கும் - (தானே) நீங்கும்.

சு. வருகமற் கொண்க னெருநாட் பருகுவன்
பைதனே யெல்லாம் கெடு.

(பரி-ரை.) எ-து,—இத்தணை நாளும் வாராக்கொண்கன் ஒருநாள் என் கண் வருவானுக; வந்தாற் பையுளைச் செய்கின்ற இந்நோய்யெல்லாங் கெட அவ்வழியிற்தத்தை வாயில்க ளேந்தானும் பருகக்கடவேன், எ-று.

வருக வென்பதற்கும் மன்னென்பதற்கும் மேலுரைத்தவாறே கொள்க. அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனி வரக்கடவனோகளுங் கெடுப்ப லென்பதாம்.

(தே - ப - ரை.)—கொண்கன் - (இத்தணைநாளாக வராதி ருந்த) தலைவன், ஒருநாள்—, வருக - (என்னிடத்து) வருவா னாக; (வந்தால்), பைதல் நோய் எல்லாம் - துன்பஞ்செய்கின்ற இந்நோயெல்லாம், கெட - நீங்க, (அவ்வழிப் நந்தை), பருகுவன் - (ஐம்பொறிகளாலும்) உண்பேன்.

எ. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—கண்போற் சிறந்த கேளிர் வருவராயின், அவர்வரவு நீட்டித்தமைநோக்கி யான் புலக்கடவேனோ, அன்றி வன்னெஞ்சமை நோக் கிப் புல்லக்கடவேனோ, அவ்விரண்டும் வெண்டுதலான் அவ்விருசெயல்களோ யும் விரவக்கடவேனோ, யாது செய்யக்கடவேன்? எ-று.

புலவியும் புல்லலும் ; ரா பொழுதின்கண் விரவாமையிற் கலப்பேன் கொலென்றாள். மூன்றனையுஞ் செய்தல் கருத்தாகலின், விதப்பாயிறறு. இனிக்கலப்பேன்கொ லென்பதற்கு * ஒரு புதுமை செய்யாது பிரியாத நாட் போலக் கலந்தொழுகுவேனோ வென்றுரைப்பாரு முளர்:

(தே - ப - ரை.)—கண் அன்ன கேளிர்-கண்போற் சிறந்தகண் பர், வரின்—, புலப்பேன்கொல் - (அவர்வரவு நீட்டித்தலைக் குறித்து) பிணங்குவேனோ? புல்லுவேன்கொல் - (என்பொறுக்க மாட்டாமையைக்குறித்து) தழுவுவேனோ? கலப்பேன்கொல் - (இவ் விரண்டும் வேண்டுதலால் இவ்விருசெயல்களையும்) கலப்பேனோ? (யாதுசெய்யக்கடவேன்)

அ. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்க்கம் விருந்து.

---

* ஒருமைபோதுடை யெய்த'' எ.ஞ்சும் பிரதிபேதம்.

[வேந்தற்குழிப்பிரிந்த தலைமகன் வினைமுடிவுநீட்டித்
துழிக் தலைமகனை நினைந்து தன்னுள்ளே
சொல்லியது.]

(பரி-ரை.) எ-து —வேந்தன் வினைசெய்தலைப் புரிந்து வெல்வானாக; யாமும் மனையினை சென்றுகூடி ஆணை மாலைப்பொழுதிற்கு விருந்தயர்வோமாக, எ-று.

மனையென்பது ஈண்டாகு பெயர், ‘மனகல மென்ப மனைமாட்சி” என் பழிப்போல. வினைசெய்தற்ரணவைத்து மாலைப்பொழுதிற்கு எதிர்கோடல் அலகுகரித்தன் முதலிய பின்மையின், மனைகலந்து மாலைக்கு விருந்தயர்க மென்றன். ஈன்க ருருபு வினாத்தாற் பிரிக்கது. இது வினைமுடியாமுன் கூறலான் விதுப்பாயிற்று. பிறவெல்லாம் இதனைத் தலைமகள் கூற்றுக்கி யுரைத்தார். தலைமகனைக் கூருது வேந்தன் வெல்க வென்றும், மனைகலந் தென்றும், மாலைப்பொழுதினை விருந்தயர்க மென்றும் வந்த அவ்வுரை தானே அது கூடாமைக்குக் காரியமாயிற்று.

(தே - ப - ரை.)—வேந்தன் —, வினை கலந்து - போர்செய்தல் புரிந்து, வென்றி - வெலலானாக, (யாமும்), மனை கலந்து - மனை யையைசென்றுகூடி, மாலை - (அவ்விடத்து)மாலைக்கு, விருந்து —, அயர்கம் - செய்யக்கட வேம்

கூ. ஒருநா ளொழுகாள் பிறற் செலலுஞ் சேட் சென்றார்
வருநாளை யத் தந்து பவர்க்கு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து —சேணிடைசென்ற நங்காதலர் நீண்டவழிக் குறித்த நாளே யுட்கொண்டு அதிவருந் துணையும் உயிர்தாங்கி வருந்து மகளிர்க்கு ஒரு நாள் பலநாளபோல நெடிதாகக் காட்டும், எ-று.

எழென்பது அதற்குமேலாய மிக்க பன்மை குறித்து நின்றது, “ஒருவர் கூறை யெழுவருடுத்து” என்றுர்போல. தலைமகள் வருத்தம் பிறர்மேலிட்டுக் கூறியவாறு. இதனுள் இதுவுங் தலைமகள் கூற்றுகாமையறிக. இருநாளென்று பாடமோதுவாரு முளர்.

(தே - ப - ரை.)—சேண் சென்றார் - தூரதேசத்திற் சென்ற தங்காதலர், வருநாள் வைத்து - (திரும்பி) வரக்குறித்தநாளே உட் கொண்டு, ஏங்குபவர்க்கு - (அது வருமளவும் உயிரைத்தாங்கி) வருந்துமகளிர்க்கு, ஒருநாள் —, எழு நாள் போல் - பல நாள் போல, செல்லும் - நெடிதாகக்காட்டும்.

---

* மேலே ன-ம் அதி. புதலியொப்பெரிதும், கo-ம் குறளிற் காண்க.

கo. பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு
முள்ள முடைத்துக்கக் கால்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காதலி நம்பிரிவினை யாற்றாது உள்ளமுடைந்திறந்து பட்டவழி, நம்மைப் பெறக்கடவளாளுலென், அதுவன்றியே பெற்றாலென், அதுவன்றியே மெய்யுறக்கலந்தாற்றாளென், இவை யொன்றாலும் பய னில்லை, எ-று.

இம்மூன்றும் உடம்பொடு புணர்த்திக் கூறப்பட்டன, அதன்மேலும் முன்னை வழக்குண்மையின். அதற்கு முன்னை யான் செல்லவேண்டுமென் பது கருத்தாகலின், விதுப்பாயிற்று. இது தலைமகள் கூற்றாயவழி இரவுகலவா தல்லது விதுப்பாகாமை யறிக.

[தே - ப - ரை]—காதலி—, உள்ளம் உடைந்து - (நம்பிரிவு பொறாமல்) உள்ளமுடைந்து, உக்கக்கால்-இறந்தவிடத்து, பெறின் என் - (நம்மை) பெறக்கடவளாளுல் என்னபயன், பெற்றக்கால் என் - (அன்றி) பெற்றால் என்னபயன், உறின் என் - (அன்றி) மெய்யுறக்கலந்தால் என்னபயன், (இவையொன்றாலும் பயன் இல்லை).

கஉஅ-ம் அதிகாரம்—குறிப்பறிவுறுத்தல்.

அஃதாவது தலைமகன், தலைமகள், தோழியென்றிவர் ஒருவர் குறிப்பினை யொருவர்க் கறிவுறுத்தல். இது பிரிந்துபோய தலைமகன்வந்து கூடியவழி நிகழ்வதாகலின், அவ்வியின் விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

க. கரப்பினுங் கையிகந் தொல்லா தின் னுண்க
ணுரைக்க வுறுவதொன் றுண்டு.

[பிரிந்துகூடிய தலைமகன் வேட்கைமிகவினும் புதுவது பன்னாளும்பாராட் டத் தலைமகள் இதுவொன்றுடைத்தென வஞ்சியவழி அதனையவள், குறிப்பானறிந்து அவனவட்குச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நீ சொல்லாது மறைத்தா யாயினும், அதற்குடம் படாதே நின்னைக் கைகடந்து நின்னுண் கண்களே எனக்குச் சொல்லுறுவ தொரு காரிய முண்டாயிராநின்றது, இனியதனை நீயே தெளியச்சொல்வா யாக, எ-று.

கரத்தல்—நாணுடைக்குதல். தன்கட்பிரிதற் குறிப்புளதாகக் கருதி வேறுபட்டானது வேறுபாடு குறிப்பானறிந்து அவட்குத் தன்பிரியாமைக் குறிப்பறிவுறுத்தவாறு.

(தே - ப - ரை.)—கரப்பினும் - (சொல்லாது) மறைத்தாயாயினும், ஒல்லா - அதற்கு உடம்படாமல், கையிகந்து - (உன்னை) கைகடந்து, நின் உண் கண் - உன் (மை) உண்டகண்களே, உரைக்கல் உறுவது - (எனக்குச்) சொல்வது, ஒன்று - ஒருகாரியம், உண்டு - உளது, (இனி அதனை நீயே தெளியச்சொல்லு).

உ. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது

[நாலில் அவள் அது சொல்லாளாயவழி
அவட்கு நேழிக்குச் சொல்லியது]

(பரி-ரை) எ-து,—என் கண்ணிறைந்த வழகினையும் வேயையொத்த தோளினையு முடைய நின்பேதைக்கு பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது, எ-று.

இலதாய பிரிவினைத் தன்கணேறறி அதற்கஞ்சுதலான், இவ்வாறு கூறினன்.

(தே - ப - ரை)—கண் நிறைந்த காரிகை - (என்) கண்ணிறைந்த அழகையும், காம்பு ஏர் தோள் - மூங்கில்போன்ற தோள்களையும் உடைய, பேதைக்கு - (உன்னுடைய) மாதுக்கு, பெண் நிறைந்த நீர்மை - பெண்பாலாரிடத்து நிறைந்த அறியாமை, பெரிது - (அவ்வளவினதன்றி) மிகுந்தது.

ஊ. மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—கோக்கப்பட்ட பளிங்குமணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுநூல்போல இம்மடந்தைய தணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகின்றதொரு குறிப்புண்டு, எ-று.

அணி—புணர்ச்சியாலுய வழகு அதனகத்துக் கிடந்தலாவது அதனேடு உடனிகழ்தற்பாலதன்றிவைத்து உடனிகழ்தல். அதனை யானறிகின்றிலேன்; நீ யறிந்து கூறல்வேண்டு மென்பது கருத்து.

(தே - ப - ரை.)—மணியில் - (கோக்கப்பட்ட) படிக மணிக்குளிருந்து, திகழ் தரும் - (புறத்தே) காணப்படுகிற, நூல்போல் - சரடுபோல, மடந்தை - இம்மடந்தையினது, அணியில் - அழகுக் குளிருந்து, திகழ்வது - (புறத்தே) காணப்படுவதாகிய, ஒன்று - ஒருகுறிப்பு, உண்டு - இருக்கின்றது.

சு. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—முகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனுகாத நாற்றம்போல நின்பேதை என்னெஞ் நகக்கருது நகையது முகிழ்ப்பினுள தாய்ப் புறத்துப் புலனுகாததோர் குறிப்புண்டு, எ-று.

முகிழ்ப்பு - முதிர்ச்சியாற் புடைபடுதல் நகை - புணர்ச்சி யின்பத்தா

(தே - ப - ரை)—முகை மொக்குள் - அரும்பினது முகிழ்ப்பி னுள், உள்ளது - உளதாய்ப் (புறத்தோன்றுத), நாற்றம்போல் - வாசனைபோல், பேதை - (உன்) மாதினது, நகை மொக்குள் - (என்னெஞ்நகைக்க எண்ணுகிற) நகையது முகிழ்ப்பினுள், உள்ளது - உளதாய்ப் (புறத்தோன்றுத), ஒன்று - ஒரு குறிப்பு, உண்டு - உளது.

ரு. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

[இதுவுமது]

(பரி-ரை.) எ-து,—செருங்கிய வளைகளை யுடையாள் என்கணில்லாத தொன்றனை யுட்கொண்டு அது காரணமாக என்னை மறைத்துப்போன குறிப்பு என் மிக்க துயரைத் தீர்க்கு மருந்தாவதொன்றனை யுடைத்து, எ-று.

உட்கொண்டது பிரிவு. கள்ளம்— ஒருவர். மறைத்தற் குறிப்புத் தானு முடன்போக் குட்கொண்டது. உறுதுயர் என்று செய்யுள் தீர்க்குமிவளானும் அதுதான் நீராதிறம் பெருமைபற்றும் உளதாயது. மருந்து—அப்பிரிவின்மை தோழியாற்றெளிவித்தல். நீ யதுசெய்தல் வேண்டுமென்பதாம்.

(தே - ப - ரை)—செறிதொடி - செருங்கிய வளைகளையுடைய வள், செய்து - (என்னிடத்து இல்லாதபிரிவை) நினைந்து, இறந்த கள்ளம் - (அதுகாரணமாக என்னைமறைத்து) போன குறிப்பு, உறு துயர் - (என்) மிகுந்ததுயரை, தீர்க்கும் மருந்து—, ஒன்று—, உடைத்து - உடையது.

சூ. பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யண்ணின்மை சூழ்வ துடைத்து.

[தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கத்தென்ற தோழிக்கு உரைத்தது.]

(பரி-ரை.) எ-து,—காதலர் வந்த தம்பிரிவினுடைய துன்பத்தினை மிகவு மாற்றி காமமிகும் வண்ணம் கலந்தின்ற கலவி இருந்தவாற்றான் மேலுமத் துன்பத்தினை அரிதாக வாற்றியிருந்து அவன்பின்மையை நினையுந்தன்மை யுடைத்து, எ-று.

பிரிதற் குறிப்பினைச் செய்கின்ற தாகலான், முடிவில் இன்னுதாகா நின்ற தென்பதாம்.

(தே - ப - ரை.)—பிரிது ஆற்றி - தலைவர்வந்து தம்பிரிவினு லாகிய துன்பத்தை) மிகவுமாற்றி, பெட்ப கலத்தல் - (காம்) மிகு மும்வண்ணம் கூடுகின்ற புணர்ச்சியானது, அரிது ஆற்றி - (பின் னும் அத்துன்பத்தை) அரிதாகப் பொறுத்திருந்து, அன்பு இன்மை - (அவரது) அன்பில்லாமையை, சூழ்வது - நினையுந்தன் மையை, உடைத்து - உடையது.

ஏ. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
மூன்னா முரைத்த வளே.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—குளிர்ந்த துறையை யுடையவன் நம்மை மெய்யாற் கூடியிருந்தே மனத்தாற் பிரிந்தமையை அவன் குறிப்பானறிதற்குரிய நம்மி னும் இவ்வளைகள் முன்னே யறிந்தன, எ-று.

கருத்து கேழ்த்த தாகலிற் றணந்தமை பென்னும், யான் தெளிய வுணர் தற்கு முன்னே தோள்கண் மெலிந்தன வென்பாள் அதனை வளைமேலேற்றி அதுதன்னை யுணரவுடைத்தாகியும் கூறினள்.

(தே - ப - ரை.)—தண்ணம் துறைவன் - குளிர்ந்த துறையை யுடையவன், தணந்தமை - (நம்மை மெய்யினாலே கூடியிருந்தே மனத்தினாலே) பிரிந்தமையை, நம்மினும் - (அவனுக்குறிப்பால் அறி தற்குரிய) நம்மினும், வளை - (நம்மையல்லாள், முன்னம்—, உணர்த்த - அறிந்தன.

அ. நெருநற்றுச் சென்றசெங் காதலர் யாமுற
மெழுநாளே மேனி பசந்து.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—எங்காதலர் பிரிந்துபோயினர் நெருநற்றே ; அப்பிரி விற்கு யாமும் மேனிபசந்து எழுநாளுடையே மாயினேம், எ-று,

நெருநற்செய்த தலையளியாற் பிரிவு துணியப்பட்டதென்பான் நெருநற்சென்றுரென்றும், அதனே யையுற்றச் செல்கின்றது ஏழுநாளுண்டாகலின் அன்றே மேனிபசந்ததென்பாள் மேனிபசந்தெழுநாளே மென்றுங் கூறினுள். இவ்வாற்றுற் றலைமகனது பிரிதற்குறிப்பினே யுணர்த்தி நின்றது.

(தே - ப - ரை.)—எங்காதலர்—, நெருநற்று - நேற்றே, சென்றார் - பிரிந்துபோயினர் ; யாழும்—, மேனி பசந்து - (அப் பிரிவுக்கு) உடம்பு வேற்றுமிறமடைந்து, எழு நாளேம் - ஏழு நாளுடையே மாயினேம்.

கூ. தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவன்செய் தது.

(பரி-ரை.) எ-து,—யானதுதெளிவித்தவழித் தெளியாது அவர் பிரியயானீண்டிருப்பின் இவை நில்லாவெனத் தன்றொடியை நோக்கி, அதற்கேது வாக இவை மெலியுமெனத் தன்மென்றோள்களேயு நோக்கி, பின்னிவ்விரண்டும் நிகழாமல் நீர் கடந்துகாத்தல் வேண்டுமெனத் தன்னடியையு நோக்கி, அவையனம் அவள் செய்த குறிப்பு உடனபோக்காயிருந்தது, எ-று.

செய்த குறிப்புச செய்தற் கேதுவாய குறிப்பு. அஃதென்றுள், * "செறிதொடி செய்திறந்த கள்ள மென்றோளுகலின். பிரிதற் குறிப்புண்டாயின் அஃதழுங்குதல் படன்.

(தே - ப - ரை.)—(யான் அது தெளிவித்தவிடத்தே தெளியாதவர் பிரிய நான் இங்கேயிருந்தால்), தொடி நோக்கி - (இவை நில்லாவென்று தன்) வளையல்களைப்பார்த்து, மெல் தோளும் நோக்கி- (அதற்கு ஏதுவாக இவை மெலியுமென்று) மெல்லிய தோள்களேயும் பார்த்து, அடி நோக்கி - (பின் இவ்விரண்டும் உண்டாகாமல் நீர் நடந்துகாத்தல் வேண்டுமென்று தன்) அடிகளேயும் பார்த்து, ஆண்டு - அவ்விடத்து, அவள் செய்தது - அவள்செய்த குறிப்பு, அஃது - உடன் போக்காயிருந்தது.

கo. பெண்ணினுற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினுற்
காமநோய் சொல்லி யிரவு.

[தலைமகன்பிரியாமைக் குறிப்பினுந்தோழிக் குறிவுபமத்தது.]

(பரி-ரை.) எ-து,—மகளிர் தங்காமநோயினைத் தோழியர்க்கும் வாயாற் சொல்லாது கண்ணினுற் சொல்லி அது தீர்க்கவேண்டுமென்று அவரையிர

* முன் அதிகாரம், இரு-ம் குறளில்காண்க.

யாது உடன்போதல் குறித்துத் தம்மடியினை யிரத்தல் தமக்கியல்பாகிய பெண்மை மேலும் ஓர் பெண்மை யுடைத்தென்று சொல்லுவர் அறிந்தோர், எ-று.

தலைமகளதுடன் போதற்றுணிபு தோழியாற் றெளிந்தாளுகலின், தன் பிரிவின்மைக் குறிப்பினை யறிவுறுப்பான், அவள் பெண்மையினைப் பிறர் மேலிட்டு வியந்து கூறியவாறு.

(தெ - ப - ரை.)—(மகளிர்). காமநோய் - (தங் காமநோயை, கண்ணினுல் சொல்லி - (தோழியர்க்கும் வாயாற் சொல்லாது) கண்ணினுற் சொல்லி, இரவு - (அது நீர்த்தல வேண்டுமென்று அவரை யிரவாமல் உடன்போ நல்குறித்துத் தம்மடியினை) இரத்தல், பெண்ணினுல் - (தமக்கு இயலபாகிய) பெண்மை மேலும், பெண்மை உடைத்து என்ப - ஒரு பெண்மையை யுடைத்தென்று அறிந்தோர்) சொலலுவர்.

கூகூ-ம் அதிகாரம்—புணர்ச்சிவிதும்பல்.

அஃதாவது தலைமகளுக் தலைமகளும் புணர்சகிக்கண்ணே விரைதல். மேற் புணர்ச்சி மிகுதிபற்றித் தலைமகன் பிரிதற் குறப்பறிவுறுத்த தலைமகள் அவன்மாட்டே நிகழாது வேட்கை மிகவினுற் பின்னுந் தன்கண்ணே நிகழ்த்தலான், இது குறிப்பறி வுறுத்தலினபின் வைக்கப்பட்டது.

க. உள்ளக்களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு

[பிரிதும் துறிப்பினுகியானேடு நீ புலவாமைக்குக் காரணம்
யாதேன நகையாடிய தோழிக்குத் தலைமகள்
சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நினைந்த துணையானே களிப்பெய்தலும் கண்ட துணையானே மகிழ்வெய்தலும் கள்ளுண்டார்க்கில்லை, காமமுடையார்க் குண்டு, எ-று

களித்தல் - உணர்வழியாதது. மகிழ்தல் - அஃதழிக்கது. இவ்விரண்டும் உண்டெழியதல்ல திண்மையிற் கள்ளுக்கில் லென்றுள். உண்டென்பது இறுதி விளக்கு. அப்பெற்றித்தாய காமமுடைய யான் புலத்தல் யாண்டைய தென்ப காம்.

(தெ - ப - ரை.)—உள்ள களித்தலும் - நினைத்தவளவிலே களிப்படைதலும், காண மகிழ்தலும் - கண்டவளவிலே மகிழ்ச்சியடைதலும். கள்ளுக்கு - கள்ளுண்டார்க்கு, இல் - இல்லை ; காமத்திற்கு - காமமுடையார்க்கு; உண்டு - உளது.

உ. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்
காம நிறைய வரின்

[ரிதுவுமது]

(பரி-ரை.) எ-து,—மகளிர்க்கு காமம் பனையளவினும் மிகவுண்டா மாயின், அவரால், தங்காதலரோடு தினையளவு மூடுதல் செய்யாமை வேண்டப்படும், எ-று.

பனைத்துணையு மென்புழி டந்தலுருபு விகாரத்தாற் றொக்கது. ஊடின் வருத்த மிகுமெனப் பிறர்க்குறுதி கூறுவாள் போன்று, தன்விதுப்புக் கூறிய வாறு.

(தே - ப - ரை.)—காமம் , பனை துணையும் நிறைய - பனையள வினுமிக, வரின் - (மகளிர்க்கு) உண்டாமாயின், தினை துணையும் - தினையளவும், ஊடாமை - (தங்காதலரோடு) பிணங்காமை, வேண்டும் - (அவரால்) விரும்பப்படும்.

— — —

ஊ. பேணுது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணு தமையல கண்

[ரிதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நம்மை யவமதித்து , தான் வேண்டியனவே செய்யுமாயினும், கொண்கனை என் கணகள் காணுதமைகின்றன வில்லை, எ-று.

தன் விதுப்புகணை கண்மே லேறறப்பட்டது. அத்தன்மையனெனி புலக்குமா றென்னை யென்பதாம்.

(தே - ப - ரை.)—பேணுது - (நம்மை) அவமதித்து, பெட்பவே - (தான்) வேண்டுமவைகளையே, செய்யினும் - செய்தாலும், கொண்கனை - கணவனை, கண் - (என்) கண்கள், காணுது - பாரா மல், அமையல - அமைகின்றன வில்லை

ஃ. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

[ரிதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—தோழீ ! காதலனைக் காணுமுன் அவன்செய்த தவற் றைத் தன்னெஞ்சுநினைந்து யானவரோ டூடுதற்கண்ணே சென்றேன்; கண்ட பின் எனனெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது, எ-று.

சேறனிகழ்தல் நினைத்தலெஞ்சிற்குமொத்தலின், அது மறந்தென்றாள். அச்செலவாற் பயனென்னெனின், துடன்றபையின், மன் ஒழியினைக்கண்

வந்தது. அவ்வெல்லையிலே சென்ற அளைபோகலான்; அது முடிந்தநிலை யென்பதாம்.

(தே - ப - ரை.)—தோழி - தோழியே! (அன்பரைக்காணுதற்குமுன் அவர்செய்த குற்றத்தைத் தன்னெஞ்சு எண்ணி), ஊடற் கண் சென்றேன் - (அவர்மாட்டு) பிணங்குதலிலே சென்றேன்; என் னெஞ்சு - வன்மனம், (கண்டபின்), அது மறந்து - அதைமறந்து, கூடறகண் சென்றது - புணர்தலிலே சென்றது.

நி. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன் பழிகாணேன் கண்ட விடத்து.

[இருபொருளது]

(பரி-ரை.) ஈ-து,—முன்னெல்லாம் கண்டிருந்தும் எழுதுங்காலத்து அஞ்சனக்கோலி னியல்புகாணமாட்டாத கண்ணேபோல, கொண்கனது தவறு காலுங்காவிட, தெல்லாங் கண்டிருந்து அவனைக் கண்டவிடத்துக் காண மாட்டேன், எ-று.

கோல்—ஆகுபெயர். இயல்—கருமை. என்னியல் பிதுவாகலின் மேலும் அது முடியாயிற்றென்பதாம்.

(தே - ப - ரை.)—(முன்னெல்லாம் கண்டிருந்தும்), எழுதும் கால் - எழுதும்போது, கோல்-அஞ்சனக் கோலினியல்பை, காண-காணமாட்டாதகு, கண் போல—, கொண்கன் பழி - கணவனது குற்றத்தை, (அவனைக் காலாதவிடத்தெல்லாம் கண்டிருந்தும்), கண்டவிடத்து - (அவனைக்) கண்டவிடத்து, காணேன்-காணமாட்டேன்.

ந. காணுங்காற் காணேனவ் வுவமைய காணுக்காற் காணேன் றவறில் லெனை.

[ஈருபொருளது.]

(பரி-ரை.) எ-து,—கொண்கனே யான் காணும்பொழுது அவன் றவ றுயவத்தைக் காண்கின்றிலேன், காணுதபொழுது அவையேயல்லது பிறவற் றைக் காண்கின்றிலேன், எ-று.

செயப்படுபொருள் அதிகாரத்தான் வந்தது. முன்பு காணின்னெஞ் சொல் லிய தவறுகள் இதபொழுது காணுமையிற் புலந்திலேனென்பதாம்.

(தே - ப - ரை.)—(நான்), காணும் கால் - (கணவனை) காணும் பொழுது, தவறு ஆய - (அவன்) குற்றங்களானவைகளை, காணேன்-

காண்கின்றிலேன் ; காணுக்கால் - (அவனை) காணுதபொழுது, தவறு அல்லவை - குற்றங்களல்லாதவைகளை, காணேன் - காண்கின்றிலேன்.

எ. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—தம்மை யீர்த்துக்கொண்டு போதலறிந்து வைத்து ஒழுகுகின்ற புனலுட்பாய்வார் செயல்போல, புலவி முடிவுபோகாமை யறிந்து வைத்துக் கொண்டேனெடி புலந்து பெறுவதென், எ-று.

பாய்பவரென்பது ஆகுபெயர். பொய்த்தல் - புரைபடுதல். புலந்தாலும் பயனில்லை யென்பதாம். பொய்த்து லறிந்தேனென்பது பாடமாயின், உய்த்தலறிய ஓடுகிருட் பாய்வார்போல முடிவறியப் பண்டொருகாற் புலந்து முடியாமையறிந்தேன் இனி அதுசெயற்பாற் றன்றென வுரைக்க.

(தே - ப - ரை.)—உய்த்தல் அறிந்து - (தம்மை) ஈர்த்துக் கொண்டுபோதலறிந்திருந்து, புனல் பாய்பவரே போல் - (ஓடுகின்ற) நீரிலே பாய்வோர் செயல்போல், பொய்த்தல் அறிந்து - (பிணக்கு) முடிவுபோகாமை யறிந்திருந்து, புலந்து - (கனவினெடு) பிணங்கி, என் - (பெறுவது) யாது?

அ. இனித்தக்க வின்ன செயினுங் களித்தார்க்குங்
கள்ளற்றே கள்வகின் மார்பு.

[தலைமகள் புணர்ச்சிவிழைவு பற்றந் தோழி
தலைமகற்குரை கூலியது.]

(பரி-ரை.) எ-து,—வஞ்சகா, தன்னெயுண்டுகளித்தார்க்கு இனிமைத்தக்க இன்னுதவற்றைச் செய்யினும், அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய கள்ளுப்போலும் எங்கட்கு நின் மார்பு, எ-று.

அவ்வின்னுதன—நாணனமை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மையென் றிவைமுதலாயின. எங்கட்கு நாணின்மை முதலியவற்றைச் செய்யுமாயினும் எங்களால் மேன்மேல் விரும்பப்படாநின்ற தென்பதாம், கள்ளவென்றதும் அதுநோக்கி.

(தே - ப - ரை.)—கள்வ-கள்வனே ! நின் மார்பு-(எங்களுக்கு) உனதுமார்பு; களித்தார்க்கு - (தன்னையுண்டு) களித்தவர்க்கு, இனித்தக்க - அவமான மடையத்தக்க, இன்ன செயினும் - இனிமை

யில்லை களைச்செய்தாலும், கள் அற்று - (அவராலே மேலுமேலும் விரும்பப்படுவதாகிய) கள்ளுப்போலும்.

கூ. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செல்வி தலைப்படு வார்.

[உலகமாதர்களுள் மலரைவிட மென்மையான
பெண்மையது.]

(பரி-ரை) எ-து,—காமவின்பம் மலரினு மெல்லிதாயிருக்கும், அங்ஙனம் மெல்லிதாதலையுடைத்து அதன்செல்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர், எ-று.

தொட்டதினையானே மணஞ்செல்வியழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிதென்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண் வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும், ஒருகாலத்தின்கணே யொத்து நுகர்தற்குரியாரிருவர் அத்தகைமை காலமும் பகரணங்களும்பெற்றுக் கூடி நுகரவேண்டுதலின் அதன்செல்வி தலைப்படுவார் சிலரென்றும், அவற்றுள் யாதானுமொன்றனுள் சிறிது வேறுபடினும் வாடுதலின் மலரினு மெல்லிதென்றல கூறினனை. குறிப்பெல்லாமையின் யானதுபெறுகின்றிலே னென்பதாம். தலைமகளுடைமீர்வது பயன்.

(தே - பரை)—காமம் - காமவின்பம், மலரினும் - பூவினும், மெல்லிது-மெல்லியதாருக்கும்; (அப்படி மெல்லியதாயிருக்கையை அறிந்து), அதன் செல்வி - அதன் பக்குவத்தை, தலைப்படுவார்-பெறுவோர், சிலர் - (உலகத்திலே) சிலர்

கூ. கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் பற்று.

[நெகிழ்வுமது]

(பரி-ரை) எ-து,—காதலி முன்னொருஞான்று புல்லல் விதுப்பினுற் சென்ற என்னெஞ்சுதன்கணமாத்திரத்தா னூடி, புல்லுதலே என்னினுந் தான் விதும்பலால் அது தன்னையும் அப்பொழுதே மறந்து கூடிவிட்டான்; அதனுல் யானித்தன்மையே நுகவும் விதுப்பின்றியூடி நிற்கின்றவிவள் அவளல்லள், எ-று.

கண்மாத்திரத்தானூடல் - சொன் றிகழ்ச்சியின்றி அது சிவந்த துணையேயாதல். அவளாயின் இவ்வன ஊடற்கண்டா னென்பது பயன்.

(தே - பரை.)—(என்காதலி முன்னொருகாள் புணரச் சென்ற என்னெஞ்சு), கண்ணிற் றுனித்து - (தன்) கண்மாத்திரத் தாலே பிணங்கி, புல்லுதல் - புணர்தலிலே, என்னினும்—, தான்

விதப்புற்று - தான்விரைவுற்று, **கலங்கினள்** - (அதனையும் அப் பொழுதே) மறந்து கூடிவிட்டாள், (அதனால் தான் இப்படிவருந் தவும் விரையாமல் பிணங்கி நிற்கிற்ற இவள் அவளல்லள்)

கஈ0-ம் அதிகாரம்—நெஞ்சொடுபுலத்தல்.

அஃதாவது காரணமுண்டாய வழியும் புலக்கக் கருதாது புணர்ச்சிவிதும் புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும், தலைமகன் புலத்தலுமாம். அதி காரமுறைமையும் இதனானே விளங்கும்.

க. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டி னெனைநெஞ்சே
நீயெமக் காகா தது.

[தலைமகனிடத்து மறுதலையாகிய புலவியாகுமாறு
நெஞ்சினிடத்துத் தலைமகள் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நெஞ்சே, அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்காய் நிற்றல்கண்டு வைத்தும், நீயெமக்காய் நில்லாது அவரை நினைத் தற் காரணம் யாது? எ-று.

அவர்க்காதல் - அவர் கருதியதற் குடம்படுதல். எமக்காகாதென்றது புலவிக் குடம்படாமையை. ஒரு கருமத்தைத் தாமாகவறிந்து செய்யமாட்டா தார் செய்வாரைக் கண்டாயினுஞ் செய்வர், அதனாஞ் செய்கின்றிலை யென்ப தாம்.

(தே - ப - ரை.)—நெஞ்சே - (எனது) மனமே! அவர் நெஞ்சு- அவரதுமனம், அவர்க்கு ஆதல் மட்டும் - (நம்மை நினையாமல்) அவர்க்காய் நிற்றல் கண்டிருந்தும், நீ எமக்கு ஆகாதது - நீ (அவ ரையே நினைத்து) எமக்காய் நில்லாமைக்குக் காரணம், எவன் - யாது ?

உ. உறுஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செறுநெனச் சேறியென் னெஞ்சு

[இதுவுமது.]

(பரி-ரை.) எது,—என்னெஞ்சே, மீளவும் நம்மாட் டன்புடையதாகாத வரை உள்ளவாறறிந்த விடத்தும், நாஞ்சென்முல் வெகுளா ரென்பதுபற்றி நீயவர்மாட்டுச் செல்லாநின்றாய், இப்பெற்றியது மேலுமோ ரறியாமை யுண்டோ, எ-று.

அவரையென்பது வேற்றுமைமயக்கம். பழங்கண்ணோட்டம்பற்றி வெகுளாரென்பது கந்தாகச் சென்றாய், நீகருதியது முடியுமோ வென்பதாம்.

(தே - ப - ரை.)—என் நெஞ்சு - எனதுமனமே, உறுதவர் - (நம்மிடத்தி) அன்பில்லாத தலைவரை, கண்ட கண்ணும் - (உள்ள படி) அறிந்தவிடத்தும், சென்றார் என - (நாம்போனால்) கோபியா ரென்பதுபற்றி, அவரை - அவரிடத்து, சேறி - செல்கின்றாய், (உனக்கு இப்படிப்பட்ட ஓறியாமை உண்டோ ?)

கூ. கேட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நெஞ்சே, என்மாட்டு நில்லாது நீவிரும்பியவாறே அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம் கேட்டார்க்கு நட்டார் உலகத்தில்லை யென்னு நினைவோ, நின்னியல்போ, கூறுவாயாக, எ-று.

என்னைவிட்டு அவர்மாட்டிச்சேறல் நீபண்டேபயின்ற தென்பாள் பெட்டாங் கென்றும், தானிது பொழுது மானமிலளாகலிற் கேட்டார்க்கென்றுங் கூறினள். பின்னென்பது ஈண்டிடப் பொருட்டு. செலலென்பது ஆகுபெயர். * "ஒல்கிடத் துலப்பிலா வுணர்வில்லார் தொடர்" பரிபற்று நின்றொடர் பென்பதாம்.

(தே - ப - ரை.)—நெஞ்சே நீ - ஓமனமே! (என்னிடத்து நில்லாமல்), பெட்டாங்கு - விரும்பியபடியே, அவரின் செலல் - அவரிடத்தே செல்லுதற்கும் (காரணம்), கேட்டார்க்கு நட்டார் இல் என்பதோ-கேட்டவர்க்கு நட்புற்றவர் (உலகத்திலே) இல்லை யென்கிற நினைவோ, (உன்னியல்போ சொல்லு).

ச. இனியன்ன நின்னெறி சூழ்வார்யார் நெஞ்சே
தனிசெய்து தும்வாய்காண் மற்று.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நெஞ்சே, நீயவரைக்கண்ட பொழுதே இன்பநுகரக் கருதுவதல்லது அவர் தவறுசோக்கி முன்புலவியை யுண்டாக்கி அதனை யனவரிடத்து பின்னுகரக்கருதாய், ஆகலான், இனியப்பெற்றிப்பட்டவற்றை நின்னேடெண்ணுவார் யார்? யானது செய்யேன், எ-று.

அப்பெற்றிப்பட்டன - புலக்குந்திறங்கள். காணென்பது உரையசை. மற்று—வினைமாற்றின்கண் வந்தது. முன்னெல்லாம் புலப்பதாக வெண்ணியிருந்து பின் புணர்ச்சி வீதும்பலின், இவ்வாறு கூறினள்.

(ப - ரை.)—நெஞ்சே - நெஞ்சமே! (நீ அவரைக் கண்ட பொழுதே இன்பமனுபவிக்க நினைப்பதல்லது), தானி செய்து - (அவர் தவறுநோக்கி) பிணக்கை உண்டாக்கி, மற்று அவ்வாய் - (அதனை அளவறிந்து (பின் அனுபவிக்க நினையாய், (ஆதலால்), இனி—, அன்ன-அப்படிப்பட்டவகைளை, நின்னொடு - உன்னுடன், சூழ்வார் - எண்ணுவோர். யார் - யாவர்? (நான் அதுசெய்யேன்).

நி பெறுஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மறுஅ விடும்பைத்தென் னெஞ்சு.

[வாயிலாகத் தோழி நேட்டுத் தலைமகட்
சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—காதலரைப் பெறுதலுன்று அப்பெறுமைக் கஞ்சா நின்றது, பெற்றக்கால் வரக்கடவ பிரிவினையுட்கொண்டு அதற் கஞ்சாநின்றது, ஆகலான், என்னெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காத விடும்பையை யுடைத்தாயிற்று, எ-று.

காதலரைப் பெற்றவைத்துக் கலவியிழத்தல் உறுதியன்றென்னுங் கருத்தான் வாயினேர்நின்றுளாகலிற் பெறுமையஞ்சு மென்றும், கலவி யாராமையின் இன்னுமிவர் பிரிவராயின் யாது செய்துமென்பது நிகழ்தலிற் பெறிற்பிரி வஞ்சுமென்றும், இவ்விரண்டு மல்லது பிறிதின்மையின் எஞ் ஞான்று மறுவிடும்பைத்தென் றுங் கூறினள்.

(தே - ப - ரை)—(தலைவரைப் பெறுகாலிலும்), பெறுமை அஞ்சும் - அப்பெறுமைக்கு அஞ்சாநிற்கும், பெறின் - பெற்ற காலிலும், பிரிவஞ்சும் - (அவரது) பிரிவை நினைத்து அஞ்சாநிற் கும்; (ஆகலால்), என்னெஞ்சு—, அறு இடும்பைத்து - (எக்காலும்) நீங்காத துன்பமுடையது

சு. தனியே யிருந்து நினைத்தக்கா லெண்ணித்
தினிய விருந்ததென் னெஞ்சு

(பரி-ரை.) எ-து,—என்னெஞ்சு ஈண்டிருந்தது, காதலரைப் பிரிந் திருந்து அவர் கொடுமைகளே யான்றன்னொடு நினைத்தக்கால், அவ்வளவறிந்து எனைத்தின்பமு போனது துன்பஞ் செய்தற்கே, எ று.

என் மாட்டிருந்தது அன்று அவர் கொடுமைகளே யுட்கொண்டு எனக் காற்றுமை செய்தற்கே, இன்று அவைநோக்கி அவரொடு புலத்தற்கன்ன தென்பதாம்.

(தே - ப - ரை.)—என் நெஞ்சு— இருந்தது - (இங்ஙனே) இருந்தது. தனியே இருந்து - அன்பரைப்பிரிந்திருந்து, நினைத்தக்கால - (அவர்கொடுமைகளை நான் தன்னேறி) நினைத்தக்கால், (அச்சமய மறிந்து), என்னை—, தினைய - தின்பதிபோல் துன்பஞ்செய்தற் பொருட்டே.

எ. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணை மடநெஞ்சிற் பட்டு.

[இருவமது.]

(பரி-ரை.) எ-து,—தன்னைமறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாத என் மாட்சிமையில்லாத மடநெஞ்சுடனேகூடி, என்னுயிரினுஞ் சிறந்த நாண டன்னையும் மறந்து விட்டேன், எ-று.

மாணுமை-ஒருதலேயி னில்லாமை மடமை-கண்டவழி நினைந்து காணு வழி மறக்குந்தவற்றைக் காணுவழி நினைந்து கண்டவழி மறத்தல். நாண்-எஞ் ஞான்றுங்கூடி யொழுகினும் அஞ்ஞான்று கண்டாராபோன் றெடுகுதல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின், அதனை மறந்தேனென்றாள்.

(தே - ப - ரை.)—அவர் மறக்கல்லா - (தன்னைமறந்த) அவரை மறக்கமாட்டாத, மாணை - மாட்சிபில்லாத, என் மடம் நெஞ்சில் பட்டு - எனது அறிவில்லாத மனத்தைடி, நாணும் - (என்) நாணத்தையும், மறந்தேன் - மறந்துவிட்டேன்.

அ. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத னெஞ்சு.

[இருவமது.]

(பரி-ரை.) எ-து,—உயிர்மேற் காதலையுடைய என்னெஞ்சு, நம்மை யெள்ளிச் சென்றுரென்று நாமு மெள்ளுவேமாயிற் பின்னமக் கிளிவாமென்று கருதி, அவர் திறத்திறே நினையா நின்றது, எ-று.

எள்ளுதல்-வாயின் மறுத்தல். இளிவு—வழிபடாமையானும், பிரிவாற் றுமையானும், நாணும் நிறையு முதலிய விழத்தலானும் உளதாவது. திறம்—வாயினேர்தலும் வருதலும் கூடலுமுதலாயின. இளிவிற்கஞ்சுதலானும் இறந்து படமாட்டாமையின் யானும் கூடக்கருதாநின்ற தென்பதாம்.

(தே - ப - ரை.)—உயிர் காதல் நெஞ்சு - உயிர்மேல் ஆசை யுடைய (என்) நெஞ்சு, (நம்மை இகழ்ந்து சென்றுரென்று), எள் ளின் - (நாமும்) இகழ்வோமாயின், இளிவாம் என்று எண்ணி.

(பின்பு நமக்கு) அவமானமா மென்று நினைத்து, அவர் திறம் - அவர் திறத்தையே, உள்ளும் - நினைகின்றது.

கூ. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

[உணர்ப்புவயின்வாரா வூடற்கட லெலமதனி சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—ஒருவர்க்குத் துன்பம் வந்துழி, அது நீக்குதற்கு, தாமுரித்தாகப்பெற்ற தம்முடைய நெஞ்சந் துணையாகாவழி, வேறுதுணை யாவார் ஒருவருமில்லை, எ-று.

ஈண்டுத் துன்பமாவது ஊடலுணர்புவயின் வாராமை. அதற்கு நெஞ்சந் துணையாகாமையாவது அவளே யன்பில ளென்றெழியாது கூடற்கண்ணே விதும்பல். ஒரு துணையு மின்மையின், இம்முற்றுவிடுதலே யுள்ளதென் பதாம்.

(தே - ப - ரை.)—துன்பத்திற்கு - (ஒருவர்க்கு) துன்பம் வந்த விடத்து, (அதை நீக்குதற்கு), தாம் உடைய - தாம் உரித்தாகப் பெற்ற, நெஞ்சம் - (தமது) மனமானது, துணை அல்வழி - துணை யாகாத விடத்து; துணை ஆவார்—, யாரே - யாவர், (ஒருவரும் இல்லை).

கo. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி.

(பரி-ரை.) எ-து,—தாமுரித்தாகவுடைய நெஞ்சம் ஒருவர்க்குத் தமரல் லாவழி, அயலார் தமரல்லராதல் சொல்லவேண்டுமோ, எ-று.

பிறனொருத்தியைக் காதலியென்று கருதி என்னெஞ்சே என்னை வருத்தா நின்றபின் அப்பிறள் புலக்கின்ற தெளி தென்பதாம்.

(தே - ப - ரை.)—தாம் உடைய - தாம் உரித்தாக வுடைய, நெஞ்சம்—, தமர் அல் வழி - (ஒருவர்க்கு) தம்மவராகாத விடத்து, ஏதிலார் - அயலார், தமர் அல்லர் - தம்மவரல்லராகுதல், தஞ்சம் -

க்ஙகம் அதிகாரம்—புலவி.

அஃதாவது இருவர்நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கைகருதியவழி ருவரோ டொருவர் புலத்தல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

க. புல்லா திராப் புலத்தை யவருறு
மல்லனெய் காண்கஞ் சிறிது.

[வாயிலாகத் சென்ற தோழி தலைமகன் வாயினேராற்பொருட்டு அவனோடு நகையாடிச் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—அங்ஙனம் புலந்தாற் காதலரெய்து மல்லனெயினை ாஞ் சிறிது காணக்கடவேம்; நீயவரை விரைந்துசென்று புல்லாதே இத் தோழிலே மேலிட்டுக்கொண்டிருந்து புலப்பாயாக, எ-று.

அல்லனெய் - துன்பத்தைச்செய்யுங் காமநோய். சிற்றென்ருள், புல பியை நீளவிடலாகாதெனபது பறறி. புலத்தை யென்புழி ஐகாரம் * "கடம் பூண்டொருகானவ்வந்தை" என்பு ப்போல முன்னிலையினை விகுதி. புலத்தி யன்பதூஉம் பாடம். புலவிக்குறிப்புக்கண்டு அவள் வழியளாய் நின்று ாமுற்ற வருத்தம் அவருஞ் சிறிதுற்றறிதல் வேண்டுமென நகையாடி நேர்வித்தவாறு.

(தே - ப - ரை.)—அவர் உறும் - அக்காதலரடையும், அல் ல் நோய் - துன்பநோயினை, சிறிது—, காண்கம் - காணக்கட வோம் ; புல்லாது - (நீ அவரை விரைந்துபோய்) தழுவாமல், இரா இத்தொழிலேமெலிட்டுக்கொண்டு) இருந்து, புலத்தை - பிணங்கு.

உ. உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்.

[புலவியொழிந்து வயினேநும்வகை பலவா சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—புலவி கலவி இன்பஞ்செயற்கு வேண்டுமள விற்ரு ல் உப்புத் தூய்ப்பனவற்றை இன்சுவையாக்கற்கு வேண்டு மளவிற்ருதல் போலும்; இனி அதனை யவ்வளவிற் சிறிது மிகவிடுதல் அவ்வுப்பு அளவின் மிக்காற்போலும், எ-று.

நீளவிடல்-அளவறிந் துணராது கலவிமேலெழுந்த குறிப்பழுங்கு மள புஞ் செய்தல். சிறிது நீளவிடலாகா தென்ருள், நேர்விக்கின்ரு ளாகலின். உப்பு மிக்கவழித் தூய்ப்பது சுவையின் ருஞற்போலப் புலவிமிக்கவழிக் கலவி இன்பமன்ரு மென்றமையின், இது பண்புவமை.

(தே - ப - ரை.)—புலவி - பிணங்கு, (புணர்ச்சி யின்பஞ்செய் தற்கு வேண்டுமளவினதாகுதல்), உப்பு அமைந்தற்று - உப்பானது

* கலி, குறிஞ்சி, உஎ.

(உணவுகளை இன்சுவையாக்குதற்கு) வேண்டுமளவினதாகுதல் போலும்; நீளவிடல் - (இனி அதனை அவ்வளவிற் சிறுது) மிகவிடுதல்; அது சிறிது மிக்கற்று - அவ் வுப்பளவு சிறிது மிருந்தது போலும்.

கூ. அலந்தாரை யல்லனெய் செய்தற்றுற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

[பாத்தையரிடந்து நின்றும் பக்க நூலமகளெடு
நூலமகள் புலந்து சொலலியது.]

(பரி-ரை.) எது,—தம்மைப்பெறுது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கல வாது ஆடவர்சேறல் பண்டே தின்பமுற் றழிந்தாரை அதன்மேலும் மிக்க தின்பத்தினைச செய்தாற் போலும், எ-று.

பிறர்பாற் சேறலின் நம்மைப்பெறுது புலந்தூடி யிருக்கின்ற பரத்தை யரைப்போய்ப் புலவி நீக்கிப் புல்லீராயின், அவராற்று மென்பதாம்.

(தெ - ப - ரை.)—(ஆடவர்), தம்மை புலந்தாரை - தம்மைப் பெறுது பிணங்கிய மகளிரை, (அப்பிணக்கு நீக்கி), புல்லாவிடல் - புணராமல்விடுதல், அலந்தாரை - (முன்னமே தன் பமுற்று) அழிந்த வர்க்கு, அல்லல் நோய் செய்தற்று - (அதன்மேலும்) மிருந்த தின்பநோய் செய்ததுபோலுமாம்.

ச. ஊடி யவரை யுணர்த்தாமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நும்மோ டூடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடா தொழிதல் பண்டே நீர்பெறுது வாடிய கொடியை அடியிலே யறுத்தாற் போலும், எ-று.

நீர் பரத்தையரிடத்திராயவழி எம்புதல்வரைக் கண்டாற்றி யிருக்கற்பால மாய யாம் நும்மோ டேதற்குரியமல்லம் அன்மையின் எம்மையுணர்த்தல் வேண்டா, உரியராயூடிய பரத்தையரையே உணர்த்தல்வேண்டுவது, அதனால் ஆண்டுச செல்மினென்பதாம்.

(தெ - ப - ரை.)—ஊடியவரை - (உம்மோடு) பிணங்கிய பரத்தையரை, உணர்த்தாமை - பிணக்குத்தீர்த்துக் கூடாமை,

வாடிய - (முன்னமே நீர் பெறாமல்) வாடிய, வள்ளி - கொடி முதல் அரிந்தற்று - அடியிலே அறுத்தல்போலும்.

நி. நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை
பூவன்ன கண்ணீர கத்து.

[தலைமகளைப் புலவி நீக்கிக்கூடிய தன் தலைமகன்
தன்னுள்ளே சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—நற்குணங்களாற் றகுதியுடையராய தலைவர்க்கும் அழகாவது தம்பூவன்னகண்ணீர் நெஞ்சின்கண நிகழும் புலவியிருதி யன்றே, எ-று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனிதென் பான், நலத்தகை நல்லவர்க்கு மென்றான். அழகு - இன்பப்பயனைத் தலைப் படுதல். தானுகர்ந்த வின்பத்திற்கேதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு.

(தே - ப - ரை.)—நலம் தகை - நற்குணங்களாலே தகுதி யுடைய, நல்லவர்கு - தலைவர்க்கும், ஏர்-அழகாவது, பூ அன்ன கண்ணீர் அகத்து-மலர்போலுங் கண்ணிபர் நெஞ்சிலுண்டாகின்ற, புலத்தகை - பிணக்கின் மிகுதியன்றே?

சு. தினையும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருங்காயு மற்று.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—முதிர்ந்தகலமாகிய தினையும் இளையகலமாகிய புலவியும் இல்லையாயின், காமம் செவ்விமுதிர்ந்த பழமும் இளங்காயும் போலும், எ-று.

மிகமுதிர்ந்திறு மெல்லைத்தாய கனி நுகர்வார்க்கு மிகவு மினிமைசெய் தலிற் றினையில்லையாயிற் கனியற்றென்றும், கட்டிளமைத்தாய காய் நுகருஞ் செவ்வித் தன்றுகலிற் புலவியில்லையாயிற் கருக்காயற்றென்றுங கூறினான். இவ்விரண்டும் வேண்டுமென்று வியந்து கூறியவாறு.

(தே - ப - ரை)—தினையும் - பெருமபிணக்கும், புலவியும் - சிறுபிணக்கும், இல் ஆயின் - இல்லையாயின், காமம்—, கனியும் - (பக்குவமுதிர்ந்த) பழமும், கருக்காயும் அற்று - இளங்காயும் போலும்.

எ. ஊடலி னுண்டாங்கோர் தின்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.

(பரி-ரை.) எ-து,—இனிப்புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோவென்று கருதலான், இன்பத்திற் கின்றியமையாத ஊடலின் கண்ணேயும் ஒரு தின்ப நிகழும், எ-று.

என்றென்னு மெச்சத்திற்குக் கருதலாவென்பது வருவிக்கப்பட்டது. நிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கொல்லென்பதனே நீடுவதென்பதனுட னுங் கூட்டுக. ஆங்கென்பது அசைநிலை. ஊடல் - கூடற்கண் விரைவித்தல் கூறியவாறு.

(தெ - ப - ரை.)—புணர்வது - புணர்ச்சியானது, நீடுவது கொல் - நீடிக்குமோ; அன்றுகொல் - நீடியாதோ, என்று - என்று நினைத்தால், ஊடலின் - (இன்பக் குறிற்கு அபிநயம் வேண்டும்) பிணக்கிலேயும், ஓர் தின்பம்—, உண்டு - உண்டாம்.

அ. நோத லெவன்மற் றொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி.

[உணர்ப்புவயின்வாரா வூடற்கட் டலைமகன் றலைமகளோடு புலந்து சொல்லியது.]

(பரி-ரை.) எ-து.—இவர் நம்பொருட்டாக நொந்தாரென்று அந்நோ யறியுமன்புடையாரைப் பெறுவழி ஒருவர் நோகின்றதனுற் பய னென் ? எ-று.

அறிதல்—ஈண் டேலு மினிதுணர்தல். மற்று—வினைமாற்றின்கண் வந்தது. இவள் நங்காதலியல்லள், அன்மையின் இந்நோயறியாள், அறியாமை யின்நாம் புலக்கின்றதனுற் பயனில்லையெனத் தன்னுற்றமை யுணர்த்திய வாறு.

(தெ - ப - ரை.)—நொந்தார் என்று - (இவர் நம்பொருட்டு) நொந்தாரென்று, அஃது அறியும் - அந்நோயை அறிகிற, காதலர் - அன்புடையவரை, இல்லாவழி - பெறுதலிடத்து, நோதல் - (ஒரு வர்) நோகின்றதனால், எவன் - (பயன்) யாது ?

கூ. நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது.

(பரி-ரை.) எ-து,—உயிர்க் கின்றியமையாத நீரும் நிழலின்கண்ணதே இனிதாவது, எனை வெயிலின்கணணது ஆகாது; அதுபோலக் கலவிக் கின்றியமையாத புலவியும் அன்புடையார்கண்ணே இனிதாவது, எனை யன்பிலார் கண் ஆகாது, எ-று

நிழற்கணிருந்த நீர குளிராகிமிக்குத் தாகந்தணித்தலின் இனிதாயிற்று வீழுநர் - ஆற்றுமைககு நோதலுக கூடுதற்கண வேட்கையு முடையாராவார். இவள் நம்மாட்டு அவ்விரணடு மினமையின் இப்புலவிதானு மின்னு தாகா நின்றதென்பதாம்.

(தே - ப - ரை)—நீரும் - (உயிர்க்கு அவசியம் வேண்டும்) நீரும், நிழலுதே - நிழலிலுளாளதே, இனிது - இனிதாகும்; (அதுபோல்), புலவியும் - (புணர்ச்சிக்கு அவசியம வேண்டும்) பிணக்கும், வீழுநர்கணணே இனிது - அன்புடையவரிடத்தே இனிதாகும், (மற்றை யன்பிலாரிடத்து ஆகாது)

கo ஊடல் உணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா.

[இருவகைத்து.]

(பரி-ரை.) எ-து,—சானறுடைகணணே மெலியாநிற்கவும், விட்டிருக்க வல்லாரோடு கூடக்கடவேமென்று என்னெஞ்சம் முயறற்கேது தன்னவாவே, பிறிதில்லை, எ-று.

அன்பு மருளுமில்லாதாரை உடையரென்றும் அவரோ டியாகு கூடுவே மென்றுங் கருதி அதற்கு முயறல் அவாவுற்றூ செயலாகலின், கூடுவே மென்பதவாவென்றன். காரியக காரணமாக வுபசரிக்கப்பட்டது. இக்கூட் டம் முடியாதென்பதாம்.

(தே - ப - ரை.)—ஊடல் உணங்க - (தான்) பிணங்கலிலே வருந்தா நிற்கவும், விடுவாரோடு - (தன்னை) விட்டிருக்கவல்லாரோடு, எண் நெஞ்சம்—, கூடுவேம் என்பது - கூடக்கடவேமென்று முயற்சி செய்தற்குக்காரணம், அவா - (தன்) ஆசையே (வேறில்லை)

கஉ-ம் அதிகாரம்—புலவிநுணுக்கம்.

அது புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது தலைமகனுந் தலை மகளும் ஒருமனிக்கட் கூடி யிருந்தழி அவன்மாட்டுப் புலத்தற் காரணமில்லை

யாதேனுங் காதல் கைம்மிகுதலான் நுண்ணியதோர் காரணமுளதாக வுட் கொண்டு அதனை யவன்மேலேற்றி அவள் புலத்தல். காரணத்தினுண்ணுக் கம் காரியத்தின்மேனின்றது. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

க. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தகின் மார்பு.

[உலாப்போய்வந்த தலைமகனிடம் பள்ளியிடத்தாளுகத் தலைமகள் சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—*பரத்தமையுடையாய், நின்னைப் பெண்ணியல்பினை யுடையார் யாவருந் தங்கண்ணைப் பொதுவாக வுண்பர், அதனால் அவர்மிச்சி லாய நின்மார்பினைப் பொருந்தேன், எ-று.*

கற்புநாண்முதலிய நற்குணங்களின்மையிற் பரத்தையர்க்குள்ளது பெண் ணியற்கை மாத்திரமே யென்னுங் கருத்தாற் பெண்ணியலாரென்றான். பொதுவாக வுண்டல் - தஞ்சேரிசெலவின் முறையானன்றி ஒருகாலத் தொருங்கு நோக்குதல் அதுவுமோர் குற்றம். தானோக்கி யின்புற்றவாறே அவரு நோக்கி யின்புறுவரென வாசங்கித்து அவர்பாற் பொருமை யெய்து தலின், நுணுக்கமாயிற்று.

(தெ - ப - ரை.)—பரத்த - பரத்தையரிடத்துச் செல்லுத லுடையாய், பெண் இயலார் எல்லாரும் - பெண்ணியல்பினையுடை யாரெல்லாரும், கண்ணின் - (தமது) கண்களால், பொது உண்பர்- பொதுவாக (உண்ணை) அனுபவிப்பர் ; (அதனால்), உன் மார்பு- (அவரெச்சிலாகிய) நின்மார்பை, நண்ணேன் - பொருந்தேன்

உ. ஊடி யிருந்தேமாத் தும்மினீர் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

[தலைமகனிடத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.]

(பரி-ரை.) எ-து,—*யாந்தம்மோடே யுரையாடாதிருந்தேமாகக் காதலர் தும்மினர், அது நீங்கித் தம்மை நீடுவாழ்கென் றுரையாடுவேமாகக்கருதி, எ-று.*

தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலான், உரையாடல் வேண்டிற்றென் பதாம். இயல்பானிகழ்ந்த தும்மலைக் குறிப்பானிகழ்ந்ததாகக் கோடலின், நுணுக்கமாயிற்று.

(தெ - ப - ரை.)—ஊடி - (யாம்தம்மோடு) பிணங்கி, இருந் தேம் ஆ - (பேசா) திருந்தேமாக, தும்மினர் - (காதலர்) தும்மினர்; (அப்பிணக்கு நீக்கி), யாம்—, தம்மை—, நீடு வாழ்க என்பாக்கு அறிந்து - நெடுங்காலம் வாழ்கவென்று சொல்லுவேமாக நினைத்து,

கூ. கோட்டுப்பூச் சூடினும் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று.

[தலைமகள் புலவித்தூற்றினைக் கண்டு நீவிர கூடியோழுகாநிற்க வும் இது நிகழ்ந்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது,]

(பரி-ரை.) எ-து,—யான் கோதலைசெய்யு மாலையைச் சூடினேனுமி னும், தம்மாற் காதலிக்கபட்டா ளொருத்திக்கு இப்பூவணி காட்டல்வேண் டிச் சூடினீரென்று வெகுளா நிற்கும்; இத்தன்மையாட்கு ஒருகாரணம் வேண் டுமோ? எ-று.

கோடென்பது முதனிலைத் தொழிற்பெயர். பூ—ஆகுபெயர். வகைய மாகச் சூடினு மென்பதாம். * "கோட்டவ் கணணியுங் கொடுக்திரை யாடை யும்" என்றார் பிறரும். இனி யம்மருத நிலத்துப் பூவன்றி வேற்றுநிலத்துக் கோட்டுப்பூவைச சூடினேனுமினும் ஈண்டையாள் பிறளொருத்திக்கு அவ் வேற்றுப் பூவணிகாட்டல் வேண்டிச சூடினீரென்று வெகுளுமெனினு மமை யும்.

(தே - ப - ரை.)—கோட்டுப் பூ - வகைவாகிய பூமாலையை, சூடினும் - அணிந்தாலும், ஒருத்தியை - (உம்மால் இச்சிக்கப் பட்ட) ஒருத்திக்கு, காட்டிய - (இப்பூவலங்காரிப்பை) காட்டுதல் வேண்டி, சூடினீர் என்று - தரித்துக்கொண்டீரென்று, காயும் - கோபியா நிற்பள், (இப்படிப்பட்டவளுக்கு ஒருகாரணம் வேண் டுமோ).

ச. யாரினும் காதல மென்றோனு வுரைஞர்
யாரினும் யாரினு மென்று.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காமதந்தத்துரிய விருவராயினுர் யாவரினும் யாம் மிக்ககாதலையுடையே மென்பது கருதி யாரினுங் காதலமென்றோனுக, நின் றேழி அது கருதாது, என்னுற்காதலிக்கபபட்ட மகளிர் பலருள்ளும் நின்கட் காதலுடையேனென்றோனுகக் கருதி, அம்மகளிர் யாரினும் என்கட் காதலு டையாயினீரென்று சொல்லிப் புலந்தாள், எ-று.

தலைமகன் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்சிக்கண் வந்தது. யான ன்பு மிகுதியாற் சொல்லியதனைக் கருத்துவேறுபடக் கொண்டதல்லது பிறிதுகாரண மில்லை யென்பதாம்.

---

* புறநானூறு, உஎடு.

(தே - ப - ரை.)—(காமம் அனுபவித்ததற்கு உரிய இருவரா யுள்ளவர் எவரினும் நாம் மிகுந்த காதலியுடையே மென்பது நினைத்து), யாரினும் காதலம் என்றேன் ஆ - யாரினும் மிகுந்த காத லுடையேமென்று சொன்னேனுக, (உனதுதோழி அது நினையாமல் உன்னுல் விரும்பப்பட்ட மகளிர் பலருள்ளும் உன்னிடத்து மிகுந்த காதலியுடையே மென்றேனுக நினைத்து), யாரினும் யாரினும் என்று - யாரினும் யாரினும் (என்னிடத்தும காதலி யுடையீர்) என்றுசொல்லி, ஊடினுள் - பிணங்கினுள்

நி. இம்மைப் பிறப்பிற் பிரியல னென்றேனுக்
கண்ணிறை நீரொண் டனள்.

[இதுவுமது]

(பரி-ரை.) எ-து,—காதன் மிகுகியான் இம்மையாகிய பிறப்பின்கண் யாம் பிரியேமென்று சொனனேனுக, அதனுன் எனை மறுமையாகியபிறப்பின் கட் பிரிவலென்னுக குறிப்பனேனுகக் கருதி, அவள் தன் கண்ணிறைந்த நீரினைக்கொண்டாள், எ-று.

வெளிப்படசொல்லைக் குறிப்புசசொல்லாகக் கொள்கின்றதல்லது என் பாற் றவறில்லை யென்பதாம்.

(தே - ப - ரை.)—(காதன்மிகுதிபால்), இம்மைப் பிறப்பில் - இறப்பிறப்பிலே, பிரியலன் என்றேன் ஆ - பிரியேனென்று சொன்னேனுக, (அதனுல் என்னை மறுபிறப்பிலே பிரிவேன் என்கிற கருத்துமிடையனுக நினைத்து), கண் நிறை நீர் கொண்டனள் - (அவள்) கண்ணிறைந்த நீரைக்கொண்டாள்.

சு. உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தி ரென்றெண்ணிப்
புல்லாள் புலத்தக் கனள்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—பிரிந்தகாலத்து நின்னை யிடையின்றி நினைந்தே னென்னுங் கருத்தால் யானுள்ளினேனென்றேன்; என, அதனை ஒருகான் மறந்து பின்னினைந்தே னென்றதாகக் கருதி, எனை யிடையே மறந்தீ ரென்றசொல்லி மூன் புல்லுதற் கமைந்தவன் அஃதொழிந்து புலத்தற்கமைந் தான், எ-று.

மற்று—வினைமாற்றின்கண வந்தது. அருத்தாபத்தி வகையான் மறத் தலேயுட்கொண்டு புலந்தாளென்பதாம்.

(தெ - ப - ரை)—உள்ளினேன் என்றேன் - (பிரிவில் இடை விடாமல் உன்னை நினைந்தேன் என்ற கருத்தால்) நினைந்தேனென் கின்றேன்; (அவர் அதனை ஒருகால் மறந்து பின் நினைந்தேனென்று சொல்லியதாக எண்ணி). மற்று - அதற்கு விரோதமாக, என் மறந் தீர் என்று - என்னை மறந்தீரென்று சொல்லி, (முன்னே தழுவு தற்கு அமைந்தவள்). என்னை—, புல்லாள் - தழுவாளாகி, புலத் தக்கனள் - பிணங்கற்கு அமைந்தாள்.

மா வழுத்தினு டும்மினே னுக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—கூடியிருக்கின்றவள் யான்றும்மினேனுகத் தன் னியற்கை பற்றி வாழ்த்தினுள்; அநுபவம் வாழ்த்தியதானே மறித்து, நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலாற் றும்மினீரென்று சொல்லிப் புலக்தழுதாள், எ-று.

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின், அழித்தென்றுன். அன்புடை யார் நினைத்தலி னுல் நினைக்கப்பட்டார்க்கு நும்மரேன்று மென்பது மகளிர் வழக்கு. இல்வழக்கை உள்வழக்காகக் கருதிப் புலந்தாளென்பதாம்.

(தெ - ப - ரை)--(கூடியிருக்கின்றவள்), நும்மினேன் ஆக - (யான்) நும்மினேனுக, வழுத்தினுள்-(தன்னியற்கை பற்றி) வாழ்த்தி னுள்; (அப்படி வாழ்த்தினதானே), அழித்து - (அக்கருத்தை) மறித்து, (உம்மை நினைந்து வருந்துகின்ற மகளிருள்), யார் உள்ளி- யார் நினைத்தலால், நும்மினீர் என்று—, அழுதாள் - (பிணங்கி) அழுதாள்.

அ. நும்முச் செறுப்ப வழுதா னுமருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று.

(பரி-ரை.) எ-து,—எனக்குத் தும்மரேன்றியவழி யாருள்ளித் தும்மினீ ரென்று புலத்தலையஞ்சி, அதனே யானடக்கினேன்; அநுனயமடக்கவும், நுமர் நுமமை நினைத்தலே எம்மை மறைக்கலுற்றீரோ வென்று சொல்லிப் புலர்ந் தழுதாள், எ-று.

தும்மு வென்பது முதனிலைத்தொழிற்பெயர். செறுப்பவு மென்பதி னகர தகரமாயிய வெசவவும்மை விகாரத்தாற்றொக்கது. எம்மை யென்பது நும்

மோடியாத மிபைபில்லாத வெம்மையென்பதுபட நின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காருவென்ப. தம்மினுங்குற்றம் ஒழியினுங்குற்ற மாயக் காற் செயறபால தியாதென்பதாம்.

(தே - ப - ரை.)—(எனக்குத் தும்மல் தோன்றியவிடத்தே யார் நினைத்தலால் தும்மினீரென்று பிணங்குதற்கு அஞ்சி), தும்மு செறுப்ப - அத்தும்மலை அடக்கவும், நுமர் உள்ளல் - உம்மவர் (உம்மை) நினைத்தலை, எம்மை மறைத்திரோ என்று - (உம்மோடு ஒரு சம்பந்தமும் இல்லாத) எமக்கு மறைக்கலுற்றீரோ வென்று சொல்லி, அழுதாள் - (பிணங்கி) அழுதாள்.

கூ. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரின்னீர ராகுதி ரென்று

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—இவ்வாற்றாலுணர்த்திய தன்னை யான் பணிந்துணர்த்துங காலும் வெகுளா நிற்கும், பிறமகளிர்க்கும் அவருடியவழி இவ்வாறே பணிந்துணர்த்து நீர்மையை யுடையீராகுதிரென்று சொல்லி, எ-று.

இவள் தெளிவித்தவழியுந் தெளியாளென்பதுபற்றி என்மேலேற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன், பணிய அதுவானும் புலத்தற்கேதுவாய் முடிந்தது, இனி யிவணமாட்டெ செய்யத்தகுவ தியாதென்பதாம்.

(தே - ப - ரை)—தன்னை - (இவ்விதத்தாலே பிணங்கிய) தன்னை, உணர்த்தினும் - (நான் வணங்கி) பிணக்குத் தீர்க்கும் போதும், காயும் - கோபியாநிற்பள் ; பிறர்க்கும் - பிறமகளிர்க்கும் நீர்—, இன்னீர் ஆகுதி என்று - (அவர் பிணங்கியபோது) இப் படியே வணங்கிப் பிணக்குத் தீர்க்குந் தன்மையீ ராகின்றீரென்று சொல்லி,

கஅ. நினைத்திருந்து நோக்கினுங் காயு
யாருள்ளி நோக்கினீ ரென்று.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—என்சொற்களுஞ் செயல்களும் பற்றித் தான் வெகுடலான், அவற்றை யொழிந்திருந்து தன்னவயவங்களை தொப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினும், என்னை வேகுளா நிற்கும் ; என்னவயவ மனைத்தும் நோக்கினீர் அவற்றதொப்புமையான் எம்மகளிரை நினைந்தென்று சொல்லி, எ-று.

யான் எல்லா வவயவக்களானும் ஒருத்தியோடொத்தல் கூடாமையின் ஒன்ரு லொருவராகப் பலரையு நினைக்கவேண்டும் அவரெல்லாரையும் யான றியச் சொல்லுமினென்னுங கருத்தால், அனைத்து கோக்கினீர் யாருள்ளி யென்ருள். வாளாவிருத்தலுங குற்றமாயிற் ரென்பதாம்.

(தே - ப - ரை)—(என் சொற்களும் செயல்களும் பற்றித் தான் கோபித்தலால்), இருந்து - (அவைகளே யொழிந்து) இருந்து, நினைத்து - (தன்னவய வங்களின ஒபபிலாமையை) நினைத்து, நோக்கினும் - (அவைகளையே) பார்த்துக்கொண்டிருந்தாலும், காயும்- (என்னைக்) கோபியா நிற்பள், அனைத்தும் - (என்னவயவம்) எல் லாம், நீர்—, யார் உள்ளி நோக்கினீர் என்று - (அவைகளி னெப் புணையால்) யாவரை நினைத்துப் பார்த்தீரென்று சொல்லி.

கஉங-ம் அதிகாரம்—ஊட லுவகை.

அஃதாவது அப்பெறறிதாய ஊடலாற் றமகருக் கூடலின்பஞ் சிறக் துழி அசிறப்பிறகேதுவாய அவ்வூடலை தலைமகளுவத்தலும் தலைமகனுவத் தலாம். அதிகாரமுறைமையும் இதனுனே வினகுகும்.

க. இல்லே தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு

[தலைமகள் காரணமின்றிப புலக்கின்றமை சேட்டதோழி
அங்ஙனம் நீ புலக்கின்றதென்னை யென்றுட்து அவள்
சொல்லியது]

(பரி-ரை.) எ-து,—அவாமாட்டுத தவரில்லையாயினும், நமக்கவர் தலை யளி செய்கின்றவாறு அவரோடுதலை விளைக்க வற்றுகின்றது, எ-று.

• அவர்க்கென்பது வேற்றுமை மயக்கம். அளவிறந்த வின்பத்தாகலின் யானெய்தற்பாலதாய இத்தலையளி ஒழிந்தாரு மெய்துவரெனக் கருதி அது பெருமையான் ஊடனிகழ்கின்ற தென்பதாம்.

(தே - ப - ரை)—அவர்க்கு - அவரிடத்தி, தவறு - பிழை கள், இல்லே ஆயினும் - இல்லேயானுலும், அவர் அளிக்கும் ஆறு - (நமக்கு) அவர் அருள் செய்கின்ற விதம், ஊடுதல் வல்லது - பிணங் கலே (விளைக்க) வல்லதாகின்றது

உ. ஊடலிற் ரேன்றுஞ் சிறுதுனி கல்லெரி
வாடினும் பாடு பெறும்.

[புலவாக்காலும் அத்தலேயளி பேறலா யிருக்க அஃதிழந்து
புலவியான் வருந்துவதென்னை யென்றாட்கு அவள்
தோல்லியது.]

(பரி-ரை) எ-து,—ஊடலேதுவாக நகுகட்டோன்றுகின்ற சிறிய தினை தன்னுல் காதலர் செய்யு நல்ல தலேயளி வாடுமாயினும் பெருமை யெய்தும், எ-று.

தவறின்றி நிகழ்கின்றவூடல் கடிதினீங்கலின் அத்துன்பமு நில்லாதென்பாள் சிறுதினியென்றும்.ஆராமைபற்றி நிகழ்தலின் அதனுன் நல்லளி வாடாதென்பாள் வாடினுமென்றும், பின்னே பேரின்பம் பயக்குமென்பாள் பாடு பெறுமென்றுங் கூறினுள். அது வருத்தமெனப்படாதென்பதாம்.

(தே - ப - ரை.)—ஊடலில் தோன்றும் - (பிணங்குதலாலே நம்மிடத்து) தோன்றுகின்ற, சிறு தினை - சிறிய தன்பத்தால், நல் அளி - (தலேவர்செய்கிற) நல்லருள், வாடினும் - குறையினும், பாடு - பெருமையை, பெறும் - அடையும்

கூ. புலத்தலிற் புத்தேணு ணண்டோ நிலத்தொடு
நீரினைந் தன்ன ரகத்து.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—நிலத்தொடு நீர்கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டுப் புலத்தல்போல நமக்கின்பந் தருவதொரு புத்தேளுலக முண்டோ, இல்லே, எ-று.

நீர் தானின்ற நிலத்தியல்பிற் ருமாறுபோலக் காதலருந் தாங்கூடிய மகளிரியல்பினராகலான் அதுபற்றி அவரோடு புலவி நிகழுமென்பாள் நிலத்தொடு நீரினைந்தன்னுரகத்தென்றும், அவர் நமக்கு மன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயவாநின்றமென்பாள் புலத்தலிற் புத்தேணுணண்டோ வென்றுங் கூறினுள். உவமம் பயன்பற்றி வந்தது.

(தே - ப - ரை.)—நிலத்தொடு—, நீர் - நீரானது, இயைந்தன்னுர் அகத்து - கலந்ததுபோல் ஒற்றுமையுடைய காதலரிடத்து, புலத்தலின் - பிணங்குதல்போல் (நமக்கு இன்பஞ் செய்வது), புத்தேள் நாடு-ஒரு தெய்வலோகம், உண்டோ உளதோ?

- புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை.

[அப்புலவி இனி யாதானீங்குமென்றுட்குச்
சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—காதலரைப் புல்லிக்கொண்டு பின்விடாமைக் கேது வாகிய அப்புலவிக்கண்ணே யுளராம் அத்தன்மேற்சென்ற என்னுள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம், எ-று.

புலவியுளென்னு மேழாவது விணைகிழ்ச்சிக்கண் வந்தது. என்னுள்ள மூடைக்கும் படைக்கலமென்றது வணக்கத்தையும் பணிமொழியையும். படை க்கலமென்றுள், அவற்றுள் அப்புலவியுள்ள மழிதலின். புலவி நீங்குந்திறங் கூறியவாறு.

(தே - ப - ரை)—புல்லி - (அன்பரை) தழுவிக்கொண்டு, விடா - (பின்) விடாமைக்கு ஏதுவாகிய, புலவியுள் - அப்பிணக்கி னுள்ளே, என் உள்ளம் உடைத்தும் - (தன்மேற்சென்ற) என்னுள் ளத்தைச் சிதைக்கிற படை - ஆயுதம், தோன்றும் - காணப்படும்.

நிதவில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளதறலி னைக்கொன் றுடைத்து.

[கலவரமோ யுடனீங்கி கூடிய கலமகளீ கழிபுனகையரியிற்
கன்னுவ்டோ சொல்லியது.]

(பரி-ரை.) எ-து,—ஆடவர் தங்கட் டவறிலராயினும் உடையார்போல வூடப்பட்டுத் தாம விரும்பு மகளிருடைய மெல்லியதோள்களைக் கூடப்பெறுத வெல்லைக்கண அவர்க்கு அப்பெறறியதோ ரின்பம் பயத்தலுடைத்து, எ-று.

உடையராயக்கால் இறந்த வின்பத்தோடு வருமின்பமு மெய்துவ ராக லின் அது மிகுன்ற, மற்றையிலராயக்காலமு வருமின்பததை யிழந்த திலலே யென்னு கருதால், தவறிலராயினு மாங கொன்றுடைத்தென்றான். ஊடலினுனைய வின்பம் அளவிறத்தலிற் கூறற்கரிதென்பான், அப்பெற்றிய தொன்றென்றான். தவறின்றி யூடியநூடை எனக்கின்பமாயிற் றென்பதாம்.

(தே - ப - ரை.)—தவறு இலர் ஆயினும் - (ஆடவர் தம்மி டத்தே) பிழையில்லாதவரா யிருந்தாலும், (உடையார் போல் பிணங் கப்பட்டு), தாம் வீழ்வார் - தம்மால் விரும்பப்படு மகளிரது, மெல் தோள் - மெல்லிய தோள்களை, அகறலின் - கூடப் பெறுத சமய த்தில், ஆங்கு ஒன்று - (அவர்க்கு) அப்படிப்பட்டதோ ரின்பம், உடைத்து - (பயத்தல்) உடைத்து.

சு. உணலினு முண்ட தறலினு காமம
புணர்தலி னூட

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—உயிர்க்கு மேலுண்பதனினும் முன்னுண்டதறுதல் இன்பந்தரும்; அதுபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னேற்தவறு பற்றி யூடுதல் இன்பந் தரும், எ-று.

காமத்திற்கென்புழிச் சாரியையும் கான்கனுருபும் விகாரத்தாற்றொக்கன். பசித்துண்ணும்வழி மிகவுண்ணலுமாய் இன்சுவைத்துமாம் அதுபோல அன்று கூடும்வழி ஆராதுமாய்ப் பேரின்பத்துதுமாமெனத் தன்னனுபவம் பற்றிக் கூறியவாறு.

(தெ - ப - ரை.)—(உயிர்களுக்கு), உணலினும் - (மேலே)உண்ணுதலினும், உண்டது அறல்-முன்னுண்ணப்பட்டது சீரணித்தல், இனிது - இன்பந்தரும்; (அதுபோல), காமம் - காமத்துக்கு, புணர்தலின் - (மேலே) புணர்தலினும், ஊடல் - (முன்னேத்தவறு பற்றி) பிணங்கல், இனிது - இன்பந் தரும்.

எ. ஊடலிற் றோற்றவர் வென்ற ரதுமன்னுங்
கூடலிற் காணப்படும்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காமநுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கட்டோற்றவர் வென்றாராவர், அஃதப்பொழுதறியப்படாதாயினும் பின்னேப் புணர்ச்சியின்கண் அவரானறியப்படும், எ-று.

தோற்றவர்-எதிர்தலாற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக்கட் பேரின்ப மெய்தலின் வென்றாயினர். மன்னும் உம்மும் அசைநிலே. யானதுபொழுது சாய்தலின் இதுபொழுது பேரின்பம் பெற்றேனென்பதாம்.

(தெ - ப - ரை.)—(காமம் அனுபவித்தற்குரிய இருவருள்), ஊடலில் தோற்றவர் - பிணக்கிலே தோற்றவர், வென்றார் - வென்றோராவார்; அது - (அப்பொழுது அறியப்படா தாயினும்), கூடலில் காணப்படும் - (பின்னே) புணர்ச்சியிலே (அவரால்) அறியப்படும்.

அ. ஊடிப் பெறுவதுங் கொல்லோ தூதல்வியர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—இது பொழுது இவணுதல் வெயர்க்கும்வகை கலவியின்கணுளதாய இனிமையை இன்னுமொருகால் இவளூடியாம்பெறவல் லேமோ? எ-று.

கலவியது விசேடம்பற்றி நுதல் வெயர்ப்பவென்றான். இனிமை-கண்டு கேட்டுண் டெயிர்த்தும் றறிதலானது வின்பம். இனி அப்பேறு கூடாதெனப் பெற்றதன் றெப்புக் கூறியவாறு.

(தே - ப - ரை.)—நுதல் வியர்ப்ப - (இப்போது இவளது) நெற்றிவெயர் வரும்பும்வகை, கூடலில் தோன்றிய - புணர்ச்சி யிடத்து உளதாகிய, உப்பு - இனிமையை, (இன்று மொருகால்), ஊடி - (இவள்) பிணங்கி, பெறுகுவம் கொல் - (யாம்) பெறவல் லமோ ?

கூ. ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—ஒளியிழையினை யுடையாள் இன்னுமெம்மோ டூவா ளாக; அன்னனம் அவளூடி நிற்றற்கும் அதனை யுணர்த்துதற் பொருட் டியா மிரந்து நிற்றற்கு காலம் பெறும்வகை இவ்விரவு விடியாது நீட்டித்தல் வேண்டுக, எ-று.

ஊடுக நீடுகவென்பன வேண்டிக்கோடற் பொருள். மன்னிரண்டும் ஆக் கத்தின்கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை. கூடலின் ஊடலே யமையு மென்பதாம்.

(தே - ப - ரை)—ஒளி இழை - விளங்குகின்ற ஆபரணத்தை யுடையவள், ஊடுகமன் - (இன்னும் எம்மோடு) பிணங்குவாளாக; (அப்படி பிணங்கி நிற்றற்கும் அதனைத் தீர்த்தற்பொருட்டும்), யாம்—, இரப்ப - இரந்து நிற்றற்குக் (காலம் பெறும்வகை), இரா - இவ்விரவு, நீடுகமன் - (விடியாது) நீட்டித்தல் வேண்டுக.

கo. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

[இதுவுமது.]

(பரி-ரை.) எ-து,—காமநுகர்ச்சிக் கின்பமாவது அதனை நுகர்தற்குரிய ராவார் ஆராமைபற்றித் தம்மூடுதல்; அவ்வூடுதற் கின்பமாவது, அதனை யளவறிந்து நீங்கித் தம்மூட்கூடி முயங்குதல் கூமோயின், அம்முயக்கம், எ-று.

கூடுதல் - ஒத்தவளவினராதல். மூதிர்ந்ததனியாயவழித் துன்பம் பயத்த லானும், மூதிராத புலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும், இரண் டற்கு மிடையாகிய வளவறிந்து நீங்குதலாதென்பது பற்றிக் கூடிமுயங்கப் பெறினென்றான். அவ்விண்டின் பமும் யான் பெற்றேனென்பதாம்.

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு ஆற்றுமை விதுப்புப் புலவியென கால்வகைத்தாக்கிக் கூறினர். அவற்றுட் செலவு பிரிவாற்றுமையுள்ளும், ஆற்றுமை படர்மெலிக்திரங்கல் முதல் நிறையழிதலீறுயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பன்முதற் புணர்ச்சிவிதும்ப லீறாயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத்தன் முதல் ஊடலுவகை யீறுயவற்றுள்ளுங் கண்டுகொள்க. அஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்தினுலய நீக்கத் தினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத் தென்றாலெனின், அஃது, அறம் பொருளின்ப மென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவின்மையானும், முனிவராணையான் ஒருகாலத்தோர் குற்றத்துளதாவதல்லது உலகியல்பாய் வாராமையானும், எண்டொழிகைப்பட்ட தென்க.

(தெ - ப - ரை.)—காமத்திற்கு - காமவனுபவத்திற்கு, இன்பம் - இன்பமாவது, ஊடுதல் - (அதனை அனுபவித்தற்குரியோர் ஆராமையைபற்றித் தம்முள்) ஊடுதலாம்; அதற்கு - அவ்வூடுதற்கு, இன்பம் - இன்பமாவது, கூடி - (அதனை அளவறிந்து நீங்கித் தம்முள்) கூடி, முயங்கப்பெறின்-புணர்தல் கூடுமாயின், (அப்புணர்ச்சியாம்).

கற்பியல் முற்றிற்று.

காமத்துப்பால் முற்றிற்று.

திருவள்ளுவர் மூலமும் உரையும்
முற்றுப்பெற்றன.

உரைச்சிறப்புப்பாயிரம்.

திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே ழழகனெனு
மன்னு முயர்நாமன் வந்து.

பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே ழழகன்
தெரித்தவுரை யாமோ தெளி.

உரைச்சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

திருக்குறளின்

சிறப்புப்பாயிரமாகிய

திருவள்ளுவமாலை.

அசரீரி.

க. திருத்தகு தெய்வத் திருவள் ளுவமோ
டுருத்தகு நற்பலை யொக்க - விருக்க
வுருத்திர சன்ம னெனவுரைத்து வானி
லொருக்கமோ வென்றசரீர்சொல்.

(இ-ள்.) திருத்தகு தெய்வம் - அருட்செல்வத்தையும் (அதற்குத்) தக்க தெய்வத்தன்மையையும் உடைய, திரு வள்ளுவரோடு—, உருத்தகு நல் பல கை - (அவரிருத்தற்குத் தனது) உருவத்தின்மேல தக்க நல்ல சங்கப்பலகை யிடத்து, உருத்திரசன்மா—, ஒக்க இருக்க என உரைத்து - சமானராயிருக்கக் கடவரென்றுசொல்லி, வானில் - ஆகாசத்திலிருந்து, ஒருக்க - (அவ்விடத்துள்ள புலவர் கருத்தையெல்லாம்) ஒற்றுமைசெயயும்படி, ஓர்சொல் - ஒரு வாக்கியம், ஒ வென்றது - ஒவென்று இசைத்தெழுந்தது, எ-று.

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்" என்பவாகலின், திருவென்ற தற்கு அப்பொருளுரைக்கப்பட்டது. தெய்வத்தன்மை - தெய்வத்தினவதாரமாய் விளங்குகை; தெய்வத்தன்மையில்லார்க்கு அருளுளதாயினும் அதனாலே பெரும்பயன் விளையாமையின், தகுதிகாரணப்பட்டது. திருவள்ளுவரென்னும் பெயருள் திருவென்பது பயாவையும், வள்ளுவரென்பது வண்மையையுடையரென்பதையும் விளக்கிநின்றனவாகலின், அது வேதத்தில் இலேமறை காயிகள்போற் பலவிடங்களிலு மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவரென்னுங் காரணம்பற்றிவந்த பெயராயிற்று. வள்—மூதனிலே, அர் - இறுதிநிலை, உ - சாரியை. அம்முதனிலைக்குப் பொருள்-ஈகை. உருத்திரசன்மர்-உருத்திரனால் அடைந்த சன்மத்தையுடையவரென விரியும். அவர் முருக்கக்கடவுளதிருவவதாரமாய் வணிகர் மரபிற்றோன்றிய மூவகைப் பிள்ளையார். அசரீரி-அருவமாயெங்கு நிறைந்துள்ள முதற்றெய்வம். அரங்கேற்றத் தொடங்கிய காலத்துத் தெய்வப்புலவரோடு ஒப்பவிருந்து கேட்டற்குத் தகுதியுடையோர் யாரென யாவரும் எண்ணமுற்று நின்றழிழி இவ்வசரீரிவாக்கியம் பிறந்தது.

சிறப்புப்பாயிரமாகிய

என்றதனைப் படர்க்கை வினையாகக் கூறலின் ஆண்டு நின்றுகேட்ட புலவர்க ளுள் ஒருவர் அதனை இங்ஙனம் பாடலாகச் செய்தனரென்றறிக.

நாமகள்.

உ. நாடா முதனூன் மறைநான் முகனுவிற்
பாடா விடைபார தம்பகர்ந்தேன் - கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

(இ-ள்.) கூடாரை எள்ளிய வென்றி இலங்கு இலை வேல் மாற - பகைவ ரைப் (புறங்கொடுக்கச்செய்து) இகழ்ந்த வெற்றியை உண்டாக்கி விளங்கா நின்ற தகட்டவடிவாயுள்ள வேற்படையையுடைய பாண்டியராசனே, நாடா - (உலகத்தார் விதிவிலக்குகளை அறிந்து உய்யும்வழியை) நாடி, முதல்-படைப் புக்காலத்திலே, நான்முகன் நாவில - பிரமனது நாவிலிருந்து, நான்மறை பாடா - (இருக்குமுதலாகிய நான்குவேதங்களையும்) பாடி, இடை - (இதற் கும் அதற்கும்) நடுவானகாலத்திலே, பாரதம் பகர்ந்தேன் - பாரதமாகிய வேதத்தைச்சொல்லினேன் ; பின் - (அதற்குப்) பிறபட்ட இக்காலத்திலே, என் வாக்கு—, வள்ளுவன்வாயது - (திருக்குறளாகிய வேதத்தைச்சொல்லி) வள்ளுவன்வாயின் கணணதாயிறறு, எ-று.

வேதமும் சுருதோரூபமாகையால் பாடாவென்றார். தன்கணவனுக லின், நான்முகனுவி லிருந்தென்றும், அவனதாரமாகலின், வள்ளுவன்வாய தென் வாக்கென்றும், கூறினர். பாரதம் வியாசரைகொண்டு சொல்லப் பட்டது. இதனுல் நான்மறை - பூர்வவேதமும், பாரதம் - மத்தியவேதமும், திருக்குறள் - உத்தரவேதமும் எனறதாயிறறு. பூர்வவேதம், பின் வியாச ராலே நான்காக வகுக்கப்பட்டமைபறறி நான்மறையெனப்பட்டது. அன்றி நானெனப்பிரித்து எழுவாயாக்கினுமாம. வேதம் மூவகைத்தென்பதாலும், இவற்றதுதோறறமுறையால் இம்மூ வாக்கியப்பிரமாணத்தாற் சிறப்புடைத் தென்பதாலும் சொல்லியபடி.

இறையனார்.

ங. வன்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க் - குன்றுத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

(இ-ள்.) மன் புலவன் வள்ளுவன் வாய்சசொல்-புலவர்க்கரசனுகிய வள் ளுவன்வாயிற் பிறந்த திருக்குறளானது, என்றும் யாணர் புலராது - எக்கா லத்துந் தன்னழகுகெடாமல், நாளசெல்லுகினும் நின்று அலர்ந்து-நெடுகெகா லங்கழியினும் நீலைபெற்று மலர்ந்து, தேன் பிலிற்று நீர்மையதாய் - தேனைச் சொரிகின்ற குணமுடையதாய் (விளங்குமாதலால்), குன்றுச் செந்தளிர்க் கற்

ந்தின் - குறைவுபடாத செய்யதளிர்களையுடைய கற்பகத்தினது, தெய்வத் நுமலர்போல்-தெய்வத்தன்மைபொருந்திய உயர்வாகிய மலர்போலும்,எ-று.

திருக்குறளுக்கு அழகு - சொன்முடிபு பொருண்முடிபின் குணங்களும், லர்தல் - எங்கும் பரவுதலும். தேன்பிலிற்றல் - இருமையின்பங்களும் ளேத்தலும் ஆம். சொல்—ஆகுபெயர், இறையனார் கடவுளாகலின், இனி ிறைச் சிறப்பதொன் முளதாவதின்றென்னுந் தளிவுதோன்ற என்றுமென் ம், பின்னும் அதனை வையிறத்தற்கு நாட்செல்லுமினி நின்றென்றும் வாழ்த் ப் பொருள்பட இவ்வாறு கூறினர். இது அழியாதுநின்று பெருகிப் பயன் மொறு சொல்லியபடி.

உக்கிரப்பெருவழுதிபார்.

ச. நான்மறையின் மெய்ப்பொருளே மூப்பொருளாநான்முகத் தோன், றான்மறைந்து வள்ளுவனுய்த் தந்தரைக்க - நூன் முறையை, வந்திக்க சென்னிவாய் வாழ்த்துகநன்னெஞ் சஞ், சிந்திக்க கேட்க செவி.

(இ-ள்.) வள்ளுவனுய்—, நான்மறைந்து - தனது திருமேனியை மறை ந்து, நான்மறையின் மெய்ப்பொருளே - நான்கு வேதங்களி னுண்மைப் பொருளே, தந்து - (இவ்வுலகத்திலே) கொளுர்த்து, மூப்பொருளா - (அறம் பொருளின்பமென்னு) மூப்பாற்பொருளுதாக, நான்முகத்தோன்-பிரமனுல், ரைத்த - திருவாய் மலர்ந்தருளப்பட்ட, நூல்-நூலினது, முறையை - புத்த த்தை, சென்னிவந்திக்க - (எனது) தலையானது தொழுக்கடவது; வாய் வாழ்த்துக-வாயானது வாழ்த்துக்கடவது; நல் நெஞ்சம் சிந்திக்க - நல்லமன மானது நினைக்கக்கடவது; செவிகேட்க - காதுகளானவை கேட்கக்கட வன, எ-று.

மூப்பொருள்—ஆகுபெயர் இவ்வேதப்பொருள் ஆதிபிலே வேதஞ் சொல்லியோனுலேயே சொல்லட்டையால் உலகத்துச் சமயாசாரியர்களா லும் பிறராலும் ஒன்றற்கொன்று மாருகக்கொள்ளப்பட்ட பொருள்கள் போல்வ தன்றென்பது தோன்ற மெய்ப்பொருளென்றார். கலையுணர் புலமை பிற்.நுணமையோனுகி, விதிமுறைவழாது முதுநிலம்புரக்கும், பெருந்தகையுக் கிரப்பெருவழுதியென்னுந், தன்னிகரில்லா மன்னவர்பெருமான், தான்மேற் கொண்ட சிறப்பைப் பலரும், அறிந் நுமேற்கொள்ள இவ்வாறு வழிபாடு கூறி னுன். "மன்னனெப்படி மன்னுயி ரப்படி" ஆகலின், இப்புத்தகத்தை முன்னே பூசித்து மெய் மொழி மனங்களால் வணக்கஞ்செய்து பின் கேட்க வேண்டுமென்று சொல்லியபடி.

கபிலர்.

நி. நிலையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட பலையளவு காட்டும் படித்தான் - மலையள்ளு வள்ளக் குறங்கும் வளநாடா வள்ளுவனுர் வெள்ளக் குறட்பா விரி.

(இ-ள்.) மனை அளகு வள்ளைக்கு உறைகும் வளகாட-மனையில் வளர்க்கப் படுகின்ற பறவைப்பேடுகள் உலக்கைப்பாட்டால் கணணுறைகுகின்ற வளம் பொருந்திய நாட்டையுடைய அரசனே ! வள்ளுவனுர வெள்ளே குறட்பாவிரி - திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட குறள்வெண்பா (மிகப்பெரிய பொருளே) தன்னுட்கொண்டு காட்டுதல், சினை அளவு போதாச சிறுபுல் நீர்-தினை யரிசியினளவுக்கும் போதாத சிறிய புல்லினது நுனியின்கண்ணுள்ள பனிநீரானது, நீண்ட பனை அளவுகாட்டும் படிதது - உயர்ந்த பனையினளவான அதன் சாயையைத் தன்னுட்கொண்டுகாட்டுதல் குணம்போலுள்ள குணத்தை யுடைத்து, எ-று.

பனை—ஆகுபெயர். ஆல்—அசை. பறவை - கிளிமுதலியவை. உலக் கைப்பாட்டு - மகளிர்பரிமளப்பொடி இடிக்கின்றபோது பாடும்பாட்டு. விரி - விரித்தல். எப்படி மிகசிறிய பனிதுளியிலே மிகப்பெரிய பனைமரத்தின் சாயை அடங்கிவிளங்குகின்றதோ அப்படியே மிகசிறிய இக்குறள்வெண்பா வில் மிகப்பெரியபொருள் அடங்கி விளங்குகின்றதென்பதாம். இது சுருங்கி யிருந்தும் விரிவானபொருளே விளக்குமாறு சொல்லியபடி. இதுமுதலியன சங்கத்துப் புலவராலே பாடப்பட்டன.

பரணர்.

சு. மாலும் குறளாய் வளர்ந்திரண்டி மாணடியான்
ஞால முழுது நயக்களந்தான் - வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் யையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

(இ-ள்.) மாலும்-திருமாலும், குறளாய் - குறளாய்ப்பிறந்து, வளர்ந்து—, இரண்டி மாண் அடியால்-இரண்டுபெரிய அடிகளால், ஞாலம் முழுதும்-உலக மனைத்தையும், நயந்து அளந்தான் - விரும்பி அளந்தான், வாலறிவின் வள்ளு வரும் - மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும், தன் குறள்வெண்பா அடி யால் - தம்மினின்றுந்தோன்றி (அங்கிலேற்கின்ற) வெண்பாக்குறளின் (இர ண்டுகிறிய) அடிகளால், வைத்தார் உள்ளுவது எல்லாம் - அவ்வுலகமனைத்தினு மள்ளோராற் நினைக்கப்பட்டவற்றை யெல்லாம், ஓர்ந்து அளந்தார் - ஆராய் ந்து அளந்தார், எ-று.

உம்மையிரண்டும் முறையேதேவரிற் பெரியோனுகியவென்றும்,மனிதரிற் சிறியராய்க் காணப்பட்டவென்றும் பொருள்படுகின்றன. உபமானத்திலே வளர்தலும் பெருமையும் சொல்லுதலால் உபமேயத்திலே அவற்றுக்கு மூலனு கிய நிலைநிற்றலும் சிறுமையும் வருவிக்கப்பட்டன. மாலுக்குத் தானேகுற ளாதலும் பின்பு அங்கிலைநில்லாதுவளர்தலும், பேரடிகளால் அளவுபட்ட உல கத்தையளத்தலும், திருவள்ளுவருக்குத் தம்மினின்றுங் குறளே உண்டாக்கு தலும், அது தன்னிலைநிற்றலும், அதன் சிற்றடிகளால் அளவுபடாத நினைப் பின்விடயங்களே அளத்தலும் சொல்லப்படுதலாலும், வேற்றுமையணி. நினைக் கப்பட்டனவெல்லாம் இதனகத்து அளசெய்யப்பட்டமை சொல்லியபடி.

நக்கீரர்.

எ. தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானை வறமுதலா மங்கார்க்கு - மேனிருக்
கூழி லுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னுற்று மற்று.

(இ-ள்.) தானே முழுதுணர்ந்த - தாமே (வேதப்பொருள்) அனைத்தையும் அறிந்து, தண தமிழின் - தண்ணிய தமிழின்கண, வெண்குறளால்-குறள் வெண்பாக்களால், ஆனை அறம் முதல் ஆம் அங்கான்கும் - விட்டுநீங்குதல் கூடாத அறமுதலாகிய அங்கான்கு பொருள்களையும், எனைருக்கு - அவற்றை யறியாதவர்களுக்கு, (அவர் எளிதினறிய), மொழின் - முறையால், உரைத்தாற்கும் - சொல்லியருளிய திருவள்ளுவருக்கும், ஒண்ணீர் முகிலுக்கும் - ஒள்ளிய நீரைத் தந்த மேகத்துக்கும், உலகு - இவ்வுலகமானது, மற்று என் ஆற்றும் - எதிர் நன்றியாதுசெய்யும் (செயக்கிடந்தது ஒன்றும் இல்லை); வாழி-(அவரும் அதுவும்) வாழ்க, எ-று.

ஆனமை - நீங்காமை. தானே முழுதுர்ணந்தெனவே ஆசாரியராயிருந்து பிறரறிவிக்க அறிந்திலரென்றதாயிற்று. முழுதுமென்னு மும்மைதொக்கது. ஒண்மை இனிமைமேல் நின்றது. முறை—நூலின் முப்பொருள்களின் கிடக்கையொழுங்கு. நாயனர் கொடைசிறப்புச் சொல்லியபடி.

மாமூலனர்.

அ. அறப்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
றிறந்தெரிந்து பெப்பிய தேவை - மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ-ள்.) அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அங்கான்கும் - அறமுதலாகச சொல்லப்பட்ட அவ்வேதப்பொருகளாகிய நான்கனது, திறம் தெரிந்து - கூறுபாட்டையும் அறிந்து, செப்பிய - (உலகத்தார்க்குச்) சொல்லிய, தேவை - தேவினை, மறந்தேயும் - மறந்தாயினும், வள்ளுவன் என்பான் - (ஓருமனிதனுக உட்கொண்டு) வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனுளனாயின் அவன், ஓர் பேதை- அறிவில்லாதவனுவன்; அவன் வாய்ச் சொல் - அவனது வாயிற்பிறந்த அசசொல்லை, அறிவுடையார்—, கொள்ளார் - கொள்ள மாட்டார், எ-று.

அறமுதலியவற்றின் கூறுபாடு - அவற்றினது தொகைவகைவிரிகள். மறந்தேயு மென்றதனுல் நினைப்புடன் சொல்லுவோன் பேதையிற் பேதையாமென்றதாயிற்று. முன்னும் பின்னுமுள்ள பாட்டுகளில் இப்பெயர் தெய்வத்தன்மையைக் காணிப்பிக்கும்படி நன்கு மதிக்கது உயர்த்திச்சொல்லப்படுதலால், ஒரு மனிதனுக வுட்கொண்டென்பது வருவிக்கப்பட்டது. அன்றி ஒலிக்

குறிப்பினுலே, சாதியிழிவுதோன்ற வள்ளுவனென்பா னெனினு மமையும். இக்குறிப்பொலியை வடநூலார் காருசுரமென்பர். தெய்வப்புலவரை அவ மதிப்பினிழிவு சொல்லியபடி.

கல்லாடர்.

கூ. ஒன்றே பொருளென்னின் வேறென்ப வேறென்னி
னன்றென்ப வாறு சமயத்தார் - நன்றென்ன
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனூர்
மூப்பான் மொழிந்த மொழி.

(இ-ள்.) ஆறு சமயத்தார் - அறுவகைமதத்தோரும், ஒன்றே பொருள் என்னின் - (ஒருமதத்தார் தமதுநூலிலே உலகமும் உயிரும் கடவுளுமாகிய) பொருள்கள் ஒன்றேயென்று காட்டுவாயின், வேறு எனப - (மற்றொருமதத் தோர் தமது நூலிலே அதனை மறுத்து அவை) வேறுமென்று காட்டுவர், வேறு என்னின் - (அப்படி) வேறென்றுகாட்டின், அன்று என்ப - (பின் னொரு மதத்தோர் அதனை) அன்றென்றுமறுப்பர்; (ஆதலால் சமய நூல்க ளெல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன): வள்ளுவனூர் மூப்பான் மொழிந்த மொழி-திருவள்ளுவரிலே மூப்பாலாகச் சொல்லப்பட்டநூலை, நன்று என்ன - நன்றென்று கொள்ளுதற்கு, எப்பாலவரும் - எவ்வகைப்பட்ட பகுதியோரும், இயைப - உடன்படுவர். எ-று.

மொழி —ஆகுபெயர். ஆறுமதமாவன —வியாசமதம், சைமினிமதம், பதஞ் சலிமதம், கபிலமதம், கணாதமதம், அக்ஷபாதமதம்; அன்றிச சைவவைணவ முதலியவற்றைக் கூறினுமாம். எச்சமயத்தாரேயென்றது எப்பாலவரு மென் றதனுல் வேதத்திற்கு உட்பட்ட சமயத்தாரேயன்றிப புறப்பட்ட சைனம், பௌத்தம், சார்வாகம் முதலிய மதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும், தேசத்தாரும், காலத்தாரும், பிறரும், தழுவப்படுதலறிக. இதுவே பொது வேதமென்றபடி.

சீத்தலைச்சாத்தனார்.

கo. மும்மலையு மூன்காடு மூன்நதியு மூப்பதியு
மும்மூரசு முத்தமிழு மூக்கொடியு - மும்மாவுக்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றூரன்ரு
பாமுறைதேர் வள்ளுவர்மூப் பால்.

(இ-ள்.) வள்ளுவர் - திருவள்ளுவரது, பா முறைதேர் மூப்பால் - பாக்க ளின் (மூன்றின்) முறைதெரிதற்கிடனுகிய திருக்குறளானது, மும்மலையும் - (கொல்லிமலை கேரிமலை பொதியமலை எனப்படுகின்ற) மூன்று மலைகளையும், மூன்காடும்-(குடகாடு புனனுடு தென்னுடு எனப்படுகின்ற) மூன்று காடுகளையும், மூன்நதியும் - (பொருனைநதி காவிரிநதி வையைநதி எனப்படுகின்ற) மூன்று நதிகளையும், மூப்பதியும் - (கருவூர் உறையூர் மதுரை எனப்படுகின்ற) மூன்று

பதிகளையும், மும்மு ம் - * (மக்கலமுரசு வெற்றிமுரசு கொடைமுரசு எனப்படுகின்ற) மூன்று முரசுகளையும், முத்தமிழும் - (இயற்றமிழ் இசைத் தமிழ் நாடகத்தமிழ் எனப்படுகின்ற) மூன்றுதமிழ்களையும், மூக்கொடியும் (வில்கொடி புலிக்கொடி மீனக்கொடி எனப்படுகின்ற) மூன்று கொடிகளையும், மும்மாவும் - (கனவட்டம் பாடலம் கோரம் எனப்படுகின்ற) மூன்று குதிரைகளையும், தாம் உடைய மன்னர்-தாமுறையேயுடைய (சோசோழபாண்டியர் எனப்படுகின்ற) மூவரசருடையவும், தடமுடிமேல் - பெரியமுடிகளின் மேலே கொள்ளப்பட்ட, தார் அன்றே - மாலையன்றே, எ-று.

அன்றேவென்றது பலறிதேற்றம். மூப்பால் - ஆருபெயர். மும்முரசும் மூத்தமிழும் அம் மூவரசர்க்கும் பொதுமையவாயினும் இம் முறையுரிமை அவர் குடிமரபிற் கியைந்தனபோலும். அரசர் மூவரும் மேற்கொண்ட சிறப்புச்சொல்லியபடி.

மருத்துவன்ருமோதரனர்.

கக. சீர்திநீர்ம் கண்டஞ் செறிசுக்குத் தேனளாய்
மோர்ந்தபின் யார்க்குங் கலிங்குத்தில் - கார்ந்தி
மலைக் குத்து மால்யானை வள்ளுவர்மூப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்று

(இ-ள்.) கார்நி மலைக் குத்து மால் யானை-(தன் பகையென) வெருண்டு மலையைக் குத்துகின்ற பெரியகளிறுபோலுள்ள வாசனே ! சீர்திநீர் கண்டம் - சீர்திநீர்ச் சருக்கரையையும், தெறி சுக்கு - சிதைக்கப்பட்ட சுக்கையும், தேன் அளாய் - தேனுங்கலந்து, மோர்ந்தபின்—, (அதனால்), யார்க்கும் - (தலைக் குத்துடையோர்) யாவர்க்கும், தலைகுத்து—, இல் - இல்லையாகும் ; வள்ளுவர் மூப்பாலால்—, சாத்தற்கு - சீத்தலைசாத்தனர்க்கு, தலைக்குத்து—, தீர்வு - இல்லையாயிற்று, எ-று.

யானைபோல்பவனே யானையெனலால் ஆருபெயர். முன் கேட்கப்பட்ட நூல்களிலெல்லாம் பல சொற்குற்றங்களும் பொருட்குற்றங்களும் கண்டு பொருமல் தலையில் அறைதுகொண்டு வந்தமையால் புண்பட்டுக்குத்தல் உண்டாயிருந்தது. இதன்கண் ஒர் குற்றமுமு காணப்பெறுமையால் அது நிங்கிற் றென்க. எப்படி அம்மூன்று சுக்கும் அதற்குமருந்தாமோ அப்படியே இதற்கு இம்மூன்றுபாலும் மருந்தாயின வென்பதாம். தீர்வென்னுந் தொழிற் பெயர் முற்றுப்பொருளில் வந்தது. இதன் குற்றமற்று விளங்குகை சொல்லியபடி.

நாகன்றேவனர்.

கஉ. தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணிரை
வேளா தொழிதல் வியப்பன்று - வாளாதா
மப்பா லொருபாவை யாய்ப்போ வள்ளுவனர்
மூப்பான் மொழிமூழ்கு வார்.

* தீர்முரசு, நீயாயமுரசு, நியாசமுரசு எனவும் பாடம்.

(இ-ள்.) தாளார் மலர்ப் பொய்கை - நாளத்தோடுபொருந்திய தாமரை மலர்களையுடைய ஒருகுளத்து நீரின்கண்ணே, குடைவார் - மூழ்குவோர், தண்ணீரை - (வேறு) தண்ணீரை, வேளாது ஒழிதல் - விரும்பாதொழிதல், வியப்பு அன்று - வியப்பைச் செய்வதன்று; வள்ளுவர் மூப்பால் மொழி - திருவள்ளுவரது மூப்பால்களையுடைய நூலின்கண்ணே, மூழ்குவார்—, தாம்—, வானர - வீண்கை, அப்பால்—, ஒருபாவை - ஒருநூலே, ஆய்பவோ-விரும்புவாரோ (விரும்பார் ஆதலின் இதுவே வியப்பைசெய்வதாம்), எ-று.

தாளார் மலரெனலால், தாமரை மலரெனப்பட்டது. வியப்பைச்செய்வதை வியப்பென்றார். மூழ்குதல், இங்கே கருத்துமுழுதும் அழுந்திநிற்றன்மேனின்றது. மொழி - ஆகுபெயர். முகாமம் - எதிர்மறை. விரும்புதலாகிய காரணத்தை ஆய்பவோவெனக் காரியமாக உபசரித்தார். அதுவியப்பன் றென்றமையாலே இது வியப்பென்றதாயிற்று. உயர்வானபொருள் பெற்றோர்க்கு அதினிழிவான பொருளையும் பெறவிரும்புதல்இயல்பாயிருக்க, குளிர்ச்சி இனசுவை நறுமணமுமலிய குணகளாலே திறந்த ஒரு தாமரைக் குளத்து நீரைப் பெற்றோர்க்கு அதனுற்றாலே அமைதிபெற்று வேறு தண்ணீரைப் பெற விரும்பாமை வியப்பைச செய்வதாயிற்று. ஆயினும் இதுகாறும் ஒருநூலைக் கற்றோர்க்கு வேறுநூல்களைக் கற்க விரும்புதலன்றி விரும்பாமையில்லாதிருக்க இப்போது உளதாகலின் இதுவே பெருவியப்பைச செய்வதென்றதாயிற்று. இத்னால் இந்நூலகத்து எந்நூற் பொருளும் அடங்கியிருக்கின்றமை சுறிப்பிக்கப்பட்டது. பலநூல்களையுங் கற்கவிரும்புவோர்க்கு இதுவொன்றே அமைதல் சொல்லியபடி.

அரிசிற்கிழார்.

கஉ. பரந்த பொருளெல்லாம் பாறறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச் - சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

(இ-ள்.) பரந்த பொருள் எல்லாம் - (வேதத்திலே) ஒன்றேடொன்று மயங்கிநின்ற நால்வகைப் பொருள்களையும், பார் அறிய-இப்பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு, வேறு தெரிந்து - வேறுகப்பிரித்து, திறம் தொறும் சேர-(அது அது தனது தனது) வகையோடு சேரும்படி, சுருங்கிய சொல்லால் - சில சொறகளால், பொருள்விளங்க-கருத்துத்தோன்றும்படி, விரித்துச்சொல்லுதல் - விரியும்படி வைத்துச்சொலலுதல், வல்லார் - வல்லவர், வள்ளுவர் அல்லால்—, ஆர்-ஒருவரும் இல்லை, எ-று.

பார்—ஆகுபெயர். திறம்-அறமுதலியவற்றின் கூறுபாடு, சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தன்முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ அப்படி பிறரால் அமைக்கப்படுதல் கூடாமை காட்டியதாயிற்று. நூலுக்கும், நாயனுர்க்கும், தந்தி சொல்லியபடி.

பொன்முடியார்.

ஈச காவின்ற தொங்கலாய் காகிபனர் தந்ததுமூன்
கூங்கின் ளளந்த குறளென்ப - நூன்முறையான்
வானின்று மண்ணின் ளளந்தே வள்ளுவனூர்
தானின் ளளந்த குறள்.

(இ-ள்.) காவின் நின்ற தொங்கலாய் மணங்கமழப்பெற்ற மாலையையுடைய பாண்டியராசனே ! முன்-முற்காலத்திலே, காகிபனூர் தந்தது - கபிலபரால தரப்பட்டகுறளே, கூ நின்ற-மண் ணின்கணணே நின்று, அளந்த-(உலகத்தை) அளந்த குறள் என்ப-குறளென்று சொல்லுவர் ; தாம்நின்று-தாம் (இங்ஙன) எழுந்தருளி, வள்ளுவனூர் அளந்த குறள் - திருவள்ளுவராலே தரப்பட்ட குறள், நூல் முறையான் - நூலின்முறையோடுகூடி, வான் நின்று - விண் ணின்கண்ணே நின்றும், மண் நின்று - மணணின்கண்ணே நின்றும், அளந் தது-(உலகத்தை) அளந்தது, எ-று.

கூ எனை நீண்டது. ஆனிருபு ஒவ்வுபின்பொருளில் வந்தது. அக் குறள் வஞ்சித்துப் பெறுளளலால நூன்முறையோடு கூடாததாயிற்று. இக் குளுக்கு ஒலிவடிவும் வரிவடிவுமென இரணடி வடிவணமையால், ஒலிவடிவுக் கிடம் வானுதலின வானின் றென்றும் வரிவடிவுக்கிடம் மண்ணுதலின் மண் றென்றும், கூறினர். இக்குறளுக்கு நூன்முறையோடி கூடலும் வானிற்ற லும் மிகுத்துரைசொல்லி வேறுமை செய்யப்பட்டது. முனமாலு மென் பாட்டிலே நாயனூர்க்கும் மாலுக்கும இப்பாட்டிலே திருக்குறளுக்கும் மாலவ னாருக்குறளுக்கும் ஒப்புமை குறித்துச சொல்லலால்வேற பாடாம். உலகத்து பொருளெல்லாம் இவ் ரு அளந்தற்கிறப்பச சொல்லியபடி.

கோதமனூர்.

கஙு ஆற்ற லறியுமென் றந்தணர்க ணண்மறையைப்
. போற்றியுரைத் தேதட்டின் புறத்தெழுதா-சீரட்டெழுதி
வல்லுகரும் வல்லாரும் வள்ளுவனூர்முப்பாலைச்
.. சொல்லிடினு மாற்றலசே பர் வின்று.

(இ-ள்.) அந்தணர்கள்—, நான்மறையும்-நான்குவேதங்களையும், உரை த்து-வாய்ப்பாடமாக, போறறி - காப்பாற்றி, ஆற்றல் அறியும் என்று - (எட் டின்கண் எழுதிவைத்தால் வலியில்லாரும் ஓதுவராதலின் இவற்றின்) வலிமை மைகுறையுமென்று, எட்டின்புறத்து - எட்டின்கண், எழுதார்-எழுதார்கள், வள்ளுவனூர் முப்பாலை - திருவள்ளுவரது திருக்குறளை, எட்டு எழுதி-எட்டின் கணணெழுதிவைத்து, வல்லுகரும் - வலியுடையவரும், வல்லாரும் - வலியில்லா ரும், சொல்லிடினும் - ஓதினாலும், ஆற்றல்சோரவு இன்று - வலிமைகுறைத வில்லை, எ-று.

அவ்வேதத் ற்கு உதாத்தம் அனுதாத்தம் எனப்பட்ட சுரங்களின் வழு வாம லோதல்வேண்டுமென்னும் விதியுளதாதலின் அதற்குத் தகுதியுடைய அந்தணரே அதிகாரிகளாயினர். இதற்கு அஃதில்லாமையால் யாவரும் அதி காரிகளாவரென்றறிக. சொல்லிடினு மென்றதனால் பொருளுணர்ச்சிக்கு இதற்கும் வலிமை வேண்டுமென்ப ற்பெறப்பட்டது. ஆற்றல்-சொற்செறிவின் றிட்பம், இஃதனாலுரைகூறலே அவ்வேதம் சொல்லினகண்ணே தலைமையுடைத் தென்பதூஉம், இவ்வேதம் பொருளின்கண்ணே தலைமையுடைத் தென்பது உம், பெறப்பட்டன. ஓதப்படுதலில் அவ்வேதத்தினும் இது சிறப்புடைமை சொல்லியபடி.

நத்தத்தனார்

கஙு. ஆயிரத்து றுநூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்தற்பின்-போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளதோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

(இ-ள்.) பாயிரத்தினோடு - பாயிர ரான்கதிகாரமகளோ ், ஆயிரத்து மூற் நூற்று முப்பது அரு குறளு ம - (சேர்க்ற ு தொகையாகிய) அரிய ஆயிரத்து மூற்நூற்றமுபபது குரள்வெண்பாக்களேயும், பகார்ந்தற்பின்-ஓதி யுணர்ந்த பின்பு, போய ஒருத்தாவாய்-போய் ஒருவரது வாயாலே, கேட்க - கேட்டறி தற்கு, நூல் உளதோவா-வீவறுநூல இருக்கினறனவோ, [இல்லே என்றபடி], மன்னு தமிழ் புலவராய்-நிலேபெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகி, கேட்க - (பிறர் தமமிடத்துவநது) கேட்குமபடி, வீறறிருக்கலாம் - சிறப்பாக விருக்கலாம், ஏ-று.

வீற்றிருத்தல்—ஒரு சபைநடுவிலே உயர்வாகிய ஆசனத்தில் ஏறியிருத் தல். இவற்றுட் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துகளெல்லாம் வினஙகி நிற் றலின் கேட்கநூலுளவோவென்றார். புலவராயெனவே புலமை நிரம்புதற்கு இவை ஆயிரத்து முந்நூற்று முப்பது றலகளு ம போதுமென்பது பெறப்பட் டது. ஓதியோர்க்கு வரும் இம்மைப்பயன் சொல்லியபடி.

மூகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.

கஎ. உள்ளுந்த லுள்ளி யுரைத்த லுரைத்தத்தஞ்
தெள்ளுந்த லன்றே செயற்பால-வள்ளுவனர்
மூப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்

(இ-ள்.) வள்ளுவனர் மூப்பாலின் மிக்க-திருவள்ளுவரது திருக்குறளின் மேற்பட்ட, மொழி-நூலொன்று, உண்டு எனப்பகர்வார்-உளதென்றுசொல்ல வல்லவர், எப்பாவலரினும் - எவ்வகைப்பட்ட புலவருள்ளும், இல் - இல்லே (ஆதலால்), செயற்பால - (நாம் இந்நூலேக்குறித்தறி) செயக்கடவன, உள்ளு

நல் - (காம் இதன் பாருளைச) சிந்தித்துக்கொள்ளுதலும், உள்ளி உரைத்தல்-சிந்தித்துப் (பிறர்க்கு) அதனைச சொல்லுதலும், உரைத்த அதனைத் தெளளுதல் அன்றே-(பிறராலே) சொல்லப்பட்ட அதனைத்தெளிதலும் அன்றே, எ-று.

மொழி—ஆகுபெயர். ஒப்பது வடமொழி வேதமிருத்தலின் மிக்கமொழி யென்றும், தமிழின் மாதிரமன்றி வடமொழி முதலியவற்றினுள்ள புலவரை புக் தமுவுதற்கு எப்பாவலரினு மென்றும், அறிவொப்புக் காண்டற்கு உரைத் ததனைத் தெள்ளுதலெனறும், கூறினர். ஈள்ளுதலெனவே கேட்டலும், தெளிதலெனவே அவ்வாறு முதலும், அடங்கின. இது பயிற்சிசெய்தொழுகு மாறு சொல்லியபடி.

ஆசிரியர்நல்லந்துவனர்.

கஅ. சாற்றிய பல்கலியுஞ் சாபா ருமுரையுர்
போற்றி யுரைக்க பொருளெலாங் - தோற்றமே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொபபா
செப்பா வலரினும் மில்

(இ-ள்.) சாற்றிய பல்கலியும் - (அறிவுடையோரால்) சொல்லப்பட்ட பலதூல்களாலும், சப்பா அரு மறையும்-சப்பாக அரிய வேதத்தினுலும், போறறி-காப்பற்றிவை திருந்து உரைத்த - (உலகத்தாக்குச) சொல்லப் பட்ட, பொருள் எல்லாம்-விடயஙகளெல்லாம், தோற்ற-(தன்னிடததே) காட் டும்படி, முபபால் மொழிந்த - திருக்குறளேசசொல்லிய, முதற்பாவலர் ஒப்பார்-திருவள்ளுவரை யொப்பவர், எப்பாவலரினும் - எவ்வகைப்பட்ட பாவலருள் ளும், இல் - இல்லை, எ-று.

தம்மாலே சொலலப்பட்டவற்றில் முழுருமையால் தப்பாவென்றும், பொருளுணர்தற்கேயன்றி ஏதுதற்கும் எளிமன் முதலின் அருவென்றும், வீசேடணஞ் செய்யப்பட்டது. எப்பாவலரினுமில்-இதற்கு முன் னுரைக்கப் பட்டபடியே கோள்க. முதற்பாவலர் - முதன்மையையுடைய பாவலர். நால் வகைப் பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறள்வெண்பாவும் தலைமை பெற்றுநிற்றலின், அக்குரள் வெணபாவால் நூல்செய்த வல்லமை யுடையரென்றுமாம், புலமையிலே நாயனாருக்கு ஒப்பின்மை சொல்லியபடி.

கீரந்தையார்

கக தப்பா முதற்பாவாற் ருமாண்ட பாட
முப்பாலி னற்பான் மொழிந்தவ-செப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்

(இ-ள்.) எப்பாலும் வை வைத்த கூர்வேல் வழுதி - எவ்விடத்திலும் கூர்மை வைத்த சிறப்புப்பொருந்திய வேலையுடைய பாணடியராசன், மனம கிழ-மனஙகளிக்க, தப்பா - (சொல்லப்பட்ட பொருள்) வழுவாமல், முதற்பா

வால்-மூதன்மையுடைய பாவாகிய குறளடிவெண்பாக்களால், தாம மாண்ட பாடலினால்-தாம் மாட்சிபெற்ற பாடற்றெழிலினாலே, மூப்பாலின்—மூன்று பால்களிலே, நாற்பால் - (அறமுதலிய) நான்கு பகுதிப பொருள்களையும், மொழிந்தவர் - திருவாய்மலர்ந்தவர், தெய்வத்திருவள்ளுவர் - தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவநாயனார், எ-று.

கூர்-சிறப்பு. நான்கனுண் மூன்றடங்குவதன்றி மூன்றனு ணான்கடங்காமையின் வியந்து கூறப்பட்டதாயிற்று. நூல்செய்த சிறப்பும் அதனால் அரசனை மகிழ்வித்தமையும் சொல்லியபடி.

சிறுமேதாவியார்.

உ0. வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய மூப்பத்து மூன்றென் றாற்ற - கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

(இ-ள்) வள்ளுவர் சொன்ன வகை-திருவள்ளுவராலே சொல்லப்பட்ட திருக்குறளின் அதிகாரவகை, பாயிரம் நான்கு—, அறமூப்பாலது மூன்று—, ஊழ் ஒன்று—, பொருள் எழுபது—, இன்பம் இருபதிறைந்து—, எ-று.

அறத்துப்பாலுளடங்காது அதனைவிட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின் வீடொன்று பாயிரமென்றும், இம்மை மறுமை வீடுமூன்றும் பயத்தற் சிறப்பிற்றாய் மூன்றனுண முடிவிற்றலின் விளங்கறமென்றும், யாவர்க்கும் பொதுப்படநாடித தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடு இவையேயாகலின் நாடிய மூப்பத்துமூன்றென்றும், முன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும் கைகூடுதற்குத் துணையாய் நிற்றலின் கூடுபொருளென்றும். அப்பொருளின் பாகுபாடெல்லாம் இவற்றினடங்குதலின் எள்ளிலெழுபதென்றும், கூறினார். எள்ளல் - இகழ்தல். பாயிரநான்கு-பாயிரமானது நான்கதிகாரங்களா யுடைத்து எனப்பிரவும் விரித்துரைத்துக்கொள்க. சில பழைய நூல்களிலே லெவற்றை சாதியாரும் சமயத்தாரும் மிகுத்தும் குறைத்தும் வேறுபடுத்த லால் அப்படிப்பட்ட வேறுபாடு இதற்கும் வரினும் வருமென்று ஆசங்கித்து இதனதிகாரங்களுக்கு இவ்வனங் தொகைசெய்தார். பின் இவ்வாறு தொகை செய்யப்பட்டு வருவனவற்றிற்கும் இதுவே கருதுதாகக்கொள்க. மூப்பாலகளுக்கும் அதிகாரத்தொகை சொல்லியபடி.

நல்கூர்வேள்வியார்

உக. உப்பக்க நோக்கி யுபதேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கரசென்ப - விப்பக்க
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.

(இ-ள்.) உப்பக்கம் நோக்கி - அப்பக்கத்தைக்குறித்துச் சென்றேனுயிய, உபகேசி தோள் மணந்தான் - உமாதேவியினது தோளை மணந்தவனே, தத்தர மாமதுரைக்கு - வடமதுரைக்கு, அசசென்ப - ஆதாரமென்று சொல்லுவர்; இப்பக்கம்—, மாதானுபங்கி - மாதானுபங்கி யெனப்படுகின்ற மறு)ல் புலம் - குற்றமற்ற புலமையாகிய (தேனைச்சொரிகின்ற), செங்காப் பாதார் - செவ்விய நாவாகிய மலரைபுடையவர், புனல்கூடற்கு-நீர்வளத்தை புடைய தென்மதுரைக்கு, அசசு - ஆதாரமாவர்; எ-று.

உப்பக்கம்—இலக்காகடர் அரசன் தன்பாடலை அமைத்தமைபற்றி ணைகிசசென்றபக்கம். உப்பக்கநோக்கியென்றது வினையாலணையும் பெயர். கேசி-திருமால், இது அக்கடவுள் நகிரோ மத்திற்கண்டது. கேசிக்குப்பின்னே பிறந்தவள் உபகேசியென்றுரையது; உபேந்திரனென்பதுபோல். † மாதா அனு பங்கி-மாதாவை நிகராகக்கொணடு கடக்கின்ற ழுங்கின னெனப்படுதலின் அவள் பிளைமேலே போல் இவர் உலகநாதாமேல் அருள்செய்தல் சொல்லப் பட்டதாயிறறு. நாப்போ லென்றதுகேற்கப் புலமைபிலே கேண் ஆசோபிக் கப்பட்டது அசசுப்போர் முகுதலால் அ தென்னுர். காயஞராலே திக்கட் குடையுடைக ஈர்சால் வழுதியும், சங்கப்புலவருக் குழைத்தினிதோகுயிய, மதுரைக்கு ண்டான சிறப்புகசொல்லியபடி.

தொடித்தலை விழுத்தண்டினர்.

၁၁. அறகான் நனிபொரு ளோரொன்று காமத்
திறமூ ரெலையா நதி செப்து-பிறனியல
நாலு மொழிந்தபெரு நாவலோ னன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்

(இ-ள்) அறத் திறம் நான்கு - (பாயிரம் இல்லறம் துறவறம் ஊழ் என) அறப்பாலி னுட்பிரிவ ணைந்தும், அறி பொருள் திறம் ஏழ்-(அரசு அமைச்சு அரண் கூழ் படைநட்பு ஒழிபு என) அ றியப்பட்ட பொருட்பாலி னுட்பிரிவுக ளேழும், காமத்திறம் மூன்று எனப் பகுதிகையது-(ஆணபால் பெண்பால் அவ

• உபகேசி தபினியெனறும், அவள தோள் மணந்தான் கண்ணபிரான என்றும், உதரமாமதுரை அயன் அவரிர வடமதுரை யெனறும், மாதானுபங்கி செருக்கொழி தனுடையான் என்றும் பொருள்கொண்டு இரு பாட்டுப் பிறிதோருரை கூறுவாருமுளர். (செந்தமிழ். தொகுதி—க, பகுதி—உ)

† "இது மாதகம், அதுபங்கி என இருபொழி புணாந்தது: மாதாதுபங்கி எனவாயது வடநூன்முடிபு. மாதம் எனபது செருகு "மாதோ மத" என்பது நிகண்டு. (அமர கோசம்) அதனைபது வாதையாதலுதலில மாதது, பங்கி - பங்கதனை புடையான்; என்றுஞ் செருகுகொழிதலுடையான எனபது இப்பெயர்களுப பொருளாகக் கொளக. பெரியாத லாற் பெருஞ்சிறப்பெயதி னுரனறும் திருகினியமைதொருகுவா என்பது கருத்து. 'பணியுமாமென்றும் பெருமை' எனனுந திருகுறளினையும் (கூஅ-ம் அதி. அ-ம் குறள்) அதற்கு ஆசிரியர பரிமேலழகர கூறிய உரையினையும் நோக்குக " என்பர், ஸ்ரீ. ரா. இராக வையங்கார். (செந்தமிழ். தொகுதி—க, பகுதி—உ.)

விருபால் என) காமத்துப்பாலி னுட்பிரிவுகண் மூன்றுமாகப் பகுதிசெய்து, பெறல் அரியதாலும் - பெறுதற்கரிய (அறம்பொருளின்பம்வீடு எனப்படுகிற) தான்கு பொருள்களேயும், மொழிந்த - சொல்லிய, பெரு நாவலரே—, ஒழிந்த பொருள் - (அவற்றுள் அடங்காது) ஒழிந்தபொருள் உளதாயின் அதனை, நன்கு உணர்வார் போலும் - நன்றாக அறியவல்லவர்போலும், எ-று.

திறமென்றது அறமுதலியவற்றிற்கு கூட்டப்பட்டது. நான்கு—தான்கு பிரிவுடைத்தென விரித்துரைத்துக்கொள்க. நாவலரே யென்றமையால் பிறரால் அறியப்படுவ தன்றென்றதாயிற்று. மூப்பாலியற்றையையும், இவற்றினடங்காதது ஒன்றில்லையென்பதும் சொல்லியபடி.

வேள்ளிவீதியார்.

உங. செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே - செய்யா
வதற்குரியா ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரியா ரல்லாதா ரில்.

(இ-ள்.) செய்யா மொழிக்கும் - (ஒருவராலே) செய்யப்படாத மொழியாகிய வேதத்துக்கும், திருவள்ளுவர் மொழிந்த - திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பட்ட, பொய்யா மொழிக்கும் - (தன்வழிபி னொழுகுவோர்க்குப்பயன் வீளுவிலே) பொய்படாதமொழியாகியதிருக்குறளுக்கும், பொருளொன்றே—; ஆராயின்—, செய்யா அதற்கு உரியார் - செய்யப்படாத அவ்வேதமோதுதற்குரியவர், அந்தணரே—, ஏனை இதற்கு உரியர் அல்லாதார்—பொய்படாத இத்திருக்குறளோதுதற் குரியவரல்லாதவர், இல் - (உலகத்தி) லில்லை, எ-று.

பூர்வவேதத்தை நித்தியமென்பார் மதம்பற்றிச செய்யாமொழியென்றார். அது வடமொழியும் இது தென்மொழியுமாய் நின்று சில வேறுபாடுடையன போற் றோன்றினும் நுண்ணுணர்வா னுணர்ந்துவார்க்குக் கருத்து வேறுபடாமையின், பொருளொன்றேயெனத் தேற்றேகாரங் கொடுத்துக் கூறினார்.செய்யாமொழி, பொய்யாமொழி— அன்மொழித்தொகைகள். இதற்குரியரல்லாதாரில்லென்றதனாலும் பொதுவேதமாதலறிக. அதற்கும் இதற்கும் பொருள் வேறுறவென்றும், இதனையோதற் கதிகாரிகளாவார் யாவரோவென்றும், கீழ்கின்ற பாயிமொழித்தபடி.

மாங்குடிமருதனார்.

உச. ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றே
ருள்ளந் தோ றுள்ளுந்தோ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(இ-ள்.) வள்ளுவர் வாய்மொழி - திருவள்ளுவரது வாயினின்றுந் தோன்றிய திருக்குறளினது, மாண்பு - மாட்சியைச சொல்லின், (அது) ஓதற்கு எளி

தாய் - ஒதப்படுதற்கெளிய சொற்களே யுடையதாகியும், உணர்தற்கு அரிது ஆகி - அறியப்படுதற் கரிய பொருள்களே யுடையதாகியும், வேதப் பொருள் ஆய் - வேதமெனப்படுகின்ற பொருளாகியும், மிக விளங்கி - (அவ்வேதத்தின்) மிகவிளங்கி, தீது அற்றோர் - குற்றமற்றோர்கள், உள்ளுதோறு உள்ளுதோறு - நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், உள்ளம் - (அவர்களுடைய) மனத்தை, உருக்கும் - கரைக்கும், எ-று.

ஒதற்கெளிதா யெனவே நவின்றோர்க்கினிமை நன்மொழி புணர்த்தல் களும், உணர்தற் கரிதாகி யெனவே ஆழமுடைமையும், வேதப்பொருளா யெனவே விழுமியது பயத்தலும், பிறவுமாகிய அழகுகளினமைதி சொல்லப் பட்டதாயிற்று. தீதற்றோர் - பொருளாசாசிக்கீகறற நுணர்நிவுடையோர். உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளமுருக்குமெனவே முன் காணப்பட்டதினும் பின்காணப்படும் பொருள் சிறந்தமை விளக்குந் தோன்றுதலுடைமை பெறப் பட்டது. இதனது அற்புதமான குணமுடைமைச் சிறப்புச் சொல்லியபடி.

எழிச்சலூர்மலாடனார்.

உரு. பாயிர நான்கில் லறமிருபான பன்மூன்றே
நாய தறவறமொன் றுபாமை - வாய
* வறத்துப்பா னல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

(இ-ள்.) வள்ளுவனார்—, ஆய்ந்து - (அல்வேதத்தின் கருத்துகளை)யாராய்ந்து, நூலின் திறத்துப்பால் - (தம்மாலே செய்யப்பட்ட) நூலினது திறத்திற குத்தக்க நன்மையுடைமையால், தேர்ந்து - (இவையே உரியவையென) தெரிந்து, பாயிரம் நான்கு—, இல்லறம்—, இருப்பான - இருபது, துறவறம்—, பனமூன்று - பதின்மூன்று, பாம் ஒன்று—, ஆக ஆய - ஆகக்கூடிய, நால்வகை ஆ - (பாயிரமுதலிய) நால்வகையுடைத்தாக, அறத்துப் பால்—, உரைத்தார் - கூறினார், எ-று.

நான்குமுதலிய தொகைகளோடு அதிகாரமுடைதென்பது கூட்டுக. மூப்பாற் பொருள்களினு முதற்கிருக் காரணமாதற் சிறப்புடைமையின் தாய துறவறமென்றார். தூபு - நன்மை. அது எல்லா வருணாசிரமங்களுக்கும் பொதுவாயிருக்கை அறப்பாலிய லதிகாரதலதாகை சொல்லியபடி.

போக்கியார்.

உசு. † அரசிய லமையக் தமைச்சிய லீரைந்
துருவ லரணிரண்டொன் றெண்கூ - டிருவகிய

---

* "அறத்துபான் மூப்பானெட் டாயென மூரைத்தார்" எனவும் பாடம்.

† இப்பாட்டு தண்பொருண்மாலேயில், "அரசியலமையந் தமைச்சிய லீரைந்-துரை நாடான் பொரு ளொலியொன்—றுரைசால்-படையிரண்டு கூட்டுப்பதினேழ்பன் மூன்று - சூடியெழுபான் றெருக்கபொருட் கூறு" எனக் காணப்படுகின்றது. இதுவே பொருத்த மூடைத்தாதல், பரிமேலழகருரைமோகிந்தெளிக.

நிண்படை நட்புப பதினேழு குடிபற்
றெண்பொரு ளேழா மியல.

(இ-ள்.) அரசு இயல்—ஐயைந்து - இருபத்தைந்து, அமைசசு இயல்—, ஈரைந்து - பத்து, அரண் இரண்டு—, கூழ் ஒன்று—, படை இரு இயல்—, நட்புப்பதினேழ்—, குடிபதினெழுமூன்று—, எண்பொருள் - எண்ணப்பட்ட பொருட்பாலுக்கு, இவை ஏழாம் - இவ்வியல்களேழாம், எ-று.

இத்தொகைகளோடும் முன்சொல்லப்பட்டபடியே கூட்டுக. அரணுக்கு உருத்திட்பம் நிதத்தலின் உருவல்லரணென்றும், பொருளுடையார்க்கே ஒளி அமைவதாதலின் ஒளிபொருளென்றும், படைக்குக் கடும்போரிற் பின் கொடாத திண்மை யுரித்தாதலின் திண்படையென்றும், கூறினர். பிற்காலத்தார் அமைச்சுமுதலிய வைந்தனையும் அங்கவியலென வியலாக்கியும் வழங்குப. பொருட்பாலிய லதிகாரத்தொகை சொல்லியபடி.

மோசிகீரனார்.

உள. * ஆண்பாலே ழாதிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறுக - மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு

(இ-ள்.) ஆண்பால் ஏழ்—, பெண்பால் ஆறிரண்டு—, அடுத்த அன்பு பூண்பால் - (ஒருவரையொருவர்) அடுத்து அனைப்பு பூணுந்தற் பருதியுடையை, இருபால் - அவ்விருபால், ஓர் ஆறு ஆக—, மாண்பாய காமத்தின் பக்கம் - மாட்சியான காமத்துப்பாலி னியல்கள், ஒரு மூன்று ஆக—, நாமம் - பெயர் பெற்ற, திருவள்ளுவனார்—, கட்டுரைத்தார் நன்கு - நன்கு கூறினர், எ-று.

இவையே பொருளிலக்கணத்துக்கமைய ளவியல் கற்பியலென விரண்டாக்கப்பட்டன. இத்தொகைகளுக்கும் முனகூறப்பட்டது கொள்க. காமத்துப்பாலிய லதிகாரத்தொகை சொல்லியபடி.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

உஅ ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப் - பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள்ளு வனுங்கி
யந்தா மரைமே லயன்.

(இ-ள்.) அதிகாரம்—, நூறும் ஐயாறு மூன்றுமா—, மெய்யாய வேதப் பொருள்—, பொய்யாது விளங்க—, அம் தாமரைமேல் அயன் - அழகிய

---

* இப்பாட்டையடுத்து, அடியில்லாரும் பாடல் உணரொருன்மாலையில் எழுதப்பட்டுள்ளது:—"புணர்தல் பிரிதல் பொருளாவது கற்பெனச் - மூணருமரு கூருரைகிற்—புணருங்-களவே முறிமூன்று கற்பில் வரைவு மாயதில் அளவுழிகா மத்துப்பா லாம்."

தாமரை மலர்மேல் வீற்றிருக்கின்ற நான்முகக்கடவுள், தான் வள்ளுவன் ஆகி—, உலகிற்குத் தந்தான்-உலகத்தார்க்குத் தமிழிற் செய்துதந்தான், எ-று.

உலகு - இங்கே மக்களே யுணர்த்திநின்றது. மெய்யாய வேதப்பொருள் பொய்யாது விளங்கவெனவே இடைகுமுன் மெய்யாய பொருள் பொய்யாய் மறைத்தும், பொய்யாயபொருள் மெய்யாய் விளங்கியும், கிடந்தமை சொல்லப் பட்டதாயிற்று. அதிகாரத்தைபோல நூற்பொருளியல்பு சொல்லியபடி.

மதுரைத்தமிழ்நாயகனார்

நாநூற் பிதன்பா னூனவிநன்பா
லில்லாத வெப்பொரு ணூமில்லையார் - சொல்லாற்
பரந்தபா வாலின் பவன்வள் ளுவனார்
சுரந்தபா லையத்தூண் சூள்.

(இ-ள்.) எல்லாப்பொருளும் - (பலவகைநூல்களாலுஞ் சொல்லப்பட்ட) எல்லாப்பொருளும். இனன்பால்உள - இந்நூலகத்தடங்கி யிருக்கின்றன; இதன்பால் இலவாத எப்பொருளும் - இதனிடத்தில்லாத யாதொருபொருளும், இல்லை - (எந்நூலகத்தும்) இல்லை; (ஆதலால்), சொல்லால் பரந்த பாவால் - சொல்லளவினாலே விரிந்தநூல்களால், பயன் என—, வள்ளுவனார் சுரந்தபா - திருவள்ளுவமாலை தாப்பட்ட இந்நூலொன்றே, வையத்தூண் - மண்ணுலகத்தார்க்குத் தூணாயாதலையும், எ-று.

எல்லாப்பொருள்களுமாவன முதல் வழி சாரியென மூவகைப்பட்ட அறநூல் பொருணூல இன்பநூல் வீட்டுநூல என்பதற்றில் செம்பொருள் ஆக்கப் பொருள் குறிப்புப்பொருளென இமமூவகையாற் கொள்ளக்கிடந்த காட்சிப் பொருள்களும் கருத்துப்பொருள்களுமாம். தொழிலும் பண்பும் ஒரோவழிப் பொருளெனற கேதுபுடைமையின் அவையும் இவற்றுள் அடங்குமாறறிக. பின்னும் அதனை வலியுறுத்தற்கு இனனபாலில்லாத வெப்பொருளுமில்லை யென்றார். சொல்லாற் பரந்தவெனவே அவைபொருளாற் பரப்பின்மை பெறப் பட்டது பரத்தல்-பகுதியுமம தூரு யிரமுதலிய கிரந்தவளவையால் விரிதல். சொல்லாற பரந்தநூல்களை ஆய்வோர் மலையகழ்ந்து எலிபிடித்தல்போல் மிக வருந்திச சிறுபயன் கொள்ளுதலால் எனபயவென்றார். ஆல்-அசை. பா, நூயம— ஆகுபெயர்கள். சினனுட் பல்பிணிச சிற்றறிவுடையோர்க்கு விதி விலக்குகண் முற்றும் உள்ளகைகை கெல்லிக்கனிபோல் கண்டெளியுமாறு உணர்த்தித் தமமாறறக் தீர்த்தலின் வையத்தூணெனறார். மூற்றிருருங் குணரவிழைவார்க்கு இஃது இன்றி யமையாச சிறப்பிற்றென்றபடி.

பாரதம்பாடியபெருந்தேவனார்.

கூ0. எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர் தாந் செப்பவரு - மூப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வ மமற் றில்லை நிகர்.

(இ-ள்.) பாரதம் சிராமகதைமனுப்பண்டைமறைநேர்வன-பாரதம்பழைய சிராமகதையையும் மனுஸ்மிருதி பழையவேதத்தையும் ஒப்பனவாகும்; எப் பொருளும் - எவ்வகைபபட்ட பொருள்களேயும், யாரும் - எவ்வகையோரும், இயல்பின - (அவற்றின்) தன்மையோடு, அறிவுற - அறிய, செப்பிய-(அவர்க் குச) சொல்லும்படிக்கு, வள்ளுவர் செப்பவரு - திருவள்ளுவர் சொல்லலால் வந்த, முப்பாற்கு-திருக்குறளுக்கு, நிகர் - உபமானமாகத்தக்கது, இல்லை - ஒன்றில்லை, எ-று.

மற்று - அசை. அறிதற்காரிய வேதாந்தபொருளு மென்றற்கு எப்பொரு ளுமென் றும், உயர்குலத்தாயென்றி ஏண்யோருமென றற்கு யாருமென் றும், ஜயந்திரிபின்றி யறியவெனறற்கு இயலபி னறியுறவென றும், இதுவீவ சுருதி குரு விரண்டுமாமென்றற்கு செப்பியவென் றும், கூறினர். பண்டையென்பது சிராமகதைக்குங கூட்டுக. கதாரூபமாயிருந்து பாரதாமயண மெனவும், விதிரூபமாயிருந்து சுருதிஸ்மிருதி யெனவும கூட்டிசசொல்லப்படுலால், உப மான உபமேயங்களாத லறிக. எப்பொருளும யாருமிவ்பினறிவுறச செப்பு தல் வேதத்திற கிமையால் முன் முப்பாலின் மிகுமொழியென்ற அதனற் பெறப்பட்ட வேதத்திஞபபுமையை மறுததபடி.

உருத்திரசன்மகண்ணர்

நக. மணர்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணசசுரங்குந் தாய்மூலை யொண்பால - பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவா முப்பான மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு

(இ-ள்.) மணல் கிளைக்க - மணலைதோண்டுந்தோறும், நீர் ஊறும்- நீர்பெருகும், மைந்தர்கள் வாய் வைத்து உண - புதல்வர்கள் . வாய்வைத்து உணணுந்தோறும், தாய் மூலை - தாயினது மூலைக்கண, ஒள் பால் சுரக்கும் - நல்லபால் பெருகும், (அவைபோல) பிணக்கு இலா வாய்மொழி - பிணக்கு தற்கு ஏதுவில்லாத வாய்மைசொலலியுடைய, வள்ளுவர் முப்பால் - திரு வள்ளுவரது திருக்குறளே, ஆயதொறும-ஆராயுந்தோறும, மதிப்புலவோர்க்கு- அறிவுடையபுலவர்க்கு, அறிவு ஊறும் - அறிவு வளரும், எ-று.

கற்பிதமாகிய சாதியசமங்களின் மானம்பற்றி உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும், சிறுதைப் பெரிதாகவும் பெரிதைச் சிறிதாகவும், தீயதை நல்லதாகவும் நல்லதைத் தீயதாகவும் புனைந்து பிதர்பிணரகும்படி சொல்லப்பட்டதல்லாமையால், பிணக்கிலாவாய்மொழி யென்றார். மதிப்புல வோர்க் கறிவூறுமெனவே அவர் அவ்வறிவைக்கொணடு பிதர்க்கெல்லாம் விதி விலக்குகளைக் கற்பிததல் வேண்டுமென் றதாயிற்று. இதனைச் சிலகாற் பயிறலி னமையாது பலகாலும் பயிறசி செயல்வேணடுமென்றபடி.

ஈஉ. ஏதமில் வள்ளுவ ரின் குறள்வெண் பாவினை
லோதிய வொண்பொரு ளெல்லா - முரைத்தனனற்
றூதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன

(இள்.) தூது அவிழ் தார் மாற - பொடியொடு விரிந்த பூமாலையையுடைய பாண்டியமாறனே! ஏதம் இல் வள்ளுவர் - குற்றமில்லாத திருவள்ளுவர், இன் குறள்வெண்பாவினால் - இனிய குறள்வெண்பாக்களாலே, ஓதிய - (நான்குவேதங்களாலுஞ்) சொல்லப்பட்ட, ஒள்பொருள் எல்லாம் - ஒள்ளிய பொருள்களே யெல்லாம், உரைத்தனனால் - சொல்லினமையால், மேதக்கன - மேம்பாட்டினைக்குக்கக்கவை, தாமே-அருட்பாக்களோ, தமைப் பயந்த வேதமே - (முதலாலாய் நின்று) அவற்றைப்பயந்த வேதங்களோ, (நீ சொல்வாயாக), எ-று.

தாம் தம்மை எனப்பட்டவை அவை அவற்றை என்னும் பொருளைத் தந்து நின்றன. எகாரம் இணமை வினை, பிறநூலாசிரியர்க்கெல்லாம் அவரெழுதினகளாலே மதக்கப்பட்டு வருவ குறைபோல்வது இவர்க்கு இல்லை யென்றற்கு எதமில வள்ளுவ னென்றும். தாங்குரியவாய் நின்று கற்போர்க்கு வருத்தம வினையாமைபற்றி இனகுறளென்றும. உணர்வுடையோராலே விரும்பமபட்டநர்குண டைமைபற்றி ணை பொருளென்றும் கூறினர். நூலாசிரியர்க்கும, நூலுகும், நூற்படிய பொருளுக்கும், தகுதிதோனமை சொல்லப்பட்ட விசேடணகுணங்களாலே இவ்வேதம அவ்வேதத்தினுஞ் சிறப்புடைமை குறிப்பித்தபடி.

நரிவெருத்தலையார்

ஈஊ. இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச சொன்னமுது மொழிநூன் - மன்பதைகட்
குள்ள வரிதென் றுவள்ளு வருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்

(இ-ள்.) இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும் - இன்பமுதலிய இந்நாற்பொருளியல்புகளையும், மன்பதைகட்கு-மககட்பரப்புக்கு, முன்பு-அக்காலத்தில், அறியசசொன்ன - அறியும் வண்ணஞ் சொல்லப்பட்ட, முது மொழிநூல் பழமொழிவேதமானது, உள்ள அரிது என்று - ஓதியுணரப்படுதற்கரிதென்று, வள்ளுவர்—, அவை - அவற்றை, உலகம்கொள்ள - உலகத்தார் எளிதினுணரும்படி, குறள்-திருக்குறளே, மொழிந்தார்-சொல்லினர், எ-று.

முன்பறியவெனவே உற்சர்ப்பிணியாதலின் அக்காலத்தோர்க்கு தற்கேற்ற ஆயுணீட்சியும் உணர்வுவலியும் இருந்தனவென்பதூஉம், அவசர்ப்பிண் யாதலின் இக்காலத்தோர்க்கு அவையிலவென்பதூஉம், பெறப்பட்டனன.

இவ்விரண்டும் அவாவறுத்தன் மூன்றும் பாட்டையிற் காண்க. தேயவழக்கிற் படாததும் வருத்திக்கற்போர்க்கு மாத்திரம் புலப்படுவதுமாய் எல்லாமொழி கட்கு மூற்பட்டுத் கடவுணமொழியாய் நிற்றலின் முதுமொழி யென்றார். அற முதலிய நான்கும் பிரிக்கப்பட்டது தோன்றுமையை யுடைத்தாதலின் உள்ளவரி தாயிற்று. பழையவேதமுளதாகவும் வேறுதுசொல்லுதற்குக் காரணமுணர்த் தியபடி.

மதுரைத்தமிழாசிரியர் சேங்குன்றூர்க்கிழார்.

கூசை. புலவர் திருவள் ளுவான்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல் - னிலவு
பிறங்கொளிமா லேக்கும் பெயர்மாலே மற்றும்
கறங்கிருண்மா லேக்கும் பெயர்.

(இ-ள்.) பூமேல் - பூவுலகின்கண்ணே, புலவர் திருவள்ளுவன்றி-புலவ ரெனத் திருவள்ளுவரையன்றி, சிலவர் புலவரெனச் செப்பல் - வேறுசிலரை யும் புலவரென்று சொல்லுதல், மாலே - மாலேயென்பது, நிலவு பிறங்கொளி மாலேக்கும் பெயர் - நிலவால் விளங்குகின்ற ஒளிக்கும்பெயராக, மற்றும்—, கறங்கு இருள்மாலேக்கும்பெயர்-சூழ்கின்ற விருளையுடைய அந்திக்கும் பெய ராக, செப்பல் - சொல்லுதல்போலவும், எ-று.

செப்பலென்றது பின்னுங் கூட்டப்பட்டது. புலமையாவது - பலவேறு வகைப்பட்ட நூலுணர்ச்சியேயெல்லாம் ஒருங்கேகொண்ட பேரறிவுடைமை யாம். உயர் தொப்பற்ற இவ்வது புலமையைக்குறித்தது கோருய்கால் எனை யோர் புலமை புலமையன்றுய் முடிதலின் இவ்வாறு கூறினர். புலவரென் பது காயஞர்க்கே காரணப்பெயரா மென்றபடி.

மதுரையறுவைவாணிகர் இளவேட்டனர்.

கூடு இன்பமும் துன்பமு மென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மமைமிழ - வன்பொழியார்
துள்ளி யுணர வுரைத்தார் பேரா தறிர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து

(இ-ள்.) இன்பமும் துன்பமும் என்னும் இவை-(பின்வருக்கடவனவாய) சுகமும் துக்கமுமென்னப்பட்ட விவற்றினுடைய, இரண்டும் - இருவகைக்கா ணங்களேயும், உள்ளி உணர-ஆராய்ந்தறிதலும், அன்பு ஒழியாது - (தம்மேல்) அன்பு நீங்காமல், மனம் மகிழ - உள்ளங்களிகூரவும், மன்பதைக்கு எல்லாம் - மக்கட் பரப்புக்கெல்லாம், ஒதுசீர் வள்ளுவர் - புகழ்படுஞ் சீரையுடைய திரு வள்ளுவர், வாயுறை வாழ்த்து - வாயுறைவாழ்த்தாக, ஓதார் - (திருக்கு றளைச்) சொல்லினர், எ-று.

இன்பத்தின் காரணம் விதிக்குறளாலும், துன்பத்தின் காரணம்விலக்கு க்குறளாலும், சொல்லப்பட்டன. முன்பறிதிருப்பன் அவற்றைச் செய்த லும் தவிர்தலுமாம். வேண்டுவனவெல்லாந் தொகுத்துணர்த்தலின் மனமகிழ்

திருவள்ளுவமாலை

தல் சொல்லப்பட்டது. அவ்வேதம்போலாது பலர்க்கும் உபயோகியாகச் சொல்லின் மன்பதைக்கெல்லா மென்றார். வாயுறைவாழ்த்தி னியல்பு—*"வாயுறவாழ்த்தே வையகநாடின், வேம்புகடிவும் போலவெஞ்சொற், றூங்குகலின்றி வழிநனிபயக்குமென், றேம்படைக்கிளவியின் வாயுறத்தற்றே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக. எதிர்கால வினைவுணர்ச்சி பயத்தல் சொல்லியபடி.

கவிசாகரப்பெருந்தேவனார்.

நேரிசை வெண்பா

பூவிற்குத் தாமரைபோ பொன்னுக்குச் சாம்புனதம்
மாவிற் கருமுனியா யானைக் கமரரும்ப
றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

(இ-ள்.) பூவிற்குத் தாமரை-மலர்களுள்ளே தாமரைமலரும், பொன்னுக்குச் சாம்புனதம் - பொன்களுக்குள்ளே சாம்புனதப் பொன்னும், ஆவிற்கு அருமுனி ஆ-பசுக்களுக்குள்ளே காமதேனுவும், யானைக்கு அமரர் உம்பல் - யானைகளுக்குள்ளே ஐராவதமும், தேவில் திருமால் என-தேவர்களுக்குள்ளே திருமாலும் போல, பாவிற்கு வள்ளுவர் வெண்பா - நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது குறள்வெண்பா, சிறந்தது—, என்ப - என்று (அறிவுடையோர்) சொல்லுவர், எ-று.

எ-அசை பா-ஈகுபெயர். பொன்—ஆடகம், இளிசஜிறை, சாதரூபம், சாம்புனதம் என நூல்வகைப்படும். காமதேனு வசிட்டமுனியிடத்துள்ளதாக வின் அருமுனியாவென்றார். ஐவானமூகத்தால் இம்மது பலநூல்களினும் சிறந்து நிற்கின்ற மாட்சிமை சொல்லியபடி.

மதுரைப்பெருமருதனார்.

நேரிசை வெண்பா

அறமுப்பத் தெட்டிப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய - முறைமையால்
வேத விழுப்பொருளே வெண்குறளால் வள்ளுவனு
ரோதவமூ கற்ற லுலகு.

** (இ-ள்.) அறத்திறம் - அறத்தின் கூறுபாடு, முப்பத்தெட்டால் - முப்பத்தெட் டதிகாரங்களாலும், பொருள் திறம் - பொருட்கூறுபாடு, எழுபதால் - எழுபது அதிகாரங்களாலும், இன்பத்திறம் - காமத்தின் கூறுபாடு, இருபத்தைந்தால் - இருபத்தைந் ததிகாரங்களாலும், தெளிய—, முறைமையால் - (காரணகாரிய) வொழுங்கால், வேத விழுப் பொருளே - வேதத்தினுயர்வாகிய பொருளே, வெள் குறளால் - குறள்வெண்பாக்களால், வள்ளுவனுர்—, ஓத - ஓதலால், உலகு - உலகமானது, வழுக்கு அற்றறு - வழுவுதலினின்றும் நீங்கிற்று, எ-று.

பொருள், செய்புளியல, ககஉ.

திறமும் ஆலும் முன்னுங்கூட்டப்பட்டன. உயர்வாகியபொருள்—கருமகாண்டம் பிரமகாண்ட மிரண்டினுள்ளுஞ் சிறந்தபொருள். வழுக்குதல்—விதியை விலக்கென்றும் விலக்கை விதியென்றும் கோடல். உலகு—மக்களே யுணர்த்தி நின்றது, தணிவு பற்றி அற்றதென இறந்தகாலத்தாற் கூறினர். முன்னதின்வேறுபட்ட முப்பால்களி னதிகாரத்தொகைகளோடு உலகிற்கு வீலையும் நன்மை சொல்லியபடி.

கோவூர்க்கிழார்.

கூ-அ. அறமுத னுன்கு மகலிடத்தோ ரெல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளியக் - குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனர் பான்முறையே சொல்வாதே
முன்னே முதுவோர் மொழி.

(இ-ள்) அறமுதல் நான்கும்—, அகல் இடத்தோர் எல்லாம் - மண்ணுல கத்திலுள்ளோ ரெல்லாம், திறமுறத்தேர்ந்து - வகைப்பட அறிந்து, தெளிய-லகத்தீர, குறள் வெண்பாப் பன்னிய - குறள்வெண்பாக்களாலே சொல்லப் பட்ட, வள்ளுவனர் - ஈயனுர், பால் முறை - முப்பால்களேயுடைய புத்த கத்தின்கண்ணே, முன்னே முதுவோர் மொழி - முற்காலத்துள்ள பெரியோ ரது நூல்களுக்கு, நேர் ஒவ்வாது - நேர்தல் பொருந்தாது, எ-று.

மொழி—ஆகுபெயர். பெரியோராவார்—வடமொழியிலும் தென்மொழியி லும் பிறமொழிகளிலும் நூல்செய்த முனிவரும், புலவரும், பிறரும். அந்நூல் களாவன, மனு முதலியோராலே செய்யப்பட்ட அறநூன முதலியன. இதன் புத்தகத்தில் முனனூல்களி லொன்றும் சேர்க்கப்படுதற்கு தகுவ தன்றென்று சொல்லியபடி.

உரையூர்முதுகூற்றனர்.

கூ-கூ. தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமப் பாற்பகரார் - நாவிற்
குயலில்லே சொற்சுவை யோரில்லே மற்றுஞ்
செயலில்லே பென்னுந் திரு.

(இ-ள்.) தேவில் சிறந்த திருவள்ளுவர் - தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது, குறள் வெண்பாவில் சிறந்திடு - குறள் வெண்பாக்களோடு கூடிச்சிறந்து தோன்றுனை, முப்பால் - முப்பால்களேயும், பகரார் - ஓதா ரது, நாவிற்கு - வாக்கிற்கு, உயல் இல்லே-(இன்சொற்சொல்லி) வாழ்தலுண் டாகாது, சொல் சுவை ஓர்வில்லே - (மனத்திற்குச்) சொற்களின் சுவையை அறிதலுண்டாகாது, மற்றும் - இதையன்றியும், செயல் இல்லே - (காயத்து க்கு) கல்லசெய லுண்டாகாது, என்னுந்திரு-என்றநினைத்துத் திருமகள் அவ ரிடத்தைச சேராள், எ-று.

---

* இப்பெயர் முதுகூத்தனர் எனவும் வழங்கும்.

சவையோர்த்தற்கும் செயலுக்கும் உரிய மனமும், காயமும், வருவிக்கப் பட்டன. திருமகள் சேராமையாலிய காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஒதார்க்குளவாகாமை கூறவே ஒதுவோர்க்கு யுளவாதலின் வாக்கிற்குக்கடுஞ் சொல் பொய் கோள புறங்கூறல்களும், மனத்திற்குப் பிறனில்விழைதல் பிறன்பொருள் விழைதல் பிறன்பொருட்குக் கேடெண்ணல் பிறவுயிர்க்கிறதி யெண்ணல்களும், காயத்திற்கு பிறன்மனைபுணர்தல் உயிர்கொலை செய்தல் பழியுணுணல் பிறர்பொருள் வெளவல்களும், ஆகிய குற்றங்களெல்லாம் நீங்கு மென்பதும் பெறப்பட்டது. அறவின்பயனுக்குக் காரணமாதற் சிறப்பை யுடைய பொருட்பேறு இஃதோதலி னுளதா மென்றபடி.

இழிகட்பெருங்கண்ணனார்.

40. இம்மை மறுமை யிரண்டு மெழுமைமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற - மும்மையின்
வீடவற்றி னுங்கின் விதிவழுங்க வள்ளுவனார்
பாடின ரின்குறள்வெண் பா.

(இ-ள்.) இம்மை மறுமை இரண்டும் - இகபரஙகட்காவன வீரண்டை யும், எழுமைக்கும் - (வினைப்பயன் றொடர்தற்குரிய) எழ்பிறப்பிற்குமாக, செம்மை நெறியில் - செவ்வையான வழியால், தெளிவுபெற - (யாவரும்) தெளிதல்பெறவும், மும்மையின் - (அறம்பொரு ளினபமெனனு) மூப்பால் களுள், அவற்றின் - அம்மூப்பாற் பொருள்களிலாகி, வீடு-வீடுமாகிய, கான்கின விதி - காற்பொருள்களது விதிகளும், வழுங்க - வழுங்கவும், வள்ளுவனார்—, இன் குறள் வெணபா - இனியகுறள் வெண்பாவை, பாடினர்—, எ-று.

செவ்வையான வழி—விதியும், பதியும், ஞானமும், நோயாளிக்கு மருந் தும், அனுபானமும பதியமும போல் ஒன றறகொனறு முரணுது கூடிந்த் கும்வழி. வீட்டுவிதி துறவறத்திற் காண்க. இமமை மறுமை வீடு மூன்றும் பயக்கும்மாறு சொல்லியபடி.

செயிர்க்காவிரியார்மகனார்சாத்தனார்.

41. ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத் - தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

(இ-ள்.) (மக்களுக்கு) ஆவனவும் - ஆவனவற்றையும், ஆகாதனவும் - ஆகாதவற்றையும், அறிவு உடையார் யாவரும்—, எடுத்து இயம்ப - (இனி இதினிலிருந்து) எடுத்துச்சொல்லுதற்கு, வல்லார் - வல்லவராவார், (ஆதலால்) தேவர் திருவள்ளுவர் - தேவராகிய திருவள்ளுவராலே, செப்பியவே - சொல் லப்பட்டவற்றையே, பொருவில் ஒழுக்கம் பூண்டார் - ஒப்பில்லாத ஒழுக் கத்தை மேற்கொண்டவர், செய்வார்—, எ-று.

இன்னைங்கூறவே அவ்வேதத்திலிருந் துள்ளவா றெடுத்துச் சொல்லு தல் அறிவுடையார்க்கு முடியாமையால் ஒழுக்கம் பூண்டார்க்கு அதன்கண்ணே சொல்லப்பட்டபடி வழுவாமற் செய்தல் கூடாமை காட்டப்பட்டது தாம், உம்—அசைகள். ஆவன - இன்பத்தைத் தருவன. ஆகாதன - துன்பத்தைத் தருவன. ஒப்பிலாத வொழுக்கம் - கொல்லாமைமுதலியன. போதகாசி ரியருக்கும், கேட்டொழுகுவோர்க்கும், வருநன்மை சொல்லியபடி.

செயலூர்க்கோடூஞ் சேங்கண்ணனார்

சூஉ. வேதப் பொருளை விரகால் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா - ராதலா
லுள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு

(இ-ள்.) வேதப் பொருளை—, உலகோ ருக - ் லகத்தார் ுதியுணரும் பொருட்டு, விரகால் - உபாயத்தால், விரிதது த தமிழால் உரைசெய்தார்—, ஆதலால்— உள்ளுநர் உள்ளும பொருள எல்லாம் - நினைப்பவர் நினைக்கும் பொருளகளெல்லாம், வள்ளுவர் வாயமொழி மாட்டு - திருவள்ளுவர் திரு வாயிற் பிறந்த திருக்குறளினகணணே, உணடி என்ப - உணடென்று (அறிவு டையோர்) சொல்லுவர், எ-று.

உபாயத்தால் விரித்தல்-ெ ாசுருக்கத்தால ுதற்கெளிெ மன வெழு சி புண்டாக்கிக் கற்போது அறிவளவிற் கேற்பப் பொருளளவு விரியவைத் தல். நினைக்கப்படும் பொருளகளெல்லாம் இதன்கண்ணே இக்காரணத்தால் தோன்றுகின்றன வென்றகூறியபடி.

வண்ணக்கஞ்சாத்தனார்

சூகூ. ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றெறை செபபரிதா - லாரியம்
வேத முடைத்தத் தமிழ்திரு வள்ளுவனு
ரோது குறட்பா வுடைத்து

(இ-ள்.) ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து - வடமொழியையுந் தென் மொழியையு மாராயந்து, இதனின் இது சீரியது என்று-இதைக்காட்டிலும் இது சிறப்புடைத்தென்று, ஒனறைச செப்ப அரிது - ஒன்றைத் தெரிந்து சொல்லுதல் கூடாது, ஆரியம் - வடமொழி, வேதமுடைதது—, தமிழ்—, திருவள்ளுவனார் ஓது குறட்பா உடைத்து—, (ஆதலால்), எ-று.

ஆல்-அசை. வடமொழியும் தென்மொழியும் பிறமொழிகள போலாது பாணினியாரும் அகத்தியனரு முதலாகிய முனிவாகளாலே செய்யப்பட்ட இலக்கணநூல்களாலே சீர்திருந்தி நிற்றன்முதலிய குணஙகளுடையவாயும், அது பிராகிருத முதலியவற்றுக்குப் போல் இது பூர்ிராமுதலியவற்றுக்கு முத லாய் நிற்றலாலும், ஒன்றற்கென்று குறைபாடுடைத்தன்றேனும் வேத

மூடைமைபற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென்மொழிக் கண்ணே திருக்குறள் உண்டாதலின் இனி யில்லையென்றதற்கு இதனினிது சீரியதென் றொன்றைச செப்பரிதெனறார். இத் திருக்குறளாலே வட மொழியோடு தெனமொழிக்கு ஒப்புமை நிறைவு சொல்லியபடி.

களத்தூர்க்கிழார்.

சச. ஒருவ ரிருகுறளே முப்பாலி னேதுங்
கருமமு தனூல் தருஞ சாஸ்து - மருமறைக
ளோர்ந்துஞ சமயநூ லாறுமம வளருவனூர்
புந்தி மொழிந்த பொருள்

(இ. பா.) அருமறைகள ஓர்ந்தும - (இருங்குமுகற் பாரதமீருகிய) அரிய வேதங்களோதியும, சமயநால ஆறும - (அவ்வேதத்தின் வழிப்பட்ட) சமயநூல் களாறும், நம் வளளுவனூர - நம்முடைய திருவள்ளுவரால், புகதி மொழிந்த பொருள - (உலகத்தாகருப்) புகியாக சொல்லப்பட்ட நூலிலடங்கும். (ஆதலால), ஒருவா—, இருகுறளே - (ஒருவிகற்பமும இருவிகற்பமுமாகிய) இருவகைக குறளகளேயுமே, முப்பாலின - முப்பாலகளில, ஒதும் - அதனி யயனஞ்செயது அறியப்படுகின்ற பருமம முதல நான்கும் - அறமுதலிய நாற் பொருள்களும, சாலும - (உரிய முப்) போதும், எ-று

ஒருவனுக்கு வீடுபேறு முதலிய பொகாதது வேறுவேறான அதி காரிகளுடையபடி அருமறைகளோதி யென்னூர் சமயநூலாறும ஒன்றே பொருளெனனும பாட்டினை யுகாண்க கமகெலலாம அறிவொழுக்கங கொளருதி நல்வழிப்படுத்தவதக பரமாசாரிய இவரேயென்னு முரிமை தோனறற்கு நம்வளளுவனூரென்னூர். மறைக ளோதிஞ சமயநூலாறு நம்வள ளுவனூர புகதிமொழிந்த தொருதொனலால, அவை பலவறறினும வேறுவேறு வகைப்பட்டுச சிறநதுதோன்றா கருத்துகளெலலாம இவ வொரு நூறகணனே அடஙகி நிறகினறமை தெலலபபட்டதாயிறறு பொருள் - ஆகுபெயர். ஒருவரொன பொதுப்படகூறலால இதனை யோதுதறகுப் பெண்பாலாருக் கும அதிகாரமுணடெனபது கொளளபபட்டது. இவவொரு நூலோதி யுணர்ந்தோ அருமறைகளோந்துஞ சமயநூலாறும ஓதி யுணர்ந்தோராவ ரென்றபடி.

நச்சுமனூர

சநி எழுதறசை சீரடி செற்பொருள் யாபபு
வழுக்கில வசபயனி வணனூ - மிழுக்கின்றி
யென்றவர் செய்தன வெலலா மியம்பின
ன்றிவ ரினகுறள்வெண் பா.

(இ-ள்.) எழுதது அசை சீர அடி சொல பொருள யாப்பு வழுகதில் வன ப்பு அனி வணனமு - எழுதது முதல் வணனமீறாக சொல்லப்பட்ட இவற்

நூன், இழுக்கு இன்றி - வழுவுதலில்லாமல், **என்று** எவர் **செய்தன** - எக் காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன, **எல்லாம்** - (அவை) **யெல்லாம்**, **இன்று** இவர் **இன்** குறள்வெண்பா - **இக்காலத்து** இதிருவள்ளுவரால**ே** செய்யப்பட்ட இவ்வினிய குறள்வெண்பாக்களில், **இயம்பின** - **சொல்லப் பட்டன**, எ-று.

வனப்பு—அம்மை, அழகு, தொன்மை, தோல், விருத்தி, இயைபு, புலன், இழைபு. அணி—சொல்லணி, பொருளணி, ஒலியணி. வண்ணம்— குறிலகவற் றுங்கிசை வண்ணமுதலியன. ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு பாவலர் ஒவ்வொரு குணத்தினுலே சிறந்து விளங்க நூல் செய்தனர், இவரோ வெனின் எல்லாகுணங்களாலும் நிறைந்து சிறந்து விளங்கசெய்தமையின் இவ்வாறு கூறினர். இதன் பாக்களின் சிறப்புசொல்லியபடி.

அக்காரக்கனிங்ச்சுமனர்

சசு. கலேிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணிர்
னிலேிரம்பு நீர்மைத் தெளினுந் - தொலேிலா
வாணர் மதியந் தனக்குண்டோ ரள்ளுவர்மூப்
பாணு யைக்கின் பயன்.

(இ-ள்.) (மதியமும் மூப்பாணுலும்), கலே - பதினுறுகலேகளாலும் அறு பத்தாலு கலேகளாலும், நிரம்பி - நிறைந்து, காண்டற்கு - நோக்குதற்கு, [ஆராய்சசி செய்தற்கு என்றபடி], இனிதாகி—, கண்ணின் நிலே - முகக் கண்ணினிலேயில், [அககண்ணினிலேயில], பரம்பு - பெருகின்ற, நீர்மைத்து எனினும் - தன்மையுடைத்தாயினும், [குணமுடைத்தாயினும], வள்ளுவர் மூப்பால் நூல்-திருவள்ளுவரது மூப்பாணுலினது, நயத்து-நயத்தால் விளேவ தாகிய, இன் பயன் - இனியபயனுனது, தொலேவு இலா வான் ஊர் மதியம் தனக்கு - ஒழிவின்றி ஆகாசத்தின்கண்ணே திரிகின்ற மதியினிடத்து, உண்டோ—, எ-று.

மதியத்தனக்கென்றது வேற்றுமை மயக்கம். ஓகாரம்—எதிர்மறை. ஆதாரமாகக்கொள்ளுதற்கு ஏற்புடைத்தல்லாத வானே ஆதாரமாகக் கோடலி னிழிவுதோனற தொலேவிலா வானூர் மதியமென்றார். நயம்—மறுப்படாமை, மழுகாமை, குறைவுறுமை முதலியன. பயன்—இம்மை மறுமை வீட் டின் பங்கள். ஒப்புமை சொல் , தற்கு நூல்களில் ஒன்றும் இன்மையால் ஏனேப் பொருள் பலவற்றினுஞ் சிறந்த மதியையாயினும் சொல்லுது மெனப்புனின் அதுவும் இதனுல் தருவதன்றென்றபடி.

நப்பாலத்தனர்.

சஎ. அறந்தகளி யாண்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு - குறும்பாவா
வள்ளுவனு சேற்றினர் வையத்து வாழ்வார்க
ளுள்ளிரு நீக்கும் விளக்கு.

(இ-ன்.) அறம்—, தகளி - அகலும், பொருள்—, திரி-திரியும், இன்பு—, நெய்-நெய்யும், செஞ்சொல்—, தீ-தெருப்பும், குறும் பா-குறட் பா, தண்டு-தண்டும், ஆ-ஆக, வள்ளுவனார்—, வையத்து வாழ்வார்கள் - பூமியினகண்ணே வாழ்வோரது, உள் இருள்-அகத்திருளை, நீக்கும் - ஒழிப்பதாகிய, விளக்கு—, ஏற்றினார்—, எ-று.

ஆன்றல் - மேம்படுதல். அகத்திருள் - அஞ்ஞானம். தீச்சுடர் - தகளி முதலியவற்றோடு கூடிப் புறத்திருளை எப்படியோ அப்படி ஈசுவரனது திரு வாயிற் பிறக்க செஞ்சொல் அற முதலியவற்றோடுகூடி அகத்திருளைக் கெடுத் தலின் இங்ஙனம் உருவகஞ் செயலாயிற்று. மனேயகத் தேற்றப்படுகிற விளக்கு அம்மனேயகத் துள்ளார்க் கு மாத்திரமே உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருளைக் கெடுக்கவல்ல தன்மையாலும், இவ்வுலகத்து வாழ்வோர் பலர்க்கும் உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருள் கெடுத்தலாலும், அதனின் இது பலகோடி மடங்கு மிக்குயர்ந்து நிற்கின்றமை யுணர்த்தியபடி.

குலபதிநாயனார்.

சஅ. உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிரு டள்ளுதலால் - வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு

(இ-ள்.) உள்ளக்கமலம் மலர்த்தி-செஞ்சமாகிய தாமரைமலரை மலர்த்தி, உளத்து உள்ள - (மக்களது) அகத்திலுள்ள, தள்ளற்கு அரிய இருள் - (பிறி தொன்றனுலே) நீக்கப்படாத அஞ்ஞான விருளை, தள்ளுதலால்-நீக்குதலால், வள்ளுவனார் வெள்ளைக் குறட்பாவும் - திருவள்ளுவரது குறள்வெண்பாவும், வெங் கதிரும் - (புறத்துத்தாமரை மலரைமலர்த்திப் புறத்திருளை நீக்குகின்ற) சூரியனும், குணத்தைக்கொண்டு - அருசெய்கையைக்கொண்டு, ஒக்குமெனக் கொள்ளத்தகும்—, எ-று.

. செயலும் தொழிற்பண்பெனப்படுதலின் குணமெனப்பட்டது. அது மலர்த்தலும், தள்ளுதலும் ஆம் குணத்தைக் கொண்டனவே செயப்படு பொருளைக்கொண்டு ஒக்குமெனக் கொள்ளத் தகுமென்ற தாயிற்று. உலகுக் கெல்லாம் பேரொளியாகிய சூரியனும் இதற்கு ஒருபுடை யொப்பா மென்றபடி.

தேனிக்குடிக்கீரனார்.

சஉ. பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே - முப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து,

(இ-ன்.) செய்வத் திருவள்ளுவர்—, மூப்பாலின் - மூன்றுபால்களுடையதாக, செப்பிய குளால் - சொல்லப்பட்ட குறளுரலைக் கேட்டறிதலால், ஐயத்து வாழ்வார் மனத்து—, பொய்ப்பால - பொய்யின் பகுதியிற்பட்டவை யெல்லாம், பொய்யே ஆய்ப்போயினை—, பொய் அல்லாத—, மெய்ப்பால - மெய்யின் பகுதியிற்பட்டவை யெல்லாம், மெய்யே ஆய் விளங்கினை—, எ-று.

குறளால் பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின மெய்ப்பால மெய்யேயாய் விளங்கின எனவே, இதற்கு முன்னெல்லாம் உணமை ஐயப்படாமையின் பொய்ப்பால மெய்ப்பாலபோன் மேறகொள்ளப்பட்டும், மெய்ப்பால பொய்ப்பாலபோற் கைவிடப்பட்டும், மயங்கிக்கிடக்கின வென்றதாயிற்று. பொய்யேயாய்ப்போதல் - வாய்மையெனப்படுவதென்றற் றொடக்கத்துத் திருக்குறள்களாலும், மெய்யாய் விளங்கல் பொய்மையும் வாய்மையிடத்த வென்றற் றொடக்கத்துத் திருக்குறள்களாலும் அறிக. இதன் மெய்யுணர்வு பயத்தற்சிறப்புச செல்லியபடி.

கோடிஞாழன்மாணிபூதனர்

நிஅ அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
நிறனறிந்தேம் வீடு தெளிந்தே - மறனெறிந்த
வாளார் கெடுமாற வள்ளுவனார் தம்மாயாற்
கேளாதனவெல்லாங் கேட்டு.

(இ-ள்.) மறன் எறிந்த வாளார் கெடுமாற - பகைவரையெறிந்த வாட்படை தகுதிய வீரரேறுகளும் பாண்டியனே! வள்ளுவனார் தம் மாயால்—, கேளாதனவெல்லாம் - (இதற்குமுன்) கேட்கப்பட்டிலாதவை யெல்லாம், கேட்டு - (இப்போது) கேட்டு, அறன் நிறமறிந்தேம்—, பொருள் நிறம் அறிந்தேம்—, இன்பின் நிறன் அறிந்தேம்—, வீட்டின் நிறன் தெளிந்தேம்— எ-று.

நிறன்-கூறபாடு. அது அறமுதலியவற்றிற்கு கூட்டப்பட்டது. மறன்—ஆகுபெயர். கேளாதன - பிறநூலாசிரியர்க் கெல்லாம் அறிந்து சொல்லுதற்கெட்டாதிருந்த அற முதலியவற்றி னுட்பங்கள். இம்மை மறுமை வீடுகளேக்குறித் துணர்த்தற்குரிய உறுதிப்பொருணன்கு மூணர்தலின் இனியாதொன்றுமுக குறைவில்லை யென்றபடி.

கவுணியனர்.

நிக சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து - முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனர்
பன்னிய வின்குறள்பெண் பா.

(இ-ள்.) முந்திய நல் நெறி நாம் அறிய - முற்பட்டதாகிய நல்வழியை நாமறிய, நாப்புலமை வள்ளுவனர் நாவால்விளங்குகின்ற புலமையையுடைய

திருவள்ளுவனாரால், பன்னிய-சொல்லப்பட்ட, இன் குறள் வெண்பா-இனிய குறள் வெண்பாக்கள், செக்கைக்கு இனிய - (நினைத்தால்) மனத்திற் கின்பஞ் செய்வன, செவிக்கு இனிய - (கேட்டால்) காதுக்கின்பஞ்செய்வன, வாய்க்கு இனிய - (ஓதினால்)வாய்க்கின்பஞ்செய்வன வர்த்தஇரு வினைக்கு -தொடர்ந்து வருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்கு, மாமருந்து - பெரிய மருந்தகளாவன, எ-று.

குறட்பாவை மருந்தென்றமைக்கு ஏற்க வினையை நோயென்னுமையால் ஏதேசரூபகம். கல்வினையும் பிறவிக்கு ஏதுவாகலால் இருவினையென்றார். மூற்பட்டநல்வழி - நன்மகக்ளுக்கு அநாதியா யமைந்துள்ளது. அது சமயத்தாரது பலவகைப்பட்ட கற்பனைபிஞலே மறைபட்டு நின்றமையின் நாமறிய வென்றார். இக்நூலின் பாக்யோச சித்தித்தன் முதலியன செய்யுக்காலும், சொற்பொரு ணயகளாலே இன்பம் வீனைத்துத் தெய்வத்தன்மையால் வீனைத்தையரும் ஒழிக்குமென்றபடி.

மதுரைப்பாலாசிரியனார்.

நிஉ. வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத் - தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா வகிலத்தோ
ருள்ளிரு ணீக்கு மொளி.

(இ-ள்.) வெள்ளி வியாழம் விளங்கு இரவி வெள் திங்கள் - சுக்கிரன் சுரகுரு சூரியன் சந்திரன் எனப்படுகின்ற இவ்வொளிகள், புற இருளை—, பொள்ளென நீக்கும் - விரைவிலே நீக்கும், (ஆகலின் புறவிரு னீக்குதற்கு உண்டாகிய ஒளிகளாம்), தெள்ளிய - முற்றுணர்ந்த, வள்ளுவர் இன் குறள் வெண்பா—, அகிலத்தோர் - உலகத்தோரது, உள் இருள் நீக்கும் - உள்ளிருளை நீக்குதற் குண்டாகிய, ஒளி—, எ-று.

இங்ஙனங்கூறவே புறத்திருளுக்கு அவை பலவுள, அகத்திருளுக்கு இஃதொன்றே யுளதென்றதாயிற்று. அவற்றுள் ஒன்றாலும் நீக்கப்படாத அகத்தி ருளை நீக்கவல்லதாதலின் இதற்கு எவ்வாற்றானும் ஒப்பதொன்றின் றென்ற படி.

ஆலங்குடிவங்கனார்.

நிக. வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் நீஞ்சுவையு மொவ்வாதாற் - றெள்ளமுத
முண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் மூப்பான் மகிழ்ந்து.

(இ-ள்.) வள்ளுவர் பாட்டின் வளம் - திருவள்ளுவரது பாட்டினது நீஞ் சுவையை, உரைக்கின்-சொல்லுமிடத்து, வாய் மடுக்கும் தெள் அமுதின்-உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது, நீஞ்சுவையும்—, ஒவ்வாது—, தெள்

அமுதம் உண்டு - அத்தெள்ளிய வமுதையுண்டு, அறிவார்-(அதன் சுவையை) யறிபவர், தேவர்—, வள் தமிழின் - வளம்பொருந்திய தமிழ்க் கண்ணதாகிய, முப்பால் - மூப்பலாகிய அதின்மூம்மடி சிறந்தபாலே, மிழிந்து—, உலகடைய - எல்லா வுலகத்தாரும், உண்ணும் - உண்டி தீஞ்சுவையறிவார், எ-று.

ளம்—ஆகுபெயர். ஆல் அசை. அர் அமிர்தம் வாயுட்பெய்தவழி நாவிற் பட்ட சிறிது பொழுதளவே தீஞ்சுவையப்படுது. இப்பாட்டு சொஞ்சின்கணிலே பெற்று ஒழிவின்றித் தீஞ்சுவையபதத்தலின் ஒவ்வாதென்றார். முப்பால் - சிலிஷ்டரூபகம். இனி எவ்வுலகத்தாருக்கும் கருமபூமியாகிய இவ்வுலகத்துட் டோன்றி மெய்ப்பொருளுணர்ந்தறிவீட்டின்பம் பெறுதல் கூடாமையின் உலகடைய வுண்ணுமென்றார். அன்றி அவ்வுலகத்துத் தேவர்களும் தமது மேற்பட்டவறிஞரே அதனது உயர் வொப்பற்ற சிணசதை அறிந்து முக்கிய பிரமாணமாகக்கொண்டு மகிழ்கூர்வ தொன்பதுபற்றி அங்ஙனம் கூறினுமெனினுமமையும். இஃது இவ்வுலகத்தார்க்கேயன்றி அவ்வுலகத்தார்க்கும் பயன் படுமாறு சொல்லியபடி.

இடைக்காடர்பாடல்.

சடுகைத் தொளைத்தேற் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

(இ-ள்.) குறள் - (நாயனாரது நூலி னுயிரத்து மூற்றாறு முப்பது) குறள்வெண்பாக்களும், கடுகை—, தொளைத்து - (அதனடியே) தொளை செய்து, ஏழ் கடலை - ஏழுகடனீரையும், புகட்டி - (அத்தொளையுட்) பெய்து, குறுக - (தன்னளவிற்) குறுகும்வண்ணம், தறித்த - தறித்த வைத்தால் அது போல்வனவாகும், எ-று.

மிக்கசிற்றளவிற்கு எடுத்துச சொல்லப்படுவதொரு நன்பொருளாதலின் கடுகு சொல்லப்பட்டது. இரண்டனுருபு தறித்தவென வினைகொண்டது. தொளைத்தல் - உள்ளீடுபோக்குதல். புகவிடென்பது புகட்டென விகாரப்பட்டு முதனிலையாய் நிற்றலின பகட்டியென்றுரைத்தது. தொளையினிடை வெளிக்கும் அதன் புறமூடிக்கும் கொள்ளப்பட்ட பங்கு சிறிதாக ஒழிக்கப்பங்கு பெரிதாகலின் குறுகவென்றார். தறித்தாலன்ன வெனற்பாலது தறித்தவென இடைக் குறைந்து நின்றது. இல்லாதபொருளே உபமானமாகக் கூறலின்இல் பொருளுவமை. குறட்பாக்களுள் ஒவ்வொன்றும் அதுபோதலின் தறித்தவெனப் பன்மையாற் கூறலாயிற்று. அறன் பால்பகா வஃறிணைப் பெயராதலின் இங்கே பன்மைக்காயது. இங்ஙனங்கூறவே குறட்பாவின் சொற்சுருக்கமும் அதனுள் அடக்கப்பட்ட பொருள்விரிவும் போக்கும்வழி அக்கடலும் ஏழ்கடனீரும்போலு மென்றதாயிற்று. பொருள் விரிவினையது படாமை சொல்லியபடி.

இப்பாட்டிலே ‘அணுவைத் தொளைத்தேற் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்” என முதற்சொல்லைமாற்றி ஔவையாரால் புகழ்ச்சி செய்யப்பட்டது.

திருவள்ளுவர்மாலையுரை முற்றிற்று.

திருவள்ளுவநாயனர் வரலாறு.

நேரிசை யாசிரியப்பா.

நயமிகுபுகழ்ச்சோ ணாட்டுளோரந்தண
ணயர்மனைக்கிழத்தியங் குயிர்த்தவோர்மைந்தற்
கியாணர்சால்பகவ னெனப்பெயரீந்துபின்
கோணிலைநாணிலை குறித்தசாதகத்தாற்
புன்குலமாதுதேள் புணருமென்றோர்ந்திஃ
தென்குலக்கிழுக்கதா மெனவுளங்கழுமிய
பீழையினோடுமீ இப் பின்பொருகிலநாண்
மாழையுண்கண்ணியை மதலையைத்தணந்து
கோணைரீர்க்கங்கையிற் குடைகுவானேகினன்
பேணுமச்சிறுவனும் பிரமசரியமேற்
றோவாவருமறை யோதிநூலுணர்ச்சியின்
மூவாகலத்தினம் மூவாட்டையனு
யெந்தைநிற்பிரிதற் கேதுவென்னெனத்தாய்
புந்திநொந்துரைசெயப் பொருன்வடபுலத்தீஇப்
போதருநெறியிடைப் பீலிமகள்கருவூ
ராதியென்பெயரின ளரும்பெறற்செல்வியள்
பொற்கொடிபோன்றெதிர் புகமருண்டினிய
சொற்கொடுபுகுலந தோய்த்துணர்ந்ததன்பி
னிச்செயறகா தென வெண்ணிவிட்டேகுழி
மெய்ச்செயற்கற்பினள் விடாதுடன்றொடரக்
கண்டுருத்தொருகிலை கைக்கொடுநுதன்மிசைப்
பண்டரவெறிந்நவட் போக்குபுவிசைத்துபோய்ந்
திகழ்பாகிரதி தீரமேலுளபதி
யகமெலாந்தேடியு மத்தகணக்கண்டிலா
தரந்தையிற்றனதுகா டடைகுவான்மீண்டு
வரும்பொழுதிரவவன் மருவறச்சாலையிற்
றற்பிரிவாற்றுத் தளர்ச்சியோடிர்தொறு
மற்பகனேடுறு மாதிதற்காணூ
வுற்றடிவணங்கலு முயர்மறையோனவ
ணெற்றியிற்சிலவடு நேரினேக்கிமுன்
பிணங்குமாதெனத்தெளிந் திவண்வரவென்னென
வணங்குநிற்பிரிந்துறி ஞயிவாழ்வெனென
வீன்றிடுமகவெலா மீன்றுழியேவிடுத்
தோன்றியதுலிபொடு மூடன்வசவல்லீயல்

வருகெனவண்ணலம் மடவரலியைதலா
லிருவருந்தலந்தொறு மியங்குகாலங்களி
லுப்பையெளவை யுறுவவள்ளியென்
றிப்புவிபோற்றுமீ ரிருவர்மகளிரு
மன்னுசீரதிகமான் வள்ளுவர்கபில
ரென்னுமாடவ ரிம்மூவரும்பிறந்
தெவ்வெத்தலமெவ ரெவர்க்குப்பிறப்பிட
மவ்வத்தலங்களி னவரவர்வளர்ந்தனர்
செப்புமவ்வெழுவருட் டிருவள்ளுவர்தா
மைப்புயலணிபொழின் மயிலாப்பூரில்
வள்ளுவர்மரபிடை வளர்ந்தனராங்கவ
ருள்ளுமுத்தீதவரு ளொருவராகிய
சதுர்முகன்றிருவவ தாரமாதலின்
முதுமறையாகம முத்தமிழ்க்கலைபிற
வையந்திரிபிலா தீனத்துநன்குணர்ந்து
தெய்வப்புலமையிற் சிறந்தரன்குருவா
யற்புதநீறணிக் கைத்தெழுத்தியம்பித்
தற்பரலிங்கமெய் தரித்தருள்செயப்பெ(ற்)இ
வலங்கொள்பூவைசியர் மரபினுற்றெண்குண
மிலங்குறுவாசுகி யெனும்பெயர்தையலை
மணந்தகனமர்ந்து மகிழ்ந்துறவறத்தரும்
வணங்குறவில்லற வாழ்வினுற்றருளா
லென்னினுயர்வுறு மினித்தமிழ் மொழியென
முன்னுறுபெருவட மொழியமுக்கூறு
மலைதருமபற்பல மதந்தருமியக்கு
தலைபிசைகொண்டி துதக்கதென்றேத்த
விம்மைமறுமைவீ டெய்தவிக்நூலொன்
றம்மவமையுமென் றறிஞருள்ளுவப்ப
வெங்கட்கிணையிலை யெனத்தருக்குறளைச்
சங்கப்புலவரத் தருக்குளத்தொழிய
வீரிருவேதமே யெழுவாயாகிய
சீரியவிழுமிய செவ்வியநூல்களிற்
சிறந்தபொருளெலாஞ் செந்தமிழ்க்குறளி
லறம்பொருள்காமமென் றுகுமுப்பாலாற்
கூறினசொருநூல் கொண்டுளந்
தேறினர்பயனெலாஞ் சேர்ந்துவாழ்குவரே.

நாயனார் சோதபஸ்துதி.

திருமுடிமிசையார் மயிர்முடியழகுந் தீர்க்கபுண் டரதலழகும், திரண்மணி புயந்தை வருஞ்செவியழகுந் திகழ்கெடுந்தாடியினழகும், அருமுடிசெபமாலிகை சின்முத்திரைசே ரபயகோவலக்கையினழகும், அமிழ்தறழ்தமிழ்மா மறைமுறைவாத மமைதரு மிடக்கையினழகும், கருமுடியோகப் பட்டையினழகுங் கடிகொள்கேட் கோவணவழகும், கழல்களிற்றிகிரி வளைவரையழகுங் கமல நல்லாதனத்தழகும், தருமுடிமுகிறேய் மயிலியினிடைமாதவர்கள் கண்டிறைஞ்ச வீற்றிருக்கும், தழைபுகழ்த்திருவள்ளுவரெனு நாம சற்குருசரணமே சரணம்.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

ஆசிரியரதிரு நாமங்கள்.	நூலின்திரு நாமங்கள்
திருவள்ளுவர்	திருக்குறள்
நாயனார்	முப்பானூல்
தேவர்	உத்தரவேதம்
முதற்பாவலர்	தெய்வநூல்
தெய்வப்புலவர்	திருவள்ளுவர்
நான்முகனார்	பொய்யாமொழி
மாதானுபங்கி	வாயுறைவாழ்த்து
செந்நாப்போதார்	தமிழ்மறை
பெருநாவலர்.	பொதுமறை.



சிவமயம்

திருவள்ளுவர் குறள்

பாட்டு முதற்குறிப் பகராதி.

பாட்டு.	பக்கம்.
அகடாரார்நல்	சடுக
அகப்பட்டி	நிக்டு
அகரமுதல	
	ர்ாடு
அகழ்வாரை	எஉ
அகனமர்ந்து	சஉ
அகனமர்ந்தீ	சடு
அஃகாமை	அப
அஃகியகன்	அக
அங்கணத்து	ர்ுசஅ
அசையியற்	நிஉஅ
அச்சமூடை	உடுக
அச்சமேகீ	நுகசு
அஞ்சாமைய	உசக
அஞ்சாமையீ	கஅச
அஞ்சுமறியா	சகசு
அஞ்சுவதஞ்	உ0எ
அஞ்சுவதோ	களடு
அடக்கமம	நிஅ
அடல்வேண்	கசுக
அடற்றகை	ங்எஉ
அடுக்கியகோ	சசு0
அடுக்கிவரினு	ங்0உ
அடுத்ததுகா	
அணங்குகொல்	நுகக
அணியன்றே	சஅஅ
அந்தணரென்	கள
அந்தணர்நூற்	உசுச
அமரகத்தாற்	ங்கங்ங
அமரகத்துவ	
அமிழ்தினு	ங்ஙே
அமைச்சாவ்	உ2ஙு

பாட்டு.	பக்கம்.
அரஙகின்றி	
அரம்பொரு	
அரம்பாலு	
ரா	
அரிதாற்றி	
அரியவற்று	
அருவ்க்கட	
அருஞ்செவ்	
அருட்செல்	
அருமறை	
அருமையு	
அரும்பய	
அருவினையென்	
அருளல்ல	
அருளிலார்	
அருளென்	
அருளொடு	
அருள்கருதி	
அருள்சேர	
அலக்காரை	
அலரெழவாரு	
அலர்ாண	
அல்லலரு	
அல்லலவை	
அல்லற்பட்	
அவர்த்தா	
அவர்நெஞ்	
அ	

பாட்டு.	பக்கம்.
அவாவென்ப	
அவிசொரிந்	
அவையறிந்	ங்சச
அவையறியா	ங்சஞ
அவ்வித்தழுக்	எஅ
அவ்வியநெ	ஙக
அழக்கொண்	ங்கக
அழச்சொல்	ங்அச
அழல்போ	ஞகஉ
அழிவதூஉ	உஉங்
	ங்கo
னவை	ங்அக
அழிவின்ற	ங்சுங
அழுக்கற்ற	எக
அழுக்காறவ	கக
அழுக்காறுடையார்	எள
அழுக்காறுடையார்	
அழுக்காறென	எஅ
அழுக்காற்று	எள
அளவல்லசெய்	கங்சு
அளவளாவில்	
அளவறிந்தா	கங்சு
அளவறிந்து	உங்உ
அளவின்கணி	கஙங்
அளித்தஞ்ச	ஞஞசு
அறங்கூருன	அச
அறஞ்சாரா	ஞ0உ
அறஞ்சொல்	அசு
அறித்தறிதி	உ0
	உஞ
அறத்தான்	உக
அறத்தினிதே	ங்அ

பாட்டு முதற்குறிப் பகராதி

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
அறத்தினூஉங்	௧அ	அனிச்சப்பூ	ஙிஎ	இகலான	ச௧ச
அறம்பொரு	உசஙூ	அனிச்சமூ	ஙிஙூ	இகலிற்கெ	ச௧ங
அறவாழிய	சு	அன்பகத்தில்	ஙூ	இகலின்மி	ச௧உ
அறவினையா	௧சஙூ	அன்பறிவாரா	ஙபஙo	இகலெதிர்	ச௧உ
அறவினையு	சஙூஎ	அன்பறிவு	உஙூ	இகலென்ப	ச்௧o
அறனழீஇ	அச	அன்பிலனு	ச௧டி	இகலென்னு	ச௧ச
அறனறிந்தா	ஙபoள	அன்பிலாரெல்	ஙபசு	இகல்காணு	ச௧ச
அறனறிந்தமூ	உ௧ஙூ	அன்பிற்குமு	ஙசு	இகழ்சஇபிற்	உசுஉ
அறனறிந்துவெ	அட	அன்பின்வழி	சo	இகழ்ந்தெ	ஙிஎள
அறனுக்கம்	எசு	அன்பின்வி	சஙூஅ	இடமெல்லா	ஙிச0
அறனியலா	எ0	அன்பீனுமா	ஙூள	இடனில்பரு	ச00
அறனிழுக்கா	௧அஙி	அன்புடை-லிவ்	ச௧அ	இடித்குந்து	உ௧சு
அறனீனு	ஙசுச	அன்புடை-ல்வே	ஙபஉ௧	இடிபுரிந்தெள்	உ௧ச
அறனெனப்	உசு	அன்புகாணெ	சுளூபட	இடிப்பாரை	உ௧சு
அறனேக்கி	அஅ	அன்புமறனு	உச	இடுக்கட்ப	ங்௧சு
அறன்கடை	சுஅ	அன்புற்றமர்க்	ரஅ	இடுக்கணகா	ச௧ச
அறன்வரை	எ௧	அன்பொரீஇ	ச௧அஙி	இடுக்கண்வ	ங்00
அறிகிலா	ஙிசஅ	அன்போடியை	ஙூள	இடும்பைக்கி	ங்o௧
அறிகொன்	ங்o அ	அன்றறிவாமெ	உ0	இடும்பைக்கே	ச௧ச
அறிதோறறி	ஙிஙச	ஆகாளவிட்	உ௧உ	இடைதெரிந்	ங்ஙச
அறிந்தாற்றி	உடிo	ஆகுழாற்	௧எஅ	இணரூழ்த்து	ங்௧ஙி
அறிவற்றங்	உo௧	ஆக்கஙகரு	உஉச	இணரெரிதோ	ச௧ஙங
அறிவிலார்கா	சoசு	ஆக்கமதர்வி	உஅஅ	இதனியதன	உடிங
அறிவிலானெ	சoசு	ஆக்கமிழந்	உஅஅ	இமைப்பிற்கர	ஙிசஙூ
அறிவினுளு	ச௧சு	ஆக்கமுங்	ங்ச௧	இமையாரின்	சஙூடி
அறிவின்மை	சoசு	ஆகமை	ரஙிஅ	இம்மைப்பி	சுஙூசு
அறிவுடையாரா	உoசு	ஆபயன்கு	உளச	இயல்பாகு	ச௧உ
அறிவுடையாரெ	உoஎ	ஆயுமறிவி	சுசுத	இயல்பினு	உடி
அறிவுவுவா	ஙூங்ச	ஆய்ந்தாய்ந்	ங்அஙூ	இயல்புளி	உசுச
அறுவாய்நி	ஙிஙூஅ	ஆராவியற்கை	ச௧எ	இயற்றலு	ச௧டி
அனைபறை	ஙிசசு	ஆவிற்குரீரெ	ஙிங்ச	இரக்கவிர	ஙிoச
அன்காவியல்	ச௧ஙசு	ஆவினினையு	சுங்ச	இரத்தலினி	ச0ஙி
அன்றதறிந்து	சடிஉச	ஆற்றாருமா	உஙூ	இரத்தலுமீ	ஙிoசூ
அன்றமறைக்கு	ச௧எஉ	ஆற்றினளவறித்தீ	உஙூ	இரார்துமுயி	ஙிoங
அன்றமறைத்த	சoஅ	ஆற்றினளவுறிந்து	ஙூஙிo	இரப்பனிரப்	ஙிச௧உ
அன்றவரெண்	ச௧எச	ஆற்றின்வருந்	உ௧சு	இரப்பாரை	ஙிoள
அன்றுரழிபசி	ச0ச	ஆற்றினெழு	உடி	இரப்பானெவெ	ஙிoஅ
அன்றுரைத்தே	உசசு	ஆற்றுபவர்	ஙடிஅ	இரா ள்ளவுள்	ஙிசஙூ
அன்றுர்ச்சொன்	சஅச	ஆற்றுவா-லிக	சுஉஅ	இரவென் ஐ	ஙிசஉ
அன்றுலவுறிச்	சடிசச	ஆற்றுவா-ல்பசி	ச0ங	இருணீங்கி	ச௧சு
அன்றேமென்	ஙூ0உ	ஆற்றுவா-ல்பணி	சுஎச	இருநோக்கி	ஙிஉடி

பாட்டு.	பக்கம்.
இருத்துளளி	ரூ00
இருந்தோம்பி	ச0
இருபுனலும்	ங்டுரு
இருமனப்பெண	சசஉ
இருமைவகைக	க
இருவேறுல	களக
இருள்சேரிரு	டுரி
இலக்கமுடம	ஙட0
இலஞ்சிழா	ரு0க
இலமென்றசை	சகக
இலமென்றுவெ	அக
இலர்பலராகிய	கஉச
இல னென்றுதீய	கூச
இலனென்னு	க0உ
இல்வாழ்வா	உ
இலலதெனி	உஅ
இல்லாரை	டரூட
இல்லாளேயஞ்	சரு டுரி
இல்லாள்கட்	தாரு
இல்லதவற	ர க
இலறலுமாண்	உ
இழுகுதொறூஉ	ஏடுஉ
இழிவறிந்துண	டீருடுரி
இழுக்கலுடை	உ0க
இழுக்காமை	உகு0
இழைத்தற்கரி	டளஎ
இளித்தக்க	ரூஉ உ
இளிவின்மின்	சகுள
இளைதாகமு	சஉடூ
இனையரின	ர ச அ
இறந்தமைந்	சாரூஉ
இறந்தவெ	உடுஅ
இறந்தாரிற	கசச
இறப்பேபுரி	சஎக
இறலீனுமெ	அட
இறுஇய	டூஞ்ச
இறைகடி	உஎங
இறைகாக்	உகுடு
இற்பிற-கண்ண	சடுக
இற்பிற-கணணே	டு0க
இனத்தாற்	உஎடு
இனங்போன்	ங்கூஎ

பாட்டு.	பக்கம்.
இனியவுள	ஈகூ
இனியனன	ரூஉடு
இனைத்துணைத்	ஏ _
இனையரிவ	ங்அஉ
இன்கணுடை	டுடுடு
இன்சொல-லீ	சஅள
இன்சொலாலீர	கடு
இன்சொலி	சஅ
இன்பமக	டுசூஉ
இன்பத்து-பய	சகஉ
இன்பத்து-வி	ப0ச
இன்பமிடை	களசூ
இன்பமொ	டு0டு
இன்பமவிழை-னி	0ர-
இன்பம்விழை-ன்	உகஅ
இனமையிடி	டு0
இன்மையினி-த	டு00
இன்மையினி-து	உஎக
இன்மையு	எஉ
இன்மையெ	டு00
இன்மையொ	ஓஎ ரு
இன்றியமை	கசுஞ
இனறுமவ	டு0ச
இனஞசெ-மை	கசசு
இன்ஞசெ-ர்	சஎடு
இன்ஞாரிக்	கபங
இன்ஞாள	டுடுஅ
இனமுமை	ங0ச
இன்ஞவெ	கசஎ
ஈட்டமிவ	சஅரு
ஈதலிசைப	க0சு
ஈதுவக்கு	க0ச
ஈரவகைவி	டுகள
ஈவாக்கெணை	டு0அ
ஈன்றபொ	ஙடு
ஈன்றணமு	சகச
ஈன்ருள்பசி	ங்கள
உடமபாடி	சஉள
உடமபோ	டுசo
உடுக்கையி	ங்அக
உடும்பதூஉ	டுங்கள
உடைசெல்	சடுங

பாட்டு.	பக்கம்.
உடைத்தும்	உ0ங
உடைமையு	சக
உடையரெ	உஅள
உடையார்	ககங
உட்கப்படா	சசஙூ
உட்பகைய	சஉடு
உணர்வது	ங்கள
உணவினு	சுசக
உண்டார்க	டுடுஉ
உணணற்க	சகங
உண்ணது	எடு
உணணுமையு	ககள
உண்ணுமையே	ககஅ
உகவிவைத்த	டுக
உப்பமைக்	சுஉங
உயர்வகலம்	ங்டுடுக
உயிருடம்பி	கடுச
உயிரிப்பவு	சஉங
உய்த்தல	சுஉ
உரமொரு	உசுங
உரணசஇ	சுக0
உரனென	கச
உருவுகண்	ங்உங
உருளாய	சசகூ
உரைப்பா	க0சு
உலகத்தாரு	சக0
உலகத்தோ	சுஎ
உலகத்தழீஇ	உ0டு
உலவிடத	ங்சுஅ
உவக்காணெ	டுஎஉ
உவந்துறை	டுசாங
உவப்பத்	ககக
உழந்துழந்	டுங்அ
உழவினர்	சகஅ
உழுதுண்டு	சகசு
உழுவாரு	சகசு
உளைப்பிரி	உடுஎ
உளபோன்	உஎக
உளரெனினு	டுங்ங
உளரென்னு	ககஎ
உள்ளலை	உங்ங
உள்ளத்தளித்	சுஎசு

பாட்டு முதற்குறிப் பகராதி

பாட்டு.	பக்கம்	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
உள்ளத்தார்	௬0, ட	ஊடியவ	ஈ, ட0	எள்ளினினி	ஊஉள
உள்ளத்தாலு	க, க	ஊடியிருந்	ஊ, ச	எற்றிற்கு	ஞிகஅ
உள்ளத்தாற்	கம, எ	ஊடுகமன்	ஊ, ட	எற்றென்	ஈ.ஞள
உள்ளமிலா	உகo	ஊதல்	ஊஈஈ	எனைத்தானுங	உoக
உள்ளமுடை	உஅள	ஊணுடை	ச அ, ஈ	எனைத்தானுமெ	கசள
உள்ளமேபோ	ஞிசுச	ஊதியமென்	ஈ.அடு	எனைத்திட்	ஈ.உச
உள்ளறக	ஈ.அசு	ஊரவர்கௌ	ஞிஞ.உ	எனைத்துங	ஈ.கூசு
உள்ளியதெ	உசுஉ	ஊருண்நீர்	கூக	எனைத்துணை	சுக
உள்ளியவெ	கசச	ஊழிபெய	ஈளசு	எனைத்துமீ	ஞிஅ.ட
உள்ளிலு	ஞிஅo	ஊழிற்பெ	கஅ.உ	எனைத்தொ	ஞிஅo
உள்ளிளே	சு.டசு	ஊழையு	ட.oo	எனைப்பகை	கஞி
உள்ளுவதெல்	உ.அக	ஊறெறா	ச உo	எனைமாட்சி	ஈ.கூஉ
உள்ளிவன்-லு	ஞிஎக	ஊனைக்கு	சஅள	எனைவகை	உஞ்o
உள்ளுவன்-ம	ஞிசக	எசசமென	சஅ.ச	என்பிலதனெ	ஈ.அ
உள்ளொற்றி	சுசசு	எட்பதவ	சஉள	என் றுமோ	ஈ.கசு
உறங்குவ	கஞிகு	எண்சேர்ந்	சஈ.எ	என்னெமுன்	ஈ.எஈ
உறன்முறை	சஉஞி	எண்ணுந்து	உ.உசு	எதமபெருஞ்	சஅச
உறுஅவர்க்	சுஉ.ச	எண்ணிய	ஈ.உ.உ	எதிலாரார	சoச
உறுஅவர்போ	ஞிஉள	எணணியா	உ.ஈக	எதிலார்கு	அஅ
உறுஅதோ	ஞிஞo	எண்ணெண்ப	கஅக	எதிலார்போ	ஞிஉஅ
உறுஅர்க்கு	ஞிஎக	எண்பதத்தாலெ	சஎள	எந்தியகொ	சஈ.உ
உறினட்ட	ப.கஉ	எணபத்தஞ்சே	ச சுசு	எழுற்றவ	சஉo
உறினுயிர	ப எசு	எணபொருள	உ டஞி	எரினுஞன்	ச.கசு
உறுகோறு	ஞி.ட.உ	எதிரதாக்கா	உoஎ	எரினுழுஅ	கூ
உறுபசியு	ப ஞிசுஞ	எந்தனறி	ஞி.ஈ	எவவஞ்செ	சoக
உறுபொரு	சுஞி	எப்பொருளு	ஈ.ஈ.சு	ஐந்தவித்தா	கச
உறுப்ப	ஈ.சுஅ	எப்பொருளெ	கசுஅ	ஐயததீனீங்	கசுசு
உறுபபொத்	சஎஅ	எப்பொருள்யா	உoச	ஐயப்படா	ஈ.சo
உறுவதுசீர்	ஈ.கசு.ட	எய்தற்கரி	உ.ர எ	ஐயுணர்வெ	கசுள
உறைசிறி	ப உக	எரியாற்சு	சஈ.o	ஒட்டார்	சசுசு
உற்றதோய்தீ	உகஞ	எல்லாப்பொ	ஈ சுக	ஒண்ணுதற்	ஞிஉ.ஈ
உற்றதோய்தோ	கஉ.o	எல்லார்க்கு ட	சுo	ஒண்பொரு	ஈ.சுள
உற்றவன்	சஞிஎ	எல்லார்க்கு ம	உ.அஉ	ஒத்ததறிவா	கஅ
உற்றனளவு	சஞிஎ	எல்லாவிளக்	க ட.க	ஒப்புரவினு	கரீ
ஊக்கமுடை	உ.ட.ஞி	எல்லேக்கணி	ஈ.கo	ஒருதலேயா	ஞிஎ
ஊடலிற்றோற்	சுசஉ	எவ்வதுறை	உoக	ஒருகாளெ	சுகஞ
ஊடல்தணென்	சுஞ.க	எழுதுங்கா	சுஉ.உ	ஒருபொழுது	கஞிஅ
ஊடலுண்	சுஞ.உ	எழுபிறப்பு	ஈ.உ	ஒருமைக்க	ககஉ
ஊடலுணர	சுஞ.ங	எழுமையெ	ஞிஉ	ஒருமைக்	சoஞ
ஊடற்கட்	சுஉo	எளிதென	சுக	ஒருமைமக	சசுக
ஊடலுணர்தல்	ஞிஞ.ங	எள்ளாத்	உ.உள	ஒருமையுளா	சுo
ஊடிப்பெ	சுசஉ	எள்ளாமை	கஞ.o	ஒலித்தக்கா	ஈ.சுக

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
ஒல்லுங்கரு	ரகூரு	கடுமொழியுங்	ஒஎரு	கல்லாதான்	ககூரு
ஒல்லும்வகை	கஅ	கடைக்கொட்	ரஉக	கல்லார்ப்பி	ஒஎசு
ஒல்லும்வாயெ	ஒசு	கணிகொடிதி	கஉக	கல்லாவொரு	ககூசு
ஒல்வத்றிவு	ஒஒஅ	கணகளவு	ருஉரு	கல்லானெவ	சாக்கு
ஒழுக்கத்தினெ	கூரு	கண்டதுமன்	ருரிஉ	கவறுங்கழக	சருரு
ஒழுககத்தினெ	கூரு	கண்டாரகழு	ருகூரு	கவ்வை	ருருக
ஒழுக்கத்து	க ர	கண்டாருரிரு	ருஒக	கழாஅக்கால்	சாருரு
ஒழுக்கமுடைமை	சாச	கண்டுகேட்	ருரஉ கூ	களவினுலாகி	கரஉக
ஒழுக்கமுடைய	கூச	கண்ணுறைந	சகரரு	களவின்கட்	கரஉஒ
ஒழுககமும	சருக்க	கண்ணுறுகண்	ரகக	களவென்னு	கரஉரு
ஒழுக்கமவி	க	கண்ணுறுனி	கூ	களிதரியே	கசாசு
ஒழுககாரு	ஏக	கண்ணுள்பச	ருகூஅ	களிபுகாலே	ரசாள
ஒளியார்மூ	சரு	கண்ணுன்றுக	அரு	களிதொறு	ருருக
ஒளியொருவ	சஞஅ	கண்ணுறுகொ	சரூ	கள்வார்க்கு	கருசா
ஒறுத்தாரை	ஏர	கண்ணுறுடைய	ககூரூ	கள்ளுண்ணப்	சாசள
ஒறுத்தார்க்	ஏச	கண்ணுள்ளா	ருரஒ	கற றின்னு	கசாருரு
ஒறுத்தாற்	டஅக	கண்ணுளளிற	ருரச	கறகக்கடற	கஅகக
ஒறறினுனெ	டஅ	கண்ணெறுதெ	ருஒக	கறறகளுலா	ரரு
ஒறறுமு	ஒஅட	கண்ணேறுட்-த்	ஏஎ	கற்றற்றாற்	ரரசாள
ஒற்றொறறி	ஒஅரு	கண்ணேறுட்-மி	ஒஅரு	கறருருட்கற்	ருரக்கூ
ஒறறொறறு	ஒஅர	கண்ணேறுட்-மெ	டஎஎ	கறருர்முற	ருருரு
ஒனருகநல்	கருரு	கத்துகாந்தீ	சிட	கற றுலளுயினு	ஒரூ
ஒன்ருமை	சடக	கதுமெனதத்தா	ருசுச	கறறீண்டி	ககசுஅ
ஒன்ருவுலக	கபஎ	கயலுளாகண்ண	ருஅரு	கற்றுக்கண	ருருஒ
ஒனரு ரூ	கூக	கரத்துமாற்	ருகரு	கனவினுணுண்	ருஅரு
ஒன்றெய்தி	சசஅ	கரப்பவாக	ருக	கனவினுமி	ரருகூரு
ஒன்னாத	கக	கரபபடியுபை	ருரஎ	காக்கபொரு	ருகூ
ஓஒதலவே	கசு	கரப்பிலாவெ	ருருரு	காக்கைக	ஒருசு
ஓஒவினிதே	ருசுஎ	கரப்பிலாரா	ருபச	காட்சிக்கெ	அகசு
ஓதியுணர்ந்	சரட	கரபபினுடை	சகச	காணுச்சின	சாகள
ஓம்பினமை	ருருஎ	கரவாதுவர்	ருரூக	காணுதாற	சரூக
ஓர்த்துள்ள	ககசு	கருமஞ்சிதை	ஒஅரு	காண்டருவு	ருருச
ஓர்ந்துகண	ஒசுட	கருமஞ்செய	சகக	காணுமகாற்	சுஒக
ஙிடலன்ன	ருகஎ	கருமணியிற்	ருசரு	காணகமற்	சுகக
கடலோடா	ஒசரு	கருமத்தானு	ஏஅசு	காதலகாத	ஒகஒ
கடனறிச்	ரட ஒ	கருவியுங்கா	ரஎரு	காதலரில்	ருகரு
கடனெண்ப	சளர	கலகாதுக	ரடஒட	காதலர்தூ	ருஅசா
கடாஅக்களி	ருருஒ	கலந்துணா	சுரக	காதலவரி	ருகக
கடாஅவுரு	ஒஅச	கல்லாதமே	சரள	காதன்மை	ரசாசு
கடிதோசி	ஒள	கல்லாதவரிற்	ரடருஒ	காமக்கடன்	ருசுக
கடிந்தகடிந்	ரகஅ	கலலாதவருக	ககரு	காமக்கடு-னு	ருசாசு
கடுஞ்சொல்	ஒஎச	கல்லாதரினெ	ககக	காமக்கடு-னை	ருசருஒ

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
காசுக்கணிச்	௩0௮	கூழுங்குடியு	௨௯௯	கோளில்	௭
காடிமூநரணு	௫௯௬	கூறுமைநோ	௱௨	சமன்செய்	௫௮
காடுமுழர்	௫௮௮	கூற்றங்குதி	௬௨	கலத்தாற்	௯௬
காமமென	௩0௮	கூற்றத்தை	௮௨	கலம்பற்றி	௬௬
காமம்விடு	௩0௨	கூற்றம்மா	௫௨	காதலினின்	௬0௫
காமம்வெகுளி	௬௭	கூற்றுடன்று	௯௭0	காயலுநர	௫௮
காலகருதி	௨௯௫	கெடல்வே	௮௨	சார்புணர்ந்	௬௭0
காலதினும்	௫0	கெடாதுவழி	௯௬	சால்பிற்குக்	௬௮
காலாழ்களரி	௨௮௨	கெடுகா	௱ அசு	சான்றவர்	௬௭
காலேக்குச்	௫௬௯	கெடுப்பதூ	௬0	சிலைவிடத்	௨௬
காலையரும்பி	௫௬௨	கெடுவல்யா	௫௬	சிறப்பறி	௨௬
கானமுயலெ	௱௮௬	கெடுவாக	௫௬	சிறப்பீ-மீ	௬௬
குடும்பை	௬௫	கெட்டார்க்	௫௨௫	சிறப்பீ-ம்	௬௬
குடிசெய்வ	௬௬௨	கேடறியா	௫௬	சிறப்பொடு	௬௬
குடிசெய்வா	௬௬௫	கேடில்லி	௬௬,	சிறியாருணர்	௬௭0
குடிதழீஇ	௨௯௬	கேடும்பெ	௫௫	சிறுசாப்பி	௫௯0
குடிபுறங்காத்	௨௬௯	கேட்டார்ப்	௫௬	சிறுபுடை	௨௬
குடிப்பிறந்தா	௬௯௭	கேட்டிணு	௱ அசு	சிறுமைக	௫௬௯
குடிப்பிறந்கு	௨௬௬	கேட்புணுக	௨0௨	சிறுமைபல	௬௬௯
குடிப்பிறந்-த	௫௮௬	கேளிழுக்கம்	௱௬0	சிறுமையுஞ்	௫௭௨
குடிமடிந்து	௨௬௱	கைம்மாறுவே	௬௭	சிறுமையுணீ	௬௮
குடியாண்மை	௨௬௫	கையறியா	௭௮௫	சிறைகாக்கு	௱0
குடியென்னுங்	௨௬௭	கைவேல்க	௬௱	சிறைநல	௬௯௨
குணநலஞ்	௯ ௬	கொக்கொக்	௬0 ௭	சிற்றினம்	௨௬௮
குணனுடி	௨ ௯௱	கொடியார்-யி	௫௬௬	சிறறின்ப	௮௬
குணமென்னுங்	௬௬	கொடியார்-யு	௫௬௬	சினத்தைப்	௬௮ ௱
குணனிலஞாய்	௬௮௮	கொடுத்தலு	௨௫௫	சினமெனனு	௬௯௨
குணனுங்குடி	௫௮௮	கொடுத்து	௬௬	சிரிடங்கா	௫௬௬
குலஞ்சுமை	௬௬0	கொடுப்பத	௭௮	சீர்ஞுஞ்சே	௬௬௬
குழலினிநி	௫௫	கொடுப்பனு	௬௮௬	சீருடைசெ	௬௮௬
குறுக்கொண்	௫௨	கொடுமபுரு	௫௨௨	சீர்மைசிற	௯0
குறுந்தாது	௱ ௬	கொடைய	௬௮	சுடச்சுட	௬௨
குறுப்பறுந்து	௫௫௭	கொலைமே	௨௬	சுவையொளி	௬௫
குறுப்பிற்-ரா	௫ ௬	கொலையிற்	௨௬	சுழலுமிசை	௫௭
குறுப்பிற்-ர்	௫ ௬0	கொலைவினை	௬௫	சுழன்றுமேர்	௬௬
குற்றமிலனெய்	௬௬	கொல்லாத	௬ச	சுற்றத்தாற்	௨௬
குற்றமேகாக்	௨0௬	கொல்லாமை	௬௫	சூழாமற்றூ	௬௬
குன்றன்னார்	௬ ௭	கொல்லான்	௬0	சூழ்சிறுமுடி	௫௨
குன்றனைன	௬௬	கொளப்பட்	௫௬	சூழ்வாகண்	௨௬
குன்றேறி	௫௬	கொளற்கரி	௫0	செப்பமுடை	௫ச
கூடியகாமம்	௯0	கொன்றன்	௫	செப்பின	௬௨
கூத்தாட்ட	௬௫	கோட்டுப்	௯ ௫	செயற்கரியசெ	௬௫

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
செயற்கரியயா	ஈ.எ.அ	தருதியென	ஒ.ச	தானாற்றி	கூ.அ
செயற்கைய	ஈ.ஏ.அ	தக்காங்கு	உ.எ.உ	தானந்தவ	அ.க
செயற்பாலசெ	உ.க.க	தக்காரின	உ.உ.டு	தினறல்ல	எ.ச
செயற்பாலதோ	உ.உ	தக்கார்தக	டு.டு	தினறறிந்	ஈ.க.உ
செயிரிற்றறலே	க.க.க	தஞ்சந்தம	கூ.உ.அ	தினற்பொரு	க.க.அ
செய்கபொ	ட.க.எ	தணந்தமை	டு.க.டு	தினைத்தணைந	.டு.க
செய்தக்க	உ.உ.டு	தணணந்துறை	கூ.க.எ	தினைத்தணையா	உ.ஏ.க
செய்தேமஞ்	ஈ.க.ச.ச	தந்தைமகற்	. ச	தினைத்தணையு	கூ.உ.ஏ
செய்யாமறசெய்	ச.க	தந்நலம்	க.ச.ஏ	தீப்பாலஞான்	கூ.டு
செய்யாமற்செற்	க.ச.கூ	தஞ்செஞ்சத்	டு.அ.க	தீயவைசெய்	கூ.கூ
செய்வானே	உ.டு.க	தமாகித்	உ.டு.கூ	தீயவைதீய	கூ.ங.
செய்வினை	(உ.எ	தம்பொரு	ஈ.உ	தீயவைவன் றி	ச.டு.கூ
செருக்குஞ்	உ.ஏ.அ	தம்மிலிருந்	டு.ம., உ	தீயிஞற்சுட்ட	கூ.உ
செருவந்த	உ.எ.ஞ	தம்மிற்பெரி	உ.க.ச	தீவினையார	க.ங.
செலலாமை	டு.டு.டு	தம்மிற்றம்	ஈ.ச	தஞ்சினஞர்	ச.ச.டு
செல்லாவி	க.ச.ஏ	தலேப்பட்டார்	க.கூ.ச	தஞ்சுகாரற்	டு.அ.எ
செல்லான்	ச.க.க.க	தலேயினிழிந்	ச.கூ.டு	தணைநலமா	ஈ.க.டு
செல்லிடத்	க.ச.ஏ	தவஞ்செய்	க.உ.உ	துப்பார்க்கு	கூ
செல்வத்துட்	க.க.க.க	தவமறைந்	க.உ.கூ	துப்பினெவ	டு.கூ.உ
செல்வீருந்	ச.உ	தவமூந்த	உ.க.க	துப்புரவில்	டு.ஏ.ச
செலிகைப்ப	க.அ.எ	தவறிலா	கூ.ச.க	தும்முச்செறு	கூ.ங.எ
செவிசருண	க.க.க.க	தன்னாவினே	(டு.ா	துளியின்மை	உ.எ.ஏ
செவிசெரல்	((.ஏ	தற்காத்துத்	உ.க.கூ	துறந்தா-த்	க.உ.க
செவியிற்சுவை	உ.ஏ.ா	தனக்குவமை	கூ	துறந்தா-ந்	உ.ஙட
செவியுணவி	உ.ஏ.)	தனியேயிருந்	க.உ.கூ	துறந்தார்படி	உ.அ.ச
செரு அசசி	டு.உ.எ	தன்குற்றறீக்	உ.க.ஏ	துறந்தார்பெரு	க.ங.
செறிதொடி	கூ.ச.கூ	தன்றுணையின்	ச.உ.க	துறந்தாரிற்	எ.டு
செறிவறிந்	டு.க.க	தன்னுயிர்க்கின்	க.ச.அ	துறப்பார்	க.அ.ச
செறுநரை	உ.ட.க	தன்னுயிர்தா	க.உ.ங	துறைவன்	டு.டு.அ
செறுவார்க்	ச.ச.அ	தன்னுயிர்நீ	க.டு.உ	துனியும்புல	கூ.ங.க
செற்றவர்பி	கூ.ஏ.கூ	தன்றான்	க.க.கூ	துன்பத்திற்	கூ.உ.அ
செற்றாரென	கூ.ஏ.க	தனனெஞ்சறி	க.ட.கூ	துன்பறுறவ	ஙி.உ.ச
செற்றார்பி	கூ.ஏ.கூ	தன்னேதான்காக்	க.ச.க	துன்புறூஉ	ச.கூ
செற்றவீட	உ.ஏ.ச	தன்னேதான்காத	கூ.கூ	துன்னுத்து	கூ.ஏ.ங.
சொலல்லல்	ட.க.ங.	தன்னேயுணர்	க.ட.அ	துன்னியார்	அ.எ
சொல்லுக-லி	கூ.உ	தாமின்புறு	க.க.ட	தூங்காமை	க.அ.ச
சொல்லுக-லே	,, க.உ	தாம்வீழ்-த்	டு.எ.டு	தூங்குக	ங.உ.டு
சொல்லுதல்	ா.உ.க	தாம்வீழ்-மெ	டு.ங.க	தூய்மைது	ங.ங.ங.
சொல்லப்ப	டு.க.எ	தாம்வேண்	டு.டு.ச	தூஉய்மையெ	எ.ச
சொல்வணை	ஙி.கூ.கூ	தார்தாங்கி	ஈ.எ.ச	தெணணீர்டு	,, டு.க.க
சொற்கோட்	டு.எ	தாளாண்மையி	உ.கூ.எ	தெய்வத்தா	உ.க.க
ஞாலங்கருதி	உ.ஏ.ச	தாளாண்மையெ	உ.கூ.எ	தெய்வம்	உ.க

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
தெரிதலுக்	ரூ○எ	நயனீன்று	ரூ்எ	நாணுமை	சு○உ
தெரிந்தலி	உ.ரு	நயனுடை	க○○	நாணுலு	சஅசு
தெரிந்துண	ருசுசு	நயஞெடு	ச எசு	நாணுமற	சுஉள
தெருளாதா	ககரு	நயன்சாபா	சூ○	நாணெனை	சு○எ
தெளிவிலத	உ உசா	நலகுரியா	எக	நாணெண்	சசச
தென்புலத்	உ	நலத்தகை	சூ க	நாணெடு	ருசரு
தேரான் பிற	உ.எ	நலத்தின்க	சசஉ	நாநல	ரூ.சo
தேரான்றெ	உசஎ	நலம்வேண்	சசு	நாளெனை	கருசு
தேவரனேய	ருக்ரு	நல்குரவெ	ரு○உ	நிணக்தியி	சு○அ
தேற்றக்	உசஎ	நலலவை	கஅ○	நிலததியல்	உ*அ
தேறினுக்	சஉக	நல்லாண்	ரூகூட	நிலத்நிற்	சகூஉ
தொகைசசொ	ர க	நலலார்கட்	ககூஅ	நிலவரைநீ	கo஬
தொடங்கற்	உ ர அ	நல்லாறெனை	கருக	நிலைமக்க	ர எஉ
தொடலைக்	ருசசு	நலலாறெனி	கo.உ	நிலையஞ்சி	கருங
தொடிநோக்	சூச்அ	நல்லாற்று	ககக	நிலையிறறி	சூ○
தொடிப்புழு	சகூஅ	நல்லினத்தி	உஉ.உ	நிலவாதவ	கருஞு
தொடியொடு	ருகூசு	நவிறுறு	ரூஎக	நிழனீருமின்	சஉச
தொடிற்சுடி	ருருக	நறபொரு	ரு○உ	நிறைநீர	ரூஎஅ
தொட்டனைத்	ககூட	நனவிறை	ருஅச	நிறைநெஞ்	ர ரூக
தொல்வர	ருக்க	நனவினல்	ருஅஅ	நிறையொழி	ககசு
தொழுதகை	ரூக்க	நனவினுக்	ருஅஎ	நிறையரி	ருசஅ
தோன்றிற்	க○அ	நனவினுக்	ருஅஅ	நிறையடைமை	எரூ
நகல்வல்ல	ச அக	நனவினு-ரை	ருஅருு	நிறையுடையே	சு○ரு
நகுதற்பொரு	ர எக	நனவென	ருஅசு	நினைத்திருக்	சு ரூ அ
நகையீகை	சகு○	நன்மையுக்	ர ச அ	நினைதஞ்சா	ருக்கூ
நகையுமுவ	கச்க	நனமறிவா	ருக்க	நினைப்பவர்	ருஅ○
நகையுளளு	சஎக	நன்முகமாக்	கருு	நீங்கான வெகு	சகசு
நகைவகை	ஃரு	நன்முககா	கஎஉ	நீங்கிறறெ	ருர்க
நசைஇயார்	ருஎச	நன்முற்ற	உஉஎ	நீரின்றமை	கஉ
நசைப்படா	சஅருு	நன்றிக்கு	சுசு	நீருழல்	சுரூஉ
நடுவின்றி	அ○	நன்றிமறப்	ருஉ	நுணங்கிய	உ○உ
நட்டார்குறை	சா சு	நன்றெண	ர்சசு	நுண்ணியநூ	கஎக
நட்டார்க்கு	ர உஅ	நன்றேதரி	ருருு	நுண்ணியமெ	ர்சாரூ
நட்டார்போ	ர ஃஅ	நன்னீரைவா	ரு ருு	நுணமாணு	*கஎழு
நட்பிற்குவீ	ர அஉ	நாகுகாதல்	ருஎஎ	நுனிக்கொம்	உரு○
நட்பிற்குறு	ர அஅ	நாசசெற்று	கருஎ	நூலாருணூல்	ருரு○
நண்பாற்று	சஅ○	நாடாதுந	ர்அர்	நெஞ்சத்தார்	ருசரூ
நதநம்போற்	க○அ	நாடென்ப	ர்ருஎ	நெஞ்சிறுறற	கஉஎ
நயந்தவர்க்	ருஎ○	நாடோறுநாடி	உகக	நெடுகுகட	க○
நயந்தவர்நல்	ருகூச	நாடோறுநாடி	உருஉ	நெடுநீர்ம	உகூ
நயனிலசொல்	கூக	நாணகத்தி	சகூ○	நெடும்புன	உசர.
நயனிலனெ	அக	நாணவே	உ அக	நெய்யாலெ	ருருர

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
தெருப்பிணு	ஙுஒக	பரிந்தவாதல்	சுஐ2	பிறர்காணைத்	சஅக
தெருவுளள	கஙுஏ	பரிநதோம்பிக்	சுஈ	பிறர்பழியு	சஅஅ
தெருநற்றுச	சுகள	பரிந்தோமபிப்	சரு	பிறவிப்பெ	அ
நோக்கிஞ-கி	ஙுஉசு	பரியதுகூபா	உகஐ	பிறன்பழி	அசு
நோகதிஞ-செ	ஙுஉ0	பரிபரணுவா	கஅ0	பிறன்பொரு	சுஎ
நோதுலெவன	சுரு உ	பருகுவார்	ஙகூஉ	பிறன்மனை	எ0
நோயெல்லா	ச்சக	பருவதமீகா	உடஅ	பீலிபெய்	உகஐ
நோய்நாடி	சஙுசு	பருவபலும	ஙுஎஅ	புகழின்ரும்	சசுஙு
நோயபுறக	சஉஉ	பலகுடைடீ	சகூஎ	புகழ்க்கவை	உசுக
நோனுவுடம்	ஙுசஙு	பலசொல்ல	ஙகச	புகழ்பட	கஐசு
பகசசொல்	அஎ	பலநலலகற	ஈகூஎ	புகழ்புரிக்	ஙஎ
பகல்கருதி	சஈக	பலருழுவு	ஙஙு	புக்கிலமை	கசுஎ
பகல்ஙவல்	உ ர	பல்லவைக	ஙஙுஇ	புணாசசிபழ	ஙஅ0
பகுத்தணை	கஙுப	பலவார்பசை	உகள	புதுதேளுல	கூஅ
பகைகடப்பாக்	சஉக	பல்லாரூளி	அகூ	புரக்தாகண்	ஙஎள
பகைகடப்பங	ரஐப	பழகியசெல	சஙுக	புலத்தலிற்	சுஐ0
பகைபாவம்	சகூ	பழகியஈட்	அஅ	புலபபிலென	சு0அ
பகைமையு	ர	பழமையெ	ஙஅள	புலபேன்	சுகஉ
பகையகத்துச	ர ஙுப	பழ்மலைக்	ஈகூஅ	புல்லவையுட்	ஙர சள
பகையகத்துப்	ர ஙுக	பழியஞுசி	உர	புலலாதிரா	சுஉசு
பகையென	ஈர சூ	பழுதெண்ண	ரஐக	புல்லிக்கிடக்	ஙிளஙூ
பசக்கமற	ஙுரர	பழையமெ	ரகூ	புல்லிவிடா	சுரப
பசந்தாளி	ஙுஈ	பறறறறறகணணு	உஙுட	புறஙுனறி	ஐஉஅ
பசப்பென	ஙுஎச	பறறறறறகணணே	கசுச	புறஙுகூறிப்	அஙு
படலாற்ரு	ஙுசள	பறறறறபீற	கஉஎ	புறத்தறப்	ஙகூ
படியுடை	உகஙு	பறறிவிடா	ககசுட	புறத்தாய்	காஅ
படியன்	அப	பறறுகபற	ககசுஙு	புன்கணணே	ஙுஅசு
படைகுடி	கஅஙட	பறறுள்ள	உகக	பெண்ணிய	சுடஉ
படைகொண	ககசு	பனியருமபி	ஙுகப	பெணணிற்	உஅ
பணியுமாமெ	சஎக	பனமாயகள்	சுஐள	பெணணினூற	சுகஅ
பணிவுடைய	சசு	பாடுபெறு	ஙுகூசு	பெணணேவல்	சஙுசு
பணீதீகஞிப்	ஙுகூஙு	பாததுணை	கஐச	பெயக்கணடி	உஅக
பணுத்துமியே	ஙுஉக	பாலொடு	ஙுரகூ	பெயலாற்ரு	ஙுசுள
பணீணெண்ண	உளஅ	பிணிசகுமருக்	ஙுர 0	பெரிதாற்றி	சுகசு
பணபிலான்	ஙஅக	பிணியின்மை	ரஙுள	பெரிதினிது	சஐஙு
பண்புடை	சளகூ	பிணையோ	ஙுஉரு	பெரியாரை	சஉகூ
பதிமருணடி	ஙுகரட	பிரிவதஞ்சும்	ரடஐசு	பெருகத்து	சசுசச
பயனிலவல்	அகூ	பிரிவுண்டக்	ஙுஙுள	பெருங்கொடை	உடுஙு
பயனில்சொற்	கூ	பிழைத்துணர்	உஐஉ	பெருமைக்கு	உசஙு
பயன்மரமுள்	கூகூ	பிறப்பென்னு	ஏசுகூ	பெருமைபெ	சளஉ
பயனறாக்கா	ஙுஐ	பிறப்பொக	சசுசஅ	பெருமையு	சஎ0
பயன்றூக்கி	சரூக	பிறர்கஙின்	கசஅ	பெரும்பொரு	ஙுஙுச

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
யெறுஅமையஞ்	சுஉசு	மக்களேபோல்	நுகச	மனத்தொடு	கநஎ
பெறினென்	சுகச	மகுகலமென்ப	ஈடக	மனாலத்தி	உஉஉ
பெறுமவற்	ஈக	மட லூர்தல்	நுசஎ	மனாலகன்கு	உஉக
பெற்ருற்	ஈ○	மடிமடிக்	உகூஉ	மனாலமன்	உஉக
பேணுதுபெட்டா	நுசுஅ	மடிமைகுடிமை	உகுச	மனக்தூயார்	உஉ○
பேணுதுபெட்ப	சுஉ○	மடியிலாமன்	உகுநி	மனக்தூய்	உஉ○
பேணுதுபெண்	சாநி	மடியுளாண்	உசுஅ	மனமாணுவு	சஉநி
பேணுபெருந்	ஙகச	மடியுயமடியா	உகூஉ	மனைத்தக்க	உள
பேதைப்ப	கஎஅ	மடுத்துவா	ஈபஉ	மனைமாட்சி	உள
பேதைமையு	சா○க	மணிநீருமண்	ஙநிகங	மனையாளோ	சாஙச
பேதைமையெ	சா○க	மணியிற்றிக	சுஈநி	மனைவிழை	சாஙங
பேதைமையொ	ஙஅக	மண்ணேறிடை	உஎக	மன்னர்க்கு	உஎ○
பேராண்மை	ஈஎச	மதிதுட்ப	ா ○எ	மன்னர்விழை	ஈஙநி
பொச்சாப்பார்	உநிக	மதியுமடந்தை	நிஙஎ	மன்னுயிரெல்	நிசுஙூ
பொச்சாப்புக்	உநிஅ	மயிர்நீப்பின்	சுசுஎ	மன்னுயிரோ	கஉஉ
பொதூலத்	சசா○	மருந்தாகித்	க○○	மாதர்முகம்	நிஙஅ
பொதுகோக்	உநிக	மருந்தென	சநிஙூ	மாலேநோய்	நிகூக
பொய்படுமொன்	சா○ஈ	மருந்தோமற்	சசுசு	மாலேயோவல்	நிஅக
பொய்மையு	எ ங்சு	மருவுகமாசற்	ஈஅஎ	மாறுபாடில்	சநிநி
பொய்யாயைபொ	ஏ ஃஅ	மலரன்னகண்	நி, அ	மிசசெய்	சா○○
பொய்யாமைய	கா எ	மலரன்னகண்ணுளுநி○		மிகன்மேற	சஈஙூ
பொருஞர்ந்	ஊஉ	மலரிறுமெல்	சுஉடூ	மிகினும்சுறை	சநிஙூ
பொருட்பெண்டி	சாஈக	மலர்காணின	நிஙநி	மிகுதியான்	எசா
பொருட்பொரு	சாடக	மலர்மிசை	சா	முகத்தான	சசு
பொருணீங	ஙகஈ	மழித்தலுநீ	கஉக	முகஞ்தினினி	ஙகஅ
பொருணமா	நிகஈ	மறத்தல்லெ	கசஅ	முகத்தின்மு	ஈசஉ
பொருள்கருவி	ஈஉசு	மறந்தும்பி	கூச	முகநகநட்ப	ஙஅ○
பொருள்கெடுத்	சநிந	மறப்பினு	சுச	முகநோக்கி	ஙசஉ
பொருளல்ல	கசுசு	மறப்பினுனெவ	நிஅஉ	முகைமொக்	சுசசு
பொருளல்லரை	ஈசுஈ	மறமான	ஈஎ○	முடிவுமிடை	ஙஉள
பொருளற்றூர்	கசச	மறவர்க்கமா	நிந	முதலிலார்க்	உஎச
பொருளாட்சி	கசக்சு	மறைந்தவை	உஅநி	முயக்கிடை	நிகஅ
பொருளாலு	சஅஉ	மறைபெற	நிசுக	முயங்கிய	நிநிள
பொருளென்	ஈசுசா	மறைப்பேன்மற்	சு○நி	முயற்சிதிரு	உகஅ
பொன்னென	உசுசு	மறைப்பேன்மன்	நிசு○	முாணசோர்ந்	உஈஅ
பொறியின்	உகக	மற்றியானெ	நிஅஉ	முறிமேனி	நிஙச
பொறிவாயி	நி	மற்றுந்தொடர்	கசஉ	முறைகோடி	உஎக
பொறுத்தலிற	எஉ	மனத்தகமா	எ உஅ	முறைசெய்	கஅள
பொறையொ	ஈநிச	மனத்தாளு	உகக	முறைப்பட	ஈ○க
போற்றினரி	ஙஈசு	மனத்தினமை	ஙகஅ	முற்றற்றி	ஈகச
மகன்றந்தை	ஙநி	மனத்துக்கண்	கக	மூற்றியமுற்	ஈகக
மக்கண்மெய்	ஙஈ	மனத்துளது	உசக	மூனைமகத்	ஈஉஉ

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
மூன்னுறக்கா	உருக	வறியார்க்	கoக	வினைக்கண்வினைகெடீ	ரூ
மேலிருத்து	சகக	வனகண்கு	ம oரு	வினைக்கண்வினையு	உரிஉ
மேற்பிறந்தா	கரூஅ	வாண்களுசெய்	நுஅ	வினைக்குரி	உருஉ
மையலொரு	ச oக	வாய்மையெ	கடுஇ	வினைசெய்	உஅங
மோப்பக்கு	ச ச	வாராக்காற்	நுக்கு	வினைத்திட்	ங்உo
யாகாவாரா	சுக	வார்பெருக்	உசக	வினைபதை	ங்உசு
யாங்கண்ணி	நுரக	வாழ்தலுயிர்	நுசச	வினையான்	ங்உஅ
யாண்டுச்செ	ச o	வாழ்வாக்	நுஎந	வினைவலியு	உஉஅ
யாதனின்யா	கசo	வாளற்றுப்	சுoக	வீழப்படுவா	நுஎசு
யாதானுநா	ககஉ	வாளொடென்	டநுக	வீழுநர்வீழ	நுஎசு
யாமு மூளே	நுஅக	வாள்போல்	சஉச	வீழுமிருவர்	ஙுங
யாமெய்யா	க டக	வாணின் றுல	அ	வீழ்நாள்ப	உக
யாரிஜங்கா	சு டநு	வானுயர்தோ	கஉநு	வீழ்வாரினி	நுஎஅ
யாரெனைதெ	ககஙட	வாஞைக்கி	உசுஙு	வீறெய்தி	ங்உஉ
யாஞைக்கு	நுஉசு	விசுமபிற்று	கoவ	வெண்மை	சoள
வருத்தான்	கஅக	விடாஅது	நுஅச	வெருவந்த	உஎங
வகைமாண்	ச டக	விடுமொற்ற	ங்டுச	வெளளத்தனையம	உஅஅ
வகையறச்	உஉநு	வினணின் று	க	வெள்ளத்தனையலி	ங்oக
வகையறிந்தித	சஉஉ	வித்துமிடல்	கஉ	வேட்ட	ஙுஉ
வகையறிந்துவ	டசக	வியவற்க	உகஉ	வேட்பத்தா	ங்கங
பசையிலா	கoக	விருந்துபுற	சக	வேட்பன	ங்டுள
பகையெண்ப	கoக	விருப்பருச	உநு	வெண்டற்கவெ	அஉ
பஞையொழி	ககo	விரைந்து	ங்கச	வேண்டற்கவென்	சசஅ
பஞ்சமனத்தா	கஉந	விலங்கொடு	ககஅ	வேண்டா	கஎங
பருகமற்கொ	சுகக	வில்லேருழ	சஉo	வேண்டிய	சஉஉ
பருமுண்னர்	உகo	விழித்தக்கண்	ஙஎநு	வேண்டினு	ககக
பருவிருத்து	சுக	விழுப்புண்	ங்எசு	வேண்டுங்	களங.
பரைவிலாமா	சசஉ	விழுப்பேற்	எசு	வேண்டுதல்	ச
வலியார்க்கு	சகநு	விழைதகை	டஅக	வேலன்று	உசுடு
வலியார்முற்	ககநு	விழையார்	ஙுக	வேலோடு	உசுஅ
வலியிணிலே	கஉசு	விளக்கற்ற	நுஎஉ	வைத்தான்	சஅஉ
வழங்கு	சசுக	விளித்தாரின்	சுஅ	வையத்தள்	உசு
வழிநோக்	சகசு	விளியுமென்	நுஅர		
விழுத்தெஞ்சு	சு எ	வினைகலந்து	சுகஉ		

பாட்டு முதற்குறிப் பகராதி

முற்றிற்று.

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ், பார்க் டவுன், சென்னை.

விளம்பரம்

ஸ்ரீமத் தாயுமானவர் பாடல்

மெய்கண்ட விருத்தியுரையுடன்

[730 பக்கம்: ஸ்வாமிகளின் திருவுருவப படத்துடன் உயர்ந்த பட்டு காலிகோ பைண்டு: விலை ரூபா 4.]

திருவருட்பெருஞ் செல்வராகிய தாயுமான சுவாமிகள் தமது சுவானுபூதியினிற் பிறந்த அற்புத சின்மய மதுரமான செம்பாடற் றிரட்டினுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்து மகாவித்வான் சித்தாந்த சரபம் - அஷ்டாவதானம். பூவை - கலியாணசுந்தர முதலியாரால் பத வுரையும், விசேடவுரையும், பிரமாணங்களும், உபநிடத கருத்துக்க ளும் எடுத்துக்காட்டி ஒவ்வொரு பாடலுக்கும் இன்றியமையாத பெரியோர்களுடைய ஞானசாஸ்திரங்களி விருந்து மேற்கோட்பாக் கள் உதகரிக்கப்பட்டிருக்கின்றன.

பட்டினத்தார் பிரபந்தத்திரட்டு

[சுவாமிகளின் திருவுருவப் படத்துடன்]

விலை ரூபா 3-8-0.

பட்டினத்தடிகளால திருவாய்மலர்ந்தருளப்பெற்ற பிரபந்தங் களாகிய கோயினான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூ ருலா, வொருபஃது என்பனவற்றிற்கும், கோயிற்றிருவகவல், திருவேகம்ப மாலை, திருவிசைப்பா பொது, முதலவன் முறையீடு, அருட் புலம் பல், இறந்தகாலத்திரங்கல, நெஞ்சொடு புலம்பல், பூரணமாலை, நெஞ் சொடு மகிழ்தல் என்னு மிவைகளடங்கிய திருப்பாடற்றிரட்டு, உடற்கூற்றுவண்ணம் என்பனவற்றிறகுத் தமிழ்ப்பண்டிதர் ஆ. சிங் காரவேலு முதலியாரவர்களால் பதவுரையும், விசேடம், உதாரா ணம் இவைகளமைந்த விருத்தியுரை யமுதப்பட்டிருக்கின்றன.

தேவீ பராக்கிரமம்.

சென்னை கிரிஸ்டியன் காலேஜ தமிழ்ப்பண்டிதர்

ஈக்காடு. இரத்தினவேலு முதலியாரியற்றியது

விலை ரூபா 1-8-0.

சமஸ்தலோக காரணபூதையாய் ஐம்பெருந் தேவர்க்கு உற்பத்தி லயஸ்தானமாய் பிரமேந்திராதிகட்கு எய்தமிடுக்கண்களைந்தும் அவரவர் இஷ்டசித்தியருளும கருணை நிதியாய் விளங்கும் சர்வலோக மாதாவாகிய பராசக்தியின் லீலா விபூதிகள் தேவீ பராக்கிரமம் எனபபடும இருநூலைத் தமிழில் தெள்ளிய நடையில் இயற்றி அவ் வறபுதங்களை நேரிற் கண்டாப்போல விளக்கத்தக்க அறுபத்தாறான்கு திருவுருவபபடங்க ளமைத்து முக்யமான இடங்களில வேதம், ஆகமம, புராணம், இதிகாசம் முதலிய வடநூல் மேற்கோளுந் தமிழ் நூல மேறகோளுங் காட்டி இருக்கின்றன. இதை வாசிப்பதனால தேவியின் பிரபாவதத்தை உணருமாறு உள்ளங்கை நெலலிக்கனிபோல் காட்டி யிருக்கின்றபடியால் ஸ்திரீ புருஷர்கள் யாவரும் வாசிக்கச சிறந்தது.

திருமுறைத்

தேவாரத் திரட்டு

வண்ணக்களஞ்சியம்

கஞ்சி. நாகலிங்க முதலியாரவர்களால்

பதிக சரித்திரமெழுதி பிழையின்றி பரீசோதிக்கப் பெற்றது.

இதின் விலை ரூபா 2-8-0.

இதனுள், மூவர் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருமுறைசப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருப்பரபதமாலை, பெரியபுராணச செயுட்டிரட்டு, தேவார திருப்பதி வைப்புத்தலவிளக்கம், பதிக சரித்திரம், தலவிருக்குமிடம், தலவிசேடம் முதலியன அடங்கியுள்ளன. இதுவரையிலும் வெளிவந்த நூலெயும் இப்போது வெளி வந்துள்ள காஞ்சி நாகலிங்கமுதலியாரவர்கள் பதிப்பையும் வாசிப்பார்களானால் தாரதம்மியம் இன்னதென விளங்கும். இது வரையிலும் இதுபோல் விவரத்துடன் யாரும் அசசிடவில்லை. உயர்ந்தகிளேஸ் கடிதத்தில் அசசிட்டு பட்டு கார்டோ பைண்டு செய்யப் பட்டிருக்கிறது. பாராயணத்திற்கு அதகூலமானது.

நாயகர் அண்டு சன்ஸ், பாரீஸ் டவுன், சென்னை.

ரமாநீத தரிசனம்

எண்ணும்

ஸ்ரீபகவத்கீதைவசனம்

[உயர்ந்த காலிகோ பைண்டு விலை ரூபா 2.]

இந்தப் பகவத்கீதை யென்னும் அறிய நூலானது ஆதியில் வேதவியாசராஷி பதினெட்டு அத்தியாயங்களாகவும், எழுநூறு சுலோகங்களாகவும் வடமொழியில் இயற்றப்பெற்றது. ஸ்ரீ பகவத்கீதை வாசிப்போர்க்கு இதன உயர்வினத்தும் நன்கு வீளகுகும். மனிதராயினுர்க்கு அஞ்ஞான இருளைப் போக்கி நல்வழிக்கடைப்பிடித் தொழுகுமாறு எல்லாதத்துவங்களையும் விளக்கிக்காட்டி, உண்மைப்பொருளை யடைத்தருகிய உபாயங்களை உபதேசிக்கும் நூல்களுள் இதுவே முதன்மைபெற்றதாகும். இங்ஙனம இது சிறப்படையுதற்பற்றியே இதற்கு ஸ்ரீசங்கரர், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீமாத்வர், ஸ்ரீதரர், இராகவேந்திரசுவாமிகள், மதுசூதன சரஸ்வதி சுவாமிகள முதலியவர்கள் பாஷ்யங்களை யியற்றி யிருக்கினறனர்; அன்னியமதஸ்தரும் இந்நூலை ஆங்கிலமுதலிய பல பாஷைகளில் மொழிபெயர்த்திருக்கினறனர் என்றதற்கு இந்நூலின் பெருமையேயாகும். இங்ஙனம் மிகுதமிழில் பலவகையாக வெளிப்புட்டிருப்பினும், அவைகளுள் இதற்கு ஷ ஸ்ரீ சங்கரர், ஸ்ரீராமாநுஜர், மாத்வர் முதலியவர்கள் வடமொழியில் செய்த பாஷ்யக்குறுகளை தெள்ளிய தமிழ்வசன நடையில் விளக்கிக காட்டக கூடியவை பெரும்பாலும் வெளிவராதபற்றி இவ்வரிய நூலை சாதாரண தமிழ்ப் படிப்புள்ள புருஷர், ஸ்திரீகள், பாலர்கள் முதலிய எல்லோரும் படித்தறியுமாறு எளியவசன நடையில் ஷ பாஷ்யகாரர்கள் வடமொழியில் செய்த வியாக்கியானங்களை ஆங்காங்கு தெளிவாக விளக்கப்பட்டு உபரிஷத்துக்களின் மேற்கோளும் பல சாஸ்திரங்களின் மேறகோளுங்காட்டி விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இதுவரையில் வெளிவந்துள்ள பகவத்கீதை வசனத்தைப்படித்த அறிஞர்கள் இந்த "பரமார்த்த தரிசன மென்னும் ஸ்ரீ பகவத்கீதை"யைப் படிப்பார்களானால் தாரதம்மியம் இன்னதென விளங்கும்.

ஸ்ரீ பகவத் கீதை

தமிழ் தாத்பர்யம்.

[உயர்ந்த கிளேஸ் கடிதம்: விஸ்வரூப தரிசனம், ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு பார்த்தசாரதியாகி பகவத்கீதையை உபதேசித்தல் முதலிய சித்திரபடங்களுடன் அழகிய காலிகோ பைண்டு, பெரிட் சைஸ்.]

இதன் விலை ரூபா 1.

ஸ்ரீமந்த ஸ்லோகம், தமிழ் அக்ஷரத்தில் ஸ்லோகம், சங்கர - இராமாநுஜ-மத்வ பாஷ்யங்களை யநுசரித்து, ப்ரஹ்மஸ்ரீ இராமசரண்தாஸாகந்த சரஸ்வதி சுவாமிகளால் அனைவர்களுக்கும் விளங்கும்படி தெளிவான நடையில் எழுதிய தமிழ் தாத்பர்யத்துடன் அச்சிட்டுள்ளது.

இவைதவிர எல்லாத்தமிழ் புத்தகங்களடங்கிய விலை விவர ஜாபிதா வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புகிறோம்.